கணக்காய்வாளர் தலைமை அதிபதியின்
ஆண்டறிக்கை

2021

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

எமது தூர நோக்கு

இலங்கை பிரசைகளின் நலனுக்காக பொதுக் கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகையை நோக்காகக் கொண்டு பொதுத் துறையின் வழிகாட்டியாக இருத்தல்.

எமது செயற்பணி

நிலைபேறான அபிவிருத்தியை பேணுவதற்காக சிறந்த நிதி முகாமைத்துவத்தினையும் உத்தம பொது வளப் பயன்பாட்டினையும் உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்வில் ஈடுபடுவதன் மூலம் நல்லாளுகையையும் பொதுக் கணக்களிப் பொறுப்பையும் மேம்படுத்தல்

எமது குறிக்கோள்கள்

1. வளங்களை தம்வசம் வைத்துள்ள நிறுவனங்களின் முகாமைத்துவங்கள் அவர்களுக்குள்ள பொதுக கணக்களிப்பொறுப்பினை உறுதிப்படுத்தி பாராளுமன்றத்திற்கு அறிவிக்கின்றனவா என்பது தொடர்பில சுயாதீன பரிசோதனையொன்றை மேற்கொள்தல்

2. பொதுத்துறை நிறுவனங்களின் செயலாற்றலை பரிசோதிப்பதற்காக பொதுக் கணக்குகள் குழு (COPA) மற்றும் பொது முயற்சிகள் குழு (COPE) ஆகிய இரண்டு பாராளுமன்ற கண்காணிப்புக குழுக்களிற்கும் உதவுதல

3. முகாமைத்துவ அறிக்கைளினூடாக பரிந்துரைகளை வழங்குவதன் மூலம் அவர்களது கணக்களிப்பொறுப்பினை முன்னேற்றிக் கொள்வதற்கு கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனங்களிற்கு உதவுதல்

எமது விழுமியங்கள்

மேன்மை
புத்தாக்கம்
தலைமைத்துவம்

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் உத்தியோகபூர்வச் சின்னம்

இந்த உத்தியோகபூர்வச் சின்னத்திற்காக பயன்படுத்திய குறியீடுகளிலிருந்து பின்வரும் அர்த்தங்கள் நிருபனமாகின்றன.

- சின்னத்தில் மேலே காட்டப்பட்டுள்ள சிங்கத்தின் மூலம் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது
- அதன் நடுவிலுள்ள தராசு மூலம் சுகந்திரமும் பக்கச்சார்பற்ற தன்மையையும் பிரதிபலிக்கின்றது.
- அதனைச் சுற்றியுள்ள இரண்டு ஒலிவ் கிளை சமாதானத்தையும் சௌபாக்கியத்தையும் பிரதிபலிக்கின்றது.
- அதனைச் சுற்றியுள்ள தாவர இலை மூலம் தேசிய கலாச்சாரம் பிரதிபலிக்கின்றது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் குறிப்பு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 148 ஆவது உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குள்ள பொது நிதிக் கட்டுப்பாட்டை பயனுள்ள மற்றும் வினைத்திறனான வகையில் பராமரித்தல் தொடர்பாக சுயாதீன பரிசோதனைகளை மேற்கொண்டு அது தொடர்பில் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடல் குறித்து அரசியலமைப்பின் 154 ஆவது உறுப்புரையினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதான பணிப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்தப் பணியை நிறைவேற்றுவதன் மீதான 2021 ஆம் நிதியாண்டுக்கான எனது அறிக்கையை மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றேன். பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் இந்த ஆண்டறிக்கை, ஏழாவது தொகுதியாக சமர்ப்பிக்கப்படுவதுடன், ஏனைய அறிக்கைகள் பின்வரும் பத்து தொகுதிகளின் கீழ் தனித்தனியாக சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முதலாவது தொகுதி	-	அமைச்சு மற்றும் திணைக்களங்கள்
இரண்டாவது தொகுதி	-	அரச கூட்டுத்தாபனங்கள், அதிகாரசபைகள், சபைகள் மற்றும் நியதிச்சட்ட நிதியங்கள்
மூன்றாவது தொகுதி	-	நியதிச்சட்டமல்லாத நிதியங்கள்
நான்காவது தொகுதி	-	வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்
ஐந்தாவது தொகுதி	-	மாகாண சபைகள்
ஆறாவது தொகுதி	-	உள்ளூராட்சி நிறுவனங்கள்
எட்டாவது தொகுதி	-	செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்வு ஒப்படைப்புகள்
ஒன்பதாவது தொகுதி	-	அரச கம்பனிகள்
பத்தாவது தொகுதி	-	விசேட கணக்காய்வு ஒப்படைப்புகள்
பதினொன்றாவது தொகுதி	-	மூவாண்டு அறிக்கைகள்

கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிப்பொறுப்புகள் தொடர்பில் ஏற்பாடுகளை உருவாக்குவதற்காகவும், அதனுடன் தொடர்புடைய அல்லது அவற்றின் இடநேர் விளைவான விடயங்களுக்கு ஏற்பாடு செய்யும் பொருட்டு 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல் செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும், தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பணிப்பொறுப்புகளை நிறைவேற்றத் தேவையான கணக்காய்வு பதவியணியினருக்கான சேவைப் பிரமாணக் குறிப்பை நிறுவுவதற்கு இதுவரை முடிந்திருக்கவில்லை. இது கணக்காய்வு பணிகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு பெருந்தடையாக காணப்படுவதுடன், பதவியணியினருக்கு பதவி உயர்வுகளை பெறுவதற்கான வாய்ப்புகள் இதனால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. கணக்காய்வாளர் தலைமை அதிபதி தலைமை தாங்கும் கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தின் மூலம் இரத்துச் செய்யப்பட்டதன்

மூலம், கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதுவரையிலும் உரித்தாக காணப்பட்ட தமது பதவியணியினரின் நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள் இல்லாதொழிந்தன. அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு அந்த அதிகாரங்கள் சாட்டப்பட்டமையாலும், அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு அந்த அதிகாரங்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சாட்டுவதற்குள்ள சட்டரீதியான தடை மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுயாதீனமான கணக்காய்வுச் செயற்பாடுகளுக்கு இடையூறாக உள்ளது. இந்த நிலைமை எதிர்கால அரசியலமைப்பு திருத்தங்களில் கருத்திற்கொள்ளல் பொருத்தமானது என்பது எனது பரிந்துரையாகும்.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் அரச கணக்காய்வு சேவை நிறுவப்படாத காரணத்தால் பதவியணியை ஆட்சேர்க்க முடியாது உள்ளமை தொடர்பில் கருத்திற்கொண்டு அமைச்சரவையினால் முன்மொழியப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பில் உள்ளடக்க உத்தேசிக்கப்பட்ட பதவியணியுடன் இணைந்ததாக இலங்கை கணக்காய்வுச் சேவையின் மற்றும் கணக்காய்வுப் பரீட்சகர் சேவையின் உத்தியோகத்தர்களை இணைப்புச் செய்வதற்கு தேசிய சம்பளங்கள், பதவியணிகள் ஆணைக்குழுவின் பரிந்துரையுடன் அரச சேவைகள் ஆணைக்குழுவின் இணக்கப்பாட்டுடன் உள்ளீர்ப்பு செய்வதற்கு மற்றம் வெற்றிடங்கள் நிலவும் பதவிகளுக்கு நியமிப்பதற்கு அல்லது பதவியுயர்வு வழங்குதல் 2021 ஆகஸ்ட் 13 ஆந் திகதி கூடிய அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அந்த அங்கீகாரத்தின் அடிப்படையில் உள்ளீர்ப்பு செய்யும் பணிகள் அரச சேவைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ள போதிலும், பதவியுயர்வு மற்றும் நியமனப் பணிகள் இதுவரையிலும் 14 மாதங்கள் கடந்துள்ள போதிலும் நிறைவு செய்ய முடியாதுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்டவாறு அமைச்சரவையினால் எதிர்பார்க்கப்பட்டவாறு பதவியணியை வெற்றிடமான பதவிகளில் நியமித்தல் மற்றும் பதவியுயர்த்தல் மூலம் நிரப்ப முடியாமையாலும், 2021 ஆம் ஆண்டின் போது நிலவிய கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக பதவியணியை கடமைகளில் ஈடுபடுத்துவதில் காணப்பட்ட சிக்கல்களும், அதனோடு இணைந்ததாக அரசாங்கத்தினால் 2021 ஆம் ஆண்டின் போது பதவியணியை சேவைக்கு அழைப்பதை மட்டுப்படுத்த கருதிய போது 2021 ஆம் ஆண்டின் கணக்காய்வுப் பணிகளை மேற்கொள்வதில் தடையாக அமைந்தது. அந்த வரையறைகள் கணக்காய்வு நிறுவனங்களிலும் காணப்பட்ட காரணத்தால் கணக்காய்வுக்கு தேவையான தகவல்களை பெற்றுக்கொள்வதில் சிரமங்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்தது. அந்த தடைகள் எமது பணிகளை மேற்கொள்வதில் சவாலாக அமைந்திருந்த போதிலும், எனது பதவியணியின் உயர் அர்ப்பணிப்பு காரணமாக கணக்காய்வு பணிகளை உரிய காலப்பகுதியில் நிறைவு செய்து உரிய அறிக்கைகளை இலக்கிடப்பட்ட காலப்பகுதியினுள் சமர்ப்பிக்க உச்ச அளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் முக்கியமான பணிப்பொறுப்பினை கருத்திற்கொண்டு அரச துறை முகங்கொடுக்கும் முக்கியமான சிக்கல்களை நன்றாக புரிந்துகொள்வதனை சான்றுபடுத்தக்கூடிய வகையில் தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் பல்வேறு செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. கணக்காய்வு அறிக்கைகளை செயற்திறனாகவும் ஆக்கபூர்வமானதாகவும் பகிர்ந்தளிக்கும்

நோக்கில் அலுவலகத்தின் செயற்திறனை தொடர்ச்சியாக அதிகரிப்பதற்கம் மீளாய்வு செய்வதற்கும் தேசிய கணக்காய்வு அலுவலகம் கடப்பட்டுள்ளது. இறுதியாக அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள கணக்காய்வு சுயாதீனத்துவம் அலுவலகத்தின் உற்பத்தி திறனுக்கு பிரதானமான விடயமாக மிகவும் தெளிவாக இனங்காண முடியும்.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கடமைகளுக்கு அர்ப்பணிப்புள்ள பதவியணியினருடன் இணைந்து பணியாற்றுவது எனக்கு கிடைத்த மிகப்பெரிய கௌரவமாக உள்ளதுடன், அவர்களது கடமைகளை திறம்பட செய்வதற்க அவர்களின் அர்ப்பணிப்புக்காக நான் அவர்களுக்கு நன்றி கூறுகின்றேன். அரச கணக்குகள் குழு மற்றும் பொது முயற்சிகளுக்கான குழு ஆகியவற்றின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், பொதுத் தொழிலில் ஈடுபட்டுள்ள எனக்கு உதவிய பட்டயக் கணக்காளர்கள், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம், கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனங்கள், சனாதிபதி செயலாளர் உட்பட அவரது பதவியணியினர், பொதுச் சேவைகள் ஆணைக்குழு, தேசிய சம்பள ஆணைக்குழு, சட்டமா அதிபர் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளுக்கு உதவிய ஏனைய அரசாங்க நிறுவனங்கள், அலுவலகத்தின் பௌதீக மற்றும் மனிதவள மேம்பாட்டிற்கு பங்களிப்பு நல்கிய சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றுக்கு இச்சந்தர்ப்பத்தில் நான் நன்றி தெரிவிக்கின்றேன்.

இந்த சவால்மிக்க காலகட்டத்தில், பொது மக்களினதும் பாராமன்றத்தினதும் தேவைகளை நிறைவேற்றுவதில் மிகுந்த அர்ப்பணிப்புடன் நான் தொடர்ந்து பணியாற்றுவேன்.

ஒப்பம்./டபிள்யூ. பீ. சீ. விக்ரமரத்ன.
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

டபிள்யூ.பீ.சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

2022 ஒக்தோபர் 18 ஆந் திகதி

உள்ளடக்கம்

	பக்கம்
எமது நிறுவனம்	01
எமது நிறுவனக் கட்டமைப்பு	16
பதவியணி பயிற்சி	23
தகைமைவாய்ந்த கணக்காய்வாளர்களை சேவையில் ஈடுபடுத்தல்	27
பாராளுமன்றத்திற்கு உதவுதல்	27
கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் விதிக்கப்பட்ட மிகைக் கட்டணம்	31
பொது மக்களின் முறைப்பாடுகளை பரீட்சித்தல்	33
கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் மேற்கொள்ளப்படும் செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்வு	35
தகைமைவாய்ந்த கணக்காய்வாளர்களை சேவையில் ஈடுபடுத்தல்	27
புலனாய்வு கணக்காய்வு	81
தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்	85
கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் விதிக்கப்பட்ட மிகைக் கட்டணம்	31
2021 ஆம் ஆண்டுக்காக வெளியிடப்பட்டுள்ள விசேட கணக்காய்வு அறிக்கைகள்	93
பொது மக்களின் முறைப்பாடுகளை பரீட்சித்தல்	33
திரண்ட நிதியம்	105
அரச உடமையாக்கப்பட்ட பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகள்	129
விசேட வணிக தொழில் முயற்சிகள்	137
கணக்காய்விற்குள்ளாக்கப்படும் நியதிச்சட்ட மற்றும் நியதிச்சட்டம் அல்லாத நிதியங்கள்	145
மாவட்ட செயலகங்கள்	149
உள்ளூராட்சி நிறுவனங்கள்	161
வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்	167
வங்கித் துறை	175
தேசிய பாதுகாப்பு	199
சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு	213
திறைசேரி நடவடிக்கைகள்	221
விவசாயம்	239
கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி	251
கைத்தொழில் துறை	261
காணி செயற்பாடுகள்	275
போக்குவரத்து பிரிவு	285
துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அலுவல்கள்	299
பெருந்தெருக்கள் பிரிவு	319
விவசாயத் துறை	329
கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி	341
கைத்தொழில் துறை	351
காணிச் செயற்பாடுகள	365
போக்குவரத்து பிரிவு	375
துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அலுவல்கள	389
பெருந்தெருக்கள் பிரிவு	409
மின்வலுத் துறை	419
வலுச்சக்தி துறை	429
நீர்ப்பாசனம் மற்றும் நீர் வழங்கள்	455
நீர் வழங்கள் மற்றும் சுகாதாரம்	465

கல்வி	483
உயர் கல்வி	495
திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்கல்வி	503
புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள்	517
தொழில் பிரிவு	531
சுகாதார துறை	543
விளையாட்டு அலுவல்கள்	565
வெளிநாட்டு அலுவல்கள்	573
வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறை	579
விமான சேவைகள் பிரிவு	589
சுற்றுலா அலுவல்கள்	599
வியாபார பிரிவு	611
பெண்கள் மற்றும் சிறுவர் அலுவல்கள் அபிவிருத்தி	623
வெகுசன ஊடக பிரிவு	631
சுற்றாடல் பிரிவு	649
வன சீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு	659
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு துறை	667
மாகாண சபைகள் தொடர்பான அறிமுகள்	689
மேல் மாகாண சபை	693
மத்திய மாகாண சபை	699
தென் மாகாண சபை	709
வட மாகாண சபை	717
கிழக்கு மாகாண சபை	723
வட மத்திய மாகாண சபை	729
வடமேல் மாகாண சபை	743
சப்ரகமுவ மாகாண சபை	751
ஊவா மாகாண சபை	757

எமது நிறுவனம்

எமது வரலாறு

கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவியின் ஆரம்பமானது பிரித்தானிய யுகத்தின் தொடக்க காலப்பகுதி அளவு மிகவும் பழமை வாய்ந்ததாகும். **1776** ஆம் ஆண்டில் பிரித்தானியர்களால் நாட்டைக் கைப்பற்றி **3** ஆண்டுகளின் பின்னர் அதாவது **1779** ஆம் ஆண்டின் போது சிசில் ஸ்மித் என்ற பெயருடைய ஒரு கணக்காளர் கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக இருந்தமை பழைய ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்போதிலிருந்தே **41** கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளின் கீழ் சுதந்திரமான ஒரு நிறுவனமாக **2018** வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களமாவும் **2018** ஆம் ஆண்டின் பின்னர் அது தேசிய கணக்காய்வு அலுவலகமாகவும் தொடர்ச்சியாக செயற்பட்டு வருகின்றது.

கணக்காய்வு சம்பந்தமாக எங்களின் அதிகாரம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் மூலம் அரசாங்க துறையிலுள்ள நிறுவனங்களை கணக்காய்வு செய்வதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான அதிகாரம் தொடக்கமாக கிடைத்துள்ளதுடன் இருபதாவது அரசியலமைப்புக்கான திருத்தம் மற்றும் 2018 ஆகஸ்ட் 01 ஆந் திகதியிலிருந்து 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஒழுங்கு விதிகளால் அது மிகவும் விரிவடைந்துள்ளது.

“கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அரசாங்கத்தின் அனைத்து திணைக்களங்கள், சனாதிபதி அவர்களின் செயலாளரது அலுவலகம், பிரதம மந்திரியின் செயலாளரது அலுவலகம், 44 ஆவது அல்லது 45 ஆவது உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்ட அமைச்சர்களின் அலுவலகங்கள், நீதிச் சேவை ஆணைக்குழு, பாராளுமன்ற சேவை 41(அ) உறுப்புரையின் I ஆம் பட்டோலையில் குறிப்பிட்ட ஆணைக்குழு, மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு, நிருவாக நடவடிக்கைகள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர், பாராளுமன்றத்தின் பொதுச் செயலாளர், உள்ளூராட்சி நிறுவனங்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள், ஏதாவது எழுத்து மூல சட்டத்தின் கீழ் அரசாங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள வணிக முயற்சிகள் ஏனைய வியாபார முயற்சிகள் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது என கருத்தப்படுகின்ற மற்றும் சொந்த பங்குகளில் ஐம்பது சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட சதவீதத்தினை அரசாங்கம் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூராட்சி நிறுவனத்தினால் வகித்துக்கொள்ளப்படுகின்ற கம்பனிகளும் அவற்றின் கணக்குகளும் உள்ளடங்களாக கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்” என்பதாக அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

அரசியலமைப்பினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அந்த அதிகாரம் பின்வரும் அதிகாரச் சட்டங்களில் இன்னும் விபரமாகக் காட்டப்பட்டுள்ளது.

- அரசாங்க நிதி தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கடமைகளை உறுதியாகக் காட்டுவதற்காகவும் அதனுடன் சம்பந்தப்பட்ட அல்லது அதற்கு

காரணமான விடயங்களுக்காக ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டுள்ள 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம்.

- அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான கணக்காய்வு ஒழுங்கு விதிகளை வழங்குகின்ற 1971 இன் 38 ஆம் இலக்க தேசிய நிதி அதிகாரச் சட்டத்தின் II ஆம் பகுதி,

- மாகாண சபைகளுக்கான கணக்காய்வு ஒழுங்கு விதிகளை வழங்குகின்ற 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23 ஆம் பிரிவு

- மாநகர சபைகளுக்கான கணக்காய்வு ஒழுங்குவிதிகளை வழங்குகின்ற மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் பிரிவு

- நகர சபைக்கான கணக்காய்வு ஒழுங்குவிதிகளை வழங்குகின்ற நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 181 ஆம் பிரிவு

- பிரதேச சபைகளுக்கான கணக்காய்வு ஒழுங்குவிதிகளை வழங்குகின்ற 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172 ஆம் பிரிவு

- கமநல அபிவிருத்திச் சபைகளுக்கான கணக்காய்வு ஒழுங்குவிதிகளை வழங்குகின்ற 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சபைகள் அதிகாரச் சட்டத்தின் 58 ஆம் பிரிவு

- விளையாட்டு சங்கங்களுக்கான கணக்காய்வு ஒழுங்கு விதிகளை வழங்குகின்ற 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டுச் சங்கங்கள் அதிகாரச் சட்டத்தின் 9 ஆம் பிரிவு

மேலும் அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையின் மூலம் பாராளுமன்றத்தினால் ஒரு தேவைப்பாடாக அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது சட்டத்தில் குறிப்பிட்ட ஏதாவது ஏனைய கடமைகளை நிறைவேற்றுதல் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் செய்யப்பட வேண்டுமெனக் காட்டப்பட்டுள்ளது. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் செயற்பாடுகளையும் நடவடிக்கைகளையும் நிறைவேற்றும் போதும் ஒப்படைக்கும் போதும் அவரின் கடமைக்கு உதவியளிப்பதற்காக தகமைபெற்ற கணக்காய்வாளர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அரசியலமைப்பின் மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் கணக்காய்வு தொடர்பான தொழில்நுட்ப, தொழில்சார் மற்றும் விஞ்ஞாபன ரீதியான சிக்கல்களைத் தீர்த்துவைப்பதற்காக நிபுணர்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான ஒழுங்குவிதிகளும் அதன் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 154(5) ஆம் உறுப்புரையின் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவரின் கடமைகளை மேற்கொள்ளும் போதும் ஒப்படைக்கும் போதும் அனைத்து ஏடுகளையும், அறிக்கைகளையும் பரீட்சித்தல் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்களின் அல்லது அரசாங்க நிறுவனங்களின் களஞ்சியங்களுக்கும் ஏனைய ஆதனங்களுக்கும் அணுகி கணக்காய்வினை மேற்கொள்ளல் மற்றும் தேவைப்படுகின்ற தகவல்களையும் விளக்கங்களையும் பெற்றுக்கொள்வதற்கு ஒழுங்கு விதிகள் செய்யப்பட்டுள்ளன.

எங்களின் சேவை நாடுனர்

மேலே காட்டப்பட்டுள்ள வகையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விடயப்பரப்பிற்கு அரசியலமைப்பிலேயே வரைவிலக்கணம் வழங்கியுள்ளதுடன் அது மேலும் பத்தொன்பதாவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் கம்பனிகளையும் உள்ளடக்கி விரிவுபடுத்தப்பட்டுள்ளது. நிகழ்காலத்தில் எங்களின் சேவைநாடுனர் அடிப்படையானது அட்டவணை 01 இல் தரப்படுகின்றது.

சேவை நாடுனர்	நிறுவனங்களின் எண்ணிக்கை
அமைச்சுக்கள்	30
இராஜாங்க அமைச்சுக்கள்	40
திணைக்களங்கள்	105
மாவட்ட செயலகங்கள்	25
அரசாங்க கூட்டுத்தாபனங்கள், சபைகள், அதிகார சபைகள், அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்ட தொழில் முயற்சிகள்	204
அரசாங்க கம்பனிகள்	125
அரசாங்க வங்கிகள்	09
நியதிச் சட்ட மற்றும் ஏனைய நிதியங்கள்	64
வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள்	123
ஏனைய சுயாதீன நிறுவனங்கள்	11
மாகாண சபைகள்	09
உள்ளூராட்சி நிறுவனங்கள்	341
கமநல சேவை நிலையங்கள்	565
விளையாட்டு சங்கங்கள்	66
மாகாண சபைகளின் அமைச்சுக்கள், திணைக்களங்கள்,விசேட செலவு அலகுகள்	269
மாகாண சபை நியதிச்சட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட நிறுவனங்கள்	77
மொத்தம்	**2,063**

அட்டவணை 01 - 2021 ஆம் ஆண்டின் போது எங்களின் சேவை நாடுனர் அடிப்படை

எங்களின் விடயப்பரப்பு

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஐ ஆம் பகுதியின் 3 ஆம் பிரிவிலிருந்து 5 ஆம் பிரிவு வரையான பிரிவுகளின் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வுகளின் விடயப்பரப்பு குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க,

- கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால்,
  - திரண்ட நிதியத்திற்கு கிடைக்கின்ற அனைத்து வருமானங்களும் திரண்ட

நிதியத்திலிருந்தான அனைத்து செலவுகளும் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

- கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்களின் கணக்குகளில் செலவு செய்யப்பட்டுள்ளது என சுட்டிக்காட்டப்படுகின்ற பணம் அவை தொடர்புபடுத்தப்பட்டுள்ள அல்லது அறவிடப்பட்டுள்ள சேவைகள் அல்லது செயற்பாடுகளுக்காக சட்ட ரீதியாகப் பெற்று தொடர்புபடுத்தப்பட்டுள்ளனவா என்பது தொடர்பாக விசாரித்து தெரிந்துகொள்ளுதல் வேண்டும்.

- செலவுகள் அவை கட்டுப்படுத்தப்படுகின்ற அதிகாரச் சட்டத்திற்கு இணங்கியுள்ளனவா என்பது தொடர்பாக தீர்மானித்தல் வேண்டும். மற்றும்

- ஒவ்வொரு கணக்காய்வின் போதும் வருமானங்கள், செலவுகள், கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் தொடர்பாக பரீட்சித்தல் வேண்டும்.

- கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வின் விடயப்பரப்பிற்கு கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்தின் கணக்குகள், நிதிகள், நிதி நிலைமை, அரசாங்க நிதிகள் மற்றும் ஆதனங்களின் விவேகமுள்ள முகாமைத்துவத்தினைப் பரீட்சித்தல் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

- கணக்காய்வாளர் தலைமை அதிபதி இந்த அதிகாரச் சட்டத்திலுள்ள ஒழுங்குவிதிகளை நிறைவேற்றுவது சம்பந்தமாக பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூறுதல் வேண்டும்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவிலுள்ள ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டு கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய எந்தவொரு விடயம் தொடர்பாகவும் அந்த விடயத்தை உறுதிப்படுத்துவதற்கு போதியளவு சான்றுகளுடன் பொது மக்களுக்கு மத்தியில் யாராவது நபர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு எழுத்து மூலம் தெரிவித்தால் அந்த விடயத்தை கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் பரீட்சிக்க வேண்டியதுடன் அது தொடர்பாக பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அவரின் தற்றுணிபின் பிரகாரம் கணக்காய்வின் விடயப்பரப்பு தீர்மானிக்கப்படுவதுடன் இது சம்பந்தமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கிணங்க,

- கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்விற்காக 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்குகள் மற்றும் கணக்காய்வு நியமங்கள் அதிகாரச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட கணக்காய்வு நியமங்கள் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட இலங்கை

கணக்காய்வு நியமங்கள் தொடர்புபடுத்தப்படுதல் வேண்டும்.

- செயலாற்றல் கணக்காய்வு, சுற்றாடல் கணக்காய்வு, தொழில்நுட்ப கணக்காய்வு, மற்றும் ஏனைய ஏதாவது விசேட கணக்காய்வுகளுக்காக இலங்கை கணக்காய்வு நியமங்களில் ஏதாவது கணக்காய்வு நியமம் உறுதியாக குறிப்பிடப்படாத சந்தர்ப்பத்தில் அக்கணக்காய்வு சம்பந்தமாக தொடர்புபடுத்தப்பட வேண்டும் என அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களில் சர்வதேச அமைப்பின் மூலம் தீர்மானிக்கப்பட்ட அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கான சர்வதேச நியமங்களின் ஏற்பாடுகளானவை உள்நாட்டு தேவைப்பாடுகளுக்கு இணங்கும் வகையிலான திருத்தங்களுடன் தொடர்புபடுத்தக்கூடிய வகையில் கணக்காய்வு சேவை ஆணைக்குழுவினால் வர்த்தமானியில் வெளியிடப்படுகின்ற அறிவுறுத்தலின் மூலம் உறுதியாகக் காட்டப்படுதல் வேண்டும்.

எங்களின் சுயாதீனத்துவம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுதந்திரமானது அரசியலமைப்பின் மூலம் விரிவாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அரசியலமைப்பில் திருத்தங்கள் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மூலம் அதிஉயர் கணக்காய்வு நிறுவனத்தின் சுதந்திரத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்படுகின்ற அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்கள் தொடர்பான சர்வதேச அமைப்பின் அடிப்படைத் தத்துவங்களுடன் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரைக்கு இணங்க,

- ஒரு கணக்காய்வாளர் தலைமை அதிபதியானவர் தகைமை பெற்ற ஒரு கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக இருக்கவேண்டியதுடன் 41 (அ) ஆம் உறுப்புரையிலுள்ள ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டு சனாதிபதி அவர்களால் நியமிக்கப்படுவார். கணக்காய்வாளர் தலைமை அதிபதியானவர் சிறந்த மனநிலை இருக்கும் வரை தனது பதவியினை வகிப்பார்.

பாதகமான சுகாதார நிலைமை அல்லது ஊனமுற்ற நிலைமையின் அடிப்படையில் அல்லது சனாதிபதி அவர்கள் பாராளுமன்றத்தை கோருதல் ஆகிய நிலைமையின் போது மாத்திரம் சனாதிபதி அவர்களால் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினை பதவியிலிருந்து நீக்கலாம் அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரையில் மேலும் காட்டப்பட்டுள்ளவாறு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சம்பளம் பாராளுமன்றத்தினால் நிர்ணயிக்கப்படுவதுடன் அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட சம்பளம் திரண்ட நிதியத்திற்கு ஒரு செலவாக அமைவதுடன் அவரின் பதவிக் காலத்தில் அது குறைக்கப்படாமலிருத்தல் வேண்டும்.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி எந்த அமைச்சினதும் அல்லது அரசாங்க உத்தியோகத்தரின் மேற்பார்வைக்கு உட்படமாட்டார்.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நிதி மற்றும் நிருவாக சுயாதீனத்திற்கு காணப்படுகின்ற வரையறைகள்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் செயற்பாடுகள் தொடர்பான சுதந்திரம்

இதுவரை அரசியலமைப்பின் மூலம் பாதுகாக்கப்பட்டிருந்தும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நிதி மற்றும் நிருவாக சுதந்திரமானது காணப்படுகின்ற அரசியலமைப்பு மற்றும் சட்டரீதியான ஒழுங்கு விதிகளின் அடிப்படையில் நிறைவேற்றுனரினால் மட்டுப்பாடுகளுக்கு உட்படுத்திய சந்தர்ப்பங்கள் உள்ளன. எனினும் 2018 ஆகஸ்ட் 01 ஆந் திகதியிலிருந்து 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஒழுங்குவிதிகளின் மூலம் அந்த மட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளன. கணக்காய்வாளர் தலைமை அதிபதி அனைத்து தனிப்பட்ட மற்றும் நிறுவன ரீதியான கடப்பாடுகளிலிருந்தும் விடுவிக்கப்பட வேண்டியதுடன் மத்தியஸ்தமான மட்டுப்பாடுகள் அற்றும் இருத்தல் வேண்டும். நிதி, நிருவாகம் ஆகிய இரு வகைகளிலும் காணப்படுகின்ற வளங்களுக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதி நிறைவேற்றுனர் மீது தங்கியிருப்பதானது பாராளுமன்றம் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வின் சுதந்திர தன்மைக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது நியாயமான ஏற்றுக்கொள்ளலாகும். நிதி மற்றும் நிருவாக சுதந்திரத்தினை உள்ளடக்கி கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் சுதந்திரத்தினை உறுதிப்படுத்துவதற்காக சட்ட ரீதியான ஏற்பாடுகளின் மூலம் அதிக பாதுகாப்பினை பாராளுமன்றத்தினால் வழங்குதல் வேண்டும். 2018 ஆம் ஆண்டு வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அவரின் செலவுக்காக போதியளவு நிதி ஏற்பாட்டினை பெற்றுக்கொள்வதற்காக பொதுத் திறைசேரியின் மீது தங்கியிருக்க வேண்டியதுடன் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மூலம் ஏனைய பொதுநலவாய நாடுகளைப் போல இலங்கையின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியும் அவரின் பதவியினை உள்ளடக்கிய தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கான பாதீட்டினை பாராளுமன்றத்தின் நிதி தொடர்பான தெரிவுக் குழுவினால் நுண்ணிய பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்டு பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுவதுடன் அவரின் பாதீடு தொடர்பாக நிறைவேற்றுனரின் கட்டுப்பாடின்றி தீர்மானம் எடுக்கப்படும். அதற்கிணங்க கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பாதீடு பாராளுமன்றத்தினால் தனியாக தீர்மானம் எடுப்பதற்கு ஒழுங்கு விதிகள் செய்யப்பட்டுள்ளதன் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கடமையை நிறைவேற்றும் போது நிதிசார் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் நிருவாக சுதந்திரத்தினைப் பாதுகாத்தல், பதவியணியினரை பதவி உயர்த்துதல், இடமாற்றம் செய்தல், ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல், சம்பளம் மற்றும் பதவியணியினரின் ஏனைய நிருவாக நடவடிக்கைகள் சம்பந்தமான நிருவாக ரீதியான விடயங்கள் தொடர்பான கடப்பாடு கணக்காய்வு சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருந்தும் இருபதாவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் கணக்காய்வு சேவை ஆணைக்குழு இரத்துச் செய்யப்பட்டதனால் அந்த நடவடிக்கைகள் மீண்டும் பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்நிலைமையின் அடிப்படையில் மீண்டும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களுக்கு தேவையான மனித வளங்களைப் பெற்றுக்கொள்வதற்காக அவர் அங்கத்துவம் வகிக்காத ஆணைக்குழுவின் மீது தங்கி இருக்க வேண்டி இருப்பதன் மூலம் அவரின் நிருவாக சுதந்திரத்திற்கு தடைகள் உருவாகியுள்ளது. இந்நிலையை மேலும் தீவிரப்படுத்தி கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலம் ஏனைய நிறுவனத்

தலைவர்களுக்குச் செய்யப்படுகின்ற சில அதிகார ஒப்படைப்புக்கள் கூட செய்யப்படாமையின் மூலம் தமது நியதிச் சட்டரீதியான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தடைகள் உருவாகியுள்ளது. அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் மீண்டும் கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவினை முறைப்படியாக அதிகாரத்துடன் ஸ்தாபிப்பதன் மூலம் இது சரிசெய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் அரசியலமைப்பின் 170 ஆவது உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்கள் "அரசாங்க உத்தியோகத்தர் அல்லாது விசேட பட்டியலுக்கு" உள்ளடக்கப்பட்டுள்ளார். இது மேலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் நிருவாகச் சுதந்திரத்தினை உறுதிப்படுத்துவதற்காக விதிக்கப்பட்ட ஏற்பாடாகும்.

ஐக்கிய நாடுகளின் அதியுயர் கணக்காய்வு நிறுவனங்கள் தொடர்பான சர்வதேச அமைப்பு (INTOSAI) 1977 ஆம் ஆண்டின் போது அங்கீகரித்த "லீமா வெளியீட்டின்" மூலம் தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் ரீதியாக அரசாங்க கணக்காய்வின் சுதந்திரம் தொடர்பான தத்துவங்களின் மீது கவனம் செலுத்தியுள்ளது. 30 ஆண்டுகளின் பின்னர் அதியுயர் கணக்காய்வு நிறுவனங்கள் தொடர்பான சர்வதேச அமைப்பின் XIX ஆவது சம்மேளனத்தில் (2007 மெக்சிகோ) "மெக்சிகோ வெளியீடு" இன் மூலம் அரசாங் துறையின் சிறந்த கணக்காய்விற்காக அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வருமாறு 8 பிரதான அத்தியவசியமான தேவைப்பாடுகள் இனங்காணப்பட்டுள்ளன.

கொள்கை 1 - பொருத்தமானதும் விளைதிறனானதுமான அரசியலமைப்பு சார்ந்த/ நியதிச்சட்ட ரீதியான/ சட்டரீதியான செயற்பாட்டு கட்டமைப்பும் அச்செயற்பாட்டு கட்டமைப்பிற்குள் உண்மையாக செயற்படும் ஒழுங்குவிதிகள் காணப்படுதல்.

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சுதந்திரத்தின் அளவினை விபரமாக வெளிப்படுத்திக் காட்டும் சட்டங்களை உருவாக்குதல் அத்தியவசியமானதாகும்.

கொள்கை 2 - அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் (கலவிசார் நிறுவனங்கள்) அங்கத்தவர்கள் சொந்த கடமைகளை நியாயமாக நிறைவேற்றும் போது அவர்களின் பதவியில் பாதுகாப்பு மற்றும் சட்டரீதியான சுற்றாடலில் சுதந்திரம்.

பின்வரும் நிலைமைகளின் கீழ் அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களின் தலைவர்களின் மற்றும் கல்விசார் நிறுவனங்களின் அங்கத்தவர்களது நியமனங்கள், தலைவர்களின் மற்றும் கல்விசார் நிறுவனங்களின் அங்கத்தவர்களது நியமனங்கள், மீள நியமித்தல்கள், தொழில் வாய்ப்பு, சேவையிலிருந்து நீக்குதல், இளைப்பாறுதல் என்பன தொடர்பான நிபந்தனைகள் உரிய சட்டங்களை உருவாக்குவதன் மூலம் விசேடமாக காட்டப்படுதல் வேண்டும்.

- சட்ட சபையினால் சான்றுபடுத்துகின்ற நடைமுறையின் மூலம் சுதந்திரத்தினை உறுதிப்படுத்தும் நியமனங்கள், மீண்டும் நியமித்தல் அல்லது சேவையிலிருந்து நீக்குதல் (அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சுதந்திரம் தொடர்பான ISSAI II வழிகாட்டிக்கோவை மற்றும் நன்னடத்தைகள்)

- சட்ட அதிகாரத்தின் (Mandate) அடிப்படையில் சொந்த செயற்பாடுகளை

காரணமாகக் கொண்டு நிறைவேற்றுனர்கள் மேற்கொள்கின்ற எதிர்ப்புக்களுக்கு பயமின்றி நடவடிக்கை எடுப்பதற்கு இடமளிக்கும் வகையில் போதியளவு நீண்ட மற்றும் உறுதியான காலப்பகுதியுடன் செய்யப்படுகின்ற நியமங்கள், மற்றும்

- சொந்த கடமைகளை முறைப்படியாக நியாயமாக மேற்கொள்ளும் போது கடந்த காலத்தில் மற்றும் நிகழ்காலத்தில் இடம்பெற்ற ஏதாவது செயற்பாட்டினை காரணமாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற முறைப்பாடுகளிலிருந்து காத்துக்கொள்ளல். (Immune)

கொள்கை 3 - அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களின் செயற்பாடுகளை நிறைவேற்றும் போது போதியளவு விரிவான சட்ட அதிகாரம் (Mendate) மற்றும் முழுமையான தற்றுணிவு

பின்வரும் செயற்பாடுகளை கணக்காய்வு செய்யும் அதிகாரம் அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

- அரசாங்கத்தின் நிதிகள், வளங்கள் அல்லது சொத்துக்களைப் பெற்றுக்கொண்ட நபர் அல்லது நலன்பெறுனரினால் அவற்றினை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வது தொடர்பாக அதன் சட்டரீதியான தன்மையை கருத்தில் கொள்ளாது கணக்காய்வு செய்தல்

- அரசாங்கத்திற்கு அல்லது அரசாங்க நிறுவனங்களுக்கு கிடைக்க வேண்டிய வருமானங்களைச் சேகரித்தல்

- அரசாங்கத்தின் அல்லது அரசாங்க நிறுவனங்களின் கணக்குகள் தொடர்பான சட்டரீதியான தன்மையும் பணிப்புரைத் தன்மையும்

- நிதி முகாமைத்துவத்தின் மற்றும் அறிக்கையிடுதலின் தரம், மற்றும்

- அரசாங்கத்தின் அல்லது அரசாங்க நிறுவனங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான சிக்கனம், செயற்திறன் மற்றும் பயனுறுதி

சட்டத்தின் மூலம் அவ்வாறு செய்யுமாறு உறுதியாக பணிப்புரை செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்களைத் தவிர்த்து அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களினால் அரசாங்கத்தின் அல்லது அரசாங்க நிறுவனங்களின் கொள்கைகளை கணக்காய்வு செய்யாதிருக்க வேண்டும் என்பதனால் அவர்களின் கணக்காய்வானது கொள்கைகளை அமுல்ப்படுத்தும் செயற்பாடுகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு தொடர்புபடும் வகையில் சட்ட சபைகள் விதிக்கின்ற சட்டங்களுக்கு அந்த நிறுவனங்கள் மதிப்பளிக்க வேண்டியதுடன் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக சட்ட சபைகள் அல்லது நிறைவேற்றுனர்கள் மேற்கொள்கின்ற பணிப்புரைகளிலிருந்து அல்லது தலையீட்டிலிருந்து அந்த கணகக்காய்வு நிறுவனங்கள் விடுவிக்கப்படுவதாவது

- கணக்காய்வு பிரச்சினைகளை தெரிவு செய்தல்

- அவர்களின் கணக்காய்வினைத் திட்டமிடல், வேலைக் குறிப்புக்கள் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்,

அறிக்கையிடுதல், மற்றும் பின்தொடர் நடவடிக்கை எடுத்தல்,

- தமது அலுவலகத்தை ஒழுங்கமைத்தலும் முகாமைத்துவம் செய்தலும்

- அங்கீகரித்தல்களை அமுல்ப்படுத்தல் தமது சட்ட அதிகாரத்தின் (Mandate) ஒரு பகுதியாகும் சந்தர்ப்பங்களின் போது சொந்த தீர்மானத்தை நிறைவேற்றுதல்.

அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களினால் தாம் கணக்காய்வு செய்யும் அமைப்புக்களின் முகாமைத்துவத்தினுள் எந்த வகையிலும் தலையீடு செய்தல் அல்லது தலையீடு செய்வதாக காட்டிக்கொள்ளும் வகையில் செயற்படுதல் செய்யாதிருத்தல் வேண்டும்.

அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்கள் தமது கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்களுடன் மிகவும் நெருக்கமாக தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதில்லை என்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்கிணங்க அவர்களின் குறிக்கோளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுகின்றது என்பதனை வெளிப்படையாக காட்டுதல் வேண்டும்.

தமது பொறுப்புக்களை நிறைவேற்றும் போது அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு முழுமையான தற்றுணிபின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். அவர்கள் அரசாங்க நிதியத்தின் பயன்பாடு மற்றும் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கு முயற்சி செய்கின்ற அரசாங்க அல்லது அரசாங்க நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் செயற்படுதல் வேண்டும்.

அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்கள் தொடர்பான சர்வதேச அமைப்பினதும் சர்வதேச கணக்காய்வாளர்கள் சம்மேளத்தினதும் ஏனைய ஏற்றுக்கொள்ளக் கூடிய நியமங்கள் நிர்ணயிக்கப்படுகின்ற நிறுவனங்களினதும் உத்தியோகபூர்வ ஆவணங்களை அடிப்படையாகக் கொண்ட பொருத்தமான வேலைகள் மற்றும் கணக்காய்வு நியமங்களையும் நன்னடத்தை கோவைகளையும் அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களால் பயன்படுத்துதல் வேண்டும்.

அரசியலமைப்பின் நியதிச்சட்டங்களின் மூலம் அல்லது சட்டவாக்கங்களின் மூலம் பணிப்புரை செய்யப்பட்டுள்ள வகையில் வருடாந்த செயலாற்றல் அறிக்கையினை அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களினால் சட்ட சபைக்கும் ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கும் சமர்ப்பித்தல் வேண்டும். அந்த நிறுவனங்களினால் மேற்கூறிய அறிக்கையை பொதுமக்கள் தெரிந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

கொள்கை 4 - மட்டுப்பாடின்றி தகவல்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருத்தல்.

அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களின் நியதிச் சட்ட பொறுப்புக்களை முறைப்படியாக நிறைவேற்றுவதற்காக தேவையான அனைத்து ஆவணங்களையும் தகவல்களையும் உரிய வேளைக்கு சரியாக, நேரடியாக, சுதந்திரமாக பெற்றுக்கொள்வதற்கு போதிய அதிகாரம் அந்த நிறுவனங்களிடம் இருத்தல் வேண்டும்.

கொள்கை 5 - தமது வேலைகள் தொடர்பாக அறிக்கையிடுவதற்கு உள்ள உரிமை மற்றும் கடப்பாடு

தமது கணக்காய்வுச் செயற்பாட்டின் பெறுபேறுகளை அறிக்கையிடுதல் சம்பந்தமாக அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு மட்டுப்பாடுகள் செய்யாதிருத்தல் வேண்டும். தமது கணக்கபாய்வுச் செயற்பாட்டின் பெறுபேறுகளை ஆகக் குறைந்தது ஒரு ஆண்டிற்கு ஒரு தடவையேனும் அறிக்கையிடுவதற்கு அவர்களுக்கு

சட்டரீதியாக பணிப்புரை செய்யப்படுதல் வேண்டும்.

கொள்கை 6 - கணக்காய்வு அறிக்கைகளின் உள்ளடக்கம் மற்றும் காலத்தை தீர்மானிக்கும் சுதந்திரம் மற்றும் அவற்றை வெளியிட்டு பகிர்ந்தளித்தல்.

- தமது கணக்காய்வு அறிக்கைகளின் உள்ளடக்கத்தை தீர்மானிக்கும் சுதந்திரம் அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களிடம் உள்ளது.

- கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்தின் கருத்துரைகள் பொருத்தமான வகையில் கவனத்திற்கு எடுத்து தமது கணக்காய்வு அறிக்கைகளில் அவதானிப்புக்களையும் சிபாரிசுகளையும் உள்ளடக்கும் சுதந்திரம் அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு இருத்தல் வேண்டும்.

- கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட வேண்டிய ஆகக் குறைந்த தேவைப்பாட்டினை உறுதியாகக் காட்டுதலும் பொருத்தமான சந்தர்ப்பங்களில் முறைப்படியாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அல்லது சான்றுபடுத்துவதற்கு உறுதியான விடயங்களைக் காட்டுதல் சட்டத்தின் மூலம் செய்யப்படுதல் வேண்டும்.

- அறிக்கையிடுவதற்குத் தேவையான விடயங்களை உறுதியாக சட்டத்தினால் பணிப்புரை செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்களைத் தவிர்த்து தமது கணக்காய்வு அறிக்கைகளின் காலத்தை தீர்மானிக்கும் சுதந்திரம் அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு உள்ளது.

- ஒட்டுமொத்தமாக சட்ட சபை அதன் ஆணைக்குழு, அல்லது அரசாங்கத்தினால் புலனாய்விற்கு அல்லது கணக்காய்விற்காக விசேட வேண்டுதல் செய்யப்படுகையில் அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களினால் அவை நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

- அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களின் அறிக்கைகள் சட்டத்தால் வலியுறுத்தப்பட்டுள்ளவாறு உரிய அதிகாரிகளுக்கு முறைப்படியாகச் சமர்ப்பித்தல் அல்லது ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் அவற்றினை வெளியிட்டு பகிர்ந்தளித்தல் வேண்டும்.

கொள்கை 7 - அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களின் சிபாரிசுகள் தொடர்பாக விளைதிறனான பின்தொடர் நடவடிக்கைப் பொறிமுறை காணப்படுதல்

- அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்கள் தமது அறிக்கைகளில் குறிப்பிடுகின்ற உறுதியான சிபாரிசுகளை மீளாய்வு செய்து பின்தொடர் நடவடிக்கை எடுத்து சீர்திருத்த நடவடிக்கைகள் எடுப்பதற்காக உரிய வகையில் சட்டவாக்க சபைக்கு அல்லது அதன் ஆணைக்குழுவிற்கு அல்லது கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்தின் நிருவாக சபைக்கு சமர்ப்பிக்கும்.

- அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களைப் போல உரியவாறு சட்டவாக்க சபை அதன் ஆணைக்குழு அல்லது கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்தின் நிருவாக சபை என இவற்றின் அவதானிப்புக்களும் சிபாரிசுகளும் முறைப்படியாக அமுல்ப்படுத்தப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு அந்த கணக்காய்வு நிறுவனங்களுக்குச் சொந்தமாக உள்ளக

பின்தொடர் நடவடிக்கை முறைமை காணப்படல்.

- பின்தொடர் நடவடிக்கை மற்றும் அங்கீகரித்தல்களுக்காக தமக்குரியதான நியதிச் சட்ட ரீதியான அதிகாரம் அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களிடம் காணப்பட்டிருந்தும் கூட அந்த கணக்காய்வு நிறுவனங்கள் தமது பின்தொடர் நடவடிக்கை அறிக்கைகளை உரிய வகையில் சட்டவாக்க சபைக்கு அதன் ஆணைக்குழுவிற்கு அல்லது கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்தின் நிருவாக சபைக்கு கவனித்துப் பாரத்து தேவையான நடவடிக்கை எடுப்பதற்காக சமர்ப்பிக்கப்படும்.

கொள்கை 8 - நிதி மற்றும் முகாமைத்துவ.ஃ. நிருவாக சுதந்திரம் மற்றும் பொருத்தமான மானிட, பௌதீக மற்றும் நிதி வளங்கள் காணப்படல்.

- அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களுக்குத் தேவையான மற்றும் நியாயமான மானிட, பௌதீக மற்றும் நிதி வளங்கள் இருத்தல் வேண்டும். இந்த வளங்களைப் பெற்றுக்கொள்வதனை கட்டுப்படுத்துவதற்கு அல்லது செயற்படுத்துவதற்கு நிறைவேற்றுனர் முன்வராதிருத்தல் வேண்டும். அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்கள் தமது பாதீட்டினை அவர்களாலேயே முகாமைத்துவம் செய்து பொருத்தமான வகையில் ஒதுக்கீடு செய்தல்.

- சட்டவாக்க சபை அல்லது அதன் ஒரு ஆணைக்குழு அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு தமது சட்டரீதியான அதிகாரங்களுக்கு இணங்க செயற்பாடுகளை (ஆயனெயவந) நிறைவேற்றுவதற்குத் தேவைப்படுகின்ற உரிய வளங்களை அத்தியவசியமாக வழங்கப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்தும் பொறுப்பினை வகித்தல் வேண்டும்.

- அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வளங்கள் அவர்களின் சட்டரீதியான அதிகாரங்களுக்கு இணங்க செயற்பாடுகளை (Mandate) நிறைவேற்றிக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கக் கூடிய அளவுக்கு போதியவை அல்லததனால் அது சம்பந்தமாக நேரடியாக சட்டவாக்க சபைக்கு மேன்முறையீடு செய்யும் உரிமை அந்த கணக்காய்வு நிறுவனங்களுக்கு உள்ளது.

அரசியலமைப்பில் குறிப்பிடப்படுவது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பதவியிணர் அல்லாது கணக்காய்வாளர் தலைமை அதிபதி என்பதனால் ஏனைய நாடுகளைப் போல தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பதவியணியினரின் நடவடிக்கை மற்றும் மேற்பார்வையினை விபரமாக காட்ட வேண்டிய தேவைப்பாடு 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மூலம் 2018 ஆகஸ்ட் 01 ஆந் திகதியிலிருந்து பூர்த்தி செய்யப்பட்டது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம்

தேசிய கணக்காய்வு அலுவலகத்தையும் இலங்கை அரசாங் கணக்காய்வு சேவையையும் தோற்றுவிப்பதற்காகவும் அரசாங்க நிதி தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கடமைகளை உறுதியாகக் காட்டுவதற்காகவும் அதனுடன் சம்பந்தப்பட்ட அல்லது அதன் விளைவான விடயங்களுக்கான ஒழுங்குவிதிகள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் குறிப்பிட்ட பிரதான பண்புகள் பின்வருமாறாகும்.

- கணக்குகள், நிதி, நிதி நிலைமை, அரசாங்க நிதிக்கட்டுப்பாடு, கணக்காய்வு நிறுவனங்களின் ஆதனங்களைப் பரீட்சித்தல் மற்றும் செயலாற்றல் கணக்காய்வு, சுற்றாடல் கணக்காய்வு, தொழில்நுட்ப கணக்காய்வு, மற்றும் ஏனைய விசேட கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு இயலுமான வகையில் பரப்பெல்லை விரிவுபடுத்தப்பட்டிருத்தல்.

- கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம் தொடர்பாக எந்த ஒரு விடயத்தைப் பற்றி அந்த விடயத்தை உறுதிப்படுத்துவதற்கு போதியளவான சான்றுகளுடன் பொதுமக்கள் மத்தியில் யாராவது ஒரு நபர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு எழுத்துமூலம் தெரியப்படுத்துவாராக இருந்தால் அந்த விடயம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் பரீட்சிக்கப்பட வேண்டியதுடன் அது தொடர்பாக பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

- 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் அதிகாரச் சட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட கணக்காய்வு நியமங்கள் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட இலங்கை கணக்காய்வு நியமங்களை தேசிய கணக்காய்வு அலுவலகம் ஏற்றுக்கொள்வதுடன் அவை கணக்காய்விற்கு தொடர்புபடுத்தப்படுகின்றது.

- அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசாங்க கம்பனிகளைத் தவிர்த்து, ஏதாவது கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்ததினால் சமர்ப்பிக்கப்பட்ட ஏதாவது நிதிக்கூற்றுக்கள் அல்லது ஏதாவது கணக்குகள் சம்பந்தமாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்கின்ற நிறுவனத்திற்கு ஒவ்வொரு நிதி ஆண்டும் முடிவடைந்ததன் பின்னர் ஐந்து மாதங்களுக்குள் பொழிப்பு அறிக்கையினை வழங்குதல் வேண்டும்.

- ஒரு அரசாங்க கூட்டுத்தாபனம் அல்லது அரசாங்கத்தினால் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனத்தினால் பங்குகளில் ஐம்பது சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட சதவீதத்தினை வைத்திருக்கும் ஒரு கம்பனியின் அங்கீகரித்த வருடாந்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய உரிய ஆவணங்களும் தகவல்களும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கிடைத்து மூன்று மாதங்களுக்குள் தனது ஆண்டறிக்கையில் வெளியிடுவதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் ஒரு அறிக்கையினை சமர்ப்பித்தல் வேண்டும்.

- உரிய கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனம் ஒப்படைக்கப்பட்டுள்ள அமைச்சருக்கு மற்றும் நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கான பிரதியுடன் ஒவ்வொரு நிதி ஆண்டும் முடிவடைந்து ஐந்து மாதங்களுக்குள் ஒவ்வொரு கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்தின் நிருவாக சபைக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வருடாந்த விபரமான முகாமைத்துவ அறிக்கையினை சமர்ப்பித்தல் வேண்டும்.

- அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் அரசாங்கத்தின் ஒவ்வொரு நிதி ஆண்டும் முடிவடைந்து மூன்று மாதங்கள் கடப்பதற்கு முன்னர் திறைசேரி செயலாளரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

- கணக்காய்வு செயற்படுகின்ற அரசாங்க கூட்டுத்தாபனம் மற்றும் நியதிச்சட்ட நிதியங்கள் அல்லது சபைகள் ஏதாவது எழுத்திலான சட்டத்தின் மூலம் அல்லது அதன் கீழ் அரசாங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள வியாபார முயற்சிகள் அல்லது ஏனைய வியாபாரங்கள் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ளவை என கருதப்படுகின்ற தமது பங்குகளில் ஐம்பது சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட சதவீதத்தினை அரசாங்கம் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூராட்சி நிறுவனங்களினால் வைத்துக்கொள்ளப்படுகின்ற கம்பனிகளிடமிருந்து கட்டணங்கள் அறவிடுதல் வேண்டும்.

- தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்குச் சேர்த்துக்கொள்ளப்படுகின்ற நபர்களின் சம்பளங்களும் ஏனைய படிகளும் மற்றும் வேறு ஏதாவது நலன்கள் திரண்ட நிதியத்திற்கான ஒரு செலவாக இருத்தல் வேண்டும்.

- அனைத்து கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனங்களினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அவரினால் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள எவராவது ஒரு உத்தியோகத்தருக்கு ஒத்துழைப்பினை வழங்க வேண்டியதுடன் ஆக்கபூர்வமான ஒரு கணக்காய்வினை மேற்கொள்வதற்கு வசதிகளை வழங்குவதற்காக வேலை செய்வதற்குத் தேவையான பாதுகாப்பானதும் கண்காணிப்பும் உடையதுமான ஒரு சுற்றாடலினை தயார்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

- நிதி விடயம் ஒப்படைக்கப்பட்டுள்ள அமைச்சரினால் உறுதியாக குறிப்பிடப்படுகின்ற காலப்பகுதிக்குள் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் வருடாந்த பாதீட்டினை தயாரிக்க வேண்டியதுடன் சபாநாயகரினால் தீர்மானிக்கப்படுகின்ற திகதியில் அதனை அவருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இந்த பாதீடானது 10 நாட்களுக்குள் நிதி அமைச்சரின் அவதானிப்புக்களை சபாநாயகர் பெற்று பாராளுமன்றத்தில் முன்வைத்தல் வேண்டும். பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுகின்ற பாதீட்டினை தேசிய பாதீட்டில் உள்ளடக்குவதற்காக சபாநாயகரினால் நிதி அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

- கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அல்லது அதிகாரமுள்ள உத்தியோகத்தருக்கு உதவியளிக்காமை ஒரு குற்றம் என அதிகாரச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- இரகசியத்தன்மையை கவனத்தில் கொள்ளாது எழுத்துமூல அல்லது இலத்திரனியல் அறிக்கை, ஏடுகள், ஆவணங்கள் அல்லது தகவல்களை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை வழங்கி கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அதிகாரம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- எந்த ஒரு நபரின் அல்லது நிறுவனத்தின் கணக்குகளை கணக்காய்வு செய்து

கணக்காய்வு செலவினை அறவீடு செய்வதற்காக கணக்காய்வு கட்டணத்தை நிர்மாணிப்பதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

- அறிக்கையினை பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்காக கால அட்டவணையை நிர்ணயித்தல்.

- தேசிய கணக்காய்வு அலுவலகத்தை கணக்காய்வு செய்வதற்கு தகமைபெற்ற சுதந்திரமான ஒரு கணக்காய்வாளர் சபாநாயகரினால் நியமிக்கப்படுவதுடன் அவரின் அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

- இந்த அதிகாரச் சட்டத்தின் மூலம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் இருத்தலும் அவற்றின் ஆக்கபூர்வமான செயற்பாடும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

- கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தகவல்களை வழங்குகின்ற நபர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்.

- கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் பாராளுமன்றத்திற்கு தமது அறிக்கையினைச் சமர்ப்பித்ததன் பின்னர் அவற்றினை பொது மக்கள் பெற்றுக்கொள்வதற்காக தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணைய தளத்தில் அதனை வெளியிடுதல் வேண்டும்.

- கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அல்லது அவரின் பதவியணியிலுள்ள ஒரு உத்தியோகத்தரினால் நேர்மை விசுவாசமாக அல்லது அந்தக் கருத்தோடு மேற்கொள்கின்ற ஏதாவது நடவடிக்கையினால் அல்லது அரசியலமைப்பின் கீழ் நிறைவேற்றப்படுகின்ற முழுமையான சட்ட நடவடிக்கைகளுக்கு எதிராக உருவாகின்ற சட்டரீதியான முயற்சிகளிலிருந்து அவர்கள் விடுவிக்கப்படுகின்றார்.

அரசியலமைப்பின் இருபதாவது அரசியலமைப்பு திருத்தம் அமுல்ப்படுத்தப்பட்டதோடு கணக்காய்வு சேவை ஆணைக்குழு இரத்துச்செய்யப்பட்டதுடன் அதன் பிரதான செயற்பாடான அரசாங்க கணக்காய்வு சேவையின் நடவடிக்கைகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டது. எவ்வாறாயினும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பின்வரும் செயற்பாடுகளும் கணக்காய்வு சேவை ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அச் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதிகாரத்தை ஒப்படைத்து தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினை திருத்தம் செய்வற்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள பிரிவு	பிரிவு
5(2) ஆம் பிரிவு	செயலாற்றல் கணக்காய்வு சுற்றாடல் கணக்காய்வு, தொழில்நுட்ப கணக்காய்வு எனபன பற்றி இலங்கை கணக்காய்வு நியமங்களில் எந்த கணக்காய்வு நியமம் உறுதியாக குறிப்பிடப்படாத சந்தர்ப்பத்தில் அது சம்பந்தமாக அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச அமைப்பின் மூலம் தீர்மானிக்கப்பட்ட அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கான கணக்காய்வு நியமங்களை உள்நாட்டு தேவைப்பாட்டிற்கு இணங்கும் வகையில் திருத்தங்களுடன் தொடர்புபடுத்தக்கூடிய வகையில் கணக்காய்வு சேவை ஆணைக்குழுவினால் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பணிப்புரையின் மூலம் உறுதியாக காட்டக்கூடியதாக இருக்கும். எனினும் இருபதாவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் கணக்காய்வு சேவை ஆணைக்குழு இரத்துச் செய்யப்பட்டதனால் அந்த நடவடிக்கை செயற்பாடற்று உள்ளது.

19(1)(அ) பிரிவு	ஏனைய ஏதாவத எழுத்துமூல சட்டத்தில் மூன்றாந் தரப்பினருக்கு விசேடமாக காட்டப்பட்டிருந்தாலே தவிர கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனம் ஏதாவது கொடுக்கல் வாங்கலை ஏதாவது எழுத்திலான சட்டத்திற்கு முரணாக மேற்கொண்டுள்ளது எனவும் அக்கொடுக்கல் வாங்கல்களின் மூலம் அதனுடன் தொடர்புபட்ட பதவி வகிப்பவரின் மோசடி, கவனயீனம், பிழையான பயன்பாடு, அல்லது ஊழலின் காரணமாக ஏதாவது பற்றாக்குறைகள் அல்லது நட்டங்கள் ஏற்பட்டுள்ளது எனவும் நம்புவதற்கு கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவிற்கு நியாயமான காரணம் காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில் ஏதாவது கொடுக்கல் வாங்கலின் காரணமாக இடம்பெற்ற அனைத்து பற்றாக்குறைகளும் அல்லது நட்டங்களுக்குமுரிய பெறுமதியினை கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவினால் மிகைக் கட்டணம் விதிப்பதற்காக அக்கொடுக்கல் வாங்கலின் காரணமாக இடம்பெற்ற அனைத்து பற்றாக்குறைகளுக்கும் அல்லது

	நட்டங்களுக்குமுரிய பெறுமதியினை அக்கணக்காய்வு செய்கின்ற நிறுவனத்தின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிக்கையிடுதல் வேண்டும். எனினும் இருபதாவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் கணக்காய்வு சேவை ஆணைக்குழு இரத்துச் செய்யப்பட்டதனால் அந்நடவடிக்கை செயற்படாதுள்ளது.
34 ஆம் பிரிவு	நிதி விடயம் ஒப்படைக்கப்பட்டுள்ள அமைச்சரினால் உறுதியாக குறிப்பிடப்படுகின்ற காலப்பகுதிக்குள் கணக்காய்வு அலுவலகத்தின் வருடாந்த பாதீடு <u>கணக்காய்வு சேவை ஆணைக்குழுவினால்</u> தயாரிக்கப்படுதல் வேண்டும். எனினும், இருபதாவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் கணக்காய்வு சேவை ஆணைக்குழு இரத்துச் செய்யப்பட்டதனால் அந்த நடவடிக்கை பாராளுமன்றத்தின் சபாநாயகரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் தயாரித்து சபாநாயகருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எமது நிறுவனக் கட்டமைப்பு

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் தலைவர் கணக்காய்வாளர் தலைமை அதிபதியாவதுடன் அலுவலகத்தின் நிதிசார் நடவடிக்கை சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 124(2) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராகவும் செயற்படுகின்றார். தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் நிகழ்கால தாபன கட்டமைப்பு நிதி அமைச்சின் முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவியணிக்கு இணங்கும் வகையில் ஒவ்வொரு மட்டத்திற்கும் உள்ளடக்கப்பட்டுள்ள நிர்ணயிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையைக் கொண்ட 5 பதவிகளை உள்ளடக்கியுள்ளது.

முதலாவது மட்டமானது 03 சிரேஷ்ட பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளை உள்ளடக்கியுள்ளது. இரண்டாவது மட்டமானது 15 பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளை உள்ளடக்கியுள்ளதுடன் அவர்களால் அரசாங்க கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பான கொள்கை ரீதியான மற்றும் ஒட்டுமொத்த அரசாங்க கணக்காய்வினை மேற்பார்வை செய்தல் மேற்கொள்ளப்படும். பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளின் கீழ் 72 பிரிவுகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் அந்த ஒவ்வொரு பிரிவிற்கும் பொறுப்பாக இருக்கின்ற சிரேஷ்ட உதவி கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மேற்பார்வையின் கீழ் அரசாங்கத்தின் மற்றும் மாகாண சபைகளின் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். பிரிவுத் தலைவர்களுக்கு ஒப்படைக்கப்படுகின்ற பிரிவில் உள்ள கணக்காய்வு "கிளைகளின்" தலைமைத்துவம் "கிளைத்தலைவராக" உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அல்லது கணக்காய்வு அத்தியட்சகரினால் நிறைவேற்றப்படுவதுடன் அவருக்கு நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையான

கணக்காய்வு நிறுவனங்கள் ஒப்படைக்கப்படுகின்றன. அவர் நான்காம் மட்டத்தை சேர்ந்நதவராவார். அதற்கிணங்க உறுதியாக தமது மேற்பார்வைக்கு கொண்டு வருகின்ற கணக்காய்வு கிளையை செயற்படுத்த வேண்டிய முறைமையை முகாமைத்துவம் செய்தலும் மேற்பார்வை செய்தலும் தொடர்பான முழுமையான பொறுப்பு பிரிவுத் தலைவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. கிளைத் தலைவர்களுக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட உதவி கணக்காய்வு அத்தியட்சகர்கள் மற்றும் கணக்காய்வு உத்தியோகத்தர்கள் ஆக்கபூர்வமாகவும், வினைதிறனாகவும், சேவையில் ஈடுபட்டு அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அரசாங்க நிறுவனங்களின் கணக்காய்வுகளை அமுல்ப்படுத்துதல் கிளைத்தலைவர்களால் மேற்கொள்ளப்படும். அதற்கிணங்க கிளைத் தலைவர்களுக்கு உதவியளிக்கும் இந்த உத்தியோகத்தர்கள் ஆறாம் மட்டத்தை சேர்ந்தவர்களாவார்கள்.

இலங்கை கணக்காய்வு நியமம், நியதிச் சட்ட மற்றும் ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகளுக்கும் அனுபவங்களுக்கும் இணங்கும் வகையில் பரீட்சிப்பு, அவதானிப்புக்கள், மற்றும் வெளிக்கள கடமைகளை தனது அங்கீகரித்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணங்கும் வகையில் நிறைவேற்றுவதன் மூலம் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அரசாங்க நிறுவனங்களின் கணக்காய்வினை அமுல்ப்படுத்தி தனது கிளைத் தலைவருக்கு உதவியளித்தல் கணக்காய்வு உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படும். மேலே குறிப்பிட்ட மூன்றாம் மட்டத்திற்குரிய 72 பிரிவுகளின் பிரிவுத் தலைவர்களில் ஒன்பது பிரிவுகளின் 24 பிரிவுத் தலைவர்கள் மாவட்ட மட்டத்தில் பிராந்திய கணக்காய்விற்கு பொறுப்பாக செயற்படுவதுடன் அவர்களின் மேற்பார்வையானது மூன்று பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் நிறைவேற்றப்படும்.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் ஒட்டுமொத்த நிதி மற்றும் நிருவாக நடவடிக்கைகள் சிரேஷ்ட பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளின் மேற்பார்வையின் கீழான நிருவாக நடவடிக்கைகள் பணிப்பாளர் (நிருவாகம்) இனால் தாபன கிளையின் மூலமும் நிதி நடவடிக்கைகள் பிரதம கணக்காளரினால் கணக்குப் பிரிவின் மூலமும் மேற்கொள்ளப்படும்.

நிதிப்பிரமாணம் 133 இல் குறிப்பிட்ட குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக பிரதான உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தரின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு அமுல்ப்படுத்தப்படுவதுடன் அவர் நேரடியாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் செயற்பாடு மற்றும் மேற்பார்வையின் கீழ் நடவடிக்கை எடுப்பார்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாட்டின் பிரகாரம் அரசாங்க கணக்காய்வு சேவையினை ஸ்தாபிப்பதற்கு தேவையான சேவை பிரமாணக் குறிப்பினை அங்கீகரித்துக் கொள்வதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் அதற்காக சில காலம் எடுப்பதனால் கணக்காய்வுச் செயற்பாட்டினை தடையின்றி செயற்படுத்துவதற்காக அமைச்சரவையினால் அரசாங்க கணக்காய்வு சேவைக்காக தேசிய சம்பளங்கள், ஆணைக்குழுவினால் சிபாரிசு செய்த சம்பள அளவுத்திட்டத்தினையும் சேவை பெயரையும் ஊழியர் எண்ணிக்கையையும் இலங்கை கணக்காய்வு சேவையின் மற்றும் இலங்கை பரீட்சகர் சேவையின் சம்பள அளவுத் திட்டத்திற்கு சேவைப் பெயருக்கு மற்றும் ஊழியர் எண்ணிக்கைக்கு பதிலீடு

செய்து சேவைமூப்பின் அடிப்படையில் உத்தியோகத்தர்களைச் சேர்த்துக்கொள்வதற்கும் பதவியுயர்த்துவதற்கும் 2021 செப்தெம்ர் 13 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்ததனால் அந்த நடவடிக்கையானது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆலோசனையின் பிரகாரம் நிறைவேற்றப்படுகின்றது. கணக்காய்வுச் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் நீண்ட காலமாகக் காணப்படுகின்ற பதவியுயர்வினைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் இந்த இடைக்கால ஒழுங்குவிதிகளின் மூலம் குறித்த சில அளவிற்காவது தீர்த்துவைப்பதற்கான இயலுமை கிடைத்துள்ளது.

அதற்கிணங்க 2021 ஒக்தோபர் 01 ஆந் திகதியிலிருந்து அமுல்ப்படுத்தும் வகையில் தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் கணக்காய்வினை அமுல்ப்படுத்துவதற்குரிய தாபன கட்டமைப்பானது திருத்தத்திற்கு உட்பட்டதுடன் புதிய தாபன கட்டமைப்பானது கீழே தரப்படுகின்றது.

	மேலதிக கணக்காய்வாளர் தலைமை அதிபதி:. சிரேஷ்ட பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதி	பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதி	சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி			
கணக்காய்வாளர் தலைமை அதிபதி	மத்திய அரசாங்கத்தின் கணக்காய்வு மற்றும் சான்றுபடுத்தும் சேவைகள் (ஊபுளுயு)	அரசாங்க வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் கணக்காய்வு (டீயுகு)	வங்கி	(டீயுடீ)	உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகள்:.கணக்காய்வு அத்தியட்சகர்கள்	உதவி கணக்காய்வு அத்தியட்சகர்:.கணக்காய்வு உத்தியோகத்தர்கள்
			நிதி மற்றும் குத்தகை	(குயுடு)		
			காப்புறுதி	(ஐளே)		
		விசேட வியாபார நிறுவனங்களின் கணக்காய்வு (ளுடீநு)	பொதுத் திறைசேரி மற்றும் அரசாங்க கடன்	(வீனு)		
			அரசாங்க வருமானங்கள்	(ருசு)		
		அரசாங்க கம்பனிகளின் கணக்காய்வு (ஊழுஆ)	வியாபாரம் மற்றும் வணிகம்	(வுயுஊ)		
			தொடர்பாடல் மற்றும் ஊடகம்	(ஊயுஆ)		
			கலாச்சாரம் மற்றும் கலை	(ஊயுயு)		
			விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம்	(ளுஎயு)		
		வெளிநாட்டு நிதி வழங்கிய செயற்திட்டங்களின் கணக்காய்வு (குஞீ)	பெருந்தெருக்கள் மற்றும் வீதிகள்	(சுயுர்)		
			நிர்மாணங்கள் மற்றும் பொறியியல்	(ஊயுநு)		
			வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி	(ர்ருனு)		
		மாகாண சபைகளின் கணக்காய்வு (சுஊ)	பாதுகாப்பு	(னுநுகு)		
			நீதி சட்டம் மற்றும் சமாதானம்	(துடுழு)		
		விசேட கணக்காய்வு ஒப்படைப்புக்கள் (ளீசு)	கல்வி	(நுனுரு)		
			உயர் கல்வி	(ர்நுனு)		
			தொழில் பயிற்சி	(ஏழுவு)		
		நியதிச் சட்ட நிதியங்கள் ஏனைய நிதியங்களின் கணக்காய்வு (ளுழுகு)	மின்சாரம்	(றுசு)		
			மின்வலு	(நுசே)		
			துறைமுகங்கள் மற்றும் கடல்சார் நடவடிக்கைகள்	(யுளு)		
			விமான நிலையங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள்	(யுயுஏ)		
		மாகாண மட்டத்தில் மத்திய அரசாங்கத்தின் நிதிகளைப் பயன்படுத்துதல் கணக்காய்வு (ஊஞடு)	விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த உற்பத்தி	(யுசுஐ)		
			நீர்ப்பாசனம், நீர் வளங்கள் மற்றும் சுரங்கம் அகழ்தல்	(ஐறுசு)		
			நீர் மற்றும் சுகாதாரம்	(றுயுளு)		
			வன பாதுகாப்பு, வன சீவராசிகள் மற்றும் சுற்றாடல்	(குறுடு)		
			காணிகள் மற்றும் பெருந்தோட்டங்கள்	(யுடு)		
			கடற்றொழில் மற்றும் கால்நடைகள்	(குடுளு)		
		பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் கணக்காய்வு (ஞீபு)	அரசாங்க நிருவாகம் மற்றும் வெளிநாட்டு விவகாரம்	(யுகு)		
			தொழில், ஊழியர் நலன்புரி மற்றும் சமூக பாதுகாப்பு	(டுளுறு)		
			பாராளுமன்ற விவகாரம் மற்றும் சுயாதீன ஆணைக்குழு	(ஐஊ)		
		அமைச்சு கணக்காய்வு (ஆஐடீ)	மருந்து வழங்கல்	(ஆளுரு)		
			போதனா வைத்தியசாலைகள்	(வுர்டு)		
			மருத்துவ நிருவாகம்	(ஆநுனு)		
		திணைக்கள கணக்காய்வு (னுநுகு)	பயணிகளின் போக்குவரத்து	(ஊழுவு)		
			தொழிற்சாலைகள், உற்பத்தி மற்றும் கைத்தொழில்கள்	(ஐஆவு)		
			சுற்றுலா மற்றும் முதலீட்டு மேம்பாடு	(வுஜீ)		
		விசேட வியாபாரங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் அல்லாத ஏனைய கூட்டுத்தாபனங்கள் சபைகள், மற்றும் அதிகார சபைகளின் கணக்காய்வு (ஊடீயு)	வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள்	(குஞீ)		
			இடர் முகாமைத்துவம்	(னுஆபு)		
		பொதுத்திறைசேரி மற்றும் அரசாங்க கடன் (வீனு)	விசேட கணக்காய்வு (புலனாய்வு மற்றும் தடையம்)	(ளுஐகு)		
			செயலாற்றல் கணக்காய்வு மற்றும் சுற்றாடல் கணக்காய்வு	(நுயு)		
		நிருவாகம் (யுனுஆ)	பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி	(வுசுனு)		
			தரத்தை சான்றுபடுத்தல்	(ஞருயு)		
			சட்டம்	(டுநுபு)		
			தகவல் தொழில்நுட்ப கணக்காய்வு	(ஐவுயு)		
			குத்தகை	(வுயுஓ)		
			இணக்கப்பாடு	(ஊழுஆ)		
			பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடலும் ஒருங்கிணைப்பும்	(சுழு)		
		உள்ளூராட்சி நிறுவனங்களின் கணக்காய்வு (ஆரீ)	மிகைக் கட்டணம், மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள்	(டீடு)		
			கொழும்பு	(ஊழுயு)		
			கொழும்பு	(ஊழுடீ)		
			கம்பஹா	(புஆ)		
			களுத்துறை	(முடுரு)		
			காலி	(புயுடு)		
			மாத்தறை	(ஆவுசு)		
			ஹம்பாந்தோட்டை	(ர்ஆடீ)		
			திருகோணமலை	(வுசுஊ)		
			அம்பாறை	(யுஆ)		
			மட்டக்களப்பு	(டீவுஊ)		
			யாழ்ப்பாணம்	(துயுகு)		
			கிளிநொச்சி, முல்லைத் தீவு, வவுனியா, மற்றும் மன்னார்	(முஏஆ)		
			புத்தளம்	(வீடு)		
			குருனாகல்	(முசுபு)		
			மாத்தளை	(ஆவுடு)		
			கண்டி	(முனுயு)		
			கண்டி	(முனுடீ)		
			நுவரெலியா	(ருநு)		
			அனுராதபுரம்	(யுடீ)		
			பொலன்னறுவை	(ழுடு)		
			இரத்தினபுரி	(சுயுவு)		
			கோகாலை	(முபுடு)		
			பதுளை	(டீழுரு)		
			மொனராகலை	(ஆபே)		

தேசிய கணக்காய்வு அலுவகத்தின் பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் தொடர்பாக மதிப்பீடு செய்ததன் பின்னர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் 2021 செப்தம்பர் 14 ஆந் திகதி அங்கீகரித்திருந்த பதவியணியினர்களுக்கு இணங்க இலங்கை கணக்காய்வுச் சேவையின் மொத்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 545 ஆகவும் கணக்காய்வு பரீட்சகர் சேவையின் மொத்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 1450 ஆகவும் இருந்தது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் பத்தொன்பதாவது திருத்தத்தின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு ஒரு அரசாங்க கணக்காய்வுச் சேவையினை ஸ்தாபிப்பதற்கு வரைபாக்கப்பட்டுள்ள சேவை பிரமாணக் குறிப்பினை 2022 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை அங்கீகரிப்புச் செய்துகொள்வதற்கு முடியாதிருந்ததுடன் உருவாகியுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு பழைய சேவை பிரமாணக் குறிப்பின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் 2021 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில், 2021 ஆம் ஆண்டின் இறுதியில் மற்றும் 2022 யூன் 30 இல் உள்ளவாறு ஒவ்வொரு பதவிகளிலும் அங்கீகரித்த பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர், காணப்படுகின்ற வெற்றிடங்கள் மற்றும் மிகைகளின் எண்ணிக்கை அட்டவணை இலக்கம் 02 இல் தரப்படுகின்றது.

பதவி	2021 சனவரி 01 இல் உள்ளவாறான			2021 திசெம்பர் 31இல் உள்ளவாறு			2022 யூன் 30 இல் உள்ளவாறு			
	அங்கீகரித்த பதவியணியினர்	உள்ளபடியான பதவியணியினர்	வெற்றிடங்கள்	அங்கீகரித்த பதவியணியினர்	உள்ளபடியான பதவியணியாளர	வெற்றிடம்	பணியினர்ங்கீகரித்த பதவினர்	உள்ளபடியான பதவியணியினர்	வெற்றிடங்கள்	மிகைகள்
கணக்காய்வு பதவியணியினர்										
கணக்காய்வாளர் தலைமை அதிபதி	1	1	0	1	1	0	1	1	0	0
மேலதிக கணக்காய்வாளர் தலைமை அதிபதி	3	0	3	3	3	0	3	3	0	0
பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதி	15	10	5	15	10	5	15	10	5	0
சிரேஷ்ட உதவி கணக்காய்வாளர் தலைமை அதிபதி	0	0	0	72	0	72	72	23	49	0
உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி	44	22	22	455	24	254	455	57	278	0
கணக்காய்வு அத்தியட்சகர்	288	199	89		177			120		0
உதவி கணக்காய்வு அத்தியட்சகர்	0	0	0	360	353	7	360	350	10	0
கணக்காய்வு பரீட்சகர்	1200	992	208	0	0	0	0	0	0	0
கணக்காய்வு உத்தியோகத்தர்	0	0	0	1090	787	303	1090	783	307	0
மொத்தம்	1551	1224	327	1996	1355	641	1996	1347	649	0

கணக்காய்வு அற்ற பதவியணியினர்											
நிறைவேற்று மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்											
	பணிப்பாளர் (நிருவாகம்)	**1**	**1**	**0**	**1**	**1**	**0**	**1**	**1**	**0**	**0**
	பிரதான கணக்காளர்	**1**	**1**	**0**	**1**	**1**	**0**	**1**	**1**	**0**	**0**
	பிரதான உள்ளக கணக்காய்வாளர்	**1**	**1**	**0**	**1**	**1**	**0**	**1**	**1**	**0**	**0**
	உதவி பணிப்பாளர் (நிருவாகம்)	1	0	1	1	0	1	1	1	0	0
	கணக்காளர்	1	1	0	1	1	0	1	1	0	0
	நிருவாக உத்தியோகத்தர்	3	2	1	3	2	1	3	2	1	0
	தகவல் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்	1	1	0	1	1	0	1	1	0	0
	தொழில்நுட்ப உத்தியோகத்தர் - விசேடம்	1	0	1	1	0	1	1	0	1	0
	மொழி பெயர்ப்பாளர்	10	8	2	10	8	2	10	8	2	0
	சட்ட உத்தியோகத்தர்	0	0	0	1	0	1	1	0	1	0
	மொத்தம்	**20**	**15**	**5**	**21**	**15**	**6**	**21**	**16**	**5**	**0**
நிறைவேற்றுனர் அல்லாத தரம்											
	அபிவிருத்தி உத்தியோகத்தர்	3	2	1	3	3	0	3	55	0	52
	நூலகர்	1	1	0	1	1	0	1	1	0	0
	தொழில்நுட்ப உத்தியோகத்தர் -I	1	0	1	1	0	1	1	0	1	0
	முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்	121	108	13	121	106	15	121	112	9	0
	தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர்	1	1	0	1	1	0	1	1	0	0
	ஒப்செட் லிதோ அச்சு இயந்திர இயக்குனர்	0	0	0	1	0	1	1	0	1	0
	அறிக்கை தயாரிப்பாளர்	**41**	**41**	**0**	**41**	**41**	**0**	**41**	**41**	**0**	**0**
	மொத்தம்	**168**	**153**	**15**	**169**	**152**	**17**	**169**	**210**	**11**	**52**
கனிஸ்ட ஊழியர்											
	சாரதி	48	47	1	48	46	2	48	47	1	0
	சுற்றுலா விடுதி பொறுப்பாளர்	13	7	6	13	7	6	13	7	6	0
	மின்சார தொழில்நுட்பவியளாளர்	1	1	0	1	1	0	1	1	0	0
	நீர் குழாய் தொழில்நுட்பவியளாளர்	1	1	0	1	1	0	1	1	0	0
	அலுவலக செயற்பாட்டு உதவியாளர்	148	135	13	148	137	11	148	138	10	0
	திணைக்கள வேலையாள்	2	2	0	2	2	0	2	2	0	0
	மொத்தம்	**213**	**193**	**20**	**213**	**194**	**19**	**213**	**196**	**17**	**0**
முழு மொத்தம்		**1952**	**1585**	**367**	**2399**	**1716**	**683**	**2399**	**1769**	**682**	**52**

அட்டவணை 02 - பதவியணியினர் நிலைமை 2021 சனவரி 01 இல் உள்ளவாறு 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மற்றும் 2022 யூன் 30 இல் உள்ளவாறு,

தேசிய கணக்காய்வு அலுவலகத்தினை வலுப்படுத்துவதற்காக 21/1274/301/017 ஆம் இலக்க மற்றும் 2021.09.13 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் செயற்பாடுகளை மிகவும் வினைதிறனாக நிறைவேற்றுவதற்குத் தேவைப்படுகின்ற பதவியணியினர் விரிவுபடுத்தப்பட்டுள்ளதுடன் அத்தேவைப்பாட்டினை நிறைவேற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அரசாங்க கணக்காய்வு சேவை முறைப்படியாக தோற்றுவிக்கப்படும் வரை புதிய பதவியணியினரை சேவை மூப்பின் அடிப்படையில் பதவியுயர்த்துவதன் மூலம் அடைந்து கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

சேவை பிரமாணக் குறிப்பினை அங்கீகரித்துக் கொள்ளுதல்

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வு பதவியணியினர் இலங்கை கணக்காய்வு சேவை மற்றும் இலங்கை பரீட்சகர் சேவையின் உத்தியோகத்தர்களை உள்ளடக்கியுள்ளனர். 6/2006 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் இந்த இரண்டு சேவைகளுக்குமாக தனித்தனியான சேவை பிரமாணக் குறிப்புக்கள் தயாரிக்கப்பட்டிருந்தும் அதற்காக பதவியணியினரிடமிருந்து பல்வேறு பிரேரணைகள் மற்றும் வேண்டுதல்கள் தொடர்பாக இன்னும் கவனித்துப் பார்ப்பதற்காக சனாதிபதியின் செயலாளரினால் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. அக்குழுவானது அப்போதிருந்த கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தலைமைத்துவத்தில் இரண்டு முன்னாள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகள் மற்றும் சனாதிபதியின் மேலதிக செயலாளரின் அங்கத்துவத்தையும் உள்ளடக்கியிருக்கும். அக்குழுவின் சிபாரிசினை கவனத்தில் கொண்டு இலங்கை கணக்காய்வு சேவை மற்றும் இலங்கை பரீட்சகர் சேவை ஆகிய இரண்டு சேவைகளையும் ஒன்றிணைத்து "இலங்கை அரசாங்க கணக்காய்வு சேவை" என்ற பெயரில் புதிய ஒரு சேவையினை உருவாக்குவதற்காக அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக 2014 திசெம்பர் 23 ஆந் திகதி அங்கீகாரம் கிடைத்திருந்தது

அந்த அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க இலங்கை கணக்காய்வு சேவையும் இலங்கை பரீட்சகர் சேவையும் ஒன்றிணைக்கப்பட்டு ஸ்தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த "இலங்கை அரசாங்க கணக்காய்வு சேவை"யை தோற்றுஞவித்தல் ஒரு அரசாங்க கொள்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க புதிய சேவைக்காக சேவை பிரமாணக் குறிப்பு தயாரிக்கப்பட்டு வருவதுடன் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினை அங்கீகரித்துக் கொண்டதன் பின்னர் கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு அதனை அங்கீகரித்துக் கொள்ளும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது. புதிய சேவை பிரமாணக் குறிப்பினை அங்கீகரித்தக் கொள்வதன் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் மற்றும் கடமைகளை மிகவும் ஆக்கபூர்வமாக நிறைவேற்றுவதற்கு மிகவும் விரிவான தொழில்சார் மட்டத்தில் பதவியணியினைப் பேணுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. கணக்காய்வு அதிகாரச் சட்டம் அமுல்ப்படுத்தப்பட்டு நான்கு ஆண்டுகள் அளவான காலம் கடந்திருந்தும் 2022 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையும் அச் சேவை பிரமாணக் குறிப்பினை அங்கீகரித்துக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

எவ்வாறாயினும் 20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை அமுல்ப்படுத்தியதுடன் அரசாங்க கணக்காய்வுச் சேவையின் உள்ளமை சம்பந்தமாக உருவாகியிருந்த சட்டரீதியான தடைகளை நிவர்த்திசெய்து அமைச்சரவையினால் 2014 திசெம்பர் 23 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தை 2021 செப்தெம்பர் 13 ஆந் திகதி மீண்டும் அமுல்ப்படுத்தியதன் காரணமாக மற்றும் அரசாங்க கணக்காய்வின் விசேட கடமைகளை கவனத்தில் கொண்டு பொருத்தமான சம்பள கட்டமைப்பினைத் தயாரிப்பதற்காக தேசிய சம்பள ஆணைக்குழுவிடம் வேண்டுதல் விடுக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க இச்சேவையை தோற்றுவிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

தேசிய சம்பளங்கள் ஆணைக் குழுவினால் பல சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட சம்பள கட்டமைப்பிற்கு உத்தியோகத்தர்ககள் அங்கத்துவம் வகிக்கும் இரண்டு பிரதான தொழில் சங்கங்களின் இணக்கப்பாடு இல்லாமையின் அடிப்படையிலும் கலந்துரையாடல்கள் தொடர்ச்சியாக இணக்கப்பாடின்றி காணப்பட்டமையின் மூலமும் புதிய சேவை பிரமாணக் குறிப்பினைத் தயாரித்தல் தாமதமடைந்துள்ளது. எவ்வாறாயினும் அரசாங்க கணக்காய்வுச் சேவைக்கு சேவை பிரமாணக் குறிப்பினைத் தயாரிப்பதற்காக சிரேஷ்ட பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் தலைமையிலும் தொழிற்சங்கங்களின் பங்குபற்றுதலுடனும் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் அக்குழுவினால் இச்செயற்பாடு நிறைவேற்றப்பட்டுவருகின்றது.

பதவியணியினர் பயிற்சி

அரசாங்க வளங்களை சிக்கனமாகவும் ஆக்கபூர்வமாகவும் விளைதிறனாகவும் பயன்படுத்துவதனை வலுப்படுத்துவதற்குத் தேவையான பங்களிப்பு மற்றும் வழிகாட்டிகளை வழங்குவதன் மூலம் இலங்கை மக்களுக்கு சிறந்த மற்றும் நம்பகரமான அரசாங்க சேவையை வழங்குவதனை உறுதிப்படுத்தும் வகையில் தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் அரசாங்க நிறுவனங்களின் நிதி மற்றும் செயலாற்றல் கடமைகளை நிறைவேற்றுவது தொடர்பான கணக்களிப் பொறுப்பு சரியாக நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்பதனைப் பரீட்சித்து பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்படும்.

இந்த நியதிச்சட்ட ரீதியான கடமைகளை நிறைவேற்றுவதனை முன்னிட்டு 1355 கணக்காய்வு உத்தியோகத்தர்களையும் உதவி சேவைகளைச் சார்ந்த 361 உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கிய பதவியணியின் பங்களிப்பு நிகழ்காலத்திற்கு தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்கூறிய நியதிச்சட்ட ரீதியான கடமைகளை ஆக்கபூர்வமாகவும், விளைதிறனாகவும் நிறைவேற்றும் வகையில் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பதவியணியினர் பின்வரும் துறைகளினூடாக நிகழ்காலத்தில் நிகரான வகையில் அறிவினையும் திறனையும் பெற்றுக்கொள்ளும் தேவைப்பாடு இனங்காணப்பட்டுள்ளது.

- அறிவினையும் தொழில்நுட்ப திறனையும் அபிவிருத்தி செய்தல்
- விளைதிறனையும் செயலாற்றலினையும் அதிகரித்தல்
- முகாமைத்துவ ஆற்றலினை முன்னேற்றுதல்

- கடமையை நிறைவேற்றுவதற்கு தேவைப்படுகின்ற அறிவு, கருவிகள் மற்றும் தொழில்நுட்ப ஞாபனத்தை வழங்குதல்
- நிதிசார்ந்த மற்றும் சேவை சார்ந்த சட்டங்கள் சம்பந்தமாக அறிவினை வழங்குதல்
- குழு உணர்வினை அபிவிருத்தி செய்தல்
- நன்னடத்தையை முன்னேற்றுதல்

அந்த குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் எதிர்பார்ப்புடன் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின்ஒவ்வொரு உத்தியோகத்தரினாலும் தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்திக்காக (Continuous Professional Development - CPD) ஒரு ஆண்டிற்கு 100 மணித்தியாலத்திற்கு குறையாத கொள்கை ரீதியாகவும் செயன்முறை ரீதியாகவும் உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் பயிற்சி கற்கை நெறிகளை பூர்த்தி செய்யும் தேவைப்பாடு தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பயிற்சி தேவைப்பாடு ஆய்வின் (Training Need Assessment) பிரகாரம் உத்தியோகத்தர்களின் தொழில்சார் அபிவிருத்திக்காக வழங்கப்படவேண்டியவை என இனங்காணப்பட்ட பின்வரும் துறைகளை உள்ளடக்கும் வகையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்கும் பணியினை தேசிய கணக்காய்வு அலுவலகம் மேற்கொண்டு வருகின்றது.

- நிதிக் கணக்காய்வு
- புலனாய்வுக் கணக்காய்வு
- செயலாற்றல் கணக்காய்வு
- சுற்றாடல் கணக்காய்வு
- தடயக் கணக்காய்வு
- பெறுகைகள் மற்றும் நிர்மாணங்கள் கணக்காய்வு
- செயற்திட்ட கணக்காய்வு
- இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் கணக்காய்வு நியமங்கள்
- ஒதுக்கீட்டு கணக்குகளின் கணக்காய்வு
- உள்ளூராட்சி நிறுவனங்களின் கணக்குகள் மற்றும் கணக்காய்வு
- மிகைக்கட்டண நடைமுறைகள்
- கணக்காய்வு அறிக்கையிடல்
- கணக்காய்வு இயலுமையினை அபிவிருத்தி செய்தல்
- மொழி இயலுமையினை அபிவிருத்தி செய்தல்

அதற்கிணங்க உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் கடமைகளை தொழில்சார் மட்டத்தில் மேற்கொள்வதற்கு தேவையான திறமைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பயிற்சி பிரிவினால் ஒழுங்குபடுத்தலும் அதற்காக அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கி அவர்களை ஊக்கப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். அதன் போது வளப்பங்களிப்பாளர்களாக தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கும் தகமையுள்ள திறமையான உத்தியோகத்தர்களின் உதவியினைப் போல தேவையானவாறு வெளி விரிவுரையாளர்களின் உதவியினையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான விரிவுரை, கலந்துரையாடல், செயன்முறைப் பயிற்சி, வெளிக்கள சுற்றுப் பயணம் முதலியவற்றை ஈடுபடுத்துவதன் மூலம் உரிய பயிற்சி தேவைப்பாடுகளை அடைந்து கொள்ளல் மேற்கொள்ளப்படும்.

உள்நாட்டு ரீதியான பயிற்சிகளை வழங்குதல்

மேற்கூறிய குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் வகையில் 2021 ஆம் ஆண்டில் தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் பயிற்சி பிரிவின் மூலம் கணக்காய்வு உத்தியோகத்தர்களுக்காக மேலே குறிப்பிட்ட துறைகளை உள்ளடக்கும் வகையில் 2 தலைப்புக்களின் கீழ் 7 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் 2021 ஆம் ஆண்டில் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட புதிய கணக்காய்வு உத்தியோகத்தர்களுக்காக 3 தொடக்க பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டதுடன் கணக்காய்வு அல்லாத பதவியணியிலுள்ள உத்தியோகத்தர்களுக்காகவும் பயிற்சி வசதிகள் வழங்கப்பட்டன.

2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது கொவிட் 19 வைரசு பரவியதனால் அடிக்கடி நாடு மூடப்பட்டிருந்தமை மற்றும் உத்தியோகத்தர்கள் ஒன்று சேர்வதற்கு காணப்பட்ட தடைகளின் காரணமாக இப்பயிற்சித் தொடர்களை நடாத்துதலினை அதிக அளவில் மட்டுப்படுத்த வேண்டியிருந்ததுடன் அதன் காரணமாக உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல் அதிக அளவில் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

புகைப்படம் - உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

புகைப்படம் - உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம

புகைப்படம் - உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

வெளிநாட்டு பயிற்றுவித்தல்கள்

2021 ஆம் ஆண்டின் போதும் ஒரு உத்தியோகத்தர் அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களின் சங்கத்தினால் (ASOSAI) ஒழுங்குபடுத்திய இணையதள வழியிலான செயலமர்வுக்காக இணைய தள வழியினூடாக பங்குபற்றியிருந்தார்.

2021 ஆம் ஆண்டின் போது தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் உத்தியோகத்தர்களுக்காக மேலே குறிப்பிட்ட துறைகளை உள்ளடக்கும் வகையில் நடாத்திய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான விபரம் அட்டவணை இலக்கம் 03 இல் தரப்படுகின்றது.

நிகழ்ச்சித்திட்டத்தின் விபரம்	திட்டங்களின்	பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை				பயிற்சி மணித்தியாளங்களின் எண்ணிக்கை
	நிகழ்ச்சித் எண்ணிக்கை	பிரிவுத் தலைவர்கள்	கணக்காய்வு அத்தியட்சகர்கள்	கணக்காய்வு பரீட்சகர்	மொத்தம்	
உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்						
(1) நிதிக் கணக்காய்வு பயிற்சி பயிற்சி	6	38	101	149	288	2,088
(2) புதிய உத்தியோகத்தர்களுக்கான தொடக்க பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	3	-	-	134	134	4,857
(3) வெளிநாட்டு செயற்திட்ட கணக்காய்வு பயிற்சி	1	6	28	30	64	464
மொத்தம்	**8**				**486**	**7,409**
வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்						
(1) "மிகவும் விளைதிறனான கணக்காய்விற்காக கணக்காய்வு நடைமுறைகளை மேம்படுத்துதல்" சம்பந்தமான செயலமர்வு (இணையவழியினூடாக)	1	-	1	0	1	22.5

அட்டவணை இலக்கம் 03: 2021 ஆம் ஆண்டின் போது தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி சிகழ்ச்சித்திட்டங்கள்

மூலம் : தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பயிற்சிப் பிரிவு

வெளி நிறுவனங்களுக்கு வளவாளர்களை வழங்குதல்

தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள 7 உத்தியோகத்தர்கள் 2021 ஆம் ஆண்டின் போது தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் கணக்காய்விற்குச் சமாந்திரமான துறைகள் தொடர்பாக ஏனைய அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் அறிவினையும் இயலுமையினையும் அதிகரிப்பதற்காக தமது வளவாளர்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் 2021 ஆம் ஆண்டின் போது உலகளாவிய ரீதியாக முகங்கொடுத்த Covid -19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக திட்டமிட்டவாறு உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்துதலானது சுகாதார வழிகாட்டல்களின் காரணமாக மட்டுப்படுத்தப்பட வேண்டியிருந்ததுடன் வெளிநாட்டு பயிற்சி சந்தர்ப்பங்களையும் இதன் காரணமாக மட்டுப்படுத்த வேண்டியிருந்தது.

தகமைபெற்ற கணக்காய்வாளர்களை சேவையில் ஈடுபடுத்துதல்

கணக்காய்வு பணியில் காணப்பட்ட வெற்றிடங்களின் காரணமாக உருவாகிய வளங்களின் இடைவெளியை தீர்த்துவைப்பதற்காக மற்றும் அரசாங்க கம்பனிகள், அரசாங்க வங்கிகளின் கணக்காய்வு போன்ற விசேட சந்தர்ப்பங்களின் போது போன்ற தேவைப்படுகின்ற விசேட சேவைகளுக்காகவும் தகமைபெற்ற கணக்காய்வாளர்களை சேவையில் ஈடுபடுத்துவது அவசியமானதாகும். அதற்காக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (4)(அ)உறுப்புரையின் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க சேவையில் ஈடுபட்டுள்ள கணக்காய்வு கம்பனிகளுக்கு அவர்கள் வழங்கிய கணக்காய்வு சேவைகளுக்காக 2021 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்காக முறையே ரூபா 31.94 மில்லியன் மற்றும் 35.6 மில்லியன் செலுத்தப்பட்டது. தகமைபெற்ற கணக்காய்வாளர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ளும் போது அவர்களால் முன்னர் வழங்கப்பட்ட சேவைகளின் தரம் கம்பனியில் இருக்கின்ற பங்குதாரர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களுடன் சேவையில் ஈடுபட்டுள்ள கணக்காய்வு பயிலுனர்களின் எண்ணிக்கை முதலிய விடயங்கள் கருத்தில் கொள்ளப்பட்டன. அதற்கு மேலதிகமாக கணக்காய்வு கம்பனிக்கு உள்ள சர்வதேச தொடர்புகள் மற்றும் அவர்கள் வழங்குகின்ற தொழில்சார் சேவைகளின் தன்மை முதலிய விடயங்கள் அவர்களை தெரிவு செய்யும் வரையறைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க கணக்காய்வாளர்களை தெரிவு செய்தலானது பெறுகை நடைமுறைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டதுடன் சராசரியாக ஒரு கணக்காய்வு கம்பனிக்கு உச்ச அளவாக 05 ஆண்டுகள் காலத்திற்கு தொடர்ச்சியாக ஒரு கணக்காய்வு பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பத்தொன்பதாவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விடயப் பரப்பிற்கு உள்ளடக்கப்பட்ட 50 சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட அரசாங்க உரிமையுள்ள 125 கம்பனிகளில் 17 கம்பனிகளை கணக்காய்வு செய்வதற்காக மாத்திரம் பிரசித்த தொழிலில் ஈடுபட்டுள்ள 02 கம்பனிகள் எனக்கு உதவியளித்துள்ளன. அதற்கு மேலதிகமாக இலங்கை மத்திய வங்கி மற்றும் 35 விளையாட்டு சங்கங்களை கணக்காய்வு செய்வதற்காகவும் தகமைபெற்ற 15 கணக்காய்வாளர்களின் உதவி பெற்றுக்கொள்ளப்பட்டது.

கணக்காய்வு பரீட்சகர்களை சேர்த்துகொள்வதனால் தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் உரிய கம்பனிகளை நேரடியாக கணக்காய்வு செய்வதற்கு உட்படுத்துதல் மற்றும் பிரதான இரண்டு வங்கி கிளைகளை கணக்காய்வு செய்வதற்காக தகமைபெற்ற கணக்காய்வாளர்களை நியமிக்காமைக்கு எடுத்த தீர்மானத்தின் காரணமாக 2017 ஆம் ஆண்டிலிருந்து ஈடுபடுத்தப்பட்ட உதவிசெய்யும் கணக்காய்வு கம்பனிகளின் அளவு குறைவடைந்துள்ளது.

அரசாங்க வங்கிகளை கணக்காய்வு செய்வதற்காக தேவையான தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக பிரசித்த தொழிலில் ஈடுபட்டுள்ள பட்டயக் கணக்காய்வாளர்களின் உதவி பெற்றுக்கொள்ளப்பட்டது.

பாராளுமன்றத்திற்கு உதவியளித்தல்

அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க நிதி தொடர்பான முறையான கட்டுப்பாடு பாராளுமன்றத்திடம் உள்ளது. அரசாங்க கணக்களிப் பொறுப்பு

முறைமை தொடர்பாக பிரதான பங்களிப்பினை வழங்குகின்ற தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் நிதி பொறுப்பாண்மை மற்றும் அரசாங்க நிறுவனங்களின் செயற்பாட்டில் சிக்கனத்தன்மை, ஆக்கபூர்வத் தன்மை, விளைதிறன் என்பன தொடர்பாக நேரடியாக பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுகின்ற அரசாங்கத்தின் வெளிக் கணக்காய்வாளராக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. பாராளுமன்றத்தின் நிலையில் கட்டளை 119 மற்றும் 120 இன் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட அரசாங்க கணக்குகள் தொடர்பான குழு (COPA) பொது முயற்சிகள் தொடர்பான குழு (COPE) என்பனவாக அறிமுகப்படுத்தப்பட்ட பாராளுமன்றத்தின் குழுக்களின் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுகின்ற அறிக்கைகள் பரீட்சிக்கப்படும். இந்த இரண்டு குழுக்களின் மூலம் அரசாங்க நிதிகள் மற்றும் வளங்கள் முறைப்படியாக பயன்படுத்தப்படுகின்றனவா என்பது தொடர்பாக பரீட்சிப்பதற்கு சட்டவாக்க சபைக்கு உதவியளிப்பதாகும். எனவே அரசாங்க கட்டுப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக மிகவும் முக்கியமான கடமைகள் இந்த இரண்டு குழுக்களின் மூலம் மேற்கொள்ளப்படும்.

நிலையியல் கட்டளை 119 இன் கீழ் தோற்றுவிக்கப்பட்ட அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுவின் செயற்பாடுகளாவது பொதுமக்களின் செலவுகளுக்காக பாராளுமன்றத்தினால் வழங்கப்படுகின்ற பணத்தை ஒதுக்கீடு செய்வதனைக் காட்டுகின்ற கணக்குகளும் அரசாங்கத்தின் கணக்குகள் தொடர்பான குழுவினால் பொருத்தமானது என கருதக்கூடிய பாராளுமன்றத்தின் முன்னிலையில் வைக்கப்படுகின்ற ஏனைய சில கணக்குகளும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் உதவியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் உதவியுடன் பரீட்சிக்கப்படும். பொதுவாக ஏதாவது திணைக்களம் அல்லது உள்ளூராட்சி நிறுவனத்தின் கணக்குகள், நிதிக்கூற்றுக்கள், நிதி நடைமுறைகள், செயலாற்றல் முகாமைத்துவம் என்பவற்றை பரீட்சித்தலும் அதிலிருந்து உருவாகின்ற எந்தவொரு விடயமும் தொடர்பாக அரசாங்கத்தின் கணக்குகள் தொடர்பான குழுவினால் பாராளுமன்றத்திற்கு காலத்திற்கு காலம் அறிக்கையிடப்படும்.

நிலையியல் கட்டளை 120 இன் கீழ் தோற்றுவிக்கப்படுகின்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுவின் கடமைகளாவது அரசாங்க கூட்டுத்தாபனம் முழுமையாக அல்லது ஒரு பகுதி அரசாங்கத்தினால் நிதி வழங்கப்பட்டுள்ள நிறுவனங்களின் கணக்குகள் மற்றும் ஏதாவது எழுத்திலான சட்டத்தின் மூலம் அரசாங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்ட ஏதாவது வியாபாரம் அல்லது ஏனைய ஒப்படைப்பு சம்பந்தமாக பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் உதவியுடன் பரீட்சிக்கப்படும். ஏதாவது அரசாங்க கூட்டுத்தாபனம் அல்லது ஏதாவது எழுத்திலான சட்டத்தின் மூலம் அரசாங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்ட வியாபாரம் அல்லது ஒப்படைப்புக்களின் பரீட்சிக்கப்பட்ட கணக்குகள் சம்பந்தமான பாதீடும் வருடாந்த மதிப்பீடும் நிதி நடைமுறைகள், செயலாற்றல், நியாயமான முகாமைத்துவம் என்பவற்றிற்கு இணங்க உருவாகின்ற ஏதாவது விடயம் தொடர்பாக பொது முயற்சிகள் தொடர்பான குழுவினால் காலத்துக்குக் காலம் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

அத்தியாவசியமானது எனக் கருதுகையில் குழுவினாலேயே அங்கத்தவர்களை உள்ளடக்கிய ஒரு துணைக் குழுவினை நியமிப்பதற்காக அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுவினைப் போல பொது முயற்சிகள் தொடர்பான குழுவிற்கும்

இயலுமை காணப்படுவதுடன் குழுவினைப் போல அதன் துணைக் குழுவிற்கும் அவற்றிற்குரிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக யாராவது ஒரு நபரினை அழைத்து கேள்வி கேட்கும் அதிகாரம் ஏதாவது ஒரு கடிதம், ஏடு, பதிவேடு அல்லது வேறு ஆவணங்களைப் பெற்று பரீட்சிக்கும் அதிகாரம், களஞ்சியம் மற்றும் ஏனைய ஆதனங்கள் வைக்கப்பட்டிருக்கும் இடங்களுக்கு செல்லும் அதிகாரம் காணப்படுகின்றது.

பாராளுமன்றத்தின் ஆளும் கட்சியும் எதிர்கட்சியும் முறைப்படியாக பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் தெரிவுக் குழுவினால் பெயரிடப்படுகின்ற 16 உறுப்பினர்கள் வீதம் இருக்கும் வகையில் அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுவும் பொது முயற்சிகள் தொடர்பான குழுவும் உள்ளடங்கியிருக்கும். அரசாங்கத்தின் கணக்குகள் தொடர்பான குழு மற்றும் பொது முயற்சிகள் தொடர்பான குழு ஆகிய இரண்டு குழுக்களினதும் பரீட்சிப்பிற்குப் பின்னர் அவற்றின் சிபாரிசுகளை நிறைவேற்றுனர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார் என்பது மாத்திரமின்றி அச்சிபாரிசுகள் ஆக்கபூர்வமாகவும் முழுமையாகவும் அமுல்ப்படுத்தப்பட்டதா, மிகவும் முக்கியமான நிதி செயற்திறன் மற்றும் சேவை தரம் தொடர்பாக உறுதியான மாற்றம் நிகழ்ந்துள்ளதா என்பதனைப் பரீட்சித்தல் மற்றும் அமுல்ப்படுத்துதல் நடைமுறை தொடர்பாக குழுவிற்கு மீள அறிக்கை சமர்ப்பித்தலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியில் கடமையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் / அல்லது அவரின் பிரதிநிதிகள் அக்குழுவிற்கு உதவியளிப்பார்கள். அதன் போது கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்படுகின்ற நிறுவனத்துக்குரிய கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட முக்கியமான அவதானிப்புக்களின் நிகழ்கால நிலைமையை பரீட்சித்து நாளதுவரையாக்கப்பட்ட அவதானிப்புக்களுடன் நிகழ்கால செயலாற்றல் தொடர்பாக குழுவின் கலந்துரையாடலுக்குப் பொருத்தமான அவதானிப்புக்களை உள்ளடக்கிய கலந்துரையாடல் குறிப்பினைத் தயாரித்து குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படுவதுடன் அதனை அடிப்படையாகக் கொண்டு குழுவின் தலைவர் கலந்துரையாடலினை நடாத்துவார்.

கலந்துரையாடலுக்குப் பயன்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட விடயங்களுக்குரிய நிகழ்கால நிலைமை மற்றும் செயற்பாட்டு செயலாற்றல் தொடர்பான எழுத்துமூல தகவல்களை உள்ளடக்கிய ஒரு அறிக்கையினை வழங்குவதற்காக உரிய அரசாங்க நிறுவனத்திற்கு வழக்கமாக ஒரு மாத காலம் குழுவினால் வழங்கப்படுகின்றது. கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கூறிய கலந்துரையாடல் குறிப்பு தயாரிக்கப்படுவதுடன் முன்னர் நடாத்தப்பட்ட கூட்டங்களின் போது வழங்கப்பட்ட பணிப்புரைகளை அமுல்ப்படுத்தும் செயல்முன்னேற்றம் பரீட்சிக்கப்பட்டு அது தொடர்பாக மேலும் கலந்துரையாடப்பட வேண்டிய விடயங்களும் அந்த கலந்துரையாடல் குறிப்பில் வேறாக உள்ளடக்கப்படும். கலந்துரையாடலினை ஆரம்பிப்பதற்கு முன்னர் அதன் பிரதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்.∴ கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்படுவதனால் அதனை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடலினை நடாத்துதல் குழுவிற்கு வசதியாக இருக்கும்.

குழு சந்தர்ப்பத்தின் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கடமையாவது கலந்துரையாடலுக்கு உட்படுகின்ற விடயங்கள் தொடர்பான பின்னணி தகவல்களை வழங்குதலினை கவனித்து பார்த்து விடயம் தொடர்பான கருத்துரைகளை வழங்குவதன்

மூலம் குழுவிற்கு உதவியளிப்பதாகும். அதன் போது உரிய விடயங்கள் தொடர்பாக அதே போல குழு அங்கத்தவர்களினால் உருவாக்கிய பிரச்சினைகள் மற்றும் கலந்துரையாடலுக்கு கோரப்பட்ட நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் சமர்ப்பிக்கப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக கருத்துரைகள் வழங்கப்படுவதும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் பெரும்பாலும் மேற்கொள்ளப்படும்.

அதற்கிணங்க 2021 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்தின் கணக்குகள் தொடர்பான குழுவினால் 20 நிறுவனங்களை பரீட்சிப்பதற்காக கோரப்பட்டிருந்ததுடன் அதன் போது 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை கலந்துரையாடுவதற்கு 19 கூட்டத் தொடர்கள், விசேட கணக்காய்வு அறிக்கைகளை கலந்துரையாடுவதற்கு குழுவின் 08 கூட்டத் தொடர்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகளை கலந்துரையாடுவதற்கு குழுவின் 04 கூட்டத்தொடர்களுமாக நடாத்தப்பட்ட 31 கூட்டத்தொடர்களுக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதி அக்குழுக்களுக்கு பங்குபற்றியிருந்தார். அதேபோல 154 (6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை கலந்துரையாடுவதற்கு குழுவின் 30 கூட்டத்தொடர்களும் விசேட கணக்காய்வு அறிக்கைகளை கலந்துரையாடுவதற்காக குழுவின் 06 கூட்டத் தொடர்களுமாக பொது முயற்சிகள் தொடர்பான குழுவின் 36 கூட்டத் தொடர்களுக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதி உதவியளித்திருந்தார். அதற்கிணங்க இரண்டு குழுக்களும் 2021 ஆம் ஆண்டின் போது 46 நிறுவனங்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை கலந்துரையாடுவதற்காக அழைக்கப்பட்டிருந்த 67 கூட்டத் தொடர்களுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதி உதவியளித்திருந்தார்.

இதற்கு மேலதிகமாக விசேடமாக அமைச்சுக்கள், திணைக்களங்கள், சுயாதீன ஆணைக்குழுக்கள் என்பவற்றின் நிதிக்கட்டுப்பாட்டினையும் செயலாற்றலினையும் மதிப்பீடு செய்வதற்கான தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட கேள்விக் கொத்துக்களைத் தயாரிப்பதற்காக 2021 ஆம் ஆண்டின் போது தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள் அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுவிற்கு உதவியளித்திருந்தார்கள். மேலும் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் அந்த கேள்விக் கொத்துக்கு வழங்கிய பதில்களின் சரியான தன்மையை பரீட்சித்து அது பற்றி அறிக்கையிடுவதன் மூலம் உரிய மதிப்பீட்டு நடவடிக்கையை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதி மேலும் அக்குழுவிற்கு உதவியளித்துள்ளார்.

அதேபோல நிதி தொடர்பான குழு, பாதீடு தொடர்பான குழு முதலிய பல்வேறு பாராளுமன்ற குழுக்களுக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களை பிரதிநிதித்துவம் செய்து உத்தியோகத்தர்களை பங்குபற்றச் செய்தல் போன்றவாறாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நியதிச்சட்ட கடமைகளுக்கு மேலதிகமாக மாற்று வழிகளிலும் பாராளுமன்ற நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டின் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்கள் உதவியளித்துள்ளார்.

8 வாரங்களுக்குள் தனது அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக அறிக்கையிடுவதற்காக நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும்

நிறுவனத்தரிற்கும் பொறுப்பான அமைச்சருக்கும் அனுப்பிவைக்கனப்பட்ட பாராளுமன்ற நிலையியல் கட்டளை இலக்கம் 119(4) இன் பிரகாரம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட அரசாங்கத்தின் கணக்குகள் தொடர்பான குழுவின் அறிக்கை பற்றிய 114 ஆம் இலக்க பாராளுமன்ற வெளியீட்டுத் தொகுப்பு தொடர்பாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பதில் அறிக்கையை பரீட்சித்து மீண்டும் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் ஆண்டிற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் நிறைவேற்றப்பட்ட மற்றுமொரு விசேட செயற்பாடாகும்.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் விதிக்கப்பட்ட மிகைக் கட்டணம்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் 2018 ஆகஸ்ட் 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருவதுடன் அதன் 19 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு சேவை ஆணைக்குழுவினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களால் கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனங்களின் சில கொடுக்கல்வாங்கல்கள் சில எழுத்திலான சட்டத்திற்கு முரணாக இடம்பெற்றிருந்ததனால் அக்கொடுக்கல் வாங்கல்களின் மூலம் அதனுடன் தொடர்புபட்ட நபர்களின் மோசடி, கவனயீனம், பிழையான நடத்தை அல்லது ஊழலின் காரணமாக சில பற்றாக்குறைகள் அல்லது நட்டங்கள் ஏற்பட்டுள்ளது என நம்புவதற்கு கணக்காய்வு சேவை ஆணைக்குழுவிற்கு நியாயமான காரணம் காணப்படும் சந்தர்ப்பத்தில் சில கொடுக்கல் வாங்கலின் காரணமாக இடம்பெற்ற அனைத்து பற்றாக்குறைக்கும் நட்டத்திற்குரிய பெறுமதியை கணக்காய்வு சேவை ஆணைக்குழுவினால் மிகைக்கட்டணம் விதிப்பதற்காக அக்கொடுக்கல் வாங்கல்களின் காரணமாக இடம்பெற்ற அனைத்து பற்றாக்குறைகள் அல்லது நட்டங்களுக்குரிய பெறுமதியை அக்கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்ற நிறுவனத்தின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

அவ்வாறு அறிக்கையிடப்படுகின்ற பெறுமதியை அப்பற்றாக்குறைக்கு அல்லது நட்டத்திற்கு பொறுப்புக் கூறக்கூடிய நபரிடமிருந்து கூட்டாகவோ அல்லது வெவ்வேறாகவோ அறவீடு செய்யும் பொறுப்பு உரிய பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தமது செயற்பாட்டை நிறைவேற்றும் போது தான் தெரிந்து கொள்வதற்கு கிடைத்த தகவல்களை ஏனைய நபர்களுக்கு வெளிப்படுத்துவதற்கு தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 09 ஆம் பிரிவின் பிரகாரம் மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தமை மற்றும் கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 19 ஆம் பிரிவினை அமுல்ப்படுத்துவதற்குத் தேவையான கணக்காய்வு தகவல்களை கணக்காய்வு தலைமை அதிபதியிடமிருந்து கணக்காய்வு சேவை ஆணைக்குழுவிற்கு கிடைக்க வேண்டிய முறைமை தொடர்பாக சட்டரீதியான ஏற்பாடு இல்லாததன் அடிப்படையில் மிகைக் கட்டண நடைமுறையை அமுல்ப்படுத்துவதற்காக அவ்வாறான சட்டரீதியான ஏற்பாட்டினை உள்ளடக்கும் வகையில் கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினை திருத்தம் செய்ய வேண்டுமென சட்டமா அதிபரினால் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த நிலைமையின் கீழ் கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மிகைக் கட்டண

நடைமுறையை அமுல்ப்படுத்த முடியாதிருந்தது.

அவ்வாறு இருக்கையில் 20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் சுயாதீன ஆணைக்குழுக்கள் இரத்துச்செய்யப்பட்டதோடு கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவும் இரத்துச்செய்யப்பட்டதுடன் அதன் போது கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் மிகைக் கட்டண நடைமுறையில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான மாற்று நடைமுறை அறிமுகப்படுத்தப்படாமையின் காரணமாக கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த மிகைக் கட்டண நடைமுறை தொடர்பாக நடவடிக்கை எடுப்பதனை தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் தற்பொழுது நிறுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு முன்னரிலிருந்து பல்கலைக்கழகங்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பாக மிகைக் கட்டணம் விதிப்பதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏனைய எழுத்திலான சட்டங்களின் மூலம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் அந்த மிகைக் கட்டண நடைமுறை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தலையீட்டின் அடிப்படையில் முன்னையவாறே மேற்கொள்ளப்படுகின்றது.

அதற்கிணங்க இந்த மிகைக்கட்டண நடைமுறையினை செயற்படுத்தும் தேவைப்பாடு வலியுறுத்தப்படுவதுடன் அதற்காக மிகைக் கட்டணம் விதிக்கும் தொடக்க நடவடிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஆணைக்குழுவிற்கு சிபாரிசு செய்யப்பட்டதன் பின்னர் மிகுதியான கட்டணம் விதித்தலினை அங்கீகரித்தல் மற்றும் மிகைக்கட்டண சான்றிதழினை வழங்கும் நடைமுறையை எதில்காலத்தில் அனுமதிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் 22 ஆவது அரசியலமைப்பு திருத்தங்களின் மூலம் நடைமுறைக்கு வரும் கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவிற்கு ஒப்படைத்தல் மிகவும் பொருத்தமானது என சிபாரிசு செய்யப்பட்டது. இதற்காக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 19 ஆம் பந்திக்காக பொருத்தமான திருத்தங்களை செய்ய வேண்டியுள்ளது.

உள்ளூராட்சி நிறுவனங்களில் மிகைக் கட்டணங்களை அறவீடு செய்தல்

இலங்கையில் 341 உள்ளூராட்சி நிறுவனங்கள் காணப்படுவதுடன் 24 மாநகர சபைகள், 41 நகர சபைகள் மற்றும் 276 பிரதேச சபைகள் அவற்றிற்குரியவைகளாகும். இந்த உள்ளூராட்சி நிறுவனங்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரை, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்யப்படும்.

மேற்கூறிய கட்டளைச் சட்டங்கள் மற்றும் அதிகாரச் சட்டங்களிலிருந்து சட்டத்திற்கு முரணான கொடுப்பனவு விடயங்கள், கவனயீனம் அல்லது தவறான நடத்தைகளால் ஏற்பட்ட நட்டங்கள் மற்றும் கணக்குகளில் காட்டப்பட வேண்டியிருந்த போதிலும் காட்டப்படாத விடயங்களை மிகைக்கட்டணம் விதிப்பதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேற்கூறிய அதிகாரத்தின் பிரகாரம் 2012 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான 10 ஆண்டுகளுக்குள் உள்ளூராட்சி நிறுவனங்களின் 388 தரப்பினர்களுக்கு ரூபா 33.37 மில்லியன்

தொகையான 64 மிகைக் கட்டண சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன.

மேற்கூறிய உள்ளூராட்சி அமைச்சினால் ரூபா 9.82 மில்லியன் பெறுமதியான 08 மிகைக் கட்டண சான்றிதழ்கள் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அவர்களின் சிபாரிசின் அடிப்படையில் ரூபா 912,513 தொகை அறவீடு செய்யப்பட்டிருந்தது.

மிகுதியான மிகைக் கட்டண சான்றிதழ்களில் 2022 யூன் 30 ஆந் திகதி வரை ரூபா 3.86 மில்லியன் அதாவது 16 சதவீதம் மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்ததனால் உரிய அதிகாரிகளால் மிகைக்கட்டணத்தை அறவீடு செய்யும் நடைமுறை தொடர்பாக முறையாக கவனம் செலுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

பொது மக்களின் முறைப்பாடுகளை பரீட்சித்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனங்கள் தொடர்பான எந்தவொரு விடம் பற்றியும் உறுதிப்படுத்துவதற்கு போதியளவு சாட்சிகளுடன் பொதுமக்களுக்கு மத்தியில் யாராவது ஒரு நபரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்துகையில் அது பற்றி பரீட்சிக்க வேண்டியதுடன் அது பற்றி பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்

தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு பொது மக்கள் தனிப்பட்ட ரீதியில் அல்லது பொது மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு சங்கங்களினூடாக கிடைக்கின்ற எழுத்துமூல முறைப்பாடுகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்காக அலுவலகத்தில் தனியான ஒரு பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அப்பிரிவின் மூலம் நிறுவனத்திற்கு கிடைக்கும் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு மேலதிக பரீட்சிப்பிற்காக அதன் விசேட புலனாய்வு மற்றும் தடைய கணக்காய்வுப் பிரிவிற்கு மற்றும்/அல்லது பல்வேறு கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்களில் அமைந்துள்ள கணக்காய்வு கிளைக்கு அல்லது பிராந்திய ரீதியாக அமைந்துள்ள புலனாய்வுப் பிரிவிற்கு அத்தகவல்கள் அனுப்பிவைக்கப்படும். அனுப்பி வைக்கப்பட்ட அத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்பட்ட கணக்காய்வின் மூலம் உருவாகிய அவதானிப்புக்களை அவற்றின் பொருண்மை மற்றும் தரத்தினை கவனத்திற்கு எடுத்துக்கொண்டதன் பின்னர் உரிய கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம் சம்பந்தமாக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்குவதற்கு அல்லது விசேட அறிக்கை/செயலாற்றல் அறிக்கையின் மூலம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு தேசிய கணக்காய்வு நிறுவனம் நடவடிக்கை எடுக்கும். எவ்வாறாயினும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 09 ஆம் பிரிவில் காணப்படுகின்ற மட்டுப்படுத்தும் ஒழுங்கு விதிகள் தொடர்பாக கவனம் செலுத்தி அக்கணக்காய்வின் பொறுபேறுகளை நேரடியாக உரிய முறைப்பாட்டினைச் சமர்ப்பித்த நபருக்கு தெரியப்படுத்தப்படும். எனினும் அனாமோதைய முறைப்பாடுகளை தவிர்த்து ஏனைய முறைப்பாடுகள் சம்பந்தமாக அவை பெற்றுக்கொள்ளப்பட்டமை பற்றியும் அவை பரீட்சிக்கப்பட்டு பொருத்தமான வகையில் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவற்றினை அனுப்பிய தரப்பினர்களுக்கு தெரிவிக்கப்படும்.

2021 ஆம் ஆண்டின் போது தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு 1696 பொது

மக்கள் முறைப்பாடுகள் கிடைத்திருந்ததுடன் அந்த முறைப்பாடுகளில் 884 முறைபாடுகள் அரசாங்கத்தின் அல்லது அரசாங்க நிறுவனங்களின் நிருவாக ரீதியான விடயங்கள் சம்பந்தமானதுடன் 124 முறைப்பாடுகள் பல்வேறு தரப்பினர்களின் துயரங்கள் சம்பந்தமானவைகளாகும். இன்னும் 662 முறைப்பாடுகள் நிறுவன ரீதியான மோசடிகள் மற்றும் ஊழல்கள் சம்பந்தப்பட்டவைகளாக இருந்ததுடன் 26 முறைப்பாடுகள் பல்வேறு தரப்பினர்களின் தனிப்பட்ட விடையங்கள் சம்பந்தப்பட்டவைகளாகும். அவ்வாறே இந்த முறைப்பாடுகளுக்கு மத்தியில் 318 முறைப்பாடுகள் அனுப்பியவர்களின் அடையாளத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 1378 முறைப்பாடுகள் பெயர் குறிப்பிடாது சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இவற்றிற்கு மத்தியில் அதிகளவானவை போதிய அளவில் அல்லது குறித்த அளவான சாட்சிகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. சாட்சிகள் எதுவும் இல்லாதிருந்த போதிலும் கிடைக்கின்ற முறைப்பாடுகள் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்படும்.

மேலதிக புலனாய்வு நடவடிக்கைகளுக்காக அனுப்பிவைக்கப்பட்ட எழுத்துமூல முறைப்பாடுகள் தொடர்பாக துறைரீதியாக வகைப்படுத்தல் செய்த போது பிரதானமாக கல்வித் துறைக்காக 193 முறைப்பாடுகளும் உள்ளூராட்சி துறைக்காக 191 முறைப்பாடுகளும் சுகாதார துறைக்காக 160 முறைபாடுகளும் பிரதேச செயலகங்கள் சம்பந்தமாக 148 முறைப்பாடுகளும் விவசாய சுற்றாடல் மற்றும் ஊழியர் நலன்புரி ஆகிய துறைகளுக்காக முறையே 98, 72 மற்றும் 65 ஆக முறைபாடுகள் கிடைத்திருந்ததுடன் அரசாங்கத்தின் பல்வேறு நிறுவனங்களுக்காக இன்னும் 769 முறைபாடுகள் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு கிடைத்திருந்தது.

மீளாய்வாண்டின் போது கிடைத்த 216 முறைப்பாடுகளும் கடந்த ஆண்டின் போது கிடைத்த 219 முறைப்பாடுகளும் சம்பந்தமான கணக்காய்வு நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்த 68 முறைப்பாடுகள் தொடர்பான அவதானிப்புக்களை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்குவதற்கு தற்பொழுது உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் மேற்கொள்ளப்படுகின்ற செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்வு

விடயங்கள்

- செயலாற்றல் கணக்காய்லு
- சுற்றாடல் கணக்காய்வு

வெளியிடப்பட்ட செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்வு அறிக்கைகள்

- மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் மூலம் தோட்ட மக்களுக்கு வீடமைப்பு வசதிகளை வழங்கும் செயற்திட்டத்தின் செயலாற்றல்
- உள்ளூராட்சி நிறுவனங்களை மேம்படுத்தும் துறைசார்ந்த செயற்திட்டம் (புரநெகும)
- உள்ளூர் சந்தையில் தரமான உற்பத்திப்பொருட்களின் விற்பனை தொடர்பாக இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் வகிபாகம்
- அரச சார்பற்ற பாடசாலைகள் தொடர்பான ஒழுங்குபடுத்தல் நடைமுறைகள்
- இலங்கையில் தொற்றாத நாட்பட்ட நோய்களைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் செயல்பாடுகளை ஒழுங்குறுத்தல்
- ஹம்பாந்தோட்டை, அநுராதபுரம், வவுனியா மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் கணிய வளங்கள் (கருங்கல்) அகழ்விற்காக அரச காணியை குத்தகைக்கு வழங்குதல், நிர்வகித்தல் மற்றும் அரசிறை அறவிடல் தொடர்பான செயலாற்றல் அறிக்கை
- அவுஸ்திரேலியக் கடன் மற்றும் உள்நாட்டுக் கடன் உதவிகளின் கீழ் சுகாதார அமைச்சினால் செயற்படுத்தப்பட்ட அரச வைத்தியசாலைகளில் மருத்துவக் கழிவுப்பொருட்கள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் செயலாற்றலை மதிப்பீடு செய்தல்
- புதிய மீளுருவாக்கத்தக்க வலுசக்தி மூலங்களை அபிவிருத்தி செய்யும் செயற்பாட்டின் மதிப்பீடு
- ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு வேலைத்திட்டத்தின் கீழ் கிராமிய சமூகம் மற்றும் சமூக பொருளாதார மத்திய நிலையத்திற்கும் இடையில் வீதி நுழைவினை மேம்படுத்துவதிலான செயலாற்றல்
- கப்பல்களின் மூலம் இடம்பெறுகின்ற கடல் மாசடைதலை தடுப்பதற்காக நடைமுறைப்படுத்தப்படுகின்ற மார்போல் உடன்படிக்கையை இலங்கையில் அமுல்படுத்துவதிலான செயன்முன்னேற்றம்
- இலங்கையின் கடற்கரை மற்றும் கடல்சார் தேசிய பூங்காக்கள் பாதுகாப்பு
- இலங்கையில் நிலக்கீழ் நீர் முகாமைத்துவத்தின் சட்டரீதியான பொறிமுறை மற்றும் அதன் தொழிற்பாட்டினை மதிப்பீடு செய்தல்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் மேற்கொள்ளப்படுகின்ற செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்வு

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 5(2) ஆம் பிரிவின் கீழ் செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்வு உள்ளடங்கலாக விசேட கணக்காய்வொன்று நிதிக் கணக்காய்வுக்கு மேலதிகமாக மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைய ஏதேனும் தெரிவு செய்யப்பட்ட துறையொன்றின் ஊடாக மேற்கொள்ளப்படும் இந்த கணக்காய்வுகள் தொடர்பிலான அறிக்கைகளும் வெளியிடப்படும்.

செயலாற்றல் கணக்காய்வின் மூலம் எதிர்பார்க்கப்படுவது அரச நிறுவனமொன்றின், நிகழ்ச்சித்திட்டமொன்றின், செயற்திட்டத்தின் அல்லது ஏதேனுமொரு செலவின அலகின் தெரிவு செய்யப்பட்ட துறைகள் தொடர்பில் அதன் செயற்படுதன்மையின் சிக்கனத்தன்மை, செயற்திறன், ஆக்கபூர்வமான தன்மை மற்றும் சுற்றாடல் தாக்கத்தினை மதிப்பீடு செய்தல் ஆகும். அதன் போது குறித்த அவதானிப்புகளுக்கு மேலதிகமாக அவற்றை திருத்துவதற்கு உரிய பரிந்துரைகளும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் தாபிக்கப்பட்டுள்ள செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்வு பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும் கணக்காய்வுகளுக்கு மேலதிகமாக தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வு கிளைகளின் மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அந்த கணக்காய்வுகளும் இதற்கு உரியதாகும்.

2021 ஆம் ஆண்டின் போது நிறைவு செய்யப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அந்த செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்வு அறிக்கைகளின் முக்கியமான விடயங்கள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் மூலம் தோட்ட மக்களுக்கு வீடமைப்பு வசதிகளை வழங்கும் செயற்திட்டத்தின் செயலாற்றல்

இலங்கையின் ஒட்டுமொத்த சனத்தொகையில் 4.57% இனைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பெருந்தோட்ட மக்கள் முகங்கொடுக்கின்ற சமூக முரண்பாடுகளை நீக்கி ஏனைய மக்களுக்குச் சமமான சமூக நிலைமையுடன், சுயமரியாதையுடன் மற்றும் கௌரவத்துடன் போற்றப்படுகின்ற ஒரு கிராமிய சமூகமாக மாற்றும் குறிக்கோளுடன் 2015 திசெம்பர் 25 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1933/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் மலைநாட்டுப் புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு தோற்றுவிக்கப்பட்டது. இவ்வமைச்சின் பிரதான கடமையான அரசாங்க மற்றும் தனியார் பெருந்தோட்டக் கம்பனிகளில் சேவையாற்றுகின்ற காணிகள் அற்ற லைன் வீடுகளில் வசிக்கும் மக்களுக்கு வீடுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் குறிக்கோளை அடைந்து கொள்வதற்கு ஏற்கனவே காணப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கால்நடை கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சின் கீழும் இளைஞர் மேம்பாட்டு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் கீழும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும் இச்செயற்பாடுகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு 2007 இன் 07 ஆம் இலக்க

கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் பிணையால் வரையறுக்கப்பட்ட ஒரு கம்பனியாக பதிவு செய்யப்பட்டுள்ள பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பின் ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு 2006 திசெம்பர் 7 ஆந் திகதிய அமப/06/2249/240/005 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

சமூகத்தை வலுப்படுத்தல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் அமைச்சின் செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்டுள்ள பெருந்தோட்டக் கம்பனிகளில் சேவையாற்றுகின்ற காணிகள் இல்லாத மக்களுக்கு வீடுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் குறிக்கோளில் புதிய கிராமங்கள் மற்றும் நகரங்களை உருவாக்குதலை அமுல்படுத்துவதன் கீழ் வீடுகளை நிர்மாணித்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் செயற்திட்டத்திற்காக 2013 இலிருந்து 2019 வரை மாத்திரம் அமைச்சின் மூலம் செலவு செய்த மொத்தப் பணம் ரூபா 7,600,128,381 ஆகும். அவ்வாறு இருக்கையில் தோட்ட சேவையில் ஈடுபட்டுள்ள குடும்பங்களுக்கு மத்தியில் 93 சதவீதமானவர்களுக்கு வீடுகளுக்கான தேவைப்பாடு காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க இச்செயற்திட்டத்தை சிக்கனமாக, ஆக்கபூர்வமாக மற்றும் விளைதிறனாக மேற்கொள்ளுதல் தொடர்பாக தொடர்ச்சியாக மேற்பார்வை மற்றும் கணக்காய்வினை மேற்கொள்ள வேண்டியிருந்ததனால் இத்தலைப்பினை செயலாற்றல் கணக்காய்விற்காகத் தெரிவு செய்தல் இடம்பெற்றுள்ளது.

வீட்டு வசதிகளை வழங்கும் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவ சேவையை வழங்குவதற்கு மேலதிகமாக, பயனாளிகளைத் தெரிவு செய்தல், ஒப்பந்தப் பத்திரம் ஆகியவை அனுமதியின்றி பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்கு வழங்கப்பட்டு, கண்காணிப்புப் பணியும் அந்த நம்பிக்கைப் பொறுப்பிற்கு அமைச்சு வழங்கியிருந்தது.

பெருந்தோட்டப் பிரதேசத்தில் வீடமைப்பு அபிவிருத்திக்காக புதிய கிராம அபிவிருத்தி அதிகார சபை 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் 5 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டதுடன், 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் ரூபா 8.84 மில்லியன் அந்த நிறுவனத்திற்காக செலவிடப்பட்டுள்ளதுடன், அதன் பணிப்பொறுப்பும் முன்னாள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் பணிப்பொறுப்பானமையால் அந்த நிறுவனத்தின் மூலம் மேலதிகமான விசேட பணிப்பொறுப்பொன்று நிறைவேற்றப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

இத்திட்டமானது தோட்டங்களில் தொழில் செய்யும் குடும்பங்களுக்கு மாத்திரம் வசதிகளை வழங்கும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், தோட்டங்களில் தொழில் செய்யாதவர்களுக்கும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளதோடு, இந்நிலைமை நீண்ட கால அடிப்படையில் தோட்டக் காணிகளின் அளவு குறைவதற்கு வழிவகுத்துள்ளமை அவதானிக்கப்பட்டது.

வீடமைப்புக்கு பொருத்தமான காணியை தெரிவு செய்யும் போது, குறித்த அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம், வீட்டுத்திட்டத்திற்கு பயிரிடப்படாத காணி வழங்கப்பட வேண்டும், ஆனால் நுவரெலியா மற்றும் ஹட்டன் பிரதேசங்களில் பயிரிடப்பட்டிருந்த 56.48 ஏக்கர் தேயிலை அகற்றப்பட்டுள்ளது.

பயனாளிகளிகளை தேர்வு செய்தல் சரியாக நடைபெறுகிறதா என்பது அமைச்சினால்

கண்காணிக்கப்பட வேண்டிய பணியாகும். அவ்வாறான போதிலும், அது தொடர்பில் பரீட்சிக்கும் போது வீட்டு உபயோகப் பயனாளிகளின் பட்டியலைத் தவிர கணக்காய்வுக்கு வேறு எந்தத் தகவலும் சமர்ப்பிக்கப்படவில்லை.

கட்டப்பட்ட வீடுகளுக்கு வீட்டின் அடித்தளத்திற்கான கான்கிரீட் விட்டங்களின் தேவை தொடர்புடைய மதிப்பீடுகளில் இல்லாமை, மேற்கூரைகளுக்கு கால்வனேற்றப்பட்ட ஆணிகளின் தேவையை மதிப்பிடாதது மற்றும் இலங்கையின் அனைத்து காலநிலை மற்றும் புவியியல் ரீதியில் வெவ்வேறு பகுதிகளுக்கு ஒரே மாதிரியான விவரக்குறிப்புகள் உள்ளடங்கிய மதிப்பீடுகளை தரநிலையின்படி மதிப்பிடாதது போன்ற குறைபாடுகள் காரணமாக அந்த வீடுகளை நிர்மாணிப்பதில் குறைபாடுகள் இருந்தன. கட்டிட மதிப்பீடு மற்றும் குறிப்பாக 184 வீடுகள் கட்டப்பட்ட கொட்டியாகல தோட்டத்தில் மண்சரிவு அபாயத்தை கருத்தில் கொண்டு கவனக்குறைவு மற்றும் தரமற்ற பொருட்களை பயன்படுத்துதல் போன்ற குறைபாடுகள் காரணமாக வீடுகளின் தரம் திருப்திகரமானதாக காணப்படவில்லை.

வீட்டு உரிமைகளை வழங்கும் போது ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படாத காரணத்தினால், பழைய வீடுகளை அகற்றுவதற்கான உந்துதல் இல்லாதிருந்தமை மற்றும் உரிமைகளை வழங்குவதற்கான முன்னுரிமை உத்தரவு அமைச்சரவை தீர்மானங்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது, ஆனால் தோட்ட மனித அபிவிருத்தி அறக்கட்டளை அத்தகைய தேவைகளை அங்கீகரிக்கவில்லை, வீட்டுவசதிக்காக கொடுக்கப்பட்ட கடனுக்கான வட்டியை வசூலிப்பது தொடர்பான முறையான அறிக்கைகள், இணங்காதது, செல்லுபடியாகும் மற்றும் தேவையான விவரங்கள் உட்பட சட்ட ஒப்பந்தங்கள் தயாரிக்கப்பட்டு கையொப்பமிடப்படவில்லை. 2017 டிசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பினால் சேகரிக்கப்பட்ட கடன் தவணைகள் ரூபா 33.25 மில்லியனாக காணப்பட்டதுடன், 2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று அமைச்சினால் பெறப்படாத கடன் தவணைகளின் பெறுமதி ரூபா 31 மில்லியன் ஆக இருந்தது. இது தொடர்பான நிலுவை வருமான அறிக்கைகள் தயாரிக்கப்படாமை மற்றும் அது தொடர்பான பணம் திறைசேரிக்கு உரிய முறையில் செலுத்தப்படாமை போன்ற சிக்கல்கள் அவதானிக்கப்பட்டது.

இந்திய அரசாங்கத்தின் ஆதரவுடன் 4000 வீட்டுத் தொகுதிகள் நிர்மாணிக்கப்பட்டதுடன், கடன் தவணைகளை மீளச் செலுத்துவது அது தொடர்பான பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்கு ரூபா 2.7 மில்லியன் அதிகமாக செலுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

வீடுகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தின் போது கொள்வனவு நடைமுறைகளை மீறுவது அவதானிக்கப்பட்டதுடன், ஒதுக்கீட்டிற்கு அப்பால் கோடியாகல வீடமைப்புத் திட்டத்திற்கு மேலதிகமாக ரூபா 14.8 மில்லியன் செலுத்தப்பட்டது

வருடாந்த செயற்திட்டத்தின் பிரகாரம் எதிர்பார்த்த எண்ணிக்கையிலான வீடுகளை நிர்மாணிக்கத் தவறியமை, சில நிர்மாணங்கள் கைவிடப்பட்ட சம்பவங்கள் அவதானிக்கப்பட்டதுடன், ஹட்டன் மற்றும் நுவரெலியா பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் ஆக்கிரமிப்பு குறைவாகவே காணப்பட்டது.

வீடு கட்டுவதற்கான பயனாளிகளைத் தேர்வு செய்தல், நிலம் தேர்வு மற்றும் கட்டுமானத்திற்கான மதிப்பீடுகள் தயாரித்தல், ஒப்பந்தம் வழங்குதல் மற்றும் கட்டுமான மேற் பார்வை மற்றும் வீட்டுக் கடன் வசூல் ஆகியவற்றில் அமைச்சின் கண்காணிப்பு மட்டம் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது.

உள்ளூராட்சி நிறுவனங்களை மேம்படுத்தும் துறைசார்ந்த செயற்திட்டம் (புரநெகும)

1987 ஆம் ஆண்டின் போது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட 13வது அரசியலமைப்புத் திருத்தத்தின் பிரகாரம் உள்ளூராட்சி மாகாண சபைக்குரிய விடயமாகக் காணப்பட்டது. மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை ஆகிய 03 உள்ளூராட்சி நிறுவன வகைகளில் சிறிய உள்ளூராட்சி நிறுவனமான பிரதேச சபை, 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

விசேடமாக நாட்டின் பிரதான நகரங்களிலிருந்து தொலைவில் காணப்படுகின்ற பிரதேச சபைகளினால் பொதுமக்களுக்கு வழங்க வேண்டிய சேவைகளை வழங்குதல், தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் என்பன அப்பிரதேச சபைகளின் சுயவலிமையில் மேற்கொள்ளுதல் சிக்கலாக இருந்ததன் காரணமாக மத்திய அரசாங்கத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற வெளிநாட்டு கடன் செயற்திட்டங்களின் மூலம் இந்த உள்ளூராட்சி நிறுவனங்களை மேம்படுத்துவதற்கு பல்வேறு முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. பிரதேச சபை மட்டத்தில் கருத்தில் கொள்கையில் பிரதேசத்தை நிருவகிக்கின்ற தலைமைத்துவத்தின் வழிகாட்டல் மற்றும் உத்தியோகத்தர்களின் நேர்மையான தேவைப்பாட்டினை தொடர் ஒழுங்கில் ஒழுங்குபடுத்தாமை முதலிய விடயங்களின் காரணமாக சில உள்ளூராட்சி நிறுவனங்கள் போதியளவிலான முன்னேற்றங்களைக் காட்டியிருக்கவில்லை.

இலங்கையின் உள்ளூராட்சி நிறுவன முறைமைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள நோக்கெல்லைக்குள்ளான கடமைகள் இரண்டு வகையாகும்.

- கண்டிப்பாக நிறைவேற்றுவதற்கு கடப்பாடு செய்யப்பட்டுள்ள செயற்பாடுகள்.
- நிறைவேற்றுவதற்கு அதிகாரம் இருந்தும் கட்டாயம் அற்ற செயற்பாடுகள்.

ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனத்திற்கும் நிறைவேற்றுவதற்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளதனைப் போல கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டிய செயற்பாடுகளாக அதிகாரப் பிரதேசத்திலுள்ள

வீதிகள் மற்றும் பொதுச்சுகாதாரத்திற்குரியதான கடமைகள் (Duties) சட்ட ரீதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அந்நடவடிக்கைகளை நிறைவேற்றுதல் அல்லது வேண்டுமென்றே தவிர்த்தலானது கடமைகளையும் பொறுப்புக்களையும் தவிர்ப்புச் செய்தலாகும்.

நிறைவேற்றுவதற்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருந்தும் கண்டிப்பாக நிறைவேற்றுவதற்கு சட்ட ரீதியாக நிர்ணயிக்கப்படாத செயற்பாடுகளும் உள்ளன. உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொதுப் பயன்பாட்டுச் சேவைகள், நலன்புரிச் சேவைகள், கல்வி, சமய மற்றும் கலாச்சார சேவைகள் இவற்றிற்குரியவையாகும். இச்சேவைகளை வழங்குவதற்கு அதிகாரம் கிடைத்திருந்தும் அவற்றை 55 நிறைவேற்றக்கூடியதாக இருப்பதானது நிறுவனத்தின் வளங்களின் அளவு மற்றும் பொதுமக்கள் அது தொடர்பாக மேற்கொள்கின்ற வேண்டுதல்கள் அல்லது தேவைப்பாட்டினை கவனத்தில் எடுத்துக்கொண்டதாகும். நிறுவனத்தினால் முன்னுரிமை வழங்கப்படுவது நிறுவனத்தின் கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றும் வகையிலாகும்.

அதற்கிணங்க மகப்பேற்று சிகிச்சையில் ஆரம்பித்து தகனச் சாலை வரையான மனித வாழ்வுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்கும் பொறுப்பு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க மகப்பேற்று சிகிச்சை, சுகாதார சிகிச்சை, மருந்துச்சாலை, ஆயுர்வேத மருத்துவ சேவை நிலையத்தை பேணுதல், திண்மக்கழிவு முகாமைத்துவம், தொற்றுநோய், பரவுகின்ற நோய் என்பவற்றைக் கட்டுப்படுத்தல், நகரத்தை உருவாக்குதல், நகரத்திட்டங்களை அங்கீகரித்தல், வீதி வெளிச்சங்கள், தொழிற்சாலைகளிலிருந்து இடம்பெறுகின்ற சுற்றாடல் பாதிப்புக்களைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், பிள்ளைகள் மற்றும் முதியவர்களுக்கான நூல் நிலையச் சேவைகளைப் பேணுதல், பாலர் பாடசாலை, பகல் கண்காணிப்பு நிலையத்தை பராமரிப்பது மாத்திரமன்றி தகனச்சாலை மற்றும் மயானங்களைப் பேணுதல், நகரத்தை சுகாதாரமாகவும் கவர்ச்சியாகவும் பேணுகின்ற பொறுப்பு இச்சிறிய நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரத்தைப் போல நகரத்தில் குடியிருப்பவர்களின் வேண்டுதல்களின் காரணமாகவும் நல்லாட்சிதுவங்களுக்குப் புறம்பாகவும் செயற்படுகின்ற உள்ளூராட்சி நிறுவனங்கள் பொதுமக்களின் வேண்டுகோள்களை நிறைவேற்றுவதற்குத் தவறிய நிறுவனமாக பலரினால் இனங்காணப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் பொதுமக்களுக்கு போதியளவு சேவைகளை வழங்குகின்ற வருமான வகையில் வருமான அடிப்படையுடன் உள்ளூராட்சி நிறுவன முறைமையினைக் கட்டியெழுப்புவதன் மூலம் நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை மிகவும் இலகுபடுத்துதல் சந்தேகமற்றதாகும். அதற்காக மத்திய அரசாங்கத்தின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற பெரிய அளவிலான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டங்களை அத்தியவசியமான மற்றும் வெற்றிகரமான செயற்திட்டமாக மாற்றுவதும் அதன்மூலம் எதிர்ப்பார்த்த பிரதிபலன்களை பொதுமக்களுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் கிடைக்க செய்வதும் அத்தியவசியமான விடயம் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் உள்ளூராட்சி நிறுவனங்களை மேம்படுத்துகின்ற துறைசார்ந்த செயற்திட்டத்தை (புறனெகும) அமுல்படுத்தும் போது செயற்திட்ட முகாமைத்துவக்கோவையில் குறிப்பிட்ட வரையறைகளுக்கு இணங்க உப

செயற்திட்டங்களைத் தெரிவுசெய்வதற்காக ஆய்வுகளை மேற்கொள்ளாது உப செயற்திட்டங்களைத் தெரிவுசெய்தல் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதில் தாமதம், செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயற்திட்டங்களின் நிதிசார் திட்டங்களை முகாமைத்துவம் செய்யும் நாளேட்டின் பிரகாரம் தயாரிக்காமை, பெறுகைத் தாமதங்கள், நிர்மாணங்களின் பொருத்தமற்ற தன்மைகள், நிர்மாணங்கள் பயன்படுத்தப்படாதும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டும் காணப்படுகின்றமையைப் போல எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றாத பல சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றதைப் போல நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் நிர்மாணங்களை முடிவுறுத்தி செயற்திட்டங்களை பூர்த்திசெய்யாததன் காரணமாக செயற்திட்ட அலுவலகத்தைப் பேணுவதற்கும் ஆலோசனைக் கம்பனிகளுக்கு மேலதிக கொடுப்பனவுகளை செய்யவேண்டி ஏற்பட்டமையினையும் உள்ளடக்கிய விடயங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

அவற்றிற்கு மத்தியில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் 2011 ஒக்டோபர் 21 ஆந் திகதிய 2790 SRC(SF) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் மூலம் 07 மாகாண சபைகளின் 100 பிரதேச சபைகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக அமெரிக்க டொலர் 68.8 மில்லியன் அதாவது ரூபா 8,940 மில்லியனை பயன்படுத்துவதற்கும் அவற்றில் ரூபா 7,892 மில்லியனுக்குச் சமமான அமெரிக்க டொலர் 59 மில்லியனை ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியளிப்பதற்கும் இணங்கியிருந்தது. எவ்வாறாயினும் விசேட எடுப்பனவு உரிமைகளுக்கு (ளுனுசு) எதிராக அமெரிக்க ஐக்கிய குடியரசு டொலர்கள் மீள்பெறுமதியிடப்பட்டதன் காரணமாக கடன் முகவராண்மை இணங்கிக்கொண்ட தொகை ரூபா 7892 மில்லியனுக்குச் சமமான ஐக்கிய அமெரிக்க குடியரசு டொலர் 52.04 மில்லியனாக பின்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக அமெரிக்க டொலருடன் ஒப்பிடுகையில் ரூபாவின் பெறுமதி குறைக்கப்பட்டதன் காரணமாக அதிகரித்த ரூபா பெறுமதியுடன் உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை 108 வரை அதிகரிக்கப்பட்டதுடன் 2015 யூன் 30 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்த செயற்திட்டம் 2017 யூன் 30 வரை 2 ஆண்டுகளால் நீடிக்கப்பட்டிருந்தது

இச்செயற்திட்டத்தின் கீழ் ரூபா 332.19 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட 04 பஸ்தரிப்பிடங்கள், 04 நீர் வழங்கல் செயற்திட்டங்கள், 02 பல்நோக்கு கட்டிடங்கள், 03 உடல்நல நிலையங்கள் என்பன உரிய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் முழுமையாக விளைவற்றுக் காணப்பட்டன.

ரூபா 513.73 மில்லியன் செலவில் நிர்மாணக்கப்பட்ட 12 பல்நோக்கு கட்டிடங்களும் ரூபா 18.90 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட நூல் நிலையமும் ரூபா 105.06 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட 03 வாராந்த சந்தைகளும் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் குறைப்பயன்பாட்டிற்கு உட்பட்டுக் காணப்பட்டது.

இந்த செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட செயற்திட்டங்களிடையே ரூபா 666.15 மில்லியன் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட 19 உப செயற்திட்டங்களிலிருந்து எதிர்பார்த்த பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள முடியாதிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

உரு - குறைப் பயன்பாட்டுடன் காணப்பட்ட கற்பிட்டி வாசிகசாலை கட்டிடம்

உரு - குறைப் பயன்பாட்டுடன் காணப்பட்ட கற்பிட்டி வாசிகசாலை கட்டிடம்

உரு - குறைப் பயன்பாட்டுடன் காணப்பட்ட சுரிய வெவ வாரச் சந்தை

உரு - எதிர்பார்த்த பெறுபேற்றினை பெற்றுக்கொள்ளாத பொல்பித்திகம பல்நோக்கு கட்டிடத் தொகுதி

உரு - குறைப் பயன்பாட்டுடன் காணப்பட்ட சூரிய வெவ வாரச் சந்தை

உரு - எதிர்பார்த்த பெறுபேற்றினை பெற்றுக்கொள்ளாத மாவத்தகம பேருந்து நிறுத்தம்

தெரிவுக் கணக்காய்வின் போது, மகப்பேறு பிணியாய்வுகள், மருத்துவ மனைகள், முன்பள்ளிகள், பகல்நேர பராமரிப்பு நிலையங்கள், நூலகங்கள், கேட்போர் கூடங்கள் போன்ற வசதிகளுடன்

நிர்மாணிக்கப்பட்ட ரூபா 90.35 மில்லியன பெறுமதியான 02 பல்நோக்கு கட்டிடங்கள் எதிர்பார்த்த பணிகளுக்கு பயன்படுத்தப்படாது பிரதேச சபை அலுவலகங்களாக பயன்படுத்தப்படுகின்றமை உறுதிப்படுத்தப்பட்டது.

அதன்படி, உள்ளாட்சி நிறுவனங்களினால் நிறைவேற்றப்படும் கட்டாயத் தேவைகளுக்கு மட்டுமே திட்டங்களைக் இனங்காணல், உரிய செயற்திட்டங்களைத் தொடங்கும் முன் அவற்றை நன்கு ஆய்வு செய்தல் மற்றும் தற்போது பஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்தப்படாத செயற்திட்டங்களைத் திறம்பட பயன்படுத்தும் தேவைப்பாடு தொடர்பில் இந்த அறிக்கையின் பரிந்துரையாக தெரிவிக்கப்பட்டுள்ளன.

உள்ளூர் சந்தையில் தரமான உற்பத்திப்பொருட்களின் விற்பனை தொடர்பாக இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் வகிபாகம்

இலங்கை நியமங்கள் நிறுவனம் ளுடுளு சின்னம் (டழபழ), இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் தரக் கட்டுப்பாடு, ஆய்வுகூட சேவைகளை வழங்குதல், இலங்கை நியமங்களின் தரப்படுத்தல், கைத்தொழில்துறை தரக் கட்டுப்பாட்டின் நியமப்படுத்தல் மற்றும் தரப்படுத்தல், நூலக சேவையின் பராமரிப்பு மற்றும் தரக் கட்டுப்பாட்டு சான்றிதழ் என்பவற்றை வழங்குகிறது. இலங்கை நியமங்கள் நிறுவனம் 1964 இன் 38 ஆம் இலக்க இலங்கை நியமங்கள் பணியக சட்டத்தின் கீழ் இலங்கை நியமங்கள் பணியகம் என்ற பெயரில் நிறுவப்பட்டது. 1984 இன் 06 ஆம் இலக்க இலங்கை நியமங்கள் நிறுவன சட்டம் இலங்கை நியமங்கள் பணியக சட்டத்தை நீக்கி இலங்கை நியமங்கள் நிறுவனத்தை நிறுவியது. இது இலங்கையின் நியமங்கள் மற்றும் தர முகாமைத்துவ நடைமுறைகளின் தரப்படுத்தலை சாத்தியமாக்குகின்றது. இந்தச்சேவைகளை வழங்குவதற்கும், சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்துகொள்வதற்கும் நிறுவனம் 12 உப கிளைகளாக பேணப்படுகின்றது. இப் பிரிவுகளில் உற்பத்திப் பொருள் சான்றிதழ் பிரிவு, முறைமைகள் சான்றிதழ் பிரிவு, சந்தைப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் பிரிவு, விஞ்ஞானவியல் தரப்படுத்தல் பிரிவு, பொறியியல் தரப்படுத்தல் பிரிவு, தர உறுதிப்பாட்டு பிரிவு, பயிற்சிப் பிரிவு, நிதிப் பிரிவு, ஆவணப்படுத்தல் மற்றும் தகவல் பிரிவு, நிர்வாகப் பிரிவு, ஆய்வுகூட பிரிவு, தகவல் தொழில்நுட்பப் பிரிவு மற்றும் உள்ளக கணக்காய்வு பிரிவு என்பன உள்ளடங்குகின்றன.

உற்பத்திப் பொருளொன்று சரியான அளவுகோல் அளவு மற்றும் சரியான அளவு சேர்க்கப்பட வேண்டும் என்பது சுகாதார பாதுகாப்பு மற்றும் சுகாதார நிலைமைக்கு மிகவும் முக்கியமானதாகும். பாதுகாப்பான மற்றும் சுகாதார பிரச்சனைகள் இல்லாத உற்பத்திப்பொருட்களை நுகரும் மக்கள் இருக்கும் நாட்டில் அபிவிருத்தி மிக உயர்ந்த மட்டத்தில் உள்ளது. இலங்கை நியமங்கள் சான்றிதழை வழங்குவதும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் தரத்தை பரீட்சித்து அது தொடர்பான தர அறிக்கையை சமர்ப்பிப்பதும் இந்த நிறுவனத்தின் முக்கிய பணிகளில் ஒன்றாகும்.

உற்பத்திப் பொருளொன்று சரியான அளவுகோல் அளவு மற்றும் சரியான அளவு சேர்க்கப்பட வேண்டும் என்பது சுகாதார பாதுகாப்பு மற்றும் சுகாதார நிலைமைக்கு மிகவும் முக்கியமானதாகும். பாதுகாப்பான மற்றும் சுகாதார பிரச்சனைகள் இல்லாத உற்பத்திப்பொருட்களை நுகரும் மக்கள் இருக்கும் நாட்டில் அபிவிருத்தி மிக உயர்ந்த மட்டத்தில் உள்ளது. அபிவிருத்தி அடைந்துவரும் நாடு என்ற வகையில், ஆரோக்கியமான உணவுப் பாவனையைக் கடைப்பிடிப்பதன் மூலம் அரசாங்க செலவினங்களைக் குறைக்கும் ஆற்றலையும்

இலங்கை கொண்டுள்ளது. அதற்காக, உள்ளூர் உற்பத்தியாளர்களை தொடர்ந்து ஊக்குவிக்க வேண்டும். இதில் இலங்கை நியமங்கள் நிறுவனம் ஆற்றக்கூடிய பங்கு மிகவும் முக்கியமானதாகும். இதற்கான ஏற்பாடுகள் 1984 இன் 06 ஆம் இலக்க இலங்கை நியமங்கள் நிறுவன சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. 2 எனினும் சட்டத்தின் ஏற்பாடுகளை அமுல்ப்படுத்துவதிலும், சட்டத்தில் கூறப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்துகொள்வதிலும் நியமங்கள் நிறுவனம் எவ்வாறு செயற்பட்டது என்பதை ஆராய்வதற்காக இச் செயலாற்றல் கணக்காய்வு நடாத்தப்பட்டுள்ளது.

மேற்கூறிய நோக்கங்களை நிறைவேற்றும் வகையில், கடந்த 2019, 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் நிறுவன செயற்பாட்டுச் செலவுகள் முறையே ரூபா 775 மில்லியன், ரூபா 889 மில்லியன் மற்றும் ரூபா808 மில்லியன் ஆகும்.

மேலும் 2021 ஆம் ஆண்டின் இறுதியில், இத நிறுவனத்தின் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு சேவையில் ஈடுபட்ட பதவியணியிடையே 132 பணியாளர்களும், பதவிநிலைத் தரமற்ற 102 பணியாளர்கள் மற்றும் 44 கனிஷ்ட மட்டத்தின் சேவையிலும் பணியமர்த்தப்பட்டனர்.

இந்த அறிக்கையில் அடையாளம் காணப்பட்ட அவதானிப்புகளில், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் பரிசோதனையின் போது ஆய்வு அறிக்கைகள் வெளியிடப்படுவதற்கு முன்னர் பொருட்கள் சந்தைக்கு வெளியிடப்பட்ட நிகழ்வுகள், தரநிலை சான்றிதழ்களை வழங்குவதில் உள்ள பலவீனங்கள், நிர்வாக பலவீனங்கள், ஆய்வக சோதனைகளை நடத்துவதில் தாமதம், சந்தை ஆய்வுகள் ஒரு குறைந்தபட்ச நிலை, மற்றும் தரநிலைகளின் பயன்பாடு பற்றிய விழிப்புணர்வு குறைவாக உள்ளது

வழிகாட்டுதல்களின் படி இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கான ஒத்தியல்பு தராதர சான்றிதழ் வழங்கும் உள்ளூர் அல்லது வெளிநாட்டு ஆராய்ச்சி நிறுவனங்களின் பதிவு மிகவும் குறைவாக உள்ளது, வழிகாட்டுதல்களின் மூன்றாவது வகைப்பாட்டின் படி, இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் மற்றும் தரநிலை நிறுவனங்கள் மாதிரி சோதனை இல்லாமல் அவற்றை விற்க முடியாது. பதிவுசெய்து இணக்கச் சான்றிதழ்களைப் பெற்றுள்ளனர். மேலும், தர நியமங்கள் நிறுவனத்தின் ஆய்வு அறிக்கைகள் கிடைக்கும் வரை, சம்பந்தப்பட்ட தயாரிப்புகளை சந்தைக்கு வெளியிட முடியாது, எனவே அவற்றை சரிபார்க்க வழிகாட்டுதல்கள் வெளியிடப்படவில்லை.

இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களுக்கு இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் (SLS) உற்பத்திப்பொருள் சான்றிதழை (SLS) பெற்றுக்கொள்வது கட்டாயமாகும், ஆனால் உயர்தர சுகாதாரமான உணவுப் பொருட்களை நாட்டிற்கு இறக்குமதி செய்வதற்காக இறக்குமதி செய்யப்படும் எந்தவொரு உணவுப் பொருளுக்கும் இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் (SLS) உற்பத்திப்பொருள் சான்றிதழ் (SLS) பெற்றுக்கொள்ளப்படுகின்றது. 2019 சனவரி 01 இல் இலங்கை நியமங்கள் நிறுவனத்தால் வழங்கப்பட்ட LT - PC - 01 உற்பத்திப்பொருள் சான்றிதழ் கட்டாய உற்பத்திப்பொருட்களின் பட்டியலின் பிரகாரம் கட்டாயமாக காணப்படாதமை அவதானிக்கப்பட்டது.

ஆய்வுகூட வசதிகள் தரநிலை நிறுவனத்திற்கு ஊருவாக்குதல் கட்டாயமா போதிலும், இவ்வாறான வசதிகளை உருவாக்குவதற்கு 2018 ஆம் ஆண்டளவில் அதற்காக ரூபா 169 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் குறித்த காணியின் உரிமை தீர்ப்பனவு செய்யப்படாத காரணத்தால் அவ்வாறான

வசதிகளை உருவாக்க முடியவில்லை. தீர்க்கப்படவில்லை. அதன்படி, ஆய்வக வசதிகள் இல்லாததால், ஆய்வக அறிக்கைகள் வழக்கத்திற்கு மாறாக தாமதமாகி வருவதால், அந்த அறிக்கைகள் இல்லாமல் பொருட்கள் சந்தைக்கு வெளியாகும் வாய்ப்பு ஏற்பட்டிருந்தது.

பொது பாதுகாப்பு மற்றும் தர உத்தரவாதம் (SLS சான்றிதழ்) தடைசெய்யப்பட்ட பொருட்களை அகற்றுதல் மற்றும் தடை செய்தல் பற்றிய உற்பத்திப்பொருள் விழிப்புணர்வு, சட்டத்தில் செயற்பாடுகள் காணப்பட்டாலும், சந்தையில் உயர்தர உற்பத்திப்பொருட்களை வழங்குவதற்கு வசதியாக இருந்தாலும் அத்தகைய முறைமை (செய்தித்தாள், விளம்பரம், இணையம், வானொலி, தொலைக்காட்சி விழிப்புணர்வு) இலங்கை நியமங்கள் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

மேலும், இலங்கை நியமங்கள் நிறுவனத்தால் வழங்கப்பட்ட 4100 CS (Ceylon Standard) மற்றும் SLS நியமங்கள் உள்ளன, மேலும் 2017, 2018 மற்றும் 2019 ஆகிய மூன்று வருடங்களுக்கான நியம விற்பனை மதிப்பீட்டின் போது வழங்கப்பட்ட நியமங்களில் 500 – 600 இற்கு இடையேயானவை பயன்பாட்டில் இல்லை என்பது கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது. ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் நியமங்கள் அமைப்பால் நிர்ணயிக்கப்பட்ட நியமங்கள், உழைப்பு மற்றும் கிரயத்தை பயன்படுத்தத் தவறியமையானது நியமமற்ற உற்பத்திப்பொருட்களை தடையின்றி சந்தையில் நுழைய அனுமதிக்கிற உற்பத்திப் பொருள் நியமங்களை ஒழுங்குபடுத்தாதை குறிக்கிறது. எரிவாயு, தேங்காய் எண்ணெய், பல்வேறு மின்சாதனங்கள், பால் பவுடர் போன்றன அத்தகைய உற்பத்திப் பொருட்களின் உதாரணங்களாகும்.

2019 சனவரி 1 முதல் செப்தெம்பர் 30 வரையான காலப்பகுதியில் இலங்கை நியமங்களுடன் இணங்காததன காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட 73 பொருட்களின் பாவனைக்கு அல்லது விற்பனைக்கு தடை செய்யப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக இலங்கை சுங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் போது 73 விடயங்களில் 49 விடயங்களுக்கு விசாரணை தொடங்கப்பட்டு 7 விடயங்கள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இரண்டு சந்தர்ப்பங்களில் மாத்திரமே மீள் ஏற்றுமதி செய்யப்பட்டதென அறிக்கையிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட அவதானிப்புகள் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளைக் குறைப்பதற்காக, இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் தயாரிப்புச் சான்றிதழின் சின்னத்தைப் பெறுவதன் முக்கியத்துவத்தைப் பற்றி உரிய தரப்பினருக்குத் தெரியப்படுத்துவதற்கும், இலச்சினை வழங்கும் முறையை மேலும் வலுப்படுத்துவதற்கும், ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதற்கும் தொடர்புடைய பிற நிறுவனங்களுடன், தயாரிப்பு சான்றிதழ் சின்னங்களை வழங்க, ஆய்வக சோதனைகள் தொடர்பான நிறுவன ரீதியாக தேவையான ஆதாரங்களை வழங்குதல் மற்றும் அதன் மூலம் அந்த செயல்முறைகளை விரைவுபடுத்துதல் தொடர்பான பரிந்துரைகள் இந்த அறிக்கையில் வழங்கப்பட்டுள்ளன.

அரச சார்பற்ற பாடசாலைகள் தொடர்பான ஒழுங்குபடுத்தல் நடைமுறைகள்

1931 ஆம் ஆண்டு சர்வஜன வாக்கெடுப்பு அதிகாரத்தினை பெற்றுக் கொடுத்ததன் பின்னர் கலாநிதி.சி.டபிள்யு.டபிள்யு.கன்னங்கர அவர்களின் தலைமைத்துவத்தில் இலவசக் கல்வி முறைமை ஒன்று தாபிக்கப்பட்டது. இதன்கீழ் அனைவருக்கும் கல்வியை பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கத்தினால் நாடு

முழுவதிலும் மத்திய மகா வித்தியாலயங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த சுதந்திரக் கல்வி முறைமை செயற்பட்டு வரும் காலத்தினுள் மிஷனரி பாடசாலைகள் மற்றும் ஒரு சில பௌத்த தனியார் பாடசாலைகளாக பணம் அறவிடும் பாடசாலைகள் பல 1960 இன் 05 ஆம் இலக்க துணைப் பாடங்கள் மற்றும் பயிற்சி கல்லூரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் 1961 இன் 08 ஆம் இலக்க துணைப் பாடங்கள் மற்றும் பயிற்சி கல்லூரிகள் (மேலதிக ஏற்பாடுகள்) அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

1961 இன் 08 ஆம் இலக்க துணை பாடசாலைகள் மற்றும் பயிற்சி கல்லூரி (மேலதிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 25 ஆவது பிரிவின் மூலம் கட்டாய கல்வி வயது எல்லை (5 - 14 வருடங்கள் வரையில்) கடக்கும் பிள்ளைகளுக்கு கல்வியினை பெற்றுக் கொடுப்பதற்காக பாடசாலைகள் ஆரம்பிப்பதற்கு தனியார் துறையினருக்கு முடியாது என்பதாக ஒழுங்கு விதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறான சட்ட ரீதியான நிலைமை காணப்பட்ட போதிலும் 1980 ஆம் ஆண்டளவில் இலங்கையில் வசிக்கும் வெளிநாட்டு மக்களின் பிள்ளைகளை இலக்காகக் கொண்டு சர்வதேச பாடசாலைகள் எனும் பெயரில் கல்வி நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் தற்காலத்தில் இலங்கை மாணவர்களுக்கும் குறிப்பிடத்தக்க அளவில் அந்தப் பாடசாலைகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பாடத் திட்டங்களில் கல்வி கற்று வருகின்றனர்.

ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் ஒப்பந்தத்தின் 29 ஆம் இலக்கத்தின் 2 ஆவது பந்தியின் பிரகாரம் 18 வயத்திற்கு குறைந்த பிள்ளைக்கு கல்வியை பெற்றுக் கொடுப்பதில் ஏற்றுக் கொள்ளக்கூடிய மூலப் பிரமாணங்களை அறிமுகப்படுத்தி இருத்தல் வேண்டும். அதே போன்று பிள்ளைகளுக்கு கல்வியை வழங்கும் நிறுவனத்தினால் அரசாங்கத்தின் மூலம் அறிமுகப்படுத்தியுள்ள மூலப்பிரமாணங்களுக்கு அமைய தமது நிறுவனங்களை நடாத்தி செல்லப்படுகின்றது என்பதற்கான உறுதிப்பாட்டினை பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

அதே போன்று 2030 ஆம் ஆண்டு நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் நோக்க இலக்கம் 4 க்கு அமைய முழுமையான, நியாயமான மற்றும் தரமான கல்விக்கான அதன் இலக்கு 4.1க்கு அமைய, ஆக்கபூர்வமான கற்றல் பெறுபேறுகளை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் அனைத்து பெண் பிள்ளைகள் மற்றும் ஆண் பிள்ளைகள் சுதந்திரமான, சமனான மற்றும் உயர் தரத்திலான ஆரம்ப நிலை மற்றும் இடைநிலை கல்வியினை பூர்த்தி செய்து உள்ளனர் என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இலங்கையின் பாடசாலை செல்லும் வயதில் உள்ள பிள்ளைகள் கல்விகற்கும் பாடசாலைக் கட்டமைப்பு தொடர்பான தகவல்கள் அட்டவணை 04 இல் தரப்பட்டுள்ளது

நிறுவனம்			நிறுவனங்களின் எண்ணிக்கை	மாணவர்களின் எண்ணிக்கை
(அ)	அரச பாடசாலைகள் (தேசிய மற்றும் மாகாண)		10,165	4,061,653
(ஆ)	அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள்		89	135,600
(இ)	சர்வதேச பாடசாலைகள்		391 (அண்ணளவாக)	139,727
(ஈ)	சமய பாடசாலைகள்			
	(i)	பிரிவென	801	68,319
	(ii)	சீலமாதா நிறுவனங்கள்	03	45
	(iii)	கத்தோலிக- தேவாலயங்கள்	04	16
	(iv)	இந்து – பூஜகர்களுக்கு கல்வி கற்பிக்கும்	03	40
	(v)	மதரஸா பாடசாலைகள் / அரபு பாடசாலைகள்	317 (முஸ்லீம் சமய அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை மட்டும். இதில் 32 செயற்படவில்லை என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.)	28,424

அட்டணை 04 - இலங்கையின் பாடசாலை செல்லும் வயதில் உள்ள பிள்ளைகள் கல்விகற்கும் பாடசாலைக் கட்டமைப்பு

இவ்வாறான நிலைமையின் கீழ் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள், சர்வதேச பாடசாலைகள் மற்றும் மதரஸா பாடசாலைகள் போன்ற பாடசாலைகள் ஒழுங்குறுத்தப்பட்டுள்ள முறைமையினை மதிபீடு செய்யும் நோக்கில் இந்த செயலாற்றல் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள் தொடர்பில் இங்கு கண்டறியப்பட்ட பிரதான அவதானிப்புகளிடையே கல்வி அமைச்சின் முகாமைத்துவம் மற்றும் தரங்கள் கிளைகளின் மூலம் அரசின் அனைத்து பாடசாலைகளினதும் கற்றல் நடவடிக்கைகள் கண்காணிப்பு செய்யப்பட்ட போதிலும், கல்வி அமைச்சின் விடய பரப்பிற்கு உட்படாதது என கூறப்படும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள் தொடர்பில் அவ்வாறான விரிவான கண்காணிப்பு இடம்பெறவில்லை என்பதும், கல்வி அமைச்சின் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளுக்காக சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டு இருந்த போதிலும் அந்த சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள காரணிகளை பின்பற்றாத பாடசாலைகள் காணப்படுகின்றன என்பதும் அவ்வாறான அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு பரீட்சிப்பு செய்வதற்காக போகும் போது தேவையான ஒத்துழைப்பு அந்தப் பாடசாலைகளில் கிடைக்கவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.

அதே போன்று கல்வி அமைச்சின் ஆரம்ப அனுமதியின்றி ஒரு சில தாய்ப் பாடசாலைகளில் கிளை பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு இருந்தமை, ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்கையில் பட்டதாரிகள் அல்லாத ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்தல், ஒழுக்காற்று நடவடிக்கைகளில் கல்வி அமைச்சின் பிரதிநிதித்துவம் இல்லாது பாடசாலையின் சமய பிரிவுகள் மூலம் மட்டும் அடிப்படை பரீட்சிப்பு மேற்கொள்ளுதல் போன்ற காரணிகள் அவதானிக்கப்பட்டன.

இந்தக் பாடசாலைகளில் காணப்படும் பௌதீக மற்றும் மனித வளம் போன்று வழங்கப்படும் சேவைகளுக்கு ஏற்ப பாடசாலைகள் தரப்படுத்தப்பட்டு அதற்கமைய அறவிடப்பட வேண்டிய ஆகக் கூடிய மற்றும் ஆகக் குறைந்த கட்டணங்களின் வீச்சு தொடர்பிலான எல்லைகள் கல்வி அமைச்சினால் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஒரு சில அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு அரசாங்கத்தினால் சீருடை, பாடப்புத்தகங்கள் மற்றும் ஆசிரியர் சம்பளம் போன்றவற்றிற்கான செலவினை ஏற்றிருந்த போதிலும், அந்த பாடசாலைகளின் முகாமைத்துவத்தின் தற்றுணிவின் அடிப்படையில் பாடசாலை கட்டணங்கள் உள்ளிட்ட வேறு கட்டணங்கள் அறவிடப்படுகின்றன.

சர்வதேச பாடசாலைகள் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட பிரதான அவதானிப்புகளில் இடையே கல்வி அமைச்சில் பதிவு செய்தல் அல்லது ஏதேனும் முறையில் ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள் இந்த பாடசாலைகள் தொடர்பில் இடம்பெறவில்லை என்பதை காணமுடிகிறது. ஆயினும் நிறுவனங்கள் பதிவு செய்தல் சட்டம் / வியாபார பெயர் பதிவு செய்யும் கட்டளைச் சட்டத்தின் கீழ் வியாபார நிறுவனமாக பதிவு செய்யப்படும் இந்தப் பாடசாலைகளில் காணப்படும் பௌதீக வளங்களின் குறைபாடு, ஆசிரியர்களின் தகைமைகள் மற்றும் கற்பித்தல் முறை தொடர்பான சிக்கல்கள், கட்டணம் அறவிடப்படுவதில் உள்ள வேறுபாடுகள் உள்ளிட்ட ஏனைய சிக்கல்கள் தொடர்பில் தொடர்ந்தும் பல்வேறு மக்கள் பிரதிநிதிகளினால் தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் நாட்டில் ஒரு சில பிரபலமானது என ஒத்துக்கொள்ளப்பட்ட, அதிக பெற்றோர்களின் கவனத்தை ஈர்த்த சர்வதேச பாடசாலைகளில் ஆசிரியர்கள் சரியான முறையில் கற்பித்தல் மேற்கொள்ளாமை, தொடர்ந்தும் ஆசிரியர்களை மாற்றுதல், தகைமை இல்லாத ஆசிரியர்கள் கற்பித்தல், விடய பரப்புகளை பூர்த்தி செய்யாமை, பிள்ளைகளின் மனநிலையை அறிந்து கொள்ளாது ஆசிரியர்கள் கற்பித்தல் முறைகளை பயன்படுத்துதல், நியாயமற்ற முறையில் கட்டணங்கள் அறவிடல், பிள்ளைகளுக்கு பாலியல் துஷ்பிரயோகங்கள் எற்படல் போன்ற சந்தர்ப்பங்களில் கல்வி அமைச்சின் தலையீடு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன், அது ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை இங்கு தெளிவாக காணமுடிகிறது.

சர்வதேச பாடசாலைகள் தொடர்பில் எழுந்துள்ள பல்வேறு சிக்கல் நிறைந்த சந்தர்ப்பங்களில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தரப்பினர்களினால் பல்வேறு காரணிகள் கல்வி அமைச்சிடம் விசாரணை செய்யப்பட்டுள்ளது. அதன் மூலம் அறியப்படுவது சர்வதேச பாடசாலைகளை தாபித்தல், நடாத்தி செல்லுதல் தொடர்பில் தீர்மானிக்கப்பட்ட அதிகாரம் கல்வி அமைச்சு என்பது பெரும்பாலான மக்களின் நம்பிக்கையாகும். ஆயினும் இந்த அனைத்து விசாரணைகளிலும் கல்வி அமைச்சு தமது தலையீடு இல்லை என்பதனை அந்தந்த நிறுவனங்களுக்கு பதிலாக பெற்றுக் கொடுத்து இருந்தபோதிலும் இந்த தீரமானிக்கப்பட்ட செயற்பாடு கல்வி அமைச்சுக்கு உரித்தாக வேண்டியது என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய காரணியாகும்.

முஸ்லீம் சமய அலுவல்கள்திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை 317 மட்டுமே ஆன போதிலும் 2021 செப்டெம்பர் 06 ஆம் திகதி வரையிலும் 32 பாடசாலைகள் செயற்படவில்லை என்பது அந்த திணைக்களத்தினால் கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதிலும்

அவ்வாறான 1700 இற்கு கிட்டிய எண்ணிக்கையிலான பாடசாலைகள் செயற்பட்டு வருகின்றது என்பதும் இது தொடர்பான தரவுகள் இல்லாமை மற்றும் எந்த ஒரு அரச நிறுவனத்தினாலும் இந்த பாடசாலைகளின் கண்காணிப்பு அல்லது ஒழுங்குறுத்தல் இடம்பெறவில்லை என்பதை குறிப்பிட முடியும். இந்தப் பிள்ளைகளுக்கு நியாயமான கல்வியை பெற்றுக் கொடுக்கும் அரச பாடசாலைகள் குறித்த மாவட்டங்களில் அமைந்திருந்த போதிலும் இவ்வாறான பாடசாலைகளுக்கு கட்டாயக் கல்வியை பயில வேண்டிய வயதுப் பிள்ளைகளை ஈடுபடுத்துதல் தொடர்பில் ஒழுங்குபடுத்துவதற்கு கல்வி அமைச்சு தலையீடு செய்திருக்கவில்லை.

அத்தோடு இந்த பாடசாலைகள் தொடர்பில் சர்வதேச ரீதியில் அல்லது உள்நாட்டு ரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடிய பாடத் திட்டங்களின் அடிப்படையில் கற்பித்தல் நடவடிக்கைகளின் கண்காணிப்பு இடம்பெறாமை, இந்தப் பாடசாலைகளின் மாணவரிகளின் எண்ணிக்கை, கற்பிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் தகைமைகள் மற்றும் இந்தப் பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு அடிப்படை வசதிகள் உள்ளனவா என்பது தொடர்பிலும், இந்தப் பாடசாலைகளின் நிதி நிலைமை என்ன என்பது மற்றும் நிதியினைப் பெற்றுக் கொள்ளும் மூலாதாரம் என்ன என்பது தொடர்பிலும், இந்த பாடசாலைகள் தொடர்பில் எந்த ஒரு அரச நிறுவனத்தினதும் ஒழுங்குறுத்தல் இடம்பெறவில்லை என்பதும் 2020 பெப்ரவரி 19 ஆம் திகதி தேசிய பாதுகாப்பு தொடர்பான துறை குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

கட்டாய கல்வியை கற்க வேண்டிய வயதில் உள்ள அனைத்து பிள்ளைகளும் தேசிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரத்துடனான கல்வியை பெற்றுக கொடுப்பதற்கு தற்போதுள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதும், உலகளாவிய தேவைப்பாடுகளுக்கு பொருத்தமான அத்தகைய கல்வி முறையின் தேவை தற்போது ஏற்பட்டுள்ளதால் அவ்வாறான தேவைகளுக்கு பொருத்தமான கல்வியை பெற்றுக்கொடுக்கும் பெயரில் வியாபார நிலையங்கள் உருவாகுவதை தடுப்பதற்கு அனைத்து கல்வி நிறுவனங்களையும் ஒழுங்குறுத்தும் மத்திய நிலையமாக கல்வி அமைச்சு நியமிக்கப்பட வேண்டும் என்பதும் இந்த கணக்காய்வில் பரிந்துரை செய்யப்படுகின்றது.

இலங்கையில் தொற்றாத நாட்பட்ட நோய்களைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் செயல்பாடுகளை ஒழுங்குறுத்தல்

இலங்கையினுள் தொற்றாத நோய்களின் காரணமாக நபர்கள் இயலாமைக்கு உட்படுதல், மரணித்தல் மற்றும் அதன் மூலம் சமூக மற்றும் பொருளாதார ரீதியில் ஏற்படுகின்ற பாதிப்புகள் தற்காலம் வரையிலும் பாரிய சிக்கலுக்கு உரியதாகும்.

தொற்றாத நோய்கள் தொடர்பான தேசிய கொள்கையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இதய நோய்கள், சுவாச நோய்கள் மற்றும் நீரிழிவு தொடர்பில் சுகாதார அமைச்சின் தொற்றாத நோய்கள் பிரிவின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் தொற்றா நோய்களை தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான தேசிய பல்தரப்பு செயல் திட்டதின் (2016 - 2020) செயற்பாடு தொடர்பில் எமது விடய பரப்பின் கீழ் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. தொற்றாத நோய்களைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான நோக்கங்கள் பரந்த அளவிலான தரப்பினரின் பங்களிப்புடன் வெற்றி

கொள்ளப்பட வேண்டியதுடன் சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள பல்வேறு அலகுகள், மாகாண மற்றும் மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம், கல்வி, சுற்றாடல், விவசாயம், விளையாட்டு, மாகாணசபை உள்ளிட்ட பல்வேறு அமைச்சுகள் மற்றும் மதுவரித் திணைக்களம், புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபை போன்ற பல்வேறு நிறுவனங்கள் இந்த பல்வேறு தரப்பட்ட செயல் திட்டத்தில் அடங்கியுள்ள செயல்களை நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பு அளிக்கப்பட்ட தரப்பினர் ஆகும். எமது கணக்காய்வின் நோக்கமானது தொற்றா நோய்களை தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தவதற்கு உரிய நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல் மற்றும் அதற்கு ஏற்பட்டடுள்ள தடைகள் என்ன என்பதனை அறிந்து கொள்வதாகும்.

இந்த கணக்காய்வின் பிரதான அவதானிப்புகளில், புகைத்தலுக்கு உரித்தாகும் புகையிலை பாவனை தொடர்பான தேசிய கொள்கை ஒன்றினை தயாரித்து இருக்காமை, அதிகளவு விற்பனையை கொண்டது தனி சிகரட் என்பதனால் அதன் விற்பனையை குறைத்தல் தொடர்பில் சட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு இருக்காமை, புகையிலை பாவனை பரம்பலைக் குறைப்பதற்காக புகைப்பதற்கான சுதந்திர வலயங்கள் உருவாக்கப்பட்டிருந்தாலும் அவை தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றமை தொடர்பில் தொடர்பாடல் சிக்கல் நிலவுகின்றமை, பொது சுகாதார பரிசோதகர்களின் வேலைச் சுமை காரணமாக கண்காணிப்பு பலவீனம் அடைதல், புகையிலை நிறுவனங்களின் தலையீடு போன்ற சிக்கல்கள் அவதானிக்கப்பட்டன. அதே போன்று புகையிலை பாவனையை குறைப்பதற்காக குறிப்பிடப்பட்ட குழுவினருக்கு பயிற்சி வேலைத் திட்டங்கள் போதுமான அளவில் நடாத்தப்பட்டு இருக்காமை, கல்வி நிறுவனங்களின் அருகில் புகையிலை விற்பனை செய்யும் விற்பனை நிலையங்கள் காணப்படுதல், புகையிலை இறக்குமதி அதிகரித்தல் என்பவற்றைத் தெளிவாகக் காணக் கூடியதாக உள்ளது. புகையிலை உற்பத்திப் பொருட்களின் பொதிகளில் படங்களைக் கொண்ட எச்சரிக்கைகளை உள்ளடக்குவது தொடர்பிலான சிக்கல்கள் மற்றும் புகையிலைக்கான வரி அறவிடுதல் தொடர்பிலான சிக்கல்கள் அவதானிக்கப்பட்டன. மேலும், மது கட்டுப்பாடு குறைவடைவதற்குப் பதிலாக அவ்றின் பயன்பாடு அதிகரித்திருந்தது.

ஆரோக்கியமான உணவுகளை ஊக்குவித்தல் தொடர்பில் மரக்கறி மற்றும் பழவகை உற்பத்தியின் போது முறையற்ற வகையில் பூச்சிக் கொல்லிகள் மற்றும் உர வகைகளின் பாவனை தொடர்பில் முறையான மேற்பார்வை இல்லாமை, போக்குவரத்து மற்றும் பொதியிடல் முறைமைகளில் உள்ள பலவீனங்கள் காரணமாக அறுவடைக்குப் பின்னரான சேதங்கள் ஏற்படுதல், விவசாய பயிர்களுக்கு ஏற்படும் நோய்கள் தொடர்பில் மாதிரி பரீட்சிப்பு செய்வதற்காக பிரதேச மட்டத்தில் ஆய்வுகூட வசதிகள் இல்லாமை, விவசாய முறைகளின் கீழ் (GAP) பெற்றுக் கொள்ளப்பட்ட அறுவடையினை விற்பனை செய்வதற்கு போதுமான அளவில் சந்தை வசதிகள் உருவாக்கப்பட்டு இருக்காமை போன்ற நிலைமைகள் அவதானிக்கப்பட்டன. உணவு வழிகாட்டல்களின் பிரகாரம் நபர் ஒருவரின் நாளாந்த குறைந்தபட்ச நுகர்வு குறைந்த மட்டத்தில் காணப்படுதல் மற்றும் உணவு மற்றும் குடிபான வகைகள்

தொடர்பிலான சந்தை விளம்பரங்கள் மற்றும் முறைப்பாடுகளை ஒழுங்குறுத்துவதற்கான பொறிமுறை ஒன்று செயற்படாமை, உணவுகளை பெயரிடல் மற்றும் விளம்பரப்படுத்தல் கட்டளைகளில் காலத்திற்கு காலம் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு இருக்காமை, உணவு மற்றும் குடியான வகைகள் தொடர்பிலான விளம்பர நடவடிக்கைகளுக்கு பாடசாலை செல்லும் வயதில் உள்ள பிள்ளைகளை ஈடுபடுத்தல், உணவுகளில் சீனி, உப்பு மற்றும் கொழுப்பு போன்றவற்றிற்கான நிறக்குறியீடு இடும் கட்டளை அறிமுகப்படுத்தப்பட்டு இருந்த போதிலும் அந்தக் கட்டளையை நடைமுறைப்படுத்தும் திகதி தொடர்ந்தும் நீடிக்கப்பட்டு இருந்தமை, பாடசாலை மாணவர்களின் உணவு முறை தொடர்பில் பாடசாலைக்கு உள்ளேயும் அத்துடன் வெளியேயும் உள்ள காரணிகளின் கட்டுப்பாடு தொடர்பான சிக்கல்கள் அத்துடன் பாடசாலை உடற் பயிற்சி தொடர்பான வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டு இற்றைப்படுத்துதல் மற்றும் பாடசாலை பிள்ளைகள் உடல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றமையை உறுதிப்படுத்திக் கொள்ளுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை என்பன அவதானிக்கப்பட்டது.

வளி மாசடைதல் தொடர்பில் காற்றின் தர நிலையை தீர்மானிப்பதற்காக காணப்படும் தரவுகள் மட்டுப்படுத்தப்பட்டள்ளமை, உட்புற வாயுவின் தரத்தினை அபிவிருத்தி செய்வதற்காக காற்றின் தரம் தொடர்பான வழிகாட்டல் தயாரித்தல் பூர்த்தி செய்யப்பட்டிருக்காமை மற்றும் அதற்கமைய பாடசாலைகள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள் போன்ற இடங்களில் காணப்பட வேண்டிய வளியின் நிலைமை தொடர்பில் குறித்த தரப்பினர் தெளிவுபடுத்தப்பட்டிருக்காமை போன்ற நிலைமைகள் அவதானிக்கப்பட்டன. புகையிலை மற்றும் மதுபான பாவனை, ஆரோக்கியமற்ற உணவு நுகர்வு, போதிய அளவு உடற்பயிற்சி இல்லாமை போன்ற ஆபத்தான காரணிகள் தொடர்பில் மக்களை தெளிவுபடுத்துவதற்கான பொறுப்பு வெகுஜன ஊடக அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அந்த அமைச்சு அது தொடர்பிலான விழிப்புணர்வைப் பெற்றிருக்காத காரணத்தால் தெளிவுபடுத்தல் செயல்பாடுகள் போதிய அளவில் இடம்பெற்றிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

நோயினை முன்கூட்டியே கண்டறிதல் மற்றும் முகாமைத்துவம் தொடர்பில் அதற்கான அடிப்படை மட்ட பங்களிப்பினை வழங்கும் சுகவாழ்வு மத்திய நிலையங்களின் பதவி அணியினரில் குறைபாடுகள் நிலவுதல், சுற்றறிக்கைகளில் காணப்படும் தேவைப்பாடுகளின் பிரகாரம் ஒரு சில சுகவாழ்வு மத்திய நிலையங்களில் நடத்தப்பட வேண்டிய நாட்கள் தொடர்பில் செயன்முன்னேற்றம் பெற்றுக்கொள்ளப்பட்டிராமை, சில சுவதிவி நிலையங்களுக்காக இரத்தத்தில் உள்ள கொழுப்பின் அளவை பரிசோதிப்பதற்கான வசதிகள் இல்லாதிருந்தமை, இரத்தத்தில் உள்ள சீனியின் மட்டத்தினை பரிசோதிப்பதற்காக உரிய வசதிகள் இல்லாதிருந்தமை, இரத்தத்தில் உள்ள சீனியின் மட்டத்தினை பரிசோதிப்பதற்கான க்ளோகோமீட்டர் பட்டிகள் (Glucometer Strips) இல்லாது ரத்தத்தில் உள்ள சீனியின் மட்டத்தினை பரிசோதித்தல் நிறுத்தப்பட்டமை,ஏனைய பௌதீக வழங்கள் போதிய அளவில் இல்லாதிருந்தமை மற்றும் சுவதிவி நிலையங்கள் தொடர்பில் மக்களின் போதிய தெளிவு காணப்படாமை போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

சுகாதார புள்ளிவிபரத் தரவுகளின் (2018) பிரகாரம் இதய நோயானது இலங்கையில் மரணங்களுக்கு பிரதான காரணமாக உள்ளது. அதற்கமைய ஆய்வின்போது கவனத்தில் கொள்ளப்பட்ட கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களின் மொத்த சனத்தொகையுடன் ஒப்பிடுகையில் வைத்தியசாலை வசதிகள் தொடர்பில் சிக்கல் மற்றும் இதய நோய் வைத்திய நிபுணர்களுக்கு தேவையான வசதிகள் வைத்தியசாலைகளில் இல்லாமையால் தேசிய வைத்தியசாலைகளில் நிலவும் அதிக நெருக்கடி மற்றும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தீவர சிகிச்சைப் பிரிவு மற்றும் கிளினிக் மற்றும் அறுவை சிகிச்சை கூடங்களில் காணப்படும் குறைபாடுகள் இங்கு தெளிவாக தெரிந்ததுடன் காத்திருப்போர் பட்டியலில் பாரிய எண்ணிக்கையில் நோயளர்கள் இருக்கின்றமையும் இங்கு அடிப்படை பிரச்சனையாக உள்ளது.

2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இதய நோயாளிகளில் 10மூ பேர் இதய செயலிழப்பு காரணமாக இறந்துள்ளனர். வடிகுழாய் வசதிகள் போதுமானதாக இல்லை என்பதை அடிப்படையாக பாதிக்கும் காரணியாக அடையாளம் காண முடியும்.

உரு- அறுவைச்சிகிச்சை பொருட்கள் பாதுகாப்பற்ற முறையில் களஞ்சியப்படுதப்பட்டிருந்தமை

உரு- அறுவைச்சிகிச்சை பொருட்கள் பாதுகாப்பற்ற முறையில் களஞ்சியப்படுதப்பட்டிருந்தமை

உரு- அறுவைச்சிகிச்சை பொருட்கள் பாதுகாப்பற்ற முறையில் களஞ்சியப்படுதப்பட்டிருந்தமை

கொழும்பு பொது வைத்தியசாலை தவிர்ந்த மேல் மாகாணத்தில் உள்ள ஏனைய போதனா வைத்தியசாலைகளும் போதிய வடிகுழாய் வசதிகள் இல்லாத காரணத்தினால் இருதய நோயாளர்களை கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு தொடர்ந்து ஏற்றிச் செல்ல வேண்டியிருந்தது, இது நோயாளிகளின் தரப்பில் ஆபத்தான சூழ்நிலையாக இருந்தது.

உரு- 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தெறிகு கொழும்பு போதனா வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டவாறு உள்ள இருதய வடிகுழாய் அறுவை சிகிச்சைக்கூடம்

உரு- 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தெறிகு கொழும்பு போதனா வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டவாறு உள்ள இருதய வடிகுழாய் அறுவை சிகிச்சைக்கூடம்

உரு- 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தெறிகு கொழும்பு போதனா வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டவாறு உள்ள இருதய வடிகுழாய் அறுவை சிகிச்சைக்கூடம்

நாள்பட்ட சுவாச நோயாளிகளுக்கு சுவாச நோய்கள், சுவாச நோய் கண்டறிதல் மற்றும் மதிப்பீட்டிற்கான போதிய உபகரணங்கள் இல்லாதது, சுவாச நோய் முகாமைத்துவத்திற்கு தேவையான சில மருந்துகளின் பற்றாக்குறை, அத்துடன் சில மருந்துகளின் அதிகப்படியான அளவு, நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய்களுக்கு சமூகஞ்சார் வலி நிவாரண பிணியாய்வுகள் நிறுவப்பட்டிராமை, பிணியாய்வுகளுக்கு போதிய அளவிலான பௌதீக வசதிகள் இல்லாதிருந்தமை போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

தொற்றாத நோய்கள் தொடர்பான தேசிய பல்தரப்பு திட்டத்தினை (2016 - 2020) நடைமுறையில் ஈடுபடுத்தும் நோக்கில் தேவையான வசதிகளை ஏற்படுத்துதல், முன்னேற்ற மீளாய்வு, தேவையான தொடர்புகள் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள் போன்ற செயல்கள் தொற்றாத நோய் தொடர்பான தேசிய சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அதன்

செயற்பாடுகள் தொடர்பில் குறித்த தரப்பினரை தொடர்பு கொள்வதில் சிக்கல்கள் அவதானிக்கப்பட்டது. அங்கு 2016 ஆம் ஆண்டினை அடிப்படையாகக் கொண்ட தரவுகளுக்கு அமைய அகால மரணங்கள் 2020 ஆம் ஆண்டு வரையில் 10மூ இனால் குறைப்பதற்கும் மற்றும் 2030 ஆம் ஆண்டளவில் நோய்களினால் ஏற்படும் மரணங்களுக்கு சிகிச்சை மற்றும் தடுக்கும் முறைமைகள் மூலம் மூன்றில் ஒன்றாக குறைத்துக் கொள்வது இலக்காக கொள்ளப்பட்ட போதிலும் மரணிக்கும் வயது பகுப்பாய்வுக்காக தகவல் ஒழுங்கமைப்பு தயாரிக்கப்பட்டு இருக்காததால் அதனை அளவிட முடியாது உள்ளமை, உள்ளக நோயளர்கள் மற்றும் மரண அறிக்கை (ஐஆஆசு) மூலம் அரச வைத்தியசாலைகளில் நிகழும் மரணம் தொடர்பான சரியான தரவுகள் உட்படுத்தப்படாமை போன்ற காரணிகளும் அதனுள் அடங்கும்.

மேலே கூறப்பட்ட நிலைமைகளுக்கான தீர்வாக ஆரோக்கியமான உணவு நுகர்வினை முன்னேற்றுவதற்கு தேவையான வழிவகைகளை மேற்கொள்ளல், புகையிலை மற்றும் மதுபான பாவனையில் உள்ள பாதாகமான விளைவுகள் தொடர்பில் பாடசாலை மாணவர்கள் இளைஞர் சமுதாயம் உள்ளிட்ட மக்களுக்கு விழப்புணர்வை ஏற்படுத்துதல், ஆரோக்கியமான உணவு நுகர்வினை ஊக்குப்படுத்துவதற்காக நிவாரணம் வழங்குதல், புகையிலை மற்றும் மதுபான பாவனையினை ஊக்கப்படுத்தாது இருப்பதற்காக வரியினை அதிகரித்தல், பாடடசாலை பிள்ளைகள் உள்ளிட்ட மக்களை உடற் பயிற்சி செய்தல் தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் உட்புற மற்றும் வெளிப்புற வளி மாசடைவதைக் குறைப்பதற்கு தேவையான வழிவகைகளை மேற்கொள்ளுதல், சுகவாழ்வு மத்திய நிலையங்களில் சேவையினை மேலும் உற்பத்தித் திறனாக நடாத்திச் செல்வதற்காக அவற்றிற்குத் தேவையான பரிசோதனை வசதிகள் மற்றும் பரிசோதனை பொருட்கள் தட்டுப்பாடின்றி பெற்றுக் கொடுப்பதற்கு பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன. இதய நோய் அலகுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பில் கொழும்பு தேசிய வைத்தியசாலை மற்றும் கராப்பிடிய போதனா வைத்தியசாலையில் இதய நோய் சிகிச்சைக்காக காணப்பட்ட நீண்ட காத்திருப்பு பட்டியலை குறைப்பதற்காக விரைவில் அதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல் மற்றும் சுவாச நோய் மற்றும் நீரிழிவு நோய்களுக்கான சிகிச்சை சேவைகள் மற்றும் வசதிகளை அபிவிருத்தி செய்தல் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

ஒழுங்குறுத்தல் செயல்பாடுகள் தொடர்பாக செய்யப்பட்ட உரிய முன்னேற்ற மீளாய்வு கூட்டத்திற்கு அனைத்து தரப்பினரினதும் பங்களிப்பினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல், குறித்த காலத்திற்கு தொடரந்து கூட்டங்களை நடாத்துதல், இலக்கினை விட்டு விலகி செல்லுமாயின் அவற்றை எதிர்பார்த்த இலக்கினை நோக்கி ஈடுபடுவதற்கு தேவையான வழிவகைகளை ேற்கொள்ளுதல், சுகாதார தரவு ஒழுங்கமைபிற்கு அனைத்து வைத்தியசாலைகளிலும் இருந்து தரவுகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் குறித்த வசதிகள் இல்லாத வைத்தியசாலைகளுக்கும் தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், கிளினிக் கணக்காய்வினை ஆரம்பித்தல் போன்ற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.

ஹம்பாந்தோட்டை, அநுராதபுரம், வவுனியா மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் கணிய வளங்கள் (கருங்கல்) அகழ்விற்காக அரச காணியை குத்தகைக்கு வழங்குதல், நிர்வகித்தல் மற்றும் அரசிறை அறவிடல் தொடர்பான செயலாற்றல் அறிக்கை

தற்போதய துரித பௌதீக அபிவிருத்தியுடன் நிர்மாணப் பொருட்களுக்கு சந்தையில் பாரியளவு கேள்வியொன்று காணப்படுகின்றது. நிர்மாணப் பொருளொன்றான கருங்கல்லிற்காக இங்கு முன்னுரிமையான கேள்வியொன்று காணப்படுகின்றது. கணியப் வளமொன்றான கருங்கல் மட்டுப்படுத்தப்பட்ட வளமொன்றாக இனங் காணப்பட்டுள்ளதுடன், இக்கணிய வளத்தின் உரித்து, கட்டுப்பாடு மற்றும் அதிகாரம் தொடர்பாக 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கம் மற்றும் கணிய வளங்கள் சட்டம் மற்றும் 2009 இன் 66 ஆம் இலக்க திருத்த சட்டத்தின் மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அரச காணிகளில் கணிய வளங்கள் அகழ்வு தொடர்பாக உரித்தாகும் சட்ட விதிகள், கட்டளைச் சட்டங்களாக 1907 இன் 16 ஆம் இலக்க வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் (451 ஆம் அதிகாரம்) 6,7,8, 20 மற்றும் 78 ஆம் பிரிவுகளும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1979 திசெம்பர் 26 ஆந் திகதிய 68/14 ஆம் இலக்க (அதிவிசேட) வர்த்தமானி, 2009 மே 06 ஆந் திகதிய 1600/18 ஆம் இலக்க (அதிவிசேட) வர்த்தமானி, 1947 இன் 08 ஆம் இலக்க அரசின் காணி கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள், 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம், 2001 ஆகஸ்ட் 10 ஆம் திகதிய 5/2001 ஆம் இலக்க வன வளங்கள் மற்றும் சுற்றாடல் அமைச்சின் சுற்றறிக்கை இனங்காணப்பட்டன. மேலே குறிப்பிடப்பட்ட சட்டங்கள், விதிகள், ஏற்பாடுகள் என்பவற்றை அடிப்படையாக கொண்டு கணிப் பொருட்கள் அகழ்வு தொடர்பாக அனுமதிப்பத்திரங்களை வழங்கும் அதிகாரியான புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன் அதற்காக தேவையான பரிந்துரை தொல்பொருளியல் திணைக்களம், நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை போன்ற நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்றன. பிரதேச செயலகத்தினால் நிர்வகிக்கப்படும் அரசின் காணி குத்தகைக்கு வழங்குதல் செயற்பாட்டின் போது காணி ஆணையாளர் நாயகம் மற்றும் மாகாண காணி ஆணையாளர் உட்பட பிரதேச செயலாளர்களும் தொடர்புபடுகின்றனர். கணிய வள அகழ்விற்காக வெடி பொருட்களை வழங்குதல், பாதுகாப்பு அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ் மாவட்ட செயலாளரின் கண்காணிப்பின் மூலம் வெடிப்பொருட்கள் கட்டுப்பாட்டாளர் மூலம் பொறுப்பு வகிக்கப்படுகின்றது.

மேற்குறிப்பிடப்பட்ட விதிமுறைகளுக்குட்பட்ட வகையில் செயற்படுத்துவதற்கும் அதற்கு இணையாக நாட்டின் நிர்மாணத்துறையின் வளர்ச்சியை எதிர்பார்க்க வேண்டிய போதிலும்,இதன் மூலமாக அரச வருமானத்தில் பெருமளவு இழப்பு ஏற்படும் அபாய நிலைமையையும், குறித்த விதிமுறைகளுக்கு மாற்றமாக செயல்படும் சந்தர்ப்பங்களும் அதிகம் இருப்பதனாலும் சுற்றாடல்சார் பிரச்சினைகளை காரணமாக இலங்கை அதிகம் கருங்கல் அகழ்ந்தெடுக்கப்படும இடங்களாக அடையாளங் காணப்பட்ட அம்பாந்தோட்டை, அநுராதபுரம், குருநாகல் மற்றும் வவுனியா மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்டு குறித்த இந்த செயலாற்றுகை கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

கைத்தொழில் அகழ்வு அனுமதிப்பத்திரமொன்று வழங்கும் போது காணியில் அகழ்விற்காக அங்கீகாரம் வழங்கப்பட்ட பிரதேசத்தின் அமைவிடத்தின் பிரகாரம் உப கோட்டின் பிரகாரம் எல்லை கோட்டின் ஒவ்வொரு வளையுமிடத்தில் எல்லை தூணொன்று இடப்பட வேண்டிய போதிலும், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் இரண்டு நிகழ்வுகளில், எல்லைப் பதவிகளைப் பயன்படுத்தாதவர்களின் சதவீதம் 78 மற்றும் 43 ஆகவும், அனுராதபுரம் மாவட்டத்தின் 6 பிரதேச செயலகப் பிரிவுகளில், இந்த சதவீதம் 20 சதவீதம் மற்றும் 0 சதவீதமாக இருந்தது, மேலும் 7 வழக்குகள் தொடர்பாக வவுனியா மாவட்டத்தில் 80 வீதம் தொடக்கம் 45 வீதம் வரையில் வீதம் காணப்பட்டது.

அகழ்வாராய்ச்சி நடவடிக்கைகளுக்குத் தேவையான அனுமதி.ஃபரிந்துரைகளின் செல்லுபடியாகும் காலம் முடிவதற்குள் உரிமம் புதுப்பித்தல் மற்றும் புதிய உரிமத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும் என்றாலும், தொழிற்சாலை சுரங்க அனுமதி, தொல்லியல் போன்ற உரிமங்களின் செல்லுபடியாகும் காலத்திற்குப் பிறகு அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சிபாரிசு, வெடிமருந்து அனுமதிப்பத்திரம் மற்றும் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் காலாவதியானது அனுராதபுரம் மாவட்டத்தின் 03 பிரதேச செயலகப் பிரிவுகளில் 03 வழக்குகள் அவதானிக்கப்பட்டதுடன், அனுமதிப்பத்திரம் இல்லாத கிரானைட் வேலைத் தளங்கள் தொடர்பில் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் விசேட கவனம் செலுத்தவில்லை என மேலும் அவதானிக்கப்பட்டது. புதுப்பிக்கப்பட்டது.

புகைப்படம்– நாச்சதூவ பி.செ.அலுவலகத்தில் அனுமதிப்பத்திரம் காலாவதியான போதிலும், தொடர்ந்து அகழ்வுகள் இடம்பெறல்

புகைப்படம் – நொச்சியாகம பி.செ.அலுவலகத்தில் அனுமதிப்பத்திரம் காலாவதியான போதிலும், தொடர்ந்து அகழ்வுகள் இடம்பெறல்

அகழ்வுகளின் போது அரசிறையை அறவீடு செய்யும் போது அகழப்பட்ட கருங்கல்லின் அளவினை இனங்காண ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அந்த கட்டளைச் சட்டத்தின் 196.1(vi) பிரிவின் பிரகாரம் வர்த்தக செயற்பாடுகளுக்காக அரசின் காணிகளை குத்தகைக்கு வழங்கும் போது காணியின் தற்போதைய சந்தை பெறுமதியில் 04 சதவீதம் குத்தகை வாடகையாக அறவிடப்பட வேண்டிய போதிலும் 07 பிரதேச செயலகங்களுக்குரிய காணிகளில் நடாத்திச் செல்லப்படுகின்ற 23 கருங்கல் வேலைத்தளங்களில் இருந்து அபிவிருத்தி செய்யப ்படாத பெறுமதியில் 04 சதவீதம் ஆன போதிலும்,

என்ற வகையில் ஆகும். அதன் பிரகாரம் வருடாந்த குத்தகை வாடகையாக அரசிற்கு கிடைக்க வேண்டிய வருமானம் குறைத்து அறவிடப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இவ்வாறு அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியில் 04 சதவீதம் பல்வேறு அடிப்படைகளின் கீழ் சந்தை மதிப்பிற்குக் குறைவான நிலத்தின் மதிப்பீட்டில் அரசிறை குறைவாக வசூலிக்கப்பட்டுள்ளது. இதன்படி, தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட அகுனகொலபலஸ்ஸ பிரதேச செயலகத்தின் கீழ் கணக்கிடப்பட்ட வரி வருமானம், ரூபா 2.2 மில்லியன் நீதிமன்றில் செலுத்துமாறு உத்தரவிடப்பட்ட போதிலும், அதே குத்தகைதாரர்களுக்கு தோண்டுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

அதற்கு மேலதிகமா அகழ்வாராய்ச்சிகள் முடிக்கப்பட்ட அல்லது அகழ்வுகள் இடைநிறுத்தப்பட்ட வேலைத்தளங்கள் மீளமைக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறல்லாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

புகைப்படம– அகழ்வு அனுமதிப்பத்திர இலக்கம்: IML/B/HO/3711/LR/7 (ஹம்பாந்தோட்டை மாவட்டம்)

இந்த மாவட்டங்களில் அங்கீகரிக்கப்படாத அகழ்வு தொடர்பான விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன, அங்கு ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஒக்வெல பிரதேச செயலாளர் பிரதேசத்தில் இருந்து ரூபா 16.3 மில்லியன் பெறுமதியான அங்கீகாரமற்ற அகழ்வுகள் பதிவாகியுள்ளன. மேலும், இவ்வாறான அனுமதியற்ற அகழ்வுகள் காரணமாக ரூபா 31.4 மில்லியன் அரச வருமானத்தை இழந்த சம்பவங்கள் அகுனகொலபலஸ்ஸ பிரதேச செயலாளர் பிரதேசத்தில் பதிவாகியுள்ளன.

அதன் பிரகாரம் ஒட்டுமொத்தமாக அம்பாந்தோட்டை மாவட்டத்தின் 06 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 12 கருங்கல் வேலைத்தளங்களுக்குரிய ரூபா 198,898,250 தொகையும் அநுராதபுரம் மாவட்டத்திற்குரிய 07 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 46 கருங்கல் வேலைத்தளங்களுக்குரிய ரூபா 254,408,741 தொகையும் வவுனியா மாவட்டத்திற்குரிய 03 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 27 கருங்கல் வேலைத்தளங்களுக்குரிய ரூபா 81,278,190 தொகையும் குருணாகல் மாவட்டத்திற்குரிய 04 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 12 கருங்கல் வேலைத்தளங்களுக்குரிய ரூபா 16,973,250 ஏற்ற வகையில் மேற்படி சட்டஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய அரச கட்டணங்களை குறைத்து அறவிடல் மற்றும் அகழ்ந்தெடுக்கபட்ட கருங்கற்களின் கியுப் பெறுமானம் குறைவாக கணக்கிடப்பட்டதால் 2009 முதல் 2019 வரை மொத்தம் ரூபா 551,305,626 கூட்டுத்தொகையான வருமானம் அரசின் வருமானத்திற்கு இழக்கப்பட்டிருந்தது.

மேலும், பயன்படுத்தப்படும் வெடிபொருட்களின் அளவின் அடிப்படையில் அகற்றப்படும் கனிமங்களின் அளவுகள் அளவீடு செய்யப்படாத சந்தர்ப்பங்கள் நிலவும் தெரிவுப் பரிசோதனைக்கு உட்டுபத்தப்பட்ட அம்பலந்தொட்ட பிரதேச செயலகப் பிரிவில் 12,656 கியுப் கருங்கல் அகழ்விற்காக 328 கிலோ கிராம்களாகும். எனினும் அந்த அனுமதிப்பத்திரத்திற்கு விநியோகிக்கப்பட்ட வெடிபொருட்களின் அளவு 26,244 கிலோ

கிராம்களாக இருந்தன. அதன் பிரகாரம் 19,916 கிலோ கிராம் வெடிபொருட்கள் விநியோகிக்கப்பட்ட அளவில் 76 சதவீதம் மிகையான வெடிபொருட்கள் எச்செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டதென வெளிப்படுத்தப்படவில்லை.

அதன் பிரகாரம் இந்த இயற்கை கணிய வளங்களை முறையான நிர்வாகத்துடனும் செயற்திறனாகவும் கைத்தொழிலாளர்கள் பாதுகாக்கப்படும் வகையிலும் சுற்றாடலைப் பாதுகாத்து, கைத்தொழிலை மேம்படுத்துதல், கணிய பரிமானத்தினை சரியாக கணக்கிடப்படாமை மற்றும் கணியங்களை பயன்படுத்துவதற்காக அரசிற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை குறைத்து அறவிடல், நிரண்யிக்கப்பட்ட சட்ட விதிகள் ஏற்பாடுகளை பின்பற்றாமை தொடர்பாகவும் இந்த கைத்தொழில் மற்றும் அது தொடர்பாக அரச நிறுவனங்கள் மற்றும் கைத்தொழிலாளர்களின் கவனம் செலுத்தப்பட வேண்டுனெ சுட்டிக் காட்டுகின்றேன்.

அவுஸ்திரேலியக் கடன் மற்றும் உள்நாட்டுக் கடன் உதவிகளின் கீழ் சுகாதார அமைச்சினால் செயற்படுத்தப்பட்ட அரச வைத்தியசாலைகளில் மருத்துவக் கழிவுப்பொருட்கள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் செயலாற்றலை மதிப்பீடு செய்தல்

அரச வைத்தியசாலைகள் உள்ளிட்ட மருத்துவ நிலையங்கள மூலம் அன்றாடம் அகற்றப்படுகின்ற மருத்துவக் கழிவுகளின் முறையான முகாமைத்துவம் வைத்தியசாலைகளின் சுகாதார வசதிகள் என்பன தொற்று நோய்க் கட்டுப்பாட்டிற்கான முக்கிய அம்சங்களாகும். மேலும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் விதிக்கப்பட்டுள்ள பிரமாணங்களுக்கமைவாக அனைத்து மருத்துவக் கழிவுகளும் ஆபத்தான கழிவுகளாக உள்ளதுடன் அவ்வாறான கழிவுகள் உற்பத்தியாகி 48 மணித்தியாலங்களுக்குள் கிருமி நீக்கம் செய்யப்பட்டு அகற்றப்படல் வேண்டும்.

வைத்தியசாலைகள் மற்றும் பல்வேறு சுகாதார நிறுவனங்களினுள் உருவாகின்ற மருத்துவக் கழிவுகளின் முறையான முகாமைத்துவத்திற்கு தேவையான வசதிகளுடன் கூடிய முறையான வேலைத்திட்டமொன்று காணப்படாமை கடந்த பல வருடங்களாக சுகாதார அமைச்சு மற்றும் 09 மாகாணங்களினதும் சுகாதாரப் பிரிவுகள் முகங்கொடுத்து வந்த ஒரு பெரும் பிரச்சினையாக விளங்கியது.

புகைப்படம் - குருநாகலை மருத்துவமனையில் Meta Mizer இயந்திரம் செயற்படாத காரணத்தால் மருத்துவமனையில் காணப்பட்ட இன்சினரேட்டர் செயலிழந்தமையால் மருத்துவமனையில் அருகில் மருத்துவக் கழிவுகள் குவிக்கப்பபட்டிருந்த விதம்.

புகைப்படம் - குருநாகலை மருத்துவமனையில் Meta Mizer இயந்திரம் செயற்படாத காரணத்தால் மருத்துவமனையில் காணப்பட்ட இன்சினரேட்டர் செயலிழந்தமையால் மருத்துவமனையில் அருகில் மருத்துவக் கழிவுகள் குவிக்கப்பபட்டிருந்த விதம்.

புகைப்படம் - கரவனல்ல மருத்துவமனையினால் மருந்துக் குப்பிகள் சுற்றாடலுக்கு விடுவிக்கப்பட்டிருந்தமை

புகைப்படம் - மாரவில ஆதார வைத்திசாலையிலிருந்து அகற்றப்படும் மருத்துவக் கழிவுகள், மருத்துவமனை வளாகத்தினுள் தீயினால் அழிக்கப்பட்டிருந்தமை

சுகாதார அமைச்சுக்கு அவுஸ்திரேலிய நிறுவனம் ஒன்றினால் மருத்துவக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான ஒரு திட்டம் முன்வைக்கப்பட்டிருந்ததுடன் அத் திட்ட முன்மொழிவினை ஆராய்ந்து ஏற்றுக்கொண்டு செயற்படுத்துவதற்காக 2013 மே 09ஆம் திகதி அமைச்சரவையின் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இதனடிப்படையில் கழிவகற்றல் உபகரணங்களாக ஒரு வருட கால உத்தரவாதத்துடன் கூடிய 20 Meta Mizer இயந்திரங்கள் மற்றும் 15 Incinerator இயந்திரங்களை விநியோகம் செய்து பொருத்தி இயக்க நிலைக்கு கொண்டு வருவதற்கும் தேவையான கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கும், Meta Mizer இயந்திரங்களை சேவைக்கு உட்படுத்தல் மற்றும் பராமரிப்பிற்கும், Incinerator இயந்திரங்களை சேவைக்கு உட்படுத்தல் மற்றும் பராமரிப்பிற்கும் 2013 திசெம்பர் 12 ஆம் திகதி அவுஸ்திரேலியாவின் R.R.Taylor Pty Ltd மற்றும் அந் நிறுவனத்தின் உள்நாட்டு முகவரான Biomed International Pty.Ltd நிறுவனத்துடனும் திட்ட செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக Biomed International 5 Pty.Ltd நிறுவனத்துடனும் சுகாதார அமைச்சின் செயலாளர் 04 ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டிருந்தார்.

இத் திட்டத்தின் மொத்தப் பெறுமதி 21.11 மில்லியன் அமெரிக்க டொலர் மற்றும் ரூபா. 452.24 மில்லியனாக இருந்ததுடன் திட்டத்தின் செயலாற்றுகை மதிப்பீடு இக் கணக்காய்வின் நோக்கமாகும்.

நாட்டின் 09 மாகாணங்களும் உள்ளடங்கும் வகையில் 06 குழுக்களாகப் பிரிக்கப்பட்ட 134 அரச வைத்தியசாலைகளில் இத் திட்டம் அமுல்படுத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதும் 04 ஒப்பந்தங்களில் 02 ஒப்பந்தங்கள் 2015 திசெம்பர் 01 ஆம் திகதி

திருத்தியமைக்கப்பட்டிருந்தன. விபரங்கள் இணைப்பு 01 இல் காட்டப்பட்டுளள்து. இதனடிப்படையில் இயந்திரங்களை விநியோகம் செய்து பொருத்தல் மற்றும் தேவையான கட்டிடங்களை நிர்மாணித்தலுக்கான ஒப்பந்தத்தின் கீழ் விநியோகிக்கப்படவிருந்த 15 Incinerator இயந்திரங்கள் 05 ஆகக் குறைக்கப்பட்டு ஒப்பந்தப் பெறுமதியான 18.445 மில்லியன் அமெரிக்க டொலர் 16.19 மில்லியன் அமெரிக்க டொலர்களாக குறைக்கப்பட்டிருந்தது. அதேபோன்று Incinerator இயந்திரங்களை சேவைக்கு உட்படுத்தலுக்கான ஒப்பந்தத்தின் கீழ் செலுத்துவதற்கு இணங்கியிருந்த 05 வருடங்களுக்கான சேவை மற்றும் பராமரிப்புக கட்டணமாகிய 0.190 மில்லியன் அமெரிக்க டொலர் மற்றும் ரூபா. 36,382 மில்லியன், 63,175 அமெரிக்க டொலர் மற்றும் ரூபா. 12,127 மில்லியனாக குறைக்கப்பட்டிருந்தது. எனினும் திட்டத்தினை செயற்படுத்துவதற்கான செயற்பாட்டுக் கட்டணத்தில் (Operating fee) மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை.

கடன் கொடுப்பனவு திட்டத்திற்கான ஒப்பந்தம் 2013 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில், மற்றும் அத் திட்டத்தின் மூலம் நாடு முழுவதும் இணைத்துகெ காளள் ப்படும் வகையில் 134 வைத்தியசாலைகள் 06 கொத்தணிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு கொத்தணிகளினதும் மருத்துவக் கழிவு முகாமைத்துவத்தினை மேற்கொளள் முடியுமாக இருந்த சந்தர்ப்பத்தில், 2014 ஆம் ஆண்டு அமைச்சு உத்தியோகத்தர்களினால் மேல், தெற்கு மற்றும் மத்திய மாகாணங்களில் மருத்துவக் கழிவு முகாமைத்துவத்தினை மேற்கொளவ்தற்கு சிசிலி ஹனாரோ என்கெயார் தனியார் நிறுவனத்தினால் வழங்கப்பட்டிருந்த திட்டத்திற்கு நன்மையளிக்கும் வகையில் அம் மூன்று மாகாணங்களிலும் நிறுவுவதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த 10 Meta Mizer இயந்திரங்கள் வடக்கு, கிழக்கு, வட மத்திய, வட மேல், சப்ரகமுவ மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களில் பொருத்தப்பட்டிருந்தன.

மேலும், தற்போது 20 Meta Mizer இயந்திரங்களில் 10 இயந்திரங்கள் கொத்தணியாக செயற்படாத கரவனல்ல, மாரவில, அக்கரைப்பற்று, கல்முனை மற்றும் கல்முனை அஷ்ரப் வைத்தியசாலை ஆகிய ஆதார வைத்தியசாலைகளிலும், குளியாப்பிட்டி போதனா வைத்தியசாலையிலும், அம்பிலிப்பிட்டிய, மொனராகலை, சிலாபம் மற்றும் திரிகோணமலை ஆகிய மாவட்ட வைத்தியசாலைகளிலும் பொருத்தப்பட்டிருந்தன.

பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட கழிவு முகாமைத்துவம் தொடர்பான பெற்றுக் கொளள்ப்பட வேண்டிய அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வது வழங்குனர்களின் மற்றும் அவர்களது உள்நாட்டுப் பிரதிநிதிகளின் பொறுப்பாகும். எனினும் Meta Mizer இயந்திரம் பொருத்தப்பட்டுளள் 20 வைத்தியசாலைகளுக்கு இடையே பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட 09 வைத்தியசாலைகளில் 06 வைத்தியசாலைகள் தொடர்பிலும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொளள்ப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அதில் 08 வைத்தியசாலைகளில் ஆவணப்படுத்தப்பட்ட கழிவுகள் முகாமைத்துவம் தொடர்பாக பெற்றுக் கொளள்ப்பட வேண்டிய அனுமதிப்பத்திரத்தை பெற்றிருக்கவில்லை.

புகைப்படம் - மாரவில மருத்துவமனையில் Meta Mizer இயந்திரத்திலிருந்து அகற்றப்பட்ட கழிவுகள் மீண்டும் மருத்துவமனை வளாகத்தினுள்ளேயே எரியூட்டப்படல்

புகைப்படம் - கேகாலை மருத்துவமனையில் Meta Mizer இயந்திரத்திலிருந்து அகற்றப்பட்ட கழிவுகள் மீண்டும் மருத்துவமனை கால்வாயின் இருபுறமும் குவித்து வைக்கப்பட்டிருத்தல்.

புகைப்படம் - பொலன்னறுவை மருத்துவமனையின் Incinerator இயந்திரத்தின் சிமினி தாழ்வாக காணப்படல்.

புகைப்படம் - இரத்தினபுரி மருத்துவமனையில் Meta Mizer இயந்திரத்திலிருந்து வெளியேற்றப்படும் ஆவி வெயியேறும் விதம்

புகைப்படம் - கேகாலை மருத்துவமனையில் Meta Mizer இயந்திரத்திலிருந்து வெளியேற்றப்படும் ஆவி வெயியேறும் விதம்

புகைப்படம் - கேகாலை மருத்துவமனையில் Meta Mizer இயந்திரத்திலிருந்து வெளியேற்றப்படும் ஆவி வெயியேறும் விதம்

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும்போது, ஒவ்வொரு மருத்துவமனையும் இயந்திரத்தில் சேரும் கழிவுகள் மாறுபடும், எடுக்கும் நேரம் மற்றும் இயந்திரங்களின் எண்ணிக்கை ஆகியவை மருத்துவமனைகளுக்கு இடையில் மாறுபடும், உயிர்வாழும் வெப்பநிலை, இயந்திரங்களுக்குத் தேவையான நீர் அழுத்தத்தை அடைய வெவ்வேறு கால இடைவெளிகள் தேவை. மருத்துவமனைகளுக்கு இடையே மாறுபடும், மற்றும் இயந்திரங்களுக்கு ஹைட்ராலிக் எண்ணெய் வழங்குவது தொடர்பான தொழில்நுட்ப சிக்கல்கள் காரணமாக இயந்திரங்கள் மூடப்பட்டன.தொழில்நுட்ப மற்றும் பிற பொதுவான சிக்கல்கள் வழக்குகள் இருப்பது, சில மருத்துவமனைகளில் இயந்திரங்களின் துர்நாற்ற மேலாண்மை அலகு செயலிழப்பு, வழக்குகள் இருப்பது போன்றவை காணப்பட்டன. தெர்மோமீட்டர்களின் செயலிழப்பு காரணமாக பகுதி எரிப்பு ஏற்படும் சந்தர்ப்பம் நிலவியமை போன்ற தொழில்நுட்ப மற்றும் ஏனைய பொதுவான சிக்கல்கள் அவதானிக்கப்பட்டன.

அமைச்சு உத்தியோகத்தர்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ தொடர்புபட்டு மேல், தெற்கு மற்றும் மத்திய மாகாணங்களில் மருத்துவக் கழிவுகளை அகற்றுவதற்கான ஒப்பந்தத்தினை சிசிலி ஹனாரோ என்கெயார் தனியார் நிறுவனத்திற்கு கையளிக்கும் நோக்கில் செயற்பட்டு அந் நிறுவனத்திற்கு நன்மையளிக்கும் வகையில் வியாபார ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடவும், அவுஸ்திரேலியக் கடன் மற்றும் உள்நாட்டுக் கடன் வழங்கல் திட்டத்தின் விடயப் பரப்பில் 50 வீதத்திற்கும் கூடுதலாக இணைத்துக் கொள்ளப்பட்ட 03 மாகாணங்களையும் மாற்றி கொத்தணித் திட்டத்தினை முறியடிப்பதற்கும், வடக்கு, கிழக்கு, வட மத்திய, வட மேல், சப்ரகமுவ மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களில் மாத்திரம் மருத்துவக் கழிவுகள் தொடர்பாக செயற்படுவதற்கு அவுஸ்திரேலியக் கடன் மற்றும் உள்நாட்டுக் கடன் வழங்கல் திட்ட ஒப்பந்தத்தினை திருத்தம் செய்வதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

அவ்வாறு செயற்பட்டதன் காரணமாக 21 வைத்தியசாலைகளின் மருத்துவக் கழிவுகளை அகற்றுவதற்காக 2016 தொடக்கம் 2019 வரையிலான 04 வருட காலத்தினுள் சிசிலி ஹனாரோ என்கெயார் தனியார் நிறுவனத்திற்கும் வேறு நிறுவனங்களுக்கும் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்த மொத்தத் தொகை ரூபா. 384.122 மில்லியனாக இருந்ததுடன் அது அரசிற்கான ஒரு மேலதிக செலவாகக் காணப்பட்டது.

அவுஸ்திரேலியக் கடன் மற்றும் உள்நாட்டுக் கடன் வழங்கல் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த Meta Mizer இயந்திரங்கள் மற்றும் Incinerator இயந்திரங்களின் விபரங்களில் குறிப்பிடப்பட்ட இயலளவில் செயற்படாதிருந்ததுடன் இயந்திரங்களிலிருந்து வெளியேறும் பொருட்களை சூழலுக்கு வெளியிடுவதற்கு பொருத்தமான நிலையை அடைந்துள்ளதென சுயாதீன ஆய்வொன்றின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவுமில்லை.

அவுஸ்திரேலியக் கடன் மற்றும் உள்நாட்டுக் கடன் வழங்கல் திட்டத்தின் ஒரு பிரதான நோக்கமாகிய பல வைத்தியசாலைகளின் மருத்துவக் கழிவுகளை ஒரு இடத்திற்கு அகற்றும் செயற்பாடு (Cluster system) முற்றாக தோல்வியடைந்திருந்தது. மேலும், இவ்வியந்திரங்களினால் வெளியேற்றப்படும் கழிவுகள் முறையாக உள்ளூராட்சி அதிகார சபைகளின் ஊடாக அகற்றும் முறையான செயற்திட்டமொன்றினை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

மருத்துவமனைகளுக்கான தேசிய மருத்துவ கழிவு தேசிய திட்டத்தை செயல்படுத்துதல், சுற்றுச்சூழல் மற்றும் பட்டியலிடப்பட்ட பொருட்களுக்கான வருடாந்திர அனுமதி பெறுதல், அமைச்சரவை துணைக்குழு பரிந்துரைகள் மற்றும் அமைச்சரவை முடிவுகளை செயல்படுத்துவது தொடர்பான ஆய்வு, ஆண்டு செயற்பாட்டுக் கட்டணங்கள் திருத்தம் மற்றும் தடைகளை போக்க அசல் திட்ட ஒப்பந்தத்தில் தேவையான திருத்தங்கள். இயந்திரங்களின் செயல்பாட்டில், மீதமுள்ள எஞ்சிய பொருட்கள் தீங்கு விளைவிக்காமல் இருப்பதை உறுதிசெய்து, அது குறித்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு தெரிவிக்கவும், எரியூட்டும் **Incinerator** இயந்திரங்களுக்கு அமைச்சு செலவழித்த பணத்தை சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து வசூலிக்கவும் இந்த அறிக்கையின் அடிப்படை பரிந்துரைகள் உள்ளன. நிறுவனம் மற்றும் இந்த இயந்திரங்களைப் பயன்படுத்திய பிறகும் முறைசாரா முறையில் கழிவுகளை அகற்றும் மருத்துவமனை மீது தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனும் அடிப்படை பரிந்துரைகள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய மீளுருவாக்கத்தக்க வலுசக்தி மூலங்களை அபிவிருத்தி செய்யும் செயற்பாட்டின் மதிப்பீடு

நாட்டின் மொத்த வலுச்சக்தி தேவையில் அதிகளவில் மின்சக்தியில் தங்கியிருப்பதுடன் மொத்தமின் உற்பத்தியில் 63 சதவீதமான எரிபொருள் மற்றும் அனல் மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் வழங்கப்படுகின்றது. இதற்காக வருடாந்தம் அதிக அளவு அமெரிக்க டொலர்களை செலவிடுவதனை காரணமாக கொண்டு எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அந்நியச் செலாவணி பிரச்சினைகளுக்கு அவசர மின்வெட்டுகளுக்கும் வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலாதாரங்களுடன் தொடர்புபட வேண்டியதன் முக்கியத்துவம் தற்போது தெளிவாகின்றது. 2020 ஆம் ஆண்டில் புதுப்பிக்கத்தக்க வலு (Renewable Energy) உற்பத்தி மொத்த வலு வினியோகத்தின் 37 வீதமாக காணப்படுவதுடன் புதிய புதுப்பிக்கத்தக்க வலு (New Renewable Energy - NRE) உற்பத்தி மொத்த வலு வினியோகத்தின் சுமார் 12 வீதம் மாத்திரமாகும். இலங்கையின் புவியியல் ரீதியான அமைவின் அடிப்படையில் அதிகளவிலான காற்று மற்றும் சூரிய வலு வளம் காணப்படுவதுடன் தற்போதைய பயன்பாடானது ஒப்பீட்டு ரீதியில் மிகவும் குறைவாகும். புதுப்பிக்கத்தக்க வலு பயன்பாட்டின் மூலம் பச்சைவீட்டு வாயு வெளியேற்றம் குறைதல், புவி வெப்பம் அதிகரித்தலைக் கட்டுப்படுத்தல் மற்றும் பொசில் எரிபொருள் இறக்குமதி மூலம் உள்நாட்டுப் பொருளாதாரத்தின் மீது ஏற்படும் அழுத்தத்திலிருந்து பாதுகாக்கவும் உதவியாக இருக்கும். தற்போதைய அரச கொள்கைக்கமைவாக 2030 ஆம் ஆண்டளவில் மொத்த புதுப்பிக்கத்தக்க வலு உற்பத்தியை 70 வீதமாக அதிகரித்துக்கொள்வதற்கும் எதிர்காலத்தில்

அனல் மின் உற்பத்தி நிலையங்களை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இங்கு வெளிப்படுத்தப்பட்ட பிரதான அவதானிப்புகளில் வலு கொள்கைக்கு அமைவாக 2050 இல் அனைத்து வலு வினியோக தளங்களினதும் பூரண இயலளவினை அடைந்துகொள்வதற்கு (பிரிவுச் சமநிலை) திட்டமிடப்பட்ட போதும், இ.மி.ச. சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட 2022-2041 குறைந்த கிரயத்திலான நீண்ட கால உற்பத்தித் திட்டத்தின் படி, 2041 ஆம் ஆண்டு வரையிலும் புதுப்பிக்கத்தக்க ஆதாரங்கள் மூலம் மின் உற்பத்தி 50 சதவீதம் மாத்திரமாக இருந்ததுடன் 02 அனல் மின் நிலையங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன. நீண்ட காலம் நிலைத்திருக்கக்கூடிய நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்களை தொடர்ச்சியாக நிர்மாணிப்பதன் மூலம் வலு கொள்கையின் மூலம் திட்டமிடப்பட்டவாறு 2050 இல் பூரண இயலளவினை அடைந்துகொள்ள முடியாது என்பது அவதானிக்கப்பட்டது. மேலும் நிலைபேறான வலு அதிகாரச் சட்டம் மற்றும் தேசிய வலுக் கொள்கையின் அதிகாரங்களுக்கமைவாக மையப்படுத்தப்பட்ட இணைப்பு வழிமுறையொன்றின் மூலம் புதுப்பிக்கத்தக்க வலு திட்டங்களை அனுமதிக்கும் சிக்கலான செயற்பாட்டிற்காக செலவிடப்படும் 02 வருடத்திற்கும் கூடுதலான நீண்ட கால எல்லையினை குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.

நிலைபேறான வலு அதிகாரசபையின் கடமைப் பொறுப்புகளின் கீழ் செயற்திட்ட அனுமதி வழங்கும் குழுவில் (PAC) அனுமதி பெறப்பட்ட 2017 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2019 டிசம்பர் 31 ஆம் திகதி வரை நிலைபேறான வலு அதிகாரசபையின் மூலம் அனுமதிப்பத்திரங்கள் மற்றும் தற்காலிக அனுமதி வழங்கப்பட்டிருந்த மற்றும் வலையமைப்பு இணக்கப்பாட்டுக்காக முன்வைக்கப்பட்டுள்ள 4,014.85 மெகாவொட் ஆகிய 1,374 செயற்திட்டங்களின் தொழிற்பாடுகள் போட்டி அடிப்படையிலான விலைமனு கோரலினுள் நுழைந்தமை காரணமாக இலங்கை மின்சார சபை *மின்சாரத்தினை கொள்வனவு செய்யும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாமை காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன.

**''மின்சாரத்தினை கொள்வனவு செய்யும் ஒப்பந்தம் " எனப்படுவது வினியோகித்தல் அனுமதிப்பத்திர உரிமையாளர்களுக்கு மின் வலுவினை விற்பனை செய்யும் செயற்பாட்டிற்காக மாத்திரம் மின் வலுவினை மொத்தமாக அல்லது மின்சார உற்பத்தி இயலளவினை மொத்தமாக கொள்வனவு செய்வதற்கு மின்சார உற்பத்தி அனுமதிப்பத்திர உரிமையாளர் ஒருவருடன் மின் நிலைய அனுமதிப்பத்திர உரிமையாளரினால் கைச்சாத்திடப்படும் ஒப்பந்தமாகும்.''*

இதன் போது இறுதி கட்டமான உடன்படிக்கை கைச்சாத்திடும் சந்தர்ப்பம் வரை வந்து அச்செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்ட 30 செயற்திட்டங்களும் தற்காலிகமாக அங்கீகாரம் வழங்கிய 130 செயற்திட்டங்களும் காணப்பட்டன. இந்நிலைமைக்கு அடிப்படை காரணம் 2017 ஆம் ஆண்டின் ஆரம்ப முதல் காணப்பட்ட நடைமுறை ஒரே தடவையில் இடைநிறுத்தப்பட்டமையாகும்.

இடைநிறுத்தப்பட்ட செயற்திட்டங்களுக்குரிய விரிவான தகவல் அட்டவணை இலக்கம் ….. இன் பிரகாரம் காணப்பட்டது.

விபரங்கள்	செயற்திட்டங்களின் எண்ணிக்கை	இயலளவு (மெ.வொ)
உடன்படிக்கை கைச்சாத்திடாத	30	49.33
தற்காலிகமாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள (அபிலா. கடிதங்கள் வழங்கப்பட்ட)	53	127.61
தற்காலிகமாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள (அபிலா. கடிதங்கள் வழங்கப்படாத)	77	110.67
வலையமைப்பிற்கு தொடர்புபடுத்தப்பட்ட	1214	3727.23
மொத்தம்	1374	4014.84

அட்டவணை ……. - இடைநிறுத்தப்பட்ட செயற்திட்டங்களுக்கான தகவல்கள்

போட்டி அடிப்படையிலான விலை முறைமையின் கீழ் தேசிய மின்சக்தி தொகுதிக்கு 2017 தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரை 1 மெகா வொட் அளவிலான 13 திட்டங்கள் மாத்திரமே சேர்க்கப்பட்டிருந்தன. காற்று வலு மின் உற்பத்தி ஆலைகளின் அபிவிருத்தி தொடர்பாக தற்பொழுது 60 மெகா வொட் இயலளவு கொண்டவைகளிடமிருந்து மாத்திரமே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. சூரிய வலு யுகம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மெகா வொட் 269 ஆகிய இயலளவு மாத்திரம் மத்திய வலையமைப்புக்கு தொடர்பு படுத்தப்பட்டிருந்தமையினை அவதானிக்க முடிந்தது. புதுப்பிக்கத்தக்க வலு வினியோகஸ்தர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் மின்சாரத்திற்கான கொடுப்பனவுகள் தாமதமடைந்ததன் காரணமாக வட்டிதொகை ஒன்றினை செலுத்த வேண்டி ஏற்படும் நிலையும் காணப்படுகின்றது. ஐக்கிய நாடுகளின் பருவநிலை மாற்றங்கள் தொடர்பான கட்டமைக்கப்பட்ட கொள்கையின் கீழ் உலக வெப்பநிலை அதிகரிப்பினை 2Co இற்கு குறைவாக வைத்துக்கொள்ளும் உலகலாவிய ஒப்பந்தத்தின் அடிப்படையில் எரிபொருள் மின் நிலையங்களுக்குப் பதிலாக இரட்டைப் பயன்பாடு கொண்ட வாயு மின் நிலையங்களை (LNG) அறிமுகப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் ஒரு மின் நிலையமேனும் இதுவரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந் நிலைமை டீசல் மின் நிலையங்களிலிருந்தான அவசர கொள்வனவுகள் அதிகரிப்பதற்கு முக்கிய காரணியாக இருந்துள்ளது.

மேற்குறிப்பிட்ட முக்கிய அவதானிப்புகளின் அடிப்படையில், வலு செயற்திட்டங்களுடன் தொடர்பான அனுமதிகளைப் பெற்றுக்கொள்வதில் தாமதத்தினை குறைக்கும் வகையில் இணைப்பீட்டு வழிமுறையொன்றினை ஏற்படுத்த வேண்டியுள்ளதுடன் நீண்ட கால உற்பத்தித் திட்டத்தினைத் தயாரிக்கும் பொழுது தேசிய வலுக் கொள்கை மற்றும் சர்வதேச அங்கீகாரங்களின் அடிப்படையில் அமைதல் வேண்டும். 2017 ஜனவரி 01 ஆம் திகதி முதல் இலங்கை மின்சார சபையுடன் ஏற்றுக் கொள்ளப்பட்ட அறவீட்டு முறைமையின் கீழ் கொள்வனவு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடாத தற்பொழுது உற்பத்தி அனுமதிப் பத்திரங்களைக் கொண்டுள்ள மற்றும் ஆலோசனைக் கடிதம் வழங்கப்பட்ட திடங்கள் தொடர்பிலான ஒரு தீர்மானத்திற்கு வருவதும் முக்கியமாகும். சிறிய அளவிலான திட்டங்களுக்காக உள்நாட்டு முதலீட்டாளர்களை மாத்திரம் சம்பந்தப்படுத்திக் கொள்வதன் மூலம் வெளிநாட்டு செலாவணியை தக்க வைத்துக்கொள்வதற்கும் உள்நாட்டுப் பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் முக்கியமாகும். தற்போது முகங்கொடுக்க நேர்ந்துள்ள உலகலாவிய தொற்று **(Covid -19)** நிலைமையின் கீழ் அபிவிருத்தி செயற்பாட்டை வேகமாக்குதல் மற்றும் அந்நியச் செலாவணி ஒதுக்கீடு சிக்கலுடன் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் செயற்பாட்டில் புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்துவது முக்கியமாகும். மேலும் சூரியக்

கல தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்துவதன் மூலம் சூரிய வலுவினை களஞ்சியப்படுத்தி வைத்து மின்சாரத்திற்கான கேள்வி மிகக் கூடுதலாக உள்ள (நெரிசல் நேரம்) காலப்பகுதியில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தலும் பொருத்தமானதாகும். நிறுவன ரீதியான சமூகர் பொறுப்பு திட்டங்களை (CSR) செயற்படுத்துவதன் மூலம் புதுப்பிக்கத்தக்க வலு உட்கட்டமைப்பு வசதிகள் திட்டங்களைநிர்மாணிக்கும் போது ஏற்படும் பொது எதிர்ப்புகள் மற்றும் சூழல் தாக்கங்களை குறைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

இந்த அறிக்கை வெளியான பிறகு, இந்த நிலைமையை சரிசெய்வதற்காக சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் எடுக்கப்பட்ட முடிவுகளில், அமைச்சர்கள் குழுவால் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின்சார கொள்முதல் கட்டணத்தை **(Purchase Tariff Revision- 2022)** திருத்தம் செய்வதற்கு ஒப்புதல் அளித்தல் மற்றும் 08 பேர் கொண்ட குழுவை நியமித்தல், 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தை உரிய முறையில் திருத்துவதன் மூலம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களுக்கு ஏற்கனவே உள்ள சட்டத் தடைகளை நீக்குதல், தேசிய கணக்காய்வு அலுகலகத்தின் கணக்காய்வு அறிக்கைக்கு உரியதாக 2022.04.21 அன்று காணி அமைச்சில் சிறிய நீர் மின் நிலையங்களுக்கான நிலம் கையகப்படுத்தல்/ஒதுக்கீட்டில் ஏற்பட்ட தாமதம் தொடர்பான முன்னேற்ற மீளாய்வு அதன்படி, தாமதமான திட்டங்களை துரிதப்படுத்துவது மற்றும் தகவல் மற்றும் அவதானிப்புகளின் அடிப்படையில் தொடர்புடைய திட்டங்களின் தாமதத்திற்கான காரணங்களை உடனடியாக மாநில அமைச்சகம் எடுத்து வருகிறது. செயல்திறன் அறிக்கை, ஆற்றல் ஆலோசகர்கள் மேலும் முன்மொழிவுகளை மேற்கொள்ள வேண்டும். இலங்கை மின்சார சபையின் மறுசீரமைப்புக்கு அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு வேலைத்திட்டத்தின் கீழ் கிராமிய சமூகம் மற்றும் சமூக பொருளாதார மத்திய நிலையத்திற்கும் இடையில் வீதி நுழைவினை மேம்படுத்துவதிலான செயலாற்றல்

ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு வேலைத் திட்டத்தின் கடன் ஒப்பந்தத்திற்கு அமைய முன்னாள் உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு, தற்போதைய வீதி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சானது செயற்றிட்டத்தின் அமுலாக்கல் முகவர் நிலையமாக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்றிட்டதினைச் செயற்படுத்தும் முகவர் ஆகும். இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமானது கிராமிய சமூகம் மற்றும் சமூகப் பொருளாதார மத்திய நிலையத்திற்கும் இடையிலான வீதி அணுகல்களை மேம்படுத்துவதாகும். இதன் நீண்டகால தாக்கமானது தேசிய மற்றும் மாகாண வீதிகளின் வினைத்திறனை மேம்படுத்துவதாகும். கடன் ஒப்பந்தத்திற்கமைய, வேலைத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் 906 மில்லியன் அமெரிக்க டொலரிற்கு சமனான ரூபா 117,780 மில்லியனாக உள்ளதுடன் அதில் அமெரிக்க டொலர் 800 மில்லியனுக்கு சமனான ரூபா 104,000 மில்லியனை 6 நிதி வசதிகளின் கீழ் வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உடன்பட்டிருந்தது. அதில் முதல் 4 பகுதிகளின் கீழ் ரூபா 75,195 மில்லியன் தொகை 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதி வழங்குவதற்கு வேறான 4 கடன் உடன்படிக்கைகள்

கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் அவ்வாறு கிடைக்கப் பெற்ற தொகையில் ரூபா 61,533 மில்லியன் தொகை 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் கிராமிய வீதி புனரமைப்பு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த செயல்களின் செயலாற்றல் மதிப்பீடு செய்தல் இந்தக் கணக்காய்வின் நோக்கமாகும்.

2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான செயற்றிட்ட ஆலோசகரால் வழங்கப்பட்ட பௌதீக முன்னேற்ற அறிக்கை மற்றும் கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட கடந்த கால தளப் பரீட்சிப்புக்களில் செயற்றிட்டத்தின் பௌதீக முன்னேற்றமானது எதிர்பார்க்கப்பட்ட இலக்கினைக் குறித்த தினத்தில் எட்டியிருக்காதமை அவதானிக்கப்பட்ட காரணத்தால் இந்த வேலைத்திட்டத்தின் கீழ் செயலாற்றல் கணக்காய்வு மேற்கொள்ளத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வேலைத் திட்டத்தின் கீழ் செயற்படும் மொத்தம் 42 ஒப்பந்த பொதிகளில் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை எட்டியிருக்காத 8 ஒப்பந்தத் பொதிகள் தெரிவு செய்யப்பட்டு அவற்றின் முன்னேற்றங்கள் ஆழமாகப் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, வடமேல் மாகாணத்தில் குருணாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களில் பரந்துள்ள வீதிகள் மட்டும் பௌதீகப் பரீட்சிப்பிற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு வேலைத் திட்டத்தின் கீழ் தெற்கு, மத்திய, சப்பிரகமுவ, வடமத்திய மாகாணம் மற்றும் மேல் மாகாணத்தின் களுத்துறை மாவட்டங்களில் 3,143 கிலோ மீற்றர் நீளமான கிராமிய வீதிகளை புனரமைப்பதற்காக வழங்கப்பட்ட 42 ஒப்பந்தப் பொதிகளில் 25 ஒப்பந்த பொதிகள் அதாவது, வடமேல் மாகாணத்தில் குருணாகல் மாவட்டத்தில் KU01, KU02 பொதிகள், மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் அனைத்துப் பொதிகளும் மாத்தளை மாவட்டத்தில் MA02, MA03 பொதிகளும் மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் NE02 பொதியும் மட்டுமே புனரமைப்பு பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே, தென் மாகணத்தில் மாத்தறை மாவட்டத்தில் M01, M02 மற்றும் M03 பொதிகள், காலி மாவட்டத்தில் G2, G3 பொதிகள், அம்பாந்தோட்டை மாவட்டத்திற்குரிய H1, H2, H3 பொதிகள் என்பன 2019 ஒக்டோபர் 30 ஆம் திகதியில் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. மேலும், வடமத்திய மாகாணத்தில் அநுராதபுர மாவட்டத்தில் AP01, AP02, AP03, AP04 மற்றும் பொலனறுவை மாவட்டத்தில் PO1, PO2, PO3 மற்றும் களுத்துறை மாவட்டத்தில் KL01 பொதிகள் என்பன 2019 நவம்பர் 04 ஆம் திகதியில் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. சப்பிரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி மாவட்டத்தில் R3 பொதியின் பணிகள் மட்டுமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

மேலும் மேற்கூறிய கிராமிய வீதிகளை புனரமைப்பு செய்வதற்கு வழங்கப்பட்ட 42 ஒப்பந்தப் பொதிகளில் 12 பொதிகள் அதாவது குருணாகல் மாவட்டத்தில் 3 பொதிகளும் (KU03, KU04, KU05) மற்றும் புத்தளம் மாவட்டத்தில் 2 பொதிகள் (PU2, PU3) மற்றும் மாத்தளை மாவட்டத்தில் MA1 பொதியும் காலி மாவட்டத்தில் G1 பொதியும் கேகாலை மாவட்டத்தில் KE1 பொதியும் இரத்தினபுரி மாவட்டத்தில் இரண்டு பொதிகள் (R1, R2) மற்றும் களுத்துறை மாவட்டத்தில் இரு பொதிகள் (KL2, KL3) என்பவற்றின் வீதி புனரமைப்பு நடவடிக்கைகள் ஒப்பந்தகாரர்களால் கைவிடப்பட்டிருந்தன.

நிர்மாண ஒப்பந்தங்களின் தரம் தொடர்பான பரிசோதனை செய்யும் போது குருணாகல் மாவட்டத்தில் ரூபா 2,092.2 மில்லியன் பெறுமதியினைக் கொண்ட ஒப்பந்தப் பொதி இலக்கம் 04 (KU04) இன் கீழ் வீதி இலக்கம் 96 காசிகொடே சந்தி தொடக்கம் மீ ஓயா பாலத்தின் ஊடாக பீல்ல வரையான 4.30 கிலோ மீற்றர் நீளத்தினைக் கொண்ட வீதியில் 4.11 கிலோ மீற்றர் இயல்பு நிலை தாரினை இட்டு வீதித்தளம் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த வீதி நியமமொன்று இல்லாது நிர்மாணிக்கப்பட்டமையால், வீதி கழுவிச் செல்லப்பட்டு மேலும் பாவணைக்கு உதவாத நிலையில் உள்ளமையால் அதன் நிலைத்த தன்மை நிச்சயமற்றதாக காணப்பட்டது.

புகைப்படம்– 2019 நவம்பர் 27 ஆந் திகதியில் உள்ளபடியான நிலைமை

புகைப்படம்– 2019 நவம்பர் 27 ஆந் திகதியில் உள்ளபடியான நிலைமை

புகைப்படம்- 96 ஆம் இலக்க காசிக்கோட்டை சந்தி முதல் மீஓய பாலத்தின் ஊடான பீலி வரையிலுமான வீதி – 2020 மே 13 ஆந் திகதியில் உள்ளபடியான நிலைமை

புகைப்படம்- 96 ஆம் இலக்க காசிக்கோட்டை சந்தி முதல் மீஓய பாலத்தின் ஊடான பீலி வரையிலுமான வீதி – 2020 மே 13 ஆந் திகதியில் உள்ளபடியான நிலைமை

மேலும், இந்த மாவட்டத்தின் ஒப்பந்தப் பொதி இலக்கம் KU04 இன் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த வீதியின் நிர்மாணக் குறைபாடுகளிடையே, கலவையிலான குறைபாடுகள், முன்பூர்த்தி தாரிடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த போதிலும், அதன் பல இடங்களில் பழுதடைந்தும் வெடிப்புக்களுடனும் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

குருணாகலை மாவட்டத்தில் பொதி எண் KU01 இன் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீதி

தொடர்பான அளவுத் தாள்கள் தயாரிப்பில் பாலங்களை புனரமைப்பதற்கான ஏற்பாடுகள் உள்ளடக்கப்படாமையால் வீதியின் தரம் சேதமடைந்து, அந்தப் பாலப் பகுதியை விட்டுவிட்டு எஞ்சிய பகுதிகளை மாத்திரம் நிறைவு செய்துள்ள காரணத்தால் பாதையின் தரத்திற்கு சேதம் ஏற்பட்டிருந்தது.

புகைப்படம்- 81 ஆம் இலக்க வீதி: செயின் கேஜ்

புகைப்படம்- 81 ஆம் இலக்க வீதி: செயின் கேஜ்

அவ்வாறே, 05 ஒப்பந்த பொதிகளில் அதாவது புத்தளம் மாவட்டத்தின் PU1 பொதி நுவரெலியா மாவட்டத்தின் NE01, NE03 பொதி கேகாலை மாவட்டத்தின் KE2, KE3 பொதி என்பவற்றின் வீதி புனரமைப்பு பணிகள் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் மந்தகதியில் இடம்பெற்று வந்துள்ளது. மேலும், மேற்கூறிய 12 ஒப்பந்தப் பொதிகளுக்குரிய ஒப்பந்ததாரர்களினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 2,577 மில்லியன் செயலாற்றல் பிணையை 2019 நவம்பர் 30 ஆம் திகதி வரையிலும் மீள அறவிடுவதற்கு செயற்றிட்டம் தவறியிருந்தது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு வீதிகளை புனரமைப்பு பணிகளில் ஈடுபட்டு அந்த பணியை கைவிட்ட 12 ஒப்பந்தகாரர்களுக்கு வேலையினை ஆரம்பிப்பதற்கு முற்பணமாக வழங்கப்பட்ட ரூபா 3,434 மில்லியன் தொகையில் 2019 நவம்பர் 30 ஆம் திகதியில் ரூபா 2,994 மில்லியன் தொகையினை அறவிடுவதற்குத் தவறியிருந்தது.

முழுமையாக எடுத்துக் கொள்ளுமிடத்து கிராம வீதிகள் புனரமைப்பிற்காக வழங்கப்பட்ட ரூபா 71,978.15 மில்லியன் பெறுமதியான 42 ஒப்பந்தப் பொதிகளில் 12 பொதிகள் ஒப்பந்தக்காரர்களினால் புனரமைப்பு நடவடிக்கைகள் கைவிடப்பட்டு இருந்தன. அதற்கமைய குருணாகல், புத்தளம், மாத்தளை, கேகாலை, காலி, இரத்தினபுரி மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்கில் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் செயற்படுத்தவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த ரூபா 21,459 மில்லியன் மற்றும் வீதியின் நீளம் 1003.79 கிலோ மீற்றரைக் கொண்ட 12 ஒப்பந்தங்கள், 2019 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் அவ்வாறு நிறுத்தப்பட்ட போது அந்த ஒப்பந்தத்திற்காக செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 10,583.6 மில்லியன் ஆகும். விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

இவ்வாறு இடை நடுவே வேலை நிறுத்தப்பட்ட ஒப்பந்த பொதிகளின் பணிகள் நிறுத்தப்பட்டதன் பின்னர் அந்த பொதிகளுக்கு இணைக்கப்பட்டு சேவையாற்றிய தொழில் வழங்குநர் மற்றும் பொறியியலாளர்களின் (Consultant) பதவியணி பராமரிப்பிற்காக வேதனம் மற்றும் கொடுப்பனவு, வீடு வசதிகள், அலுவலக வசதிகள் மற்றும் வாகன வசதிகளுக்காக இடைக்காலக் கொடுப்பனவு இலக்கம் 39 மூலம் 2019 ஓகஸ்ட் மாதம் வரையிலும் மட்டும்

ரூபா 23 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், அந்தக் கொடுப்பனவிற்காக மாறுபாட்டுக் கட்டளையாக (Variation orders) ஒப்பந்த தொகுப்பு இலக்கம் KU01, KU02 மற்றும் PU01 என்பன பயன்படுத்தப்பட்டிருந்தது.

இந்த அறிக்கையில் அவதானிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில், நிர்மாணம் மற்றும் ஆலோசனை ஒப்பந்தம் வழங்குகையில் மற்றும் செயற்படுத்தப்படுகையில்இ வேலைத் திட்ட அடிப்படையில் திட்டமிடப்பட்ட கிராம மற்றும் தேசிய வீதிகளின் தூரங்களை ஊகித்துக் கொள்ளுவதன் மூலம் கிராம வீதிகளைப் போன்றே தேசிய வீதிகளையும் உச்ச அளவில் புனரமைப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல், வேலைத் திட்டத்திற்காகக் கிடைக்கும் நிதியினை வினைத் திறன் மற்றும் உற்பத்தித் திறனுடனும் பயன்படுத்தப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்தல், கட்டங்களாகப் பெற்றுக் கொள்ளப்படும் கடன் தொகைகளில் பயன்படுத்தப்படும் கடன் உடன்படிக்கைகளின் மூலம் உருவாக்கப்பட்ட சொத்துக்களை அறிந்து கொள்ளுவதற்கு முறைமையொன்றினை தயாரித்தல், நிர்மாணத்திற்கான ஒப்பந்தத்தை வழங்கியதன் பின்னர், வேறு செயற்றிட்டங்களின் மூலம் புனரமைப்பு செய்யப்பட்ட வீதிப் பகுதிகளை அறிந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அவ்வாறு வேறு செயற்றிட்டங்களின் ஊடாக நிறைவு செய்தல் காரணமாக வழங்கப்பட்ட செயற்றிட்டத்தின் மொத்த செலவினைத் திருத்துதல் மற்றும் அந்த நிதி ஒதுக்கீடு மூலம் வேறு வீதிகளைப் புனரமைப்புச் செய்வதற்குத் தேவையான முறைமைகள் தயாரித்தல், வீதி புனரமைப்பு திட்டத்தின் அடிப்படைத் திட்டங்களின்படி, குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முடிக்க முறையான திட்டமிடல் செய்யப்பட வேண்டும் எனும் அடிப்படை பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.

கப்பல்களின் மூலம் இடம்பெறுகின்ற கடல் மாசடைதலை தடுப்பதற்காக நடைமுறைப்படுத்தப்படுகின்ற மார்போல் உடன்படிக்கையை இலங்கையில் அமுல்படுத்துவதிலான செயன்முன்னேற்றம்

மனித உயிர்வாழ்விற்கு அளப்பரிய பங்களிப்பை வழங்குகின்ற, உயிரியல் வளங்கள் நிறைந்த ஒரு முக்கிய வளமாக கடல் வளம் திகழ்கின்றது. உலகெங்கிலும் காலநிலை நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்காக, நீர் சுழற்சியின் முக்கிய அங்கமாக காணப்படுகின்ற சமுத்திரத்தினை மாசற்ற வலயமாக பராமரித்துச் செல்லல் ஒவ்வொரு குடிமகனினதும் கடமையாகும். ஐக்கிய நாடுகளின் பெருங்கடல் சாசனத்தால் ஒரு நாட்டின் கடல் வலயம் நிர்ணயிக்கப்படுவதுடன் இலங்கையின் கடல் வலயம் 1976 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க கடல்சார் வலய சட்டத்தால் வியாக்கியாணம் செய்யப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின்படி, கடலோர எல்லைக் கோட்டிலிருந்து 200 கடல் மைல் தூரத்திற்கு வியாபித்துள்ள பிரத்தியேக பொருளாதார வலயம் அல்லது மாசடைதல் தடுப்பு வலயத்தை பாதுகாக்கும் பொறுப்பு இலங்கைக்கு உள்ளது. கப்பல்களினால் மேற்கொள்ளப்படுகின்ற கடல் மாசுபடுத்தலே இந்த மாசுபாட்டிற்கான பிரதான காரணங்களில் ஒன்றாக காணப்படுகின்றது. இந்த சுற்றுச்சூழல் பிரச்சினையை முகாமைத்துவம் செய்வதற்காக சர்வதேச அளவில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் ஒன்றாக கப்பல்கள் மூலம் கடலுக்கு ஏற்படுகின்ற மாசுபாட்டைக் கட்டுப்படுத்துவதற்கான சர்வதேச உடன்பாட்டை குறிப்பிடலாம். இந்த உடன்பாட்டை 1973 ஆம் ஆண்டில் சர்வதேச கடல்சார் அமைப்பு ஏற்றுக்கொண்டு 1978 இல்

அது புதுப்பிக்கப்பட்டது. MARPOL 1973/1978 என அழைக்கப்படுகின்ற இந்த உடன்பாட்டின் மூலம், கப்பல்களிற்கு ஏற்படுகின்ற திடீர் விபத்துக்கள் காரணமாக ஏற்படுகின்ற மாசடைதல்கள் மற்றும் வழமையான நடவடிக்கைகளால் ஏற்படுகின்ற மாசடைதல்களை தடுத்தல் மற்றும் தணித்தல் என்பன இதன் குறிக்கோளாகக் காணப்படுவதுடன் இந்த நோக்கத்திற்குத் தேவையான பிரமாணங்களை உள்ளடக்கிய 06 தொழில்நுட்ப இணைப்புகள் வழங்கப்படுள்ளன. கடந்த காலங்களில் கடல் போக்குவரத்துக்கான சேது சமுத்திர கடல் மார்க்கமான இலங்கையின் கடல் மார்க்கத்தில் கப்பல் போக்குவரத்து அதிகளவில் அதிகரித்தமையால் கப்பல்களின் மூலம் இடம்பெறுகின்ற கடல் மாசடைதல் அதிகரிக்கும் ஆபத்து காணப்பட்டமையாலும் இந்த ஆபத்து எதிர்காலத்தில் மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புக் காணப்பட்டமையாலும் இலங்கையின் கடற் பரப்பில் கப்பல்களினால் ஏற்படுகின்ற சூழல் மாசடைதலை குறைப்பதற்காக செயற்படுத்தப்பட்டுள்ள மார்போல் உடன்பாடு மற்றும் அந்த உடன்பாட்டை செயற்படுத்துவதற்கு பொறுப்பாகவுள்ள நிறுவனங்களின் சட்டக்கட்டமைப்பு, செயற்பாடுகள் மற்றும் செயலாற்றல் ஆகியவற்றை மதிப்பிடுதல் இந்த கணக்காய்வின் குறிக்கோளாகும்.

இலங்கையில் கப்பல்களால் கடல் மாசுபடுவதை தடுக்கும் தேசிய கொள்கை எதுவும் தயாரிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், இலங்கையில் கப்பல்களால் ஏற்படும் கடல் மாசுபாட்டைத் தடுப்பதற்கான மார்போல் உடன்படிக்கையின் அனைத்து தொழில்நுட்ப நோக்கங்களையும் செயல்படுத்துவதற்கு பொறுப்பான உள்ளூர் பொறிமுறைக்குள் குறிப்பிட்ட நிறுவனம் எதுவும் இல்லை.

கடல் நீரின் மேற்பரப்பில் எண்ணெய் அறிகுறி காணப்படும்போது, உடன்பாட்டின் தரப்பாகவுள்ள அரசாங்கத்தினால் இது தொடர்பாக ஒரு அவதானிப்பை மேற்கொள்ள வேண்டும். அத்தகைய நிலைமைக்குத் தேவையான 24/7 மணிநேர சேவைகளை செயற்படுத்துவதற்குரிய பொறிமுறையொன்று நிறுவப்படவில்லை. கடல் மண்டலத்தில் எண்ணெய் கசிவால் ஏற்படும் மாசுபாட்டை நிர்வகிப்பதற்கான திட்டத்தின் **Tier 02** கருத்தை (50-100 தொன்களுக்கு இடையே எண்ணெய் கசிவு) செயல்படுத்த தேவையான பௌதீக வளங்களை ஒரு நிறுவனம் அல்லது இடத்தில் காணப்படவில்லை.

மார்போல் உடன்படிக்கையின் தொழில்நுட்ப இணைப்பு II - (அதிகப்படியான தீங்கு விளைவிக்கும் பொருட்களால் ஏற்படும் மாசுபாட்டின் கட்டுப்பாடு) தொடர்பாக உள்நாட்டு விதிமுறைகள் எதுவும் வெளியிடப்படவில்லை. மேலும், கடல் வழியாக பொதி செய்யப்பட்டு கொண்டு செல்லப்படும் தீங்கு விளைவிக்கும் பொருட்களால் ஏற்படும் மாசுபாட்டைத் தடுப்பதற்கான தொழில்நுட்ப இணைப்பு III இன் தேவைகளுக்கு இணங்கும் வரை கப்பல் பயணப்படாது இருப்பதை உறுதி செய்வதற்கான போதுமான சட்ட விதிகளை உள்நாட்டுச் சட்டத்தில் சேர்க்கவில்லை.

கப்பல்களால் ஏற்படும் காற்று மாசுபாட்டைத் தடுப்பதற்கான 06 தொழில்நுட்ப இணைப்புகளை அணுகுவதற்கு 2016 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட போதிலும். இந்த இணைப்பில் இலங்கை ஒரு தரப்பாக இருக்கவில்லை. கப்பல்களுக்கு பயன்படுத்தப்படும் பதுங்கு குழி **(Banker Fuel)** எரிபொருளின் தரத்தை சரிபார்க்க பொதுத்துறை தலையிடவில்லை. மற்றும் ஒரு கப்பல் சம்பந்தப்பட்ட விபத்து ஏற்பட்டால்

இதனால் கப்பலின் மீட்பு நடவடிக்கைகளில் இலங்கைக்கு செயற்படக்கூடிய வகையில் **(Salvage Convention)** மாநாட்டில் ஒரு தரப்பினராக காணப்படவில்லை.

எண்ணெய் கப்பல்கள் **(Oil Tankers)** நீங்கலாக ஏனைய கப்பல்கள் மூலம் இடம்பெறும் கடல்சார் மாசுக்குரிய பங்கர் உடன்படிக்கை மற்றும் நச்சு இரசாயனப் பொருட்களைக் கொண்ட கொள்கலப் போக்குவரத்தின் போது ஏற்படக்கூடிய கடல் விபத்துக்கள் தொடர்பான ஏற்படுத்தப்பட்ட சர்வதேச உடன்பாடான HNS உடன்பாடு (International Convention on Liability and Compensation or Damage in Connection with the carriage or hazardous and noxious substances by sea) 1976 ஆம் ஆண்டின் இழப்பீட்டை பெற்றுக்கொள்தல் தொடர்பான LLMC – 76/96 உடன்பாடு (convention on Limitation of liability for Maritine Claim) என்பவற்றில் இலங்கை ஒரு தரப்பாக காணப்படவில்லை.

நிலைப்படுத்தும் நீர் ஊடாக ஊடுருவுகின்ற அந்நிய சீவராசிகள் கடல் சுற்றாடலில் சேர்வதன் காரணமாக ஏற்படும் கடல் சுற்றாடல் மாசடைதலைக் குறைப்பதில் நிலைப்படுத்தும் நீர் முகாமைத்துவச் உடன்படிக்கைகளில் அங்கத்தவராக செயற்படுத்தல் முக்கியமான போதிலும், இந்த உடன்படிக்கையில் இலங்கை ஒரு தரப்பாக செயற்பட்டிருக்கவில்லை.

2020 செப்டம்பர் 03 அன்று இலங்கையின் தனித்துவமான பொருளாதார வலயத்தில் இடம்பெற்ற நியூ டயமன்ட் கப்பல் விபத்தால் கடல் சுற்றாடலுக்கு ஏற்பட்ட சேதம் பிரிவு 34 இன் கீழ் 2021 ஏப்ரல் 30 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், கப்பல்கள் மூலம் ஏற்படக்கூடிய அவசரகால இரசாயனக் கசிவை நிர்வகிப்பது தொடர்பாக எந்தத் திட்டமும் தயாரிக்கப்படவில்லை.

பௌதீக மற்றும் மனித வளங்களை வலுப்படுத்துவதன் மூலம் நிறுவன அபிவிருத்திச் செயற்பாடுகளை விரிவுபடுத்தி கப்பற் செயற்பாடுகளால் கடல் சுற்றாடலுக்கு ஏற்படக்கூடிய நிச்சயமற்ற தன்மைகளைக் கருத்தில் கொண்டு அவசர நிலைமைகளில் இருபத்தி நான்கு மணிநேரமும் 24/7 செயற்படக்கூடிய சேவை பொறிமுறையொன்றை தாபிக்கவேண்டியதன் முக்கியத்துவம் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அதன்படி, சர்வதேச உடன்பாடுகளிற்கு ஏற்ப உள்நாட்டுச் சட்டங்களைப் புதுப்பிப்பதன் மூலமும், கப்பல் நடவடிக்கைகளின் அபிவிருத்தி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பாராமரிப்புக்கான நிறுவன கட்டமைப்பின் மறுசீரமைப்பை விரைவுபடுத்துவதன் மூலமும் சேது சமுத்திர கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கடல் மார்க்கமாக செயல்படுவதற்கான சவால்களை சமாளிக்க முடியும் என பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது.

புகைப்படம்– கம்பல்கள் மூலம் இடம்பெறும் கடல் மாசடைதல்

இலங்கையின் கடற்கரை மற்றும் கடல்சார் தேசிய பூங்காக்கள் பாதுகாப்பு

பல்வேறுபட்ட கடலோர சுற்றுச்சூழல் முறைமைகளால் சூழ்ந்துள்ள இலங்கையின்

1,620 கிலோமீட்டர் நீளமுள்ள கடற்கரையும் கடல்சார் தேசிய பூங்காக்களும் தற்போது பல்வேறு மனித நடவடிக்கைகள் மற்றும் இயற்கை நிகழ்வுகளால் சேதமடைந்துள்ளன. அத்துடன், பவளப் பாறைகள், களப்புகள் மற்றும் முகத்துவாரங்கள் போன்ற இயற்கை அமைவிடங்களும், கடல்தாவரங்களும் இந்த நிலைமைகளால் பாதிக்கப்பட்டுள்ளன. பல்வேறு மனித நடவடிக்கைகள் மற்றும் இயற்கை நிகழ்வுகள் கடலோரப் பிராந்தியத்தின் நம்பகத்தன்மையை மோசமாகப் பாதித்துள்ளதுடன் இந்த நிலைமைகள் 2030 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளில் தீவிரமாக கருத்திற்கொள்ளப்பட வேண்டும் என்று நாம் கருதுகிறோம். இந்த கணக்காய்வின் நோக்கம், உள்ளூர், பிராந்திய மற்றும் தேசிய முயற்சிகள் மூலம் கடலோர மற்றும் கடலோர வளங்களின் பாதுகாப்பை ஆய்வு செய்தல், மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தலும் அதன் மூலம் உலகளாவிய நிலைபேறான வளர்ச்சிக்கு பங்களிப்பதுமாகும். இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் வகிபாகம் மற்றும் ஒழுங்குமுறைகளை மீளாய்வு செய்தல், அந்த பணிக்காக செயற்படுத்தப்பட்டுள்ள பல்வேறு செயற்திட்டங்களின் செயலாற்றலை மதிப்பீடு செய்தல் மற்றும் கரையோரப் பிரதேசங்கள் மற்றும் நீண்டகால சுற்றாடல் மீதான தற்போதைய சுற்றாடல் தாக்கங்கள் மற்றும் அவற்றால் எழக்கூடிய பிரச்சினைகள கண்டறிதல் என்பன இந்த கணக்காய்வின் உப நோக்கங்களாகும்.

கடலோர மற்றும் கடல்சார் தேசிய பூங்காக்களைப் பாதுகாப்பதற்காக எடுக்கப்பட்ட சட்ட விதிகளை ஆராய்தல், நடவடிக்கைகளை மதிப்பீடு செய்தல் மற்றும் கடல் அரிப்பினை அதிகரிக்கச் செய்கின்ற மனித நடவடிக்கைகள் மற்றும் கடல் அரிப்பினால் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதிகள் தொடர்பான விடயங்களை தெரிவுச் செவ்வையின் அடிப்படையில் ஆராய்வது அத்துடன் இதனுடன் தொடர்புடைய விஞ்ஞான ரீதியான நிபுணர் அறிக்கைகளை அடிப்படையாகக் கொள்ளல் என்பன இந்தக் கணக்காய்வின் நோக்கெல்லையாகும்.

இங்கு கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட 12 மாவட்டங்களில் உள்ள 45 இடங்கள் சிறப்பு முகாமைத்துவப் பகுதிகளாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்க வேண்டும், ஆனால் அவ்வாறு செய்யப்படவில்லை, இலங்கையின் தொன்மைகள் மற்றும் இலங்கையின் வரலாற்று அல்லது தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் கட்டடங்களை சிறந்த முறையில் பாதுகாக்க தொல்பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும், கடற்கரை மண்டலத்தில் அமைந்துள்ள தொல்பொருள் மதிப்புமிக்க இடங்களை கண்டறிந்து வெளியிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

பவளப்பாறை மறுசீரமைப்பு, கடல் புல் வளர்ப்பு, மணல் திட்டு மறுசீரமைப்பு மற்றும் கடல் களைகளுக்கு மிதக்கும் கடல் வளர்ப்பு **(Floating Marine Culture for sea weeds)** ஆகியவற்றில் கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ துறையின் நுட்பங்கள் போதுமானதாக இல்லை. மேலும், இறால் வளர்ப்பு, விவசாயம், வீட்டுக் கட்டுமானம், குடியேற்ற விரிவாக்கம், வீட்டு உபயோகம் மற்றும் வண்டல் மண் படிதல் போன்ற காரணங்களால் குளம் கரையோரங்கள் மற்றும் வெப்பமண்டல மற்றும் மிதவெப்ப மண்டலங்களில் மூடப்பட்ட விரிகுடாக்களுக்கு இடைப்பட்ட மண்டலத்தில் வளரும் சதுப்புநிலங்கள் சிதைந்து அழிக்கப்பட்டு வருகின்றன.

காலி மற்றும் மொரட்டுவை கரையோரப் பகுதிகளில் உள்ள முகத்துவாரம் மற்றும் களப்புகளை அண்மித்த சுற்றுச்சூழலைப் பொறுத்தமட்டில், சட்டவிரோத குப்பை கொட்டுதல், அனுமதியற்ற கட்டுமானங்கள், உப்புத்தன்மை மாற்றங்கள், கழிவுநீரை அகற்றுதல், முகத்துவாரத்தில் அடைப்பு, குளம் மற்றும் முகத்துவார எல்லை அளவீடுகள், எல்லைத் திருத்தங்கள் மற்றும் முகத்துவாரம் போன்ற அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியிருந்தது.

புகைப்படம– மொரட்டுவ கடற்கரை வலயம்

புகைப்படம– மொரட்டுவ கடற்கரை வலயம்

இலங்கைக்கு உரித்தான கடல் வலயத்தில் அதிக அளவில் ஆபத்திற்கு உள்ளாகியுள்ள கடல் புற்கள் அமைந்துன்ன இடங்களை வரைபடமாக்கல் மற்றும் பாதுகாக்கும் தேவைப்பாடுகள் இனங்காணப்பட்டு அதற்கு முன்னுரிமையளிக்க நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன், கடற்கரையை பாதுகாக்கும் பசுமை வலயங்களை உருவாக்குவதற்கு மற்றும் தற்போதுள்ள வலயங்களை பாதுகாப்பதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், கடல் ஆமைகளைப் பாதுகாப்பதிலும், ஆமைகள் பாதுகாப்பு மையங்களை ஒழுங்குபடுத்துவதிலும் போதிய கவனம் செலுத்தப்படவில்லை.

துறைமுகங்களில் குவிந்து கிடக்கும் பெருமளவிலான நார் கழிவுகளை சேகரித்தல், சேமித்தல், சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்காத வகையில் அகற்றுதல் மற்றும் மறுசுழற்சி செய்தல் ஆகியவற்றில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை. இலங்கையில் 35 மென்மையான கடற்பாறை வகைகளும் சுமார் 208 கடினமான கடற்பாறை வகைகளுகள் பல்வேறு மனித நடவடிக்கைகள் மற்றும் ஏனைய செயற்பாடுகளால் அழிக்கப்படுகின்றன. கடற்பாறைகள் மற்றும் மீன்களை கண்காணிப்தற்காக பயன்படுத்தப்படுகின்ற ”ஸ்னோக்ளின்” தொடர்பில் பொறுப்புவாய்ந்த தரப்பினரால் வழிகாட்டுதல்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், கடற்பாறைகளைக் கொண்ட பகுதிகளில் இயந்திரப் படகுகள் நங்கூரமிடுவதைத் தடுப்பதற்காக எந்த சட்டத்திட்டங்களும் ஒழுங்குவிதிகளும் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

பவளப் பாறைகளைப் பாதுகாப்பதற்காக 2018 ஆம் ஆண்டுக்கான கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திட்டத்தின் மூலம் முன்மொழியப்பட்டிருந்த 22 செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த பரிந்துரைத்திருந்த போதிலும், 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை

பவளப் பாறைகளைப் பாதுகாப்பதற்கான திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், மீன்பிடி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் மா வலைகள், லைலா மற்றும் சுருக்கு பண்ணை, கேச் வலைகள், டைனமைட் மற்றும் ரிப்பண்ணா முறைகளின் பயன்பாட்டினால் ஏற்படக்கூடிய பாதகமான நிலைமைகளைக் கண்டறிவதற்கான ஒழுங்குமுறை முறைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

2016 முதல் 2020 வரை, பாணந்துறை மீன்பிடித் துறைமுகப் படுகையில் இருந்து 11,600 கியூப் மணல் அகழப்பட்டிருந்ததுடன், அந்த மணல் அனைத்தும் கடற்கரையில் கொட்டப்படாமல் துறைமுகத்திற்கு வெளியே எடுத்துச் செல்லப்பட்டிருந்தமை ஆவணங்களின் படி அவதானிக்கப்பட்டது. இவ்வாறான நிலைமைகள் கரையோர அரிப்பு நிலைமைகளை பாதிக்கும் என அவதானிக்கப்பட்டது. மேலும், கடலோர மண்டலத்தில் அடையாளம் காணப்பட்ட உணர்திறன் பகுதிகளை (சரணாலயங்கள் மற்றும் காப்பகங்கள் உட்பட) பாதுகாப்பதில் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை.

கரையோர மணல் எல்லையை பராமரிக்காத காரணத்தினால் கரையோர வலயத்தில் அனுமதியற்ற கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டதுடன், கரையோர வலயத்தில் வனவிலங்கு சட்டங்கள் போதியளவு நடைமுறைப்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டது. மேலும், வனவிலங்கு மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டம் 469 இன் பிரிவு (2) இன் துணைப்பிரிவு (1) இன் படி டிசம்பர் 2020 க்குள் அறிவிக்கப்பட்ட 29 கடல் தேசிய பூங்காக்களுக்கு முறையான முகாமைத்துவ திட்டம் தயாரிக்கப்படவில்லை. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் **14.5** க்கு இணங்க, விஞ்ஞான தகவல்கள் மற்றும் தேசிய மற்றும் சர்வதேச சட்டங்களின்படி **2020** ஆம் ஆண்டளவில் கடலோர மற்றும் கடல் பகுதிகளில் **10** சதவீதத்தை பாதுகாக்க எதிர்பார்க்கப்பட்டுள்ள போதிலும், அந்த பகுதியில் **2** சதவீதத்தை மட்டுமே பாதுகாக்க முடிந்துள்ளமை வெளிப்படுத்தப்பட்டது.

மேற்கூறிய பாதகமான நிலைமைகளின் வளர்ச்சியுடன், 2025 ஆம் ஆண்டிற்குள், கடல் கழிவுகள் மற்றும் ஊக்கிகளின் மாசுபடுதல், குறிப்பாக நிலம் சார்ந்த நடவடிக்கைகளால் ஏற்படும் அனைத்து வகையான கடல் மாசுபாடுகளைத் தடுப்பது மற்றும் கணிசமாகக் குறைப்பது, கடலோரப் பகுதிகளில் ஈடுபடும் தரப்பினரின் கவனம். நீடித்த வளர்ச்சி இலக்குகளால் பாதுகாப்பு எதிர்பார்க்கப்படுகிறது என்பதால் கரையேபரப் பாதுகாப்பிற்காக தொடர்புடைய தரப்பினரின் கவனம் செலுத்தப்படுதல் அவசியம் ஆகும்.

கடலோர பாதுகாப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி விசேட கடற்கரை முகாமைத்துவ பிரதேசங்களாக பிரேரிக்கப்பட்ட இடங்களை வெளியிடுதல், கடற்தாவரங்களின் மீள் நடுகைக்குத் தேவையான வழிகாட்டுதல்களை தயாரித்து, வெளியிடுதல் மற்றும் கடற்தாவரங்களின் பாதுகாப்பிற்கான முன்னுரிமைகளை அடையாளம் காணல், முகத்துவாரங்களில் மணல் குவிவதைத் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் களப்புகள் மற்றும் முகத்துவாரங்களின் எல்லைகளை வரையறுத்தல், பவளப் பாறைகள் மற்றும் கடல் புற்களை பாதுகாத்துப் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், கடலோர பாதுகாப்பு மற்றும் கடலோர வள முகாமைத்துவ ஆலோசனை மன்றத்தின் கூட்டங்களை

நடத்துதல் மற்றும் ஆலோசனை மன்றத்தின் பணிகளை சட்டத்தின் விதிகளின்படி மேற்கொள்ளல், கடலோர வலயங்களில் அமைந்துள்ள தொல் பொருட்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளல், கடல்நீரின் தர பரிசோதனைக்கான நியமங்களை வழங்குதல் மற்றும் அதற்கிணங்க நடவடிக்கை எடுத்தல், ஆமைகள் பாதுகாப்பு நிலையங்களை பதிவுசெய்து உரியவாறு கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், மீன்பிடி துறைமுகங்களில் இருந்து அகற்றப்படுகின்ற படகுகள், பைபர் மற்றும் ஏனைய கழிவுகளை அகற்றுவதற்கான வழிமுறைகளை தயாரித்து அதன்படி செயற்படுதல், மீன்பிடி துறைமுகங்களிலிருந்து மணல் அகற்றும் வழிமுறைகள் குறித்த வழிகாட்டுதல்களை தயாரித்தல், அதன்படி செயற்படுதல் மற்றும் அதனைக் கண்காணித்தல். கடலோரக் கழிவுநீர் சுத்திகரிப்பு முறைகள் மற்றும் அகற்றலை முறைப்படுத்தி, அதனைக் கண்காணித்தல், கடல் சரணாலயங்களை வெளியிடுதல் மற்றும் அவற்றின் பாதுகாப்பிற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல், கடற்கரை இயற்கைப் பொழிவை பேணிச்சென்று நுழைவாயில்களை வெளியிடுதல் மற்றும் அறிக்கையில் இனங்காணப்பட்டுள்ள இந்த சிக்கல்களுக்குரி நிறுவன பணிப்பொறுப்புகளை உரிய முறையில் நடாத்திச்செல்லல் ஆகிய பரிந்துரைகள் அந்த அறிக்கையின் மூலம் வழங்கப்படுகின்றது.

இலங்கையில் நிலக்கீழ் நீர் முகாமைத்துவத்தின் சட்டரீதியான பொறிமுறை மற்றும் அதன் தொழிற்பாட்டினை மதிப்பீடு செய்தல்

பல மில்லியன் வருடங்களாக இருந்து புவியின் நிலப்பகுதியின் கீழ் சேர்ந்திருக்கும் நண்ணீரிலிருந்து 30 சதவீத அளவு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த போதும் வருடாந்த மின் உருவாக்க விகிதம் மிக குறைந்த பெறுமதியை எடுக்கும் நீர் நிலக்கீழ் நீர் எனப்படும் மத்திய மலைநாட்டில் நிறைபேறான நீர் வள மூலங்கள் அதிகமாக இருப்பதும் உலகில் ஏனைய நாடுகளை விட இலங்கையில் வருடாந்த சராசரி மழைவீழ்ச்சி உயர்ந்த பெறுமதியாக இருப்பதாலும் நில மேற்பரப்பு நீர் மற்றும் நிலக்கீழ் நீர் என்பனவற்றின் நிலைபேறான தன்மையை பேணுவதற்கு ஒரு காரணமாகும். நிலக்கீழ் நீரின் தன்மை மற்றும் போதுமான தன்மை தொடர்பாக இயற்கை மற்றும் மனித செயற்பாடுகள் தாக்கமளிப்பதுடன் தற்போது மனித யெற்பாடுகள் மூலம் ஏற்படும் பாதகமான தாக்கங்களிலும் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இலங்கையில் நிலக்கீழ் நீர் வகைப்படுத்தல் பிரதான வகைகளின் கீழ் காணப்படுவதுடன் இந்நிலக்கீழ் நீர் வகை இலங்கையில் வெவ்வேறு பிரதேசங்களில் காணக்கூடியதாக இருக்கின்றது.

2014 திசெம்பர் 24 ஆந் திகதிய 1894/3 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் இலங்கையில் நிலக்கீழ் நீர் அவற்றின் மூலங்கள் அவற்றின் போசிப்பு பிரதேசங்கள் மற்றும் காடுகளை பாதுகாத்தல் மற்றும் பாதுகாப்பது தொடர்பாக தேசிய கொள்கையின் பிரகாரம் நிலக்கீழ் நீர் முகாமைத்துவத்திற்காக இனங்காணப்பட்டிருந்த நிறுவனம் நீர் வள சபையாக இருந்த போதும் கணக்காய்வு திகதி வரையிலும் நிலக்கீழ் நீர் முகாமைத்துவத்திற்குரிய தேசிய கொள்கையொன்றை தயாரித்து செயற்படுத்தியிருக்கவில்லை. மேலும், எதிர்கால நிலத்தடி நீர் தேவையை பூர்த்தி செய்வதற்கும், அதற்குத் தயார்படுத்துவதற்கும் மாற்று முறைகளை அடையாளம் காண்பது போதுமானதாக இல்லை என்பது அவதானிக்கப்பட்டது.

1964 இன் 29 இலக்க நீர் வளச் சபை சட்டத்தின் 16(1) மற்றும் 16(2) பிரிவுகளின் பிரகாரம் குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக ஒவ்வொரு சந்தர்ப்பங்களில் அரசியலமைப்புச் சட்டங்களை உருவாக்கி அவற்றை வர்த்தமானியில் பிரசுரிப்பதன் மூலம் அது தொடர்பாக தேவையான சட்ட அதிகாரம் பெறப்படலாம் என்றாலும் 1964 ஆம் ஆண்டிலிருந்து 2000 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் நிலக் கீழ் நீர் பாதுகாப்பு தொடர்பான அரசியலமைப்பு சட்டம் வெளியிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2020 ஆம் ஆண்டு வரை 21 வருடங்களாக அத் தண்டப் பணம் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் நீர் வளச் வடிகாலமைப்புச் சபையின் தகவல்களின் படி 2020 ஒக்டோபர் 12 ஆம் திகதி வரை எந்தவொரு தண்டப் பணமும் அறவிடப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

வெவ்வேறு தேவைகளுக்காக நிலக் கீழ் நீரை எவ்வாறு, எந்த அளவிற்கு எடுக்கலாம் என்பதை தீர்மானித்தல் அத்துடன் மண்ணீர் போசணையை பாதுகாத்து நிலக் கீழ் நீரை உறிஞ்சுவதற்கு ஏற்பாடொன்று செய்யப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டதுடன், குழாய் கிணறு நிர்மாணிப்பதற்கான வழிகாட்டிகளை வெளியிடுதல் நீர் வளங்கள் சபையின் பணிப்பொறுப்பான போதிலும் 2020 ஆம் ஆண்டு வரையிலும் வழிகாட்டிகள் வெளியிடப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. தேசிய நீர் வழங்கள் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கீழ் அமைந்துள்ள நிலக் கீழ் நீர்ப் பிரிவும் இலங்கையில் குழாய்க் கிணறுகளை நிர்மாணிக்கும் நிறுவனமொன்றாக செயற்படுவதுடன் 2020 ஆகஸ்ட் 16 வரை நீர் வளச் சபையின் கீழ் பதிவைப் பெற்றுக் கொண்டிருக்கவில்லை.

நீர் உப்புத்தன்மையைக் கட்டுப்படுத்துவது தொடர்பான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது குறித்து நீர் வளங்கள் சபையினால் எந்த ஒரு தொடர் நடவடிக்கையும் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், குழாய் கிணறுகளில் இருந்து நீரைப் பெறும் நீர் ஆதாரங்களைக் கொண்ட பகுதிகளில் அனுமதியின்றி கட்டுமானம், சட்டவிரோதமாக நிலம் கையகப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் குறித்து நடவடிக்கை எடுக்க நீர் வளங்கள் சபைக்கு அதிகாரம் இல்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. இதன் மூலம் நீர் ஆதாரங்கள் உள்ள பகுதிகள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் வாய்ப்புகள் காணப்பட்டது.

நீரை போத்தலில் அடைக்கும் தொழிலில் அல்லது பானங்களின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள 77 வீதமான தொழில்கள் நீர் மாதிரிகளை நீர் வளச் சபைக்கு வழங்காததன் மூலம் அத் தொழில்கள் தொடர்பிலான ஒழுங்குமுறைகளில் போதிய ஏற்பாடுகள் அமுல்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இயற்கையான நீர் ஊற்றுக்கள் அல்லது நிலக்கீழ் நீரினை உபயோகித்து உற்பத்திகள் அல்லது சேவைகளை மேற்கொள்கின்ற ஒரு நிறுவனத்தில் அல்லது நிலையத்தில் முன்னறிவித்தலுடன் அல்லது இன்றி நாளின் எந்தவொரு பொருத்தமான நேரத்திலும் இந் நிலையங்களினுள் நுழைந்து பரிசோதனைகளை மேற்கொள்ளும் உரிமை நீர் வளச் சபைக்கு உள்ள போதிலும், மேற்குறிப்பிட்ட பரிசோதனைகள் குருணாகல், புத்தளம், இரத்தினபுரி மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் நாட்டின்

அனைத்து மாவட்டங்களும் உள்வாங்கப்படும் வகையில் பரிசோதனை மேற்கொள்ளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

நீர் வளச் சபையின் மூலம் இலங்கையில் நிலக்கீழ் நீரினை பாதுகாக்க வேண்டிய உணர்திறன் வலயங்களாக கற்பிட்டி, யாழ்ப்பாண தீபகற்பம் மற்றும் கொழும்பு – நீர்கொழும்பு கரையோரப் பிரதேசம் ஆகியன இனங்காணப்பட்டிருந்தன. இவ் வலயங்களில் நிலக்கீழ் நீரின் விஞ்ஞான ரீதியான அமைவின் அடிப்படையிலான ஒரு ஆய்வின் மூலம் உணர்திறன் வலயங்களாக இனங்காணப்பட்டிருந்ததுடன் அவை வர்த்தமானி அறிவித்தலின் மூலம் உணர்திறன் வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட வேண்டியிருந்தது. இனங்காணப்பட்ட உணர்திறன் வலயங்களை முறையாக முகாமை செய்யும் சந்தர்ப்பம் மற்றும் பாதுகாப்பதற்கான நடவடிக்கை எடுக்கும் ஆற்றல் ஆகியவற்றை வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியுமாக இருந்த போதும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

தற்போது புவியில் காணப்படும் நீர் பரப்புக்களில் இருந்து நீர் அதிகளிவில் பயன்படுத்துவது வெளிப்படுத்தப்பட்டதுடன் அது நிலக்கீழ் நீர் மீள் உருவாக்கத்தினை மிகவும் கூடுதலாக இருந்தது. ஆதலால் நிலக் கீழ் நீர் மீள் உருவாக்கம் நிலைபேறான நீர் முகாமைத்துவத்திற்காக மிகவும் முக்கியம் வாய்ந்த செயற்பாடாகும். எதிர்வரும் 05 வருடங்களில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் தற்போதைய பயன்பாட்டை விட 649 சதவீதம் மாதாந்த நீர் தேவை அதிகரிப்புக்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகவும் கம்பஹா மற்றும் வவுனியா / மன்னார் மாவட்டங்களில் நீர் பயன்பாடானது முறையே 251 வீதம் மற்றும் 230 வீதமாக அதிகரிக்கும் எனவும் அவதானிக்கப்படுகின்றது.

2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை 1,229 புதிய குழாய் கிணறுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் குழாய் கிணறுகள் அமைக்கும் போக்கின் பிரகாரம் கேகாலை, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் குழாய் கிணறுகளின் வளர்ச்சி 50 வீதத்தினை விட கூடுதலாக இருந்தது. இம்மாவட்டங்களில் குழாய்க் கிணறுகள் அமைப்பதன் மூலம் நீண்டகாலத்தில் நிலக்கீழ் நீர் பற்றாக்குறை ஏற்படக்கூடும் என அவதானிக்கப்பட்டது. இந்த மாவட்டங்களில் ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்படுவதால் நீண்டகாலமாக நிலத்தடி நீர் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும், இலங்கையில் நிலத்தடி நீர் மாசுபாடு தொடர்பாக நீரியல் நிபுணர்களால் இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக் கட்டுரைச் சோதனைகளின் மூலம் அடையாளம் காணப்பட்ட இலட்சம் மற்றும் லாக் அல்லாத ஆதாரங்கள் குறித்து நீண்டகால செயல்திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை அவதானித்த போதிலும், அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

நகரமயமாக்கப்பட்ட பகுதிகளில் நடத்தப்பட்ட ஆய்வுகளின்படி, அந்த பகுதிகளில் நிலத்தடி நீரில் அதிக நைட்ரேட்டுகள் கண்டறியப்பட்டது, இது அந்த பகுதிகளில் இருக்கும் சுகாதார நிலைமைகள் மற்றும் மண்ணின் வடிகால் பண்புகளால் ஏற்படுவதாக தெரியவந்துள்ளது. இருப்பினும், நைட்ரேட் கலவை அதிகரிப்பதற்கான காரணங்கள் மற்றும்

அவற்றின் கட்டுப்பாடு குறித்து கவனம் செலுத்தப்படவில்லை.

புகைப்படம– நிலத்தடி நீர்ப் பயன்பாடு

புகைப்படம– நிலத்தடி நீர்ப் பயன்பாடு

இதன் பிரகாரம், நிலத்தடி நீர் அபிவிருத்தி தேவைப்பாட்டினை போன்றே, நீர் பாதுகாப்பு தேவைப்பாட்டினை முன்னுரிமையாக கொண்டு சட்டக் கட்டமைப்பொன்றினை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்தல் மூலம் 2030 ஆம் ஆண்டளவில் நிலைபேறான நிலத்தடி நீர் முகாமைத்துவத்தினை அடைமவதற்காக பங்களிக்க முடியும் என்பது அவதானிக்கப்பட்டது.

இலங்கையின் மாகாணங்களின் பிரகாரம், நிலக்கீழ் நீர் மட்டங்களின் தன்மை மற்றும் தரத்தின் அடிப்படையில் நிலக்கீழ் நீர் கொள்கையை நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்தல், நிலக்கீழ் நீர் முகாமைக்கான திட்டவட்டமான பொறுப்பை உறுதி செய்தல், நிலக்கீட் நீரின் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பின் அடிப்படையில் நோக்கங்களை ஏற்படுத்தி செயற்படுத்தல், நிலக்கீழ் நீர் முகாமைத்துவம் தொடர்பான நீர்வள சபையின் பங்களிப்பு முக்கியமானது என்பதால் நிலக்கீழ் நீர் பாதுகாப்பிற்காக தெரிவிக்கப்பட்டுள்ள கவனம் செலுத்துதல், நிலக்கீழ் நீர் பாதுகாப்பு நடவடிக்கைகளை திட்டமிடுவதில் வடக்கு, வடமேல், ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களுக்கு முன்னுரிமை அளித்தல், நிலக்கீழ் நீரின் இரசாயனவியல் கலவையை மாற்றும் பல்வேறு மனித நடவடிக்கைகளின் பரிணாமம் இருப்பதால் நிலக்கீழ் நீரின் இரசாயன பகுப்பாய்வுகளைப் பெற்றுக்கொண்டு அதற்கரிய பரிந்துரைகளை செயல்படுத்தல், அரச திணைக்களங்கள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பொதுக் கூட்டுத்தாபனங்கள் என்பவற்றுடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும், நீர்வள புவியியல், தொடர்பான தரவுக் கணிப்பீடு, அது தொடர்பான ஆராய்ச்சி புள்ளிவிபர ஆய்வுத் திட்டங்கள் மற்றும் முன்மொழிவுகளின் அடிப்படையில் அறிக்கைகளின் பகுப்பாள்ஞ மற்றும் நாட்டில் நிலக்கீழ் நீர் வளங்களை பாதுகாத்தல், பயன்புடுத்தல் மற்றும் அபிவிருத்திக்கு உரியதாக செயற்படுத்தப்படும் செயற்திட்டங்கள் தொடர்பாகவும் அச் செயற்திட்டங்களை பராமரிக்கும் இயலுமை பயன்பாடு மற்றும் பொருளாதார சாத்தியவளத்தை மதிப்பீடு செய்தல் ஆகிய பரிந்துரைகள் இந்த கணக்காய்வு அறிக்கையின் ஊடாக வழங்கப்பட்டது.

புலனாய்வுக் கணக்காய்வு

புலனாய்வுக்கு உட்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்/ சம்பவங்கள்/ நிறுவனங்கள்

- கம்பஹா, அத்தனகல்ல மற்றும் மினுவாங்கொட ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டத்தின் நிர்ணயிக்கப்பட்ட பகுதி
- கொழும்பு மாவட்டத்தில் கிழக்கு நகர் நீர் வழங்கல் செயற்திட்டம்
- கொடவில கழிவுப்பொருள் சேகரிப்பு நிலையம்
- உயன்வத்த உதைப்பந்தாட்ட விளையாட்டரங்கில் அனுமதியின்றி விளம்பர பலகைகளை பொருத்துதல்.
- மாத்தறை மாநகர சபையின் ஆட்சேர்ப்புக்கள்.
- உமா ஓயா கீழ் பள்ளதாக்கு அபிவிருத்தி செயற்திட்டத்திற்குரிய வேலையாட்கள் சேவைகளை வழங்குகின்ற நிறுவனத்திற்காக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்பு பணத்தை செலுத்துதல்.
- அக்குறனை பிரதேசத்தில் செயற்படுத்தப்படுகின்ற கால்நடை உணவு உற்பத்தி தொழிற்சாலை.
- அனுராதபுரம் சிவலா குளம் கமநல சேவை நிலையம்.
- கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனத்தினால் அரிசி இறக்குமதி செய்தல்
- காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குரிய காணியை தனியார் தரப்பினரால் விற்பனை செய்தல்
- வரையறுத்த கல்லோயா பெருந்தோட்ட (தனியார்) கம்பனியின் செயற்பாடுகள்
- மத்திய கலாச்சார நிதியத்தின் செயற்பாடுகள்.
- நெல் சந்தைப்படுத்தும் சபையின் கடன்பட்டோர் மீதி
- தேசிய மொழிக் கல்வி மற்றும் பயற்சி நிறுவனத்தின் நிருவாகம்.

புலனாய்வுக் கணக்காய்வு

அரசாங்க கணக்காய்வு தொடர்பாக எனக்கு உள்ள நியதிச் சட்ட அதிகாரத்தினை அமுல்ப்படுத்துவதின் இலகு மற்றும் முறைமைப்படுத்துவதற்காக கணக்காய்வு பதவியணியினர் பல்வேறு விடயம் சார்ந்த கணக்காய்வு பிரிவுகளில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். அதன் போது சில கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்கள் தொடர்பான ஏதாவது கொடுக்கல் வாங்கல்கள் அல்லது சம்பவங்கள் தொடர்பாக புலனாய்வு ரீதியான கணக்காய்வினை மேற்கொள்ளும் தேவைப்பாடு உருவாகுகையில் அவ்வாறான புலனாய்வு கணக்காய்வு செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக மற்றும் அவ்வாறான கணக்காய்விற்கு உதவியளிப்பதற்காக தேசிய கணக்காய்வு அலுவகத்தில் விசேட புலனாய்வு மற்றும் தடய கணக்காய்வு பற்றிய பயிற்சிகள் மற்றும் அனுபவங்களைக் கொண்ட உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய விசேட புலனாய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் எனக்கு கிடைக்கின்ற பொது மக்கள் முறைப்பாடுகளும், அரசாங்க கணக்குகள் தொடர்பான மற்றும் பொது தொழில் முயற்சிகள் தொடர்பான குழுக்களின் தெரியப்படுத்துதல்கள் அதேபோல நிறுவனத் தலைவர்களாலும் வெகுசன ஊடகங்களாலும் வெளிப்படுத்தப்படுகின்ற விடயங்களும் என்னால் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்ற ஏனைய தேவைப்பாடுகளையும் கவனத்தில் கொண்டு விசேட புலனாய்வுக் கணக்காய்வுக்கு உட்படுத்துதல் பொருத்தமானது என என்னால் தீர்மானிக்கப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் இப்புலனாய்வுப் பிரிவின் கணக்காய்விற்கு உட்படுத்தப்படும். சில சந்தர்ப்பங்களில் இப்பிரிவின் உத்தியோகத்தர்கள் கணக்காய்வு பிரிவு்.கிளைக்கு தற்காலிகமாக இணைத்துக்கொள்ளப்பட்டு விசேட புலனாய்வுகள் மேற்கொள்ளப்படும் 2021 ஆம் ஆண்டின் போது அவ்வாறு விசேட புலனாய்விற்கு உட்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களின் தொகுதிகளுக்கு மத்தியில் பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான பரீட்சிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

புலனாய்வுக்கு உட்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்/ சம்பவங்கள்/ நிறுவனங்கள்

1. கம்பஹா, அத்தனகல்ல மற்றும் மினுவாங்கொட ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டத்தின் நிர்ணயிக்கப்பட்ட பகுதி
2. கொழும்பு மாவட்டத்தில் கிழக்கு நகர் நீர் வழங்கல் செயற்திட்டம்
3. கொடவில கழிவுப்பொருள் சேகரிப்பு நிலையம்
4. உயன்வத்த உதைப்பந்தாட்ட விளையாட்டரங்கில் அனுமதியின்றி விளம்பர பலகைகளை பொருத்துதல்.
5. மாத்தறை மாநகர சபையின் ஆட்சேர்ப்புக்கள்.
6. உமா ஓயா கீழ் பள்ளதாக்கு அபிவிருத்தி செயற்திட்டத்திற்குரிய வேலையாட்கள் சேவைகளை வழங்குகின்ற நிறுவனத்திற்காக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்பு பணத்தை செலுத்துதல்.

7. அக்குறனை பிரதேசத்தில் செயற்படுத்தப்படுகின்ற கால்நடை உணவு உற்பத்தி தொழிற்சாலை.

8. அனுராதபுரம் சிவலா குளம் கமநல சேவை நிலையம்.

9. கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனத்தினால் அரிசி இறக்குமதி செய்தல்

10. காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குரிய காணியை தனியார் தரப்பினரால் விற்பனை செய்தல்

11. வரையறுத்த கல்லோயா பெருந்தோட்ட (தனியார்) கம்பனியின் செயற்பாடுகள்

12. மத்திய கலாச்சார நிதியத்தின் செயற்பாடுகள்.

13. நெல் சந்தைப்படுத்தும் சபையின் கடன்பட்டோர் மீதி

14. தேசிய மொழிக் கல்வி மற்றும் பயற்சி நிறுவனத்தின் நிருவாகம்.

எவ்வாறாயினும் 2021 ஆம் ஆண்டில் காணப்பட்ட கொவிட் தொற்று நோய் நிலைமையில் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக வெளியே செல்வதற்கு இருந்த மட்டுப்படுத்தப்பட்ட நிலைமையினைப் போல கணக்காய்வு மற்றும் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்களின் பதவியணியினர் அலுவலகத்திற்கு வருகை தந்து கடமைகளை நிறைவேற்றுதல் ஒப்பீட்டளவில் குறைவடைதல் இப்புலனாய்வுப் பிரிவின் கடமைகளுக்கு மட்டுப்படுத்துதல் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இப்புலனாய்வுப் பிரிவினால் வெளிப்படுத்தப்பட்ட சில அவதானிப்புக்கள் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 மற்றும் 12 ஆம் பிரிவுகளின் பிரகாரம் வழங்கப்பட வேண்டிய அறிக்கைகளிலும் அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கப்படுகின்ற விசேட அறிக்கைகளிலும், அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுகின்ற அறிக்கைகளிலும் பொருத்தமான வகையில் உள்ளடக்கப்படுவதுடன் சில அவதானிப்புக்கள் முகாமைத்துவத்திற்கு வழங்கப்படுகின்ற அறிக்கைகளிலும் உள்ளடக்கப்படுகின்றன.

எவ்வாறாயினும் புலனாய்வுக் கணக்காய்வுகளுக்கு ஒப்பீட்டளவில் அதிக காலம் எடுத்தல், புலனாய்வு அவதானிப்புக்களுக்காக பதில் வழங்குவதற்கு அதிக காலத்தைப் பெற்றுக்கொள்வதனைப் போல அப்பதில்களை மீண்டும் மீண்டும் மீளாய்வு செய்ய வேண்டி ஏற்படுதல் ஆகிய காரணங்களால் ஒவ்வொரு ஆண்டின் போதும் மேற்கொள்ளப்படுகின்ற புலனாய்வுக் கணக்காய்வின் அவதானிப்புக்களை மேலே குறிப்பிட்ட அறிக்கைகளில் உள்ளடக்குதல் பெரும்பாலும் அடுத்துவரும் ஆண்டுகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்

விடயங்கள்
2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலைமைக்கூற்று
நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் அடிப்படை
2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி செயலாற்றல் கூற்று
2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்று		
	உள்ளபடியான	
	2021 ரூபா	**2020 ரூபா**
நிதி சாராத சொத்துக்கள்		
ஆதனம், பொறி மற்றும் உபகரணம்	1,452,785,677	525,720,485
நிதிச் சொத்துக்கள்		
முற்பணக் கணக்குகள்	224,242,476	228,179,389
காசும் காசுக்கு சமமானவையும்	-	64,784
மொத்தச் சொத்துக்கள்	**1,677,028,153**	**753,964,658**
தேறிய சொத்துக்கள் / உரிமைத்துவம்		
திறைசேரிக்கான தேறிய சொத்துக்கள்	49,419,013	115,790,810
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்	1,452,785,677	525,720,485
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்		
நடைமுறைப் பொறுப்புக்கள்		
வைப்புக் கணக்குகள்	174,823,463	112,388,579
கட்டுநிதி மீதி	-	64,784
மொத்தப் பொறுப்புக்கள்	**1,677,028,153**	**753,964,658**

இந்த நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புகள் மூலம் வெளிப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளவாறு மிகப் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பிரயோகிக்கப்பட்டுள்ளதுடன், மேற்படி இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அதனுடன் தொடர்புடைய கணக்குளிற்கான குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குகளிற்கான தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் கணக்கிணக்கம் செய்யப்பட்டுள்ளன என்றும் அவை சரியானவை என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

ஒப்பம்./டபிள்யூ. பி. சீ. விக்ரமரத்ன.
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

2022 பெப்ரவரி 28 ஆந் திகதி

ஜீ.எஸ். கருணாரத்ன

பிரதான கணக்காளர்

2022 பெப்ரவரி ஆந் திகதி

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் படிவம்

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் அரசாங்கக் கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்கள் 6 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன. ஆந்த வழிகாட்டல்களிலுள்ள பின்வரும் அடிப்படைகளைப் பிரயோகித்து 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று என்பன தயாரிக்கப்பட்டுள்ளன.

அறிக்கையிடல் காலப்பகுதி

இந்த நிதிக்கூற்றுக்களிற்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2020 சனவரி 01 இல் தொடங்கி திசெம்பர் 31 இல் முடிவடையும் நிதி ஆண்டாகும்.

தயாரிப்பிற்கான அடிப்படை

இந்த நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுக்கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயங்கள் மீள மதிப்பிடப்பட்ட பெறுமதிகளிற்கு சீராக்கப்பட்டுள்ளன. வேறுவகையில் குறிப்பிடப்படாதவிடத்து கணக்குகள் மேம்படுத்திய காசு முறையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய தொகையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

வருமானங்களை இனங்காணல்

கைமாறுகின்ற மற்றும் கைமாற்றமற்ற வருமாங்கள் அவை கிடைக்க வேண்டிய காலஎல்லை கருத்திலெடுக்கப்படாது, காசு கிடைக்கும் காலத்தில் வருமானமாக இனங்காணப்படுகின்றன.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை இனங்கண்டு அளவிடுதல்

சொத்துக்களிலிருந்து எதிர்கால பொருளாதார நலன்கள் நிறுவனத்திற்கு கிடைப்பது உறுதியாக காணப்பட்டு, அச்சொத்துக்களை நம்பகரமாக அளவிடக் கூடியதாக இருப்பின் அவை ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என இனங்காணப்படுகின்றன.

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கிரயத்தில் இனங்காணப்படுவதுடன் கிரய வடிவம் சம்பந்தப்படாதிருக்கும் சந்தர்ப்பங்களில் மீள விலைமதிக்கப்பட்ட பெறுமதிகள் பிரயோகிக்கப்படுகின்றன.

ஆதனம், பொறி மற்றும் உபகரண ஒதுக்கம்

இந்த ஒதுக்கக் கணக்கு ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஒப்பீட்டுக் கணக்காகும்.

காசும் காசுக்கு சமமானவைகளும்

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டில் புழக்கத்திலுள்ள பண நோட்டுக்களும் குற்றி நாணயங்களும் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளில் உள்ளடங்கியுள்ளன.

2021 திசெம்பர் 31 ஆந் திகதயில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றல் கூற்று

பாதீடு 2021 ரூபா		உள்ளபடியானது 2021 ரூபா	மீள சீராக்கப்பட்டது 2020 ரூபா
-	**வருமானப் பெறுகைகள்**	348,678,099	302,494,749
-	வருமான வரி	-	-
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரிகள்	-	-
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	-	-
220,000,000	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	348,678,099	302,494,749
220,000,000	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**	348,678,099	604,989,498
-	**வருமானமற்ற பெறுகைகள்**		
-	திறைசேரி பணிமுற்பணங்கள்	1,426,015,000	1,420,640,000
-	வைப்புக்கள்	138,531,867	316,938,095
55,000,000	முற்பணக் கணக்குகள்	83,398,507	63,638,620
	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்	4,570,132	17,382,954
55,000,000	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)**	1,652,515,506	1,818,599,669
275,000,000	**மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)**	2,001,193,605	2,423,589,167
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)	68,514,459	53,256,963
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)	1,932,679,146	2,370,332,204
	கழி : செலவினம்		
-	**மீண்டுவரும் செலவினம்**	-	-
1,942,750,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	1,579,046,154	1,451,777,938
310,900,000	ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள்	242,889,315	273,604,910
16,500,000	மானியங்கள், கொடைகள மற்றும் மாற்றல்கள்	13,168,281	14,628,903
-	வட்டிக் கொடுப்பனவுகள்	-	-
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	34,698	141,401
2,270,150,000	**மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)**	1,835,138,448	1,740,153,152
	மூலதனம் செலவினம்		
35,500,000	மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	7,415,964	21,285,201
12,500,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	4,670,023	19,016,378
-	மூலதன மாற்றல்கள்	-	-
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	-	-
20,000,000	திறன் விருத்தி	1,445,665	323,300
-	ஏனைய மூலதனச் செலவினங்கள்	-	-
68,000,000	**மொத்த மூலதனச் செலவினம் (எ)**	13,531,652	40,624,879
	வைப்புக் கொடுப்பனவுகள்	76,096,982	266,873,212
	முற்பணக் கொடுப்பனவுகள்	79,461,594	65,483,738
	ஏனைய பிரதான பேரேட்டு கொடுப்பனவுகள்	4,570,132	17,382,954
	மொத்த பிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)	160,128,708	349,739,904
	வைப்புக் கொடுப்பனவுகள்	2,008,798,808	2,130,517,935
		-	-
2,338,150,000	**டிசம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ஒ = (உ-ஐ)**	(76,119,662)	239,814,269
	கட்டுநிதி இணக்க அறிக்கையின்படி மீதி	(76,119,662)	(62,680,480)
	டிசம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதி மீதி		
		(76,119,662)	(62,680,480)

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று		
	உண்மை நிலை	
		திருத்தப்பட்ட
	2021 ரூபா	2020 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	348,678,099	302,494,749
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்		
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	77,718,554	72,347,403
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	1,426,015,000	1,420,650,000
முற்பணங்களை அறவிடல்	85,093,512	65,260,012
வைப்புக்களின் பெறுகை	138,531,867	316,938,095
ஏனைய பிரதான பேரேட்டு பெறுகைகள்	4,570,132	17,382,954
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	2,080,607,164	2,195,073,213
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள்	1,830,269,066	1,745,623,520
மானியங்களும் மாற்றல் கொடுப்பனவுகளும்	13,168,281	14,628,903
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	3,567,631	12,026,740
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	68,514,459	53,256,963
முற்பணக் கொடுப்பனவுகள்	79,750,590	66,264,543
வைப்புக் கொடுப்பனவுகள்	76,096,982	266,873,212
ஏனைய பிரதான பேரேட்டு கொடுப்பனவுகள்	4,570,132	17,382,954
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	2,075,937,141	2,176,056,835
தொழிற்பாடடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	4,670,023	19,016,378
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்	-	
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை		-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
பௌதீகச் சொத்துக்களின் கொள்வனவு அல்லது நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	4,670,023	19,016,378
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	4,670,023	19,016,378
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	(4,670,023)	(19,016,378)
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்	-	-

வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	-	-
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)		
ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	-	-

2021 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கைகள்

விடயம்
• மனம்பிட்டிய மணல் அகழ்தல் செயற்திட்டம் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை • அக்ரஹார காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை • ஹிங்குரான சீனித் தொழிற்சாலையின் செயற்பாட்டு பணிகளுக்காக தாபிக்கப்பட்ட வ/ப கல்லோயா பெருந்தோட்ட (தனியார்) கம்பனியின் தொழிற்பாடு தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை

2021 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கைகள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 154(1) உறுப்புரை மற்றும் 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 13ஆம் பிரிவின் பிரகாரம், விசேட கணக்காய்வு அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். மேலும், தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் கணக்காய்வுக்குட்படுத்தப்படும் அமைச்சுக்கள், திணைக்களங்கள், சபைகள் மற்றும் ஏனைய நிறுவனனங்களுக்குரியதாக இந்த அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த விசேட கணக்காய்வு அறிக்கைகளை வெளியிடும் போது பொது முயற்சிகள் தொடர்பாக கணக்குகள் குழு, அரசாங்க கணக்குகள் குழுவினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களும் கணக்காய்வு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் அறிவுறுத்தல்களும், தேசிய மற்றும் கால அடிப்படையிலான முக்கியத்துவங்கள் தொடர்பில் கவனம் செலுத்தும் ஊடக வெளிப்படுத்தல்கள் அல்லது மக்கள் பிரதிநிதிகள் ஆகிய விடங்களை கருத்திற்கொண்டு எனக்கு சாட்டப்பட்டுள்ள தற்றுணிபு அதிகாரத்தின் அடிப்படையில் விசேட கணக்காய்வு அறிக்கைக்கான விடயங்கள் தீர்மானிக்கப்படும்.

அட்டவணை இலக்கம் 06 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2021ஆம் ஆண்டின் போது 03 விசேடக் கணக்காய்வு அறிக்கைகள் வெளியிடப்பட்டன. 2020 ஆம் ஆண்டின் போது 18 விசேட கணக்காய்வு அறிக்கைகள் வெளியிடப்பட்ட போதிலும், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நாட்டில் நிலவிய பாதகமான நிலைமைகள் காரணமாக 2021 ஆம் ஆண்டிள் போது வெளியிடப்பட்ட இந்த அறிக்கைகளின் எண்ணிக்கை குறைவடைவதற்கு காரணமாக அமைந்தது. 2021 ஆம் ஆண்டின் போது வெளியிடப்பட்ட அனைத்து விசேட கணக்காய்வு அறிக்கைகளும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அந்த அறிக்கை தொடர்பில் அக்கறை செலுத்தும் தரப்பினரின் பயன்பாட்டுக்காக தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் வலைதளத்திலும் அந்த அறிக்கைகளை மூன்று மொழிகளிலும் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொடர் இலக்கம்	அறிக்கையின் இலக்கம்	அறிக்கையின் பெயர்	அறிக்கையின் திகதி	அறிக்கையை வெளியிடுவதற்கு பின்புலமாக அமைந்த விடயங்கள்
01	SPR/2021/01	மனம்பிட்டிய மணல் அகழ்தல் செயற்திட்டம் தொடர்பான விசேட	2021 சனவரி 29	வெள்ளத்தினை கட்டுப்படுத்தலும், கொழும்பு மற்றும் ஏனைய பிரதேசங்களில் காணப்படும் மணல் பற்றாக்குறையை குறைப்பதனையும் நோக்காகக் கொண்டு உச்ச நீதிமன்றத்தால் ஜீஎஸ்எம்பீ தொழில்நுட்ப சேவைகள்

		கணக்காய்வு அறிக்கை		கம்பனிக்கு மணல் அகழ்வ மற்றும் விற்பனைப் பணிகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அந்த செயற்திட்டத்தின் பணிகளை கம்பனிக்கு ஒப்படைத்த பின்னரும் செயற்திட்டத்தின் பணிகளை முன்னெடுப்பதில் பல்வேறு முரண்கேடுகள் நிகழ்வதாக மக்களின் முறைப்பாடுகள் கிடைத்தமையும், ஊடகங்களினூடாக பல்வேறு அறிக்கைகள் வெளியிடப்பட்டமையும், கணக்காய்வினால் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் போது இந்த விடயத்திற்கு உரிய பல்வேறு பிரச்சினைகளை இனங்காணக்கூடியதாக இருந்தமையின் காரணத்தால் 2018 இன் 19ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.
02	SPR/2021/02	அக்ரஹார காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை	2021 மார்ச் 10	அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க சேவையிலுள்ள அனைத்து உத்தியோகத்தர்கள் மற்றும் அக்குடும்ப அங்கத்தவர்களின் வாழ்க்கை நிலமையினை மேம்படுத்துவதனை அடிப்படைக் குறிக்கோளாகக் கொண்டு அரசாங்க நிருவாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் மூலம் அக்ரஹார காப்புறுதி முறைமையானது 1997 ஆம் ஆண்டின் போது அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இக்காப்புறுதி நலன்முறைமையிலிருந்து

				எதிர்ப்பார்த்த நலன்கள் நலன்பெறுனர்களுக்கு முறையாகக் கிடைப்பதில்லை என பல சந்தர்ப்பங்களில் கணக்காய்விற்குத் தகவல்கள் கிடைத்திருந்தன. அத்தகவல்களைப் பரீட்சித்த போது பெற்றுக் கொள்ளப்பட்ட அவதானிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் எனக்குக் கிடைத்துள்ள அதிகாரத்தின் அடிப்படையில் அக்ரஹார காப்புறுதியின் செயற்பாடுகள் தொடர்பாக மேலும் மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்புக்களின் பிரகாரம் இனங்காணப்பட்ட தகவல்களை உள்ளடக்கி இந்த விசேட கணக்காய்வு அறிக்கை வழங்கப்படுகின்றது.
03	SPR/2021/03	ஹிங்குரான சீனித் தொழிற்சாலையின் செயற்பாட்டு பணிகளுக்காக தாபிக்கப்பட்ட வ/ப கல்லோயா பெருந்தோட்ட (தனியார்) கம்பனியின் தொழிற்பாடு தொடர்பான விசேட	2021 நவம்பர் 23	GOPL கம்பனியின் செயற்பாட்டில் காணப்படும் சிக்கல்கள் என இனங்காணப்பட்ட சில துறைகள் தொடர்பில் கருத்து தெரிவித்து கரும்பு, சோளம், மர முந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளடங்களான சிறு பெருந்தோட்டப் பயிர்களின் அபிவிருத்தியுடன் தொடர்புடைய கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் செயலாளரால் எனக்கு முன்வைக்கப்பட்டிருந்த கோரிக்கையினையும் கருத்திற்கொண்டு இலங்கை சனநாய சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) ஆம்

		கணக்காய்வு அறிக்கை		உறுப்புரையின் பிரகாரம் எனக்கு அரச கம்பனியொன்றை கணக்காய்வு செய்வதற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஊடாக எனக்கு கிடைத்துள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும் 2017ஆம் ஆண்டு முதல் இந்த கம்பனியின் வருடாந்த நிதிக் கணக்காய்வில் போது இனங்காணப்பட்ட விடயங்களையும் அடிப்படையாக கொண்டு இந்த கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

அட்டவணை இல. 06 - 2021ஆம் ஆண்டின் போது வெளியிடப்பட்ட விசேடக் கணக்காய்வு அறிக்கைகள்

2021ஆம் ஆண்டின் போது வெளியிடப்பட்ட அறிக்கைகள் பொழிப்பாக்கப்பட்டு இந்த அத்தியாயத்தில் தரப்பட்டுள்ளது

மனம்பிட்டிய மணல் அகழ்தல் செயற்திட்டம் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை

மகாவலி நதி பொலனறுவை மாவட்டத்தின் மனல்பிட்டிய உள்ளடங்கலாக சோமாவதிய பிரதேசத்தின் வெற்று நிலமொன்றினை ஊடறுத்துப் பாய்வதன் காரணமாக ஆற்றின் மேலுள்ள பிரதேசங்களிலிருந்து அடித்துச் செல்லப்படும் மணல் அந்த பிரதேசத்தில் தொடர்ச்சியாக சேருகின்றது. இந்த நிலைமை காரணமாக ஆற்றின் நீர் பாய்ந்து செல்வதற்கு தடை ஏற்படுவதுடன், மழைக் காலங்களில் மகாவலி ஆறு பெருக்கெடுப்பதன் காரணத்தினால் மனம்பிட்டிய மற்றும் கல்லேல்ல பிரதேசம் வெள்ளத்திற்கு உள்ளாகின்றமையும் அதன்மூலம் பிரதேசத்தில் தங்கியுள்ளவர்களின் வீடுகள், பயிர் நிலங்கள் மற்றும் காணிகள் மற்றும் பொலனறுவை - மட்டக்களப்பு பிரதான வீதி வெள்ளநீரில் மூழ்கின்றமை பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இடம்பெறுகின்றது. இந்த மணல் தங்குகின்றமை மனம்பிட்டிய உள்ளடங்கிய சோமாவதி பிரதேசத்தின் வாழ்வாதார வலயத்தினுள் வியாபித்துள்ளது. இந்த பிரதேசத்தில் வெள்ளநிலைமையை கட்டுப்படுத்துவதற்கு கொழும்பு மற்றும் ஏனைய பிரதேசங்களில் காணப்படும் மணல் பற்றாக்குறையை தீர்ப்பதற்குமாக உச்சநீதிமன்றத்தினால் 2008 மார்ச் 31 ஆந் திகதி வழங்கிய SC(F/R)No 81/04 ஆம் இலக்க வழக்குத் தீர்ப்பின் மூலம் மனம்பிட்டிய பிரதேசத்தில் மணல் அகழ்தல் மற்றும் விற்பனை செய்தல் ஜீஎஸ்எம்பீ தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த கம்பனியினால் 2008 ஆம் ஆண்டு முதல் மனம்பிட்டியவில் மணல் அகழும் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டவாறு உள்ளது.

வெள்ள நிலைமையை கட்டுப்படுத்தல் மணல் அகழும் செயற்திட்டத்தில் ஒரு நோக்கமான

போதிலும் அதற்காக முறையான திட்டமொன்றின் அடிப்படையில் மணல் அகழ்தல் இடம்பெறாமையும், மனம்பிட்டியவின் பாலத்தின் மேல் உள்ள பிரதேசத்தில் சுமார் 2.7 கிலோமீற்றர்கள் வரையான வரையிலும் மணல் அகற்றப்படுகின்றமை, ஆற்றின் மேலுள்ள பிரதேசத்தில் மணல் அகழும் போது ஏற்படும் வாழ்வாதார வலயத்தினை பயன்படுத்துவதற்கு அங்கீகாரம் இல்லாதிருந்தமை போன்ற காரணங்களின் அடிப்படையில் மணல் அகழ்தல் வெள்ளத்தினை கட்டுப்படுத்தும் வகையில் இடம்பெறாமையினால் வெள்ள நிலைமையானது தொடர்ச்சியாக ஏற்பட்டவாறு இருந்தது.

மணல் அகழுவதற்காக 2020 யூலை 31ஆந் திகதியில் உள்ளபடியாக கம்பனியால் புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க பணியகத்தின் திறன்கள் அகழ்வு பத்திரங்கள் 102 இனை பெற்றுக்கொண்டிருந்ததுடன் வலயத்தினுள் 221 அகழ்வு நிலையங்கள் பதிவு செய்யப்பட்டு அவற்றுள் 190 அகழ்வு நிலையங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டவாறு காணப்பட்டன. 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளினுள் சுதந்திர நிதஹஸ் டிப்பர் வாகன சங்கம் எனும் பெயருடைய சங்கத்தின் அங்கத்தவர்கள் மணல் அகழும் நிலையங்களின் பிரதிநிதிகளாக முறையற்ற விதத்தில் நியமிக்கப்பட்டு ஆற்றின் மேல் பகுதியில் 261 பதிவு செய்யப்பட்ட மணல் அகழும் நிலையங்களில் 217 நிலையங்களின் ஊழியர்களை ஈடுபடுத்தி மணல் அகழுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. அதன்போது அந்த சங்கம் ஊழியர்களை ஈடுபடுத்தி மணல் அகழும் நடவடிக்கையினை மேற்கொண்டிருந்ததுடன், அவ்வாறு அகழப்பட்ட மணலின் 50 சதவீதமான அளவிற்கு உரிய பணம் செலுத்தி சங்கத்தின் பிரநிதிகளுக்கு கொள்வனவு செய்ய சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. இந்த ஆற்று மணலுக்காக நாடெங்கிலுமுள்ள அனைத்து பிரதேசங்களிலும் உயரிய கேள்வி நிலவுகின்றமையால் மணலை கொள்வனவு செய்வதற்கு வழங்குனர்கள் (போக்குவரத்து செய்பவர்கள் உள்ளடங்களாக) இடையே பெரிய போட்டி நிலவும் பின்புலத்தினுள் உரிய சங்கத்தில் அகழ்வு செய்யப்படும் மணலில் 50 சதவீதமானது எவ்வித நடைமுறையினையும் பின்பற்றாது ஒழுங்கற்ற முறையில் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டமையின் மூலம் மோசடியான முறையில் உயர்வான விலைக்கு சந்தையில் மணலை விற்பனை செய்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

கம்பனியால் விற்பனை செய்யப்படும் எஞ்சிய 50 சதவீதமான மணலில் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட வேண்டிய மணல் வழங்கிய பின்னர் எஞ்சிய மணலின் அளவில் பொலநறுவை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட லொறிகளுக்காக 50 சதவீதமும் வழங்கப்பட்டு பின்னர் எஞ்சிய அளவானது வருகையின் அடிப்படையில் ஏனைய பிரதேசங்களில் கொள்வனவாளர்களுக்கு வழங்கப்பட்டவாறு காணப்பட்டது.

2019 நவம்பர் 19 ஆந் திகதி கம்பனியின் மனம்பிட்டிய செயற்திட்ட அலுவலகத்தில் தீப்படித்தல் இடம்பெற்றிருந்ததுடன், இந்த தீப்பிடித்தல் தற்செயலானது அல்ல என பொலிஸாரால் அறிக்கையிடப்பட்டிருந்தது. மேலும், இந்த சந்தர்ப்பத்தில் செயற்திட்டத்தில் பொருத்தப்பட்டிருந்த CCTV கெமரா கட்டமைப்பு செயலிழந்திருந்தமை பிரச்சினைக்குரிய விடயமாக காணப்பட்டது. அதன் பின்னர், 2020 சனவரி 6ஆந் திகதி செயற்திட்டத்தின் பணிகள் மீள ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், மீண்டும் முறையற்ற விதத்தில் பொலன்னறுவை மஹாவலி எக்சத் டிப்பர் சங்கம் எனும் பெயருடைய சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட லொரிகளில் 75 சதவீதம் எனும் கூடுதலான அளவினால் மணல் விநியோகிக்கப்பட்டவாறு காணப்பட்டது.

கம்பனி 1 கியூப் மணலின் விலையை தீர்மானிக்கும் போது கருதிற்கொள்ளும் கிரயமாக பல்வேறு அரச நிறுவனங்களுக்கு செலுத்தப்படும் கட்டணங்கள் மற்றும் கம்பனியால் பல்வேறு அரச நிதியங்களுக்கு ஒதுக்கப்படும் தொகைகயும் உள்ளடக்கப்பட்ட காரணத்தால், அது சந்தையின் விற்பனை விலை தொடர்பிலும் பாதிப்பு செலுத்தியிருந்தது.

எவ்வாறான போதிலும், நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் இந்த செயற்திட்டத்திலிருந்து நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை நிறைவேற்ற இயலுமான வகையில் மணலை விநியோகிப்பதற்கான பொருத்தமான நடைமுறையொன்றினை உருவாக்குதல் உள்ளடங்களாக இடைநடுவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 11 செயற்திட்டங்களை மீள ஆரம்பித்து (ஆற்றின் கீழ்ப் பகுதி) மீள ஆரம்பிதது செயற்திட்டத்தின் ஆக்கபூர்வமான தன்மையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்த அறிக்கையில் முக்கியமாக அவதானிக்கின்றேன்.

அக்ரஹார காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை

அரசாங்க நிருவாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு சுற்றறிக்கை இலக்கம் 05/97 இன் மூலம் அக்ரஹார காப்புறுதி முறைமையானது 1997 ஆம் ஆண்டின் போது அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன் அக்காப்புறுதி முறைமையினூடாக அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க சேவையிலுள்ள அனைத்து உத்தியோகத்தர்கள் மற்றும் அக்குடும்பங்களின் அங்கத்தவர்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துதல் அடிப்படை குறிக்கோளாகக் கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்ட இக்காப்புறுதி முறைமைக்கான திருத்தங்கள் பல சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தும் எதிர்ப்பார்த்த நலன்கள் நலன்பெறுனர்களுக்கு முறையாகக் கிடைக்காமை பற்றி கணக்காய்வுக்குக் கிடைத்த முறைப்பாடுகளின் காரணமாக இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

1997 சனவரி 31 ஆந் திகதிய 5/97(vi) ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் ரூபா 11 பங்களிப்பு பணத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட அக்ரஹார காப்புறுதி முறைமையானது பின்னர் ரூபா 125 பங்களிப்பு பணம் வரை அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் சுய விருப்பத்தின் அடிப்படையில் ரூபா 300 மற்றும் ரூபா 600 மாதாந்த பங்களிப்பினை மேற்கொண்டு அக்ரஹார ரிதி மற்றும் ரண் என்பனவாக மேலும் விரிவாக்கப்பட்டிருந்தது. மேலும் அரசாங்க ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களுக்காகவும் இக்காப்புறுதி முறைமையானது 2016 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த ரூபா 200 பங்களிப்பானது 2017 ஆம் ஆண்டில் ரூபா 600 வரை அதிகரித்து பிரதிபலன் கிடைத்தலானது ஆயுட்காலம் வரை அதிகரித்திருந்தது.

அனைத்து அரசாங்க ஊழியர்களையும் அக்ரஹார காப்புறுதி முறைமைக்கு பங்களிப்பு செய்ய வைத்தல் நிதியத்தின் குறிக்கோளாக இருந்த போதிலும் அவ்வாறு அனைத்து அரசாங்க உத்தியோகத்தர்களையும் நிதியத்திற்கு பங்களிப்பு செய்யவைப்பதப்பதற்கு முடியாதிருந்தது எனவும் பிரதிபலன்களை வழங்குவதனை இலகுபடுத்துவதற்காக பல்வேறு வகையான காந்த அட்டைகள் அடிக்கடி அறிமுகப்படுத்தப்பட்டிருந்தும் அதன்மூலம் எதிர்ப்பார்க்கப்பட்டவாறு பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதற்கு நிதியத்திற்கு முடியாதிருந்தது. மேலும் அக்ரஹார காப்புறுதி

நலன்களை 10 வேலை நாட்களுக்குள் நலன்பெறுனர்களுக்குச் செலுத்த வேண்டிய போதிலும் உரிய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட நலன்பெறுனர்களுக்கு அது சம்பந்தமாக தெரியப்படுத்துவதற்கும் 05 மாதங்களை மிகைத்த காலம் எடுத்திருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டது எனவும் நலன்களை செலுத்துவதற்காக விண்ணப்பங்கள் கிடைத்த திகதியிலிருந்து 02 மாதங்களிலிருந்து 12 மாதங்கள் வரையான நீண்ட காலம் எடுத்திருந்தது எனவும் 2003 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை தவறுகள் உள்ளவையாக இனங்காணப்பட்ட 30,742 விண்ணப்பங்களுக்காகவும் 2013 ஆம் ஆண்டிற்கு பின்னைய காலப்பகுதியின் போது 87,161 விண்ணப்பங்களுக்காகவும் பங்களிப்பு பணத்தை செலுத்துவதற்கு நிதியத்தினால் நடவடிக்கை எடுத்திருக்காமை பிரதான சிக்கலாக இனங்காணக்கூடியதாக இருந்தது.

தற்பொழுது படிப்படியாக நட்டமடையும் நிலைமைக்கு மாறியுள்ள இந்நிதியத்தை மீண்டும் இலாபமடையும் நிலமைக்கு மாற்றுவதற்கும் நலன்பெறுனர்களைப் போல நிதியமும் எதிர்ப்பார்த்த நலன்களை முறையாகப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்து இந்நிதியத்தை ஆக்கபூர்வமாக ஈடுபடுத்தலை இந்த அறிக்கையில் சிபாரிசு செய்கின்றேன்.

ஹிங்குரான சீனித் தொழிற்சாலையின் செயற்பாட்டு பணிகளுக்காக தாபிக்கப்பட்ட வ/ப கல்லோயா பெருந்தோட்ட (தனியார்) கம்பனியின் தொழிற்பாடு தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை

உள்நாட்டு சீனிக் கைத்தொழிலை எழுச்சிபெறச் செய்யும் நோக்கில் 1960 ஆம் தசாப்தங்களில் நிறுவப்பட்ட ஹிங்குரான சீனித் தொழிற்சாலை 1993 ஆம் ஆண்டின் போது தனியார்மயப்படுத்தப்பட்டது.
தனியார்மயப்படுத்தப்பட்ட அந்த நிறுவனம் வெற்றியடையாத காரணத்தால் மீண்டும் 1997 ஆம் ஆண்டு அரசிற்கு சுவீகரிக்கப்பட்டு உற்பத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், 1997 செப்தம்பர் மாதத்தின் போது உற்பத்திப் பணிகளை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

இவ்வாறு உற்பத்திப் பணிகள் இடைநிறுத்தப்பட்ட தொழிற்சாலையில் சேவையாற்றிய ஊழியர்களும் ஓய்வூதியம் பெறச்செய்யப்பட்டதுடன், மீண்டும் தொழிற்சாலையை மீள கட்டமைக்கும் பணிகள் 2006 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இந்த மீள்கட்டமைப்பின் கீழ், 2006 ஆம் ஆண்டின் போது அரசு, தனியார் கம்பனிகளான பிரவுன்ஸ் என்ட் கம்பனி (Browns) மற்றும் லங்கா ஒரிக்ஸ் லீசிங் கம்பனி (LOLC) ஆகியவை கூட்டாக இணைந்து நிறுவிய கம்பனியொன்றின் ஊடாக ஹிங்குரான சீனித் தொழிற்சாலையின் பணிகளை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம், 2009 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்துடன் பங்குதாரர் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், அதுவரையிலுமான 2006-2009 காலப்பகுதியினுள் அரசின் பங்களிப்பின்றி தாபிக்கப்பட்டிருந்த கல்லோயா பெருந்தோட்ட (தனியார்) கம்பனி (GOPL) எனும் பெயருடைய கம்பனியால் தொழிற்சாலையின் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அவ்வாறு அரசின் பங்களிப்பின்றி கம்பனியின் செயற்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியினுள் ஏற்பட்ட நிலைமைகளைப் போன்றே 2009 ஆம் ஆண்டின் போது அரசின் கம்பனியொன்றினை தாபிப்பதற்கு உடன்படிக்கை கைச்சாத்திட்ட பின்னர் ஏற்பட்ட நிலைமையையும் கருத்திற்கொண்டு இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

2009 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்துடன் பங்காளர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர், 2010 ஆம் ஆண்டின் போது கம்பனியின் பங்கு வெளியீடு இடம்பெற்றிருந்தது. இந்த பங்கு வெளியீட்டின் போது அரச கம்பனியின் உரித்து 51 சதவீதம் மற்றும் Browns என்ட் கம்பனிக்கும், LOLC கம்பனியை முன்னோடியாக கொண்ட தனியார் துறைக்கு 49 சதவீதமும் உரித்தாகியிருந்தது.

மேற்குறித்த 49 சதவீத பங்குகளுக்கு உரித்துடைய தனியார் துறையானது அதற்கரிய நன்மதிப்பினை பணமாக கொண்டுவர வேண்டிய போதிலும், அந்த நன்மதிப்பினை காசாக கொண்டுவந்திராததுடன், 2006-2009 காலப்பகுதியினுள் மேற்குரித்த தனியார் துறையினரால் GOPL கம்பனியில் ஈடுபடுத்தப்பட்டதென் குறிப்பிடப்படும் பணம் நன்மதிப்பாக ஈடுசெய்யப்பட்டிருந்தது. மேலும், அவ்வாறு ஈடுபடுத்தப்பட்டதாக குறிப்பிடப்படும் தொகைக்கு சுமார் 28 சதவீதமான வட்டியையும் அறவிடுவதற்க நடவடிக்கை எடுத்திருந்தது. மேலும், கம்பனியின் தொழிற்பாட்டுக்காக தொடர்ச்சியாக அசாதாரணமான நிபந்தனைகள் மற்றும் ஒப்பீட்டு ரீதியில் உயர் வட்டி வீதத்தின் கீழ் மேற்குறிப்பிடப்பட்ட LOLC கம்பனியுடன் தொடர்புடைய கம்பனிகளிடமிருந்து கடனைப் பெற்றுக்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது.

அவ்வாறு உயர் வட்டி வீதமொன்று மற்றும் சில சந்தர்ப்பங்களில் கூட்டு வட்டி வீதத்தில் கடன் பெறப்பட்டமையால் GOPL கம்பனிக்கு அதிக நிதிக் கிரயத்தை மேற்கொள்ளவும் நேர்ந்தது. மேலும், 2009 ஆம் ஆண்டு முதல் பல்வேறு தளம்பல்களின் கீழ் மொத்த இலாபமொன்றை ஈட்டுவதற்கு இயலுமாகவிருந்த போதிலும், 2009 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலும் தேறிய நட்டத்தினை ஈட்டுவதற்கு மேற்கூறிய அதிக நிதிக் கிரயம் தாக்கம் செலுத்தயிருந்தமையை அவதானிக்க முடிந்தது.

மேலும், அரச கம்பனியொன்றான இந்த கம்பனி தொடர்பில் போதியளவான நேரடிக் கண்காணிப்பொன்று பொது திறைசேரியினால் மேற்கொள்ளப்படாமையை போன்றே, பங்குதாரர் உடன்படிக்கையின் பிரகாரம் அரசாங்கத்திற்கு அந்த ஈவுத்தொகையும் கிடைத்திருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், அந்த நிலைமையினுள் 2020 மார்ச் 31ஆந் திகதியளவில் கம்பனியின் சொத்துக்களை விஞ்சிய பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 7,521 மில்லியனாக காணப்பட்டது. மேலும், பங்காளர் உடன்படிக்கையை கைச்சாத்திடும் போது உள்ளடக்கப்பட்ட சில நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு இரு தரப்பினரும் தவறியிருந்ததுடன், GOPL கம்பனியின் முகாமைத்துவப் பணிகளை நிறைவேற்றுவதற்காக கல்லோயா ஹோல்டிங்ஸ் (GOHL) கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், அதன் மூலம் எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேறியிருக்கவில்லை என GOPL கம்பனியில் தொடர்ச்சியான செயற்பாட்டு நலிவுகளின் ஊடாக அவதானிக்கபட்டது.

அதன் பிரகாரம், அரசிற்கு 51 சதவீத உரித்துடன் மற்றும் அரச சொத்துக்களை பயன்படுத்தி நடாத்திச் செல்லப்பட்டிருந்த புழீடு கம்பனியின் தொழிற்பாடு தொடர்பில் பொது திறைசேரியின் கண்காணிப்பை பரவலாக்குவதன் மூலம் அரச உரித்தினை சான்றுபடுத்தல் மற்றும் கம்பனியை இலாபமீட்டும் நிலைக்கு உள்ளாக்குவதற்கு அதிக முயற்சி எடுப்பதன் மூலம் அரசாங்கத்திற்க உரிததாக வேண்டிய வருமானத்தினை உரிய முறையில்

பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தலும், கரும்பு விவசாயிகளுக்கு நியாயமான நலன்களை பெற்றுக்கொடுப்பதும், தற்போது உள்நாட்டு சீனித் தேவைப்பாட்டில் உள்நாட்டு உற்பத்தி சுமார் 9 சதவீதமாக உள்ளதுடன், அந்த அளவினை அதிகரிப்பதன் மூலம் இறக்குமதியை கட்டுப்படுத்துவதற்கு உச்ச அளவில் முயற்சி எடுப்பதற்கும் கம்பனியின் பணிகள் மேவுகை செய்யப்பட வேண்டும் எனவும் இந்த அறிக்கையின் மூலம் பரிந்துரைக்கப்படுகின்றது.

திரண்ட நிதியம

விடயங்கள்

- அரச வருமானம்
- அரச வருமானம் வகைப்படுத்தல்
- அரச வருமான மதிப்பீடு செய்தல்
- அரச செலவினம்
- வட்டி செலவினம் அதிகரித்தல்
- வருமானப் பற்றாக்குறை
- அரச முதலீடு
- வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை
- இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை
- வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை நிதியீட்டம்
- கடன் மீதி அதிகரித்தல்
- அரச கடன்
- உச்ச பொறுப்பு எல்லை மீறப்படல்
- நபரொருவருக்கான கடன் அளவு
- அரச வருமானம் குறைவடைந்து கடன் தவணைகள் மற்றும் வட்டி செலுத்தல் அதிகரித்தல்.

திரண்ட நிதியம்

அரசின் நிதி நிர்வாகத்திற்குரியதாக இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் XVII அத்தியாயத்தின் 148 உறுப்புரையின் பிரகாரம் இலங்கை நிதி தொடர்பான முழுமையான கட்டுப்பாட்டினையும் பாராளுமன்றம் கொண்டுள்ளது. அரசியலமைப்பின் 149 ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசினால் சேகரிக்கப்படுகின்ற வருமானம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்ததுடன், அரசியலமைப்பின் 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகளின் பிரகாரம் திரண்ட நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய முறை குறிப்பிடப்பட்டுள்ளது.

அரச வருமானம்

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 2021 வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் படி, வரி வருமானங்கள் மற்றும் வரி அல்லாத வருமானங்கள் (வெளிநாட்டு மானியங்கள் மற்றும் மாகாண சபை வருமானம் தவிர) மதிப்பிடப்பட்ட மொத்த அரச வருமானம் ரூபா 1,984,400 மில்லியன் தொகையாக காணப்பட்டது. அது முன்னைய ஆண்டின் மதிப்பிடப்பட்ட வருமானமாகிய ரூபா 1,547,200 மில்லியன் தொகையுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 437,200 மில்லியன் தொகை எனப்படும் 28 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது ரூபா 1,466,902 மில்லியனிற்கான வருமானம் ஒன்று சேகரிக்கப்பட்டிருந்தது. அதன்படி, பாராளுமன்றம் அங்கீகரித்திருந்த மதிப்பீட்டு வருமானத்தில் ரூபா 517,498 மில்லியன் தொகை எனப்படும் 26 சதவீதத்திற்கான மதிப்பீட்டு வருமானம் ஒன்றினை சேகரிப்பதற்கு முடியாமல் இருந்தது. முன்னைய ஆண்டில் சேகரிக்கப்பட்ட ரூபா 1,378,887 மில்லியனிற்கான வருமானத்துடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 88,015 மில்லியன் தொகை எனப்படும் 6 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அரச வருமானம் மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக கணிக்கும் போது முன்னைய ஆண்டில் 9.2 சதவீதமாக காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் போது அது 8.7 சதவீதம் வரை குறைந்திருந்தது. 2016 ஆண்டின் போது 14.16 சதவீதமாக காணப்பட்ட அந்த விகிதாசாரம் 2021 ஆண்டளவில் 8.73 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. விபரம் வரைபடம் 01 இல் காட்டப்பட்டுள்ளது.



வரைபடம் 01 – அரசின் வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக

மூலவலம் - அரசின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கி அறிக்கை

அரச வருமானத்தை வகைப்படுத்தல்

அரச வருமானம் "வரி வருமானம் மற்றும் வரி அல்லாத வருமானம்" என பிரதான இரண்டு வகைகளின் கீழ் பதியப்பட்டிருந்ததுடன், வரி வருமானம் மீண்டும் "வருமான வரி,

உள்நாட்டு பண்டங்கள் சேவைகள் மீதான வரி, சர்வதேச வியாபாரத்தின் மீதான வரி" என வகைப்படுத்தி இலங்கை சனநாயக சோசலிச குடியசரசின் "அரசின் நிதிக் கூற்றுக்களில்" காட்டப்பட்டுள்ளது. மீளாய்வாண்டிற்காக வரி வருமானம் என ரூபா 1,724,000 மில்லியன் தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், அந்த மதிப்பீட்டினை 23 சதவீதம் எனப்படும் ரூபா 399,000 மில்லியன் தொகையினால் குறைத்து ரூபா 1,325,000 மில்லியன் தொகை என மதிப்பீடு திருத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியளவில் உண்மையாக ரூபா 1,298,019 மில்லியன் தொகைகான வரி வருமானம் ஒன்று சேர்கப்பட்டடிருந்தது. அது ஆரம்ப மதிப்பீட்டு வருமானத்தின் 75.29 சதவீதமாக காணப்பட்டது. திருத்திய மதிப்பீட்டில் 97.96 சதவீதமாக காண்பட்டது. திருத்திய வருமான மதிப்பீட்டின் படி மீளாய்வாண்டின் வரி வருமானத்தில் அடங்கியிருந்த வருமான வரி, உள்நாட்டு பண்டங்கள் சேவைகள் மீதான வரி மற்றும் சர்வதேச வர்த்தகம் மீதான வரி என முறையே ரூபா 295,000 மில்லியன் தொகை, ரூபா 647,136 மில்லியன் தொகை மற்றும் ரூபா 382,864 மில்லியன் தொகையாக காணப்பட்டது. மீளாய்வாண்டு இறுதியளவில் அவற்றில் முறையே ரூபா 302,116 மில்லியன் தொகை, ரூபா 643,086 தொகை மற்றம் ரூபா 352,818 மில்லியனிற்கான வருமானம் சேகரித்திருந்தது. அதன்படி, வருமான வரி வருமானம் திருத்திய வருமான மதிப்பீடு ரூபா 7,116 மில்லியன் தொகையினால் அதாவது 2.41 சதவீதத்தினால் மிகைத்து வருமானம் சேகரித்திருந்தது. திருத்திய வருமான மதிப்பீட்டின் படி மீளாய்வாண்டிற்கான வரி அல்லாத வருமானங்கள் என ரூபா 181,000 மில்லியன் தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், அவற்றில் ரூபா 168,883 மில்லியன் தொகை எனப்படும் 93 சதவீத வருமானம் ஒன்று சேகரித்திருந்தது. மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானம் தொடர்பான விபரம் வரைபடம் 02 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.



வரைபடம் 02 - மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான வரி வருமானம்

மூலம் - அரச நிதிக்கூற்று 2021

அரச வருமானத்தை மதிப்பிடு செய்தல்

2021 ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூபா 16,809,000 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், 2020 ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூபா 15,027,000 மில்லியன் தொகையாக காணப்பட்டது. அதன்படி, முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூபா 1,782,000 மில்லியனினால் அதாவது 11.86 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. 2021 ஆண்டிற்காக பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் படி அரச வருமானம் ரூபா 1,984,400 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டில் அது ரூபா 1,547,200 மில்லியன் தொகையாக இருந்தது. அதன்படி, முன்னைய ஆண்டை விட அரச வருமானம் ரூபா 437,200 மில்லியன் எனப்படும் 28.26 சதவீதத்தினால் அதிகரித்து மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அந்த வருமான மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு பாதீட்டு பற்றாக்குறை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், ஆரம்ப வருமான மதிப்பீடு வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் ரூபா 1,506,000 மில்லியன் தொகை வரை ரூபா 478,400 மில்லியனினால் குறைத்து திருத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் அரசின் உள்ளவாறான வருமானம் மொத்த தேசிய உற்பத்தியில் 8.73 சதவீதமாக காணப்பட்டது. வருமான மதிப்பீடு தயாரிக்கும் போது மொத்த தேசிய உற்பத்தியில் அதிகரிப்பு தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், அதன் மீது கவனம் செலுத்தாமல் வருமான மிகை மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2021 ஆண்டில் சேகரிக்கப்பட்ட அரசாங்க வருமானம் ரூபா 1,466,902 மில்லியன் தொகையாக இருந்ததுடன், அது திருத்திய வருமான மதிப்பீட்டை விட ரூபா 39,098 மில்லியனினால் குறைவடைந்திருந்து. அதன்படி, பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த வருமான மதிப்பீட்டுடன் ஒப்பீடு செய்த போது அந்தக் குறைவடைதல் ரூபா 517,498 மில்லியன் தொகையாக காணப்பட்டது. 2012 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரையான காலவீச்சில் எல்லா ஆண்டுகளிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த வருமான மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வருமானத்தை விட சேகரிக்கப்பட்ட வருமானம் குறைவடைதல் 9.51 சதவீதம் முதல் 25.50 சதவீத வீச்சு ஒன்றினை அடைந்திருந்தது. இந்தக் கால வீச்சில் அதிகமான சதவீதம் மீளாய்வாண்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. விபரங்கள் வரைபடம் 03 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.



வுரைபடம 03 – மதிப்பிடப்பட்ட வருமானத்தில் சேகரிக்கப்பட்ட வருமானத்தின் சதவீதம் என.

மூலம் - வருடாந்த பாதீடு மற்றும் அரச நிதிக் கூற்று 2012 – 2021

நிதிப் பிரமாணம் 85(2)(ஆ) பிரகாரம் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வருமான மதிப்பீட்டை திருத்துவதற்காக அரச நிதிக் கொள்கை திணைக்களத்திற்கு அறிவித்தல் மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளமையால், பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடொன்று பாராளுமன்றத்தின் அங்கீகாரமின்றி திருத்துவதற்கு சந்தர்ப்பமளித்திருந்தமையால் வருமானம் தத்துரூபமாக மதிப்பீடு செய்யும் பொறுப்புக்கூறல் பலவீனமடைந்து இருந்தது.

மீளாய்வாண்டின் ரூபா 1,298,019 மில்லியன் தொகைக்கான அரசின் மொத்த வரி வருமானத்தில் 23 சதவீதம் எனப்படும் ரூபா 302,115 மில்லியன் தொகை நேர் வரி மூலம் சேகரிக்கப்பட்டிருந்தது. அவற்றில் ரூபா 995,904 மில்லியன் தொகை எனப்படும் 77 சதவீதம் நேரில் வரிகளில் இருந்து சேகரிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அந்த சதவீதங்கள் முறையே 22 சதவீதம் மற்றும் 78 சதவீதமாக காணப்பட்டது. பண்டங்கள் மற்றும் சேவைகளின் விலை அதிகரிப்பிற்கு நேரில் வரிகளின் தாக்கம் முன்னைய ஆண்டைப் போலவே மீளாய்வாண்டிலும் 1 சதவீதத்திற்கான வித்தியாசம் ஒன்றுடன் பதிவு செய்யப்பட்டிருந்தது. 2012 ஆண்டின் போது மொத்த வரி வருமானத்தின் 20 சதவீதம் நேர் வரி மூலமும், 80 சதவீதம் நேரில் வரி மூலமும் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. 2012 ஆண்டு முதல் 2021 வரையான காலப்பகுதி 2019 ஆண்டின் போது நேர் வரி வருமானம் மொத்த வரி வருமானத்தில் 25 சதவீதம் மற்றும் நேரில் வரி வருமானம் 75 சதவீதமாக காணப்பட்டது. அந்தக் காலப் பகுதியில் நேர் வரி வருமானம் மொத்த வரி வருமானத்தில் 25 சதவீத எண்ணிக்கையை கொண்டிருந்த சந்தர்ப்பம் அதுவாக இருந்தது. எவ்வாறாயினும், பொது மக்களின் வாழ்க்கைச் செலவு மீது நேரடியாக நேரில் வரி வருமானம் தாக்கத்தை ஏற்படுத்துவதனால் மொத்த வரி வருமானத்தில் கூடிய சதவீதத்தினை நேர் வரி மூலம் சேகரித்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டியிருந்தது. 2012 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரையான காலப் பகுதியுள் சேகரிக்கப்பட்ட நேர் வரி மற்றும் நேரில் வரி தொடர்பான விபரமொன்று வரைபடம் 04 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.



வரைபடம் 04 – நேர் வரி மற்றும் நேரில் வரி சேகரித்தல் மூலம் - அரச நிதிக்கூற்று 2012 – 2021

2021 ஆண்டின் போது அரச வரி வருமானம் குறவடைவதற்கு பிரதானமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது 2020 அரச வரிக் கொள்கையில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் ஆக காணப்பட்டதுடன் அதன்படி, வருமான வரி எல்லையை அதிகரித்தல், பெறுமதி கூட்டிய வரி சதவீதத்தை 15% இலிருந்து 12% வரை குறைத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பான எனது அவதானிப்புக்கள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அறிக்கையில் காட்டப்பட்டுள்ளவாறு வரித் திருத்தங்கள் எவ்வளவு விவேகமான தீர்மானம் ஒன்றென அறிஞர்கள் குழுவொன்றின் மூலம் மீண்டும் மீளாய்வாய்விற்கு உட்படுத்தல் பொருத்தம் என பரிந்துரைக்கப்படுகின்றது.

அரசாங்க செலவு

2021 நிதியாண்டிற்காக அரச செலவுகளுக்குத் தேவையான சட்ட ஏற்பாடுகள் 2020 இன் 07 இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகள் காணப்படும் சட்டத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்துள்ள, திரண்ட நிதியத்திற்கு செலவுப் பொறுப்பு ஒன்றாகிய விஷேட சட்ட சேவைக்களுக்காக ஏற்பாடுகள் உட்பட அரசாங்க வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக ரூபா 5,046,538 மில்லியனிற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக மீளாய்வாண்டிற்கான குறை நிரப்பு மதிப்பீடொன்று பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்து ரூபா 211,844 மில்லியனிற்கான ஏற்பாடொன்று வழங்கப்பட்டிருந்தது. அரசியல் யாப்பின் 150 ஆவது உறுப்புரை பிரகாரம் விஷேட சட்ட சேவை வொரண்ட் அனுமதிப்பத்திரத்தின் மூலம் ரூபா 162,530 மில்லியனிற்கான ஏற்பாடு விஷேட சட்ட சேவை செலவுகளுக்காக பெறப்பட்டிருந்தது. அதன்படி, மீளாய்வாண்டின் வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக ரூபா 5,420,912 மில்லியனிற்கான தேறிய ஏற்பாடொன்று வழங்கப்பட்டிருந்தது. விபரங்கள் வரைபடம் 07 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

அடிப்படை	மூலதன ஏற்பாடுகள் ரூ.மில்லியன்	மீண்டுவரும் ஏற்பாடுகள் ரூ. மில்லியன்	மொத்தம் ரூ. மில்லியன்
வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள்	1,100,089	1,718,301	2,818,390
காணப்படும் சட்டத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்திருந்த திரண்ட நிதியத்திற்கு செலவுப் பொறுப்பொன்றாகிய விஷேட சட்ட சேவைக்கான ஏற்பாடுகள்	1,252,297	975,851	2,228,148
வழங்கல்கள் மற்றும் சேவைச் செலவுகளுக்கா மேலதிகமாக வழங்கப்பட்ட ஏற்பாடுகள் (குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம்)	69,273	142,571	211,844
விஷேட சட்ட சேவை செலவுகளுக்காக மேலதிகமாக வழங்கப்பட்ட ஏற்பாடுகள்	83,000	79,530	162,530
மொத்தம்	**2,504,659**	**2,916,253**	**5,420,912**

அட்டவணை - 07 அரச வழங்கல் மற்றும் சேவைகளுக்கான ஏற்பாடு
மூலம் - 2020 இன் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டு சட்டம் மற்றும் குறை நிரப்பு மதிப்பீடு

2020 இன் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6 பிரிவின் பிரகாரம் தலைப்பு 240 தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குறை நிரப்பு உதவிச் சேவை மற்றும் அவசர தேவைப்பாட்டு பொறுப்புக் கருத்திட்டத்தின் கீழ்

வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் 3.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கருமங்களுக்காக மாத்திரம் பயன்படுத்துவதற்காக ரூபா 365,030 மில்லியனிற்கான மேலதிக ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அது மொத்த ஏற்பாடுகளில் ரூபா 363,516 மில்லியனிற்கான இற்கான ஏற்பாடு ஏனைய செலவுத் தலைப்புகளுக்காக மாற்றப்பட்டிருந்தது. அதன்படி, ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் ரூபா 1,514 மில்லியனிற்கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் அட்டவணை 08 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

செலவின் தன்மை	ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம்	குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம்	நி.பி. 66.'.99 மாற்றம்	தேறிய ஏற்பாடு	செலவுத் தலைப்புக்களுக்கு ஏற்பாடுகள் மாற்றல்	ஏற்பாடுகளின் சேமிப்பு
	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்
மீண்டுவரும்	33,893	131,000	(36,813)	128,080	127,600	480
மூலதன	131,137	69,000	36,813	236,950	235,916	1,034
மொத்தம்	**165,030**	**200,000**	**0**	**365,030**	**363,516**	**1,514**

அட்டவணை 08 – குறைநிரப்பு உதவிச் சேவை மற்றும் அவசர தேவைப்பாட்டுப் பொறுப்புக்கள் கருத்திட்டத்தின் கீழான ஏற்பாடுகள் மற்றும் அந்த ஏற்பாடுகள் ஏனைய செலவுத் தலைப்புகளுக்கு மாற்றுதல்.
மூலம் - தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் நிதிக் கூற்று 2021

மீளாய்வாண்டின் போது அரசாங்க வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக ரூபா 5,420,912 மில்லியனிற்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், முன்னைய ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் ரூபா 4,718,158 மில்லியன் தொகையாக இருந்தது. அதன்படி, முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டிற்கான ஏற்பாடுகள் ரூபா 702,754 மில்லியன் தொகை எனப்படும் 14.89 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. 2021 ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த ஏற்பாடுகளில் ரூபா 4,879,195 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தமையால் ரூபா 541,717 மில்லியன் தொகை, அதாவது மொத்த ஏற்பாடுகளில் 10 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டின் படி அரசாங்க வழங்கல் மற்றும் சேவைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் சேமிப்பு ஏற்பட்டிருந்த பல சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

- மீண்டுவரும் செலவுகளுக்கான மொத்த தேறிய ஏற்பாடுகள் ரூபா 2,874,192 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் போது அவற்றில் ரூபா 2,757,343 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தமையால் ரூபா 116,849 மில்லியன் தொகைக்கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்பு ஒட்டுமொத்த மீண்டுவரும் ஏற்பாடுகளில் 4 சதவீதத்தை கொண்டிருந்தது.

- அரச முதலீட்டுகளுக்காக ரூபா 1,201,353 மில்லியனிற்கான தேறிய ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது அவற்றில் ரூபா 789,636 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி, ரூபா 411,716 மில்லியனிற்கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்பு ஒதுக்கப்பட்டிருந்த தேறிய

ஏற்பாடுகளில் 34 சதவீதத்தை கொண்டிருந்தது.

- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் தவணை கொடுப்பனவுக்காக ஒதுக்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 1,345,367 மில்லியன் தொகைக்கான தேறிய ஏற்பாடுகளில் கடனை திருப்பி செலுத்துவதற்காக ரூபா 1,332,216 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன்படி, ஒதுக்கப்பட்டிருந்த தேறிய ஏற்பாடுகளில் ரூபா 13,151 மில்லியன் தொகை எனப்படும் 1 சதவீத ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது.

தலைப்பு 422 - அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் பிக்குகள் கல்வி இராஜாங்க அமைச்சுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 4,931 மில்லியன் தொகைக்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்த ஏற்பாட்டு எல்லையை ரூபா 18 மில்லியனினால் அதிகரித்து ரூபா 4,949 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான மீண்டுவரும் செலவுகளுக்காக ரூபா 2,874,192 மில்லியனிற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் ரூபா 2,757,343 மில்லியன் தொகை எனப்படும் 96 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அது முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுக்காக ரூபா 2,804,651 மில்லியனிற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் ரூபா 2,682,713 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் 4 சதவீதம் எனப்படும் ரூபா 121,938 மில்லியன் தொகை சேமிக்கப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டிற்கான அரச முதலீடுகள் என ரூபா 1,201,353 மில்லியனிற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் ரூபா 789,636 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி, ரூபா 411,717 மில்லியன் தொகை எனப்படும் 34 சதவீத ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. இந்த நிலைமையை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது அது 12.17 சதவீதத்தை கொண்டிருந்தது. 2016 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரையான 06 வருட காலப் பகுதியில் அரச முதலீடுகளுக்காக கூட்டுத்தொகை ரூபா 6,137,593 மில்லியனிற்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றில் ரூபா 4,115,481 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அக் காலப் பகுதியில் ஒதுக்கப்பட்டிருந்த அரச முதலீட்டு ஏற்பாடுகளில் 33 சதவீதம் எனப்படும் ரூபா 2,022,112 மில்லியனிற்கான அரச முதலீட்டு ஏற்பாடுகளை பயன்படுத்துவதற்கு முடியாமல் இருந்தது. விபரங்கள் வரைப்படம் 05 இல் காண்பிக்கப்பட்டிருந்தது.



வரைபடம் 05 – 2016 – 2021 ஆண்டு வரையான அரச முதலீடுகளுக்கான ஏற்பாடுகள், பயன்பாடுகள் மற்றும் சேமிப்பு

மூலம் - அரச நிதிக் கூற்று 2016 - 2021

மீளாய்வாண்டிற்கான மொத்த பாதீட்டுச் செலவு ரூபா 5,420,912 மில்லியன் தொகையாக

காணப்பட்டதுடன், உள்ளவாறான செலவு ரூபா 4,879,195 மில்லியன் தொகையாக காணப்பட்டது. அதன்படி, மதிப்பீடு செய்யப்பட்ட செலவில் ரூபா 541,717 மில்லியனிற்கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. 2021 வருடாந்த பாதீட்டு மதிப்பிட்டில் 2.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரசாங்க செலவுகள், அமைச்சரவை அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்கள் என கோப்பிலிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த அடிப்படையின் மீது இனங்காணப்பட்ட 27 துறைகளுக்காக அரச கடன் திருப்பிச் செலுத்தல் மற்றும் கடனுக்கான வட்டி செலுத்துதல் தவிர ரூபா 2,498,597 மில்லியனிற்கான செலவு அந்த 27 துறைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அரசாங்க சேவைகள் மற்றும் மாகாண சபைத் துறைக்காக ரூபா 658,386 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், அவை அரச கடன் திருப்பிச் செலுத்தல் மற்றும் வட்டி செலுத்துதல் தவிர மொத்தச் செலவின் 26 சதவீத கூடிய பிரதிநிதித்துவத்தை கொண்டிருந்தது. பாதுகாப்பு, உள்நாட்டு அலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் ஆகிய துறைக்காக ரூபா 483,220 மில்லியன் தொகை எனப்படும் 19 சதவீதமும், சுகாதாரம், மருந்து வகை உற்பத்தி மற்றும் வழங்கலுக்காக ரூபா 314,472 மில்லியன் தொகை எனப்படும் 13 சதவீதத் தொகையும், திறைசேரி அலுவல்களுக்காக ரூபா 243,219 மில்லியன் தொகை எனப்படும் 10 சதவீதத் தொகையும் பெருந்தெருக்களுக்காக ரூபா 213,463 மில்லியன் தொகை எனப்படும் 9 சதவீதத் தொகையும், கல்வி, திறன் மற்றும் தொழில் கல்விக்காக ரூபா 169,953 மில்லியன் தொகை எனப்படும் 7 சதவீதத்தை கொண்டிருந்தது. வடைபடம் 06 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.



வரைபடம் 06 – கடன் தவணை மற்றும் வட்டிச் செலவு தவிர 27 துறைகளின் கீழுள்ள செலவுகள் மூலம் - அரச நிதிக் கூற்று 2021

வட்டிச் செலவு அதிகரித்தல்

மீளாய்வாண்டின் போது வட்டிக்காக ரூபா 1,048,382 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அது முன்னைய ஆண்டில் ரூபா 975,434 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், முன்னை ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 72,948 மில்லியன் தொகையினால் அதாவது 7.48 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. 2006 இன் போது ரூபா 150,778 மில்லியன் தொகையாக காணப்பட்ட வட்டிச் செலவு 2021 ஆண்டு இறுதியளவில்

அது ரூபா 1,048,382 மில்லியன் தொகை வரை அதிகரித்திருந்தது. 2006 ஆண்டிற்கான ஒப்பாக 595 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. 2006 ஆண்டில் மொத்த வட்டிச் செலவு மீண்டுவரும் செலவில் 26.03 சதவீதத்தை கொண்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது அது 38.02 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. அதேபோல் 2006 இன் போது அரச வருமானத்தில் 31.58 சதவீதம் எனப்படும் ரூபா 150,578 மில்லின் தொகை வட்டியாக செலுத்தப்பட்டிருந்ததுடன், 2021 ஆண்டில் அது 71.47 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. விபரங்கள் வரைபட இலக்கம் 07 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.



வரைபடம் 07 மொத்த மீண்டுவரும் செலவும் வட்டிச் செலவும்

மூலம் - அரச நிதிக் கூற்று

வருமானப் பற்றாக்குறை

மீளாய்வாண்டிற்காக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களில் வருமானத்தின் பற்றாக்குறை ரூபா 1,290,441 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டின் போது அது ரூபா 1,303,826 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. 2006 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரையான கால வீச்சில் உயர்ந்த வருடமானப் பற்றாக்குறை 2020 ஆண்டிலே பதிவாகியிருந்தது. அந்த கால வீச்சில் அனைத்து ஆண்டுகளிலும் சேகரிக்கப்பட்டிருந்த வருமானம் அரச மீண்டுவரும் செலவை தீர்ப்பதற்கு முடியாமல் இருந்தது. வருமானத்தின் பற்றாக்குறையின் குறைந்த பெறுமதி 2007 ஆண்டு பதிவாகியிருந்ததுடன், அது ரூபா 43 பில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், சேகரிக்கப்பட்ட அரச வருமானத்தின் 7.56 சதவீத்தை பிரதிநிதிப்படுத்தியது. அந்தக் கால வீச்சில் ஒட்டுமொத்த வருமானத்தின் பற்றாக்குறை ரூபா 4,780 பில்லியன் தொகையாக காணப்பட்டது. அந்தப் பற்றாக்குறையை தீர்ப்பதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன் மற்றும் வெளிநாட்டு மானியம் பெறப்பட்டிருந்தது. அதன்படி, அந்தக் கால வீச்சில் உள்நாட்டுக் கடன் ரூபா 16,265 பில்லியன் தொகையும், வெளிநாட்டுக் கடன் ரூபா 6,704 பில்லியன் தொகையும் மற்றும் வெளிநாட்டு மானியம் ரூபா 213 பில்லியன் தொகையுமாக மொத்தம் ரூபா 23,183 பில்லியன் தொகை பெற்றிருந்தது. ஒவ்வொரு ஆண்டுகளிலும் அவ்வாறு

பெற்றிருந்த கடன் மற்றும் மானியங்களில் 6.86 சதவீதம் முதல் 45.59 சதவீதம் வரையான வீச்சளவினால் வருமானப் பற்றாக்குறைக்கு நிதி அளிப்புச் செய்யப்பட்டது. பெற்றிருந்த கடன்கள் மற்றும் மானியங்களிலிருந்து முதலீடுகள் மேற்கொள்ளாமல் மீண்டுவரும் செலவுகளை தீர்ப்பதற்காக 2019 ஆண்டின் போது 20.23 சதவீதமும் 2020 ஆண்டின் போது 45.59 சதவீதமும், மற்றும் 2021 ஆண்டின் போது 42.39 சதவீதமாக பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் அட்டவணை 09 இல் காட்டப்பட்டுள்ளது.

ஆண்டு	உள்ளவாறான வருமானம்	உள்ளவாறான மீண்டுவரும் செலவு	வருமானத்தின் பற்றாக்குறை	வருமானத்தின் பற்றாக்குறை சேகரிக்கப்பட்ட வருமானத்தின் சதவீதமாக	வெளிநாட்டுக் கடன்கள் மானியங்கள் மற்றும் உள்நாட்டுக் கடன்கள்	வருமானத்தின் பற்றாக்குறை கடன்கள் மற்றும் மானியங்களின் சதவீதமாக
	ரூபா பில்லியன்	ரூபா பில்லியன்	ரூபா பில்லியன்	சதவீதம்	ரூபா பில்லியன்	சதவீதம்
2006	477	579	102	21.38	514	19.84
2007	572	615	43	7.52	587	7.33
2008	664	736	73	10.99	678	10.77
2009	708	882	174	24.58	1,019	17.08
2010	826	951	126	15.25	918	13.73
2011	943	1,020	77	8.17	998	7.72
2012	997	1,118	122	12.24	1,108	11.01
2013	1,066	1,254	187	17.54	1,289	14.51
2014	1,128	1,370	242	21.45	1,397	17.32
2015	1,394	1,673	279	20.01	1,750	15.94
2016	1,699	1,771	72	4.24	1,623	4.44
2017	1,845	1,946	101	5.47	1,466	6.89
2018	1,935	2,109	174	8.99	1,883	9.24
2019	1,907	2,322	414	21.71	2,049	20.20
2020	1,379	2,683	1,304	94.56	2,860	45.59
2021	1,467	2,757	1,290	87.97	3,043	42.39
மொத்தம்	**19,006**	**23,786**	**4,780**		**23,183**	

அட்டவணை 09 – மீண்டுவரும் செலவை தீர்த்துக்கொள்ள முடியாதிருந்த வருமானத்தின் பற்றாக்குறை கடன்கள் மறறும் மானியங்களின் மூலம் பயன்படுத்துதல்

மூலம் - 2006 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை அரச நிதிக் கூற்றுக்கள்

மீளாய்வாண்டின் போது ரூபா 1,048 பில்லியனிற்கான வட்டி செலுத்தப்பட்டிருந்ததுடன் அது மொத்த மீண்டுவரும் செலவின் 38.02 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. முன்னைய ஆண்டின் வட்டி கொடுப்பனவு ரூபா 975 பில்லியன் தொகை எனப்படும் மொத்த மீண்டுவரும் செலவின் 36.36 சதவீதத்தை கொண்டிருந்தது. வட்டி கொடுப்பனவு முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 73 பில்லியனினால் அதிகரித்திருந்தது. 2006 ஆண்டின் போது ரூபா 151 பில்லியன் தொகைகான வட்டிக் கொடுப்பனவு 2021 ஆண்டிளவில் அது ரூபா 1,048 பில்லியன் தொகை வரை 594 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. பாதீட்டு பற்றாக்குறைகளை நிதியளிப்பு செய்தவதற்காக கடன் பெறுதல் அதற்கான வட்டி செலுத்துதல் வருடாந்தம்

அதிகரித்திருந்தது. 2021 ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட ரூபா 1,467 பில்லியனிற்கான அரச வருமானத்தின் ரூபா 1,048 பில்லியன் தொகை எனப்படும் 71.74 சதவீதம் வட்டி செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது. இந்த நிலைமை குறிப்பிட்ட காலப் பகுதியில் வருடாந்தம் அதிகரித்து செல்லல் காணப்பட்டதுடன், 2019 ஆண்டு முதல் துரிதமாக அதிகரித்திருந்தது. விபரங்கள் அட்டவணைகள் 10 இல் காண்பிக்கப்படுகின்றது.

ஆண்டு	உள்ளவாறான மீண்டுவரும் செலவு	வட்டிச் செலவு	வட்டிச் செலவு மொத்த மீண்டுவரும் செலவின் சதவீதமாக	உள்ளவாறான வருமானம்	வட்டிக் கொடுப்பனவு உள்ளவாறான வருமானத்தின் சதவீதமாக
	ரூபா பில்லியன்	ரூபா பில்லியன்	சதவீதம்	ரூபா பில்லியன்	சதவீதம்
2006	579	151	26.08	477	31.66
2007	615	181	29.43	572	31.64
2008	736	212	28.80	664	31.93
2009	882	303	34.35	708	42.80
2010	951	348	36.59	826	42.13
2011	1,020	353	34.61	943	37.43
2012	1,118	409	36.58	997	41.02
2013	1,254	465	37.08	1,066	43.62
2014	1,370	446	32.55	1,128	39.54
2015	1,673	527	31.50	1,394	37.80
2016	1,771	611	34.50	1,699	35.96
2017	1,946	736	37.82	1,845	39.89
2018	2,109	852	40.40	1,935	44.03
2019	2,322	889	38.29	1,907	46.62
2020	2,683	975	36.34	1,379	70.70
2021	2,757	1,048	38.01	1,467	71.44
மொத்தம்	**23,786**	8,507		**19,006**	

அட்டவணை 10 – கடனுக்கான வட்டி செலுத்துவதற்காக சேகரிக்கப்பட்ட வருமானத்தின் கூடிய சதவீதம் செலவிடல் மூலம் - 2006 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை அரச நிதிக் கூற்றுக்கள்

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் 2021 ஆண்டின் போது சேகரிக்கப்பட வேண்டியிருந்த ரூபா 620 பில்லியனிற்கான வருமானம் சேகரிக்கப்படாமல் நிலுவையாகக் காணப்பட்டது. அந்த வருமானத்தை 2021 ஆண்டிலேயே சேகரிப்பதற்கு முடியுமாக இருந்திருந்தால் அந்த ஆண்டின் வருமானப் பற்றாக்குறை ரூபா 670 பில்லியன் தொகை எனப்படும் 51.94 சதவீதத்தினால் குறைத்துக்கொள்ளக் கூடியதாக இருந்திருக்கும். அந்த நிலுவை வருமானம் 2019 மற்றும் 2020 ஆண்டுகளின் போது முறையே ரூபா 698 பில்லியன் தொகை மற்றும் ரூபா 579 பில்லியன் தொகையாக காணப்பட்டது. அந்த ஆண்டுகளின் போது அந்த நிலுவை வருமானத்தை சேகரித்துக்கொள்ள முடியுமாக இருந்திருந்தால் 2019 ஆண்டின் போது ரூபா 165 பில்லியனிற்கான வருமான மிகையொன்றினை ஆக்கிக்கொள்வதற்கு இயலுமாக இருந்திருக்கும். 2020 ஆண்டின் போது வருமானப் பற்றாக்குறை 606 பில்லியன் தொகை வரை 46.47 சதவீதத்தினால் குறைத்துக்கொள்வதற்கான இயலுமை காணப்பட்டது. விபரங்கள் அட்டவணை 11 இல் காட்டப்பட்டுள்ளது.

ஆண்டு	நிலுவை வருமானம்	வருமானப் பற்றாக்குறை	நிலுவை வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தால் வருமானத்தின் மிகை / (பற்றாக்குறை)	வருமானப் பற்றாக்குறையை குறைத்துக்கொள்ளும் சதவீதம்
	ரூபா பில்லியன்	ரூபா பில்லியன்	ரூபா பில்லியன்	சதவீதம்
2019	579	414	165	-
2020	698	1,304	(606)	46.47
2021	620	1,290	(670)	51.94

அட்டவணை 11 – வருமானத் திணைக்களத்தின் நிலுவை வருமானம் மற்றும் அது வருமானப் பற்றாக்குறைக்கு ஏற்படுத்திய தாக்கம்

மூலம் - 2019 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அரச நிதிக் கூற்றுக்கள்

சரியான முறையில் வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்காமை அல்லது தயாரிக்கப்பட்டிருந்த வருமான மதிப்பீட்டின் படி வருமானம் சேகரிக்கப்படாமை, சிக்கனமான முறையில் செலவுகளை முகாமைத்துவப்படுத்தாமையினால் அரச கடன் பெற்றுக்கொள்ள நேரிட்டிருந்தது. அந்தக் கடன் பெற்றுக்கொள்ளல் வருடாந்தம் அதிகரித்திருந்தமையால் கடன் வட்டிக் கிரயம் வருடாந்தம் அதிகரித்திருந்ததுடன் மீண்டுவரும் செலவுகள் அதிகரித்திருந்தது. மதிப்பீட்டு வருமானம் எதிர்பார்த்தவாறு சேகரிப்பதற்கு முடியாமல் போதல், மீண்டுவரும் செலவு அதிகரித்தமையால் வருடாந்தம் செலவுகளை தீர்த்துக்கொள்வதற்காக வருமானம் போதியளவாக காணப்படாமையினால் வருமானப் பற்றாக்குறை வருடாந்தம் அதிகரித்திருந்தது. விபரங்கள் வரைபடம் 08 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.



வரைபடம் 08 – வருமானப் பற்றாக்குறை உள்ளவாறான வருமானத்தின் சதவீதமாக

மூலம் - அரச நிதிக் கூற்றுக்கள் 2006 - 2021

அரச முதலீடுகள்

மீண்டுவரும் செலவை தீர்த்துக் கொள்வதற்காக போதியளவு வருமானத்தினை சேகரித்துக்கொள்வதற்காக 2006 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை கால வீச்சில் முடியாமல் இருந்த போதிலும் அக்கால வீச்சினுள் அரச முதலீடுகள் என ரூபா 8,199,316 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அந்த பயன்படுத்தலுக்கு தேவையான நிதியம் ஒட்டுமொத்தமாக அரச கடனின் மூலம்

மேற்கொள்ளப்பட்டிருந்ததென நிதிக் கூற்றுக்களின் பகுப்பாய்வின் போது தெளிவாகின்றது. 2021 ஆண்டின் போது அரச முதலீடுகள் என ரூபா 789,636 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டில் பயன்படுத்தப்பட்ட அரச முதலீடு எண்ணிக்கையான ரூபா 811,773 மில்லியன் தொகையாக இருந்ததுடன், அது மீளாய்வாண்டின் பயன்பாட்டுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 22,137 மில்லியனிற்கான குறைவடைதலொன்று அவதானிக்கப்பட்டது. 2021 ஆண்டின் அரச முதலீடுகள் ரூபா 789,636 மில்லியனிற்கான எண்ணிக்கை காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு தொழிற்பாடுகளினால் உருவாக்கப்பட்ட காசுப்பாய்ச்சலின் நிதி செலவிடலின் கீழ் பௌதீகச் சொத்துக்கள் நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய முதலீடுகளை தனதாக்கல் என காட்டப்பட்டிருந்தது. 2006 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை அரச முதலீடுகள் என கூட்டுத்தொகை ரூபா 8,199,316 மில்லியனிற்கான எண்ணிக்கை காசுப்பாய்ச்சல் கூற்றுக்களில் பௌதீக சொத்துக்கள் நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய முதலீடுகளை தனதாக்கலின் கீழ் காட்டப்பட்டிருந்தது. எனினும், 2021 ஆண்டின் நிதி நிலைமை கூற்றின் நிதி மற்றும் நிதி அல்லாத சொத்துக்கள் என அவற்றில் ரூபா 2,663,594 மில்லியன் தொகை மாத்திரம் சொத்துக்கள் என இனங் கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, காசுப்பாய்ச்சல் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த பௌதீக சொத்துக்கள் நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய முதலீடுகளை தனதாக்கல்களின் கூட்டுத்தொகை ரூபா 8,199,316 மில்லியன் தொகையில் ரூபா 5,535,721 மில்லியன் தொகை எனப்படும் 68 சதவீதம் பெறுமதியான சொத்துக்களை இனங் கண்டு கணக்கீடு செய்வதற்கு முடியாமல் இருந்தது. 2005 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரையான கால வீச்சில் நிதிக் கூற்றுக்களில் நிதி அல்லாத சொத்துக்களை கணக்கீடு செய்திருக்காததுடன், அவை 2015 ஆண்டு முதல் கணக்கீடு செய்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் அட்டவணை 12 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

ஆண்டு	பௌதீக சொத்துக்கள் நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய முதலீடுகளை தனதாக்கல்	கணக்கீடு செய்யப்பட்டிருந்த நிதி மற்றும் நிதி அல்லாத சொத்துக்களின் பெறுமதி	செலவிடப்பட்ட போதிலும் நிதி மற்றும் நிதி அல்லாத சொத்துக்கள் என கணக்கீடு செய்யப்படாத தொகை	செலவுகளின் கணக்கீடு செய்யப்படாத பெறுமதியின் சதவீதம்
	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்	சதவீதம்
2006	197,850	17,697	180,153	91.06
2007	271,191	45,279	225,912	83.30
2008	297,173	45,439	251,734	84.71
2009	365,754	71,819	293,935	80.36
2010	347,007	63,669	283,337	81.65
2011	398,519	49,615	348,904	87.55

2012	471,089	51,591	419,497	89.05
2013	455,578	25,923	429,655	94.31
2014	595,711	64,211	531,500	89.22
2015	683,963	125,266	558,697	81.69
2016	594,013	361,771	232,242	39.10
2017	657,530	500,300	157,230	23.91
2018	625,310	294,160	331,150	52.96
2019	637,219	304,949	332,269	52.14
2020	811,773	489,705	322,068	39.67
2021	789,636	152,200	637,436	80.73
மொத்தம்	**8,199,316**	**2,663,594**	**5,535,721**	**67.51**

அட்டவணை 12 – அரச முதலீடுகள் / பௌதீக சொத்துக்களை நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் ஏனைய முதலீடுகளை தனதாக்கல் மூலம் உறுவாக்கப்பட்ட நிதி மற்றும் நிதி அல்லாத சொத்துக்களை குறைவாக கணக்கீடு செய்தல்

மூலம் - 2006 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை அரச நிதிக் கூற்றுக்கள்

பாதீட்டுப் பற்றாக்குறை

அரச நிதிக் கூற்றுக்களின் படி 2021 ஆண்டின் பாதீட்டு பற்றாக்குறை ரூபா 2,080,078 பில்லியன் தொகை எனப்படும் மொத்த தேசிய உற்பத்தியின் 12.37 சதவீதமாக காணப்பட்டது. 2020 ஆண்டின் பாதீட்டு பற்றாக்குறை ரூபா 2,115,599 மில்லியன் தொகை எனப்படும் மொத்த தேசிய உற்பத்தியில் 14.08 சதவீதமாக காணப்பட்டது. 2006 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை ஒட்டுமொத்த கால வீச்சு பூராகவும் பாதிட்டுப் பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன், அது 2006 ஆண்டில் காணப்பட்ட ரூபா 299,705 மில்லியன் தொகைக்கான பாதீட்டுப் பற்றாக்குறை 2021 ஆண்டளவில் ரூபா 2,080,077 மில்லியன் தொகை வரை அதிகரித்திருந்தது. அந்தக் கால வீச்சில் ஆகக் கூடிய பாதீட்டுப் பற்றாக்குறை 2020 ஆண்டில் பதியப்பட்டிருந்தது. 2006 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை பாதீட்டுப் பற்றாக்குறை மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதப்படி கணித்த போது அது 5.55 சதவீதம் முதல் 14.08 தொகை வரையான வீச்சு எண்ணிக்கை காணப்பட்டது. உள்ளவாறான பாதீட்டு பற்றாக்குறை உள்ளவாறான மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதம் 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) சட்டத்தின் பிரிவு 3(அ) இன் பிரகாரம் காணப்பட வேண்டியிருந்த 5 சதவீத எல்லை அந்தக் காலப் பகுதியில் ஒரு ஆண்டிலேனும் பேணப்பட்டு காணப்படவில்லை. 2016, 2017 மற்றும் 2018 ஆண்டுகளின் போது முறையே 5.55 சதவீதம், 5.69 சதவீதம் மற்றும் 5.59 சதவீத எண்ணிக்கைகளில் பேணிச் செல்வதற்கு இயலுமாக இருந்தது. விபரங்கள் வரைபடம் 09 இல் காட்டப்பட்டுள்ளது.



வரைபடம் 09 - பாதீட்டுப் பற்றாக்குறை மொ.தெ.உ. சதவீதம் என.

மூலம் - நிதியமைச்சின் வருடாந்த அறிக்கைகள் மற்றும் அரச நிதிக் கூற்று 2006 - 2021

அரச நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டின் மதிப்பீட்டு பாதீட்டு பற்றாக்குறை ரூபா 2,569,545 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், அது முன்னைய ஆண்டின் மதிப்பிடப்பட்ட பாதீட்டுப் பற்றாக்குறை ரூபா 2,196,859 மில்லியன் தொகையாக காணப்பட்டது. அதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 372,686 மில்லியனினால், அதாவது 17 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அரச நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டின் உள்ளவாறான பாதீட்டுப் பற்றாக்குறை ரூபா 2,080,078 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் உள்ளவாறான பாதீட்டு பற்றாக்குறை ரூபா 2,115,599 மில்லியன் தொகையாக காணப்பட்டது. அதன்படி, முன்னைய ஆண்டை விட மீளாய்வாண்டில் உள்ளவாறான பாதீட்டு பற்றாக்குறை ரூபா 35,521 மில்லியனினால் குறைவடைந்திருந்தது. அதேபோல் மீளாய்வாண்டின் மதிப்பீட்டு பாதீட்டு பற்றாக்குறையை விட ரூபா 489,467 மில்லியன் தொகையினால் அதாவது 19 சதவீதத்தினால் உள்ளவாறான பாதீட்டுப் பற்றாக்குறை குறைந்திருந்தது.

இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதீட்டு பற்றாக்குறை

அரச நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பாதீட்டுப் பற்றாக்குறை மற்றும் இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதீட்டு பற்றாக்குறை இடையே வித்தியாசமான பெறுமதிகள் பதிவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக அரச நிதிக் கொள்கைகள் திணைக்களத்தினால் அரச நிதிக் கூற்று கணக்கீட்டு வகைப்படுத்தலின் படி தயாரிக்கப்பட்டிருந்தது எனவும், பொருளாதார வகைப்படுத்தலின் படி இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதீட்டுப் பற்றாக்குறை கணிக்கப்பட்டிருந்ததென அறிவிக்கப்பட்டிருந்தது. 2021 ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கி அறிக்கையின் படி

பாதீட்டுப் பற்றாக்குறை ரூபா 2,058,925 மில்லியன் தொகையாக காணப்பட்டது. எனினும், அரச நிதிக் கூற்றுக்களின் படி அந்த பற்றாக்குறை ரூபா 2,080,078 மில்லியன் தொகையாக காணப்பட்டது. அதன்படி, ரூபா 21,153 மில்லியன் இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

பாதீட்டு பற்றாக்குறை நிதியளிப்பு

அரச நிதிக் கூற்றுக்களுக்கு உரிய முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது பாதீட்டுப் பற்றாக்குறை ரூபா 35,521 மில்லியன் தொகையினால் அதாவது 1.68 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டின் போது பாதீட்டு பற்றாக்குறையை தீர்த்துக்கொள்வதற்காக தேறிய வெளிநாட்டுக் கடன் ரூபா 13,901 மில்லியன் தொகை திருப்பிச் செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது. அதன்படி, பாதீட்டுப் பற்றாக்குறையை தீர்த்துக்கொள்வதற்காக தேறிய உள்நாட்டுக் கடன் ரூபா 1,717,712 மில்லியன் தொகை பெற்றுக்கொள்வதற்கு நேரிட்டிருந்தது.

அதன்படி, மீளாய்வாண்டின் பாதீட்டுப் பற்றாக்குறைக்கு நிதியளிப்புச் செய்வதற்காக உள்நாட்டுக் கடன்கள் பெற்றுக்கொள்ளல் மூலம் உயர்ந்த பங்களிப்பு ஒன்றினை பெற்றிருந்ததுடன், அது ஒட்டுமொத்த நிதியளிப்பில் 82 சதவீதமாக காணப்பட்டது.

கடன்மீதி அதிகரித்தல்

வருடாந்த பாதீட்டுப் பற்றாக்குறை அதிகரிப்பின் முன்னிலையில் கடன் பெற்றுக்கொள்ளும் தொகையும் அதிகரித்திருந்தது. 2021 ஆண்டு இறுதியளவில் அரசினால் செலுத்த வேண்டிய கடன்மீதி என ரூபா 16,826,831 மில்லியன் தொகை என அரச நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. இந்த மீதி உள்நாட்டுக் கடன்கள் என ரூபா 9,985,947 மில்லியன் தொகையும், வெளிநாட்டுக் கடன்கள் என ரூபா 6,840,884 மில்லியன் தொகையுமாக காணப்பட்டது. அதன்படி, 2020 ஆண்டின் போது அரச கடன்மீதி ரூபா 14,692,492 மில்லியன் தொகையாக இருந்தது. அதன்படி, 2020 ஆண்டிற்கு ஒப்பாக 2021 ஆண்டின் போது கடன்மீதி ரூபா 2,134,339 மில்லியன் தொகையினால் அதாவது 14.53 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. 2006 ஆண்டில் காணப்பட்ட ரூபா 2,430,871 மில்லியனிற்கான கடன்மீதி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 82.72 சதவீதமாக காணப்பட்டது. அது 2021 ஆண்டிறுதியளவில் கடன் மீதி ரூபா 16,826,831 மில்லியன் தொகையாக இருந்ததுடன், அது மொத்த தேசிய உற்பத்தியில் 100.11 சதவீதமாக காணப்பட்டது. 2021 இன் 12 ஆம் இலக்க மற்றும் 2013 இன் 15 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) திருத்திய சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட 2003 இன் 3 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) சட்டத்தின் பிரிவு 3(ஊ) இன் பிரகாரம் அரச பொறுப்புக்கள் மொத்த தேசிய உற்பத்தியில் 80 சதவீதத்தை விட குறைவாக காணப்பட்ட வேண்டியிருந்த போதிலும், ஏனைய பொறுப்புக்கள் தவிர அரசாங்க கடன் பொறுப்பு மாத்திரம் அந்த வரையறையை மிகைத்து 100.11 சதவீதமாக இருந்தது. அந்த நிலைமை 2020 ஆண்டின் போதும் காணப்பட்டது. விபரங்கள் வரைபடம் 10 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.



வரைபடம் 10 – அரசாங்க கடன்மீதி மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாகும்.
மூலம் - அரச நிதிக் கூற்றுக்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை

அரச கடன்

இலங்கை சனநாயக சோசலிச குடியசரின் அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரச கடன் உட்பட மொத்த நிதிக் கட்டுப்பாடு பாராளுமன்றத்துக்கு சொந்தமாக காணப்பட்டதுடன் குடியரசின் அனைத்து கடன்களுக்குமாக பாராளுமன்ற அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும். 2021 இன் 26 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2020 இன் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரிவு 2.1 (ஆ) பிரகாரம் "2021 நிதியாண்டினுள் பெற்றுக்கொள்ளப்படும் கடன் தொகைகளின் மூலம் ஏற்படுகின்ற மீதித் தொகை 2021 ஆண்டினுள் எச்சர்ப்பத்திலும் அல்லது 2021 ஆண்டிறுதியில் ரூபா மூவாயிரத்து மூன்றூற்று தொன்னூற்றேழு பில்லியன் தொகையை மிகைக்காதவிடத்து மற்றும் 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவம் (பொறுப்புக்கள்) சட்டத்தின் பிரிவு 13 இன் படி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக தீர்மானிக்கப்பட்டிருந்த இறுதி பாதீட்டு நிலைமை தொடர்பாக அறிக்கை அந்தக் கடன் தொகைகளின் விபரங்கள் உட்படுத்தப்படின், அரசுக்காக மற்றும் அரசுக்குப் பதிலாக குறிப்பிட்ட சட்டங்களின் பிரகாரம், இலங்கையினுள் அல்லது வெளியில் பணம் பெற்றுக்கொள்வதற்காக இதன் மூலம் அதிகாரம் அளிக்கப்படும், 2021 நிதியாண்டினுள் கடன் பெறுவதன் மூலம் தீர்க்கப்பட வேண்டும். அவ்வாறாயினும், இந்தப் பிரிவில் அறுதியாக குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2021 நிதியாண்டினுள் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகையை கணிக்கும் கருமத்திற்காக குறுகிய கால கடன் தொகையை தீர்மானிக்கும் போது, 2021 நிதியாண்டினுள் பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்த குறுகிய கால கடன் தொகை மற்றும் 2021 ஆண்டினுள் மேற்கொள்ளப்படும் மொத்த குறுகிய கால கடன் தீர்த்தல் எண்ணிக்கை இடையே காணப்பட்ட வித்தியாசத்தை மாத்திரம் கவனத்தில் எடுக்க வேண்டும். அந்த ஏற்பாடுகளின் கீழ் பாராளுமன்றத்தினால் கடன் பெற்றுக்கொள்வதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அரச நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டின் போது வெளிநாட்டுக் கடன் ரூபா 516,606 மில்லியன் தொகையும், உள்நாட்டு வங்கி அல்லாத கடன்கள் (திறைசேரி உண்டியல் மூலம் தேறிய

கடன்பெறல் உட்பட) ரூபா 2,519,420 மில்லியன் தொகையுமாக மொத்தம் ரூபா 3,036,026 இற்கான கடன் பெறப்பட்டிருந்தது. அது முன்னைய ஆண்டில் பெற்றிருந்த ரூபா 2,854,791 மில்லியனிற்கான கடன் எண்ணிக்கை (திறைசேரி உண்டியல் மூலம் தேறிய கடன்பெறல் உட்பட) உடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 181,235 மில்லியனினால் அதாவது 6.34 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின் போது அரசு உள்நாட்டுக் கடன்கள் மீது கூடிய கவனம் செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது பெற்றிருந்த உள்நாட்டுக் கடன்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டில் பெற்றிருந்த (திறைசேரி உண்டியல் மூலம் தேறிய கடன்பெறல் உட்பட) ரூபா 2,253,903 மில்லியனிற்கான உள்நாட்டுக் கடன் எண்ணிக்கையுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 265,517 மில்லியன் தொகையினால் அதாவது 11.78 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின் போது பெற்றிருந்த கடன் எண்ணிக்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு அட்டவணை 13 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

விபரம்	2021 ரூபா மில்லியன்	2020 ரூபா மில்லியன்
வெளிநாட்டு கடன் பெறல்	**516,606**	**600,888**
உள்நாட்டுக் கடன் பெறல்		
திறைசேரி உண்டியல் (தேறிய)	649,336	723,705
திறைசேரி பிணைமுறி	1,761,979	1,332,069
வெளிநாட்டு பிரயோக பண வங்கி அலகு (செயற்திட்டமல்லாத)	(102,352)	50,635
அபிவிருத்தி பிணைமுறி	207,504	93,679
வெளிநாட்டு பிரயோக பண வங்கி அலகு (செயற்திட்டமல்லாத)	2,953	3,815
உள்நாட்டுக் காலரீதியான கடன் வசதிகள்	-	50,000
மொத்த உள்நாட்டுக் கடன் பெறல்	**2,519,420**	**2,253,373**
ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்த கடன்தொகை	3,036,026	2,854,791

அட்டவணை 13 – அரசினால் பெற்றுக்கொள்ளப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன் மூலம் அரச நிதிக் கூற்றுக்கள்

அரச நிதிக் கூற்றுக்களின் படி 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய மொத்த அரச கடன் மீதி (வங்கி மேலதிக பற்று தவிர) ரூபா 16,826,831 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், அது 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 14,692,492 மில்லியன் தொகைக்கான மொத்த அரச கடன்மீதி (வங்கி மேலதிக பற்று தவிர) ஒப்பீடு செய்யும் போது ரூபா 2,134,339 மில்லியன் தொகையினால் அதாவது 14.53 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டு இறுதியளவில் காணப்பட்ட மொத்த அரச கடன் தொடர்பான விபரம் ஒன்று கீழே அட்டவணை 14 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

விபரம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி	
	2021	2020
திறைசேரி உண்டியல்	2,270,712	1,621,375
திறைசேரி பிணைமுறி	6,937,928	5,689,504
ரூபாக் கடன்	24,088	24,088
இலங்கை அபிவிருத்தி பிணைமுறி	460,078	491,857
வெளிநாட்டு பிரயோகப் பணத்தில் உள்நாட்டுக் கடன்	139,301	227,418
வெளிநாட்டு பிரயோகப் பணத்தில் வங்கி அலகு (செயற்திட்டம்)	20,247	19,348
சுஹுருபாய கட்டிட நிர்மாண வேலைக்காக பெறப்பட்ட கடன்	5,120	5,689
திறைசேரி பிணைமுறி (சுழல் பொறுப்புக்கள் முகாமைத்துவச் சட்டம்)	30,000	30,000
ஓய்வூதிய பணிக்கொடைக் கடன்	52,995	57,065
லீஸிங் கடன் கொடுத்தோர்	478	732
உள்நாட்டு கால ரீதியான கடன் வசதிகள்	45,000	50,000
மொத்த உள்நாட்டுக் கடன்	9,985,947	8,217,076
வெளிநாட்டு (செயற்திட்டங்கள்)	3,779,702	3,576,769
வெளிநாட்டு பணத்திலிருந்து காலரீதியான கடன் வசதிகள்	445,521	279,612
சர்வதேச இறையான்மை பிணைமுறி	2,615,661	2,619,035
மொத்த வெளிநாட்டுக் கடன்	6,840,884	6,475,416
மொத்த அரச கடன்மீதி	16,826,831	14,692,492
மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த தேசிய உற்பத்தி	16,508,000	16,003,000
மொத்த அரச கடன்மீதி மதிப்பீட்டு மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக	101.93	91.81

அட்டவணை 14 - வகைப்படுத்தப்பட்ட வருட இறுதியில் காணப்பட்ட கடன்மீதி

மூலம் - அரச கணக்குத் திணைக்களம் / அரச நிதிக் கூற்று

உச்ச பொறுப்பு எல்லையை மிகைத்தல்

2021 இன் 12 ஆம் இலக்க மற்றும் 2013 இன் 15 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்திய) சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) சட்டத்தின் பிரகாரம், ஏதேனும், ஒரு வருட இறுதியில் காணப்படக்கூடிய உச்ச பொறுப்புக்களின் பெறுமதி அவ்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உட்பத்தியில் 80 சதவீதத்தை மிகைக்கக் கூடாது என இருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டுக் கடன் மற்றும் நிதி நிலைமை கூற்றுக்கு புறம்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த பல்வேறு அரச தொழில் முயற்சிகளுக்கு உரிய பொறுப்புக்களையும் கவனத்தில் எடுத்த போது மீளாய்வாண்டின் போது அந்த எல்லையை மிகைத்து பொறுப்புக்களுக்கு அணுகியிருந்தது. விபரம் அட்டவணை 15 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

பொறுப்புக்கள்	2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பொறுப்புக்களின் பெறுமதி ரூபா பில்லியன்
வங்கி மேலதிக பற்று	832
அரச கடன்கள் (அரச நிதிக் கூற்றுக்களின் படி)	16,826
மத்திய வங்கி முற்பணம்	150
நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்படாத பொறுப்புக்கள்	
- ஐந்தொகைக்கு வெளியே கணக்கீடு செய்யப்பட்ட வெளிநாட்டுக் கடன்	311
- கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டுக் கடன்	17
மொத்தப் பொறுப்புகள்	18,136
மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி	16,508
மொத்த பொறுப்புக்கள் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக	109.9

அட்டவணை 15 – உச்ச பொறுப்புக்கள் எல்லையை மிகைத்தல்

மூலம் - அரச நிதிக் கூற்றுக்கள்

திறைசேரியின் பிணைமுறிகள் மீது அரச தொழில் முயற்சிகளினால் பெற்றிருந்த கடனுக்காக வங்கிகளுக்கு வழங்கயிருந்த பிணைமுறி மற்றும் சலுகை கடிதங்களில் பெறுமதியாகிய ரூபா 1.58 பில்லியன் தொகை மற்றும் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் வெளிநாட்டு செலவு அலகுகளின் வருடாந்தம் நிதிக் கூற்றுக்களில் பொறுப்புக்கள் கூற்றில் உட்படுத்தப்பட்டிருந்த ரூபா 334 பில்லியனிற்கான பெறுமதியும் மேற்கூறிய பொறுப்புக்களில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

தனிநபர் கடன் தொகை

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 08 ஆண்டுகளில் அரச கடன்மீதி, மத்திய வருடாந்த சனத்தொகை மற்றும் தனிநபர் கடன் தொகை வரைபடம் 11 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.



வரைபடம்..... - தனிநபர் கடன் தொகை

மூலம் - அரச நிதிக் கூற்று / மத்திய வங்கி வருடாந்த அறிக்கை

மேற்கூறிய தகவல்களின் படி மொத்த அரச கடன் மத்திய வருடாந்த சனத்தொகையுடன் ஒப்பீடு செய்யும் போது 2012 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 264,811 தொகையான தனிநபர் கடன் பெறுமதி 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா

759,471 தொகை வரை அதிகரித்திருந்தது. அதேபோல் அது 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 670,308 தொகைக்கான தனிநபர் கடன்தொகை ஒப்பீடு செய்யும் போது ரூபா 89,163 தொகையினால் அதாவது சுமார் 13.30 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

அரச வருமானம் குறைவடைந்து கடன் தவணை மற்றும் வட்டி கொடுப்பனவு அதிகரித்தல்

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது தேறிய கடன் கொடுப்பனவு (உள்நாடு மற்றும் வெளிநாடு) ரூபா 369,317 மில்லியன் தொகையினால் அதிகரித்திருந்ததுடன் கடனுக்கான வட்டி கொடுப்பனவும் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது ரூபா 72,948 மில்லியன் தொகையினால் அதாவது 7.48 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டுகளின் போது போலவே மீளாய்வாண்டின் போதும் கடன் தவணைகள் மற்றும் வட்டி செலுத்துவதற்காக சேகரிக்கப்பட்ட வருமானம் போதியளவானதாக காணப்படவில்லை. விபரங்கள் வரைபடம் 12 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.



வரைபடம் 12 - கடன் தவணை மற்றும் வட்டி செலுத்துவதற்காக சேகரிக்கப்பட்ட வருமானம் போதியளவாக காணப்படாமை

மூலம் - அரச நிதிக் கூற்று

அரச உடமையாக்கப்பட்ட பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகள்

விடயங்கள்

- நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்காக சமர்ப்பித்தல்
- ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் கம்பனி
- அரச கம்பனிகளின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

அரச உடமையாக்கப்பட்ட பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகள்

அரச உடமையாக்கப்பட்ட பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்டதாகக் கருதப்படும் கம்பனிகளை உள்ளடங்குகின்றன, இதில் 50 சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகள் அரசாங்கம் அல்லது ஒரு பொதுக் கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூர் அதிகாரசபையால் வைத்திருக்கப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் 125 அரச உடமையாக்கப்பட்ட கம்பனிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நேரடி கணக்காய்வில் சேர்க்கப்பட்டுள்ளன, அவற்றில் 70 கம்பனிகள் 2022 செப்தெம்பர் 20 வரையிலும் 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்திருக்கவில்லை, மேலும் 55 கம்பனிகள் மாத்திரமே நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்திருந்தன. பொது முயற்சிகள் திணைக்களத்தின் 125 அரச உடமையாக்கப்பட்ட கம்பனிகளின் துறைசார் வகைப்படுத்தல் வரைபடம் 13 கீழே உள்ளது.



வரைபடம் 13 : பொது முயற்சிகள் திணைக்களத்தின் 125 அரச உடமையாக்கப்பட்ட கம்பனிகளின் துறைசார் வகைப்படுத்தல்

இந்த 125 கம்பனிகளில் மின்சாரத்துறை தொடர்பான கம்பனி ஒன்று தனது கம்பனியை கணக்காய்வாளர் தலைமை அதிபதி கணக்காய்வு செய்வதை தடுத்து நீதிமன்றத்தில் இடைக்கால உத்தரவு பெற்றுள்ளதால் அந்த

கம்பனியை கணக்காய்வு செய்ய முடியவில்லை.

கணக்காய்விற்காக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அதிகார எல்லையின் கீழ் வருகின்ற 125 அரச உடமையாக்கப்பட்ட கம்பனிகள் கணக்காய்விற்காக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்ததன் பொழிப்பு கீழே உள்ளது.



2021 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அரச உடமையாக்கப்பட்ட 55 கம்பனிகள் தொடர்பாக அறிக்கையிடப்பட்ட வரிக்கு முன்னரான ஒட்டுமொத்த இலாபம் ரூபா 41,283 மில்லியனானதுடன் 20 கம்பனிகள் மீளாய்வாண்டில் வரிக்கு முன்னரான நட்டங்களை அறிக்கையிட்டுள்ளன. ஒட்டுமொத்த நட்டம் ரூபா 2,865 மில்லியனாகும். மீளாய்வாண்டில் 34 கம்பனிகள் இலாபம் ஈட்டியுள்ளன. எயார்போர்ட் அன்ட் ஏவியேஷன் சேர்வீசஸ் ஸ்ரீ லங்கா) (பிறைவேட்) லிமிட்டட், வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு, மாகம்புர போர்ட் மெனேஜ்மென்ட் கம்பனி மற்றும் ஹோட்டல் டெவலப்பர்ஸ் லங்கா லிமிட்டட் ஆகியன ரூபா 100 மில்லியனுக்கும் அதிகமான வரிக்கு முன்னரான நட்டத்தை பெற்ற அரச கம்பனிகளில் உள்ளடங்கியுள்ளன. 2021 ஆம் ஆண்டுக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபாதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்ட 55 அரச உடமையாக்கப்பட்ட கம்பனிகளின் மொத்த சொத்துக்கள் ரூபா 665,090 மில்லியன் ஆகும்.



வரைபடம் 14 - 2021 ஆம் ஆண்டிற்கான வரிக்கு முன்னரான இலாபம்/நட்டம்

ஸ்ரீலங்கன் எயார்ர்லைன்ஸ் லிமிட்டட்

ஏயார் லங்கா கம்பனி 1998 ஆம் ஆண்டு முதல் ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் கம்பனியாக மாற்றப்பட்டதுடன் ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் லிமிட்டட் 1998 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை எமிரேட்ஸ் நிறுவனத்துடன் பத்தாண்டுகள் மூலோபாய பங்குடமை வணிகமாக நடாத்தப்பட்டது. 2008 ஆம் ஆண்டு முகாமைத்துவம் உள்ளூர் முகாமைத்துவத்திடம் ஒப்படைக்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் நடைபெற்ற அதிவிசேட கூட்டத்தின் பிரகாரம் கம்பனியின் பங்கு மூலதனம் 20/21 ஆண்டின் போது அரசாங்கம் வழங்கிய படிகளை சேர்த்து ரூபா 44,743.23 மில்லியனாக அதிகரித்துள்ளது. எனவே கம்பனியின் மூலதனத்தில் அரசாங்க பங்களிப்பு ரூபா 51,157 மில்லியன் அல்லது 99.11 சதவீதத்திலிருந்து ரூபா 95,900 மில்லியன் அல்லது 99.56 சதவீதம் வரை அதிகரித்துள்ளது.

2021 மார்ச் 31 இல் உள்ளவாறு 12 குறுகிய உடலமைப்பிலான மற்றும் 12 அகலமான உடலமைப்பிலான வாடகை விமானங்கள் சேவையில் இருந்தன, ஆனால் அவற்றில் 4 விமானங்கள் செயற்பாட்டில் இருக்கவில்லை அல்லது அவை குறைப்பயன்பாட்டில் உள்ளன. 2022 மார்ச் 31 இல் உள்ளவாறு கம்பனியின் ஊழியர்கள் 5,965 ஆகும்.

2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் தேறிய நட்டம் ரூபா 45,674 மில்லியனாக இருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாறான ஒட்டுமொத்த நட்டம் ரூபா 372,015 மில்லியனாக இருந்தது. மேலும் அத் திகதியில் உள்ளவாறான கம்பனியின் தேறிய சொத்து பெறுமதி ரூபா 289,574 மில்லியன் எதிர்மறை பெறுமதியாக

இருந்தது. எனவே, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை கடுமையான சிக்கலொன்றாக உள்ளது. எனினும், கணக்காய்விற்கு அமைச்சரவையின் அங்கிகாரத்தின் பேரில் பொது திறைசேரி கம்பனிக்கு தொடர்ந்தியங்குவதற்கு அரசாங்கம் ஆதரவை வழங்கும் என்று உத்தரவாதம் அளித்துள்ளது.

2021 மார்ச் 31 இல் உள்ளவாறு 2 அரச வங்கிகளிடம் இருந்து பெறப்பட்ட மொத்தக் கடன் ரூபா 71,621 மில்லியனாக இருந்ததுடன் அத் திகதியில் உள்ளவாறு சர்வதேசப் பிணைமுறி மீதி ரூபா 34,909 மில்லியனாக இருந்தது.

2010 முதல் 2021 வரையிலான காலப்பகுதியில் கம்பனிக்காக 11 கூட்டிணைந்த திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. எனினும் இந்தத் திட்டங்களின் இலக்குகளை அடைய முடியவில்லை. ஆறு (06) A 330-300 விமானங்கள் மற்றும் நான்கு (04) A350-900 விமானங்களை கொள்வனவு செய்தல், மேலும் நான்கு (04) A350-900 விமானங்களை குத்தகைக்கு விடுதல் மற்றும் மேற்படி ஆறு (06) A 330-300 விமானங்களை விற்பனை செய்து குத்தகைக்கு விடுதல் என்பவற்றிற்கான தீர்மானம் 2013 இல் கம்பனியின் பணிப்பாளர் சபையால் அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமலும் சரியான கிரய நலன் பகுப்பாய்வு மேற்கொள்ளப்படாமலும் எடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், கம்பனி A321 NEOs மற்றும்/ அல்லது A330 NEOs இற்கு பதிலாக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் வழங்க திட்டமிடப்பட்ட நான்கு (04) எண்ணிக்கையான A350-900 விமானங்களின் கொள்வனவு உடன்படிக்கையை திருத்துவதற்கு எயார்பஸ் எஸ்ஏஎஸ் கம்பனியுடன் பேச்சுவார்த்தை நடாத்தி வருகிறதுடன் அறிக்கையிடப்பட்ட திகதியில் உள்ளவாறு ரூபா 2,528.12 மில்லியன் (USD 19.21 மில்லியன்) தொகை Airbus இற்கு விநியோகிப்பதற்கு முன்னரே கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. எனினும், 2022 மார்ச் 31 வரை எந்த இறுதி தீர்மானமும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், 6 எண்ணிக்கையிலான A330-300 விமானங்கள் 2013 மற்றும் 2014 இல் வாங்கப்பட்டன, விற்கப்பட்டன மற்றும் குத்தகைக்கு விடப்பட்டன.

மேலும், 2016/2017 ஆம் ஆண்டில் வழங்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த நான்கு (04) A350-900 விமானங்களை குத்தகைக்கு பெறுவதற்கான குத்தகை உடன்படிக்கைகளை இரத்து செய்யும் செயற்பாட்டின் போது ரூபா 16,924.36 மில்லியன் தொகை இழப்பீடாக செலுத்தப்பட்டது. மேலும், இந்த கொடுக்கல்வாங்கலுடன் தொடர்புடைய ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸின் முன்னாள் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரின் மனைவிக்கு சொந்தமான கம்பனியொன்றிற்கு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு Airbus இன் ஊழியர்கள் இணங்கியிருந்தனர் என ஐக்கிய இராச்சியத்தின் கிரவுன் நீதிமன்றத்தின் தீர்ப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. முன்னாள் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரிற்கு எதிராக கம்பனியால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்காததுடன் சேதங்களும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

அரச உடமையாக்கப்பட்ட கம்பனிகளின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

அரச உடமையாக்கப்பட்ட கம்பனிகளால் 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்ட

நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக அதில் காட்டப்பட்டுள்ள நிதித் தகவல்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றதா என்பதும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் நிதிக்கூற்றுக்கள் இணங்கியுள்ளதா என்பதும் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் முடிவு கணக்காய்வு அபிப்பிராயத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்த 55 அரச உடமையாக்கப்பட்ட கம்பனிகள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயத்தின் வடிவம் கீழே உள்ளது.



விசேட வணிக தொழில் முயற்சிகள்

விடயங்கள்

- விசேட வணிக தொழில் முயற்சிகளின் செயலாற்றல்
- நிதி செயலாற்றல்
- விசேட வணிக தொழில் முயற்சிகள் சமர்ப்பித்த நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

விசேட வணிக தொழில் முயற்சிகள்

1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் அதிகாரச் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கபிபட்டுள்ள பிரமானங்களுக்கு இணங்க சில நிறுவனங்கள் விசேட வணிக முயற்சநசிகளாக அறிமுப்படுத்தப்பட்டுள்ளன. இந்த அதிகாரச் சட்டம் 1999 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து இனங்காணப்பட்ட விசேட முயற்சிகளின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், சமர்ப்பித்தல்,கணக்காய்வு செய்தல் என்பவற்றிற்காக தொடர்புபடுகின்றன.

அதற்கிணங்க, வங்கி, காப்புறுதி, குத்தகை, கடன் வழங்குதல், நிதிச் சேவைகள், நிதிய முகாமைத்துவம், பங்கு தரகுகள் ஆகிய வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள கம்பனிகள், கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் கீழ் பட்டியல் இடப்பட்டுள்ள அனைத்து கம்பனிகளும் மற்றும் ரூபா 500 மில்லியனுக்கு வருமானம் உள்ள கம்பனிகள், ரூபா 100 மில்லியனை விட அதிக உரிமை மூலதனத்திற்குச் சொந்தமான கம்பனிகள், ரூபா 300 மில்லியனுக்கு மேற்பட்ட மொத்தச் சொத்துக்களுக்குச் சொந்தமான கம்பனிகள், வங்கி மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களுக்கு ரூபா 100 மில்லியனை விட அதிக பொறுப்புக்களையுடைய கம்பனிகள், 1000 இனைவிட அதிக பதவியணியினர்களை ஈடுபடுத்தியுள்ள கம்பனிகள், பொருட்கள் விற்பனையில் அல்லது சேவை வழங்கலில் ஈடுபட்டுள்ள அரசாங்க கூட்டுத்தாபனங்கள் என்பன விசேட வணிக முயற்சிகளில் (SBE) உள்ளடக்கப்படுகின்றன. இந்த ஒவ்வொரு விசேட வணிக தொழில் முயற்சியினாலும் (SBE) இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க அவற்றின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் அத்தியாவசியமானதுடன் திறன் தொழிலில் செயற்படுவதற்கான நிதி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ஒரு சான்றிதழைக் கொண்டிருக்கும் நிறுவனத்தின் அங்கத்தவர்களான தொழில்சார் ரீதியாக தகமைபெற்ற கணக்காய்வாளர்களால் ஒவ்வொரு விசேட வணிக தொழில் முயற்சியினதும் (SBE) கணக்குகள் கணக்காய்வு செய்யப்படுகின்றன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் செயற்பாடுகள் மற்றும் கடமைகளுக்கு உட்பட்டு அரசாங்க கூட்டுத்தாபனம் ஏதும் எழுத்திலான சட்டத்தின் கீழ் அரசாங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள வணிக முயற்சிகள் மற்றும் ஏனைய தொழில் முயற்சிகள், 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள அல்லது பதிவுசெய்யப்பட்டுள்ளது என கருதப்படுகின்ற மற்றும் தமது பங்குகளில் ஐம்பது சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட சதவீதத்தினை அரசாங்கம் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூராட்சி நிறுவனத்தினால்

வைத்திருக்கப்படும் கம்பனிகளும் அவற்றின் கணக்குகளும் உள்ளடங்கலாக கணக்காய்வு செய்யப்பட வேண்டும் என குறிப்பிடப்படுகின்றது.

இலங்கை கணக்கீட்டு நியமம் மற்றும் மேற்பார்வை சபையின் தகவல்களுக்கு இணங்க 1681 கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனங்கள் விசேட வணிக தொழில் முயற்சிகளாக (SBE) பட்டியல்ப்படுத்தப்பட்டுள்ளதுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திற்கு இணங்க 2021 ஆம் ஆண்டின் இறுதியில் அரசாங்க கம்பனிகளைத் தவிர்த்து விசேட வணிக தொழில் முயற்சிகளாக (SBE) கொண்டுவரப்படுகின்ற 45 அரசாங்க கூட்டுத்தாபனங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விடயப்பரப்பிற்கு உட்படுகின்றன. அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிறுவன வகைப்படுத்தலின் பிரகாரம் அந்த விசேட வணிக முயற்சிகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.



வரைபடம்..... விசேட வணிக தொழில் முயற்சிகளின் வகைப்படுத்தல்

விசேட வணிக தொழில் முயற்சிகளின் செயலாற்றல்

பல விசேட வணிக தொழில் முயற்சிகள் சில நிர்ணயிக்கப்பட்ட குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக பாராளுமன்ற அதிகாரச் சட்டத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட அரசாங்க கூட்டுத்தாபனங்களாகும். சில விசேட வணிக தொழில் முயற்சிகள் நட்டம் அடையும் நிலையில் இருக்கின்ற போதிலும் அதன் சமூக நலன்களை கருத்தில் கொண்டு தொடர்ந்தும் பேணப்படவேண்டியதாக உள்ளது.

இலாபத்தினை அதன் போது செயலாற்றல் அளவு கோளாகக் கருதுதல் சிறப்பானது அல்லாததுடன் அந்த தொழில் முயற்சிகள் எவ்வளவு தூரம் அந்த முன்னணி சமூக தேவைப்பாட்டிற்காக காட்டியுள்ள பங்களிப்பினை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளுதல் வேண்டும்.

அதன் போது செயலாற்றல் கணக்காய்வின் தேவைப்பாடு அதிக அளவில் உருவாகுவதுடன் ஒவ்வொரு தொழில் முயற்சியினையும் தோற்றுவிக்கும் விசேட குறிக்கோள் காணப்பட்டதுடன் செயலாற்றல் கணக்காய்வின் போது அந்த குறிக்கோளினை அடைந்து கொள்வதற்காக அந்த விசேட வணிக தொழில் முயற்சிகளின் வளங்கள் ஆக்கபூர்வமாகவும் சிக்கனமாகவும் மற்றும் வினைத்திறனாகவும் குறிக்கோளினை அடைந்து கொள்வதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பது பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்படுகின்றது.

நிதி செயலாற்றல்

கணக்காய்விற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வங்கிகள் மற்றும் 07 நிதி நிறுவனங்களைத் தவிர்த்து ஏனைய 26 தொழில் முயற்சிகள் 2021 ஆம் ஆண்டில் ரூபா 72,281 மில்லியன் திரண்ட வரிக்கு முன்னைய நட்டத்தினை உழைத்திருந்ததுடன் அதன் துறைசார்ந்த வகைப்படுத்தல் வரைபடம் 16 இல் தரப்படுகின்றது.



வரைபடம் 16 : 2021 ஆம் ஆண்டிற்கான வரிக்கு முன்னைய இலாபம்/ நட்டம்

நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்த 26 நிறுவனங்களில் (வங்கிகளைத் தவிர்த்து) 06 நிறுவனங்களின் நிதி விளைவுகள் பற்றாக்குறை நிலையில் காணப்பட்டதுடன் அவற்றின் திரண்ட வரிக்கு முன்னைய நட்டப் பெறுமதி ரூபா 110,177 மில்லியனாகும். 20 நிறுவனங்களின் திரண்ட வரிக்கு முன்னைய இலாபம் ரூபா 37,896 மில்லியனாகும் 2021 ஆம் ஆண்டின் இறுதியின் போது ரூபா 100 மில்லியனுக்கு மேற்பட்ட நட்டத்தினை அறிவித்திருந்த பிரதான நிறுவனங்களுக்கு மத்தியில் இலங்கை போக்குவரத்துச் சபை, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, இலங்கை மின்சார சபை, பொற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகிய இரண்டு நிறுவனங்களின் வரிக்கு முன்னைய நட்டம் மாத்திரம் ரூபா 103,745 மில்லியனாகும்.

கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் (வங்கிகளைத் தவிர்த்து) விசேட வணிக தொழில் முயற்சிகளின் மொத்த தேறிய சொத்துக்கள் ரூபா 930,258 மில்லியனாகும். அதன் துறை சார்ந்த வகைப்படுத்தலின் அடிப்படையில் தேறிய சொத்துக்கள் பரவிக் காணப்படுகின்றமையை பின்வருமாறு காட்டலாம். அதற்கிணங்க 2021 ஆம் ஆண்டு தொடர்பாக துறைமுக அதிகார சபை மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மொத்த தேறிய சொத்துக்களின் 93 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. சொத்துக்களை மிகைத்துள்ள பொறுப்புக்களின் திரண்ட பெறுமதி ரூபா 367,678 மில்லியனானதுடன் அதற்கு இலங்கை போக்கு வரத்துச் சபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம், உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம் என்பன உள்ளடக்கப்படுகின்றன.



வரைபடம் 17 - விசேட வணிக தொழில் முயற்சிகளின் தேறிய சொத்துக்கள் பரவிக் காணப்படுகின்றமை.

விசேட வணிக தொழில் முயற்சிகள் சமர்ப்பித்த நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

விசேட தொழில் முயற்சிகளால் 2021 ஆம் ஆண்டின் இறுதியில் கணக்காய்விற்காகச் சமர்ப்பித்த நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக அதன் வெளியிடப்பட்ட நிதித்தகவல்கள் உள்ளபடியான மற்றும் நியாயமான நிலைமையை வெளிப்படுத்தப்படுகின்றதா என்பது தொடர்பாகவும் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியுள்ளமை தொடர்பாகவும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இறுதித் தீர்மானமானது கணக்காய்வு அபிப்பிராயத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டது. வங்கிகளைத் தவிர்த்து 38 விசேட வணிக முயற்சிகள் சம்பந்தமாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்வு அபிப்பிராயத்தின் முறைமை கீழே தரப்படுகின்றது.



கணக்காய்விற்குள்ளாக்கப்படும் நியதிச்சட்ட மற்றும் நியதிச்சட்டம் அல்லாத நிதியங்கள

கணக்காய்விற்குள்ளாக்கப்படும் நியதிச்சட்ட மற்றும் நியதிச்சட்டம் அல்லாத நிதியங்கள்

திட்டவட்டமான இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதனை நோக்காகக் கொண்டு 64 நியதிச்சட்டம் மற்றும் நியதிசட்டம் அல்லாத நிதியங்கள் நிறுவப்பட்டுள்ளதுடன் அந்த அனைத்து நிதியங்களும் அமைச்சொன்று, திணைக்களம் அல்லது அரச கூட்டுத்தாபனம் ஒன்றின் கீழ் செயற்படுத்தப்படும். இந்நிதியங்களின் 42 மாத்திரம் அதிகாரச்சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய 22 நிதியங்களும் அமைச்சரவை அங்கீகாரம், செயல்வழிக் கோவைகள் மற்றும் ஏனைய அதிகாரச்சட்டங்களில் உள்ள ஏற்பாடுகளை பயன்படுத்தியும் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு உரித்துறுதிகளின் மூலம் நிறுவப்பட்டிருந்த நியதிச்சட்டம் அல்லாத நிதியங்களாகவும் தாபிக்கப்பட்டிருந்தன.

2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 15.1 ஆம் பந்தியின் மூலம் உள்ளடக்கப்பட்ட 876(3) நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நியதிச்சட்டம் அல்லாத நிதியங்கள் உடனடியாக அமுலாகும் வகையில் இரத்துச் செய்யப்பட்டு அவற்றின் பண மீதிகள் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதற்கமைய நியதிச்சட்டம் அல்லாத 22 நிதியங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அந்தப் பந்திக்கமைய நியதிசட்டம் அல்லாத நிதியங்களை பேணிச் செல்வதற்கு நியாயமான காரணங்கள் காணப்படின் அவ்வாறான நிதியங்கள் பாராளுமன்ற அதிகாரச்சட்டத்தின் ஊடாக சட்டமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டினுள் எந்தவொரு நிதியமும் நியதிச்சட்டமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2022 செப்தெம்பர் 10 ஆந் திகதியில் உள்ளபடியாக 2021 நிதியாண்டிற்காக 51 நிதியங்களின் நிதிக்கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 13 நிதியங்களின் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 51 கணக்குகளில் கணக்காய்வு நிறைவு செய்யப்பட்ட 46 கணக்குகள் தொடர்பில் வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயங்களின் எண்ணிக்கை அட்டவணை இலக்கம் 16 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வு அபிப்பிராயங்கள்	எண்ணிக்கை
முனைப்பழியற்ற அபிப்பிராயம்	10
முனைப்பழியுள்ள அபிப்பராயம்	34
மறுப்பு அபிப்பிராயம்	01
பாதகமான அபிப்பிராயம்	01

அட்டவணை 16 : 46 நிதியங்கள் தொடர்பில் வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயங்கள்

2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்த 56 நிதியங்களில் 35 நிதியங்களின் காசு மீதிகள் மற்றும் 15 நிதியங்களின் திறைசேரி பொது வைப்பு மீதியொன்று காணப்பட்டது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளபடியான காசு மற்றும் வங்கி மீதி ரூபா 7,786.26 மில்லியன் மற்றும் மின்சார சபையின் ஊழியர் நலன்புரி நிதியத்தின் வங்கி மேலதிகப்பற்று ரூபா 72.85 மில்லியனாக காணப்பட்டதுடன் உள்ளூராட்சி சேவைகள்

ஓய்வூதிய நிதியத்தின் ஓய்வூதிய திணைக்களத்தின் பொதுக் கணக்கிற்கு வைப்புச் செய்யப்பட்டது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக திறைசேரியினால் பேணிச் செல்லப்படும் 15 வைப்புக்கணக்குகளின் ரூபா 24,674.71 மில்லியன் ஆன மீதி நிலவியது.

வருடாந்த நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்திருந்த 51 நிதியங்களுக்குரிய மொத்த வருமானம் ரூபா 405,092.90 மில்லியனாக காணப்பட்டதுடன் மொத்த செலவினம் ரூபா 62,127.05 மில்லியன் ஆகும். அந்நிதியங்களில் 42 நிதியங்களின் மீளாய்வாண்டில் ஈட்டிய மிகை ரூபா 344,573.87 மில்லியனாக காணப்பட்டதுடன் இலாபம் பெற்றிருந்த 09 நிதியங்களின் பற்றாக்குறை ரூபா 1,608.02 மில்லியன் ஆகும். மேலும் 51 நிதியங்களுக்குரிய மொத்த சொத்துக்களின் மீதி ரூபா 3,687.61 மில்லியன் ஆகும்.

மாவட்டச் செயலகங்கள்

மாவட்ட செயலகங்கள்

மாவட்டச் செயலகங்கள் 25 இன் கீழ் 329 பிரதேசச் செயலகங்கள் செயற்படுத்தப்பட்டு வருவதுடன் வருடாந்த வரவு செலவு மதிப்பீட்டின மூலம் மாவட்டச் செயலகங்களுக்கு நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. 25 மாவட்ட செயலகங்களின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற பிரதேச செயலகங்களில் வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு உரிய அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

2021 ஆம் வருடத்தில் 25 மாவட்டச் செயலகங்களின் கீழ் பாராளுமன்ற ஒதுக்கீட்டுச் சட்டத்தில் ரூபா 43,656.65 மில்லியன் ஆன நிதியேற்பாடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 38,056.88 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்டிருந்த ஒதுக்கங்களில் ரூபா 4005.77 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது. நேரடி அமைச்சின் மூலம் ரூபா 17,179.69 மில்லியன் நிதியேற்பாடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 11,727.72 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் ரூபா 5,451.97 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது. மேலும் வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் மூலம் பல்வேறு பணிகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 85,261.54 மில்லியன் ஆன தொகையில் ரூபா 69,023.63 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 16,237.96 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது.

2021 ஆம் வருடத்தில் மாவட்டச் செயலகங்களின் நடவடிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மாதிரிக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட முக்கிய அவதானிப்புக்கள் சில கீழே காட்டப்படுகின்றன.

- கொழும்பு மாவட்டச் செயலகத்தின் கீழ் 13 பிரதேசச் செயலகங்கள் செயற்படுத்தப்படுகின்றன. 06 பிரதேசச் செயலகங்களுக்காக ரூபா 2.99 மில்லியன் ஆன நிதியேற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த 16 செயற்திட்டங்களின் பணிகள் முடிக்கப்பட்டிருக்கவில்லை. கொழும்பு, தெஹிவளை, கொலன்னாவ, கெஸ்பேவ மற்றும் ஹோமாகம போன்ற பிரதேசச் செயலகங்கள் இயங்கி வருகின்ற காணிகளின் உரிமை அப் பிரதேசச் செயலகங்களுக்கு சொந்தமற்றவை என்பதுடன் அவற்றின் உரிமையைக் கையேற்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- கம்பஹா மாவட்டச் செயலகத்தின் கீழ் 13 பிரதேச செயலகங்கள்

செயற்படுத்தப்படுகின்றன. மஹரப் பிரதேசச் செயலகத்தில் 2014 யூலை 15 ஆம் திகதியில் இடம் பெற்ற ரூபா 1.08 மில்லியன் ஆன மோசடி தொடர்பாகப் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அது பிரதேசச் செயலாளர், கணக்காளர், நிதி உதவியாளர் மற்றும் சிறாப்பர் போன்றவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியுள்ளதாக பரிந்துரை வழங்கப்பட்டிருந்த போதிலும் 2022 ஆகஸ்ட் வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை.

மினுவாங்கொட, அத்தனகல்ல மற்றும் நீர்கொழும்பு பிரதேசச் செயலகங்களில் செயற்படுத்தப்படுகின்ற 16 திவிநெகும, சமூக வங்கிகளால் வழங்கப்பட்டிருந்த ரூபா 254.16 மில்லியன் கடன் மீதியின் கொடுப்பனவுகள் தவறவிடப்பட்டிருந்தது. அத்தனகல்ல பிரதேச செயலகப் பிரிவிற்கான பிரதேசத்தில் 50,718 குடும்பங்கள் காணப்பட்டதுடன் அதில் 399 குடும்பங்கள் அங்கீகரிக்கப்படாத வீடுகளிலும் 318 தற்காலிக வீடுகளிலும் 345 பேர் கழிவறை வசதிகள் இன்றியும், 269 சாலை வசதிகள் அற்ற குடும்பங்களாகவும், 662 சுத்தமான தண்ணீர் அற்ற குடும்பங்களாகவும், 564 மின்சாரமில்லாத வீடுகளாகவும், 27,118 பேர் வேலையில்லாமல் இருப்பதும் அவதானிக்கப்பட்டன.

- களுத்துறை மாவட்டச் செயலகத்தின் கீழ் 14 பிரதேசச் செயலகங்கள் செயற்படுத்தப்படுகின்றன. பிரதேசச் செயலகங்களின் 8 அதிகார எல்லைகளுக்குட்பட்ட அரச மற்றும் அரைவாசி அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான 45 கட்டிடங்கள் பல வருடங்களாக பயன்படுத்தப்படவில்லை. அதில் 11 பயன்படுத்தப்பட முடியாத நிலையில் காணப்பட்டன. இயற்கை அனர்த்தங்களினால் முற்றாக சேதமடைந்த குடும்பங்களுக்காக "வீடொன்றுக்கு வீடு" என்ற கருத்திட்டத்தின் அடிப்படையில் 918 வீடுகளுக்காக 2017 தொடக்கம் 2021 வரை ரூபா 1,466.81 மில்லியன் ஆன நிதியேற்பாடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 1,002.29 மில்லியன் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. 397 பயனாளிகளின் வீடுகள் முடிக்கப்பட்டிருக்கவில்லை.

- காலி மாவட்டச் செயலகத்தின் கீழ் 19 பிரதேசச் செயலகங்கள் செயற்படுத்தப்படுகின்றன. 2000 பேர் அமரக் கூடிய காலிக் கேட்போர் கூடத்தை நிர்மாணிப்பதற்கான ஆரம்ப மதிப்பீடு ரூபா 1,700 மில்லியன் என்பதுடன் இரண்டு சந்தர்ப்பங்களில் முறையே ரூபா 2,657 மில்லியன் மற்றும் ரூபா 3,155 மில்லியன் வரை மதிப்பீடு அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் சாத்தியக் கூறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

பௌதீக முன்னேற்றம் 15 சதவீததத்திற்கும் குறைவான மட்டத்தில் காணப்பட்டது. 2022 பெப்ரவரி 22 ஆந் திகதிய அமைச்சரவை உப குழுவினால் செயற்திட்டத்தின் முடிவுறாத பணிகள்

வேறு நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் தொடர்பான அறிக்கையொன்றை சமர்ப்பிக்கும்படி குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. கேட்பேர் கூட்டத்தின் தேவையை இனங்காணாமல் நிர்மாணிக்கப்பட்டமையால் ரூபா 874.79 மில்லியன் விளைவற்ற செலவொன்றாக காணப்பட்டது. மேலும் நிர்மாணத்திற்காக எடுத்துவரப்பட்டிருந்த பொருட்கள் செயற்திட்டக் காணியில் பாதுகாப்பின்றி குவிக்கப்பட்டிருந்தன. செயற்திட்டத்திற்காக கையேற்கப்பட்டிருந்த 2.709 ஹெக்டெயர் காணியும் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படாமையால் விளைவற்றதாகக் காணப்பட்டது.

- மாத்தறை மாவட்டச் செயலகத்தின் கீழ் 16 பிரதேசச் செயலகங்கள் செயற்பட்டு வருகின்றன. செழுமை உற்பத்திக் கிராமங்கள் பொது உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் கொட்டகொட மாசி மற்றும் கருவாடு உற்பத்திக் கைத்தொழில் கட்டிடம் ரூபா 06 மில்லியன் மதிப்பீட்டின் அடிப்படையில் நிர்மாணம் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2022 பெப்ரவரி வரை கட்டிடத்தின் அத்திவாரம் வரை கொங்றீட் கணு நிர்மாணம் மட்டுமே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- ஹம்பாந்தோட்டை மாவட்டச் செயலகத்தின் கீழ் 12 பிரதேசச் செயலகங்கள் செயற்பட்டு வருகின்றன. சூரியவெவா பிரதேச செயலகத்தினால் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் உறுதிப்படுத்தப்படாமல் ரூபா 3.2 மில்லியன் ஆன 320 பொருட் பைகள் விநியோகிக்கப்பட்டிருந்தன. 09 பிரதேசச் செயலகங்களால் கற்கள் பதிக்கப்பட்ட 163 சாலைகளின் ஓரங்கள் கட்டப்படாதிருந்த போதிலும் அதற்காக ரூபா 5.16 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. 07 பிரதேச செயலகங்களினால் குறிப்பிட்ட நியமத்திற்கு ABC கல் பதிக்கப்படாத போது ரூபா 4.11 மில்லியன் அதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. 03 பிரதேச செயலகங்களுக்கு ரூபா 3.46 மில்லியன் செலவிடப்பட்டு கற்கள் பதிக்கப்பட்ட 05 வீதிகளை ஒரு இலட்சம் கிலோ மீற்றர்களுக்கு கீழ் அபிவிருத்தி செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தமையால் அதற்காக செலவிடப்பட்ட தொகை விளைவற்ற செலவொன்றாகக் காணப்பட்டது.

- கண்டி மாவட்டச் செயலகத்தின் கீழ் 20 பிரதேசச் செயலகங்கள் செயற்பட்டு வருகின்றன. 04 பிரதேசச் செயலகங்களினால் 61 ஓய்வூதியம் பெற்றுச் சென்ற அதிகாரிகளுக்கு ரூபா 13.22 மில்லியன் அதிகமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 5.19 மில்லியன் அறவிடப்பட்டிருந்தது. ஹரிஸ்பத்துவ பிரதேச செயலகத்தில் 03 கிராம சேவைகள் பிரிவுகளில் கிராம சக்தி இயக்கத்தின் கீழ்

வழங்கப்பட்ட கடன்களில் ரூபா 3.03 மில்லியன் அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் அதில் ரூபா 2.44 மில்லியன் ஆன 06 மாதங்களுக்கு மேற்பட்ட கொடுப்பனவுகள் தாமதமாகியிருந்தது. திவிநெகும சமூக அடிப்படையிலான வங்கிகளில் மீளாய்வாண்டிறுதியில் சுழலும் நிதியக் கணக்கின் மீதி மொத்தம் ரூபா 173.69 மில்லியன் ஆக இருந்ததுடன் அதில் ரூபா 94.94 மில்லியன் அதாவது 55 சதவீதம் கடன்கள் வழங்கப்படாது காணப்பட்டது.

- நுவரெலியா மாவட்டச் செயலகத்தின் கீழ் 05 பிரதேசச் செயலகங்கள் செயற்பட்டு வருகின்றன. மாவட்டச் செயலகம், ஹகுரண்கெத்த மற்றும் கொத்மலை பிரதேசச் செயலகங்களில் ரூபா 5.47 மில்லியன் நுகர் பொருட்கள் இருப்புக் கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. அத்துடன் நுவரெலியா, அம்பகமுவ மற்றும் வலப்பனை பிரதேசச் செயலகங்களால் இறுதி நுகர் பொருட்களின் கையிருப்பு கணக்கிடப்பட்டோ அல்லது நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டோ இருக்கவில்லை.

- மாத்தளை மாவட்டச் செயலகத்தின் கீழ் 11 பிரதேசச் செயலகங்கள் செயற்பட்டு வருகின்றன. வடமேற்கு கால்வாய் செயற்திட்டத்திற்காக காணி சுவீகரிப்பதற்காக திகலேவெல பிரதேச செயலகப் பிரிவின் தண்டுவாய கிராம சேவைகள் பிரிவில் காணித் துண்டொன்றின் பெறுமதி ரூபா 91,000 ஆக முதலில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. பல சந்தர்ப்பங்களில் மதிப்பீட்டுப் பெறுமதி மாற்றம் செய்யப்பட்டு ரூபா 2.91 மில்லியன் நட்டஈடாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் இதற்கான அடிப்படை கணக்காய்வின் போது உறுதி செய்யப்படவில்லை. மேலும் 07 காணித்துண்டுகள் தனிப்பட்ட காணிகளாகக் கருதப்பட்டு ரூபா 2.79 மில்லியன் நட்டஈட்டுப் பணம் செலுத்தப்பட்டிருந்தது. 06 கட்டிட செயற்திட்டங்கள் மற்றும் விளையாட்டு மைதானமொன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 5.98 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததும் பூரணப்படுத்தப்படாமையால் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டன. செழுமை உற்பத்திக் கிராமத்திட்டத்தின் கீழ் உக்குவெல பிரதேச செயலகப் பிரிவில் சேதன உர உற்பத்திக்காக ரூபா 01 மில்லியன் 10 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- பதுளை மாவட்டச் செயலகத்தின் கீழ் 15 பிரதேசச் செயலகங்கள் செயற்பட்டு வருகின்றன. மஹியங்கனை பிரதேசச் செயலகத்தில் புதிய கட்டிடமொன்று நிர்மாணிப்பதற்கு ரூபா 140.96 மில்லியன் ஆன ஒப்பந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 109.02 மில்லியன் 2022 மார்ச் வரை செலவிடப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் பிரகாரம் 546 நாட்களில் பணிகள் முடிக்கப்பட வேண்டிய போதிலும் 2022 மார்ச் வரை 1547 நாட்கள் கடந்திருந்த

போதிலும் பணிகள் முடிக்கப்பட்டிருக்கவில்லை.

- மொனராகல மாவட்டச் செயலகத்தின் கீழ் 11 பிரதேசச் செயலகங்கள் செயற்பட்டு வருகின்றன..2020 ஆம் வருடத்தில் தணமல்வில பிரதேசச் செயலகத்தினால் "சபிரிகமக்" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 8.29 மில்லியன் செலவிடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட 11 கிராமிய வீதிகள் 2021 ஆம் வருடத்தில் கம்பளம் போடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டன. வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் மின்சார வேலிப் பராமரிப்பு மற்றும் பின் தொடரலுக்காகக் காவலாளர்களை நிர்மாணிப்பதற்கு 2020 ஆம் வருடத்தில் ரூபா 36.45 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 5 தொகுப்புக்களின் கீழ் அபிவிருத்தி செய்வதற்கு இரண்டு ஒப்பந்தக்காரர்களுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. அதில் 4 தொகுதிகளுக்காக ரூபா 25.01 மில்லியனுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த போதிலும் 2022 மார்ச் வரையில் முடிக்கப்பட்டோ அல்லது காலம் நீடிக்கப்பட்டோ இருக்கவில்லை.
- கேகாலை மாவட்டச் செயலகத்தின் கீழ் 11 பிரதேசச் செயலகங்கள் செயற்பட்டு வருகின்றன. ஊனமுற்றோர்களின் ஸ்வசக்தி அமைப்பு மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையும் இணைந்து குறைந்த வருமானம் கொண்ட 300 ஊனமுற்றோர்களுக்காக வீடுகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கீழ் 381 வீட்டுப் பயனாளிகளுக்கு 2020 ஆம் வருடத்திற்காக ரூபா 23.71 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இன்னும் செலுத்தப்பட வேண்டிய ஊணமுற்றோர் பணம் ரூபா 95.69 மில்லியன் ஆகும். மேலும் 2018 ஆம் வருடத்தில் கொடி விற்பனையின் மூலம் சேகரிக்கப்பட்ட ரூபா 7.36 மில்லியன் ஸ்வசக்தி அதிகார சபையில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. இத்தொகை உரிய பணிகளுக்காக பயன்படுத்தப்படாததுடன் 381 பயனாளிகளின் 03 வீடுகள் மட்டுமே முடிக்கப்பட்டிருந்தன. கிராம சக்தி ஜனதா இயக்கத்தின் கீழ் சங்கங்களை நிறுவுவதற்காக முதலாம் கட்டத்தின் கீழ் 11 பிரதேசச் செயலகப் பிரிவிலுள்ளள 43 சங்கங்களுக்காக ரூபா 69.58 மில்லியனும், இரண்டாம் கட்டத்தின் கீழ் 96 சங்கங்களுக்காக ரூபா 4.56 மில்லியன் வழங்கப்பட்டிருந்த போதிலும் முதலாம் கட்டத்தில் வழங்கப்பட்ட தொகையில் 71 சதவீதம் அதாவது ரூபா 49.81 மில்லியனும் இரண்டாம் கட்டத்தில் வழங்கப்பட்ட தொகையில் 96 சதவீதம் அதாவது ரூபா 4.36 மில்லியனும் பணிகளுக்காக பயன்படுத்தப்படாது சங்கங்களின் வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. கேகாலை மாவட்டச் செயலகம் மற்றும் வறக்காபொல பிரதேசச் செயலகத்தில் இடம் பெற்ற ஓய்வூதிய மோசடியிலிருந்து மேலும் ரூபா 16.77 மில்லியன் ஆன தொகையொன்று அறவிடப்பட வேண்டியதாகக்

காணப்பட்டது. வறக்காபொல பேருந்து தரிப்பிடம் மற்றும் கடைத் தொகுதி நிர்மாணிக்கப்படுகின்ற காணியின் உரிமை தொடர்பான சிக்கல் காரணமாக ரூபா 15.19 மில்லியன் செலவிடப்பட்டும் செயற்திட்டத்தின் நிர்மாணம் நிறுத்தப்பட்டிருந்தது.

- இரத்தினபுரி மாவட்டச் செயலகத்தின் கீழ் 17 பிரதேசச் செயலகங்கள் செயற்பட்டு வருகின்றன. இரத்தினபுரி மாவட்டச் செயலகம் மற்றும் 04 பிரதேச செயலகங்களின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 11.22 மில்லியன் ஆன 31 செயற்திட்டங்கள் முடிக்கப்படாது வைக்கப்பட்டிருந்தன. எல்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் 2020 ஆம் வருடத்தில் ரூபா 4.46 மில்லியன் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 3 வீதிகள் சிதைவடையாதிருந்த போதிலும் மீண்டும் கம்பளமிடப்பட்டிருந்தன. எஹலியகொட பிரதேச செயலகப் பிரிவில் கலாசார நிலையமொன்று நிர்மாணித்தல் பூரணமாக்கப்படாதிருந்ததுடன் 8 வருடங்களின் பின்னர் 2021 ஆம் வருடத்தில் வழங்கப்பட்ட ரூபா 26.42 மில்லியன் ஒதுக்கங்கள் திட்டமொன்று இல்லாத காரணத்தினால் மீண்டும் கையளிக்கப்பட்டிருந்தது.
  கட்டுமானத்தளம் அதிகளவில் காட்டு மரங்கள் வளர்த்து அழிவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

- குருநாகல் மாவட்ட செயலகத்தின் கீழ் 30 பிரதேசச் செயலகங்கள் செயற்பட்டு வருகின்றன. சப்பிரிகமக் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 1,159 செயற்திட்டங்களுக்காக ரூபா 905.98 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 802.59 மில்லியன் அதாவது 89 சதவீதமானது காணிகள் அபிவிருத்திக்கு செலவிடப்பட்டிருந்தது. சேதன உர உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 100 மில்லியனில் ரூபா 5.4 மில்லியன் செலவிடப்பட்டு 20 வெட்டும் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2022 ஏப்ரல் வரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.
  எஞ்சிய ரூபா 94.6 மில்லியன் நிதியேற்பாடுகள் மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. குருநாகல் மாவட்ட செயலகத்திற்கு 2020/2021 ஆம் வருடங்களில் பெரும் போகத்தில் நெல் கொள்வனவு செய்வதற்கு ரூபா 50 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 1.41 மில்லியனுக்கு நெல் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் மிகுதி ரூபா 48.59 மில்லியன் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. கைத்தொழில் மற்றும் வணிக நடவடிக்கைகள் அமைச்சினால் 10 பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 122.26 மில்லியன் பெறுமதியான ஆடை உபகரணங்கள் 2022 ஏப்ரல் மாதம் வரையில் விளைவற்றுக் காணப்பட்டது.

- புத்தளம் மாவட்ட செயலகத்தின் கீழ் 16 பிரதேசச் செயலகங்கள் செயற்பட்டு வருகின்றன. சிறிய மற்றும் நடுத்தர ஹில்மோல் உரிமையாளர்களுடாக நெல் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் முறையே 2020/2021 பெரும் போகம் மற்றும் 2021 சிறு போகத்தில் அரசிற்கு வழங்கப்பட வேண்டிய 402,927.7 கிலோ கிராம் அரிசி மற்றும் 1,006,687.5 வழங்கப்பட்டிருக்கவில்லை. அதன் சதவீதம் 61.12 சதவீதம் மற்றும் 100 சதவீதம் ஆகும். 2014 ஆம் வருடத்திலிருந்து வென்னப்புவ ஜோசப்வாஸ் வித்தியாலயத்தின் விளையாட்டு அரங்கம் ரூபா 48.64 மில்லியன் செலவில் புனரமைக்கப்பட்ட போதிலும் அது பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

- அனுராதபுர மாவட்டச் செயலகத்தின் கீழ் 23 பிரதேசச் செயலகங்கள் செயற்பட்டு வருகின்றன. பிரதேச செயலாளரின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற அரசின் காணிகளில் கனிமங்களை சேகரிப்பதற்கும் பிரித்தெடுப்பதற்கும் கட்டணம் அறவிடப்படும் போது அனுராதபுர மாவட்டத்தில் 05 பிரதேச செயலகப் பிரிவுகளில் இயங்கி வருகின்ற கருங்கல் பணிகளிலிருந்து புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தினால் வழங்கப்பட்ட சுரங்க அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கனசதுர அளவை விட அதிகமாகப் பதப்படுத்தப்பட்ட கருங்கற்களுக்காக ரூபா 93.35 மில்லியன் ஆன கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. அத்துடன் முன்னைய வருடங்களுக்கான நிலுவைக் கட்டணம் ரூபா 395 மில்லியன் ஆகும்.

- பொலன்னறுவை மாவட்ட செயலகத்தின் கீழ் 07 பிரதேசச் செயலகங்கள் செயற்பட்டு வருகின்றன. ஹிங்குராங்கொட மற்றும் எலஹர பிரதேச செயலகப் பிரிவுகளில் மின்சார வேலிக்கு அருகாமையில் பாதுகாப்பு இல்லங்கள் அமைப்பதற்கான ஒப்பந்தம் ரூபா 22.95 மில்லியன் இற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2021 பெப்ரவரி 20 ஆம் திகதி பணிகள் முடிக்கப்பட வேண்டிய போதிலும் 2022 பெப்ரவரி 25 வரையில் அளவீட்டுப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 13.55 மில்லியன் ஆன 29 விடயங்கள் நிறைவேற்றப்படாது கைவிடப்பட்டிருந்தது. இக் காரணத்தினால் செலவிடப்பட்ட ரூபா 6.56 மில்லியன் விளைவற்றதாகக் காணப்பட்டது. மேலும் ரூபா 2.07 மில்லியன் ஆன மேலதிக கொடுப்பனவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் செயலாற்றல் பிணைக் காலம் 2021 நவம்பர் 07 ஆந் திகதி முடிவடைகின்ற காரணத்தினால் அறவிடப்படுவதற்கு முடியாதிருந்தது. பிரதேசச் செயலகங்களினூடாக 2019/20 பெரும், 2020 சிறு, 2020/21 பெரும் போகங்களுக்காக நெல் பெறப்பட்ட 44 மோல் உரிமையாளர்களால் கொள்வனவு செய்யப்பட்ட 1,521,337 கிலோ கிராம் நெல் அரிசியாக

மாற்றப்பட்டு அரசிற்கு வழங்கப்படாமையால் மேலும் அரசிற்கு அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 85.18 மில்லியன் ஆகும். அரசின் காணிகளில் கனிமங்களை சேகரிப்பதற்கான கட்டணமாக 2017 ஆம் வருடத்திலிருந்து 2021 ஆம் வருடம் வரை 05 பிரதேசச் செயலகப் பிரிவுகளில் இயங்குகின்ற உரிமம் பெற்ற 43 கருங்கல் பட்டறைகளிடமிருந்து ரூபா 142.19 மில்லியன் அறவிடப்பட வேண்டியிருந்தது.

- திருகோணமலை மாவட்ட செயலகத்தின் கீழ் 11 பிரதேசச் செயலகங்கள் செயற்பட்டு வருகின்றன. கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணம் மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்படுத்தல் இராஜாங்க அமைச்சின் 2021 மே 17 ஆந் திகதிய SMRHC/RD/04/01 ஆம் இலக்கச் சுற்றறிக்கை பிரகாரம் வீட்டு உபயோகப் பயனாளிகளைத் தெரிவு செய்யும் போது போர் மற்றும் அது தொடர்பான காரணங்களால் ஊனமுற்றவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டிய போதிலும், கிண்ணியா, குச்சவெளி, ஹோமன்கடவல, சேருவில கந்தளாய் மற்றும் மொறவெவ போன்ற பிரதேசச் செயலகங்களினால் வேறு காரணங்களால் ஊனமுற்ற 313 பேர் வீடமைப்பு பயனாளிகளாக தெரிவு செய்யப்பட்டிருந்தனர். "கிராம சக்தி ஜனதா இயக்கம்" கீழ் 33 கிராம சக்தி ஜனதா சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 52.19 மில்லியன் நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்படாமையால் எதிர்பார்த்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிரதேசச் செயலகங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய 222 செயற்திட்டங்கள் முடிக்கப்படாது கைவிடப்பட்டிருந்தன.

- மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் கீழ் 13 பிரதேசச் செயலகங்கள் செயற்பட்டு வருகின்றன. 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் சட்டத்தின் 29(அ) பிரிவின் பிரகாரம் அரச உத்தியோகத்தர்கள், மனவளர்ச்சி குன்றியவர்கள் மற்றும் முறிவடைந்தவர்கள் அனுமதிப்பத்திரம் பெற முடியாத போதிலும் அதற்கு முரணாக ஏறாவூர் பிரதேசச் செயலாளர் இரண்டு மணல் அனுமதிப்பத்திரங்களை வழங்கியிருந்தார். கிரண் பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட 26 நன்னீர் மணல் அகழ்வு அனுமதிப்பத்திரங்களில் அனுமதி அளிக்கப்பட்டிருந்த கியூப் அளவை விட அதிகமாக 60,118 கியூப் மணல் அகழ்வு செய்யப்பட்டிருந்தது.

- அம்பாறை மாவட்ட செயலகத்தின் கீழ் 20 பிரதேசச் செயலகங்கள் செயற்பட்டு வருகின்றன. சமுர்த்தி மனைப் பொருளியல், நுண் நிதி, சுய தொழில் மற்றும் வணிக அபிவிருத்தி இராஜாங்க அமைச்சினால் தமண பிரதேசச் செயலகப் பிரிவின் களுகொல்ல

கிராமத்தில் மீன் உற்பத்திக்காக 30 மீன் வளர்ப்புக் குளங்கள் அமைப்பதற்காக ரூபா 2.67 மில்லியன் வழங்கப்பட்டிருந்த போதிலும் 17 குளங்கள் அமைக்கப்பட்டிருக்கவில்லை.

- யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் கீழ் 14 பிரதேசச் செயலகங்கள் செயற்பட்டு வருகின்றன. நீர்வேலி வாழைக்காய் துண்டுகள் (Chips) உற்பத்தி செய்யும் செயற்திட்டத்திற்காகத் தேவைப்படுகின்ற ரூபா 10.33 மில்லியன் கட்டிடம் மற்றும் இயந்திர உபகரணங்கள் நிறுவப்பட்டு 2020 யூன் மாதத்தில் நீர்வேலி வாழைக்காய் உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் இச் செயற்திட்டம் செயற்படுத்தப்படாமையால் விளைவற்ற செலவொன்றாக இருந்தது. பெறுகை வழிகாட்டியின் 3.6 ஆம் பிரிவிற்கு முரணாக ஆரம்ப ஒப்பந்தப் பெறுமதியில் 50 சதவீதம் வரை மீண்டும் கொள்வனவு செய்வதற்கு காணப்பட்ட எல்லையை விஞ்சியதாக 60 சதவீதம் 24700 சதவீதத்திற்கு இடையிலான வீச்சில் ரூபா 30.20 மில்லியன் ஆன பொருட்கள் மீள் கட்டளை மூலம் கொள்வனவு செய்யப்படுவதற்கு 07 பிரதேசச் செயலகங்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2019 ஆம் வருடத்தில் முடிக்கப்பட வேண்டிய கிரயம் ரூபா 56.64 ஆன பால் பாதுகாப்புத் திட்டம் 2022 யூலை வரையில் முடிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், ரூபா 4.82 மில்லியன் ஆன செயலாற்றல் பிணையின் மூலப் பிரதி பெறப்படாத காரணத்தால் அது பணமாக்கப்படுவதற்கு முடியாதிருந்தது.

- வவுனியா மாவட்ட செயலகத்தின் கீழ் 04 பிரதேசச் செயலகங்கள் செயற்பட்டு வருகின்றன.மாவட்டச் செயலகத்திற்கு மற்றும் பிரதேசச் செயலகத்திற்கு சொந்தமான துவிச்சக்கர வண்டிகள் உட்பட 25 வாகனங்கள் 02 மற்றும் 10 வருடங்களுக்கிடையில் திருத்தப்படாமல் கைவிடப்பட்டிருந்தன. 2018 ஆம் வருடத்தில் ரூபா 16.09 மில்லியன் ஆன செலவில் காட்டப்பட்டுள்ள ஓமந்த கலாசார நிலையம் 03 வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்படாது காணப்பட்டது. அத்துடன் 2020 ஆம் வருடத்தில் இந் நிலையத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 991,670 பெறுமதியான பொருட்கள் 349 அலகுகளும் ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்படாது மற்றும் பாதுகாப்பின்றி காணப்பட்டது வவுனியா பொருளாதார மத்திய நிலையம் இதுவரை பயன்படுத்தப்படாமையால் 2018 ஆம் வருடத்திலிருந்து 2021 ஆம் வருடம் வரை அதன் பாதுகாப்பு மற்றும் துப்புரவுப் பணிகள, நீர்க்கட்டணம் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக மாவட்டச் செயலகத்தினால் செலவிடப்பட்ட ரூபா 4.85 மில்லியன் பொருளாதாரமற்ற செலவொன்றாக காணப்பட்டது.

- முல்லைத் தீவு மாவட்ட செயலகத்தின் கீழ் 05 பிரதேசச் செயலகங்கள் செயற்பட்டு வருகின்றன. மாவட்ட செயலகத்தினால் 2014/15 ஆம் வருடங்களில் நெல் கொள்வனவு செய்யும் நோக்கத்தில் முற்பணமாக விஸ்வமடு விவசாயிகளின் பல நோக்குக் கூட்டுறவு சங்கத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 16 மில்லியன் மற்றும் பனங்காமம்பற்று விவசாயிகளின் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 2.33 மில்லியன் கடந்த 06 விடயங்களுக்கும் மேற்பட்ட காலமொன்றாகத் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. 2020 ஆம் வருடத்தில் ஒட்டு சுட்டான் பிரதேச செயலகத்தினால் சப்பிரிகம செயற்திட்டத்தின் கீழ் ரூபா 1.48 மில்லியன் செலவில் எண்ணெய் உற்பத்தி இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு திருமுருகாண்டிக் கிராம அபிவிருத்திச் சங்கத்திடம் வழங்கப்பட்டுள்ள போதிலும் குறிப்பிட்ட இயந்திரங்கள் உரிய நோக்கங்களுக்காக இதுவரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் கீழ் 04 பிரதேசச் செயலகங்கள் செயற்பட்டு வருகின்றன. கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் உற்பத்தி கூட்டுறவு செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 13.48 மில்லியன் ஆன கட்டிடம் மற்றும் உபகரணங்கள் 03 வருடத்திற்கு மேற்பட்ட காலமாக விளைவற்றதாக காணப்பட்டன. ரூபா 21.55 பெறுமதியான 02 பிரதேச செயலக பங்களாக்கள் ஒரு வருடத்திற்கும் மேலாக விளைவற்றதாகக் காணப்பட்டன.

- மன்னார் மாவட்ட செயலகத்தின் கீழ் 05 பிரதேசச் செயலகங்கள் செயற்பட்டு வருகின்றன. 2018 ஆம் வருடத்திலிருந்து மாவட்டச் செயலகத்தினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த தொழிநுட்ப பூங்கா, வாகன நிறுத்துமிடம் மற்றும் கேட்போர் கூடத்திற்கு ரூபா 72.57 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட பணிக்காக மொத்த மதிப்பீடு நகர அபிவிருத்தி அதிகார சபையின் சட்டத்திற்கு இணங்க அங்கீகாரம் Architectural Drawings and Structural Drawings இற்காக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

உள்ளூராட்சி நிறுவனங்கள்

விடயங்கள்

- **அறிமுகம்**
- **கணக்காய்வு அவதானிப்புக்கள்**
    - மதிப்பீடுகளுடனான இணக்கமின்மைகள்
    - மிகைக் கொடுப்பனவுகள்
    - சட்ட நடவடிக்கைகள்
    - சொத்துக்கள் முகாமைத்துவம்
    - அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள்

உள்ளூராட்சி நிறுவனங்கள்

இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள 24 மாநகர சபைகள், மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 252) ஏற்பாடுகளின் மூலமும் 41 நகர சபைகள், நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 255) ஏற்பாடுகளின் மூலமும் 276 பிரதேச சபைகள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் மூலமும், 341 உள்ளூராட்சி நிறுவனங்கள் தாபிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதுடன் இந்த உள்ளூராட்சி நிறுவனங்களின் 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பான பொழிப்பொன்று பின்வரும் அட்டவணை இலக்கம் 17 இல் தரப்பட்டுள்ளது.



உரு 18 - உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை

உள்ளூராட்சி நிறுவனங்களின் வகை	கணக்குகளை சமர்ப்பிக்க வேண்டிய சபைகளின் எண்ணிக்கை	2022.08.15 ஆந் திகதியில் உள்ளபடியாக கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை	கணக்காய்வு அறிக்கைகளை வெளியிட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை	2022.08.15 ஆந் திகதியில் உள்ளபடியாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு அபிப்பிராயம்			
				முன்னைப்புறியுள்ள	முன்னைப்புறியற்ற	மறுப்பு அபிப்பிராயம்	பாதகமான அபிப்பிராயம்
மாநகர சபைகள்	24	24	19	13	-	02	04
நகர சபைகள்	41	41	35	35	-	-	-
பிரதேச சபைகள்	276	276	259	250	03	-	06
கூட்டுத்தொகை	341	341	313	298	03	02	10

அட்டவணை 17 – 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல் மற்றும் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயங்கள்

உள்ளூராட்சி அதிகார சபைகளின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வு அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள முக்கியமான சில அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்படுகின்றது.

மதிப்பீடுகளுடனான இணக்கமின்மைகள்

- புத்தல பிரதேச சபையினால் நீண்டகால குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 67 கடைகளின் மாதாந்த குத்தகை வாடகையை அறவிடும் போது ஊவா மாகாணத்தின் பிரதான மதிப்பீட்டாளரின் 2018 யூலை 24 ஆந் திகதிய எம்ஓ/ஆர்டீ/498 ஆம் இலக்க மதிப்பீட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையால் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் சபை நிதியத்திற்கு ரூபா 18.17 மில்லியனான வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

- அம்பாந்தோட்டை மாநகர சபையினால் தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 28 ஆந் திகதிய தெஉ/உசஆ/2010/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 மற்றும் 03 ஆம் பந்திகளின் பிரகாரம் கடைகள் மதிப்பீடு செய்யப்பட்டு சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் கடைகள் மற்றும் 56 காணிகளுக்குரிய பழைய வாடகை அறவிடுவதற்காக 2016 ஆம் ஆண்டின் சனவரி மாதம் முதல் 2021 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சபை நிதியத்திற்கு ரூபா 13.32 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது.

- குண்டசாலை பிரதேச சபையினால் பலகொல்ல மொரகாபிட்டிய வியாபாரக் கட்டிடத் தொகுதியின் 48 கடைகளுக்காக 2014 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் பிரகாரம் உரிய மதிப்பீட்டுத் தொகை அறவிடப்படாது 2015 பெப்ரவரி 25 ஆந் திகதி இடம்பெற்ற மாநாகர சபை தீர்மானத்தின் பிரகாரம் மேல்தளத்தின் கடைகளுக்காக ரூபா 500 படியாகவும் கீழ்த் தளத்தின் கடைகளுக்காகவும் ரூபா 1000 படியும் அறவிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டு அவ்வாடகை அறவிடப்பட்டமையால் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளபடியாக ரூபா 21.77 மில்லியனான வருமானம் சபைக்கு இழப்பாகியிருந்தது.

- அத்தனகல்ல பேராதெனிய சபையின் நிட்டம்புவ புதிய வியாபார கட்டிடத் தொகுதியின் 83 கடைகளுக்காக 2018 ஆகஸ்ட் 16 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டிற்கு சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடு காரணமாக விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் ஆகக்குறைந்தது 03 வருடங்கள் அமுலுக்கு வரும் வகையில் மீண்டும் திருத்தப்பட்ட கடை அறைகளின் மதிப்பீடு 2019 மார்ச் 22 ஆந் திகதி முன்வைக்கப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2021 திசெம்பர் 10 ஆந் திகதி வரையிலும் இந்த திருத்தப்பட்ட மதிப்பீட்டு வாடகையின் அடிப்படையில் வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் மதிப்பீட்டுத் திகதியான 2019 சனவரி 01 முதல் 2021 திசெம்பர் 31 வரையிலான 03 வருட காலப்பகுதிக்காக திருத்தப்பட்ட மதிப்பீட்டையேனும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் சபைக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தின் பெறுமதி ரூபா 27.58 மில்லியனாக காணப்பட்டது. மேலும் 2021 திசெம்பர் 14 ஆந் திகதி பொதுச்சபையில மேற்கொள்ளப்பட்ட முன்மொழிவு அங்கீகரிக்கப்பட்டமையின் அடிப்படையில் 2022 சனவரி 01 முதல்

மதிப்பீட்டு பெறுமதி 50 சதவீதமான கடை வாடகை அறவிடப்பட்டவாறு காணப்பட்டது.

மிகைக் கொடுப்பனவுகள்

- மாத்தறை மாநகர சபையினால் 2020 ஆம் ஆண்டினுள் பல்வெற நிதியங்களின் கீழ் கொங்கிறீட் கான்களை நிர்மாணிக்கும் போது கான்களின் அமைப்பினை தயாரிப்பதற்காக பதப்படுத்தப்பட்ட பலகைகள் (Plywood) பயன்படுத்தப்பட்டிருந்தது. தென்மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பதப்படுத்தப்பட்ட பலகைகளை பயன்படுத்தி அமைப்புக்களை தயாரிப்பதற்காக வீதங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிராததுடன் அதற்கு பதப்படுத்தப்பட்ட பலைகைகள பயன்படுத்தி அமைப்புக்களை தயாரிப்பதற்கு தென்மாகாண பொறியியல் சேவைகள் அலுவலகத்தினால் CT-036 இன் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த ரூபா 841 ஆன வீதம் பயன்படுத்தப்படாது அதற்கு பொருத்தமற்ற வீதமான தென்மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் ST-057 இன் கீழ் மற்றும் ST-112 இன் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த இரு வீதங்கள் பயன்படுத்தப்பட்டு அமைப்பின் ஒரு சதுர மீற்றருக்காக முறையே ரூபா 1,108 மற்றும் ரூபா 1,377.85 படி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டமையால் 42 கொங்கிறீட் கான்களின் அமைப்புக்களை தயாரிப்பதற்காக ரூபா 311 மில்லியன் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

- குருணாகலை மாநகர சபையினால் பிணியாய்வு நிலையங்கள் மற்றும் முன்பள்ளிகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 232.12 மில்லியன் பெறுமதிக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு செயற்திட்டம் நிறைவேற்றப்பட்டது. இச்செயற்திட்டத்தின் ஆரம்ப செலவினத்திற்காக (Preliminaries) மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வசதிகளை வழங்கியிராததுடன் அதற்காக ரூபா 9.33 மில்லியன் தொகை மற்றும் வளாகத்தில் காணப்பட்ட கல்லொன்றினை அகற்றுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட விலை வீதங்களை பயன்படுத்தாது தவறான விசேட விலைப் பகுப்பாய்வொன்றினை தயாரித்து தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் உதவி அளவிடைப் பத்திர பகுப்பாய்வாளர் சான்றுப்படுத்தி நகர பொறியியலாளர் மற்றும் நகர ஆணையளார் அங்கீகரித்த ரூபா 50.55 மில்லியன் தொகையில் ரூபா 59.88 மில்லியன் ஆன தொகை ஒப்பந்தக்காரருக்கு கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

சட்ட நடவடிக்கைகள்

மாத்தளை மாநகர சபை நாளாந்தம் 16.5 தொன் குப்பைகளை சேகரிப்பதுடன் அவற்றுள் உக்கும் மற்றும் உக்காத எனுமாறு பிரிக்கப்படாத சுமார் 1 ½ தொன் அளவிலான குப்பைகள் நாளாந்தம் வாரியபொலவத்த குப்பை சேகரிப்பு நிலையத்தில் முறையற்ற விதத்தில் கொட்டப்பட்டிருந்தது. அவ்வாறே வாரியபொலவத்த குப்பை சேகரிக்கும் பூமியில் சேரும் கழிவுநீர் மழை காலங்களில் இயற்கையாக நீர் நிலைகளுக்கு சேர்கின்றமை அவதானிக்கப்பட்டது. வாரியபொலவத்த குப்பை அகற்றும் காணியுடன் தொடர்புடையதாக உயர்நீதிமன்றத்தில் உள்ள வழக்கின் பிரகாரம் 2020 பெப்ரவரி 20 ஆந் திகதி மற்றும் அதற்கு முன்னர் இடம்பெற்ற வழக்குகளில் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் வரையறுக்கப்பட்டிருந்த வரையறைகள் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக சுற்றாடல் அதிகார சபையினால்

சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிராததுடன் நீதிமன்றத்தில் உள்ள வழக்கு நடவடிக்கைகளும் நிறைவடைந்திருக்கவில்லை. அதற்காக 2018 செப்தெம்பர் 15 ஆந் திகதி முதல் 2021 ஆண்டின் ஏப்ரல் 06 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் ரூபா 5.67 மில்லியன் கூட்டுத்தொகையான வழக்கு கட்டணம் செலுத்த நேர்ந்திருந்தது.

சொத்துக்கள் முகாமைத்துவம்

கண்டி மாநகர சபையினால் சிறிய ரத்வத்த வீதியின் சதுர வாய்க்காலினை நிர்மாணிக்கும் பணி செயற்படுத்தும் போது தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் குறித்த நிர்மாணத்தை மேற்கொண்ட பின்னர் உரிய அங்கீகாரமின்றி சபைக்கு சொந்தமான எக்ஸ்சவேட்டர் இயந்திரமொன்றை நிர்மாண பணிகளில் ஈடுபடுத்தும் போது விபத்துக்குள்ளாகியிருந்தது. பின்னர் இயந்திரத்தை பழுதுபார்ப்பதற்கு ரூபா 9.97 மில்லியன் மாநகர சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. காப்புறுதி இழப்பீடு 2022 யூலை 30 ஆந் திகதி வரையிலும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கொடாகொட கழிவு சேகரிப்பு நிலையத்தினுள் கழிவினை குவிக்கும் பணிகளை மேற்கொள்வதற்காக மேற்படி விபத்துக்குள்ளான இயந்திரத்திற்கு பதிலாக 2020 நவம்பர் முதல் 2021 ஒக்தோபர் வரையான காலப்பகுதியினுள் வாடகைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த எக்ஸ்சவேட்டர் இயந்திரத்திற்காக இயந்திர மணித்தியாலமொன்றிற்கு ரூபா 3,500 படி ரூபா 12.08 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இதற்கமைய, எக்ஸ்சவேட்டர் இயந்திரத்திற்கு ஏற்பட்ட நட்டம் மற்றும் அந்த இயந்திரத்திற்கு பதிலாக வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்த எக்ஸ்சவேட்டர் இயந்திரத்தின் வாடகையை செலுத்துவதற்காக சபையின் நிதியத்திலிருந்து ரூபா 22.05 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அத்தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

வருமானம் இழக்கப்படல்

கொழும்பு மாநகர சபையினால் தெரிவு செய்யப்பட்ட அதிகார பிரதேசமொன்றில் பாக்கிங் மாடியினை பொருத்துவதன் மூலம் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான உடன்படிக்கைக்கு தனியார் நிறுவனமொன்றுடன் 2016.03.28 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக குறித்த நிறுவனங்களிலிருந்து அறவிட வேண்டிய நிலுவை வாடகை வருமானம் ரூபா 101.77 மில்லியன் ஆகும். 2016 ஆம் ஆண்டு முதல் உரிய முறையில் வாடகைப் பணம் செலுத்தப்படாமையால் 2021 ஏப்ரல் 07 ஆந் திகதி குறித்த நிறுவனங்களுடன் இடம்பெற்ற உடன்படிக்கையை இடைநிறுத்துவதற்கு நகர சபை நடவடிக்கை எடுத்திருந்த போதிலும் 2022 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் அப்பிரதேசத்தில் தரிப்புக் கட்டணங்கள் அறவிடுவதற்கு மாற்று நடைமுறையொன்று ஒழுங்கமைக்கப்பட்டிருக்க வில்லை. அதற்கமைய ஒரு வருட காலத்திற்கு அண்மிய காலத்திற்காக சபைக்கு ரூபா 66.73 மில்லியன் அளவிலான வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள்

கொழும்பு மாநகர சபையின் வாகனத் தரிப்பிடக் கட்டணங்களை அறவிடுவதற்காக ஒப்பந்தம் பெற்றுக் கொண்ட தனியார் நிறுவனத்தினால் நகர சபைக்கு செலுத்த வேண்டிய மாதாந்த வாடகைத் தொகையை செலுத்துதல் தொடர்ச்சியாக புறக்கணிக்கப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக 38 நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய கட்டண வருமானம் ரூபா 265.5 மில்லியன் ஆகும்.

வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்

- வீதி நிர்மாணங்களும் போக்குவரத்துப் பிரிவும்
- சமூக நலன்புரி செயற்திட்டம்
- வெளிநாட்டு மதலீட்டு செயற்திட்டங்களின் பொதுவான குறைபாடுகள்

வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

இலங்கையின் வருடாந்த அரசாங்க செலவுகளை நிறைவேற்றுவதற்காக போதியளவு வருடாந்த வருமானம் கிடைக்காமையினால் ஆண்டுதோறும் அரசாங்க பாதீட்டு பற்றாக்குறையானது அதிகரித்துக் காணப்பட்டன. 2021 நிதி ஆண்டிற்கான அரசாங்க பாதீட்டு பற்றாக்குறை ரூபா 2,080 பில்லியனாக இருந்ததுடன் அந்த பாதீட்டு பற்றாக்குறையினை தீர்த்துவைப்பதற்காக உள்நாட்டுக் கடன் ரூபா 2,519 மில்லியன் மற்றும் வெளிநாட்டுக் கடன் ரூபா 517 பில்லியன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அந்த வெளிநாட்டுக் கடன் பெறுதல்களில் 2021 ஆம் ஆண்டில் வெளிநாட்டுக் கடனை மீளச் செலுத்துவதற்காக ரூபா 530 பில்லியன் பயன்படுத்தபட்டதனால் தேறிய வெளிநாட்டுக் கடன் பெறுதல் ரூபா 13 பில்லியன் மறைப் பெறுமதியாக மாறியிருந்தது. அதற்கிணங்க 2021 ஆம் ஆண்டில் வெளிநாட்டு கடன் வழங்குதலானது அனைத்து கடனையும் மீளச் செலுத்துவதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது. வருடாந்த பாதீட்டு இடைவெளியினை தீர்த்துவைப்பதற்காக வெளிநாட்டு ரீதியாக பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் பிரதானமாக செயற்திட்டக் கடன் மற்றும் செயற்திட்டமற்ற கடனாக இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டதுடன் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கடந்த பல ஆண்டுகளாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டுக் கடன் ரூபா 16,827 பில்லியனாக் இருந்ததுடன் அதில் செயற்திட்டங்களுக்காக 775 உடன்படிக்கைகளின் மூலம் ரூபா 3,780 பில்லியன் கடனாகப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக மின்சார சபை நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை போன்ற நிறுவனங்கள் நேரடியாக கடன் முகவர் நிறுவனங்களிடமிருந்து கடனைப் பெற்றிருந்தது. அச்செயற்திட்டங்களில் 45 செயற்திட்டங்கள் மூலதனமற்ற தன்மையான செயற்திட்டங்களாவதுடன் மிகுதி செயற்திட்டங்கள் நீர் வழங்கல், பெருந்தெருக்கள், சமூக நலன்புரி , கல்வி, தொழில் போன்ற செயற்திட்டங்களாகும். அவற்றில் 130 செயற்திட்டங்கள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அமுல்ப்படுத்தப்படும் நிலையில் காணப்பட்டன.

இச்செயற்திட்ட கடன் மூலம் உள்நாட்டு செயற்திட்டங்களுக்காக, நிதிகளை ஈடுபடுத்துதல் 1978 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டதுடன் ஆரம்பத்தில் வெளிநாட்டுக் கடன்கள் மூலதன தன்மையான செயற்திட்டங்களுக்காக நிதியளிக்கப்பட்டிருந்த போதிலும் சமூக நலன்புரி மற்றும் பொதுப்பாவனை தேவைப்பாட்டிற்காக கடனைப் பெற்றுக்கொள்ளுதல் வரை படிப்படியாக மாற்றமடைந்திருந்தது. அவ்வாறே கடந்த காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட பல செயற்திட்ட கடன்கள் அதற்காக கிடைக்கும் பிரதிபலன்களை கவனத்தில் கொள்ளாது முதலீடு செய்யப்பட்டிருந்தமையால் அவை நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தினை விட நாட்டின் கடன்பட்டோர் தன்மை அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது.

இச்செயற்திட்டங்களில் பல கடன் உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளும் போது அதற்கான கணக்காய்வு ஏற்பாடுகளை உள்ளடக்குவதற்கு வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் நடவடிக்கை எடுக்காமையால் அவற்றின் கணக்காய்வு நடவடிக்கைகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களால் மேற்கொண்டு தனியான அறிக்கை வழங்கப்பட்டிருக்கவில்லை. எனினும்

அமுல்ப்படுத்தப்படும் நிலையில் காணப்பட்ட செயற்திட்டங்களில் 123 செயற்திட்டங்களின் கணக்காய்வு நடவடிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்டு தனியான கணக்காய்வு அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அவ்வாறே இந்த வெளிநாட்டுச் செயற்திட்டங்களில் பல விலை குறிப்பிடப்படாது கிரய அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக பெறுகை நடைமுறைகளின் நலன் நாட்டிற்கு கிடைக்காதிருந்ததுடன் இந்த விலை குறிப்பிடப்படாத கிரயத்தினை அடிப்படையாகக் கொண்டு நாட்டிற்கு கிடைத்திருந்த பல செயற்திட்டங்கள் நாட்டின் முதலீட்டு தேவைப்பாட்டினை நிறைவேற்றுவதற்கு காரணமாக இருக்கவில்லை.

அச்செயற்திட்டங்கள் நீர் வழங்கலும் சுகாதாரமும், வீதி நிர்மாணங்கள் மற்றும் போக்குவரத்துப் பிரிவு, மின்சாரம் மற்றும் வலுப் பிரிவு, சமூக நலன்புரி செயற்திட்டங்கள், கல்வி மற்றும் தொழில் அபிவிருத்திப் பிரிவு, விவசாய பிரிவு, சுகாதார பிரிவு, நகர அபிவிருத்திப் பிரிவு, ஏனைய பிரிவுகள் ஆகிய பிரதான 09 பிரிவுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்டு வருவதுடன் இச்செயற்திட்டங்கள் சம்பந்தமாக 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

வீதி நிர்மாணங்களும் போக்குவரத்துப் பிரிவும்

- 2021 ஆம் ஆண்டிற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட 9 செயற்திட்டங்களுக்காக வெளிநாட்டுக் கடன் அடிப்படையிலான மொத்த நிதி ஏற்பாடான ரூபா 17,129 மில்லியன் தொகைக்கு மத்தியில் ரூபா 3,754 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 13,371 மில்லியன் அல்லது 78 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- தாமதமான செயறல்முன்னேற்றம் மற்றும் ரூபாவின் பெறுமதியை குறைப்பு செய்ததன் அடிப்படையில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு துறைமுக நுழைவு வீதியினை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தில் மாத்திரம் ரூபா 369 மில்லியன் வெளிநாட்டு நாணய நட்டம் அறிவிக்கப்பட்டிருந்தது.

- 1950 இன் 09 ஆம் இலக்க காணி சவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 38 (அ) பிரிவின் பிரகாரம் காணிகளை சுவீகரிப்புச் செய்யும் போது உரிய காணிச் சொந்தக்காரர்களுக்கு அதிகாரச் சட்டத்தின் 35 ஆம் பிரிவின் பிரகாரம் இழப்பீடு செலுத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் வீதிகளை நிர்மாணிக்கும் 07 செயற்திட்டங்களின் 19,811 காணித் துண்டுகளுக்காக அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் சுவீகரித்தல் கட்டளை வழங்கப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவற்றில் 12,047 காணித் துண்டுகளுக்காக இழப்பீடுகள் வழங்கப்பட்டிருந்தன. அதற்காக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 20,650 மில்லியன் இழப்பீடு செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இழப்பீட்டினைச் செலுத்துவதற்காக போதியளவு நிதி ஏற்பாடு கிடைக்காததன் அடிப்படையில் இழப்பீட்டினைச் செலுத்துதல் தாமதமடைந்திருந்ததுடன் சுவீகரிக்கப்பட்ட காணித் துண்டுகளுக்காக அதிகாரச் சட்டத்தின் 35 ஆம் பிரிவின் கீழ் வட்டி செலுத்தவேண்டியிருந்தது. அதற்கிணங்க

2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் இந்த இழப்பீட்டினைச் செலுத்துதல் தாமதமடைந்ததன் அடிப்படையில் 04 செயற்திட்டங்களுக்காக மாத்திரம் ரூபா 2,870 மில்லியன் வட்டிப் பணம் செலுத்த வேண்டியிருந்தது. அவ்வாறே மேற்கூறிய இழப்பீட்டினைச் செலுத்திய காணித் துண்டுகளில் 5 காணித்துண்டுகள் மாத்திரம் அதிகாரச் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் பிரகாரம் சவீகரிக்கும் நடவடிக்கை முடிவுறுத்தப்பட்டிருந்தது.

- வீதி நெருசலினை குறைக்கும் குறிக்கோளில் 2009 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட பேஸ்லைன் செயற்திட்டம் நிதியினை வழங்கும் முகவர் நிறுவனம் இல்லாதும் சிவில் வேலைகளுக்கான ஒப்பந்தம் வழங்கப்படாதும் இன்று வரை அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிற்காக 2021 திசெம்பர் 31 வரை ரூபா 30 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது.

- புதிய களினிப் பாலத்திலிருந்து அதுருகிரிய வரையான வீதிகளை நிர்மாணிக்கும் செயற்திட்ட நடவடிக்கைகள் 2016 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 ஆகஸ்ட் வரை சிவில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இச்செயற்திட்டத்திற்காக 2022 யூன் 30 வரை ஒரு முதலீட்டாளர் தெரிவு செய்யப்படாதிருந்ததுடன் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிற்காக ரூபா 227 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது.

- றக்வான- சூரியகந்த வீதி நிர்மாணச் செயற்திட்டத்திற்காக ஒபெக் அமைப்பிடமிருந்து டொலர் 40 மில்லியன் கடன் 2019 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் கடன் உடன்படிக்கை செய்த திகதியிலிருந்து 2021 திசெம்பர் 31 வரை 2 ஆண்டுகளைக் கடந்திருந்தும் செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் 2022 ஆகஸ்ட் 08 ஆந் திகதி வரையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இக்கடன் உடன்படிக்கை 2023 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையளவில் முதிர்ச்சியடைவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

- ஒப்பந்த நிபந்தனைகளின் 4.2 ஆம் உப பிரிவிற்கு இணங்க ஒப்பந்தக்காரரினால் ஒப்பந்தத்தின் முறையான செயற்பாட்டிற்காக தமது செலவில் செயலாற்றல் பிணையை பெற்றுக்கொள்ள வேண்டி இருந்தும் அதற்கு முரணாக 7 செயற்திட்டங்கள் தொடர்பாக வேலை அளவீட்டு பத்திரங்களில் அதற்காக தனியான கொடுப்பனவு விடயத்தினை உள்ளடக்கி 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 2.526 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததனால் ஒப்பந்தக்காரருக்கு மேலதிக நலன்கள் வழங்கப்பட்டிருந்தன.

- ருவன்புர அதிவேக வீதிச் செயற்திட்டத்தின் சிவில் நிர்மாணத்திற்கு தேவையான நிதியை உள்நாட்டு வங்கி முறைமையினூடாகப் பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன் மொத்த ஒப்பந்த கிரயத்தில் ரூபா 54,695 மில்லியன் பணத்தில் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை உள்நாட்டு வங்கி முறைமையினூடாக ரூபா 16,200 மில்லியன் நிதி வசதி மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் மிகுதி ஒப்பந்த கிரயமான ரூபா 38,795 மில்லியனுக்காக 2022 யூலை 30 ஆந் திகதி வரை நிதியினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

நிர்மாண ஒப்பந்தக் கம்பனிக்கு 2022 யூன் 30 ஆந் திகதி வரை ரூபா 5,099 மில்லியன் தீர்த்துவைக்கப்படாத பொறுப்புக் காணப்பட்டது.

- 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தெற்கு அதிவேக வீதி செயற்திட்டத்தின் 01 ஆம் பகுதி மற்றும் 04 ஆம் பகுதிக்காக கடப்பாட்டு கட்டணமாக ரூபா 1,097.18 மில்லியன் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் உரிய கடன் வழங்கும் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

- ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் இரண்டாவது ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம் பயன்படுத்தப்படாத கடனின் அடிப்படையில் கடன் வழங்கும் முகவர் நிறுவனத்திற்கு 2021 திசெம்பர் 31 வரை திரண்ட வட்டி மற்றும் கடப்பாட்டு கட்டணமாக முறையே ரூபா 1,516.79 மில்லியன் மற்றும் ரூபா 576.30 மில்லியன் சிக்கனமற்ற வகையில் செலுத்தப்பட்டிருந்தன.

- தெற்கு அதிவேக வீதியின் 46 ஆவது கிலோமீற்றர் இடத்தினை கடந்து அதிவேக வீதியினைப் பயன்படுத்துபவர்களுக்காக எதுவித சேவை வழங்கும் பிரதேசம் இல்லாததனால் வெலிபனையிலிருந்து ஹம்பாந்தோட்டை வரை 176 கிலோ மீற்றர் பயணம் செய்யும் பயணிகளுக்கு சேவை வழங்குதலானது பிரச்சினையுடனான நிலையில் காணப்பட்டது.

- ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தினை கைவிட்ட 12 ஒப்பந்த பக்கேஜ்களுக்கு மத்தியில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 6 ஒப்பந்த பக்கேஜ்களின் மிகுதி வேலைகளை இந்த நிகழ்ச்சித்திட்டத்தினூடாக நிறைவேற்றுவதற்கு மீண்டும் வழங்கப்பட்டிருந்ததுடன் தொடக்க ஒப்பந்த விலையுடன் ஒப்பீடு செய்தபோது மீண்டும் வழங்கப்பட்ட ஒப்பந்தங்களின் பெறுமதி ரூபா 4,808.8 மில்லியனால் அதிகரித்திருந்தது. எனவே பலவீனமான செயற்திட்ட முகாமைத்துவத்தின் காரணமாக அரசாங்கத்திற்கு மேலதிக கிரயத்தினை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்தது.

- மீளாய்வாண்டின் இறுதிவரை இரத்துச் செய்யப்பட்ட 03 ஒப்பந்த பெக்கேஜ்கள் தொடர்பாக ரூபா 690.74 மில்லியன் தொகையான செயலாற்றல் பிணையை பணமாக மாற்றுவதற்கு ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து ஊவா மாகாணத்தில் இரத்துச் செய்யப்பட்ட 03 ஒப்பந்த பெக்கேஜ்கள் தொடர்பாக மிகுதியாக இருந்த ரூபா 560. 14 மில்லியன் தொகையான நிலுவையாக உள்ளவேலைகளை ஆரம்பிக்கும் முற்பணங்களை அறவீடு செய்வதற்கு நிகழ்சிசத்திட்டம் தவறியிருந்தது. அதற்கிணங்க 2021 திசெம்பர் 31இல் உள்ளவாறு நிகழ்சித்திட்டத்தினால் வழங்கப்பட்ட ஒப்பந்தங்களில் அறவிடப்படாத வேலைகளை ஆரம்பிக்கும் முற்பணங்களின் மொத்தப் பெறுமதி ரூபா 13,922.63 மில்லியனாகும்.

- புகையிரத திணைக்களத்தின் மூலம் அமுல்ப்படுத்தப்படுகின்ற கொழும்புக்கு அண்மையிலுள்ள பிரதேசங்களில்

புகையிரத வலையமைப்புக்களை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் மூலம் 4 புகையிரத வீதிக்காக சாத்திய வள ஆய்வும் விபரமான திட்டமிடலும் 2021 மார்ச் மாதம் பூர்த்திசெய்யப்பட்டு அறிக்கை வரிசை அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதற்காக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆசிய அபிவிருத்தி வங்கி ரூபா 1,506 மில்லியனுக்குச் சமனான அமெரிக்க குடியரசு டொலர் 8.397 மில்லியனை ஈடுபடுத்தியிருந்ததுடன் அவற்றில் 96 சதவீதமான ரூபா 1,447 மில்லியன் பணம் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் உரிய அறிக்கையானது அமுல்ப்படுத்தப்படாது புகையிரத திணைக்களத்தில் காணப்பட்டது.

- இச் செயற்திட்டத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கடன் பணத்திற்காக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கட்டணம் மற்றும் கடன் வட்டிக்காக ரூபா 69.3 மில்லியனுக்குச் சமமான அமெரிக்க குடியரசு டொலர் 380,000 செலுத்தப்பட்டிருந்தது. இந்த சாத்திய வள ஆய்வினையும் விபரமான திட்டமிடல் அறிக்கையையும் அமுல்ப்படுத்தபடாமையின் காரணமாக இதற்காக மேற்கொள்ளப்பட்ட கிரயத்திற்கான பிரதிபலன் நாட்டிற்கு கிடைத்திருக்கவில்லை.

சமூக நலன்புரி செயற்திட்டம்

- 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட சமூக பாதுகாப்பு நீர் செயற்திட்டத்தின் மொத்த நிதி ஏற்பாட்டுப் பணமாகிய அமெரிக்க குடியரசு டொலர் 75 மில்லியனில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 07 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.
- இலங்கை அரசாங்கத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட வேண்டுதலுக்கு இணங்க கொவிட் தொற்று நோய்க்கு முகங்கொடுத்தமைக்காக சமூக பாதுகாப்பு நீர் செயற்திட்டத்தினை மறுசீரமைப்புச் செய்து அதன் மூலம் மொத்தமாக அமெரிக்க குடியரசு டொலர் 45 மில்லியன் 2020 ஆம் ஆண்டின் போது விடுவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2021 திசெம்ர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டம் ரூபா 436.02 மில்லியனை வட்டிக் கட்டணாகவும் ரூபா 107.54 மில்லியனை கடப்பாட்டு கடனாகவும் செலுத்த வேண்டியிருந்தது.

- 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் சமூக பாதுகாப்பு நீர் செயற்திட்டத்தினை ஆரம்பித்து ஐந்து ஆண்டுகள் கடந்திருந்தும் செயற்திட்டத்தின் மூலம் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்த செயற்பாடுகளுக்கு மத்தியில் சமூக நலன்புரி பிரதிபலன் சபையினை தோற்றுவித்தலினை மாத்திரம் நிறைவேற்றுவதற்கு முடியுமாக இருந்தது. எனினும் சமூக நலன்புரி பிரதிபலன் அதிகாரச் சட்டத்தை மீளாய்வாண்டின் இறுதி வரை அங்கீகரித்துக் கொள்ள முடியாதிருந்தது.

- அவ்வாறே பல்வேறு நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக நலன்பெறுனர்களைத் தெரிவு செய்யும் நடைமுறையை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களுடன் தொடர்புபட்ட தகவல்களை களஞ்சியப்படுத்துகின்ற சமூக பாதுகாப்பு தகவல் வலையமைப்பினை இலத்திரனியல் தரவு களஞ்சியமாக ஸ்தாபித்து அதனை ஒருங்கிணைந்த நலன்புரி முகாமைத்துவ

முறைமை வரை விஸ்தரிக்கும் நடவடிக்கையானது இச்செயற்திட்டத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் எதிர்பார்த்ததவாறு முடிவுறுத்துவதற்கு செயற்திட்டம் தவறியிருந்தது.

வெளிநாட்டு மதலீட்டு செயற்திட்டங்களின் பொதுவான குறைபாடுகள்

- செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் செலவுகளை நிறைவேற்றுவதற்காக ஒப்பந்த ஆவணங்களில் பிரிவினைச் சேர்த்துக்கொள்வதன் மூலம் செயற்திட்டத்துடன் தொடர்பு இல்லாத செயற்பாடுகளுக்காக கடன் பணத்தினை ஈடுபடுத்துதல் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் இணங்கிக் கொண்ட பணத்திற்கு மேலதிகமாக இலாபத்தினையும் பொதுச் செயற்பாட்டு செலவுகளையும் நிறைவேற்றுவதற்கான சதவீதப் பெறுமதியை செலவு செய்வதற்கும் செயற்திட்டத்திற்கு ஏற்பட்டிருந்தது.

- செயற்திட்டத்தினால் வாகனங்களைக் கொள்வனவு செய்யாது அத்தேவைப்பாட்டினை ஒப்பந்த உடன்படிக்கையின் வேலைப் பிரமாண பட்டியல்களின் ஒரு விடயமாக உள்ளடக்கியமையின் காரணமாக செயற்திட்டம் நேரடியாக மோட்டார் வாகனங்களை கொள்வனவு செய்வதனை விட அதிக அளவு பணத்தினை ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டி இருந்தமை மற்றும் உரிய வாகனங்களின் உரிமையாண்மையானது செயற்திட்ட காலத்தின் இறுதியில் உரிய மோட்டார் வாகனங்களின் உரிமையாண்மை வரிசை அமைச்சிற்கு அல்லது அரசாங்க நிறுவனங்களுக்கு கிடைக்காமைக்கான ஆபத்து காணப்படுதல்.

- 2021 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமையின் காரணமாக செயற்திட்டங்களின் பௌதீக செயலாற்றலானது எதிர்பார்த்த இலக்கிற்கு பின்னால் காணப்பட்டமை, கடன் பணத்தின் பயன்பாடு குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை, செயற்திட்டத்தின் இலக்குகளை அடைந்துகொள்ளல் என்பவற்றிற்காக கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக செலவு செய்யப்படாத கடன் பணத்தின் அடிப்படையில் கடப்பாட்டு கட்டணமாக அதிக கிரயத்தினை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

- நிதி அமைச்சினால் செயற்திட்டத்தின் இறுதி ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டிய முறைமை தொடர்பாக முறையான ஆலோசனை வழங்கப்படாமையின் காரணமாக வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களின் செயற்பாட்டு கால எல்லை முடிவடைந்ததன் பின்னரும் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவினால் தொடர்ச்சியாக காணப்படும் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

வங்கித் துறை

விடயங்கள்

- அறிமுகம்
- வங்கித் துறையின் சொத்துக்கள்
- வங்கித் துறையின் பொறுப்புக்கள்
- வங்கித் துறையின் செயற்பாடற்ற கடன்கள் (Non Performing Loans - NPL)
- வங்கித் துறையின் செயலாற்றல
- இலங்கை மத்திய வங்கி
- இலங்கை வங்கி
- மக்கள் வங்கி
- தேசிய சேமிப்பு வங்கி
- தேசிய சேமிப்பு வங்கி - தொகுதி
- வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
- மேர்ச்சன்ட் பேங் ஒவ் சிறீ லங்கா அன்ட் பினான்ஸ் பீஎல்சீ (MBSL)
- பிரதேச அபிவிருத்தி வங்கி (RDB)
- பிரதன கணக்காய்வு அவதானிப்புக்கள்
    - இலங்கை மத்திய வங்கி
    - இலங்கை வங்கி
    - மக்கள் வங்கி
    - தேசிய சேமிப்பு வங்கி
    - வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
    - மேர்ச்சன்ட் பேங் ஒவ் சிறீ லங்கா அன்ட் பினான்ஸ் பீஎல்சீ
    - பிரதேச அபிவிருத்தி வங்கி

வங்கித் துறை

இலங்கையின் வங்கித் துறையில் உரிமம் பெற்ற வணிக வங்கிகள் (Licensed Commercial Banks -LCBs) மற்றும் உரிமம் பெற்ற விசேட வங்கிகள் (Licensed Specialized Banks -LSBs) உள்ளடக்கியிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் 11 வெளிநாட்டு வங்கிகளை உள்ளடக்கிய உரிமம் பெற்ற 24 வங்கிகளும் உரிமம் பெற்ற விசேட 6 வங்கிகளும் ஆக 30 வங்கிகள் இந்த நாட்டின் வங்கித் துறை கொண்டிருந்தது.

வங்கி துறைக்கு நிதி வழங்கும் பிரதான மூலம் வைப்புக்களாக இருந்ததுடன் 2021 ஆம் ஆண்டில் ரூபாய்க் கடன் பெறுவனவுகளில் குறிப்பிடக்கூடிய அளவில் அதிகரிப்பொன்றை காணக்கூடியதாக இருந்தது. எனினும் வெளிநாட்டு நிதி மூலங்களிலிருந்து வெளிநாட்டு கடன்களை பெற்றுக்கொள்வதற்காக அரசின் ஸ்திரமற்ற நிலைமை பாதகமாக தாக்கமளித்திருந்தது. தேறிய வட்டி வருமானம் மற்றும் வட்டியல்லாத வருமானத்தில் ஏற்பட்ட குறிப்பிடக்கூடிய அதிகரிப்பின் காரணமாக 2021 ஆம் ஆண்டில் வங்கித் துறையின் இலாப தன்மை கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது கவனத்தில் கொள்ளக்கூடிய அளவில் அதிகரித்திருந்தது.

வங்கித்துறை அதன் இடைத்தரகர் பங்குகளை 2021 ஆம் ஆண்டின் போது தொடர்ச்சியாக அமுல்படுத்தி நிதியீட்டத்தை இலகுபடுத்துவதற்காக வங்கி வலையமைப்பு விரிவுபடுத்தப்பட்டிந்தது. இலங்கை மத்திய வங்கியின் தரவுகளின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டின் இறுதியில் உரிமம் பெற்ற வணிக வங்கிகளுக்குரிய 2,919 கிளைகளும், உரிமம் பெற்ற விசேட வங்கிகளுக்குரிய 705 கிளைகளும் மற்றும் மாணவர் சேமிப்பு அலகுகள் 3,695 ஆகவும் காணப்பட்டது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் மொத்த வங்கிக் கிளைகள் மற்றும் ஏனைய வங்கி அலகுகள் மற்றும் தன்னியக்க டெலர் இயந்திரங்கள் (ATMs) எண்ணிக்கைகள் முறையே 7,319 மற்றும் 6,342 வரை அதிகரித்திருந்தது.

வங்கித் துறையின் சொத்துக்கள

வங்கித் துறையின் சொத்துக்கள் 2021 ஆம் ஆண்டில் ரூபா 2.3 ரில்லியன் இனால் உயர்வடைந்து 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 16.9 ரில்லியனை விஞ்சியிருந்துதுடன் அது 2020 ஆம் ஆண்டின் இறுதியில் அறிக்கையிடப்பட்ட 17.1 சதவீத வருடாந்த அதிகரிப்புடன் ஒப்பிடும் போது 15.4 சதவீத அதிகரிப்பாகும். அந்த சொத்துக்களின் அதிகரிப்பு பிரதானமாக கடன், முற்பணம் மற்றும் முதலீடுகளின் மூலம் கிடைத்திருந்தது. கடன் மற்றும் முற்பணங்களின் அதிகரிப்பு 2020 ஆம் ஆண்டின் போது 11.9 சதவீதம் முதல் 2021 ஆம் ஆண்டின் போது 15.3 சதவீதம் வரை உயர்வடைந்திருந்தது. 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கடன்தொகுதியில் அதிகரிப்பு அண்ணளவாக 92.2 சதவீதத்திற்கு ரூபா கடன் உயர்வடைந்து சென்றமை காரணமாக இருந்தது. முதலீடுகளின் வருடாந்த அதிகரிப்பு 2020 ஆம் ஆண்டு இறுதி வரையில் காணப்பட்ட 40 சதவீதம் முதல் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையில் 16.4 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. திறைசேரி பிணை முறிகளின் முதலீடு ரூபா 903.7 மில்லியனால் உயர்வடைந்து சென்றமை மற்றும் திறைசேரி

உண்டியல் மற்றும் இலங்கை அபிவிருத்தி பிணைமுறி முதலீடுகள் முறையே ரூபா 99.8 பில்லியனாலும், ரூபா 55 பில்லியனாலும் குறைவடைந்ததன் காரணமாக காலாவதியாகும் வரை நிறுத்தி வைக்கப்பட்ட முதலீட்டு தொகுதிகள் 2021 ஆம் ஆண்டின் போது 24.8 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. வங்கித் துறையின் மொத்த சொத்துக்களின் வேறுபாடு 2016 முதல் 2021 வரை ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் காணப்பட்ட மீதி வரைபடம் 19 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.



வரைபடம் 19 - வங்கித் துறைக்குச் சொந்தமான மொத்த சொத்துக்கள்

வங்கித் துறையின் பொறுப்புக்கள்

வங்கித் துறைக்கு நிதி வழங்கலின் பிரதான மூலமாக வைப்புக்கள் தொடர்ச்சியாக காணப்பட்டதுடன் கடன் பெறுவனவுகள் இரண்டாவது விரிவான மூலமாக இருந்தது. ஒட்டுமொத்த வைப்புக்களின் காலரீதியான வைப்புக்களில் காண்பிக்கப்பட்ட பங்களிப்பு 2020 ஆம் ஆண்டில் 63 சதவீதம் முதல் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையில் 60.6 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. 2021 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட வைப்புக்களின் அதிகரிப்பில் 42.7 சதவீதத்திற்கு காலவைப்புக்கள் பங்களித்திருந்தது. வருட இறுதி வரையில் ஒட்டுமொத்த வைப்புக்களில் சேமிப்பு வைப்புக்கள் மற்றும் நடைமுறை வைப்புக்கள் முறையே 29.5 சதவீதம் மற்றும் 7 சதவீதமாக இருந்தது. நடைமுறை மற்றும் சேமிப்பு கணக்குகளின் விகிதம் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் முறையே 34.5 சதவீதம் மற்றும் 36.6 சதவீதம் ஆக இருந்தது. வங்கித் துறையின் ஒட்டுமொத்த கடன் பெறுவனவுகள் 2020 ஆம் ஆண்டின் போது அறிக்கையிடப்பட்ட ரூபா 12.8 பில்லியன் உயர்வடைந்து செல்வதுடன் ஒப்பிடும் போது 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 489 பில்லியன் (அதாவது 28.9 சதவீதம்) அதிகரிப்பை காண்பித்திருந்தது. இந்த அதிகரிப்புக்கு பிரதான காரணமாக 2021 ஆம் ஆண்டின் போது 86.6 சதவீதம் (ரூபா 688 பில்லியன்) அதிகரிப்பு அறிக்கையிடப்பட்ட ரூபாய்க் கடன் பெறுவனவுகள் ஆகும். வங்கித் துறையின் வைப்புக்களில் வேறுபாடு 2016 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை ஆண்டின் இறுதியில் காண்பட்ட மீதி வரைபடம் 20 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.



வரைபடம் 20 - வங்கித் துறைக்குச் சொந்தமான மொத்த சொத்துக்கள்

வங்கித் துறையின் செயற்பாடற்ற கடன் (Non Performing Loans - NPL)

2021 ஆம் ஆண்டில் COVID-19 தொற்றுநோய் கணிசமான அளவில் பரவியமையால் அதில் பாதிப்பிற்கு உட்பட்ட நபர்கள் மற்றும் சில துறைகளின் வியாபாரங்களுக்காக வழங்கப்பட்ட கடன் சலுகை சந்தர்ப்பங்கள் பலதடவை 2022 ஆம் ஆண்டு வரை நீடிக்கப்பட்டிருந்தது. கடன் சலுகை காலத்தின் போது, கடன் மற்றும் முற்பணங்கள் செயற்பாடற்ற தொகுதியில் வகைப்படுத்தப்பட்டு கைவிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 66.4 பில்லியன் ஆன 2020 ஆம் ஆண்டில் செயற்பாடற்ற கடன் (NPLs) அதிகரிப்புடன் ஒப்பிடும் போது 2021 ஆம் ஆண்டில் அது ரூபா 20.1 பில்லியனால் உயர்வடைந்திருந்தது. எனினும் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது கடன் மற்றும் முற்பணம் உயர் அதிகரிப்பை காண்பித்ததன் காரணமாக மொத்த செயற்பாடற்ற கடன் விகிதம் 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் காணப்பட்ட 4.9 சதவீதம் முதல் 2021 இன் இறுதியின் போது 4.5 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. அதிக ஒதுக்கங்கள் தேவையான தொகுதிகளில் செயற்பாடற்ற கடன் சேர்ந்ததுடன் தேறிய செயற்பாடற்ற கடன் விகிதமும் 2021 ஆம் ஆண்டில் குறைவடைந்திருந்தது. மொத்த செயற்பாடற்ற கடனுக்கான ஒதுக்கீடுகள் ரூபா 80.2 பில்லியனால் அதிகரித்திருந்ததுடன் அதில் குறித்துரைத்த ஒதுக்கீடுகள் 84.7 சதவீதம் ஆகும்.

மேலும், இலங்கை நிதியிடல் அறிக்கை நியமம் 09 இன் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட நட்ட மாதிரி (Expected Loss Model) அமுல்படுத்தப்பட்டதன் பின்னர் 2021 ஆம் ஆண்டின் இறுதியின் போது வங்கித் துறையின் மொத்த கடனில் 7.64 சதவீதம் மூன்றாவது தொகுதியின் கடனாக காண்பிக்கப்பட்டதுடன் மூன்றாவது தொகுதியின் கடன் இழப்பீடு சீராக்கப்பட்ட மொத்த கடனில் 4.26 சதவீதம் (மூன்றாம் தொகுதியின் கடன் இழப்பீடு சீராக்கப்பட்ட) கடனாக காண்பித்திருந்தது.

வங்கித் துறையின் செயலாற்றல்

2021 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட வட்டி செலவினம் 11.5 சதவீதத்தினால் குறைவடைந்ததுடன் ஒப்பிடும் போது மற்றும் வட்டி வருமானம் 3.2 சதவீதத்தினால் அதிகரித்ததன் காரணமாக வங்கித்துறையின் தேறிய வட்டி வருமானம் 28.5 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் 3.1 சதவீதமாக காணப்பட்ட தேறிய வட்டி எல்லை, 2021 ஆம் ஆண்டின் போது 3.4 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது தேறிய வட்டி வருமானம் ரூபா 121.8 பில்லியனால் அதிகரித்திருந்ததுடன் 2021 ஆம் ஆண்டில் உயர்ந்த அந்நிய செலாவணி மீள்மதிப்பீட்டு இலாபத்தின் காரணமாக வட்டியல்லா வருமானம் ரூபா 24.6 சதவீதத்தால் உயர்வடைந்திருந்தது. அவ்வாறே 2021 ஆம் ஆண்டின் இறுதியின் போது வங்கித் துறையின் வரிக்கு பின்னரான இலாபம் ரூபா 198.4 பில்லியனாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 46 சதவீத அதிகரிப்பாகும்.

இலங்கை மத்திய வங்கி

1949 இன் 58 ஆம் இலக்க நியதிச் சட்டத்தில் (திருத்தப்பட்ட பிரகாரம்) இலங்கையில் நிதி மற்றும் கொடுப்பனவு முறைமையின் நிர்வாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்துதலுக்கான பொறுப்புவாய்ந்த உயர் அதிகாரியாக இலங்கை மத்திய வங்கி ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இலங்கையின் ஆக்கபூர்வமான வளங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் முன்னுரிமையை நோக்காகக் கொண்டு பொருளாதார மற்றும் விலை ஸ்திரத்தன்மை மற்றும் நிதி முறைமையின் ஸ்திரத்தன்மையை பாதுகாக்கும் நோக்காகக் கொண்டு இலங்கை மத்திய வங்கி செயற்படுகின்றது.

உள்நாட்டு பணத்தை ஸ்திரப்படுத்துவதற்காக உள்நாட்டு நிதிக் கொள்கைகளை தீர்மானிப்பதற்கு நிதிச் சட்டத்தின் மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகள் மூலம் இயலுமானவரை பாதுகாப்பதற்காக வழங்கல் மற்றும் நிதிக் கிரயங்களை ஒழுங்குபடுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபை முயற்சி எடுத்தல் வேண்டும். பிரதானமாக பொருளாதாரத்தின் கொள்கை வட்டி விகிதத்தை தீர்மானித்தல் மற்றும் திரவ முகாமைத்துவம் செய்தல் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படுகின்றது. பொருளாதாரத்தில் காணப்படுகின்ற வட்டி விகிதத்தின் அடிப்படையில் மத்திய வங்கியின் நிதிச் செயற்பாட்டு நடவடிக்கைகள் தாக்கம் அளித்ததுடன் அது கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் செயற்பாடுகள், பொருளாதார அலுவல்கள் மற்றும் இறுதியாக பணவீக்க விகிதத்தின் அடிப்படையில் தாக்கம் செலுத்துகின்றது. அதன் பிரகாரம் பணவீக்கத்தை கட்டுப்படுத்துதல் மற்றும் பணவீக்கத்தை எதிர்பார்த்த மட்டத்தில் பேணிச் செல்வதற்காக மத்திய வங்கியினால் நிதிக் கொள்கை பயன்படுத்தப்படுகின்றது.

அண்மைய காலத்தில் நிதிக் கொள்கை மற்றும் நிதித்துறையின் கொள்கைகளை காண்பித்து "2021 ஆன் தூரநோக்கு : 2021 மற்றும் எதிர்காலத்திற்காக நிதி மற்றும் நிதித்துறைக் கொள்கை" கூற்று சமர்ப்பித்தல் 2021 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டது. சவால்கள் மற்றும் நிச்சயமற்ற நிலைமை அதிகரித்ததுடன் மும்முனைக் கட்டைமைப்பு அடிப்படையில் பொருளாதாரத்தை வலுப்படுத்தல் மற்றும் சகல பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பாக உறுதிப்படுத்தல் தொடர்பான சான்றிதழை சந்தைக்கு வழங்கும் நோக்காகக் கொண்டு, வங்கி 2021 ஒக்தோபர் மாதத்தின் போது "சர்வ பொருளாதார மற்றும் நிதி முறைமை நிலை ஸ்திரத்தன்மையை

உறுதிப்படுத்துவதற்கான ஆறு மாத முன் தூரநோக்கு" சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

பணவீக்கத்தினால் பாதிப்பிற்கு உட்பட்டவர்கள் மற்றும் வெளிநாட்டுத் துறையில் சமத்துவமின்மைகளுக்காக தீர்வினை வழங்கும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கி 2021 ஆம் ஆண்டின் போது சலுகை நிதி கொள்கையை ஸ்திரத்தன்மையிலிருந்து விலகியிருந்தது. அண்மைய காலத்தில் ஏற்படக்கூடிய அதிக பணவீக்கத்தினால் பாதிப்பிற்கு உட்பட்டவர்களை தடுப்பதற்கும், வெளிநாட்டுத் துறையினதும் உள்நாட்டு நிதிச் சந்தையினதும் சமத்துவமின்மைகளின் தளம்பல்களுக்காக தீர்வினை வழங்கும் நோக்கில் 2021 ஆகஸ்ட் மாதத்தின் போது கொள்கை வட்டி விகிதம் மற்றும் உரிமம் பெற்ற வணிக வங்கிகள் போன்ற சகல ரூபாய் வைப்புக்களின் பொறுப்புக்களுக்காக உரிய நியதிச்சட்ட ஒதுக்க விகிதம் வங்கியினால் உயர்த்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வங்கியின் கொள்கை வட்டி விகிதம், அதாவது உள்ளபடியான வைப்பு வசதிகளின் விகிதம் மற்றும் உள்ளபடியான கடன் வசதிகளின் விகிதம் 2021 ஆகஸ்ட் மாத நடுப்பகுதியின் அடிப்படையில் இலக்கம் 50 வீதம் முறையே 5 சதவீதம் மற்றும் 6 சதவீதம் வரை உயர்த்தப்பட்டிருந்தது. அவ்வாறே நியதிச்சட்ட ஒதுக்க விகிதம் 2021 செப்தெம்பர் மாதம் முதல் அமுல்படும் வகையில் 2 சதவீதத்திலிருந்து 4 சதவீதம் வரை உயர்த்தப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் வங்கி முறைமையில் ரூபா 170 பில்லியன் திரவத்தன்மை உறிஞ்சப்பட்டிருந்நது. 2022 சனவரி முதல் மார்ச் வரையான காலத்தின் போது கொள்கை வட்டி விகிதம் ஒட்டுமொத்தமான அடிப்படையில் இலக்கம் 150 இனால் உயர்வடைந்திருந்தது. 2022 ஏப்ரல் மாதத்தின் போது வங்கியினால் தமது நிதிக் கொள்கைகளை ஸ்திரமாக கருத வேண்டியதாக காண்பித்து தமது நிதிக் கொள்கை விகிதத்தின் அடிப்படையில் இலக்கம் 700 இனால் உயர்த்தப்பட்டிருந்ததுடன் கடன் உபகரணங்களாக விதிக்கப்பட்ட ஆகக்கூடிய வட்டி விகித எல்லை யாவும் அகற்றப்பட்டிருந்தது.

2021 ஆம் ஆண்டின் போது வங்கி, வங்கித் துறையின் பாதுகாப்பு மற்றும் சக்தியை உறுதிப்படுத்துவதற்கு உரிமம் பெற்ற வங்கிகளின் நிதி மற்றும் செயற்பாடுகளுக்கு ஈடுகொடுக்கும் இயலுமையை வலுப்படுத்துவதற்காக விவேகமான கொள்கைச் செயற்பாடுகள் மற்றும் ஒழுங்குபடுத்தல்களை தொடர்ச்சியாக அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே COVID 19 தொற்றுநோய் பரவலால் பாதிப்பிற்கு உட்பட்ட பொருளாதார துறைகளுக்காக சலுகைகளை வழங்குதலை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்காகவும், வங்கித் துறையின் புதிய சராசரியான நிலைமைக்கு கொண்டு வருவதற்கு வசதிகளை வழங்குவதற்காகவும் சில ஒழுங்குபடுத்தும் கட்டுப்பாடுகளை இலகுபடுத்துவதற்கும் வங்கி நடவடிக்கை எடுத்திருந்தது.

இலங்கை வங்கி

இலங்கை வங்கி 1938 இன் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் கீழ் 1938 ஆகஸ்ட் 01 ஆந் திகதி குறித்துரைத்த பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டதுடன் 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும். உலகளாவிய வங்கித் துறையில் இலங்கையர் என்ற இலட்சனத்துடன் வாடிக்கையாளர்களின் கேந்திர மயப்படுத்தப்பட்ட புதிய நிதி வசதிகளை வழங்கி தேசத்தின் வங்கியாளராக இருத்தல் இலங்கை வங்கியின் தூரநோக்காக இருந்ததுடன் வங்கியின் உலகளாவிய ரீதியில் வங்கித்துறையின் புதிய அனுபவத்தை

வாடிக்கையாளர் சமூகத்திற்கு கொண்டு செல்வது மற்றும் அனைத்து பங்குதாரர்களுக்கும் மதிப்பை உருவாக்குவதும் ஆகும். மிகவும் திறமையான நிதிச் சேவைகள் ஊழியர்களில் சிறந்து வழங்கும் மற்றும் நவீன தொழில்நுட்பத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டு சேவைகளினை வழங்குவதன் ஊடாக சகல தரப்பினர்களுக்கும் பெறுமதிகளை உயர்த்துதல் இதன் நோக்கமாகும்.

2021 ஆம் ஆண்டின் போது துறையின் கடன் மற்றும் முற்பணங்களில் 25 சதவீத வைப்புக்களில் 23 சதவீத உரித்தினை காண்பிப்பதற்கு இலங்கை வங்கி உட்பட்டிருந்ததுடன் இலங்கை முழுவதும் தமது விரிவான நுழைவுகளுக்கு மேலதிகமாக இலங்கை வங்கியினால் இந்திய, மாலைதீவு மற்றும் சீசல்ஸ் என்ற நாடுகளில் மூன்று கிளைகளும் ஹுல்ஹுமாலேயில் வரையறுக்கப்பட்ட சேவை கிளையொன்றும், ஐக்கிய இராச்சியத்தில் லண்டனில் முழுமையான உரிமையுடன் இணைந்த நிறுவனமும் செயற்படுத்தப்படுகின்றது.

கடன் தொகுதியின் அதிகரிப்பு, வட்டி எல்லையின் கடன் தொகுதியின் தரத்தன்மை மற்றும் செலவினங்களின் ஆக்கபூர்வமான முகாமைத்துவத்தின் விளைவாக ஆண்டின் போது 83 சதவீத அதிகரிப்புடன் வரிக்கு முன்னரான இலாபம் 43.2 பில்லியன் வரை உயர்வடைந்து செல்வதற்கு வங்கிக்கு முடியமாக இருந்ததுடன் அது காணப்பட்ட அதிக சந்தை சவால்களுக்கு முகங்கொடுத்து ஆண்டின் போது கிடைத்த வெற்றியாக காண்பிக்க முடியும்.

ஆண்டின் போது 28 சதவீத வலுவான சொத்துக்கள் தொகுதியொன்று காண்பித்து வங்கியின் ஐந்தொகையில் 2021 திசெம்பர் இறுதி வரையில் ரூபா 3.8 ரில்லியன் வரை அடையப்பட்டிருந்தது. சொத்துக்களில் 22 சதவீத அதிகரிப்பிற்கு அடிப்படையாக கடன் மற்றும் முற்பணங்களின் மூலம் கிடைத்திருந்ததுடன் தொற்றுநோய் தாக்கத்திற்கு உட்பட்ட கைத்தொழில்கள் மற்றும் வியாபாரங்களை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக தேவையான நிதி வசதிகளை வழங்குதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றது.

வங்கியின் கடன் மற்றும் முற்பணம் ஆண்டின் போது ரூபா 2 ரில்லியன் எல்லையினை விஞ்சியிருந்தது. ஆண்டு முழுவதும் காணப்பட்ட குறைந்த வட்டி நிலைமை, புதிய பொது முகாமையின் கீழ் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக கடன் கோருதல் அதிகரித்தமை இதற்கு காரணமாகும். தனியார் மற்றும் அரசு என்ற இரு துறைகளிலும் தொழிற்படு மூலதனத்தின் தேவையினை பூர்த்தி செய்தல், மேலதிகப்பற்று வசதிகள் 73 சதவீதத்தினாலும், காலரீதியான கடன்கள் 12 சதவீதத்தினாலும் அதிகரித்ததன் மூலம் ஏற்கப்பட்டிருந்ததுடன் சுற்றுலாத்துறை வரையறைகளை இலகுபடுத்துதல் மற்றும் தடுப்பூசி நிகழ்ச்சித் திட்டங்களை வெற்றிகரமாக அமுல்படுத்தியமையால் வாழக்கூடிய சூழலை சாதாரண நிலைக்கு கொண்டுவருவதன் மூலம் தனிநபர் கடன் வசதிகள் ஆண்டில் 19 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

வைப்புக்களில் 16 சதவீத அதிகரிப்பு மற்றும் ஏனைய கடன்கள் இரண்டு மடங்கினால் அதிகரித்ததன் மூலம் மொத்த பொறுப்புக்கள் ரூபா 3.6 ரில்லியன் வரை அதாவது 28 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

வங்கியின் மறைமுக துணை நிறுவனமான பொலதெனிய ஹைட்ரோபவர் தனியார் கம்பனி வெளித்தரப்பினருக்கு விற்பனை செய்யப்பட்ட போதிலும், மேர்ச்சன்ட் பேங்க் ஒவ் ஸ்ரீலங்கா நிறுவனத்தை ஆடிண்டில் இலாபம் பெறும் நிறுவனமாக உருவாக்கும் நோக்காகக்

கொண்டு ரூபா 1.7 பில்லியன் மூலதன பங்களிப்பு வழங்குதலும் 2021 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டது.

மக்கள் வங்கி

மக்கள் வங்கி அரசாங்கத்திற்கு சொந்தமான வங்கியாக 1961 இன் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் மூலம் இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டு உரிமம் பெற்ற வணிக வங்கியாக தாபிக்கப்பட்டிருந்தது. சட்டத்தின் 4 ஆவது பிரிவு மற்றும் அதன் திருத்தங்களின் பிரகாரம் வங்கியின் நோக்கமாக இலங்கையின் கூட்டுறவு தொழில் முயற்சி, கிராமிய வங்கி, விவசாய துறை மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் உதவி வழங்குதல், வணிக வங்கி, அடகு பிடிப்போர் தொழில் முயற்சிகளை நடாத்திச் செல்லல் மற்றும் வணிக வங்கிகளாக நடவடிக்கை எடுக்கின்றது.

மக்கள் வங்கி 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையில் நாடு முழுவதும் 742 கிளைகளை உள்ளடக்கியிருந்தது. அதற்கு மேலதிகமாக 797 ATM இயந்திரங்கள், 298 CDM இயந்திரங்கள், 221 Kiosks மற்றும் 268 தன்னியக்க வங்கி அலகுகள் ஆக காணப்படுகின்றது. 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையில் வங்கியின் மொத்த வைப்புக்கள் ரூபா 236.43 பில்லியனால் அதிகரித்து 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 2,071.5 பில்லியன் வரை அடைந்திருந்தது. 2021 திசெம்பர் இறுதியளவில் வங்கியின் மொத்தச் சொத்துக்கள் ரூபா 2,647.64 பில்லியனாக அறிக்கையிடப்படுகின்றது. 2021 ஆம் ஆண்டில் வங்கியின் வரி செலுத்துவதற்கு முன் இலாபம் ரூபா 30.4 மில்லியனாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 43.2 சதவீத அதிகரிப்பாகும். வங்கியின் தேறிய வட்டி வருமானம் 2021 ஆம் ஆண்டில் ரூபா 82.64 பில்லியன் ஆக இருந்ததுடன் அது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 35.3 சதவீத அதிகரிப்பாகும்.

2021 நுகர்வோர் நிதிச் சேவை சர்வதேச விருது விழாவின் போது வங்கி, இலங்கையின் விசேட வாடிக்கையாளர் வங்கி மற்றும் டிஜிட்டல் வங்கியாக விருது பெற்றிருந்தது. மேலும் இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் மூலம் 2021 ஆம் ஆண்டின் போது தொடர்ச்சியாக 15 தடவையாக ஆண்டின் வங்கியாக மக்கள் வங்கி மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது. சர்வதேச வியாபார நாளிதழினால் இலங்கையின் விசேட டிஜிட்டல் வங்கியாக விருது பெற்றிருந்தது. 2021 ஆம் ஆண்டின் போது நவீனமயப்படுத்தலின் அலகாக People's Pay Wallet அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் 2021 ஆம் ஆண்டு உலகத்தில் சிறந்த 1000 வங்கிகளுக்கிடையே தொடர்ச்சியாக நான்காவது தடவையாகவும் தெரிவு செய்யப்பட்டிருந்தது. வங்கிக்கு **Fitch Rating Lanka Ltd** இனால் **"(AA-(lka)"** தேசிய நீண்டகால தரப்படுத்தலும் உரித்தாகியிருந்தது.

2020 மற்றும் 2021 ஆம் என்ற இரண்டு ஆண்டுகளில் நிதியமைச்சின் பொதுத்திறைசேரிக்கு நிதியீட்டமாக ரூபா 700 மில்லியன் கையளிக்கப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டில் மக்கள் வங்கியின் கடன் தொகுயின் அதிகரிப்பு முறையே கடன் தொகுதி 22 சதவீதத்திற்கு அண்மித்த பங்களிப்பாக இருந்தது. 2021 ஆம் ஆண்டின் இறுதியில் வங்கியின் கடன் தொகை அண்ணளவாக 50 சதவீதம் அரச மற்றும் ஏனைய அரசிற்குரிய தொழிற்முயற்சிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. வங்கியின் சொத்துக்கள், வைப்புக்கள் மற்றும் முக்கியமான குறிகாட்டிகள் சில அட்டவணை 18 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

விபரம்	2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு	2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு
மொத்த சொத்துக்கள் (ரூபா. 000)	**2,230,118,665**	**2,647,640,536**
மொத்த வைப்புக்கள் (ரூபா. 000)	**1,835,099,456**	**2,071,532,612**
சராசரி சொத்துக்களின் அடிப்படையில் நலன்(வரிக்கு முன்) (%)	**1.0**	**1.3**
பங்குகளின் அடிப்படையில் நலன் (%)	**14.4**	**19.9**
செயற்பாடற்ற கடன் (%)	**3.2**	**3.2**

அட்டவணை இல. 18 - மக்கள் வங்கியின் சொத்துக்கயள், வைப்புக்கள் மற்றும் முக்கியமான குறிகாட்டிகள்

தேசிய சேமிப்பு வங்கி

தேசிய சேமிப்பு வங்கி 1971 இல் 30 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் மூலம் 1972 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்டு அப்போதிருந்த மக்களுக்கு நிதி சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டிருந்த விசேட நான்கு நிறுவனங்களை ஒன்றிணைத்திருந்தது. 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் பிரகாரம் வங்கிக்கு உரிமம் பெற்ற விசேட வங்கி தரம் வழங்கப்பட்டிருந்தது. வங்கியின் தொலைநோக்காக அவர்களின் வாடிக்கையாளர்களினதும் சகல தரப்பினரினதும் எதிர்பார்ப்பினை பூர்த்தி செய்து அவர்களின் சேமிப்பு மற்றும் முதலீட்டு தேவைகளை கட்டியெழுப்புவதற்காக முழுமையான வீச்சில் நிதி தீர்வினை வழங்குதல் ஆகும்.

மேற்கூறப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக 261 வங்கிக் கிளைகள் மற்றும் 4,064 தபால் மற்றும் உப தபால் அலுவலகங்கள் மற்றும் 384 CDM / ATM /CRM இயந்திரங்கள் ஊடாக அவர்களின் சேவைகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக நாடு முழுவதும் 4,616 பதவியணியினர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ICRA Lanka Limited இனால் இலங்கைக்கு SLAAA (நிலையான) நீண்டகால கடன் தரப்படுத்தலும் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய சேமிப்பு வங்கி - தொகுதி

தொகுதிக்கு, வரையறுக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கியின் நிதி முகாமைத்துவ கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி (SLSB) என்ற துணைக்கம்பனிகள் இரண்டு உள்ளது. இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையினால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டியின் பிரகாரம் தேசிய சேமிப்பு வங்கி 1999 நவம்பர் 16 ஆந் திகதி வரையறுக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கியின் நிதி முகாமைத்துவ கம்பனி என்ற பெயரில் தனியான கம்பனியொன்றாக தாபிக்கப்பட்டிருந்தது. வரையறுக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கியின் நிதி முகாமைத்துவ கம்பனி 2000 மார்ச் 01 ஆந் திகதி மத்திய வங்கியினால் முன்னுரிமை அளிக்கப்பட்ட பிரதான விற்பனையாளராக நியமிக்கப்பட்டிருந்தது.

இலங்கை சேமிப்பு வங்கி 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப்பட்டு மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தில் மீண்டம் பதிவு செய்யப்பட்டு பொதுவாக வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களுடன் உள்ள கம்பனியாகும். மேலும் அது 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற விசேட வங்கியாக தாபிக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டில் பாதீட்டில் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவிற்கு இணங்க தேசிய சேமிப்பு

வங்கியால் 2019 ஒக்தோபர் 11 ஆந் திகதி முதல் அமுல்படும் வகையில் வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி முழுமையாக கைப்பற்றப்பட்டிருந்தது. இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வை பணிப்பாளரின் 2021 சனவரி 05 ஆந் திகதி கடிதத்தின் பிரகாரம் வங்கி 2021 செப்தெம்பர் 30 ஆந் திகதியளவில் கலைப்பதற்கோ அல்லது தேசிய சேமிப்பு வங்கியுடன் ஒன்றிணைந்து கொள்வதற்கோ நிர்ணயிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த அறிக்கையிடல் திகதி வரை மேற்கூறப்பட்ட செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் வியாபார செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி 1997 இன் 07 ஆம் இலக்க (திருத்தப்பட்ட 2003 இன் 15 ஆம் இலக்க சட்டம் மற்றும் 2011 இன் 45 ஆம் இலக்க சட்டம்) இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபன வங்கி சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டிருந்ததுடன் 1988 இன் 30 ஆம் இலக்க வங்கியின் சட்டத்தின் மூலம் உரிமம் பெற்ற விசேட வங்கியாக ஏற்படுத்தப்பட்டிருந்தது. சட்டத்தின் இலக்கம் 12(அ) மற்றும் திருத்தங்களின் பிரகாரம் வங்கியின் நோக்கமாக சகல இலங்கையர்களினதும் வீடமைப்பு கனவினை பூர்த்தி செய்வதற்கு வீடமைப்பு சார்ந்த நிதி வழங்கல்களின் மறுக்கமுடியாத சந்தைத் தலைவராக ஏற்படுத்துதல்.

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி 2021 ஆம் ஆண்டின் போது புதிய கிளையொன்று தாபிக்கப்படாதிருந்ததுடன் அதன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டின் போது மொத்த கிளைகள் 39 ஆக இருந்ததுடன் BB+ (lka) கடன் தரமிடலை உள்ளடக்கியிருந்தது. அதற்கு மேலதிகமாக வழங்கப்பட்டுள்ள கடன் 2021 இன் போது ரூபா 41.84 பில்லியனாக இருந்ததுடன் 2020 இன் போது ரூபா 41.21 பில்லியனுடன் ஒப்பிடும் போது அது 1.5 சதவீத அதிகரிப்பாகும். மீளாய்வவாண்டில் வட்டி வருமானம், முன்னைய ஆண்டில் வருமானமான ரூபா 7.46 பில்லியன் முதல் ரூபா 6.61 பில்லியன் வரை 11.32 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. மேலும் வங்கி ஆண்டில் தமது வைப்புக்களின் அடிப்படையில் ரூபா 47.95 பில்லியன் முதல் ரூபா 49.81 பில்லியன் வரை விரிவுபடுத்தியிருந்ததுடன் அது 3.89 சதவீத அதிகரிப்பாகும்.

2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 61.03 பில்லியன் ஆன மொத்த சொத்துக்கள் 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 62.96 பில்லியன் வரை ரூபா 1.93 பில்லியனால் அதிகரித்திருந்தது. வங்கியின் செயற்பாடற்ற கடன் விகிதம் 2020 ஆம் ஆண்டில் 20.2 சதவீதம் முதல் 2021 ஆம் ஆண்டில் 18.8 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

2021 ஆம் ஆண்டின் போது வங்கி ரூபா 878 மில்லியன் வரிக்கு முன்னரான இலாபமொன்றை அறிக்கையிட்டிருந்ததுடன் அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 17.79 சதவீத குறைவாகும். மேலும் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது வங்கியின் தேறிய வட்டி வருமானம் ரூபா 75 மில்லியனால் அதாவது 2.52 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

மூலதனம் போதியளவாக இருந்தமை மற்றும் ஆகக்குறைந்த மூலதன தேவை, பங்குரிமையாளர்களுக்கான பெறுமதியை தீர்மானித்தல் முன்னுரிமையாக இருந்ததுடன் பங்கு உரிமையாளர்களின் நிதியம் 2021 இன் போது 9.88 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

பங்குக்குரிய தேறிய சொத்துக்கள் ரூபா 89.35 முதல் 98.18 வரை 2021 இன் போது அதில் 9.88 சதவீத அதிகரிப்பை அடைந்திருந்தது. எனினும் இலாபத் தன்மை குறைவடைந்ததன் காரணமாக 2021 ஆம் ஆண்டில் பங்குக்கான உழைப்பு ரூபா 10.94 முதல் ரூபா 8.46 வரை குறைவடைந்திருந்தது. ஆரம்ப மூலதன விகிதம் (படிநிலை 1) மற்றும் முழுமையான மூலதன விகிதம் (படிநிலை 2) ஒழுங்குபடுத்தல் தேவையாக 8.50 சதவீதம் முதல் 12.50 சதவீதத்துடன் ஒப்பிடும் போது ஆகக்குறைந்த தேவையினை விட 22.38 சதவீதம் 23.02 சதவீதமாக காணப்பட்டது. எனினும் 2017 ஒக்தோபர் 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கியின் (CBSL) கட்டளை பிரகாரம் 2020.12.31 ஆந் திகதி முதல் வங்கியின் ஆகக்குறைந்த மூலதனம் ரூபா 7,500 மில்லியனாக இருக்க வேண்டும். தற்போதைய சகல பொருளாதார நிலைமை காரணமாக இலங்கை மத்திய வங்கியால் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரை ஆகக்குறைந்த நிர்ணயிக்கப்பட்ட மூலதனத் தேவை காலஎல்லை திருத்தப்பட்டிருந்தது. வங்கியின் சொத்துக்கள், வைப்புக்கள், கடன் பெறுவனவுகள் மற்றும் முக்கியமான குறிகாட்டிகள் சில கீழே காண்பிக்கப்படுகின்றது.

விபரம்	2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு	2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு
மொத்த சொத்துக்கள் (ரூபா. மில்)	61,030	62,964
மொத்த வைப்புக்கள் (ரூபா. மில்)	47,947	49,813
கடன் பெறுவனவு (ரூபா. மில்)	5,542	5,090
சொத்துக்களின் அடிப்படையில் நலன் (%)	1.16	0.87
பங்குகளின் அடிப்படையில் நலன் (%)	12.25	8.61
செயற்பாடற்ற கடன் (%)- அணண்ளவாக	20.23	18.8

மேர்ச்சன்ட் பேங்க் ஒவ் ஸ்ரீலங்கா என்ட் பினான்ஸ் பீஎல்சீ (MBSL)

1982 ஆம் ஆண்டின் போது நாட்டில் முதலாவதாகவும் ஒரேயொரு விசேட வர்த்தக வங்கியாகவும் மேர்ச்சன்ட் பேங்க் ஒவ் ஸ்ரீலங்கா என்ட் பினான்ஸ் பீஎல்சீ தாபிக்கப்பட்டிருந்தது. 1991 ஆம் ஆண்டின் போது இந்தக் கம்பனி கொழும்பு பங்குச் சந்தையில் நிரற்படுத்தப்பட்டிருந்ததுடன் 2000 இன் போது குத்தகை நிதியீட்ட கம்பனியாக செயற்படுவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டின் போது இந்தக் கம்பனி மேர்ச்சன்ட் பேங்க் ஒவ் ஸ்ரீலங்கா என்ட் பினான்ஸ் பீஎல்சீ ஆக பெயரிடப்பட்டிருந்ததுடன் 2015 ஆம் ஆண்டின் போது நிதி வியாபார சட்டத்தின் கீழ் நிதி வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அதிகார உரிமம் பெற்ற நிதிக்கம்பனியாக பதிவு செய்யப்பட்டிருந்தது.

கம்பனி தொலைநோக்காக தேசத்திற்கு புதுமைப்படுத்தல் வியாபாரங்களுக்கு தீர்வினை வழங்குவதாகும். தற்போது கம்பனி 48 கிளைகளுடனான வலைப்பின்னலில் நாடு முழுவதும் செயற்படுத்தப்படுவதுடன் இலங்கையில் மாத்திரம் செயற்படுத்தப்படுகின்றது.

பிரதேச அபிவிருத்தி வங்கி (RDB)

2008 இன் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் மூலம் 2010 ஆம் ஆண்டில் ஆறு மாகாண அபிவிருத்தி வங்கிகள் ஒன்றிணைக்கப்பட்டு இலங்கையில்

தாபிக்கப்பட்ட அரசாங்கத்திற்குச் சொந்தமான உரிமம் பெற்ற விசேட வங்கியாக பிரதேச அபிவிருத்தி வங்கி தாபிக்கப்பட்டிருந்தது. அரசாங்கத்திற்குச் சொந்தமான தேசிய மட்டத்தில் வங்கியாக விவசாயம், கைத்தொழில், வர்த்தகம், வணிகம், கால்நடை வள, மீன்பிடி போன்ற ஒட்டுமொத்த பிரதேச பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான வசதிகளை வழங்குதல், சிறு நிதி நிறுவனங்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு நிதி உதவிகள் வழங்கி மகளிரை வலுப்படுத்துதல் என்பன வங்கியின் பிரதானமாக நோக்கங்கள் ஆகும்.

நிதி நிறுவனமாக பிரதேச அபிவிருத்தி வங்கி நிதி அபிவிருத்தி இலக்காகக் கொண்டு நாட்டில் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி செயற்பாடுகளை கட்டியெழுப்பும் போது அத்தியவசிய பணிகளை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்துள்ளது. நாடு முழுவதும் அமைந்துள்ள 2,590 அளவிலான பதவியணியினர்களின் பங்களிப்புடன் வங்கி தமது நாடு முழுவதும் பரவியுள்ள 288 கிளைகள் ஊடாக வங்கியின் கொடுக்கல் வாங்கல்களை வலுப்படுத்துவதற்கும் அதன் மூலம் ஒட்டுமொத்த தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்பு வழங்குகின்றது. வங்கி ICRA லங்கா கம்பனியிலிருந்து BBB+ (மறை) தரத்தைப் பெற்றுள்ளது.

அரசாங்கத்திற்குச் சொந்தமான வங்கியாக பிரதேச அபிவிருத்தி வங்கியின் மூலம் COVID - 19 காலத்தில் வாடிக்கையாளர்களுக்கு கடன் மற்றும் ஏனைய சலுகைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டின் போது வங்கியினால் RDB QR குறியீட்டை அடிப்படையாகக் கொண்டு கொடுக்கல் வாங்கல் வசதிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதன் மூலம் வர்த்தக நிறுவனங்களில் பொருட்கள் அல்லது சேவைகளை கொள்வனவு செய்த வாடிக்கையாளர்களுக்கு ஏனைய வங்கியில் QR ஊடாக பொருட்களுக்கான பணம் செலுத்த முடியுமாக இருந்ததுடன் நிதி உரிய வியாபார நிறுவனங்கள் / உரிமையாளர்களின் RDB கணக்கிற்கு செலவு வைக்கப்படுகின்றது. மேலும் கடன் முறைமை (LOS) மற்றும் கடன் சேகரிததல் முகாமைத்துவ முறைமை (CMS) என்ற முறைமைகளை அபிவிருத்தி செய்தல் இறுதிக் கட்டத்தில் காணப்படுவதுடன் அது வாடிக்கையாளர்களுக்கு விரைவாக கடன் வசதிகளை வழங்குவதற்கு இலகுவாகும்.

2021 ஆம் ஆண்டிற்காக வங்கியின் 775.5 மில்லியன் வரிக்கு முன்னரான இலாபம் மற்றும் ஆண்டின் தேறிய வட்டி வருமானம் ரூபா 13.65 பில்லியன் அறிக்கையிடப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் வங்கியின் மொத்த சொத்துக்கள் ரூபா 245.9 பில்லியன் வரை அதிகரித்திருந்ததுடன் அது 2020 ஆம் ஆண்டில் மொத்தச் சொத்துக்களின் பெறுமதியான ரூபா 222.1 பில்லியனுடன் ஒப்பிடும் போது 11 சதவீத அதிகரிப்பாகும். 2021 ஆம் ஆண்டின் இறுதியில் வாடிக்கையாளர்களின் வைப்புக்கள் ரூபா 187.7 பில்லியனாக இருந்ததுடன் அது 2020 ஆம் ஆண்டின் இறுதியில் ஒப்பிடும் போது ரூபா 14.8 பில்லியன் அல்லது 8.6 சதவீத அதிகரிப்பாகும். 2021 இன் நிதியாண்டின் இறுதியில் முதலாவது தடவை மூலதனம் பொருண்மை விகிதம் 8.72 சதவீதமாக இருந்ததுடன் மொத்த பொருண்மை விகிதம் 14.27 சதவீதம் ஆகும்.

பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள்

இலங்கை மத்திய வங்கி

- வங்கி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வங்கிக்கு சொந்தமான திறைசேரி உண்டியலின் முதலீட்டின் பெறுமதி, 2019 இன் இறுதியில் காணப்பட்ட ரூபா 25

பில்லியன் (புத்தக பெறுமதி) முதல் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையில் ரூபா 638 பில்லியன் (புத்தக பெறுமதி) வரையில், 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையில் ரூபா 1,351 பில்லியன் (புத்தக பெறுமதி) வரையும் அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையும் அரசாங்கத்தால் விநியோகிக்கப்பட்ட திறைசேரி உண்டியல்களின் 2.9 சதவீத அளவு மாத்திரம் வங்கிக்கு சொந்தமாக காணப்பட்டதுடன் அந்த அளவு 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் விநியோகிக்கப்பட்ட அளவில் 40.4 சதவீதம் வரையும், 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் விநியோகிக்கப்பட்ட அளவில் 59.5 சதவீதம் வரையும் அதிகரித்திருந்தது. இதன் பிரகாரம் அந்தந்த ஆண்டின் இறுதியில் காணப்பட்ட அரசாங்கம் விநியேகித்த திறைசேரி உண்டியலில் கவனத்தில் கொள்ளக் கூடிய அளவை வங்கி கொள்வனவு செய்திருந்தது.

- வங்கி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையில் ரூபா 1,511.6 பில்லியன் ஆக காணப்பட்ட வங்கியின் வெளிநாட்டு சொத்துக்கள் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 1,387.5 பில்லியன் வரையும், 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் 798.8 பில்லியன் வரை 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2021 இன் இறுதியில் 42 சதவீதத்தினால் மாத்திரம் குறைவடைந்திருந்தது. வங்கியின் மூலம் வெளியிடப்பட்ட வாராந்த பொருளாதார நாளிதழின் பிரகாரம் வங்கியின் தேறிய வெளிநாட்டு சொத்துக்கள் 2021 ஆகஸ்ட் மாதத்தின் போது ரூபா 83.9 பில்லியன் மறைப் பெறுமதியை கொண்டிருந்ததுடன் அது அதிகரித்து 2021 திசெம்பர் வரையில் தேறிய வெளிநாட்டு சொத்துக்களின் மறை மீதி ரூபா 386.2 பில்லியன் வரையும், 2022 யூலை இறுதி வரையிலும் அந்த மறைமீதி ரூபா 1,612.7 பில்லியன் வரையும் அதிகரித்திருந்தது.

- வங்கியினால் வெளியிடப்பட்ட நாளாந்த நாணயமாற்று விகிதத்தின் பிரகாரம் 2021 செப்தெம்பர் 07 முதல் 2022 மார்ச் 07 ஆந் திகதி வரை வங்கியினால் அமெரிக்க டொலருக்கான நாணய மாற்று வீதம் நிலையான பெறுமதியில் பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன் இந்தக் காலத்தில் உள்நாட்டு வெளிநாட்டு நாணய மாற்று சந்தையில் வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயமாற்று விற்பனை அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 2021 செப்தெம்பர் முதல் 2022 மார்ச் வரையான காலப்பகுதியில் வங்கி உள்நாட்டு வெளிநாட்டு நாணய மாற்று சந்தையில் ஐக்கிய அமெரிக்க டொலர் 1,746 மில்லியன் வழங்கியிருந்ததுடன் உள்நாட்டு வெளிநாட்டு நாணயமாற்று சந்தையில் ஐக்கிய அமெரிக்க டொலர் 738 மில்லியன் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உள்நாட்டு வெளிநாட்டு நாணயமாற்று சந்தைக்கு வழங்கப்பட்ட தேறிய வெளிநாட்டு நாணயமாற்று ஐக்கிய அமெரிக்க டொலர் 1,008 மில்லியன் மாத்திரமாக இருந்ததுடன் வங்கிக்குச் சொந்தமான வெளிநாட்டு ஒதுக்கங்கள் குறைவடைந்தமைக்கு அதுவும் காரணமாகும்.

- 2021 செப்தெம்பர் முதல் 2022 மார்ச் வரையான காலப்பகுதியின் போது வெளிநாட்டு ஊழியர்களின் பண அனுப்புதல்கள் கவனத்தில் கொள்ளக்கூடிய அளவு

குறைவடைந்திருந்தது. அதன் பிரகாரம் 2021 பெப்ரவரி முதல் 2021 ஆகஸ்ட் வரையான 07 மாத காலத்திற்காக ஐக்கிய அமெரிக்க டொலர் 3,548.9 மில்லியன் வெளிநாட்டு ஊழியர்களிடமிருந்து அனுப்புதல் கிடைக்கப் பெற்றிருந்ததுடன் 2021 செப்தெம்பர் முதல் 2022 மார்ச் வரை அது ஐக்கிய அமெரிக்க டொலர் 2,049.88 மில்லியன் வரை குறைவடைந்திருந்தது. உத்தியோகபூர்வ நாணயமாற்று விகிதத்துடன் ஒப்பிடும் போது முறையற்ற சந்தையில் நாணயமாற்று விகிதத்தில் குறிப்பிடக்கூடிய அளவு வேறுபாடு காணப்பட்டமை, முறையான வழிகள் ஊடாக பெறுகின்ற அனுப்புதல்கள் குறைவடைவதற்கு அடிப்படையான காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

- நிதி விதி சட்டத்தின் கீழ் 66(1) பிரிவின் பிரகாரம் இலங்கை ரூபாயின் சர்வதேச ஸ்திரத்தன்மையை பேணிச் செல்வதற்காகவும், அது தற்போதைய சர்வதேச கொடுக்கல் வாங்கல்களில் உச்ச அளவில் சுதந்திர விடுதலை சான்றிதழுக்காக நிதிச் சபையினால் மத்திய வங்கியின் சொத்துக்கள் மூலம் சர்வதேச கொடுப்பனவு மீதியின் எதிர்பார்க்கக் கூடிய நிலுவையை பூர்த்தி செய்து கொள்வதற்கு போதியளவான சர்வதேச ஒதுக்கத்தை பேணிச் செல்வதற்கு முயற்சி எடுத்தல் வேண்டும். எனினும் 2018 சனவரி மாதம் வரையில் ஐக்கிய அமெரிக்க டொலர் 7,670 மில்லியனுக்கு அண்மித்த பெறுமதியொன்றை கொண்டிருந்த மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கம் 2022 மார்ச் மாதம் வரையில் ஐக்கிய அமெரிக்க டொலர் 2,000 மில்லியனை விட குறைந்த பெறுமதி வரை கணிசமாக குறைவடைந்திருந்தது. அரசாங்கத்தின் சர்வதேச ஸ்திரத்தன்மைக்கு பிணை முறிகளை தீர்ப்பதற்கான இரண்டு சந்தர்ப்பங்களின் போது கூட்டுமொத்தமாக ஐக்கிய அமெரிக்க டொலர் 1,500 மில்லியன் வங்கிக்குச் சொந்தமான வெளிநாட்டு ஒதுக்கத்திற்காகவும் இவ்வாறு மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கம் குறைவடைவதற்கு காரணமாக இருந்தது.

- நிதிச்சட்டத்தின் 113 ஆம் பிரிவின் பிரகாரம் அரச கடன் முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய பொறுப்புக்கள் இலங்கை மத்திய வங்கிக்கு கையளிக்கப்பட்டுள்ளது. எனினும் அரச கடனின் கீழ் உள்ளடக்கப்படுகின்ற கடன் வகையின் அதாவது அரசாங்க கடனுக்கான அர்த்தம், அரச கடன் முகாமைத்துவத்தின் நோக்கம் மற்றும் பணிகள் தொடர்பாக நிதி சட்டத்திலோ அல்லது ஏனைய எழுத்து மூல சட்டத்திலோ குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

- சிறு நிதி முயற்சிகளை செய்வதன் ஊடாக கம்பனிகளுக்கு அனுமதிப்பத்திரத்தை விநியோகித்தல், ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை, 2016 யூலை 15 ஆந் திகதி முதல் அமுல்படும் வகையில் 2016 இன் 6 ஆம் இலக்க சிறு நிதி வியாபார சட்டத்தின் கீழ் வங்கியின் நிதிச் சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. வைப்புக்களை கையேற்றல் மற்றும் பிரதானமாக குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கும், சிறு தொழில் முயற்சிகளுக்கு நிதிச் சேவை வழங்குகின்ற கம்பனி (நுண் நிதி வியாபாரம்) இந்த சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற முடியும். அதன் பிரகாரம் இந்த சட்டம் அமுல்படுகின்ற திகதி முதல் 2021 யூன் 30 வரை சிறு நிதி வியாபாரங்களை செய்வதற்காக 04 கம்பனிகள் மாத்திரம் அனுமதிப்பத்திரம் பெற்றிருந்தது. வைப்புக்களை

கையேற்காதிருந்த போதிலும் நாட்டில் காணப்படுகின்ற குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கும் சிறு தொழில்முயற்சிகளுக்கு நிதி சேவைகளை வழங்கும் கம்பனி இந்த சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு அவசியமில்லை. அதனால் அவ்வாறான கம்பனி இந்த சட்டத்தின் கீழ் வங்கியின் நிதிச் சபையினால் ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை செய்வதில்லை. 2019 ஆம் ஆண்டில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கு பதிலாக சிறு நிதி மற்றும் நிதிக் கடன் வழங்குகின்ற தொழில் முயற்சிகளில் ஈடுபடுகின்ற நிறுவனங்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வைக்காக கடன் ஒழுங்குமுறைகள் அதிகார சபை ஏனைய சட்டம் ஊடாக தாபிக்கப்பட்டுள்ளமையும் அந்த உத்தேச சட்டத்தின் வரைவு 2019 நவம்பர் 26 ஆந் திகதி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் அது 2021 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

இலங்கை வங்கி

- மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 37.6 பில்லியன் இலாபமா இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் 17.8 பில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 19.8 பில்லியன் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்காக கடன் மற்றும் முற்பணம் 22 சதவீதத்தினால் அதிகரித்தமை மற்றும் முதலீடுகள் 44 சதவீதத்தினால் அதிகரித்தமையின் அடிப்படையில் வட்டி வருமானம் 15 சதவீதத்தால் அதிகரித்தமை காரணமாக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நேரடியாக அரசாங்கத்திற்கும் அரச தொழில் முயற்சிகளுக்காகவும் கடன் வழங்குதல் 41 சதவீதத்தினாலும், தனியார் பிரிவிற்காக கடன் வழங்குதல் 9 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது.

- கடன் மற்றும் ஏனைய நட்டத்திற்காக இழப்பீட்டு கட்டணம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ரூபா 12.5 பில்லியனால் அதாவது 40 சதவீதத்தால் உயர்வடைந்திருந்தது. வங்கியின் ஒட்டுமொத்த கடன் அளவு உயர்வடைந்து சென்றமை, கட்டம் I மற்றும் கட்டம் II இன் கீழ் அறிக்கையிடப்பட்ட கடன் அளவு உயர்வடைந்தமை, அரச மற்றும் அரச தொழில்முயற்சிகள் ஊடாக வெளிநாட்டு நிதியில் கையளிக்கப்பட்ட கடன் பணம் மற்றும் வெளிநாட்டு பணத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கங்களை அதிகரித்தல் இதற்கு பிரதான காரணமாக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வங்கியின் வைப்புக்கள் 16 சதவீதத்தினாலும், கடன் பெறுவனவுகள் 126 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்ததுடன் ஆண்டு முழுவதும் காணப்பட்ட குறைந்த வட்டி நிலைமையின் காரணமாக வட்டி செலவினம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 2.2 பில்லியனால் அதாவது 2 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

- அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில்முயற்சிகளுக்குரிய (SOEs) கடன் மற்றும் முற்பணங்களின் மொத்த நிலுவை மீதி கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் கவனத்தில் கொள்ளக்கூடியதாக உயர்வடைந்திருந்தது. 2021 ஆம் ஆண்டு வரையில் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்

போது அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில்முயற்சிகளின் மொத்த நிலுவைக் கடன் மற்றும் முற்பணம் 209 சதவீதத்தினாலும் அதாவது ரூபா 772,819 மில்லியனால் அதிகரித்திருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளின் மொத்த நிலுவை மீதி மொத்த கடன் மற்றும் முற்பணங்களில் 30.24 சதவீதம் மற்றும் வங்கியின் மொத்த சொத்துக்களில் 18.90 சதவீதமாக இருந்தது. இந்த சதவீதம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மொத்த கடன் மற்றும் முற்பணங்களில் 44.31 சதவீதம் வரை மொத்த சொத்துக்களில் 30.02 சதவீதம் வரையில் வேகமாக அதிகரித்திருந்தது.

- 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை வங்கியில் ஆகக்கூடிய கடன் மீதியை காட்டுகின்ற அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில் முயற்சிகளுக்கிடையே பொதுத்திறைசேரி, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை அரசாங்கம், இலங்கை விமான சேவைகள், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, இலங்கை மின்சார சபை, ஓய்வூதியத் திணைக்களம், இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனம் மற்றும் நெல் சந்தைப்படுத்தும் சபை என்பவற்றிற்கு உரியதாகும். 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த நிறுவனங்களுக்காக வழங்கப்பட்டுள்ள மொத்த கடன் பெறுமதியின் கூட்டுமொத்தம், மூலதன பங்கு ரூபா 1,085,738 மில்லியன் மற்றும் வட்டி பங்கு ரூபா 15,349 மில்லியனுடன் ரூபா 1,101,087 மில்லியனாக அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அது அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்குரிய கடன் மற்றும் முற்பணங்களில் 96.44 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

- 2021 ஆம் ஆண்டு வரையான கடந்த 05 வருட காலத்திற்காக ஆகக்கூடிய செயற்பாடற்ற 10 கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 21,455.50 மில்லியனாக இருந்ததுடன் அத்திகதியில் மொத்த கடன் மற்றும் முற்பண மீதியில் 0.83 சதவீதமாகும்.

மக்கள் வங்கி

- கடந்த 05 வருட காலத்தின் போது (2017-2021) அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில்முயற்சிகளுக்குரிய கடன் மற்றும் முற்பணங்களின் மொத்த நிலுவை மீதி கவனத்தில் கொள்ளக்கூடியதாக உயர்வடைந்திருந்தது. 2021 வரையில் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளுக்குரிய கடன் மற்றும் முற்பணங்களின் மொத்த நிலுவை மீதி ரூபா 584,107 மில்லியனால் அதாவது 165 சதவீதத்தினால் அதிகரித்திருந்துது. 2017 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்குரிய மொத்த நிலுவை கடன் மீதி வங்கியின் மொத்தக் கடன் மற்றும் முற்பணங்களில் 32.89 சதவீதம் மற்றும் மொத்த சொத்துக்களில் 24.08 சதவீதம் ஆக இருந்தது. இந்த மீதியில் 2021 திசெம்பர் 31 வரையில் மொத்த கடன் மற்றும் முற்பணங்களில் 48.39 சதவீதமாகவும் மொத்த சொத்துக்களில் 35.40 சதவீதம் வரையும் விரைவாக அதிகரித்திருந்தது. 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் வங்கியின் மொத்த சொத்துக்கள் ரூபா 2,647,641 மில்லியனாக இருந்ததுடன் அதில் 35.40 சதவீதம் அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்குரிய

கடன் மற்றும் முற்பணத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது.

- 2021 திசெம்பர் 31 வரையில் அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட ஆகக்கூடிய 10 கடன் மூலதனம் ரூபா 873,689 மில்லியன் மற்றும் வட்டி 9,152 மில்லியனுடன் ரூபா 882,840 மில்லியனாக அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அது அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்குரிய கடன் மற்றும் முற்பண மீதியில் 94.18 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட ஆகக்கூடிய 10 கடன்களை பிரதிநிதித்துவப்படுத்துவது திறைசேரி பிரதி செயலாளர், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை, இலங்கை விமானக் கம்பனி, வீதி அபிவிருத்தி அதிகார சபை, வரையறுக்கப்பட்ட லங்கா உரக் கம்பனி, ஓய்வூதியப் பணிப்பாளர், வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்சியல் உரக் கம்பனி, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை மற்றும் அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் என்ற நிறுவனங்களாகும்.

- திறைசேரியின் பிரதி செயலாளர், சமுர்த்தி கடன் மற்றும் சிரேஷ்ட பிரஜைகள் வைப்புக்களுக்காக அரசாங்கத்தின் திறைசேரியிலிருந்து கிடைக்க வேண்டிய வட்டி போன்றவற்றின் நிலுவை மீதியான ரூபா 480,526 மில்லியன் தொகை, பணமாக தீர்ப்பதற்கு பதிலாக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது திறைசேரி பிணை முறிகள் விநியோகித்தலின் மூலம் தீர்க்கப்பட்டிருந்தது.

- அடகு உத்தியோகத்தரினால் அடகு முறையில் போலியாக கொடுக்கல் வாங்கல் வடிவமைக்கப்பட்டு கூட்டுமொத்தமாக ரூபா 50,233,000 அடகு முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அடகு வாடிக்கையாளர் பௌதீக ரீதியில் வருகை தராமல் முற்பணம் கைமாற்றப்பட்டிருந்தது.

- செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் (Charter) பிரகாரம், தரவுகளை களஞ்சியப்படுத்தல் (Data Ware House) செயற்திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டின் போது கேள்வி கோரப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டின் போது JIT டெக்னொலொசினால் இனால் கேள்வி கையேற்கப்பட்டிருந்ததுடன் 2015.11.05 ஆந் திகதி வங்கியால் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மொத்த செலவினம் ரூபா 250,539,917.95 ஆகும். சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் பிரகாரம் கடந்த 05 வருடங்களுக்காக செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட மொத்த பராமரிப்புக் கிரயம் ரூபா 168,850,063.17 ஆகும். பணிப்பாளர் சபை பத்திர இலக்கம் 800/2021 இன் படி கடந்த 05 வருடங்களுக்காக செலவிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 402,028,385 மற்றும் மொத்த எதிர்பார்க்கப்பட்ட கிரயம் ரூபா 480,910,852 ஆகும். செயற்திட்டம் 2018.12.08 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. நிதி மற்றும் வழங்கல் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட விபரங்களின் படி 2015 முதல் 2020 வரை 17 சந்தர்ப்பங்களின் போது பகுதியாக ரூபா 137,187,229 செலுத்தப்பட்டிருந்ததுடன் 2021.12.31 இல் உள்ளவாறு தொங்கல் கணக்குகளில் தீர்க்கப்படாமல்

காணப்பட்டது. அதற்காக நிதி கூற்றுக்களில் ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- 2021.07.27 மற்றும் 2021.08.19 ஆந் திகதிகளில் காணப்பட்ட தரவு களஞ்சியப்படுத்தல் குழு கூட்ட அறிக்கையின் படி செயற்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்ததுடன் அனுமதிப்பத்திரம் காலாவதியானதன் காரணமாக தற்போது முறைமையில் காணப்படாதிருந்தமையும் ஒவ்வொரு பிரிவின் முகவர்களும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அது பணிப்பாளர் சபை பத்திர இலக்கம் 800/2021 ஊடாக சபைக்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்ததுடன் நிறைவேற்று செயற்குழு தற்போது காணப்படுகின்ற களஞ்சியங்களையும் நிறுத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

தேசிய சேமிப்பு வங்கி

- சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டின் போது வங்கியின் மொத்த வட்டி வருமானம் 7.3 சதவீதத்தினால் அதாவது ரூபா 122,512 மில்லியன் முதல் ரூபா 131,438 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. கடந்த ஆண்டின் நேரொத்த முன்னைய ஆண்டின் தேறிய இலாபமாக ரூபா 15,645 மில்லியன் உடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்காக வங்கியின் செயற்பாடுகள் ரூபா 28,381 மில்லியன் வரிக்கு முன்னர் தேறிய இலாபம் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் நிதிவிளைவில் ரூபா 12,736 மில்லியன் அதாவது 81 மில்லியன் அதிகரிப்பை காண்பித்திருந்தது. சராசரி சொத்துக்களின் அடிப்படையிலான நலன்கள் (ROAA) மற்றும் சராசரி பங்குகளின் அடிப்படையிலான நலன்கள் (ROAE) முறையே 1.93 சதவீதம் மற்றும் 33.92 சதவீதமாக இருந்தது.

- கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் இறுதியில் கடன் மற்றும் முற்பணங்கள் 4 சதவீதத்தால் அதாவது ரூபா 516,795 மில்லியன் முதல் ரூபா 538,941 மில்லியன் வரை உயர்வடைந்திருந்தது. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான மொத்தக் கடன் தொகையில் தனியார் கடன் 40.5 சதவீதமாக இருந்ததுடன் வீடமைப்பு மற்றும் ஆதனக் கடன் 11.7 சதவீதமாகும். மேலும் வங்கி 2021 சனவரி 01 ஆந் திகதி ரூபா 59,366 மில்லியன் பெறுமதியுடைய வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிலுவைக் கடன், பிணைமுறியாக மாற்றப்பட்டிருந்தது. அதனால் அது 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் மற்றும் முற்பணங்களில் கடன் மற்றும் ஏனைய விடயமாக வகைப்படுத்தப்பட்டிருந்தது.

- மீளாய்வாண்டில் வங்கியில் மொத்த செயற்பாடற்ற கடன் விகிதம் 2.79 சதவீதம் முதல் 2.97 சதவீதம் வரை உயர்வடைந்திருந்துது. மேலும் இழப்பீட்டிற்கான நிதியேற்பாடும் ரூபா 2,978 மில்லியனால் அதாவது 33.1 சதவீத்தினால் அதிகரித்திருந்தது. அவ்வாறு அதிகரிப்பதற்கு செயற்பாடற்ற கடன் 12 சதவீதத்தினால் அதிகரித்தமை காரணமாக இருந்தது.

- ஆண்டின் இறுதியில் வங்கியின் மொத்த வைப்புக்கள் 15 சதவீதத்தினால் அதாவது ரூபா 1,237,124 மில்லியன் முதல் ரூபா 1,428,467 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. 2021 ஆம் ஆண்டின் இறுதியில் நிலையான வைப்புக்கள்

வங்கியில் மொத்த வைப்புக்களில் 74.2 சதவீதம் ஆகும்.

- 2021 ஆம் ஆண்டில் கடன் மற்றும் ஏனைய உபகரணங்களில் முதலீடு 24 சதவீதத்தினால் அதாவது ரூபா 754.2 பில்லியன் முதல் ரூபா 935.4 பில்லியன் வரை அதிகரித்திருந்தது. மேற்கூறப்பட்ட அதிகரிப்பிற்கு மீளாய்வாண்டில் அரச சேமிப்பு பத்திரங்கள், இலங்கை அபிவிருத்தி பிணை முறி (SLDB), பிணை முறிகள் (திறைசேரி பிணை முறி) மற்றும் நிறுவன கடன் உபகரணங்களில் முதலீடுகள் காரணமாக இருந்தது.

- மீளாய்வாண்டின் போது வங்கியின் தரம் I மூலதன விகிதம் 13.65 சதவீதம் முதல் 18.6 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின் போது வங்கியின் மொத்த மூலதன விகிதம் 16.45 சதவீதம் முதல் 20.83 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

- 2016 ஏப்ரல் 29 ஆந் திகதிய PED/03/2016 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கைக்கு முரணாக கூட்டு உடன்படிக்கையின் பிரகாரம் வங்கியின் நிதியத்திலிருந்து தமது ஊழியர்களுக்காக உழைக்கும் போது செலுத்தும் வரி செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வங்கியால் 2021 ஆம் ஆண்டிற்காக உழைக்கும் போது செலுத்தும் வரியாக ரூபா 11.81 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

- தொகுதியினால் 2021 ஆம் ஆண்டிற்காக ரூபா 28,425 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபம் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அதனை கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 69 சதவீத அதிகரிப்பை பிரதிநிதித்துவப்படுத்தியது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது தொகுதியின் மொத்த சொத்துக்கள் 16 சதவீத அதிகரிப்பை பிரதிநிதித்துவப்படுத்தி ஆண்டின் இறுதியில் ரூபா 1,605,805 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மொத்த கடன் மற்றும் மொத்த வைப்புக்கள் 4 சதவீதத்தினாலும் 15 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது.

- 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது தொகுதியின் மொத்த மூலதன விகிதம் 18.3 சதவீதம் முதல் 36 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

- 2011 ஒக்தோபர் 05 ஆந் திகதிய வங்கிச் சட்டத்தின் 2011 வழிகாட்டியின் இலக்கம் 07 இன் பிரகாரம் உரிமம் பெற்ற வங்கிக்காக ஒன்றிணைந்த இடர் முகாமைத்துவ வேலை அட்டவணை (IRM Framework), 2014 யூன் 25 ஆந் திகதிய வங்கிச் சட்டத்தின் 2014 இன் வழிகாட்டி இலக்கம் 04 டீ (D) 2.9(அ)(7) திருத்தத்தின் பிரகாரம் சகல வங்கிகளும் 2015 யூலை 01 ஆந் திகதி முதல் தகவல் பாதுகாப்பு முகாமைத்துவத்திற்காக (Baseline Security Standard) அடிப்படை பாதுகாப்பு நியமத்தை அமுல்படுத்துதல் வேண்டும். எனினும் 2015 யூலை 01 ஆந் திகதி முதல் அமுல்படும் வகையில் தகவல் பாதுகாப்பு முகாமைத்துவத்திற்காக Baseline Security Standard (BSS) அமுல்படுத்துவதற்கு வங்கி தவறியிருந்தது. வங்கியின் தகவல் தொழில்நுட்ப திணைக்களம் BSS கொள்கை தயாரித்திருந்த போதிலும் ஒட்டுமொத்த வங்கி வலையமைப்பில் அதனை அமுல்படுத்துவதற்கு வங்கிக்கு

இதுவரை முடியாதிருந்தது. அந்த வழிகாட்டலின் கீழ் Baseline Security Standard கட்டுப்பாட்டு நோக்கங்கள் 95 பெறப்பட்டிருந்ததுடன் அதனிடையே 45 கட்டுப்பாட்டு நோக்கங்கள் மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

- 2021 யூலை 20 ஆந் திகதிய இலங்கை மத்திய வங்கி வழிகாட்டி இலக்கம் 02/2021 இன் 25 ஆம் பிரிவின் பிரகாரம் சகல நிதி நிறுவனங்களினாலும் (FI) நிலைப்படுத்தல், செயற்படுதன்மை, மேற்பார்வை, அறிக்கை வைத்துக் கொள்ளல், முறைமை பராமரிப்பு மற்றும் நிர்வாகம் தொடர்பிலான உள்ளக செயற்பாட்டு வழிகாட்டி விநியோகித்தல் மற்றும் அது AML/CFT (நிதி மோசடிக்கு எதிரான / பயங்கரவாத நிதி வழங்குதலுக்கு எதிரான பதிவிடல்) கொள்கையின் பகுதியாக பணிப்பாளர் சபையின் (BOD) அங்கீகாரத்துடன் மேற்கொள்தலும் கட்டாயமாகும். எனினும் மீளாய்வாண்டின் நிதியாண்டிற்காக இந்த தேவையை பூர்த்தி செய்வதற்கு வங்கி தவறியிருந்தது.

- Password Settings அதாவது கடவுச்சொல் தயாரித்தல் : (Polaris - Core Banking System) பொலறீஸ் ஒவ் பேங்கிங் சிஸ்டம் இல் பாவனையில் உள்ள 38 கணக்குகள் மற்றும் ICMS இன் 22 வாசகர்களின் கணக்குகள் நீண்டகாலமாக பயன்படுத்தப்படாதிருந்ததுடன் அது செயற்பாடற்றதாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தவறியிருந்தது.

- காப்பு மீட்பு பரிசோதனையில் (Backup Restoration & Testing) தகவல் பாதுகாப்பு கட்டுப்பாட்டு ஆவணங்களின் பிரகாரம் (Information Security Control Documents) மீளமைத்தல் (backup restoration) 04 மாதங்களுக்கு ஒரு தடவை மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட நிதியாண்டில் வங்கித் தரவு தொகுதி (Database) மற்றும் Polaris, AMS, DMS, HRPA, ICMS, Palmtop மற்றும் IB இற்காக காப்பு மீட்பு பரிசோதனை (backup restoration testing) மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- முதலீட்டு ஆதனங்கள் : கொழும்பு 13 ஸ்ரீ சங்கராஜ மாவத்தை கட்டிடத்தில் அமைந்துள்ள ரூபா 801 மில்லியன் பெறுமதியான முதலீட்டு ஆதனத்தின் உரித்து 2008 திசெம்பர் 31 ஆந் திகதி வங்கிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும் காணியின் வெற்று உரித்து கட்டிடப் பொருட்கள் திணைக்களத்தினால் (BMC) வங்கிக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. 2008 ஆம் ஆண்டு முதல் இந்தக் காணியின் வெற்று உரித்தை பெற்றுக்கொள்வதற்கு வங்கி முயற்சி எடுக்கின்றது. எனினும், 2022 யூலை 31 ஆந் திகதி வரையும் காணியின் வெற்று உரித்தை பெற்றுக்கொள்வதற்கு வங்கி தவறியிருந்தது.

- கடன் மற்றும் முற்பணம் - அமுல்படுத்தல் மற்றும் செயற்பாடற்ற கடன் (ஊழியர் சேமலாப நிதியத்திற்கு எதிரான கடன்) (EPF) மற்றும் குத்தகை வசதிகள் தவிர : 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவைக் கடன் மற்றும் முற்பண மீதி ரூபா 29,765 மில்லியன் ஆக இருந்ததுடன் அத்திகதி வரையில் செயற்பாடற்ற கடன் மற்றும் முற்பணம் ரூபா 7,549 மில்லியன் ஆக இருந்ததுடன்

அது மொத்த நிலுவை கடன் மற்றும் முற்பணத்தில் 25 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. மேலும் ரூபா 2,154 மில்லியன் கடன் (மொத்த நிலுவையில் 7.2 சதவீதம்) அவதானிப்பு நிலையின் கீழ் (Watch) வகைப்படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டதுடன் அதன் பின்னர் செயற்பாடற்ற நிலைமைக்கு உட்படுவதற்கான ஆபத்தும் காணப்பட்டது. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 67 நிறுவன கடன்களின் (**Corporate Loans**) நிலுவை மீதி ரூபா 1,378 மில்லியன் ஆகும். அதில் ரூபா 618 மில்லியன் (10 கடன்) 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் செயற்பாடற்ற கடன் தொகுதிக்கு மாற்றப்பட்டிருந்தது. மேலும் ரூபா 22 மில்லியன் கடன் காப்பு (Watch) இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதன் பின்னர் செயற்பாடற்ற நிலைமைக்கு உட்படும் அபாயமொன்று காணப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது.

- அரச நிறுவனங்களுக்காக வழங்கப்பட்டுள்ள கடன் : கம்பனியினால் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் கீழ் (SEC) உள்ள தேசிய இயந்திர உபகரண நிறுவனம் (NEMO) மற்றும் அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டுத்தாபனம் (SD&CC) போன்ற நிறுவனங்களுக்காக முறையே ரூபா 71.40 மில்லியன் மற்றும் ரூபா 84 மில்லியன் ஆக 02 கடன் வசதிகள் வழங்கப்பட்டிருந்தது. இந்த இரண்டு நிறுவனங்களினதும் கடன் வசதிகள் வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் இரண்டு ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்படாமையின் அடிப்படையில் தற்போது இந்த இரண்டு கடன்களும் செயற்பாடற்ற கடனின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய மொத்த தொகை ரூபா 118 மில்லியன் ஆகும்.

- ஒலிம்பஸ் நிர்மாணக் கம்பனி (Olympus construction Limited) : தொழில்படு மூலதனத் தேவைக்காக ஒலிம்பிஸ் நிர்மாணக் கம்பனி (110730000003) இனால் கோரப்பட்ட ரூபா 350 மில்லியன் கடன் வசதி 2019 யூன் 07 ஆந் திகதி காணப்பட்ட விசேட சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. முறையே 2019 யூலை 08 மற்றும் 2019 ஒக்தோபர் 28 போன்ற தினங்களில் அந்த கம்பனிக்கு ரூபா 100 மில்லியன் மற்றும் ரூபா 150 மில்லியன் கடன் வசதிகள் வழங்கப்பட்டிருந்தது. பின்னர் அது கையளித்தல் ஆரம்பக் கட்டத்தின் போது 2020 சனவரி 07 ஆந் திகதி செயற்பாடற்ற கடனின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவைப் பணம் ரூபா 298 மில்லியன் அறவிடப்படாமல் திகதி 785 நாட்கள் (Day Past Due) எடுத்திருந்தது. மேலும் 2021 மார்ச் 24 ஆந் திகதி வங்கியால் மேற்கூறப்பட்ட சொத்துக்கள் கையேற்கப்பட்டிருந்ததுடன் இதுவரையிலும் அதனை விற்பனை செய்வதற்கு வங்கிக்கு முடியாதிருந்தது.

- பிரதான 10 வைப்பாளர்கள் (Top Ten Depositors) : பிரதான பத்து வைப்பாளர்களின் மொத்த தொகை ரூபா 3,481 மில்லியனாக இருந்ததுடன் பிரதான 10 வைப்பாளர்களில் 28 சதவீதம் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் சமுர்த்தி நுண் நிதி வங்கி நிதியம் பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் அது ரூபா 973 மில்லியன் ஆகும். முன்னைய ஆண்டில் ஆகக்கூடிய 10

வைப்பாளர்களின் பெறுமதி ரூபா 6,344 மில்லியன் ஆக இருந்ததுடன் அது மீளாய்வாண்டில் ரூபா 3,481 மில்லியன் வரை 45 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

மேர்ச்சன்ட் பேங்க் ஒவ் ஸ்ரீலங்கா பினான்ஸ் பீஎல்சி

- மீளாய்வாண்டின் கம்பனியின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 529 மில்லியன் இலாபமாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 1,108 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவுகளில் 1,637 மில்லியன் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. ஆண்டு முழுவதும் காணப்பட்ட குறைந்த வட்டி நிலைமைக்கு எதிராக வட்டி வருமானம் 11.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமை, வட்டி செலவினம் 24.3 சதவீதத்தினால் குறைவடைந்ததன் அடிப்படையில் தேறிய வட்டி வருமானத்தில் ஏற்பட்ட 101 சதவீத அதிகரிப்பு இந்த நிதி விளைவின் அதிகரிப்பிற்கு காரணமாக இருந்தது. ஆண்டின் போது கம்பனியின் சொத்துக்களில் 6 சதவீத விளைவை காண்பித்து கம்பனியின் ஐந்தொகையில் 2021 திசெம்பர் இறுதி வரையில் ரூபா 34.3 பில்லியன் வரை அதிகரிததிருந்தது. கடன் மற்றும் முற்பணத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 5.2 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் அந்த சொத்துக்களின் அதிகரிப்புக்கு பிரதானமாக பங்களித்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வங்கி வைப்புக்கள் 2.5 சதவீத அளவினால் அதிகரித்திருந்தது.

- மூலதன இணக்கத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக கம்பனி 2021 ஆம் ஆண்டின் போது உரிமை ரூலதனத்தை விநியோகித்திருந்ததுடன் அதன் மூலம் ரூபா 2.15 பில்லியன் மூலதனம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கம்பனியின் ஒதுக்க மூலதனம் கடந்த ஆண்டில் காணப்பட்ட ரூபா 2.12 பில்லியன் முதல் ரூபா 4.27 பில்லியன் வரை அதிகரித்துக் கொள்வதற்கு கம்பனிக்கு முடியுமாக இருந்தது.

- 2020 ஆம் ஆண்டின் போது கம்பனியின் படிநிலை I மூலதனம் மற்றும் ஒட்டுமொத்த மூலதன விகிதம் முறையே 4.4 சதவீதம் மற்றும் 5.6 சதவீதம் ஆக இருந்ததுடன் அது இலங்கை மத்திய வங்கியின் ஆகக்குறைந்த ஒழுங்குபடுத்தல் தேவையினை விட குறைவான பெறுமதியை கொண்டிருந்தது. நடப்பாண்டின் போது உரிய மூலதன விநியோகித்தலுடன் ஏற்பட்ட மூலதன அதிகரிப்பின் காரணமாக படிநிலை I மூலதனம் மற்றும் ஒட்டுமொத்த மூலதன விகிதம் முறையே 10.75 சதவீதம் மற்றும் 11.33 சதவீதம் வரை அதிகரித்திருந்ததுடன் அது இலங்கை மத்திய வங்கியின் அகக்குறைந்த ஒழுங்குபடுத்தல் தேவையான 07 சதவீதம் மற்றும் 11 சதவீதத்தை விட அதிகரித்த பெறுமதியை எடுத்திருந்தது.

பிரதேச அபிவிருத்தி வங்கி

- 2020 ஆம் ஆண்டின் இறுதியின் போது 10.11 சதவீதமான மொத்த செயற்பாடற்ற கடன் விகிதம் 2021 ஆம் ஆண்டின் இறுதியில் 8.71 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. எனினும் உரிமம் பெற்ற விசேட வங்கிகளின் ஒட்டுமொத்த செயற்பாடற்ற கடன் விகிதம் 2021 ஆம் ஆண்டிற்காக 6.47 சதவீதம் ஆகும். மேலும் முன்னைய ஆண்டின் இறுதியுடன் ஒப்பிடும் போது மொத்த கடன் ரூபா 21.9

பில்லியனால் அதிகரித்திருந்த போதிலும் கடன் மற்றும் முற்பணங்களின் தரம் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக கட்டம் 2 இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட கடன் ரூபா 9.8 பில்லியனால் உயர்வடைந்திருந்தது.

- 2021 ஆம் ஆண்டிற்காக வங்கியின் சொத்துக்களின் நலன்கள் (ROA) 0.13 சதவீதமாக இருந்ததுடன் அது உரிமம் பெற்ற விசேட வங்கி பிரிவுகளுக்காக 1.31 சதவீதம் ஆக இருந்தது. உரிமம் பெற்ற விசேட வங்கித் துறைகளுக்காக 21.54 சதவீத விகிதத்துடன் ஒப்பிடும் போது 2021 ஆம் ஆண்டிற்காக வங்கியின் பங்குகளின் அடிப்படையில் உழைக்கப்பட்ட வங்கி பங்கின் அடிப்படையில் உழைத்த நலன்கள் (ROE) 1.99 சதவீதமாக அறிக்கையிடப்பட்டிருந்தது.

- வங்கி மற்றும் ஊழியர் சங்கங்களுக்கிடையே ஊழியர் சம்பள திருத்தங்களுக்காக ஒன்றிணைந்த கூட்டு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் பிரதேச அபிவிருத்தி வங்கி சம்பள திருத்தம் தீர்மானிக்கும் போது ஏனைய அரச வங்கிகளின் சம்பளம் திருத்தங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. எனினும், சொத்துக்களின் அடிப்படை, இலாப மட்டம், ஊழியர் எண்ணிக்கை மற்றும் கிளைகளின் எண்ணிக்கைக்கு சமமாக இல்லாதிருந்தமையால் அந்த வங்கிகளின் சம்பள திருத்தம் பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் ஒப்பீடு செய்ய முடியாதிருந்தது. மேலும் 2021 ஆம் ஆண்டிற்காக ஆளணி செலவினங்கள் வங்கியில் தேறிய செயற்பாட்டு வருமானத்தில் 66 சதவீதமாக இருந்ததுடன் ஏனைய அரச வங்கிகளுக்கிடையே ஆகக்கூடிய பெறுமதிய பிரதிநிதித்துவப்படுத்தியது. அவ்வாறே 2021 ஆம் ஆண்டிற்காக வங்கியினால் ஒரு ஊழியரிடமிருந்து உழைக்கப்பட்ட இலாபம் ரூபா 0.12 மில்லியன் அளவாக இருந்ததுடன் ஒரு ஊழியருக்காக ரூபா 2.82 மில்லியன் செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- ரூபா 129.02 பில்லியன் மீதியுடன் ரூபா 423,760 கடன் எண்ணிக்கை அல்லது 2021.12.31 இல் உள்ளவாறு மொத்த கடன் மீதியில் 77 சதவீதத்திற்கும் 1577 சதவீதத்திற்கும் குறைவான வட்டி விகிதத்தை கொண்டிருந்தது. எனினும் வட்டி விகிதத்தை உயர்வடையச் செய்வதுடன் நிலையான வைப்பு விகிதம் 20 சதவீதத்தை விட அதிகரித்திருந்ததுடன் அதன் விளைவாக தேறிய வட்டி வருமானத்திற்கு நேரடியாக இந்த தாக்கம் எதிர்காலத்தில் அறிக்கையிடப்பட முடியும்.

- வருமான வரி செலுத்துவதற்கு கடப்பாட்டுடன் உள்ள ஒவ்வொரு ஊழியர்களினதும் விருப்பத்தின் அடிப்படையில் வேலையிலிருந்து கிடைக்கின்ற வருமானம் மற்றும் இலாபங்களில் ஒவ்வொரு சேவை தருனரும் வருமான வரியை கழித்தல் அவசியமாகும். எனினும் 2016 ஏப்ரல் 29 ஆந் திகதிய PED 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு முரணாக வங்கியால் 2021 ஆம் ஆண்டிற்காக ரூபா 15.33 மில்லியன் உழைக்குமிடத்து கொடுப்பனவுகள் / APIT வரி உரிய ஊழியர்களின் சம்பளத்திலிருந்து கழிக்கப்படாமல் தமது ஊழியர்களுக்காக வங்கி செலுத்தியிருந்தது.

தேசிய பாதுகாப்பு

கணக்காய்வு அவதானிப்பு

- பாதுகாப்பு படை தலைமையகத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டம
- தந்திரோபாய வழியிலான தொடர்பாடல் வலையமைப்பு செயற்திட்டம்
- சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகம்
- தேசிய பாதுகாப்பு நிதியம
- நமக்காக நாம் நிதியம்
- இலங்கை விமானப் படை
- ரணவிரு சேவா அதிகாரசபை
- பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலை கல்லூரி
- இலங்கை இராணுவப் படை
- சிவில் பாதுகாப்புத் திணைக்களம்
- இலங்கை கடற்படை
- இலங்கை கரையோர பாதுகாப்பு திணைக்களம்
- வரையறுத்த ரக்னா லங்கா பாதுகாப்பு கம்பனி
- மெட்ரோபொலிடன் கெம்பஸ் பிணையால் வரையறுக்கப்பட்ட கம்பனி

தேசிய பாதுகாப்பு

பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதன் கீழ் 06 திணைக்களங்கள் மற்றும் 03 நியதிச்சட்ட சபைகள்/ நிறுவனங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளதுடன் நேரடியாக நாட்டின் பாதுகாப்புடன் தொடர்புபட்ட திணைக்களங்களினால் பின்வரும் செயற்பாடுகளும் கடமைகளும் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது.

- உள்நாட்டு கலகங்கள், பயங்கரவாத செயற்பாட்டு அச்சுறுத்தல், மற்றும் வெளியக தாக்கங்களிலிருந்து பாதுகாத்தல்.

- கடல் எல்லையை மீறி இடம்பெறுகின்ற சட்ட விரோத பொருள் மற்றும் சேவை வியாபாரத்தை தடுத்தல்.

- போதைவஸ்து பேராபத்திலிருந்து விடுதலை பெற்ற ஒரு நாட்டை உருவாக்குவதற்காக போதைப் பொருள் நாட்டுக்குள் வருவதனை தடுத்தல், போதைப்பொருள் பேராபத்தினைக் கட்டுப்படுத்துதல், போதைப் பொருள் பேராபத்திற்கு உட்படுவதனைத் தடுத்தல், மற்றும் போதைப் பொருள் பேராபத்திற்கு உள்ளாக்கியவவர்களின் புனர்வாழ்வுக்காக தொடர்புபட்ட சனாதிபதி அதிரடிபடையணியுடன் ஒருங்கிணைந்து செயற்படல்.

- கிராமிய சமூக பாதுகாப்பு மற்றும் நலன்புரிக்காக சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினை வலுப்படுத்துதல்.

- பல்நோக்கு அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக வறிய குடும்பங்களின் தொழில் மற்றும் வாழ்வாதார பங்களிப்புக்களை அதிகரிக்கும் வகையில் வறுமை ஒழிப்புச் செயற்பாடுகளுக்காக, அதேபோல ஏனைய அபிவிருத்தி துறைகளுக்காக பல்நோக்கு அபிவிருத்தி செயலாற்றல் படையணிக்கு அனுப்பிவைத்தல்.

2021 ஆம் ஆண்டின் போது மேலே குறிப்பிட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக அமைச்சு மற்றும் 06 திணைக்களங்களுக்கு ரூபா 348,065 மில்லியன் மொத்த தொகையான நிதி ஏற்பாடு பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன் மிளாய்வாண்டின் இறுதிவரை அவற்றில் ரூபா 316,727 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரம் உரு 21 இல் தரப்படுகின்றது.



	பாதுகாப்பு அமைச்சு	இலங்கை இராணுவம்	இலங்கை கடற்படை	இலங்கை விமானப்படை	சிவில் பாதுகாப்புத் திணைக்களம்	இலங்கை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம்	மொத்தம்
தேறிய நிதி ஏற்பாடு ரூபா மில்லியன்	24870	183437	63078	57140	19183	357	348065
செலவினம் ரூபா மில்லியன்	20693	178986	57264	41737	17735	312	316727
சேமிப்பு ரூபா மில்லியன்	4177	4451	5814	15403	1448	45	31338

உரு 21 - வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாட்டின் அளவு மற்றும் செலவினம் மூலம் - 2021 இன் வருடாந்த நிதிக்கூற்றுக்கள்

மேலே குறிப்பிட்ட கடமைகளை நிறைவேற்றுவது சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிபாக்கி கீழே தரப்படுகின்றன.

பாதுகாப்பு படை தலைமையகத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டம்

- பாதுகாப்பு படை தலைமையகத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் 02 இலிருந்து 07 வரையான முன்னைய கட்டங்கள் தொடர்பாக 275 ஒப்பந்த செயற்பாடுகளை ரூபா 13,349 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தில் மீளாய்வாண்டில் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அச்செயற்பாடுகளில் 85 செயற்பாடுகள் தொடர்பாக எதுவித பௌதீக செயல்முன்னேற்றமும் அவதானிக்கப்படாததுடன் 58 செயற்பாடுகளின் பௌதீக செயல்முன்னேற்றம் 1 சதவீதத்திலிருந்து 30 சதவீதம் வரையான குறைந்த பெறுமதியில் காணப்பட்டது.

- மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் இடம்பெற்றிருந்த தீப்பிடித்தல்களின் காரணமாக முப்படை தலைமை அலுவலக செயற்திட்டத்திற்குரிய ரூபா 14.27 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் சேதமடைந்திருந்ததுடன் அது சம்பந்தமாக பொறுப்புக்கூறக்கூடிய தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்தல் தாமதமடைந்து காணப்பட்டது.

- பாதுகாப்பு படை தலைமை அலுவலகத்தை நிர்மாணிக்கும்

செயற்திட்டத்தின் நிர்மாணங்களின் தாமதங்கள், நாணயக் கடிதத்தை திறப்பதில் தாமதம் முதலிய காரணங்களால் எதிர்பார்த்த காலத்திற்குள் ஒப்பந்தத்தை பூர்த்திசெய்வதற்கு முடியாமையின் அடிப்படையில் ஒப்பந்த கால எல்லையை நீடிக்க வேண்டி ஏற்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை அவ்வாறான 05 வழங்கல் ஒப்பந்தக்காரர்களால் ரூபா 1,126.14 மில்லியன் மற்றும் ஐக்கிய குடியரசு டொலர் 1.61 மில்லியன் தொகையான கால நீடிப்புச் செய்வதற்கான 24 பணக் கோரிக்கைகள் (Claims for EOT) வேண்டப்பட்டிருந்தன.

தந்திரோபாய வழியிலான தொடர்பாடல் வலையமைப்பு செயற்திட்டம்

தொடக்க திட்டத்தின் பிரகாரம் தந்திரோபாய வழியிலான பாதுகாப்பு தொடர்பாடல் வலையமைப்பு செயற்திட்டமானது 2016 ஆம் ஆண்டின் போது நிர்மாணங்களை முடிவுறுத்துவதற்கு உத்தேசித்திருந்தும் செயற்திட்ட கால எல்லை 06 ஆண்டுகளால் நீடிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியளவில் காணப்பட்ட ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதிசார் செயல்முன்னேற்றம் 73 சதவீதம் மற்றும் 53 சதவீதமாகும்.

இச்செயற்திட்டத்திற்காக நுண் அலை ஒலி பரப்பு தொடர்பாடல் முறைமையை கொள்வனவு செய்யும் பெறுகைச் செயற்பாடு 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பெறுகை மேன்முறையீட்டு குழு கட்டத்தில் காணப்பட்டது. அதன் காரணமாக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 38.54 மில்லியன் தொகையான 22 மின்பிறப்பாக்கி இயந்திரங்கள் மற்றும் 2020 ஆம் ஆண்டின் போது வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த ரூபா 562.16 மில்லியன் கிரயமான 11 தொலைத் தொடர்பு கோபுரங்களும் ஏனைய நிர்மாணங்களும் சம்பந்தமான செயற்பாடுகள் தாமதமடைந்ததன் காரணமாக பயன்படுத்தப்படாது காணப்பட்டன. அதற்கிணங்க செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்த்த இராணுவ சேவைகளுக்கிடையிலான ஒன்றிணைந்த தந்திரோபாய தொடர்பாடலினை பேணும் தொடக்க குறிக்கோளினை உரிய காலத்தில் நிறைவேற்றுதல் இன்னும் தாமதமடைந்து காணப்பட்டது.

சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகம்

பயிற்சி உத்தியோகத்தர்கள், உத்தியோகத்தர்கள், அரசாங்க ஊழியர்கள் மற்றும் முதலாவது பட்டப்படிப்பிற்காக ஆயத்தமாகின்ற ஏனைய எந்த நபருக்கும் கல்வி நடவடிக்கைகளுக்காக வசதிகளையும் ஆலோசனைகளையும் வழங்குதல், உத்தியோகத்தர்களுக்கும் பயிலுனர்களுக்கும் இடையே சகோதரத்துவத்தையும் சிறந்த உள அபிவிருத்தியினையும் ஏற்படுத்துதல், பட்டப்படிப்பு டிப்ளோமா மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல் மற்றும் கல்கலைக்கழகம் தமது குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக தேயான ஆராய்ச்சிகளையும் அபிவிருத்திகளையும் உள்ளடக்கிய ஏனைய செயற்பாடுகளை நிறைவேற்றுதல் முதலிய குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக 1981 இன் 68 ஆம் இலக்க ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல அரசாங்க பாதுகாப்பு பயிற்சி நிறுவன அதிகாரச் சட்டத்தின் மூலம் தோற்றுவிக்கப்பட்டது.

- பல்கலைக்கழகத்தினால் கற்கை நெறிக் கட்டணத்தை உரிய காலத்தில் அறவிடாமையின் காரணமாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 04

ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 45.97 மில்லியன் தொகையான கற்கை நெறி கட்டணங்களும், வெளிநாட்டு மாணவர்களுக்கான உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்குவதற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 10.82 மில்லியன் மற்றும் ஐக்கிய குடியரசு டொலர் 118,107 தொகையும் 01 ஆண்டிற்கும் 04 ஆண்டுகளுக்குமிடைப்பட்ட காலம் நிலுவையாகக் காணப்பட்டது.

- பிணைமுறி நிபந்தனைகளுக்கு இணங்கியிருந்த 76 பல்கலைக் கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், மற்றும் ஏனைய பதவியணி அங்கத்தவர்களினால் அந்த பிணை முறி நிபந்தனைகளை மீறியதன் காரணமாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 75.03 மில்லியன் பணம் அறவிடவேண்டியிருந்தது. இப்பிணை முறி நிபந்தனையை மீறியமை தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் அதன் அடிப்படையில் உருவாக்கிய இணக்கப்பாட்டின் பிரகாரம் அறவிட வேண்டிய பணத்தை தாமதமின்றி அறவீடு செய்வதற்காக திருப்தியான நடைமுறையோ அல்லது பின்தொடர் நடவடிக்கையோ பின்பற்றப்பட்டிருக்காததுடன் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது பிணை முறி மீறல்களின் எண்ணிக்கை நான்கு மடங்கால் அதிகரித்திருந்தது.

- மீளாய்வாண்டின் இறுதியளவில் பல்கலைக் கழகத்தின் தெற்கு மண்டபம் ஸ்தாபிக்கப்பட்டு 07 ஆண்டுகள் காலம் கடந்திருந்த போதிலும் மண்டபத்தினால் பயன்படுத்தப்படுகின்ற 7.6883 ஹெக்டயர் காணிப் பகுதியினை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- மேலும் ரூபா 32,318 மில்லியன் கிரயத்தில் பல்கலைக் கழகத்தின் போதனா வைத்தியசாலைக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்த 21.5815 ஹெக்டயர் காணியின் சட்டரீதியான உரிமையானது மீளாய்வாண்டின் இறுதி வரை பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டில் நிர்மாணங்கள் முடிவடைந்து 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் உரிய காணியை சுவீகரிக்கும் மிகுதிச் செயற்பாடுகள் முடிவடைந்திருக்கவில்லை. எனவே நிதிக்கூற்றுக்களில் இக்காணியின் பெறுமதி வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- போதனா வைத்தியசாலையின் கதிர்வீச்சு திணைக்களத்தின் அங்கீகரித்த பதவியணியில் மருத்துவ உத்தியோகத்தர்கள் மற்றும் கதிர்வீச்சு நிபுணர்கள் பதவியினை உள்ளடக்கிய 31 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டதன் காரணமாக மார்புப் புற்று நோயை இனங்காணும் பிரிவு (Breast Health Center) மற்றும் கதிர்வீச்சு மருத்துவ சிகிச்சைப் பிரிவு (Nuclear Medicine) ஆகிய பிரிவுகள் சிகிச்சை சேவைகளுக்காக ஆரம்பிக்கப்பட்டமையால் அதற்காக ஒதக்கீடு செய்யப்பட்ட வளவினையும் கொள்வனவு செய்யப்பட்ட மனைப் பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களையும் வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

தேசிய பாதுகாப்பு நிதியம்

- தேசிய பாதுகாப்பு நிதியத்தினால் 2021 ஆம் ஆண்டில் 150 ரணவிரு குடும்பங்களுக்காக வீடுகளை நிர்மாணிக்கும் உதவிப் பணமாக ரூபா 105.98 மில்லியனை மூன்று தவணைப் பணங்களின் கீழ் செலுத்தி முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் 2021 ஆம் ஆண்டில் எந்த தவணைப் பணத்தையும் செலுத்துவதற்கு நிதியத்திற்கு முடியாதிருந்தது.

- மரணமடைந்த மற்றும் ஊனமுற்ற இராணுவ வீரர்களின் 2019 ஆம் ஆண்டில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் சித்தியடைந்த 137 மாணவர்களுக்கான ரூபா 25,000 படியான புலமைப்பரிசிலினை வழங்குதல் 15 மாதங்கள் காலதாமதமடைந்திருந்தன. மேலும் 2020 ஆம் ஆண்டில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 130 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் நடவடிக்கையினை 2021 ஆம் ஆண்டின் யூன் 30 ஆந் திகதியளவில் முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் 2022 ஏப்ரல் 25 ஆந் திகதி வரை புலமைப் பரிசிலினை வழங்க முடியாதிருந்தது.

- நிதியத்தின் இரண்டு நிலையான வைப்புக்கள் முதிர்ச்சியடைந்து 37 நாட்களிலிருந்து 45 நாட்கள் வரையான காலம் தாமதித்து மீள் முதலீடு செய்திருந்தமையின் காரணமாக ரூபா 3.49 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

நமக்காக நாம் நிதியம்

இராணுவ சேவைகளின் அங்கத்தவர்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்காக அல்லது வீடுகளைக் கொள்வனவு செய்வதற்காக கடன் வழங்குதல், நிதி நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடனைச் செலுத்துவதற்காக உதவி வழங்குதல் மற்றும் ஒரு அங்கத்தவர் மரணமடைந்தால் அல்லது முழுமையாக ஊனமுற்றால் கடனை மீளச் செலுத்துவதனை உறுதிப்படுத்துதல் ஆகிய விடயங்களுக்காக ஒழுங்குவிதிகளை வழங்கும் வகையில் 2008 இன் 6 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தின் மூலம் நமக்காக நாம் நிதியம் தோற்றுவிக்கப்பட்டது.

- நிதியத்தினால் அரை வீடமைப்பு உதவி செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது 299 வீடுகளுக்காக ரூபா 209.74 மில்லியன் உதவிப்பணத்தை 03 தவணைகளின் கீழ் செலுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் போது 02 வீடுகளுக்கான முதலாவது தவணைப் பணமாகிய ரூபா 448,833 மாத்திரம் செலுத்தப்பட்டிருந்ததுடன் எந்தவொரு வீட்டிற்காகவும் இரண்டாவது மற்றும் மூன்றாவது தவணைப் பணங்கள் செலுத்தப்பட்டிருக்கவில்லை. எனவே வருடாந்த திட்டத்தின் பிரகாரம் எதிர்பார்த்த நிதிசார் செயலாற்றலும் பௌதீக செயலாற்றலும் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டன.

- முழுமையான வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது 27வீடுகளுக்காக 3 தவணைகளில் ரூபா 43.07 மில்லியன் உதவிப் பணத்தை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் ஆண்டின் போது ஒரு வீட்டிற்காக 03 தவணைப் பணங்களும் 02 வீடுகளுக்காக 02 தவணைப் பணங்களும் ஒரு வீட்டிற்கு

ஒரு தவணைப் பணமும் வீதம் ரூபா 3.99 மில்லியன் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. அது ஆண்டில் செலுத்துவதற்குத் திட்டமிடப்பட்ட பணத்தின் சதவீதமாக எடுத்துக் கொள்கையில் 9 சதவீதம் ஆகிய மிகவும் குறைந்த மட்டமாகும்.

இலங்கை விமானப் படை

- 2004 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டுவரையான காலத்தில் 37 சந்தர்ப்பங்களின் போது வெளிநாட்டில் திருத்தம் செய்வதற்காக அனுப்பிவைக்கப்பட்ட 72 விமான உதிரிப்பாகங்கள் 7 ஆண்டுகளுக்கும் 17 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக விமானப் படைக்கு மீண்டும் கிடைத்திருக்கவில்லை. இந்த விமான உதிரிப்பாகங்களின் வணிகப் பெறுமதியை கவனிக்கும் போது 55 விமான உதிரிப்பாகங்களின் திருத்திய பெறுமதி ஐக்கிய அமெரிக்க குடியரசு டொலர் 130,525.28 தொகையும் 05 விமான உதிரிப்பாகங்களின் புதிதாக கொள்வனவு செய்யும் பெறுமதி ஐக்கிய அமெரிக்க குடியரசு டொலர் 536,000 தொகையும் 05 விமான உதிரிப் பாகங்களின் எச்சப் பெறுமதி ஐக்கிய அமெரிக்க குடியரசு டொலர் 17,997 தொகையுமாக மொத்தமாக ஐக்கிய குடியரசு டொலர் 138.27 மில்லியன் ஆக அதிக பெறுமதியில் காணப்பட்டது.

- நிதிப்பிரமாணம் 128 (1) (ஆ) இன் பிரகாரம் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை சரியாக நிர்ணயிப்பதுவும் முழுமையாக அறவீடு செய்வதுவும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். கட்டுநாயக்கா விமானப் படை முகாமில் காணப்பட்ட 15 அரசாங்க கட்டிடங்களை வெளித்தரப்பினர்களுக்கு வழங்குகையில் அரசாங்கத்தின் பிரதம மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட மாதாந்த வாடகையை அறவீடு செய்யும் போது இலங்கை விமானப் படையின் நிருவாகப் பணிப்பாளரின் ஆலோசனையின் பிரகாரம் அதற்குரிய உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதியில் ஒரு பகுதி அரசாங்கத்தின் வருமானமாகவும் மிகுதிப்பகுதி அரசசார்பற்ற நிதியாகவும் (Non Public Fund) ஏனைய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டதன் காரணமாக 2021 சனவரியிலிருந்து நவம்பர் வரையான காலத்தில் மொத்தமாக ரூபா 11.6 மில்லியன் வருமானம் அரசாங்கத்தினால் இழக்கப்பட்டிருந்தது.

- தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.2 ஆம் பந்தியின் பிரகாரம் பட்டியல்ப்படுத்தப்பட்ட வீடுகளை பெற்றுக்கொள்வதற்கு தகமையற்ற திருமணம் செய்த உத்தியோகத்தர்களின் சம்பளத்தில் 12 ½ சதவீதம் அறவிடப்பட வேண்டிய போதிலும் கொழும்பு விமானப் படை முகாம் மற்றும் கட்டுநாயக்கா விமானப் படை தொடக்க முகாமிற்குரிய உத்தியோகத்தர்களிடம் வீட்டு வாடகையை அறவீடு செய்யும் போது அந்த பணிப்புரைகளுக்கு மாற்றமாக பட்டியல்ப்படுத்தப்பட்ட வீடுகளுக்கு தகமையற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து பொருளாதார வாடகை 10 சதவீதம் அறவிட்டமையின் காரணமாக விமானப் படையின் கொழும்பு முகாமிலுள்ள 221 உத்தியோகத்தர் வீடுகளுக்காக 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 3.63 மில்லியன் தொகையும் கட்டுநாயக்கா விமானப் படையின் தொடக்க முகாமிலுள்ள 302 வீடுகளுக்காக 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 12.64 மில்லியன் தொகையுமான

வீட்டு வாடகை அரசாங்கத்தினால் இழக்கப்பட்டிருந்தது.

- இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை 128 (2)(உ) இன் பிரகாரம் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டியிருந்த நிலுவை வருமானங்களை தாமதமாக சேகரித்தமை சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும் இலங்கை விமானப் படைக்கு மீளாய்வாண்டின் இறுதியளவில் 10 அரசாங்க நிறுவனங்களிடமிருந்தும் 02 தனியார் நிறுவனங்களிடமிருந்தும் அறவிட வேண்டிய மொத்தமாக ரூபா 12.67 மில்லியன் தொகையான ஆகாய விமான வாடகை வருமானம் 3 ஆண்டுகளிலிருந்து 18 ஆண்டுகள் வரையான கால தாமதத்துடன் நிலுவையாகக் காணப்பட்டது.

ரணவிரு சேவா அதிகாரசபை

இராணுவப் படையிலும் பொலிஸ் படையிலும் ஊனமுற்ற நிலைக்கு உள்ளாகியிருந்த அங்கத்தவர்கள் செயற்பாட்டின் போது மரணமடைந்த அல்லது தேடிக்கண்டுபிடிக்க முடியாதிருந்த இராணுவ படைகளின் மற்றும் பொலிஸ் படையின் அங்கத்தவர்களில் தங்கியிருப்போர்களின் நலன்புரியை மேம்படுத்துதல் அதிகாரசபையின் தொடக்க குறிக்கோளாகும்.

- ஊனமுற்ற இராணுவ வீரர்களுக்கு கேட்டல் உபகரணங்களை கொள்வனவு செய்யும் போது ரூபா 2.51 மில்லியன் பெறுமதியான Cochlear Implant replacement எனும் பெயருடைய உபகரணத்தை வழங்குவதற்காக பெறுகை நடைமுறைகளை மீறி ஒரு நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கேள்வி மாத்திரம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. இந்த கேட்டல் உபகரணத்தை கொள்வனவு செய்தல் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டு மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்த தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டு பெறுகைக் குழுவின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வெளிப்படைத் தன்மையுடன் இடம்பெற்றிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலை கல்லூரி

இராணுவ படைகளின் உத்தியோகத்தர்களது உரிய சேவைகளின் பொருத்தமான நியமங்கள் மற்றும் பதவியுயர்வுகளுக்காக அவர்களை ஆயத்தப்படுத்துவதற்கும் அறிவினை வழங்குவதற்கும் பதவிநிலைக் கல்லூரியில் பயிற்றுவிப்பதற்குமாக தெரிவு செய்யப்படுகின்ற அந்த உத்தியோகத்தர்களின் தொழில்சார் அறிவு மற்றும் புரிந்துணர்வினை மேம்படுத்தல் பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலை கல்லூரியின் குறிக்கோளாகும்.

- கல்லூரியின் கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா 133 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட நான்கு மாடி நூல் நிலையம் மற்றும் பரீட்சை மண்டப கட்டிடத்தில் நீர் கசியும் சிக்கலினால் மேல் மாடியில் மின்சார முறைமைக்கும் சுவர்களுக்கும் அதிகளவு பாதிப்பு ஏற்பட்டிருந்ததுடன் புனரமைப்புச் செய்யும் நடவடிக்கை மேற்கொள்வதற்கு 2019 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை முடியாதிருந்தது. இந்நிலைமையானது

கல்லூரியின் குறிக்கோள்களை நிறைவேற்றுவது தொடர்பாக பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது.

இலங்கை இராணுவப் படை

இலங்கை இராணுவப் படையின் செயற்பாடுகளுக்காக 2021 ஆம் ஆண்டில் செலவு செய்யப்பட்ட ஒட்டுமொத்த மீண்டுவரும் செலவு ரூபா 173 பில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 80 பில்லியன் சம்பளக் கொடுப்பனவுக்காக செலவு செய்யப்பட்டிருந்தது. இந்த மீண்டுவரும் செலவுகளை மேற்கொள்வதிலிருந்து வெளிப்படுத்தப்பட்ட பொருண்மையான சில விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

- கடந்த ஆண்டுகளின் தேவைப்பாட்டினை முறைப்படியாக இனங்காணாது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3.37 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள், காகிதாதிகள், மின்சார உபகரணங்கள், கவர் அவுடர்கள், பெற்றரிகள், என்பன நீண்டகாலமாக பயன்படுத்தப்படாது வைத்திருக்கப்பட்டதனால் காலாவதியாகியமை அல்லது பயன்படுத்துவதற்கு பொருத்தமற்ற நிலைக்கு மாறியதனால் 27 வகையான பொருட்களின் 353 பொருள் விடயங்களை கைதவிர்ப்புச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது.

- இராணுவப் படையினால் பயன்படுத்தப்படுகின்ற ஓடும் நிலையில் காணப்படுகின்ற 2,464 வாகனங்கள் தொடர்பாக மீளாய்வாண்டில் அல்லது முன்னைய ஆண்டுகளில் எரிபொருள் பரீட்சிப்பு இடம்பெற்றிருக்காததுடன் போக்குவரத்துப் பிரிவினால் தீர்மானிக்கப்பட்ட எரிபொருள் நுகரப்படும் அளவுக்கு இணங்க ஓட்ட அட்டவணைகள்/ போக்குவரத்து பயண அனுமதிப் பத்திரங்களில் எரிபொருளை சமப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- மூன்று ஆண்டுகள் காலத்திற்காக எதிர்பார்த்த பெறுகை நடவடிக்கைகளுக்காக பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டிற்காக ரூபா 36.59 பில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்துடன் தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டத்தில் பெறுகை செய்யப்படுகின்ற பொருட்கள் அல்லது சேவைகளின் அலகுகள் காட்டப்பட்டிருக்கவில்லை.

- சமாதான செயற்பாட்டு கடமைகளுக்காக மாலி இராச்சியத்தில் ஸ்தாபிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட 685 படையினர்களுக்கு தேவையான பொருட்கள் மற்றும் இராணுவமற்ற வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இந்த கொள்வனவு செய்யப்பட்ட போக்குவரத்து மற்றும் ஏனைய உபகரணங்களுக்கு மத்தியில் பெறுமதி வெளிப்படுத்தப்பட்ட ரூபா 1.38 பில்லியன் தொகையான போக்குவரத்து மற்றும் உபகரணங்களும் பெறுமதி வெளிப்படுத்தப்படாத இன்னும் போக்குவரத்து மற்றும் உபகரண இருப்புக்களும் பயன்படுத்தப்படாது நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

- பயங்கரவாத தாக்குதலின் காரணமாக ஆயுதங்கள் உள்ளடங்கலாக இராணுவப் படையின் பல்வேறு சொத்துக்களுக்கு இடம்பெற்ற ரூபா 13.78 பில்லியன் தொகையான 125 நட்டங்கள் மற்றும் 497 வாகன விபத்துக்கள் தொடர்பாக இடம்பெற்ற ரூபா 282.05 மில்லியன் நட்டங்களாக ரூபா 14.06 பில்லியன்

மொத்த தொகையான ஆண்டு இறுதி மீதி காணப்பட்டதுடன் இந்த நட்டங்கள் சேதங்களுக்கு 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 119 சம்பவங்கள் தொடர்பான ரூபா 840.7 மில்லியன் நட்டமும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 263 சம்பவங்கள் தொடர்பான ரூபா 12.99 பில்லியன் நட்டமும் காணப்பட்டது. இந்த மீதியை அறவீடு செய்தல் அல்லது பதிவழித்தல் தாமதத் தன்மையுடையதாகக் காணப்பட்டது.

சிவில் பாதுகாப்புத் திணைக்களம்

- நாட்டிற்குள் உருவாகியுள்ள பாதுகாப்பு நிலைமையின் பிரகாரம் தேவைப்பாட்டிற்குப் பொருத்தமான வகையில் இராணுவ சேவைகளுக்கும் பொலிஸ் சேவைகளுக்கும் உதவிகள் மற்றும் சலுகைகள் செய்வதற்காக மேலதிக படையாக செயற்படுதல், பயங்கரவாத அச்சுறுத்தல் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அதற்கு உள்ளாகும் கிராமங்கள் மற்றும் நகரங்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், நாட்டிற்குள் சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாக்கும் செயற்பாட்டிற்காக இராணுவப் படைக்கும் பொலிஸாருக்கும் உதவியளித்தல், தேசிய முக்கியத்துவம் உள்ள விழாக்கள் மற்றும் ஏனைய முக்கியமான சந்தர்ப்பங்களின் போது அது தொடர்பாக பாதுகாப்பினை வழங்கும் செயற்பாடுகளில் ஈடுபடுதல் மற்றும் நாட்டில் ஏற்படுகின்ற பல்வேறு இடர் (வெள்ளம், மண்சரிவு, சுனாமி) ஆகிய சந்தர்ப்பங்களில் அவற்றினை தணிக்கும் செயற்பாடுகளுக்கு உதவியளித்தல் ஆகிய செயற்பாடுகளை சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பிரதான குறிக்கோளாக இருந்த போதிலும் சிவில் யுத்த நிலைமையின் பின்னர் சிவில் பாதுகாப்பு படையினர் நாட்டின் ஒவ்வொரு பிரதேசத்திலும் இடம்பெறுகின்ற அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக இணைத்துக் கொள்ளப்பட்டு கமத்தொழில், பாதுகாப்பு கைத்தொழில், கால்நடை வளர்ப்பு, கைப்பணி உற்பத்தி செயற்திட்டம், மத்திய மற்றும் சிறிய அளவிலான நிர்மாணங்கள், டெங்கு கட்டுப்பாடு, போதை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், தேசிய கல்வி கலாச்சார நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்தல் முதலிய நிகழ்ச்சித்திட்டங்களிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எவ்வாறாயினும் இது சம்பந்தமாக முறையான மனிதவலு அபிவிருத்தி திட்டம் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

- ரூபா 17.67 மில்லியன் செலவு செய்து (Green House) பசுமையான மிளகாய் பயிர்ச்செய்கை செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்காக பொருட்களையும் உபகரணங்களையும் பெறுகை செய்யும் போது கேள்விகளை திறத்தல், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு சிபாரிசுகளை வழங்குதல், பெறுகைக் குழு தீர்மானத்தினை வழங்குதல், பொருட்களை கட்டளையிடல் ஆகிய பெறுகை நடவடிக்கைகளுக்கு முன்னர் களஞ்சியத்திற்கு பொருட்கள் கிடைத்திருந்ததுடன் மிகவும் விரைவாக உரிய பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தமையால் ரூபா 3.23 மில்லியன் பணம் மிகையாக செலவு செய்து கொள்வனவு செய்த பொருட்கள் மற்றும் உபகரணங்கள் பயன்படுத்தப்படாது ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் இச்செயற்திட்டம் இன்றுவரை அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- 3,300 சிவில் பாதுகாப்பு படையினர் மின்சார வேலிகளை (யானைவேலி) பராமரிப்பதற்காகவும் 845 படையினர் காட்டு யானைகளை துரத்துவதற்காகவும், 389 படையினர் வனசீவராசிகள் அலுவலக செயற்பாடுகளுக்காகவும் ஆக 4,534 படையினர் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். இலங்கையில் தற்பொழுது நிர்மாணிக்கப்பட்டுள்ள முழு யானை வேலிகளின் அளவு 4,756 கிலோ மீற்றராக இருந்ததுடன் இதில் 4,725 கிலோ மீற்றர் அல்லது 99 சதவீதமானவை சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக உரிய இரண்டு திணைக்களங்களும் ஒருங்கிணைப்புச் செய்யும் முறைமை அல்லது ஒத்த சேவைகளை வழங்குகின்ற முறைமை தொடர்பாகவும் பணம் ஒதுக்கீடு செய்யப்படுகின்ற முறைமை தொடர்பாகவும் பொது இணக்கப்பாடு ஏற்படுத்திக்கொள்ளப்படவில்லை. காட்டு யானைகளை துரத்துவதற்காக வருடாந்தம் ரூபா 427 மில்லியனுக்கு அதிக சம்பளமும் படிகளும் செலவு செய்து 845 சிவில் பாதுகாப்பு படையினர் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அப்படையினருக்கு அது சம்பந்தமாக முறையான பயிற்சி வழங்கப்பட்டிருக்கவில்லை. 2010 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை இலங்கையில் யானை வேலிகளை நிர்மாணிப்பதற்காக செலவு செய்யப்பட்ட மொத்த மூலதனச் செலவு ரூபா 1.64 பில்லியனாக இருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டுவரை யானை வேலிகளை பராமரிப்பதற்காக உத்தியோகத்தர்களின் சம்பளங்களை உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவு ரூபா 1.16 பில்லியனாக இருந்தது. உரிய காலப்பகுதியில் யானை மனிதர் பிரச்சினையின் காரணமாக 989 மனிதர்களும் 3,646 யானைகளும் மரணமடைந்துள்ளதுடன் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் அண்மித்த ஆண்டுகளில் இடம்பெற்ற உயிர் இழப்புக்கள் அதிகரித்திருந்த போதிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ள சிவில் பாதுகாப்பு படையினருக்கு இந்நிலையை கட்டுப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

இலங்கை கடற்படை

தேசிய பாதுகாப்பு மற்றும் தேசிய தேவைப்பாடுகளுக்காக தேசிய கொள்கைகளுக்கு இணங்க கடல் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக கடல்சார் செயற்பாடுகளை மேற்கொள்ளும் செயற்பணியை குறிக்கோளாகக் கொண்டு இலங்கை கடற்படையினால் நாடு முழுவதனையும் உள்ளடக்கும் வகையில் கடல் 07 பிரிவுகளாக பிரித்து ஒதுக்கப்பட்டு நிருவாகம் மேற்கொள்ளப்படுவதுடன் 2021 ஆம் ஆண்டின் போது மேலே குறிப்பிட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக இலங்கை கடற்படை மற்றும் இலங்கை கரையோர பாதுகாப்பு திணைக்களத்திற்கு முறையே ரூபா 63,078 மில்லியன் மற்றும் ரூபா 357 மில்லியன் ஆக பாராளுமன்றத்தினால் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் முறையே 57,264 மில்லியன் மற்றும் ரூபா 312 மில்லியனாக பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க காலப்பகுதிக்குள் பாரர்ளுமன்றம் வழங்கிய நிதி ஏற்பாடுகளில் முறையே ரூபா 5,814 மில்லியன் மற்றும் ரூபா 45 மில்லியன் அதாவது 9 சதவீதம் மற்றும் 12 சதவீதமாக நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

- இலங்கை கடற்படையினால் பயன்படுத்தப்படுகின்ற ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்குச் சொந்தமான

காணிகளின் அளவு 435.4223 ஹெக்டயர்களாக இருந்ததுடன் அக்காணிகளைப் பயன்படுத்துவதற்காக முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. சில காணிகளைப் பயன்படுத்திய காலம் 08, 14 மற்றும் 22 ஆண்டுகளை மிகைத்திருந்தன.

- 2021 ஆம் ஆண்டில் இலங்கை கடற்படையினால் சட்ட விரோத வெடிபொருட்களை வைத்திருந்தமை தொடர்பாக கண்டுபிடிக்கும் போது கைப்பற்றப்பட்ட 41,012 கிலோகிராம் வோடர் ஜெல் மற்றும் 542 அலகுகள் பிலேன் ஜெடனேட்டர்கள் இலங்கை பொலிஸாருக்கு ஒப்படைக்கப்பட்டமை சம்பந்தமாக பின்தொடர் நடவடிக்கை எடுப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

- 05 ஆண்டுகளுக்கு முன்னர் வெடி மருந்து களஞ்சியத்தில் இடம்பெற்ற ரூபா 8.3 மில்லியன் நிதி முரண்பாடு சம்பந்தமாக ஆரம்பிக்கப்பட்ட புலனாய்வு நடவடிக்கைகள் இன்றுவரை முடிவடைந்திருக்கவில்லை.

- வடக்கு கடற்படை கட்டளை பிரிவினால் ரூபா 8.1 மில்லியன் செலவு செய்தள்ள ஊரணி மீன்பிடி துறை முகத்தின் நீர் தடுப்பு செயற்திட்டமானது இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது.

இலங்கை கரையோர பாதுகாப்பு திணைக்களம்

- திணைக்களயத்தின் தெற்கு நிறுவனத்தினுள் உயர் பயிற்சி மற்றும் நிருவாக கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காக ரூபா 30.09 மில்லியன் பணம் செலவு செய்யப்பட்டதன் பின்னர் 2017 யூலை 22 ஆந் திகதியிலிருந்து கைவிடப்பட்ட செயற்திட்டத்தின் வேலைகள் 2021 ஆம் ஆண்டின் போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2022 ஏப்ரல் மாதமளவில் இச்செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவு ரூபா 104.8 மில்லியனாக இருந்தது. திணைக்களத்திற்கு மிகவும் அத்தியாவசியமான ஒரு செயற்திட்டமான இந்த பயிற்சி மற்றும் நிருவாக கட்டிடத்தினை துரிதமாக முடிவுறுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது.

- செயற்படும் நிலையில் இல்லாத ரூபா 163.2 மில்லியன் பெறுமதியான 10 கப்பல்கள்/படகுகள் சம்பந்தமாக எடுக்கவேண்டிய மிகுதி நடவடிக்கைகளை விரைவுபடுத்துவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

வரையறுத்த ரக்னா லங்கா பாதுகாப்பு கம்பனி

நிலத்தின் பாதுகாப்பு சேவை, கடல் பாதுகாப்புச் சேவை மற்றும் உணவுச்சாலையை பராமரித்தல் அதேபோல கடல் பாதுகாப்பு செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ரக்னா லங்கா பாதுகாப்பு கம்பனியின் பிரதான செயற்பாடாகும். மேற்கூறிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட சில குறைபாடுகள் கீழே தரப்படுகின்றன.

- கம்பனியின் இறுதியாகச் சமர்ப்பித்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 மார்ச் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 2,299 மில்லியனான வணிக மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகளில் ரூபா

1,651 மில்லியன் கடல் பாதுகாப்பு சேவையை வழங்கியதன் மூலம் கிடைக்க வேண்டிய கடன் மீதியாகும். இதில் ரூபா 1,525 மில்லியன் அதாவது மொத்த கடனில் 92.4 சதவீதம் அவன்காட் நிறுவனத்திடமிருந்து கிடைக்க வேண்டிய கடன் மீதியாகும். ரங்கல மற்றும் காலி மிதக்கும் ஆயுதக் களஞ்சியங்களிலிருந்து கிடைக்க வேண்டிய முறையே ரூபா 84 மில்லியன் மற்றும் ரூபா 378 மில்லியன் மீதிகள் 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாதிருந்ததுடன் அக்கடனை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- ரக்னா லங்கா பாதுகாப்பு கம்பனியின் பிரதான வருமான வழியான உள்நாட்டு மற்றும் சமுர்த்திர பாதுகாப்பு சேவையை வழங்குவதன் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதாக இருந்த போதிலும் அந்த வருமானத்தை முறைப்படியாக இன்வொயிஸ் எழுதி உரிய நிறுவனத்திற்கு அனுப்பி அந்த நிறுவனத்துடன் உருவாகிய வித்தியாசத்தை இனங்கண்டு அதனை முறைப்படியாக முகாமைத்துவம் செய்வதற்கு மற்றும் கட்டுப்படுத்துவதற்கு பொருத்தமான உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறையை ஸ்தாபிப்பது தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

- தலைமை அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 739 மில்லியன் செலவு செய்ததன் பின்னர் நிர்மாண நடவடிக்கைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்ட கட்டிடம் அமைந்துள்ள 86.4 பேச்சர்ஸ் அளவான காணியின் பெறுமதியை மதிப்பீடு செய்து வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மெட்ரோபொலிடன் கெம்பஸ் பிணையால் வரையறுக்கப்பட்ட கம்பனி

வரையறுத்த நிதிசார் கற்கைகள் கல்லூரி (உத்தரவாதமளிக்கப்பட்டது) (மிலோதார நிறுவனம்) 2020 ஆகஸ்ட் 09 ஆந் திகதிய 2187/27 ஆம் இலக்க மற்றும் 2020 நவம்பர் 20 ஆந் திகதியி 2022/25 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதிவிசேட வர்த்தமானியின் மூலம் கொதலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் ஒரு பீடமாக செயற்படுவதற்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் GL2244 இன் கீழ் வரையறுத்த நிதிசார் கற்கைகள் கல்லூரியின் (உத்தரவாதமளிக்கப்பட்டது) பெயர் வரையறுத்த மெட்ரோபொலிடன் கெம்பஸ் (உத்தரவாதமளிக்கப்பட்டது) என்பதாக மாற்றப்பட்டிருந்தது. நிதி முகாமைத்துவம் தகவல் தொடர்பாடலும் டிஜிடல் முகாமைத்துவமும் சட்டம், தலைமைத்துவம் ஆகிய பிரிவுகளின் கீழ் அரசாங்க மற்றும் தனியார் துறையின் உத்தியோகத்தர்களை பயிற்றுவிப்பதற்காக கற்கை நெறிகளை நடாத்துதல் கம்பனியின் பிரதான செயற்பாடாகும்.

சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு

கணக்காய்வு அவதானிப்பு

- வருமான முகாமைத்துவம
- வைப்புக்கள் மற்றும் பெறவேண்டிய மீதிகள
- நட்டங்களும் சேதங்களும
- வாகன கட்டுப்பாடு
- பொறுப்புக்களும் கடப்பாடுகளும்
- அதிகாரச் சட்டத்தின் வரைபு
- செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை
- பெறுகைகள
- உள்ளகக் கணக்காய்வு

சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு

புனர்வாழ்வின் மூலம் சட்டத்தை மதிக்கும் ஒரு சமூகத்தை முன்னோக்கி நிதி மற்றும் மனித வளங்களை வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்தி இராஜாங்க அமைச்சர்களின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்ற திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களை மறுசீரமைப்புச் செய்து சிறந்த மேற்பார்வை ஒருங்கிணைப்பினூடாக கைதிகளுக்கு புனர்வாழ்வளித்து சிறந்த பிரசைகளாக சமூகமளிப்பதற்காக பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்படவேண்டியிருந்தன.

- சனாதிபதி அதிரடிப்படையுடன் இணைந்து சிறைச்சாலைக்குள் இடம்பெறுகின்ற சமூக விரோதச் செயற்பாடுகளை ஒழிப்பதற்காக நடவடிக்கை எடுத்தல்.

- சனாதிபதி அதிரடிப்படையுடன் இணைந்து சிறைக்கைதிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக தேவையான நடவடிக்கை எடுத்தல்

- சிறைச்சாலைக்குள் குற்றவாளிகளை கண்காணிப்பதற்காக நவீன தொழில்நுட்ப முறைமைகளை ஸ்தாபித்தல்.

- சிறைக்கைதிகளின் நெரிசலினைக் குறைப்பதற்காக பொது மன்னிப்பு வழங்கும் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு மேலதிகமாக மீளாய்வு நடைமுறையினூடாக விசேட மன்னிப்புக்களை வழங்கும் பொறிமுறையினைத் தயாரித்தல்

- சிறைக்கைதிகளின் புனர்வாழ்விற்காக விரிவான நடைமுறையினைத் தயாரித்தல்

2021 ஆம் ஆண்டின் போது மேலே குறிப்பிட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக இராஜாங்க அமைச்சிற்கு சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு மற்றும் சமூக அடிப்படையிலான சீர்திருத்த திணைக்களத்திற்கு மொத்தமாக ரூபா **10,535** மில்லியன் நிதி ஏற்பாடு பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா **8,244** மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரம் வரைபடம் 22 இல் தரப்படுகின்றது.



	இராஜாங்க அமைச்சு	சிறைச்சாலைகள் திணைக்களம்	சமூக அடிப்படையிலான சீர்திருத்த திணைக்களம்	மொத்தம்
தேறிய நிதி ஏற்பாடு ரூபா மில்லியன்	1538	8591	406	10535
செலவினம் ரூபா மில்லியன்	821	7051	372	8244
சேமிப்பு ரூபா மில்லியன்	717	1540	34	2291

வரைபடம 22 : வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டின் அளவும் உள்ளபடியான செலவுகளும்
மூலம்:- 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்

மேலே குறிப்பிட்ட கடமைகளை நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கி கீழே தரப்படுகின்றன.

வருமான முகாமைத்துவம்

- சிறைச்சாலைகள் திணைக்களத்தின் மூலம் பேணப்படுகின்ற உணவுச்சாலைகளின் வாடகை வருமானத்தினை இனங்கண்டு அந்த வருமானத்தினை நிதிப்பிரமாணம் 83 இன் பிரகாரம் குத்தகை வாடகை வருமானமாக அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
- போகம்பர சிறைச்சாலையின் உணவுச் சாலை **2021** ஆம் ஆண்டின் முதல் **8** மாதங்களில் சிறை மற்றும் தடுப்புக் காவல் கைதிகளுக்கு பொருட்கள் விற்பனையிலிருந்து மாத்திரம் ரூபா 10 மில்லியனுக்கு மேற்பட்ட பணம் உழைக்கப்பட்டிருந்தது. எனினும் இக்காலப்பகுதியில் உணவுச்சாலைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு சம்பளமும் படிகளுமாக ரூபா 1.42 மில்லியன் மற்றும் நீர், மின்சாரத்திற்காகவும் செலவு செய்யப்பட்டிருந்தும் இச்செலவுகள் எதுவும் உணவுச் சாலையிலிருந்து கிடைக்கும் வருமானத்திலிருந்து கழித்து அரசாங்கத்திற்கு மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2021 ஆகஸ்ட்டிலிருந்து திசெம்பர் மாதம் வரை சிறைச்சாலைகள் திணைக்களத்தின் உணவுச்சாலைக்கு 63 உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர்களுக்காக சம்பளமும் படிகளுமாக ரூபா 16.49 மில்லியன் பணம் திரண்டநிதியத்திலிருந்து செலவு செய்யப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக உணவுச் சாலையின் சேவைக்காக 103 கைதிகளும் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.

வைப்புக்கள் மற்றும் பெறவேண்டிய மீதிகள்

- மீளாய்வாண்டில் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் கைத்தொழில் மற்றும் கமத்தொழில் முற்பணக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ள ரூபா 49.56 தொகையான கடன்பட்டோர் மீதியில் ரூபா 26.37 மில்லியன் மீதியினை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் 05 பொது வைப்புக் கணக்குகளின் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 84.69 மில்லியன் வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- சிறைச்சாலைகளினால் அரசாங்கத் துறைக்கு மேற்கொண்ட விற்பனைகளுக்காக கிடைக்க வேண்டிய ரூபா 50 மில்லியன் மீதியில் 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய ரூபா 1.64 மில்லியனும் 5 ஆண்டுகளிலிருந்து 20 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் கிடைக்க வேண்டிய மீதி ரூபா 24.7 மில்லியனாகும்.

நட்டங்களும் சேதங்களும்

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டு வரும் 100 வாகன விபத்துக்களை உள்ளடக்கிய 103 சம்பவங்கள் தொடர்பான நட்டம் ரூபா 9.33 மில்லியனும் 05 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டுகள் வரையான காலமாக காணப்பட்டு வரும் 52 வாகன விபத்துக்களை உள்ளடக்கி 54 சம்பவங்கள் தொடர்பான நட்டம் ரூபா 38 மில்லியனும் 2021 ஆம் ஆண்டிற்கான 22 வாகன விபத்துக்களை உள்ளடக்கிய 05 ஆண்டுகளுக்கு குறைந்த காலமாக காணப்பட்டு வரும் 94 வாகன விபத்துக்களை உள்ளடக்கிய 118 சம்பவங்கள் தொடர்பான நட்டம் ரூபா 12.13 மில்லியனும் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 103(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. மேலும் 2017 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டின் இறுதிவரை இடம்பெற்ற 26 நட்டங்களின் நட்ட மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

வாகன கட்டுப்பாடு

01 ஆண்டிலிருந்து 10 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்குள் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட சிறைச்சாலைகள் திணைக்களத்தின் 72 வாகனங்கள் மற்றும் புனர் வாழ்வு ஆணையாளர் நாயக பணியகத்தின் 3 வாகனங்கள் சம்பந்தமாக கைதவிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு பல்வேறு நிறுவனங்களிடமிருந்து பொறுப்பேற்க்கப்பட்ட 56 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

பொறுப்புக்களும் கடப்பாடுகளும்

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் புனர்வாழ்வு ஆணையாளர் நாயக பணியகத்திற்குரிய 02 செலவு விடயங்கள் தொடர்பாக ரூபா 4.57 மிலியன் பெறுமதியான பொறுப்புக்கள் குறைத்துக் காட்டப்பட்டிரந்ததுடன் கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்காக வெளித்தரப்பினர்களுக்கு உள்ள கடப்பாடுகளின் பெறுமதியான ரூபா 346.21 மில்லியன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை.

அதிகாரச் சட்டத்தின் வரைபு

2017 நவம்பர் 22 ஆந் திகதிய அமைப/17/2509/745/016 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் புனர்வாழ்வு ஆணையாளர் நாயக பணியகத்திற்கான அதிகாரச்சட்டத்தின் வரைபினைத் தயாரிப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் பணியகத்திற்கு 2021 ஏப்ரல் 28 ஆந் திகதிய அமைப/21/0564/330/029 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அதிகாரச் சட்டத்தின் வரைபுக்காக சட்டமா அதிபதியின் அங்கீகாரத்துடன் அமைச்சரவைக்கு மீண்டும் சமர்ப்பிக்குமாறு தெரியப்படுத்தியிருந்தும் 2021 ஆம் ஆண்டின் இறுதிவரை மீண்டும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

காலத்திற்கு பொருத்தமான தேவைப்பாடுகளுக்கு இணங்கும் வகையில் சிறைக்கைத்திகளுக்கு புனர்வாழ்வளித்து சிறந்த பிரசையாக வெளியேறுவதற்குத் தேவையான சமூக பின்னணியைத் தயாரித்தல் திணைக்களத்தின் பிரதான செயற்பாடாக இருந்த போதிலும் அதற்கு இணக்கமற்றவகையில் சிறைக்கைத்திகளுக்கு புனர்வாழ்வளிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தினைப் பெற்று ஒரு தனியார் கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந்த பயிற்சி செயற்திட்டத்தின் கீழ் 2020 யூன் 15 ஆந் திகதியிலிருந்து 2022 மே 03 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் உரிய கம்பனியால் 20103 சிறைக்கைதி மனித நாட்கள் பல்வேறு வேலைத்தளங்களில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. இதற்காக ஒரு நாளைக்கு ரூபா 400 ஒரு சிறைக்கைதிக்கு சம்பளமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்கு மேலதிகமாக சிறைக்கைதிகள் நலன்புரி நிதியத்திற்கு அரசாங்கத்தின் வருமானத்திற்கும் ரூபா **50** வீதம் செலவு வைக்கப்படுகின்றது. இந்த சிறைக்கைதிகள் வேலைத்தளங்களில் சேவையில் ஈடுபடுவதற்கு முன்னர் உரிய துறையில் **3** மாதங்கள் அடிப்படை பயிற்சி வழங்கப்படவேண்டிய போதிலும் 104 சிறைக்கைதிகளுக்கு அடிப்படை பயிற்சிகள் வழங்கப்படவில்லை. மேலும் பயிற்சிகளை பூர்த்தி செய்த சிறைக்கைதிகளுக்கு தேசிய தொழில்சார் மட்டத்தின் பயிற்சி சான்றிதழினை (NVQ) வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் பயிற்சியை பூர்த்தி செய்த 236 சிறைக்கைதிகளுக்கு சிறப்புத்திறன் சான்றிதழ் வழங்கப்படவில்லை.

சிறைக் கைதிகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் சிறைச் சாலை சட்ட விதிகளுக்கு இணங்க அவர்களின் பாதுகாப்பு, பேணிக்காத்தல், பராமரிப்பு என்பவற்றினை வழங்குதல் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகளுக்கு மத்தியில் ஒன்றாக இருந்த போதிலும் பின்வரும் காரணங்களால் அதற்கு இணங்கியிருக்கவில்லை.

- போகம்பர (தும்பர), மஹர, சிறைச்சாலைகளிலும் பல்லேகலே திறந்த சிறைமுகாம்களின் வாட்டுகளிலும் சிறை இல்லங்களிலும் போதியளவு இடவசதிகள் இல்லாமல் **1667** இற்கு மேற்பட்ட கைதிகளை வைத்திருத்தல்

- சிறைச்சாலைகளையும் தடுப்புக்காவல் கைதிகளையும் வகைப்படுத்தாது **3253** கைதிகளை ஒன்றாக வைத்திருத்தல்.

- சிறைக்கைதிகளுக்கு போதியளவான சுகாதார சூழல் இல்லாமை.

- மீண்டும் மீண்டும் சிறைவைக்கப்படும் நபர்களை இனங்காண்பதற்கு முறையான

நடைமுறை இல்லாததுடன் முறையற்ற வகையில் சேகரிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அந்த எண்ணிக்கை 220 ஆக இருத்தல்.

- இரசாயன பகுப்பாய்வு அறிக்கை வழங்குவதற்கு தாமதிப்பதனால் சிறைச்சாலைகளில் 6 மாதங்களிலிருந்து 2 ஆண்டுகள் வரையான காலப்பகுதியாக சிறைக்கைதிகளாக 520 நபர்களை வைத்திருத்தல்.

பெறுகைகள்

- 2006 பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 (ஆ) பிரிவின் பிரகாரம் ஆகக் குறைந்த 3 ஆண்டுகள் காலத்திற்காக எதிர்பார்த்த பெறுகை நடவடிக்கையை உள்ளடக்கி பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கடப்பட வேண்டிய போதிலும் சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் 2021 ஆம் ஆண்டின் போது அவ்வாறான திட்டம் தயாரிக்கப்படவில்லை. மேலும் இராஜாங்க அமைச்சினால் மூலதனச் சொத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்கு ரூபா 9.59 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தும் 2006 பெறுகை வழிகாட்டிக் கோவைளயின் 3.4.3 (அ) பந்தியின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டிற்கான வழங்குனர்களைப் பதிவுசெய்தல் இடம்பெற்றிருக்கவில்லை.

- புனர்வாழ்வு ஆணையாளர் நாயக பணியகம் அமைந்துள்ள கட்டிடத்தின் மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்றுக்கொள்வதற்கும் கட்டிடத்தின் உரிமயாளருடன் உடன்படிக்கை செய்து கொள்வதற்கும் முன்னர் உரிய நிறுவனத்துடன் ரூபா 8.38 மில்லியன் பணத்திற்கு கட்டிடத்தில் அலுவலகத்தினை பிரித்து வேறுபடுத்தும் செயற்பாட்டிற்காக ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. மேலும் மாதாந்த வாடகைப் பெறுமதி ரூபா 2.40 மில்லியனாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த அக்கட்டிடத்திற்காக அந்த மதிப்பீட்டு பெறுமதியினை விட ரூபா 0.163 மில்லியனால் அதிகரித்த வாடகைப் பெறுமதிக்கு உடன்படிக்கை செய்திருந்தமையின் காரணமாக 02 ஆண்டுகள் காலத்திற்காக ரூபா 3.912 மில்லியன் வாடகைப் பணத்தை மிகையாகச் செலுத்த வேண்டியிருந்தது. அவ்வாறே கட்டிட தேவைப்பாடு 15000 சதுர அடியிலிருந்து 16000 சதுர அடியாக அறிவித்தல் வெளிப்படுத்தப்பட்டிருந்தும் 14524 சதுர அடியான பெறுகை ஆணைக்குழு அலுவலகம் அமைந்துள்ள கட்டிடம் ரூபா 2.45 மில்லியன் மாதாந்த வாடகை பணத்திற்கு பெற்றுக்கொள்வதற்கான இயலுமை காணப்பட்டிருந்தும் 19858 சதுர அடியான கட்டிடத்தை ரூபா 2.56 மில்லியனுக்கு பெற்றுக் கொள்வதனால் மாதாந்தம் ரூபா 0.11 மில்லியன் வீதம் மிகையாகச் செலுத்துவதற்கு ஏற்பட்டிருந்தமையும் இதற்கு மேலதிகமாக நிலையான சொத்துக்கள் கணனி வலையமைப்பு, பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள கட்டிடத்தை பெற்றுக்கொள்வதன் மூலம் அடைந்து கொள்ளக்கூடியதாக இருந்த பொருளாதார நலன்கள் இழக்கப்பட்டிருந்தன. அக்காரணத்தினால் அமைச்சினால் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் முறையான தீர்மானம் எடுக்காமையால் 2 ஆண்டுகளாக மிகையாக வாடகைப் பணமாக ரூபா 2.62 மில்லியனும் அறைகளாகப் பிரித்தல் மற்றும் கணனி வலையமைப்பிற்காக ரூபா 10.64 மில்லினும் மேலதிக கிரயத்தினை செலவு செய்ய வேண்டியிருந்தது.

- புனர்வாழ்வு நிலையங்களை ஆரம்பிக்ககூடிய காலப்பகுதியை உறுதியாக அடையாளம் காண முடியாத நிலையில் மீளாய்வாண்டின் போது ரூபா 61.80 மில்லியன் தொகையான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

உள்ளகக் கணக்காய்வு

20128 இன் **19** ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் **40 (1)** ஆம் பிரிவு மற்றும் **40(2)(1)** ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

திறைசேரி நடவடிக்கைகள

கணக்காய்வு அவதானிப்பு
• அரசின் வருமானம் சேகரித்தல • எல்லைகள் திருத்தப்படாமை • நிதிக் குத்தகையின் கீழ் வாகனங்களை கொள்வனவு செய்தல • கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள • அரச கடன் • பயன்படுத்தப்படாத வெளிநாட்டுக் கடன் மீதிக்கான கட்டணம் செலுத்துதல் • வெளிநாட்டுக் கடன்களை மீளச்செலுத்துதல் • அரச கடன் கணக்கு வைத்தல் • வெளிநாட்டு உதவிகளை பெற்றுக்கொள்ளல் • அரசுக்கு சொந்தமான முயற்சிகளின் மூலதனப் பங்களிப்பு • திறைசேரியின் அங்கீகரிக்கப்பட்ட முற்பணக் கணக்குகள் • நிதியல்லாத சொத்துக்கள் • சமூக பாதுகாப்பு வலையமைப்பு செயற்திட்டம் • வரி மேன்முறையீடுகளை விசாரித்தல் • பொதுமுயற்சிகளின் கண்காணிப்பு மற்றும் நிர்வாகம் • கால அடிப்படையிலானதும் சரியானதுமான தரவுகளை வழங்குதல

திறைசேரி நடவடிக்கைகள்

நிதி அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படும் 22 திணைக்களங்கள் மற்றும் 48 சட்டரீதியான சபைகள் / நிறுவனங்களின் மூலம் பின்வரும் செயற்பாடுகள் மற்றும் பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன.

- அனைவருக்கும் நன்மையளிக்கும் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய வருமான சமத்துவமின் மையைக் குறைத்து நிலைபேறான உயர்மட்ட பொருளாதார வளர்ச்சி யைத் துரிதப்படுத்துதல்.

- குறைந்த வருமானம் உழைப்பவர் களுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் வேலையின்மையைக் குறைத்தல் மற்றும் தனி நபர் வருமானத்தை அதிகரித்தல்.

- வருடாந்தச் சராசரி பணவீக்க வீதத்தை குறைந்தளவு மதிப்பில் பராமரித்தலுடன் விலையின் நிலைத்தன்மையை நிறுவுதல்.

- வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை மற்றும் அரச கடன்களைக் குறைப்பதன் மூலம் அரச வருமானக் கொள்கையின் நிச்சயமற்ற தன்மையைக் குறைத்தல்.

- கடன் வட்டி விகிதத்தை குறைந்த மதிப்பில் வைத்திருப்பதுடன் நிதி வளங்கள் மற்றும் பொருளாதாரத் தேவைகளை விரிவுபடுத்தல்.

- ரூபாயின் மதிப்பின் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதன் பொருட்டு நிதி மற்றும் சென்மதி நிலுவைக் கொள்கைகள் மற்றும் வட்டி விகிதம் என்பவற்றை ஸ்திரப்படுத்தல்.

- உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத் தல், குறைந்த வருமானம் பெறுவோரினை மேம்படுத்ததுதல் மற்றும் முதலீடுகளை ஊக்குவித்த லுக்குத் தேவையான செயற்பாடுகளை அறிமுகப்படுத்தல்.

- பொதுமக்களின் நலனுக்காக உள்நாட்டு வர்த்தக சமூகத்திற்குத் தேவையான வணிகச் சூழலை விரிவுபடுத்துதல்.

- அரச வருமானம் மற்றும் செலவு முகாமைத்துவ செயற்திறனை அதிகரிப்பதற்குத் தேவையான நிறவனக் கட்டமைப்பபை வலுப்படுத்துதல்.

2021 ஆம் வருடத்தில் மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக நிதி அமைச்சிற்கு மற்றும் அதன் கீழ் வருகின்ற் 22 திணைக்களங்களுக்காக மொத்தம் ரூபா 2,572,396 மில்லியன் ஒதுக்கங்கள் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அவற்றில் ரூபா 2,529,916

மில்லியன் மட்டும் பயன்படுத்தப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டுக்காக ரூபா 2,255,020 மில்லியன் கூட்டுத்தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்த வருடத்தில் அவற்றுள் ரூபா 2,158,968 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் உரு 23 இல் காட்டப்பட்டுள்ளது.



உரு 23 - வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் அளவு மற்றும் உள்ளபடியான செலவினம்

மூலம் - 2021 ஆம் ஆண்டின் அரசின் நிதிக்கூற்றுக்கள்

அரசின் வருமானம் சேகரித்தல்

நிதியமைச்சின் கீழ் உள்ள 10 திணைக்களங்களின் திணைக்களத் தலைவர்கள் வருமான சேகரிப்பு உத்தியோகத்தர்களாக செயற்படுகின்றனர். 2021 ஆம் ஆண்டிற்கான பாராளுமன்றத்தின் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் வருமான மதிப்பீட்டின் பிரகாரம் அந்த வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் உரிய 56 வருமானக் குறியீடுகளின் கீழ் ரூபா 1,449,485 மில்லியனான வருமானம் காண்பிக்கப்பட்டிருந்தது. குறித்த வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் அந்த மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 183,463 மில்லியனால் குறைக்கப்பட்டு பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடு திருத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை அந்த அளவினால் அதிகரித்திருந்தது. அந்த திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டில் ரூபா 1,221,931 மில்லியன் ஆன வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய திருத்தப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானத்தில் ரூபா 44,091 மில்லியனான வருமானம் சேகரிக்க தவறவிடப்பட்டிருந்தது. இதற்கமைய நிதியமைச்சின் கீழ் உள்ள 10 திணைக்களங்களினால் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட வருமான மதிப்பீட்டில் ரூபா 227,554 மில்லியன் அல்லது ஆரம்ப மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 15.70 சதவீதமான அளவில் வருமானத்தை சேகரிக்க முடியாதிருந்தது. இந்த 10 திணைக்களங்களுக்கிடையே ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தினால் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 1,600 ஆன வருமானம் மதிப்பீடு ரூபா 1,200 மில்லியன் அல்லது 75 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டு திருத்தப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியளவில் அந்த திருத்தப்பட்ட வருமான மதிப்பீடானது ரூபா 135 மில்லியனால் அதிகரித்து ரூபா 2,935 மில்லியனான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. தேசிய வரவு

செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகம், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம், பிரதான மதிப்பீட்டாளர் மற்றும் சுங்கப் பணிப்பாளர் நாயகம் ஆகியோரினால் திருத்தப்பட்ட வருமான மதிப்பீடான ரூபா 4,719 மில்லியனை விஞ்சி ரூபா 683,415 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. ஏனைய 05 திணைக்களங்களினால் ரூபா 587,325 கூட்டுத்தொகையான திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டில் ரூபா 538,515 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய ரூபா 48,810 கூட்டுத்தொகையான வருமானத்தை சேகரிப்பதற்கு தவறியிருந்தது, விபரங்கள் அட்டவணை 19 இல் காண்பிக்கப்படுகின்றது.

வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர்	வருமானக் குறியீடுகளின் எண்ணிக்கை	ஆரம்ப வருமான மதிப்பீட்டின் பிரகாரம் வருமானம்	திருத்திய மதிப்பீட்டின் பிரகாரம் வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திருத்திய மதிப்பீட்டின் பிரகாரம்	
					மீறல்கள்	சேகரிக்கப்பட்ட வருமானம்
		ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்	ரூபா மில்லியன்
ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாடு	1	1,600	2,800	2,935	135	-
கொம்ப்ரோலர் நாயகம்	1	400	400	188	-	212
தேசிய வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகம்	1	0	0	3	3	-
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்	28	666,503	629,215	640,213	10,919	-
திறைசேரி செயற்பாட்டு பணிப்பாளர் நாயகம்	10	51,750	51,800	56,777	4,977	
அரந நிதிக் கொள்கைகள் பணிப்பாளர் நாயகம்	2	20,000	25,000	15,012	-	9,988
பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகம்	2	56,000	40,000	30,591	-	9,409
சுங்கப் பணிப்பாளர் நாயகம்	8	503,107	381,890	354,050	-	27,840
மதுவரி ஆணையாளர்	2	150,035	140,035	138,674	-	1,361
பிரதான மதிப்பீட்டாளர்	1	90	82	115	33	
கூட்டுத்தொகை	56	1,449,485	1,271,222	1,238,479	16,067	48,810

உரூ 19 - 2021 ஆம் ஆண்டின் 55 வருமானக் குறியீடுகளின் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் உள்ளபடியான வருமானம்

மூலம் - 2021 ஆம் ஆண்டின் வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீடு மற்றும் அரசின் நிதிக்கூற்றுக்கள்

நிதியமைச்சு மற்றும் அதன் கீழான 22 திணைக்களங்களால் மேற்குறிப்பிடப்பட்ட பணிப்பொறுப்பினை நிறைவேற்றுதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட பொருண்மையான மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

எல்லைகள் திருத்தப்படாமை

2020 இன் 07 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் மூன்றாவது பட்டோலையில் குறிப்பிடப்பட்டுள்ள இராஜிாங்க அமைச்சிற்கும் மாவட்ட செயலகங்களுக்கும் உரியதாக அரச உத்தியோகத்தர்களின் முற்பணப் பணிக்காக முறையே ரூபா 32 மில்லியன் மற்றும் ரூபா 17 மில்லியன் படியாக உச்ச செலவின எல்லை விதிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் அந்த அமைச்சு மற்றும் அலுவலகங்களினால் அந்த எல்லைகள் முறையே ரூபா 1,401,679 இனால் மற்றும் ரூபா 208,590 இனால் மிஞ்சப்பட்டு முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்தன. அவ்வாறே மேலும் இராஜாங்க அமைச்சொன்றுக்கு உரியதாக அரச உத்தியோகத்தர்களின் முற்பணப் பணிகளுக்காக ரூபா 525 மில்லியன் எனும் ஆகக்குறைந்த பெறுவனவு எல்லைகள் விதிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் அவை அவற்றுள் ரூபா 457.95 மில்லியனான பெறுவனவுகள் சேகரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய ரூபா 67.05 மில்லியனால் குறித்த எல்லை அடையப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2021 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படாத ஆணைக்குழு அலுவலகங்கள் இரண்டிற்காக வருடாந்த ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் மூலம் அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணப் பணிகள் இரண்டிற்காக முறையே ரூபா 500,000 மற்றும் ரூபா 200,000 படியான ஆகக்குறைந்த பெறுவனவு எல்லைகள் விதிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அவற்றிலிருந்து எந்த பெறுவனவுகளும் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

மேலுமொரு இராஜாங்க அமைச்சின் உச்ச வரவு மீதி எல்லையாக ரூபா 20 மில்லியன் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் இறுதியளவில் அந்த மீதி ரூபா 24.6 மில்லியனாக காணப்பட்டது. அதற்கமைய வரவு மீதி எல்லை ரூபா 4.6 மில்லியனால் விஞ்சப்பட்டிருந்தது. ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இந்த எல்லை மீறல்கள் 2022 மே 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் எல்லைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதாக இருந்த போதிலும் 2022 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் அந்த எல்லைகளை திருத்துவதற்கு தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

நிதிக் குத்தகையின் கீழ் வாகனங்களை கொள்வனவு செய்தல்

2010 திசெம்பர் 07 ஆந் திகதிய 150 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் ஏனைய அரச நிறுவனங்களினால் நிதிக் குத்தகையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா

4,229.68 மில்லியன் கூட்டுத்தொகையான வாகனங்களை சுவீகரிக்குமாறு குறித்த நிறுவனங்களுக்கு தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த சுவீகரிப்புக்கள் நிறைவு செய்யப்பட்டமையை சான்றுபடுத்தும் நடைமுறையொன்று தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள்

2014 யூலை 23 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்களின் பதிவு உரித்தானது ஐந்து வருட காலத்திற்கு பின்னர் தனிப்பட்டவர்களுக்கு சாட்டப்படுகின்ற போதிலும் அந்த மோட்டார் சைக்கிள்களை சுவீகரிக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டமையை உறுதிப்படுத்தும் நடைமுறையொன்று தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

அரச கடன்

கணக்காய்வுக்கு முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அரசாங்கத்தினால் செலுத்த வேண்டியதாக காணப்பட்ட அரச கடன் மீதி ரூபா 16,826.83 மில்லியனான போதிலும், அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான CS-DRMS 2000+ Report 854-1 இல் உள்ளடக்கப்பட்ட கடன் உடன்படிக்கைகள் 08 இற்குரிய கூட்டுத்தொகை ரூபா 311,191 மில்லியனான வெளிநாட்டுக் கடன் பெறுமதி, அரச நிதிக் கூற்றுக்களில் முழுமையாக அகற்றப்பட்டிருந்தது.

- அரசினால் 2021 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட கடப்பாடுகளின் கீழான கடன் உடன்படிக்கை ஒன்றிற்குரிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதி உள்ளபடியாக நிலவிய ரூபா 589 மில்லியனான கடன் மீதி அரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

- மேற்குறிப்பிடப்பட்ட கடன் உடன்படிக்கையின் 08 இல் உள்ள கடன் மீதிகளில் அம்பாந்தோட்டை துறைமுகத்தினை நிர்மாணிப்பதற்காக அரசினால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த கடன்களில் ரூபா 161,332 மில்லியனான மீதியை மீள செலுத்தப்பட வேண்டியதாக காணப்பட்டது. அந்த கடன் மீதி 2017 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அந்த நிவாரண உடன்படிக்கை அமுல்படுத்தப்படும் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் பொதுத்திறைசேரியினால் பொறுப்பேற்கப்பட்டிருந்தது. எனினும் அக்கடன் மீதி 2021 ஆம் ஆண்டில் அரசின் நிதிக்கூற்றுக்களில்

உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான துறைமுகங்கள் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களிலும் அக்கடன் மீதி அகற்றப்பட்டிருந்தது. அக்கடன் மீதிக்கான கடன் சேவைப்படுத்தல் திறைசேரியினால் மேற்கொள்ளப்படும்.

- CS-DRMS 2000+ Report 854-1 அறிக்கையில் இரு கடன் உடன்படிக்கைகளுக்குரிய கடன் பயன்பாட்டு நாணய அலகு (Loan Currency) யூரோ (EUR) ஆக கருத்தப்பட்டிருந்த போதிலும் அரச நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது சி.கொ.ஒ (XDR) மற்றும் ஐ.அ.டொலர் (USD) ஆக கருத்தில் கொள்ளப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஒரே கடன் மீதிக்காக வேறுபட்ட கடன் பயன்பாட்டு நாணய அலகுகளுக்குரிய செலவாணி மாற்ற வீதங்கள் பயன்படுத்தப்பட்டமையால் அரசின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 340 மில்லியன் மற்றும் ரூபா 285 மில்லியனான வேறுபாடுகள் நிலவின.

- CS-DRMS 2000+ Report 854-1 அறிக்கையின் பிரகாரம் கடன் இலக்கம் 2021026 இல் ஆண்டினுள் தீர்வையாகியுள்ள கடன்களின் பெறுமதி ரூபா 64,910.4 மில்லியனாக இருந்த போதிலும் அரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 64,983.8 மில்லியனாக இருந்தது. அதற்கமைய நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி ரூபா 73.4 மில்லியனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

-

- 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அரசின் நிதிக்கூற்றுக்களிலும் 854-1 அறிக்கையின் பிரகாரம் பல்வேறு நன்கொடையாளர்களினால் இலங்கை அரசிற்கு வழங்கப்பட்டிருந்த கடன் மீதி அந்த நிறுவனங்களினால் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருந்த மீதி உறுதிப்படுத்தல்களில் உள்ளடக்கப்பட்டுள்ள கடன் மீதியுடன் ஒப்பிடும் போது ரூபா 1,800,227 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் அல்லது ரூபா 360.82 மில்லியனான 02 கடன் மீதிகள் அரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

- 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக வெளிநாட்டுக் கடன் மூலங்களான CS-DRMS 2000+ Report 854-1 அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள கடன் இலக்கம் 2001042 இன் கீழ் ரூபா 240 மில்லியனான கடன் மீதியொன்று நிலவிய போதிலும் அம்மீதியை அரசின் நிதிக்கூற்றுக்களில் காண்பித்திருக்கவில்லை.

- கடன் உடன்படிக்கைகள் இரண்டிற்கு உரியதாக ரூபா 1,481,264 ஆன மறைக் கடன் மீதி அரசின் நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் அக்கடன் மீதிகள் மறைப் பெறுமதியை

எடுப்பதற்கும் அந்த பெறுமதி நிதிக்கூற்றுக்களில் இருந்து அகற்றுவதற்குரிய விளக்கங்களை கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

- நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த குறிப்பு இலக்கம் 29(i) இற்குரிய தகவல்கள் CS-DRMS 2000+ Report 854-1 இல் உள்ளடக்கப்பட்டிராததுடன், ரூபா 20,247 மில்லியனான அந்த பெறுமதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடிய மூலங்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

- 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான வெளிநாட்டுக் கடன்களின் மீதி ஐக்கிய அமெரிக்க டொலர் 34,130,219,447 ஆக காணப்பட்டது. அத்திகதியில் உள்ளபடியான செலவாணி மாற்றுவீதமான ரூபா 200.43 உடன் சீராக்கும் போது கடன் மீதியில் ரூபாய் பெறுமதி ரூபா 6,841 பில்லியனாக காணப்பட்டது. 2020 மே 30 ஆந் திகதியில் உள்ளபடியாக நிலவிய செலாவணி மாற்றுவீதமான ரூபா 360.76 ஆனமையால் அந்த வெளிநாட்டுக் கடன் மீதியின் பெறுமதி ரூபா 12,313 பில்லியனாக காணப்பட்டது. செலாவணி மாற்றுவீதம் மாற்றமடைந்தமையால் கடன் மீதிகளில் ஏற்படும் பொருண்மையான தாக்கங்கள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் ஐந்தொகை திகதியின் பின்னரான நிகழ்வுகளின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

பயன்படுத்தப்படாத வெளிநாட்டுக் கடன் மீதிக்கான கட்டணம் செலுத்துதல்

2014 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் அந்த கடன் மீதிகளுக்குரியதாக விடயப்பரப்பு மட்டுப்படுத்தப்பட்டமை, விரிவான திட்டங்களை தயாரிப்பதிலான தாமதங்கள், பெறுகைகள் மற்றும் ஒப்பந்ததாரர்களின் தாமதங்கள் மற்றும் Covid 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக அந்த வெளிநாட்டுக் கடன் பயன்படுத்தப்படாமையால் உடன்படிக்கையின் பிரகாரம் கடப்பாட்டுக் கட்டணங்களாக ஐக்கிய அமெரிக்க டொலர் 93,175,883 தொகையும் யூரோ 1,328,347 தொகையும் ரென்ம்பின் யுவான் 70,213,890 செலுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் அட்டவணை 20 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

செயற்திட்டத்தின் பெயர்	பயன்படுத்தப்படாத கடன் மீதி	கடப்பாட்டு கட்டண வீதம் பயன்படுத்தப்படாத தொகையில்	செலுத்தப்பட்ட கடப்பாட்டு கட்டணம்
பெலியத்தவிலிருந்து வாட்டிய வரை தெற்கு அதிவேக நெடுஞ்சாலை விரிவாக்கத் செயற்திட்டம்	ஐ.அ.டொலர் 80,938,153	0.25 சதவீதம்	ஐ.அ.டொலர் 2,641,904
நகர்ப்புற சுகாதாரம் மற்றும் சுகாதார முன்முயற்சி செயற்திட்டம்	யூரோ 73,243,437	0.5 சதவீதம்	யூரோ 562,354
அனுராதபுரம் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தி செயற்திட்டம்	யூரோ 50,135,990	0.5 சதவீதம்	யூரோ 379,487
ஆனமடுவ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்	யூரோ 17,274,470	0.5 சதவீதம்	யூரோ 18,223
விசால் மாத்தளை நீர் வழங்கல் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்	யூரோ 37,938,128	0.75 சதவீதம்	யூரோ 368,283
மாத்தறை முதல் பெலியத்த வரையிலான தெற்கு அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணத் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்	ஐ.அ.டொலர் 19,511,551	0.25 சதவீதம்	ஐ.அ.டொலர் 56,089,787
வெளிச் சுற்றுவட்ட வீதி திட்டத்தில் கடவத்த முதல் கெரவலப்பிட்டிய வரையிலான பகுதிகளை நடைமுறைப்படுத்துதல்	ஐ.அ.டொலர் 140,728,238	0.25 சதவீதம்	ஐ.அ.டொலர் 32,212,172
மத்தள முதல் அந்தரவெவ ஊடாக ஹம்பாந்தோட்டை வரை தெற்கு அதிவேக நெடுஞ்சாலையை விரிவாக்கும் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.	ரென்ம்பின் யுவான் 540,370,717	0.25 சதவீதம்	ரென்ம்பின் யுவான் 51,295,324
ஹம்பாந்தோட்டை சர்வதேச மையத்தில் வீதி மற்றும் மேம்பாலம் நிர்மாணத் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்	யுவான் 1,489,711	0.25 சதவீதம்	ரென்ம்பின் යුවාන් 18,918,566
அம்பதல நீர் வழங்கல் அமைப்பு மேம்பாடு மற்றும் ஆற்றல் சேமிப்பு செயற்திட்டத்தை செயல்படுத்துதல்	ஐ.அ.டொலர் 53,129,531	0.5 சதவீதம்	ஐ.அ.டொலர் 53,132,020

அட்டவணை 20 – பயன்படுத்தப்படாத கடன் மீதியின் அடிப்படையில் அறவிடப்பட்ட கடப்பாட்டு கட்டணங்களை செலுத்துதல் மூலம் - வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் 854-1 அறிக்கை

வெளிநாட்டுக் கடன்களை மீளச்செலுத்துதல்

நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த வெளிநாட்டுக் கடன்களின் பெறுமதி ரூபா 516,606 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டில் மீள செலுத்தப்பட்ட கடன் தவணைகளின் பெறுமதி ரூபா 530,507 மில்லியன் ஆகும். அதற்கமைய 2021 ஆம் ஆண்டின் போது கடன் தவணைகளை செலுத்தல் ஆண்டினுள் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகையினை விட ரூபா 13,901 மில்லியனால் அதிகரித்திருந்தது.

மீளாய்வாண்டின் போது பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த வெளிநாட்டுக் கடனின் அளவை விஞ்சி வெளிநாட்டுக் கடன் செலுத்தப்பட்டமையால் ரூபா 13,901 மில்லியனான அந்நிய செலாவணி பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது. வெளிநாட்டுக் கடன் பெற்றுக்கொள்ளல் மற்றும் மீள செலுத்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

- திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் TO/S&A/03/08/05 ஆம் இலக்க மற்றும் 2022 பெப்பரவரி 25 ஆந் திகதி கடிதத்தின் மூலம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2021 ஆம் ஆண்டு மற்றும் 2020 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்னர் தீர்வையாகிய போதிலும், 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கணக்கு வைக்கப்படாத வெளிநாட்டுக் கடன்களின் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பெறுமதி முறையே ரூபா 16,883.6 மில்லியன் மற்றும் ரூபா 21 மில்லியனாக காணப்பட்டது. எவ்வாறான போதிலும், அந்த கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பெறுமதி மற்றும் உண்மையான கணிப்பீட்டு பெறுமதி ஆகியவற்றுக்கு இடையே வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

- மேற்படி கடிதத்தின பின்னிணைப்பு 03 இன் பிரகாரம், 2021 ஆம் ஆண்டின் போது கணக்கு வைக்கப்பட்ட எனினும், 2020 ஆம் ஆண்டின் பொது மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளில் தீர்வையாகிய வெளிநாட்டுக் கடன்களின் பெறுமதி ரூபா 5,671 மில்லியனாக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், உரிய வருடத்தில் தீர்வையாகிய போதிலும், அந்த வருடத்தில் சில வெளிநாட்டுக் கடன்கள் கணக்கு வைக்கப்படாமை தொடர்ச்சியாக இடம்பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- 2022 ஏப்ரல் 21 ஆந் திகதிய **SA/MAA/02/02/03/VO(iii)** ஆம் இலக்க அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் வெளிநாட்டுக் கடன் மற்றும் அதனுடன் தொடர்புடைய குறிப்பு இலக்கம் 29(ii), (iii) மற்றும் (iv) இன் பிரகாரம் கணிப்பிடப்பட்டு மீளாய்வாண்டின் போது மீளச் செலுத்தப்பட்ட கடன் தவணைகளின் பெறுமதி ரூபா 514,154 மில்லியனாக காணப்பட்டது. எனினும் நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் அது ரூபா 530,508 மில்லியனாக காணப்பட்டது. அதற்கமைய ரூபா 16,354 மில்லியனான வேறுபாடொன்று வெளிப்படுத்தப்பட்டது. இந்த வேறுபாட்டிற்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

- 2022 சனவரி 19 ஆந் திகதி அச்சிடப்பட்ட வெளிநாட்டு வளங்கள்

திணைக்களத்தின் CS-DRMS 814-1 அறிக்கையின் பிரகாரம் வெளிநாட்டுக் கடன் உடன்படிக்கைகள் 19 இற்குரிய தீர்வையான வெளிநாட்டுக் கடன்களின் பெறுமதி ரூபா 15,208 மில்லியனாக காணப்பட்டது. அந்த பெறுமதி 2021 ஆம் ஆண்டின் அரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. எனினும் 2022 மே 19 ஆந் திகதி அச்சிடப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட 814-1 அறிக்கையின் பிரகாரம் அந்த கடன் 19 கடன் உடன்படிக்கைகளுக்குரிய 2021 ஆம் ஆண்டின் தீர்வையான வெளிநாட்டுக் கடனாக ரூபா 39,174 மில்லியன் காணப்பட்டது. அதற்கமைய நிதிக்கூற்றுக்களில் 2021 ஆம் ஆண்டிற்குரியதாக தீர்வையான வெளிநாட்டுக் கடனின் அளவு ரூபா 23,966 மில்லியனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

- 2022 மே 19 ஆந் திகதி அச்சிடப்பட்டு 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக 814-1 அறிக்கையின் கடன் இலக்கம் 2016028 இற்குரியதாக ஐக்கிய அமெரிக்க டொலர் 729,484.66 அல்லது ரூபா 146,217,030 ஆன மறை தீர்வையாதல் ஒன்று காண்பிக்கப்பட்டிருந்தது. கடன் உடன்படிக்கைக்குரிய செயற்திட்டத்திற்கு வழங்கிய ஆரம்ப முற்பணத்தின் செயற்திட்டத்தை நிறைவு செய்யும் போது எஞ்சிய அளவு மீள செலுத்தல்களாக உள்ளடங்கியிருந்த போதிலும் அந்த கொடுப்பனவு அரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

அரச கடன் கணக்கு வைத்தல்

அரச கடன் கணக்கு வைப்பதற்காக பின்பற்றப்பட்டிருந்த கணக்கீட்டு நடைமுறை / அடிப்படை அவ்வவ்போது மாற்றப்பட்ட காரணத்தால் அரச நிதிக்கூற்றுக்களில் ஒப்பீட்டுத் தன்மையை பாதுகாக்க முடியாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

- 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் வெளியிடப்பட்ட திறைசேரி பிணை முறிகளின் ஆகக்குறைந்த விலைகள் கணக்கு வைக்கப்படாத காரணத்தால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 318,246 மில்லியன் நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் இந்த ஆகக்குறைந்த விலையினை கணக்கு வைப்பதற்காக ரூபா 318 பில்லியனான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதுடன் அது நடைமுறையில் அவ்வாறானதொரு பாரிய நிதியேற்பாட்டினை மேற்கொள்ளுதல் வரவு செலவுத் திட்ட பற்றாக்குறைக்கு காரணமாக அமைவதால் 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் வெளியிடப்பட்ட பிணை முறிகளுக்குரிய ஆகக்குறைந்த விலைகள் அந்த பிணை முறிகள் முதிர்வடையும் ஆண்டில் சீராக்குவதற்கும் அதுவரையிலும்

நிதிக்கூற்றுக்களின் குறிப்பொன்றாக இந்த பிணை முறிகளின் முகப் பெறுமதியை வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரச கணக்குகள் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அவ்வாறு நிதியேற்பாட்டை பெற்றுக் கொள்ளாது அந்த பெறுமதி கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் அந்த மீதி 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது.

- 2020 ஆம் ஆண்டின் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மத்திய வங்கியின் முற்பணங்கள், உள்நாட்டு கடன்களாக வகைப்படுத்தப்பட்டு அதற்குரிய காரணங்களும் முன்வைக்கப்பட்டிருந்தன. எனினும் 2021 ஆம் ஆண்டின் போது அந்த மத்திய வங்கியின் முற்பண மீதியான ரூபா 150.1 மில்லியன் உள்நாட்டுக் கடன் வகைப்படுத்தலிலிருந்து அகற்றப்பட்டு தனியானதொரு உருப்படியாக காண்பிக்கப்பட்டிருந்தது.

- வெளிநாட்டுக் கடன்களுக்குரிய காசுப்பாய்ச்சல் முகாமைத்துவம் மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல்களில் கணக்கு வைப்பதற்கு உரிய நடைமுறையொன்று திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

வெளிநாட்டு உதவிகளை பெற்றுக்கொள்ளல்

1994 ஏப்ரல் 20 ஆந் திகதிய 30/94 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வெளிநாட்டு உதவிகள் தொடர்பிலான அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்தது. அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 2021 ஆம் ஆண்டில் பொதுதிறைசேரியில் அறிவிக்காது 2 நிறுவனங்களால் 7 செயற்திட்டங்களுக்காக ரூபா 24.77 மில்லியனான வெளிநாட்டு உதவிகள் நேரடியாக பெற்றுக்கொண்டிருந்த போதிலும் அந்த மானியங்கள் அரச நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

- 2020 ஆம் ஆண்டில் இலங்கையில் கொவிட் 19 தொற்றநோய் பரவல் ஆரம்பித்தவுடன் பல்வேறு வெளிநாட்டு அரசுகள், உள்நாடு / வெளிநாட்டு நிறுவனங்கள் / அமைப்புக்கள், நபர்கள் மற்றும் உள்நாட்டு / வெளிநாட்டு அரச அல்லாத அமைப்புக்களினால் சுகாதார

அமைச்சிற்கும் அதன் கீழ் உள்ள மருத்துவமனைகள் மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்களுக்கு 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட நிதி மற்றும் நிதியல்லாத நன்கொடைகள் / வெகுமதிகளாக ரூபா 1,949 மில்லியன் கிடைத்திருந்தது. அவ்வெகுமதிகள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் மேற்குறிப்பிடப்பட்ட தரப்பினர்களிடமிருந்து கிடைத்திருந்த 162,465 பெறுமதியான பண்டங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

அரசுக்கு சொந்தமான முயற்சிகளின் மூலதனப் பங்களிப்பு

2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அரசுக்கு சொந்தமான முயற்சிகளின் மூலதனப் பங்களிப்பு ரூபா 760,777.41 மில்லியனாக காணப்பட்டதுடன் இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- அரசினால் வழங்கப்பட்ட ரூபா 8,169 மில்லியனான உபகடனொன்று வரையறுக்கப்பட்ட மில்கோ (தனியார்) கம்பனியினால் செலுத்தப்பட்டிராததுடன் திறைசரியினால் அக்கடன் தொகை பதிவழிக்கப்பட்டிருந்துதுடன் அதற்காக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு பதிவழிக்கப்பட்டிருந்த வருமானம் அக்கம்பனியின் மூலதனத்திற்கு அரசின் பங்களிப்பாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அக்கொடுக்கல் வாங்கல் வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தில் நிதியேற்பாடுகளை பெற்றுக்கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டியதாக இருந்த போதிலும் அவ்வாறு மேற்கொண்டமைக்கான தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

- அரச கூட்டுத்தாபனம் மற்றும் பங்குரித்துள்ள 13 அரச முயற்சிகள் மற்றும் கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட நேரடி மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அந்த நிறுவனங்களின் மூலதனப் பங்களிப்பு ரூபா 439,639 மில்லியனாக காணப்பட்டதுடன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அம்மீதி ரூபா 411,874 மில்லியனான காரணத்தினால் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிதிக்கூற்றுக்களில் அரச மூலதனப் பங்களிப்பு ரூபா 27,765 மில்லியனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

- 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அரசிற்குச் சொந்தமான 5 வரையறுக்கப்பட்ட கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட நேரடி மீதி உறுதிப்படுத்தல்களின் அரசின் மொத்த மூலதனப் பங்களிப்பின் பெறுமதி குறிப்பிடப்பட்டிராததுடன் பங்கொன்றின்

சந்தைப் பெறுமதி குறிப்பிடப்பட்டிருந்துது. மேலும் அரசின் நிதிக்கூற்றுக்களில் அந்த நிறுவனங்களின் பங்குடமை பெறுமதி பங்குகளின் பேரளவு பெறுமதியை அடிப்படையாக் கொண்டு இனங்காணப்பட்டு ரூபா 38 மில்லியன் என குறிப்பிடப்பட்டிருந்தது.

- அரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தலைப்பு 290 - கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான வாடகை மற்றும் பணி முற்பண மீதி ரூபா 8.52 மில்லியனாக காணப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் அத்திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வாடகை மற்றும் பணி முற்பணக் கணக்கில் மீதியொன்று காணப்படவில்லை.

திறைசேரியின் அங்கீகரிக்கப்பட்ட முற்பணக் கணக்குகள்

2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட முற்பணக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகையாக ரூபா 15,727.68 மில்லியன் அரசின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த மீதிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்ட அவதானிப்புக்கள் பின்வருமாறு.

- 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பல வருடங்களாக முன்கொண்டுவரப்படும் அரசின் அங்கீகரிக்கப்பட்ட திறைசேரி முற்பணக் கணக்குகளின் கீழ் ரூபா 1,373 மில்லியனான வரவு மீதியொன்றும் மற்றும் ரூபா 19.92 மில்லியனான செலவு மீதியொன்றும் நிலவியது. அம்மீதிகள் தொடர்பில் தொடர்ச்சியாக கணக்காய்வில் மேற்கொண்ட வினவல்களில் நிதிப்பிரமாணம் 518 இன் பிரகாரம் செயற்பட்டு அவற்றை மூடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த முற்பணக் கணக்குகளிலிருந்து 3 கணக்குகளின் மீதிகள் 2022 ஆம் ஆண்டில் தீர்ப்பனவு செய்யப்பட்டு மூடப்பட்டிருந்தது. எஞ்சிய முற்பணக் கணக்குகளின் மீதிகள் 2022 மே 19 ஆந் திகதி வரையிலும் முடிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- தலைப்பு 111 - சுகாதார அமைச்சின் கீழ் ரூபா 1,221.65 மில்லியனான களஞ்சிய மற்றும் ஏனைய முற்பணக் கணக்கில் ஆரம்ப மீதிகள் நிலவிய போதிலும் அதற்குரிய காரணங்களை ஆராயும் போது எந்தவித அடிப்படையும் இல்லாது பெயரளவில் இம்மீதி பேணிச் செல்லப்படுகின்றமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அதற்குரிய கணக்காய்வு ஐயவினாக்கள் அவ்வவ்போது வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் 2022 மே 20 ஆந் திகதி வரையிலும் அதற்குரிய நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

நிதியல்லாத சொத்துக்கள்

2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிதியல்லாத சொத்துக்களாக ரூபா 1,850,007.34 மில்லியன் காண்பிக்கப்பட்டிருந்தது. அம்மீதிகள் தொடர்பில மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்ட அவதானிப்புக்கள் பின்வருமாறு.

- 2017 மார்ச் 20 ஆந் திகதிய **MF/NB/01/CM/2017/85** ஆம் இலக்க "பாதுகாப்பு அமைச்சினால்" அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக உள்நாட்டு வங்கிகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் மற்றும் வட்டி கணக்குகளில் உள்ளடக்குதல்" எனும் தலைப்பில் நிதியமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் ஆளடையாள பொதுச் செயலாளர் அலுவலக் கட்டிடத்தின் பெறுமதி அரச சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு அங்கீகாரம் கோரப்பட்டிருந்ததுடன் 2017 ஏப்ரல் 05 ஆந் திகதிய அமப/17/0632/719/062 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2021 திசெம்பர 31 ஆந் திகதி வரையிலும் அந்த சொத்துக்களை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- 2006 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலும் அரசின் முதலீடுகளாக ரூபா 8,199 பில்லியன் ஆன தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் பௌதீக சொத்துக்களின் நிர்மாணம் அல்லது கொள்வனவுகள் மற்றும் ஏனைய முதலீடுகளை சுவீகரித்தலாக காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் 2021 ஆம் ஆண்டின் நிதிநிலைமைக் கூற்றில் நிதியல்லாத சொத்துக்களாக அவற்றுள் ரூபா 1,850 மில்லியன் மாத்திரம் சொத்துக்களாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருந்தது.
அச்செலவினங்களினுள் உப கடன் ரூபா 173 பில்லியனும், அரச முயற்சிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட மூலதன பங்களிப்பு ரூபா 761 பில்லியனுமாக ரூபா 934 பில்லியன் கூட்டுத்தொகை நிதிச்சொத்துக்களாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய மீளாய்வாண்டின் இறுதியளவில் நிதி மற்றும் நிதியல்லாத சொத்துக்களாக ரூபா 934 பில்லியன் கூட்டுத்தொகை கணக்கு வைக்கப்பட்டிருந்தது.அதற்கமைய மீளாய்வாண்டின் இறுதியளவில் நிதி மற்றும் நிதி அல்லாத சொத்துக்களாக ரூபா 2,784 பில்லியன் கூட்டுத்தொகை கணக்கு வைக்கப்பட்டிருந்தது. காசுப்பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்த பௌதீக சொத்துக்களின் நிர்மாணங்கள் அல்லது கொள்வனவுகள் மற்றும் ஏனைய முதலீடுகளை சுவீகரித்தல்களின் கூட்டுத்தொகை ரூபா 8,199 பில்லியனில் ரூபா 5,415 பில்லியன் அல்லது 66 சதவீதம் பெறுமதியான சொத்துக்களை இனங்கண்டு கணக்கு வைக்க தவறியிருந்தது. 2005 ஆம் ஆண்டு

முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் நிதிக்கூற்றுக்களினுள் நிதியல்லாத சொத்துக்கள் கணக்கு வைக்கப்பட்டிராததுடன் அது 2015 ஆம் ஆண்டு முதல் கணக்கு வைக்க ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

சமூக பாதுகாப்பு வலையமைப்பு செயற்திட்டம்

நிதியமைச்சின் கீழ் உள்நாட்டு நிதியங்கள், வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் நன்கொடைகளை ஈடுபடுத்தி செயற்படுத்தப்படும் சமூக பாதுகாப்பு வலையமைப்பு செயற்திட்டம் **(SSNP)** இற்காக மீளாய்வாண்டில் ரூபா 8 மில்லியான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே நிதிப்பிரிவினை நவீனமயப்படுத்தும் செயற்திட்டம் **(FSMP)** இற்காக ரூபா 489 மில்லியன் கூட்டுத்தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அச்செயற்திட்டங்களின் செயலாற்றல் மந்தகதியான தன்மையில் நிலவிய காரணத்தினால் சமூக பாதுகாப்பு வலையமைப்பு செயற்திட்டத்திற்காக (SSNP) மேற்கொள்ளப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் 65 சதவீதம் அல்லது ரூபா 5.2 மில்லியனான நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

நிதிப்பிரிவினை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்திற்காக **(FSMP)** ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 489 மில்லியன் கூட்டுத்தொகையான நிதியேற்பாடுகளில் அச்செயற்திட்டத்திற்காக எந்தவிதத்திலும் பயன்படுத்தப்படாது ரூபா 313 மில்லியனான நிதியேற்பாடு ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது.

வரி மேன்முறையீடுகளை விசாரித்தல்

2016 ஆம் ஆண்டு முதல் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவிற்கு 1024 மேன்முறையீடுகள் கிடைத்திருந்ததுடன் அவற்றுக்கிடையே சர்ச்சைக்குரியதான வரித் தொகையாக ரூபா 113,154 மில்லியனான 569 மேன்முறையீடுகள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் விசாரணைகளை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

விசாரணைகளை ஆரம்பித்திராத 569 மேன்முறையீடுகளில் 227 அதாவது 40 சதவீதமான மேன்முறையீடுகள் பதிவு செய்யப்பட்ட திகதியிலிருந்து 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் விசாரணைகளை ஆரம்பிக்காது 02 வருடங்கள் (721 நாட்கள்) விஞ்சியிருந்தது. அதற்குரிய சர்ச்சைக்குரிய வரித்தொகையின் பெறுமதி ரூபா 47,727 மில்லியன் ஆகும்.

பொதுமுயற்சிகளின் கண்காணிப்பு மற்றும் நிர்வாகம்

பொது முயற்சிகள் திணைக்களத்தின் பிரதான பணியாக பொதுமுயற்சிகளின் கண்காணிப்பு மற்றும் நிர்வாகம் உள்ளடங்கும் பொதுத்திறைசேரியினால்

பெரும்பாலான பொது முயற்சிகளின் பணிப்பாளர் சபையை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக பிரதிநிதியொருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டின் 19 பொதுமுயற்சிகளுக்குரியதாக வெளியிடப்பட்ட கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்கியுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான 105 இணக்கமின்மைகள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. அந்த சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றிற்கு இணங்கும் வகையில் செயற்பட அரச முயற்சிகளை ஊக்குவித்தல் திறைசேரி முகவரினால் மேற்கொள்வதற்கு தவறியிருந்தது. அவ்வாறே பொதுமுயற்சிகள் திணைக்களத்தின் கண்காணிப்புக்கு உள்ளாகும் 300 நிறுவனங்களிடையே 119 நிறுவனங்கள் பொதுமுயற்சிகளுக்கு சொந்தமான உப கம்பனிகளாவதுடன் இந்த உப கம்பனிகள் திணைக்களத்தின் நேரடிக் கண்காணிப்புக்கு உள்ளாக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

கால அடிப்படையிலானதும் சரியானதுமான தரவுகளை வழங்குதல்

கால அடிப்படையிலானதும் சரியானதுமான சரியாக தகவல்களை வழங்குவதன் மூலம் ஆக்கபூர்வமாக நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிக்கும் குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் செயற்பணியாக காணப்பட்டது. மீளாய்வாண்டில் 62 தரவு அறிக்கைகள் வலைததளததில் வெளியிடுவதற்கும் 23 தரவு அறிக்கைகளை அச்சிட்டு உரிய குறிகாட்டிகளை குறித்த காலப்பகுதியினுள் வெளியிடவும் வேண்டியதாக இருந்தது. அந்த அறிக்கைகளில் எந்த அறிக்கையும் உரிய திகதியில் வெளியிடப்பட்டிராததுடன் 01 மாதம் முதல் 11 மாதங்கள் வரையான காலதாமதத்தின் பின்னர் அவை வெளியிடப்பட்டிருந்தன.

விவசாயத் துறை

கணக்காய்வு அவதானிப்புக்கள்

- விவசாய அமைச்சிற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடத்தின் வாடகை உடன்படிக்கை காலம் முடிவடைதல்
- "ஜீவ துரு உதானா" தேசிய நிகழ்ச்சித்திட்டம்
- சேதனப் பசளை உற்பத்தி, பயன்பாடு மற்றும் விவசாயிகளுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்குதல் தொடர்பான பிரச்சார செலவினம
- நீரிறைக்கும் இயந்திரம் மற்றும் தூவல் நீர் தொழில்நுட்ப செயற்திட்டம
- தரிசு நிலங்களில் பயிர்ச்செய்கையில் ஈடுபடுதல்
- இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை
- "ரன் கெவிலிய" தொழில்முனைவு பொதுக் கம்பனி
- மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பயன்படுத்தப்படாத தோட்டங்கள்
- மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

விவசாயத் துறை

சமூக ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட வணிகப் போக்கைக் கொண்ட உலகளாவிய போட்டி உற்பத்திப்பொருளை உருவாக்கும் இயற்கை வளங்கள் மற்றும் தொழில்முனைவோர் விவசாயத்தின் நிலைபேறான முகாமைத்துவத்தை உணர்ந்துகொள்வதன் மூலம் உணவுப் பாதுகாப்பு மற்றும் தேசிய செழிப்பிற்காக வினைத்திறனான, பயனுள்ள மற்றும் சக்திவாய்ந்த விவசாயத் துறையொன்றை ஸ்தாபித்தல் இத் துறையின் பிரதான இலக்காக இனங்காணப்பட்டுள்ளது. மேற்படி நோக்கத்தை அடைந்துகொள்ளும் பொருட்டு விவசாய அமைச்சு, 02 இராஜாங்க அமைச்சுக்கள், 03 திணைக்களங்கள் மற்றும் 14 நியதிச்சட்ட நிறுவனங்கள் பின்வரும் தொழிற்பாடுகளை ஆற்ற வேண்டியுள்ளதுடன் அதற்காக பாதீட்டில் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது.

- நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய கல்வி வாய்ப்புக்களுக்கு பாரம்பரிய விவசாயிகள், இளைஞர்கள் மற்றும் மாணவர் சமூகத்தை வழிநடாத்துவதற்கு ஒவ்வொரு இலக்கு குழுவிற்கும் பொருத்தமானவாறு விவசாய தொழில்நுட்ப அறிவை விரிவுபடுத்துதல்.
- இளம் விவசாய தொழில்முனைவோரை உருவாக்குவதை ஊக்குவித்தல்.
- விவசாயத்தை மேம்படுத்துவதற்காக அனைத்து தொடர்புடைய நிறுவனங்களையும் ஒருங்கிணைக்கும் பொறிமுறை ஒன்றுடனான அணுகுமுறையொன்றை உருவாக்கி செயற்படுத்துதல்.
- குறித்துரைக்கப்பட்ட நியமத்தின் பிரகாரம் விவசாயத்தில் பயன்படுத்தப்படும் இரசாயன பூச்சிக்கொல்லிகள் மற்றும் ஏனைய இரசாயன கலவைகளை ஒழுங்குபடுத்துவதற்கான முறைமையொன்றை அபிவிருத்தி செய்தல்.
- விவசாய செயற்பாடுகளுக்காக தேவையானவாறு நிதி வளங்கள், பயிர் காப்புறுதித் திட்டங்கள் மற்றும் விவசாயிகளின் ஓய்வூதியத் திட்டங்களை விரிவுபடுத்துதல்.
- நேரடி உற்பத்தியாளர்கள், செயன்முறைப்படுத்தும் கம்பனிகள், மொத்த விற்பனை நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதி கம்பனிகளுக்கிடையிலான ஏற்பாட்டியல் சங்கிலியை வலுப்படுத்துவதன் மூலம் விவசாயிகளின் உற்பத்திகளுக்கு அதிக விலைகளை உறுதிப்படுத்துதல்.
- உற்பத்திப்பொருள் சந்தைப்படுத்தல் வசதிகளுக்கான புதிய மூலோபாயத் திட்டத்தை அமுல்ப்படுத்துதல்.
- உற்பத்தியாளர்களின் வருமான வீழ்ச்சியைக் கட்டுப்படுத்த அறுவடை நேரத்தில் அரசாங்கத்தின் திட்டமிடப்பட்ட தலையீடுகள்.
- காலநிலை மாற்றம் மற்றும் வானிலை தொடர்பான நாளாந்த தகவல்களை விவசாய சமூகத்திற்கு தெரிவிப்பதன் மூலம் இயற்கை அனர்த்தங்களை குறைத்தல்.
- விவசாய சமூகத்திற்கு தரமான விதைகள் மற்றும் செடிகளை வழங்குவதற்கான மூலோபாயத்தை அமுல்ப்படுத்துதல்
- விவசாயிகளின் பயிரிடல் தேவைகளின் பிரகாரம் நீர் விநியோகத்தை

உறுதிப்படுத்தும் நீர் முகாமைத்துவத்தை அமுல்ப்படுத்துதல்.

- வெவ்வேறு புவியியல் பகுதிகளுக்கு பொருத்தமான கால்நடைகளை அறிமுகப்படுத்தும் பொருட்டு ஆராய்ச்சிகளை நடாத்துதல் மற்றும் நடுத்தர அளவிலான பண்ணை அபிவிருத்தியை ஊக்குவித்தல்.
- கால்நடை அடிப்படையிலான உற்பத்தியை மேம்படுத்தி அவற்றின் ஏற்றுமதிகளை ஊக்குவித்தல்.
- தேசிய கால்நடை சபை மூலம் உயர்தர புற்களை அறிமுகப்படுத்துதல்.
- நடுத்தர மற்றும் பெரிய அளவிலான கால்நடை பண்ணைகளை நிர்மாணிப்பதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து தேவையான நிலம் மற்றும் முதலீட்டு வசதிகளை வழங்குதல்.
- அரசாங்க விலங்கு பண்ணைகளின் ஆகக்கூடிய பயன்பாட்டை ஏற்படுத்துவதற்கு நிகழ்ச்சித்திட்டங்களை இயக்க நிலையில் தயார் செய்தல்.
- கோழி இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தியை விரிவுபடுத்தி அவற்றின் ஏற்றுமதியை ஊக்குவித்தல்.
- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உற்பத்தியாளர்களை மேம்படுத்துவதன் மூலம் உள்ளூர் உற்பத்தி மற்றும் நுகர்வு வாய்ப்புக்களை விரிவுபடுத்துதல்.
- விலங்கு பண்ணைகள் மற்றும் உற்பத்தி வசதிகளுக்காக சர்வதேச நியமங்கள் மற்றும் பயனுள்ள கண்காணிப்பு முறைமைகளை அறிமுகப்படுத்துதல்.
- கால்நடை வசதிகளை விரிவுபடுத்துவதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தரளவிலான விவசாயிகளுக்கு வசதியளித்தல்.
- உள்ளூர் விவசாயி மற்றும் நுகர்வோரின் திருப்திக்காக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து நியாய விலைக் கொள்கை மற்றும் பயிர் பல்வகைமைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்ப்படுத்துதல்.
- கரிம உரங்கள் மற்றும் நச்சுத்தன்மையற்ற உணவு உற்பத்தியை பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துதல்.
- கரிம காய்கறிகள் மற்றும் பழங்களின் நுகர்வை உள்நாட்டு மட்டத்தில் விரிவுபடுத்துவதற்காக சமுர்த்தி மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்ப்படுத்துதல்.
- காய்ந்த மிளகாய், சோளம், சோயா, பச்சைப் பயறு மற்றும் கௌப்பி, வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு போன்ற பயிர்களின் உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் அதன் மூலம் அத்தகைய உற்பத்திப் பொருட்களின் இறக்குமதியைக் குறைத்தல்.
- மிகை உற்பத்திப் பொருட்களை சேமிப்பதன் மூலமும் பெறுமதி சோதனை மூலமும் ஏற்றுமதிகளிற்கு வசதியளிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை அமுல்ப்படுத்துதல்.
- பெறுமதி சேர்க்கப்பட்ட விவசாய உற்பத்தி மற்றும் அவற்றின் ஏற்றுமதிக்காக விவசாய அறுவடை சேகரிப்பு மற்றும் செயன்முறைப்படுத்தல் நிலையங்களை மேம்படுத்துதல்.

- காய்கறி மற்றும் பழங்கள் தொடர்பான ஏற்றுமதி உற்பத்தி தொழில்துறைகளை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துதல்.
- சர்வதேச தரத்திலான விதை உற்பத்திக்காக உள்ளூர் விதை கொள்கையொன்றை அறிமுகப்படுத்துதல்.
- இறக்குமதி செய்யப்பட்ட விதைகளின் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக இலங்கை நியமங்கள் நிறுவகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரச்சான்றிதழ்களுக்குள் விதைகளின் இறக்குமதியை ஒழுங்குபடுத்துதல்.
- தரமான விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு தனியார் துறையை ஊக்குவித்தல்.
- தனித்துவமாக முளைக்கும் தரத்துடனும் நோய்கள் மற்றும் காலநிலை மாற்றங்களிற்கு எதிர்த்து நிற்கக்கூடியதுமான அதிக மகசூல் தரும் நாற்றுகளை அறிமுகப்படுத்துதல்.
- அரசாங்க பண்ணைகள் மற்றும் விதை உற்பத்தி பண்ணைகளை அபிவிருத்தி செய்தல்.
- புதிய தொழில்நுட்ப முறைகளின் கீழ் நிலத்தடி நீரை தயார்படுத்துதல், மண்ணை தயார்படுத்துதல், விதை மற்றும் செடியைத் தெரிவுசெய்தல், உரத்தை பயன்படுத்துதல், அறுவடைக்கு முன்னரும் பின்னரும் பிராந்திய மட்டத்தில் விரிவான ஆய்வுகளை நடாத்தி விவசாயிகளுக்கு இதில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- தொழில்நுட்ப விவசாயமொன்றை நோக்கி செல்ல தேவையான அறிவு, தொழில்நுட்ப உபகரணங்கள், நில பயன்பாடு, நிதி பங்களிப்பு ஆகியவற்றின் மூலம் சந்தை பெறுமதி சேர்க்கப்பட்ட தொழில்துறை உற்பத்திப்பொருட்களை நோக்கி வழிகாட்டுதல்.
- அறுவடை, போக்குவரத்து மற்றும் இறக்குதல் ஆகியவற்றின் போதான கழிவுகளை தடுப்பதற்கு புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அரச மற்றும் தனியார் துறைகளுடன் இணைந்து நிகழ்ச்சித்திட்டமொன்றை அமுல்ப்படுத்துதல்.
- நீர் சேமிப்பை பயன்படுத்துவதன் ஊடாக மகசூலை அதிகரிக்கும் முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் நீர் நுகர்வு பொருளாதார நன்மைகளை அதிகப்படுத்துதல்.
- நெல், தானியங்கள், மிளகு, கிராம்பு, கொக்கோ மற்றும் காய்கறிகள், பழங்கள் மற்றும் வீட்டுத் தோட்டங்கள் உள்ளடங்கிய பிரதான பயிர்களுக்கான தொழில்நுட்ப பயிரிடல் முறைகளை அறிமுகப்படுத்துவதற்காகவும் உயர் தரத்திலான விதைகள், செடிகள் மற்றும் உரங்களை சரியான நேரத்தில் விநியோகிப்பதற்காகவும் முறைமைகளை உருவாக்குதல்.
- உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி சர்வதேச தரத்திற்கு இணங்க கரிம உரங்களை உற்பத்திசெய்தல் மற்றும் நாட்டில் உயர்தர உரங்களின் உற்பத்தியை ஊக்குவித்தல்.

2021 ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக பாராளுமன்றத்தினால் கமத்தொழில் அமைச்சு, அதன் கீழ் தொழிற்படும் இராஜாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்காக ரூபா 76,221.40 மில்லியன் கூட்டுமொத்தமான நிதியேற்பாடு

வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை அந்நிதியேற்பாட்டில் ரூபா 53,013.00 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி ஆண்டின் இறுதியிலுள்ளவாறான சேமிப்பு ரூபா 23,208.40 மில்லியன் ஆகும். விபரங்கள் உரு 24 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.



	விவசாய அமைச்சு	நெல் மற்றும் தானியங்கள், சேதனப் பசளை, மரக்கறிகள், பழங்கள், மிளகாய், வெங்காயம் மற்றும் கிழங்கு பயிர்ச்செய்கை...	சேதனப் பசளை உற்பத்தி மற்றும் வழங்கல் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு	கமநல அபிவிருத்தி திணைக்களம்	விவசாயம் மற்றும் கமநலக் காப்புறுதி சபை	மொத்தம்
தேறிய	16இ786.80	8இ720.60	35இ554.20	10இ013.30	5இ146.50	76இ221.40
செலவினம்	11இ924.20	5இ463.60	21இ627.40	8இ950.80	5இ047.00	53இ013.00
சேமிப்பு	4இ862.60	3இ257.00	13இ926.80	1இ062.50	99.50	23இ208.40

உரு 24 - வழங்கப்பட்ட நிதியேற்பாடு மற்றும் செலவினம் மூலம் - 2021 இன் வருடாந்த நிதிக்கூற்றுக்கள

விவசாயத் துறையினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நியதிச்சட்ட நிறுவனங்களிற்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்த மேற்குறிப்பிட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுதலுடன் தொடர்புடைய கணக்காய்வுப் பரிசோதனையில் பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

விவசாய அமைச்சிற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடத்தின் வாடகை உடன்படிக்கை காலம் முடிவடைதல்

விவசாய அமைச்சுக்காக வாடகைக்கு எடுக்கப்பட்ட கட்டிடத்தின் உரிமையாளரான தனியார் கம்பனிக்கும் விவசாய அமைச்சுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள 2178 ஆம் இலக்க குத்தகை ஒப்பந்தக் காலம் முடிவடைவதற்கு முன்னர் குத்தகைக்கு எடுத்தோருக்கும் குத்தகைக்கு வழங்கியோருக்கும் தேவையேற்பாடுமாயின் எவ்வாறு குத்தகை ஒப்பந்தத்தை நிறுத்தலாம் என்பது குறித்த நிபந்தனையை குத்தகை ஒப்பந்தத்தில் சேர்க்காததால், 5 ஆண்டுகளிற்காக வாடகைக்கு எடுக்கப்பட்ட கட்டிடத்தை அதன் நான்காவது ஆண்டில் மீளக் கையளிக்கையில் மீதமுள்ள குத்தகை காலத்திற்கு விகிதாசாரமாக வாடகைத் தொகையைக் குறைக்கும் வாய்ப்பு இழக்கப்பட்டிருந்தமையால் கட்டிடத்தை பயன்படுத்தாத காலத்திற்காக ரூபா 310.94 மில்லியன் தொகை சிக்கனமற்ற விதத்தில் செலவிடப்பட்டிருந்தது.

குத்தகைக்கு எடுக்கப்பட்ட ஆதனத்தை விட்டு வெளியேறும்போது, குத்தகைக் காலத்தில் குத்தகைதாரர் மூலம் குத்தகைக்கு எடுக்கப்பட்ட கட்டிடத்திற்கு ஏற்பட்ட சேதம் குறித்து இரு தரப்பினரினதும் இணக்கப்பாட்டுடன் ஒரு சேத இழப்பு அறிக்கையை பொருத்தமான தொழில்நுட்ப நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை ஒப்பந்தத்தில் காணப்பட்டிருக்கவில்லை. குத்தகைக் காலத்தில் குத்தகைதாரரால் குத்தகைக்கு எடுக்கப்பட்ட கட்டிடத்திற்கு ஏற்பட்ட சேதத்தை மதிப்பிடுவதற்காக, அமைச்சின் பொறியியல் பிரிவும் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் அதிகாரிகளும் இணைந்து 2021 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் நடத்திய பரிசோதனையில் பங்கேற்குமாறு குத்தகைக்கு வழங்கியோருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அவர்கள் சம்பந்தப்பட்ட பரிசோதனையில் பங்கேற்பதற்கு மறுப்புத் தெரிவித்திருந்ததுடன் விவசாய அமைச்சு அதிகாரிகளின் மதிப்பீட்டின்படி, கட்டிடத்திற்கு ரூபா 12.71 மில்லியன் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் அதேவேளை குத்தகைக்கு வழங்கிய கம்பனி மேற்கொண்ட மதிப்பீட்டின்படி, கட்டிடத்திற்கு ரூபா 28.25 மில்லியன் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் ஒன்றுக்கொன்று முரணான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருந்தமையால், சேதங்கள் தொடர்பாக இரு தரப்பினரிடையே முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தமை காரணமாக விவசாய அமைச்சுக்கு ரூபா 15.54 மில்லியன் மேலதிக பொறுப்பு ஏற்படும் அபாய நிலை உருவாகியுள்ளது.

ஒப்பந்த நிபந்தனைகள் இலக்கம் II இன் படி, ஒப்பந்த காலம் முடிவில் குத்தகைதாரர் குத்தகைக்கு எடுக்கப்பட்ட சொத்தினை கையளித்த பின்னர் ஒரு மாதத்திற்குள் மீளளிக்கப்பட்ட வேண்டிய வைப்புத் தொகையான ரூபா 63 மில்லியனை குத்தகைக்கு வழங்கியோன் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும். ஆனால், குத்தகைதாரர் குத்தகைக்கு எடுத்த சொத்தை மீள ஒப்படைத்து ஒப்பந்தத்தை முடிவிற்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுத்திருந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், குத்தகைக்கு வழங்கியோன் அதை எதிர்த்தும் ஒப்பந்தத்தின் அடிப்படை விதிமுறைகளுக்கு முரணாகவும் செயற்பட்டிருந்தமையால் மேற்படி வைப்புப் பணத்தை பெற முடிந்திருக்கவில்லை.

"ஜீவ துரு உதானா" தேசிய நிகழ்ச்சித்திட்டம்

கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 05 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் ஊட்டச்சத்து அளவை அதிகரிக்கும் நோக்கில் கமத்தொழில் அபிவிருத்தித் திணைக்களமும் விவசாய இராஜாங்க அமைச்சும் இணைந்து "ஜீவ துரு உதான" தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு 2021 மே 04 ஆந் தேதியிட்ட அமப/21/0689/323/026 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் ஒப்புதல் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, குடும்ப சுகாதார சேவை அதிகாரிகளின் ஒத்துழைப்புடன், ஒவ்வொரு விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் பிரிவுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 100 பயனாளிக் குடும்பங்களிற்கு அவர்களின் தோட்டங்களில் பத்து இலட்சம் முருங்கை செடிகளை நடுவதற்காக இராஜாங்க அமைச்சின் உணவுப் பாதுகாப்பு செலவின விடயத்தின் (425-2-3-004-2509) கீழ் 2021 ஆம் ஆண்டில் ரூபா 55.62 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இத்திட்டத்தின் கீழ் 999,211 முருங்கை செடிகள் ரூபா 41.96 மில்லியன் செலவில் விநியோகிக்கப்பட்டிருந்தது. விவசாய இராஜாங்க அமைச்சுச் செயலாளரின் 2021 ஏப்ரல் 05 ஆந் தேதியிட்ட 03/2021 ஆம்

இலக்க சுற்றறிக்கையின் மூலம் மேற்கூறிய பயனாளி குடும்பங்களின் தோட்டங்களில் பத்து இலட்சம் முருங்கை செடிகளை நடுவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்த போதிலும், சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களிற்கு முரணாக ரூபா 2.35 மில்லியன் பெறுமதியான 56,025 மரக்கன்றுகள் சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

விவசாய நெல் மற்றும் தானியங்கள், கரிம உணவு காய்கறிகள், பழங்கள், மிளகாய் மற்றும் உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கையினை அதிகரிக்கும் விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப விவசாய இராஜாங்க அமைச்சின் ஊடாக கமத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்திற்கு ரூபா 21 மில்லியனை நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்ததுடன், 418,363 முருங்கை செடிகளை 516 கமத்தொழில் சேவைகள் நிலையங்களிற்கு வழங்குவதற்காக ரூபா 17.59 மில்லியன் தொகையும் விழிப்புணர்வூட்டலுக்காக ரூபா 0.35 மில்லியன் தொகையும் செலவிடப்பட்டிருந்தது. இந்த வேலைத்திட்டத்தின் நோக்கங்களை அடைவதற்காக அமைச்சு முறையான கண்காணிப்பை மேற்கொள்ளாததுடன் மேல்மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வுப் பரிசோதனையின் போது விநியோகிக்கப்பட வேண்டிய செடிகள் முறையாக விநியோகிக்கப்படாமை, கமத்தொழில் சேவைகள் நிலையங்களில் செடிகள் அழிவடைந்துள்ளமை, செடிகளை பெற்றவர்கள் அந்தச் செடிகளை முறையாக நட்டு பராமரிக்காமை மற்றும் வழங்கப்பட்ட செடிகள் குறித்து முறையான கண்காணிப்பு மேற்கொள்ளப்படாமை போன்றன காரணமாக செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 17.94 மில்லியன் பயனற்ற செலவினமாகும் என்பது கணக்காய்வில் தெரியவந்தது.

சேதனப் பசளை உற்பத்தி, பயன்பாடு மற்றும் விவசாயிகளுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்குதல் தொடர்பான பிரச்சார செலவினம்

சேதனப் பசளை உற்பத்தி, பயன்பாடு மற்றும் விவசாயிகளுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்குதல் தொடர்பாக கமத்தொழில் சேவைகள் நிலையங்களிலுள்ள விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள் நிகழ்நிலை (Online) ஊடாக பயிற்றுவிக்கப்பட்டிருக்கையில் பிரச்சார செலவினம சேதனப் பசளை உற்பத்தி, பயன்பாடு மற்றும் விவசாயிகளுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்குதல் தொடர்பான விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சிகளை தொலைக்காட்சியின் ஊடாக ஒளிபரப்புச் செய்வதற்காக 06 ஊடக நிறுவனங்களிற்கு ரூபா 21.66 மில்லியன் தொகை கமத்தொழில் சேவைகள் நிலையங்களால் செலுத்தப்பட்டிருந்தது.

நீரிறைக்கும் இயந்திரம் மற்றும் தூவல் நீர் தொழில்நுட்ப செயற்திட்டம்

இலங்கையின் உலர் வலயங்களில் உள்ள விவசாயிகள் வறட்சி காலங்களின் போது குறைந்த நீரில் அவர்களது பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் பொருட்டும் தற்போதைய எரிசக்தி நெருக்கடிக்கு தீர்வொன்றாகவும் சூரிய சக்தி மூலம் இயங்கும் நீரிறைக்கும் இயந்திரங்கள் மற்றும் தூவல் நீர்ப்பாசன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்காக வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் ரூபா 2,327.2 மில்லியன் தொகையை 2005-2008 ஆண்டு காலப்பகுதியின் போது விவசாய அமைச்சிற்கு வழங்கியிருந்தது. இந் நிதியேற்பாடுகளின் மூலம் 19 கமநல சேவைகள் நிலையங்களிற்கு 7,231 சூரிய சக்தி மூலம் இயங்கும் நுண் நீர் முறைமைகள் வழங்கப்பட்டிருந்தன. இம் முறைமைகளுக்கான அனைத்து

கொடுப்பனவுகளும் 2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு முகவரியிடப்பட்ட 2020 யூலை 03 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 2,264.7 மில்லியன் தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. 2022 ஆம் ஆண்டளவில் விவசாய வங்கிகளில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள பணத்திலிருந்து ரூபா 4.17 மில்லியன் தொகை விவசாய அமைச்சுக்கு செலுத்தப்பட்டிருந்தது. தொடர்ந்தும் விவசாயிகளிடமிருந்து அறவிடப்பட்டு கிளிநொச்சி, பதுளை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலுள்ள விவசாய வங்கிகளில் ரூபா 1.85 மில்லியன் தொகை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. 2022 வரை வழங்கப்பட்ட முறைமைகளில் 90 சதவீதம் காணாமலாக்கப்பட்டும், பயன்படுத்தப்படாமலும், செயலிழந்தும், விவசாயிகளை கண்டுபிடிக்க முடியாதும் இருந்தமை அவதானிக்கப்பட்டமையால் செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அடைந்து கொள்ளப்பட்டிருக்காதமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

தரிசு நிலங்களில் பயிர்ச்செய்கையில் ஈடுபடுதல்

2020/21 ஆம் ஆண்டில் விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் மாவட்ட காரியாலயங்களுக்கு தரிசு வயல்களை பயிரிடுவதற்கான விசேட வேலைத்திட்டத்தின் கீழ் கடன் தொகையாக ரூபா 25 மில்லியன் விவசாயிகளிற்கு வழங்குவதற்காக விடுவிக்கப்பட்டிருந்ததுடன், மாவட்ட அலுவலகங்கள் அத்தொகையில் ரூபா 10.52 மில்லியன் தொகையை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை

2019 முதல் 2021 வரையான 03 வருட காலப்பகுதியில் இந்த இயக்கச் சபையினால் விவசாயத் திணைக்களத்தின் கன்னோருவை உணவு தொழில்நுட்பப் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட மவ்போஷா திட்டம், சுவபோஷ திட்டம், தோசை மாவு உற்பத்தித் திட்டம், சோயா அடிப்படையிலான உணவு உற்பத்தித் திட்டம், பழ பானங்கள் உற்பத்தித் திட்டம் உள்ளிட்ட அனைத்துத் திட்டங்களும் இயந்திரக் கோளாறு மற்றும் மூலப்பொருள் வழங்கல் பிரச்சினை காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன.

1973 இன் 15 ஆம் இலக்க இலங்கை தேசிய பட்டினி இயக்கச் சபைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் அல்லாத குளங்களிலிருந்து மண்ணை அகற்றுவதற்காக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் ரூபா 3.37 மில்லியன் ரூபா செலவிடப்பட்டிருந்ததுடன் அவ்வாறு அகற்றப்பட்ட மண்ணை அதிவேக நெடுஞ்சாலைகளுக்கு விற்பனை செய்து ரூபா 81.13 மில்லியன் வருமானமாகப் பெறப்பட்டிருந்தது. மண் அகழ்வுச் செயற்திட்ட அறிக்கையின்படி, வழங்கிய மண்ணுக்காக சம்பந்தப்பட்ட விவசாய அமைப்புகளிடம் இருந்து சபைக்குப் பணத்தைப் பெற்று, அந்த பணத்தை அரசாங்க நிதி ஒதுக்கீட்டுடன் இணைத்துப் பயன்படுத்தி, விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் பொறியியல் ஆலோசனையின் கீழ், சிறிய குளங்களை முறையான தரத்தில் மேம்படுத்த பயன்படுத்தப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு செய்யப்படாது ரூபா 77.76 மில்லியன்

நிலையான வைப்புக் கணக்ககளில் வைப்பிலிடப்பட்டிருந்தது.

"ரன் கெவிலிய" தொழில்முனைவு பொது பொதுக் கம்பனி

கடந்த ஆண்டிற்கான கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட படி, 2018/2019 ஆம் ஆண்டில் பொலன்னறுவை மாவட்டத்தில் பரந்து விரிந்துள்ள 3,000 ஏக்கர் வயல்வெளியில் "குளோபல் கெப்" (Global Gap) சான்றளிப்பு முறையின்படி நெல் பயிரிடுதல், சர்வதேச தரப்படுத்தல் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு தெளிவுபடுத்துதல் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த நிலைபேறான விவசாய முறையினை பின்பற்றி பொருளாதார நன்மைகளை அடைதல் ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்ட "ரன் கெவிலிய" தொழில்முனைவு பொதுக் கம்பனிக்கு ஓராண்டில் மீளளிக்கும் அடிப்படையில் ரூபா 5.9 மில்லியன் வட்டியில்லா கடனாக வழங்கப்பட்டது. செயற்திட்ட காலக்கெடுவின்படி, விவசாயிகள் நெல் உற்பத்திக்கான GAP (Good Agriculture Practice) சான்றிதழை 2019 மார்ச் மாதத்திற்குள் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், 2021 திசெம்பர் வரையிலும் கூட, ஒரு பண்ணை கூட எதிர்பார்த்த அளவை எட்டாதிருந்ததுடன் வழங்கப்பட்டிருந்த கடன் தொகையேனும் இதுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பயன்படுத்தப்படாத தோட்டங்கள்

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் ஹெக்டேர் பதிவேட்டின்படி, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, தேயிலை மற்றும் ஏனைய பயிர்கள் பயிரிடக்கூடிய 15 தோட்டங்களின் மொத்த விஸ்தீரணம் 10,164 ஹெக்டேர் ஆன போதிலும், அதில் 4790 ஹெக்டேர் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதில் 3573 ஹெக்டேர் தேயிலை சாகுபடிக்கும், 1217 ஹெக்டேர் ஏனைய பயிர்ச்செய்கைக்கும் பயன்படுத்தப்பட்டிருந்தது. மீதமுள்ள 5374 ஹெக்டயர் பகுதி, அதாவது 53 சதவீதம் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. பயன்படுத்தப்படாத நிலத்தில் விவசாயம் செய்யவோ அல்லது வெளி தரப்பினருக்கு குத்தகைக்கு விடவோ சபை நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன், ஹெக்டேர் அறிக்கையின் (Hectarage Statement) படி, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இறப்பர் சாகுபடியின் பரப்பளவு 770 ஹெக்டேராக காணப்பட்டதுடன், இது இறப்பர் சாகுபடிக்காக ஒதுக்கப்பட்டிருந்த 2167 ஹெக்டேர் பரப்பளவில் 35.5 சதவீதத்திற்கும் குறைவானது என்பது அவதானிக்கப்பட்டது. குமாரவத்தை மற்றும் தியலும தோட்டங்களில் இறப்பர் பயிரிடப்படுகிறது, மேலும் தியலும தோட்டங்களிலுள்ள இறப்பர் பயிரிடக்கூடிய நிலப்பரப்பில் 15 சதவீதத்திற்கும் குறைவாகவே பயிரிடப்பட்டிருந்தது.

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு, மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமாக 15 தோட்டங்களில் 15 தேயிலை தொழிற்சாலைகளும் 2 இறப்பர் தொழிற்சாலைகளும் காணப்பட்டன. ஆனால் தற்போது செயல்படுகின்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 7 ஆகும். இதில் 4 தொழிற்சாலைகள்

வெளித்தரப்பினர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்ததுடன், மீதமுள்ள 3 தொழிற்சாலைகளிற்குரிய தோட்டங்கள் மாத்திரமே தேயிலை கொழுந்து பறிக்கும் பணிக்கு பயன்படுத்தப்பட்டிருந்தன. எஞ்சிய 77,000 இயலளவு கொண்ட 8 தேயிலை தொழிற்சாலைகள் தற்போது செயற்படாமல் இருப்பதை அவதானிக்க முடிந்தது. முன்னைய கணக்காய்வு பரிசோதனைகளின் போதும் இது சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், இந்த செயலற்ற தொழிற்சாலைகள் பழுதுபார்க்கப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் தோட்டங்களின் தேயிலை கொழுத்துகளை வெளி தரப்பினருக்கு விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், செயலிழந்து காணப்படுகின்ற தொழிற்சாலைகள் பழுதடைந்து கிடப்பதையும், இத்தொழிற்சாலைகளில் உள்ள பெறுமதிவாய்ந்த இயந்திரங்கள் அழிவுறும் நிலையில் இருப்பதையும் அவதானிக்க முடிந்தது. குமாரவத்தை மற்றும் தியலும தோட்டங்களில் தற்போதுள்ள இரண்டு இறப்பர் தொழிற்சாலைகளும் செயலிழந்துள்ளன.

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி

கணக்காய்வு அவதானிப்புக்கள்
• திட்டமிடப்பட்ட பணிகள் • செயற்திட்டம் நடைமுறைப்படுத்தல், முன்னேற்றம் மற்றும் பின்தொடரல் • எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்படாமை • வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்படாமை

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி

மீன் நுகர்வினை அதிகரித்தல் மூலம் உயர் போசணை மட்டத்துடனான மக்களை, உயர் அந்நியச் செலவாணியை ஈட்டுதல் மற்றும் கடற்றொழில் துறையில் வேலைவாய்ப்புக்களை அதிகரித்தலும் மீன்பிடிக்கும் மக்களுக்கு உயர் வாழ்க்கைத் தரத்தினை வழங்குவதும் இந்த துறையிலிருந்து எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகாக காணப்பட்டன. அந்தப் பெறுபேற்றினை அடைந்து கொள்வதற்காக கடற்றொழில் அமைச்சு, அலங்கார மீன்கள் மற்றும் நன்னீர் மீன்வளர்ப்பு மற்றும் இறால் வளர்ப்பு மீன்பிடி துறைமுகங்களை அபிவிருத்தி , பலநாள் மீன்பிடி செயற்பாடுகள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு, கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் திணைக்களம் மற்றும் 6 நியதிச்சட்ட சபைகள் / நிறுவனங்களினால் பின்வரும் பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டியதாக உள்ளன.

- கரையோரப் பிரதேசங்களில் மீன்களின் தொகை அளவினைக் கூட்டுவதற்காக விஞ்ஞான ரீதியிலான முறையொன்றை அறிமுகப்படுத்துதல்.
- கடற்றொழில் துறைமுகங்களை நவீனமயப்படுத்தல் மற்றும் தேவைப்பாட்டுக்கமைய புதிய துறைமுகங்களை நிர்மாணித்தல்.
- சர்வதேச கடல் பிரதேசங்களில் கடற்றொழிலை விரிவாக்குவதற்காக உள்நாட்டுக் கம்பனிகளுக்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- ரின்மீன் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காகத் தனியார் கம்பனிகள் மற்றும் முதலீட்டாளர்களை ஊக்குவித்தல்.
- உற்பத்தியாளருக்கும் மற்றும் பாவனையாளருக்கும் நியாயம் ஏற்படும் விதத்தில் மீன் உற்பத்தி மற்றும் சந்தை நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்து விரிவாக்குதல்.
- வடக்கு மற்றும் கிழக்குக் கடலில் அத்துமீரி மீன்பிடித்தலை இல்லாதொழித்தலும், கடற்படை மற்றும் கரையோரப் பாதுகாப்பு பிரிவுகளை வலுப்படுத்துவதற்காக, இந்தியாவுடனான முரண்பாடுகளை தீர்த்துவைத்தல்.
- மீனவ சமூகத்திற்குப் பயனுறுதியான வங்கி மற்றும் காப்புறுதி முறையொன்றை அறிமுகப்படுத்துதல்.
- சமுத்திரப் பல்கலைக்கழகத்தை உபயோகப்படுத்தி இளைஞர் யுவதிகளுக்காக கடற்றொழில் செயற்பாடுகள் தொடர்பான தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவப் பயிற்சி வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துதல்.
- மீனவ சமூகத்திற்கான நலன்புரி செயற்பாடுகளை விரிவுபடுத்துதல்
- ஏற்றுமதி சந்தையை நோக்கமாகக் கொண்ட அலங்கார மீன்கள் கைத்தொழிலை ஏற்படுத்துவதற்காகத் தேவையான வசதிகளை வழங்குதல்
- குளங்கள், களப்பு மற்றும் கரை நிலைங்களை அண்டி நன்னீர் மீன் வளர்ப்பு செய்கையை பிரபல்யப்படுத்துவதற்காகத் தேவையான வழிமுறைகளைத் தயார் செய்தல்.

- பெரிய அளவிலான படகுகளின் வழிநடாத்தல் செயற்பாடுகளை வினைத்திறமையாக மேற்கொள்வதற்காக கடற்றொழில் துறைமுகத்தை விருத்தி செய்தல்.
- பலநாள் கடற்றொழில் படகுகளுக்காகக் கடல் நீரை உபயோகித்து குளிரூட்டித் தொகுதியினை விருத்தி செய்தல் மற்றும் சூரிய வலுசக்தியை பாவிப்பதற்கு ஊக்குவித்தல்.
- நவீன தொடர்பாடல் வசதிகள், குளிரூட்டிகள், எரிபொருள் வழங்குதல் மற்றும் துப்பரவேற்பாட்டு வசதிகளுடனான சகல கடற்றொழில் துறைமுகங்கள், நங்கூர நிலையங்களை விருத்தி செய்தல்.
- கடல் மற்றும் நன்னீர் மீன்களைப் பெருக்குவதற்காக கடற்றொழில் சமூக சங்கங்கள் மற்றும் தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையோடு கூட்டிணைந்து நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்தல்.
- சூழல்நேயமான நவீன அதிதொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் மீன் அறுவடையை விருத்தி செய்வதற்காக நடவடிக்கையை எடுத்தல்.
- கடற்றொழிலாளர்களின் மற்றும் அக்கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ளோரின் துறைசார் பயிற்சி மற்றும் அறிவினை விருத்தி செய்தல்.

2021 ஆம் ஆண்டில் மேற்குறிப்பிடப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக கடற்றொழில் அமைச்சு, இராஜாங்க அமைச்சு மற்றும் திணைக்களத்திற்கு மொத்தம் ரூபா 9,214 மில்லியன் நிதி ஏற்பாடு பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை அதில் ரூபா 7,158 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 2,056 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் வரைபட இலக்கம் 25 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.



	கடற்றொழில் அமைச்சு	அலங்கார மீன்கள் மற்றும் நன்னீர் மீன்வளர்ப்பு மற்றும் இறால் வளர்ப்பு மீன்பிடி துறைமுகங்களை அபிவிருத்தி , பலநாள் மீன்பிடி செயற்பாடுகள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு	கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் திணைக்களம்	மொத்தம்
நிதியேற்பாடு ரூபா மில்லியன்	4177	4226	811	9214
செலவினம் ரூபா மில்லியன்	3158	3261	739	7158
சேமிப்பு ரூபா மில்லியன்	1019	965	72	2056

வரைபட இலக்கம் 25 - வழங்கப்பட்ட ஒதுக்கங்களின் அளவு மற்றும் செலவு
மூலாதாரம் - 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள்

கடற்றொழில் அமைச்சு, இராஜாங்க அமைச்சு, திணைக்களம் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களால் மேற்குறித்த செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் கீழே பொழிப்பாக்கி காண்பிக்கப்பட்டுள்ளன.

திட்டமிடப்பட்ட பணிகள்

- கடற்றொழில் அமைச்சின் 2021 ஆம் வருடத்திற்கான மதிப்பீட்டின் மூலம் 09 விசேட முன்னுரிமைப் பணிகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தும் 2021 ஆம் வருடத்திற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு மற்றும் அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் கடற்றொழில் சமூகத்தின் நலன்புரி நடவடிக்கைகளை விரிவுபடுத்தல், மீன்பிடி துறைமுகங்களை நவீனமயப்படுத்தல், மற்றும் தேவைக்கேற்ப மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்கப்படுதல் தவிர்ந்த ஏனைய பணிகளான கடலோரப் பகுதிகளில் மீன் பெருக்கத்தை அதிகரிப்பதற்காக விஞ்ஞான ரீதியிலான முறைமையொன்றை அறிமுகப்படுத்தல், சர்வதேச கடற்பகுதியில் மீன் பிடித் தொழிலை விரிவுபடுத்துவதற்காக உள்ளூர் கம்பனிகளுக்கு சந்தர்ப்பங்களை வழங்குதல், சர்வதேச கடல் பிரதேசங்களில் கடற்றொழிலை விரிவாக்குவதற்காக உள்நாட்டுக் கம்பனிகளுக்குச் சந்தர்ப்பம் வழங்குதல், ரின்மீன் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காகத் தனியார்

கம்பனிகள் மற்றும் முதலீட்டாளர்களை ஊக்குவித்தல், உற்பத்தியாளருக்கும் மற்றும் பாவனையாளருக்கும் நியாயம் ஏற்படும் விதத்தில் மீன் உற்பத்தி மற்றும் சந்தை நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்து விரிவாக்குதல், வடக்கு மற்றும் கிழக்குக் கடலில் அத்துமீரி மீன்பிடித்தலை இல்லாதொழித்தலும், கடற்படை மற்றும் கரையோரப் பாதுகாப்பு பிரிவுகளை வலுப்படுத்துவதற்காக, இந்தியாவுடனான முரண்பாடுகளை தீர்த்து வைத்தல், மீனவ சமூகத்திற்குப் பயனுறுதியான வங்கி மற்றும் காப்புறுதி முறையொன்றை அறிமுகப்படுத்துதல் மற்றும் சமுத்திரப் பல்கலைக்கழகத்தை உபயோகப்படுத்தி இளைஞர் யுவதிகளுக்காக கடற்றொழில் செயற்பாடுகள் தொடர்பான தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவப் பயிற்சி வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துதல் என்பவற்றைக் கருத்திற் கொண்டு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. வடக்கு மற்றும் கிழக்குக் கடலில் அத்துமீறி மீன்பிடித்தலை இல்லாதொழித்தலும், கடற்படை மற்றும் கரையோரப் பாதுகாப்பு பிரிவுகளை வலுப்படுத்துவதற்காக, இந்தியாவுடனான முரண்பாடுகளை தீர்த்துவைத்தல் பணிக்காக இலங்கை மற்றும் இந்தியாவுடனான கூட்டுச் செயற் குழுவொன்று அமைக்கப்பட்டு சில தீர்மானங்கள் மாத்திரமே நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

- அலங்கார மீன்கள் மற்றும் நன்னீர் மீன்வளர்ப்பு மற்றும் இறால் வளர்ப்பு மீன்பிடி துறைமுகங்களை அபிவிருத்தி , பலநாள் மீன்பிடி செயற்பாடுகள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சின் 2021 ஆம் வருடத்திற்கான மதிப்பீட்டின் மூலம் 08 விசேட முன்னுரிமைப் பணிகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தும் 2021 ஆம் வருடத்திற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு மற்றும் அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் குளங்கள், களப்பு மற்றும் கரை நிலைங்களை அண்டி நன்னீர் மீன் வளர்ப்பு செய்கையை பிரபல்யப்படுத்துவதற்காகத் தேவையான வழிமுறைகளைத் தயார் செய்தல் மற்றும் பெரிய அளவிலான படகுகளின் வழிநடாத்தல் செயற்பாடுகளை வினைத்திறமையாக மேற்கொள்வதற்காக கடற்றொழில் துறைமுகத்தை விருத்தி செய்தல் தவிர்ந்த ஏனைய பணிகளான ஏற்றுமதி சந்தையை நோக்கமாகக் கொண்ட அலங்கார மீன்கள் கைத்தொழிலை ஏற்படுத்துவதற்காகத் தேவையான வசதிகளை வழங்குதல், குளங்கள், களப்பு மற்றும் கரை நிலைங்களை அண்டி நன்னீர் மீன் வளர்ப்பு செய்கையை பிரபல்யப்படுத்துவதற்காகத் தேவையான வழிமுறைகளைத் தயார் செய்தல், பெரிய அளவிலான படகுகளின் வழிநடாத்தல் செயற்பாடுகளை வினைத்திறமையாக மேற்கொள்வதற்காக கடற்றொழில் துறைமுகத்தை விருத்தி செய்தல், பலநாள் கடற்றொழில் படகுகளுக்காகக் கடல் நீரை உபயோகித்து குளிரூட்டித் தொகுதியினை விருத்தி செய்தல் மற்றும் சூரிய வலுசக்தியை பாவிப்பதற்கு ஊக்குவித்தல், நவீன தொடர்பாடல் வசதிகள், குளிரூட்டிகள், எரிபொருள் வழங்குதல் மற்றும் துப்பரவேற்பாட்டு வசதிகளுடனான சகல கடற்றொழில் துறைமுகங்கள், நங்கூர நிலையங்களை விருத்தி செய்தல், கடல் மற்றும் நன்னீர் மீன்களைப் பெருக்குவதற்காக கடற்றொழில் சமூக சங்கங்கள் மற்றும் தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையோடு கூட்டிணைந்து

நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்தல், சூழல்நேயமான நவீன அதிதொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் மீன் அறுவடையை விருத்தி செய்வதற்காக நடவடிக்கையை எடுத்தல், கடற்றொழிலாளர்களையும் அக்கைத்தொழில்துறையில் ஈடுபட்டுள்ளோரின் துறைசார் பயிற்சி மற்றும் அறிவினை விருத்தி செய்தல போன்ற பணிகளைக் கருத்திற் கொண்டு திட்டம் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவில்லை.

செயற்திட்டம் நடைமுறைப்படுத்தல், முன்னேற்றம் மற்றும் பின்தொடரல்

- கடற்றொழில் அமைச்சிற்கு சொந்தமான சொத்தொன்றல்லாத மற்றும் 2021 ஆம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத ஹிக்கடுவ மீனவர் குடியிருப்புத் தொகுதியை மறுசீரமைத்தலுக்காக கடற்றொழில் அமைச்சின் களப்புகள் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி செய்வதற்கான நிதி ஏற்பாடுகளில் ரூபா 39.012 மில்லியன் செலவிடப்பட்டிருந்தமையால் களப்புகள் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி செய்தல் நோக்கம் நிறைவேற்றப்படவில்லை. 2021 திசெம்பர் 31 வரை அக்குடியிருப்பத் தொகுதி மறுசீரமைத்தலின் நிதி முன்னேற்றம் 22 சதவீதமாக மட்டுமே காணப்பட்டதுடன் பௌதீக முன்னேற்றம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.
- மூலதன மாற்றங்களின் கீழ் புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் செலவு விடயத்தின் மூலம் நாரா நிறுவனத்திற்கு ரூபா 10.13 மில்லியன் செலவிடப்பட்டிருந்தும் புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் மற்றும் மீன் உற்பத்திக்காகச் செலவிடப்படுகின்ற பயண நேரத்தை குறைப்பதற்கும் அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்ப முறைமைப்பாவனை தொடர்பான பின்தொடரலொன்று கடற்றொழில் அமைச்சினால் மேற்கொள்ளப்படவில்லை.

- 2021 ஆம் வருடத்தில் அபிவிருத்திச் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நாரா நிறுவனத்திற்கு கடற்றொழில் அமைச்சினால் ரூபா 20.28 மில்லியன் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 12.04 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதற்கான செலவு விபரம் சமர்ப்பிக்கப்படாததுடன் மற்றும் செயற்திறன் தொடர்பான பின்தொடரலொன்று அல்லது மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படாது, செயற்திட்டத்தின் தேவைப்பாடொன்றும் இனங்காணப்படாது மீண்டும் ரூபா 4.9 மில்லியன் நாரா நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

- 2021 ஆம் வருடத்தில் அபிவிருத்தி உதவி மற்றும் புதிய தொழில்நுட்ப அறிமுகம் செலவு விடயத்தின் மூலம் தேசிய நீர்வாழ் உயிரினங்கள் அபிவிருத்தி அதிகாரசபையால் ரூபா 8.51 மில்லியன் செலவிடப்பட்டு 110 டெப் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவை பகிர்ந்தளிக்கப்பட்ட முறை அல்லது அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பணிகள் நிறைவேற்றப்பட்டமை தொடர்பான பின்தொடரலொன்று அல்லது மதிப்பீடொன்று கடற்றொழில் அமைச்சினால் மேற்கொள்ளப்படவில்லை.
- 10 களப்புகள் மற்றும் 100 வாவிகள் அபிவிருத்தி செய்தல் செயற்திட்டத்திற்காக 2018 ஆம் வருடத்திற்காக அமைச்சிற்கு

ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1000 மில்லியன் தொகையில் 03 இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 180 மில்லியன் தேசிய நீர்வாழ் உயிரினங்கள் அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. குறைந்த பட்ச விலைமனு சமர்பிக்கப்பட்ட மனுதாரரின் மனு நியாயமான காரணமின்றி நிராகரிக்கப்பட்டு அதற்காக வெளியார் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு விலைமனு வழங்கப்பட்டு 2018 யூலை 17 ஆந் திகதி ரூபா 42.57 மில்லியன் இயக்க முற்பணத் தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. அவ்வியக்க முற்பணத்திற்காக வழங்கப்பட்டிருந்த முற்பணப் பாதுகாப்பு போலியாகத் தயாரிக்கப்பட்டிருந்தமை 6 மாதங்களுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டு உரிய முற்பணத் தொகை மீண்டும் அறவிடப்பட்டிருந்த போதிலும் போலி முற்பணப் பாதுகாப்பை சமர்ப்பித்து அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியமைக்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையொன்றும் எடுக்கப்படாததுடன் நிதிப்பிரமாணம் 705 இன் பிரகாரம் வழங்குநர் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

- மேற்படி உபகரணத்தின் கட்டமைப்புத் திட்டம், பயன்படுத்தப்படுகின்ற மூலப் பொருட்கள், உதிரிப்பாகங்கள் மற்றும் என்ஜின் போன்ற விடயங்கள் பரிசோதிக்கப்படுவதற்கு அமைச்சின் மற்றும் தேசிய நீர்வாழ் உயிரினங்கள் அபிவிருத்தி அதிகார சபையின் தலைவரும் உட்பட 4 அதிகாரிகள் அமெரிக்க ஐக்கிய இராச்சியத்திற்கான வெளிநாட்டுப் பயணத்தில் பங்குபற்றியமைக்காக ரூபா 435,499 செலுத்தப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட இயந்திரம் கிடைக்கப் பெறாததால் அமைச்சினால் இலக்கிடப்பட்ட பணிகள் 04 வருடங்கள் கடந்த பின்னரும் நிறைவேற்றப்படுவதற்கு முடியாதிருந்தது.

- தொடந்துவ மீன்பிடித் துறைமுக அபிவிருத்திக்கு 2021 ஆம் வருடத்திற்காக ரூபா 100 மில்லியன் ஆன ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 25 மில்லியன் ஆன தொகையில் இலக்கிடப்பட்ட 60 மீற்றருக்குக் குறைவாக கரைச் சுவரை (Quay Wall) நிர்மாணிப்பதற்கான பணிக்காக ரூபா 7.63 மில்லியன் மட்டுமே செலவிடப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 வரை குறிப்பிட்ட பணியின் பௌதீக முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது.

- 8 இறங்குதுறைகள் மற்றும் நங்கூரமிடல் தளங்களின் அபிவிருத்திக்காக ரூபா 18 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ஆரம்பச் செலவிற்காக ரூபா 1.9 மில்லியன் மட்டுமே செலவிடப்பட்டதால் நிதி முன்னேற்றம் 11 சதவீதம் மட்டுமே காணப்பட்டதுடன் பௌதீக முன்னேற்றம் வெளிப்படுத்தப்படவில்லை.

- தன்னிறைவு மீன்பிடிப் பொருளாதாரமொன்றை உருவாக்குவதற்கு தொடர்புடைய சட்டங்கள், விதிகள் மற்றும் கட்டளைகளுக்கு இணங்க தேசிய வரவு செலவுத் திட்டம் மற்றும் அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தின்கீழ் மீன்பிடி இராஜாங்க அமைச்சின் கீழ் காணப்படுகின்ற சட்டரீதியான நிறுவனங்களில் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், பின் தொடர்தல்,

மற்றும் மதிப்பீடு செய்தல் இராஜாங்க அமைச்சின் பணிகள் மற்றும் செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் தேசிய நீர்வாழ் உயிரினங்கள் அபிவிருத்தி அதிகார சபை, தேசிய நீர் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனம், இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள், கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் போன்ற சட்டரீதியான நிறுவனங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 2,441.45 மில்லியன் ஆன தொகையில் ரூபா 1,742.97 மில்லியன் ஆன தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும் இராஜாங்க அமைச்சினால் தன்னிறைவு மீன்பிடிப் பொருளாதாரமொன்றை உருவாக்குவதற்குப் பங்களிக்கும் சட்டரீதியான நிறுவனங்களின் பணிகளின் வெளீயீட்டு அளவினைக் கண்டறிதல், பின்தொடரல் மற்றும் மதிப்பீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்படாமை

ஹம்பாந்தோட்டை மீன்பிடித் துறைமுக அபிவிருத்திக்கு 2021 ஆம் வருடத்தில் ரூபா 20 மில்லியன் ஆன நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 9 மில்லியனுக்கு உரிய பணிகள் மட்டுமே திட்டமிடப்பட்டு ரூபா 1.05 மில்லியன் செலவிடப்பட்டமையால் எதிர்பார்த்த நோக்கம் நிறைவேற்றப்படவில்லை.

புதிய தொழில்நுட்ப கண்டுபிடிப்பின் கீழ் மீன்களின் பெருக்கத்தை அதிகரிக்கும் நோக்கத்தில் கடல் சூழலை மேம்படுத்தலுக்காக கைவிடப்பட்டிருந்த மீன்பிடிப் படகுகள், பேருந்துகள், புகையிரத வண்டிகளைப் பயன்படுத்தி மூழ்கடிக்கும் செயற்திட்டம் திருகோணமலை, யாழ்ப்பாணம். காலி, மாத்தறை, போன்ற மாவட்டங்களில் 2020 யூலை மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2021 திசெம்பர் முடிவடைந்திருந்ததுடன் அதற்காக முன்னைய வருடத்தில் மற்றும் மீளாய்வாண்டிலும் மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தினால் மீன்பிடித் துறைமுக கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 18.27 மில்லியனும், இலங்கை போக்குவரத்துச் சபைக்கு ரூபா 10.95 மில்லியனும் செலுத்தப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான பின்தொடரல் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டதா என்பது வெளிப்படுத்தப்படவில்லை.

வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்படாமை

2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தினால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

கைத்தொழில் துறை

கணக்காய்வு அவதானிப்புக்கள்

- கைத்தொழில் அமைச்சின் கீழ் காணப்படும் கைத்தொழில் பேட்டைகள்
- ரோபோ தொழில்நுட்பத்திற்கான சிறந்த நிலையச் செயற்திட்டம் (CERA)
- இலங்கை கனியமணல் கம்பனி
- பீ.சீ.சீ. லங்கா கம்பனி
- பரந்தன் கெமிகல் கம்பனி
- இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம
- இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்
- தேசிய அருங்கலை பேரவை
- இலங்கை கைப்பணிச் சபை
- நெசவுக் கைத்தொழில் திணைக்களம்

கைத்தொழில் துறை

கைத்தொழில் பல்வகைப்படுத்தலின் ஊடாக உள்நாட்டு, பிராந்திய மற்றும் சர்வதேச விநியோக வலையமைப்புடன் இணைந்து உளகலாவிய போட்டிச் சந்தையில் ஒப்பீட்டளவிலான இலாபத்தை அடைந்துகொள்ளும் வகையில் உள்நாட்டு கைதொழில் துறையினை நவீன உபாயங்களினூடாக வலுப்படுத்தல் மற்றும் ஊக்குவித்தல் இத் துறை எதிர்பார்க்கும் விளைவாகும். இவ் விளைவினை அடைந்துகொள்வதற்காக கைத்தொழில் அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் மூலம் பின்வரும் பணிப் பொறுப்புக்கள் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

- கைத்தொழிலாளர்கள் முகங்கொடுக்கும் அனைத்துப் பிரச்சினைகளையும் குறித்த நிறுவனங்களுடன் இணைந்து தீர்த்து வைக்கும் ஒரு திட்டத்தினை அமுல்படுத்தல்.
- ஏற்றுமதி இறக்குமதி செயற்பாட்டினை தடையின்றியும் குறைந்த கால இடைவெளியினுள் வினைத்திறனாக மேற்கொள்வதற்காக "தனியான ஒன்றிணைந்த முறைமையொன்றினை" ஏற்படுத்தல்.
- ஏற்றுமதியுடன் தொடர்பான உற்பத்திச் செயற்பாட்டினை வலுப்படுத்துவதற்காக அனைத்து மாகாணங்களும் உள்ளடங்கும் வகையில் கொள்கைத் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை அமைத்தலும் செயற்படுத்தலும்.
- நடைமுறையிலுள்ள கைத்தொழில்களை பொருளாதார ரீதியாக வலுப்படுத்துவதற்கும், முதலீடுகளுக்கான சந்தர்ப்பங்களை விரிவுபடுத்தி புதிய கைத்தொழில் துறைகளை ஆரம்பிப்பதற்கு தேவையான வழிமுறைகளை ஏற்படுத்தலும் அவற்றை செயற்படுத்தலும்.
- வீழ்ச்சியடைந்துள்ள வியாபாரங்கள் மற்றும் கைத்தொழில்களை மீளக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை அறிமுகப்படுத்தல் மற்றும் செயற்படுத்தல்.
- உள்நாட்டு உற்பத்தியாளர்களையும் வர்த்தகர்களையும் பாதுகாப்பதற்கும் வலுப்படுத்துவதற்குமான ஒரு திட்டத்தினை ஏற்படுத்தல்.
- தற்பொழுது முதலீட்டு சபை மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவுடன் இணைந்து ஏராவூர் பிரதேசத்தில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள ஆடைக் கைத்தொழில் பேட்டையினை ஆரம்பிப்பதற்கு தேவையான சகல அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தக் கொடுத்தல்.
- தற்போது பூமிக்கடியில் மற்றும் கடலுக்கடியில் இருப்பதாக கருதப்படும் கனிய வளங்களை அதி நவீன தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி அகழ்வு செய்து நாட்டின் உற்பத்தி செயன்முறையினை வலுப்படுத்துவதற்காக பயன்படுத்தல்.

2021 ஆண்டின் போது மேற்கூறிய பணிப்பொறுப்பை நிறைவேற்றுவதற்காக கைத்தொழில் அமைச்சுக்கு மற்றும் அதன் கீழ் காணப்படும் இரண்டு இராஜாங்க அமைச்சுக்களுக்கு ரூபா 8,539 மில்லியனிற்கான தேறிய ஏற்பாடுகள் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதி வரை அவற்றில் ரூபா 6,124 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி, வருட

இறுதியில் உள்ளவாறு ரூபா 2,415 மில்லியனிற்கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. விபரங்கள் வரைபட இலக்கம் 26 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.



	கைத்தொழில் அமைச்சு	பிரம்பு, பித்தளை, களிமண், தளபாடங்க் மற்றும் கிராமிய கைத்தொழில் இராஜாங்க அமைச்சு	பத்திக், கைத்தறி புடவைகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சு	மொத்தம்
தேறிய நிதியேற்பாடு	4275	3239	1025	8539
செலவினம்	3227	2213	684	6124
சேமிப்பு	1048	1026	341	2415

வரைபட இலக்கம் 26 - வழங்கியருந்த ஏற்பாட்டுத் தொகையும் செலவுகளும்
மூலம் - 2021 ஆண்டின் நிதிக் கூற்று

கைத்தொழில் அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படும் நிறுவனங்களினால் மேற்கூறிய பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கீழ்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

கைத்தொழில் அமைச்சின் கீழ் காணப்படும் கைத்தொழில் பேட்டைகள்

- அமைச்சின் கீழ் காணப்படும் 33 கைத்தொழில் பேட்டைகளில் காணப்படுகின்ற 1001 காணித் துண்டுகளில் 791 காணித் துண்டுகள் பல்வேறு முதலீட்டு அலுவல்களுக்காக கைத்தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், 78 காணித் துண்டுகள் (மத்திய மாகாண நாலந்தா 09 வெற்றுக் காணித் துண்டுகள் மற்றும் வட மாகாணத்தில் 23 துண்டுகள் தவிர) விளைவற்றுக் காணப்பட்டது. மத்திய மாகாண நாலந்தா கைத்தொழில் பேட்டையில் 38 மொத்தக் காணித்துண்டுகளில் 08 அமைச்சின் அங்கீகாரம் இன்றி 2018 ஆண்டு முதல் கைத்தொழில் நடாத்தப்பட்டு வருவதுடன், வட மாகாணத்தில் 31 காணித் துண்டுகளில் 08 மாத்திரம் கைத்தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. அமைச்சினால் 1997 ஆண்டு முதல் கைத்தொழில் பேட்டைகளில் ரூபா 105.878 மில்லியன்

தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 14 நிருவாகக் கட்டிடங்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் மூலதனப்படுத்தியிருக்காததுடன், தென் மாகாணத்தில் படஅத கைத்தொழில் பேட்டையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த நிருவாகக் கட்டிடம் தற்போது பயன்படுத்த முடியாமல் சிதைவடைந்த நிலையில் காணப்பட்டது.

- மினுவங்கொட கைத்தொழில் பேட்டையில் 2 ஏக்கர் காணிப் பகுதியொன்று 2002 ஆண்டின் போது ஜப்பானில் இருந்து கொண்டு வரப்பட்ட வாகனப் பகுதிகள் ஒருங்கிணைக்கும் அலுவல்களில் ஈடுபட்டுள்ள கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் 9 வருடங்களை அண்மித்த காலமாக இங்கு வர்த்தக நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன், குத்தகை உடன்படிக்கை ஒன்று வழங்கியிருக்காமையால் பாரிய குத்தகை தொகையொன்றும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. வெளிக்களப் பரிசோதனையின் போது இந்த இடத்தில் வாகனங்களை ஒருங்கிணைக்கும் அலுவல்கள் நடைபெற்றிருக்காததுடன், சுமார் 3,000 சதுரஅடி கொண்ட 2 கட்டிடங்கள் விளைவற்றுக் காணப்பட்டது.

- மஹர கைத்தொழில் பேட்டையை 49.5 பர்சஸ்களை கொண்ட தரைத்துண்டு 2007 ஆண்டின் போது இரும்பு மற்றும் பலகையிலான வீடுகளுக்கு மற்றும் அலுவலகங்களுக்கு தேவையான தளபாட உற்பத்திக் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், வெளிக்களப் பரிசோதனையின் போது செயற்திட்ட அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வியாபார அலுவல்கள் நடைபெறவில்லை எனவும், 100 ஊழியர்களுக்கு பதிலாக மூவர் மாத்திரம் வியாபார அலுவல்களில் ஈடுபட்டுள்ளனர் எனவும் போதியளவு உற்பத்தியொன்று நடைபெற்றிருக்கவில்லை எனவும், 2007 ஆண்டு முதல் குத்தகை தொகை செலுத்துவது தவிர்ப்புச் செய்யப்பட்டிருந்ததென கண்டறியப்பட்டது.

ரோபோ தொழில்நுட்பத்திற்கான சிறந்த நிலையச் செயற்திட்டம் (CERA)

அமைச்சரவை தீர்மான இலக்கம் **039/723/1424/16** படி இலங்கையின் கைத்தொழில்களை ஊக்குவித்தல், அவற்றை முன்னேற்றல் மற்றும் அபிவிருத்திக்கு உதவும் குறிக்கோளுடன், இந்த செயற்திட்டம் ஆரம்பித்தல் தொடர்பாக இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபைக் கட்டிடம் ஒன்று நவீனமயப்படுத்தி மற்றும் தேவையான இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 120 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தின் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்காமையால் நவீனமயமாக்கப்பட்ட கட்டிடம் மற்றும் கொள்வனவு செய்யப்பட்டிருந்த இயந்திர உபகரணங்கள் 2017 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரையான 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் விளைவற்று துருப்பிடித்து மற்றும் அழிவடைந்து காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக சேர்க்கப்பட்டிருந்த நிறைவேற்று உத்தியோகத்தருக்கு 2017 செப்தம்பர் மாதம் முதல் ஒரு மாதத்திற்கு ரூபா 725,000 தொகை வீதம் 11 மாத காலத்திற்காக சம்பளம் மற்றும் படிகள் சுமார் ரூபா 11 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

இலங்கை கனியமணல் கம்பனி

- மீளாய்வாண்டின் போது இல்மனைட், ஹயிடயி இல்மனைட், ரூடயில் மற்றும் ச(ர்)கோன் பாதீட்டு உற்பத்தியை நெருங்குவதற்கு கனிய மணல் கம்பனிக்கு முடியாதிருந்ததுடன் Low Grade Zircon crude, Final Talien, Hydro sized Fines மற்றும் ஹயிடயில் இல்மனைட்டின் மூலம் வருமானம் ஏதும் கிடைத்திருக்கவில்லை. அதேபோல் மதிப்பீட்டு வருமானத்தை விட Rutile 85 சதவீதத்தினாலும் மற்றும் Zircon 75 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தது. ஹயிடயி இல்மனைட் விற்பனை நடைபெறாமையால் அந்தக் களஞ்சியம் நிரம்பி பாதுகாப்பற்ற முறையில் வெளி இடங்களிலும் குவிக்கப்பட்டிருந்தது. 2021 ஆண்டிற்கான கேள்வியொன்றின் மூலம் இல்மனைட் விற்பனவு நடைபெற்றிருக்காததுடன், 2020 ஒக்தோபர் 28 திகதி 85,000 மெ.தொ. கேள்வியில் மீதியான 79,947 மெ.தொ. மீளாய்வாண்டின் விற்பனை என பதியப்பட்டிருந்தது. விலைகூறல்தாரரிடம் மேற்கொண்டிருந்த உடன்படிக்கையின் 5 ஆவது நிபந்தனையின் படி 130 நாட்களுக்குள் தமது இருப்பை 4 பகுதிகளாக (மெ.தொ. 25,000 , 20,000, 20,000 , 20,000) விடுவித்துக்ககொள்ள வேண்டியிருந்த போதிலும் 2021 ஆகஸ்ட் 15 வரையானதால் மேலதிக 150 நாட்கள் தாமதமாக இருந்தது. அதேபோல், 12,495,000 அ.டொ. இற்கான கேள்வியில் இரண்டாவது மற்றும் மூன்றாவது கொடுப்பனவு தாமதம் அடைந்திருந்த போதிலும், நான்காவது கொடுப்பனவுக்காக மாத்திரம் தாமதக் கட்டணமாக ரூபா 1.108 மில்லியன் தொகை குறிப்பிட்ட கொள்வனவாளரிடம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. கொள்வனவுதாரரினால் இல்மனைட் இறுப்பினை உரிய முறையில் அகற்றியிருக்காமையால் மற்றும் களஞ்சியங்களில் கொள்திறன் மிகைத்திருந்தமையால் 2021 மார்ச் வரை “Block B” இயந்திர அறையின் உற்பத்தி அலுவல்கள் நிறுத்தப்பட்டிருந்தமையால் இயந்திர அறையின் அனைத்து அலுவல்களும் ஸ்தம்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மனிதவளம் உட்பட அனைத்து வளங்களும் விளைவற்றுக் காணப்பட்டன.

- மீளாய்வாண்டின் போது ரூபா 403.42 மில்லியன் பெறுமதியான 4 நிலையான வைப்புக்கள் முதிர்வடைய முன்னர் காசாக்கியமையால் கிடைக்க வேண்டியிருந்த ரூபா 1,476 மில்லியனிற்கான வட்டி வருமானம் ஒன்றினை கம்பனி இழந்துள்ளது. அதேபோல் 2021 சனவரி 01 திகதியிலுள்ளவாறு ரூபா 2,293.5 மில்லியன் பெறுமதியான நிலையான வைப்பு கம்பனியில் காணப்பட்டதுடன், 2021 திசெம்பர் 31 திகதி அளவில் அது ரூபா 1,500 மில்லியன் தொகையும் 2022 ஜுன் அளவில் ரூபா 1,300 மில்லியனாக இருந்தது. இவற்றில் ரூபா 500 மில்லியன் இறக்குமதிக்காக பிணையாக வைத்திருந்தமையால் ரூபா 800 மில்லியனாக இருந்தது. மீளாய்வாண்டின் போது கனிய மணல் விற்பனை நடைபெற்றிருக்காமையால் கம்பனியை நடாத்திச் செல்வதற்கு தேவையான செலவுகளை தீர்த்துக்கொள்வதற்காக நிலையான வைப்புக்களை காசாக்கியிருந்தது.

- மிக செழிப்புமிக்க, பார கனிய இணைவு கோகிலாய் கடலேரியை அண்டி காணப்படுவதால் ஆய்வு அறிக்கையின் படி வெளிப்படுத்தப்பட்ட பின்னர் இங்கு புதிய

இயந்திர அறையொன்று நிர்மாணிப்பதற்காக திட்டமிடப்பட்டு ரூபா 2.25 மில்லியன் தொகைக்கு 17.69 ஹெக்டயார் காணியொன்று 2013 ஆண்டின் போது இந்தப் பகுதியில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. காணியை உரிய முறையில் உரித்தாக்கி புதிய இயந்திர அறையொன்று நிர்மாணிப்பதற்கு முன்னர் 2013 ஆகஸ்ட் மாதம் அதற்குத் தேவையான ரூபா 39.34 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் கொள்வனவு செய்து அந்த சொத்துக்கள் அனைத்தும் புல்மோட்டை இயந்திர அறையில் வேறு இடங்களில் நிர்மாணிக்கப்பட்டு விளைவற்றுக் காணப்பட்டதுடன், சில இயந்திரங்கள் களஞ்சியத்தில் விளைவற்று குவிக்கப்பட்டு காணப்பட்டது. Block A பழைய இயந்திர அறையில் பொருத்தப்பட்டிருந்த கோகிலாய் செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த 24 Spiral 2013 ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டதுடன், Block A புதிய இயந்திர அறையை செயற்படுத்தும் போது கழற்றப்பட்டு முற்றவெளியில் பாதுகாப்பற்ற முறையில் காணப்பட்டது. இந்த செயற்திட்டத்திற்காக அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதில் வசதியீனங்கள் காணப்பட்ட போதும் மற்றும் செயற்திட்டத்தை ஆரம்பிக்கும் முன்னர் 2015 ஜூன் 25 திகதி 117 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு பின்னர் புல்மோட்டை இயந்திர அறையில் பல்வேறு இடங்களுக்கு அவர்கள் இணைக்கப்பட்டிருந்தனர். இதன் காரணமாக உற்பத்திக் கிரயம் அதிகரித்திருந்தது.

- கோகிலாயில் புதிய இயந்திர அறை நிர்மாணிப்பதற்காக செயல் நடவடிக்கைத் திட்டத்தில் ரூபா 1,000 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 2022 ஜூன் இறுதியளவில் செயற்திட்ட அறிக்கை (Project Report) தயாரித்தலை பூர்த்தி செய்து அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை. 2022 சனவரி 01 திகதி கோகிலாய் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அங்கு மண் நிறப்பும் அலுவல்கள் நடைபெற்றுக் காணப்பட்டதுடன் செயற்திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்காத போதிலும் 2021 திசெம்பர் 31 திகதி உள்ளவாறான நிதிக் கூற்றுக்களின் படி செயற்திட்டத்திற்காக ரூபா 17.8 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

பீ.சீ.சீ. லங்கா கம்பனி

- பீ.சீ.சீ கம்பனிக்கு உரித்தான 12 ஏக்கர் 03 ரூட் 8.77 பர்சஸ் அளவான தரைப் பகுதி 2015 திசெம்பர் 17 திகதிய 15/1874/702/010-VII இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் மற்றும் 2016 ஏப்ரல் 20 திகதிய 16/0597/731/009-I இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் 6 ஏக்கர் தரைப்பகுதியொன்று கொழும்பு நீதிமன்ற இல்லம் நிர்மாணிப்பதற்காக நீதி அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அரச காணிகளை தனதாக்கும் நடைமுறையின் படி காணியை உரித்தாக்கல் மற்றும் நட்டஈடு பெற்றுக்கொள்ளல் நடவடிக்கைகள் இதுவரை பூர்த்தியடைந்திருக்கவில்லை.

- 2013 ஆண்டின் போது ரூபா 8,195 மில்லியனிற்கு பெறுமதி மதிப்பீடு செய்திருந்த நிலப்பகுதியில் 118,345 சதுரஅடிகளைக் கொண்ட 32 களஞ்சியங்கள் மற்றும் 3,500 மெ.தொ. எண்ணெய் கொள்திறனை கொண்ட 3

எண்ணெய் தாங்கிகள் காணப்பட்டன. இந்தக் களஞ்சியம் ஒரு சதுரஅடி ரூபா 55 இற்கும் ரூபா 70 இற்கும் இடைப்பட்ட தொகைக்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன், 5,140 சதுரஅடியைக் கொண்ட General Stores – First Floor ஒரு சதுரஅடி ரூபா 30 தொகைக்கு வழங்கப்பட்டிருந்தது. உயர்ந்த வாணிபப் பெறுமதி ஒன்றினை கொண்டிருந்த கம்பனியின் வளவில் காணப்பட்ட இந்தக் களஞ்சியங்கள் முறையான திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாமையால் இவ்வாறு குறைந்த விலைக்கு வழங்குவதற்கு நேரிட்டிருந்தது.

பரந்தன் கெமிகல் கம்பனி

- 1986 ஆண்டு முதல் பரந்தன் தொழிற்சாலையில் குலோரின் உற்பத்தி நிறுத்தப்பட்டமையால் நாட்டிற்கு தேவையான கோஸ்டிக் சோடா மற்றும் குலோரின் முழுமையாக இறக்குமதி மூலம் நிறைவேற்றிக்கொள்ளப்பட்டிருந்தது. பரந்தனில் அமைந்துள்ள 227 ஏக்கர் நிலப் பகுதியில் குளோரின் உற்பத்தி அலுவல்களுக்காக இயந்திர அறையொன்று நிறுவுவதற்காக 2016 ஆண்டு திட்டமிடப்பட்டிருந்ததுடன், 2020 ஆண்டின் போது சாத்தியக்கூறு ஆய்வொன்று மற்றும் சுற்றாடல் தாக்க மதிப்பீடொன்று மேற்கொண்டு அதற்காக முறையே ரூபா 7.6 மில்லியன் மற்றும் ரூபா 2.1 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், இயந்திர அறை நிர்மாணித்தல் அலுவல்கள் இதுவரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- கோஸ்டிக் சோடா லயி இற்காக காணப்படும் கேள்வியை கவனத்தில் எடுத்து, கோஸ்டிக் பெறுமதியை அதிகரித்தல் மற்றும் பரந்தன் கெமிகல் நிறுவனத்திற்கு தற்போது பெற்றுக்கொள்ளக் முடியாதிருந்த சந்தையை நெருங்கும் குறிக்கோளுடன் கோஸ்டிக் சோடா திரவம் தயாரிக்கும் செயற்திட்டம் 2015 திசெம்பர் 30 திகதி கழுத்துறை நாகொடை கைத்தொழில் பேட்டையில் ஆரம்பிக்கப்பட்டு 2016 ஏப்ரல் 25 திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், இந்த கோஸ்டிக் சோடா திரவம் தயாரிக்கும் இயந்திரம் இரும்பினால் செய்யப்பட்டிருந்தமையால் இரும்பு மற்றும் கோஸ்டிக் சோடா திரவம் தாக்கத்தை ஏற்படுத்தி இரும்பு கோஸ்டிக் சோடா லயி உடன் கலந்து அவற்றை விற்பனை செய்ய முடியாமல் இருந்ததால் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. இந்த கோஸ்டிக் சோடா திரவ இயந்திரம் தயாரிப்பதற்கு முன்னர் கோஸ்டிக் சோடா துணுக்குகளுடன் இரும்பு கலக்கின்றன என ஆய்வொன்று மேற்கொள்ளாமல் செயற்பட்டிருந்தமையால் ரூபா 2.1 மில்லியனிற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம்

1955 இன் 19 ஆம் இலக்க அரச அனுசரணை கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டிருந்த லங்கா செரமிக் நிறுவனம் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் நியதிச் சட்டத்தின் கீழ் மட்பாண்டக் கூட்டுத்தாபனம் என்ற பெயரில் நிறுவப்பட்டிருந்தது. 1990 தனியார்மயப்படுத்தும் வேலைத் திட்டத்தின் கீழ் ஓடுகள் செங்கற்கள் அலகு இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம் என்ற பெயரில் தற்போது நடாத்தப்பட்டு வருகின்றன. 2012 ஆண்டில் செயற்படுத்தப்பட்ட சுயேட்சையாக ஓய்வு பெறும் திட்டத்தின் மூலம் நிரந்தர பதவியணி 32 வரை குறைக்கப்பட்டிருந்தன. கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 09 தொழிற்சாலைகளில் 2022 ஆண்டளவில் ஒரு

தொழிற்சாலை மாத்திரம் உற்பத்தி செய்து வருவதுடன், மீதியான அனைத்து தொழிற்சாலைகளும் மூடப்பட்டுள்ளன. இலங்கையில் களி மற்றும் களி சாரந்த உற்பத்திகள் என்ற பெயரில் பரந்த குறிக்கோள் மற்றும் நோக்கத்தை முதலாகக் கொண்டு கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டிருந்த போதிலும் தட்டை ஓடு மற்றும் முகட்டு ஓடு உற்பத்தியில் ஈடுபட்டிருப்பதைத் தவிர போட்டி நிலைமைக்கு முகங்கொடுத்தல் மற்றும் காலத்தின் தேவைப்பாட்டின் படி உற்பத்திகளின் தன்மைகளை மாற்றுவதற்கு இலக்காகிய சந்தையை குறிக்கோளாக கொண்டு, உற்பத்தி பல்வகைப்படுத்தலுக்காக கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

- கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 09 தொழிற்சாலை வளவுகளில் 07 காணிகளின் உரிமையை கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்க முடியாமல் இருந்த காரணத்தினால் தொழிற்சாலைகளை குத்தகைக்கு கொடுப்பது தொடர்பாக 2010 ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டிருந்த அமைச்சரவை தீர்மானத்தை செயற்படுத்துவதற்கு முடியாதிருந்ததுடன், எதுவித உற்பத்தியும் மேற்கொள்ளப்படாத 06 தொழிற்சாலைகளுக்காக வருடாந்தம் உற்பத்திக் கிரயம் மற்றும் நிருவாகச் செலவாக சுமார் ரூபா 8 மில்லியன் தொகை செலவிட நேரிட்டிருந்தது. ஒட்டுசுட்டான் தொழில்சாலை கூட்டுத்தாபன நிறுவாகத்தின் கீழ் மீண்டும் ஆரம்பிப்பதற்காக 2020 ஜுலை 09 திகதி அமப/20/0989/224/002-1 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2020 ஆண்டில் ரூபா 3 மில்லியன் தொகை 2021 ஆண்டில் ரூபா 1 மில்லியன் தொகை திருத்த வேலைகள் மற்றும் ஏனைய செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2022 ஜனவரி வரை தொழில்சாலையின் உற்பத்தி அலுவல்கள் ஆரம்பிக்க முடியாமல் இருந்தது.
- உற்பத்தி அலுவல்கள் நடைபெறுகின்ற எரகம தொழிற்சாலைக்கு சொந்தமான 231 ஏக்கர் தரைப் பகுதியில் சுமார் 50 ஏக்கர்கள் காணி வெளித்தரப்பினர் ஒருவருக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், தொழிற்சாலை வளவு மற்றும் செங்கல் வெட்டும் பகுதி தவிர மீதியான காணியை ஆக்கபூர்வமான முதலீட்டொன்றில் ஈடுபடுத்தியிருக்கவில்லை. தற்போது வயல் காணிகளில் சுமார் 3 ½ ஏக்கர் தனியார் ஒருவரினால் தனதாக்கியுள்ளது. சுமார் 94 ஏக்கர்களை கொண்ட மஹியங்கனை காணியில் சுமார் 125 குடும்பங்கள் 2015 ஆண்டிற்கு முன்னர் இருந்து அங்கீகாரம் இன்றி குடியிருந்து வருவதனால் தொழிற்சாலைப் பகுதியை தவிர மீதியான தரைப்பகுதி ஆக்கபூர்வமான முதலீடு ஒன்றிற்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்

1957 இன் 49 ஆம் இலக்க கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டிருந்த இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் தூரநோக்கு இலங்கையில் சீமெந்துக் கைத்தொழிலின் முன்னேற்றத்துக்காக வழிகாட்டல் மற்றும் தலைமைத்துவம் வழங்குதல் ஆக காணப்பட்டதுடன், பணிகள் என நாட்டின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக பண்புசார் சீமெந்து மற்றும் ஏனைய சீமெந்து சார்ந்த உற்பத்திகள் போதியளவினதாக வழங்கப்படுத்தலை உறுதிப்படுத்தலாகும். எனினும், தற்போது கூட்டுத்தாபனத்தினால்

சீமெந்து அல்லது சீமெந்து சார்ந்த உற்பத்திகள் ஏதும் மேற்கொள்ளப்பட்டு வருவதில்லை. கூட்டுத்தாபனத்தின் வருமான வழி ஆக கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 5,164 ஏக்கர்களைக் கொண்ட அறுவக்காலு சுண்ணாம்புக்கல் படிவுகளை குத்தகைக்கு கொடுத்தல், பாலாவியில் அமைந்துள்ள 12 ஏக்கர் 03 ரூட் 30 பர்சஸிற்கான காணியை குத்தகைக்கு கொடுத்தல் மற்றும் கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள 89.07 பர்சஸ் காணியில் வாகனத் தரிப்பிடம் நடாத்திச் செல்வதன் மூலம் வருமானம் உழைத்தல் மாத்திரமே ஆகும்.

- கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காங்கேசன்துறையில் அமைந்துள்ள இரண்டு எண்ணெய் தாங்கிகள் மற்றும் குழாய் முறைமையினை இலங்கை பெற்றோலிய மொத்தக் களஞ்சிய முனையம் அரச கம்பனிக்கு எழுத்துமூல உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளாமல் வழங்கியிருந்தமையால் 2010 முதல் 2021 திசெம்பர் 31 வரை இதற்கான குத்தகை வருமானமாகிய ரூபா 185 மில்லியன் தொகையினை அறவீடு செய்வதற்காக இதுவரை கூட்டுத்தாபனத்திற்கு முடியாமல் இருந்தது.

- கூட்டுத்தாபன மற்றும் புத்தளம் சீமெந்துக் கம்பனி லிமிடட் எனப்படும். தற்போதைய சியம்சிட்டி சீமெந்து லங்கா லிமிடட் இடையே 1996 ஆகஸ்ட் 23 திகதி கையொப்பமிடப்பட்ட 495 ஆம் இலக்க உடன்படிக்கையின் மூலம் அருவக்காலு சுண்ணாம்புக்கற்களுடனான காணி வருடாந்த நிலையான குத்தகையொன்றின் அடிப்படை மீது 50 வருடங்களுக்கு குத்தகைக்கு கொடுப்பதற்கு உடன்படிக்கை மேற்கொண்டிருந்த போதிலும் 2019 நவம்பர் 07 திகதி கையொப்பமிடப்பட்டிருந்த 268 ஆம் இலக்க மேலதிக குத்தகை உடன்படிக்கையின் மூலம் பண்ணிரண்டு சதவீத குத்தகை அதிகரிப்புச் சதவீதத்தின் மீது 2019 ஆண்டு முதல் குத்தகை வருமானம் 319,118 அமெரிக்க டொலர்கள் என அதிகரிக்கப்பட்டிருந்தது. எனினும், 1993 முதல் 2018 வரை முதலாவது உடன்படிக்கை மூலம் இழந்திருந்த வருடாந்த குத்தகை தொகையினை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக தீர்மானமொன்று எடுப்பதற்கு இதுவரை கூட்டுத்தாபனத்திற்கு முடியாமல் இருந்ததுடன், மேலதிக குத்தகை உடன்படிக்கைகாக சட்டமா அதிபரின் அங்கீகாரம் இந்த அறிக்கை திகதி வரை வழங்கியிருக்கவில்லை.

- இலங்கை சீமெந்துக் கூட்டுததாபனத்திற்கு சொந்தமான 89.07 பர்சஸ்களை கொண்ட கொள்ளுப்பிட்டிக் காணி 2008 ஆண்டின் போது இலங்கை வங்கிக்கு ஈடுவைத்து பெற்றிருந்த கடன்தொகை 2017 ஆண்டின் போது ரூபா 97.7 மில்லியன் தொகைக்கு மீள் கட்டமைக்கப்பட்டிருந்ததுடன், 2021 திசெம்பர் 31 திகதியிலுள்ளவாறு மேலும் செலுத்த வேண்டியிருந்த கடன்மீதி ரூபா 58.7 மில்லியன் தொகையாகும். பெற்றிருந்த இந்த கடன் தொகைக்காக 2021 ஆண்டில் ரூபா 5.5 மில்லியனிற்கான வட்டித்தொகையொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும், குறிப்பிட்ட காணியை குத்தகைக்கு கொடுத்ததன் மூலம் கிடைத்திருந்த குத்தகை வருமானம் ரூபா 4.8 மில்லியன் தொகை மாத்திரம் காணப்பட்டது. சுமார் ரூபா 735 மில்லியன் தொகை பெறுமதியான மிகவும் உயர்ந்த வாணிப பெறுமதியொன்றினை கொண்டிருந்த இந்தக் காணி 2021 செப்தெம்பர் 29 திகதிய பணிப்பாளர் சபை தீர்மானத்தின் படி கலப்பு முதலீட்டுச்

செயற்திட்டமொன்று ஆரம்பிப்பதற்கான பெறுகை நடவடிக்கைகள் இந்த அறிக்கைத் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன், ஆதனங்களை ஆக்கபூர்வமான முதலீடு ஒன்றிற்காக ஈடுபடுத்துவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு முடியாமல் இருந்தது.

- நாட்டில் காணப்பட்ட யுத்த நிலைமை காரணமாக உற்பத்தி அலுவல்கள் நிறுத்தப்பட்டிருந்த காங்கேசன்துறை சீமெந்துச் தொழிற்சாலையில் காணப்படும் பயன்படுத்த முடியாத பண்டங்களை அப்புறப்படுத்தி தொழிற்சாலை வளவினை சுத்தம் செய்வதற்காக அமப/21/0175/320/004 மற்றும் 2021 பெப்ரவரி 16 திகதிய அமைச்சரவை பத்திரத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கு ஒத்த நிகழ்வாக PFD/PMD/01/CM/2021/041 இலக்கம் கொண்ட மற்றும் 2021 பெப்வரி 08 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தொழிற்சாலையில் சிதைவடைந்த இரும்பு மற்றும் உலோக விடயங்கள் தொடர்பாக அட்டவணை தயாரித்து அப்புறப்படுத்தக்கூடிய கட்டிட மாதிரிகள் மற்றும் இயந்திரங்கள் சிதைவடைந்த உலோகங்களுக்கான பெறுமதியை மதிப்பீடு செய்து பெறுமதியை தீர்மானிப்பதற்காக தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவொன்று நியமனம் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்தக் கருமம் இதுவரை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. யுத்தம் முடிவடைந்து 13 வருடங்கள் கழிந்திருந்த போதிலும் தொழிற்சாலையின் உற்பத்தி அலுவல்களை ஆரம்பித்து கூட்டுத்தாபனத்தில் காணப்படும் வளங்கலின் மூலம் உச்சமட்ட பயனைப்பெற்று நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிப்பு வழங்குவதற்கு இதுவரை கூட்டுத்தாபனத்திற்கு முடியாதிருந்தது.

தேசிய அருங்கலை பேரவை

- சட்டத்தின் பிரகாரம் பேரவையின் குறிக்கோளிடையே கைப்பணிக்காக உள்நாட்டு மூலப்பொருட்களை சுலபமாக்குவதன் மூலம் கைத்தொழிலாளர்களின் உற்பத்தியை அதிகரித்தல் பிரதான குறிக்கோளாக இருந்ததுடன், கலைஞர்களுக்காக அரிய மூலப்பொருளை வழங்குதல் அந்த அலுவல்களை ஒருங்கமைக்கும் குறிக்கோளை செயற்படுத்துவதற்காக பேரவையினால் 2021 ஆண்டு 09 மூலப்பொருள் வங்கிகள் மாகாணங்களின் பிரகாரம் நிறுவுவதற்காக ரூபா 10.5 மில்லியனிற்கான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மூலப்பொருள் வங்கி நிறுவுவதற்காக தேவையான கட்டிடங்களின் திருத்த வேலை மேற்கொள்ளப்பட்ட பின்னர் அவற்றிற்குரிய இயந்திர உபகரணங்களை பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும் 09 மூலப்பொருள் வங்கிகள் (வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தவிர) கொள்வனவு செய்திருந்த உபகரணங்கள் உரிய நிலையங்களுக்கு வழங்க முடியாமல் இந்த அறிக்கைத் திகதி வரை வராகொட பயிற்சி நிலையத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

- 2021 ஆண்டின் போது தேசிய அருங்கலை பேரவையிற்கு சொந்தமான 85 பயிற்சி நிலையங்களில் 56 பயிற்சி நிலையங்களில் மாத்திரம் பயிற்சிப் பாடநெறிகள் செயற்படுத்தப்பட்டிருந்தது. 2021 ஆண்டின் போது 70 பயிற்சிப் பாடநெறிகளுக்காக 737 பயிலுனர்கள்

சேர்க்கப்பட்டிருந்த போதிலும் 2021 செப்தெம்பர் அளவில் பயிலுனர் எண்ணிக்கை 350 வரை குறைவடைந்திருந்தது. அவற்றில் 27 பயிற்சிப் பாடநெறிகளுக்கு இறுதியளவில் பயிற்சிபெற்ற பயிலுனர் ஒருவரையேனும் உருவாக்குவதற்கு சபைக்கு முடியாமல் இருந்தது. சபையினால் அறிமுகப்படுத்தியிருந்த கைப்பணி பயிற்சித் துறைகள் 17 இல் 06 பாடநெறிகளுக்காக மாத்திரம் NVQ தகைமை வழங்கப்பட்டிருந்ததுடன், ஏனைய செயற்படு பாடநெறிகளை NVQ மட்டத்திற்கு உயர்த்துவதற்கு சபைக்கு முடியாமல் இருந்தது. 2021 ஆண்டிற்கான திருத்திய பாதீட்டின் மூலம் பயிற்சிப் பாடநெறிகளுக்குரிய பயற்சிக் கொடுப்பனவு, மூலப்பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வழங்குவதற்காக ரூபா 9 மில்லியனிற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 6 மில்லியனிற்கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன.

- அருங்கலை பேரவைக்கு சொந்தமான 1.1165 ஹெக்டயர் காணியொன்றில் 18 வேலைக் கொட்டகைகள், காட்சியறை ஒன்று, அலுவலக கட்டிடம் ஒன்று, விடுதியொன்று மற்றும் சுகாதார வசதிகளுக்கான கட்டிடங்கள் உள்ளடங்கிய கட்டிடங்களை கொண்ட சிகிரிய கைப்பணிக் கிராம் ரூபா 47.7 மில்லியன் பெறுமதி மதிப்பீடு செய்து தம்புள்ள பிரதேச செயலாளரினால் சாட்டுதல் பத்திரம் ஒன்றின் மூலம் 2013 ஆண்டில் அருங்கலை பேரவைக்கு உரித்தாக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், 2021 மார்ச் மாதம் அளவில் கொவிட் தொற்றுநோய் காரணமாக அனைத்து குடில்களும் மூடப்பட்டிருந்தன. விற்பனை குடில்கள், கட்டிடங்களை மீண்டும் தயாரித்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரக்கூடியவாறு தயாரித்து சபைக்குச் சொந்தமான சொத்தொன்றிலிருந்த உச்சமட்ட பயனை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் ரூபா 47.7 மில்லியனிற்கான ஆதனங்கள் விளைவற்றுக் காணப்பட்டது.

இலங்கை கைப்பணிச் சபை

- வழங்குனர்களின் தொழிற்படு மூலதனத் தேவையினை நிறைவேற்றுவதற்காக பிரதேச அபிவிருத்தி வங்கியில் இருந்து இலங்கை கைப்பணிச் சபை 2013 ஆண்டில் ரூபா 200 மில்லியனிற்கான கடன்தொகையை பெற்றிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் கடன்தொகையை மாதாந்த தவணைகளாக ஒரு வருடத்துக்குள் செலுத்துவதற்காக கடன்தொகை மீது 9 சதவீத வட்டி செலுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், உரிய முறையில் தவணைப் பணத்தை மற்றும் வட்டியினை செலுத்தாமையினால் 2020 வருட இறுதியளவில் செலுத்த வேண்டிய கடன்தொகை மற்றும் வட்டி முறையே ரூபா 158.4 மில்லியன் மற்றும் ரூபா 1,255 மில்லியன் தொகையாக இருந்தது. வட்டித் தொகையில் ரூபா 8.32 மில்லியன் தொகைக்கு 2020 செப்தெம்பர் 24 திகதி வங்கியினால் தாமத சலுகைக் கடன் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய வட்டி ரூபா 4.17 மில்லியன் தொகை மற்றும் கடன்தொகை ரூபா 166.72 மில்லியன் தொகை காணப்பட்டதுடன், கடன் வட்டி செலுத்தாமையால் மூலதனப்படுத்தப்பட்டிருந்த ரூபா 8.32 மில்லியனிற்கான கடன்வட்டிக்கும் வட்டி

கணிக்கப்பட்டிருந்தமையால் மேலதிக கிரயம் ஒன்று மேற்கொள்ள நேரிட்டிருந்தது.

- சபையினால் தொழிற்படு மூலதனத் தேவைகளுக்காக கோட்டை லக்சல கட்டிடத்தை அடகு வைத்து 2012 – 2018 காலப் பகுதியில் பெற்றுக்கொண்டிருந்த ரூபா 950 மில்லியன் தொகைக்குரிய ரூபா 238.78 மில்லியனிற்கான தொகையொன்று வட்டி என இலங்கை வங்கிக்கு செலுத்தப்பட்டிருந்தது. 2019 ஆண்டிறுதியில் காணப்பட்ட மீதி ரூபா 273 மில்லியன் தொகைக்காக புதிய 03 கடன்தொகை என மீள்பதியப்பட்டிருந்தது. மேற்கூறிய கடனுக்கான தவணைப் பணம் செலுத்துவதற்காக 06 மாத சலுகைக் காலம் வழங்கப்பட்டிருந்ததுடன், அந்தக் கால வரையறையும் 2020 ஏப்ரல் மாதத்தில் முடிவடைந்திருந்தது. அதன்படி, 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடன்தொகைக்காக செலுத்த வேண்டிய ரூபா 28.08 மில்லியனிற்கான தவணைப் பணம் மற்றும் ரூபா 21.83 மில்லியனிற்கான வட்டித்தொகை கணக்காய்வுத் திகதியாகிய 2021 திசெம்பர் 31 திகதி அளவிலும் செலுத்துவதற்கு சபைக்கு முடியாமல் இருந்தது.

- 44,000 சதுரஅடிகளைக் கொண்ட நான்கு மாடிக் கட்டிடமொன்றான கோட்டை லக்சல கட்டிடம் 2013 ஆண்டின் போது நவீனமயப்படுத்துவதற்காக கேள்வி நடைமுறைக்கு புறம்பாக ICTAD தகைமை காணப்படாத தனியார் ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு சாட்டப்பட்டு பெறுகை ஆலோசனைகளில் கவனம் செலுத்தாமல் ரூபா 45.45 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக ICTAD நிறுவனத்தினால் வழங்கியிருந்த அறிக்கையின் படி பௌதீக வேலைகளின் பெறுமதியை குறைத்த பின்னர் ஒப்பந்தக்காரரிடம் ரூபா 30 மில்லியனிற்கான தொகையொன்று சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது. அந்த நிர்மாண வேலை இடைவெளியில் நிறுத்தப்பட்ட காரணத்தினால் குறிப்பிட்ட 44,000 சதுரஅடிக்கான தரைப் பகுதியொன்றில் 1,200 சதுரஅடிக்கான காட்சியறை நடாத்தப்படும் தரைப்பகுதி தவிர ஏனைய பகுதிகள் சுமார் 08 ஆண்டுகள் பயன்படுத்த முடியாத நிலையில் விளைவற்று காணப்பட்டது. பாரிய பொருளாதார பெறுமதி ஒன்றினை கொண்டுள்ள இந்தக் கட்டிடத்தின் நவீனமயப்படுத்தல் அலுவல்கள் இடைவெளியில் நிறுத்தப்பட்டமையால் கட்டிடம் அழிவடைந்து காணப்பட்டதுடன், சபைக்கு வருடாந்தம் உழைக்கக்கூடியதாக இருந்த பாரிய வருமானம் ஒன்றினை இழந்துள்ளது.

- சிறு கைத்தொழில் திணைக்களத்தின் இலங்கை கைப்பணிச் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த ரூபா 48.32 மில்லியன் பெறுமதியான 2 ஏக்கர் 21 பர்சஸ் கொண்ட மொரட்டுவ, கட்டுபெத்த பிரதேசத்தில் காணப்படும் 39,364 சதுரஅடிகளைக் கொண்ட ஐந்து கட்டிடங்களில் காட்சியறை, அரச கணக்காய்வுப் பிரிவு, கொள்வனவுப் பிரிவு களஞ்சியம் தவிர லக்சல தச்சுத்தொழிற்சாலை மற்றும் விடுதி காணப்படும் சுமார் 15,000 சதுரஅடி காணிப்பகுதி மற்றும் தச்சுத் தொழிற்சாலைக்குரிய சொத்துக்கள் 2012 ஆண்டு முதல் விளைவற்று காணப்பட்டது.

நெசவுக் கைத்தொழில் திணைக்களம்

கைத்தறி நெசவுக் கைத்தொழில்

விடயத்துக்குரிய கொள்கைசார் தீர்மானங்கள் மற்றும் மையப்படுத்தும் அலுவல்கள் மற்றும் மாகாண சபை நெசவுத் தொழில் பிரிவுடன் ஒருங்கிணைப்பின் மூலம் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்கு உரிய சேவைகள் வழங்கி அரச கொள்கைசார் சட்டகத்தினுள் கைத்தொழிலின் முன்னேற்றத்துக்குரிய கொள்கைகளை தயாரித்தல், அந்த கொள்கைகளை செயற்படுத்துவதற்கான தேவையான வழிகாட்டல், தேவையான சேவைகள் மற்றும் வசதிகள் வழங்கல் மற்றும் நெறிப்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைப்பதன் மூலம் கைத்தறி மற்றும் நெசவுக் கைத்தொழில் துறையில் பொருண்மையான மற்றும் பண்புசார் அபிவிருத்தி ஒன்றை ஏற்படுத்தல் திணைக்களத்தின் பணிகளாகும்.

- வெளித்தரப்பினருக்கு குத்தகைக்கு கொடுத்திருந்த திணைக்களத்திற்கு சொந்தமான மின்தறி நெசவு நிலையங்களில் 04 நிறுவனங்களில் குத்தகை உடன்படிக்கையை மீறி 3 வருடங்கள் முதல் 22 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அந்தக் காலப் பகுதியுள் ஒரு தொகையேனும் அறவீடு செய்திருக்காததுடன், 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு குத்தகைதாரரிடம் அறிவிடப்பட வேண்டிக் காணப்பட்ட குத்தகை ரூபா 13.87 மில்லியன் தொகை காணப்பட்டது. அதில் ஒரு குத்தகைதாரர் குத்தகை ஆதனத்தை பிணையாக வைத்து கடன் தொகை ஒன்றினையும் பெற்றிருந்ததுடன், ரூபா 8.91 மில்லியனிற்கான குத்தகையையும் புறக்கணித்திருந்தது. மேலும், குத்தகை ஆதனத்திலிருந்து ரூபா 2.76 மில்லியன் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன், தற்போது அங்கீகாரமின்றி ஒருவர் குடியிருக்கின்றார். ஒரு நிறுவனத்திலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவைக் குத்தகை ரூபா 521,000 தொகை தொடர்பாக நடுவர் மன்றிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன்படி, நிலுவை குத்தகைத் தொகையை அறவீடு செய்தல் தொடர்பாக நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்திருக்கவில்லை.

- கிராமிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதன் மூலம் கைத்தறி நெசவுத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக 10 நெசவுத் தொழில் கிராமங்கள் நிறுவி அதனை அண்டி வாழும் விண்ணப்பதாரர்கள் 150 பேருக்கு பயிற்சி வழங்கி தேவையான உபகரணங்கள் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தன. அவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது 5 கிராமங்களை சார்ந்த 73 விண்ணப்பதாரர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 24.68 மில்லியன் தொகை பெறுமதியான கைத்தறிகளை சார்ந்த உபகரணங்கள் 2022 ஏப்ரல் 30 திகதி வரையும் களஞ்சியத்தில் காணப்பட்டன.

காணிச் செயற்பாடுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்

- பிம்சவிய நிகழ்ச்சித்திட்டம்
- காணிகளைச் சுவீகரித்தல
- அரசாங்கத்தின் காணி தகவல் முகாமைத்துவ முறைமை
- காணிக் குத்தகை வருமான முகாமைத்துவம்
- இலக்குகள் அடைந்து கொள்ளப்படாமை
- சேதனப் பசளை செயற்திட்டம
- செயலாற்றல் குறைவடைதல்
- காணிகளை பயன்படுத்துதல் அதிகாரச் சட்டத்தினை நடைமுறைப்படுத்தல்

காணிச் செயற்பாடுகள்

நிலைபேறான அபிவிருத்தியை முன்னிட்டு காணி வளங்களை சிறப்பாக பயன்படுத்துதல் காணிப் பிரிவிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளாக இருந்தது. காணி அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள காணி முகாமைத்துவ நடவடிக்கைகள், அரசாங்க முயற்சிகளின் காணிகள் மற்றும் ஆதனங்களை அபிவிருத்தி செய்தல் இராஜாங்க அமைச்சு, 04 திணைக்களங்கள், 02 நியதிச்சட்ட சபைகள்/ நிறுவனங்கள் என்பவற்றினால் பின்வரும் செயற்பாடுகளையும் கடமைகளையும் நிறைவேற்ற வேண்டியிருந்தது.

- தச்சுத் தொழில், பிரம்புக் கைத்தொழில் பன்கைத்தொழில் என்பன சார்பாகக் காணப்படுகின்ற மூலப்பொருள் பிரச்சினைகளுக்கான தீர்வாக பயிர்ச்செய்கை கூட்டுறவு முறைமையின் கீழ் குறைவாகப் பயன்படுத்தப்படுகின்ற அரசாங்க காணிகளில் நீண்டகால குத்தகை அடிப்படையின் கீழ் மேற்கூறிய மூலப்பொருட்களை பயிர்ச்செய்கை பண்ணுவதற்கான சந்தர்ப்பமும் ஊக்குவிப்புக்களும் வழங்குதல்

- மகாவெலி, உமா ஓயா, மொரகஹகந்த போன்ற பாரிய நீர்ப்பாசன செயற்திட்டங்களின் காரணமாக பாதிப்புக்குள்ளாகியுள்ள ஆட்கள், வீடுகள், மற்றும் ஏனைய ஆதனங்கள், காணிகள், விவாசாயக் காணிகள் என்பவற்றிற்காக முறையான மதிப்பீட்டினை மேற்கொண்டு துரிதமாக இழப்பீட்டினை வழங்குவதற்கு உரிய நிறுவனங்களுடன் தேவையான ஒருங்கிணைப்புக்களை மேற்கொள்ளல்.

- அரசாங்கத்தின் காணிகள் மற்றும் பொதுச் செயற்திட்டமாக சுவீகரிக்கப்பட்ட காணிகளை பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்காக குத்தகை அடிப்படையின் கீழ் வழங்குதல் மற்றும் விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வேலைத்திட்டத்தினை அமுல்ப்படுத்துதல்.

- தோட்ட கம்பனிகளுக்கும் அரசாங்க பண்ணைகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்பொழுது பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாத காணிகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேண்டுதல்கள் உள்ள பூ வகைகளையும் சேதன பயிர்ச்செய்கைகளையும் உருவாக்குதல், மற்றும் கால நிலைக்குப் பொருத்தமான மேலதிகப் பயிர்ச் செய்கையையும் விரிவுபடுத்துதல்.

- மரபு ரீதியான மற்றும் தொல்பொருள் ரீதியான விடயங்கள், இயற்கை வளங்கள், நகரமயப்படுத்தல் மற்றும் எதிர்கால தேவைப்பாடுகளை கருத்தில் கொண்டு காணிகளை பயன்படுத்துவதற்காக ஒரு தேசிய கொள்கையை தயாரித்தல்.

- நாளதுவரையான காணி தகவல் முறைமையை உருவாக்குதல் மற்றும் பேணுதல்.

- காணிகளை அளவீடு செய்தல், திட்ட வரைபடம் தயாரித்தல், காணித் தகவல்களையும் உரிய சேவைகளையும் துரிதமாக வழங்குதல் என்பவற்றிற்காக தகவல் தொழில்நுட்ப அணுகுதலுடன்

ஆக்கபூர்வமான ஒரு நடைமுறையினைத் தயாரித்தல்.

- காணி சுவீகரித்தல் நடைமுறையினையும் காணிகளை வழங்குதல் நடைமுறையினையும் மீளாய்விற்கு உட்படுத்தி காணிகள் இல்லாத குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு விளைதிறனான உற்பத்திச் செயற்பாடுகளுக்காகவும் அபிவிருத்தி மற்றும் முதலீட்டுச் செயற்திட்டங்களுக்காகவும் காணிகளை துரிதமாக விடுவிக்கும் நடைமுறையைத் தயாரித்தல்

- பிம்சவிய காணி உரிமைகளை உறுதிப்படுத்தும் வேலைத்திட்டத்தினை துரிதப்படுத்தல், காணிகளை விற்பனை செய்வதன் மூலம் காணி இல்லாத பிரசைகள் உருவாகுவதனை தடுத்தல் மற்றும் காணி உரிமையின் அடிப்படையில் வங்கி, நிதி மற்றும் காப்புறுதி நடவடிக்கைகளைப் பெற்றுக்கொள்ளும் கொள்கைகள் மற்றும் சட்ட அதிகாரத்தினை கட்டியெழுப்புதல்.

- ஏனைய காணிகளைப் பயன்படுத்துவது தொடர்பாக தீர்த்துவைத்தல் கொள்கையை அமுல்ப்படுத்தல்

- நாட்டின் அபிவிருத்திக்கு தேவைப்படுகின்ற காணிகளை தாமதமின்றியும், ஒழுங்குமுறையாகவும் வழங்குதல்.

- நாட்டின் அபிவிருத்திக்காக வழங்கப்பட்டுள்ள அரசாங்க காணிகள் சார்ந்த பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்காக ஆக்கபூர்வமான ஒரு பொறி முறையைத் தயாரித்தல்.

- வாலிப தொழில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்தும் ஒரு செயற்திட்டத்திற்காக அரசாங்க காணிகளில் முதலீட்டு வாய்ப்புக்களை வழங்கி ஒரு இலட்சம் காணித் துண்டுகள், வங்கி, மற்றும் தொடர்புபட்ட ஏனைய நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு இளைஞர்களுக்கு வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்ப்படுத்துதல்.

- அபிவிருத்திய திட்டங்களுக்காக சவீகரிக்கப்பட்டு இதுவரை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாத தனியார் காணிகளை அபிவிருத்தி செய்யும் தேவைப்பாடுகளை முறைப்படியாக மதிப்பீட்டிற்கு உட்படுத்தியதன் பின்னர் அக்காணிகளை ஆக்க பூர்வமாக அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்ப்படுத்தல்.

மேற்கூறிய கடமைகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் 2021 ஆம் ஆண்டின் போது காணி அமைச்சிற்கும் அதன் கீழுள்ள இராஜாங்க அமைச்சிற்கும் 4 திணைக்களங்களுக்கும் மொத்தமாக ரூபா 10,517 மில்லியன் நிதி ஏற்பாடு பாராளுமன்றத்தால் வழங்கப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 8,541 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதற்கிணங்க ஆண்டின் இறுதியில் ரூபா 1,976 மில்லியன் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் வரைபடம் 27 இல் தரப்படுகின்றது



	காணிகள் அமைச்சு	காணி முகாமைத்துவ நடவடிக்கைகள், அரசாங்க முயற்சிகளின் காணிகள் மற்றும் ஆதனங்களை அபிவிருத்தி செய்தல் இராஜாங்க அமைச்சு	காணிகள் ஆணையாளர் நாயகம் திணைக்களம்	நில அளவையாளர் திணைக்களம்	காணிகள் பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்	காணி உரித்துகள் நிர்ணயத் திணைக்களம்	மொத்தம்
நிதியேற்பாடு ரூபா மில்லியன்	3415	608	635	4714	580	565	10517
செலவினம் ரூபா மில்லியன்	2667	269	496	4075	509	525	8541
சேமிப்பு ரூபா மில்லியன்	748	339	139	639	71	40	1976
ஊயவநபழசல 4	4.5	2.8	5				

வரைபடம் 27 – வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு மற்றும் செலவினம்
மூலம் - 2021 ஆம் ஆண்டின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள்

மேற்கூறிய கடமைகளை நிறைவேற்றுவது சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிபாக்கி கீழே தரப்படுகின்றன.

பிம்சவிய நிகழ்ச்சித்திட்டம்

- மீளாய்வாண்டின் போது காணி நிர்ணயத் திணைக்களத்தினால் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 60,000 உரிமைச் சான்றிதழ்களை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டு ரூபா 124 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் ஆண்டின் போது வழங்கப்பட்ட உரிமைச் சான்றிதழ்களின் எண்ணிக்கை 13,907 ஆக இருந்ததுடன் மேற்கொள்ளப்பட்ட உள்ளபடியான செலவு ரூபா 94.4 மில்லியனாகும். அதற்கிணங்க ஒரு சான்றிதழை வழங்குவதற்கு திட்டமிடப்பட்ட செலவு ரூபா 2,067 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அதற்காக ரூபா 6,788 செலவு செய்யப்பட்டிருந்தது.

- மீளாய்வாண்டின் போது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் காணி பதிவாளர் அலுவலகத்தினால் வழங்கப்பட்ட உரிமைச் சான்றிதழ்களின் எண்ணிக்கை 22,485 ஆக

இருந்ததுடன் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை 13,907 மாத்திரமாகும். உரிமைச்சான்றிதழ்களைப் பகிர்ந்தளிப்பதில் காணப்பட்ட பலவீனத்தின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் இன்னும் உரிமையாளர்களுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்கு மிகுதியாக இருந்த உரிமைச் சான்றிதழ்களின் எண்ணிக்கை 21,231 ஆக இருந்தது.

- மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உரிமைச் சான்றிதழ்களை வழங்குவது சம்பந்தமாக உருவாகிய தீர்த்துவைக்க முடியாத பல்வேறு சிக்கல்களின் காரணமாக பிற்போடப்பட்ட முழுக் கோவைகளின் எண்ணிக்கை 455,271 ஆக இருந்ததுடன் வெலிகபொல, இரத்மலானை, தெஹிவளை, நல்லூர் ஆகிய பிராந்திய அலுவலகங்களில் பிற்போடப்பட்ட கோவைகள் தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்படவில்லை.
- மீளாய்வாண்டின் இறுதியளவில் 66 பிரதேச செயலகப் பிரிவுகளில் மாத்திரம் இச்செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததுடன் மிகுதியான 265 பிரதேச செயலகப் பிரிவுகளில் இதனை ஆரம்பிப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஆரம்பிக்கப்பட்ட 66 பிரதேச செயலகப் பிரிவுகளின் 3,899 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 1394 பிரிவுகளில் மாத்திரம் நில அளவை நடவடிக்கை முடிவுறுத்தப்பட்டிருந்தன. அதற்கிணங்க இச்செயற்திட்டத்தின் செயல்முன்னேற்றம் திருப்தியற்ற மட்டத்தில் காணப்பட்டது.

காணிகளைச் சுவீகரித்தல்

1950 இன் 09 ஆம் இலக்க காணி சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 35 ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு காணியை அல்லது அதற்கு துணையானவற்றை சுவீகரிப்பதற்காக 38 ஆம் பிரிவின் கீழ் ஒரு கட்டளையை வர்த்தமானியில் பிரசுரிக்கின்ற திகதிக்கு முன்னராக இழப்பீட்டு பணத்தை அந்த நபருக்கு அல்லது நீதிமன்றத்திற்கு செலுத்தாத சந்தர்ப்பத்தில் உரிய கட்டளை வழங்கிய திகதியிலிருந்து இழப்பீடு செலுத்தும் திகதி வரை நிர்ணயிக்கப்பட்ட தொகையான வட்டியுடன் இழப்பீட்டுப் பணத்தை செலுத்த வேண்டிய போதிலும் அதிகாரச் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட மொத்த வட்டிப் பணமாகிய ரூபா 1,206.32 மில்லியனில் ரூபா 602.13 மில்லியன் அல்லது 50 சதவீதம் 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திற்கு முன்னர் காணிகளை சவீகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட வட்டி செலவாகும்.

அரசாங்கத்தின் காணி தகவல் முகாமைத்துவ முறைமை

அரசாங்கத்தின் காணி தகவல் முகாமைத்துவ நடவடிக்கையை ஆக்கபூர்வமாகச் செய்வதற்காக அரசாங்கத்தின் காணி தகவல் முகாமைத்துவ முறைமை (e-Slims) 2013 ஆம் ஆண்டின் போது அரம்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அதற்காக மேற்கொள்ளப்பட்ட கிரயம் ரூபா 159.46 மில்லியனாக இருந்தது. 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இச்செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தும் முறைமைக்கு உள்ளடக்கப்பட்ட காணித் துண்டுகளின் அளவு 1,306,917 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டில் திட்டமிடப்பட்ட 100,000 காணித் துண்டுகளில் 62,785 காணித் துண்டுகள் மாத்திரம் முறைமைக்குள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

காணிக் குத்தகை வருமான முகாமைத்துவம்

காணி ஆணையாளர் நாயகத்தினால் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் மாகாணங்களுக்கிடையிலான விவசாயக் குடியேற்றங்களிலிருந்து காணிக் குத்தகை வருமானம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுயளவில் காணப்பட்ட ரூபா 84.92 மில்லியன் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நிலுவை வருமானத்தில் 53 சதவீதம் அல்லது ரூபா 45.15 மில்லியன் 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது நிலுவை வருமானத்தில் அறவிடப்பட்டிருந்த பணம் ரூபா 5.18 மில்லியன் மாத்திரமாகும்.

இலக்குகள் அடைந்து கொள்ளப்படாமை

- மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் "இலங்கையில் விவசாயம், வணிகம், சுற்றுலா,ஏனைய சேவை உற்பத்திப் பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தி பல்வேறு உற்பத்திகளில் ஈடுபட்டிருக்கும் அதேபோல அவ்வாறான தொழில் முயற்சி இயலுமை இருந்தும் அதற்கான அடிப்படை வளங்களும் அரசாங்க உதவியும் இன்னும் கிடைக்காத இளைஞர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு காணி உரிமைகளை வழங்குவதன் மூலம் தேசிய உற்பத்திகளை ஊக்குவித்தல் மற்றும் அதற்குத் தேவையான நிறுவன ரீதியான உதவியை வழங்குதல்" என்ற குறிக்கோளில் அமுல்ப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மீளாய்வாண்டின் இறுதியில் 20,000 காணித்துண்டுகளை வழங்குவதற்கு காணி அமைச்சின் மூலம் திட்டமிடப்பட்டிருந்தும் 402 காணித் துண்டுகள் அல்லது திட்டமிடப்பட்ட அளவில் 2 சதவீதம் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

- மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நகர அபிவிருத்தி, தாழ் நிலங்களை அபிவிருத்தி செய்தல், கிராமங்களை விஸ்தரித்தல், நீர்ப்பாசன நடவடிக்கைகள் முதலியவாறாக 11 துறைகளின் கீழ் காணிகளைச் சுவீகரிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் அவற்றில் 07 துறைகளின் கீழ் மாத்திரம் காணிகளை சுவீகரித்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டின் இறுதிவரை சுவீகரிப்பதற்குத் திட்டமிடப்பட்ட 7383 ஹெக்டயர் காணிகளில் 707 ஹெக்டயர் காணிகள் அல்லது 10 சதவீதம் மாத்திரம் பொறுப்பேற்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க திட்டமிடப்பட்டவாறு அரசாங்கத்தின் தேவைப்பாட்டிற்காக காணிகளைப் பொறுப்பேற்பதற்கு அமைச்சு தவறியிருந்தது.

- காணி அமைச்சின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களின் கீழ் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தால் அரசாங்கத்தின் காணித் தகவல்களைச் சேகரிக்கும் நாடளாவிய கணக்கெடுப்பு 2020 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக 10 மில்லியன் கணக்கெடுப்பு படிவங்கள் அரசாங்க அச்சக திணைக்களத்தால் இலவசமாக அச்சிடப்பட்டு நாடு முழுவதிலுமுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. உரிய கணக்கெடுப்பு நடவடிக்கைகளின் செயல்முன்னேற்ற மீளாய்வு ஆண்டின்

திசெம்பர் 31 அந் திகதி வரை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

சேதனப் பசளை செயற்திட்டம்

- காணி அமைச்சினால் ரூபா 302 மில்லியன் செலவு செய்து 6,156.23 மெட்ரிக் தொன் பசளை உற்பத்தி செய்யப்பட்டிருந்ததுடன் 1988 இன் 68 ஆம் இலக்க பசளைகள் அதிகாரச் சட்டத்தின் 2(1)(2) ஆம் பிரிவின் பிரகாரம் பசளை உற்பத்திக்காக தேசிய பசளைகள் செயலகத்திடமிருந்து அதிகாரப் பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் இதுவரை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- மீளாய்வாண்டின் போது இச்செயற்திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்பட்ட 777,720 கிலோகிராம் பசளைகள் 1கிலோ கிராம் ரூபா 15 வீதம் கொழும்பு கொமேர்சல் பசளைக் கம்பனிக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தும் அதற்காக கிடைக்க வேண்டிய ரூபா 11.67 மில்லியன் வருமானம் நிலுவை வருமானமாக நிதிக்கூற்றுக்களின் மூலம் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

செயலாற்றல் குறைவடைதல்

- "காணித் தகவல்களை வழங்குவதில் எப்போதும் முன்னுரிமை" என்ற நோக்கினை கருத்தில் கொண்டு தொழில்சார் திறமையினைக் கொண்ட சேவையில் ஈடுபட்டுள்ள ஒரு நபரின் மூலம் தரமான காணித் தகவல்களை வெளியிடுதல் மற்றும் சேவைகளை வழங்குதல்" என்பதனை செயற்பணியாகக் கொண்டு நில அளவைத் திணைக்களத்தின் நில அளவையாளர்கள் பல்வேறு வகையான நில அளவைகளை மேற்கொள்வதுடன் அதற்கிணங்க எல்லைக் கற்களைப் பதித்து நில அளவைக்கான இலக்குகள் 20 காணித் துண்டுகளாக இருந்ததுடன் காணிக் கூறுகளாயின் 30 ஆகும். ஏனைய நில அளவைகளுக்கான காணிகளின் ஹெக்டயர் அளவு 30 மற்றும் அளவை செய்யப்பட்ட தூரம் 5 கிலோகிராம் ஆக செயல்முன்னேற்றம் கணிப்பீடு செய்யப்படும். 15 ஆண்டுகளுக்கும் முன்னர் தோற்றுவிக்கப்பட்ட இந்த அங்கீகாரமானது நில அளவை நுட்பங்கள் மற்றும் உபகரணங்களின் தொழில்நுட்ப ரீதியான முன்னேற்றத்துடன் மீளாய்வு செய்து திணைக்களத்தின் தூரநோக்கு மற்றும் செயற்பணியின் பிரகாரம் தரமான காணித் தகவல் வெளியீடு மற்றும் சேவைகளை வழங்குவதற்காக நாளது வரையாக்கப்பட்டிருக்காத போதிலும் 2018 இலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையான நிதிக்' கூற்றுக்களில் இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை கொள்வனவு செய்தல்களின் கீழ் நவீன நில அளவை உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக திணைக்களத்தினால் ரூபா 430 மில்லியனை மிகைத்த பணம் செலவு செய்யப்பட்டிருந்தது.

- 2002 இன் 17 ஆம் இலக்க நில அளவை அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நில அளவைத் தொழில் மற்றும் அதன் நடைமுறைகள் முறைப்படியாகப் பேணப்படுகின்றது எனவும் தொழிலில் ஈடுபடுபவர்களினால் தொழில் உயர்ந்த தரத்தில் பேணப்படுகின்றது என்பதனையும் உறுதிப்படுத்துவதனை குறிக்கோளாகக் கொண்டு நில அளவைச் சபை ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் நில அளவையாளர்களின் தொழில் ரீதியான தவறான நடத்தைகள் தொடர்பாக பொது மக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை

143 ஆக இருந்த போதிலும் சபையினால் அந்த முறைப்பாடுகளில் 27 சதவீதம் அல்லது 39 முறைப்பாடுகள் மாத்திரம் தீர்த்துவைக்கப்பட்டிருந்தன. வருடாந்தம் தீர்த்துவைப்பதற்கு காணப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்துக் காணப்பட்டிருந்தும் அந்த முறைப்பாடுகளைத் தீர்த்துவைத்தல்களின் செயற்திறனை அதிகரிப்பதற்காக விசேட வேலைத்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

சபையில் பதிவு செய்யாது நில அளவை நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற நபர்கள் சம்பந்தமாக தேடிப்பார்ப்பதற்கு போதிய நடவடிக்கை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

காணிகளை பயன்படுத்துதல் அதிகாரச் சட்டத்தினை நடைமுறைப்படுத்தல்

2010 மே 20 ஆந் திகதிய 1654/21 ஆம் இலக்க (அதிவிசேட) வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட காணி பயன்பாட்டுக் கொள்கை திட்டமிடல் திணைக்களத்தின் தூர நோக்கானது இலங்கையின் நில வளத்தினை சிறப்பாகவும் நிலைபேறாகவும் பயன்படுத்துவதாக இருந்ததுடன் சுற்றாடல் சமநிலையைப் பேணி நிலைபேறாக மற்றும் சிறப்பாக காணியைப் பயன்படுத்துவதற்கு கொள்கைகள் உருவாக்கி திட்டமிட்டு அமுல்ப்படுத்துவதற்கு உதவியளித்தல் திணைக்களத்தின் பிரதான செயற்பணியாகும். அந்த தூர நோக்கினையும் செயற்பணியையும் நிறைவேற்றுவதற்காக தேசிய காணிகளை பயன்படுத்துதல் அதிகாரச் சட்டத்தை அங்கீகரித்துக் கொள்வதற்கும் தேசிய காணிகள் பயன்பாட்டுக் கொள்கையைத் தயாரிப்பதற்கும் திணைக்களம் இதுவரை தவறியிருந்தது.

போக்குவரத்து பிரிவு

கணக்காய்வு அவதானிப்புக்கள்

- குருணாகலிலிருந்து தம்புள்ளை ஊடாக ஹபரனை வரையான புகையிரதப் பாதை செயற்திட்டம்
- கொழும்பு நகரத்திற்கு அண்மித்த புகையிரத்தின் வினைத்திறனை மேம்படுத்தும் செயற்திட்டம்
- கொழும்பு புறநகர் புகையிரத செயற்திட்டம்
- Park and Ride செயற்திட்டம்
- ஒரு கொடவத்த எரிபொருள் நிரப்பு நிலையத்தை நிர்மாணித்தல்
- 09 காற்று வெளிப்படுத்தும் நிலையங்களை நிர்மாணித்தல்
- அதிசொகுசு பஸ்களில் கெமரா மற்றும் ஜி.பி.எஸ் (ஃபீளூ) முறைமைக்காக தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்
- இந்திய கடன் வசதிகளின் கீழ் பஸ்களை கொள்வனவு செய்தல்
- பஸ்கள் போதிளதாக இல்லாமை
- இலங்கை போக்குவரத்துச் சபையின் காணிகள்
- இலங்கை போக்குவரத்துச் சபையின் வாகனங்களுக்கு அதிக பாதிப்புக்கள் ஏற்படுதல்
- 160 புகையிரத பெட்டிகளை கொள்வனவு செய்தல்
- கண்டி - கெடம்பேவிற்கு இடையே இரட்டை புகையிரத பாதையை நிர்மாணிப்பதற்கான செயற்திட்டம்
- மஹவ- அனுராதபுரம்- ஓமந்தை வரையான புகையிரதப் பாதையை திருத்தம் செய்வதற்கான செயற்திட்டம்
- கொழும்பு புறநகர் புகையிரத செயற்திட்டம்- சாத்தியவள ஆய்வு
- புகையிரத பாதுகாக்கப்பட்ட காணிகளை குத்தகைக்கு வழங்குதல்
- புகையிரத காணிகளை ஒப்படைத்தல்
- எம் 6 வகுப்பு புகையிரத இன்ஜினுக்கான உதிரிப் பாகங்களை கொள்வனவு செய்தல்
- பயன்படுத்தப்படாத சொத்துக்கள்
- வழங்கப்படாத பொருட்களுக்காக கொடுப்பனவு செய்தல்
- தீர்த்து வைக்கப்படாத நாணய கடிதம
- இலங்கை புகையிரதத்தின் பிரதான திட்டம்
- வருமானம்
- நிலுவையாக இருந்த வருமானங்கள் அறவீடு செய்யப்படாமை

போக்குவரத்து பிரிவு

மக்களின் வாழ்க்கை நிலைமையை உயர்த:துவதனை முன்னிட்டு புதிய தொழில்நுட்ப முறைமைகளைப் பயன்படுத்தி மிகவும் உயர்தரமான போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகளை அமுல்ப்படுத்துதல், அபிவிருத்தி செய்தல் மற்றும் நிலைபேறாகப் பேணுதல் இப்பிரிவின் செயற்பணியாக இருந்தது. அச்செயற்பணியை நிறைவேற்றுவதற்காக போக்குவரத்து அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள இராஜாங்க அமைச்சு இரண்டு திணைக்களங்கள் மற்றும் **05** நியதிச்சட்ட நிறுவனங்களினால் பின்வரும் கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது.

- சுற்றாடலுக்குச் சாதகமான போக்குவரத்து முறைமையை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான கொள்கைகளையும் சட்ட விதிகளையும் தயாரித்தல்.

- பொதுப் போக்குவரத்து முறைமை தொடர்பாக மக்கள் நம்பிக்கையையும் வீதி வசதிகளை உருவாக்குவதற்கான உயந்த நியம தரத்தினையும் ஏற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்.

- வீதி நெரிசல் பயணிகள் நெரிசல், வீதி விபத்துக்கள் என்பவற்றை குறைப்பதற்காக பின்பவற்ற வேண்டிய வழிகாட்டல்கள் மற்றும் சட்ட விதிகளை அறிமுகப்படுத்துதல்.

- அரசாங்க மற்றும் தனியார் போக்குவரத்து சேவைகளையும் புகையிரத சேவைகளையும் பொதுவான நேர அட்டவணைக்கு இணங்க ஒருங்கிணைந்த படிவத்தின் கீழ் அமுல்ப்படுத்துகின்ற போக்குவரத்துச் சேவையாக அமுல்ப்படுத்துவதற்குத் தேவையான நவீன தொழில்நுட்பமான ஈ- டிக்கட் முறைமையை அறிமுகப்படுத்துதல்.

- புகையிரத மற்றும் பஸ் தரிப்பிடங்கள் சார்ந்த பொது வசதிகளையும் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்துவதற்குரிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

- புகையிரத மற்றும் பஸ் சேவைகளுக்குத் தேவையான புகையிரத்தினையும் பஸ்களையும் பராமரித்தல்.

- பஸ்கள் தயாரிப்பு மற்றும் போக்குவரத்து துறைக்குரிய உள்நாட்டு கைத்தொழில் முறைமையை கட்டியெழுப்புவதற்குத் தேவையான பெறுகை நடைமுறையினை அறிமுகப்படுத்துதல்.

- கொழும்பு ஹம்பாந்தோட்டை, காங்கேசன்துறை, மற்றும் திருகோணமலை துறைமுகங்களுக்கு புகையிரத்தின் மூலம் பொருட்களை எடுத்துச் செல்வதற்குத் தேவையான வசதிகளை ஸ்தாபித்தலும் விரிவுபடுத்தலும்.

- தகவல் தொழில்நுட்பத்தினை ஈடுபடுத்துவதன் மூலம் மோட்டார் வாகனங்களைப் பதிவுசெய்தலினை மக்களுக்குச் சாதகமான, வினைத்திறனான, மோசடிகள் அற்ற நடைமுறையாக மாற்றுதல்.

- இலங்கை போக்குவரத்துச் சபையை இலாபம் உழைக்கும் ஒரு நிறுவனமாக நவீனமயப்படுத்துதலும் பிரதான பஸ்

நிறுத்துமிடங்களில் பொது வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

- தற்போதைய பஸ் ஒதுக்கீட்டினை மீளமைத்து கொழும்பு மற்றும் பிரதான நகர எல்லைக்குள் ஓடுவதற்காக சுற்றாடலுக்குச் சாதகமான புதிய பஸ்களை அறிமுகப்படுத்துதலும் தனிப்பட்ட பயணிகள் போக்குவரத்தினையும் பசுமையான போக்குவரத்திற்கு இணங்கச் செய்வதற்காக வேலைத்திட்டத்தினை தயாரித்தலும் அமுல்ப்படத்துதலும்

- புகையிரத பெட்டிகள், பஸ்கள் மோட்டார் வாகனங்களை உள்நாட்டில் தயாரித்தல் திருத்தம் செய்தல், மேம்படுத்துதல் என்பவற்றிற்கு முதலீட்டாளர்களை ஊக்கப்படுத்தும் போக்குவரத்து சேவையை கட்டியெழுப்புதல்

- பாடசாலை பஸ்சேவைகள் மற்றும் மாணவர்களின் பாதுகாப்பினை வழங்கும் நியமங்களின் கீழ் வலுப்படுத்துதல்.

- கிராமிய பிரதேசங்களுக்கு பொது போக்குவரத்து வசதிகளை வழங்குவதனை முறைமைப்படுத்துவதற்காக இலங்கை போக்குவரத்துச் சபை பயணிகள் மற்றும் பொருட்களை போக்குவரத்து செய்வதற்காக ஈடுபடுதல்.

- பயணிகள் மற்றும் போக்குவரத்து சேவைகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் போக்குவரத்துச் சேவைகளை உயர்த்த நியம தரத்தில் நடைமுறைப்படுத்தல்.

- சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், மற்றும் மோட்டார் வாகனங்களை பதிவுசெய்யும் போது இடம்பெறுகின்ற பல்வேறு முறைகேடுகளை அகற்றி வினைத்திறனான சேவையை வழங்குதல்.

மேற்கூறிய கடமைகளை நிறைவேற்றுவதற்காக போக்குவரத்து அமைச்சிற்கு இராஜாங்க அமைச்சிற்கு மற்றும் இரண்டு திணைக்களங்களுக்கு பாராளுமன்றத்தினால் மீளாய்வாண்டின் போது மொத்தமாக ரூபா **67,680** மில்லியன் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா **59,273** மில்லியன் மொத்த தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் **12.42** சதவீதம் அல்லது ரூபா **8,407** மில்லியன் நிதி ஏற்பாட்டினை பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. விபரம் வரைபடம் 28 இல் தரப்படுகின்றது.



	போக்குவரத்து அமைச்சு	இராஜாங்க அமைச்சு	இலங்கை புகையிரதத் திணைக்களம்	மோட்டார் போக்குவரத்து திணைக்களம்	மொத்தம்
நிதியேற்பாடு ரூபா மில்லியன்	7086	14408	42899	3287	67680
செலவினம் ரூபா மில்லியன்	3989	12845	40416	2023	59273
சேமிப்பு ரூபா மில்லியன்	3097	1563	2483	1264	8407

வரைபடம் 28 – வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் அளவு மற்றும் உள்ளபடியான செலவினம் மூலம் - 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள்

மேற்கூறிய கடமைகளை நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கி கீழே தரப்படுகின்றன.

குருனாகலிலிருந்து தம்புள்ளை ஊடாக ஹபரனை வரையான புகையிரதப் பாதை செயற்திட்டம்

குருனாகலிலிருந்து தம்புள்ளை ஊடாக ஹபரனை வரையான புதிய புகையிரத வீதி தொடர்பாக மேற்கொண்ட சாத்தியவள ஆய்வு 2009 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டு தம்புள்ளை பொருளாதார நிலையத்தினை மையமாகக் கொண்டு பொருள் போக்குவரத்து புகையிரத த்தினை மேம்படுத்தும் குறிக்கோளில் 2010 ஆம் ஆண்டின் போது ஆரம்பிப்பதற்கு ஈடுபடுத்தப்பட்ட குருனாகல் ஹபரனை புகையிரத வீதிக்காக 2010 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையான காலத்தில் உள்நாட்டு நிதியின் கீழ் வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ரூபா 1,032.76 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த நிதி ஏற்பாட்டில் 46% மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் 54 சதவீதமான ரூபா 555.91 மில்லியன் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

2024 ஆம் ஆண்டளவில் 4,090 காணித்துண்டுகளைப் பொறுப்பேற்று இழப்பீட்டினை செலுத்துதல் முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் 2022 சனவரி 24 ஆந் திகதி வரை 133 காணித்துண்டுகளுக்கு மாத்திரம் இழப்பீடு செலுத்தி முடிவுறுத்தப்பட்டிருந்தது.

கொழும்பு நகரத்திற்கு அண்மித்த புகையிரத்தின் வினைத்திறனை மேம்படுத்தும் செயற்திட்டம்

புகையிரத சேவையின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக 05 குறிக்கோளினூடாக இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன் இச்செயற்திட்டத்தினை வெற்றிகரமாக

நிறைவேற்றுவதற்காக 2019 ஆகஸ்ட் 20 ஆந் திகதி கையொப்பமிடப்பட்ட அமெரிக்க டொலர் 160 மில்லியன் தொகையான கடன் உடன்படிக்கை 2019 செப்தெம்பர் 06 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் செயலாற்றல் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கொழும்பிற்கு அண்மித்தபுகையிரத வினைத்திறன் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ஆசிய அபிவிருத்தி வங்கியின் கீழ் ரூபா 3,200 மில்லியனும் உள்நாட்டு நிதி ஏற்பாட்டின் கீழ் ரூபா 235 மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் உள்நாட்டு நிதி மூலகங்களின் கீழ் செலவு செய்தல் ரூபா 96 மில்லியன் அல்லது 41 சதவீதமான அளவில் இருந்தது.

அவ்வாறே ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியின் கீழான நிதி ஏற்பாட்டில் செலவு செய்யப்பட்ட பணம் ரூபா 2012 மில்லியன் மாத்திரமாக இருந்ததன் காரணமாகவும் ஒட்டுமொத்த மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டின் குறைந்த பயன்பாட்டின் காரணமாகவும் பொறுப்பளித்தல் கட்டணமாக ரூபா 83 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதிவரை செலுத்தப்பட்டிருந்தது.

கொழும்பு புறநகர் புகையிரத செயற்திட்டம்

சாத்தியவள ஆய்வு அபிவிருத்தி போக்குவரத்து செயற்திட்டத்திற்கான விபரமான பொறியியல் திட்டத்தினை தயாரித்தல் மற்றும் போக்குவரத்து செயற்திட்டத்திற்காக உதவி வழங்குவதற்காக நிதி ஏற்பாட்டினை உருவாக்குதல் போன்ற செயற்பாடுகளை குறிக்கோளாகக் கொண்டு முழுக்கிரயம் ரூபா 1,654 மில்லியனுக்குச் சமமான அமெரிக்க குடியரசு டொலர் 11.36 மில்லியன் நிதி ஏற்பாடுடன் இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. செயற்திட்டத்தின் செயலாற்றல் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- கொழும்பு புறநகர் புகையிரத செயற்திட்டத்திற்காக வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி ஏற்பாட்டின் கீழ் ரூபா 350 மில்லியனும் உள்நாட்டு நிதி மூலங்களின் கீழ் ரூபா 1,578 மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் செயற்திட்டத்தின் புகையிரத வீதியின் இரு பக்கத்திலும் குடியிருப்பாளர்களை மீளக் கடியமர்த்தும் செயலாற்றல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதன் காரணமாக உள்நாட்டு நிதியின் மூலமான பயன்பாடு ரூபா 264 மில்லியன் அல்லது அந்த நிதி ஏற்பாட்டில் 17% அளவிலாக இருந்தது.

- 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் அனுமதியற்ற குடியிருப்பாளர்களை மீளக் குடியமர்த்தச் செய்யும் வீட்டு அலகுகளை 2,036 ஆக ஆக்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் 484 வீட்டு அலகுகளில் மாத்திரம் மீளக் குடியமர்த்துதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

Park and Ride செயற்திட்டம்

Park and Ride செயற்திட்டத்தின் ஓடுவதற்காக இலக்கிடப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை கொழும்பு மாவட்டத்தில் 18 பஸ்களாகவும் கண்டி மாவட்டத்தில் 06 பஸ்களாகவும் இருந்தன. இது சம்பந்தமாக ஓடுதல் மற்றும் வருமானம் தொடர்பான விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. எனினும் Park and Ride செயற்திட்டத்திற்காக 25 GPS இயந்திரங்களை பஸ்ஸில்

பொருத்துவதற்காக இலங்கை போக்குவரத்து சபை பணத்தை செலவு செய்திருந்ததுடன் அந்த பஸ்கள் ஓடாததுடன் கமராக்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2022 யூன் 16 ஆந் திகதி வரை மீண்டும் அசோக் லேலன்ட் நிறுவனத்தின் 10 பஸ்களை வாடகை அடிப்படையில் பெற்று Park and Ride செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

ஒரு கொடவத்த எரிபொருள் நிரப்பு நிலையத்தை நிர்மாணித்தல்

இலங்கை போக்குவரத்துச் சபை 2018 மார்ச் 20 ஆந் திகதி ஒருகொடவத்த எரிபொருள் நிரப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ஒரு தனியார் கம்பனியுடன் ரூபா 61.01 மில்லியன் பெறுமதியான உடன்படிக்கை மேற்கொண்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் இச்செயற்பாடு 2018 யூன் 20 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2022 யூன் 16 ஆந் திகதி வரையும் இந்த நிர்மாண நடவடிக்கைகள் முடிவடைந்திருக்கவில்லை. இன்று வரை செலுத்தப்பட்டுள்ள முழுப்பணம் ரூபா 26.77 மில்லியன் ஆக இருந்ததுடன் இதன் நிர்மாணங்கள் தொடர்பான பெறுகை நடவடிக்கைகளானது பெறுகை வழிகாட்டிகளுக்கு முரணாக செய்யப்பட்டதனால் சபைக்கு ரூபா 2.10 மில்லியன் நிதிசார்ந்த நட்டம் ஏற்பட்டிருந்தது. மேலும் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தங்கள் பூர்த்தி செய்யப்படாமையால் சபைக்கு எரிபொருள் நிரப்பு நிலையத்தினை செயற்படுத்துவதனால் கிடைக்க கூடியதாக இருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது. அவ்வாறே கணக்காய்வு பரீட்சிப்பு சந்தர்ப்பத்தின் போது ரூபா 12.61 மில்லியன் பெறுமதியான 07 டீசல் மற்றும் பெற்றோல் பம்பிகள் அந்த நிலத்தில் எதுவித பாதுகாப்பு நடவடிக்கையும் இன்றி குவித்துவைக்கப்பட்டிருந்ததுடன் வைக்கப்பட்டிருந்த எரிபொருள் தாங்கிகளின் மூடிகள் ஒப்பந்தக்காரரால் அகற்றி எடுக்கப்பட்டிருந்தன.

09 காற்று வெளிப்படுத்தும் நிலையங்களை நிர்மாணித்தல்

இலங்கை போக்குவரத்துச் சபையினால் 09 மாகாணங்களிலும் 09 காற்று வெளிப்படுத்தும் நிலையங்களை நிர்மாணிப்பதற்கான உரிய உபகரண பொகுதிகள் 2018 ஏப்ரல் 26 ஆந் திகதி மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் வாகன வாயு வெளிப்படுத்தல் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடமிருந்து பொறுப்பேற்க்கப்பட்டிருந்ததுடன் இந்த நிலையத்தை நிர்மாணித்தலானது சாத்திய வள ஆய்வின்றி மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த காற்று வெளியாக்கல் நிலையங்களுக்கு மத்தியில் குருனாகல், மதவாச்சி ஆகியள நிலையங்களின் நிர்மாணிப்பு பூர்த்தியடைந்து திறக்கப்பட்டிருந்தும் சட்டரீதியான சிக்கலினால் மூடப்பட்டிருந்தன. இந்த நிலையங்களின் ரூபா 18.75 மில்லியன் பெறுமதியான இந்த இயந்திரங்கள் விளைவற்றுக் காணப்பட்டதுடன் இச்சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கு பொருத்தமான வகையில் உரிய சிவில் வேலைகளை நிர்மாணிப்பதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட தொகையான ரூபா 89.84 மில்லியனில் ரூபா 22.48 மில்லியன் மாத்திரம் கணக்காய்வுத் திகதியான 2022 ஏப்ரல் 30 ஆந் திகதியளவில் செலவு செய்யப்பட்டிருந்தது. 2022 மே 30 ஆந் திகதியளவிலும் அந்த நிர்மாணிக்கப்பட்ட நிலையம் விளைவற்றுக் காணப்பட்டது.

அதிசொகுசு பஸ்களில் கெமரா மற்றும் ஜி.பி.எஸ் (GPS) முறைமைக்காக தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்

இலங்கை போக்குவரத்துச் சபையின் 125 அதி சொகுசு பஸ்களுக்காக கெமரா மற்றும் ஸி.பி (GPS) முறைமையினைப் பேணுவதற்கு தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக சபை ஒரு தனியார் கம்பனியுடன் ரூபா 33.63 மில்லியனுக்கு உடன்படிக்கை மேற்கொண்டிருந்தது. இச்செயற்திட்டத்தினை மேற்கொள்வதற்கு முன்னர் தொடக்க சாத்தியவள ஆய்வு, கிரய பிரதிபலன் பகுப்பாய்வு, பிரதிபலன்களை முன்னறியும் முறைமை என்பவை தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. 125 அதிசொகுசு பஸ்களுக்காக ஜி.பி எஸ் (GPS) மென்பொருள் மற்றும் துணைக் கருவிகளைப் பொருத்துவதற்குரிய பெறுகை உடன்படிக்கையின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடப்பட வேண்டியுள்ள தாமதக் கட்டணமாகிய ரூபா 3.36 மில்லியன் வழங்குனரிடமிருந்து அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

இந்திய கடன் வசதிகளின் கீழ் பஸ்களை கொள்வனவு செய்தல்

இந்திய கடன் வசதிகளின் கீழ் 600 பஸ்களை வாகன அணியில் சேர்த்துக் கொள்வதற்காக ரூபா 3,506 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. பெறுகை நடைமுறைகளை பூர்த்தி செய்து 32 லிங்க்ஸ் ஆசனங்கள் கொண்ட 500 பஸ்களை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன் வழங்கல் ஒப்பந்தம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும் காணப்படுகின்ற டொலரின் பெறுமதி அதிகரிப்பின் அடிப்படையில் நிதிச் சிக்கலுக்கு அரசாங்கம் முகங் கொடுத்துள்ளமை மற்றும் 500 பஸ்களை கொள்வனவு செய்வதற்கு கடன் பணம் போதியதாக இல்லாமை என்பவற்றினால் 20 சதவீத முற்பணத்தை மாத்திரம் செலுத்தி மீண்டும் பஸ்களை கொள்வனவு செய்தல் நிறுத்தப்பட்டிருந்தது. 43 ஆசனங்கள் கொண்ட 100 பஸ்களை கொள்வனவு செய்தல் அமைச்சரவையினால் நிறுத்தப்பட்டிருந்ததுடன் அதற்குப் பதிலாக மின்சார பஸ்களை கொள்வனவு செய்வதற்கான இயலுமையினை ஆராய்ந்து பார்ப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

பஸ்கள் போதிளதாக இல்லாமை

2022 யூன் 16 ஆந் திகதியளவில் இலங்கை போக்குவரத்துச் சபையின் நாளாந்த பஸ் தேவைப்பாடு 7,339 ஆக இருந்ததுடன் இலங்கை போக்குவரத்துச் சபையில் காணப்பட்ட பஸ் அணி 6,951 ஆகும். இதில் 32 சதவீதம் ஓடமுடியாத நிலையில் காணப்பட்டது. ஓடுகின்ற 4,718 பஸ்களில் 2,742 பஸ்கள் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமைவாய்ந்தவைகளாகும்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் காணிகள்

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு பிராந்திய அலுவலகங்கள், டிபோக்கள், சாரதி பயிற்சி பாடசாலைகள் பிராந்திய வேலைத்தளங்கள் என்பன காணப்படுவதுடன் அவை பல்வேறு பிரதேசங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அந்த நிறுவனங்கள் அமைந்துள்ள காணிகள் சம்பந்தமான சட்டரீதியான உரிமையுள்ள குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள காணிகள் ஒப்படைப்பு அல்லது ஏனைய ஏதாவது வகையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள சபைக்குச் சொந்தமான அனைத்து காணிகள் என்பன தொடர்பாக சபையினால் நாளதுவரையாக்கப்பட்ட காணி தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. சபையின் அனைத்து காணிகளையும் அடையாளம்

காணல், உரிமையைத் தீர்த்துவைத்தல் அவற்றின் பெறுமதியை மதிப்பீடு செய்தல் என்பன மீளாய்வாண்டின் இறுதிவரை இடம்பெற்றிருக்கவில்லை. சபையிடமம் உள்ள பயன்படுத்துகின்ற காணிகள் பாதுகாப்பின்றி காடுகள் வளர்ந்து காணப்பட்டன.

இலங்கை போக்குவரத்துச் சபையின் வாகனங்களுக்கு அதிக பாதிப்புக்கள் ஏற்படுதல்

2022 மே மாதம் 09 ஆந் திகதி இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைமை அலுவலகத்திற்குரிய 02 வாகனங்கள் மற்றும் கம்பளை டிப்போவிற்குரிய ஒரு வாகனத்தை உள்ளடக்கி ரூபா 7.3 மில்லியன் பெறுமதியான 03 வாகனங்கள் ஆர்ப்பாட்ட களத்தில் ஏற்பட்ட மோதலின் போது அதிக அளவில் பாதிப்புக்குள்ளாகியிருந்தது.

அவ்வாறே 12 டிப்போக்களுக்குரிய ரூபா 60.90 மில்லியன் கிரயமான 18 பஸ்களும் ஆர்ப்பாட்டத்தினால் பாதிப்படைந்துள்ளதுடன் அதன் தேறிய பெறுமதி ரூபா 11.63 மில்லியனாகும்.

160 புகையிரத பெட்டிகளை கொள்வனவு செய்தல்

இந்திய கடன் உதவியின் கீழ் அமெரிக்க டொலர் 82.6 மில்லியன் (ரூபா 11,564 மில்லியன்) செலவு செய்து 160 புகையிரத பெட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் இன்றுவரை புகையிரதம் ஓடுவதற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளது 107 பெட்டிகள் மாத்திரமாகும். அதற்கிணங்க 53 பெட்டிகளை இதுவரை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

தயாரிக்கப்பட்ட பொறியியல் மதிப்பீட்டிற்கு இணங்க ஒரு பெட்டியினை பெற்றுக்கொள்ளும் கிரயம் அமெரிக்க டொலர் 0.3 மில்லியனாக இருந்த போதிலும் துறைமுகக் கட்டணம், காப்புறுதிக் கட்டணம், போக்குவரத்துக் கட்டணம் என்பவற்றை சேர்த்துக் கொள்கையில் அதன் உண்மையான செலவு அமெரிக்க டொலர் 0.558 மில்லியனாக இருந்தது.

160 புகையிரதப் பெட்டிகளில் 10 புகையிரத பெட்டிகள் மாத்திரம் பொறுப்பேற்கப்பட்டு அதற்கிணங்க ஏனைய 150 புகையிரத பெட்டிகள் பரீட்சிக்கப்படாது பெற்றுக்கொள்வதற்கு பொருத்தமானது என சிபார்சு செய்யப்பட்டிருந்தமையின் காரணமாக பின்வருமாறு தொழில்நுட்ப பொருள் விபரக் குறிப்பிற்கு மாற்றமாக இருந்தன என்பது அவதானிக்கப்பட்டது.

- புகையிரத பெட்டிகளின் நீளம், அகலம், உயரம் என்பன நியம தரத்தினை விட அதிகரிக்கப்பட்டிருந்தது.

- பேணப்பட வேண்டிய ஓடுதல் வேகம் 120 Kmh-1 ஆக இருந்தும் பொருள் விபரக்குறிப்புக்களுக்கு இணங்க வளைவுகளின் (Curve) ஆகக் குறைந்த ஆரை 150 மீற்றர்களாக இருந்த போதிலும் வலைத்தளங்களில் காணப்படுகின்ற வளைவுகளின் (Curve) ஆரை 90 மீற்றராக பயணம் செய்தலானது புகையிரம் வேகமாக பயணம் செய்தலானது புகையிரம் தண்டவாளத்திலிருந்து விலகுவதற்கும் விபத்துக்களுக்கும் காரணமாக இருந்தது என்பது அவதானிக்கப்பட்டதுடன் இதனை தவிர்ப்பதற்காக வேக எல்லையை விதிப்பதனூடாக ஏனைய புகையிரதங்களுக்கும் தாக்கம் ஏற்பட்டிருந்தது.

- புகையிரத விபரக் குறிப்பில் குறிப்பிட்ட அளவினை விட மூன்றாம் வகுப்பின் ஆசனங்கள் 82 வகுப்பின் இரண்டாம் ஆசனங்கள் 82 மற்றும் குளிர் காப்பு பெட்டிகளின் ஆசனங்கள் 70 ஆக 234 ஆசனங்கள் குறைவடைந்திருந்தன.

- தண்டவாளத்தின்உச்சியிலிந்து புகையிரத மேடைக்கு காணப்பட வேண்டிய அங்கீகரிக்கப்பட்ட உயரத்தினை விட இப்புகையிரதம் நிலம் வரை 400 mm அதாவது 16 அங்குலம் உயரத்தில் அதிகரித்திருந்தது.

கண்டி - கெடம்பேவிற்கு இடையே இரட்டை புகையிரத பாதையை நிர்மாணிப்பதற்கான செயற்திட்டம்

கண்டிக்கும் கெடம்டபேவிற்குமிடையே இரட்டை புகையிரதப் பாதையை நிர்மாணிப்பதற்காக ரூபா 47 மில்லியன் பெறுமதிக்காக ஒரு தனியார் நிறுவனத்தடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் அதன் நிர்மாண நடவடிக்கைகள் 2018 யூலை 30 ஆந் திகதிக்கு முன்னர் (இறுதி கால நீடிப்பு) செய்யப்பட வேண்டி இருந்த போதிலும் இதுவரை பூர்த்தி செயற்திட்டத்தின் வேலையை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. மேலும் 1/720 இலிருந்து 1/830 வரை மற்றும் 1/900 இலிருந்து 1/980 வரையான மொத்த நீளம் 190 மீட்டர் அளவான பகுதியின் நிர்மாண நடவடிக்கைகளிலிருந்து ஒப்பந்தக்காரர் விலகியிருந்ததுடன் அப்பகுதி திணைக்களத்தின் தலையீட்டில் தயாரிப்பதற்கு இணங்கி கொள்ளப்பட்டிருந்தும் இன்றுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- நியமத்திற்கு இணங்க ABC பரப்புதல் 10” ஆக இருக்க வேண்டிய போதிலும் பௌதீக பரீட்சிப்பின் போது அது 9.5 “, 7.25”, 9.6” முதலியவாறாக நியமத்தினை மீறிக் காணப்பட்டதுடன் Ballast ஈடுபடுத்தும் போது 8” இற்குப் பதிலாக 6.75”, 6”, 7.5” முதலியவாறாக நியமத்தினை மீறிக் காணப்பட்டன.

- இந்த இரட்டை பாதையை நிர்மாணிப்பதற்காக புகையிரத பாதுகாப்பு பகுதிக்குள் குடியிருக்கும் அதிகாரமற்ற 116 குடியிருப்பாளர்களை அப்புறப்படுத்துவதற்கு நீதிமன்ற கட்டளை வழங்கப்பட்டிருந்த போதிலும் இன்றுவரை 95 வீடுகளை அப்புறப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

- லொட் இலக்கம் 01 இலிருந்து லொட் இலக்கம் 28 வரை மற்றும் லொட் இலக்கம் 73 இலிருந்து லொட் இலக்கம் 88 வரை 44 குடியிருப்பாளர்களுக்கு கண்டி பல்லேகல பிரதேசத்தில் மாற்று இடம்வழங்கப்பட்டிருந்தும் வெல்லஸ்ஸ கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குரிய 17 குடியிருப்பாளர்கள் இன்னும் புகையிரத பாதுகாப்பு பகுதியில் குடியிருக்கின்றார்கள்.

- அப்புறப்படுத்தும் கட்டளை கிடைத்த 35 குடியிருப்பாளர்கள் விலகிச் செல்லாது இன்னும் அதிலேயே தங்கியிருக்கின்றமை அவதானிக்கப்பட்டது.

- இரட்டைப் பாதையின் முதலாம் கட்ட வேலை முடிவடைந்திருக்காத போதிலும் அதன் இரண்டடாவது கட்டமான கெடம்பேயிலிருந்து சரசவி உயன வரையான பாதை முறைமையை நிர்மாணிப்பதற்கான வேலை ஆரம்பிக்கும்

படியாக ரூபா 567 மில்லியன் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

மஹவ- அனுராதபுரம்- ஓமந்தை வரையான புகையிரதப் பாதையை திருத்தம் செய்வதற்கான செயற்திட்டம்

இந்திய எக்சீம் வங்கியுடன் மேற்கொள்ளப்பட்ட கடன் உடன்படிக்கைகளின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு மஹவ -அனுராதபுரம்- ஓமந்தை வரையான புகையிரதப் பாதையை திருத்தம் செய்வதற்காக Ircon International Limited நிறுவனத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின் பிரகாரம் 19.26 சதவீத கழிவுக்கு உட்பட்டு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் கலந்துரையாடி ஒழுங்குகள் செய்வதற்கு ஏனைய கேள்விதாரர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

பாதையை புனரமைப்பதற்கு சமாந்திரமாக சமிக்ஞை முறைமைகளையும் ஸ்தாபிக்க வேண்டிய போதிலும் சமிக்ஞை முறைமைகளை ஸ்தாபிப்பதற்குத் தேவையான வேலைத்திட்டங்களும் அதற்கான செலவு மதிப்பீடும் தயாரிக்கப்படவில்லை. மேலும் அச்செயற்பாட்டினை ஒப்பந்தக்காரரினூடாக மேற்கொள்வதா அல்லது திணைக்களத்தின் சமிக்ஞை பிரிவினால் மேற்கொள்வதா என்பது தொடர்பாக இன்று வரை இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது என்பது அவதானிக்கப்படவில்லை.

உரிய பாதைப் பகுதியில் 78 குறுக்கு வீதிகள் (Level Crossing) அடையாளம் காணப்பட்டிருந்ததுடன் அதில் 09 குறுக்கு வீதிகள் தற்பொழுது தடைகளுடன் முழுமையான பாதுகாப்பு கடவையானதுடன் 01 பெல்லும் லயிட்டும், இரண்டு பூட்டு போடப்படும் கடவைகளும், மிகுதியானவை மனிதர்களால் கட்டுப்படுத்தப்படும் கடவைகள் என அவதானிக்கப்பட்டது. பாதைகள் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் இக்கடவைகளுக்காக நிரந்தர வீதிப் பாதுகாப்பு வேலைத்திட்டத்தினை ஸ்தாபிப்பதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்திடமிருந்து எதிர்பார்த்த நிதிசார் செயல்முன்னேற்றம் 39 சதவீதமானதுடன் பௌதீக செயல்முன்னேற்றம் 38.5 சதவீதமுமாகும். எனினும் அடைந்துகொள்ளப்பட்ட நிதிசார் செயல்முன்னேற்றம் 23 சதவீதம் மற்றும் பௌதீக செயல் முன்னேற்றம் 27 சதவீதம் என அவதானிக்கப்பட்டது. இதற்கு காரணமாக போதியளவு பாதீட்டு நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படாமையும் திறைசேரியிடமிருந்து நிதி ஏற்பாடு கிடைக்காமையும் என சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு மற்றும் உள்ளபடியான செலவுகள் தொடர்பாக கவனத்தில் கொள்ளும் போது அவ்வாறான நிலைமை இல்லை என்பது அவதானிக்கப்பட்டது.

கொழும்பு புறநகர் புகையிரத செயற்திட்டம்- சாத்தியவள ஆய்வு

கொழும்பு புறநகர் புகையிரத செயற்திட்டத்தின் கீழ் 20 ஆண்டுகள் காலத்தின் போது நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை உள்டக்கிய சாத்தியவள ஆய்வு அறிக்கையும் விபரமான திட்டமும் 2021 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் பூர்த்தி செய்து உரிய வரிசை அமைச்சினூடாக இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த சாத்திய வள ஆய்விற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் வசதிகளின் கீழ் ரூபா 1,446 மில்லியன் பணம் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அக்கடனுக்கான கடன்

தவணைப் பணம் அமெரிக்க டொலர் 275,000 வீதம் அரையாண்டு ரீதியாக 2022 மார்ச் 15 மற்றும் 2022 செப்தெம்பர் 15 ஆந் திகதிகளில் செலுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. எனவே மேற்கூறிய சாத்தியவள ஆய்வு அறிக்கையானது அமுல்ப்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டதன் மூலம் பொருளாதாரத்திற்கு எதுவித பயன்பாடும் இல்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

புகையிரத பாதுகாக்கப்பட்ட காணிகளை குத்தகைக்கு வழங்குதல்

புகையிரத காணிகளை குத்தகைக்கு வழங்கும் போது முறைப்படியாக உடன்படிக்கை செய்து கொள்ளப்படாமை அனுமதியற்ற பயன்பாடு அனுமதியற்ற நிர்மாணங்கள் உபகுத்தகைக்கு வழங்குதல், உடன்படிக்கை நிபந்தனைகளை மீறுதல், வருமானங்களை முறைப்படியாக அறவீடு செய்யாமை,அவற்றின் உரிமை தொடர்பாக பிரச்சினைகள் என்பன உருவாகிய சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

L- 4731 (LC-32933) ஆம் இலக்கத்தின் கீழ் சட்ட ரீதியாக ஏனைய நபர்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த கம்பொல புகையிரத நிலையத்திற்கு அருகிலுள்ள புகையிரத பாதுகாக்கப்பட்ட காணியும் இன்னும் ஒரு பகுதியும் சேர்த்துக்கொள்ளப்பட்டு 02 ஏக்கர் 02 ரூட் 35.3 பேச்சஸ் காணி கம்பொல அபிவிருத்தி அதிகார சபைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- 16/1370/724/054 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரத்திற்கு இணங்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் III ஆவது பிரேரணையின் பிரகாரம் முத்தரப்பு புரிந்துணர்வு உடன்படிக்கையினை மேற்கொள்வதற்கு முன்னர் அதற்காக சட்டமா அதிபரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- பிரதம மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்ற வரிக்கு உட்பட்டு இந்த காணி நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட வேண்டுமென போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் சிபார்சு செய்திருந்த போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- கம்பொல நகர மத்திய அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக 2016 செப்தெம்ர் 10 ஆந் திகதி அடிக்கல் வைக்கப்பட்டிருந்ததுடன் கையொப்பமிடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் 12 ஆவது நிபந்தனையின் பிரகாரம் 2019 பெப்ரவரி 20 ஆந் திகதி வரை இந்த உடன்படிக்கை செல்லுபடியாகும் என காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க இன்றுவரை நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் குறிக்கோளினை நிறைவேற்றாமையின் அடிப்படையில் இத்திணைக்களத்தின் காணியின் உரித்தினை மீளப் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

புகையிரத காணிகளை ஒப்படைத்தல்

“பிபிதெமு பொலன்னறுவை” அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிதி நிலையத்தினை நிர்மாணிப்பதற்காக 03 ஏக்கர் 17 ரூட் 09 பேச்சர்ஸ் பரப்பளவுள்ள புகையிரத காணி நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கை காலத்தில் அதாவது 2022

பெப்ரவரி 21 ஆந் திகதி வரை அக்குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்காததுடன் எதிர்பார்த்த நிதிக் கம்பனிகளும் அச்செயற்திட்டத்தின் கீழ் இடவசதிகளை ஒதுக்கீடு செய்தல் இடம்பெற்றிருக்கவில்லை. அதற்கிணங்க உரிய குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு பரீட்சிப்பு திகதியான 2022 திசெம்பர் 16 ஆந் திகதி வரை முடியாதிருந்ததனால் அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட புகையிரத காணிகளின் உரித்தினை மீளப்பெற்றுக்கொள்வதற்கு நிருவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

எம் 6 வகுப்பு புகையிரத இன்ஜினுக்கான உதிரிப் பாகங்களை கொள்வனவு செய்தல்

எம் 6 வகுப்பு புகையிரத இன்ஜினுக்கான உதிரிப் பாகங்களை கொள்வனவு செய்யும் போது பொருள் தட்டுப்பாடு அல்லது சேதமடைதல் சம்பந்தமாக பொருட்கள் துறைமுகத்திற்கு கிடைத்து 45 நாட்களுக்குள் வழங்குனருக்கு தெரியப்படுத்த வேண்டிய போதிலும் புகையிரத திணைக்களத்தினால் வழங்குனருக்கு பொருட்கள் குறைவாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என 03 ஆண்டுகளுக்குப் பின்னர் தெரிவிக்கப்பட்டுள்ளதனால் ரூபா 12 மில்லியன் தொகையான நிலுவைப் பொருட்களை வழங்குதல் அல்லது பெறுமதியை மீளச் செலுத்தலினை வழங்குனர் நிராகரித்திருந்ததுடன் இதற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 14.54 மில்லியனுக்கு அண்மித்த பணம் விளைவற்ற செலவாக மாறியிருந்தது.

பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

எஸ் 8 வகுப்பு புகையிரத இன்ஜினுக்காக உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்யும் போது 2019 ஏப்ரல் 10 ஆந் திகதி புகையிரத திணைக்களத்திற்கு கிடைத்திருந்த ரூபா 16 மில்லியன் பெறுமதியான உதிரிப்பாகங்களின் இருப்பு 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளாது களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டன.

வழங்கப்படாத பொருட்களுக்காக கொடுப்பனவு செய்தல்

பொருட்கள் உரிய நியம தரத்திலும் சரியான அளவிலும் பெற்றுக்கொள்ளப்பட்டது என கொடுப்பனவுகளை சான்றுபடுத்தும் உத்தியோகத்தரினால் சான்றுபடுத்தியதன் பின்னர் களஞ்சிய வழங்கல்களுக்காக கொடுப்பனவு செய்ய வேண்டிய போதிலும் புகையிரத திணைக்களத்திற்கு வழங்கப்படாத பொருட்களுக்காக ரூபா 90 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

தீர்த்து வைக்கப்படாத நாணய கடிதம்

2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் புகையிரத திணைக்களத்தின் தீர்த்துவைக்கப்படாத நாணயக் கடிதத்தின் பெறுமதி ரூபா 616 மில்லியனாக இருந்ததுடன் அதில் 19 சதவீதமான ரூபா 116 மில்லியன் 02 ஆண்டுகளுக்கும் 23 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட பழைய மீதியாகும். பணம் செலுத்தி 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் இம்மீதிகளைத் தீர்த்துவைக்கப்படாமைக்கான காரணம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் ரூபா 116 மில்லியனுக்கு மேற்பட்ட இக்கொடுப்பனவுகள் வழங்கப்படாத பொருட்களுக்காக வழங்குனருக்குச் செலுத்தப்பட்டுள்ள பணம் என்பது கணக்காய்வில் சச்சரவுத்தன்மையானதாகும்.

இலங்கை புகையிரதத்தின் பிரதான திட்டம்

2017 ஆம் ஆண்டின் போது ஆசிய அபிவிருத்தி வங்கியின் மானியத்தின் (உடன்படிக்கை இலக்கம் TA 9382 -SRI

27-10-2017) கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட அமெரிக்க டொலர் 1.5 மில்லியன் செலவு செய்து புகையிரத திணைக்களத்திற்காக பிரதான செயற்பாட்டு திட்டத்தினை (Master Plan) தயாரிப்பதற்காக 2017 ஒக்தோபர் 27 ஆந் திகதி உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்ததுடன் செயற்திட்டம் 2022 யூன் 30 ஆந் திகதி பூர்த்திசெய்யப்பட வேண்டிய போதிலும் 2021 யூன் 30 ஆந் திகதி வரை கால நீடிப்பு செய்யப்பட்டிருந்தது. ஆசிய அபிவிரத்தி வங்கி மூலங்களுக்கு இணங்க 2021 யூலை 05 ஆந் திகதி வரை இதற்காக விடுவிக்கப்பட்ட நிதி ஏற்பாடு அமெரிக்க டொலர் 1,056,555.63 ஆகும். எவ்வாறாயினும் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத்திட்டம் தொடர்பான விபரம் சமர்ப்பிக்கப்படாததுடன் ஆசியள அபிவிருத்தி வங்கியினால் வழங்கிய மானியங்கள் போக்குவரத்து அமைச்சின் பாதீட்டில் அல்லது நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை.

வருமானம்

ரூபா 2,678 மில்லியனான இலங்கை புகையிரத திணைக்களத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான வருமானம் ரூபா 4,566 மில்லியனான 2020 ஆம் ஆண்டிற்கான வருமானத்தினை விட 41 சதவீதத்தினாலும் ரூபா 7,901 மில்லியனான 2019 ஆம் ஆண்டிற்கான வருமானத்தினை விட 66 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தது.

நிலுவையாக இருந்த வருமானங்கள் அறவீடு செய்யப்படாமை

இல்ங்கை புகையிரத திணைக்களத்தின் மீளாய்வாண்டின் இறுதியில் புகையிரத அனுமதிப்பத்திர நிலுவை வருமானம் ரூபா 809.66 மில்லியனாகஇருந்தது. அந்த நிலுவையாக இருந்த வருமானத்தில் 1987 இற்கு முன்னரிலிருந்து அரசாங்கத்தின் 197 நிறுவனங்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 7.38 மில்லியனும் 1990 இற்கும் 2020 இற்கும் இடைப்பட்ட காலத்தில் அரசாங்கத்தின் 187 நிறுவனங்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1.76 மில்லியனும் ஆக ரூபா 9.13 மில்லியன் நிலுவையான அனுமதிப்பத்திர வருமான மீதி அவதானிக்கப்பட்டது. மேலும் புகையிரத்தின் மூலம் பொருட்களை எடுத்துச் செல்வதற்காக மீளாய்வாண்டின் இறுதியளவில் 31 நிறுவனங்களிடமிருந்து மொத்தமாக ரூபா 120.47 மில்லியன் நிலுவையாகக் காணப்பட்டதுடன் அதனுள் 16 நிறுவனங்களிடமிருந்து கிடைக்கவேண்டிய ரூபா 20.31 மில்லியன் 21 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமைவாய்ந்ததாக இருந்ததுடன் 05 ஆண்டுகளை மிகைத்த நிலுவையான வியாபார விலைப்பட்டியலின் பெறுமதி ரூபா 1.7 மில்லியனாகும். மேலும் மீளாய்வாண்டின் இறுதிவரை புகையிரத நிலையங்களிலிருந்து அறவிட வேண்டிய பயணிகள் வருமானம் ரூபா 12.75 மில்லியனாகும்.

துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அலுவல்கள

கணக்காய்வு அவதானிப்புக்கள்

- பிரதான அபிவிருத்தி செயற்திட்டங்களை செயற்படுத்துதல
- அரச துறை கப்பல் பண்டங்கள் இறக்குமதி செய்தல்
- கொள்கலன்கள் செயற்பாட்டு அலுவல்களில் சர்வதேச இடம் மற்றும் துறைமுக அதிகார சபையின் சந்தைப் பகுதி
- கப்பற் பண்டங்களின் செயற்பாட்டு அலுவல்கள்
- கொழும்புத் துறைமுகத்துக்கு படகுகள் வருகை (வருகை)
- முடிவுமுனை செயற்பாட்டு அலுவல்கள் குறைவடைதல்
- கிழக்கு கொள்கலன் முடிவுமுனையின் குறை பயன்பாடு
- ஹம்பாந்தோட்டை துறைமுகம் நிர்மாணிப்பதற்காக பெற்றிருந்த வெளிநாட்டுக் கடன
- நிருவகிக்கப்படும் கம்பனி ஒன்றினால் பெற்றிருந்த கடனிற்காக பிணை நிற்றல்
- CCTV கெமரா முறையை பொருத்தப்படாமை
- சுங்கத்தினால் விதிக்கப்பட்டிருந்த தண்டப்பணம்
- துறைமுக அதிகார சபைக்கு திறைசேரியில் இருந்து கிடைக்க வேண்டிய பணம்
- சொத்துக்கள் மீளாய்வு
- நிதி அதிகாரச் சட்டத்திற்கு மற்றும் துறைமுகங்கள் தொடர்பான அதிகாரச் சட்டத்திற்கு இணக்கமின்மை
- துறைமுகங்கள் சட்டத்திற்கு இணக்கமின்மை
- முறைப் பிரகாரம் காணிகளை உரித்தாக்கியிருக்காமை
- தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள்
- சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள
- இழப்பீடு
- மூலதனப்படுத்தப்படாத இனங்காணப்படாத கொள்வனவுகள்
- இலங்கை துறைமுக அதிகார சபைக்கு உரித்தாக்கப்பட்டிருக்காத பங்கு உரிமைகள்
- மனிதவள முகாமைத்துவம்
- நிருவகிக்கும் கம்பனிக்கு கொள்கை ஒன்று தயாரித்திருக்காமை
- தாமதமாகிய செயற்திட்டங்கள்
- முடிவுமுனை சேவை உடன்படிக்கைகளுக்கு முரணாக கப்பல் முகவர் நிறுவனங்களுக்காக தள்ளுபடி வழங்குதல்

துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அலுவல்கள்

தென் ஆசிய வலயத்தில் கடற்படை செயற்பாடுகளின் மிகவும் போட்டியான கேந்திர நிலையமொன்றாக இலங்கையை அபிவிருத்தி செய்து உயர்தர நிலைமையில் பயன்படுத்துவோருக்கு நட்பு கப்பல் சேவையை வழங்கும் தூர நோக்கத்துடன் செயல்படுகின்ற துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சு மற்றும் அதன் கீழ் பண்டகசாலை வசதிகள், கொள்கலன் முற்றங்கள், துறைமுக வழங்கள் வசதிகள் மற்றும் படகு மற்றும் கப்பல் கைத்தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு மற்றும் 03 நியதிச்சட்ட சபைகளினால் கீழே காட்டப்பட்டுள்ள செயற்பாடுகள் மற்றும் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியதாக உள்ளன.

- கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை கடற்துறைமுகங்கள் வாணிப மற்றும் பயணிகள் துறைமுகங்களாக விருத்தி செய்தலும் விரிவாக்குதலும்.
- ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை பொறிசார் மற்றும் சேவைத் துறைமுகமாக அபிவிருத்தி செய்தலும், கப்பல்களை பராமரித்தல், புதுப்பித்தல் மற்றும் கப்பல்களுக்குத் தேவையான பொருட்களை வழங்குதல் போன்ற சேவைகளை வழங்குவதற்காக உள்நாட்டு வியாபாரங்களுக்கு வசதிகளை ஏற்படுத்துதல்.
- தனியார் துறையின் பங்கு கொள்ளலில் பேலியகொட, வியாங்கொட மற்றும் இரத்மலானை ஆகிய பிரதேசங்களில் வீதிகள் மற்றும் புகையிரத தொடர்பினை அடிப்படையாகக் கொண்ட கொள்கலன் முற்றங்களை அபிவிருத்தி செய்தல்.
- மீள்கப்பல் ஏற்றுகைகள் வழிநடத்தும் இயலளவு, களஞ்சிய வசதிகள் கொள்கலன் முனையங்கள் வழங்கல் வசதிகள் மற்றும் இயந்திரப் படகுகள் அத்துடன் கப்பற்துறை அபிவிருத்தியை மேம்படுத்தல்.
- பிராந்திய தேவைகள் மற்றும் தேசிய பொருளாதாரத்தின் தேவைக்கேற்ப காலி, காங்கேசன்துறை மற்றும் திருகோணமலை துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல்.
- தேசிய கைத்தொழிலாக கடற்றொழில், கப்பற்துறை மற்றும் சுற்றுலாத்துறை என்பவற்றுக்குத் தேவையான இயந்திரப் படகுகளைத் தயாரித்தலும், மேம்படுத்தலும்.
- வெளிநாட்டு சந்தை தேவைகளை இலக்காகக் கொண்டு ஏற்றுமதிக்காக கப்பல்கள் மற்றும்இயந்திரப் படகுகளை பராமரித்தல், திருத்தல் மற்றும் உற்பத்தி அலுவல்களை மேம்படுத்தலும்.
- கப்பல்கள் மற்றும் இயந்திரப் படகுகளைத் தயாரிப்பதற்குத் தேவையான பொறியியல் மற்றும் தொழில்நுட்ப வசதிகளும் அந்த தயாரிப்புகளுக்குத் தேவையான கப்பற் கட்டும் இடங்கள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.
- இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை மற்றும் இலங்கைச் சுங்கத்துடன் ஒருங்கிணைந்து செயற்படல்.

2021 ஆண்டின் மேற்கூறிய பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அலுவல்கள் அமைச்சுக்கு பண்டகசாலை வசதிகள் கொள்கல முற்றவெளி துறைமுக

வழங்கள் வசதிகள் மற்றும் வள்ளங்கள் மற்றும் கப்பல் கைத்தொழில் அமைச்சுக்கு கூட்டுத்தொகை ரூபா 2,883 மில்லியனிற்கான ஏற்பாடுகள் பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதிவரை அவற்றில் ரூபா 1,612 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் வரைபடம் இலக்கம் 29 இல் காண்பிக்கப்படுகின்றது.



உரு 29 – மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினம் மூலம் - 2021 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை

துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சில் மற்றும் அதன் கீழ் காணப்படும் இராஜாங்க அமைச்சுக்கள் மற்றும் 03 நியதிச் சட்ட சபையினால் மேற்கூறிய கருமங்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட பொருண்மையான மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்களின் பொழிப்பாக கீழே காட்டப்பட்டுள்ளது.

பிரதான அபிவிருத்தி செயற்திட்டங்களை செயற்படுத்துதல்

துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அலுவல்கள் அமைச்சின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் கொழும்பு வடக்கு துறைமுக அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக சாத்தியக்கூறு ஆய்வறிக்கையொன்று தயாரிப்பதற்காக ரூபா 380 மில்லியனிற்கான தேறிய ஏற்பாடுகளின் சதவீதம் என சேமிப்பு 24 சதவீதமும் துண்கள் மீது நிர்மாணிக்கப்பட்டு வரும் துறைமுக நுழைவு அதிவேகப் பாதை செயற்திட்டத்திற்காக தேறிய ஏற்பாடுகளாகிய

ரூபா 210 மில்லியன் தொகையின் சேமிப்பு 48 சதவீதமாக காணப்பட்டது. மேலும், இந்த 2 செயற்திட்டங்களின் திட்டமிடப்பட்ட செயற்திட்ட கருமங்கள் திட்டமிடப்பட்டவாறு ஆண்டின் போது செயற்படுத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட முடியாமல் போனதால் செயலாற்றுகை முறையை 75 சதவீதம் மற்றும் 12 சதவீத மட்டங்களில் காணப்பட்டது.

அரச துறை கப்பல் பண்டங்கள் இறக்குமதி செய்தல்

2016 ஜனவரி 13 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள் உட்பட அனைத்து அரச நிறுவனங்களினாலும் 2005 மே 06 திகதிய 415 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அரச துறையின் கப்பல் பண்ட இறக்குமதி செய்தல் வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. அதேபோல் 2016 பெப்ரவரி 18 திகதிய 03 இலக்க பொது நிதிச் சுற்றுநிருபத்தின் மூலமும், 2016 ஆகஸ்ட் 11 திகதிய இலங்கை மத்திய வங்கியினால் வாணிப வங்கிகளுக்கு வழங்கியிருந்த அறிவுரைகள் மூலமும் அரச துறையின் பண்டங்களின் இறக்குமதி வ/ப இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், கம்பனியின் சேவையை பெற்றக்கொள்ளும் அரச நிறுவனங்களின் எண்ணிக்கை வரையறையாக காணப்பட்டதுடன், பாரிய அளவில் இறக்குமதி அலுவல்களில் ஈடுபடும் அரச நிறுவனங்கள் கம்பனியின் சேவையை பெற்றிருக்கவில்லை. அதேபோல், சில அரச நிறுவனங்கள் ஏனைய வெளிநாட்டு கப்பல் கம்பனிகள் மூலம் இறக்குமதிகளை மேற்கொள்ளப்படுவதற்கு விண்ணப்பிக்கப்பட்டதென கண்டறியப்பட்டது. 2017 ஆண்டில் அவ்வாறான விண்ணப்பிக்கப்பட்ட 700 சந்தர்ப்பங்களை விட மிகையான எண்ணிக்கையாகவும், 2018 ஆண்டில் 538 சந்தர்ப்பங்களுக்காகவும், 2019 ஆண்டில் 486 சந்தர்ப்பங்களுக்காகவும், 2020 ஆண்டில் 492 சந்தர்ப்பங்களுக்காகவும், 2021 ஆண்டில் 347 சந்தர்ப்பங்களுக்காகவும் கம்பனியினால் கைவிடல் அறிவித்தல் கடிதம் (waivers) வழங்கப்பட்டு ஏனைய நிறுவனங்களின் மூலம் இறக்குமதி வசதிகள் பெற்றுக்கொள்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. இதன்படி, அரச நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற பண்டங்கள் இறக்குமதி செய்தல் மற்றும் தொடர்புடைய வர்த்தக சந்தர்ப்பங்கள் கம்பனிக்கு பெற்றுக்கொள்வதற்காக பொருத்தமான செய்முறையொன்று அமுல்நடாத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. மேற்கூறிய சுற்றறிக்கையின் மூலம் கம்பனியின் சந்தைப் பகுதியை விரிவாக்கிக் கொள்வதற்காக வழங்கப்பட்டிருந்த அரச அனுசரணைகளை பாராட்டத்தக்க வகையில் ஈடுபடுத்துவதற்கு வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கம்பனியினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

கொள்கலன்கள் செயற்பாட்டு அலுவல்களில் சர்வதேச இடம் மற்றும் துறைமுக அதிகார சபையின் சந்தைப் பகுதி

2021 ஆண்டிற்காக உலக துறைமுகங்களில் கொள்கலன்களை செயற்படுத்துவது தொடர்பான எல்பாலய்ன் அமைப்பினால் வெளியிடப்பட்ட தரப்படுத்தல் அறிக்கை (Alpha Liner Report) படி கொழும்புத் துறைமுகம் இருபது சமமான அலகுகள் (Twenty Equivalent Units) 7,249,358 தொகை செயற்பாடுகள் மேற்கொண்டு இந்த ஆண்டில் உலக துறைமுகங்களில் 22 ஆவது இடத்தை பிடித்துள்ளது. அந்தஅறிக்கையின் படி 2020 ஆண்டிற்கு ஒப்பாக கொழும்புத்

துறைமுகத்தின் கொள்கலன்கள் செயற்பாட்டு அலுவல்களில் 5.8 சதவீத முன்னேற்றம் ஒன்றை நெருங்கியிருந்ததுடன், இலங்கை துறைமுக அதிகார சபைக்குரிய முடிவுமுனைகளில் அந்த அதிகரிப்பு 4.8 சதவீதமாகக் காணப்பட்டது.

கப்பற் பண்டங்களின் செயற்பாட்டு அலுவல்கள்

கொழும்பு, காலி, ஹம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை ஆகிய பிரதான துறைமுகங்களுக்கு 2017 ஆண்டின் போது வந்திருந்த கப்பல்களின் எண்ணிக்கை 4,942 ஆக இருந்த போதிலும், 2021 ஆண்டளவில் அந்த எண்ணிக்கை 4,180 வரை குறைவடைந்திருந்தது. எவ்வாறியினும், செயற்படுத்தப்பட்ட இருபது சம (TEUs) கொள்கள அலகு எண்ணிக்கை 2016 இல் 5.7 மில்லியனில் இருந்து 2021 ஆண்டில் 7.2 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. அதே போல் செயற்படுத்தப்பட்ட வழமையான கப்பற் பண்ட எண்ணிக்கை 2018 ஆண்டில் 10.1 மில்லியன் மெற்றிக் தொன்னில் இருந்து 2021 ஆண்டளவில் 9.2 மில்லியன் மெற்றிக் தொன் வரை குறைந்திருந்தது. விபரங்கள் அட்டவணை 21 இல் காண்பிக்கப்படுகின்றது.

விபரங்கள்	2016	2017	2018	2019	2020	2021
வந்திருந்த கப்பல்களின் எண்ணிக்கை	5,023	4,942	4,933	4,708	4,337	4,180
செயற்படுத்தப்பட்ட இருபதுசம (TEUs) கொள்கள அலகுகளின் எண்ணிக்கை (அலகு 000)	5,735	6,209	7,047	7,228	6,854	7,249
செயற்படுத்தப்பட்ட வழமையான கப்பற் பண்ட எண்ணிக்கை (மெ.தொ. 000)	8,197	9,210	10,136	9,530	8,894	9,229

அட்டவணை 21 - பிரதான துறைமுகங்களின் செயற்படுத்தப்பட்ட கொள்கள அலகுகள் மற்றும் வழமையான கப்பற் பண்ட எண்ணிக்கை

மூலம் :- இலங்கை துறைமுக அதிகார சபையின் செயலாற்றுகை மீளாய்வு அறிக்கை

கொழும்புத் துறைமுகத்துக்கு படகுகள் வருகை (வருகை)

முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது கொழும்பு துறைமுகத்துக்கு கொள்களன்கள் தாங்கிய படகுகள் 131 படகுகள் எனப்படும் 3.4 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. 2016 ஆண்டு முதல் கொள்களப் படகுகள் வரவுகளின் எண்ணிக்கை படிப்படியாக குறைந்துள்ளது என அவதானிக்கப்பட்டதுடன் மத்திய மற்றும் சிறிய எண்ணிக்கையான படகுகளுக்கு பதிலாக பாரிய அளவிலான படகுகள் வருதல் இதற்கான காரணமாக இருந்தது. விபரங்கள் வரைபடம் 30 இல் மற்றும் வரைபடம் 31 இல் காட்டியவாறாகும்.



வரைபடம் 30 - கொழும்பு துறைமுகத்திற்கு படகுகள் வருகை (வரவு) – வகைப்படுத்தலுடன்

மூலம் - இலங்கை துறைமுக அதிகார சபையின் செயலாற்றுகை மீளாய்வு அறிக்கை



வரைபடம் 31 - கொழும்புத் துறைமுகத்துக்கு படகுகள் வருகை (வரவு) – மொத்த படகுகளின் எண்ணிக்கை

மூலம் - இலங்கை துறைமுக அதிகார சபையின் செயலாற்றுகை மீளாய்வு அறிக்கை

முடிவுமுனை செயற்பாட்டு அலுவல்கள் குறைவடைதல்

கொழும்புத் துறைமுகத்தினால் 2001 ஆண்டில் கொள்கலன் அலகுகள் 1,726,616 தொகை செயற்படுத்தப்பட்டு இருந்ததுடன் 2021 ஆண்டளவில் அந்த எண்ணிக்கை கொள்கல எண்ணிக்கை 7,249,358 வரை அதிகரித்திருந்தது. இந்த கொள்கல செயற்பாட்டு அலுவல்களின் போது கொழும்பு துறைமுகத்தினுள் இலங்கை துறைமுக அதிகார சபையின் சந்தைப் பகுதி 2001 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை இருபத்தொரு வருட காலப் பகுதியினுள் 81 சதவீதம் முதல் 30 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. கொழும்புத் துறைமுகத்தில் நீண்டகால குத்தகை அடிப்படையில் தனியார் துறைக்கு வழங்கியிருந்த இரண்டு முடிவுமுனைகளில் போட்டி அடிப்படையில் செயற்படும் இரண்டு தனியார் கம்பனிகளில் 2013 ஆண்டின் போது செயற்பாட்டு அலுவல்கள் ஆரம்பித்திருந்த கம்பனி 45 சதவீத சந்தைப் பங்கையும், 2001 ஆண்டில் செயற்பாடுகள் ஆரம்பித்திருந்த கம்பனி 25 சதவீத சந்தைப் பங்கையும் 2021 ஆண்டு அளவில் உரித்தாகியிருந்தது. கடந்த இருபத்திரண்டு வருடங்களில் கொள்கலன்களை செயற்படுத்துவது தொடர்பான விபரங்கள் அட்டவணை 22 உள்ளவாறாகும்.

ஆண்டு	ஜயா கொள்கலன் முடிவுமுனை (வருடாந்த முடிவு முனையின் கொள்திறன் கொள்கல அலகு மில்லியன் 2.750)	சதவீதம்	தெற்காசிய நுழைவு முனை (SAGT) (வருடாந்த முனைவு கொள்திறன் கொள்கல அலகுகள் மில்லின் 1.950)	சதவீதம்	கொழும்பு சர்வதேச கொள்கல முடிவு முனை (CICT) (வருடாந்த முடிவுமுனைவு கொள்திறன் கொள்கல அலகுகள் மில்லியன் 2.400)	சதவீதம்	மொத்த கொள்கலன் அலகுகள்
2001	1,396,946	81	229,670	19			1,726,616
2002	1,206,694	68	558,025	32			1,764,717
2003	1,334,900	68	624,439	32			1,959,339
2004	1,320,845	59	899,720	41			2,220,565
2005	1,523,794	62	931,526	38			2,455,300
2006	1,743,669	57	1,335,411	43			3,079,078
2007	1,834,734	54	1,546,497	46			3,381,231
2008	1,747,670	53	1,739,668	47			3,687,338
2009	1,714,488	49	1,749,809	51			3,464,297
2010	2,167,173	52	1,970,268	48			4,137,441
2011	2,299,446	54	1,963,441	46			4,262,887
2012	2,316,849	55	1,870,271	45			4,187,120
2013	2,501,863	58	1,746,802	41	57,541	1	4,306,206
2014	2,559,339	52	1,661,940	34	686,636	14	4,907,915
2015	2,252,323	44	1,371,245	26	1,561,899	30	5,185,467
2016	2,100,117	37	1,632,207	28	2,002,599	35	5,734,923
2017	2,010,702	32,	1,809,835	29	2,388,531	39	6,209,068
2018	2,304,534	33	2,066,758	29	2,676,194	38	7,047,486
2019	2,282,618	32	2,052,153	28	2,893,566	40	7,228,337

2020	2,097,804	31	1,872,052	27	2,884,906	42	6,854,762
2021	2,198,334	30	1,838,693	25	3,212,331	45	7,249,358

அட்டவணை 22 – கடந்த இருபத்தொரு வருடங்களில் கொள்கலன்களின் செயற்பாடு தொடர்பான விபரங்கள்



வரைபடம் 32 - இலங்கை துறைமுக அதிகார சபையின் முடிவுமுனை செயற்பாட்டு அலுவல்கள்

மூலம் - இலங்கை துறைமுக அதிகார சபையின் செயலாற்றுகை மீளாய்வு அறிக்கை

கிழக்கு முடிவுமுனையில் நிர்மாண வேலை பூர்த்திகள் செய்யப்பட்டிருந்த பகுதியில் செயற்பாட்டு அலுவல்கள் 2021 ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தமையால் 2021 ஆண்டு முதல் இலங்கை துறைமுக அதிகார சபையின் முடிவுமுனை கொள்திறன் (அலகுகள் மில்லியன் 2.75+0.80) 3.55 மில்லியன் அலகுகள் வரை அதிகரித்திருந்தது.

மேற்கூறிய தரவுகளின் படி இலங்கை துறைமுகங்கள் அதிகார சபைக்கு கொள்கலன்களை செயற்படுத்துவதற்காக உரித்தாகியிருந்த சந்தைப் பகுதி படிப்படியாக தனியார் துறைக்கு வலைந்து சென்று காணப்பட்டது. அதிகார சபையின் கொள்கல செயற்பாட்டு அலுவல்கள் தொடர்பாக முடிவுமுனை பயன்படுத்தும் சதவீதம் (Terminal Occupancy Ratio) கவனத்தில் எடுத்த போது 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது 65 சதவீதம், 70 சதவீதம், 72 சதவீதம் மற்றும் 70 சதவீதமாக காணப்பட்டது. அதன்படி அதிகார சபையின் முடிவுமுனைகளைப் பயன்படுத்தும் சதவீதம் 2021 ஆண்டில் இரண்டு சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. மேலும், அதிகார சபையின் முடிவுமுனை கொள்திறன் பயன்பாடு 62 சதவீதமாக இருந்தது. எவ்வாறாயினும் தனியார் துறையினால் செயற்பாடு மேற்கொள்ளும் ஒரு முடிவுமுனையின் இயலளவும் பயன்பாடு 134 சதவீதமாக காணப்பட்டதுடன், அடுத்த முடிவுமுனை இயலளவு பயன்பாடு 94 சதவீதம் என அவதானிக்கப்பட்டது.

கிழக்கு கொள்கலன் முடிவுமுனையின் குறை பயன்பாடு

கொழும்பு துறைமுகத்தில் தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள கொள்கலன்களை நடாத்துவதற்காக முடிவுமுனைகளில் (terminal) ஆளமான (Draft) 14.25 மீற்றரை

விட கூடுதலான ஆளமான நீர்த் தேக்கத்துடனான பாரிய எண்ணிக்கையான கப்பல்கள் வரக்கூடிய முடிவுமுனை கொழும்பு சர்வதேச கொள்கல முடிவுமுனை (CICT) மற்றும் கிழக்கு கொள்கல முடிவுமுனை (ECT) ஆகும். கொழும்பு சர்வதேச கொள்கல முனைவின் கொள்திறன் ஒரு ஆண்டிற்கு இருபதுசம அலகுகள் 2.4 மில்லியன் ஆகும். 2021 ஆண்டின் போது அந்த முடிவுமுனை 1,027 கப்பல்கள் வந்திருந்ததுடன் மொத்த கொள்கல அலகுகள் 3.2 மில்லியனை விட கூடிய எண்ணிக்கை செயற்படுத்தப்பட்டிருந்தது. அது உச்ச கொள்திறமை மிகைத்திருந்ததென அவதானிக்கப்பட்டது.

கொழும்பு துறைமுகத்தை விரிவாக்கும் செயற்திட்டத்திற்காக இலங்கை வங்கியினால் நிதியம் வழங்கப்பட்டு கொள்கல அலகு 0.8 மில்லியனுக்கான வருடாந்த கொள்திறனுடனான நிர்மாண வேலை ரூபா 11,168 மில்லியன் கிரயத்திற்கு 18 மீற்றர் ஆளமுடைய மற்றும் 440 மீற்றர் நீளமுடைய கிழக்கு கொள்கல முடிவுமுனை கட்டம் 1 இன் நிர்மாண வேலைகள் 2016 ஏப்ரல் மாதத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. ஐய கொள்கல முடிவுமுனை கொள்வனவு செய்திருந்த கப்பலில் இருந்து தரைவரையான செயற்பாட்டு அலுவல்கள் மேற்கொள்ளக் கூடிய மூன்று பாரந்தூக்கி பொறிகள், 2020 பெப்ரவரி 07 திகதிய PA/HD/25 இலக்கங் கொண்ட பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் படி கிழக்கு கொள்கல முடிவுமுனையில் (ECT) பொருத்தி, அதன் செயற்பாட்டு அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. பின்னர் 2021 பெப்ரவரி 09 திகதி அமப/**21/0198/328/005/**டீபீஆர் இலக்கங் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் கிழக்கு கொள்கலன் முடிவுமுனையை அபிவிருத்தி செய்தல், செயற்பாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக மற்றும் இலங்கை துறைமுக அதிகார சபையின் முழுமையான உரித்துள்ள கொள்கல முடிவுமுனை ஒன்றென செயற்பாட்டு அலுவல்கள் மேற்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி 2021 ஆண்டினுள் 30 கொள்கல கப்பல்கள் (பாரிய அளவிலானவை அல்ல) முடிவுமுனைக்கு வந்திருந்ததுடன் 106,454 கொள்கலன்கள் செயற்படுத்தப்பட்டிருந்தது. அதன் படி முனைவின் பயன்பாடு 13.3 சதவீதமாக இருந்தது. முடிவுமுனையின் செயற்பாட்டுக் கொள்திறனை உச்சமட்ட அளவில் பயன்படுத்துவதற்கு தேவையான கப்பலில் இருந்து தரைக்கு செயற்பாட்டு அலுவல்கள் மேற்கொள்ளக் கூடிய பாரிய அளவிலான 03 பாரந்தூக்கி பொறிகள் 282.56 மில்லியன் அமெ.டொ. மதிப்பீட்டுக் கிரயத்திற்கு கொள்வனவு செய்வதற்காக இலங்கை துறைமுக அதிகார சபை ஒப்பந்தக்காரர் ஒருவருடன் 2021 மே மாதத்தில் உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 2021 திசெம்பர் 18 திகதி வழங்கல் ஒப்பந்தவேலை ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் படி வேலை ஆயத்துக்கான முற்பணம் 56.51 மில்லியன் அமெ.டொ. காணப்பட்ட போதிலும் அவற்றில் 2022 ஜுன் 20 திகதி வரை ஐ.அ.டொ. 18 மில்லியன் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்ததுடன், மீதித் தொகை செலுத்த முடியாமல் இருந்தது. அதிகார சபையினால் வங்கியில் அதிகார சபைக்குரிய டொலர் வைப்புக்களில் இருந்து இந்த பணத்தை விடுவிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் கொடுப்பனவை ஒப்பந்தக்காரருக்கு விடுவிப்பதற்காக வங்கிக்கு முடியாமல் இருந்தது. வேலை ஆயத்தப்படுத்துவதற்கான முற்பணத் தொகையை முழுமையாக செலுத்தியிருக்காமையால் பாரந்தூக்கி நிர்மாணிப்பதற்காக திட்டமிடல் மீளாய்வுக்

கூட்டம் இது வரை நடாத்தியிருக்காததுடன், அதன் படி உற்பத்தி அலுவல்களும் ஆரம்பித்திருக்கவில்லை.

ஹம்பாந்தோட்டை துறைமுகம் நிர்மாணிப்பதற்காக பெற்றிருந்த வெளிநாட்டுக் கடன்

ஹம்பாந்தோட்டை துறைமுகம் நிர்மாணிப்பதற்காக பெற்றிருந்த வெளிநாட்டுக் கடன்களில் 2017 நவம்பர் 30 திகதியில் உள்ளவாறு அதிகார சபையின் கணக்குகளில் மீதியாகக் காணப்பட்ட ரூபா 147,746 மில்லியனுக்கான கடன் மற்றும் வட்டி மீதி திறைசேரியின் இணக்கம் அல்லது அமைச்சரவையின் அங்கீகாரமின்றி அதிகார சபையினால் நிதிக்கூற்றுக்களில் இருந்து அகற்றியிருந்ததுடன், அதன் காரணமாக அத் திகதியின் பின்னர் அரசாங்கத்தின் கணக்குகள் எதிலும் இத் தொகை உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் MPS/SEC/2017/32 மற்றும் **2017** ஜூலை **20** திகதிய "ஹம்பாந்தோட்டை துறைமுக சலுகை உடன்படிக்கை" என்ற பேரிலான அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2017 ஆகஸ்ட் 04 திகதி வழங்கியிருந்த அமைச்சரவை அங்கீகாரத்தின் படி மேற்கூறிய கடன் மற்றும் வட்டியை திருப்பிச் செலுத்தும் பொறுப்பு திறைசேரிக்கு உரியதாகும். அதன் படி திறைசேரியின் வெளிநாட்டு மூலவள திணைக்களத்தினால் 2017 ஆண்டு முதல் கடன் தவணை மற்றும் வட்டி செலுத்தியிருந்ததுடன், 2021 ஆண்டிற்கான பதிவேடுகளின் படி 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மேலும் செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 165,483 மில்லியன் தொகையாக காணப்பட்டது. மேலும் மேற்கூறிய கடன்தொகை தொடர்பாக 2017 நவம்பர் 30 திகதி வரையான காலத்திற்கு கணிக்கப்பட்ட வெளிநாட்டு செலாவணி மாற்றல் திரண்ட நட்டம் ரூபா 31,545 மில்லியன் தொகையும் கடனை அகற்றியதுடன் அதிகார சபையின் கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. 2017 நவம்பர் 30 திகதி முதல் 2020 திசெம்பர் 31 திகதி வரை வெளிநாட்டு செலாவணி மாற்றல் திரண்ட நட்டம் ஆகிய ரூபா 34,072 மில்லியன் தொகையையும் உட்படுத்தி 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வெளிநாட்டு செலாவணி மாற்ற திரண்ட நட்டம் ரூபா 65,618 மில்லியன் தொகை மற்றும் 2021 ஆண்டின் வெளிநாட்டு செலாவணி மாற்ற நட்டம் திறைசேரியின் அல்லது அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

எவ்வாறாயினும், 2021 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக கடன் மீதிக்குரிய கணிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி மாற்ற இலாபம்/ நட்டம் தொடர்பாக தகவல்கள் வெளிநாட்டு மூலவள திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

நிதியமைச்சுச் செயலாளரினால் பல சந்தர்ப்பங்களில் அதிகார சபையின் தலைவருக்கு இந்தக் கடன்தொகையை அதிகார சபையின் புத்தகங்களில் உட்படுத்திக் கொள்ளும் படி அறிவித்திருந்தது. எவ்வாறாயினும் 2021 ஆண்டு இறுதியளவிலும் மேற்கூறிய கடன் மீதி மற்றும் உரிய வெளிநாட்டுச் செலாவணி மாற்ற இலாபம்/ நட்டம் கணக்கீடு செய்வதற்கு இலங்கை துறைமுக அதிகார சபையினால் அல்லது திறைசேரியினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

நிருவகிக்கப்படும் கம்பனி ஒன்றினால் பெற்றிருந்த கடனிற்காக பிணை நிற்றல்

2017 நவம்பர் முதல் செயற்பாட்டு அலுவல்கள் நிறுத்தப்பட்டிருந்த அதிகார சபையினால் நிருவகிக்கும் கம்பனி ஒன்றான மாகம்புர துறைமுறை முகாமைத்துவ (தனியார்) கம்பனியினால் 2014 ஆண்டின் போது கப்பல் எண்ணெய் கொள்வனவு செய்வதற்காக

தனியார் வங்கி ஒன்றிடம் இருந்து ஐ.அ.டொ 24 மில்லியன். கடன் தொகை ஒன்று பெற்றிருந்தது. அவற்றில் 22.3 மில்லியன் அமெ.டொ. 2022 மே 31 திகதி வரை தீர்த்திருக்காததுடன் நிதிக்கூற்றுக்களின் படி கடனை தீர்ப்பதற்காக கம்பனிக்குச் சொந்தமாக போதியளவு சொத்துக்கள் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், குறிப்பிட்ட வங்கியினால் இந்த கடன் தொகையை அறவீடு செய்வதற்காக நிருவிக்கப்படும் கம்பனிக்கு மற்றும் அதிகார சபைக்கு எதிராக இரண்டு வழங்குகள் 2020 ஆண்டின் போது கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு நடாத்தப்பட்டு காணப்பட்டது. இது தொடர்பாக அதிகார சபையின் பிரதான சட்ட உத்தியோகத்தரினால் ரூபா 4,465 மில்லியன் தொகைக்கான இந்த பொறுப்புக்களை தீர்ப்பதற்காக 2021 ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளும் படி நிதிப் பிரிவின் அதிபருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இலங்கை கணக்கீட்டு நியமம் 37, 10(அ) பந்தியின் படி மேற்கூறிய பொறுப்புக்களுக்காக நிகழத்தக்க பொறுப்புக்கள் ஒதுக்கம் மேற்கொண்டிருக்காததுடன், இதன் காரணமாக அதிகார சபையின் இலாபம் ரூபா 4,465 மில்லியன் தொகையினால் மிகைக் கணிப்பு ஏற்பட்டிருந்தது.

CCTV கெமரா முறையை பொருத்தப்படாமை

தீவிர பாதுகாப்பு வலையம் என பெயரிடப்பட்டுள்ள துறைமுக வளாகத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக 2017 மற்றும் 2018 ஆண்டுகளின் போது மூலதன பாதீட்டின் மூலம் அனைத்து படலைகள் மற்றும் காப்பு பண்டக சாலைகளுக்காக முறையே ரூபா 60 மில்லியன் தொகை மற்றும் ரூபா 150 மில்லியன் தொகை செலவிடப்பட்டு CCTV கெமரா முறைமை ஒன்று பொருத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2019 மற்றும் 2020 ஆண்டுகளின் போது அதற்காக ரூபா 150 மில்லியன் தொகை ரூபா 600 மில்லியன் தொகையாக வருடாந்த பாதீட்டில் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், 2021 மார்ச் 09 திகதிய PA/MD/46 அதிகார சபையின் முகாமைத்துவப் பணிப்பாளரின் கடிதத்தின் மூலமும் CCTV கெமரா முறையை பொருத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதே போல் இக் கருமத்திற்காக 2020 ஜனவரி 30 திகதி மற்றும் PFD/DFD/103/CM/03 இலக்கங் கொண்ட நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் படி அமைச்சரவையினால் நியமனம் செய்யப்படும் பெறுகைக் குழு ஒன்று (CAPC) மற்றும் தொழிநுட்ப மதிப்பாய்வுக்குழு ஒன்று (TEC) நியமனம் செய்வதற்கு 2020 பெப்ரவரி 13 திகதிய அமப/20/0174/222/003 இலக்கங் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம், அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் அந்த அங்கீகாரத்தை இரத்துச் செய்யாமல் CCTV கெமரா முறைமையை பொருத்துவதற்காக 2021 ஆண்டின் போது ஒதுக்கப்பட்டிருந்த பாதீட்டு ஏற்பாடுகள் ரூபா 600 மில்லியன் தொகையில் ரூபா 580 மில்லியன் தொகை முகாமைத்துவ சபையின் தீர்மானம் ஒன்றின் படி திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பிரிவின் உசாத்துணை அலுவல்களுக்காக மாற்றப்பட்டிருந்தது. அதன் படி தீவிர பாதுகாப்பு வலயம் ஒன்றான துறைமுறை அதிகார சபையின் CCTV கெமரா பொருத்தும் கருமங்கள் நிறைவேற்றப்பட்டிருக்காததுடன், இதன் காரணமாக பாதுகாப்பு தொடர்பான சிக்கல்களின் போது தேவையான தகவல்கள் பெற்றுக்கொள்ள முடியாத விபத்து நிலையினை தவிர்க்க முடியாதிருந்தது எனவும், செயற்பாட்டு அலுவல்களின்

வெளிப்படைத் தன்மையுடன் மற்றும் வினைத் திறன் தொடர்பாக உறுதிப்படுத்தல் பரிசோதனை செய்யமுடியாது எனவும் அவதானிககப்பட்டது.

சுங்கத்தினால் விதிக்கப்பட்டிருந்த தண்டப்பணம்

2011 ஆண்டின் போது இலங்கை சுங்கம் அறிவிப்பேதும் மேற்கொள்ளாமல் அதிகார சபையினால் இறக்குமதி செய்யப்பட்ட 27 பாரந்தூக்கிப் பொறிகள் தொடர்பாக சுங்கத்தினால் விதிக்கப்பட்டிருந்த 1,580 மில்லியன் தொகைக்கான சுங்கத் தண்டப் பணத்தை இலகுவாக்கித் தரும் படி சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 165 பிரிவின் பிரகாரம் சுங்க விசாரணை ஒன்றின் தீர்ப்பு ஒன்றின் மீது நிதியமைச்சருக்கு மேன்முறையீடு ஒன்று மேற்கொள்ளக் கூடியதாக இருந்த போதிலும், அதிகார சபையினால் அவ்வாறான மேன்முறையீடு ஒன்று சமர்ப்பித்திருக்கவில்லை. எவ்வாறாயினும், இது தொடர்பாக கணக்குகளில் ரூபா 957.9 மில்லியனுக்கான நிகழத்தக்க பொறுப்புக்கள் ஒதுக்கப்பட்டிருந்தது. மேற்கூறிய விடயம் தொடர்பாக அதிகார சபையினால் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருந்ததுடன், மேன்முறையீட்டு நீதிமன்றின் கட்டளைக்கு எதிராக 2020 ஆண்டில் அதிகார சபையினால் மேன்முறையீட்டு மனு ஒன்று உயர்நீதிமன்றில் கோப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2022 மார்ச் 09 திகதிய நிதியமைச்சின் வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் படி அமைச்சரவைத் தீர்மானத்தின் மீது சுங்கத் தண்டப்பணம் ரூபா 50 மில்லியன் வரை குறைப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

துறைமுக அதிகார சபைக்கு திறைசேரியில் இருந்து கிடைக்க வேண்டிய பணம்

ஹம்பாந்தோட்டை துறைமுகம் நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக பெற்றிருந்த கடன்தொகைக்காக அதிகார சபையினால் 2017 ஆண்டில் செலுத்தியிருந்த தவணைப் பணம் ரூபா 4,406 மில்லியன் தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 372 மில்லியன் தொகை உட்பட 4,778 மில்லியன் தொகை 2022 ஏப்ரல் 30 திகதி வரை அதிகார சபைக்கு கிடைத்திருக்கவில்லை. மேலும் இது தொடர்பாக மீதிகளை உறுதிப்படுத்தும்படி அதிகார சபையினால் அழைக்கப்பட்டிருந்த போதிலும் திறைசேரியினால் அந்த உறுதிப்படுத்தலை உறுதிப்படுத்தியிருக்காததுடன், 2021 ஆண்டிற்கான குடியரசின் நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டிய மீதிகளில் இந்த மீதி உட்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக இந்தப் பணம் கிடைத்தல் தொடர்பாக நிச்சயமற்ற தன்மை ஒன்று காணப்பட்டது.

ஹம்பந்தோட்டை துறைமுக அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் எண்ணெய் தாங்கி நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக திறைசேரியினால் இலங்கை வங்கியில் இருந்து பெற்றிருந்த டொலர் கடன் தொகைக்காக தவணைப் பணம் திறைசேரியினால் குறிப்பிட்ட நேரத்தில் செலுத்தப்படாமையினால் அதிகார சபையின் பேரில் இலங்கை வங்கியில் பேணப்பட்டு வரும் அமெரிக்க டொலர் கணக்கில் 2018 ஆண்டின் போது 0.64 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அதாவது ரூபா 377.84 மில்லியன் தொகை வங்கியினால் அறவீடு செய்யப்பட்டிருந்தது. அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மேற்கூறிய தொகை திறைசேரியில் இருந்து பெறப்பட வேண்டிய மீதியொன்றென காட்டப்பட்டிருந்த

போதிலும் 2022 ஏப்ரல் 30 திகதி வரையும் பணம் கிடைத்திருத்திருக்காததுடன், அப் பணம் கிடைத்தல் நிச்சயமற்றது என அவதானிக்கப்பட்டது.

சொத்துக்கள் மீளாய்வு

இலங்கை துறைமுக அதிகார சபை வளாகப் பிரிவில் காணிப் பதிவேட்டின் படி ரூபா 633.94 மில்லியன் தொகை பெறுமதியான 19 காணித் துண்டுகள் ஏனைய நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது என காட்டப்பட்டிருந்த போதிலும், நிதிப் பிரிவினால் பேணப்பட்டு வரும் முதலீட்டுச் சொத்துக்கள் தொடர்பான பதிவேட்டிலும் அந்தக் காணிகள் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக துறைமுக அதிகார சபையின் நிதி நிலைமைக் கூற்றில் முதலீட்டு ஆதனங்கள் ரூபா 633.94 மில்லியன் தொகையினால் குறைவாகக் கணக்கிடப்பட்டிருந்ததுடன், காணியின் பெறுமதி அத் தொகையினால் மிகைக் கணிப்பு ஏற்பட்டிருந்தது.

2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இலங்கை துறைமுக அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட சொத்துக்கள் மீளாய்வுக் குழுவின் அறிக்கையின் படி, 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திறன்மதிப்பு பெறுமதி ரூபா 403.68 மில்லியனுக்கான செயற்பாட்டு கட்டிடங்கள் மற்றும் நிர்மாண வேலைகள் மற்றும் ரூபா 181.9 இற்கான இயந்திர உபகரணங்கள் பௌதீக ரீதியாக இனங்காண முடியாதிருந்தமையால், அச் சொத்துக்களின் உளமை நிச்சயமற்றதென அவதானிக்கப்பட்டது.

நிதி அதிகாரச் சட்டத்திற்கு மற்றும் துறைமுகங்கள் தொடர்பான அதிகாரச் சட்டத்திற்கு இணக்கமின்மை

1971 இன் 38 ஆம் இலக்க நிதிஅதிகார சட்டத்தின் 10 (5) பிரிவின் படி அரச கூட்டுத்தாபனம் ஒன்றின் ஏதேனும் ஆண்டொன்றிற்காக மிகையாக காணப்படின் அதிகாரசட்டத்தில் காட்டப்பட்டுள்ள கழித்தல்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் மீதித் தொகை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். அதே போல் 1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுகங்கள் தொடர்பாக அதிகாரசட்டத்தின் 30 ஆவது பிரிவின் படி இலங்கை துறைமுக அதிகாரச சபைக்கு உரித்தாக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதி மற்றும் அதிகார சபைக்கு வழங்கிய நிதிசார் பங்களிப்பு மீது ஆண்டொன்றிற்கு 8 சதவீதம் (குறைந்த அளவு ரூபா 607 மில்லியன்) மிகைக்காத பங்கிலாபம் ஒன்று திரண்ட நிதியத்திற்கு செலுத்த வேண்டும். அவ்வாறாயினும், 2016 முதல் 2021 வரையான ஆண்டுகளில் அதிகார சபை பெற்றிருந்த கூட்டுத்தொகை ரூபா 69,687 மில்லியன் தொகைக்கான தேறிய இலாபத்திலிருந்து திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது ரூபா 600 மில்லியன் மாத்திரமே. மேலும் மேற்கூறிய இலாபத்தில் நீண்டகால குத்தகை அடிப்படையில் தனியார் துறைக்கு வழங்கப்பட்டிருந்த தெற்காசிய நுழைவு முடிவுமுனை (SAGT) மற்றும் கொழும்பு சர்வதேச கொள்கலன் முடிவுமுனை (CICT) ஆகிய முடிவுமுனைகளின் செயற்பாட்டு அலுவல்களில் ஈடுபட்டிருக்கும் இரண்டு கம்பனிகளில் இருந்து அதிகார சபையினால் 2016 முதல் 2021 வரை காலத்திற்காக மாத்திரம் அறவீடு செய்திருந்த கூட்டுத்தொகை ரூபா 13,021 மில்லியனுக்கான குத்தகை மற்றும் அந்தக் காலப்பகுதிக்கான வேத்துரிமை என அறவிடப்பட்டிருந்த ரூபா 19,582 மில்லியன் தொகையும் உட்படுத்தப்பட்டிருந்தது. இவ் வருமானங்கள் துறைமுகத்தின் நேரடியான செயற்பாட்டு வருமானம் அல்ல என மேலும் அவதானிக்கப்பட்டது.

துறைமுகங்கள் சட்டத்திற்கு இணக்கமின்மை

1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுகங்கள் தொடர்பான அதிகாரச் சட்டத்தின் பிரிவு 37(i) படி இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையினால் அறவிடக்கூடிய கட்டணங்கள் நிதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரிடம் வினவி அமைச்சரின் அங்கீகாரத்துடன் இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையினால் பரிந்துரைக்கப்பட வேண்டும். அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக் கொண்டு 2019 ஆண்டின் போது திருத்தப்பட்டிருந்த சுங்கவரி அட்டவணை (Tariff-2019) 24 ஆவது விடயத்தின் படி ஏற்றுமதிக்கு உரிய கொள்கலன்களை அகற்றிக் கொள்வதற்காக வழங்கப்படும் களஞ்சியக் கட்டணங்களில் இருந்து விடுதலைக் காலம் 21 நாட்களாக இருந்த போதிலும் கப்பல் முகவர் நிறுவனங்களுடன் ஏற்படுத்தியிருந்த முடிவுமுனை சேவை உடன்படிக்கைகளில் (Terminal service agreement) அதற்காக 45 நாட்கள் வரை சலுவைக் காலம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு களஞ்சியக் கட்டணத்துக்காக மீளாய்வாண்டின் போது வழங்கியிருந்த கழிவு (Rebates on storage) ரூபா 2,286.44 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், சுங்க வரி அட்டவணை (Tariff-2019) குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை விட வித்தியாசமான நிபந்தனைகளுடனான முடிவுமுனை சேவை உடன்படிக்கைகள் கையொப்பமிடப்பட்டிருந்தது. அதற்காக நிதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரை வினவி பெற்றுக் கொண்டிருந்த அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுகங்கள் தொடர்பான அதிகாரசபை சட்டத்தின் 39(1) பிரிவின் படி இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் ஏதேனும் இடைநிலை கொட்டகைகளில் வைக்கப்பட்டிருந்த பண்டங்கள் குறிப்பிட்ட காலம் முடிவடைந்த பின்னர் 40 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கு சேதம் ஏற்படாதவாறு அதிகார சபையினால் பகிரங்கள ஏல விற்பனையில் விற்பனை செய்ய முடியும் அதே போல் அந்த விற்பணை மூலம் கிடைக்கப்பெறும் பணத்திலிருந்து குறிப்பிட்ட சுங்கவரியை செலுத்திவிட்டு அதிகார சபையின் பண்டகசாலை கட்டணம் மற்றும் நிர்வாக செலவினை கழித்து மீதி ஏதும் காணப்படின் அத் தொகையினை திறைசேரிக்கு அனுப்பவேண்டியிருந்தது. அதிகார சபையின் 2021 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை பரிசோதனை செய்த போது அவ்வாறு ஏல விற்பனையில் கிடைத்திருந்த பணத்தில் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட தீர்க்கப்படாத மீதி ரூபா 385.14 மில்லியன் தொகை என அவதானிக்கப்பட்டதுடன், அவற்றில் 2015 முதல் 2020 வரை கிடைத்திருந்த ஏல விற்பனை வருமானங்களுக்குரிய தரப்பினருக்கு தீர்க்கப்படாமல் ரூபா 336.58 மில்லியனிற்கான மீதி ஒன்று காணப்பட்டது. அதே போல் 2010 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்ட ஏல விற்பனைக்கு உரிய தீர்க்கப்படாத மீதிகளில் அதிகார சபையின் பகுதி என ரூபா 63.31 மில்லியன் தொகை முன்னைய ஆண்டின் வருமானம் என இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்த போதிலும், அவற்றில் ரூபா 52.57 மில்லியனுக்கான ஏலவிற்பனை வருமானத்தில் இலங்கை சுங்கத்துக்கு செலுத்தப்பட வேண்டிய சுங்கக் கட்டணம் மற்றும் திறைசேரிக்கு செலுத்த வேண்டிய பங்களிப்பை இனங்கண்டு கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

முறைப் பிரகாரம் காணிகளை உரித்தாக்கியிருக்காமை

நில அளவைப்பட இலக்கம் சீஓ/சீஓஎல்/2012/1047 இலங்கங் கொண்ட டீ.ஆர். விஜயவர்தன மாவத்தையில் அமைந்துள்ள கணக்கீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 604.5 மில்லியன் தொகைக்கான 2 ஏக்கர் 3 ரூட் 9.61 பர்சஸ் இற்கான தாமரைக் கோபுரம் நிர்மாணிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அனுபவிக்கும் உரிமை ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் முறையான நடவடிக்கை முறை ஒன்றின் படி பெறுமதியை ஏடுகளில் இருந்து அகற்றி காணி உறுதி ஒன்றின் மூலம் காணியை உரித்தாக்கி இருக்கவில்லை.

நில அளவைப்பட இலக்கம். எல்/எஸ்/எம்ஐஎஸ்/344 இலக்கங் கொண்ட கொழும்பு 01 பிரதான வீதிக்கு மற்றும் ஓல்கட் மாவத்தைக்கு எல்லையாக அமைந்துள்ள கணக்கீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 947.5 மில்லியன் தொகைக்கான 02 ஏக்கர் காணி சுங்கத் திணைக்களத்திற்கு கட்டிடம் ஒன்று நிர்மாணிப்பதற்காக வழங்கியிருந்த போதிலும் காணியை பெறுமதி மதிப்பீடு செய்து சட்டரீதியாக உரித்தாக்குவதற்கு மற்றும் பெறுமதியை புத்தகங்களில் இருந்து அகற்றுவதற்கு இவ்வறிக்கை திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 24 இன் 18, 19 மற்றும் 21 பந்திகளின் படி நிதியாண்டுக்குரிய தொடர்புடைய தரப்பினருடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் தன்மை, மீதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்பட்டுள்ள தாக்கம் தொடர்பாக பயன்படுத்துவோருக்கு அறிந்துகொள்வதற்கு தேவையான தகவல்கள் தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்களின் கீழ் வெளிப்படுத்த வேண்டும். அவ்வாறாயினும் இலங்கை துறைமுக அதிகார சபையினால் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் சொத்துக்களை நீண்டகால குத்தகை அடிப்படையில் உரித்தாக்குவது தொடர்பாக 2017 ஆண்டின் போது ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக சேவை (HIPS) கம்பனிகளில் இருந்து மற்றும் ஹம்பாந்தோட்டை சர்வதேச கூட்டமைப்பு (HIPG) கம்பனியில் இருந்து கிடைத்திருந்த ரூபா 169,479 மில்லியன் தொகையில் இருந்து மீளாய்வாண்டிற்கான தேறிய இலாபம் கணிக்கும் போது வருமானக் கூற்றில் செலவு வைக்கப்பட்டிருந்த வருடாந்த பிற்போடப்பட்ட குத்தகை வருமானம் ஆகிய ரூபா 1,713 மில்லியன் தொகை புதிய எண்ணெய் தாங்கி ஒன்று மற்றும் தீ பாதுகாப்பு முறைமை நிர்மாணிப்பதற்காக ஜயா கன்டேனர் டர்மினல் கம்பனியில் இருந்து 2021 ஆண்டில் அதிகார சபைக்கு ரூபா 95.7 மில்லியன் தொகை வழங்கி இருத்தல் ஆகிய தொடர்புடைய தரப்பினருடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக உரிய தகவல்கள் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் மூலம் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தென் பகுதியை அபிவிருத்தி செய்யும் குறிக்கோளுடன் காலித் துறைமுகத்தில் பல்கரும முடிவுமுனை ஒன்று நிர்மாணித்தல் 2006 மார்ச் 28 திகதி இலங்கை அரசாங்கம் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பானிய வங்கி (JBIC) இடையே ஏற்படுத்தப்பட்டிருந்த கடன் உடன்படிக்கையின் கீழ் செயற்படுத்துவதற்கு இணங்கியிருந்தது. ஊடக மரபுரிமை என பெயரிடப்பட்டுள்ள காலிக் கோட்டை அண்டிய இந் நிர்மாணவேலை மேற்கொள்வதற்காக (UNESCO) அமைப்பின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியிருந்தது. அதற்காக 3

வருடங்களை விட கூடிய காலம் எடுக்கும் என்ற காரணத்தினால் கடன் தொகை வழங்குனரினால் கடன் கால எல்லையை நீடிக்காமையால் இச் செயற்திட்டம் இடைநிறுத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் படி இதற்காக செலவிடப்பட்ட ரூபா 418 மில்லியனுக்கான உசாத்துணைக் கட்டணம் மீளாய்வாண்டிலும் நிதிக் கூற்றுக்களில் நடைபெறு வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது. இது தொடர்பாக இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் கணக்காய்வுக் குழு எடுத்திருந்த தீர்மானத்தின் படி இத் தொகையை கணக்கீடு செய்ய வேண்டிய முறை தொடர்பாக இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியம மீளாய்வுக் குழுவிற்கு 2021 ஏப்ரல் 04 திகதி அதிகார சபையினால் வினவியிருந்த போதிலும் அதற்குரிய ஆலோசனைகள் இதுவரை கிடைத்திருக்காததுடன், அச் செலவுகள் மூலதன அல்லது வருமானச் செலவுகள் என 2021 திசெம்பர் 31 திகதி வரை இனங்கண்டிருக்கவில்லை.

இழப்பீடு

2019 திசெம்பர் 04 திகதி கப்பல் ஒன்று துறைமுக ஜய கொள்கலன் முடிவுமுனையில் நீர்த்தடுப்பு (Caisson), வேகக் கட்டுப்பாடுகள் (Fenders), துறைமுக மேடைசுவர் (Quay wall) சேதம் ஏற்பட்டிருந்தது. இச் சேதம் ரூபா 315.90 மில்லியன் தொகை என மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மேற்கூறிய சேதம் தொடர்பாக ரூபா 384.42 மில்லியன் தொகை ஒன்று 2019 திசெம்பர் 30 திகதி இலங்கை துறைமுக அதிகார சபைக்கு கிடைத்திருந்த போதிலும் வேகத்தடுப்பை தவிர ஏனைய திருத்த வேலை அலுவல்கள் 2022 மே 31 திகதி வரை மேற்கொண்டிருக்கவில்லை.

மூலதனப்படுத்தப்படாத இனங்காணப்படாத கொள்வனவுகள்

இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 55 ஆம் பந்தியின் படி செயற்பாட்டு அலுவல்களுக்காக பயன்படுத்துவதற்கு பொருத்தமான நிலைமை ஏற்பட்டிருந்த சந்தர்ப்பம் முதல் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்கான பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டும். எனினும் 2019 திசெம்பர் 23 திகதி இலங்கை துறைமுகங்கள் அதிகாரச சபைக்கு கிடைத்திருந்த செயற்பாட்டு அலுவல்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்த ரூபா 495 மில்லியன் தொகைக்கான இரண்டு ஏவுபடைகளின் பெறுமதி 2021 திசெம்பர் 31 திகதி வரை மூலதனப்படுத்தி குறிப்பிட்டுள்ளவாறு பெறுமானத்தேய்வு கழித்திருக்கவில்லை. இக் கொடுப்பனவு நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் "பாதீட்டு ஏற்பாடுகள் இன்றிய வெளிநாட்டுக் கொள்வனவு முற்பணங்கள்" கணக்கில் உட்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் மேற்கூறிய தொகையினால் குறை கணித்தல் ஏற்பட்டிருந்தது.

மேலும், அந்த வெளிநாட்டு கொள்வனவு முற்பணக் கணக்கில் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 1,808.56 மில்லியனுக்கான மீதியுள் கொடுப்பனவுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள ஆனால் செலவொன்றென வருமானக் கூற்றிற்கு இனங்காண்பதற்கு அல்லது இனங்காணப்பட்ட கொள்கை ஒன்றின் மீது சொத்துக்களை மூலதனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காத ரூபா 223.57 மில்லியனுக்கான உதிரிப் பாகங்கள் கொள்வனவு செய்தல் காணப்பட்டது. இதன்

காரணமாக ஆண்டிற்கான இலாபம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்கள் அப் பெறுமதியினால் மிகை கணிப்பு/ குறைகணிப்பு ஏற்பட்டிருந்தது. மேலும், மீதித் தொகையிலும் தற்போது கிடைத்துள்ள ஆனால் மூலதனப்படுத்தப்படாத சொத்துக்கள் மற்றும் இனங்காணப்படாத செலவுகள் இக் கணக்கில் நீண்டகாலமாக பேணிச் செல்லப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது.

இலங்கை துறைமுக அதிகார சபைக்கு உரித்தாக்கப்பட்டிருக்காத பங்கு உரிமைகள்

2010 ஆண்டின் போது தெற்காசிய நுழைவு முடிவுமுனை (South Asia Gateway Terminal Ltd-SAGT) கம்பனி ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில் இலங்கை துறைமுக அதிகார சபையினால் வழங்கியிருந்த மூன்று பாரந்தூக்கி பொறிகளின் பெறுமதியை பரிமாறிக் கொள்வதற்காக ரூபா 141.63 மில்லியனுக்கான பெறுமதிக்கு அந்த கம்பனியின் பங்குகளை அதிகார சபைக்கு வழங்குவதற்கு இணங்கியிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டு இறுதி வரை குறிப்பிட்ட பங்குகளின் உரிமையை அதிகார சபைக்கு வழங்கியிருக்காததுடன் குறிப்பிட்ட கம்பனியினால் பங்குகளுக்காக செலுத்த வேண்டிய தொகை ஒன்று இல்லை என 2020 ஆண்டின் மீதிகளை உறுதிப்படுத்தல் மூலம் பதில் அனுப்பப்பட்டிருந்தது. இது தொடர்பாக தெற்காசிய நுழைவு முடிவுமுனை கம்பனியுடன் உடன்பட்ட கடப்பாடு ஒன்று காணப்படாமையால் அதிகார சபைக்கு குறிப்பிட்ட கம்பனியின் பங்குகள் கிடைத்தல் நிச்சயமற்ற தன்மையொன்று காணப்பட்டதுடன், அதிகார சபை மேற்கூறிய பெற வேண்டிய பங்குகளின் பெறுமதிக்காக சேதப்படுத்தல் ஒதுக்கம் ஒன்றும் மேற்கொண்டிருக்கவில்லை. அதே போல் 2022 பெப்ரவரி 02 திகதி மீதியை உறுதிப்படுத்துமாறு கோரப்பட்டிருந்த போதிலும் மீதியை உறுதிப்படுத்தல் சமர்ப்பித்திருக்கவில்லை.

மனிதவள முகாமைத்துவம்

2021 நவம்பர் 16 திகதிய பீஈடீ/**01/2021** இலக்கங் கொண்ட அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் பந்தி 3.2 (i) மற்றும் 2013 ஜனவரி 23 திகதி DMS/F1/3/3-1 இலக்கங் கொண்ட முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் மூலம் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்த கடிதத்தின் படி நிறுவனத்தினால் ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையொன்று தயாரித்து அரச தொழில்முயற்சித் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் இலங்கை துறைமுக அதிகார சபையினால் வரைபு ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடவடிக்கை முறை ஒன்று தயாரிக்கப்பட்டு இருந்த போதிலும் அதற்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை.

2019 பெப்ரவரி 12 திகதிய MPS/AD/06/83-2017 இலக்கங் கொண்ட துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அலுவல்கள் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு மூலம் வெளியிடப்பட்டிருந்த கடிதத்தின் படி இலங்கை துறைமுக அதிகார சபையின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடவடிக்கை முறை அனுமதிக்கப்படும் வரை அதிகார சபையின் அனைத்து ஆட்சேர்ப்புகள் மற்றும் பதவியுயர்வுகள் மேற்கொள்ளக் கூடாது என அறிவித்திருந்த போதிலும் அதிகார சபையினால் 2021 ஆண்டின் போது முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாமல் ஆரம்ப சேவை வகுப்பைச் சேர்ந்த பதவிகளுக்காக 227 பதவியுயர்வுகள் வழங்கப்பட்டிருந்தது.

நிருவகிக்கும் கம்பனிக்கு கொள்கை ஒன்று தயாரித்திருக்காமை

2021 நவம்பர் 16 திகதி **01/2021** இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையுடன் வெளியிடப்பட்டிருந்த அரச தொழில் முயற்சிகளுக்கான நியதிச்சட்ட ரீதியான நல்லாளுகை வழிகாட்டலின் பிரிவு 2.2.5 படி நிருவகிக்கும் கம்பனிக்காக தாய் கம்பனியின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஆளுகை சபையின் கொள்கைகள் (Board approved subsidiary policy) தயாரிக்கப்பட்டு அதன் படி செயற்பட வேண்டியிருந்த போதிலும் அதிகார சபைக்கு சொந்தமான நிருவகிக்கும் கம்பனிக்காக தயாரிக்கப்பட்டிருந்த ஆளுகைக் கம்பனி கொள்கை ஒன்று இதுவரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

தாமதமாகிய செயற்திட்டங்கள்

- இலங்கை துறைமுக அதிகார சபையின் மூலம் தற்போது பிரதான செயற்பாட்டு அலுவல்கள் மேற்கொள்ளும் ஜய கொள்கல முடிவுமுனை நீளம் 600 மீற்றர் காணப்பட்டமையால் நீளம் 330 மீற்றர்களைக் கொண்ட பாரிய அளவிலான 02 கப்பல்கள் ஒரே தடவையில் செலுத்துவதற்கு இயலாமையின் காரணமாக அதிகார சபைக்கு வாணிப சந்தர்ப்பங்கள் இழக்கப்படுகின்றமையால் அந்த முடிவுமுனை 120 மீற்றர்களினால் நீடிப்பதற்கும் மற்றும் ஆழம் 15 மீற்றர்களினால் கப்பற்துறையை தயாரிப்பதற்கு 2017 ஜுலை மாதத்தில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2018 நவம்பர் 29 திகதிய துறைமுக அதிகார சபை மற்றும் ஒப்பந்தக்காரர் (China Harbour Engineering Company Ltd) உடன் ஏற்படுத்தியிருந்த உடன்படிக்கையின் படி ஒப்பந்தக் கிரயம் ரூபா 5,035.30 (VAT இன்றிய) தொகை காணப்பட்டது. ஒப்பந்த நிபந்தனை இலக்கம் 8.1 இன் படி உடன்படிக்கை மேற்கொண்டு 7 நாட்களுக்கு குறையாத நாட்களுக்குள் ஒப்பந்த வேலையை ஆரம்பிக்கும் அறிவித்தல் ஒப்பந்தகாரருக்கு வழங்க வேண்டியிருந்த போதிலும் அதன் 02 வருடங்களுக்கு பின்னர் 2020 நவம்பர் 23 திகதி திருத்தங்களுடன் (Addendum 1) வேலை ஆரம்பிக்கும் அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது. ஒப்பந்த வேலை தொடர்பாக மீண்டும் கலந்துரையாடலுக்கு இணைத்து திட்டமிட்டவாறு அபிவிருத்தி மேற்கொள்வதற்காக 2020 செப்தெம்பர் 29 ஆந் திகதிய **20/1403/328/001/**TBR இலக்கங் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் கீழ் மீண்டும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளல் இந்தத் தாமதத்திற்கு காரணமாகியிருந்தது. திருத்தத்தின் பின்னர் மேற்கூறிய ஒப்பந்தவேலை 2022 ஜுலை 23 திகதி அளவில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இந்த செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 30 சதவீதம் காணப்பட்டது.
- வடக்கு கிழக்கு நுழைவு வலைய கருதுகோளை வெற்றிகொள்ளும் குறிக்கோளுடன் காங்கேசந்துறை துறைமுகத்தை மறுசீரமைப்பதற்காக 45.27 மில்லியன் அமெ.டொ. கடன் தொகை பெறுவதற்கு இலங்கை அரசாங்க மற்றும் இந்திய இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வங்கி (எக்சிம் வங்கி) இடையே டொலர் கடன்தொகுதி உடன்படிக்கை ஒன்றிற்கு 2018 ஜனவரி 10 திகதி கையொப்பமிடப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடன் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டு 4 வருடங்கள் கடந்திருந்த போதிலும் துறைமுகத்தின் நிர்மாண வேலைகள் இதுவரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி 2020 மே மாதம் வரை காணியின் உரிமை தொடர்பான காணப்பட்ட சிக்கல் தீர்க்கப்பட்டிருக்காததுடன், அந்த மாதம் வரை துறைமுகத்தின் பாதுகாப்பு தொடர்பாக விடுவித்தல் சான்றிதழ் ஒன்று பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. அந்த சான்றிதழ் பெற்ற பின்னர் 2020 ஒக்தோபர் மாதத்தில் முகாமைத்துவ மற்றும் ஆலோசனை சேவைக்கான ஒப்பந்த வேலை இந்திய கம்பனி ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. மேற்கூறிய செயற்திட்டத்தின் மறுசீரமைப்பு அலுவல்கள் 2021 செப்தெம்பர் மாதம் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2022 மே வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2021 ஆண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கின் படி இந்த செயற்திட்டத்திற்காக 1,001 மில்லியன் தொகை செலவிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட ஆண்டில் 142.3 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அது எதிர்பார்க்கப்பட்ட மூலதனச் செலவில் 14.2 சதவீதமாகக் காணப்பட்டது. அதே போல் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 45.27 மில்லியன் டொலருக்கான கடன் தொகையில் 0.745 மில்லியன் டொலர் செலவிடப்பட்டிருந்ததுடன், நிதியத்தை பயன்படுத்தியிருக்காத காரணத்தினால் கடன் உடன்படிக்கையின் 7.1 பந்தியின் பிரகாரம் ஒதுக்கப்பட்டிருந்த பெற்றுக் கொண்டிருக்காத கடன் தொகைக்காக ஈடுபாட்டுப் பொறுப்பு கட்டணம் (Commitment charges) என 9,537.34 அமெரிக்க டொலர் (ரூபா 1.94 மில்லியன்) தொகையொன்று இந்தியாவின் எக்சிம் வங்கிக்கு செலுத்துவதற்கு துறைமுக அதிகார சபைக்கு நேரிட்டிருந்ததுடன் அது சிக்கனமற்ற செலவொன்றென அவதானிக்கப்பட்டது.

முடிவுமுனை சேவை உடன்படிக்கைகளுக்கு முரணாக கப்பல் முகவர் நிறுவனங்களுக்காக தள்ளுபடி வழங்குதல்

இலங்கை துறைமுக அதிகார சபையினால் கப்பல் முகவர் நிலையங்களுக்காக கொள்திறன் தள்ளுபடி (Volume rebates) வழங்கும் போது இலங்கை துறைமுக அபிவிருத்தி அதிகார சபையுடன் முடிவுமுனை சேவை உடன்படிக்கை (Terminal service agreements) ஏற்படுத்தியிருந்த கப்பல் முகவர் நிலையங்களுக்காக உடன்படிக்கையில் இணங்கியிருந்த குறைந்தளவு செயற்பாட்டு வரையறை (Minimum TEU's to qualify for the rebates scheme) அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன் 2020 ஆண்டின் போது அவ்வாறு நெருங்கவேண்டியிருந்த குறைந்த செயற்பாட்டு வரையறையை விட குறைந்த செயற்பாட்டு மட்டத்துடனான கப்பல் முகவர் நிலையங்களுக்காக பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் கீழ் ரூபா 26.95 மில்லியன் இயலளவு தள்ளுபடி வழங்கப்பட்டிருந்தது.

பெருந்தெருக்கள் பிரிவு

விடயங்கள்

- பெருந்தெருக்கள் அமைச்சு
- கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு
- வீதி அபிவிருத்தி அதிகார சபை

பெருந்தெருக்கள் பிரிவு

பெருந்தெருக்கள் வலையமைப்பானது மிகவும் பெறுமதியான மற்றும் மிகவும் விசாலமான ஒரு சமூக, கலாச்சார ரீதியினைப் போல சுற்றாடல் ரீதியாகவும் சமூக நலன்புரியினை முன்னிட்டும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரிவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கிணங்க பொருளாதார பிரிவுகளுக்கு சமனான சேவை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன் மூலம் நகர மற்றும் கிராமிய அபிவிருத்தியின் முரண்பாடுகளுக்கான ஒரு தீர்வாக "ஆக்கபூர்வமான மற்றும் சுற்றாடலுக்குச் சாதகமான ஒரு பொதுப் போக்குவரத்து முறைமைக்காக போக்குவரத்து வலையமைப்பினை அபிவிருத்தி செய்தல்" தொடக்க தேவைப்பாடாக அரசாங்கத்தின் பிரதான கொள்கையினூடாக இனங்காணப்பட்டுள்ளது. நாட்டில் வசிக்கும் மக்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துவதனை முன்னிட்டு அரசாங்கத்தினால் நிலையான முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் போக்குவரத்து தேவைப்பாடுகளுக்காக அதிகரித்து வரும் வேண்டுதல்களை நிறைவேற்றும் வகையில் பெருந்தெருக்கள் பிரிவிற்காக ஒட்டுமொத்தமாக மிகவும் உயர்வான முதலீடு மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கிணங்க தேசிய மாகாண மற்றும் கிராமிய வீதிகளையும் உள்ளடக்கி நாட்டின் வீதி வலையமைப்பினை மேம்படுத்துவதன் மூலம் பயணிகளுக்கு தமது பயண இடங்களுக்காக இலகுவாக செல்லக்கூடியதாக இருத்தல், எரிபொருள் சிக்கனம், போக்குவரத்து செலவினை குறைத்தல், வீதி நெரிசலினை குறைத்தல் ஆகிய விடயங்களின் காரணமாக இப்பிரிவிற்காக மேற்கொள்ளப்படுகின்ற முதலீடு மிகவும் உயர்ந்த பொருளாதாரப் பெறுமதியை உருவாக்குகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. அந்த குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக பெருந்தெருக்கள் அமைச்சு கிராமிய வீதிகள் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு வீதி அபிவிருத்தி அதிகார சபை என்பவற்றினால் 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டியிருந்தது.

- வீதிகள், பெருந்தெருக்கள் மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் விடயத்திற்கான அமைச்சிற்கு இணைத்துக்கொள்ளப்பட்ட நிறுவனங்களின் சட்டங்கள், மற்றும் கட்டளைச் சட்டங்கள், தொடர்பான கொள்கைகள் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை தயாரித்தல், அமுல்ப்படுத்தல், செயற்படுத்தல்.

- கிராமிய புராதன மற்றும் நகர பிரதேச இணைப்புக்களை விரிவுபடுத்தி மக்களை மையமாகக் கொண்ட பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி ஏற்படும் வகையில் உயர் தரத்தினைக் கொண்ட வகையில் தேசிய பெருந்தெருக்கள் முறைமையை மேம்படுத்துதல் மற்றும் சிறந்த தரத்தினை பேணுவதற்காக தேவையான நடவடிக்கை எடுத்தல்.

- அதிவேக வீதியை அபிவிருத்தி செய்தல், கட்டணங்களை நிர்ணயித்தல், சேகரித்தல், ஒழுங்குபடுத்தல் என்பன

- மாகாண சபைகள், மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய வீதிகள் தொடர்பாக தேசிய கொள்கையை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தலினை செயற்படுத்துதல்.

- அமைச்சின் கீழ் செயற்படுகின்ற அனைத்து நிறுவனங்களையும் மேற்பார்வை செய்தல் மற்றும் ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் நடவடிக்கை எடுத்தல்.

இலங்கையின் தேசிய பெருந்தெருக்கள் வலையமைப்பானது கட்டணம் அறவிடப்படுகின்ற பெருந்தெருக்களை உள்ளடக்கி 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் அண்ணளவாக 12,536 கிலோ மீற்றர்களைக் கொண்டிருந்ததுடன் அது "ஏ" தரத்திலான பெருந்தெருக்களின் தூரம் 4,217 கிலோ மீற்றர்களையும் "பீ" தரத்திலான பெருந்தெருக்களின் தூரம் அண்ணளவாக 8,007 கிலோ மீற்றர்களையும், கட்டணம் அறவிடப்படுகின்ற பெருந்தெருக்களின் தூரம் அண்ணளவாக 312 கிலோ மீற்றர்களையும் 4,254 பாலங்களையும் உள்ளடக்கியிருந்தன. 2021 ஆம் ஆண்டின் போது தேசிய ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பல அபிவிருத்திச் செயற்திட்டங்களின் மூலம் தேசிய பெருந்தெருக்கள் மற்றும் கட்டணம் அறவிடுகின்ற பெருந்தெருக்கள் வலையமைப்பிற்கு விரிவான நுழைவினை வழங்குவதற்காக வசதிகளை ஏற்படுத்துவதனைப் போல அனைத்து உள்ளக மற்றும் கிராமிய நுழைவு வீதிகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் நாட்டின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யப்பட்டிருந்தது.



இலங்கையின் தேசிய பெருந்தெருக்கள் வலையமைப்பு

பெருந்தெருக்கள் அமைச்சு

2021 ஆம் ஆண்டின் போது பெருந்தெருக்கள் அமைச்சு செலவுத் தலைப்பின் கீழ் ரூபா 358.3 பில்லியன் நிதி ஏற்பாடு பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அதில் ரூபா 211.6 பில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. பெருந்தெருக்கள் அமைச்சிற்காக 2021 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய 05 ஆண்டுகளுக்காக கிடைத்திருந்த நிதி ஏற்பாட்டின் அளவு அதில் செலவு செய்யப்பட்ட அளவு, சேமிப்பு என்பன வரைபடம். 33 இல் தரப்படுகின்றது.



உரு 33 – கடந்த 6 வருட காலப்பகுதியில் பெருந்தெருக்கள் அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாடு மற்றும் பயன்பாடு

மூலம் - வருடாந்த செயலாற்றல் அறிக்கை – பெருந்தெருக்கள் அமைச்சு 2021

கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு

இலங்கை மக்களின் சமூக பொருளாதார அபிவிருத்தி, போக்குவரத்து ஒத்துழைப்புக்கள் நுழைவு தேவைப்பாடுகள் என்பவற்றை அடைந்து கொள்ளும் வகையில் தேசிய வீதி வலையமைப்பினை மேம்படுத்தி பராமரிப்பதற்காக தேசிய கொள்கைகள் மற்றும் அமுல்ப்படுத்தும் நடைமுறைகளைத் தயாரிக்கும் கடமைகள் பெருந்தெருக்கள் அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் ஒருங்கிணைந்த வீதி முறைமையை அபிவிருத்தி செய்யும் தேவைப்பாட்டினை இனங்கண்டு கிராமிய வீதிகளைப் போல அவற்றுடன் இணைந்த ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக முன்னுரிமை வழங்கி விசேட கடமைகளை நிறைவேற்றுவதற்காக ஒரு தனியான நிருவக கட்டமைப்பினை உருவாக்கி 2187/27 ஆம் இலக்க 2020-08-09 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் மூலம் கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு ஸ்தாபிக்கப்பட்டது.

அவ்வாறே பெருந்தெருக்கள் அமைச்சின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களின் பெருந்தெருக்கள் அமைச்சின் கொள்கை ரீதியான வழிகாட்டல்களின் கீழ் விரிவான தூரநோக்கு மற்றும் இலக்கிடப்பட்ட அணுகுதல்களின் ஊடாக இராஜாங்க அமைச்சின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றது. அதற்காக புதிய செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை இனங்காணல், திட்டமிடல், அமுல்ப்படுத்துதல், செயற்படுத்துதல், பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் என்பனவற்றை பிரதானமாக இராஜாங்க அமைச்சின் மூலம் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது.

அதற்கிணங்க கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க

அமைச்சினால் பின்வரும் பிரதான குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது.

- கிராமிய வீதிகள், பாலங்கள், மற்றும் அதனுடன் இணைந்த ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக தேவையான தந்திரோபாயங்களை இனங்காணல்.

- கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான புதிய நடைமுறைத் தொழில்நுட்பங்களையும் இயந்திர உபகரணங்களையும் அறிமுகப்படுத்துதல்.

- கிராமிய சமூகத்தில் தொழில் மற்றும் வியாபார வாய்ப்புக்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- முன்னுரிமைக்கு இணங்க இனங்கண்டு கிராமிய வீதிகள், பாலங்கள், மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை ஆக்கபூர்வமாக அபிவிருத்தி செய்தல்.

மேற்கூறிய கடமைகளை நிறைவேற்றுவது சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கி கீழே தரப்படுகின்றன.

- 2021 ஆம் ஆண்டின் போது கிராமிய பாலங்கள் செயற்திட்டம் மற்றும் கிராமிய வீதிகளை மேம்படுத்தும் செயற்திட்டம் என்பவற்றிற்காக ரூபா 24,997 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் 100,000 கிலோமீற்றர் கிராமிய வீதிகளை நிறைவேற்றும் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 20,000 மில்லியன் மேலதிக நிதி ஏற்பாடு பெருந்தெருக்கள் அமைச்சின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் போது கிராமிய பாலங்கள் செயற்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 9,500 மில்லியன் நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 8,381 மில்லியன் அல்லது 88 சதவீதத்தினை செலவு செய்வதற்கு முடியாதிருந்ததுடன் கிராமிய வீதிகளை மேம்படுத்தும் செயற்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த நிதி ஏற்பாடான ரூபா 35,497 மில்லியன் தொகைக்கு மத்தியில் ரூபா 7,018 மில்லியன் தொகையான செயற்திட்டங்களில் மாத்திரம் வேலைகள் முடிவடைந்திருந்ததுடன் அது மொத்த நிதி ஏற்பாட்டில் 19.6 சதவீதம் மாத்திரமாகும். மேலும் அபிவிருத்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்ட வீதிகளின் தூரம் 2,839 கிலோ மீட்டர்களில் 536 கிலோ மீட்டர்களில் மாத்திரம் வேலைகள் முடிவடைந்திருந்ததுடன் அது எதிர்பார்த்த இலக்கில் 18.87 சதவீதம் மாத்திரமாகும்.

- கிராமிய பாலங்களை நிர்மாணிப்பதற்காக அமைச்சுக்கு கிடைத்திருந்த பிரேரணைகளை விஞ்ஞான ரீதியான நடைமுறையினூடாக முன்னுரிமையின் அடிப்படையில் இனங்காண்பதற்காக இரண்டு நிறுவனங்களுக்கு ரூபா 31.62 மில்லியன் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நிறுவனங்களினால் 6 மாவட்டங்களில் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய 6,432 பாலங்கள் இனங்காணப்பட்டு அவை தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அப்பாலங்களுக்கு மத்தியில் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 13 பாலங்கள் மாத்திரம் நிர்மாணிப்பதற்காக

தெரிவு செய்யப்பட்டிருந்தமையால் மேற்கூறிய இரண்டு நிறுவனங்களுக்காகவும் செலவு செய்யப்பட்ட பணம் சிக்கனமற்ற செலவாக மாறியிருந்தது.

வீதி அபிவிருத்தி அதிகார சபை

- 2021 ஆம் ஆண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்துவைக்கப்படாதுள்ள ஒட்டுமொத்த கடன் மீதி ரூபா 359,479 மில்லியனாக இருந்ததுடன் அது ரூபா 268,313 மில்லியன் உள்நாட்டு வங்கி கடன்களையும் ரூபா 91,166 மில்லியன் தொகுதிக் கடன்களையும் உள்ளடக்கியிருந்தன. அந்த வங்கி கடன் மீதியில் அனுமதிப் பத்திரம் பெற்ற வங்கிக் கடன் ரூபா 245,103 மில்லியனையும் அனுமதி பத்திரம் பெற்ற வங்கி அல்லாத கடன் ரூபா 114,376 மில்லியனையும் உள்ளடக்கியிருந்ததுடன் அரசாங்க வங்கிக் கடன் மீதி ரூபா 307,893 மில்லியனையும் தனியார் வங்கி கடன் மீதி ரூபா 51,586 மில்லியனையும் உள்ளடக்கியிருந்தது. மேலும் இந்த ஒட்டுமொத்த வங்கி கடன்களில் ரூபா 219,744 மில்லியன் வங்கி கடன்கள் மீளப்பட்டியல்படுத்தப்பட்டும் தொகுதிக் கடன்கள் வழங்கப்பட்டும் இருந்தன. இக்கடன் மீதிகளில் 2030 இலிருந்து 2039 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் செலுத்தி முடிவுறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட பணம் ரூபா 239,857 மில்லியனாகும்.

- 100,000 கிலோமீட்டர் வீதி நிகழ்ச்சித்திட்டம், மத்திய அதிவேக வீதியினை நிர்மாணித்தல், பெருந்தெருக்களை விஸ்தரித்தலும் மேம்படுத்தலும் மற்றும் அதிகார சபையின் தொழிற்பாட்டு மூலதன தேவைப்பாட்டிற்காகவும் இக்கடன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் கடனுக்கான வட்டியானது நிறையூட்டப்பட்ட தொடக்க கடன் விகிதத்திற்கு உச்ச அளவாக 2 சதவீதத்திலிருந்து 2.8 சதவீதம் வரையான வீச்சுடைய பெறுமதி சேர்த்துக்கொள்ளப்பட்டு வட்டி நிர்ணயிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்த அனைத்து கடன்களையும் பெற்றுக்கொள்ளும் போது திறைசேரி பிணைகள் வழங்கப்பட்டிருந்ததுடன் கடனையும் தவணைப் பணங்களையும் செலுத்துவதற்காக திறைசேரியின் வருடாந்த பாதீட்டு நிதி ஏற்பாட்டினூடாக அதிகார சபைக்கு நிதிகள் வழங்கப்பட்டன.

- 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் A மற்றும் B தரங்களில் பெருந்தெருக்கள் வலையமைப்பின் மொத்த தூரம் 12,225 கிலோ மீட்டர்களாக இருந்ததுடன் அதில் 26 சதவீதமான தூரம் அதாவது 3,179 கிலோமீட்டர் அளவானவற்றை அத்திகதியில் மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க மொத்த வலையமைப்பில் 74 சதவீதமான தூரம் இன்னும் மூலதனமாக்குவதற்கு மிகுதியாக இருந்தது.

- 2008 இன் 40 ஆம் இலக்க வீதிகள் அதிகாரச் சட்டத்தின் 4(3) ஆம் பிரிவின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய ஒருங்கிணைந்த வீதி முறைமையின் அபிவிருத்தி மற்றும் பராமரிப்பிற்கான செயல் நடவடிக்கைத் திட்டமானது அதிகாரச்சட்டத்தின் 6(1) மற்றும் 7(1) ஆம் பிரிவுகளின் பிரகாரம் தோற்றுவிக்கப்பட வேண்டிய வீதி முறைமை அபிவிருத்தி ஆலோசனை சபை மற்றும் மாவட்ட வீதி முறைமை அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்

குழு என்பன வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் தோற்றுவிக்கப்பட்டிருக்கவில்லை.

- ஊழியர் எண்ணிக்கை 13,000 இற்கு மேற்பட்ட நாடளாவிய ரீதியில் பரவியுள்ள ஒரு நிறுவனமான வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஊழியர்களைச் சேர்த்தக்கொள்ளல் மற்றும் பதவியுயர்த்துதல் சம்பந்தமாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரித்த ஆட்சேர்ப்பு நடைமுறை இல்லாததுடன் 2005 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை பணிப்பாளர் சபையினால் அங்கீகரித்த ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்த்துதல்கள் நடைமுறை அமுல்ப்படுத்தப்படுகின்றன. அவ்வாறே முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2009 ஆம் ஆண்டின் போது சமர்ப்பித்திருந்த பதவியணியினர் மீள்கட்டமைப்பு சிபாரிசுகளை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாது பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் 23 பதவிகள் தொடர்பாக 268 உத்தியோகத்தர்களுக்கு பிழையான சம்பள அளவுத்திட்டத்திற்கு இணங்க சம்பளம் தயாரிக்கப்பட்டு அதற்கிணங்க கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

- 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிவேக வீதி செயற்பாடு மற்றும் பராமரிப்பு முகாமைத்துவ பிரிவின் சொத்துக்கள் ரூபா 824,859 மில்லியன் மற்றும் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக மாத்திரம் வருமானம் மற்றும் செலவுகள் முறையே ரூபா 8,168 மில்லியனாகவும் ரூபா 3,638 மில்லியனாகவும் இருந்தன. இது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஏனைய செயற்பாட்டு பிரிவுகளிலிருந்து தனியான ஒரு சபையாக இனங்காணும் வரையறைகளை அதிவேக வீதி பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவு பூர்த்தி செய்திருந்த போதிலும் அதிகார சபையின் முகாமைத்துவத்தினால் அதிவேக வீதிப் பிரிவானது சாதாரண செயற்பாடுகளிலிருந்து வேறாக இனங்காணப்பட்டு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. அதிவேக வீதிப் பிரிவினை தனியான ஒரு சபையாக இனங்காண்பதன் மூலம் வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக வளங்களை ஒதுக்கீடு செய்வதன் மூலம் உயர்ந்த செயலாற்றலினை எதிர்பார்க்கலாம்.

- கொழும்பு கட்டுநாயக்கா அதிவேக வீதியில் இலக்ட்ரோனிக் கட்டண அறவீட்டிற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கும் இலங்கை வங்கிக்குமிடையே மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் உடன்படிக்கை செய்த காலம் முடிவடைந்து 02 ஆண்டுகளைக் கடந்திருந்தது. அதற்கிணங்க புதிய உடன்படிக்கை மேற்கொள்ளாமையின் அடிப்படையில் வங்கியினால் அதிகாரம் இல்லாது 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்காக மொத்தமாக ரூபா 12.4 மில்லியன் தொகையானது கொடுக்கல் வாங்கல் கிரயமாக அதிவேக வீதி வருமானத்திலிருந்து கழிக்கப்பட்டிந்தது. அவ்வாறே அந்த வீதியில் இலக்ட்ரோனிக் கட்டணம் செலுத்தும் முறைமையை பயன்படுத்துபவர்களை ஊக்குவிப்பதற்கு முதல் 06 மாதத்திற்காக மாத்திரம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்ட 10 சதவீத கழிவு அதன் பின்னரும் வழங்கப்பட்டதனால் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் அதிகார சபையினால் ரூபா 56.5 மில்லியன் வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

- அதிவேக வீதிகளிலிருந்து உழைக்கின்ற வருமானத்தை கட்டணம் அறவிடப்படும் தேசிய பெருந்தெருக்களின் அபிவிருத்திக்கும் பராமரிப்பிற்கும் பயன்படுத்த வேண்டிய போதிலும் அதற்கு மாற்றமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிவேக வீதிகளிலிருந்து உழைத்த ரூபா 61,435 மில்லியன் வருமானத்தில் பெறுமதி சேர் வரிக் கொடுப்பனவுக்காக ரூபா 18,473 மில்லியன், கடனுக்கான தவணைப் பண கொடுப்பனவுக்காக ரூபா 4,052 மில்லியன் அதிகார சபையின் சம்பளம் சார்ந்த கொடுப்பனவுகளுக்காக ரூபா 9,895 மில்லியன், வீதி அபிவிருத்தி அதிகாரச் சபையின் ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் படிகள் கொடுப்பனவுக்காக ரூபா 10,713 மில்லியன், பொதுச் செலவுகள் மற்றும் செயற்திட்டங்களுக்கான கொடுப்பனவுகளுக்காக ரூபா 3,402 மில்லியன் மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு வசதிகளை வழங்குவதற்காக ரூபா 650 மில்லியனாக கூட்டு மொத்தமாக ரூபா 47,185 மில்லியன் தொகை செலவு செய்யப்பட்டிருந்தது.

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 133 ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு கம்பனியால் ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒரு தடவை பங்குதாரர்களின் வருடாந்த பொதுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் எந்த துணைக் கம்பனியாலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- கம்பனிகளின் நிதி நிருவாகம், கொள்வனவுகள் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் சம்பந்தமாக முறைமையையும் ஒத்த தன்மையையும் உருவாக்கும் வகையில் உரிய துறைகள் சம்பந்தமாக கட்டமைப்பு ரீதியான வடிவமைப்பினை அல்லது வழிகாட்டியினை அறிமுகப்படுத்துவதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையும் வரிசை அமைச்சும் தலையிட்டு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

- வீதி அபிவிருத்தி அதிகார சபையின் துணைக்கம்பனியான வரையறுத்த அதிவேக வீதி போக்குவரத்து (தனியார்) கம்பனி 2015 கணக்காண்டின் பின்னர் இன்றுவரை நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை.

- வீதி அபிவிருத்தி அதிகார சபையின் துணைக் கம்பனியான வரையறுத்த மகனெகும இமல்சன் (தனியார்) கம்பனியின் பங்குரிமையில் 99 சதவீதத்தினை வீதி அபிவிருத்தி அதிகாரச் சபை கொண்டுள்ளது என அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தும் கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கும் இன்னும் தனியார் தரப்பினர்களுக்கும் 50 சதவீத படியாக கம்பனியின் பங்களில் உரிமை காணப்படுகின்றது என குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் கம்பனியின் வழங்கப்பட்ட பங்குச் சான்றிதழ்களில் உறுதிப்படுத்தப்படாத ரூபா 01 மில்லியன் முதலீடு மேற்கொள்ளப்பட்டது என குறிப்பிடப்பட்டிருந்தும் உரிய கம்பனியால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டதாவது ரூபா 100 மில்லியன் முதலீட்டுப் பெறுமதியாகவும் மிகுதி அதிகார சபையினால் கம்பனிக்கு வழங்கிய கடனாகவும் ஆகும். அவ்வாறே 99 சதவீதத்திற்கு நேரொத்ததான

பிரதிநிதித்துவமானது கம்பனியின் பணிப்பாளர் சபையில் அதிகார சபைக்கு கிடைத்திருக்கவில்லை.

- முன்னணி செயற்திட்டங்களின் பலவீனமான திட்டங்களின் காரணமாக மத்திய அதிவேக வீதிச் செயற்திட்டத்தின் 04 ஆம் பகுதியின் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு 2016 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தும் 2022 பெப்ரவி 28 ஆந் திகதி வரையும் செயற்திட்டத்தின் சிவில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் ரூபா 448.87 மில்லியன் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிற்காக செலவு செய்யப்பட்டிருந்தது.
- மத்திய அதிவேக வீதி செயற்திட்டத்தின் 3 ஆம் பகுதிக்கான செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு 2013 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்டிருந்தும் நீண்டகால தாமதத்தின் பின்னர் 2021 ஆகஸ்ட் 20 ஆந் திகதி 2.25 கிலோ மீற்றர் நீளமான வீதிப் பகுதி தொடர்பாக 3 ஒப்பந்தங்கள் வழங்கப்படும் வரை செயற்திட்டத்தின் சிவில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2020 திசெம்பர் 31 வரை செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிற்காக ரூபா 833.83 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது.

- 100,000 கிலோ மீற்றர் கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 53,517.39 கிலோ மீற்றரைக் கொண்ட 71,468 கிராமிய வீதி செயற்திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்காக இனங்காணப்பட்டிருந்தன. அத்திகதி வரை மேற்கூறிய வீதிச் செயற்திட்டங்களில் 24,785.04 கிலோ மீற்றர் அளவான 16,705 வீதி செயற்திட்டங்களுக்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 356.44 பில்லியன் ஒப்பந்த பெறுமதியான 11,595 வீதிச் செயற்திட்டங்களுக்காக ஒப்பந்தங்கள் வழங்குதல் முடிவடைந்திருந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 92.25 பில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 15.65 பில்லியன் விலைப்பட்டியல்களுக்காக இன்னும் செலுத்த வேண்டியிருந்தது.

- 100,000 கிலோ மீற்றர் கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட வீதி அபிவிருத்தியின் போது பெருந்தெருக்களை அபிவிருத்தி செய்வதற்காக பயன்படுத்தப்படுகின்ற பெருந்தெருக்கள் விலை விகித பட்டியலும் (HSR) பொருள் விபரக் குறிப்புக்களும் பயன்படுத்தப்பட்டிருந்தன. எனினும் மேற்கூறிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வீதி அபிவிருத்திகளில் அதிக அளவானவை கிராமிய வீதி அபிவிருத்திகளாக இருந்ததனால் அதற்காக பெருந்தெருக்கள் விலை விகிதமும் பொருள் விபரக் குறிப்பும் பயன்படுத்தப்படுதல் சிக்கன மற்றதும் வினைத்திறன் அற்றதும் என்பதனால் அவற்றிற்காக கிராமிய வீதிக்கான பொருள் விபரக் குறிப்பு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்தது.

விவசாயத் துறை

கணக்காய்வு அவதானிப்புக்கள்

- விவசாய அமைச்சிற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடத்தின் வாடகை உடன்படிக்கை காலம் முடிவடைதல்
- "ஜீவ துரு உதானா" தேசிய நிகழ்ச்சித்திட்டம்
- சேதனப் பசளை உற்பத்தி, பயன்பாடு மற்றும் விவசாயிகளுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்குதல் தொடர்பான பிரச்சார செலவினம
- நீரிறைக்கும் இயந்திரம் மற்றும் தூவல் நீர் தொழில்நுட்ப செயற்திட்டம
- தரிசு நிலங்களில் பயிர்ச்செய்கையில் ஈடுபடுதல்
- இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை
- "ரன் கெவிலிய" தொழில்முனைவு பொதுக் கம்பனி
- மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பயன்படுத்தப்படாத தோட்டங்கள்
- மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

விவசாயத் துறை

சமூக ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட வணிகப் போக்கைக் கொண்ட உலகளாவிய போட்டி உற்பத்திப்பொருளை உருவாக்கும் இயற்கை வளங்கள் மற்றும் தொழில்முனைவோர் விவசாயத்தின் நிலைபேறான முகாமைத்துவத்தை உணர்ந்துகொள்வதன் மூலம் உணவுப் பாதுகாப்பு மற்றும் தேசிய செழிப்பிற்காக வினைத்திறனான, பயனுள்ள மற்றும் சக்திவாய்ந்த விவசாயத் துறையொன்றை ஸ்தாபித்தல் இத் துறையின் பிரதான இலக்காக இனங்காணப்பட்டுள்ளது. மேற்படி நோக்கத்தை அடைந்துகொள்ளும் பொருட்டு விவசாய அமைச்சு, 02 இராஜாங்க அமைச்சுக்கள், 03 திணைக்களங்கள் மற்றும் 14 நியதிச்சட்ட நிறுவனங்கள் பின்வரும் தொழிற்பாடுகளை ஆற்ற வேண்டியுள்ளதுடன் அதற்காக பாதீட்டில் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது.

- நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய கல்வி வாய்ப்புக்களுக்கு பாரம்பரிய விவசாயிகள், இளைஞர்கள் மற்றும் மாணவர் சமூகத்தை வழிநடாத்துவதற்கு ஒவ்வொரு இலக்கு குழுவிற்கும் பொருத்தமானவாறு விவசாய தொழில்நுட்ப அறிவை விரிவுபடுத்துதல்.
- இளம் விவசாய தொழில்முனைவோரை உருவாக்குவதை ஊக்குவித்தல்.
- விவசாயத்தை மேம்படுத்துவதற்காக அனைத்து தொடர்புடைய நிறுவனங்களையும் ஒருங்கிணைக்கும் பொறிமுறை ஒன்றுடனான அணுகுமுறையொன்றை உருவாக்கி செயற்படுத்துதல்.
- குறித்துரைக்கப்பட்ட நியமத்தின் பிரகாரம் விவசாயத்தில் பயன்படுத்தப்படும் இரசாயன பூச்சிக்கொல்லிகள் மற்றும் ஏனைய இரசாயன கலவைகளை ஒழுங்குபடுத்துவதற்கான முறைமையொன்றை அபிவிருத்தி செய்தல்.
- விவசாய செயற்பாடுகளுக்காக தேவையானவாறு நிதி வளங்கள், பயிர் காப்புறுதித் திட்டங்கள் மற்றும் விவசாயிகளின் ஓய்வூதியத் திட்டங்களை விரிவுபடுத்துதல்.
- நேரடி உற்பத்தியாளர்கள், செயன்முறைப்படுத்தும் கம்பனிகள், மொத்த விற்பனை நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதி கம்பனிகளுக்கிடையிலான ஏற்பாட்டியல் சங்கிலியை வலுப்படுத்துவதன் மூலம் விவசாயிகளின் உற்பத்திகளுக்கு அதிக விலைகளை உறுதிப்படுத்துதல்.
- உற்பத்திப்பொருள் சந்தைப்படுத்தல் வசதிகளுக்கான புதிய மூலோபாயத் திட்டத்தை அமுல்ப்படுத்துதல்.
- உற்பத்தியாளர்களின் வருமான வீழ்ச்சியைக் கட்டுப்படுத்த அறுவடை நேரத்தில் அரசாங்கத்தின் திட்டமிடப்பட்ட தலையீடுகள்.
- காலநிலை மாற்றம் மற்றும் வானிலை தொடர்பான நாளாந்த தகவல்களை விவசாய சமூகத்திற்கு தெரிவிப்பதன் மூலம் இயற்கை அனர்த்தங்களை குறைத்தல்.
- விவசாய சமூகத்திற்கு தரமான விதைகள் மற்றும் செடிகளை வழங்குவதற்கான மூலோபாயத்தை அமுல்ப்படுத்துதல்
- விவசாயிகளின் பயிரிடல் தேவைகளின் பிரகாரம் நீர் விநியோகத்தை

உறுதிப்படுத்தும் நீர் முகாமைத்துவத்தை அமுல்ப்படுத்துதல்.

- வெவ்வேறு புவியியல் பகுதிகளுக்கு பொருத்தமான கால்நடைகளை அறிமுகப்படுத்தும் பொருட்டு ஆராய்ச்சிகளை நடாத்துதல் மற்றும் நடுத்தர அளவிலான பண்ணை அபிவிருத்தியை ஊக்குவித்தல்.
- கால்நடை அடிப்படையிலான உற்பத்தியை மேம்படுத்தி அவற்றின் ஏற்றுமதிகளை ஊக்குவித்தல்.
- தேசிய கால்நடை சபை மூலம் உயர்தர புற்களை அறிமுகப்படுத்துதல்.
- நடுத்தர மற்றும் பெரிய அளவிலான கால்நடை பண்ணைகளை நிர்மாணிப்பதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து தேவையான நிலம் மற்றும் முதலீட்டு வசதிகளை வழங்குதல்.
- அரசாங்க விலங்கு பண்ணைகளின் ஆகக்கூடிய பயன்பாட்டை ஏற்படுத்துவதற்கு நிகழ்ச்சித்திட்டங்களை இயக்க நிலையில் தயார் செய்தல்.
- கோழி இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தியை விரிவுபடுத்தி அவற்றின் ஏற்றுமதியை ஊக்குவித்தல்.
- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உற்பத்தியாளர்களை மேம்படுத்துவதன் மூலம் உள்ளூர் உற்பத்தி மற்றும் நுகர்வு வாய்ப்புக்களை விரிவுபடுத்துதல்.
- விலங்கு பண்ணைகள் மற்றும் உற்பத்தி வசதிகளுக்காக சர்வதேச நியமங்கள் மற்றும் பயனுள்ள கண்காணிப்பு முறைமைகளை அறிமுகப்படுத்துதல்.
- கால்நடை வசதிகளை விரிவுபடுத்துவதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தரளவிலான விவசாயிகளுக்கு வசதியளித்தல்.
- உள்ளூர் விவசாயி மற்றும் நுகர்வோரின் திருப்திக்காக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து நியாய விலைக் கொள்கை மற்றும் பயிர் பல்வகைமைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்ப்படுத்துதல்.
- கரிம உரங்கள் மற்றும் நச்சுத்தன்மையற்ற உணவு உற்பத்தியை பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துதல்.
- கரிம காய்கறிகள் மற்றும் பழங்களின் நுகர்வை உள்நாட்டு மட்டத்தில் விரிவுபடுத்துவதற்காக சமுர்த்தி மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்ப்படுத்துதல்.
- காய்ந்த மிளகாய், சோளம், சோயா, பச்சைப் பயறு மற்றும் கௌப்பி, வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு போன்ற பயிர்களின் உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் அதன் மூலம் அத்தகைய உற்பத்திப் பொருட்களின் இறக்குமதியைக் குறைத்தல்.
- மிகை உற்பத்திப் பொருட்களை சேமிப்பதன் மூலமும் பெறுமதி சோதனை மூலமும் ஏற்றுமதிகளிற்கு வசதியளிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை அமுல்ப்படுத்துதல்.
- பெறுமதி சேர்க்கப்பட்ட விவசாய உற்பத்தி மற்றும் அவற்றின் ஏற்றுமதிக்காக விவசாய அறுவடை சேகரிப்பு மற்றும் செயன்முறைப்படுத்தல் நிலையங்களை மேம்படுத்துதல்.

- காய்கறி மற்றும் பழங்கள் தொடர்பான ஏற்றுமதி உற்பத்தி தொழில்துறைகளை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துதல்.
- சர்வதேச தரத்திலான விதை உற்பத்திக்காக உள்ளூர் விதை கொள்கையொன்றை அறிமுகப்படுத்துதல்.
- இறக்குமதி செய்யப்பட்ட விதைகளின் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக இலங்கை நியமங்கள் நிறுவகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரச்சான்றிதழ்களுக்குள் விதைகளின் இறக்குமதியை ஒழுங்குபடுத்துதல்.
- தரமான விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு தனியார் துறையை ஊக்குவித்தல்.
- தனித்துவமாக முளைக்கும் தரத்துடனும் நோய்கள் மற்றும் காலநிலை மாற்றங்களிற்கு எதிர்த்து நிற்கக்கூடியதுமான அதிக மகசூல் தரும் நாற்றுகளை அறிமுகப்படுத்துதல்.
- அரசாங்க பண்ணைகள் மற்றும் விதை உற்பத்தி பண்ணைகளை அபிவிருத்தி செய்தல்.
- புதிய தொழில்நுட்ப முறைகளின் கீழ் நிலத்தடி நீரை தயார்படுத்துதல், மண்ணை தயார்படுத்துதல், விதை மற்றும் செடியைத் தெரிவுசெய்தல், உரத்தை பயன்படுத்துதல், அறுவடைக்கு முன்னரும் பின்னரும் பிராந்திய மட்டத்தில் விரிவான ஆய்வுகளை நடாத்தி விவசாயிகளுக்கு இதில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- தொழில்நுட்ப விவசாயமொன்றை நோக்கி செல்ல தேவையான அறிவு, தொழில்நுட்ப உபகரணங்கள், நில பயன்பாடு, நிதி பங்களிப்பு ஆகியவற்றின் மூலம் சந்தை பெறுமதி சேர்க்கப்பட்ட தொழில்துறை உற்பத்திப்பொருட்களை நோக்கி வழிகாட்டுதல்.
- அறுவடை, போக்குவரத்து மற்றும் இறக்குதல் ஆகியவற்றின் போதான கழிவுகளை தடுப்பதற்கு புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அரச மற்றும் தனியார் துறைகளுடன் இணைந்து நிகழ்ச்சித்திட்டமொன்றை அமுல்ப்படுத்துதல்.
- நீர் சேமிப்பை பயன்படுத்துவதன் ஊடாக மகசூலை அதிகரிக்கும் முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் நீர் நுகர்வு பொருளாதார நன்மைகளை அதிகப்படுத்துதல்.
- நெல், தானியங்கள், மிளகு, கிராம்பு, கொக்கோ மற்றும் காய்கறிகள், பழங்கள் மற்றும் வீட்டுத் தோட்டங்கள் உள்ளடங்கிய பிரதான பயிர்களுக்கான தொழில்நுட்ப பயிரிடல் முறைகளை அறிமுகப்படுத்துவதற்காகவும் உயர் தரத்திலான விதைகள், செடிகள் மற்றும் உரங்களை சரியான நேரத்தில் விநியோகிப்பதற்காகவும் முறைமைகளை உருவாக்குதல்.
- உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி சர்வதேச தரத்திற்கு இணங்க கரிம உரங்களை உற்பத்திசெய்தல் மற்றும் நாட்டில் உயர்தர உரங்களின் உற்பத்தியை ஊக்குவித்தல்.

2021 ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக பாராளுமன்றத்தினால் கமத்தொழில் அமைச்சு, அதன் கீழ் தொழிற்படும் இராஜாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்காக ரூபா 76,221.40 மில்லியன் கூட்டுமொத்தமான நிதியேற்பாடு

வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை அந்நிதியேற்பாட்டில் ரூபா 53,013.00 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி ஆண்டின் இறுதியிலுள்ளவாறான சேமிப்பு ரூபா 23,208.40 மில்லியன் ஆகும். விபரங்கள் உரு 24 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.



	விவசாய அமைச்சு	நெல் மற்றும் தானியங்கள், சேதனப் பசளை, மரக்கறிகள், பழங்கள், மிளகாய், வெங்காயம் மற்றும் கிழங்கு பயிர்ச்செய்கை...	சேதனப் பசளை உற்பத்தி மற்றும் வழங்கல் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு	கமநல அபிவிருத்தி திணைக்களம்	விவசாயம் மற்றும் கமநலக் காப்புறுதி சபை	மொத்தம்
தேறிய	16இ786.80	8இ720.60	35இ554.20	10இ013.30	5இ146.50	76இ221.40
செலவினம்	11இ924.20	5இ463.60	21இ627.40	8இ950.80	5இ047.00	53இ013.00
சேமிப்பு	4இ862.60	3இ257.00	13இ926.80	1இ062.50	99.50	23இ208.40

உரு 24 - வழங்கப்பட்ட நிதியேற்பாடு மற்றும் செலவினம் மூலம் - 2021 இன் வருடாந்த நிதிக்கூற்றுக்கள

விவசாயத் துறையினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நியதிச்சட்ட நிறுவனங்களிற்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்த மேற்குறிப்பிட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுதலுடன் தொடர்புடைய கணக்காய்வுப் பரிசோதனையில் பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

விவசாய அமைச்சிற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடத்தின் வாடகை உடன்படிக்கை காலம் முடிவடைதல்

விவசாய அமைச்சுக்காக வாடகைக்கு எடுக்கப்பட்ட கட்டிடத்தின் உரிமையாளரான தனியார் கம்பனிக்கும் விவசாய அமைச்சுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள 2178 ஆம் இலக்க குத்தகை ஒப்பந்தக் காலம் முடிவடைவதற்கு முன்னர் குத்தகைக்கு எடுத்தோருக்கும் குத்தகைக்கு வழங்கியோருக்கும் தேவையேற்பாடுமாயின் எவ்வாறு குத்தகை ஒப்பந்தத்தை நிறுத்தலாம் என்பது குறித்த நிபந்தனையை குத்தகை ஒப்பந்தத்தில் சேர்க்காததால், 5 ஆண்டுகளிற்காக வாடகைக்கு எடுக்கப்பட்ட கட்டிடத்தை அதன் நான்காவது ஆண்டில் மீளக் கையளிக்கையில் மீதமுள்ள குத்தகை காலத்திற்கு விகிதாசாரமாக வாடகைத் தொகையைக் குறைக்கும் வாய்ப்பு இழக்கப்பட்டிருந்தமையால் கட்டிடத்தை பயன்படுத்தாத காலத்திற்காக ரூபா 310.94 மில்லியன் தொகை சிக்கனமற்ற விதத்தில் செலவிடப்பட்டிருந்தது.

குத்தகைக்கு எடுக்கப்பட்ட ஆதனத்தை விட்டு வெளியேறும்போது, குத்தகைக் காலத்தில் குத்தகைதாரர் மூலம் குத்தகைக்கு எடுக்கப்பட்ட கட்டிடத்திற்கு ஏற்பட்ட சேதம் குறித்து இரு தரப்பினரினதும் இணக்கப்பாட்டுடன் ஒரு சேத இழப்பு அறிக்கையை பொருத்தமான தொழில்நுட்ப நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை ஒப்பந்தத்தில் காணப்பட்டிருக்கவில்லை. குத்தகைக் காலத்தில் குத்தகைதாரரால் குத்தகைக்கு எடுக்கப்பட்ட கட்டிடத்திற்கு ஏற்பட்ட சேதத்தை மதிப்பிடுவதற்காக, அமைச்சின் பொறியியல் பிரிவும் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் அதிகாரிகளும் இணைந்து 2021 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் நடத்திய பரிசோதனையில் பங்கேற்குமாறு குத்தகைக்கு வழங்கியோருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அவர்கள் சம்பந்தப்பட்ட பரிசோதனையில் பங்கேற்பதற்கு மறுப்புத் தெரிவித்திருந்ததுடன் விவசாய அமைச்சு அதிகாரிகளின் மதிப்பீட்டின்படி, கட்டிடத்திற்கு ரூபா 12.71 மில்லியன் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் அதேவேளை குத்தகைக்கு வழங்கிய கம்பனி மேற்கொண்ட மதிப்பீட்டின்படி, கட்டிடத்திற்கு ரூபா 28.25 மில்லியன் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் ஒன்றுக்கொன்று முரணான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருந்தமையால், சேதங்கள் தொடர்பாக இரு தரப்பினரிடையே முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தமை காரணமாக விவசாய அமைச்சுக்கு ரூபா 15.54 மில்லியன் மேலதிக பொறுப்பு ஏற்படும் அபாய நிலை உருவாகியுள்ளது.

ஒப்பந்த நிபந்தனைகள் இலக்கம் II இன் படி, ஒப்பந்த காலம் முடிவில் குத்தகைதாரர் குத்தகைக்கு எடுக்கப்பட்ட சொத்தினை கையளித்த பின்னர் ஒரு மாதத்திற்குள் மீளளிக்கப்பட்ட வேண்டிய வைப்புத் தொகையான ரூபா 63 மில்லியனை குத்தகைக்கு வழங்கியோன் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும். ஆனால், குத்தகைதாரர் குத்தகைக்கு எடுத்த சொத்தை மீள ஒப்படைத்து ஒப்பந்தத்தை முடிவிற்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுத்திருந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், குத்தகைக்கு வழங்கியோன் அதை எதிர்த்தும் ஒப்பந்தத்தின் அடிப்படை விதிமுறைகளுக்கு முரணாகவும் செயற்பட்டிருந்தமையால் மேற்படி வைப்புப் பணத்தை பெற முடிந்திருக்கவில்லை.

"ஜீவ துரு உதானா" தேசிய நிகழ்ச்சித்திட்டம்

கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 05 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் ஊட்டச்சத்து அளவை அதிகரிக்கும் நோக்கில் கமத்தொழில் அபிவிருத்தித் திணைக்களமும் விவசாய இராஜாங்க அமைச்சும் இணைந்து "ஜீவ துரு உதான" தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு 2021 மே 04 ஆந் தேதியிட்ட அமப/21/0689/323/026 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் ஒப்புதல் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, குடும்ப சுகாதார சேவை அதிகாரிகளின் ஒத்துழைப்புடன், ஒவ்வொரு விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் பிரிவுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 100 பயனாளிக் குடும்பங்களிற்கு அவர்களின் தோட்டங்களில் பத்து இலட்சம் முருங்கை செடிகளை நடுவதற்காக இராஜாங்க அமைச்சின் உணவுப் பாதுகாப்பு செலவின விடயத்தின் (425-2-3-004-2509) கீழ் 2021 ஆம் ஆண்டில் ரூபா 55.62 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இத்திட்டத்தின் கீழ் 999,211 முருங்கை செடிகள் ரூபா 41.96 மில்லியன் செலவில் விநியோகிக்கப்பட்டிருந்தது. விவசாய இராஜாங்க அமைச்சுச் செயலாளரின் 2021 ஏப்ரல் 05 ஆந் தேதியிட்ட 03/2021 ஆம்

இலக்க சுற்றறிக்கையின் மூலம் மேற்கூறிய பயனாளி குடும்பங்களின் தோட்டங்களில் பத்து இலட்சம் முருங்கை செடிகளை நடுவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்த போதிலும், சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களிற்கு முரணாக ரூபா 2.35 மில்லியன் பெறுமதியான 56,025 மரக்கன்றுகள் சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

விவசாய நெல் மற்றும் தானியங்கள், கரிம உணவு காய்கறிகள், பழங்கள், மிளகாய் மற்றும் உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கையினை அதிகரிக்கும் விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப விவசாய இராஜாங்க அமைச்சின் ஊடாக கமத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்திற்கு ரூபா 21 மில்லியனை நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்ததுடன், 418,363 முருங்கை செடிகளை 516 கமத்தொழில் சேவைகள் நிலையங்களிற்கு வழங்குவதற்காக ரூபா 17.59 மில்லியன் தொகையும் விழிப்புணர்வூட்டலுக்காக ரூபா 0.35 மில்லியன் தொகையும் செலவிடப்பட்டிருந்தது. இந்த வேலைத்திட்டத்தின் நோக்கங்களை அடைவதற்காக அமைச்சு முறையான கண்காணிப்பை மேற்கொள்ளாததுடன் மேல்மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வுப் பரிசோதனையின் போது விநியோகிக்கப்பட வேண்டிய செடிகள் முறையாக விநியோகிக்கப்படாமை, கமத்தொழில் சேவைகள் நிலையங்களில் செடிகள் அழிவடைந்துள்ளமை, செடிகளை பெற்றவர்கள் அந்தச் செடிகளை முறையாக நட்டு பராமரிக்காமை மற்றும் வழங்கப்பட்ட செடிகள் குறித்து முறையான கண்காணிப்பு மேற்கொள்ளப்படாமை போன்றன காரணமாக செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 17.94 மில்லியன் பயனற்ற செலவினமாகும் என்பது கணக்காய்வில் தெரியவந்தது.

சேதனப் பசளை உற்பத்தி, பயன்பாடு மற்றும் விவசாயிகளுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்குதல் தொடர்பான பிரச்சார செலவினம்

சேதனப் பசளை உற்பத்தி, பயன்பாடு மற்றும் விவசாயிகளுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்குதல் தொடர்பாக கமத்தொழில் சேவைகள் நிலையங்களிலுள்ள விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள் நிகழ்நிலை (Online) ஊடாக பயிற்றுவிக்கப்பட்டிருக்கையில் பிரச்சார செலவினம சேதனப் பசளை உற்பத்தி, பயன்பாடு மற்றும் விவசாயிகளுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்குதல் தொடர்பான விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சிகளை தொலைக்காட்சியின் ஊடாக ஒளிபரப்புச் செய்வதற்காக 06 ஊடக நிறுவனங்களிற்கு ரூபா 21.66 மில்லியன் தொகை கமத்தொழில் சேவைகள் நிலையங்களால் செலுத்தப்பட்டிருந்தது.

நீரிறைக்கும் இயந்திரம் மற்றும் தூவல் நீர் தொழில்நுட்ப செயற்திட்டம்

இலங்கையின் உலர் வலயங்களில் உள்ள விவசாயிகள் வறட்சி காலங்களின் போது குறைந்த நீரில் அவர்களது பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் பொருட்டும் தற்போதைய எரிசக்தி நெருக்கடிக்கு தீர்வொன்றாகவும் சூரிய சக்தி மூலம் இயங்கும் நீரிறைக்கும் இயந்திரங்கள் மற்றும் தூவல் நீர்ப்பாசன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்காக வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் ரூபா 2,327.2 மில்லியன் தொகையை 2005-2008 ஆண்டு காலப்பகுதியின் போது விவசாய அமைச்சிற்கு வழங்கியிருந்தது. இந் நிதியேற்பாடுகளின் மூலம் 19 கமநல சேவைகள் நிலையங்களிற்கு 7,231 சூரிய சக்தி மூலம் இயங்கும் நுண் நீர் முறைமைகள் வழங்கப்பட்டிருந்தன. இம் முறைமைகளுக்கான அனைத்து

கொடுப்பனவுகளும் 2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு முகவரியிடப்பட்ட 2020 யூலை 03 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 2,264.7 மில்லியன் தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. 2022 ஆம் ஆண்டளவில் விவசாய வங்கிகளில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள பணத்திலிருந்து ரூபா 4.17 மில்லியன் தொகை விவசாய அமைச்சுக்கு செலுத்தப்பட்டிருந்தது. தொடர்ந்தும் விவசாயிகளிடமிருந்து அறவிடப்பட்டு கிளிநொச்சி, பதுளை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலுள்ள விவசாய வங்கிகளில் ரூபா 1.85 மில்லியன் தொகை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. 2022 வரை வழங்கப்பட்ட முறைமைகளில் 90 சதவீதம் காணாமலாக்கப்பட்டும், பயன்படுத்தப்படாமலும், செயலிழந்தும், விவசாயிகளை கண்டுபிடிக்க முடியாதும் இருந்தமை அவதானிக்கப்பட்டமையால் செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அடைந்து கொள்ளப்பட்டிருக்காதமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

தரிசு நிலங்களில் பயிர்ச்செய்கையில் ஈடுபடுதல்

2020/21 ஆம் ஆண்டில் விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் மாவட்ட காரியாலயங்களுக்கு தரிசு வயல்களை பயிரிடுவதற்கான விசேட வேலைத்திட்டத்தின் கீழ் கடன் தொகையாக ரூபா 25 மில்லியன் விவசாயிகளிற்கு வழங்குவதற்காக விடுவிக்கப்பட்டிருந்ததுடன், மாவட்ட அலுவலகங்கள் அத்தொகையில் ரூபா 10.52 மில்லியன் தொகையை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை

2019 முதல் 2021 வரையான 03 வருட காலப்பகுதியில் இந்த இயக்கச் சபையினால் விவசாயத் திணைக்களத்தின் கன்னோருவை உணவு தொழில்நுட்பப் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட மவ்போஷா திட்டம், சுவபோஷ திட்டம், தோசை மாவு உற்பத்தித் திட்டம், சோயா அடிப்படையிலான உணவு உற்பத்தித் திட்டம், பழ பானங்கள் உற்பத்தித் திட்டம் உள்ளிட்ட அனைத்துத் திட்டங்களும் இயந்திரக் கோளாறு மற்றும் மூலப்பொருள் வழங்கல் பிரச்சினை காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன.

1973 இன் 15 ஆம் இலக்க இலங்கை தேசிய பட்டினி இயக்கச் சபைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் அல்லாத குளங்களிலிருந்து மண்ணை அகற்றுவதற்காக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் ரூபா 3.37 மில்லியன் ரூபா செலவிடப்பட்டிருந்ததுடன் அவ்வாறு அகற்றப்பட்ட மண்ணை அதிவேக நெடுஞ்சாலைகளுக்கு விற்பனை செய்து ரூபா 81.13 மில்லியன் வருமானமாகப் பெறப்பட்டிருந்தது. மண் அகழ்வுச் செயற்திட்ட அறிக்கையின்படி, வழங்கிய மண்ணுக்காக சம்பந்தப்பட்ட விவசாய அமைப்புகளிடம் இருந்து சபைக்குப் பணத்தைப் பெற்று, அந்த பணத்தை அரசாங்க நிதி ஒதுக்கீட்டுடன் இணைத்துப் பயன்படுத்தி, விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் பொறியியல் ஆலோசனையின் கீழ், சிறிய குளங்களை முறையான தரத்தில் மேம்படுத்த பயன்படுத்தப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு செய்யப்படாது ரூபா 77.76 மில்லியன்

நிலையான வைப்புக் கணக்ககளில் வைப்பிலிடப்பட்டிருந்தது.

"ரன் கெவிலிய" தொழில்முனைவு பொது பொதுக் கம்பனி

கடந்த ஆண்டிற்கான கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட படி, 2018/2019 ஆம் ஆண்டில் பொலன்னறுவை மாவட்டத்தில் பரந்து விரிந்துள்ள 3,000 ஏக்கர் வயல்வெளியில் "குளோபல் கெப்" (Global Gap) சான்றளிப்பு முறையின்படி நெல் பயிரிடுதல், சர்வதேச தரப்படுத்தல் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு தெளிவுபடுத்துதல் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த நிலைபேறான விவசாய முறையினை பின்பற்றி பொருளாதார நன்மைகளை அடைதல் ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்ட "ரன் கெவிலிய" தொழில்முனைவு பொதுக் கம்பனிக்கு ஓராண்டில் மீளளிக்கும் அடிப்படையில் ரூபா 5.9 மில்லியன் வட்டியில்லா கடனாக வழங்கப்பட்டது. செயற்திட்ட காலக்கெடுவின்படி, விவசாயிகள் நெல் உற்பத்திக்கான GAP (Good Agriculture Practice) சான்றிதழை 2019 மார்ச் மாதத்திற்குள் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், 2021 திசெம்பர் வரையிலும் கூட, ஒரு பண்ணை கூட எதிர்பார்த்த அளவை எட்டாதிருந்ததுடன் வழங்கப்பட்டிருந்த கடன் தொகையேனும் இதுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பயன்படுத்தப்படாத தோட்டங்கள்

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் ஹெக்டேர் பதிவேட்டின்படி, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, தேயிலை மற்றும் ஏனைய பயிர்கள் பயிரிடக்கூடிய 15 தோட்டங்களின் மொத்த விஸ்தீரணம் 10,164 ஹெக்டேர் ஆன போதிலும், அதில் 4790 ஹெக்டேர் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதில் 3573 ஹெக்டேர் தேயிலை சாகுபடிக்கும், 1217 ஹெக்டேர் ஏனைய பயிர்ச்செய்கைக்கும் பயன்படுத்தப்பட்டிருந்தது. மீதமுள்ள 5374 ஹெக்டயர் பகுதி, அதாவது 53 சதவீதம் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. பயன்படுத்தப்படாத நிலத்தில் விவசாயம் செய்யவோ அல்லது வெளி தரப்பினருக்கு குத்தகைக்கு விடவோ சபை நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன், ஹெக்டேர் அறிக்கையின் (Hectarage Statement) படி, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இறப்பர் சாகுபடியின் பரப்பளவு 770 ஹெக்டேராக காணப்பட்டதுடன், இது இறப்பர் சாகுபடிக்காக ஒதுக்கப்பட்டிருந்த 2167 ஹெக்டேர் பரப்பளவில் 35.5 சதவீதத்திற்கும் குறைவானது என்பது அவதானிக்கப்பட்டது. குமாரவத்தை மற்றும் தியலும தோட்டங்களில் இறப்பர் பயிரிடப்படுகிறது, மேலும் தியலும தோட்டங்களிலுள்ள இறப்பர் பயிரிடக்கூடிய நிலப்பரப்பில் 15 சதவீதத்திற்கும் குறைவாகவே பயிரிடப்பட்டிருந்தது.

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு, மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமாக 15 தோட்டங்களில் 15 தேயிலை தொழிற்சாலைகளும் 2 இறப்பர் தொழிற்சாலைகளும் காணப்பட்டன. ஆனால் தற்போது செயல்படுகின்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 7 ஆகும். இதில் 4 தொழிற்சாலைகள்

வெளித்தரப்பினர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்ததுடன், மீதமுள்ள 3 தொழிற்சாலைகளிற்குரிய தோட்டங்கள் மாத்திரமே தேயிலை கொழுந்து பறிக்கும் பணிக்கு பயன்படுத்தப்பட்டிருந்தன. எஞ்சிய 77,000 இயலளவு கொண்ட 8 தேயிலை தொழிற்சாலைகள் தற்போது செயற்படாமல் இருப்பதை அவதானிக்க முடிந்தது. முன்னைய கணக்காய்வு பரிசோதனைகளின் போதும் இது சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், இந்த செயலற்ற தொழிற்சாலைகள் பழுதுபார்க்கப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் தோட்டங்களின் தேயிலை கொழுத்துகளை வெளி தரப்பினருக்கு விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், செயலிழந்து காணப்படுகின்ற தொழிற்சாலைகள் பழுதடைந்து கிடப்பதையும், இத்தொழிற்சாலைகளில் உள்ள பெறுமதிவாய்ந்த இயந்திரங்கள் அழிவுறும் நிலையில் இருப்பதையும் அவதானிக்க முடிந்தது. குமாரவத்தை மற்றும் தியலும தோட்டங்களில் தற்போதுள்ள இரண்டு இறப்பர் தொழிற்சாலைகளும் செயலிழந்துள்ளன.

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி

கணக்காய்வு அவதானிப்புக்கள்
• திட்டமிடப்பட்ட பணிகள் • செயற்திட்டம் நடைமுறைப்படுத்தல், முன்னேற்றம் மற்றும் பின்தொடரல் • எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்படாமை • வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்படாமை

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி

மீன் நுகர்வினை அதிகரித்தல் மூலம் உயர் போசணை மட்டத்துடனான மக்களை, உயர் அந்நியச் செலவாணியை ஈட்டுதல் மற்றும் கடற்றொழில் துறையில் வேலைவாய்ப்புக்களை அதிகரித்தலும் மீன்பிடிக்கும் மக்களுக்கு உயர் வாழ்க்கைத் தரத்தினை வழங்குவதும் இந்த துறையிலிருந்து எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகாக காணப்பட்டன. அந்தப் பெறுபேற்றினை அடைந்து கொள்வதற்காக கடற்றொழில் அமைச்சு, அலங்கார மீன்கள் மற்றும் நன்னீர் மீன்வளர்ப்பு மற்றும் இறால் வளர்ப்பு மீன்பிடி துறைமுகங்களை அபிவிருத்தி , பலநாள் மீன்பிடி செயற்பாடுகள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு, கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் திணைக்களம் மற்றும் 6 நியதிச்சட்ட சபைகள் / நிறுவனங்களினால் பின்வரும் பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டியதாக உள்ளன.

- கரையோரப் பிரதேசங்களில் மீன்களின் தொகை அளவினைக் கூட்டுவதற்காக விஞ்ஞான ரீதியிலான முறையொன்றை அறிமுகப்படுத்துதல்.
- கடற்றொழில் துறைமுகங்களை நவீனமயப்படுத்தல் மற்றும் தேவைப்பாட்டுக்கமைய புதிய துறைமுகங்களை நிர்மாணித்தல்.
- சர்வதேச கடல் பிரதேசங்களில் கடற்றொழிலை விரிவாக்குவதற்காக உள்நாட்டுக் கம்பனிகளுக்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- ரின்மீன் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காகத் தனியார் கம்பனிகள் மற்றும் முதலீட்டாளர்களை ஊக்குவித்தல்.
- உற்பத்தியாளருக்கும் மற்றும் பாவனையாளருக்கும் நியாயம் ஏற்படும் விதத்தில் மீன் உற்பத்தி மற்றும் சந்தை நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்து விரிவாக்குதல்.
- வடக்கு மற்றும் கிழக்குக் கடலில் அத்துமீரி மீன்பிடித்தலை இல்லாதொழித்தலும், கடற்படை மற்றும் கரையோரப் பாதுகாப்பு பிரிவுகளை வலுப்படுத்துவதற்காக, இந்தியாவுடனான முரண்பாடுகளை தீர்த்துவைத்தல்.
- மீனவ சமூகத்திற்குப் பயனுறுதியான வங்கி மற்றும் காப்புறுதி முறையொன்றை அறிமுகப்படுத்துதல்.
- சமுத்திரப் பல்கலைக்கழகத்தை உபயோகப்படுத்தி இளைஞர் யுவதிகளுக்காக கடற்றொழில் செயற்பாடுகள் தொடர்பான தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவப் பயிற்சி வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துதல்.
- மீனவ சமூகத்திற்கான நலன்புரி செயற்பாடுகளை விரிவுபடுத்துதல்
- ஏற்றுமதி சந்தையை நோக்கமாகக் கொண்ட அலங்கார மீன்கள் கைத்தொழிலை ஏற்படுத்துவதற்காகத் தேவையான வசதிகளை வழங்குதல்
- குளங்கள், களப்பு மற்றும் கரை நிலைங்களை அண்டி நன்னீர் மீன் வளர்ப்பு செய்கையை பிரபல்யப்படுத்துவதற்காகத் தேவையான வழிமுறைகளைத் தயார் செய்தல்.

- பெரிய அளவிலான படகுகளின் வழிநடாத்தல் செயற்பாடுகளை வினைத்திறமையாக மேற்கொள்வதற்காக கடற்றொழில் துறைமுகத்தை விருத்தி செய்தல்.
- பலநாள் கடற்றொழில் படகுகளுக்காகக் கடல் நீரை உபயோகித்து குளிரூட்டித் தொகுதியினை விருத்தி செய்தல் மற்றும் சூரிய வலுசக்தியை பாவிப்பதற்கு ஊக்குவித்தல்.
- நவீன தொடர்பாடல் வசதிகள், குளிரூட்டிகள், எரிபொருள் வழங்குதல் மற்றும் துப்பரவேற்பாட்டு வசதிகளுடனான சகல கடற்றொழில் துறைமுகங்கள், நங்கூர நிலையங்களை விருத்தி செய்தல்.
- கடல் மற்றும் நன்னீர் மீன்களைப் பெருக்குவதற்காக கடற்றொழில் சமூக சங்கங்கள் மற்றும் தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையோடு கூட்டிணைந்து நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்தல்.
- சூழல்நேயமான நவீன அதிதொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் மீன் அறுவடையை விருத்தி செய்வதற்காக நடவடிக்கையை எடுத்தல்.
- கடற்றொழிலாளர்களின் மற்றும் அக்கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ளோரின் துறைசார் பயிற்சி மற்றும் அறிவினை விருத்தி செய்தல்.

2021 ஆம் ஆண்டில் மேற்குறிப்பிடப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக கடற்றொழில் அமைச்சு, இராஜாங்க அமைச்சு மற்றும் திணைக்களத்திற்கு மொத்தம் ரூபா 9,214 மில்லியன் நிதி ஏற்பாடு பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை அதில் ரூபா 7,158 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 2,056 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் வரைபட இலக்கம் 25 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.



	கடற்றொழில் அமைச்சு	அலங்கார மீன்கள் மற்றும் நன்னீர் மீன்வளர்ப்பு மற்றும் இறால் வளர்ப்பு மீன்பிடி துறைமுகங்களை அபிவிருத்தி , பலநாள் மீன்பிடி செயற்பாடுகள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு	கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் திணைக்களம்	மொத்தம்
நிதியேற்பாடு ரூபா மில்லியன்	4177	4226	811	9214
செலவினம் ரூபா மில்லியன்	3158	3261	739	7158
சேமிப்பு ரூபா மில்லியன்	1019	965	72	2056

வரைபட இலக்கம் 25 - வழங்கப்பட்ட ஒதுக்கங்களின் அளவு மற்றும் செலவு
மூலாதாரம் - 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள்

கடற்றொழில் அமைச்சு, இராஜாங்க அமைச்சு, திணைக்களம் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களால் மேற்குறித்த செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் கீழே பொழிப்பாக்கி காண்பிக்கப்பட்டுள்ளன.

திட்டமிடப்பட்ட பணிகள்

- கடற்றொழில் அமைச்சின் 2021 ஆம் வருடத்திற்கான மதிப்பீட்டின் மூலம் 09 விசேட முன்னுரிமைப் பணிகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தும் 2021 ஆம் வருடத்திற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு மற்றும் அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் கடற்றொழில் சமூகத்தின் நலன்புரி நடவடிக்கைகளை விரிவுபடுத்தல், மீன்பிடி துறைமுகங்களை நவீனமயப்படுத்தல், மற்றும் தேவைக்கேற்ப மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்கப்படுதல் தவிர்ந்த ஏனைய பணிகளான கடலோரப் பகுதிகளில் மீன் பெருக்கத்தை அதிகரிப்பதற்காக விஞ்ஞான ரீதியிலான முறைமையொன்றை அறிமுகப்படுத்தல், சர்வதேச கடற்பகுதியில் மீன் பிடித் தொழிலை விரிவுபடுத்துவதற்காக உள்ளூர் கம்பனிகளுக்கு சந்தர்ப்பங்களை வழங்குதல், சர்வதேச கடல் பிரதேசங்களில் கடற்றொழிலை விரிவாக்குவதற்காக உள்நாட்டுக் கம்பனிகளுக்குச் சந்தர்ப்பம் வழங்குதல், ரின்மீன் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காகத் தனியார்

கம்பனிகள் மற்றும் முதலீட்டாளர்களை ஊக்குவித்தல், உற்பத்தியாளருக்கும் மற்றும் பாவனையாளருக்கும் நியாயம் ஏற்படும் விதத்தில் மீன் உற்பத்தி மற்றும் சந்தை நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்து விரிவாக்குதல், வடக்கு மற்றும் கிழக்குக் கடலில் அத்துமீரி மீன்பிடித்தலை இல்லாதொழித்தலும், கடற்படை மற்றும் கரையோரப் பாதுகாப்பு பிரிவுகளை வலுப்படுத்துவதற்காக, இந்தியாவுடனான முரண்பாடுகளை தீர்த்து வைத்தல், மீனவ சமூகத்திற்குப் பயனுறுதியான வங்கி மற்றும் காப்புறுதி முறையொன்றை அறிமுகப்படுத்துதல் மற்றும் சமுத்திரப் பல்கலைக்கழகத்தை உபயோகப்படுத்தி இளைஞர் யுவதிகளுக்காக கடற்றொழில் செயற்பாடுகள் தொடர்பான தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவப் பயிற்சி வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துதல் என்பவற்றைக் கருத்திற் கொண்டு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. வடக்கு மற்றும் கிழக்குக் கடலில் அத்துமீறி மீன்பிடித்தலை இல்லாதொழித்தலும், கடற்படை மற்றும் கரையோரப் பாதுகாப்பு பிரிவுகளை வலுப்படுத்துவதற்காக, இந்தியாவுடனான முரண்பாடுகளை தீர்த்துவைத்தல் பணிக்காக இலங்கை மற்றும் இந்தியாவுடனான கூட்டுச் செயற் குழுவொன்று அமைக்கப்பட்டு சில தீர்மானங்கள் மாத்திரமே நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

- அலங்கார மீன்கள் மற்றும் நன்னீர் மீன்வளர்ப்பு மற்றும் இறால் வளர்ப்பு மீன்பிடி துறைமுகங்களை அபிவிருத்தி , பலநாள் மீன்பிடி செயற்பாடுகள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சின் 2021 ஆம் வருடத்திற்கான மதிப்பீட்டின் மூலம் 08 விசேட முன்னுரிமைப் பணிகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தும் 2021 ஆம் வருடத்திற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு மற்றும் அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் குளங்கள், களப்பு மற்றும் கரை நிலைங்களை அண்டி நன்னீர் மீன் வளர்ப்பு செய்கையை பிரபல்யப்படுத்துவதற்காகத் தேவையான வழிமுறைகளைத் தயார் செய்தல் மற்றும் பெரிய அளவிலான படகுகளின் வழிநடாத்தல் செயற்பாடுகளை வினைத்திறமையாக மேற்கொள்வதற்காக கடற்றொழில் துறைமுகத்தை விருத்தி செய்தல் தவிர்ந்த ஏனைய பணிகளான ஏற்றுமதி சந்தையை நோக்கமாகக் கொண்ட அலங்கார மீன்கள் கைத்தொழிலை ஏற்படுத்துவதற்காகத் தேவையான வசதிகளை வழங்குதல், குளங்கள், களப்பு மற்றும் கரை நிலைங்களை அண்டி நன்னீர் மீன் வளர்ப்பு செய்கையை பிரபல்யப்படுத்துவதற்காகத் தேவையான வழிமுறைகளைத் தயார் செய்தல், பெரிய அளவிலான படகுகளின் வழிநடாத்தல் செயற்பாடுகளை வினைத்திறமையாக மேற்கொள்வதற்காக கடற்றொழில் துறைமுகத்தை விருத்தி செய்தல், பலநாள் கடற்றொழில் படகுகளுக்காகக் கடல் நீரை உபயோகித்து குளிரூட்டித் தொகுதியினை விருத்தி செய்தல் மற்றும் சூரிய வலுசக்தியை பாவிப்பதற்கு ஊக்குவித்தல், நவீன தொடர்பாடல் வசதிகள், குளிரூட்டிகள், எரிபொருள் வழங்குதல் மற்றும் துப்பரவேற்பாட்டு வசதிகளுடனான சகல கடற்றொழில் துறைமுகங்கள், நங்கூர நிலையங்களை விருத்தி செய்தல், கடல் மற்றும் நன்னீர் மீன்களைப் பெருக்குவதற்காக கடற்றொழில் சமூக சங்கங்கள் மற்றும் தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையோடு கூட்டிணைந்து

நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்தல், சூழல்நேயமான நவீன அதிதொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் மீன் அறுவடையை விருத்தி செய்வதற்காக நடவடிக்கையை எடுத்தல், கடற்றொழிலாளர்களையும் அக்கைத்தொழில்துறையில் ஈடுபட்டுள்ளோரின் துறைசார் பயிற்சி மற்றும் அறிவினை விருத்தி செய்தல போன்ற பணிகளைக் கருத்திற் கொண்டு திட்டம் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவில்லை.

செயற்திட்டம் நடைமுறைப்படுத்தல், முன்னேற்றம் மற்றும் பின்தொடரல்

- கடற்றொழில் அமைச்சிற்கு சொந்தமான சொத்தொன்றல்லாத மற்றும் 2021 ஆம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத ஹிக்கடுவ மீனவர் குடியிருப்புத் தொகுதியை மறுசீரமைத்தலுக்காக கடற்றொழில் அமைச்சின் களப்புகள் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி செய்வதற்கான நிதி ஏற்பாடுகளில் ரூபா 39.012 மில்லியன் செலவிடப்பட்டிருந்தமையால் களப்புகள் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி செய்தல் நோக்கம் நிறைவேற்றப்படவில்லை. 2021 திசெம்பர் 31 வரை அக்குடியிருப்பத் தொகுதி மறுசீரமைத்தலின் நிதி முன்னேற்றம் 22 சதவீதமாக மட்டுமே காணப்பட்டதுடன் பௌதீக முன்னேற்றம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.
- மூலதன மாற்றங்களின் கீழ் புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் செலவு விடயத்தின் மூலம் நாரா நிறுவனத்திற்கு ரூபா 10.13 மில்லியன் செலவிடப்பட்டிருந்தும் புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் மற்றும் மீன் உற்பத்திக்காகச் செலவிடப்படுகின்ற பயண நேரத்தை குறைப்பதற்கும் அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்ப முறைமைப்பாவனை தொடர்பான பின்தொடரலொன்று கடற்றொழில் அமைச்சினால் மேற்கொள்ளப்படவில்லை.

- 2021 ஆம் வருடத்தில் அபிவிருத்திச் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நாரா நிறுவனத்திற்கு கடற்றொழில் அமைச்சினால் ரூபா 20.28 மில்லியன் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 12.04 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதற்கான செலவு விபரம் சமர்ப்பிக்கப்படாததுடன் மற்றும் செயற்திறன் தொடர்பான பின்தொடரலொன்று அல்லது மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படாது, செயற்திட்டத்தின் தேவைப்பாடொன்றும் இனங்காணப்படாது மீண்டும் ரூபா 4.9 மில்லியன் நாரா நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

- 2021 ஆம் வருடத்தில் அபிவிருத்தி உதவி மற்றும் புதிய தொழில்நுட்ப அறிமுகம் செலவு விடயத்தின் மூலம் தேசிய நீர்வாழ் உயிரினங்கள் அபிவிருத்தி அதிகாரசபையால் ரூபா 8.51 மில்லியன் செலவிடப்பட்டு 110 டெப் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவை பகிர்ந்தளிக்கப்பட்ட முறை அல்லது அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பணிகள் நிறைவேற்றப்பட்டமை தொடர்பான பின்தொடரலொன்று அல்லது மதிப்பீடொன்று கடற்றொழில் அமைச்சினால் மேற்கொள்ளப்படவில்லை.
- 10 களப்புகள் மற்றும் 100 வாவிகள் அபிவிருத்தி செய்தல் செயற்திட்டத்திற்காக 2018 ஆம் வருடத்திற்காக அமைச்சிற்கு

ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1000 மில்லியன் தொகையில் 03 இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 180 மில்லியன் தேசிய நீர்வாழ் உயிரினங்கள் அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. குறைந்த பட்ச விலைமனு சமர்பிக்கப்பட்ட மனுதாரரின் மனு நியாயமான காரணமின்றி நிராகரிக்கப்பட்டு அதற்காக வெளியார் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு விலைமனு வழங்கப்பட்டு 2018 யூலை 17 ஆந் திகதி ரூபா 42.57 மில்லியன் இயக்க முற்பணத் தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. அவ்வியக்க முற்பணத்திற்காக வழங்கப்பட்டிருந்த முற்பணப் பாதுகாப்பு போலியாகத் தயாரிக்கப்பட்டிருந்தமை 6 மாதங்களுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டு உரிய முற்பணத் தொகை மீண்டும் அறவிடப்பட்டிருந்த போதிலும் போலி முற்பணப் பாதுகாப்பை சமர்ப்பித்து அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியமைக்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையொன்றும் எடுக்கப்படாததுடன் நிதிப்பிரமாணம் 705 இன் பிரகாரம் வழங்குநர் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

- மேற்படி உபகரணத்தின் கட்டமைப்புத் திட்டம், பயன்படுத்தப்படுகின்ற மூலப் பொருட்கள், உதிரிப்பாகங்கள் மற்றும் என்ஜின் போன்ற விடயங்கள் பரிசோதிக்கப்படுவதற்கு அமைச்சின் மற்றும் தேசிய நீர்வாழ் உயிரினங்கள் அபிவிருத்தி அதிகார சபையின் தலைவரும் உட்பட 4 அதிகாரிகள் அமெரிக்க ஐக்கிய இராச்சியத்திற்கான வெளிநாட்டுப் பயணத்தில் பங்குபற்றியமைக்காக ரூபா 435,499 செலுத்தப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட இயந்திரம் கிடைக்கப் பெறாததால் அமைச்சினால் இலக்கிடப்பட்ட பணிகள் 04 வருடங்கள் கடந்த பின்னரும் நிறைவேற்றப்படுவதற்கு முடியாதிருந்தது.

- தொடந்துவ மீன்பிடித் துறைமுக அபிவிருத்திக்கு 2021 ஆம் வருடத்திற்காக ரூபா 100 மில்லியன் ஆன ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 25 மில்லியன் ஆன தொகையில் இலக்கிடப்பட்ட 60 மீற்றருக்குக் குறைவாக கரைச் சுவரை (Quay Wall) நிர்மாணிப்பதற்கான பணிக்காக ரூபா 7.63 மில்லியன் மட்டுமே செலவிடப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 வரை குறிப்பிட்ட பணியின் பௌதீக முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது.

- 8 இறங்குதுறைகள் மற்றும் நங்கூரமிடல் தளங்களின் அபிவிருத்திக்காக ரூபா 18 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ஆரம்பச் செலவிற்காக ரூபா 1.9 மில்லியன் மட்டுமே செலவிடப்பட்டதால் நிதி முன்னேற்றம் 11 சதவீதம் மட்டுமே காணப்பட்டதுடன் பௌதீக முன்னேற்றம் வெளிப்படுத்தப்படவில்லை.

- தன்னிறைவு மீன்பிடிப் பொருளாதாரமொன்றை உருவாக்குவதற்கு தொடர்புடைய சட்டங்கள், விதிகள் மற்றும் கட்டளைகளுக்கு இணங்க தேசிய வரவு செலவுத் திட்டம் மற்றும் அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தின்கீழ் மீன்பிடி இராஜாங்க அமைச்சின் கீழ் காணப்படுகின்ற சட்டரீதியான நிறுவனங்களில் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், பின் தொடர்தல்,

மற்றும் மதிப்பீடு செய்தல் இராஜாங்க அமைச்சின் பணிகள் மற்றும் செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் தேசிய நீர்வாழ் உயிரினங்கள் அபிவிருத்தி அதிகார சபை, தேசிய நீர் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனம், இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள், கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் போன்ற சட்டரீதியான நிறுவனங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 2,441.45 மில்லியன் ஆன தொகையில் ரூபா 1,742.97 மில்லியன் ஆன தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும் இராஜாங்க அமைச்சினால் தன்னிறைவு மீன்பிடிப் பொருளாதாரமொன்றை உருவாக்குவதற்குப் பங்களிக்கும் சட்டரீதியான நிறுவனங்களின் பணிகளின் வெளீயீட்டு அளவினைக் கண்டறிதல், பின்தொடரல் மற்றும் மதிப்பீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்படாமை

ஹம்பாந்தோட்டை மீன்பிடித் துறைமுக அபிவிருத்திக்கு 2021 ஆம் வருடத்தில் ரூபா 20 மில்லியன் ஆன நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 9 மில்லியனுக்கு உரிய பணிகள் மட்டுமே திட்டமிடப்பட்டு ரூபா 1.05 மில்லியன் செலவிடப்பட்டமையால் எதிர்பார்த்த நோக்கம் நிறைவேற்றப்படவில்லை.

புதிய தொழில்நுட்ப கண்டுபிடிப்பின் கீழ் மீன்களின் பெருக்கத்தை அதிகரிக்கும் நோக்கத்தில் கடல் சூழலை மேம்படுத்தலுக்காக கைவிடப்பட்டிருந்த மீன்பிடிப் படகுகள், பேருந்துகள், புகையிரத வண்டிகளைப் பயன்படுத்தி மூழ்கடிக்கும் செயற்திட்டம் திருகோணமலை, யாழ்ப்பாணம். காலி, மாத்தறை, போன்ற மாவட்டங்களில் 2020 யூலை மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2021 திசெம்பர் முடிவடைந்திருந்ததுடன் அதற்காக முன்னைய வருடத்தில் மற்றும் மீளாய்வாண்டிலும் மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தினால் மீன்பிடித் துறைமுக கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 18.27 மில்லியனும், இலங்கை போக்குவரத்துச் சபைக்கு ரூபா 10.95 மில்லியனும் செலுத்தப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான பின்தொடரல் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டதா என்பது வெளிப்படுத்தப்படவில்லை.

வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்படாமை

2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தினால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

கைத்தொழில் துறை

கணக்காய்வு அவதானிப்புக்கள்

- கைத்தொழில் அமைச்சின் கீழ் காணப்படும் கைத்தொழில் பேட்டைகள்
- ரோபோ தொழில்நுட்பத்திற்கான சிறந்த நிலையச் செயற்திட்டம் (CERA)
- இலங்கை கனியமணல் கம்பனி
- பீ.சீ.சீ. லங்கா கம்பனி
- பரந்தன் கெமிகல் கம்பனி
- இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம
- இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்
- தேசிய அருங்கலை பேரவை
- இலங்கை கைப்பணிச் சபை
- நெசவுக் கைத்தொழில் திணைக்களம்

கைத்தொழில் துறை

கைத்தொழில் பல்வகைப்படுத்தலின் ஊடாக உள்நாட்டு, பிராந்திய மற்றும் சர்வதேச விநியோக வலையமைப்புடன் இணைந்து உளகலாவிய போட்டிச் சந்தையில் ஒப்பீட்டளவிலான இலாபத்தை அடைந்துகொள்ளும் வகையில் உள்நாட்டு கைதொழில் துறையினை நவீன உபாயங்களினூடாக வலுப்படுத்தல் மற்றும் ஊக்குவித்தல் இத் துறை எதிர்பார்க்கும் விளைவாகும். இவ் விளைவினை அடைந்துகொள்வதற்காக கைத்தொழில் அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் மூலம் பின்வரும் பணிப் பொறுப்புக்கள் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

- கைத்தொழிலாளர்கள் முகங்கொடுக்கும் அனைத்துப் பிரச்சினைகளையும் குறித்த நிறுவனங்களுடன் இணைந்து தீர்த்து வைக்கும் ஒரு திட்டத்தினை அமுல்படுத்தல்.
- ஏற்றுமதி இறக்குமதி செயற்பாட்டினை தடையின்றியும் குறைந்த கால இடைவெளியினுள் வினைத்திறனாக மேற்கொள்வதற்காக "தனியான ஒன்றிணைந்த முறைமையொன்றினை" ஏற்படுத்தல்.
- ஏற்றுமதியுடன் தொடர்பான உற்பத்திச் செயற்பாட்டினை வலுப்படுத்துவதற்காக அனைத்து மாகாணங்களும் உள்ளடங்கும் வகையில் கொள்கைத் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை அமைத்தலும் செயற்படுத்தலும்.
- நடைமுறையிலுள்ள கைத்தொழில்களை பொருளாதார ரீதியாக வலுப்படுத்துவதற்கும், முதலீடுகளுக்கான சந்தர்ப்பங்களை விரிவுபடுத்தி புதிய கைத்தொழில் துறைகளை ஆரம்பிப்பதற்கு தேவையான வழிமுறைகளை ஏற்படுத்தலும் அவற்றை செயற்படுத்தலும்.
- வீழ்ச்சியடைந்துள்ள வியாபாரங்கள் மற்றும் கைத்தொழில்களை மீளக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை அறிமுகப்படுத்தல் மற்றும் செயற்படுத்தல்.
- உள்நாட்டு உற்பத்தியாளர்களையும் வர்த்தகர்களையும் பாதுகாப்பதற்கும் வலுப்படுத்துவதற்குமான ஒரு திட்டத்தினை ஏற்படுத்தல்.
- தற்பொழுது முதலீட்டு சபை மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவுடன் இணைந்து ஏராவூர் பிரதேசத்தில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள ஆடைக் கைத்தொழில் பேட்டையினை ஆரம்பிப்பதற்கு தேவையான சகல அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தக் கொடுத்தல்.
- தற்போது பூமிக்கடியில் மற்றும் கடலுக்கடியில் இருப்பதாக கருதப்படும் கனிய வளங்களை அதி நவீன தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி அகழ்வு செய்து நாட்டின் உற்பத்தி செயன்முறையினை வலுப்படுத்துவதற்காக பயன்படுத்தல்.

2021 ஆண்டின் போது மேற்கூறிய பணிப்பொறுப்பை நிறைவேற்றுவதற்காக கைத்தொழில் அமைச்சுக்கு மற்றும் அதன் கீழ் காணப்படும் இரண்டு இராஜாங்க அமைச்சுக்களுக்கு ரூபா 8,539 மில்லியனிற்கான தேறிய ஏற்பாடுகள் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதி வரை அவற்றில் ரூபா 6,124 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி, வருட

இறுதியில் உள்ளவாறு ரூபா 2,415 மில்லியனிற்கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. விபரங்கள் வரைபட இலக்கம் 26 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.



	கைத்தொழில் அமைச்சு	பிரம்பு, பித்தளை, களிமண், தளபாடங்க் மற்றும் கிராமிய கைத்தொழில் இராஜாங்க அமைச்சு	பத்திக், கைத்தறி புடவைகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சு	மொத்தம்
தேறிய நிதியேற்பாடு	4275	3239	1025	8539
செலவினம்	3227	2213	684	6124
சேமிப்பு	1048	1026	341	2415

வரைபட இலக்கம் 26 - வழங்கியருந்த ஏற்பாட்டுத் தொகையும் செலவுகளும்
மூலம் - 2021 ஆண்டின் நிதிக் கூற்று

கைத்தொழில் அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படும் நிறுவனங்களினால் மேற்கூறிய பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கீழ்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

கைத்தொழில் அமைச்சின் கீழ் காணப்படும் கைத்தொழில் பேட்டைகள்

- அமைச்சின் கீழ் காணப்படும் 33 கைத்தொழில் பேட்டைகளில் காணப்படுகின்ற 1001 காணித் துண்டுகளில் 791 காணித் துண்டுகள் பல்வேறு முதலீட்டு அலுவல்களுக்காக கைத்தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், 78 காணித் துண்டுகள் (மத்திய மாகாண நாலந்தா 09 வெற்றுக் காணித் துண்டுகள் மற்றும் வட மாகாணத்தில் 23 துண்டுகள் தவிர) விளைவற்றுக் காணப்பட்டது. மத்திய மாகாண நாலந்தா கைத்தொழில் பேட்டையில் 38 மொத்தக் காணித்துண்டுகளில் 08 அமைச்சின் அங்கீகாரம் இன்றி 2018 ஆண்டு முதல் கைத்தொழில் நடாத்தப்பட்டு வருவதுடன், வட மாகாணத்தில் 31 காணித் துண்டுகளில் 08 மாத்திரம் கைத்தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. அமைச்சினால் 1997 ஆண்டு முதல் கைத்தொழில் பேட்டைகளில் ரூபா 105.878 மில்லியன்

தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 14 நிருவாகக் கட்டிடங்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் மூலதனப்படுத்தியிருக்காததுடன், தென் மாகாணத்தில் படஅத கைத்தொழில் பேட்டையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த நிருவாகக் கட்டிடம் தற்போது பயன்படுத்த முடியாமல் சிதைவடைந்த நிலையில் காணப்பட்டது.

- மினுவங்கொட கைத்தொழில் பேட்டையில் 2 ஏக்கர் காணிப் பகுதியொன்று 2002 ஆண்டின் போது ஜப்பானில் இருந்து கொண்டு வரப்பட்ட வாகனப் பகுதிகள் ஒருங்கிணைக்கும் அலுவல்களில் ஈடுபட்டுள்ள கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் 9 வருடங்களை அண்மித்த காலமாக இங்கு வர்த்தக நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன், குத்தகை உடன்படிக்கை ஒன்று வழங்கியிருக்காமையால் பாரிய குத்தகை தொகையொன்றும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. வெளிக்களப் பரிசோதனையின் போது இந்த இடத்தில் வாகனங்களை ஒருங்கிணைக்கும் அலுவல்கள் நடைபெற்றிருக்காததுடன், சுமார் 3,000 சதுரஅடி கொண்ட 2 கட்டிடங்கள் விளைவற்றுக் காணப்பட்டது.

- மஹர கைத்தொழில் பேட்டையை 49.5 பர்சஸ்களை கொண்ட தரைத்துண்டு 2007 ஆண்டின் போது இரும்பு மற்றும் பலகையிலான வீடுகளுக்கு மற்றும் அலுவலகங்களுக்கு தேவையான தளபாட உற்பத்திக் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், வெளிக்களப் பரிசோதனையின் போது செயற்திட்ட அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வியாபார அலுவல்கள் நடைபெறவில்லை எனவும், 100 ஊழியர்களுக்கு பதிலாக மூவர் மாத்திரம் வியாபார அலுவல்களில் ஈடுபட்டுள்ளனர் எனவும் போதியளவு உற்பத்தியொன்று நடைபெற்றிருக்கவில்லை எனவும், 2007 ஆண்டு முதல் குத்தகை தொகை செலுத்துவது தவிர்ப்புச் செய்யப்பட்டிருந்ததென கண்டறியப்பட்டது.

ரோபோ தொழில்நுட்பத்திற்கான சிறந்த நிலையச் செயற்திட்டம் (CERA)

அமைச்சரவை தீர்மான இலக்கம் **039/723/1424/16** படி இலங்கையின் கைத்தொழில்களை ஊக்குவித்தல், அவற்றை முன்னேற்றல் மற்றும் அபிவிருத்திக்கு உதவும் குறிக்கோளுடன், இந்த செயற்திட்டம் ஆரம்பித்தல் தொடர்பாக இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபைக் கட்டிடம் ஒன்று நவீனமயப்படுத்தி மற்றும் தேவையான இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 120 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தின் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்காமையால் நவீனமயமாக்கப்பட்ட கட்டிடம் மற்றும் கொள்வனவு செய்யப்பட்டிருந்த இயந்திர உபகரணங்கள் 2017 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரையான 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் விளைவற்று துருப்பிடித்து மற்றும் அழிவடைந்து காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக சேர்க்கப்பட்டிருந்த நிறைவேற்று உத்தியோகத்தருக்கு 2017 செப்தம்பர் மாதம் முதல் ஒரு மாதத்திற்கு ரூபா 725,000 தொகை வீதம் 11 மாத காலத்திற்காக சம்பளம் மற்றும் படிகள் சுமார் ரூபா 11 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

இலங்கை கனியமணல் கம்பனி

- மீளாய்வாண்டின் போது இல்மனைட், ஹயிடயி இல்மனைட், ரூடயில் மற்றும் ச(ர்)கோன் பாதீட்டு உற்பத்தியை நெருங்குவதற்கு கனிய மணல் கம்பனிக்கு முடியாதிருந்ததுடன் Low Grade Zircon crude, Final Talien, Hydro sized Fines மற்றும் ஹயிடயில் இல்மனைட்டின் மூலம் வருமானம் ஏதும் கிடைத்திருக்கவில்லை. அதேபோல் மதிப்பீட்டு வருமானத்தை விட Rutile 85 சதவீதத்தினாலும் மற்றும் Zircon 75 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தது. ஹயிடயி இல்மனைட் விற்பனை நடைபெறாமையால் அந்தக் களஞ்சியம் நிரம்பி பாதுகாப்பற்ற முறையில் வெளி இடங்களிலும் குவிக்கப்பட்டிருந்தது. 2021 ஆண்டிற்கான கேள்வியொன்றின் மூலம் இல்மனைட் விற்பனவு நடைபெற்றிருக்காததுடன், 2020 ஒக்தோபர் 28 திகதி 85,000 மெ.தொ. கேள்வியில் மீதியான 79,947 மெ.தொ. மீளாய்வாண்டின் விற்பனை என பதியப்பட்டிருந்தது. விலைகூறல்தாரரிடம் மேற்கொண்டிருந்த உடன்படிக்கையின் 5 ஆவது நிபந்தனையின் படி 130 நாட்களுக்குள் தமது இருப்பை 4 பகுதிகளாக (மெ.தொ. 25,000 , 20,000, 20,000 , 20,000) விடுவித்துக்ககொள்ள வேண்டியிருந்த போதிலும் 2021 ஆகஸ்ட் 15 வரையானதால் மேலதிக 150 நாட்கள் தாமதமாக இருந்தது. அதேபோல், 12,495,000 அ.டொ. இற்கான கேள்வியில் இரண்டாவது மற்றும் மூன்றாவது கொடுப்பனவு தாமதம் அடைந்திருந்த போதிலும், நான்காவது கொடுப்பனவுக்காக மாத்திரம் தாமதக் கட்டணமாக ரூபா 1.108 மில்லியன் தொகை குறிப்பிட்ட கொள்வனவாளரிடம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. கொள்வனவுதாரரினால் இல்மனைட் இறுப்பினை உரிய முறையில் அகற்றியிருக்காமையால் மற்றும் களஞ்சியங்களில் கொள்திறன் மிகைத்திருந்தமையால் 2021 மார்ச் வரை "Block B" இயந்திர அறையின் உற்பத்தி அலுவல்கள் நிறுத்தப்பட்டிருந்தமையால் இயந்திர அறையின் அனைத்து அலுவல்களும் ஸ்தம்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மனிதவளம் உட்பட அனைத்து வளங்களும் விளைவற்றுக் காணப்பட்டன.

- மீளாய்வாண்டின் போது ரூபா 403.42 மில்லியன் பெறுமதியான 4 நிலையான வைப்புக்கள் முதிர்வடைய முன்னர் காசாக்கியமையால் கிடைக்க வேண்டியிருந்த ரூபா 1,476 மில்லியனிற்கான வட்டி வருமானம் ஒன்றினை கம்பனி இழந்துள்ளது. அதேபோல் 2021 சனவரி 01 திகதியிலுள்ளவாறு ரூபா 2,293.5 மில்லியன் பெறுமதியான நிலையான வைப்பு கம்பனியில் காணப்பட்டதுடன், 2021 திசெம்பர் 31 திகதி அளவில் அது ரூபா 1,500 மில்லியன் தொகையும் 2022 ஜுன் அளவில் ரூபா 1,300 மில்லியனாக இருந்தது. இவற்றில் ரூபா 500 மில்லியன் இறக்குமதிக்காக பிணையாக வைத்திருந்தமையால் ரூபா 800 மில்லியனாக இருந்தது. மீளாய்வாண்டின் போது கனிய மணல் விற்பனை நடைபெற்றிருக்காமையால் கம்பனியை நடாத்திச் செல்வதற்கு தேவையான செலவுகளை தீர்த்துக்கொள்வதற்காக நிலையான வைப்புக்களை காசாக்கியிருந்தது.

- மிக செழிப்புமிக்க, பார கனிய இணைவு கோகிலாய் கடலேரியை அண்டி காணப்படுவதால் ஆய்வு அறிக்கையின் படி வெளிப்படுத்தப்பட்ட பின்னர் இங்கு புதிய

இயந்திர அறையொன்று நிர்மாணிப்பதற்காக திட்டமிடப்பட்டு ரூபா 2.25 மில்லியன் தொகைக்கு 17.69 ஹெக்டயார் காணியொன்று 2013 ஆண்டின் போது இந்தப் பகுதியில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. காணியை உரிய முறையில் உரித்தாக்கி புதிய இயந்திர அறையொன்று நிர்மாணிப்பதற்கு முன்னர் 2013 ஆகஸ்ட் மாதம் அதற்குத் தேவையான ரூபா 39.34 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் கொள்வனவு செய்து அந்த சொத்துக்கள் அனைத்தும் புல்மோட்டை இயந்திர அறையில் வேறு இடங்களில் நிர்மாணிக்கப்பட்டு விளைவற்றுக் காணப்பட்டதுடன், சில இயந்திரங்கள் களஞ்சியத்தில் விளைவற்று குவிக்கப்பட்டு காணப்பட்டது. Block A பழைய இயந்திர அறையில் பொருத்தப்பட்டிருந்த கோகிலாய் செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த 24 Spiral 2013 ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டதுடன், Block A புதிய இயந்திர அறையை செயற்படுத்தும் போது கழற்றப்பட்டு முற்றவெளியில் பாதுகாப்பற்ற முறையில் காணப்பட்டது. இந்த செயற்திட்டத்திற்காக அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதில் வசதியீனங்கள் காணப்பட்ட போதும் மற்றும் செயற்திட்டத்தை ஆரம்பிக்கும் முன்னர் 2015 ஜூன் 25 திகதி 117 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு பின்னர் புல்மோட்டை இயந்திர அறையில் பல்வேறு இடங்களுக்கு அவர்கள் இணைக்கப்பட்டிருந்தனர். இதன் காரணமாக உற்பத்திக் கிரயம் அதிகரித்திருந்தது.

- கோகிலாயில் புதிய இயந்திர அறை நிர்மாணிப்பதற்காக செயல் நடவடிக்கைத் திட்டத்தில் ரூபா 1,000 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 2022 ஜூன் இறுதியளவில் செயற்திட்ட அறிக்கை (Project Report) தயாரித்தலை பூர்த்தி செய்து அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை. 2022 சனவரி 01 திகதி கோகிலாய் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அங்கு மண் நிறப்பும் அலுவல்கள் நடைபெற்றுக் காணப்பட்டதுடன் செயற்திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்காத போதிலும் 2021 திசெம்பர் 31 திகதி உள்ளவாறான நிதிக் கூற்றுக்களின் படி செயற்திட்டத்திற்காக ரூபா 17.8 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

பீ.சீ.சீ. லங்கா கம்பனி

- பீ.சீ.சீ கம்பனிக்கு உரித்தான 12 ஏக்கர் 03 ரூட் 8.77 பர்சஸ் அளவான தரைப் பகுதி 2015 திசெம்பர் 17 திகதிய 15/1874/702/010-VII இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் மற்றும் 2016 ஏப்ரல் 20 திகதிய 16/0597/731/009-I இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் 6 ஏக்கர் தரைப்பகுதியொன்று கொழும்பு நீதிமன்ற இல்லம் நிர்மாணிப்பதற்காக நீதி அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அரச காணிகளை தனதாக்கும் நடைமுறையின் படி காணியை உரித்தாக்கல் மற்றும் நட்டஈடு பெற்றுக்கொள்ளல் நடவடிக்கைகள் இதுவரை பூர்த்தியடைந்திருக்கவில்லை.

- 2013 ஆண்டின் போது ரூபா 8,195 மில்லியனிற்கு பெறுமதி மதிப்பீடு செய்திருந்த நிலப்பகுதியில் 118,345 சதுரஅடிகளைக் கொண்ட 32 களஞ்சியங்கள் மற்றும் 3,500 மெ.தொ. எண்ணெய் கொள்திறனை கொண்ட 3

எண்ணெய் தாங்கிகள் காணப்பட்டன. இந்தக் களஞ்சியம் ஒரு சதுரஅடி ரூபா 55 இற்கும் ரூபா 70 இற்கும் இடைப்பட்ட தொகைக்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன், 5,140 சதுரஅடியைக் கொண்ட General Stores – First Floor ஒரு சதுரஅடி ரூபா 30 தொகைக்கு வழங்கப்பட்டிருந்தது. உயர்ந்த வாணிபப் பெறுமதி ஒன்றினை கொண்டிருந்த கம்பனியின் வளவில் காணப்பட்ட இந்தக் களஞ்சியங்கள் முறையான திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாமையால் இவ்வாறு குறைந்த விலைக்கு வழங்குவதற்கு நேரிட்டிருந்தது.

பரந்தன் கெமிகல் கம்பனி

- 1986 ஆண்டு முதல் பரந்தன் தொழிற்சாலையில் குலோரின் உற்பத்தி நிறுத்தப்பட்டமையால் நாட்டிற்கு தேவையான கோஸ்டிக் சோடா மற்றும் குலோரின் முழுமையாக இறக்குமதி மூலம் நிறைவேற்றிக்கொள்ளப்பட்டிருந்தது. பரந்தனில் அமைந்துள்ள 227 ஏக்கர் நிலப் பகுதியில் குளோரின் உற்பத்தி அலுவல்களுக்காக இயந்திர அறையொன்று நிறுவுவதற்காக 2016 ஆண்டு திட்டமிடப்பட்டிருந்ததுடன், 2020 ஆண்டின் போது சாத்தியக்கூறு ஆய்வொன்று மற்றும் சுற்றாடல் தாக்க மதிப்பீடொன்று மேற்கொண்டு அதற்காக முறையே ரூபா 7.6 மில்லியன் மற்றும் ரூபா 2.1 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், இயந்திர அறை நிர்மாணித்தல் அலுவல்கள் இதுவரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- கோஸ்டிக் சோடா லயி இற்காக காணப்படும் கேள்வியை கவனத்தில் எடுத்து, கோஸ்டிக் பெறுமதியை அதிகரித்தல் மற்றும் பரந்தன் கெமிகல் நிறுவனத்திற்கு தற்போது பெற்றுக்கொள்ளக் முடியாதிருந்த சந்தையை நெருங்கும் குறிக்கோளுடன் கோஸ்டிக் சோடா திரவம் தயாரிக்கும் செயற்திட்டம் 2015 திசெம்பர் 30 திகதி கழுத்துறை நாகொடை கைத்தொழில் பேட்டையில் ஆரம்பிக்கப்பட்டு 2016 ஏப்ரல் 25 திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், இந்த கோஸ்டிக் சோடா திரவம் தயாரிக்கும் இயந்திரம் இரும்பினால் செய்யப்பட்டிருந்தமையால் இரும்பு மற்றும் கோஸ்டிக் சோடா திரவம் தாக்கத்தை ஏற்படுத்தி இரும்பு கோஸ்டிக் சோடா லயி உடன் கலந்து அவற்றை விற்பனை செய்ய முடியாமல் இருந்ததால் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. இந்த கோஸ்டிக் சோடா திரவ இயந்திரம் தயாரிப்பதற்கு முன்னர் கோஸ்டிக் சோடா துணுக்குகளுடன் இரும்பு கலக்கின்றன என ஆய்வொன்று மேற்கொள்ளாமல் செயற்பட்டிருந்தமையால் ரூபா 2.1 மில்லியனிற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம்

1955 இன் 19 ஆம் இலக்க அரச அனுசரணை கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டிருந்த லங்கா செரமிக் நிறுவனம் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் நியதிச் சட்டத்தின் கீழ் மட்பாண்டக் கூட்டுத்தாபனம் என்ற பெயரில் நிறுவப்பட்டிருந்தது. 1990 தனியார்மயப்படுத்தும் வேலைத் திட்டத்தின் கீழ் ஓடுகள் செங்கற்கள் அலகு இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம் என்ற பெயரில் தற்போது நடாத்தப்பட்டு வருகின்றன. 2012 ஆண்டில் செயற்படுத்தப்பட்ட சுயேட்சையாக ஓய்வு பெறும் திட்டத்தின் மூலம் நிரந்தர பதவியணி 32 வரை குறைக்கப்பட்டிருந்தன. கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 09 தொழிற்சாலைகளில் 2022 ஆண்டளவில் ஒரு

தொழிற்சாலை மாத்திரம் உற்பத்தி செய்து வருவதுடன், மீதியான அனைத்து தொழிற்சாலைகளும் மூடப்பட்டுள்ளன. இலங்கையில் களி மற்றும் களி சாரந்த உற்பத்திகள் என்ற பெயரில் பரந்த குறிக்கோள் மற்றும் நோக்கத்தை முதலாகக் கொண்டு கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டிருந்த போதிலும் தட்டை ஓடு மற்றும் முகட்டு ஓடு உற்பத்தியில் ஈடுபட்டிருப்பதைத் தவிர போட்டி நிலைமைக்கு முகங்கொடுத்தல் மற்றும் காலத்தின் தேவைப்பாட்டின் படி உற்பத்திகளின் தன்மைகளை மாற்றுவதற்கு இலக்காகிய சந்தையை குறிக்கோளாக கொண்டு, உற்பத்தி பல்வகைப்படுத்தலுக்காக கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

- கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 09 தொழிற்சாலை வளவுகளில் 07 காணிகளின் உரிமையை கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்க முடியாமல் இருந்த காரணத்தினால் தொழிற்சாலைகளை குத்தகைக்கு கொடுப்பது தொடர்பாக 2010 ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டிருந்த அமைச்சரவை தீர்மானத்தை செயற்படுத்துவதற்கு முடியாதிருந்ததுடன், எதுவித உற்பத்தியும் மேற்கொள்ளப்படாத 06 தொழிற்சாலைகளுக்காக வருடாந்தம் உற்பத்திக் கிரயம் மற்றும் நிருவாகச் செலவாக சுமார் ரூபா 8 மில்லியன் தொகை செலவிட நேரிட்டிருந்தது. ஒட்டுசுட்டான் தொழில்சாலை கூட்டுத்தாபன நிறுவாகத்தின் கீழ் மீண்டும் ஆரம்பிப்பதற்காக 2020 ஜுலை 09 திகதி அமப/20/0989/224/002-1 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2020 ஆண்டில் ரூபா 3 மில்லியன் தொகை 2021 ஆண்டில் ரூபா 1 மில்லியன் தொகை திருத்த வேலைகள் மற்றும் ஏனைய செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2022 ஜனவரி வரை தொழில்சாலையின் உற்பத்தி அலுவல்கள் ஆரம்பிக்க முடியாமல் இருந்தது.
- உற்பத்தி அலுவல்கள் நடைபெறுகின்ற எரகம தொழிற்சாலைக்கு சொந்தமான 231 ஏக்கர் தரைப் பகுதியில் சுமார் 50 ஏக்கர்கள் காணி வெளித்தரப்பினர் ஒருவருக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், தொழிற்சாலை வளவு மற்றும் செங்கல் வெட்டும் பகுதி தவிர மீதியான காணியை ஆக்கபூர்வமான முதலீட்டொன்றில் ஈடுபடுத்தியிருக்கவில்லை. தற்போது வயல் காணிகளில் சுமார் 3 ½ ஏக்கர் தனியார் ஒருவரினால் தனதாக்கியுள்ளது. சுமார் 94 ஏக்கர்களை கொண்ட மஹியங்கனை காணியில் சுமார் 125 குடும்பங்கள் 2015 ஆண்டிற்கு முன்னர் இருந்து அங்கீகாரம் இன்றி குடியிருந்து வருவதனால் தொழிற்சாலைப் பகுதியை தவிர மீதியான தரைப்பகுதி ஆக்கபூர்வமான முதலீடு ஒன்றிற்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்

1957 இன் 49 ஆம் இலக்க கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டிருந்த இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் தூரநோக்கு இலங்கையில் சீமெந்துக் கைத்தொழிலின் முன்னேற்றத்துக்காக வழிகாட்டல் மற்றும் தலைமைத்துவம் வழங்குதல் ஆக காணப்பட்டதுடன், பணிகள் என நாட்டின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக பண்புசார் சீமெந்து மற்றும் ஏனைய சீமெந்து சார்ந்த உற்பத்திகள் போதியளவினதாக வழங்கப்படுத்தலை உறுதிப்படுத்தலாகும். எனினும், தற்போது கூட்டுத்தாபனத்தினால்

சீமெந்து அல்லது சீமெந்து சார்ந்த உற்பத்திகள் ஏதும் மேற்கொள்ளப்பட்டு வருவதில்லை. கூட்டுத்தாபனத்தின் வருமான வழி ஆக கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 5,164 ஏக்கர்களைக் கொண்ட அறுவக்காலு சுண்ணாம்புக்கல் படிவுகளை குத்தகைக்கு கொடுத்தல், பாலாவியில் அமைந்துள்ள 12 ஏக்கர் 03 ரூட் 30 பர்சஸிற்கான காணியை குத்தகைக்கு கொடுத்தல் மற்றும் கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள 89.07 பர்சஸ் காணியில் வாகனத் தரிப்பிடம் நடாத்திச் செல்வதன் மூலம் வருமானம் உழைத்தல் மாத்திரமே ஆகும்.

- கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காங்கேசன்துறையில் அமைந்துள்ள இரண்டு எண்ணெய் தாங்கிகள் மற்றும் குழாய் முறைமையினை இலங்கை பெற்றோலிய மொத்தக் களஞ்சிய முனையம் அரச கம்பனிக்கு எழுத்துமூல உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளாமல் வழங்கியிருந்தமையால் 2010 முதல் 2021 திசெம்பர் 31 வரை இதற்கான குத்தகை வருமானமாகிய ரூபா 185 மில்லியன் தொகையினை அறவீடு செய்வதற்காக இதுவரை கூட்டுத்தாபனத்திற்கு முடியாமல் இருந்தது.

- கூட்டுத்தாபன மற்றும் புத்தளம் சீமெந்துக் கம்பனி லிமிடட் எனப்படும். தற்போதைய சியம்சிட்டி சீமெந்து லங்கா லிமிடட் இடையே 1996 ஆகஸ்ட் 23 திகதி கையொப்பமிடப்பட்ட 495 ஆம் இலக்க உடன்படிக்கையின் மூலம் அருவக்காலு சுண்ணாம்புக்கற்களுடனான காணி வருடாந்த நிலையான குத்தகையொன்றின் அடிப்படை மீது 50 வருடங்களுக்கு குத்தகைக்கு கொடுப்பதற்கு உடன்படிக்கை மேற்கொண்டிருந்த போதிலும் 2019 நவம்பர் 07 திகதி கையொப்பமிடப்பட்டிருந்த 268 ஆம் இலக்க மேலதிக குத்தகை உடன்படிக்கையின் மூலம் பண்ணிரண்டு சதவீத குத்தகை அதிகரிப்புச் சதவீதத்தின் மீது 2019 ஆண்டு முதல் குத்தகை வருமானம் 319,118 அமெரிக்க டொலர்கள் என அதிகரிக்கப்பட்டிருந்தது. எனினும், 1993 முதல் 2018 வரை முதலாவது உடன்படிக்கை மூலம் இழந்திருந்த வருடாந்த குத்தகை தொகையினை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக தீர்மானமொன்று எடுப்பதற்கு இதுவரை கூட்டுத்தாபனத்திற்கு முடியாமல் இருந்ததுடன், மேலதிக குத்தகை உடன்படிக்கைகாக சட்டமா அதிபரின் அங்கீகாரம் இந்த அறிக்கை திகதி வரை வழங்கியிருக்கவில்லை.

- இலங்கை சீமெந்துக் கூட்டுததாபனத்திற்கு சொந்தமான 89.07 பர்சஸ்களை கொண்ட கொள்ளுப்பிட்டிக் காணி 2008 ஆண்டின் போது இலங்கை வங்கிக்கு ஈடுவைத்து பெற்றிருந்த கடன்தொகை 2017 ஆண்டின் போது ரூபா 97.7 மில்லியன் தொகைக்கு மீள் கட்டமைக்கப்பட்டிருந்ததுடன், 2021 திசெம்பர் 31 திகதியிலுள்ளவாறு மேலும் செலுத்த வேண்டியிருந்த கடன்மீதி ரூபா 58.7 மில்லியன் தொகையாகும். பெற்றிருந்த இந்த கடன் தொகைக்காக 2021 ஆண்டில் ரூபா 5.5 மில்லியனிற்கான வட்டித்தொகையொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும், குறிப்பிட்ட காணியை குத்தகைக்கு கொடுத்ததன் மூலம் கிடைத்திருந்த குத்தகை வருமானம் ரூபா 4.8 மில்லியன் தொகை மாத்திரம் காணப்பட்டது. சுமார் ரூபா 735 மில்லியன் தொகை பெறுமதியான மிகவும் உயர்ந்த வாணிப பெறுமதியொன்றினை கொண்டிருந்த இந்தக் காணி 2021 செப்தெம்பர் 29 திகதிய பணிப்பாளர் சபை தீர்மானத்தின் படி கலப்பு முதலீட்டுச்

செயற்திட்டமொன்று ஆரம்பிப்பதற்கான பெறுகை நடவடிக்கைகள் இந்த அறிக்கைத் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன், ஆதனங்களை ஆக்கபூர்வமான முதலீடு ஒன்றிற்காக ஈடுபடுத்துவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு முடியாமல் இருந்தது.

- நாட்டில் காணப்பட்ட யுத்த நிலைமை காரணமாக உற்பத்தி அலுவல்கள் நிறுத்தப்பட்டிருந்த காங்கேசன்துறை சீமெந்துச் தொழிற்சாலையில் காணப்படும் பயன்படுத்த முடியாத பண்டங்களை அப்புறப்படுத்தி தொழிற்சாலை வளவினை சுத்தம் செய்வதற்காக அமப/21/0175/320/004 மற்றும் 2021 பெப்ரவரி 16 திகதிய அமைச்சரவை பத்திரத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கு ஒத்த நிகழ்வாக PFD/PMD/01/CM/2021/041 இலக்கம் கொண்ட மற்றும் 2021 பெப்வரி 08 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தொழிற்சாலையில் சிதைவடைந்த இரும்பு மற்றும் உலோக விடயங்கள் தொடர்பாக அட்டவணை தயாரித்து அப்புறப்படுத்தக்கூடிய கட்டிட மாதிரிகள் மற்றும் இயந்திரங்கள் சிதைவடைந்த உலோகங்களுக்கான பெறுமதியை மதிப்பீடு செய்து பெறுமதியை தீர்மானிப்பதற்காக தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவொன்று நியமனம் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்தக் கருமம் இதுவரை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. யுத்தம் முடிவடைந்து 13 வருடங்கள் கழிந்திருந்த போதிலும் தொழிற்சாலையின் உற்பத்தி அலுவல்களை ஆரம்பித்து கூட்டுத்தாபனத்தில் காணப்படும் வளங்கலின் மூலம் உச்சமட்ட பயனைப்பெற்று நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிப்பு வழங்குவதற்கு இதுவரை கூட்டுத்தாபனத்திற்கு முடியாதிருந்தது.

தேசிய அருங்கலை பேரவை

- சட்டத்தின் பிரகாரம் பேரவையின் குறிக்கோளிடையே கைப்பணிக்காக உள்நாட்டு மூலப்பொருட்களை சுலபமாக்குவதன் மூலம் கைத்தொழிலாளர்களின் உற்பத்தியை அதிகரித்தல் பிரதான குறிக்கோளாக இருந்ததுடன், கலைஞர்களுக்காக அரிய மூலப்பொருளை வழங்குதல் அந்த அலுவல்களை ஒருங்கமைக்கும் குறிக்கோளை செயற்படுத்துவதற்காக பேரவையினால் 2021 ஆண்டு 09 மூலப்பொருள் வங்கிகள் மாகாணங்களின் பிரகாரம் நிறுவுவதற்காக ரூபா 10.5 மில்லியனிற்கான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மூலப்பொருள் வங்கி நிறுவுவதற்காக தேவையான கட்டிடங்களின் திருத்த வேலை மேற்கொள்ளப்பட்ட பின்னர் அவற்றிற்குரிய இயந்திர உபகரணங்களை பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும் 09 மூலப்பொருள் வங்கிகள் (வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தவிர) கொள்வனவு செய்திருந்த உபகரணங்கள் உரிய நிலையங்களுக்கு வழங்க முடியாமல் இந்த அறிக்கைத் திகதி வரை வராகொட பயிற்சி நிலையத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

- 2021 ஆண்டின் போது தேசிய அருங்கலை பேரவையிற்கு சொந்தமான 85 பயிற்சி நிலையங்களில் 56 பயிற்சி நிலையங்களில் மாத்திரம் பயிற்சிப் பாடநெறிகள் செயற்படுத்தப்பட்டிருந்தது. 2021 ஆண்டின் போது 70 பயிற்சிப் பாடநெறிகளுக்காக 737 பயிலுனர்கள்

சேர்க்கப்பட்டிருந்த போதிலும் 2021 செப்தெம்பர் அளவில் பயிலுனர் எண்ணிக்கை 350 வரை குறைவடைந்திருந்தது. அவற்றில் 27 பயிற்சிப் பாடநெறிகளுக்கு இறுதியளவில் பயிற்சிபெற்ற பயிலுனர் ஒருவரையேனும் உருவாக்குவதற்கு சபைக்கு முடியாமல் இருந்தது. சபையினால் அறிமுகப்படுத்தியிருந்த கைப்பணி பயிற்சித் துறைகள் 17 இல் 06 பாடநெறிகளுக்காக மாத்திரம் NVQ தகைமை வழங்கப்பட்டிருந்ததுடன், ஏனைய செயற்படு பாடநெறிகளை NVQ மட்டத்திற்கு உயர்த்துவதற்கு சபைக்கு முடியாமல் இருந்தது. 2021 ஆண்டிற்கான திருத்திய பாதீட்டின் மூலம் பயிற்சிப் பாடநெறிகளுக்குரிய பயற்சிக் கொடுப்பனவு, மூலப்பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வழங்குவதற்காக ரூபா 9 மில்லியனிற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 6 மில்லியனிற்கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன.

- அருங்கலை பேரவைக்கு சொந்தமான 1.1165 ஹெக்டயர் காணியொன்றில் 18 வேலைக் கொட்டகைகள், காட்சியறை ஒன்று, அலுவலக கட்டிடம் ஒன்று, விடுதியொன்று மற்றும் சுகாதார வசதிகளுக்கான கட்டிடங்கள் உள்ளடங்கிய கட்டிடங்களை கொண்ட சிகிரிய கைப்பணிக் கிராம் ரூபா 47.7 மில்லியன் பெறுமதி மதிப்பீடு செய்து தம்புள்ள பிரதேச செயலாளரினால் சாட்டுதல் பத்திரம் ஒன்றின் மூலம் 2013 ஆண்டில் அருங்கலை பேரவைக்கு உரித்தாக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், 2021 மார்ச் மாதம் அளவில் கொவிட் தொற்றுநோய் காரணமாக அனைத்து குடில்களும் மூடப்பட்டிருந்தன. விற்பனை குடில்கள், கட்டிடங்களை மீண்டும் தயாரித்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரக்கூடியவாறு தயாரித்து சபைக்குச் சொந்தமான சொத்தொன்றிலிருந்த உச்சமட்ட பயனை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் ரூபா 47.7 மில்லியனிற்கான ஆதனங்கள் விளைவற்றுக் காணப்பட்டது.

இலங்கை கைப்பணிச் சபை

- வழங்குனர்களின் தொழிற்படு மூலதனத் தேவையினை நிறைவேற்றுவதற்காக பிரதேச அபிவிருத்தி வங்கியில் இருந்து இலங்கை கைப்பணிச் சபை 2013 ஆண்டில் ரூபா 200 மில்லியனிற்கான கடன்தொகையை பெற்றிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் கடன்தொகையை மாதாந்த தவணைகளாக ஒரு வருடத்துக்குள் செலுத்துவதற்காக கடன்தொகை மீது 9 சதவீத வட்டி செலுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், உரிய முறையில் தவணைப் பணத்தை மற்றும் வட்டியினை செலுத்தாமையினால் 2020 வருட இறுதியளவில் செலுத்த வேண்டிய கடன்தொகை மற்றும் வட்டி முறையே ரூபா 158.4 மில்லியன் மற்றும் ரூபா 1,255 மில்லியன் தொகையாக இருந்தது. வட்டித் தொகையில் ரூபா 8.32 மில்லியன் தொகைக்கு 2020 செப்தெம்பர் 24 திகதி வங்கியினால் தாமத சலுகைக் கடன் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய வட்டி ரூபா 4.17 மில்லியன் தொகை மற்றும் கடன்தொகை ரூபா 166.72 மில்லியன் தொகை காணப்பட்டதுடன், கடன் வட்டி செலுத்தாமையால் மூலதனப்படுத்தப்பட்டிருந்த ரூபா 8.32 மில்லியனிற்கான கடன்வட்டிக்கும் வட்டி

கணிக்கப்பட்டிருந்தமையால் மேலதிக கிரயம் ஒன்று மேற்கொள்ள நேரிட்டிருந்தது.

- சபையினால் தொழிற்படு மூலதனத் தேவைகளுக்காக கோட்டை லக்சல கட்டிடத்தை அடகு வைத்து 2012 – 2018 காலப் பகுதியில் பெற்றுக்கொண்டிருந்த ரூபா 950 மில்லியன் தொகைக்குரிய ரூபா 238.78 மில்லியனிற்கான தொகையொன்று வட்டி என இலங்கை வங்கிக்கு செலுத்தப்பட்டிருந்தது. 2019 ஆண்டிறுதியில் காணப்பட்ட மீதி ரூபா 273 மில்லியன் தொகைக்காக புதிய 03 கடன்தொகை என மீள்பதியப்பட்டிருந்தது. மேற்கூறிய கடனுக்கான தவணைப் பணம் செலுத்துவதற்காக 06 மாத சலுகைக் காலம் வழங்கப்பட்டிருந்ததுடன், அந்தக் கால வரையறையும் 2020 ஏப்ரல் மாதத்தில் முடிவடைந்திருந்தது. அதன்படி, 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடன்தொகைக்காக செலுத்த வேண்டிய ரூபா 28.08 மில்லியனிற்கான தவணைப் பணம் மற்றும் ரூபா 21.83 மில்லியனிற்கான வட்டித்தொகை கணக்காய்வுத் திகதியாகிய 2021 திசெம்பர் 31 திகதி அளவிலும் செலுத்துவதற்கு சபைக்கு முடியாமல் இருந்தது.

- 44,000 சதுரஅடிகளைக் கொண்ட நான்கு மாடிக் கட்டிடமொன்றான கோட்டை லக்சல கட்டிடம் 2013 ஆண்டின் போது நவீனமயப்படுத்துவதற்காக கேள்வி நடைமுறைக்கு புறம்பாக ICTAD தகைமை காணப்படாத தனியார் ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு சாட்டப்பட்டு பெறுகை ஆலோசனைகளில் கவனம் செலுத்தாமல் ரூபா 45.45 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக ICTAD நிறுவனத்தினால் வழங்கியிருந்த அறிக்கையின் படி பௌதீக வேலைகளின் பெறுமதியை குறைத்த பின்னர் ஒப்பந்தக்காரரிடம் ரூபா 30 மில்லியனிற்கான தொகையொன்று சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது. அந்த நிர்மாண வேலை இடைவெளியில் நிறுத்தப்பட்ட காரணத்தினால் குறிப்பிட்ட 44,000 சதுரஅடிக்கான தரைப் பகுதியொன்றில் 1,200 சதுரஅடிக்கான காட்சியறை நடாத்தப்படும் தரைப்பகுதி தவிர ஏனைய பகுதிகள் சுமார் 08 ஆண்டுகள் பயன்படுத்த முடியாத நிலையில் விளைவற்று காணப்பட்டது. பாரிய பொருளாதார பெறுமதி ஒன்றினை கொண்டுள்ள இந்தக் கட்டிடத்தின் நவீனமயப்படுத்தல் அலுவல்கள் இடைவெளியில் நிறுத்தப்பட்டமையால் கட்டிடம் அழிவடைந்து காணப்பட்டதுடன், சபைக்கு வருடாந்தம் உழைக்கக்கூடியதாக இருந்த பாரிய வருமானம் ஒன்றினை இழந்துள்ளது.

- சிறு கைத்தொழில் திணைக்களத்தின் இலங்கை கைப்பணிச் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த ரூபா 48.32 மில்லியன் பெறுமதியான 2 ஏக்கர் 21 பர்சஸ் கொண்ட மொரட்டுவ, கட்டுபெத்த பிரதேசத்தில் காணப்படும் 39,364 சதுரஅடிகளைக் கொண்ட ஐந்து கட்டிடங்களில் காட்சியறை, அரச கணக்காய்வுப் பிரிவு, கொள்வனவுப் பிரிவு களஞ்சியம் தவிர லக்சல தச்சுத்தொழிற்சாலை மற்றும் விடுதி காணப்படும் சுமார் 15,000 சதுரஅடி காணிப்பகுதி மற்றும் தச்சுத் தொழிற்சாலைக்குரிய சொத்துக்கள் 2012 ஆண்டு முதல் விளைவற்று காணப்பட்டது.

நெசவுக் கைத்தொழில் திணைக்களம்

கைத்தறி நெசவுக் கைத்தொழில்

விடயத்துக்குரிய கொள்கைசார் தீர்மானங்கள் மற்றும் மையப்படுத்தும் அலுவல்கள் மற்றும் மாகாண சபை நெசவுத் தொழில் பிரிவுடன் ஒருங்கிணைப்பின் மூலம் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்கு உரிய சேவைகள் வழங்கி அரச கொள்கைசார் சட்டகத்தினுள் கைத்தொழிலின் முன்னேற்றத்துக்குரிய கொள்கைகளை தயாரித்தல், அந்த கொள்கைகளை செயற்படுத்துவதற்கான தேவையான வழிகாட்டல், தேவையான சேவைகள் மற்றும் வசதிகள் வழங்கல் மற்றும் நெறிப்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைப்பதன் மூலம் கைத்தறி மற்றும் நெசவுக் கைத்தொழில் துறையில் பொருண்மையான மற்றும் பண்புசார் அபிவிருத்தி ஒன்றை ஏற்படுத்தல் திணைக்களத்தின் பணிகளாகும்.

- வெளித்தரப்பினருக்கு குத்தகைக்கு கொடுத்திருந்த திணைக்களத்திற்கு சொந்தமான மின்தறி நெசவு நிலையங்களில் 04 நிறுவனங்களில் குத்தகை உடன்படிக்கையை மீறி 3 வருடங்கள் முதல் 22 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அந்தக் காலப் பகுதியுள் ஒரு தொகையேனும் அறவீடு செய்திருக்காததுடன், 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு குத்தகைதாரரிடம் அறிவிடப்பட வேண்டிக் காணப்பட்ட குத்தகை ரூபா 13.87 மில்லியன் தொகை காணப்பட்டது. அதில் ஒரு குத்தகைதாரர் குத்தகை ஆதனத்தை பிணையாக வைத்து கடன் தொகை ஒன்றினையும் பெற்றிருந்ததுடன், ரூபா 8.91 மில்லியனிற்கான குத்தகையையும் புறக்கணித்திருந்தது. மேலும், குத்தகை ஆதனத்திலிருந்து ரூபா 2.76 மில்லியன் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன், தற்போது அங்கீகாரமின்றி ஒருவர் குடியிருக்கின்றார். ஒரு நிறுவனத்திலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவைக் குத்தகை ரூபா 521,000 தொகை தொடர்பாக நடுவர் மன்றிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன்படி, நிலுவை குத்தகைத் தொகையை அறவீடு செய்தல் தொடர்பாக நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்திருக்கவில்லை.

- கிராமிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதன் மூலம் கைத்தறி நெசவுத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக 10 நெசவுத் தொழில் கிராமங்கள் நிறுவி அதனை அண்டி வாழும் விண்ணப்பதாரர்கள் 150 பேருக்கு பயிற்சி வழங்கி தேவையான உபகரணங்கள் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தன. அவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது 5 கிராமங்களை சார்ந்த 73 விண்ணப்பதாரர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 24.68 மில்லியன் தொகை பெறுமதியான கைத்தறிகளை சார்ந்த உபகரணங்கள் 2022 ஏப்ரல் 30 திகதி வரையும் களஞ்சியத்தில் காணப்பட்டன.

காணிச் செயற்பாடுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்

- பிம்சவிய நிகழ்ச்சித்திட்டம்
- காணிகளைச் சுவீகரித்தல
- அரசாங்கத்தின் காணி தகவல் முகாமைத்துவ முறைமை
- காணிக் குத்தகை வருமான முகாமைத்துவம்
- இலக்குகள் அடைந்து கொள்ளப்படாமை
- சேதனப் பசளை செயற்திட்டம
- செயலாற்றல் குறைவடைதல்
- காணிகளை பயன்படுத்துதல் அதிகாரச் சட்டத்தினை நடைமுறைப்படுத்தல்

காணிச் செயற்பாடுகள்

நிலைபேறான அபிவிருத்தியை முன்னிட்டு காணி வளங்களை சிறப்பாக பயன்படுத்துதல் காணிப் பிரிவிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளாக இருந்தது. காணி அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள காணி முகாமைத்துவ நடவடிக்கைகள், அரசாங்க முயற்சிகளின் காணிகள் மற்றும் ஆதனங்களை அபிவிருத்தி செய்தல் இராஜாங்க அமைச்சு, 04 திணைக்களங்கள், 02 நியதிச்சட்ட சபைகள்/ நிறுவனங்கள் என்பவற்றினால் பின்வரும் செயற்பாடுகளையும் கடமைகளையும் நிறைவேற்ற வேண்டியிருந்தது.

- தச்சுத் தொழில், பிரம்புக் கைத்தொழில் பன்கைத்தொழில் என்பன சார்பாகக் காணப்படுகின்ற மூலப்பொருள் பிரச்சினைகளுக்கான தீர்வாக பயிர்ச்செய்கை கூட்டுறவு முறைமையின் கீழ் குறைவாகப் பயன்படுத்தப்படுகின்ற அரசாங்க காணிகளில் நீண்டகால குத்தகை அடிப்படையின் கீழ் மேற்கூறிய மூலப்பொருட்களை பயிர்ச்செய்கை பண்ணுவதற்கான சந்தர்ப்பமும் ஊக்குவிப்புக்களும் வழங்குதல்

- மகாவெலி, உமா ஓயா, மொரகஹகந்த போன்ற பாரிய நீர்ப்பாசன செயற்திட்டங்களின் காரணமாக பாதிப்புக்குள்ளாகியுள்ள ஆட்கள், வீடுகள், மற்றும் ஏனைய ஆதனங்கள், காணிகள், விவாசாயக் காணிகள் என்பவற்றிற்காக முறையான மதிப்பீட்டினை மேற்கொண்டு துரிதமாக இழப்பீட்டினை வழங்குவதற்கு உரிய நிறுவனங்களுடன் தேவையான ஒருங்கிணைப்புக்களை மேற்கொள்ளல்.

- அரசாங்கத்தின் காணிகள் மற்றும் பொதுச் செயற்திட்டமாக சுவீகரிக்கப்பட்ட காணிகளை பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்காக குத்தகை அடிப்படையின் கீழ் வழங்குதல் மற்றும் விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வேலைத்திட்டத்தினை அமுல்ப்படுத்துதல்.

- தோட்ட கம்பனிகளுக்கும் அரசாங்க பண்ணைகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்பொழுது பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாத காணிகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேண்டுதல்கள் உள்ள பூ வகைகளையும் சேதன பயிர்ச்செய்கைகளையும் உருவாக்குதல், மற்றும் கால நிலைக்குப் பொருத்தமான மேலதிகப் பயிர்ச் செய்கையையும் விரிவுபடுத்துதல்.

- மரபு ரீதியான மற்றும் தொல்பொருள் ரீதியான விடயங்கள், இயற்கை வளங்கள், நகரமயப்படுத்தல் மற்றும் எதிர்கால தேவைப்பாடுகளை கருத்தில் கொண்டு காணிகளை பயன்படுத்துவதற்காக ஒரு தேசிய கொள்கையை தயாரித்தல்.

- நாளதுவரையான காணி தகவல் முறைமையை உருவாக்குதல் மற்றும் பேணுதல்.

- காணிகளை அளவீடு செய்தல், திட்ட வரைபடம் தயாரித்தல், காணித் தகவல்களையும் உரிய சேவைகளையும் துரிதமாக வழங்குதல் என்பவற்றிற்காக தகவல் தொழில்நுட்ப அணுகுதலுடன்

ஆக்கபூர்வமான ஒரு நடைமுறையினைத் தயாரித்தல்.

- காணி சுவீகரித்தல் நடைமுறையினையும் காணிகளை வழங்குதல் நடைமுறையினையும் மீளாய்விற்கு உட்படுத்தி காணிகள் இல்லாத குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு விளைதிறனான உற்பத்திச் செயற்பாடுகளுக்காகவும் அபிவிருத்தி மற்றும் முதலீட்டுச் செயற்திட்டங்களுக்காகவும் காணிகளை துரிதமாக விடுவிக்கும் நடைமுறையைத் தயாரித்தல்

- பிம்சவிய காணி உரிமைகளை உறுதிப்படுத்தும் வேலைத்திட்டத்தினை துரிதப்படுத்தல், காணிகளை விற்பனை செய்வதன் மூலம் காணி இல்லாத பிரசைகள் உருவாகுவதனை தடுத்தல் மற்றும் காணி உரிமையின் அடிப்படையில் வங்கி, நிதி மற்றும் காப்புறுதி நடவடிக்கைகளைப் பெற்றுக்கொள்ளும் கொள்கைகள் மற்றும் சட்ட அதிகாரத்தினை கட்டியெழுப்புதல்.

- ஏனைய காணிகளைப் பயன்படுத்துவது தொடர்பாக தீர்த்துவைத்தல் கொள்கையை அமுல்ப்படுத்தல்

- நாட்டின் அபிவிருத்திக்கு தேவைப்படுகின்ற காணிகளை தாமதமின்றியும், ஒழுங்குமுறையாகவும் வழங்குதல்.

- நாட்டின் அபிவிருத்திக்காக வழங்கப்பட்டுள்ள அரசாங்க காணிகள் சார்ந்த பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்காக ஆக்கபூர்வமான ஒரு பொறி முறையைத் தயாரித்தல்.

- வாலிப தொழில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்தும் ஒரு செயற்திட்டத்திற்காக அரசாங்க காணிகளில் முதலீட்டு வாய்ப்புக்களை வழங்கி ஒரு இலட்சம் காணித் துண்டுகள், வங்கி, மற்றும் தொடர்புபட்ட ஏனைய நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு இளைஞர்களுக்கு வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்ப்படுத்துதல்.

- அபிவிருத்திய திட்டங்களுக்காக சவீகரிக்கப்பட்டு இதுவரை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாத தனியார் காணிகளை அபிவிருத்தி செய்யும் தேவைப்பாடுகளை முறைப்படியாக மதிப்பீட்டிற்கு உட்படுத்தியதன் பின்னர் அக்காணிகளை ஆக்க பூர்வமாக அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்ப்படுத்தல்.

மேற்கூறிய கடமைகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் 2021 ஆம் ஆண்டின் போது காணி அமைச்சிற்கும் அதன் கீழுள்ள இராஜாங்க அமைச்சிற்கும் 4 திணைக்களங்களுக்கும் மொத்தமாக ரூபா 10,517 மில்லியன் நிதி ஏற்பாடு பாராளுமன்றத்தால் வழங்கப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 8,541 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதற்கிணங்க ஆண்டின் இறுதியில் ரூபா 1,976 மில்லியன் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் வரைபடம் 27 இல் தரப்படுகின்றது



	காணிகள் அமைச்சு	காணி முகாமைத்துவ நடவடிக்கைகள், அரசாங்க முயற்சிகளின் காணிகள் மற்றும் ஆதனங்களை அபிவிருத்தி செய்தல் இராஜாங்க அமைச்சு	காணிகள் ஆணையாளர் நாயகம் திணைக்களம்	நில அளவையாளர் திணைக்களம்	காணிகள் பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்	காணி உரித்துகள் நிர்ணயத் திணைக்களம்	மொத்தம்
நிதியேற்பாடு ரூபா மில்லியன்	3415	608	635	4714	580	565	10517
செலவினம் ரூபா மில்லியன்	2667	269	496	4075	509	525	8541
சேமிப்பு ரூபா மில்லியன்	748	339	139	639	71	40	1976
ஊயவநபழசல 4	4.5	2.8	5				

வரைபடம் 27 – வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு மற்றும் செலவினம்
மூலம் - 2021 ஆம் ஆண்டின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள்

மேற்கூறிய கடமைகளை நிறைவேற்றுவது சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிபாக்கி கீழே தரப்படுகின்றன.

பிம்சவிய நிகழ்ச்சித்திட்டம்

- மீளாய்வாண்டின் போது காணி நிர்ணயத் திணைக்களத்தினால் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 60,000 உரிமைச் சான்றிதழ்களை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டு ரூபா 124 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் ஆண்டின் போது வழங்கப்பட்ட உரிமைச் சான்றிதழ்களின் எண்ணிக்கை 13,907 ஆக இருந்ததுடன் மேற்கொள்ளப்பட்ட உள்ளபடியான செலவு ரூபா 94.4 மில்லியனாகும். அதற்கிணங்க ஒரு சான்றிதழை வழங்குவதற்கு திட்டமிடப்பட்ட செலவு ரூபா 2,067 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அதற்காக ரூபா 6,788 செலவு செய்யப்பட்டிருந்தது.

- மீளாய்வாண்டின் போது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் காணி பதிவாளர் அலுவலகத்தினால் வழங்கப்பட்ட உரிமைச் சான்றிதழ்களின் எண்ணிக்கை 22,485 ஆக

இருந்ததுடன் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை 13,907 மாத்திரமாகும். உரிமைச்சான்றிதழ்களைப் பகிர்ந்தளிப்பதில் காணப்பட்ட பலவீனத்தின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் இன்னும் உரிமையாளர்களுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்கு மிகுதியாக இருந்த உரிமைச் சான்றிதழ்களின் எண்ணிக்கை 21,231 ஆக இருந்தது.

- மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உரிமைச் சான்றிதழ்களை வழங்குவது சம்பந்தமாக உருவாகிய தீர்த்துவைக்க முடியாத பல்வேறு சிக்கல்களின் காரணமாக பிற்போடப்பட்ட முழுக் கோவைகளின் எண்ணிக்கை 455,271 ஆக இருந்ததுடன் வெலிகபொல, இரத்மலானை, தெஹிவளை, நல்லூர் ஆகிய பிராந்திய அலுவலகங்களில் பிற்போடப்பட்ட கோவைகள் தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்படவில்லை.
- மீளாய்வாண்டின் இறுதியளவில் 66 பிரதேச செயலகப் பிரிவுகளில் மாத்திரம் இச்செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததுடன் மிகுதியான 265 பிரதேச செயலகப் பிரிவுகளில் இதனை ஆரம்பிப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஆரம்பிக்கப்பட்ட 66 பிரதேச செயலகப் பிரிவுகளின் 3,899 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 1394 பிரிவுகளில் மாத்திரம் நில அளவை நடவடிக்கை முடிவுறுத்தப்பட்டிருந்தன. அதற்கிணங்க இச்செயற்திட்டத்தின் செயல்முன்னேற்றம் திருப்தியற்ற மட்டத்தில் காணப்பட்டது.

காணிகளைச் சுவீகரித்தல்

1950 இன் 09 ஆம் இலக்க காணி சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 35 ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு காணியை அல்லது அதற்கு துணையானவற்றை சுவீகரிப்பதற்காக 38 ஆம் பிரிவின் கீழ் ஒரு கட்டளையை வர்த்தமானியில் பிரசுரிக்கின்ற திகதிக்கு முன்னராக இழப்பீட்டு பணத்தை அந்த நபருக்கு அல்லது நீதிமன்றத்திற்கு செலுத்தாத சந்தர்ப்பத்தில் உரிய கட்டளை வழங்கிய திகதியிலிருந்து இழப்பீடு செலுத்தும் திகதி வரை நிர்ணயிக்கப்பட்ட தொகையான வட்டியுடன் இழப்பீட்டுப் பணத்தை செலுத்த வேண்டிய போதிலும் அதிகாரச் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட மொத்த வட்டிப் பணமாகிய ரூபா 1,206.32 மில்லியனில் ரூபா 602.13 மில்லியன் அல்லது 50 சதவீதம் 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திற்கு முன்னர் காணிகளை சவீகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட வட்டி செலவாகும்.

அரசாங்கத்தின் காணி தகவல் முகாமைத்துவ முறைமை

அரசாங்கத்தின் காணி தகவல் முகாமைத்துவ நடவடிக்கையை ஆக்கபூர்வமாகச் செய்வதற்காக அரசாங்கத்தின் காணி தகவல் முகாமைத்துவ முறைமை (e-Slims) 2013 ஆம் ஆண்டின் போது அரம்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அதற்காக மேற்கொள்ளப்பட்ட கிரயம் ரூபா 159.46 மில்லியனாக இருந்தது. 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இச்செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தும் முறைமைக்கு உள்ளடக்கப்பட்ட காணித் துண்டுகளின் அளவு 1,306,917 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டில் திட்டமிடப்பட்ட 100,000 காணித் துண்டுகளில் 62,785 காணித் துண்டுகள் மாத்திரம் முறைமைக்குள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

காணிக் குத்தகை வருமான முகாமைத்துவம்

காணி ஆணையாளர் நாயகத்தினால் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் மாகாணங்களுக்கிடையிலான விவசாயக் குடியேற்றங்களிலிருந்து காணிக் குத்தகை வருமானம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுயளவில் காணப்பட்ட ரூபா 84.92 மில்லியன் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நிலுவை வருமானத்தில் 53 சதவீதம் அல்லது ரூபா 45.15 மில்லியன் 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது நிலுவை வருமானத்தில் அறவிடப்பட்டிருந்த பணம் ரூபா 5.18 மில்லியன் மாத்திரமாகும்.

இலக்குகள் அடைந்து கொள்ளப்படாமை

- மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் "இலங்கையில் விவசாயம், வணிகம், சுற்றுலா,ஏனைய சேவை உற்பத்திப் பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தி பல்வேறு உற்பத்திகளில் ஈடுபட்டிருக்கும் அதேபோல அவ்வாறான தொழில் முயற்சி இயலுமை இருந்தும் அதற்கான அடிப்படை வளங்களும் அரசாங்க உதவியும் இன்னும் கிடைக்காத இளைஞர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு காணி உரிமைகளை வழங்குவதன் மூலம் தேசிய உற்பத்திகளை ஊக்குவித்தல் மற்றும் அதற்குத் தேவையான நிறுவன ரீதியான உதவியை வழங்குதல்" என்ற குறிக்கோளில் அமுல்ப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மீளாய்வாண்டின் இறுதியில் 20,000 காணித்துண்டுகளை வழங்குவதற்கு காணி அமைச்சின் மூலம் திட்டமிடப்பட்டிருந்தும் 402 காணித் துண்டுகள் அல்லது திட்டமிடப்பட்ட அளவில் 2 சதவீதம் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

- மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நகர அபிவிருத்தி, தாழ் நிலங்களை அபிவிருத்தி செய்தல், கிராமங்களை விஸ்தரித்தல், நீர்ப்பாசன நடவடிக்கைகள் முதலியவாறாக 11 துறைகளின் கீழ் காணிகளைச் சுவீகரிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் அவற்றில் 07 துறைகளின் கீழ் மாத்திரம் காணிகளை சுவீகரித்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டின் இறுதிவரை சுவீகரிப்பதற்குத் திட்டமிடப்பட்ட 7383 ஹெக்டயர் காணிகளில் 707 ஹெக்டயர் காணிகள் அல்லது 10 சதவீதம் மாத்திரம் பொறுப்பேற்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க திட்டமிடப்பட்டவாறு அரசாங்கத்தின் தேவைப்பாட்டிற்காக காணிகளைப் பொறுப்பேற்பதற்கு அமைச்சு தவறியிருந்தது.

- காணி அமைச்சின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களின் கீழ் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தால் அரசாங்கத்தின் காணித் தகவல்களைச் சேகரிக்கும் நாடளாவிய கணக்கெடுப்பு 2020 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக 10 மில்லியன் கணக்கெடுப்பு படிவங்கள் அரசாங்க அச்சக திணைக்களத்தால் இலவசமாக அச்சிடப்பட்டு நாடு முழுவதிலுமுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. உரிய கணக்கெடுப்பு நடவடிக்கைகளின் செயல்முன்னேற்ற மீளாய்வு ஆண்டின்

திசெம்பர் 31 அந் திகதி வரை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

சேதனப் பசளை செயற்திட்டம்

- காணி அமைச்சினால் ரூபா 302 மில்லியன் செலவு செய்து 6,156.23 மெட்ரிக் தொன் பசளை உற்பத்தி செய்யப்பட்டிருந்ததுடன் 1988 இன் 68 ஆம் இலக்க பசளைகள் அதிகாரச் சட்டத்தின் 2(1)(2) ஆம் பிரிவின் பிரகாரம் பசளை உற்பத்திக்காக தேசிய பசளைகள் செயலகத்திடமிருந்து அதிகாரப் பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் இதுவரை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- மீளாய்வாண்டின் போது இச்செயற்திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்பட்ட 777,720 கிலோகிராம் பசளைகள் 1கிலோ கிராம் ரூபா 15 வீதம் கொழும்பு கொமேர்சல் பசளைக் கம்பனிக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தும் அதற்காக கிடைக்க வேண்டிய ரூபா 11.67 மில்லியன் வருமானம் நிலுவை வருமானமாக நிதிக்கூற்றுக்களின் மூலம் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

செயலாற்றல் குறைவடைதல்

- "காணித் தகவல்களை வழங்குவதில் எப்போதும் முன்னுரிமை" என்ற நோக்கினை கருத்தில் கொண்டு தொழில்சார் திறமையினைக் கொண்ட சேவையில் ஈடுபட்டுள்ள ஒரு நபரின் மூலம் தரமான காணித் தகவல்களை வெளியிடுதல் மற்றும் சேவைகளை வழங்குதல்" என்பதனை செயற்பணியாகக் கொண்டு நில அளவைத் திணைக்களத்தின் நில அளவையாளர்கள் பல்வேறு வகையான நில அளவைகளை மேற்கொள்வதுடன் அதற்கிணங்க எல்லைக் கற்களைப் பதித்து நில அளவைக்கான இலக்குகள் 20 காணித் துண்டுகளாக இருந்ததுடன் காணிக் கூறுகளாயின் 30 ஆகும். ஏனைய நில அளவைகளுக்கான காணிகளின் ஹெக்டயர் அளவு 30 மற்றும் அளவை செய்யப்பட்ட தூரம் 5 கிலோகிராம் ஆக செயல்முன்னேற்றம் கணிப்பீடு செய்யப்படும். 15 ஆண்டுகளுக்கும் முன்னர் தோற்றுவிக்கப்பட்ட இந்த அங்கீகாரமானது நில அளவை நுட்பங்கள் மற்றும் உபகரணங்களின் தொழில்நுட்ப ரீதியான முன்னேற்றத்துடன் மீளாய்வு செய்து திணைக்களத்தின் தூரநோக்கு மற்றும் செயற்பணியின் பிரகாரம் தரமான காணித் தகவல் வெளியீடு மற்றும் சேவைகளை வழங்குவதற்காக நாளது வரையாக்கப்பட்டிருக்காத போதிலும் 2018 இலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையான நிதிக்' கூற்றுக்களில் இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை கொள்வனவு செய்தல்களின் கீழ் நவீன நில அளவை உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக திணைக்களத்தினால் ரூபா 430 மில்லியனை மிகைத்த பணம் செலவு செய்யப்பட்டிருந்தது.

- 2002 இன் 17 ஆம் இலக்க நில அளவை அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நில அளவைத் தொழில் மற்றும் அதன் நடைமுறைகள் முறைப்படியாகப் பேணப்படுகின்றது எனவும் தொழிலில் ஈடுபடுபவர்களினால் தொழில் உயர்ந்த தரத்தில் பேணப்படுகின்றது என்பதனையும் உறுதிப்படுத்துவதனை குறிக்கோளாகக் கொண்டு நில அளவைச் சபை ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் நில அளவையாளர்களின் தொழில் ரீதியான தவறான நடத்தைகள் தொடர்பாக பொது மக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை

143 ஆக இருந்த போதிலும் சபையினால் அந்த முறைப்பாடுகளில் 27 சதவீதம் அல்லது 39 முறைப்பாடுகள் மாத்திரம் தீர்த்துவைக்கப்பட்டிருந்தன. வருடாந்தம் தீர்த்துவைப்பதற்கு காணப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்துக் காணப்பட்டிருந்தும் அந்த முறைப்பாடுகளைத் தீர்த்துவைத்தல்களின் செயற்திறனை அதிகரிப்பதற்காக விசேட வேலைத்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

சபையில் பதிவு செய்யாது நில அளவை நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற நபர்கள் சம்பந்தமாக தேடிப்பார்ப்பதற்கு போதிய நடவடிக்கை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

காணிகளை பயன்படுத்துதல் அதிகாரச் சட்டத்தினை நடைமுறைப்படுத்தல்

2010 மே 20 ஆந் திகதிய 1654/21 ஆம் இலக்க (அதிவிசேட) வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட காணி பயன்பாட்டுக் கொள்கை திட்டமிடல் திணைக்களத்தின் தூர நோக்கானது இலங்கையின் நில வளத்தினை சிறப்பாகவும் நிலைபேறாகவும் பயன்படுத்துவதாக இருந்ததுடன் சுற்றாடல் சமநிலையைப் பேணி நிலைபேறாக மற்றும் சிறப்பாக காணியைப் பயன்படுத்துவதற்கு கொள்கைகள் உருவாக்கி திட்டமிட்டு அமுல்ப்படுத்துவதற்கு உதவியளித்தல் திணைக்களத்தின் பிரதான செயற்பணியாகும். அந்த தூர நோக்கினையும் செயற்பணியையும் நிறைவேற்றுவதற்காக தேசிய காணிகளை பயன்படுத்துதல் அதிகாரச் சட்டத்தை அங்கீகரித்துக் கொள்வதற்கும் தேசிய காணிகள் பயன்பாட்டுக் கொள்கையைத் தயாரிப்பதற்கும் திணைக்களம் இதுவரை தவறியிருந்தது.

போக்குவரத்து பிரிவு

கணக்காய்வு அவதானிப்புக்கள்

- குருணாகலிலிருந்து தம்புள்ளை ஊடாக ஹபரனை வரையான புகையிரதப் பாதை செயற்திட்டம்
- கொழும்பு நகரத்திற்கு அண்மித்த புகையிரத்தின் வினைத்திறனை மேம்படுத்தும் செயற்திட்டம்
- கொழும்பு புறநகர் புகையிரத செயற்திட்டம்
- Park and Ride செயற்திட்டம்
- ஒரு கொடவத்த எரிபொருள் நிரப்பு நிலையத்தை நிர்மாணித்தல்
- 09 காற்று வெளிப்படுத்தும் நிலையங்களை நிர்மாணித்தல்
- அதிசொகுசு பஸ்களில் கெமரா மற்றும் ஜி.பி.எஸ் (ஃபீளூ) முறைமைக்காக தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்
- இந்திய கடன் வசதிகளின் கீழ் பஸ்களை கொள்வனவு செய்தல்
- பஸ்கள் போதிளதாக இல்லாமை
- இலங்கை போக்குவரத்துச் சபையின் காணிகள்
- இலங்கை போக்குவரத்துச் சபையின் வாகனங்களுக்கு அதிக பாதிப்புக்கள் ஏற்படுதல்
- 160 புகையிரத பெட்டிகளை கொள்வனவு செய்தல்
- கண்டி - கெடம்பேவிற்கு இடையே இரட்டை புகையிரத பாதையை நிர்மாணிப்பதற்கான செயற்திட்டம்
- மஹவ- அனுராதபுரம்- ஓமந்தை வரையான புகையிரதப் பாதையை திருத்தம் செய்வதற்கான செயற்திட்டம்
- கொழும்பு புறநகர் புகையிரத செயற்திட்டம்- சாத்தியவள ஆய்வு
- புகையிரத பாதுகாக்கப்பட்ட காணிகளை குத்தகைக்கு வழங்குதல்
- புகையிரத காணிகளை ஒப்படைத்தல்
- எம் 6 வகுப்பு புகையிரத இன்ஜினுக்கான உதிரிப் பாகங்களை கொள்வனவு செய்தல்
- பயன்படுத்தப்படாத சொத்துக்கள்
- வழங்கப்படாத பொருட்களுக்காக கொடுப்பனவு செய்தல்
- தீர்த்து வைக்கப்படாத நாணய கடிதம
- இலங்கை புகையிரதத்தின் பிரதான திட்டம்
- வருமானம்
- நிலுவையாக இருந்த வருமானங்கள் அறவீடு செய்யப்படாமை

போக்குவரத்து பிரிவு

மக்களின் வாழ்க்கை நிலைமையை உயர்த:துவதனை முன்னிட்டு புதிய தொழில்நுட்ப முறைமைகளைப் பயன்படுத்தி மிகவும் உயர்தரமான போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகளை அமுல்ப்படுத்துதல், அபிவிருத்தி செய்தல் மற்றும் நிலைபேறாகப் பேணுதல் இப்பிரிவின் செயற்பணியாக இருந்தது. அச்செயற்பணியை நிறைவேற்றுவதற்காக போக்குவரத்து அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள இராஜாங்க அமைச்சு இரண்டு திணைக்களங்கள் மற்றும் **05** நியதிச்சட்ட நிறுவனங்களினால் பின்வரும் கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது.

- சுற்றாடலுக்குச் சாதகமான போக்குவரத்து முறைமையை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான கொள்கைகளையும் சட்ட விதிகளையும் தயாரித்தல்.

- பொதுப் போக்குவரத்து முறைமை தொடர்பாக மக்கள் நம்பிக்கையையும் வீதி வசதிகளை உருவாக்குவதற்கான உயந்த நியம தரத்தினையும் ஏற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்.

- வீதி நெரிசல் பயணிகள் நெரிசல், வீதி விபத்துக்கள் என்பவற்றை குறைப்பதற்காக பின்பவற்ற வேண்டிய வழிகாட்டல்கள் மற்றும் சட்ட விதிகளை அறிமுகப்படுத்துதல்.

- அரசாங்க மற்றும் தனியார் போக்குவரத்து சேவைகளையும் புகையிரத சேவைகளையும் பொதுவான நேர அட்டவணைக்கு இணங்க ஒருங்கிணைந்த படிவத்தின் கீழ் அமுல்ப்படுத்துகின்ற போக்குவரத்துச் சேவையாக அமுல்ப்படுத்துவதற்குத் தேவையான நவீன தொழில்நுட்பமான ஈ- டிக்கட் முறைமையை அறிமுகப்படுத்துதல்.

- புகையிரத மற்றும் பஸ் தரிப்பிடங்கள் சார்ந்த பொது வசதிகளையும் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்துவதற்குரிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

- புகையிரத மற்றும் பஸ் சேவைகளுக்குத் தேவையான புகையிரத்தினையும் பஸ்களையும் பராமரித்தல்.

- பஸ்கள் தயாரிப்பு மற்றும் போக்குவரத்து துறைக்குரிய உள்நாட்டு கைத்தொழில் முறைமையை கட்டியெழுப்புவதற்குத் தேவையான பெறுகை நடைமுறையினை அறிமுகப்படுத்துதல்.

- கொழும்பு ஹம்பாந்தோட்டை, காங்கேசன்துறை, மற்றும் திருகோணமலை துறைமுகங்களுக்கு புகையிரத்தின் மூலம் பொருட்களை எடுத்துச் செல்வதற்குத் தேவையான வசதிகளை ஸ்தாபித்தலும் விரிவுபடுத்தலும்.

- தகவல் தொழில்நுட்பத்தினை ஈடுபடுத்துவதன் மூலம் மோட்டார் வாகனங்களைப் பதிவுசெய்தலினை மக்களுக்குச் சாதகமான, வினைத்திறனான, மோசடிகள் அற்ற நடைமுறையாக மாற்றுதல்.

- இலங்கை போக்குவரத்துச் சபையை இலாபம் உழைக்கும் ஒரு நிறுவனமாக நவீனமயப்படுத்துதலும் பிரதான பஸ்

நிறுத்துமிடங்களில் பொது வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

- தற்போதைய பஸ் ஒதுக்கீட்டினை மீளமைத்து கொழும்பு மற்றும் பிரதான நகர எல்லைக்குள் ஓடுவதற்காக சுற்றாடலுக்குச் சாதகமான புதிய பஸ்களை அறிமுகப்படுத்துதலும் தனிப்பட்ட பயணிகள் போக்குவரத்தினையும் பசுமையான போக்குவரத்திற்கு இணங்கச் செய்வதற்காக வேலைத்திட்டத்தினை தயாரித்தலும் அமுல்ப்படத்துதலும்

- புகையிரத பெட்டிகள், பஸ்கள் மோட்டார் வாகனங்களை உள்நாட்டில் தயாரித்தல் திருத்தம் செய்தல், மேம்படுத்துதல் என்பவற்றிற்கு முதலீட்டாளர்களை ஊக்கப்படுத்தும் போக்குவரத்து சேவையை கட்டியெழுப்புதல்

- பாடசாலை பஸ்சேவைகள் மற்றும் மாணவர்களின் பாதுகாப்பினை வழங்கும் நியமங்களின் கீழ் வலுப்படுத்துதல்.

- கிராமிய பிரதேசங்களுக்கு பொது போக்குவரத்து வசதிகளை வழங்குவதனை முறைமைப்படுத்துவதற்காக இலங்கை போக்குவரத்துச் சபை பயணிகள் மற்றும் பொருட்களை போக்குவரத்து செய்வதற்காக ஈடுபடுதல்.

- பயணிகள் மற்றும் போக்குவரத்து சேவைகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் போக்குவரத்துச் சேவைகளை உயர்த்த நியம தரத்தில் நடைமுறைப்படுத்தல்.

- சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், மற்றும் மோட்டார் வாகனங்களை பதிவுசெய்யும் போது இடம்பெறுகின்ற பல்வேறு முறைகேடுகளை அகற்றி வினைத்திறனான சேவையை வழங்குதல்.

மேற்கூறிய கடமைகளை நிறைவேற்றுவதற்காக போக்குவரத்து அமைச்சிற்கு இராஜாங்க அமைச்சிற்கு மற்றும் இரண்டு திணைக்களங்களுக்கு பாராளுமன்றத்தினால் மீளாய்வாண்டின் போது மொத்தமாக ரூபா **67,680** மில்லியன் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா **59,273** மில்லியன் மொத்த தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் **12.42** சதவீதம் அல்லது ரூபா **8,407** மில்லியன் நிதி ஏற்பாட்டினை பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. விபரம் வரைபடம் 28 இல் தரப்படுகின்றது.



	போக்குவரத்து அமைச்சு	இராஜாங்க அமைச்சு	இலங்கை புகையிரதத் திணைக்களம்	மோட்டார் போக்குவரத்து திணைக்களம்	மொத்தம்
நிதியேற்பாடு ரூபா மில்லியன்	7086	14408	42899	3287	67680
செலவினம் ரூபா மில்லியன்	3989	12845	40416	2023	59273
சேமிப்பு ரூபா மில்லியன்	3097	1563	2483	1264	8407

வரைபடம் 28 – வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் அளவு மற்றும் உள்ளபடியான செலவினம் மூலம் - 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள்

மேற்கூறிய கடமைகளை நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கி கீழே தரப்படுகின்றன.

குருனாகலிலிருந்து தம்புள்ளை ஊடாக ஹபரனை வரையான புகையிரதப் பாதை செயற்திட்டம்

குருனாகலிலிருந்து தம்புள்ளை ஊடாக ஹபரனை வரையான புதிய புகையிரத வீதி தொடர்பாக மேற்கொண்ட சாத்தியவள ஆய்வு 2009 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டு தம்புள்ளை பொருளாதார நிலையத்தினை மையமாகக் கொண்டு பொருள் போக்குவரத்து புகையிரத த்தினை மேம்படுத்தும் குறிக்கோளில் 2010 ஆம் ஆண்டின் போது ஆரம்பிப்பதற்கு ஈடுபடுத்தப்பட்ட குருனாகல் ஹபரனை புகையிரத வீதிக்காக 2010 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையான காலத்தில் உள்நாட்டு நிதியின் கீழ் வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ரூபா 1,032.76 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த நிதி ஏற்பாட்டில் 46% மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் 54 சதவீதமான ரூபா 555.91 மில்லியன் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

2024 ஆம் ஆண்டளவில் 4,090 காணித்துண்டுகளைப் பொறுப்பேற்று இழப்பீட்டினை செலுத்துதல் முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் 2022 சனவரி 24 ஆந் திகதி வரை 133 காணித்துண்டுகளுக்கு மாத்திரம் இழப்பீடு செலுத்தி முடிவுறுத்தப்பட்டிருந்தது.

கொழும்பு நகரத்திற்கு அண்மித்த புகையிரத்தின் வினைத்திறனை மேம்படுத்தும் செயற்திட்டம்

புகையிரத சேவையின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக 05 குறிக்கோளினூடாக இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன் இச்செயற்திட்டத்தினை வெற்றிகரமாக

நிறைவேற்றுவதற்காக 2019 ஆகஸ்ட் 20 ஆந் திகதி கையொப்பமிடப்பட்ட அமெரிக்க டொலர் 160 மில்லியன் தொகையான கடன் உடன்படிக்கை 2019 செப்தெம்பர் 06 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் செயலாற்றல் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கொழும்பிற்கு அண்மித்தபுகையிரத வினைத்திறன் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ஆசிய அபிவிருத்தி வங்கியின் கீழ் ரூபா 3,200 மில்லியனும் உள்நாட்டு நிதி ஏற்பாட்டின் கீழ் ரூபா 235 மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் உள்நாட்டு நிதி மூலகங்களின் கீழ் செலவு செய்தல் ரூபா 96 மில்லியன் அல்லது 41 சதவீதமான அளவில் இருந்தது.

அவ்வாறே ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியின் கீழான நிதி ஏற்பாட்டில் செலவு செய்யப்பட்ட பணம் ரூபா 2012 மில்லியன் மாத்திரமாக இருந்ததன் காரணமாகவும் ஒட்டுமொத்த மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டின் குறைந்த பயன்பாட்டின் காரணமாகவும் பொறுப்பளித்தல் கட்டணமாக ரூபா 83 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதிவரை செலுத்தப்பட்டிருந்தது.

கொழும்பு புறநகர் புகையிரத செயற்திட்டம்

சாத்தியவள ஆய்வு அபிவிருத்தி போக்குவரத்து செயற்திட்டத்திற்கான விபரமான பொறியியல் திட்டத்தினை தயாரித்தல் மற்றும் போக்குவரத்து செயற்திட்டத்திற்காக உதவி வழங்குவதற்காக நிதி ஏற்பாட்டினை உருவாக்குதல் போன்ற செயற்பாடுகளை குறிக்கோளாகக் கொண்டு முழுக்கிரயம் ரூபா 1,654 மில்லியனுக்குச் சமமான அமெரிக்க குடியரசு டொலர் 11.36 மில்லியன் நிதி ஏற்பாடுடன் இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. செயற்திட்டத்தின் செயலாற்றல் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- கொழும்பு புறநகர் புகையிரத செயற்திட்டத்திற்காக வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி ஏற்பாட்டின் கீழ் ரூபா 350 மில்லியனும் உள்நாட்டு நிதி மூலங்களின் கீழ் ரூபா 1,578 மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் செயற்திட்டத்தின் புகையிரத வீதியின் இரு பக்கத்திலும் குடியிருப்பாளர்களை மீளக் கடியமர்த்தும் செயலாற்றல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதன் காரணமாக உள்நாட்டு நிதியின் மூலமான பயன்பாடு ரூபா 264 மில்லியன் அல்லது அந்த நிதி ஏற்பாட்டில் 17% அளவிலாக இருந்தது.

- 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் அனுமதியற்ற குடியிருப்பாளர்களை மீளக் குடியமர்த்தச் செய்யும் வீட்டு அலகுகளை 2,036 ஆக ஆக்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் 484 வீட்டு அலகுகளில் மாத்திரம் மீளக் குடியமர்த்துதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

Park and Ride செயற்திட்டம்

Park and Ride செயற்திட்டத்தின் ஓடுவதற்காக இலக்கிடப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை கொழும்பு மாவட்டத்தில் 18 பஸ்களாகவும் கண்டி மாவட்டத்தில் 06 பஸ்களாகவும் இருந்தன. இது சம்பந்தமாக ஓடுதல் மற்றும் வருமானம் தொடர்பான விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. எனினும் Park and Ride செயற்திட்டத்திற்காக 25 GPS இயந்திரங்களை பஸ்ஸில்

பொருத்துவதற்காக இலங்கை போக்குவரத்து சபை பணத்தை செலவு செய்திருந்ததுடன் அந்த பஸ்கள் ஓடாததுடன் கமராக்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2022 யூன் 16 ஆந் திகதி வரை மீண்டும் அசோக் லேலன்ட் நிறுவனத்தின் 10 பஸ்களை வாடகை அடிப்படையில் பெற்று Park and Ride செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

ஒரு கொடவத்த எரிபொருள் நிரப்பு நிலையத்தை நிர்மாணித்தல்

இலங்கை போக்குவரத்துச் சபை 2018 மார்ச் 20 ஆந் திகதி ஒருகொடவத்த எரிபொருள் நிரப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ஒரு தனியார் கம்பனியுடன் ரூபா 61.01 மில்லியன் பெறுமதியான உடன்படிக்கை மேற்கொண்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் இச்செயற்பாடு 2018 யூன் 20 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2022 யூன் 16 ஆந் திகதி வரையும் இந்த நிர்மாண நடவடிக்கைகள் முடிவடைந்திருக்கவில்லை. இன்று வரை செலுத்தப்பட்டுள்ள முழுப்பணம் ரூபா 26.77 மில்லியன் ஆக இருந்ததுடன் இதன் நிர்மாணங்கள் தொடர்பான பெறுகை நடவடிக்கைகளானது பெறுகை வழிகாட்டிகளுக்கு முரணாக செய்யப்பட்டதனால் சபைக்கு ரூபா 2.10 மில்லியன் நிதிசார்ந்த நட்டம் ஏற்பட்டிருந்தது. மேலும் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தங்கள் பூர்த்தி செய்யப்படாமையால் சபைக்கு எரிபொருள் நிரப்பு நிலையத்தினை செயற்படுத்துவதனால் கிடைக்க கூடியதாக இருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது. அவ்வாறே கணக்காய்வு பரீட்சிப்பு சந்தர்ப்பத்தின் போது ரூபா 12.61 மில்லியன் பெறுமதியான 07 டீசல் மற்றும் பெற்றோல் பம்பிகள் அந்த நிலத்தில் எதுவித பாதுகாப்பு நடவடிக்கையும் இன்றி குவித்துவைக்கப்பட்டிருந்ததுடன் வைக்கப்பட்டிருந்த எரிபொருள் தாங்கிகளின் மூடிகள் ஒப்பந்தக்காரரால் அகற்றி எடுக்கப்பட்டிருந்தன.

09 காற்று வெளிப்படுத்தும் நிலையங்களை நிர்மாணித்தல்

இலங்கை போக்குவரத்துச் சபையினால் 09 மாகாணங்களிலும் 09 காற்று வெளிப்படுத்தும் நிலையங்களை நிர்மாணிப்பதற்கான உரிய உபகரண பொகுதிகள் 2018 ஏப்ரல் 26 ஆந் திகதி மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் வாகன வாயு வெளிப்படுத்தல் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடமிருந்து பொறுப்பேற்க்கப்பட்டிருந்ததுடன் இந்த நிலையத்தை நிர்மாணித்தலானது சாத்திய வள ஆய்வின்றி மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த காற்று வெளியாக்கல் நிலையங்களுக்கு மத்தியில் குருனாகல், மதவாச்சி ஆகியள நிலையங்களின் நிர்மாணிப்பு பூர்த்தியடைந்து திறக்கப்பட்டிருந்தும் சட்டரீதியான சிக்கலினால் மூடப்பட்டிருந்தன. இந்த நிலையங்களின் ரூபா 18.75 மில்லியன் பெறுமதியான இந்த இயந்திரங்கள் விளைவற்றுக் காணப்பட்டதுடன் இச்சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கு பொருத்தமான வகையில் உரிய சிவில் வேலைகளை நிர்மாணிப்பதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட தொகையான ரூபா 89.84 மில்லியனில் ரூபா 22.48 மில்லியன் மாத்திரம் கணக்காய்வுத் திகதியான 2022 ஏப்ரல் 30 ஆந் திகதியளவில் செலவு செய்யப்பட்டிருந்தது. 2022 மே 30 ஆந் திகதியளவிலும் அந்த நிர்மாணிக்கப்பட்ட நிலையம் விளைவற்றுக் காணப்பட்டது.

அதிசொகுசு பஸ்களில் கெமரா மற்றும் ஜி.பி.எஸ் (GPS) முறைமைக்காக தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்

இலங்கை போக்குவரத்துச் சபையின் 125 அதி சொகுசு பஸ்களுக்காக கெமரா மற்றும் ஸி.பி (GPS) முறைமையினைப் பேணுவதற்கு தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக சபை ஒரு தனியார் கம்பனியுடன் ரூபா 33.63 மில்லியனுக்கு உடன்படிக்கை மேற்கொண்டிருந்தது. இச்செயற்திட்டத்தினை மேற்கொள்வதற்கு முன்னர் தொடக்க சாத்தியவள ஆய்வு, கிரய பிரதிபலன் பகுப்பாய்வு, பிரதிபலன்களை முன்னறியும் முறைமை என்பவை தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. 125 அதிசொகுசு பஸ்களுக்காக ஜி.பி எஸ் (GPS) மென்பொருள் மற்றும் துணைக் கருவிகளைப் பொருத்துவதற்குரிய பெறுகை உடன்படிக்கையின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடப்பட வேண்டியுள்ள தாமதக் கட்டணமாகிய ரூபா 3.36 மில்லியன் வழங்குனரிடமிருந்து அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

இந்திய கடன் வசதிகளின் கீழ் பஸ்களை கொள்வனவு செய்தல்

இந்திய கடன் வசதிகளின் கீழ் 600 பஸ்களை வாகன அணியில் சேர்த்துக் கொள்வதற்காக ரூபா 3,506 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. பெறுகை நடைமுறைகளை பூர்த்தி செய்து 32 லிங்க்ஸ் ஆசனங்கள் கொண்ட 500 பஸ்களை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன் வழங்கல் ஒப்பந்தம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும் காணப்படுகின்ற டொலரின் பெறுமதி அதிகரிப்பின் அடிப்படையில் நிதிச் சிக்கலுக்கு அரசாங்கம் முகங் கொடுத்துள்ளமை மற்றும் 500 பஸ்களை கொள்வனவு செய்வதற்கு கடன் பணம் போதியதாக இல்லாமை என்பவற்றினால் 20 சதவீத முற்பணத்தை மாத்திரம் செலுத்தி மீண்டும் பஸ்களை கொள்வனவு செய்தல் நிறுத்தப்பட்டிருந்தது. 43 ஆசனங்கள் கொண்ட 100 பஸ்களை கொள்வனவு செய்தல் அமைச்சரவையினால் நிறுத்தப்பட்டிருந்ததுடன் அதற்குப் பதிலாக மின்சார பஸ்களை கொள்வனவு செய்வதற்கான இயலுமையினை ஆராய்ந்து பார்ப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

பஸ்கள் போதிளதாக இல்லாமை

2022 யூன் 16 ஆந் திகதியளவில் இலங்கை போக்குவரத்துச் சபையின் நாளாந்த பஸ் தேவைப்பாடு 7,339 ஆக இருந்ததுடன் இலங்கை போக்குவரத்துச் சபையில் காணப்பட்ட பஸ் அணி 6,951 ஆகும். இதில் 32 சதவீதம் ஓடமுடியாத நிலையில் காணப்பட்டது. ஓடுகின்ற 4,718 பஸ்களில் 2,742 பஸ்கள் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமைவாய்ந்தவைகளாகும்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் காணிகள்

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு பிராந்திய அலுவலகங்கள், டிபோக்கள், சாரதி பயிற்சி பாடசாலைகள் பிராந்திய வேலைத்தளங்கள் என்பன காணப்படுவதுடன் அவை பல்வேறு பிரதேசங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அந்த நிறுவனங்கள் அமைந்துள்ள காணிகள் சம்பந்தமான சட்டரீதியான உரிமையுள்ள குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள காணிகள் ஒப்படைப்பு அல்லது ஏனைய ஏதாவது வகையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள சபைக்குச் சொந்தமான அனைத்து காணிகள் என்பன தொடர்பாக சபையினால் நாளதுவரையாக்கப்பட்ட காணி தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. சபையின் அனைத்து காணிகளையும் அடையாளம்

காணல், உரிமையைத் தீர்த்துவைத்தல் அவற்றின் பெறுமதியை மதிப்பீடு செய்தல் என்பன மீளாய்வாண்டின் இறுதிவரை இடம்பெற்றிருக்கவில்லை. சபையிடமம் உள்ள பயன்படுத்துகின்ற காணிகள் பாதுகாப்பின்றி காடுகள் வளர்ந்து காணப்பட்டன.

இலங்கை போக்குவரத்துச் சபையின் வாகனங்களுக்கு அதிக பாதிப்புக்கள் ஏற்படுதல்

2022 மே மாதம் 09 ஆந் திகதி இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைமை அலுவலகத்திற்குரிய 02 வாகனங்கள் மற்றும் கம்பளை டிப்போவிற்குரிய ஒரு வாகனத்தை உள்ளடக்கி ரூபா 7.3 மில்லியன் பெறுமதியான 03 வாகனங்கள் ஆர்ப்பாட்ட களத்தில் ஏற்பட்ட மோதலின் போது அதிக அளவில் பாதிப்புக்குள்ளாகியிருந்தது.

அவ்வாறே 12 டிப்போக்களுக்குரிய ரூபா 60.90 மில்லியன் கிரயமான 18 பஸ்களும் ஆர்ப்பாட்டத்தினால் பாதிப்படைந்துள்ளதுடன் அதன் தேறிய பெறுமதி ரூபா 11.63 மில்லியனாகும்.

160 புகையிரத பெட்டிகளை கொள்வனவு செய்தல்

இந்திய கடன் உதவியின் கீழ் அமெரிக்க டொலர் 82.6 மில்லியன் (ரூபா 11,564 மில்லியன்) செலவு செய்து 160 புகையிரத பெட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் இன்றுவரை புகையிரதம் ஓடுவதற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளது 107 பெட்டிகள் மாத்திரமாகும். அதற்கிணங்க 53 பெட்டிகளை இதுவரை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

தயாரிக்கப்பட்ட பொறியியல் மதிப்பீட்டிற்கு இணங்க ஒரு பெட்டியினை பெற்றுக்கொள்ளும் கிரயம் அமெரிக்க டொலர் 0.3 மில்லியனாக இருந்த போதிலும் துறைமுகக் கட்டணம், காப்புறுதிக் கட்டணம், போக்குவரத்துக் கட்டணம் என்பவற்றை சேர்த்துக் கொள்கையில் அதன் உண்மையான செலவு அமெரிக்க டொலர் 0.558 மில்லியனாக இருந்தது.

160 புகையிரதப் பெட்டிகளில் 10 புகையிரத பெட்டிகள் மாத்திரம் பொறுப்பேற்கப்பட்டு அதற்கிணங்க ஏனைய 150 புகையிரத பெட்டிகள் பரீட்சிக்கப்படாது பெற்றுக்கொள்வதற்கு பொருத்தமானது என சிபார்சு செய்யப்பட்டிருந்தமையின் காரணமாக பின்வருமாறு தொழில்நுட்ப பொருள் விபரக் குறிப்பிற்கு மாற்றமாக இருந்தன என்பது அவதானிக்கப்பட்டது.

- புகையிரத பெட்டிகளின் நீளம், அகலம், உயரம் என்பன நியம தரத்தினை விட அதிகரிக்கப்பட்டிருந்தது.

- பேணப்பட வேண்டிய ஓடுதல் வேகம் 120 Kmh-1 ஆக இருந்தும் பொருள் விபரக்குறிப்புக்களுக்கு இணங்க வளைவுகளின் (Curve) ஆகக் குறைந்த ஆரை 150 மீற்றர்களாக இருந்த போதிலும் வலைத்தளங்களில் காணப்படுகின்ற வளைவுகளின் (Curve) ஆரை 90 மீற்றராக பயணம் செய்தலானது புகையிரம் வேகமாக பயணம் செய்தலானது புகையிரம் தண்டவாளத்திலிருந்து விலகுவதற்கும் விபத்துக்களுக்கும் காரணமாக இருந்தது என்பது அவதானிக்கப்பட்டதுடன் இதனை தவிர்ப்பதற்காக வேக எல்லையை விதிப்பதனூடாக ஏனைய புகையிரதங்களுக்கும் தாக்கம் ஏற்பட்டிருந்தது.

- புகையிரத விபரக் குறிப்பில் குறிப்பிட்ட அளவினை விட மூன்றாம் வகுப்பின் ஆசனங்கள் 82 வகுப்பின் இரண்டாம் ஆசனங்கள் 82 மற்றும் குளிர் காப்பு பெட்டிகளின் ஆசனங்கள் 70 ஆக 234 ஆசனங்கள் குறைவடைந்திருந்தன.

- தண்டவாளத்தின்உச்சியிலிந்து புகையிரத மேடைக்கு காணப்பட வேண்டிய அங்கீகரிக்கப்பட்ட உயரத்தினை விட இப்புகையிரதம் நிலம் வரை 400 mm அதாவது 16 அங்குலம் உயரத்தில் அதிகரித்திருந்தது.

கண்டி - கெடம்பேவிற்கு இடையே இரட்டை புகையிரத பாதையை நிர்மாணிப்பதற்கான செயற்திட்டம்

கண்டிக்கும் கெடம்டபேவிற்குமிடையே இரட்டை புகையிரதப் பாதையை நிர்மாணிப்பதற்காக ரூபா 47 மில்லியன் பெறுமதிக்காக ஒரு தனியார் நிறுவனத்தடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் அதன் நிர்மாண நடவடிக்கைகள் 2018 யூலை 30 ஆந் திகதிக்கு முன்னர் (இறுதி கால நீடிப்பு) செய்யப்பட வேண்டி இருந்த போதிலும் இதுவரை பூர்த்தி செயற்திட்டத்தின் வேலையை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. மேலும் 1/720 இலிருந்து 1/830 வரை மற்றும் 1/900 இலிருந்து 1/980 வரையான மொத்த நீளம் 190 மீட்டர் அளவான பகுதியின் நிர்மாண நடவடிக்கைகளிலிருந்து ஒப்பந்தக்காரர் விலகியிருந்ததுடன் அப்பகுதி திணைக்களத்தின் தலையீட்டில் தயாரிப்பதற்கு இணங்கி கொள்ளப்பட்டிருந்தும் இன்றுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- நியமத்திற்கு இணங்க ABC பரப்புதல் 10” ஆக இருக்க வேண்டிய போதிலும் பௌதீக பரீட்சிப்பின் போது அது 9.5 “, 7.25”, 9.6” முதலியவாறாக நியமத்தினை மீறிக் காணப்பட்டதுடன் Ballast ஈடுபடுத்தும் போது 8” இற்குப் பதிலாக 6.75”, 6”, 7.5” முதலியவாறாக நியமத்தினை மீறிக் காணப்பட்டன.

- இந்த இரட்டை பாதையை நிர்மாணிப்பதற்காக புகையிரத பாதுகாப்பு பகுதிக்குள் குடியிருக்கும் அதிகாரமற்ற 116 குடியிருப்பாளர்களை அப்புறப்படுத்துவதற்கு நீதிமன்ற கட்டளை வழங்கப்பட்டிருந்த போதிலும் இன்றுவரை 95 வீடுகளை அப்புறப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

- லொட் இலக்கம் 01 இலிருந்து லொட் இலக்கம் 28 வரை மற்றும் லொட் இலக்கம் 73 இலிருந்து லொட் இலக்கம் 88 வரை 44 குடியிருப்பாளர்களுக்கு கண்டி பல்லேகல பிரதேசத்தில் மாற்று இடம்வழங்கப்பட்டிருந்தும் வெல்லஸ்ஸ கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குரிய 17 குடியிருப்பாளர்கள் இன்னும் புகையிரத பாதுகாப்பு பகுதியில் குடியிருக்கின்றார்கள்.

- அப்புறப்படுத்தும் கட்டளை கிடைத்த 35 குடியிருப்பாளர்கள் விலகிச் செல்லாது இன்னும் அதிலேயே தங்கியிருக்கின்றமை அவதானிக்கப்பட்டது.

- இரட்டைப் பாதையின் முதலாம் கட்ட வேலை முடிவடைந்திருக்காத போதிலும் அதன் இரண்டடாவது கட்டமான கெடம்பேயிலிருந்து சரசவி உயன வரையான பாதை முறைமையை நிர்மாணிப்பதற்கான வேலை ஆரம்பிக்கும்

படியாக ரூபா 567 மில்லியன் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

மஹவ- அனுராதபுரம்- ஓமந்தை வரையான புகையிரதப் பாதையை திருத்தம் செய்வதற்கான செயற்திட்டம்

இந்திய எக்சீம் வங்கியுடன் மேற்கொள்ளப்பட்ட கடன் உடன்படிக்கைகளின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு மஹவ -அனுராதபுரம்- ஓமந்தை வரையான புகையிரதப் பாதையை திருத்தம் செய்வதற்காக Ircon International Limited நிறுவனத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின் பிரகாரம் 19.26 சதவீத கழிவுக்கு உட்பட்டு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் கலந்துரையாடி ஒழுங்குகள் செய்வதற்கு ஏனைய கேள்விதாரர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

பாதையை புனரமைப்பதற்கு சமாந்திரமாக சமிக்ஞை முறைமைகளையும் ஸ்தாபிக்க வேண்டிய போதிலும் சமிக்ஞை முறைமைகளை ஸ்தாபிப்பதற்குத் தேவையான வேலைத்திட்டங்களும் அதற்கான செலவு மதிப்பீடும் தயாரிக்கப்படவில்லை. மேலும் அச்செயற்பாட்டினை ஒப்பந்தக்காரரினூடாக மேற்கொள்வதா அல்லது திணைக்களத்தின் சமிக்ஞை பிரிவினால் மேற்கொள்வதா என்பது தொடர்பாக இன்று வரை இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது என்பது அவதானிக்கப்படவில்லை.

உரிய பாதைப் பகுதியில் 78 குறுக்கு வீதிகள் (Level Crossing) அடையாளம் காணப்பட்டிருந்ததுடன் அதில் 09 குறுக்கு வீதிகள் தற்பொழுது தடைகளுடன் முழுமையான பாதுகாப்பு கடவையானதுடன் 01 பெல்லும் லயிட்டும், இரண்டு பூட்டு போடப்படும் கடவைகளும், மிகுதியானவை மனிதர்களால் கட்டுப்படுத்தப்படும் கடவைகள் என அவதானிக்கப்பட்டது. பாதைகள் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் இக்கடவைகளுக்காக நிரந்தர வீதிப் பாதுகாப்பு வேலைத்திட்டத்தினை ஸ்தாபிப்பதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்திடமிருந்து எதிர்பார்த்த நிதிசார் செயல்முன்னேற்றம் 39 சதவீதமானதுடன் பௌதீக செயல்முன்னேற்றம் 38.5 சதவீதமுமாகும். எனினும் அடைந்துகொள்ளப்பட்ட நிதிசார் செயல்முன்னேற்றம் 23 சதவீதம் மற்றும் பௌதீக செயல் முன்னேற்றம் 27 சதவீதம் என அவதானிக்கப்பட்டது. இதற்கு காரணமாக போதியளவு பாதீட்டு நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படாமையும் திறைசேரியிடமிருந்து நிதி ஏற்பாடு கிடைக்காமையும் என சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு மற்றும் உள்ளபடியான செலவுகள் தொடர்பாக கவனத்தில் கொள்ளும் போது அவ்வாறான நிலைமை இல்லை என்பது அவதானிக்கப்பட்டது.

கொழும்பு புறநகர் புகையிரத செயற்திட்டம்- சாத்தியவள ஆய்வு

கொழும்பு புறநகர் புகையிரத செயற்திட்டத்தின் கீழ் 20 ஆண்டுகள் காலத்தின் போது நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை உள்டக்கிய சாத்தியவள ஆய்வு அறிக்கையும் விபரமான திட்டமும் 2021 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் பூர்த்தி செய்து உரிய வரிசை அமைச்சினூடாக இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த சாத்திய வள ஆய்விற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் வசதிகளின் கீழ் ரூபா 1,446 மில்லியன் பணம் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அக்கடனுக்கான கடன்

தவணைப் பணம் அமெரிக்க டொலர் 275,000 வீதம் அரையாண்டு ரீதியாக 2022 மார்ச் 15 மற்றும் 2022 செப்தெம்பர் 15 ஆந் திகதிகளில் செலுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. எனவே மேற்கூறிய சாத்தியவள ஆய்வு அறிக்கையானது அமுல்ப்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டதன் மூலம் பொருளாதாரத்திற்கு எதுவித பயன்பாடும் இல்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

புகையிரத பாதுகாக்கப்பட்ட காணிகளை குத்தகைக்கு வழங்குதல்

புகையிரத காணிகளை குத்தகைக்கு வழங்கும் போது முறைப்படியாக உடன்படிக்கை செய்து கொள்ளப்படாமை அனுமதியற்ற பயன்பாடு அனுமதியற்ற நிர்மாணங்கள் உபகுத்தகைக்கு வழங்குதல், உடன்படிக்கை நிபந்தனைகளை மீறுதல், வருமானங்களை முறைப்படியாக அறவீடு செய்யாமை,அவற்றின் உரிமை தொடர்பாக பிரச்சினைகள் என்பன உருவாகிய சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

L- 4731 (LC-32933) ஆம் இலக்கத்தின் கீழ் சட்ட ரீதியாக ஏனைய நபர்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த கம்பொல புகையிரத நிலையத்திற்கு அருகிலுள்ள புகையிரத பாதுகாக்கப்பட்ட காணியும் இன்னும் ஒரு பகுதியும் சேர்த்துக்கொள்ளப்பட்டு 02 ஏக்கர் 02 ரூட் 35.3 பேச்சஸ் காணி கம்பொல அபிவிருத்தி அதிகார சபைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- 16/1370/724/054 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரத்திற்கு இணங்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் III ஆவது பிரேரணையின் பிரகாரம் முத்தரப்பு புரிந்துணர்வு உடன்படிக்கையினை மேற்கொள்வதற்கு முன்னர் அதற்காக சட்டமா அதிபரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- பிரதம மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்ற வரிக்கு உட்பட்டு இந்த காணி நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட வேண்டுமென போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் சிபார்சு செய்திருந்த போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- கம்பொல நகர மத்திய அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக 2016 செப்தெம்ர் 10 ஆந் திகதி அடிக்கல் வைக்கப்பட்டிருந்ததுடன் கையொப்பமிடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் 12 ஆவது நிபந்தனையின் பிரகாரம் 2019 பெப்ரவரி 20 ஆந் திகதி வரை இந்த உடன்படிக்கை செல்லுபடியாகும் என காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க இன்றுவரை நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் குறிக்கோளினை நிறைவேற்றாமையின் அடிப்படையில் இத்திணைக்களத்தின் காணியின் உரித்தினை மீளப் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

புகையிரத காணிகளை ஒப்படைத்தல்

“பிபிதெமு பொலன்னறுவை” அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிதி நிலையத்தினை நிர்மாணிப்பதற்காக 03 ஏக்கர் 17 ரூட் 09 பேச்சர்ஸ் பரப்பளவுள்ள புகையிரத காணி நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கை காலத்தில் அதாவது 2022

பெப்ரவரி 21 ஆந் திகதி வரை அக்குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்காததுடன் எதிர்பார்த்த நிதிக் கம்பனிகளும் அச்செயற்திட்டத்தின் கீழ் இடவசதிகளை ஒதுக்கீடு செய்தல் இடம்பெற்றிருக்கவில்லை. அதற்கிணங்க உரிய குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு பரீட்சிப்பு திகதியான 2022 திசெம்பர் 16 ஆந் திகதி வரை முடியாதிருந்ததனால் அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட புகையிரத காணிகளின் உரித்தினை மீளப்பெற்றுக்கொள்வதற்கு நிருவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

எம் 6 வகுப்பு புகையிரத இன்ஜினுக்கான உதிரிப் பாகங்களை கொள்வனவு செய்தல்

எம் 6 வகுப்பு புகையிரத இன்ஜினுக்கான உதிரிப் பாகங்களை கொள்வனவு செய்யும் போது பொருள் தட்டுப்பாடு அல்லது சேதமடைதல் சம்பந்தமாக பொருட்கள் துறைமுகத்திற்கு கிடைத்து 45 நாட்களுக்குள் வழங்குனருக்கு தெரியப்படுத்த வேண்டிய போதிலும் புகையிரத திணைக்களத்தினால் வழங்குனருக்கு பொருட்கள் குறைவாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என 03 ஆண்டுகளுக்குப் பின்னர் தெரிவிக்கப்பட்டுள்ளதனால் ரூபா 12 மில்லியன் தொகையான நிலுவைப் பொருட்களை வழங்குதல் அல்லது பெறுமதியை மீளச் செலுத்தலினை வழங்குனர் நிராகரித்திருந்ததுடன் இதற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 14.54 மில்லியனுக்கு அண்மித்த பணம் விளைவற்ற செலவாக மாறியிருந்தது.

பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

எஸ் 8 வகுப்பு புகையிரத இன்ஜினுக்காக உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்யும் போது 2019 ஏப்ரல் 10 ஆந் திகதி புகையிரத திணைக்களத்திற்கு கிடைத்திருந்த ரூபா 16 மில்லியன் பெறுமதியான உதிரிப்பாகங்களின் இருப்பு 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளாது களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டன.

வழங்கப்படாத பொருட்களுக்காக கொடுப்பனவு செய்தல்

பொருட்கள் உரிய நியம தரத்திலும் சரியான அளவிலும் பெற்றுக்கொள்ளப்பட்டது என கொடுப்பனவுகளை சான்றுபடுத்தும் உத்தியோகத்தரினால் சான்றுபடுத்தியதன் பின்னர் களஞ்சிய வழங்கல்களுக்காக கொடுப்பனவு செய்ய வேண்டிய போதிலும் புகையிரத திணைக்களத்திற்கு வழங்கப்படாத பொருட்களுக்காக ரூபா 90 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

தீர்த்து வைக்கப்படாத நாணய கடிதம்

2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் புகையிரத திணைக்களத்தின் தீர்த்துவைக்கப்படாத நாணயக் கடிதத்தின் பெறுமதி ரூபா 616 மில்லியனாக இருந்ததுடன் அதில் 19 சதவீதமான ரூபா 116 மில்லியன் 02 ஆண்டுகளுக்கும் 23 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட பழைய மீதியாகும். பணம் செலுத்தி 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் இம்மீதிகளைத் தீர்த்துவைக்கப்படாமைக்கான காரணம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் ரூபா 116 மில்லியனுக்கு மேற்பட்ட இக்கொடுப்பனவுகள் வழங்கப்படாத பொருட்களுக்காக வழங்குனருக்குச் செலுத்தப்பட்டுள்ள பணம் என்பது கணக்காய்வில் சச்சரவுத்தன்மையானதாகும்.

இலங்கை புகையிரதத்தின் பிரதான திட்டம்

2017 ஆம் ஆண்டின் போது ஆசிய அபிவிருத்தி வங்கியின் மானியத்தின் (உடன்படிக்கை இலக்கம் TA 9382 -SRI

27-10-2017) கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட அமெரிக்க டொலர் 1.5 மில்லியன் செலவு செய்து புகையிரத திணைக்களத்திற்காக பிரதான செயற்பாட்டு திட்டத்தினை (Master Plan) தயாரிப்பதற்காக 2017 ஒக்தோபர் 27 ஆந் திகதி உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்ததுடன் செயற்திட்டம் 2022 யூன் 30 ஆந் திகதி பூர்த்திசெய்யப்பட வேண்டிய போதிலும் 2021 யூன் 30 ஆந் திகதி வரை கால நீடிப்பு செய்யப்பட்டிருந்தது. ஆசிய அபிவிரத்தி வங்கி மூலங்களுக்கு இணங்க 2021 யூலை 05 ஆந் திகதி வரை இதற்காக விடுவிக்கப்பட்ட நிதி ஏற்பாடு அமெரிக்க டொலர் 1,056,555.63 ஆகும். எவ்வாறாயினும் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத்திட்டம் தொடர்பான விபரம் சமர்ப்பிக்கப்படாததுடன் ஆசியள அபிவிருத்தி வங்கியினால் வழங்கிய மானியங்கள் போக்குவரத்து அமைச்சின் பாதீட்டில் அல்லது நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை.

வருமானம்

ரூபா 2,678 மில்லியனான இலங்கை புகையிரத திணைக்களத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான வருமானம் ரூபா 4,566 மில்லியனான 2020 ஆம் ஆண்டிற்கான வருமானத்தினை விட 41 சதவீதத்தினாலும் ரூபா 7,901 மில்லியனான 2019 ஆம் ஆண்டிற்கான வருமானத்தினை விட 66 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தது.

நிலுவையாக இருந்த வருமானங்கள் அறவீடு செய்யப்படாமை

இல்ங்கை புகையிரத திணைக்களத்தின் மீளாய்வாண்டின் இறுதியில் புகையிரத அனுமதிப்பத்திர நிலுவை வருமானம் ரூபா 809.66 மில்லியனாகஇருந்தது. அந்த நிலுவையாக இருந்த வருமானத்தில் 1987 இற்கு முன்னரிலிருந்து அரசாங்கத்தின் 197 நிறுவனங்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 7.38 மில்லியனும் 1990 இற்கும் 2020 இற்கும் இடைப்பட்ட காலத்தில் அரசாங்கத்தின் 187 நிறுவனங்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1.76 மில்லியனும் ஆக ரூபா 9.13 மில்லியன் நிலுவையான அனுமதிப்பத்திர வருமான மீதி அவதானிக்கப்பட்டது. மேலும் புகையிரத்தின் மூலம் பொருட்களை எடுத்துச் செல்வதற்காக மீளாய்வாண்டின் இறுதியளவில் 31 நிறுவனங்களிடமிருந்து மொத்தமாக ரூபா 120.47 மில்லியன் நிலுவையாகக் காணப்பட்டதுடன் அதனுள் 16 நிறுவனங்களிடமிருந்து கிடைக்கவேண்டிய ரூபா 20.31 மில்லியன் 21 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமைவாய்ந்ததாக இருந்ததுடன் 05 ஆண்டுகளை மிகைத்த நிலுவையான வியாபார விலைப்பட்டியலின் பெறுமதி ரூபா 1.7 மில்லியனாகும். மேலும் மீளாய்வாண்டின் இறுதிவரை புகையிரத நிலையங்களிலிருந்து அறவிட வேண்டிய பயணிகள் வருமானம் ரூபா 12.75 மில்லியனாகும்.

துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அலுவல்கள

கணக்காய்வு அவதானிப்புக்கள்

- பிரதான அபிவிருத்தி செயற்திட்டங்களை செயற்படுத்துதல
- அரச துறை கப்பல் பண்டங்கள் இறக்குமதி செய்தல்
- கொள்கலன்கள் செயற்பாட்டு அலுவல்களில் சர்வதேச இடம் மற்றும் துறைமுக அதிகார சபையின் சந்தைப் பகுதி
- கப்பற் பண்டங்களின் செயற்பாட்டு அலுவல்கள்
- கொழும்புத் துறைமுகத்துக்கு படகுகள் வருகை (வருகை)
- முடிவுமுனை செயற்பாட்டு அலுவல்கள் குறைவடைதல்
- கிழக்கு கொள்கலன் முடிவுமுனையின் குறை பயன்பாடு
- ஹம்பாந்தோட்டை துறைமுகம் நிர்மாணிப்பதற்காக பெற்றிருந்த வெளிநாட்டுக் கடன
- நிருவகிக்கப்படும் கம்பனி ஒன்றினால் பெற்றிருந்த கடனிற்காக பிணை நிற்றல்
- CCTV கெமரா முறையை பொருத்தப்படாமை
- சுங்கத்தினால் விதிக்கப்பட்டிருந்த தண்டப்பணம்
- துறைமுக அதிகார சபைக்கு திறைசேரியில் இருந்து கிடைக்க வேண்டிய பணம்
- சொத்துக்கள் மீளாய்வு
- நிதி அதிகாரச் சட்டத்திற்கு மற்றும் துறைமுகங்கள் தொடர்பான அதிகாரச் சட்டத்திற்கு இணக்கமின்மை
- துறைமுகங்கள் சட்டத்திற்கு இணக்கமின்மை
- முறைப் பிரகாரம் காணிகளை உரித்தாக்கியிருக்காமை
- தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள்
- சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள
- இழப்பீடு
- மூலதனப்படுத்தப்படாத இனங்காணப்படாத கொள்வனவுகள்
- இலங்கை துறைமுக அதிகார சபைக்கு உரித்தாக்கப்பட்டிருக்காத பங்கு உரிமைகள்
- மனிதவள முகாமைத்துவம்
- நிருவகிக்கும் கம்பனிக்கு கொள்கை ஒன்று தயாரித்திருக்காமை
- தாமதமாகிய செயற்திட்டங்கள்
- முடிவுமுனை சேவை உடன்படிக்கைகளுக்கு முரணாக கப்பல் முகவர் நிறுவனங்களுக்காக தள்ளுபடி வழங்குதல்

துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அலுவல்கள்

தென் ஆசிய வலயத்தில் கடற்படை செயற்பாடுகளின் மிகவும் போட்டியான கேந்திர நிலையமொன்றாக இலங்கையை அபிவிருத்தி செய்து உயர்தர நிலைமையில் பயன்படுத்துவோருக்கு நட்பு கப்பல் சேவையை வழங்கும் தூர நோக்கத்துடன் செயல்படுகின்ற துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சு மற்றும் அதன் கீழ் பண்டகசாலை வசதிகள், கொள்கலன் முற்றங்கள், துறைமுக வழங்கள் வசதிகள் மற்றும் படகு மற்றும் கப்பல் கைத்தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு மற்றும் 03 நியதிச்சட்ட சபைகளினால் கீழே காட்டப்பட்டுள்ள செயற்பாடுகள் மற்றும் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியதாக உள்ளன.

- கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை கடற்துறைமுகங்கள் வாணிப மற்றும் பயணிகள் துறைமுகங்களாக விருத்தி செய்தலும் விரிவாக்குதலும்.
- ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை பொறிசார் மற்றும் சேவைத் துறைமுகமாக அபிவிருத்தி செய்தலும், கப்பல்களை பராமரித்தல், புதுப்பித்தல் மற்றும் கப்பல்களுக்குத் தேவையான பொருட்களை வழங்குதல் போன்ற சேவைகளை வழங்குவதற்காக உள்நாட்டு வியாபாரங்களுக்கு வசதிகளை ஏற்படுத்துதல்.
- தனியார் துறையின் பங்கு கொள்ளலில் பேலியகொட, வியாங்கொட மற்றும் இரத்மலானை ஆகிய பிரதேசங்களில் வீதிகள் மற்றும் புகையிரத தொடர்பினை அடிப்படையாகக் கொண்ட கொள்கலன் முற்றங்களை அபிவிருத்தி செய்தல்.
- மீள்கப்பல் ஏற்றுகைகள் வழிநடத்தும் இயலளவு, களஞ்சிய வசதிகள் கொள்கலன் முனையங்கள் வழங்கல் வசதிகள் மற்றும் இயந்திரப் படகுகள் அத்துடன் கப்பற்துறை அபிவிருத்தியை மேம்படுத்தல்.
- பிராந்திய தேவைகள் மற்றும் தேசிய பொருளாதாரத்தின் தேவைக்கேற்ப காலி, காங்கேசன்துறை மற்றும் திருகோணமலை துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல்.
- தேசிய கைத்தொழிலாக கடற்றொழில், கப்பற்துறை மற்றும் சுற்றுலாத்துறை என்பவற்றுக்குத் தேவையான இயந்திரப் படகுகளைத் தயாரித்தலும், மேம்படுத்தலும்.
- வெளிநாட்டு சந்தை தேவைகளை இலக்காகக் கொண்டு ஏற்றுமதிக்காக கப்பல்கள் மற்றும்இயந்திரப் படகுகளை பராமரித்தல், திருத்தல் மற்றும் உற்பத்தி அலுவல்களை மேம்படுத்தலும்.
- கப்பல்கள் மற்றும் இயந்திரப் படகுகளைத் தயாரிப்பதற்குத் தேவையான பொறியியல் மற்றும் தொழில்நுட்ப வசதிகளும் அந்த தயாரிப்புகளுக்குத் தேவையான கப்பற் கட்டும் இடங்கள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.
- இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை மற்றும் இலங்கைச் சுங்கத்துடன் ஒருங்கிணைந்து செயற்படல்.

2021 ஆண்டின் மேற்கூறிய பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அலுவல்கள் அமைச்சுக்கு பண்டகசாலை வசதிகள் கொள்கல முற்றவெளி துறைமுக

வழங்கள் வசதிகள் மற்றும் வள்ளங்கள் மற்றும் கப்பல் கைத்தொழில் அமைச்சுக்கு கூட்டுத்தொகை ரூபா 2,883 மில்லியனிற்கான ஏற்பாடுகள் பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதிவரை அவற்றில் ரூபா 1,612 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் வரைபடம் இலக்கம் 29 இல் காண்பிக்கப்படுகின்றது.



உரு 29 – மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினம் மூலம் - 2021 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை

துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சில் மற்றும் அதன் கீழ் காணப்படும் இராஜாங்க அமைச்சுக்கள் மற்றும் 03 நியதிச் சட்ட சபையினால் மேற்கூறிய கருமங்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட பொருண்மையான மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்களின் பொழிப்பாக கீழே காட்டப்பட்டுள்ளது.

பிரதான அபிவிருத்தி செயற்திட்டங்களை செயற்படுத்துதல்

துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அலுவல்கள் அமைச்சின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் கொழும்பு வடக்கு துறைமுக அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக சாத்தியக்கூறு ஆய்வறிக்கையொன்று தயாரிப்பதற்காக ரூபா 380 மில்லியனிற்கான தேறிய ஏற்பாடுகளின் சதவீதம் என சேமிப்பு 24 சதவீதமும் துண்கள் மீது நிர்மாணிக்கப்பட்டு வரும் துறைமுக நுழைவு அதிவேகப் பாதை செயற்திட்டத்திற்காக தேறிய ஏற்பாடுகளாகிய

ரூபா 210 மில்லியன் தொகையின் சேமிப்பு 48 சதவீதமாக காணப்பட்டது. மேலும், இந்த 2 செயற்திட்டங்களின் திட்டமிடப்பட்ட செயற்திட்ட கருமங்கள் திட்டமிடப்பட்டவாறு ஆண்டின் போது செயற்படுத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட முடியாமல் போனதால் செயலாற்றுகை முறையை 75 சதவீதம் மற்றும் 12 சதவீத மட்டங்களில் காணப்பட்டது.

அரச துறை கப்பல் பண்டங்கள் இறக்குமதி செய்தல்

2016 ஜனவரி 13 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள் உட்பட அனைத்து அரச நிறுவனங்களினாலும் 2005 மே 06 திகதிய 415 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அரச துறையின் கப்பல் பண்ட இறக்குமதி செய்தல் வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. அதேபோல் 2016 பெப்ரவரி 18 திகதிய 03 இலக்க பொது நிதிச் சுற்றுநிருபத்தின் மூலமும், 2016 ஆகஸ்ட் 11 திகதிய இலங்கை மத்திய வங்கியினால் வாணிப வங்கிகளுக்கு வழங்கியிருந்த அறிவுரைகள் மூலமும் அரச துறையின் பண்டங்களின் இறக்குமதி வ/ப இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், கம்பனியின் சேவையை பெற்றக்கொள்ளும் அரச நிறுவனங்களின் எண்ணிக்கை வரையறையாக காணப்பட்டதுடன், பாரிய அளவில் இறக்குமதி அலுவல்களில் ஈடுபடும் அரச நிறுவனங்கள் கம்பனியின் சேவையை பெற்றிருக்கவில்லை. அதேபோல், சில அரச நிறுவனங்கள் ஏனைய வெளிநாட்டு கப்பல் கம்பனிகள் மூலம் இறக்குமதிகளை மேற்கொள்ளப்படுவதற்கு விண்ணப்பிக்கப்பட்டதென கண்டறியப்பட்டது. 2017 ஆண்டில் அவ்வாறான விண்ணப்பிக்கப்பட்ட 700 சந்தர்ப்பங்களை விட மிகையான எண்ணிக்கையாகவும், 2018 ஆண்டில் 538 சந்தர்ப்பங்களுக்காகவும், 2019 ஆண்டில் 486 சந்தர்ப்பங்களுக்காகவும், 2020 ஆண்டில் 492 சந்தர்ப்பங்களுக்காகவும், 2021 ஆண்டில் 347 சந்தர்ப்பங்களுக்காகவும் கம்பனியினால் கைவிடல் அறிவித்தல் கடிதம் (waivers) வழங்கப்பட்டு ஏனைய நிறுவனங்களின் மூலம் இறக்குமதி வசதிகள் பெற்றுக்கொள்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. இதன்படி, அரச நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற பண்டங்கள் இறக்குமதி செய்தல் மற்றும் தொடர்புடைய வர்த்தக சந்தர்ப்பங்கள் கம்பனிக்கு பெற்றுக்கொள்வதற்காக பொருத்தமான செய்முறையொன்று அமுல்நடாத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. மேற்கூறிய சுற்றறிக்கையின் மூலம் கம்பனியின் சந்தைப் பகுதியை விரிவாக்கிக் கொள்வதற்காக வழங்கப்பட்டிருந்த அரச அனுசரணைகளை பாராட்டத்தக்க வகையில் ஈடுபடுத்துவதற்கு வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கம்பனியினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

கொள்கலன்கள் செயற்பாட்டு அலுவல்களில் சர்வதேச இடம் மற்றும் துறைமுக அதிகார சபையின் சந்தைப் பகுதி

2021 ஆண்டிற்காக உலக துறைமுகங்களில் கொள்கலன்களை செயற்படுத்துவது தொடர்பான எல்பாலய்ன் அமைப்பினால் வெளியிடப்பட்ட தரப்படுத்தல் அறிக்கை (Alpha Liner Report) படி கொழும்புத் துறைமுகம் இருபது சமமான அலகுகள் (Twenty Equivalent Units) 7,249,358 தொகை செயற்பாடுகள் மேற்கொண்டு இந்த ஆண்டில் உலக துறைமுகங்களில் 22 ஆவது இடத்தை பிடித்துள்ளது. அந்தஅறிக்கையின் படி 2020 ஆண்டிற்கு ஒப்பாக கொழும்புத்

துறைமுகத்தின் கொள்கலன்கள் செயற்பாட்டு அலுவல்களில் 5.8 சதவீத முன்னேற்றம் ஒன்றை நெருங்கியிருந்ததுடன், இலங்கை துறைமுக அதிகார சபைக்குரிய முடிவுமுனைகளில் அந்த அதிகரிப்பு 4.8 சதவீதமாகக் காணப்பட்டது.

கப்பற் பண்டங்களின் செயற்பாட்டு அலுவல்கள்

கொழும்பு, காலி, ஹம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை ஆகிய பிரதான துறைமுகங்களுக்கு 2017 ஆண்டின் போது வந்திருந்த கப்பல்களின் எண்ணிக்கை 4,942 ஆக இருந்த போதிலும், 2021 ஆண்டளவில் அந்த எண்ணிக்கை 4,180 வரை குறைவடைந்திருந்தது. எவ்வாறியினும், செயற்படுத்தப்பட்ட இருபது சம (TEUs) கொள்கள அலகு எண்ணிக்கை 2016 இல் 5.7 மில்லியனில் இருந்து 2021 ஆண்டில் 7.2 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. அதே போல் செயற்படுத்தப்பட்ட வழமையான கப்பற் பண்ட எண்ணிக்கை 2018 ஆண்டில் 10.1 மில்லியன் மெற்றிக் தொன்னில் இருந்து 2021 ஆண்டளவில் 9.2 மில்லியன் மெற்றிக் தொன் வரை குறைந்திருந்தது. விபரங்கள் அட்டவணை 21 இல் காண்பிக்கப்படுகின்றது.

விபரங்கள்	2016	2017	2018	2019	2020	2021
வந்திருந்த கப்பல்களின் எண்ணிக்கை	5,023	4,942	4,933	4,708	4,337	4,180
செயற்படுத்தப்பட்ட இருபதுசம (TEUs) கொள்கள அலகுகளின் எண்ணிக்கை (அலகு 000)	5,735	6,209	7,047	7,228	6,854	7,249
செயற்படுத்தப்பட்ட வழமையான கப்பற் பண்ட எண்ணிக்கை (மெ.தொ. 000)	8,197	9,210	10,136	9,530	8,894	9,229

அட்டவணை 21 - பிரதான துறைமுகங்களின் செயற்படுத்தப்பட்ட கொள்கள அலகுகள் மற்றும் வழமையான கப்பற் பண்ட எண்ணிக்கை

மூலம் :- இலங்கை துறைமுக அதிகார சபையின் செயலாற்றுகை மீளாய்வு அறிக்கை

கொழும்புத் துறைமுகத்துக்கு படகுகள் வருகை (வருகை)

முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது கொழும்பு துறைமுகத்துக்கு கொள்களன்கள் தாங்கிய படகுகள் 131 படகுகள் எனப்படும் 3.4 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. 2016 ஆண்டு முதல் கொள்களப் படகுகள் வரவுகளின் எண்ணிக்கை படிப்படியாக குறைந்துள்ளது என அவதானிக்கப்பட்டதுடன் மத்திய மற்றும் சிறிய எண்ணிக்கையான படகுகளுக்கு பதிலாக பாரிய அளவிலான படகுகள் வருதல் இதற்கான காரணமாக இருந்தது. விபரங்கள் வரைபடம் 30 இல் மற்றும் வரைபடம் 31 இல் காட்டியவாறாகும்.



வரைபடம் 30 - கொழும்பு துறைமுகத்திற்கு படகுகள் வருகை (வரவு) – வகைப்படுத்தலுடன்

மூலம் - இலங்கை துறைமுக அதிகார சபையின் செயலாற்றுகை மீளாய்வு அறிக்கை



வரைபடம் 31 - கொழும்புத் துறைமுகத்துக்கு படகுகள் வருகை (வரவு) – மொத்த படகுகளின் எண்ணிக்கை

மூலம் - இலங்கை துறைமுக அதிகார சபையின் செயலாற்றுகை மீளாய்வு அறிக்கை

முடிவுமுனை செயற்பாட்டு அலுவல்கள் குறைவடைதல்

கொழும்புத் துறைமுகத்தினால் 2001 ஆண்டில் கொள்கலன் அலகுகள் 1,726,616 தொகை செயற்படுத்தப்பட்டு இருந்ததுடன் 2021 ஆண்டளவில் அந்த எண்ணிக்கை கொள்கல எண்ணிக்கை 7,249,358 வரை அதிகரித்திருந்தது. இந்த கொள்கல செயற்பாட்டு அலுவல்களின் போது கொழும்பு துறைமுகத்தினுள் இலங்கை துறைமுக அதிகார சபையின் சந்தைப் பகுதி 2001 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை இருபத்தொரு வருட காலப் பகுதியினுள் 81 சதவீதம் முதல் 30 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. கொழும்புத் துறைமுகத்தில் நீண்டகால குத்தகை அடிப்படையில் தனியார் துறைக்கு வழங்கியிருந்த இரண்டு முடிவுமுனைகளில் போட்டி அடிப்படையில் செயற்படும் இரண்டு தனியார் கம்பனிகளில் 2013 ஆண்டின் போது செயற்பாட்டு அலுவல்கள் ஆரம்பித்திருந்த கம்பனி 45 சதவீத சந்தைப் பங்கையும், 2001 ஆண்டில் செயற்பாடுகள் ஆரம்பித்திருந்த கம்பனி 25 சதவீத சந்தைப் பங்கையும் 2021 ஆண்டு அளவில் உரித்தாகியிருந்தது. கடந்த இருபத்திரண்டு வருடங்களில் கொள்கலன்களை செயற்படுத்துவது தொடர்பான விபரங்கள் அட்டவணை 22 உள்ளவாறாகும்.

ஆண்டு	ஜயா கொள்கலன் முடிவுமுனை (வருடாந்த முடிவு முனையின் கொள்திறன் கொள்கல அலகு மில்லியன் 2.750)	சதவீதம்	தெற்காசிய நுழைவு முனை (SAGT) (வருடாந்த முனைவு கொள்திறன் கொள்கல அலகுகள் மில்லின் 1.950)	சதவீதம்	கொழும்பு சர்வதேச கொள்கல முடிவு முனை (CICT) (வருடாந்த முடிவுமுனைவு கொள்திறன் கொள்கல அலகுகள் மில்லியன் 2.400)	சதவீதம்	மொத்த கொள்கலன் அலகுகள்
2001	1,396,946	81	229,670	19			1,726,616
2002	1,206,694	68	558,025	32			1,764,717
2003	1,334,900	68	624,439	32			1,959,339
2004	1,320,845	59	899,720	41			2,220,565
2005	1,523,794	62	931,526	38			2,455,300
2006	1,743,669	57	1,335,411	43			3,079,078
2007	1,834,734	54	1,546,497	46			3,381,231
2008	1,747,670	53	1,739,668	47			3,687,338
2009	1,714,488	49	1,749,809	51			3,464,297
2010	2,167,173	52	1,970,268	48			4,137,441
2011	2,299,446	54	1,963,441	46			4,262,887
2012	2,316,849	55	1,870,271	45			4,187,120
2013	2,501,863	58	1,746,802	41	57,541	1	4,306,206
2014	2,559,339	52	1,661,940	34	686,636	14	4,907,915
2015	2,252,323	44	1,371,245	26	1,561,899	30	5,185,467
2016	2,100,117	37	1,632,207	28	2,002,599	35	5,734,923
2017	2,010,702	32,	1,809,835	29	2,388,531	39	6,209,068
2018	2,304,534	33	2,066,758	29	2,676,194	38	7,047,486
2019	2,282,618	32	2,052,153	28	2,893,566	40	7,228,337

2020	2,097,804	31	1,872,052	27	2,884,906	42	6,854,762
2021	2,198,334	30	1,838,693	25	3,212,331	45	7,249,358

அட்டவணை 22 – கடந்த இருபத்தொரு வருடங்களில் கொள்கலன்களின் செயற்பாடு தொடர்பான விபரங்கள்



வரைபடம் 32 - இலங்கை துறைமுக அதிகார சபையின் முடிவுமுனை செயற்பாட்டு அலுவல்கள்

மூலம் - இலங்கை துறைமுக அதிகார சபையின் செயலாற்றுகை மீளாய்வு அறிக்கை

கிழக்கு முடிவுமுனையில் நிர்மாண வேலை பூர்த்திகள் செய்யப்பட்டிருந்த பகுதியில் செயற்பாட்டு அலுவல்கள் 2021 ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தமையால் 2021 ஆண்டு முதல் இலங்கை துறைமுக அதிகார சபையின் முடிவுமுனை கொள்திறன் (அலகுகள் மில்லியன் 2.75+0.80) 3.55 மில்லியன் அலகுகள் வரை அதிகரித்திருந்தது.

மேற்கூறிய தரவுகளின் படி இலங்கை துறைமுகங்கள் அதிகார சபைக்கு கொள்கலன்களை செயற்படுத்துவதற்காக உரித்தாகியிருந்த சந்தைப் பகுதி படிப்படியாக தனியார் துறைக்கு வலைந்து சென்று காணப்பட்டது. அதிகார சபையின் கொள்கல செயற்பாட்டு அலுவல்கள் தொடர்பாக முடிவுமுனை பயன்படுத்தும் சதவீதம் (Terminal Occupancy Ratio) கவனத்தில் எடுத்த போது 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது 65 சதவீதம், 70 சதவீதம், 72 சதவீதம் மற்றும் 70 சதவீதமாக காணப்பட்டது. அதன்படி அதிகார சபையின் முடிவுமுனைகளைப் பயன்படுத்தும் சதவீதம் 2021 ஆண்டில் இரண்டு சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. மேலும், அதிகார சபையின் முடிவுமுனை கொள்திறன் பயன்பாடு 62 சதவீதமாக இருந்தது. எவ்வாறாயினும் தனியார் துறையினால் செயற்பாடு மேற்கொள்ளும் ஒரு முடிவுமுனையின் இயலளவும் பயன்பாடு 134 சதவீதமாக காணப்பட்டதுடன், அடுத்த முடிவுமுனை இயலளவு பயன்பாடு 94 சதவீதம் என அவதானிக்கப்பட்டது.

கிழக்கு கொள்கலன் முடிவுமுனையின் குறை பயன்பாடு

கொழும்பு துறைமுகத்தில் தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள கொள்கலன்களை நடாத்துவதற்காக முடிவுமுனைகளில் (terminal) ஆளமான (Draft) 14.25 மீற்றரை

விட கூடுதலான ஆளமான நீர்த் தேக்கத்துடனான பாரிய எண்ணிக்கையான கப்பல்கள் வரக்கூடிய முடிவுமுனை கொழும்பு சர்வதேச கொள்கல முடிவுமுனை (CICT) மற்றும் கிழக்கு கொள்கல முடிவுமுனை (ECT) ஆகும். கொழும்பு சர்வதேச கொள்கல முனைவின் கொள்திறன் ஒரு ஆண்டிற்கு இருபதுசம அலகுகள் 2.4 மில்லியன் ஆகும். 2021 ஆண்டின் போது அந்த முடிவுமுனை 1,027 கப்பல்கள் வந்திருந்ததுடன் மொத்த கொள்கல அலகுகள் 3.2 மில்லியனை விட கூடிய எண்ணிக்கை செயற்படுத்தப்பட்டிருந்தது. அது உச்ச கொள்திறமை மிகைத்திருந்ததென அவதானிக்கப்பட்டது.

கொழும்பு துறைமுகத்தை விரிவாக்கும் செயற்திட்டத்திற்காக இலங்கை வங்கியினால் நிதியம் வழங்கப்பட்டு கொள்கல அலகு 0.8 மில்லியனுக்கான வருடாந்த கொள்திறனுடனான நிர்மாண வேலை ரூபா 11,168 மில்லியன் கிரயத்திற்கு 18 மீற்றர் ஆளமுடைய மற்றும் 440 மீற்றர் நீளமுடைய கிழக்கு கொள்கல முடிவுமுனை கட்டம் 1 இன் நிர்மாண வேலைகள் 2016 ஏப்ரல் மாதத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. ஐய கொள்கல முடிவுமுனை கொள்வனவு செய்திருந்த கப்பலில் இருந்து தரைவரையான செயற்பாட்டு அலுவல்கள் மேற்கொள்ளக் கூடிய மூன்று பாரந்தூக்கி பொறிகள், 2020 பெப்ரவரி 07 திகதிய PA/HD/25 இலக்கங் கொண்ட பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் படி கிழக்கு கொள்கல முடிவுமுனையில் (ECT) பொருத்தி, அதன் செயற்பாட்டு அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. பின்னர் 2021 பெப்ரவரி 09 திகதி அமப/**21/0198/328/005/**டீபீஆர் இலக்கங் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் கிழக்கு கொள்கலன் முடிவுமுனையை அபிவிருத்தி செய்தல், செயற்பாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக மற்றும் இலங்கை துறைமுக அதிகார சபையின் முழுமையான உரித்துள்ள கொள்கல முடிவுமுனை ஒன்றென செயற்பாட்டு அலுவல்கள் மேற்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி 2021 ஆண்டினுள் 30 கொள்கல கப்பல்கள் (பாரிய அளவிலானவை அல்ல) முடிவுமுனைக்கு வந்திருந்ததுடன் 106,454 கொள்கலன்கள் செயற்படுத்தப்பட்டிருந்தது. அதன் படி முனைவின் பயன்பாடு 13.3 சதவீதமாக இருந்தது. முடிவுமுனையின் செயற்பாட்டுக் கொள்திறனை உச்சமட்ட அளவில் பயன்படுத்துவதற்கு தேவையான கப்பலில் இருந்து தரைக்கு செயற்பாட்டு அலுவல்கள் மேற்கொள்ளக் கூடிய பாரிய அளவிலான 03 பாரந்தூக்கி பொறிகள் 282.56 மில்லியன் அமெ.டொ. மதிப்பீட்டுக் கிரயத்திற்கு கொள்வனவு செய்வதற்காக இலங்கை துறைமுக அதிகார சபை ஒப்பந்தக்காரர் ஒருவருடன் 2021 மே மாதத்தில் உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 2021 திசெம்பர் 18 திகதி வழங்கல் ஒப்பந்தவேலை ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் படி வேலை ஆயத்துக்கான முற்பணம் 56.51 மில்லியன் அமெ.டொ. காணப்பட்ட போதிலும் அவற்றில் 2022 ஜுன் 20 திகதி வரை ஐ.அ.டொ. 18 மில்லியன் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்ததுடன், மீதித் தொகை செலுத்த முடியாமல் இருந்தது. அதிகார சபையினால் வங்கியில் அதிகார சபைக்குரிய டொலர் வைப்புக்களில் இருந்து இந்த பணத்தை விடுவிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் கொடுப்பனவை ஒப்பந்தக்காரருக்கு விடுவிப்பதற்காக வங்கிக்கு முடியாமல் இருந்தது. வேலை ஆயத்தப்படுத்துவதற்கான முற்பணத் தொகையை முழுமையாக செலுத்தியிருக்காமையால் பாரந்தூக்கி நிர்மாணிப்பதற்காக திட்டமிடல் மீளாய்வுக்

கூட்டம் இது வரை நடாத்தியிருக்காததுடன், அதன் படி உற்பத்தி அலுவல்களும் ஆரம்பித்திருக்கவில்லை.

ஹம்பாந்தோட்டை துறைமுகம் நிர்மாணிப்பதற்காக பெற்றிருந்த வெளிநாட்டுக் கடன்

ஹம்பாந்தோட்டை துறைமுகம் நிர்மாணிப்பதற்காக பெற்றிருந்த வெளிநாட்டுக் கடன்களில் 2017 நவம்பர் 30 திகதியில் உள்ளவாறு அதிகார சபையின் கணக்குகளில் மீதியாகக் காணப்பட்ட ரூபா 147,746 மில்லியனுக்கான கடன் மற்றும் வட்டி மீதி திறைசேரியின் இணக்கம் அல்லது அமைச்சரவையின் அங்கீகாரமின்றி அதிகார சபையினால் நிதிக்கூற்றுக்களில் இருந்து அகற்றியிருந்ததுடன், அதன் காரணமாக அத் திகதியின் பின்னர் அரசாங்கத்தின் கணக்குகள் எதிலும் இத் தொகை உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் MPS/SEC/2017/32 மற்றும் **2017** ஜூலை **20** திகதிய "ஹம்பாந்தோட்டை துறைமுக சலுகை உடன்படிக்கை" என்ற பேரிலான அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2017 ஆகஸ்ட் 04 திகதி வழங்கியிருந்த அமைச்சரவை அங்கீகாரத்தின் படி மேற்கூறிய கடன் மற்றும் வட்டியை திருப்பிச் செலுத்தும் பொறுப்பு திறைசேரிக்கு உரியதாகும். அதன் படி திறைசேரியின் வெளிநாட்டு மூலவள திணைக்களத்தினால் 2017 ஆண்டு முதல் கடன் தவணை மற்றும் வட்டி செலுத்தியிருந்ததுடன், 2021 ஆண்டிற்கான பதிவேடுகளின் படி 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மேலும் செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 165,483 மில்லியன் தொகையாக காணப்பட்டது. மேலும் மேற்கூறிய கடன்தொகை தொடர்பாக 2017 நவம்பர் 30 திகதி வரையான காலத்திற்கு கணிக்கப்பட்ட வெளிநாட்டு செலாவணி மாற்றல் திரண்ட நட்டம் ரூபா 31,545 மில்லியன் தொகையும் கடனை அகற்றியதுடன் அதிகார சபையின் கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. 2017 நவம்பர் 30 திகதி முதல் 2020 திசெம்பர் 31 திகதி வரை வெளிநாட்டு செலாவணி மாற்றல் திரண்ட நட்டம் ஆகிய ரூபா 34,072 மில்லியன் தொகையையும் உட்படுத்தி 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வெளிநாட்டு செலாவணி மாற்ற திரண்ட நட்டம் ரூபா 65,618 மில்லியன் தொகை மற்றும் 2021 ஆண்டின் வெளிநாட்டு செலாவணி மாற்ற நட்டம் திறைசேரியின் அல்லது அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

எவ்வாறாயினும், 2021 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக கடன் மீதிக்குரிய கணிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி மாற்ற இலாபம்/ நட்டம் தொடர்பாக தகவல்கள் வெளிநாட்டு மூலவள திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

நிதியமைச்சுச் செயலாளரினால் பல சந்தர்ப்பங்களில் அதிகார சபையின் தலைவருக்கு இந்தக் கடன்தொகையை அதிகார சபையின் புத்தகங்களில் உட்படுத்திக் கொள்ளும் படி அறிவித்திருந்தது. எவ்வாறாயினும் 2021 ஆண்டு இறுதியளவிலும் மேற்கூறிய கடன் மீதி மற்றும் உரிய வெளிநாட்டுச் செலாவணி மாற்ற இலாபம்/ நட்டம் கணக்கீடு செய்வதற்கு இலங்கை துறைமுக அதிகார சபையினால் அல்லது திறைசேரியினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

நிருவகிக்கப்படும் கம்பனி ஒன்றினால் பெற்றிருந்த கடனிற்காக பிணை நிற்றல்

2017 நவம்பர் முதல் செயற்பாட்டு அலுவல்கள் நிறுத்தப்பட்டிருந்த அதிகார சபையினால் நிருவகிக்கும் கம்பனி ஒன்றான மாகம்புர துறைமுறை முகாமைத்துவ (தனியார்) கம்பனியினால் 2014 ஆண்டின் போது கப்பல் எண்ணெய் கொள்வனவு செய்வதற்காக

தனியார் வங்கி ஒன்றிடம் இருந்து ஐ.அ.டொ 24 மில்லியன். கடன் தொகை ஒன்று பெற்றிருந்தது. அவற்றில் 22.3 மில்லியன் அமெ.டொ. 2022 மே 31 திகதி வரை தீர்த்திருக்காததுடன் நிதிக்கூற்றுக்களின் படி கடனை தீர்ப்பதற்காக கம்பனிக்குச் சொந்தமாக போதியளவு சொத்துக்கள் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், குறிப்பிட்ட வங்கியினால் இந்த கடன் தொகையை அறவீடு செய்வதற்காக நிருவிக்கப்படும் கம்பனிக்கு மற்றும் அதிகார சபைக்கு எதிராக இரண்டு வழங்குகள் 2020 ஆண்டின் போது கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு நடாத்தப்பட்டு காணப்பட்டது. இது தொடர்பாக அதிகார சபையின் பிரதான சட்ட உத்தியோகத்தரினால் ரூபா 4,465 மில்லியன் தொகைக்கான இந்த பொறுப்புக்களை தீர்ப்பதற்காக 2021 ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளும் படி நிதிப் பிரிவின் அதிபருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இலங்கை கணக்கீட்டு நியமம் 37, 10(அ) பந்தியின் படி மேற்கூறிய பொறுப்புக்களுக்காக நிகழத்தக்க பொறுப்புக்கள் ஒதுக்கம் மேற்கொண்டிருக்காததுடன், இதன் காரணமாக அதிகார சபையின் இலாபம் ரூபா 4,465 மில்லியன் தொகையினால் மிகைக் கணிப்பு ஏற்பட்டிருந்தது.

CCTV கெமரா முறையை பொருத்தப்படாமை

தீவிர பாதுகாப்பு வலையம் என பெயரிடப்பட்டுள்ள துறைமுக வளாகத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக 2017 மற்றும் 2018 ஆண்டுகளின் போது மூலதன பாதீட்டின் மூலம் அனைத்து படலைகள் மற்றும் காப்பு பண்டக சாலைகளுக்காக முறையே ரூபா 60 மில்லியன் தொகை மற்றும் ரூபா 150 மில்லியன் தொகை செலவிடப்பட்டு CCTV கெமரா முறைமை ஒன்று பொருத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2019 மற்றும் 2020 ஆண்டுகளின் போது அதற்காக ரூபா 150 மில்லியன் தொகை ரூபா 600 மில்லியன் தொகையாக வருடாந்த பாதீட்டில் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், 2021 மார்ச் 09 திகதிய PA/MD/46 அதிகார சபையின் முகாமைத்துவப் பணிப்பாளரின் கடிதத்தின் மூலமும் CCTV கெமரா முறையை பொருத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதே போல் இக் கருமத்திற்காக 2020 ஜனவரி 30 திகதி மற்றும் PFD/DFD/103/CM/03 இலக்கங் கொண்ட நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் படி அமைச்சரவையினால் நியமனம் செய்யப்படும் பெறுகைக் குழு ஒன்று (CAPC) மற்றும் தொழிநுட்ப மதிப்பாய்வுக்குழு ஒன்று (TEC) நியமனம் செய்வதற்கு 2020 பெப்ரவரி 13 திகதிய அமப/20/0174/222/003 இலக்கங் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம், அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் அந்த அங்கீகாரத்தை இரத்துச் செய்யாமல் CCTV கெமரா முறைமையை பொருத்துவதற்காக 2021 ஆண்டின் போது ஒதுக்கப்பட்டிருந்த பாதீட்டு ஏற்பாடுகள் ரூபா 600 மில்லியன் தொகையில் ரூபா 580 மில்லியன் தொகை முகாமைத்துவ சபையின் தீர்மானம் ஒன்றின் படி திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பிரிவின் உசாத்துணை அலுவல்களுக்காக மாற்றப்பட்டிருந்தது. அதன் படி தீவிர பாதுகாப்பு வலயம் ஒன்றான துறைமுறை அதிகார சபையின் CCTV கெமரா பொருத்தும் கருமங்கள் நிறைவேற்றப்பட்டிருக்காததுடன், இதன் காரணமாக பாதுகாப்பு தொடர்பான சிக்கல்களின் போது தேவையான தகவல்கள் பெற்றுக்கொள்ள முடியாத விபத்து நிலையினை தவிர்க்க முடியாதிருந்தது எனவும், செயற்பாட்டு அலுவல்களின்

வெளிப்படைத் தன்மையுடன் மற்றும் வினைத் திறன் தொடர்பாக உறுதிப்படுத்தல் பரிசோதனை செய்யமுடியாது எனவும் அவதானிககப்பட்டது.

சுங்கத்தினால் விதிக்கப்பட்டிருந்த தண்டப்பணம்

2011 ஆண்டின் போது இலங்கை சுங்கம் அறிவிப்பேதும் மேற்கொள்ளாமல் அதிகார சபையினால் இறக்குமதி செய்யப்பட்ட 27 பாரந்தூக்கிப் பொறிகள் தொடர்பாக சுங்கத்தினால் விதிக்கப்பட்டிருந்த 1,580 மில்லியன் தொகைக்கான சுங்கத் தண்டப் பணத்தை இலகுவாக்கித் தரும் படி சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 165 பிரிவின் பிரகாரம் சுங்க விசாரணை ஒன்றின் தீர்ப்பு ஒன்றின் மீது நிதியமைச்சருக்கு மேன்முறையீடு ஒன்று மேற்கொள்ளக் கூடியதாக இருந்த போதிலும், அதிகார சபையினால் அவ்வாறான மேன்முறையீடு ஒன்று சமர்ப்பித்திருக்கவில்லை. எவ்வாறாயினும், இது தொடர்பாக கணக்குகளில் ரூபா 957.9 மில்லியனுக்கான நிகழத்தக்க பொறுப்புக்கள் ஒதுக்கப்பட்டிருந்தது. மேற்கூறிய விடயம் தொடர்பாக அதிகார சபையினால் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருந்ததுடன், மேன்முறையீட்டு நீதிமன்றின் கட்டளைக்கு எதிராக 2020 ஆண்டில் அதிகார சபையினால் மேன்முறையீட்டு மனு ஒன்று உயர்நீதிமன்றில் கோப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2022 மார்ச் 09 திகதிய நிதியமைச்சின் வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் படி அமைச்சரவைத் தீர்மானத்தின் மீது சுங்கத் தண்டப்பணம் ரூபா 50 மில்லியன் வரை குறைப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

துறைமுக அதிகார சபைக்கு திறைசேரியில் இருந்து கிடைக்க வேண்டிய பணம்

ஹம்பாந்தோட்டை துறைமுகம் நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக பெற்றிருந்த கடன்தொகைக்காக அதிகார சபையினால் 2017 ஆண்டில் செலுத்தியிருந்த தவணைப் பணம் ரூபா 4,406 மில்லியன் தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 372 மில்லியன் தொகை உட்பட 4,778 மில்லியன் தொகை 2022 ஏப்ரல் 30 திகதி வரை அதிகார சபைக்கு கிடைத்திருக்கவில்லை. மேலும் இது தொடர்பாக மீதிகளை உறுதிப்படுத்தும்படி அதிகார சபையினால் அழைக்கப்பட்டிருந்த போதிலும் திறைசேரியினால் அந்த உறுதிப்படுத்தலை உறுதிப்படுத்தியிருக்காததுடன், 2021 ஆண்டிற்கான குடியரசின் நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டிய மீதிகளில் இந்த மீதி உட்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக இந்தப் பணம் கிடைத்தல் தொடர்பாக நிச்சயமற்ற தன்மை ஒன்று காணப்பட்டது.

ஹம்பந்தோட்டை துறைமுக அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் எண்ணெய் தாங்கி நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக திறைசேரியினால் இலங்கை வங்கியில் இருந்து பெற்றிருந்த டொலர் கடன் தொகைக்காக தவணைப் பணம் திறைசேரியினால் குறிப்பிட்ட நேரத்தில் செலுத்தப்படாமையினால் அதிகார சபையின் பேரில் இலங்கை வங்கியில் பேணப்பட்டு வரும் அமெரிக்க டொலர் கணக்கில் 2018 ஆண்டின் போது 0.64 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அதாவது ரூபா 377.84 மில்லியன் தொகை வங்கியினால் அறவீடு செய்யப்பட்டிருந்தது. அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மேற்கூறிய தொகை திறைசேரியில் இருந்து பெறப்பட வேண்டிய மீதியொன்றென காட்டப்பட்டிருந்த

போதிலும் 2022 ஏப்ரல் 30 திகதி வரையும் பணம் கிடைத்திருத்திருக்காததுடன், அப் பணம் கிடைத்தல் நிச்சயமற்றது என அவதானிக்கப்பட்டது.

சொத்துக்கள் மீளாய்வு

இலங்கை துறைமுக அதிகார சபை வளாகப் பிரிவில் காணிப் பதிவேட்டின் படி ரூபா 633.94 மில்லியன் தொகை பெறுமதியான 19 காணித் துண்டுகள் ஏனைய நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது என காட்டப்பட்டிருந்த போதிலும், நிதிப் பிரிவினால் பேணப்பட்டு வரும் முதலீட்டுச் சொத்துக்கள் தொடர்பான பதிவேட்டிலும் அந்தக் காணிகள் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக துறைமுக அதிகார சபையின் நிதி நிலைமைக் கூற்றில் முதலீட்டு ஆதனங்கள் ரூபா 633.94 மில்லியன் தொகையினால் குறைவாகக் கணக்கிடப்பட்டிருந்ததுடன், காணியின் பெறுமதி அத் தொகையினால் மிகைக் கணிப்பு ஏற்பட்டிருந்தது.

2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இலங்கை துறைமுக அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட சொத்துக்கள் மீளாய்வுக் குழுவின் அறிக்கையின் படி, 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திறன்மதிப்பு பெறுமதி ரூபா 403.68 மில்லியனுக்கான செயற்பாட்டு கட்டிடங்கள் மற்றும் நிர்மாண வேலைகள் மற்றும் ரூபா 181.9 இற்கான இயந்திர உபகரணங்கள் பௌதீக ரீதியாக இனங்காண முடியாதிருந்தமையால், அச் சொத்துக்களின் உளமை நிச்சயமற்றதென அவதானிக்கப்பட்டது.

நிதி அதிகாரச் சட்டத்திற்கு மற்றும் துறைமுகங்கள் தொடர்பான அதிகாரச் சட்டத்திற்கு இணக்கமின்மை

1971 இன் 38 ஆம் இலக்க நிதிஅதிகார சட்டத்தின் 10 (5) பிரிவின் படி அரச கூட்டுத்தாபனம் ஒன்றின் ஏதேனும் ஆண்டொன்றிற்காக மிகையாக காணப்படின் அதிகாரசட்டத்தில் காட்டப்பட்டுள்ள கழித்தல்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் மீதித் தொகை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். அதே போல் 1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுகங்கள் தொடர்பாக அதிகாரசட்டத்தின் 30 ஆவது பிரிவின் படி இலங்கை துறைமுக அதிகாரச சபைக்கு உரித்தாக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதி மற்றும் அதிகார சபைக்கு வழங்கிய நிதிசார் பங்களிப்பு மீது ஆண்டொன்றிற்கு 8 சதவீதம் (குறைந்த அளவு ரூபா 607 மில்லியன்) மிகைக்காத பங்கிலாபம் ஒன்று திரண்ட நிதியத்திற்கு செலுத்த வேண்டும். அவ்வாறாயினும், 2016 முதல் 2021 வரையான ஆண்டுகளில் அதிகார சபை பெற்றிருந்த கூட்டுத்தொகை ரூபா 69,687 மில்லியன் தொகைக்கான தேறிய இலாபத்திலிருந்து திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது ரூபா 600 மில்லியன் மாத்திரமே. மேலும் மேற்கூறிய இலாபத்தில் நீண்டகால குத்தகை அடிப்படையில் தனியார் துறைக்கு வழங்கப்பட்டிருந்த தெற்காசிய நுழைவு முடிவுமுனை (SAGT) மற்றும் கொழும்பு சர்வதேச கொள்கலன் முடிவுமுனை (CICT) ஆகிய முடிவுமுனைகளின் செயற்பாட்டு அலுவல்களில் ஈடுபட்டிருக்கும் இரண்டு கம்பனிகளில் இருந்து அதிகார சபையினால் 2016 முதல் 2021 வரை காலத்திற்காக மாத்திரம் அறவீடு செய்திருந்த கூட்டுத்தொகை ரூபா 13,021 மில்லியனுக்கான குத்தகை மற்றும் அந்தக் காலப்பகுதிக்கான வேத்துரிமை என அறவிடப்பட்டிருந்த ரூபா 19,582 மில்லியன் தொகையும் உட்படுத்தப்பட்டிருந்தது. இவ் வருமானங்கள் துறைமுகத்தின் நேரடியான செயற்பாட்டு வருமானம் அல்ல என மேலும் அவதானிக்கப்பட்டது.

துறைமுகங்கள் சட்டத்திற்கு இணக்கமின்மை

1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுகங்கள் தொடர்பான அதிகாரச் சட்டத்தின் பிரிவு 37(i) படி இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையினால் அறவிடக்கூடிய கட்டணங்கள் நிதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரிடம் வினவி அமைச்சரின் அங்கீகாரத்துடன் இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையினால் பரிந்துரைக்கப்பட வேண்டும். அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக் கொண்டு 2019 ஆண்டின் போது திருத்தப்பட்டிருந்த சுங்கவரி அட்டவணை (Tariff-2019) 24 ஆவது விடயத்தின் படி ஏற்றுமதிக்கு உரிய கொள்கலன்களை அகற்றிக் கொள்வதற்காக வழங்கப்படும் களஞ்சியக் கட்டணங்களில் இருந்து விடுதலைக் காலம் 21 நாட்களாக இருந்த போதிலும் கப்பல் முகவர் நிறுவனங்களுடன் ஏற்படுத்தியிருந்த முடிவுமுனை சேவை உடன்படிக்கைகளில் (Terminal service agreement) அதற்காக 45 நாட்கள் வரை சலுவைக் காலம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு களஞ்சியக் கட்டணத்துக்காக மீளாய்வாண்டின் போது வழங்கியிருந்த கழிவு (Rebates on storage) ரூபா 2,286.44 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், சுங்க வரி அட்டவணை (Tariff-2019) குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை விட வித்தியாசமான நிபந்தனைகளுடனான முடிவுமுனை சேவை உடன்படிக்கைகள் கையொப்பமிடப்பட்டிருந்தது. அதற்காக நிதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரை வினவி பெற்றுக் கொண்டிருந்த அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுகங்கள் தொடர்பான அதிகாரசபை சட்டத்தின் 39(1) பிரிவின் படி இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் ஏதேனும் இடைநிலை கொட்டகைகளில் வைக்கப்பட்டிருந்த பண்டங்கள் குறிப்பிட்ட காலம் முடிவடைந்த பின்னர் 40 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கு சேதம் ஏற்படாதவாறு அதிகார சபையினால் பகிரங்கள ஏல விற்பனையில் விற்பனை செய்ய முடியும் அதே போல் அந்த விற்பணை மூலம் கிடைக்கப்பெறும் பணத்திலிருந்து குறிப்பிட்ட சுங்கவரியை செலுத்திவிட்டு அதிகார சபையின் பண்டகசாலை கட்டணம் மற்றும் நிர்வாக செலவினை கழித்து மீதி ஏதும் காணப்படின் அத் தொகையினை திறைசேரிக்கு அனுப்பவேண்டியிருந்தது. அதிகார சபையின் 2021 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை பரிசோதனை செய்த போது அவ்வாறு ஏல விற்பனையில் கிடைத்திருந்த பணத்தில் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட தீர்க்கப்படாத மீதி ரூபா 385.14 மில்லியன் தொகை என அவதானிக்கப்பட்டதுடன், அவற்றில் 2015 முதல் 2020 வரை கிடைத்திருந்த ஏல விற்பனை வருமானங்களுக்குரிய தரப்பினருக்கு தீர்க்கப்படாமல் ரூபா 336.58 மில்லியனிற்கான மீதி ஒன்று காணப்பட்டது. அதே போல் 2010 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்ட ஏல விற்பனைக்கு உரிய தீர்க்கப்படாத மீதிகளில் அதிகார சபையின் பகுதி என ரூபா 63.31 மில்லியன் தொகை முன்னைய ஆண்டின் வருமானம் என இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்த போதிலும், அவற்றில் ரூபா 52.57 மில்லியனுக்கான ஏலவிற்பனை வருமானத்தில் இலங்கை சுங்கத்துக்கு செலுத்தப்பட வேண்டிய சுங்கக் கட்டணம் மற்றும் திறைசேரிக்கு செலுத்த வேண்டிய பங்களிப்பை இனங்கண்டு கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

முறைப் பிரகாரம் காணிகளை உரித்தாக்கியிருக்காமை

நில அளவைப்பட இலக்கம் சீஓ/சீஓஎல்/2012/1047 இலங்கங் கொண்ட டீ.ஆர். விஜயவர்தன மாவத்தையில் அமைந்துள்ள கணக்கீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 604.5 மில்லியன் தொகைக்கான 2 ஏக்கர் 3 ரூட் 9.61 பர்சஸ் இற்கான தாமரைக் கோபுரம் நிர்மாணிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அனுபவிக்கும் உரிமை ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் முறையான நடவடிக்கை முறை ஒன்றின் படி பெறுமதியை ஏடுகளில் இருந்து அகற்றி காணி உறுதி ஒன்றின் மூலம் காணியை உரித்தாக்கி இருக்கவில்லை.

நில அளவைப்பட இலக்கம். எல்/எஸ்/எம்ஐஎஸ்/344 இலக்கங் கொண்ட கொழும்பு 01 பிரதான வீதிக்கு மற்றும் ஓல்கட் மாவத்தைக்கு எல்லையாக அமைந்துள்ள கணக்கீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 947.5 மில்லியன் தொகைக்கான 02 ஏக்கர் காணி சுங்கத் திணைக்களத்திற்கு கட்டிடம் ஒன்று நிர்மாணிப்பதற்காக வழங்கியிருந்த போதிலும் காணியை பெறுமதி மதிப்பீடு செய்து சட்டரீதியாக உரித்தாக்குவதற்கு மற்றும் பெறுமதியை புத்தகங்களில் இருந்து அகற்றுவதற்கு இவ்வறிக்கை திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 24 இன் 18, 19 மற்றும் 21 பந்திகளின் படி நிதியாண்டுக்குரிய தொடர்புடைய தரப்பினருடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் தன்மை, மீதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்பட்டுள்ள தாக்கம் தொடர்பாக பயன்படுத்துவோருக்கு அறிந்துகொள்வதற்கு தேவையான தகவல்கள் தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்களின் கீழ் வெளிப்படுத்த வேண்டும். அவ்வாறாயினும் இலங்கை துறைமுக அதிகார சபையினால் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் சொத்துக்களை நீண்டகால குத்தகை அடிப்படையில் உரித்தாக்குவது தொடர்பாக 2017 ஆண்டின் போது ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக சேவை (HIPS) கம்பனிகளில் இருந்து மற்றும் ஹம்பாந்தோட்டை சர்வதேச கூட்டமைப்பு (HIPG) கம்பனியில் இருந்து கிடைத்திருந்த ரூபா 169,479 மில்லியன் தொகையில் இருந்து மீளாய்வாண்டிற்கான தேறிய இலாபம் கணிக்கும் போது வருமானக் கூற்றில் செலவு வைக்கப்பட்டிருந்த வருடாந்த பிற்போடப்பட்ட குத்தகை வருமானம் ஆகிய ரூபா 1,713 மில்லியன் தொகை புதிய எண்ணெய் தாங்கி ஒன்று மற்றும் தீ பாதுகாப்பு முறைமை நிர்மாணிப்பதற்காக ஜயா கன்டேனர் டர்மினல் கம்பனியில் இருந்து 2021 ஆண்டில் அதிகார சபைக்கு ரூபா 95.7 மில்லியன் தொகை வழங்கி இருத்தல் ஆகிய தொடர்புடைய தரப்பினருடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக உரிய தகவல்கள் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் மூலம் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தென் பகுதியை அபிவிருத்தி செய்யும் குறிக்கோளுடன் காலித் துறைமுகத்தில் பல்கரும முடிவுமுனை ஒன்று நிர்மாணித்தல் 2006 மார்ச் 28 திகதி இலங்கை அரசாங்கம் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பானிய வங்கி (JBIC) இடையே ஏற்படுத்தப்பட்டிருந்த கடன் உடன்படிக்கையின் கீழ் செயற்படுத்துவதற்கு இணங்கியிருந்தது. ஊடக மரபுரிமை என பெயரிடப்பட்டுள்ள காலிக் கோட்டை அண்டிய இந் நிர்மாணவேலை மேற்கொள்வதற்காக (UNESCO) அமைப்பின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியிருந்தது. அதற்காக 3

வருடங்களை விட கூடிய காலம் எடுக்கும் என்ற காரணத்தினால் கடன் தொகை வழங்குனரினால் கடன் கால எல்லையை நீடிக்காமையால் இச் செயற்திட்டம் இடைநிறுத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் படி இதற்காக செலவிடப்பட்ட ரூபா 418 மில்லியனுக்கான உசாத்துணைக் கட்டணம் மீளாய்வாண்டிலும் நிதிக் கூற்றுக்களில் நடைபெறு வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது. இது தொடர்பாக இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் கணக்காய்வுக் குழு எடுத்திருந்த தீர்மானத்தின் படி இத் தொகையை கணக்கீடு செய்ய வேண்டிய முறை தொடர்பாக இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியம மீளாய்வுக் குழுவிற்கு 2021 ஏப்ரல் 04 திகதி அதிகார சபையினால் வினவியிருந்த போதிலும் அதற்குரிய ஆலோசனைகள் இதுவரை கிடைத்திருக்காததுடன், அச் செலவுகள் மூலதன அல்லது வருமானச் செலவுகள் என 2021 திசெம்பர் 31 திகதி வரை இனங்கண்டிருக்கவில்லை.

இழப்பீடு

2019 திசெம்பர் 04 திகதி கப்பல் ஒன்று துறைமுக ஜய கொள்கலன் முடிவுமுனையில் நீர்த்தடுப்பு (Caisson), வேகக் கட்டுப்பாடுகள் (Fenders), துறைமுக மேடைசுவர் (Quay wall) சேதம் ஏற்பட்டிருந்தது. இச் சேதம் ரூபா 315.90 மில்லியன் தொகை என மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மேற்கூறிய சேதம் தொடர்பாக ரூபா 384.42 மில்லியன் தொகை ஒன்று 2019 திசெம்பர் 30 திகதி இலங்கை துறைமுக அதிகார சபைக்கு கிடைத்திருந்த போதிலும் வேகத்தடுப்பை தவிர ஏனைய திருத்த வேலை அலுவல்கள் 2022 மே 31 திகதி வரை மேற்கொண்டிருக்கவில்லை.

மூலதனப்படுத்தப்படாத இனங்காணப்படாத கொள்வனவுகள்

இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 55 ஆம் பந்தியின் படி செயற்பாட்டு அலுவல்களுக்காக பயன்படுத்துவதற்கு பொருத்தமான நிலைமை ஏற்பட்டிருந்த சந்தர்ப்பம் முதல் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்கான பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டும். எனினும் 2019 திசெம்பர் 23 திகதி இலங்கை துறைமுகங்கள் அதிகாரச சபைக்கு கிடைத்திருந்த செயற்பாட்டு அலுவல்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்த ரூபா 495 மில்லியன் தொகைக்கான இரண்டு ஏவுபடைகளின் பெறுமதி 2021 திசெம்பர் 31 திகதி வரை மூலதனப்படுத்தி குறிப்பிட்டுள்ளவாறு பெறுமானத்தேய்வு கழித்திருக்கவில்லை. இக் கொடுப்பனவு நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் "பாதீட்டு ஏற்பாடுகள் இன்றிய வெளிநாட்டுக் கொள்வனவு முற்பணங்கள்" கணக்கில் உட்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் மேற்கூறிய தொகையினால் குறை கணித்தல் ஏற்பட்டிருந்தது.

மேலும், அந்த வெளிநாட்டு கொள்வனவு முற்பணக் கணக்கில் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 1,808.56 மில்லியனுக்கான மீதியுள் கொடுப்பனவுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள ஆனால் செலவொன்றென வருமானக் கூற்றிற்கு இனங்காண்பதற்கு அல்லது இனங்காணப்பட்ட கொள்கை ஒன்றின் மீது சொத்துக்களை மூலதனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காத ரூபா 223.57 மில்லியனுக்கான உதிரிப் பாகங்கள் கொள்வனவு செய்தல் காணப்பட்டது. இதன்

காரணமாக ஆண்டிற்கான இலாபம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்கள் அப் பெறுமதியினால் மிகை கணிப்பு/ குறைகணிப்பு ஏற்பட்டிருந்தது. மேலும், மீதித் தொகையிலும் தற்போது கிடைத்துள்ள ஆனால் மூலதனப்படுத்தப்படாத சொத்துக்கள் மற்றும் இனங்காணப்படாத செலவுகள் இக் கணக்கில் நீண்டகாலமாக பேணிச் செல்லப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது.

இலங்கை துறைமுக அதிகார சபைக்கு உரித்தாக்கப்பட்டிருக்காத பங்கு உரிமைகள்

2010 ஆண்டின் போது தெற்காசிய நுழைவு முடிவுமுனை (South Asia Gateway Terminal Ltd-SAGT) கம்பனி ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில் இலங்கை துறைமுக அதிகார சபையினால் வழங்கியிருந்த மூன்று பாரந்தூக்கி பொறிகளின் பெறுமதியை பரிமாறிக் கொள்வதற்காக ரூபா 141.63 மில்லியனுக்கான பெறுமதிக்கு அந்த கம்பனியின் பங்குகளை அதிகார சபைக்கு வழங்குவதற்கு இணங்கியிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டு இறுதி வரை குறிப்பிட்ட பங்குகளின் உரிமையை அதிகார சபைக்கு வழங்கியிருக்காததுடன் குறிப்பிட்ட கம்பனியினால் பங்குகளுக்காக செலுத்த வேண்டிய தொகை ஒன்று இல்லை என 2020 ஆண்டின் மீதிகளை உறுதிப்படுத்தல் மூலம் பதில் அனுப்பப்பட்டிருந்தது. இது தொடர்பாக தெற்காசிய நுழைவு முடிவுமுனை கம்பனியுடன் உடன்பட்ட கடப்பாடு ஒன்று காணப்படாமையால் அதிகார சபைக்கு குறிப்பிட்ட கம்பனியின் பங்குகள் கிடைத்தல் நிச்சயமற்ற தன்மையொன்று காணப்பட்டதுடன், அதிகார சபை மேற்கூறிய பெற வேண்டிய பங்குகளின் பெறுமதிக்காக சேதப்படுத்தல் ஒதுக்கம் ஒன்றும் மேற்கொண்டிருக்கவில்லை. அதே போல் 2022 பெப்ரவரி 02 திகதி மீதியை உறுதிப்படுத்துமாறு கோரப்பட்டிருந்த போதிலும் மீதியை உறுதிப்படுத்தல் சமர்ப்பித்திருக்கவில்லை.

மனிதவள முகாமைத்துவம்

2021 நவம்பர் 16 திகதிய பீஈடீ/**01/2021** இலக்கங் கொண்ட அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் பந்தி 3.2 (i) மற்றும் 2013 ஜனவரி 23 திகதி DMS/F1/3/3-1 இலக்கங் கொண்ட முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் மூலம் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்த கடிதத்தின் படி நிறுவனத்தினால் ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையொன்று தயாரித்து அரச தொழில்முயற்சித் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் இலங்கை துறைமுக அதிகார சபையினால் வரைபு ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடவடிக்கை முறை ஒன்று தயாரிக்கப்பட்டு இருந்த போதிலும் அதற்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை.

2019 பெப்ரவரி 12 திகதிய MPS/AD/06/83-2017 இலக்கங் கொண்ட துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அலுவல்கள் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு மூலம் வெளியிடப்பட்டிருந்த கடிதத்தின் படி இலங்கை துறைமுக அதிகார சபையின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடவடிக்கை முறை அனுமதிக்கப்படும் வரை அதிகார சபையின் அனைத்து ஆட்சேர்ப்புகள் மற்றும் பதவியுயர்வுகள் மேற்கொள்ளக் கூடாது என அறிவித்திருந்த போதிலும் அதிகார சபையினால் 2021 ஆண்டின் போது முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாமல் ஆரம்ப சேவை வகுப்பைச் சேர்ந்த பதவிகளுக்காக 227 பதவியுயர்வுகள் வழங்கப்பட்டிருந்தது.

நிருவகிக்கும் கம்பனிக்கு கொள்கை ஒன்று தயாரித்திருக்காமை

2021 நவம்பர் 16 திகதி **01/2021** இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையுடன் வெளியிடப்பட்டிருந்த அரச தொழில் முயற்சிகளுக்கான நியதிச்சட்ட ரீதியான நல்லாளுகை வழிகாட்டலின் பிரிவு 2.2.5 படி நிருவகிக்கும் கம்பனிக்காக தாய் கம்பனியின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஆளுகை சபையின் கொள்கைகள் (Board approved subsidiary policy) தயாரிக்கப்பட்டு அதன் படி செயற்பட வேண்டியிருந்த போதிலும் அதிகார சபைக்கு சொந்தமான நிருவகிக்கும் கம்பனிக்காக தயாரிக்கப்பட்டிருந்த ஆளுகைக் கம்பனி கொள்கை ஒன்று இதுவரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

தாமதமாகிய செயற்திட்டங்கள்

- இலங்கை துறைமுக அதிகார சபையின் மூலம் தற்போது பிரதான செயற்பாட்டு அலுவல்கள் மேற்கொள்ளும் ஜய கொள்கல முடிவுமுனை நீளம் 600 மீற்றர் காணப்பட்டமையால் நீளம் 330 மீற்றர்களைக் கொண்ட பாரிய அளவிலான 02 கப்பல்கள் ஒரே தடவையில் செலுத்துவதற்கு இயலாமையின் காரணமாக அதிகார சபைக்கு வாணிப சந்தர்ப்பங்கள் இழக்கப்படுகின்றமையால் அந்த முடிவுமுனை 120 மீற்றர்களினால் நீடிப்பதற்கும் மற்றும் ஆழம் 15 மீற்றர்களினால் கப்பற்துறையை தயாரிப்பதற்கு 2017 ஜுலை மாதத்தில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2018 நவம்பர் 29 திகதிய துறைமுக அதிகார சபை மற்றும் ஒப்பந்தக்காரர் (China Harbour Engineering Company Ltd) உடன் ஏற்படுத்தியிருந்த உடன்படிக்கையின் படி ஒப்பந்தக் கிரயம் ரூபா 5,035.30 (VAT இன்றிய) தொகை காணப்பட்டது. ஒப்பந்த நிபந்தனை இலக்கம் 8.1 இன் படி உடன்படிக்கை மேற்கொண்டு 7 நாட்களுக்கு குறையாத நாட்களுக்குள் ஒப்பந்த வேலையை ஆரம்பிக்கும் அறிவித்தல் ஒப்பந்தகாரருக்கு வழங்க வேண்டியிருந்த போதிலும் அதன் 02 வருடங்களுக்கு பின்னர் 2020 நவம்பர் 23 திகதி திருத்தங்களுடன் (Addendum 1) வேலை ஆரம்பிக்கும் அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது. ஒப்பந்த வேலை தொடர்பாக மீண்டும் கலந்துரையாடலுக்கு இணைத்து திட்டமிட்டவாறு அபிவிருத்தி மேற்கொள்வதற்காக 2020 செப்தெம்பர் 29 ஆந் திகதிய **20/1403/328/001/**TBR இலக்கங் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் கீழ் மீண்டும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளல் இந்தத் தாமதத்திற்கு காரணமாகியிருந்தது. திருத்தத்தின் பின்னர் மேற்கூறிய ஒப்பந்தவேலை 2022 ஜுலை 23 திகதி அளவில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இந்த செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 30 சதவீதம் காணப்பட்டது.
- வடக்கு கிழக்கு நுழைவு வலைய கருதுகோளை வெற்றிகொள்ளும் குறிக்கோளுடன் காங்கேசந்துறை துறைமுகத்தை மறுசீரமைப்பதற்காக 45.27 மில்லியன் அமெ.டொ. கடன் தொகை பெறுவதற்கு இலங்கை அரசாங்க மற்றும் இந்திய இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வங்கி (எக்சிம் வங்கி) இடையே டொலர் கடன்தொகுதி உடன்படிக்கை ஒன்றிற்கு 2018 ஜனவரி 10 திகதி கையொப்பமிடப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடன் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டு 4 வருடங்கள் கடந்திருந்த போதிலும் துறைமுகத்தின் நிர்மாண வேலைகள் இதுவரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி 2020 மே மாதம் வரை காணியின் உரிமை தொடர்பான காணப்பட்ட சிக்கல் தீர்க்கப்பட்டிருக்காததுடன், அந்த மாதம் வரை துறைமுகத்தின் பாதுகாப்பு தொடர்பாக விடுவித்தல் சான்றிதழ் ஒன்று பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. அந்த சான்றிதழ் பெற்ற பின்னர் 2020 ஒக்தோபர் மாதத்தில் முகாமைத்துவ மற்றும் ஆலோசனை சேவைக்கான ஒப்பந்த வேலை இந்திய கம்பனி ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. மேற்கூறிய செயற்திட்டத்தின் மறுசீரமைப்பு அலுவல்கள் 2021 செப்தெம்பர் மாதம் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2022 மே வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2021 ஆண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கின் படி இந்த செயற்திட்டத்திற்காக 1,001 மில்லியன் தொகை செலவிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட ஆண்டில் 142.3 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அது எதிர்பார்க்கப்பட்ட மூலதனச் செலவில் 14.2 சதவீதமாகக் காணப்பட்டது. அதே போல் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 45.27 மில்லியன் டொலருக்கான கடன் தொகையில் 0.745 மில்லியன் டொலர் செலவிடப்பட்டிருந்ததுடன், நிதியத்தை பயன்படுத்தியிருக்காத காரணத்தினால் கடன் உடன்படிக்கையின் 7.1 பந்தியின் பிரகாரம் ஒதுக்கப்பட்டிருந்த பெற்றுக் கொண்டிருக்காத கடன் தொகைக்காக ஈடுபாட்டுப் பொறுப்பு கட்டணம் (Commitment charges) என 9,537.34 அமெரிக்க டொலர் (ரூபா 1.94 மில்லியன்) தொகையொன்று இந்தியாவின் எக்சிம் வங்கிக்கு செலுத்துவதற்கு துறைமுக அதிகார சபைக்கு நேரிட்டிருந்ததுடன் அது சிக்கனமற்ற செலவொன்றென அவதானிக்கப்பட்டது.

முடிவுமுனை சேவை உடன்படிக்கைகளுக்கு முரணாக கப்பல் முகவர் நிறுவனங்களுக்காக தள்ளுபடி வழங்குதல்

இலங்கை துறைமுக அதிகார சபையினால் கப்பல் முகவர் நிலையங்களுக்காக கொள்திறன் தள்ளுபடி (Volume rebates) வழங்கும் போது இலங்கை துறைமுக அபிவிருத்தி அதிகார சபையுடன் முடிவுமுனை சேவை உடன்படிக்கை (Terminal service agreements) ஏற்படுத்தியிருந்த கப்பல் முகவர் நிலையங்களுக்காக உடன்படிக்கையில் இணங்கியிருந்த குறைந்தளவு செயற்பாட்டு வரையறை (Minimum TEU's to qualify for the rebates scheme) அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன் 2020 ஆண்டின் போது அவ்வாறு நெருங்கவேண்டியிருந்த குறைந்த செயற்பாட்டு வரையறையை விட குறைந்த செயற்பாட்டு மட்டத்துடனான கப்பல் முகவர் நிலையங்களுக்காக பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் கீழ் ரூபா 26.95 மில்லியன் இயலளவு தள்ளுபடி வழங்கப்பட்டிருந்தது.

பெருந்தெருக்கள் பிரிவு

விடயங்கள்

- பெருந்தெருக்கள் அமைச்சு
- கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு
- வீதி அபிவிருத்தி அதிகார சபை

பெருந்தெருக்கள் பிரிவு

பெருந்தெருக்கள் வலையமைப்பானது மிகவும் பெறுமதியான மற்றும் மிகவும் விசாலமான ஒரு சமூக, கலாச்சார ரீதியினைப் போல சுற்றாடல் ரீதியாகவும் சமூக நலன்புரியினை முன்னிட்டும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரிவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கிணங்க பொருளாதார பிரிவுகளுக்கு சமனான சேவை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன் மூலம் நகர மற்றும் கிராமிய அபிவிருத்தியின் முரண்பாடுகளுக்கான ஒரு தீர்வாக "ஆக்கபூர்வமான மற்றும் சுற்றாடலுக்குச் சாதகமான ஒரு பொதுப் போக்குவரத்து முறைமைக்காக போக்குவரத்து வலையமைப்பினை அபிவிருத்தி செய்தல்" தொடக்க தேவைப்பாடாக அரசாங்கத்தின் பிரதான கொள்கையினூடாக இனங்காணப்பட்டுள்ளது. நாட்டில் வசிக்கும் மக்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துவதனை முன்னிட்டு அரசாங்கத்தினால் நிலையான முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் போக்குவரத்து தேவைப்பாடுகளுக்காக அதிகரித்து வரும் வேண்டுதல்களை நிறைவேற்றும் வகையில் பெருந்தெருக்கள் பிரிவிற்காக ஒட்டுமொத்தமாக மிகவும் உயர்வான முதலீடு மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கிணங்க தேசிய மாகாண மற்றும் கிராமிய வீதிகளையும் உள்ளடக்கி நாட்டின் வீதி வலையமைப்பினை மேம்படுத்துவதன் மூலம் பயணிகளுக்கு தமது பயண இடங்களுக்காக இலகுவாக செல்லக்கூடியதாக இருத்தல், எரிபொருள் சிக்கனம், போக்குவரத்து செலவினை குறைத்தல், வீதி நெரிசலினை குறைத்தல் ஆகிய விடயங்களின் காரணமாக இப்பிரிவிற்காக மேற்கொள்ளப்படுகின்ற முதலீடு மிகவும் உயர்ந்த பொருளாதாரப் பெறுமதியை உருவாக்குகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. அந்த குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக பெருந்தெருக்கள் அமைச்சு கிராமிய வீதிகள் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு வீதி அபிவிருத்தி அதிகார சபை என்பவற்றினால் 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டியிருந்தது.

- வீதிகள், பெருந்தெருக்கள் மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் விடயத்திற்கான அமைச்சிற்கு இணைத்துக்கொள்ளப்பட்ட நிறுவனங்களின் சட்டங்கள், மற்றும் கட்டளைச் சட்டங்கள், தொடர்பான கொள்கைகள் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை தயாரித்தல், அமுல்ப்படுத்தல், செயற்படுத்தல்.

- கிராமிய புராதன மற்றும் நகர பிரதேச இணைப்புக்களை விரிவுபடுத்தி மக்களை மையமாகக் கொண்ட பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி ஏற்படும் வகையில் உயர் தரத்தினைக் கொண்ட வகையில் தேசிய பெருந்தெருக்கள் முறைமையை மேம்படுத்துதல் மற்றும் சிறந்த தரத்தினை பேணுவதற்காக தேவையான நடவடிக்கை எடுத்தல்.

- அதிவேக வீதியை அபிவிருத்தி செய்தல், கட்டணங்களை நிர்ணயித்தல், சேகரித்தல், ஒழுங்குபடுத்தல் என்பன

- மாகாண சபைகள், மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய வீதிகள் தொடர்பாக தேசிய கொள்கையை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தலினை செயற்படுத்துதல்.

- அமைச்சின் கீழ் செயற்படுகின்ற அனைத்து நிறுவனங்களையும் மேற்பார்வை செய்தல் மற்றும் ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் நடவடிக்கை எடுத்தல்.

இலங்கையின் தேசிய பெருந்தெருக்கள் வலையமைப்பானது கட்டணம் அறவிடப்படுகின்ற பெருந்தெருக்களை உள்ளடக்கி 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் அண்ணளவாக 12,536 கிலோ மீற்றர்களைக் கொண்டிருந்ததுடன் அது "ஏ" தரத்திலான பெருந்தெருக்களின் தூரம் 4,217 கிலோ மீற்றர்களையும் "பீ" தரத்திலான பெருந்தெருக்களின் தூரம் அண்ணளவாக 8,007 கிலோ மீற்றர்களையும், கட்டணம் அறவிடப்படுகின்ற பெருந்தெருக்களின் தூரம் அண்ணளவாக 312 கிலோ மீற்றர்களையும் 4,254 பாலங்களையும் உள்ளடக்கியிருந்தன. 2021 ஆம் ஆண்டின் போது தேசிய ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பல அபிவிருத்திச் செயற்திட்டங்களின் மூலம் தேசிய பெருந்தெருக்கள் மற்றும் கட்டணம் அறவிடுகின்ற பெருந்தெருக்கள் வலையமைப்பிற்கு விரிவான நுழைவினை வழங்குவதற்காக வசதிகளை ஏற்படுத்துவதனைப் போல அனைத்து உள்ளக மற்றும் கிராமிய நுழைவு வீதிகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் நாட்டின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யப்பட்டிருந்தது.



இலங்கையின் தேசிய பெருந்தெருக்கள் வலையமைப்பு

பெருந்தெருக்கள் அமைச்சு

2021 ஆம் ஆண்டின் போது பெருந்தெருக்கள் அமைச்சு செலவுத் தலைப்பின் கீழ் ரூபா 358.3 பில்லியன் நிதி ஏற்பாடு பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அதில் ரூபா 211.6 பில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. பெருந்தெருக்கள் அமைச்சிற்காக 2021 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய 05 ஆண்டுகளுக்காக கிடைத்திருந்த நிதி ஏற்பாட்டின் அளவு அதில் செலவு செய்யப்பட்ட அளவு, சேமிப்பு என்பன வரைபடம். 33 இல் தரப்படுகின்றது.



உரு 33 – கடந்த 6 வருட காலப்பகுதியில் பெருந்தெருக்கள் அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாடு மற்றும் பயன்பாடு

மூலம் - வருடாந்த செயலாற்றல் அறிக்கை – பெருந்தெருக்கள் அமைச்சு 2021

கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு

இலங்கை மக்களின் சமூக பொருளாதார அபிவிருத்தி, போக்குவரத்து ஒத்துழைப்புக்கள் நுழைவு தேவைப்பாடுகள் என்பவற்றை அடைந்து கொள்ளும் வகையில் தேசிய வீதி வலையமைப்பினை மேம்படுத்தி பராமரிப்பதற்காக தேசிய கொள்கைகள் மற்றும் அமுல்ப்படுத்தும் நடைமுறைகளைத் தயாரிக்கும் கடமைகள் பெருந்தெருக்கள் அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் ஒருங்கிணைந்த வீதி முறைமையை அபிவிருத்தி செய்யும் தேவைப்பாட்டினை இனங்கண்டு கிராமிய வீதிகளைப் போல அவற்றுடன் இணைந்த ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக முன்னுரிமை வழங்கி விசேட கடமைகளை நிறைவேற்றுவதற்காக ஒரு தனியான நிருவக கட்டமைப்பினை உருவாக்கி 2187/27 ஆம் இலக்க 2020-08-09 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் மூலம் கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு ஸ்தாபிக்கப்பட்டது.

அவ்வாறே பெருந்தெருக்கள் அமைச்சின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களின் பெருந்தெருக்கள் அமைச்சின் கொள்கை ரீதியான வழிகாட்டல்களின் கீழ் விரிவான தூரநோக்கு மற்றும் இலக்கிடப்பட்ட அணுகுதல்களின் ஊடாக இராஜாங்க அமைச்சின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றது. அதற்காக புதிய செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை இனங்காணல், திட்டமிடல், அமுல்ப்படுத்துதல், செயற்படுத்துதல், பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் என்பனவற்றை பிரதானமாக இராஜாங்க அமைச்சின் மூலம் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது.

அதற்கிணங்க கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க

அமைச்சினால் பின்வரும் பிரதான குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது.

- கிராமிய வீதிகள், பாலங்கள், மற்றும் அதனுடன் இணைந்த ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக தேவையான தந்திரோபாயங்களை இனங்காணல்.

- கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான புதிய நடைமுறைத் தொழில்நுட்பங்களையும் இயந்திர உபகரணங்களையும் அறிமுகப்படுத்துதல்.

- கிராமிய சமூகத்தில் தொழில் மற்றும் வியாபார வாய்ப்புக்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- முன்னுரிமைக்கு இணங்க இனங்கண்டு கிராமிய வீதிகள், பாலங்கள், மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை ஆக்கபூர்வமாக அபிவிருத்தி செய்தல்.

மேற்கூறிய கடமைகளை நிறைவேற்றுவது சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கி கீழே தரப்படுகின்றன.

- 2021 ஆம் ஆண்டின் போது கிராமிய பாலங்கள் செயற்திட்டம் மற்றும் கிராமிய வீதிகளை மேம்படுத்தும் செயற்திட்டம் என்பவற்றிற்காக ரூபா 24,997 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் 100,000 கிலோமீற்றர் கிராமிய வீதிகளை நிறைவேற்றும் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 20,000 மில்லியன் மேலதிக நிதி ஏற்பாடு பெருந்தெருக்கள் அமைச்சின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் போது கிராமிய பாலங்கள் செயற்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 9,500 மில்லியன் நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 8,381 மில்லியன் அல்லது 88 சதவீதத்தினை செலவு செய்வதற்கு முடியாதிருந்ததுடன் கிராமிய வீதிகளை மேம்படுத்தும் செயற்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த நிதி ஏற்பாடான ரூபா 35,497 மில்லியன் தொகைக்கு மத்தியில் ரூபா 7,018 மில்லியன் தொகையான செயற்திட்டங்களில் மாத்திரம் வேலைகள் முடிவடைந்திருந்ததுடன் அது மொத்த நிதி ஏற்பாட்டில் 19.6 சதவீதம் மாத்திரமாகும். மேலும் அபிவிருத்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்ட வீதிகளின் தூரம் 2,839 கிலோ மீட்டர்களில் 536 கிலோ மீட்டர்களில் மாத்திரம் வேலைகள் முடிவடைந்திருந்ததுடன் அது எதிர்பார்த்த இலக்கில் 18.87 சதவீதம் மாத்திரமாகும்.

- கிராமிய பாலங்களை நிர்மாணிப்பதற்காக அமைச்சுக்கு கிடைத்திருந்த பிரேரணைகளை விஞ்ஞான ரீதியான நடைமுறையினூடாக முன்னுரிமையின் அடிப்படையில் இனங்காண்பதற்காக இரண்டு நிறுவனங்களுக்கு ரூபா 31.62 மில்லியன் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நிறுவனங்களினால் 6 மாவட்டங்களில் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய 6,432 பாலங்கள் இனங்காணப்பட்டு அவை தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அப்பாலங்களுக்கு மத்தியில் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 13 பாலங்கள் மாத்திரம் நிர்மாணிப்பதற்காக

தெரிவு செய்யப்பட்டிருந்தமையால் மேற்கூறிய இரண்டு நிறுவனங்களுக்காகவும் செலவு செய்யப்பட்ட பணம் சிக்கனமற்ற செலவாக மாறியிருந்தது.

வீதி அபிவிருத்தி அதிகார சபை

- 2021 ஆம் ஆண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்துவைக்கப்படாதுள்ள ஒட்டுமொத்த கடன் மீதி ரூபா 359,479 மில்லியனாக இருந்ததுடன் அது ரூபா 268,313 மில்லியன் உள்நாட்டு வங்கி கடன்களையும் ரூபா 91,166 மில்லியன் தொகுதிக் கடன்களையும் உள்ளடக்கியிருந்தன. அந்த வங்கி கடன் மீதியில் அனுமதிப் பத்திரம் பெற்ற வங்கிக் கடன் ரூபா 245,103 மில்லியனையும் அனுமதி பத்திரம் பெற்ற வங்கி அல்லாத கடன் ரூபா 114,376 மில்லியனையும் உள்ளடக்கியிருந்ததுடன் அரசாங்க வங்கிக் கடன் மீதி ரூபா 307,893 மில்லியனையும் தனியார் வங்கி கடன் மீதி ரூபா 51,586 மில்லியனையும் உள்ளடக்கியிருந்தது. மேலும் இந்த ஒட்டுமொத்த வங்கி கடன்களில் ரூபா 219,744 மில்லியன் வங்கி கடன்கள் மீளப்பட்டியல்படுத்தப்பட்டும் தொகுதிக் கடன்கள் வழங்கப்பட்டும் இருந்தன. இக்கடன் மீதிகளில் 2030 இலிருந்து 2039 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் செலுத்தி முடிவுறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட பணம் ரூபா 239,857 மில்லியனாகும்.

- 100,000 கிலோமீட்டர் வீதி நிகழ்ச்சித்திட்டம், மத்திய அதிவேக வீதியினை நிர்மாணித்தல், பெருந்தெருக்களை விஸ்தரித்தலும் மேம்படுத்தலும் மற்றும் அதிகார சபையின் தொழிற்பாட்டு மூலதன தேவைப்பாட்டிற்காகவும் இக்கடன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் கடனுக்கான வட்டியானது நிறையூட்டப்பட்ட தொடக்க கடன் விகிதத்திற்கு உச்ச அளவாக 2 சதவீதத்திலிருந்து 2.8 சதவீதம் வரையான வீச்சுடைய பெறுமதி சேர்த்துக்கொள்ளப்பட்டு வட்டி நிர்ணயிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்த அனைத்து கடன்களையும் பெற்றுக்கொள்ளும் போது திறைசேரி பிணைகள் வழங்கப்பட்டிருந்ததுடன் கடனையும் தவணைப் பணங்களையும் செலுத்துவதற்காக திறைசேரியின் வருடாந்த பாதீட்டு நிதி ஏற்பாட்டினூடாக அதிகார சபைக்கு நிதிகள் வழங்கப்பட்டன.

- 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் A மற்றும் B தரங்களில் பெருந்தெருக்கள் வலையமைப்பின் மொத்த தூரம் 12,225 கிலோ மீட்டர்களாக இருந்ததுடன் அதில் 26 சதவீதமான தூரம் அதாவது 3,179 கிலோமீட்டர் அளவானவற்றை அத்திகதியில் மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க மொத்த வலையமைப்பில் 74 சதவீதமான தூரம் இன்னும் மூலதனமாக்குவதற்கு மிகுதியாக இருந்தது.

- 2008 இன் 40 ஆம் இலக்க வீதிகள் அதிகாரச் சட்டத்தின் 4(3) ஆம் பிரிவின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய ஒருங்கிணைந்த வீதி முறைமையின் அபிவிருத்தி மற்றும் பராமரிப்பிற்கான செயல் நடவடிக்கைத் திட்டமானது அதிகாரச்சட்டத்தின் 6(1) மற்றும் 7(1) ஆம் பிரிவுகளின் பிரகாரம் தோற்றுவிக்கப்பட வேண்டிய வீதி முறைமை அபிவிருத்தி ஆலோசனை சபை மற்றும் மாவட்ட வீதி முறைமை அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்

குழு என்பன வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் தோற்றுவிக்கப்பட்டிருக்கவில்லை.

- ஊழியர் எண்ணிக்கை 13,000 இற்கு மேற்பட்ட நாடளாவிய ரீதியில் பரவியுள்ள ஒரு நிறுவனமான வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஊழியர்களைச் சேர்த்தக்கொள்ளல் மற்றும் பதவியுயர்த்துதல் சம்பந்தமாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரித்த ஆட்சேர்ப்பு நடைமுறை இல்லாததுடன் 2005 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை பணிப்பாளர் சபையினால் அங்கீகரித்த ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்த்துதல்கள் நடைமுறை அமுல்ப்படுத்தப்படுகின்றன. அவ்வாறே முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2009 ஆம் ஆண்டின் போது சமர்ப்பித்திருந்த பதவியணியினர் மீள்கட்டமைப்பு சிபாரிசுகளை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாது பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் 23 பதவிகள் தொடர்பாக 268 உத்தியோகத்தர்களுக்கு பிழையான சம்பள அளவுத்திட்டத்திற்கு இணங்க சம்பளம் தயாரிக்கப்பட்டு அதற்கிணங்க கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

- 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிவேக வீதி செயற்பாடு மற்றும் பராமரிப்பு முகாமைத்துவ பிரிவின் சொத்துக்கள் ரூபா 824,859 மில்லியன் மற்றும் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக மாத்திரம் வருமானம் மற்றும் செலவுகள் முறையே ரூபா 8,168 மில்லியனாகவும் ரூபா 3,638 மில்லியனாகவும் இருந்தன. இது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஏனைய செயற்பாட்டு பிரிவுகளிலிருந்து தனியான ஒரு சபையாக இனங்காணும் வரையறைகளை அதிவேக வீதி பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவு பூர்த்தி செய்திருந்த போதிலும் அதிகார சபையின் முகாமைத்துவத்தினால் அதிவேக வீதிப் பிரிவானது சாதாரண செயற்பாடுகளிலிருந்து வேறாக இனங்காணப்பட்டு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. அதிவேக வீதிப் பிரிவினை தனியான ஒரு சபையாக இனங்காண்பதன் மூலம் வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக வளங்களை ஒதுக்கீடு செய்வதன் மூலம் உயர்ந்த செயலாற்றலினை எதிர்பார்க்கலாம்.

- கொழும்பு கட்டுநாயக்கா அதிவேக வீதியில் இலக்ட்ரோனிக் கட்டண அறவீட்டிற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கும் இலங்கை வங்கிக்குமிடையே மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் உடன்படிக்கை செய்த காலம் முடிவடைந்து 02 ஆண்டுகளைக் கடந்திருந்தது. அதற்கிணங்க புதிய உடன்படிக்கை மேற்கொள்ளாமையின் அடிப்படையில் வங்கியினால் அதிகாரம் இல்லாது 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்காக மொத்தமாக ரூபா 12.4 மில்லியன் தொகையானது கொடுக்கல் வாங்கல் கிரயமாக அதிவேக வீதி வருமானத்திலிருந்து கழிக்கப்பட்டிந்தது. அவ்வாறே அந்த வீதியில் இலக்ட்ரோனிக் கட்டணம் செலுத்தும் முறைமையை பயன்படுத்துபவர்களை ஊக்குவிப்பதற்கு முதல் 06 மாதத்திற்காக மாத்திரம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்ட 10 சதவீத கழிவு அதன் பின்னரும் வழங்கப்பட்டதனால் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் அதிகார சபையினால் ரூபா 56.5 மில்லியன் வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

- அதிவேக வீதிகளிலிருந்து உழைக்கின்ற வருமானத்தை கட்டணம் அறவிடப்படும் தேசிய பெருந்தெருக்களின் அபிவிருத்திக்கும் பராமரிப்பிற்கும் பயன்படுத்த வேண்டிய போதிலும் அதற்கு மாற்றமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிவேக வீதிகளிலிருந்து உழைத்த ரூபா 61,435 மில்லியன் வருமானத்தில் பெறுமதி சேர் வரிக் கொடுப்பனவுக்காக ரூபா 18,473 மில்லியன், கடனுக்கான தவணைப் பண கொடுப்பனவுக்காக ரூபா 4,052 மில்லியன் அதிகார சபையின் சம்பளம் சார்ந்த கொடுப்பனவுகளுக்காக ரூபா 9,895 மில்லியன், வீதி அபிவிருத்தி அதிகாரச் சபையின் ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் படிகள் கொடுப்பனவுக்காக ரூபா 10,713 மில்லியன், பொதுச் செலவுகள் மற்றும் செயற்திட்டங்களுக்கான கொடுப்பனவுகளுக்காக ரூபா 3,402 மில்லியன் மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு வசதிகளை வழங்குவதற்காக ரூபா 650 மில்லியனாக கூட்டு மொத்தமாக ரூபா 47,185 மில்லியன் தொகை செலவு செய்யப்பட்டிருந்தது.

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 133 ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு கம்பனியால் ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒரு தடவை பங்குதாரர்களின் வருடாந்த பொதுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் எந்த துணைக் கம்பனியாலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- கம்பனிகளின் நிதி நிருவாகம், கொள்வனவுகள் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் சம்பந்தமாக முறைமையையும் ஒத்த தன்மையையும் உருவாக்கும் வகையில் உரிய துறைகள் சம்பந்தமாக கட்டமைப்பு ரீதியான வடிவமைப்பினை அல்லது வழிகாட்டியினை அறிமுகப்படுத்துவதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையும் வரிசை அமைச்சும் தலையிட்டு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

- வீதி அபிவிருத்தி அதிகார சபையின் துணைக்கம்பனியான வரையறுத்த அதிவேக வீதி போக்குவரத்து (தனியார்) கம்பனி 2015 கணக்காண்டின் பின்னர் இன்றுவரை நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை.

- வீதி அபிவிருத்தி அதிகார சபையின் துணைக் கம்பனியான வரையறுத்த மகனெகும இமல்சன் (தனியார்) கம்பனியின் பங்குரிமையில் 99 சதவீதத்தினை வீதி அபிவிருத்தி அதிகாரச் சபை கொண்டுள்ளது என அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தும் கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கும் இன்னும் தனியார் தரப்பினர்களுக்கும் 50 சதவீத படியாக கம்பனியின் பங்களில் உரிமை காணப்படுகின்றது என குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் கம்பனியின் வழங்கப்பட்ட பங்குச் சான்றிதழ்களில் உறுதிப்படுத்தப்படாத ரூபா 01 மில்லியன் முதலீடு மேற்கொள்ளப்பட்டது என குறிப்பிடப்பட்டிருந்தும் உரிய கம்பனியால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டதாவது ரூபா 100 மில்லியன் முதலீட்டுப் பெறுமதியாகவும் மிகுதி அதிகார சபையினால் கம்பனிக்கு வழங்கிய கடனாகவும் ஆகும். அவ்வாறே 99 சதவீதத்திற்கு நேரொத்ததான

பிரதிநிதித்துவமானது கம்பனியின் பணிப்பாளர் சபையில் அதிகார சபைக்கு கிடைத்திருக்கவில்லை.

- முன்னணி செயற்திட்டங்களின் பலவீனமான திட்டங்களின் காரணமாக மத்திய அதிவேக வீதிச் செயற்திட்டத்தின் 04 ஆம் பகுதியின் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு 2016 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தும் 2022 பெப்ரவி 28 ஆந் திகதி வரையும் செயற்திட்டத்தின் சிவில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் ரூபா 448.87 மில்லியன் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிற்காக செலவு செய்யப்பட்டிருந்தது.
- மத்திய அதிவேக வீதி செயற்திட்டத்தின் 3 ஆம் பகுதிக்கான செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு 2013 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்டிருந்தும் நீண்டகால தாமதத்தின் பின்னர் 2021 ஆகஸ்ட் 20 ஆந் திகதி 2.25 கிலோ மீற்றர் நீளமான வீதிப் பகுதி தொடர்பாக 3 ஒப்பந்தங்கள் வழங்கப்படும் வரை செயற்திட்டத்தின் சிவில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2020 திசெம்பர் 31 வரை செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிற்காக ரூபா 833.83 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது.

- 100,000 கிலோ மீற்றர் கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 53,517.39 கிலோ மீற்றரைக் கொண்ட 71,468 கிராமிய வீதி செயற்திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்காக இனங்காணப்பட்டிருந்தன. அத்திகதி வரை மேற்கூறிய வீதிச் செயற்திட்டங்களில் 24,785.04 கிலோ மீற்றர் அளவான 16,705 வீதி செயற்திட்டங்களுக்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 356.44 பில்லியன் ஒப்பந்த பெறுமதியான 11,595 வீதிச் செயற்திட்டங்களுக்காக ஒப்பந்தங்கள் வழங்குதல் முடிவடைந்திருந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 92.25 பில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 15.65 பில்லியன் விலைப்பட்டியல்களுக்காக இன்னும் செலுத்த வேண்டியிருந்தது.

- 100,000 கிலோ மீற்றர் கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட வீதி அபிவிருத்தியின் போது பெருந்தெருக்களை அபிவிருத்தி செய்வதற்காக பயன்படுத்தப்படுகின்ற பெருந்தெருக்கள் விலை விகித பட்டியலும் (HSR) பொருள் விபரக் குறிப்புக்களும் பயன்படுத்தப்பட்டிருந்தன. எனினும் மேற்கூறிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வீதி அபிவிருத்திகளில் அதிக அளவானவை கிராமிய வீதி அபிவிருத்திகளாக இருந்ததனால் அதற்காக பெருந்தெருக்கள் விலை விகிதமும் பொருள் விபரக் குறிப்பும் பயன்படுத்தப்படுதல் சிக்கன மற்றதும் வினைத்திறன் அற்றதும் என்பதனால் அவற்றிற்காக கிராமிய வீதிக்கான பொருள் விபரக் குறிப்பு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்தது.

மின்வலு துறை

கணக்காய்வு அவதானிப்புக்கள்

- 31 மெகாவோட் மொறகொல்ல நீர்மின் நிலையத்தினை நிர்மாணித்தல்
- தேசிய நிலைமாற்றல் மற்றும் பகிர்ந்தளிப்பு வலையமைப்பினை அபிவிருத்தி செய்தல் மற்றும் வலுசக்தி செயற்திறன் அபிவிருத்தி செயற்திட்டம்
- ப்ரோட்லன்ட் நீர்மின் நிலைய செயற்திட்டம்
- வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களின் செயலாற்றல்
- சொத்துக்கள் முகாமைத்துவம்
- முகாமைத்துவ நலிவுகள்
- நிலக்கரி குறைவாக விநியோகித்தல்
- சொத்துக்களை சுவீகரித்தல்
- நிலக்கரி கம்பனியிலிருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடாமை
- பிறப்பாக்கி அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளாத உற்பத்தியாளர்களின் மின்சாரத்தினை கொள்வனவு செய்தல்
- ஏனைய நிறுவனங்களுக்கு ஊழியர்களை விடுவித்தல்
- நுகர்வோரின் வைப்புக்களுக்கான வட்டி செலுத்தாமை
- சம்பிரதாயபூர்வமற்ற மீளுருவாக்கத்தக்க வலுசக்தி (NCRE) செயற்திட்டத்திற்காக நியமக் கட்டணங்களை ஈடுபடுத்தல்
- நீண்டகால மின்பிறப்பாக்கி விரிவுபடுத்தல் திட்டம்
- கடன் பட்டோர் மீதிகளை அறவிடுதல
- வரைபாக்கப்பட்ட ஒருங்கிணைந்த உடன்படிக்கையொன்றின் அடிப்படையில் சம்பளம் செலுத்ததல
- சீத்தாவ நீர்மின் செயற்திட்டத்தினை அமுல்படுத்தல்
- லக்விஜய மின்நிலையத்தினை பராமரித்தல்
- தவிர்க்கப்பட்ட கிரய முறைமை (Avoided Cost Method) அடிப்படையில் கொடுப்பனவு மேற்கொள்ளல்
- ஊழியர் படிகளை செலுத்துதல்
- ஊக்குவிப்பு படிகளை செலுத்துதல்

மின்வலு துறை

மின்சக்தி அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் செயற்படுகின்ற சூரிய சக்தி, காற்று மற்றும் நீர் மின்னுற்பத்தி கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு மற்றும் 08 நியதிச்சட்ட சபைகள்/ நிறுவனங்களால் பின்வரும் கடமைகள் மற்றும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தன.

- "சௌபாக்கியத்தின் நோக்கு" கொள்கை பிரகடனத்திற்கு இணங்கவும் அரசினால் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசித்துள்ள ஏனைய தேசிய கொள்கைகளின் அடிப்படையில் அமைந்துள்ள "குறைந்த செலவினத்துடனான மின் உற்பத்திக் கலவை மற்றும் செயற்திறனான பகிர்ந்தளிப்பினை உறுதிப்படுத்தல்" இற்கு உரிய இராஜாங்க அமைச்சிற்காக கொள்கை ரீதியான வழிகாட்டலினை மேற்கொள்ளல் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களின் மின்வலு விடயத்திற்கு உரியதாக கொள்கை உருவாக்கம்.
- தேசிய வரவு செலவுத்திட்ட, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உள்ள செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகள் மற்றும் அதற்குரிய கொள்கை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை உருவாக்குதல், செயற்படுத்தல், பின் விபரம் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- உருவாக்கப்படும் மின்சக்தியின் ஆகக்கூடிய வினைத்திறன் மற்றும் பயன்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு சிமார்ட் மின்விநியோக கட்டமைப்பை உருவாக்குதல்
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின் உற்பத்தி நிலையங்கள், அனல் மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் இயற்கை மின் உற்பத்தி நிலையங்களின் கலவையை சமநிலைப்படுத்தி அதன் மூலம் மின் உற்பத்தி கிரயத்தை குறைத்தல் மற்றும் ஏற்படக்கூடிய நிச்சயமற்ற தன்மைகளை நீக்குதல்.
- நீண்ட கால தேவைப்பாடுகளின் அடிப்படையில் மின் உற்பத்தித் திட்டத்தை அமுல்ப்படுத்துதல
- மின்சார பரிமாற்றம் மற்றும் விநியோக செயன்முறைகளை வினைத்திறனாக மேற்கொள்ளுதல்
- கைத்தொழிற்துறை உற்பத்தி செயன்முறையின் சர்வதேச போட்டித்தன்மையை பேணும் பொருட்டு மின்சார கிரயத்தை குறைத்தல்

மேற்படி செயற்பாடுகளை நிறைவேற்றும் பொருட்டு பாராளுமன்றத்தால் 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 5,808 மில்லியன் கூட்டுமொத்தமான நிதியேற்பாடு மின்சக்தி அமைச்சு மற்றும் குறித்த அமைச்சின் கீழ் செயற்படுகின்ற இராஜாங்க அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 5,445 மில்லியன் தொகை மாத்திரமே மீளாய்வாண்டின் இறுதியளவில் பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் உரு 34 இல் காட்டப்பட்டுள்ளன.



	மின் வலு அமைச்சு	சூரிய சக்தி, காற்று மற்றும் மற்றும் நீர் மின் உற்பத்தி செயற்திட்டம்இரஜாங்க அமைச்சு	மொத்தம்
நிதி ஏற்பாடு ரூபா.மில்லியன்	5067	741	5808
செலவினம் ரூபா.மில்லியன்	4918	527	5445
சேமிப்பு ரூபா.மில்லியன்	149	214	363

உரு 34 - வழங்கப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாட்டின் அளவு மற்றும் உள்ளபடியான செலவினம் மூலம் - 2021ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள்

மின்சக்தி அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் செயற்படுகின்ற இராஜாங்க அமைச்சு மற்றும் நியதிச்சட்ட சபைகள்/ நிறுவனங்களின் செயலாற்றல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

31 மெகாவோட் மொறகொல்ல நீர்மின் நிலையத்தினை நிர்மாணித்தல்

31 மெகாவோட் இயலளவினை தேசிய மின்சாரக் கட்டமைப்பிற்கு பெற்றுக் கொள்ளும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட்ட மொறகொல்ல நீர்மின்நிலையத்தினை நிர்மாணிக்கும் செயற்திட்டம் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 3 வருட தாமதத்தின் பின்னர் இதன் பணிகள் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 18,809 மில்லியனாக இருந்ததுடன் அவற்றுள் ரூபா 14,851 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கிடைத்திருந்தது. 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் அதன் பௌதீக செயல்முன்னேற்றம் 30 சதவீதமாக இருந்தது. செயற்திட்டத்தின் மதியுரை சேவை ஒப்பந்தம் கையளிப்பதில் தாமதமானதன் காரணத்தினால் செயற்திட்டத்தை உரிய திகதியில் ஆரம்பிக்காமையால் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகைக்காக ரூபா 28 மில்லியனுக்கு அண்மிய ஐக்கிய அமெரிக்க டொலர் 177,931 ஆன தண்டப்பணம் (Commitment Charges) செலுத்த நேர்ந்திருந்தது.

தேசிய நிலைமாற்றல் மற்றும் பகிர்ந்தளிப்பு வலையமைப்பினை அபிவிருத்தி செய்தல் மற்றும் வலுசக்தி செயற்திறன் அபிவிருத்தி செயற்திட்டம்

மேல், மத்திய மற்றும் வடமத்திய மாகாணங்களில் வலையமைப்பின் இயலளவை

அதிகரித்தல் மற்றும் நிலைமாற்றல் இழப்புக்களை குறைக்கும் நோக்கில் செயற்படுத்தப்படும் இச்செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 37,285 மில்லியனாக காணப்பட்டதுடன் இது 2015 சனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2018 சனவரி மாதத்தில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் விடயப்பரப்பு JICA நிறுவனத்துடன் கலந்துரையாடப்பட்டு இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு தாமதமடைந்தமை, ஒப்பந்ததாரர்களின் முன்தகைமைகள் (PQ) மற்றும் பெறுகை பதிவேடுகளுக்காக JICA அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள தாமதமடைந்தமை ஆகியவற்றின் அடிப்படையில் செயற்திட்டத்தை உரிய திகதியில் பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. 2021 திசெம்பர் அளவில் இந்த செயற்திட்டத்தின் பௌதீக செயல்முன்னேற்றம் 48 சதவீதமாக இருந்தது.

ப்ரோட்லன்ட் நீர்மின் நிலைய செயற்திட்டம்

35 மெகாவோட் இயலளவுடனான ப்ரோட்லன்ட் நீர்மின் நிலையத்தினை நிர்மாணிப்பதற்கான மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 9,424 மில்லியனாக காணப்பட்டதுடன் இச்செயற்திட்டம் 2013 ஆகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆகஸ்ட் மாதம் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்கான காணிகளை சுவீகரிப்பதில் தாமதம் ஏற்பட்டமை மற்றும் சமூக பிரச்சினைகள் உருவாகியமை காரணமாக செயற்திட்டத்தை நிறைவு செய்வதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்திற்குரிய கடன் தொகை உரிய முறையில பயன்படுத்தப்படாத காரணத்தினால் இச்செயற்திட்டத்திற்காக சீனாவின் கைத்தொழில் மற்றும் வணிக வங்கி (ICBC) இற்கு அண்ணளவாக ஐக்கிய அமெரிக்க டொலர் 1,197,199.67 ஆன தொகை 2019 திசெம்பர் 16 ஆந் திகதியளவில் தண்டப்பணமாக (Commitment Charges) செலுத்தப்பட்டிருந்ததுடன் செயற்திட்டம் 2022 சனவரி மாதம் முதல் தேசிய மின்சார கட்டமைப்புடன் இணைக்கப்பட்டிருந்தது.

வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களின் செயலாற்றல்

மின்சார உருவாக்கம் மூலம் மீளுருவாக்கக் கூடிய வலுசக்தியை உருவாக்கும் நோக்கில் நாகதீபம், அனலைதீவு மற்றும் பருத்தித்துறை ஆகிய சிறு தீவுகள் மூன்றில் இருமுக மீளுருவாக்கக்கூடிய வலுசக்தி கட்டமைப்பினை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 1,980 மில்லியனான மதிப்பீட்டுக் கிரயம் மதிப்பிடப்பட்டிருந்தது. செயற்திட்டம் 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டில் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 வரையிலும் பெறுகை நடவடிக்கைகள் இடம்பெற்றவாறு இருந்ததுடன் இச்செயல்முன்னேற்றத்தின் பௌதீக செயல்முன்னேற்றமொன்று அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

சொத்துக்கள் முகாமைத்துவம்

2017 திசெம்பர் 21 ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் அரசின் அனைத்து நிறுவனங்களினாலும் பயன்படுத்தப்படும் அரசிற்குரிய அனைத்து வாகனங்களும் அந்நிறுவனத்தின் பெயரிலேயே பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டிய தேவைப்பாடு வலியுறுத்தப்பட்டுள்ளது. எவ்வாறான போதிலும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மின்வலு அமைச்சின்

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 365.7 மில்லியன் பெறுமதியான 42 வாகனங்களின் பெறுமதி ரூபா 227.7 மில்லியனான 19 வாகனங்கள் பௌதீக ரீதியில் அமைச்சிடம் காணப்படவில்லை.

முகாமைத்துவ நலிவுகள்

- மீளுருவாக்கத்தக்க வலுசக்தியின் பங்களிப்பினை உயர்த்துவதற்காக கேந்திரமயப்படுத்தப்பட்ட இணைப்பு இயந்திரமொன்றின் ஊடாக மீளுருவாக்கத்தக்க வலுசக்தி செயற்திட்டத்தின் அங்கீகாரத்திற்காக செலவிடப்படும் நீண்டகால ரீதியில் குறைத்தல் மற்றும் மீளுருவாக்க கூடிய வலுசக்தி வளங்களை உச்சமாக பயன்படுத்துவதற்காக காற்று, சூரியஒளி மற்றும் மழை வீழ்ச்சி ஆகியவற்றுக்கான ஆக்கபூர்வமான எதிர்வு கூறும் தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்துவது இலங்கையின் தேசிய வலுசக்தி கொள்கை மற்றும் மூலோபாயத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- தேசிய வலுசக்தி கொள்கை மற்றும் மூலோபாயக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள செயலாற்றல் காலச்சட்டகத்தின் மூலம் இலக்குகள் மற்றும் எதிர்பார்த்த கொள்கை தீர்மானங்களுடன் தொடர்புபடும் காலச்சட்டகங்கள் மற்றும் அவற்றை அடைந்து கொள்ளும் பொறுப்பு ஒவ்வொரு நிறுவனத்திற்கும் சாட்டப்பட்டுள்ளது. அதற்கமைய, மின்வலு அமைச்சினால் வலுசக்தி பாதுகாப்பினை சான்றுபடுத்துதல் மற்றும் மீளுருவாக்கக் கூடிய வலுசக்தியின் பங்களிப்பினை அதிகரிப்பதற்காக வலயத்தில் உள்ள நாடுகளுடன் எல்லைகளின் ஊடாக மின்நிலை மாற்றும் பொருளாதார இயலுமையை 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் ஆராய்ந்து பதிவேட்டிற்கு உட்படுத்துதல், வலுசக்தி துறையின் செயலாற்றல் தொடர்பில் தீர்மானமிக்க தாக்கம் ஏற்படுத்தக்கூடிய உள்ளக மற்றும் வெளிவாரி நிச்சயமற்ற தன்மைகள் தொடர்பில் ஆராய்வதற்காக பிரதான தரப்பினர்களின் போதிய பிரதிநிதித்துவத்துடன் ‘‘வலுசக்தி துறையின் அச்சுறுத்தல்களை மதிப்பீடு செய்யும் சபை’’ ஆக பெயரிடப்பட்ட உயர்மட்டத்திலான நிலையான செயற்குழுவொன்று 2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் நிறுவுதல் மற்றும் பொதுஇடங்களை ஒளியூட்டுதல் உள்ளடங்களாக கிராமிய, நகர மற்றும் பிரதான வீதிகளின் மின் விளக்குகளுக்காக ஒளியூட்டல் நியமங்கள் 2020 ஆம் ஆண்டினுள் அறிமுகப்படுத்தப்பட்டு கட்டாய அடிப்படையில் நடைமுறைப்படுத்துதல் எனும் இலக்கு மற்றும் மைல் கற்களை அடைந்து கொள்ளக் கூடியதாக இருந்த போதிலும் அந்த பொறுப்பு போதியமுறையில் நிறைவேறியிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது

நிலக்கரி குறைவாக விநியோகித்தல்

நிலக்கரி கம்பனியினால் விநியோகிக்கப்படும் ரூபா 539.19 மில்லியனான நிலுவை மீதியொன்று ஏழு வருட காலமாக லங்கா கோல்ட் கம்பனியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்ப்பனவு நடைமுறையின் கீழ் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

சொத்துக்களை சுவீகரித்தல்

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கை எனர்ஜீஸ் (தனியார்) கம்பனி மற்றும் குழுமத்தினால்

தனியார் கம்பனியொன்றுடன் பங்குடமை முயற்சியொன்றாக நுன்சாம்பல் (Fly Ash) மற்றும் நிறைகூடிய சாம்பல் (Bottom Slag) பயன்படுத்தி சீமெந்துடன் தொடர்புடைய உற்பத்திகள் மற்றும் சந்தைப்படுத்தல் கைத்தொழில் கூடமொன்றினை நிர்மாணிப்பதற்காக ரூபா 7.36 மில்லியனான முதலீடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் பங்குடமை உடன்படிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் வியாபாரத்தின் பங்காளர்கள் இல்லாதிருந்த காரணத்தினால் சொத்துக்கள் செயலற்று காணப்பட்டது. கம்பனியின் பணிப்பாளர் சபையினால் சொத்துக்கள் இலங்கை மின்சார சபைக்கு கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டு 2016 நவம்பர் 10 ஆந் திகதி பொதுமுகாமையாளருக்கு தொடர்பாடல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அச்சொத்துக்கள் 2021 ஆகஸ்ட் 02 ஆந் திகதி வரையிலும் இலங்கை மின்சார சபையினால் சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

நிலக்கரி கம்பனியிலிருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடாமை

நிலக்கரி பற்றாக்குறைக்காக லங்கா கோல்ட் கம்பனியினால் இலங்கை மின்சார சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 714.96 மில்லியனான தொகை ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக எந்த அறவிடலும் மேற்கொள்ளப்படாது நிலுவையாக காணப்பட்டது.

பிறப்பாக்கி அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளாத உற்பத்தியாளர்களின் மின்சாரத்தினை கொள்வனவு செய்தல்

திருத்தப்பட்ட 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 7(1) மற்றும் 43(1) பிரிவுகளுக்கு முரணாக கண்காணிப்பாளரின் அதிகாரத்தினை பெற்றுக்கொள்ளாது பிறப்பாக்கி அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ளாத ஓய்புபெற்ற சுயாதீன வலுசக்தி உற்பத்தியாளர்கள் மூவரிடமிருந்து (ஐ.பீ.பீ) 2021 ஆம் ஆண்டினுள் ரூபா 6.02 பில்லியனான கிகாவோட் 261.32 வலுசக்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

ஏனைய நிறுவனங்களுக்கு ஊழியர்களை விடுவித்தல்

பொதுமுயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அரசாங்க முயற்சிகளுக்கான செயற்பாட்டு கையேட்டின் 3.5 ஆம் பிரிவுக்கு முரணாக வரிசை அமைச்சு மற்றும் சபையின் நலன்புரி நிதியத்திற்காக விடுவிக்கப்பட்ட 65 ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளாக 2021 ஆம் ஆண்டினுள் சபையினால் ரூபா 105.22 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

நுகர்வோரின் வைப்புக்களுக்கான வட்டி செலுத்தாமை

திருத்தப்பட்ட 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார அதிகாரச்சட்டத்தின் 28(3) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சபையின் நுகர்வோரின் வைப்புக்களுக்காக வட்டி செலுத்தியிருக்கவில்லை. 2021 ஆம் ஆண்டிற்காக இலங்கை மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவினால் அறிக்கையிடப்பட்ட வீதத்தின் அடிப்படையில் கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளுக்கிணங்க அதற்காக செலுத்த வேண்டிய வட்டி ரூபா 1,357.60 மில்லியனாக காணப்பட்டதுடன் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக செலுத்தப்படாத திரண்ட வட்டி ரூபா 8,089.50 மில்லியன் ஆகும்.

சம்பிரதாயபூர்வமற்ற மீளுருவாக்கத்தக்க வலுசக்தி (NCRE)

செயற்திட்டத்திற்காக நியமக் கட்டணங்களை ஈடுபடுத்தல்

திருத்தப்பட்ட 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் 2013 ஆகஸ்ட் 06 ஆந் திகதியின் பின்னர் சில சம்பிரதாயமற்ற மீளுருவாக்கத்தக்க வலுசக்கதி (NCRE) செயற்திட்டங்களுக்காக நியமக் கட்டணங்களை ஈடுபடுத்துவதற்காக பெறுகை நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். எவ்வாறன போதிலும் NCRE செயற்திட்டத்திற்காக 390 மெகாவோட் கூட்டுத்தொகையுடனான இயலளவுடைய 7 பெறுகைகள் மாத்திரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. மேலும், 390 மெகாவோட் இயலளவுடனான மேற்படி மின்சார நிலையங்களிலிருந்து 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான 49 மெகாவோட் இயலளவுடைய மின்நிலையங்கள் மாத்திரம் செயல்படுத்தப்பட்டிருந்தன.

நீண்டகால மின்பிறப்பாக்கி விரிவுபடுத்தல் திட்டம்

- 2018-2037 நீண்டகால மின்பிறப்பாக்கி விரிவுபடுத்தும் திட்டத்தின் பிரகாரம் 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளினுள் முறையே 500 மெகாவோட், 657 மெகாவோட், 430 மெகாவோட், மற்றும் 445 மெகாவோட் கூட்டு இயலளவுடைய உரிய மின்பிறப்பாக்கி நிலையத்தினை செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் திட்டமிடப்பட்ட 2,032 மெகாவோட்கள் புதிய இயலளவில் 661.6 மெகாவோட் கூட்டுஇயலளவுடனான மின்நிலையங்கள் மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தன. அதன் காரணமாக புதிய மின்நிலைய உற்பத்தி நிலையத்தினை நடைமுறைப்படுத்துவதன் செயல்முன்னேற்றம் கருத்தில் கொள்ளக்கூடிய அளவில் குறைவடைந்திருந்ததுடன் திட்டத்தின் நோக்கமான குறைந்த கிரயத்துடனான மின்சாரத்தினை விநியோகித்தல் நிறைவேறியிருக்கவில்லை. அதன் பெறுபேறாக 2021 ஆம் ஆண்டினுள் ரூபா 6.54 மில்லியன் பெறுமதியான 267.17 கிகாவோட் மணித்தியாலங்கள் மேலதிக மின்வலுவாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

- அலகொன்றின் சராசரி விற்பனை விலை அலகொன்றின் சராசரி விற்பனை விலை ரூபா 16.37 ஆன போது ஓய்வுபெற்ற சுயாதீன வலுசக்தி உற்பத்தியாளர்களின் மூன்று மின்உற்பத்தி நிலையங்களிலிருந்து மற்றும் 24 மெகாவோட் அளவான மேலதிக மின்உற்பத்தி நிலையமொன்றிலிருந்து 2021 ஆம் ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட வலுவக்தி அலகொன்றின் கிரயம் முறையே ரூபா 21.75, ரூபா 25.26, ரூபா 24.97 மற்றும் ரூபா 88.85 ஆகும். அதன் காரணமாக அதிக கிரயத்திற்கு அவசர மின்நிலையங்களை பயன்படுத்துவதற்கு பதிலாக உச்ச கேள்வியினை பூர்த்தி செய்வதற்காக ஆகக்குறைந்த கிரயத்துடன் நீண்டகால மின்சார உற்பத்தி விரிவாக்கல் திட்டத்தின் பிரகாரம் மின்நிலையங்களை செயற்படுத்தினால் வலுசக்தியை கொள்வனவு செய்யும் அதிக கிரயத்தை குறைத்துக் கொள்ள முடியும்.

கடன் பட்டோர் மீதிகளை அறவிடுதல்

2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 44,079 மில்லியனான வியாபாரக் கடன்பட்டோர் மீதியினுள் பொதுவான மற்றும் இருப்பு

விநியோகங்களுக்குரிய ரூபா 6,839 மில்லியனான கடன் மீதி ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக அறவிட வேண்டியதாக காணப்பட்டதுடன் அவற்றுள் ரூபா 2,928 மில்லியன் ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலம் அறவிடப்படாது காணப்பட்டது.

வரைபாக்கப்பட்ட ஒருங்கிணைந்த உடன்படிக்கையொன்றின் அடிப்படையில் சம்பளம் செலுத்துதல்

உரிய தரப்பினர்களின் அதாவது சேவை தருனரின் மற்றும் ஊழியர் சங்கத்தினால் கைச்சாத்திடப்பட்டிராமையால் சட்டரீதியான ஆவணமொன்றாக கருதப்படாத வரைபு ஒருங்கிணைந்த உடன்படிக்கையின் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டில் சபையினால் ஊழியர் சம்பளம் 25 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய அந்த அதிகாரமளிக்கப்படாத கொடுப்பனவுகள் காரணமாக சபைக்கு ஏற்பட்ட பாதகமான தாக்கம் அண்ணளவாக ரூபா 9.6 மில்லியன் ஆகும்.

சீத்தாவ நீர்மின் செயற்திட்டத்தினை அமுல்படுத்தல்

2018-2037 நீண்டகால மின்பிறப்பாக்கி திட்டத்தின் பிரகாரம் சீத்தாவ கங்கையின நீர்மின்சார செயற்திட்டம் 2022 ஆம் ஆண்டளவில் செயற்படுத்தப்பட வேண்டும். செயற்திட்ட முகாமைத்துவ அலகொன்று (பீ.எம்.யூ) 2016 செப்தெம்பர் மாதத்தில் நிறுவப்பட்டிருந்ததுடன் சாத்தியவள கற்கை மற்றும் விரிவான திட்டங்கள் மற்றும் வரைபாக்கப்பட்ட விலைக்கேள்வி ஆவணங்களை தயாரித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இச்செயற்திட்டத்தின் மூலம் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 301.19 மில்லியனான மொத்த செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் 2020 திசெம்பர் 20 ஆந் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் செயற்திட்ட பணிகள் நிறைவு செய்வதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. மேலும், 2021 பெப்ரவரி 23 ஆந் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் இச்செயற்திட்டம் வ/ப இலங்கை வலுசக்தி (தனியார்) கம்பனியின் ஊடாக அபிவிருத்தி செய்வதற்கும் இந்த ஒப்பந்தம் "தனிமூல பெறுகையொன்று" ஆக அக்கம்பனிக்கு கையளிப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய மேற்குறிப்பிடப்பட்ட பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட இந்த செலவினம் ஏனைய முதலீட்டாளருக்கு பயன்படுத்த முடியாத காரணத்தினால் செயற்திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 301.19 சபையின் செலவினமாக இனங்காண நேரும் அச்சுறுத்தல் உள்ளமை அவதானிக்கப்பட்டது.

லக்விஜய மின்நிலையத்தினை பராமரித்தல்

China Machinery Engineering Corporation (CMEC) இனால் சமர்ப்பிக்கப்பட்ட பயிற்றுவிக்கும் பதிவேட்டின் பிரகாரம் உபகரணங்களின் செயற்படு தன்மையை பராமரித்தல், மீளமைத்தல் அல்லது மேம்படுத்துவதற்கான அலகிற்காக விரிவுபடுத்தும் பிரித்தெடுப்பினை பரீட்சித்தல் (comprehensive disassembling inspection) மற்றும் பழுதுபார்த்தல்களுக்காக A தரத்திலான பராமரிப்பு காலவீச்சு 4 வருடங்கள் முதல் 6 வருடங்கள் வரையிலும் காணப்பட வேண்டும். எவ்வாறான போதிலும் லங்விஜய மின் நிலையத்தின் 02 அலகுகள் மற்றும் 03 இற்காக A தரத்திலான பராமரிப்பு அந்த அலகுகள் செயற்படுத்தப்பட்டு 7 வருடங்கள் கடந்துள்ள போதிலும் இடம்பெற்றிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டினுள்

லங்விஜய மின்நிலையத்தின் அலகு 02 மற்றும் 03 தொடர்பில் 14 செயலிழப்புக்கள் இடம்பெற்றிருந்ததுடன் அதன் மூலம் 663,510 மெகாவோட் மணித்தியாலங்கள் வலுசக்தி இழப்பொன்று ஏற்பட்டிருந்தமை தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டது.

தவிர்க்கப்பட்ட கிரய முறைமை (Avoided Cost Method) அடிப்படையில் கொடுப்பனவு மேற்கொள்ளல்

சிறிய நீர் மின்நிலையங்களுக்காக விலைகளை தீர்மானிக்கும் உள்ளபடியான கிரயத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் தவரிக்கப்பட்ட கிரய முறைமை (Avoided Cost Method) அடிப்படையில் சில சிறிய நீர் மின் உற்பத்தி நிலையங்களுக்கான விலை தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் இந்த முறைமை சிறுநீர் மின் நிலையங்களில் உள்ளபடியான கிரயத்திற்கு எந்தவிதத்திலும் தொடர்புறவில்லை. தவிர்க்கப்பட்ட கிரய முறைமை அனல் மின் நிலைய அனுப்பல்கள் (Dispatch) அடிப்படையில் காணப்படுவதுடன் அது எரிபொருள் கிரயத்தின் அடிப்படையில் வேறுபடும். **DGM/SYC/TCH/41** ஆம் இலக்க மி.ச(கட்டமைப்பு நிர்வாகம்) கடிதத்தின் பிரகாரம் நீர் மின் நிலையங்களின் சராசரி அலகுக் கிரயம் ரூபா 10 இனை விட குறைவாகக் காணப்பட வேண்டுமென்பது மற்றும் புள்ளிவிபர அறிக்கைகளின் பிரகாரம் 2020 இல் சபையின் நீர் மின் நிலையங்களின் அலகொன்றின் கிரயம் ரூபா 2.49 என குறிப்பிடப்பட்ட போதிலும் 2021 ஆம் ஆண்டிற்கான தவிர்க்கப்பட்ட கிரய முறைமையின் அடிப்படையில் சிறிய மின் உற்பத்தி நிலையங்களுக்குரிய கட்டிடங்கள் ஈரவலயங்களுக்காக ரூபா 19.11 மற்றும் உலர் வலயங்களுக்காக ரூபா 20.59 ஆக காணப்பட்டது.

ஊழியர் படிகளை செலுத்துதல்

பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பதவியணிக்கு அவ்வவ்போது பல்வேறு பதவியணி படிகள் சபையினால் செலுத்தப்பட்டுள்ள போதிலும், 2007 நவம்பர் 14 ஆந் திகதி அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு மற்றும் **BM/2021/22/01** ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்திற்கு முரணாக 323 ஊழியர்களுக்கு படிகள் செலுத்துதல் அவர்களின் சம்பளத்தில் 65 சதவீதத்தினை விஞ்சியிருந்தது.

மிகையூதிய படிகளை செலுத்துதல்

2021 நவம்பர் 21 ஆந் திகதிய அரசிற்கு சொந்தமான முயற்சிகளுக்கான செயற்பாட்டு கையேட்டின் 5.1 ஆம் பந்திக்கு முரணாக சபையினால் தொடர்ச்சியாக நட்டம் ஈட்டப்பட்டவாறு காணப்பட்ட போது வரைபாக்கப்பட்ட பல்தரப்பு உடன்படிக்கையின் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டில் ரூபா 2.7 பில்லியனான மிகையூதிய படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

வலுசக்தி துறை

கணக்காய்வு அவதானிப்புக்கள்

- வலுசக்தி அமைச்சின் செயலாற்றல்
- திருகோணமலை எண்ணெய்த் தாங்கி தொகுதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் புனரமைத்தல்
- சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பை நவீனமயப்படுத்தல் மற்றும் விரிவுபடுத்தல்
- வட மாகாணத்திற்காக மொத்த களஞ்சியமொன்றை தாபித்தல்
- பொலிப்டோ லங்கா கம்பனி
- ஒழுங்குபடுத்தல் பணிப்பொறுப்புக்களை முறையாக நிறைவேற்றாமை
- கப்பல் எண்ணெய் மற்றும் செயற்பாட்டு அனுமதிப்பத்திரம் விநியோகித்தல்
- தார் இறக்குமதி மற்றும் ஒழுங்குபடுத்துதல்
- விசேட செயற்திட்ட முகாமைத்துவம்
- செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்
- நட்டம் மற்றும் இழப்புக்கள்
- மனிதவள முகாமைத்துவம்
- உள்நாட்டு கனிய எண்ணெய் சந்தை
- இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகள் மற்றும் தேறிய சொத்துக்களின் நிலை
- சேமிப்பு பத்திர கொடுக்கல் வாங்கல்கள் (ஹெஜின்)
- இலங்கையில் பெற்றோலியத்தை களஞ்சியப்படுத்தல் மற்றும் பகிர்ந்தளிக்கும் வசதிகள்
- கம்பனிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல் மீதிகள் மற்றும் உடன்படிக்கை
- மாதாந்த பயன்பாட்டு கட்டணம் (MUF)
- சுத்திகரிப்பு நிறுத்தம் மற்றும் பராமரிப்பு - 2021 ஆம் ஆண்டு
- Ship to Party (SPS) எரிபொருள் பகிர்ந்தளிக்கும் முறைமை
- விற்பனை முகவர் தரகு
- பொது நுகர்வோர் வசதிகள்
- SAP கணனி முறைமை
- பொதுமுயற்சிகள் சுற்றறிக்கைகளுக்கு இணங்காமை
- பிணக்குகள் தீர்க்கும் உடன்படிக்கையின் (Settlement Agreement) நியதிகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பாக முறையான மேற்பார்வை செயற்பாடுகள் காணப்படாமை
- எழுத்துமூல உடன்படிக்கை காணப்படாமை
- எரிபொருள் விநியோகித்தல்
- எரிபொருள் பகிர்ந்தளிப்பதற்காக வாடகை அடிப்படையில் பௌசர் வண்டிகளை ஈடுபடுத்துதல்
- மூலதன செயற்திட்டம்
- ஊழியர் கடன்

வலுசக்தி துறை

வலுசக்தி அமைச்சின் கீழ் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை பெற்றோலிய மொத்த களஞ்சிய முனையக் கம்பனி மற்றும் இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை போன்ற நியதிச் சட்ட சபைகள் / 03 நிறுவனங்கள் காணப்படுவதுடன் கீழே குறிப்பிடப்பட்ட பணிகள் மற்றும் இலக்குகளை நிறைவேற்ற வேண்டியிருந்தது.

- குறித்துரைத்த விதிகள் மற்றும் கட்டளைச் சட்டங்களுக்கு இணங்க வலுசக்தி விடயத்திற்குரிய கொள்கை வழங்கல்.

- வலுசக்தி விடய பொறுப்பு அமைச்சரின் வழிகாட்டலின் கீழ் வலுசக்தி விடயப் பரப்பிற்குரிய அமைச்சரவை பத்திரம் அமைச்சரவைக்கும் மற்றும் கட்டளைச் சட்ட நியதிச்சட்டவாளருக்கு சமர்ப்பித்தல் மற்றும் அவற்றுக்குரிய நடவடிக்கைகளை பின்பற்றுதல்.

- அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய கொள்கை மற்றும் சட்ட விதிகளின் பிரகாரம் அமைச்சின் விடயப்பரப்பிற்குரிய வருடாந்த வரவு செலவுத்திட்டத்தின் மூலம் வழங்கப்படுகின்ற நிதியேற்பாடுகளில் துறைசார் கொள்கை மற்றும் திட்ட செயற்பாடுகள், நிதியேற்பாடுகளை உச்ச அளவில் ஆக்கபூர்வமானதாக ஈடுபடுத்துதல் மற்றும் மேற்பார்வை

- தேசிய கொள்கையில் அமைச்சின் தொலைநோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்களை மக்களுக்குத் தேவையான இலக்காகக் கொண்டு தேவையான பிரகாரம் நாளதுவரையாக்குதல்.

- அமைச்சின் விடயப்பரப்பினை செயற்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு தேவையான உச்சஅளவான பதவியணியினர்களை வடிவமைத்தல், உருவாக்குதல் மற்றும் பல்வேறு நிறுவனங்கள் / பிரிவுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள பதவியணியினர்களுக்கு உரியவாறு பொறுப்புக்களை கையளித்தல்.

- அமைச்சின் கீழ் காணப்படுகின்ற கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் தமது தொலைநோக்கு மற்றும் செயற்பணிகளை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கை எடுப்பதற்காக செயற்படுதல் மற்றும் மேற்பார்வை

- அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள சகல நிறுவனங்களினதும் நிர்வாக நடவடிக்கைகள், கணக்கீட்டு நடைமுறைகள் மற்றும் பெறுகை நடவடிக்கைகளை குறித்துரைத்த நியமங்களின் பிரகாரம் மேற்கொள்வதை கண்காணித்தல் மற்றும் கணக்காய்வு செயற்பாடுகளுக்காக உதவியினை வழங்குதல்.

- வலுசக்தி துறைக்குரிய பிரமாணங்கள், அனுமதிப்பத்திரங்கள், அனுமதிப்பத்திரங்களை மக்களுக்கு இசைவானதாக இலகுவாக மக்களை கேந்திரமயப்படுத்தி செயற்பாடுகளை செயற்திறனாக நிறைவேற்றுதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்.

2021 ஆம் ஆண்டின் போது மேற்கூறப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக

பராளுமன்றத்தினால் வலுசக்தி அமைச்சிற்காக ரூபா 274 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் ரூபா 228 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரம் வரைபடம் 35 இல் காண்பிக்கப்படுகின்றது.



வரைபடம் 35 இல் வழங்கப்பட்டுள்ள தேறிய நிதியேற்பாட்டின் அளவும் மற்றும் உள்ளபடியான செலவினம்

மூலம் :- 2021 வருடாந்த நிதிக்கூற்றுக்கள்

வலுசக்தி அமைச்சு மற்றும் அதன் கீழ் வருகின்ற நியதிச்சட்ட நிறுவனங்களினால் மேலே குறிப்பிடப்பட்ட பணிகள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட முக்கியமான மற்றும் பொருண்மையான கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

வலுசக்தி அமைச்சின் செயலாற்றல்

எரிபொருள் வழங்கும் தரத் தன்மையை பாதுகாப்பதற்கும், வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்துவதற்கும் முடியுமான பிரகாரம் கொள்கை நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்ட வழங்கல், பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பிடுதல் வலுசக்தி அமைச்சின் பணிகளாக இருந்த போதிலும் இலங்கையின் பிரகாரம் எண்ணெய் சந்தையின் செயற்பாட்டாளரான இலங்கை பெற்றொலிய கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை இந்தியன் எண்ணெய் கம்பனி என்ற இரண்டு நிறுவனங்களையும் மேவுகை செய்யும் வகையில் முறையான வேலைத்திட்டமொன்று அமைச்சின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டு அமுல்படுத்தப்பட்டமைக்கான போதியளவான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

திருகோணமலை எண்ணெய்த் தாங்கி தொகுதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் புனரமைத்தல்

உலகளாவிய அமைவிடத்தின் பிரகாரம் முழு உலகத்தினதும் கவனம் ஈர்க்கப்பட்டுள்ள உலகத்தின் இரண்டாவது ஆழமான துறைமுகமான திருகோணமலை துறைமுகத்தில் 1930 ஆம் ஆண்டு முதல் தாபிக்கப்பட்டுள்ள எண்ணெய்த் தாங்கி முறைமைகளின் கனமீற்றர் 12,500 இயலளவுடைய 102 தாங்கிகளையும் மற்றும் ஏனைய அதுசார்ந்த வசதிகளையும் கொண்டிருந்தது. தற்போது காணப்படுகின்ற மொத்த 99 தாங்கிகளில் கீழ்ப்பகுதியில் 14 தாங்கிகள் இலங்கை இந்திய எண்ணெய்க் கம்பனி பயன்படுத்துகின்றது. கைவிடப்பட்டுள்ள மேல் பகுதியில் 84 தாங்கிகளை நவீனமயப்படுத்துவதற்காக ஆரம்ப தீர்மானம்

எடுக்கும் நடவடிக்கைகள் 2015 ஏப்ரல் 29 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட போதிலும் தாங்கி தொகுதியின் அபிவிருத்தி மற்றும் புனரமைப்பிற்காக தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் எண்ணெய்த் தாங்கி தொகுதியின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்குரிய இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை இந்தியன் எண்ணெய்க் கம்பனி சேர்ந்து Trinco Petrolium Terminal (Pvt) Ltd. என்ற பெயரில் ஒன்றிணைந்த கம்பனியொன்று தாபிக்கப்பட்ட போதிலும் அதற்குரிய அபிவிருத்தி திட்டமேனும் இதுவரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பை நவீனமயப்படுத்தல் மற்றும் விரிவுபடுத்தல்

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பை நவீனமயப்படுத்தல் மற்றும் விரிவுபடுத்துதல் ஊடாக உள்நாட்டு தேவையை கவனத்தில் கொண்டு புதிய சுத்திகரிப்பு ஒன்றை தாபிப்பது தொடர்பாக 2011 ஆம் ஆண்டின் போது நிபுணர்கள் குழுவினால் சாத்தியவள ஆய்வு அறிக்கை வழங்கப்பட்டிருந்த போதிலும் எண்ணெய் சுத்திகரிப்பை நவீனமயப்படுத்துதல் மற்றும் விரிவுபடுத்துதல் அல்லது புதிய சுத்திகரிப்பை தாபிப்பதற்கு இதுவரை முடியாதிருந்தது.

வட மாகாணத்திற்காக மொத்த களஞ்சியமொன்றை தாபித்தல்

காங்கேசன்துறையில் அமைந்துள்ள எரிபொருள் மொத்த களஞ்சியம் அந்த இடத்திலிருந்து அகற்றுமாறு 2011 ஆம் ஆண்டின் போது சீமெந்துக் கூட்டுத்தாபனத்தால் இலங்கை பெற்றோலிய மொத்த களஞ்சிய முனையக் கம்பனிக்கு (CPSTL) அறிவிக்கப்பட்டிருந்த திகதி முதல் இதுவரை வட மாகாணத்திற்காக மொத்தக் களஞ்சியமொன்றை தாபிப்பதற்கு முடியாதிருந்தது. மேலும் 2016 ஒக்தோபர் 19 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் பொருத்தமான காணியொன்றை கண்டறியும் வரை காணப்படுகின்ற மொத்தக் களஞ்சியத்தை நவீனமயப்படுத்துதல் மற்றும் விரிவுபடுத்தலை மேற்கொண்டு பேணிச் செல்வதற்கான அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் இதுவரை அந்த செயற்திட்டத்தை நிறைவேற்றவும் முடியாதிருந்தது.

பொலிப்டோ லங்கா கம்பனி

2008 ஆம் ஆண்டில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கீழ் தாபிக்கப்பட்ட பொலிப்டோ லங்கா கம்பனி கனியவள அபிவிருத்தி அமைச்சின் கீழ் காணப்படுகின்றது. இந்த தொழிற்சாலை ஹொரண பிரதேசத்தில் தாபிக்கப்பட்டதுடன் பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுப் பொருட்களை ஈடுபடுத்தி எரிபொருள் உற்பத்திசெய்தல் இதன் பிரதான பணியாக இருந்ததுடன் அமைச்சிற்கு 60 சதவீதமும் பூர்த்தி செய்பவர்களுக்கு 30 சதவீதமும் மற்றும் மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் கனியவள ஆராய்ச்சி பீடத்திற்கு 10 சதவீதமும் உரித்தாக காணப்பட்டது. இந்தக் கம்பனி தற்போது செயற்பாடற்ற நிலையில் காணப்படுவதுடன் அரசாங்கத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள ரூபா 80 மில்லியனுக்கு மேற்பட்ட சொத்துக்கள் மற்றும் ஏனைய வசதிகளைப் போல உரிய முதலீட்டாளரின் முதலீடுகளிலிருந்தும் உரிய விளைவுகள் இன்றி சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கலாக அவதானிக்கப்பட்டது. அவ்வாறே இந்தக் கம்பனியை செயற்படுத்தி ஆக்கபூர்வமானதாக அமுல்படுத்துவதற்காக அமைச்சிற்கு எந்தவொரு முறையான

வேலைத்திட்டமும் காணப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

ஒழுங்குபடுத்தல் பணிப்பொறுப்புக்களை முறையாக நிறைவேற்றாமை

எரிபொருள் வழங்கல் சந்தர்ப்பங்களில் தரத்தன்மை மற்றும் வெளிப்படையினை உறுதிப்படுத்துவதற்காக இந்த நடவடிக்கைகளை முறையாக ஒழுங்குபடுத்துதல் வலுசக்தி அமைச்சின் பிரதான நோக்கம் மற்றும் பணிகளாகும். கனிய எண்ணெய், கப்பல் எண்ணெய், தார், உராய்வு எண்ணெய் போன்ற கனிய எண்ணெய்கள் சார்ந்த உற்பத்திகள் இலங்கைக்கு இறக்குமதி செய்தல் மற்றும் சுத்திகரித்தல், களஞ்சியப்படுத்தல், பகிர்ந்தளித்தல் போன்ற செயற்பாடுகளை சரியான முகாமைத்துவத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டமைக்கும், உரிய தரத்தினை உடைய உற்பத்திகளை நியாயமான தொகையில் தொடர்ச்சியாக நுகர்வோர்களுக்கு வழங்குவதை உறுதிப்படுத்துவதற்கும் கனிய எண்ணெய் சார்ந்த உற்பத்திகள் தொடர்பான நியமங்களை கட்டியெழுப்புதல், இரசாயனங்களை சேர்த்தல், களஞ்சிய இயலளவை அளக்கும் புதிய திட்ட முறைமை, எரிபொருள் நிறங்களை வருவித்தல் போன்ற செயற்பாடுகள் இந்த ஒழுங்குபடுத்தலில் உள்ளடங்கியுள்ளது.

- கனிய எண்ணெய் சார்ந்த பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் இற்கான நியமம் இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் மூலம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் இலங்கையில் அந்த நியமங்கள் பின்பற்றுதல் கட்டாயப்படுத்துவதற்காக முறையான வேலைத்திட்டமொன்றை ஈடுபடுத்துவதற்கு அமைச்சு இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், இலங்கையில் இதுவரை அந்த எரிபொருள்களின் தரத்தை பரீட்சிக்கும் அதிகாரம் பெற்ற நிறுவனமொன்று தாபிக்கப்படாதிருந்ததுடன் அதற்காக முறையான வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதற்கு அமைச்சு இதுவரை தவறியிருந்தது.

- 2016 ஆகஸ்ட் 30 ஆந் திகதிய அமப/16/1576/19/06 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் பெற்றோலிய அமைச்சு மற்றும் நிதி அமைச்சு ஒன்றிணைந்து இந்த முன்மொழிவின் பிரகாரம் பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு நியமங்களுக்கு இணங்க மூன்றாவது தரப்பினரின் மூலம் கனிய எண்ணெய் உற்பத்தி தொடர்பான ஆய்வுகூடமொன்றை பரீட்சிக்கக்கூடிய வகையில் உள்ள நவீன மற்றும் முழுமைப்படுத்தப்பட்ட கனிய எண்ணெய் ஆராய்ச்சிக் கூடமொன்று கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தில் தாபிக்கப்பட்டிருந்தது. எனினும் இதுவரை அந்த தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக் கொள்வதற்கோ அந்த நிறுவனத்துடன் இணக்கப்பாட்டிற்கு வருவதற்கோ அல்லது புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் சுயாதீனமான மூன்றாவது தரப்பினரின் மூலம் கனியஎண்ணெய் உற்பத்தி தொடர்பான ஆய்வுகூடங்களை பரீட்சித்துக் கொள்ளும் இயலுமை முறையாக பயன்படுத்திக் கொள்வதற்கு அமைச்சு இதுவரை தவறியிருந்ததுடன் அதன் காரணமாக அந்த கனிய எண்ணெய் ஆராய்ச்சிக் கூடம் நீண்டகாலம்

முதல் குறைவான பயன்பாட்டுடன் / விளைவற்றுக் காணப்பட்டது.

- ஒவ்வொரு கனிய எண்ணெய் உற்பத்திக்காகவும் நாட்டில் காணப்படுகின்ற கேள்விகளின் தரம், நிலை, அந்நிய செலாவணி தேவை, நாட்டின் ஏனைய இறக்குமதி மற்றும் உற்பத்திகளின் முன்னுரிமையளித்தல் போன்றவை தொடர்பாக முறையாக மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் உள்ளக ரீதியில் தொடர்பு ஏற்படுத்த வேண்டிய காலரீதியான தகவல்கள் வருகின்ற மற்றும் அதன் அடிப்படையிலான மதிப்பீடுகளை மேற்கொள்ளக்கூடிய தகவல் முறைமையொன்று அமைச்சிற்கு உள்ளமை உறுதிப்படுத்தப்படவில்லை. அதன் பிரகாரம் நாட்டின் தேவைக்கு பொருத்தமான முன்னுரிமையை இனங்கண்டு அந்தந்த துறைகளுக்கான அங்கீகாரத்தை வழங்குதல் மற்றும் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதா என்பது பிரச்சினைக்குரியதாக இருந்தது.

கப்பல் எண்ணெய் மற்றும் செயற்பாட்டு அனுமதிப்பத்திரம் விநியோகித்தல்

வலுசக்தி அமைச்சின் மேலதிக செயலாளரின் 2022 பெப்ரவரி 15 ஆந் திகதிய DEVF/6/1/23(II) ஆம் இலக்க கடிதம் மற்றும் பட்டோலை 1 இன் 07 இன் பிரகாரம் கப்பல் எண்ணெய் வியாபாரத்திற்காக எழுத்துமூல அதிகாரம் பெற்ற நபரினால் தமது மாதாந்த கப்பல் எண்ணெய் நடவடிக்கைகள் தொடர்பான கூற்று அடுத்துவரும் மாதத்தின் 18 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எனினும் 2021 ஆம் ஆண்டின் போது எழுத்துமூல அதிகாரம் பெற்ற 13 கம்பனிகளால் முறையான பிரகாரம் மாதாந்த கப்பல் எண்ணெய் நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அதனிடையே 05 கம்பனிகள் எந்தவொரு அறிக்கையும் சமர்ப்பித்திருக்கவில்லை. மேலும் குறித்துரைத்த திகதியில் உள்ளவாறு அறிக்கை சமர்ப்பிக்காத 08 நிறுவனங்களுக்குரிய அறவிட வேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 180,000 தொகைக் மேற்பட்ட தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் அந்த நிறுவனங்களுக்கு எதிராக இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

தார் இறக்குமதி மற்றும் ஒழுங்குபடுத்துதல்

கனிய எண்ணெய் வள அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் 2018 பெப்ரவரி 07 ஆந் திகதிய 2018/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் தார் இறக்குமதியாளர்களினால் தார் இறக்குமதிக்குரிய காலாண்டு ரீதியான அறிக்கை அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்குரிய இறக்குமதியாளர்களின் காலாண்டு அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் குறித்துரைத்த பிரகாரம் காலாண்டு அறிக்கை சமர்ப்பிக்காத நிறுவனங்களுக்கு எதிராக அமைச்சால் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

விசேட செயற்திட்ட முகாமைத்துவம்

- 2007 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட சர்வதேச கேள்வி கோரலின் பிரகாரம் மன்னார் கடற் பகுதியில் M2 படிவு நிலப்பகுதியில் கனிய

எண்ணெய் படிவு ஆய்வு நடவடிக்கைகளுக்காக தெரிவு செய்யப்பட்ட கெயார்ன் லங்கா தனியார் கம்பனி 2011 இன் போது மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் பிரகாரம் இயற்கை வாயு படிவுகள் இரண்டு உள்ளமை கண்டறியப்பட்டிருந்தது. இந்தக் கம்பனி மன்னார் கடற் பகுதியில் ஆராய்ச்சி நடவடிக்கைகளை இடைநடுவில் நிறுத்தி 2015 ஒக்தோபர் 15 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்தது. மேலும் இந்த படிவு ஆய்வு செயற்பாடுகள் மற்றும் இயற்கை வாயு வணிக ரீதியாக உற்பத்தி செய்வதற்காக சந்தை மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு 2016 ஆம் ஆண்டின் போது சர்வதேச போட்டியாளர் கேள்வி கோருவதன் மூலம் IHG Global கம்பனி தெரிவு செய்யப்பட்டு 2016 திசெம்பர் முதல் 2018 ஆகஸ்ட் வரை சந்தைப்படுத்தல் செயற்திட்டத்தை உருவாக்குவதற்காக அ. டொலர் 300,000 அதாவது முன்னாள் காணப்பட்ட நாணயமாற்று விகிதத்தின் பிரகாரம் ரூபா 46,610,853 செலவினம் செய்யப்பட்டிருந்தது. எனினும் இந்த நிலப்பகுதியில் படிவு ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கோ அல்லது இனங்காணப்பட்ட இரண்டு இயற்கை வாயுக்களின் வணிக ரீதியாக உற்பத்தி செய்வதற்காக முறையான வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதற்கு அமைச்சு இதுவரை தவறியிருந்தது.

- 2012 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட மன்னார் படுக்கையின் வான்வழி காட்சி ஈர்ப்பு மற்றும் உலர் ஆய்வுகள் மூலம் தரவு சேகரிக்கும் செயற்திட்டத்தை விரைவாக பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அமைச்சு தவறியிருந்ததுடன் 2019 ஆகஸ்ட் 15 ஆந் திகதி Bell Geospace கம்பனியுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் அதன் நடவடிக்கைகள் 2020 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. எனினும் இதுவரை அந்த செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டமையை உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

- இலங்கை கடல்சார்ந்த பிரதேசங்களை இலக்காகக் கொண்டு தீவு முழுவதும் கடல்சார் சுற்றாடல் தரவுகளை சேகரிக்கும் ஆராய்ச்சி செயற்திட்டமொன்றை உருவாக்குவதற்காக கனிய எண்ணெய் வள அபிவிருத்தி செயலகம் மற்றும் நாரா நிறுவனத்துடன் 2015 செப்தெம்பர் 30 ஆந் திகதி உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு 2018 செப்தெம்பர் 28 ஆந் திகதி வரையில் செயற்திட்டத்தின் மொத்த ஒப்பந்த விலையான ரூபா 37,165,283 தொகை நாரா நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. எனினும் தரவுகள் தொடர்பாக சரியான அனுபவத்துடன் தகவல் முறைமையொன்றை செயற்படுத்தக் கூடிய வகையில் பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள் காணப்படாமை மற்றும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் காணப்படாமையின் காரணமாக இந்த தரவுகளை உள்ளடக்கிய இணையத்தள சேவர் இயந்திரத்தை தாபித்து முறையாக பயன்படுத்துவதற்கு இதுவரை முடியாதிருந்தது.

செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

பலாலி விமான நிலைய வலயத்தில் விமான பயணங்களை அமுல்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 575 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2019 யூன் 06 ஆந் திகதிய 18/1229 ஆம் இலக்க

அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் செயற்திட்டம் 2020 இன் இரண்டாம் காலாண்டின் இறுதியின் போது துறைமுகம் நிர்மாணித்தலை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டின் போது களஞ்சிய தாங்கி மற்றும் பகிர்ந்தளிக்கும் மொடியூல், எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் போன்றவற்றிற்கான பொருட்கள் / உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு கேள்வி கோருதல், இறக்குமதி செய்தல் மற்றும் விமான நிலைய உபகரணங்களை தாபிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்தது. எனினும் 2021 ஆம் ஆண்டில் இந்த பணிகள் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் ஒட்டுமொத்த செயற்திட்டத்தின் செயல்முன்னேற்றம் 3 சதவீதம் மாத்திரமாக இருந்தது.

- கொழும்பு துறைமுகத்தில் களஞ்சியத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 75 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக 2021 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 39 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. நடப்பாண்டில் நிர்மாண நடவடிக்கைகளின் மூலம் 40 சதவீதத்தை பூர்த்தி செய்வதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டம் இதுவரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- கெரவலப்பிட்டி கடற்கரை பகுதியிலிருந்து கெரவலப்பிட்டி மற்றும் களணித்திஸ்ஸ வலுகூடம் வரை 05 கிலோமீற்றர்கள் அளவிலான தூரத்தில் அமைந்துள்ள களஞ்சிய மீள் நிர்மாணத்தின் அலகு (FSRU) முதல் மீள் வாயு பொருள் இயற்கை வாயு (R-LNG) குழாய் நீர் குழாய் வழிகளை நிர்மாணிப்பதற்காக டொலர் நாற்பது மில்லியன் (40) மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டின் போது இதில் 5 சதவீதத்திற்கு குறைவான சதவீதம் காணப்பட்டமை அறிக்கையிடப்பட்டிருந்தது.

நட்டம் மற்றும் இழப்புக்கள்

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆகக்குறைந்த 4 வருட காலத்தை விஞ்சி பதிவழிக்கப்படாமல் முன்கொண்டு வரப்பட்ட நட்டம் மற்றும் கைவிடல்களாக கூட்டுமொத்தமாக ரூபா 1,064,226 ஆன 17 வாகன விபத்துக்கள் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அதற்காக நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நட்டத்தை மீள அறவிடுவதற்கோ அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

மனிதவள முகாமைத்துவம்

2021 ஆம் ஆண்டின் இறுதியின் போது வலுசக்தி அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 93 பேர்களை உள்ளடக்கியிருந்ததுடன் அத்திகதியில் உள்ளபடியான பதவியணியினர் 70 ஆகும். அதன் பிரகாரம் சிரேஷ்ட நிலையில் 07 உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய 23 வெற்றிடங்கள் காணப்பட்டன. விபரம் வரைபடம் 23 இல் காண்பிக்கப்படுகின்றது.

ஊழியர் வகை	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை	உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை	வெற்றிடங்களின் எண்ணிக்கை	வெற்றிடங்களின் எண்ணிக்கை அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையின் சதவீதமாக
சிரேஷ்ட நிலை	20	13	07	35
இரண்டாம் நிலை	03	01	02	67
மூன்றாம் நிலை	47	35	12	26
ஆரம்ப நிலை	23	21	02	9
மொத்தம்	93	70	23	25

வரைபடம் 23 - வலுசக்தி அமைச்சின் பதவியணியினர் தொடர்பான தகவல்கள்

- பொருத்தமான சேவை மட்டத்தை பேணிச் செல்வதற்கும், ஊழியர் எண்ணிக்கை தொடர்பாக காலரீதியில் மீளாய்வு செய்வதற்கும் முடியாமையின் காரணமாக சிரேஷ்ட பதவிநிலைத் தரம், இரண்டாம் நிலை, மூன்றாம் நிலைகளை உள்ளடக்கிய சகல மட்டங்களிலும் தொடர்ச்சியாக வெற்றிடங்கள் காணப்பட்டது.

- உராய்வு எண்ணெய், தார், கப்பல் எண்ணெய் செயற்திட்டம் போன்ற நடவடிக்கைகள் இலங்கையில் அமுல்படுத்துவதற்கு தேவையான அங்கீகாரத்தை வழங்குதல் மற்றும் அந்தந்த பிரிவுகளின் ஆரம்ப ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த துறைசார் கட்டுப்பாடு மற்றும் ஒழுங்குபடுத்துதல் அந்தந்த விடயங்களுக்குரியதாக எதிர்பார்க்கப்பட்ட தொழில்நுட்ப அறிவுடன் தொழில் தகைமைபெற்ற உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய பதவியணியினர் தேவையாக இருந்த போதிலும் இலங்கையில் அவ்வாறான தொழிற்தகைமை பெற்ற உத்தியோகத்தர்கள் காணப்படாமையினால் அந்த பணிகளை முறையாக நிறைவேற்றும் வகையில் நிறுவன கட்டமைப்பை தயாரிக்க முடியாதிருந்தமையம் அவதானிக்கப்பட்டது.

உள்நாட்டு கனிய எண்ணெய் சந்தை

2021 ஆம் ஆண்டின் போது ஒட்டுமொத்த கனிய எண்ணெய் இறக்குமதிக்காக ஐக்கிய அமெரிக்க டொலர் 3,465 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், ஆண்டில் உள்நாட்டு கனிய எண்ணெய் சந்தையில் 85 சதவீதத்திற்கு அதிகமாக வழங்கல்களுக்காக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஒட்டுமொத்த கனிய எண்ணெய் சந்தையின் மாற்றங்களின் விளைவாக 2021 ஆம் ஆண்டின் போது மசகு எண்ணெய் பரல் ஒன்று சராசரி விலை முன்னைய ஆண்டின் போது காணப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் 45.57 தொகையுடன் ஒப்பிடும் போது ஐ.அ.டொலர் 68.86 வரை அதிகரித்து 51.1 சதவீதத்தினால் உயர்வடைந்திருந்தது. 2021 ஆம் ஆண்டின் போது சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு பல

சந்தர்ப்பங்களின் போது மூடப்பட்டதன் காரணமாக சுத்திகரித்தல் உற்பத்தி ஒட்டுமொத்தமாக 24.7 சதவீதத்தினால் உயர்வடைந்திருந்ததுடன் இறக்குமதி செய்யப்படுகின்ற சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திக் கிரயம் ஆண்டின் போது 75 சதவீதத்தினால் உயர்வடைந்திருந்தது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகள் மற்றும் தேறிய சொத்துக்களின் நிலை

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனம் ரூபா 18,554.53 மில்லியன் மொத்த நட்டமாக அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் போது அறிக்கையிடப்பட்ட மொத்த இலாபமான ரூபா 55,250.86 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 73,805.39 மில்லியன் குறைவாகும். அவ்வாறே நடப்பாண்டின் போது ரூபா 82,208.12 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய நட்டமொன்று அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது ரூபா 2,370.96 மில்லியன் இலாபமொன்றை பெற்றிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது கூட்டுத்தாபனத்தின் வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 84,579.07 மில்லியனால் குறைவடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டில் ரூபா 21,840.76 மில்லியனுடன் காணப்பட்ட நாணயமாற்று விகித முரண்களில் பாதகமாக மீளாய்வாண்டின் போது ரூபா 33,220.08 மில்லியன் வரை ரூபா 11,379.32 மில்லியனால் அதிகரித்திருந்தது.

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த வியாபாரக் கடன்பட்டோரின் பெறுமதி ரூபா 161,079.76 மில்லியனாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் வியாபாரக் கடன்பட்டோரின் பெறுமதியான ரூபா 141,103.47 பெறுமதியுடன் ஒப்பிடும் போது 14.16 சதவீதம் உயர்வடைந்திருந்தது. மீளாய்வாண்டில் கடன்பட்டோர் மீதி அரசாங்கத் துறையின் கடன்பட்டோரில் ரூபா 146.955.21 மில்லியன் மற்றும் தனியார் துறையின் கடன்பட்டோர் ரூபா 14,124.55 மில்லியன் என்பவற்றை உள்ளடக்கி இருந்தது. அதில் இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை விமான கம்பனியில் இருந்து கூட்டுத்தாபனத்திற்கு அறவிட வேண்டிய நிலுவைப் பணம் முறையே ரூபா 83,031.65 மில்லியன் மற்றும் ரூபா 62,111.12 மில்லியன் மில்லியன் ஆகவும் இருந்தது.

முன்னைய ஆண்டின் இறுதியின் போது ரூபா 275.208.58 மில்லியனாக காணப்பட்ட (கப்பல் தயாரிக்கப்பட்ட) கூட்டுத்தாபனத்தின் மறை தேறிய சொத்துக்களின் அளவு மீளய்வாண்டின் இறுதியின் போது ரூபா 357,504.43 வரை ரூபா 82,295.85 மில்லியனால் உயர்வடைந்திருந்தது. கடந்த ஆண்டுகளில் இடம்பெற்ற அதிக நட்டம், நாணமாற்று வீதத்தின் வேறுபாடுகளில் தொடர்ச்சியான தாக்கம், பொருத்தமற்ற விலையிடல் கொள்கை மற்றும் கடந்த வருடங்களின் போது ஏற்பட்ட ஹெஜின் கொடுக்கல் வாங்கல் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்த அதிக நட்டங்களில் எதிர்மறையான தாக்கங்களின் காரணமாக கூட்டுத்தாபனத்தின் தேறிய சொத்துக்கள் மேலும் மறைப் பெறுமதியை கொண்டிருந்தது. அதனால் அரசாங்கத்தின் நிதியுதவி இன்றி கூட்டுத்தாபனத்தை தொடர்ச்சியான நடாத்திச் செல்வதற்குரிய இயலுமை சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது.

மீளாய்வாண்டின் போதும் மற்றும் முன்னைய 5 ஆண்டுகளினதும் கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகள் (வரிக்கு பின் இலாபம்) வரைபடம் 36 இன் மூலம் காண்பிக்கப்படுகின்றது.

வரைபடம் 36 - இலங்கை லங்கா பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மீளாய்வாண்டின் போதும் மற்றும் முன்னைய 5 ஆண்டுகளின் நிதி விளைவுகள்
மூலம் - கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள்

சேமிப்பு பத்திர கொடுக்கல் வாங்கல்கள் (ஹெஜின்)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் 2007 முதல் 2009 வரையான காலத்தில் எண்ணெய் வளங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சேமிப்பு பத்திரங்களின் கொடுக்கல் வாங்கல்களுக்குரிய 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நாட்டிற்கு ஏற்பட்ட மொத்த நட்டம் ரூபா 14,028 மில்லியனாக இருந்தது. மேலும் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக ஐ.அ.டொலர் 8.6 மில்லியன் உரித்திற்காக கொமர்சல் வங்கியினால் கொழும்பு மேல் வணிக நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்ததுடன் அந்த வழக்கு 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் விசாரணையில் காணப்பட்டது.

இலங்கையில் பெற்றோலியத்தை களஞ்சியப்படுத்தல் மற்றும் பகிர்ந்தளிக்கும் வசதிகள்

இலங்கை பெற்றோலிய மொத்த களஞ்சிய முனைய கம்பனிக்குரிய கொலன்னாவ மற்றும் முத்துராஜவெலவில் அமைந்துள்ள பிரதான எரிபொருள் களஞ்சியங்களை உள்ளடக்கி நாடு முழுவதும் அமைந்துள்ள 14 களஞ்சியங்களும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன சபுகஸ்கந்த புதிய முனையத்திலும், இலங்கை இந்திய எண்ணெய் கம்பனி திருகோணமலையில் அமைந்துள்ள எண்ணெய் தாங்கி தொகுதியிலும் எரிபொருள் களஞ்சியப்படுத்தும் நடவடிக்கைகள் மற்றும் விநியோகிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. இலங்கையின் எண்ணெய் போக்குவரத்து குழாய் மற்றும் தரை இறக்கல் போக்குவரத்து முறைமையின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் அதன் பிரகாரம் எண்ணெய் போக்குவரத்திற்காக 04 பிரதான குழாய் முறைமைகள் பயன்படுத்தப்படுவதுடன் பௌசர் மற்றும் புகையிரத கொள்கலன் மூலம் தரை இறக்குவதன் ஊடாக போக்குவரத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் பிரகாரம் இலங்கையில் பெற்றோலியத்தின் தேவை படிப்படியாக அதிகரித்து செல்வதற்கு ஒப்பாக கனிய எண்ணெய் கைத்தொழில் சார்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக நடவடிக்கை எடுக்காதிருந்தால் எரிபொருள் துறையில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளான நிலைமையை இனங்காண்பதற்காக மேற்கொள்ளப்பட்ட விசேட கணக்காய்விற்குரிய அறிக்கை (இலங்கையில் பெற்றோலியத்தை களஞ்சியப்படுத்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை) 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன்

அதில் பின்வரும் விடயங்களும் பாராளமன்றத்தின் விசேட கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

- இந்த அறிக்கையின் பிரகாரம் எரிபொருள் கப்பலொன்று இலங்கைக்கு வருகை தந்ததன் பின்னர் தரையிறக்கல் ஆரம்பிக்கப்படும் சந்தர்ப்பத்தின் வரையிலும் ஒவ்வொரு எரிபொருள் வகையின் பிரகாரம் தனித்தனியாக கவனத்தில் கொள்ளும் போது களஞ்சியங்கள் தற்போது காணப்படுகின்ற டீசல், பெற்றோல் விமானங்களுக்கான எரிபொருள் மற்றும் மண்ணெண்ணெய் அளவில் நாட்டிற்கான தேவை முறையே 13 நாட்கள், 08 நாட்கள் மற்றும் 06 நாட்கள் வரை குறைவான சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் தற்போது காணப்படுகின்ற களஞ்சிய இயலளவு மாற்றமின்றி காணப்படுமாயின் எதிர்வுகூறப்பட்ட எரிபொருள் தேவையின் பிரகாரம் 2026 ஆம் ஆண்டு வரையில் அது முறையே 09 நாட்கள், 06 நாட்கள், 05 நாட்கள் குறைவடையக்கூடியதாக இருந்தமை அதாவது எந்தவொரு காரணத்தின் அடிப்படையிலும் எண்ணெய் கப்பல் இந்த நாட்களின் எண்ணிக்கையை விட தாமதமடையுமாயின் நாட்டில் காணப்படுகின்ற எரிபொருள் வழங்குதல் செயலிழந்து அதிக ஆபத்திற்கு உட்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது.

- தற்போது காணப்படுகின்ற 04 எரிபொருள் குழாய் முறைமைகளுக்கிடையே இறக்குமதி செய்யப்படுகின்ற சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகளில் 70 சதவீத அளவு கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலன்னாவ முனையம் வரையான தற்போது 48 வருடங்கள் முதல் 75 வருடங்கள் வரை பழைய குழாய் முறைமை ஊடாக தரையிறக்கப்படுவதுடன் அந்த முறைமையில் 05 குழாய்களில் 02 குழாய்கள் செயலிழந்த நிலைமையில் காணப்படுவதுடன் ஏனைய குழாய்களும் அடிக்கடி கசிவு ஏற்படுகின்றமை அறிக்கையிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கொலன்னாவ முனையத்தில் 10 அங்குல அளவிலான சிறிய மிகவும் பழைய தொடர்ந்தும் கசிவுகளுக்கு உட்படுகின்ற குழாய்களின் ஒட்டுமொத்த சுத்திகரிக்கப்பட்ட எரிபொருளில் 70 சதவீதம் தரையிறக்கப்பட்டதன் காரணமாக தரையிறக்குவதற்கு அதிக காலம் எடுத்தமை மற்றும் அந்த காரணங்களினால் கப்பல்களுக்காக தாமதக் கட்டணம் செலுத்த வேண்டியேற்பட்டதை போன்ற குழாய்க்கு ஏதாவது பாதிப்பு ஏற்படுமாயின் அதன் மூலம் அதிக நபர்கள் மற்றும் ஆதனங்களுக்கு பாதிப்பு ஏற்படுதல் அதிக ஆபத்தாக காணப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது. மேலும், முனையத்திற்கு இடையே உள்ளக மாற்றல் குழாய் முறைமை காணப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

- கனிய எண்ணெய் தரையிறக்கி போக்குவரத்து செய்யும் போது பௌசர்கள் மூலம் போக்குவரத்துச் செய்வதற்காக புகையிரதம் மூலமான போக்குவரத்துக்கு ஏற்படுகின்ற கிரயத்தின் சேமிப்பு புகையிரத கொள்கலன் போக்குவரத்துடன் ஒப்பிடும் போது 87 சதவீதம் முதல் 235 சதவீதம் வரை உயர் பெறுமதியைக் கொண்டிருந்த போதும் பௌசர் மூலம் போக்குவரத்திற்காக அதிக முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்டிருந்ததுடன் அதில் சுற்றாடல் பாதிப்புக்கள் உயர்வடைந்து செல்கின்றமை, வாகன நெருக்கடிகளின்

காரணமாக அதிக ஆபத்து ஏற்படக்கூடியதாக இருந்தமையும் இனங்காணப்பட்டிருந்தது.

- நாட்டில் போதியளவான எரிபொருள் களஞ்சிய முறைமை மற்றும் அதற்கு இணைந்ததாக போக்குவரத்து வசதிகளை உள்ளடக்கிய உட்கட்டமைப்பு வசதிகள் தாபிக்காமையின் காரணமாக முறையான இருப்பு கட்டுப்பாட்டு முறைமையொன்றை தாபிக்க முடியாதிருந்தமை, நாட்டில் சாதகமான சர்வதேச எரிபொருள் கொள்வனவு உடன்படிக்கைக்காக செல்வதற்கு முடியாதிருந்தமை, அவசர கொள்வனவுகள் செய்யப்பட்டதன் காரணமாக அதிக கிரயத்துடன் குறைந்த தரத்தினையுடைய உற்பத்திகளை இறக்குமதி செய்வதற்கு ஏற்பட்டமை, எரிபொருள் களஞ்சிய கையாடல்கள் மிகவும் சிக்கலான செயற்பாடாக ஏற்பட்டமை, நாட்டில் எரிபொருள் வழங்கல் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக ஒட்டுமொத்த பொருளாதார செயற்பாடுகளும் வீழ்ச்சியடைந்தமை, பராமரிப்பு நடவடிக்கைகள் முறையாக ஒழுங்கமைப்பதற்கு வசதியீனமாக இருந்தமை, அதிக சுற்றாடல் இழப்பீட்டிற்கு உட்பட்டமை, அதிக வாகன நெருக்கடிக்கு காரணமாக இருந்தமை, நாட்டில் இயற்கை அமைப்பின் பிரகாரம் இலகுவாக அமுல்படுத்தப்படக் கூடிய கப்பல் எண்ணெய் போன்ற சர்வதேச வியாபாரங்கள் நாட்டில் இழந்து சென்றமை போன்ற அத்தியவசிய அதிக பாதகமான ஆபத்தான நிலைமை நாட்டில் எழுந்திருந்தமையை அறிக்கையிட்டதன் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

- அதன் பிரகாரம் நாட்டில் பொருளாதாரத்தில் இருப்பை தீர்மானிக்கும் பிரதான வலுசக்தி மூலமான எரிபொருள் வழங்குவதற்குரிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக தற்போது காணப்படுகின்ற எரிபொருள் இயலளவை உயர்ந்த நிலைக்கு கொண்டு வருதல், தற்போது காணப்படுகின்ற குழாய் முறைமையை அபிவிருத்தி செய்தல் மற்றும் எரிபொருள் தரையிறக்கி போக்குவரத்திற்காக புகையிரத கொள்கலன்களை பயன்படுத்துவதற்காக முன்னுரிமை வழங்குதல் இதற்கான கிரயம் மற்றும் ஆபத்துக்களை குறைப்பதற்கு அத்தியவசியமாக இருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

- திருகோணமலை துறைமுகத்தை அண்மித்ததாக அமைந்துள்ள எண்ணெய் தாங்கித் தொகுதி நாட்டின் கனிய எண்ணெய் வழங்கல் செயற்பாடுகளை மிகவும் இலகுவாக பயன்படுத்தக் கூடியதாக இருந்தமையும் இதுவரை அந்த தொகுதியை தொடர்ச்சியாக பயன்படுத்துவதற்கு தவறியிருந்தது. அதன் பிரகாரம் நாட்டில் கனிய எண்ணெய் வழங்கல் செயற்பாடுகளுக்கு உரியதாக தற்போது எழுந்துள்ள ஆபத்தான நிலைமையை மாற்றியமைக்க கூடியதாகவிருந்தமை மற்றும் சர்வதேச நாணயமாற்று நெருக்கடியில் சர்வதேச வியாபார சந்தர்ப்பங்களை விரிவுபடுத்தக்கூடியதாக இருந்தமையும், நாட்டின் எரிபொருள் தேவைப்பாட்டிற்கு முறையான ஆய்வு மேற்கொண்டு அதன் அத்தியவசிய தேவைகளுக்கு உச்ச அளவில் எரிபொருள் களஞ்சிய இயலளவை கட்டியெழுப்பக்கூடிய வகையில் தற்போது 9 தசாப்த காலமாக விளைவற்று மற்றும் அல்லது குறைவாக பயன்படுத்தப்படுகின்ற திருகோணமலை எண்ணெய்த்தாங்கி தொகுதியை முறையாக சட்டரீதியான கட்டமைப்பில் மீளமைத்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு

நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் கனிய எண்ணெய் பெற்றோலிய இறக்குமதி, சுத்திகரிப்பு, பகிர்ந்தளித்தல் மற்றும் விற்பனை நடவடிக்கைகளை தொடர்ச்சியாக விடயப்பரப்புடன் ஒட்டுமொத்த தரவுகள் மற்றும் செயற்படு நிலைமையை ஒழுங்கமைத்தல் மற்றும் கட்டுப்படுத்தக்கூடிய முறையில் சட்ட முறைமை மற்றும் சுயாதீன இறக்குமதி கட்டமைப்பை தாபித்தல், வலுசக்தி துறை தொடர்பாக தேசிய கொள்கையொன்றை தாபித்து நாளதுவரையாக பேணிச் செல்வதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் அத்தியவசியமாக இருந்தமை இந்த அறிக்கையில் கவனத்தில் கொண்டுவரப்பட்டிருந்தது.

- எனினும் அந்த அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் தொடர்பாக முறையாகவும் விரைவாகவும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தி பொருத்தமான நடவடிக்கை எடுப்பதன் மூலம் வலுசக்தி துறையின் சிறந்த செயற்படு நிலைமையை உறுதிப்படுத்துவதற்கு அமைச்சு, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அல்லது இலங்கை கனிய எண்ணெய் மொத்தக் களஞ்சிய முனையக் கம்பனி இதுவரை நடவடிக்கை எடுத்தமை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

கம்பனிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல் மீதிகள் மற்றும் உடன்படிக்கை

அரசாங்க கூட்டுத்தாபனத்தினால் ஏதாவது குறித்துரைத்த நோக்கத்தை நோக்காகக் கொண்டு தாபிக்கப்பட்ட உப கம்பனிகளின் நடவடிக்கைகளை முறையாக மேற்பார்வை செய்வதும் வழிகாட்டுவதும் மிகவும் அத்தியவசிய செயற்பாடாக இருந்தது. எனினும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் அதன் துணைக்கம்பனியான இலங்கை பெற்றோலிய மொத்த களஞ்சிய முனைய கம்பனியின் நடவடிக்கைகளை முறையாக மீளாய்வு செய்யாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.3(ஆ) பந்தியின் பிரகாரம் தாய்க் கம்பனியின் பணிப்பாளர் சபையினால் அரையாண்டுக்கு ஒரு தடவை அல்லது உப கம்பனிகளின் செயலாற்றல் மீளாய்வு செய்து செயலாற்றல் அறிக்கை தயாரித்து அது பொதுமுயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் அந்தக் கம்பனியின் பணிப்பாளர் சபையின் மூலம் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பாக முறையான அறிவும் கூட்டுத்தாபனத்திற்கு காணப்படவில்லை. உதாரணமாக கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பிரதான வியாபார நடவடிக்கையான கப்பல்களுக்கான எரிபொருள் வழங்கும் வியாபாரம் அந்த உப கம்பனியின் பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக கூட்டுத்தாபனம் எந்தவொரு அறிவித்தலையும் மேற்கொண்டிருக்கவில்லை. அவ்வாறே கம்பனிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக முறையான தொடர்புபடுத்தலொன்று இரண்டு நிறுவனங்களுக்கிடையே காணப்படாமையின் காரணமாக நீண்டகாலமாக இரு தரப்பினரினதும் நடைமுறைக் கணக்குகளுக்கிடையே கவனத்தில் கொள்ளக் கூடிய வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. மீளாய்வாண்டின் இறுதியின் போது அது ரூபா 692.47 மில்லியன் வேறுபாடு இருந்தமை அவதானிக்கப்பட்டது.

மாதாந்த பயன்பாட்டு கட்டணம் (MUF)

2013 ஒக்தோபர் 29 ஆந் திகதிய 38/1140 ஆம் இலக்க பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான சகல விற்பனை முகவர் (CODO) நிரப்பும் நிலையங்கள் மற்றும் திறைசேரிக்குச் சொந்தமான வியாபாரிகளினால் நடாத்திச் செல்லப்படுகின்ற (TODO) நிரப்பும் நிலையங்களில் மாதாந்தம் பயன்பாட்டு சேவைக் கட்டணம் (MUF) 2014 சனவரி 01 ஆந் திகதி முதல் அமுல்படும் வகையில் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த தீர்மானம் குறித்துரைத்த பிரகாரம் அமுல்படுத்தப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டிற்காக கூட்டுத்தாபனம் இழந்திருந்த வருமானம் ரூபா 501.223 மில்லியன் ஆக இருந்ததுடன் ஆண்டின் இறுதியின் போது ஒட்டுமொத்தமாக இழக்கப்பட்ட வருமானம் ரூபா 3,557 மில்லியன் ஆக இருந்தது. எனினும், மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் இது தொடர்பாக எந்தவொரு சீராக்கமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக மீளாய்வாண்டின் தேறிய வருமானம் மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்கள் அந்த அளவினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. 2022 யூலை 01 ஆந் திகதி முதல் MUF அறவிடுதல் அமுல்படுத்தப்பட்டமை கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் சபைக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் அதுவரை அறவிட வேண்டிய ரூபா 3,557 மில்லியன் ஆன திரண்ட தொகையை அறவிடுவதற்கு இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

சுத்திகரிப்பு நிறுத்தம் மற்றும் பராமரிப்பு - 2021 ஆம் ஆண்டு

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு பெரிய சுத்திகரிப்பு நிறுத்தம் மற்றும் பராமரிப்பு 2021 ஆம் ஆண்டின் பெப்ரவரி 15 ஆந் திகதி முதல் மார்ச் 21 ஆந் திகதி வரை காணப்பட்டது. உரிய காலப்பகுதியில் குறித்துரைத்த பிரகாரம் வருகை தருகின்ற மற்றும் வெளிச்செல்கின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் ஒன்றுக்கொன்று இணங்காத வருகை மற்றும் வெளிச்செல்கை இடங்களை அடிப்படையாகக் கொண்டு பாரியளவிலான சுத்திகரிப்பு நிறுத்துவதற்குரிய படிகள் கணிப்பிடப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் சுத்திகரிப்பு பணியக அறிவித்தல் இலக்கம் R/RM/03/2021 இற்கு முரணாக ரூபா 42.6 மில்லியன் சுத்திகரிப்பு நிறுத்தல் படி மற்றும் ரூபா 5.964 மில்லியன் பெறப்படாத விடுமுறை படியாக மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

Ship to Party (SPS) எரிபொருள் பகிர்ந்தளிக்கும் முறைமை

கூட்டுத்தாபனத்தால் விற்பனை முகவர்கள் மூலம் பெற்றோலிய உற்பத்தி பகிர்ந்தளிக்கும் போது விற்பனை முகவர்களுக்கு தரகு பணம் செலுத்தப்படுவதுடன் நேரடியாக நுகர்வோர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்ற சந்தர்ப்பங்களின் போது தரகு செலுத்தப்படுவதில்லை. இதற்கு மேலதிகமாக முகாமைத்துவத்தால் தெரிவு செய்யப்பட்ட விற்பனை முகவர்களுக்குரிய தரகுப் பணமும் வழங்கப்பட்டு நேரடியாக நுகர்வோர்களுக்கு எரிபொருள் பகிர்ந்தளிக்கும் முறைமையொன்று Ship to Party (SPS) என்ற பெயரில் 2008 முதல் அமுல்படுத்தப்பட்டிருந்தது. கூட்டுத்தாபனம் நேரடியாக நுகர்வோருக்கு விற்பனை செய்யும் இயலுமை காணப்படும் போது முகவர்களுக்கு

மேலதிக தரகுப் பணம் செலுத்துதல் இவ்வாறான எரிபொருள் பகிர்ந்தளிக்கும் முறைமையை அமுல்படுத்தும் அடிப்படை கணக்காய்வின் போது தெளிவுபடுத்தப்படவில்லை. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டின் போது மாத்திரம் தெரிவு செய்யப்பட்ட 05 விற்பனை முகவர்களுக்கு இந்த முறைமையின் கீழ் எரிபொருள் பகிர்ந்தளிப்பதன் காரணமாக ரூபா 132.453 மில்லியன் மேலதிக தரகுப் பணம் செலுத்தப்பட்டிருந்தது.

விற்பனை முகவர் தரகு

2019 யூலை 30 ஆந் திகதிய பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் கனிய எண்ணெயின் உள்நாட்டு சந்தை விலைதளம்பல்களின் தாக்கத்தின் அடிப்படையில் விநியோகத்தர்களுக்கு செலுத்தப்படுகின்ற தரகு (Dealer Commission) அளவு தளம்பலடைந்ததன் அடிப்படையில் கூட்டுத்தாபனத்திற்கும் விநியோகத்தர்களுக்கும் இடையில் பாதகமான தாக்கத்தை தவிர்ப்பதற்காக பின்வரும் வரைபடத்தின் பிரகாரம் உயர் மற்றும் கீழ் எல்லையின் (Upper and Lower Cap) கீழ் தரகு சதவீதம் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

விபரம்	ஒக்டன் 92 பெற்றோல் ரூபா.	ஒக்டன் 95 பெற்றோல் ரூபா.	லங்கா ஒட்டோ டீசல் ரூபா.	லங்கா சுபர் டீசல் ரூபா..
உயர் எல்லை (Upper Cap)	162.00	170.00	121.00	145.00
கீழ் எல்லை (Lower Cap)	117.00	128.00	95.00	110.00

- தற்போது நாட்டில் காணப்படுகின்ற அந்நிய செலாவணி பற்றாக்குறையின் காரணமாக ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தின் அடிப்படையில் உள்நாட்டு கனிய எண்ணெய் உற்பத்திகளின் விலை எண்ணிக்கை விரைவாக உயர்வடைந்து சென்றமையும், கூட்டுத்தாபனத்தின் கவனமின்மை காரணமாக மேலே குறிப்பிடப்பட்ட உயர் எல்லை (Upper Cap) கவனத்தில் கொள்ளப்படாமல் விநியோகத்தர்களுக்கு தரகு செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் விநியோகத்தர்களுக்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட தரகுப் பணத்தை மீள அறவிடுவதற்கு செல்லும் போது அதற்கு எதிராக விநியோகத்தர்கள் சிலரினால் வழக்குத் தொடரப்பட்டுள்ளதுடன் அவர்களால் கௌரவ நீதிமன்றத்தால் தற்காலிக தடை கட்டளையும் பெறப்பட்டிருந்தது. அதன் பின்னர் கௌரவ நீதிமன்றத்தினால் 2022 யூலை 15 ஆந் திகதி அந்த தடை உத்தரவு நீக்கப்பட்டு பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம்

விநியோகத்தர்களுக்கு செலுத்தப்படுகின்ற தரகுப் பணத்தை தீர்மானிப்பதற்கு அதிகாரம் உள்ளமை வழங்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தால் 2022 யூலை 17 ஆந் திகதி முதல் அந்த தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும் கூட்டுத்தாபனத்தின் தலைவரால் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் கீழ் 2022 யூலை 26 ஆந் திகதி முதல் உயர் எல்லை கவனத்தில் கொள்ளப்படாமல் விநியோகத்தர்களுக்கு தரகு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் இதுவரை அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் எரிபொருளை இறக்குமதி செய்வதற்கான டொலரினை வழங்குவதற்கான தேவை ரூபா அளவு வழங்கும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்திருந்த கூட்டுத்தாபனத்தினால் மேற்கூறப்பட்ட பணிப்பாளர் சபைத் தீர்மானத்திற்கு முரணாக 2022 செப்தெம்பர் 15 ஆந் திகதி வரையில் மேலதிகமாக செலுத்தப்பட்ட தரகுப் பணம் ரூபா 6,500 மில்லியனை விஞ்சியிருந்தது.

- கணக்காய்விற்கு கிடைத்துள்ள தகவல்களின் பிரகாரம் நாட்டில் காணப்படுகின்ற பொருளாதார நெருக்கடியின் காரணமாக கூட்டுத்தாபனத்தால் விநியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற நாளாந்த எரிபொருட்களின் அளவு சராசரியாக எரிபொருள் வழங்குதலில் மூன்றில் இரண்டு பங்கு (2/3) மட்டத்தில் அளவு வரையறுக்கப்பட்டு (QR முறைமை ஊடாக) இருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறிருக்கும் போது பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் 2022 யூலை 26 ஆந் திகதி செலுத்த வேண்டிய குறித்துரைத்த தரகுப் பணம் ரூபா 30.7 மில்லியன் ஆகவும், அந்த தீர்மானத்தை கவனத்தில் கொள்ளாமல் ரூபா 98.6 மில்லியன் தொகை செலுத்தப்பட்டதன் காரணமாக ஒரு தினமொன்றில் மேலதிகமாக செலுத்தப்பட்ட தரகுப் பணம் ரூபா 67.9 மில்லியன் ஆக இருந்ததுடன் அத்திகதி முதல் மாதமொன்றிற்குள் மேலதிகமாக செலுத்தப்பட்ட தரகுப் பணம் ரூபா 1,960 மில்லியனை விஞ்சியிருந்தது. அதன் பிரகாரம் நாளாந்த எரிபொருள் வழங்குதல் வரையறுக்கப்பட்ட போதிலும் உயர்ந்த எல்லையை கவனத்தில் கொள்ளாமல் தரகு செலுத்தப்பட்டதன் காரணமாக ஏற்படக் கூடிய தாக்கம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	நாளொன்றிற்கு ரூபா. மில்லியன்	மாதமொன்றிற்கு ரூபா. மில்லியன்	வருடமொன்றிற்கு ரூபா. மில்லியன்
விநியோகத்தர்களுக்கு செலுத்தப்படுகின்ற தரகு			
அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையின் பிரகாரம் செலுத்தவேண்டிய பணம்	**30.7**	**921**	**11,052**
தற்போது செலுத்தவேண்டிய பணம்	**98.6**	**2,958**	**35,496**
அதிகரிப்பு	**67.9**	**2,037**	**24,444**
அங்கீகரிக்கப்பட்ட தொகையுடன் எடுக்கும் போது அதிகரிப்பு சதவீதம்	**221**	**221**	**221**

மேலே காண்பிக்கப்பட்ட பிரகாரம் மேலதிகமாக செலுத்துவதற்கு ஏற்படுகின்ற தரகுப் பணம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களுக்காக செலுத்தப்படுகின்ற மேலதிக நேரப் படி, மிகையூதியப் படி மற்றும் ஏனைய சகல படிகளையும் உள்ளடக்கிய ஒட்டுமொத்த ஊழியர் (சுத்திகரிப்பு ஊழியர்களை உள்ளடக்கி) கிரயத்தில் நான்கு மடங்கினை விட அதிகமாக இருந்தமையும் மற்றும் அது ஆண்டின் போது புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்கள் காணி தவிர) 400 இனை விஞ்சி நிர்மாணிப்பதற்கு ஏற்படுகின்ற தொகைக்கு சமமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

- கூட்டுத்தாபனத்தால் கடந்த ஐந்து வருட காலத்தில் தார், உராய்வு எண்ணெய், விவசாய உற்பத்தி மற்றும் அரச துறை நுகர்வோர்களுக்காக செலுத்தப்பட்ட தரகினையும் உள்ளடக்கி ஒட்டுமொத்த விற்பனை முகவர் தரகு கிரயம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

ஆண்டு	ரூபா. மில்லியன்
2017	**10,995**
2018	**13,541**
2019	**14,132**
2020	**12,402**
2021	**14,486**
எதிர்வரும் 12 மாதத்திற்கான மதிப்பீடு	**35,496**

மேலே குறிப்பிடப்பட்ட தகவல்களின் பிரகாரம் எதிர்வரும் 12 மாத காலத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த விற்பனை தரகு கிரயம் முன்னைய ஆண்டுகளில் செலவிடப்பட்ட சராசரி விற்பனை முகவர் தரகு செலவினங்களுடன் ஒப்பிடும் போது மிக அதிகமாக இருந்ததுடன் அசாதாரண நிலைமையாக இருந்தமையும் நாட்டில் எரிபொருள் வழங்கலில் வழமையான நிலைமைக்கு உட்பட்டதன் பின்னர் இந்த செலவினங்கள் மேலும் அதிகரிக்க கூடியதாக காணப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது.

- 2022 மே 22 ஆந் திகதிய 22/0673/522/002 என்ற ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் விலை சூத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு விற்பனை விலை தீர்மானிக்கும் போது மேலதிகமாக செலுத்தப்படுகின்ற விற்பனை முகவர் தரகுப் பணத்தின் காரணமாக லீற்றர் ஒன்றுக்கான கிரயத்திற்கு ஏற்பட்டுள்ள தாக்கம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	பெற்றோல் (லீற்றர்1)		டீசல் (லீற்றர்1)	
	92 Oct	95 Oct	LAD	LSD
உள்நாட்டு சந்தை விலை (லீற்றர்1)	450.00	540.00	430.00	510.00
உயர் எல்லை (Upper Cap)	162.00	170.00	121.00	145.00
விலை சூத்திரத்தின் படி முகவர் தரகுப் பணம்	13.50	16.20	12.90	15.30
உள்ளபடியாக செலுத்தவேண்டிய தரகுப் பணம்	4.86	5.10	3.63	4.35
தரகுப் பணம் மேலதிகமாக செலுத்தியதன் அடிப்படையில் லீற்றர் ஒன்றுக்கு மேலதிகமாக அறவிடும் விலை	8.64	11.10	9.27	10.95

அதன் பிரகாரம் விலை சூத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு விலைத் தீர்மானிக்கும் போது முகவர் தரகுப் பணம் மேலதிகமாக செலுத்தப்பட்டதன் அடிப்படையில் சகல பெற்றோலிய உற்பத்திகளினதும் விற்பனை விலை மேலே காண்பிக்கப்பட்ட பிரகாரம் உயர்வடைந்து சென்றதுடன் அதன் காரணமாக எரிபொருள் பயன்படுத்தும் நுகர்வோர்களுக்கு அவர்களினால் பயன்படுத்தப்படுகின்ற ஒவ்வொரு எரிபொருள் லீற்றருக்காகவும் முகவர் தரகுப் பணம் மேலதிகமாக செலுத்தப்பட்டதன் அடிப்படையில் ஏற்பட்ட விலை அதிகரிப்பு பாதகத்தை ஏற்படுத்தியிருந்தது. அவ்வாறில்லையாயின் விலை அதிகரித்ததன் நலன் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தற்றதன் காரணமாக கூட்டுத்தாபனத்தில் தற்போது காணப்படுகின்ற எதிர்மறை தேறிய சொத்து நிலைமையை மேலும் குறைத்துக் கொள்வதற்கு முடியமாக இருந்ததுடன் தற்போது நிதி நெருக்கடிக்கு முகங்கொடுக்கின்ற கூட்டுத்தாபனத்தின் அரசாங்கத்தின் அனுசரணையின்றி தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கு (Going Concern) பாதகமாக தாக்கமளிக்கக் கூடியதாகவிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- விற்பனை முகவர் தரகு அங்கீகரித்த எல்லையினை விஞ்சி செலுத்துவதற்காக தீர்மானம் எடுக்கும் போது எரிபொருள் நிறுவனத்திற்கு ஏற்படுகின்ற நிதி தாக்கங்கள் தொடர்பாக சரியான பிரகாரம் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததா என கணக்காய்வின் போது ஐயத்திற்கு உரியதாகவிருந்தது. அதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் தற்போதைய மற்றும் எதிர்கால சவால்களுக்காக திட்டங்களை தயாரிக்கும் போது சரியான நிதி மதிப்பீடின்றி பெறப்படுகின்ற முகாமைத்துவ தீர்மானங்களின் தாக்கங்கள் நிறுவனத்தில் இருப்புக்கும் மற்றும் பொதுமக்களின் நலன்களுக்கும் பாதகமாக தாக்கமளித்திருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

பொது நுகர்வோர் வசதிகள்

- இலங்கை அரசாங்கம் (GOSL) பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை இந்திய எண்ணெய்

கம்பனிகளுக்கிடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட 2003 திசெம்பர் 30 ஆந் திகதிய பொது நுகர்வோர் வசதிகள் பங்குரிமை உடன்படிக்கையின் 15 ஆவது பிரிவின் பிரகாரம் அது 2008 திசெம்பர் 31 ஆந் திகதியில் காலாவதியாகியிருந்தது. அதனால் நிறுவனத்தின் நிர்வாக செயல் நடைமுறைகள், இறங்குதுறைக் கட்டணத்தை உள்ளடக்கிய போக்குவரத்து கட்டணம் மற்றும் போக்குவரத்து செலவினங்களை தீர்மானிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற விலை சூத்திரங்கள் (2011 இன் போது இறுதி தடவையாக திருத்தப்பட்ட) உள்ளடக்கிய உடன்படிக்கையின் கீழ் வெளிப்படுத்தப்படுகின்ற பொது நுகர்வோர் வசதிகள் யாவும் தொடர்புடைய தரப்பினரின் இணக்கப்பாட்டுடன் திருத்தப்பட்டிருக்கவில்லை.

- பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் 2019 மே 13 ஆந் திகதி இலங்கை இந்திய எண்ணெய் கம்பனி (LIOC) ஒரு தரப்பினராக இல்லாமல் பெற்றொலிய மொத்த களஞ்சிய முனையக் கம்பனியுடன் மாத்திரம் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் அந்த உடன்படிக்கையின் பிரகாரம் கனிய எண்ணெய் உற்பத்தி களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்து செய்தல் தொடர்பான நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் செயற்பாட்டுக் கட்டணங்களை தீர்மானிக்கும் முறை தொடர்பாக இணங்கப்பட்டிருந்தது. எனினும் 2003 திசெம்பர் 30 ஆந் திகதிய பொது நுகர்வோர் வசதிகள் பங்குரிமை உடன்படிக்கையின் பிரதான நுகர்வோர் மற்றும் தரப்பினரான LIOC இற்கான தாக்கம், அந்த விடயத்திற்குரிய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் குறிப்பிடப்படவில்லை. அதனால் கூட்டுத்தாபனம் மற்றும் பெற்றோலிய மொத்த களஞ்சிய முனையக் கம்பனி (CPSTL) இற்கிடையே ஏற்படுத்தப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகள் இலங்கை இந்திய எண்ணெய்க் கம்பனியால் நிராகரிக்கப்படுமாயின் ஏற்படக் கூடிய பாதகமான நிலைமை மற்றும் கிரயம் கூட்டுத்தாபனத்தால் செய்யப்பட வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- தற்போது இலங்கையில் காணப்படுகின்ற அந்நிய செலாவணி நெருக்கடியின் காரணமாக எரிபொருள் இறக்குமதி வரையறுக்கப்பட்டமை மற்றும் கேள்விக்கு ஒப்பாக எரிபொருள் இருப்பு வரையறுக்கப்பட்டதன் காரணமாக எரிபொருள் பகிர்ந்தளித்தல் வரையறுக்கப்பட்ட நிலைமையில் காணப்படுகின்ற வரையறுக்கப்பட்ட எரிபொருள் இருப்பை சரியான முகாமைத்துவத்துடன், முன்னுரிமையில் இனங்கண்டு நாடு முழுவதும் பகிர்ந்தளிக்கும் தேசிய வேலைத்திட்டத்திற்கு கூட்டுத்தாபனம் முன்வந்து மிகவும் உயர்ந்த மட்டத்தில் இருக்க வேண்டியிருந்தமையும், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குரிய விற்பனை முகவர்கள் மற்றும் வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்கின்ற எரிபொருள் கட்டளைகளுக்காக எரிபொருளை விறியோகிப்பதற்கு உரிய சகல பணிகளும் CPSTL நிறுவனத்திற்கு தமது விருப்பத்தின் பிரகாரம் மேற்கொள்வதற்கு இடமளிக்கப்பட்டதன் காரணமாக இது தொடர்பாக கூட்டுத்தாபனத்தின் பொறுப்புக்கள் சரியான பிரகாரம் நிறைவேற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

SAP கணனி முறைமை

பெற்றோலியக் கூட்டத்தாபனத்தால் SAP கணனி முறைமை 2015 ஆம் ஆண்டின் போது அறிமுகப்படுத்தப்பட்ட வெளியீடு (SAP ECC 6.0) 2010 ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி முதல் இதுவரை எந்தவொரு நாளதுவரையாக்கலுமின்றி பயன்படுத்தப்படுகின்றது. வலுசக்தி அமைச்சின் செயலாளரினால் 2021 ஏப்ரல் மாதம் 09 ஆந் திகதிய ADM/12/01/19 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் CPC மற்றும் CPSTL இன் தலைவர்களுக்கு முறைமையை பயன்படுத்துதல் தொடர்பாக சாத்தியவள ஆய்வு மற்றும் பணத்திற்கு பெறுமதியுடைய கணக்காய்வு ஒன்றை மேற்கொள்ளுமாறும் அதன் பிரகாரம் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. மேலும் 2021 யூலை 22 ஆந் திகதிய 07/1252 ஆம் இலக்க பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் மூலமும் SAP முறைமை நாளதுவரையாக்கல் தொடர்பாக செயற்குழுவின் முன்மொழிவு பெறப்பட்டு பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் SAP முறைமை நாளதுவரையாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் விரைவாக இதுவரை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

பொதுமுயற்சிகள் சுற்றறிக்கைகளுக்கு இணங்காமை

- நல்லாளுகைக்கான பொதுமுயற்சிகள் வழிகாட்டல் தொடர்பாக 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈ/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் வழிகாட்டலுக்கு இணங்க பணிப்பாளர் சபையினதும் பொதுமுயற்சிகள் திணைக்களத்தினதும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்வு நடைமுறைகள் (SORAP) தயாரிப்பதற்கு கம்பனி பொருத்தமான நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் ஒப்பந்த அடிப்படையின் பிரகாரம் ஊழியர்களை நியமிப்பதற்காக இலங்கை பெற்றோலியக் களஞ்சிய முனையக் கம்பனியினால் திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

- 2015 மே 25 ஆந் திகதிய 1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக இலங்கை பெற்றோலியக் களஞ்சிய முனையக் கம்பனியினால் தொழிற்சங்க தலைவருக்கு 02 மோட்டார் வாகனங்கள் மற்றும் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய அரசாங்கத்திற்கு சொந்தமான முயற்சியாண்மைகளுக்காக (SOEs) செயற்பாட்டு கைநூலின் வழிகாட்டிக்கு முரணாக வலுசக்தி அமைச்சின் செயலாளருக்கும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளருக்கும் 02 மோட்டார் வாகனங்கள் கையளிக்கப்பட்டிருந்தன.

பிணக்குகள் தீர்க்கும் உடன்படிக்கையின் (Settlement Agreement) நியதிகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பாக முறையான மேற்பார்வை செயற்பாடுகள் காணப்படாமை

இலங்கை அரசாங்கத்திற்கும் இலங்கை இந்திய எண்ணெய்க் கம்பனிக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை 2007 சனவரி 05 ஆந் திகதிய பிணக்குகள் தீர்க்கும்

உடன்படிக்கையின் 03 பிரிவின் பிரகாரம் இலங்கை இந்திய எண்ணெய்க் கம்பனிக்காக சீன துறைமுக இறங்குதுறையிலிருந்து எரிபொருளை பகிர்ந்தளித்தல் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து எரிபொருளை பகிர்ந்தளித்தல் முறையே நாட்டின் எரிபொருள் தேவையில் 05 சதவீதப் படி உச்ச அளவில் வரையறுக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த நிபந்தனைகளுக்கு இணங்க உறுதிப்படுத்துவதற்கான முறைமையொன்று காணப்படவில்லை.

எழுத்துமூல உடன்படிக்கை காணப்படாமை

வியாபாரத்தை சுமூகமாக நடாத்திச் செல்வதற்கும் மற்றும் கிரயங்களை குறைப்பதற்குமான நிறுவனத்திற்கு உதவி சேவையினை வழங்குகின்ற தரப்பினருக்கிடையே சரியான இணக்கப்பாடு பேணிச் செல்லப்பட வேண்டியிருந்த போதிலும் உரிய சகல வியாபார நடவடிக்கைகளையும் மேவுகை செய்யும் வகையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை இந்திய எண்ணெய்க் கம்பனிகளுக்கிடையே எந்தவொரு உடன்படிக்கையோ அல்லது புரிந்துணர்வு உடன்படிக்கையோ (MOU) கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக ஒவ்வொரு தரப்பினரதும் செயல்நடைமுறைகள், பங்குகள் மற்றும் பொறுப்புக்கள் சரியானதாக அர்த்தப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

எரிபொருள் விநியோகித்தல்

இலங்கை எரிபொருள் மொத்த களஞ்சிய முனையக் கம்பனியின் பிரதான வியாபாரமாக விற்பனை செய்கின்ற பிரதான நிறுவனமான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் இலங்கை இந்திய எண்ணெய்க் கம்பனிக்குமுரிய எரிபொருள் களஞ்சியப்படுத்தல் மற்றும் அந்த நிறுவனங்களின் ஆலோசனையின் பிரகாரம் நாடு முழுவதும் காணப்படுகின்ற அங்கீகாரம் பெற்ற விற்பனை முகவர்களுக்கும் நுகர்வோர்களுக்கும் எரிபொருளை விநியோகித்தல் ஆகும்.

- எனினும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குரிய விற்பனை முகவர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் கட்டளைகளை கையேற்றல், விநியோகிக்கின்ற எரிபொருளின் அளவு, எரிபொருள் விநியோகிக்கின்ற திகதி, பட்டியல்கள் தயாரித்தல், அதற்குரிய பணத்தை சேகரித்தல் போன்ற சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்புடைய தீர்மானங்களை எடுப்பதற்குரிய அனேகமான செயற்பாடுகள் கம்பனியினால் மேற்கொள்ளப்படுவதுடன் இலங்கை இந்திய எண்ணெய்க் கம்பனிக்குரிய அந்த செயற்பாடுகள் அந்தக் கம்பனியினால் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் அந்த செயற்பாடுகள் 2003 திசெம்பர் 30 ஆந் திகதிய பொது நுகர்வோர் வசதிகள் பங்குரிமையாளரின் உடன்படிக்கையும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- நாட்டில் காணப்படுகின்ற பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக வரையறுக்கப்பட்ட எரிபொருள் இருப்பினை பகிர்ந்தளிப்பதற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் முன்னுரிமை பட்டியலொன்று விநியோகிக்கப்பட்ட போதும் கம்பனியால் அந்த பட்டியல் கவனத்தில் கொள்ளப்படாமல் எரிபொருள் உற்பத்தி பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. அதன்போது முன்னுரிமை பட்டியலில் உள்ளடக்கிய

இடங்களுக்கு எரிபொருள் பகிர்ந்தளிக்காத சந்தர்ப்பங்களும், கம்பனியின் பகிர்ந்தளிக்கும் பிரிவினால் தமது விருப்பத்தின் பிரகாரம் எரிபொருள் பகிர்ந்தளிக்கும் சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

எரிபொருள் பகிர்ந்தளிப்பதற்காக வாடகை அடிப்படையில் பௌசர் வண்டிகளை ஈடுபடுத்துதல்

இலங்கை பெற்றோலியக் களஞ்சிய முனையக் கம்பனி, எரிபொருள் பகிர்ந்தளிப்பதற்காக கம்பனிக்குச் சொந்தமான 147 பௌசர் வண்டிகள் மற்றும் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட 653 பௌசர் வண்டி அணியினை உபயோகிக்கின்றது. இதன் போது எரிபொருளை பகிர்ந்தளிப்பதற்காக கம்பனிக்குச் சொந்தமான பௌசர்களை உச்ச அளவில் பயன்படுத்தாதிருந்ததுடன் இந்த குறைவான பயன்பாட்டின் காரணமாக கம்பனிக்கு ஆகக்குறைந்தளவில் செலவிடப்பட்ட நிலையான கிரயத்தையேனும் மேவுகை செய்வதற்கு முடியாதிருந்தது. வாடகை அடிப்படையில் பௌசர் வண்டிகளை பதிவு செய்யும் போது கேள்வி நடைமுறை பின்பற்றப்படாதிருந்ததுடன் அந்த வண்டிகளை ஈடுபடுத்துதல் முறையாகவும் வெளிப்படையாகவும் இருக்க வேண்டிய முறைமை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

மூலதன செயற்திட்டம்

இலங்கை பெற்றோலியக் களஞ்சிய முனையக் கம்பனியினால் கொலன்னாவ இருப்பு களஞ்சிய முனையத்தில் 93,000 கனமீற்றர் இயலளவையுடைய 09 எண்ணெய் தாங்கிகளை நிர்மாணிப்பதற்காக இரண்டு கம்பனிகளுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த செயற்திட்டம் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

- 03 எண்ணெய் தாங்கிகளை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் இலங்கையில் பதிவு செய்துள்ள தனியார் கம்பனிக்கு ரூபா 947,474,240 தொகையில் கையளிக்கப்பட்டிருந்த போதும் கம்பனியால் அதற்கான ஆரம்ப கிரய நிர்மாணக் கிரயத்தை கணிப்பிடுவதற்காக கூறுவிலைகளை உள்ளடகிய அளவிடைப் பத்திரம் (BOQ) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் உள்நாட்டுக் கம்பனியாக தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரருக்கு மூலப்பொருட்கள் மற்றும் தொழில்நுட்ப பதவியணியினர் கவனத்தில் கொள்ளக் கூடிய அளவில் உள்நாட்டு ரீதியாக வழங்குவதற்கு முடியுமாக இருந்த போதிலும் அது தொடர்பாக முறையான மதிப்பீடின்றி ஒட்டுமொத்த செயற்திட்டத்திற்காகவும் வெளிநாட்டு பணத்தில் (USD) சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலைகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. நாணயமாற்று அந்நிய செலாவணி வீதங்களில் பாதகமான தளம்பல்களின் காரணமாக கம்பனியினால் இதற்காக 69 மில்லியன் கிரயமொன்றை செலவிட வேண்டியேற்பட்டிருந்தது.

- செயற்திட்டங்களின் செயல்முன்னேற்றம் தற்போது மிகவும் கீழ் மட்டத்தில் காணப்படுவதுடன் 06 எண்ணெய் தாங்கிகளை நிர்மாணிக்கும் ஒப்பந்தக்காரரால் நிர்மாண நடவடிக்கைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டதன் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட காலஅட்டவணையின் போது செயற்திட்டத்தை பூர்த்தி செய்வது கஷ்டமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

ஊழியர் கடன்

இலங்கை பெற்றோலிய இருப்பு களஞ்சிய முனையக் கம்பனி மற்றும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் என்ற இரண்டு நிறுவனங்களும் தமது பதவியணியினர்களுக்காக பல்வேறு கடன் உத்தேச திட்டங்கள் பல அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மொத்த நிலுவைக் கடன் மீதி ரூபா 3.359 பில்லியன் மற்றும் ரூபா 4.314 பில்லியனாக இருந்தது.

- நிறுவனத்தால் கவனத்தில் கொள்ளக்கூடிய ஊழியர் கடன் தொகுதியொன்று பேணிச் செல்லப்பட்டிருந்த போதிலும் அதன் முகாமைத்துவம் தொடர்பாக சரியான நிதி கொள்கையொன்று தாபிக்கப்படாதிருந்ததுடன் அதற்காக தேவையான நிபுணர்களின் ஆலோசனை நிறுவனத்திற்கு உள்ளிருந்தோ அல்லது வெளியிலிருந்தோ பெறப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கடன் செலுத்துதலை புறக்கணித்தல் தொடர்பான சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நிறுவனம் தவறியிருந்ததுடன் அதன் விளைவாக மீளாய்வாண்டின் இறுதியின் போது புறக்கணிக்கப்பட்ட கடன் மீதிகள் முறையே ரூபா 41.44 மில்லியன் மற்றும் 16.67 மில்லியனாக காணப்பட்டது.

- 1985 யூலை 01 ஆந் திகதிய 1063 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் மாதாந்த கடன் தவணைகளை உள்ளடக்கிய ஏனைய கழித்தல்கள் ஊழியர் சம்பளத்திலிருந்து 50 சதவீதத்திற்கு முடியாதிருந்த போதிலும் நிறுவனங்களின் ஊழியர்களின் கவனத்தில் கொள்ளக்கூடிய சதவீதத்தில் மாதாந்த கடன் தவணை அவர்களின் சம்பளத்தில் 50 சதவீதத்தை விஞ்சியிருந்தது.

- ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை முழுமையாக அல்லது அதற்கு அதிகரிக்கின்ற அல்லது கவனத்தில் கொள்ளக்கூடிய சதவீத கடனை மீள செலுத்துவதற்காக பயன்படுத்துவதற்கு ஏற்பட்டதன் காரணமாக மேலதிக நேர வேலை வழமையான தேவை நிறுவனத்திற்கு காணப்படாதிருந்த போதிலும் ஊழியர்களுக்கு அவர்களின் ஆரம்ப உழைப்பில் கடன் செலுத்துதல் மற்றும் ஏனைய செலவினங்களுக்காக போதியளவில் இல்லாமை காரணமாக மேலதிக நேர சேவையில் ஈடுபடுத்துவதற்கு வேண்டி ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த ஊழியர்களினதும் 40 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவிற்காக மற்றும் கம்பனியின் ஒட்டுமொத்த ஊழியர்களின் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவில் அவர்களின் அடிப்படைச் சம்பளத்தில் 50 சதவீதத்தை விஞ்சி மேலதிக நேரப்படி செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கடனை மீள செலுத்தும் இயலுமையை கவனத்தில் கொள்ளாமல் குறித்த கடன் முன்மொழிவுத் திட்டத்தை அமுல்படுத்தியதன் காரணமாக ஊழியர்களிடமிருந்து கடனை பெற்றுக்கொள்வதற்காக கடுமையான முயற்சி எடுக்கப்பட்டிருந்ததுடன் அதனால் நிறுவனங்களின் மேலதிக செலவினங்கள் அவசியமற்றதாக உயர்வடைந்து செல்வதற்கும் நேரடியாகத் தாக்கமளித்திருந்தது.

- நிறுவனத்தால் தமது ஊழியர்களுக்காக கணிசமான கடன் தொகுதியொன்று பேணிச் செல்வதற்கு உள்ள கணிசமான தொகையொன்றை ஒதுக்கியதன் காரணமாக போதியளவான நிதியம்

காணப்படாத காரணத்தினால் மிகவும் அவசர மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த மூலதனத்தை அதிகரிக்கும் செயற்திட்டங்களை தாமதப்படுத்துவதற்கு அல்லது கைவிடவேண்டியேற்பட்டிருந்தமை மற்றும் அதனை முகாமைத்துவம் செய்வதற்காக அவசியமற்றதான காலம் மற்றும் வழங்கலை ஈடுபடுத்த வேண்டியிருந்தமை போன்ற பிரச்சினைகள் தொடர்பாக கவனத்தில் கொண்டு ஊழியர் கடன் திட்ட முறைமையை வணிக வங்கி அல்லது நிதி நிறுவனங்களுக்கு வழங்குதல் தொடர்பாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் நிறுவனத்தினால் இதுவரை அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்

- செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான தாமதங்கள்
- கிங் நில்வளா திசைதிருப்பும் செயற்திட்டம்
- உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தி செயற்திட்டம்
- செயற்திட்டத்தை நிறைவு செய்யாது கைவிடல்
- பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் செயல்முன்னேற்றத்தை அடையப்பெற்றிராத செயற்திட்டங்கள்
- பஸ்நாகொட நீர்த்தேக்கத்தின் நிர்மாணித்தல்
- திஸ்ஸவாவியின் சகதியினை அகற்றுதல்
- எதிர்பார்த்த நலன்களை பெற்றுக்கொள்ளாமை
- ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பசுமை காலநிலை நிதியம்
- மகாவலி அதிகாரசபையினால் முதலீட்டு செயற்திட்டங்களுக்கு வழங்கப்பட்டிருந்த காணிகள் அபிவிருத்தி செய்யப்படாமை
- சுற்றுலா விடுதிகளின் பயன்பாடு
- கம்பனிகளை கலைத்தல்

நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கள்

நீர்ப்பாசன அமைச்சு மற்றும் அதன் கீழே உள்ள கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு, இரண்டு திணைக்களங்கள் மற்றும் மூன்று சட்டரீதியான சபைகள் என்பவற்றினால் பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன.

- "சௌபாக்கியத்தின் நோக்கு" கொள்கை பிரகடனத்திற்கு இணங்கவும் அரசினால் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசித்துள்ள ஏனைய தேசிய கொள்கைகளின் அடிப்படையில் அமைந்துள்ள "உயர் நீர்ப்பாசன முகாமைத்துவமொன்று" இற்கு உரிய இராஜாங்க அமைச்சிற்காக கொள்கை ரீதியான வழிகாட்டலினை மேற்கொள்ளல் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களின் நீர்ப்பாசன விடயத்திற்கு உரியதாக கொள்கை உருவாக்கம், தேசிய வரவு செலவுத் திட்டம், அரச முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உள்ள செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

- நீர் மூலங்களை அபிவிருத்தி செய்தல், நீர்வழங்கல் மற்றும் வெள்ளநீர் கட்டுப்பாடு, நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்தல் மற்றம் விவசாயம், குடிநீர், மின்சாரம் போன்றவற்றுக்கு தேவையான நீரை உரிய முகாமைத்துவத்தின் அடிப்படையில் விநியோகித்தல்.

மேற்கூறப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக நீர்ப்பாசன அமைச்சிற்கு, இரண்டு இராஜாங்க அமைச்சுக்களுக்கு மற்றும் திணைக்களத்திற்குமாக 2021 ஆம் ஆண்டில் மொத்தம் ரூபா 54,404 மில்லியன் தேறிய ஒதுக்கங்கள் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதிவரையில் அவற்றில் ரூபா 45,833 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் உரு 37 இல் காட்டப்படுகின்றது.



	நீர்ப்பாசன அமைச்சு	கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு	நீர்ப்பாசன திணைக்களங்கள்	மொத்தம்
தேறிய நிதி ஏற்பாடு ரூபா மில்லியன்	36621	3114	14669	54404
செலவினம் ரூபா மில்லியன்	31438	2657	11738	45833
சேமிப்பு ரூபா மில்லியன்	5183	457	2931	8571

உரு 37 - வழங்கப்பட்ட நிதியேற்பாடு மற்றும் உள்ளபடியான செலவுகள்
மூலம் - 2021 இன் வருடாந்த நிதிக்கூற்றுக்கள்

மேற்கூறப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மாதிரிக் கணக்காய்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட முக்கிய மற்றும் பொருண்மையான கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்படுகின்றன.

செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான தாமதங்கள்

அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட ரூபா 153,915.7 மில்லியன் மதிப்பீட்டு பெறுமதியுடைய தல்பிட்டிகல நீர்த்தேக்கம் உற்பத்தி திறன் அபிவிருத்தி மற்றும் நீர்ப்பாசனக் கட்டமைப்பு செயற்திறனை முகாமை செய்யும் செயற்திட்டம், கிங்நில்வளா திசைதிருப்பும் செயற்திட்டம் மற்றும் உமாஓயா திசைதிருப்பும் செயற்திட்டம் ஆகிய 4 அபிவிருத்தி திட்டங்கள் திட்டமிடப்பட்டு இரு மடங்கு காலம் கடந்திருந்த போதிலும் நிறைவு செய்யப்படாமையால் அச்செயற்திட்டங்களுக்காக 14 வருட காலப்பகுதியினுள் மேற்கொள்ளப்பட்டுள்ள ரூபா 90,294.5 மில்லியனான கிரயத்தில் இதுவரையிலும் தேசிய பொருளாதாரத்திற்கு எந்த பங்களிப்பும் கிடைத்திருக்கவில்லை.

கிங் நில்வளா திசைதிருப்பும் செயற்திட்டம்

- 2014 நவம்பர் 05 ஆந் திகதி ஐக்கிய அமெரிக்க டொலர் 690,000,000 ஆன நூஊ ஒப்பந்த உடன்படிக்கைக்கு சீனக் கம்பனியொன்றுடன் கைச்சாத்திட்டிருந்ததுடன் தொழில் ஆரம்பிப்பு முற்பணமாக ரூபா 4,011.05 மில்லியனுக்குச் சமமான ஐக்கிய அமெரிக்க டொலர் 29,989,000 செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கமைய ஆண்டினுள் நிறைவேற்றப்படாத காரணத்தினால் இரு தரப்பினரின் இணக்கப்பாடின்றி உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டதுடன் அதற்கமைய 2015 நவம்பர் 05 ஆந் திகதி முதல் உடன்படிக்கை இரத்தாகி இருந்தது. அதற்கமைய முற்பணம் பிணைப் பணமாக மாறும் இயலுமை காணப்பட்ட போதிலும் அமைச்சரவையின் அங்கீகாரமின்றி முற்பணத் தொகை செயற்திட்டத்தின் முதலாவது கட்டமாக கருதி அதனை ஆரம்ப தரவு சேகரித்தல், அளவீட்டு பணிகள், பூகோள அவதானிப்பு பணிகள், சாத்தியவளக் கற்கையை நாளதுவரையாக்குதல் மற்றும் ஆரம்பத் திட்டங்களுக்கான கிரயமாக இனங்காணப்பட்டிருந்தது. இப்பணிகள் 8 மாதங்களில் நிறைவு செய்யப்பட வேண்டுமென புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. இனங்காணப்பட்ட வேலைப்பகுதிகளுக்குரிய மொத்த தொகையான ரூபா 4,011.05 மில்லியன் ஒரே தடவையில் செலுத்தப்பட்டு 05 வருடங்கள் கடந்திருந்த போதிலும் பணி நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

- செயற்திட்டத்திற்காக இணைத்துக் கொள்ளப்பட்ட பதவியணிக்கு சம்பளம் மற்றும் படிகளாக 05 வருட காலப்பகுதியில் ரூபா 57 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் பணிகள் 08 வருடங்கள் காலதாமதம் அடைந்தமையால் சிக்கனமற்ற மற்றும் மேலதிக செலவினமொன்றாகியிருந்தது.

- பிரதமரின் செயலாளரின் **PMO/01/ASP/2016/01/Vo** ஆம் இலக்க 2016 யூன் 23 ஆந் திகதிய கடிதத்தில் செயற்திட்டம் நில்வளா கங்கைகளில் அண்மையில் மாத்திரம் மேற்கொள்வதற்கு பரிந்துரைப்பதாகவும் அதற்கு அமைச்சரவையின் விஞ்ஞாபனமொன்று சமர்ப்பிக்குமாறும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறில்லாது 2017 யூலை 20 ஆந் திகதி ஜின்கங்கை மற்றும் நில்வளா கங்கை ஆகிய இரு பிரிவுகளில் கற்கைகள் மேற்கொள்வதற்கு புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

- இந்த பரிந்துரையினை கருத்தல் கொள்ளாது UNESCO அமைப்பினால் உலக மரபுரிமையொன்றாக வெளியிடப்பட்டுள்ள பிரதேசத்தின் அண்மையில் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டமையால் அதற்குரிய வனப்பாதுகாப்பு திணைக்களம் உள்ளடங்கலாக ஏனைய நிறுவனங்களின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தமை மற்றும் மக்களின் எதிர்ப்பு ஏற்பட்டிருந்தது. இதற்காக மேற்கொள்ளப்பட்ட கற்கைகள் மற்றும் திட்டங்கள் விளைவற்றதாக இருந்தது.

உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தி செயற்திட்டம்

- உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக மொத்த மதிப்பீட்டு கிரயத்தின் ஆரம்ப பணிகளுக்காக ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன் 529 அல்லது ரூபா 74,325.75 மில்லியன் மற்றும்

ஏனைய கிரயங்கள் மற்றும் ஆற்றின் படுகை அபிவிருத்திக்காக ரூபா 15,474.25 மில்லியன் நிதியீட்டம் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் ஆரம்ப பணிகளுக்காக உள்நாட்டு நிதியங்களிலிருந்து ரூபா 72,153.17 மில்லியன் மற்றும் வெளிநாட்டு நிதியங்களிலிருந்து ரூபா 6,522.85 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. செயற்திட்டம் 2008 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 7 வருடங்களில் அதாவது 2015 நவம்பர் 15 ஆந் திகதி நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 2021 நவம்பர் 25 ஆந் திகதி வரையிலும் காலம் நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்கான நிதி ஈரான் ஏற்றுமதி அபிவிருத்தி வங்கியின் ஊடாக நிதியீட்டம் செய்வதற்கு போட்டி அடிப்படையிலான கூறுவிலைகளை கோராது ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்டு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2013 ஈரானுக்கு விதிக்கப்பட்ட தடைகள் காரணமாக உள்நாட்டு நிதியத்தின் செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- செயற்திட்டம் தாமதமடைந்த காரணத்தினால் எதிர்பார்த்த பெறுபேறுகளான மின்சார உற்பத்தி கட்டமைப்புக்கு மேலதிகமாக மொனராகலை மாவட்டத்தின் மொனராகலை மாவட்டத்தின் வெல்லவாய மற்றும் தனமல்வில பிரதேச செயலக பிரிவுகளில் அமைந்துள்ள சுமார் 4,500 ஹெக்டயர் பரப்புடைய புதிய காணிகள் மற்றும் தற்போது பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் சுமார் 1,500 ஹெக்டயர் பரப்பளவான காணிகளுக்காக நீர்ப்பாசனத்தை வழங்குதல், செயற்திட்ட பிரதேசத்தின் குடிநீர் மற்றும் கைத்தொழிலுக்காக வருடாந்தம் 30 மில்லியன் கனமீற்றர்கள் அளவான நீரினை விநியோகிப்பதற்கு டயபரா மற்றும் உபுல்பொல ஆகிய இடங்களில் நிர்மாணிக்கப்படும் நீர்த்தேக்கங்கள் ஊடாக பதுளை மாவட்டத்தின் பண்டாரவளை மற்றும் அட்டம்பிட்டிய பிரதேசங்களின் குடிநீர் தேவையை வழங்குவது ஆகிய நலன்களை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

- உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தி செயற்திட்டத்தின் பிரதான சுரங்கத்தில் ஏற்பட்ட நீர்க்கசிவு காரணமாக ஒப்பந்தக்காரரால் செலுத்த வேண்டிய நட்டஈடு ரூபா 1,931,346,396 அரசின் பணத்தில் செலுத்தப்பட்டிருந்ததுடன் அவற்றுள் ரூபா 889,789,252 ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

- 2015 நவம்பர் 15 ஆந் திகதியிலிருந்து 2021 திசெம்பர் 25 ஆந் திகதி வரையிலும் செயற்திட்டக் காலத்தை நீடிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் EPC ஒப்பந்த உடன்படிக்கையின் 8.7 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க நாளொன்றுக்கு ஒப்பந்த பெறுமதியில் 0.01% எனுமாறு ஆகக்கூடியது 5% வரையிலும் அறவிடக் கூடியதாக இருந்த தாமதக் கட்டணம் ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன் 26.453 ஆகும். ஒப்பந்தக்காரரின் தாமதக் கட்டணமாக அறவிடப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் 6,631,364 ஆன தொகையில் அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் அவற்றுள் ஐக்கிய அமெரிக்க டொலர் 5,305,091 மீள செலுத்தப்பட்டிருந்தது. தாமதம் காரணமாக செயற்திட்டத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய நலன்கள் இழக்கப்படுதல் தொடர்பில் மதிப்பீட்டாளரின்

காலநீடிப்பிற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் தாமதம் மூலம் ஏற்படும் தாக்கம் தொடர்பில் செயற்திட்ட அலகின் மூலம் ஒப்பந்தக கம்பனிக்கு அறிவித்தமை தொடர்பில் உரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

- ஒப்பந்தக்காரரினால் காலநீடிப்புச் செய்யப்பட்ட காலஎல்லைக்கு பதிலாக மேலதிக செலவினம் மற்றும் பட்டியல்களுக்கான கொடுப்பனவுகள் தாமதமடைந்தமையால் ஐக்கிய அமெரிக்க டொலர் 181,337,171 ஆன மேலதிக கட்டணமொன்று கோரப்பட்டிருந்தது. EPC ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் அந்த கோரிக்கை உரிய முறையில் நிராகரிக்கப்பட்டு அது தொடர்பான கொள்கைத் திட்டமிடல் பிரிவிற்கு அறிவிப்பதற்கு செயற்திட்ட முகாமைத்துவ பிரிவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
  செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த நலன்கள் 2022 மே மாதம் வரையிலும் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

செயற்திட்டத்தை நிறைவு செய்யாது கைவிடல்

வடமராட்சி களப்பில் நீர் வழங்கல் அபிவிருத்தி மூலம் யாழ் தீபகற்பத்தின் மக்களுக்கு குடிநீர் விநியோகிப்பதற்காக 2019 ஆம் ஆண்டில் உள்நாட்டு நிதியில் ரூபா 2,000 மில்லியனான மதிப்பீட்டுக் கிரயத்தின் கீழ் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டு அந்த ஆண்டில் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 28 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் செயல்முன்னேற்றத்தை அடையப்பெற்றிராத செயற்திட்டங்கள்

பென்தர கங்கையின் தெற்கு கரையில் கடல் நீர் கசிவினை தடுக்கும் செயற்திட்டத்தின் ஆரம்பத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 298 மில்லியனான உள்நாட்டு நிதியில் 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டில் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டு வரையிலும் காலம் நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது. 2015 முதல் 2021 திசெம்பர் 31 வரையும் செயற்திட்டத்திற்காக ரூபா 95,194 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டில் 100 மில்லியன் கிடைத்திருந்தது. அந்த பணத்தில் 2021 சனவரி முதல் திசெம்பர் வரையிலும் செயற்திட்ட செலவினம் ரூபா 69,950 செலவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 30,050 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய இச்செயற்திட்டத்திற்காக 2015 ஆம் ஆண்டு முதல் நடப்பாண்டின் இறுதி வரையிலும் ரூபா 165,144 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் உத்தேசக் கிரயத்தின் 55 சதவீதம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பௌதீக நிர்மாணங்களின் 35 சதவீதம் மாத்திரம் நிறைவு செய்யப்பட்டிருந்தது.

பஸ்நாகொட நீர்த்தேக்கத்தின் நிர்மாணித்தல்

கம்பஹா, அத்தனகல்ல மற்றும் மினுவாங்கொட ஒருங்கிணைந்த நீர் வளங்கள் செயற்திட்டத்தின் கீழ் பஸ்நாகொட நீர்த்தேக்கத்தினை நிர்மாணிப்பதற்காக புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றிற்கு 2016 மார்ச் 21 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டு வரையிலும்

செயற்திட்டத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2020 ஆம் ஆண்டளவில் ரூபா 560 மில்லியன் செலவிடப்பட்டு குழாய்களை இழைத்தல் மற்றும் ஏனைய பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் நிர்மாணங்கள் தாமதமடைந்தமையால் எதிர்பார்த்த பெறுபேற்றினை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

திஸ்ஸவாவியின் சகதியினை அகற்றுதல்

- நீர்ப்பாசன பணிப்பாளர் அம்பாந்தோட்டையினால் வ/ப கஜா ஹொல்டிங் (தனியார்) கம்பனியுடன் 2021 ஆம் ஆண்டில் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. காணியின் பரப்பளவான 120 ஏக்கர்களில் 17 சதவீதம் அத்துமீறிய பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்தல், வாவியை சுற்றிலும் அமைந்துள்ள ஹோட்டல்கள், 50 அத்துமீறிய குடியிருப்புக்கள் ஆகியவை பயன்படுத்தப்படுகின்றமை 2019 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமை, காணியின் எல்லையினை இனங்காணாது ஆரம்பித்தல், 10 வருட காலங்களினுள் வாவியின் அடியின் மட்டம் நிர்ணயிக்கப்படாமை, நீர்த்தெறிப்பு பிரிவின் அடியின் மட்டத்திற்காக எலக்ரோனிக் உபகரணங்களை பயன்படுத்துவதற்கு உரிய கோரிக்கைகளுக்கு நடவடிக்கை எடுக்காமை ஆகிய குறைபாடுகள் உள்ள போது செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மேலும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் வழங்கப்பட்டுள்ள சுற்றாடல் பரிந்துரை இலக்கம் 7.1 ஆம் பிரிவின் பிரகாரம் புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க பணியகத்தின் வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. வாவியின் சகதியை அகற்றுவதன் மூலம் பெற்றுக் கொள்ளக்கூடிய மணலை விற்பனை செய்யும் இயலுமை காணப்பட்ட போதிலும் உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 33 இன் பிரகாரம் வணிக நடவடிக்கையொன்றாக மேற்கொள்ளப்படின் அரசிறை அறவிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை.

- இயந்திரங்களின் உதவியுடன் வாவியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சகதியினை எவ்வித்திலும் வாவியின் உள்ளேயே கழுவக்கூடாததுடன் வாவியிலோ அல்லது பிரதான வாய்க்காலில் நீரினை மாசுபடுத்தக்கூடாது என ஒப்பந்த உடன்படிக்கையில் 10 ஆம் பிரிவில் உள்ளடங்கியிருந்த போதிலும் அதற்கு முரணாக திஸ்ஸமகராம பிரதேச பொறியியலாளரினால் தற்காலிகமாக வழங்கப்பட்டிருந்த வேலைத்தளத்தினுள் இந்த செயற்திட்டம் நிறைவடையும் வரையிலும் மணல் அகழ்வு மேற்கொள்வதற்கு இணக்கப்பாடு வழங்கப்பட்டிருந்தது.

- காடுகள் கட்டளைச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் 2009 மே 06 ஆந் திகதிய 1600/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்டுள்ள கட்டணங்களின் பிரகாரம் அகற்றப்படும் மேற்புற மணல் 01 கியூப் இற்காக ரூபா 1,120 படியான காணி பயன்பாட்டுக் கட்டணமொன்றை அறவிடும் இயலுமை உள்ள போதிலும் அந்த நிபந்தனை உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாமையால் செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம் நாளொன்றுக்கு 100 கியூப்கள் படி அகற்றுவதற்கு எதிர்பார்த்த 2400 கியூப்களுக்காக

அறவிடக்கூடியதாக இருந்த பெறுமதி ரூபா 2,688,000 ஆகும். அதற்கமைய உடன்படிக்கையின் காலமாக 12 மாத காலப்பகுதியினுள் அரசிற்கு இழப்பாகும் தொகை ரூபா 32,265,000 ஆகும்.

எதிர்பார்த்த நலன்களை பெற்றுக்கொள்ளாமை

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் யான்ஓயா நீர்த்தேக்கத்தில் நிர்மாணித்த காரணத்தினால் இழக்கப்பட்ட வனாந்தரத்திற்காக மீண்டும் வனநடுகை மேற்கொள்வதற்காக அனுராதபுரம் மாவட்ட வன அலுவலகத்திற்கு ரூபா 12,000,000 வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய அனுராதபுர மாவட்டத்தில் 209.1 ஹெக்டயர்கள் பரப்பளவில் 110000 கன்றுகளை நடும் போது நீர்த்தேக்கத்தின் FSL மற்றும் HFL மட்டங்களுக்கிடையே அமைந்துள்ள காணிகளினதும் பொருத்தமான தன்மை தொடர்பில் மதிப்பீடு செய்யாது கன்றுகள் நடப்பாட்டமையாலும் செயற்திட்டத்தின் சுற்றாடல் அறிக்கையின் தாக்கத்தில் மதிப்பீடு தேவைப்பாடுகளுக்கு இணங்கும் வகையில் நடுகை பணிகள் இடம்பெறாமையாலும் நீர்த்தேக்கத்தில் நீர் நிறையும் போது அப்பிரதேசம் நீரினால் மூழ்கும் காரணத்தினால் நடப்பட்ட கன்றுகளில் சுமார் 90 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவு அழிவுக்குள்ளாகியிருந்தது.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பசுமை காலநிலை நிதியம்

இலங்கையின் உலர்வலயத்தில் காலநிலை மாற்றங்கள் காரணமாக சிறுதோட்ட உரிமையாளர்கள் முகங்கொடுக்கும் சிக்கல்களை குறைத்துக் கொள்ளும் நோக்கில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (UNDP) மற்றும் பசுமை காலநிலை நிதியம் (GCF) இலங்கை அரசிற்கு ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன் 38.084 (ரூபா 5,499.71 மில்லியன்) வழங்குவதற்காக 2017 யூன் 07 ஆந் திகதி பிரதான உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்தது. மேற்படி உடன்படிக்கையின் பிரகாரம் மகாவலி அபிவிருத்தி சுற்றாடல் அமைச்சு செயற்திட்டத்தை செயல்படுத்தும் நிறுவனம் **(Executing Entity)** ஆக உள்ளதுடன் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (UNDP) நியமத்திற்கமைவான நிறுவனம் **(Accredited Entity)** ஆகும். FAA இன் 3 ஆம் பிரிவின் பிரகாரம் அங்கீகாரத்திற்கு உள்ளாக்கப்பட்ட நிறுவனம் (UNDP) இனால் செயற்திட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனம் (MMDE) இற்கு ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன் 38.084 ஆன தொகை நன்கொடையாக வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் பசுமை காலநிலை நிதியம் கடந்த 03 வருடங்களினுள் ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன் 20.4 (ரூபா 3,774 மில்லியன்) தொகை UNDP இற்கு வழங்கியிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் MMDE இற்கு வழங்கியிருந்தது. ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன் 5.7 (ரூபா 1,020 மில்லியன்) மாத்திரம் ஆகும். அதாவது எஞ்சிய ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன் 14.7 செயற்திட்டத்தின் செயற்பாடுகளுக்காக UNDP இனால் செலவிடப்பட்டிருந்தது.

மகாவலி அதிகாரசபையினால் முதலீட்டு செயற்திட்டங்களுக்கு வழங்கப்பட்டிருந்த காணிகள் அபிவிருத்தி செய்யப்படாமை

கணக்காய்வுக்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அதிகாரசபையினால் முதலீட்டு செயற்திட்டங்களுக்காக 695

முதலீட்டாளர்களுக்கு 6,879 ஹெக்டயர்கள் பரப்பளவான காணி வழங்கப்பட்டிருந்தது. அவற்றுள் முழுமையான அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள காணித் துண்டுகளின் பரப்பளவு 3,284 ஹெக்டயர்களாகவும் குறை அபிவிருத்தி செய்யப்பட்ட காணிகளின் அளவு 2,023 ஹெக்டயர்களும் அபிவிருத்தி செய்யப்படாத காணிகளின் அளவு 1,572 ஹெக்டயர்களுமாக காணப்பட்டது. அதற்கமைய வழங்கப்பட்ட காணியின் அளவில் 52 சதவீதம் குறை அபிவிருத்தி மற்றும் அபிவிருத்தி செய்யப்படாத காணிகளாக காணப்பட்டதுடன் அக்காணிகளை மீள சுவீகரித்து ஏனைய முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

சுற்றுலா விடுதிகளின் பயன்பாடு

அதிகாரசபைக்குச் சொந்தமான சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை 27 ஆக காணப்படுவதுடன் அந்த 27 சுற்றுலா விடுதிகளும் வருமானத்தை விஞ்சி செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தினால் 2021 ஆம் ஆண்டில் நட்டம் ரூபா 36.39 மில்லியனாக காணப்பட்டது. மேலும் அதிகாரசபைக்குச் சொந்தமான 11 நாற்றுமேடைகளிலிருந்து 08 நாற்று மேடைகளும் நட்டம் அடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டின் நட்டமானது ரூபா 35.08 மில்லியன் ஆகும்.

கம்பனிகளை கலைத்தல்

மகாவலி அதிகார சபைக்குரிய துணைக் கம்பனிகள் இரண்டான மகாவலி வென்ஜர் (தனியார்) கம்பனி 2012 ஆம் ஆண்டிலும் இயற்கை வளங்கள் முகாமைத்துவ (தனியார்) கம்பனி 2019 ஆம் ஆண்டிலும் கலைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டின் போதும் கலைக்கும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

நீர் வழங்கல் மற்றும் சுகாதாரம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்

- நீர் வழங்கல் மற்றும் சுகாதார வசதிகளை வழங்குதல
- குழாய் நீர் மற்றும் குழாய் கழிவு நீர் வசதிகளின் உள்ளடக்கம்
- தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையியின் நிதி விளைவுகள்
- ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியின் கீழ் கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவத்தை மேம்படுத்தும் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டம்.
- அம்பத்தலே முறைமையை புனரமைத்தல் மற்றும் மின் வலுவை சேமித்தல் செயற்திட்டம்
- அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் கட்டம் I மற்றும் கட்டம் II
- கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவத்தினை மேம்படுத்தும் முதலீட்டு நிகழ்ச்சிதிட்ட செயற்திட்டம் II
- கண்டி நகரத்தின் கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்டம்
- ஆனமடுவ நீர் வழங்கல் செயற்திட்டம்
- அனைவருக்கும் நீர் நிகழ்ச்சித் திட்டம்
- சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்கள்
- ஒருங்கிணைந்த ஆராய்ச்சி மற்றும் மாதிரி நிலையம்
- நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தும் செயற்திட்டம்
- கிராமிய மற்றும் பிராந்திய குடிநீர் வழங்கல் செயற்திட்டங்கள்களை அபிவிருத்தி செய்தல் இராஜாங்க அமைச்சு
- நீர் வளங்கள் சபை

நீர் வழங்கல் மற்றும் சுகாதாரம்

ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள் தொடர்பான நிகழ்ச்சி நிரல் - 2030 இன் குறிக்கோள் இலக்கம் 6 இன் கீழ் அனைவருக்கும் நீர் மற்றும் சுகாதார வசதிகளை வழங்குதல் பிரதான செயலாற்றல் குறிக்காட்டியாக இனங்காணப்பட்டிருந்தது. அதற்கு இணங்க அராசாங்கத்தின் சௌபாக்கியத்தின் தூரநோக்கு தொடர்பான கொள்கை கூற்றில் 2025 ஆம் ஆண்டளவில் அனைவருக்கும் சுத்தமான குடி நீர் வழங்கலினை வழங்குவதற்குத் திட்டமிட்டிருந்ததுடன் அந்த இலக்கினை அடைந்து கொள்வதற்கு நீர் வழங்கல் அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையும் நீர் வளங்கள் சபையும் பிரதான நியதிச் சட்ட நிறுவனங்களாக செயற்படுவதுடன் அமைச்சின் நேரடி மேற்பார்வைக்கு உட்படுவதுடன் அமைச்சின் மூலம் உலக வங்கியின் உதவியின் அடிப்படையில் அமுல்ப்படுத்தப்பட்டு வருகின்ற நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தும் செயற்திட்டமும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சும் அதன் கீழுள்ள சமூக நீர் வழங்கல் திணைக்களமும் பின்வரும் செயற்பாடுகளையும் நடவடிக்கைகளையும் நிறைவேற்றவேண்டி இருந்தது.

- அனைவருக்கும் நீரினை வழங்குவதற்காக புதிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு செயற்திட்டத்தை துரிதமாக அமுல்ப்படுத்தல்.

- விவசாய அமைச்சு மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் விடயப்பரப்பின் கீழுள்ள முறையே கிராமிய குளங்கள், நீர்த் தோக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன முறைமைகளை ஒருங்கிணைப்புச் செய்து நிலக்கீழ் நீர் பாதுகாப்பினையும் கிராமிய மற்றும் நகர நிகழ்ச்சித்திட்டங்களையும் மேம்படுத்துதல்.

- குடி நீர் குழாய் முறைமையின் மற்றும் பகிர்ந்தளிக்கும் போது இடம்பெறுகின்ற சேதங்கள் மற்றும் நீர் வீணாகுதலினைத் தவிர்த்தல்.

- சமூக நீர் வழங்கல் மற்றும் செயற்திட்டங்களை செயற்திறனாகவும் முறைப்படியாகவும் நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுத்தல்.

- கிராமிய மக்களுக்கு தரமான குடிநீரினை வழங்குவதற்காக சமூக நீர் வழங்கல் செயற்திட்டங்களை பராமரித்தலும் மேம்படுத்தலும்

- கிராமிய பிரதேசங்களில் குடிநீர் வழங்கலினை நிலை நிறுத்துதல், நீர்த்தேக்கங்கள் மற்றும் ஊட்டக் கால் வாய்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் நீரை பேணிக்காத்தல் நடவடிக்கைகள்

- தேசிய நீர்ப்பாசன முறைமையின் மூலம் கிராமிய மற்றும் பிராந்திய மட்டத்தில் அமுல்ப்படுத்தப்படுகின்ற நீர் வழங்கல் செயற்திட்டங்களுக்கு அருகாமையில் நீரினைப் பகிர்ந்தளிக்கும் செயற்திட்டங்களை துரிதப்படுத்துதல்.

மேற்கூறிய கடகைளை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டில் நீர் வழங்கல் அமைச்சு, இராஜாங்க அமைச்சு திணைக்களம் என்பவற்றிற்கு மொத்தமாக ரூபா 105,706 மில்லியன் தேறிய நிதி ஏற்பாடு பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்தும்

அதில் ரூபா 54,217.2 மில்லியன் அல்லது 57 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

விபரம் உருவப்படம் 38 இல் தரப்படுகின்றது.



	நீர் வழங்கல் அமைச்சு7	இராஜாங்க அமைச்சு	சமூக நீர் வழங்கல் திணைக்களம்	மொத்தம
தேறிய நிதி ஏற்பாடு ரூபா மில்லியன்	101இ291.10	1இ452.47	2இ962.30	105இ705.90
செலவினம் ரூபா மில்லியன்	52இ193.50	806.8	1இ216.90	54இ217.20
சேமிப்பு ரூபா மில்லியன்	49097.6	645.67	1745.4	51488.7

உருவப் படம் 38:- தேறிய நிதி ஏற்பாடும் பயன்பாடும்
மூலாதாரம் - 2021 வருடாந்த நிதிக்கூற்றுக்கள்

நீர் வழங்கல் அமைச்சு, இராஜாங்க அமைச்சு மற்றும் அதன் கீழ் செயற்படுகின்ற நியதிச் சட்ட நிறுவனங்களினால் மேலே கூறப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முக்கியமான மற்றும் பொருண்மையான கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கி கீழே தரப்படுகின்றன.

நீர் வழங்கல் மற்றும் சுகாதார வசதிகளை வழங்குதல்

- நீர் வழங்கல் மற்றும் சுகாதார வசதிகளை வழங்குவதனை இலக்காகக் கொண்டு நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் வரிசை அமைச்சின் நேரடி மேற்பார்வையின் கீழ் பெரிய அளவிலான 22 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களும், 3 கழிவு நீர் செயற்திட்டங்களும், உள்நாட்டு நிதியின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்ற 11 நீர் வழங்கல் செயற்திட்டங்களுமாக மொத்தம் 36 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் அதில் 25 செயற்திட்டங்கள் சம்பந்தமாக ஆண்டின் ஆரம்பத்தில் எதிர்பார்த்த பௌதீக செயல் முன்னேற்றத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு சபைக்கு முடியாதிருந்தது. மேலும் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 5 பெரிய அளவிலான நீர் வழங்கல் செயற்திட்டங்களையும்

உள்நாட்டு நிதியின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்ற 6 நீர் செயற்திட்டங்களையும் ஆண்டின் போது முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் சபைக்கு முடியாதிருந்தது. மேலும் ஆண்டின் போது அமுல்ப்படுத்தப்பட்டிருந்த 16 வெளிநாட்டு நிதியத்தில் செயற்திட்டங்கள், 6 உள்நாட்டு நிதியத்தில் சம்பந்தமாக 184 நாட்களிலிருந்து 1779 நாட்கள் வரையான கவனம் செலுத்தப்பட வேண்டிய தாமதங்கள் காணப்பட்டதுடன் ஒப்பந்தக்காரர்களின் பலவீனமான செயலாற்றல், காணிகளை நிர்ணயிப்பதில் சிக்கல்கள், முதலிய காரணங்களால் தாமதமடைந்திருந்த அச் செயற்திட்டங்களுக்காக 1 சந்தர்ப்பத்திலிருந்து 9 சந்தர்ப்பங்கள் வரையான கால நீடிப்பும் வழங்கப்பட்டிருந்தன என்பது அவதானிக்கப்பட்டது.

- அமைச்சின் மேற்பார்வையின் கீழ் உலக வங்கியின் உதவியின் அடிப்படையில் அமுல்ப்படுத்தப்பட்டிருந்த இரத்தினபுரி, கேகாலை, மொனராகலை முதலிய 7 மாவட்டங்களில் அமுல்ப்படுத்தப்பட்டு வந்த நீர் வழங்கல் மற்றும் சுகாதார வசதிகளை மேமம்படுத்துதல் செயற்திட்டத்தினை 2021 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவுறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தும் அத்திகதியில் உள்ளவாறு அவற்றிலிருந்து எதிர்பார்த்த பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்ததனால் மீண்டும் அது 2022 மார்ச் 31 ஆந் திகதி மற்றும் 2023 மார்ச் 31 ஆந் திகதி வரை 2 சந்தர்ப்பங்களின் போது நீடிக்கப்பட்டிருந்தது.

குழாய் நீர் மற்றும் குழாய் கழிவு நீர் வசதிகளின் உள்ளடக்கம்

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் 2022-2025 ஆம் ஆண்டுகளுக்காகத் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டமானது அனைவருக்கும் நீர் செயற்திட்டத்தின் கீழ் வழங்குவதற்கு எதிர்பார்த்திருந்த புதிய நீர் இணைப்புக்களின் எண்ணிக்கையையும் உள்ளடக்கும் வகையில் திருத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஆண்டின் போது 301,762 புதிய நீர் இணைப்புக்களை வழங்குவதற்கு தொடக்கத்தில் திட்டமிடப்பட்டு பின்னர் அது 215,000 இணைப்புக்கள் வரை குறைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் இறுதியில் சபை வழங்கிய உள்ளபடியான நீர் இணைப்புக்களின் எண்ணிக்கை 192,087 மாத்திரமாகும். கடந்த ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரை புதிய நீர் இணைப்புக்களின் எண்ணிக்கையின் அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் சபையின் மானியிடப்பட்ட விற்பனை வருமானம் 1 சதவீதம் ஆன சிறிய சதவீதத்தினால் மாத்திரம் அதிகரித்திருந்தது. மேலும் மீளாய்வாண்டில் குழாய் கழிவு நீர் உள்ளடக்கமானது மொத்த சனத்தொகையில் 2.1 சதவீதம் வரை அதிகரிப்பதற்கு எதிர்பார்த்திருந்தும் பெரிய அளவிலான 3 கழிவு நீர் செயற்திட்டங்கள் முடிவடைந்து இன்னும் பெரிய அளவிலான 3 கழிவு நீர் செயற்திட்டங்கள் ஆண்டின் போது அமுல்ப்படுத்தப்பட்டிருந்தும் சபையினால் அடைந்து கொள்ளக் கூடியதாக இருந்த மொத்த கழிவு நீர் உள்ளடக்கம் 2.08 சதவீதம் மாத்திரமாகும். சபையின் மீளாய்வாண்டின் ஒட்டு மொத்த வருமானமற்ற நீர் சதவீதத்தினை 23.09 வரை குறைப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்தும் ஆண்டின் இறுதியில் உள்ளபடியான பெறுபேறு 25.82 சதவீதமாகும். அது முன்னைய ஆண்டினை விட 1.19 சதவீத அதிகரிப்பாகும். கொழும்பு நகரத்தின் வருமானமற்ற நீர் சதவீதம் 34.75 சதவீதமான

மிகவும் அதிக மட்டத்தில் காணப்பட்டதுடன் தெஹிவளை, கண்டி -வடக்கு, கண்டி-தெற்கு, காலி ஆகிய பிரதேசங்களில் 30 சதவீதத்தினை விட அதிக வருமானம் கிடைக்காத நீர் சதவீதம் அறிவிக்கப்பட்டிருந்தது. சபையின் செயலாற்றல் குறிகாட்டியின் இலக்கிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செயல் முன்னேற்றம் சம்பந்தமான விபரம் அட்டவணை 24 இல் காட்டப்பட்டுள்ளது.

		2020	
செயலாற்றல் குறிகாட்டி	அலகு	இலக்கு	அடைந்துகொள்ளப்பட்டது.
பாதுகாப்பான குடிநீர் உள்ளடக்கம்	குடித்தொகையின் %	99.6	95.8
பாதுகாப்பான குழாய் நீர் உள்ளடக்கம்	குடித்தொகையின் %	59.5	55.8
புதிய நீர் வழங்கல் இணைப்பு	எண்ணிக்கை	215,000	192,087
பாதுகாப்பான குழாய் கழிவு நீர் வசதிகள்	குடித்தொகையின் %	2.12	2.08
வருமானம் கிடைக்காத நீர் வழங்கல்			
கொழும்பு நகரம்	குடித்தொகையின் %	32	34.75
நாடு முழுவதும்	குடித்தொகையின் %	23.09	25.82

அட்டவணை இல. 24 – சபையின் செயலாற்றல் குறிகாட்டிகளின் இலக்கிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செயன்முன்னேற்றம்

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையியின் நிதி விளைவுகள்

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மீளாய்வாண்டின் மற்றும் முன்னைய ஆண்டின் நிதி விளைவுகள் மற்றும் நிதி நிலைமைகள் தொடர்பான பொழிப்பு அட்டவணை 25 இல் தரப்படுகின்றது.

	2021 ரூபா மில்லி.	2022 ரூபா மில்லி.
வருமானம்	28,935,.44	27,761.78
விற்பனைக் கிரயம்	(19,162.95)	16,754.65
மொத்த இலாபம்	9,772.5	11,007.13
செயற்பாட்டு இலாபம்	(3,087.15)	(385.11)
வரிக்கு முன்னைய இலாபம்	(2,996.69)	642.78
மொத்த சொத்துக்கள்	785,467.18	699,281.44
உரிமை மூலதனம்	497.70	456.82
நீண்ட கால கடன் நடைமுறையற்றது	277,420.93	198,175.77
நடைமுறை	12,578.84	2,920.57

அட்டவணை 25 - தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நிதி விளைவுகள் மற்றும் நிதி நிலைமை தொடர்பான பொழிப்பு

முன்னைய ஆண்டிற்கான ரூபா 642.78 மில்லியன் வரிக்கு முன்னைய இலாபமானது மீளாய்வாண்டளவில் ரூபா 2,996.69 மில்லியன் நட்டம் வரை அதிக அளவில் வீழ்ச்சியடைந்திருந்தது. மானியிடப்பட்ட விற்பனையில் ஒப்பீட்டு ரீதியான குறைவு, சுத்திகரிக்கப்பட்ட, நீர் தயாரிப்பிற்கு நேரடியாக தொடர்புபடுகின்ற தனிப்பட்ட கிரயம் ஒப்பீட்டு ரீதியாக அதிகரித்துச் செல்லல், ஏனைய தயாரிப்புக் கிரயத்தின் ஒப்பீட்டு ரீதியான அதிகரிப்பு என்பன சபையின் மொத்த இலாப விகிதம் 6 சதவீதத்தால் வீழ்ச்சியடைவதற்கு காரணமாக இருந்தது. இதற்கு மேலதிகமாக நிருவாகச் செலவுகளும் நிதிக் கிரயமும் முறையே 10 சதவீதத்தாலும் 38 சதவீதத்தாலும் அதிகரித்ததன் காரணமாக சபையின் முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முன்னைய இலாபம் மீளாய்வாண்டின் போது வரிக்கு முன்னைய நட்டம் வரை வீழ்ச்சியடைவதற்கு காரணமாக இருந்தது. மேலும் சபையின் திரவத் தன்மை விகிதங்களான நடைமுறை மற்றும் விரைவு விகிதங்களும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 0.45 சதவீதத்தாலும் 0.41 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்திருந்ததுடன் சபையின் மொத்த கடன் பெறுதல்கள் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 19 சதவீதத்தால் அதிகரித்ததன் காரணமாக அதன் டுநஎநசயபந விகிதமும் 53 சதவீதத்திலிருந்து 58 சதவீதம் வரை 5 சதவீத்தினால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரித்திருந்தது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியின் கீழ் கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவத்தை மேம்படுத்தும் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டம்.

இந்த செயற்திட்டத்தின் கீழ் கொழும்பு நகரத்தில் 2012 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் 49 சதவீதமான வருமானம் கிடைக்காத நீர் சதவீததத்தினை 2020 ஆம் ஆண்டளவில் 18 சதவீதம் வரை குறைந்த மட்டத்திற்கு கொண்டு வருதல், கொழும்பு நகரத்தில் 24 மணித்தியாலங்களும் தரமான நீர் வழங்கலினை தொடர்ச்சியாக வழங்குதல் மற்றும் நிறுவன செயற்பாடுகளை வலுப்படுத்துதலும் பிரதான குறிக்கோளாகும். இதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி பங்களிப்பின் கீழ் முறையே செயற்திட்டம் I, II மற்றும் III ஆக பெரிய அளவிலான 3 செயற்திட்டங்கள் முறையே 2013, 2014 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது ஆரம்பிக்கப்பட்டு 2016, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டளவில் பூர்த்தி செய்வதற்கு தொடக்கத்தில் திட்டமிடப்பட்டிருந்தும் அத்திகதிகளில் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்ததனால் முறையே 2021 யூன் 30 மற்றும் 2022 ஒக்தோபர் 22 ஆந் திகதி வரை செயற்திட்ட காலம் நீடிக்கப்பட்டிருந்தது. மேற்கூறிய செயற்திட்டங்களின் கீழ் கொழும்பு நகரத்தை 77 மாவட்ட கணக்கு வலயங்களாகப் பிரித்து முறைமையை புனரமைப்புச் செய்து வருமானம் கிடைக்காத நீர் விகிதத்தினை 18 சதவீதத்திற்கு குறைப்பதற்கு தொடக்கத்தில் திட்டமிடப்பட்டிருந்தும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வருமானம் கிடைக்காத நீர் சதவீதத்தினை 18 சதவீதத்திற்கு குறைத்து ஒப்படைத்திருந்த அந்த மாவட்ட கணக்கு வலயங்களின் எண்ணிக்கை 29 மாத்திரமாகும். அதன் பெறுபேறாக 2021 திசெம்பர் 31 வரையும் கொழும்பு நகரத்தின் வருமானம் பெறாத நீர் விகிதம் 34.75 சதவீதமான மட்டத்தில் காணப்பட்டது. இதன் போது கணக்காய்வில் கணிப்பீடு செய்ததற்கு இணங்க வருமானமற்ற நீர் விகிதத்தினை 1 சதவீதத்தால் குறைக்கக் கூடியதாக இருந்தும் சபையின் வருமானத்தை ரூபா 40.03 மில்லியனால் அதிகரிக்க கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின்

கீழ் முழுமையான பிரதிபலன்களையும் சபையினால் பெற்றுக்கொள்ள முடியாதிருந்த போதிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கடனுக்காக அரசாங்கத்தால் முறையே ரூபா 1,124.29 மில்லியன் வட்டி கட்டண தொகையும் கடன் பணத்தின் குறைந்த பயன்பாட்டின் அடிப்படையில் ரூபா 203.97 மில்லியன் கடப்பாட்டு கட்டணமும் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

அம்பத்தலே முறைமையை புனரமைத்தல் மற்றும் மின் வலுவை சேமித்தல் செயற்திட்டம்

இச்செயற்திட்டத்தின் தொடக்க குறிக்கோளாவது அம்பத்தலே நீர் சுகாதார நிலையத்தின் மாதாந்தம் சராசரியாக செலவு செய்யப்படுகின்ற ரூபா 67 மில்லியனுக்கு அதிகமான மின்வலுக் கிரயத்தினை குறைப்பதற்காக குறைந்த விளைதிறனான பழைய நீர் பம்பியினை அகற்றி அதற்குப் பதிலாக புதிய நீர்ப் பம்பியினை புனரமைப்புச் செய்வதற்கும் 70 ஆண்டுகளும் 100 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட பழைய சிறிய பரிமாற்றுதல் குழாய் முறைமைக்குப் பதிலாக அதிக இயலளவுள்ள குழாயினை அமைப்பதன் மூலம் உராய்வு நட்டத்தை (Friction Cost) குறைவடையச் செய்வதாகும். இதன் செயற்திட்ட நடவடிக்கைகள் 2014 செப்தெம்பர் ஆரம்பிக்கப்பட்டு 2019 யூன் மாதமளவில் 4 ஆண்டுகள் 9 மாதங்களில் பூர்த்தி செய்வதற்கு தொடக்கத்தில் திட்டமிடப்பட்டிருந்தும் அத்திகதியில் பூர்த்தி செய்வதற்கு முடியாமையால் 2023 யூன் வரை இன்னும் 04 ஆண்டுகளால் கால நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது. எனினும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் செயற்திட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்து 7 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் மிகைத்திருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒட்டுமொத்த செயல் முன்னேற்றம் 58.83 சதவீதமான மிகவும் குறைந்த சதவீதத்தினைக் கொண்டிருந்ததுடன் எந்த பிரதான ஒப்பந்தமும் அத்திகதியளவில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க 2023 யூன் வரையான மிகையாகவுள்ள 1 ½ ஆண்டினுள் எஞ்சியுள்ள 43.17 சதவீதமான செயல்முன்னேற்றத்தினை அடைந்து கொள்ள முடியுமா என்பது சந்தேகத்திற்குரியதாகும். எனினும் இந்த பலவீனமான செயலாற்றலின் காரணமாக குறைவாக கடனை பயன்படுத்துவதன் அடிப்படையில் கடனை வழங்கும் நிறுவனத்திற்கு ரூபா 358.71 மில்லியனுக்குச் சமமான ஐக்கிய குடியரசு டொலர் 2.19 மில்லியன் தொகையான கடப்பாட்டுக் கட்டணம் அரசாங்கத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க செயற்திட்டத்தினை திட்டமிட்ட காலத்தில் பூர்த்தி செய்யாமையின் அடிப்படையில் இன்று வரை நாளாந்தம் மேற்கொள்ளப்படுகின்ற உயர்ந்த வலு கிரயத்திற்கு மேலதிகமாக எதிர்காலத்தில் அதிகரிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட மின்வலு கிரயத்தை குறிப்பிடத்தக்க அளவு மட்டத்தில் குறைப்பதற்கு சபைக்கு இருந்த பெறுமதிமிக்க சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் கட்டம் I மற்றும் கட்டம் II

நாட்டின் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் அனுராதபுரம் மாவட்டத்தில் நீர் சார்ந்த வியாதிகள் மற்றும் ஆழமான சிறுநீரக நோய் தீவிரமாக பரவியுள்ள மட்டுப்படுத்தப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குழாய் நீர் வசதிகளும் தரம் வாய்ந்த நீர் பாவனையும் இடம்பெறாது ஆழமற்ற நிலத்தடி நீர் மூலங்களைப் பயன்படுத்துகின்ற பிரதேசங்களுக்கு முன்னுரிமை வழங்கி அப்பிரதேசங்களிலுள்ள மக்களுக்கு சுத்தமான குடிநீரினை வழங்கும் குறிக்கோளில் துரிதமாக

ஆரம்பித்து குறுகிய காலத்திற்குள் பூர்த்திசெய்யும் எதிர்பார்ப்பில் இந்த அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் கட்டம் I மற்றும் கட்டம் II என்பதாக 02 செயற்திட்டங்கள் அனுராதபுரம் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் அதில் அனுராதபுரம் வடக்கு கட்டம் I இன் கீழ் ரம்பாவ மற்றும் மதவாச்சி பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கப்படுவதுடன் அதன் செயற்திட்ட நடவடிக்கைகள் 2013 பெப்ரவரி ஆரம்பிக்கப்பட்டு 2018 பெப்ரவரி மாதமளவில் 05 ஆண்டுகளில் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் அத்திகதியில் பூர்த்தி செய்வதற்கு முடியாமையினால் அதன் காலம் 2022 யூலை 05 ஆந் திகதி வரை கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2022 யூன் 30 ஆந் திகதியளவில் அதன் செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 09 ஆண்டுகள் 04 மாதங்கள் கடந்திருந்தும் ஒட்டுமொத்த பௌதீக செயல்முன்னேற்றம் 97.46 சதவீத மட்டத்தில் இருந்ததுடன் எந்த நிர்மாணமும் முழுமையாக நிர்மாணிக்கப்பட்டு சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கு பலவீனமான செயலாற்றலும் பிரதான குழாய் பதிக்கும் ஒப்பந்தமான Lot-B இல் தற்பொழுது உருவாகியுள்ள தாமதம் அதிக அளவில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. இதற்கு மேலதிகமாக ஹொரவ்பதான, பதவிய கஹடகஸ்துகெலிய, கெபிதிகொல்லாவ ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள மக்களை இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள மேற்கூறிய அனுராதபுரம் வடக்கு கட்டம் II இன் செயற்திட்ட நடவடிக்கைகள் 2017 யூன் மாதம் ஆரம்பிக்கப்பட்டு 2024 யூன் மாதமளவில் 07 ஆண்டுகள் காலப் பகுதியில் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் 2022 யூன் 30 ஆந் திகதி வரையும் 05 ஆண்டுகள் கடந்திருந்தும் அது சம்பந்தமாக எதுவித நிர்மாண ஒப்பந்தங்களும் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க அரசாங்கத்தினால் முன்னுரிமை அடிப்படையில் குறுகிய காலத்தில் நிர்மாணங்களைப் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்ட இச்செயற்திட்டத்திற்கு தொடர்ச்சியாக இடம்பெற்றிருந்த தாமதங்களின் காரணமாக அதனை ஆரம்பிப்பதன் மூலம் அரசாங்கமும் பொது மக்களும் எதிர்பார்த்த குறிக்கோள்கள் காலத்திற்குப் பொருத்தமாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பது மேலும் அவதானிக்கப்பட்டது.

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவத்தினை மேம்படுத்தும் முதலீட்டு நிகழ்ச்சிதிட்ட செயற்திட்டம் II

- மேற்கூறிய செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 07 ஆண்டுகள் கடந்திருந்தும் பாமன்கடை பிராந்திய பொறியியலாளர் அலுவலகத்தினை நிர்மாணிப்பதற்கு பொருத்தமான ஒரு காணியைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாமையின் காரணமாக இன்றுவரை ஒப்பந்தம் வழங்கப்பட்டிருக்கவில்லை. எனினும் அதற்காக காணியினைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறையானது பூர்த்தி செய்யப்படாதிருந்தும் கட்டிடக் கலை கொள்கைத் திட்டம் மற்றும் நிர்மாணங்கள் முதலியனவாக 03 சந்தர்ப்பங்களின் போது 03 ஆலோசனை சேவை ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. பின்னர் காணியின் அளவினையும் கட்டிடத்தின் விடயப் பரப்பினையும் மாற்றுதலினை உள்ளடக்கி காணியினை பொறுப்பேற்கும் நடைமுறை தாமதமடைந்ததன் அடிப்படையில் அந்த ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு ரூபா 28.19 மில்லியனாகும். இதற்கு மேலதிகமாக 2022 ஒக்தோபர் 24 ஆந் திகதி செயற்திட்டத்தின் கடன்

உடன்படிக்கை முடிவடைந்ததனால் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் புதிய நிர்மாணங்களுக்கான அங்கீகாரம் வழங்கப்படாமையின் காரணமாக மேற்கூறிய நிர்மாணங்கள் இடம்பெற்றதா என்பது சந்தேகத்திற்குரியதாகும். அதற்கிணங்க 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆலோசனை சேவைக் கட்டணமாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 28.19 மில்லியனை உள்ளடக்கி காணியினைப் பெறுப்பேற்கும் கட்டணமாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1.45 மில்லியன் செலவானது செயற்திட்டத்திற்கு ஒரு சிக்கனமற்ற செலவாக இருந்தது.

- 2018 ஒக்தோபர் 16 ஆந் திகதி ரூபா 54.26 மில்லியன் கிரயத்தில் இணைய தள உள்ளீடுகள் மற்றும் பயிற்சிகளுக்காக புஜளு மென்பொருள் அபிவிருத்தி செய்யப்பட்டு வழங்குதல் மற்றும் ஸ்தாபிப்பதற்காக ஒரு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதனை ஒரு ஆண்டிற்குள் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தினால் தலைமை அலுவலகம் மற்றும் 40 பிராந்திய அலுவலகங்களின் விபரமான மற்றும் நிறுவன ரீதியான GIS முறைமையை ஸ்தாபிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் கீழ் தொடக்க விடயப் பரப்பு முழுமையாக இருந்தும் தலைமை அலுவலகத்தினால் தொடக்க விடயப்பரப்பில் மாற்றங்கள் செய்ததனால் ஒப்பந்தத்தின் கீழுள்ள முறைமையை புதுப்பித்தலானது இன்றுவரை முழுமைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக இந்த ஒப்பந்தத்தின் நிபந்தனையின் பிரகாரம் இரண்டாம் ஆண்டிலிருந்து உரிய கம்பனிக்கு பராமரிப்புச் செய்வதற்கு ஐக்கிய அமெரிக்க குடியரசு டொலர் 21,600 தொகையினை ஒவ்வொரு ஆண்டிலும் செலுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதனால் இவ்வாறான பாரிய அளவிலான பராமரிப்புக் கட்டணத்தை சபையினால் செலுத்த முடியுமா என்பது கணக்கக்காய்வில் ஐயத்திற்குரியதாகும்.

கண்டி நகரத்தின் கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்டம்

கண்டி நகர கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்டம் 2010 பெப்ரவரி 03 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2017 செப்தெம்பர் மாதமளவில் பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டது. ஒப்பந்தக்காரர்களின் பலவீனமான செயலாற்றல், திட்டத்தினை அங்கீகரிப்பதில் தாமதம் என்பவற்றின் காரணமாக மீண்டும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. கொலோபல் நிறுவனத்திற்கு 2013 நவம்பர் மாதம் வழங்கப்பட்ட பிரதான கழிவு நீர் வலையமைப்பினை திட்டமிடுதல் மற்றும் நிர்மாணித்தல் ஒப்பந்தம் 2018 ஒக்தோபர் மாதமளவில் பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தக்காரரின் பலவீனமான செயலாற்றலினால் 2022 மே 31 ஆந் திகதி வரை 03 கால நீடிப்பு சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டிருந்தன. பிடிக் வழிகாட்டிக் கோவையின் 8.4 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் ஒப்பந்தக்காரருக்கு கால நீடிப்பு வழங்கக் கூடியதாக இருந்த போதிலும் அதன் 19.4 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் காலதாமத்திற்காக கொடுப்பனவுகளை வேண்டிக் கொள்ள முடியாது. அவ்வாறு இருக்கையில் பிணக்குகளை இணக்கப்பாடு செய்த தீர்மானத்தின் அடிப்படையில் முறையே மேலதிக திட்டமிடல் கிரயமாக ரூபா 52.12 மில்லியனையும் கால தாமதத்திற்கும் விலை உயர்விற்குமாக ரூபா 1,698.38 மில்லியனையும் ஒப்பந்தக்காரருக்குச்

செலுத்துவதற்கு இணங்கிக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 52.12 மில்லியன் 2022 மார்ச் மாதம் செலுத்தப்பட்டிருந்தது.

ஆனமடுவ நீர் வழங்கல் செயற்திட்டம்

2017 பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட்ட இச்செயற்திட்டத்தை 2020 பெப்ரவரி மாதமளவில் முடிவுறுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் ஒப்பந்தக்காரரின் செயற்றிறனின்மை மற்றும் பலவீனமான செயற்திட்ட முகாமைத்துவத்தினால் 2022 திசெம்பர் வரை காலம் நீடிக்கப்பட்டிருந்தது. பிடிக் வழிகாட்டிக் கோவையின் 19.4 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் கால நீடிப்புச் செய்வதற்காக ஒப்பந்தக்காரருக்கு மேலதிக கிரயத்தினை வேண்ட முடியாதிருந்த போதிலும் ஒப்பந்தக்காரரின் செயற்திறனின்மையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கால நீடிப்பிற்காக முரண்பாட்டுக் கட்டளை 12 இன் மூலம் மேலதிக நிதிக் கட்டணமாக யூரோ 330,183.98 தொகையும் இலங்கை ரூபா 3.01 மில்லியனும் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் ஒப்பந்த உடன்படிக்கையின் 8.5.4 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் செயற்திட்டத்தின் தொடக்கத்திலேயே ஒப்பந்தக்காரரினால் வாகனம் வழங்கப்பட வேண்டிய போதிலும் 2020 செப்தெம்பர் மாதம் அதாவது செயற்திட்டத்தினை பூர்த்தி செய்வதற்கு அண்மித்த காலத்தில் ஒப்பந்தக்காரர் வாகனத்தை வழங்கியிருந்தார். உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் தொடக்கத்திலேயே வாகனங்களை கொள்வனவு செய்யாமையினால் வாகன வாடகையாக ரூபா 14.99 மில்லியன் செயற்திட்ட காலத்தில் முரண்பாட்டுக் கட்டளையின் மூலம் செலவு செய்யப்பட்டிருந்தது.

அனைவருக்கும் நீர் நிகழ்ச்சித் திட்டம்

2025 ஆம் ஆண்டளவில் அனைவருக்கும் சுத்தமான குடிநீரினை வழங்கும் எதிர்பார்ப்பில் ஆரம்பிக்கப்பட்ட இச்செயற்திட்டத்திற்காக 2020 , 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்காக முறையே ரூபா 24,568 மில்லியன் ரூபா 29,568 மில்லியன், ரூபா 17,000 மில்லியன் தொகைகள் பாதீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2021 மற்றும் 2022 மே 31 ஆந் திகதி வரை ரூபா 9,427 மில்லியன் மாத்திரம் செயற்திட்டத்தினை செயற்படுத்துவதற்காக நீர் வழங்கல் சபைக்கு அமைச்சினூடாக கிடைத்திருந்தது. செயற்திட்டத்திற்காகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஒட்டுமொத்த செயற்திட்ட உத்தியோகத்தர்கள் 176 பேர் 02/2020 ஆம் இலக்க 2020 ஒக்தொபர் 26 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் சேர்த்துக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து 2022 யூலை 31 ஆந் திகதி வரை ரூபா 216.7 மில்லியன் சம்பளங்களும் படிகளுமாக சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்காக இறக்குமதி செய்யப்பட்ட DI மற்றும் HDPE குழாய்கள் உள்ளடங்களாக ஏனைய துணைக் கருவிகளை துறைமுகத்திலிருந்து விடுவிப்பதற்கு போதியளவு நிதி ஏற்பாடு வழங்கப்படாது மேற்கொண்ட இறக்குமதிக்காக ரூபா 33.3 மில்லியன் தாமதக் கட்டணமாக 2022 யூன் இறுதியளவில் திறைசேரியின் அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டதுடன் அத்திகதியில் துறைமுகத்திற்கு கிடைத்திருந்த ஆனால் விடுவிப்பதற்கு நிதி ஏற்பாடு போதியதல்லாத இறக்குமதி செய்த 207 கொள்கலன்களுக்காக துறைமுகத்தின் தாமதக் கட்டணமாக அண்ணளவாக ரூபா 813.12 மில்லியன் செலுத்த வேண்டியிருந்தது.

எவ்வாறாயினும் அத்திகதியில் விடுவிக்கப்பட்ட ரூபா 234.37 மில்லியன் தொகையான DI குழாய்களில் ஒரு குழாயேனும் 2022 யூலை மாதம் இறுதி வரை பதிக்கப்பட்டிருக்காததுடன் HDPE குழாய்களில் 40 சதவீதத்திற்கு அண்மித்த அளவானவை எதுவித பதித்தல் நடவடிக்கைகளுக்குமாக பயன்படுத்தப்படாது பிரதேச சபையின் 10 சேவை நிலையங்களின் களஞ்சியங்களில் பயன்படுத்தப்படாது குவித்து வைக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த ஒப்பந்தங்களின் அதிக அளவிலான வேலைகள் 2022 யூலை மாதம் இறுதியளவில் நிறுத்திவைக்கப்பட்டிருந்ததனால் செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்த்த பெறுபேறுகளை 2025 ஆம் ஆண்டின் இறுதியளவில் பெற்றுக்கொள்ளும் இயலுமை சம்பந்தமாக கணக்காய்வின் போது அதிக நிச்சயமின்மை காணப்பட்டது.

சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்கள்

மீளாய்வாண்டின் இறுதியில் சமூக நீர் பெருமிதம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்டிருந்த 275 நீர் செயற்திட்டங்களில் 105 நீர் செயற்திட்டங்களின் செயல்முன்னேற்றம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 50 சதவீதத்தினை விட கீழ் மட்டத்தில் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. அவற்றிற்கு மத்தியில் 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு அந்த ஆண்டிலேயே பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்ட ரூபா 603.15 மில்லியன் கிரயமான 81 செயற்திட்டங்களில் ரூபா 591.96 மில்லியன் கிரயமான 76 நீர் செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் இறுதியளவில் பூர்த்தி செய்யப்படாது காணப்பட்டதுடன் 2019 ஆம் ஆண்டில் காலி மற்றும் குருனாகல் மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டு அந்த ஆண்டிலேயே பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட 05 நீர் வழங்கல் செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் இறுதியளவில் பூர்த்திசெய்யப்படாது காணப்பட்டன. இதற்கு மேலதிகமாக மீளாய்வாண்டில் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த நீரின் தரத்தினை மேம்படுத்துவதற்காக அமுல்ப்படுத்தப்பட்ட ரூபா 101 மில்லியன் கிரயத்தினைக் கொண்ட 21 செயற்திட்டங்களில் ரூபா 72.7 மில்லியன் கிரயமான 16 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. சமூக நீர் பெருமிதம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட 9 செயற்திட்டங்கள் தொடர்பாக நிறைவேற்றப்படாத செயற்பாடுகளுக்காக ரூபா 2.58 மில்லியன் பணம் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது.

நீர் வழங்கல் அமைச்சின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட சீனா இலங்கை

ஒருங்கிணைந்த ஆராய்ச்சி மற்றும் மாதிரி நிலையம்

சீன அரசாங்கத்தின் மானியமாக ரூபா 1,950 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட நீர் தொழில்நுட்பத்திற்கான சீனா இலங்கை ஒருங்கிணைந்த ஆராய்ச்சி மற்றும் மாதிரி நிலையம் 2021 பெப்ரவரி மாதத்தின் போது இலங்கை அரசாங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் கணக்காய்வு திகதியான 2022 சனவரி 10 ஆந் திகததி வரையும் இதன் மூலம் எதிர்பார்த்த பிரதான குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தும் செயற்திட்டம்

- நீர் வழங்கல் அமைச்சின் நேரடி மேற்பார்வையின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்ற இச்செயற்திட்டத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட 07 மாவட்டங்களில் குழாய் நீர் வழங்கல் மற்றும் மேம்படுத்தப்பட்ட சுகாதார சேவைகளுக்காக அணுகுதலினை அதிகரித்தல் மற்றும் தொடர்புபட்ட நிறுவனங்களின் இயலளவினை வலுப்படுத்தலை குறிக்கோளாகக் கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் செயற்திட்டத்தினை நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாமையின் அடிப்படையில் இரண்டு சந்தர்ப்பங்களின் போது 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை இரண்டு கால நீடிப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன. தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நகர, கிராமிய மற்றும் தோட்ட நீர் வழங்கல்கள் மற்றும் சுகாதார வசதிகளை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துகின்ற 19 திட்டங்களின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயல்முன்னேற்றத்தில் 178 நாட்களிலிருந்து 1463 நாட்கள் வரையும், சுகாதார வசதிகளை வழங்குவதற்கான 06 ஒப்பந்தங்களின் செயல் முன்னேற்றத்தில் 197 நாட்களிலிருந்து 505 நாட்கள் வரையுமான தாமதங்கள் காணப்பட்டன. மேலும் பலவீனமான செயலாற்றலுடன் 05 ஒப்பந்தக்காரர்களுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 140.65 மில்லியன் முற்பணங்கள் செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்படாமைக்கு இடமளித்து இன்னும் 02 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தக்காரரின் பலவீனமான செயலாற்றலின் அடிப்படையில் கைவிடப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தின் பொன்நகர் பாரதிபுரம் நீர் திட்டம் 2018 ஒக்தொபர் 20 ஆந் திகதி முடிவுறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தும் அதற்கான மிகுதி வேலைகளுக்காக வழங்கப்பட்ட ஒப்பந்தம் 2022 மார்ச் 31 ஆந் திகதி வரையும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

- 07 மாவட்டங்களில் செயற்திட்ட காலப் பகுதி முழுவதும் 24000 மலசல கூடங்களை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் 1302 மலசல கூடங்களை நிர்மாணிக்கும் வேலை மீளாய்வாண்டின் இறுதி வரையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. விசேட தேவைப்பாடு உள்ளவர்களுக்கான சுகாதார வசதிகளின் 84 அலகுகள் கேகாலை, மொனறாகலை, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் அவ்வாறான 43 அலகுகள் மாத்திரம் கேகாலை, மொனராகலை மாவட்டங்களில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் கிளிநொச்சி மாவட்டத்தின் நிர்மாணங்கள் கைவிடப்பட்டிருந்தன. மேலும் பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் ஆதிவாசிகளுக்காக 566 சுகாதார அலகுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் 154 அலகுகளின் வேலைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

கிராமிய மற்றும் பிராந்திய குடிநீர் வழங்கல் செயற்திட்டங்கள்களை அபிவிருத்தி செய்தல் இராஜாங்க அமைச்சு

- அமைச்சினால் மீளாய்வாண்டின் போது ரூபா 775 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்து அமைச்சின் கீழ் ஒரு செயற்திட்டத்தையும் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் கீழ் நான்கு செயற்திட்டங்களையும் தேசிய நீர்

வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கீழ் மூன்று செயற்திட்டங்களையும் மாவட்ட செயலகங்களினூடாக இரண்டு செயற்திட்டங்களையும் அமுல்ப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தன. அவற்றிற்கு மத்தியில் ரூபா 61.21 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மடுக்கோவில் நீர் வழங்கல் செயற்திட்டத்திற்கும் கிராமிய நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தும் செயற்திட்டத்திற்குரிய 10 செயற்பாடுகள் தொடர்பாக எதுவித பௌதீக செயல்முன்னேற்றமும் அடைந்து கொள்ளப்படவில்லை.

- அமைச்சின் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தினால் அமுல்ப்படுத்தப்பட்ட மழை நீர் தாங்கிகளை நிர்மாணிக்கும் வேலைத்திட்டத்தின் தொடக்க குறிக்கோளாவது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நீர்க்குழாய் முறைமையின் மூலம் நீரினை வழங்குவதற்கு முடியாத கிராமிய மற்றும் கஸ்டப் பிரதேசங்களிலுள்ள மக்களுக்கு பாதுகாப்பான நீரினை வழங்குதலாக இருந்த போதிலும் முறையான நடைமுறையின் அடிப்படையில் நலன்பெறுனர்களைத் தெரிவு செய்யாததன் காரணமாக பிரதிபலன்கள் தேவைப்படுகின்ற நபர்களுக்கு அவை வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதுவும் தாங்கியில் சேருகின்ற நீரினை குடிப்பதற்கு பொருத்தமான நிலைக்கு மாற்றுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதுவும் புத்தளம் மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட மழை நீர் தாங்கிகளின் மாதிரிக்காக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது.

நீர் வளங்கள் சபை

- 2021 யூலை 12 ஆந் திகதி அமைச்சரவையினால் நீர் வளங்கல் சபை அதிகாரச் சட்டத்தினை திருத்தம் செய்வதற்காக பணிப்புரை வழங்கப்பட்டிருந்தும் 2021 ஆம் ஆண்டு இறுதி வரையும் உரிய வரைபினை சட்ட மா அதிபருக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதிகாரச் சட்டத்தினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் அதிகாரச் சட்டத்தினை திருத்தம் செய்யும் குறிக்கோளாக இனங்காணப்பட்ட பிழைகளையும் அதற்குரிய தண்டனைகளையும் விதிக்கும் போது உருவாகின்ற சிக்கல்கள் மற்றும் நிலக்கீழ் நீரினை துஸ்பிரயோகம் செய்தல் மற்றும் மட்டுப்பாடின்றி தோண்டும் சிக்கல் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு சபைக்கு முடியாதிருந்தது.

- 1978 ஆம் ஆண்டிலிருந்து நீர் வளங்கள் சபையின் தலைமை அலுவலகம் செயற்பட்டு வந்த ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள காணிக்காக 2013 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்தம் ரூபா 12.77 மில்லியன் குத்தகைப் பணம் செலுத்தி வருடாந்த குத்தகை அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ளுமாறு திம்பிரகஸ்யாய பிரதேச செயலகம் சபைக்கு தெரியப்படுத்தியிருந்தும் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தினால் 2019 ஆம் ஆண்டின் போது கொழும்பு உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடுக்கப்பட்டிருந்தது. பின்னர் காணியை பயன்படுத்தும் உரிமை தொடர்பாக இணக்கப்பாட்டிற்கு வருமாறு

சட்டமா அதிபரினால் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்திற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தும் சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது சபையினால் 45 ஆண்டுகள் காலமாக சபையின் தலைமை அலுவலகம் செயற்பட்டு வந்த வளவிலிருந்தும் காணியிலிருந்தும் நீங்கி தலைமை அலுவலகம் 2021 யூலை 18 ஆந் திகதியிலிருந்து வாடகைக் கட்டிடத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இதன் மூலம் சபையின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு இடம்பெற்ற தாக்கம் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான டென்சில் கொப்பேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள 40 பேச்சர்ஸ்களைக் கொண்ட காணி 2016 திசெம்பர் 06 ஆந் திகதிய அமப/16/2500/724/099 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 30 ஆண்டுகள் கால எல்லைக்காக நீர் வளங்கள் சபைக்கு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அக்காணிக்காக அரசாங்க பிரதான மதிப்பீட்டாளரினால் வருடாந்தம் ரூபா 2.7 மில்லியன் குத்தகைப் பணம் தீர்மானிக்கப்பட்டிருந்தும் அக்காணிக்காக நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் முறையான உடன்படிக்கை செய்து கொள்ளப்படாது 2016 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்த குத்தகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இக்காணி திட்டமிட்டவாறு பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் இன்றுவரை அக்காணிக்காக செலுத்திய ரூபா 10.75 மில்லியன் குத்தகை வாடகை விளைவற்ற ஒரு செலவாக மாறியிருந்தது.

- மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சினால் 2016 நவம்பர் 24 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த 16/2500/724/099 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைக்காக 2016 திசெம்பர் 06 ஆந் திகதிய அமப/16/2500/724/099 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் கீழ் அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதற்கிணங்க கொழும்பு 07 ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள காணி பணம் அறவிடப்படாது நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைப்பதற்கும் பத்தரமுல்ல டென்சில் கொப்பேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகாரச் சபைவக்குச் சொந்தமான 40 பேச்சர்ஸ் காணியை அபயரளவில் நில வாடகையை அறவீடு செய்யும் அடிப்படையில் 30 ஆண்டுகள் காலத்திற்கு நீர் வளங்கள் சபைக்கு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக நடவடிக்கை எடுக்காது பிரதமமந்திரியின் செயலாளரால் 2021 ஏப்ரல் 29 ஆந் திகதி சமர்ப்பித்திருந்த PM0/2/13/20/bldg இலக்க கடிதத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட வேண்டுதலின் அடிப்படையில் நீர் வளங்கள் சபையின் தலைமை அலுவலகத்தை அந்த இடத்திலிருந்து அகற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அக்காணியையும் கட்டிடத்தையும் பிரதம மந்திரியின் அலுவலகத்திற்கு ஒப்படைக்கும் ஆவணம் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. அக்காணியில் அமைந்துள்ள கட்டிடத்திற்குப் பதிலாக வேறு ஒரு கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக தேவையான நிதி ஏற்பாட்டினை நிதி அமைச்சினால் வழங்குமாறு

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தும் அதற்கிணங்க உரிய நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்காக தேவையான கொள்கை ரீதியான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2022 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டு அதிகாரச் சட்டத்தின் மூலமும் அதற்காக நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருக்கவில்லை. ஹெக்டர் கொப்பேகடுவவில் அமைந்துள்ள தலைமை அலுவலகம் 2021 யூலை மாதம் 19 ஆந் திகதியிலிருந்து ராஜகிரியவில் அமைந்துள்ள ஒரு தனியார் கட்டிடத்தினை மாதாந்தம் ரூபா 950,000 வாடகையின் கீழ் பெற்று அதற்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. அக்கட்டிடத்தில் தலைமை அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்காக ரூபா 671,985 செலவு செய்யப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் அக்கட்டிடத்திற்காக ரூபா 4.75 மில்லியன் வாடகை செலுத்தப்பட்டிருந்தது. உரிய உடன்படிக்கையினை ஒரு ஆண்டு காலத்திற்கு மாத்திரம் செல்லுபடியாகும் வகையில் மேற்கொள்ளப்பட்டிருந்ததன் காரணமாக 2022 யூலை மாதம் 18 ஆந் திகதியின் பின்னர் நீர் வளங்கள் சபையின் தலைமை அலுவலகத்தை வேறு ஒரு இடத்திற்கு கொண்டு செல்லவேண்டி எற்பட்டிருந்தது.

- இலங்கையில் நிலகீழ் நீரில் காணப்படுகின்ற பொருண்மையான மற்றும் தரமான நிலைமையை முகாமைத்துவம் செய்வதற்காக தேவையான தரவு முறைமையை ஸ்தாபிப்பதற்கு நீர் வளங்கள் சபையினால் 2015 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட செயற்திட்ட பிரேரணையை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்காக நிலகீழ் நீர் ஆய்வுத் தகவல் வலையமைப்பினை ஸ்தாபிப்பதற்காக நீர்ப்பாசன அமைச்சினால் 2015 யூலை மாதம் 10 ஆந் திகதிய 05/2015 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2015 யூலை 29 ஆந் திகதிய அமப/15/1087/644/005 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் முதலாவதாக சிறுநீரக நோய் அதிக அளவில் பரவியுள்ள அனுராதபும், பொலனறுவை ஆகிய தெரிவு செய்யப்பட்ட சில மாவட்டங்களில் முன்னோடி செயற்திட்டமாக அமுல்ப்படுத்துவதற்காக நெதர்லாந்திலுள்ள ரோயல் அயிகல் கேம்ப் (Eijkelkamp Earth Sampling Group) நிறுவனத்திற்கு யுரோ 20.63 மில்லியன் செலவின் அடிப்படையில் வழங்குவதற்காக 2017 ஒக்தொபர் 03 ஆந் திகதி உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டிருந்தது.

இச்செயற்திட்டத்தின் கீழ் யூரோ 2.24 மில்லியன் அல்லது ரூபா 393.976 மில்லியன் பெறுமதியான 02 உயர் தொழில்நுட்ப துளையிடும் இயந்திரங்கள் (MS-FT Drilling rig mountel truck) பயன்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டம் தோல்வியடைந்ததன் பின்னர் இந்த 02 இயந்திரங்களையும் நீர் வழங்கல் சபைக்கு ஒப்படைப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இன்று வரை அந்த இயந்திரத்தை பொறுப்பேற்று செயற்படுத்துவதற்குத் தேவையான பயிற்சிகளை வழங்குவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- 1964 இன் 29 ஆம் இலக்க மற்றும் திருத்திய 1999 இன் 42 ஆம் இலக்க நிர் வளங்கல் சபை அதிகாரச் சட்டத்திலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் 2010/23 ஆம்

இலக்க 2017 மார்ச் 16 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் மூலம் வழங்கப்பட்டுள்ள பணிப்புரை அமுல்ப்படுத்தப்படவில்லை.

பணிப்புரை இலக்கம் 01

விவசாய நடவடிக்கைகளுக்காக நிர்மாணிக்கப்படுகின்ற 4 மீட்டர் விட்டம் அல்லது அதற்கு மேற்பட்ட அளவுள்ள விவசாய கிணறுகளுக்காக நீர் வளங்கள் சபையின் எழுத்து மூல அங்கீகாரம் எடுக்கப்பட வேண்டிய போதிலும் இதுவரை அவ்வாறான எந்த விவசாயக் கிணறுக்காகவும் சபையிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவில்லை.

பணிப்புரை இலக்கம் 02

குழாய்க் கிணறுகளை நிர்மாணிப்பதில் ஈடுபட்டுள்ள அனைத்து நிறுவனங்களும் நீர் வளங்கள் சபையில் பதிவு செய்ய வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரை 67 நிறுவனங்கள் மாத்திரம் பதிவு செய்திருந்தன. அவ்வாறே பதிவு செய்யாதிருந்த நிறுவனங்கள் எவை என்பதனை இனங்காண்பதற்காக போதியளவான வேலைத்திட்டம் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேற்கூறிய பதிவு செய்த நிறுவனத்தினால் புதிதாக நிர்மாணிக்கப்படுகின்ற அனைத்து ஆழமான அல்லது ஆழமற்ற குழாய்க் கிணறுகளின் தரவுகளை உள்ளடக்கிய ஒரு அறிக்கையினை ஒவ்வொரு 03 மாதத்திற்கு ஒரு தடவை நீர் வளங்கல் சபைக்கு வழங்கப்பட வேண்டிய போதிலும் இதுவரை பதிவுசெய்த 67 நிறுவனங்களுக்கு மத்தியில் எந்த நிறுவனமும் மேற்கூறிய அறிக்கையினைச் சமர்ப்பித்திருக்கவில்லை.

பணிப்புரை இலக்கம் 03

நீரை போத்தலில் அடைக்கும் கைத்தொழில் மற்றும் குடிபானங்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள எந்தவொரு அரசாங்க அல்லது உள்ளூராட்சி நிறுவனமோ அல்லது அரசசார்பற்ற அமைப்புக்களோ அல்லது நிறுவனமோ அல்லது தனிப்பட்ட நபரோ இயற்கை நீர் ஊற்றுக்கள் அல்லது நிலக்கீழ் நீரினை தனது உற்பத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவாராக இருந்தால் அந்த நீர் மூலங்களின் நீரின் மாதிரியை ஒவ்வொரு 06 மாதத்திற்கு ஒரு தடவை அரசாங்கத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வு கூடத்தில் பரீட்சித்து உரிய பகுப்பாய்வு அறிக்கையினை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரை 40 நிறுவனங்கள் சபையில் பதிவுசெய்திருந்தம் எந்த நிறுவனமும் மேற்கூறிய அறிக்கையினை சபைக்கு வழங்கியிருக்கவில்லை.

வணிக ரீதியான விசாயத்திற்காக அல்லது கைத்தொழிலுக்காக ஒரு மாதத்திற்கு 30,000 லீற்றர் நீரினைப் பெற்றுக்கொள்கின்ற செயற்திட்டத்திற்காக உரிய நீர் மூலம் சம்பந்தமான தர அறிக்கையினை (Perimeter Protection Report) நீர் வளங்கள் சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அதன் ஒழங்குவிதிகளின் பிரகாரம் எந்த ஒரு நிறுவனமும் உரிய தர அறிக்கையினை பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

பணிப்புரை இலக்கம் 05

இயற்கை நீர் ஊற்றுக்களை அல்லது நிலக்கீழ் நீரினைப் பயன்படுத்தி உற்பத்தி மற்றும் சேவை நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற நிறுவனங்கள் அல்லது இடங்களுக்கு ஏற்கனவே தெரியப்படுத்தி அல்லது தெரியப்படுத்தாமல் ஏதாவது ஒரு நாளில் அல்லது நியாயமான காலத்தில் அந்த உற்பத்தி அல்லது சேவை நிலையங்களுக்குச் சென்று பரீட்சிக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டு வரையும் பதிவு செய்திருந்த குடி நீரை போத்தலில் அடைக்கும் 40 தொழிற்சாலைகளில் எந்தவொரு நிலையப்

பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

பணிப்புரைஇலக்கம் 06

மேற்கூறிய ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காத அரசாங்க அல்லது உள்ளூராட்சி நிறுவனங்கள் அல்லது அரச சார்பற்ற அமைப்புக்கள் அல்லது நபர்களுக்கு எதிராக 1964 இன் 29 ஆம் இலக்க மற்றும் திருத்திய 1999 இன் 42 ஆம் இலக்க நீர் வளங்கள் சபை அதிகாரச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

கல்வி

கணக்காய்வு அவதானிப்புக்கள்

- கல்வி அமைச்சு
- நிகழ்ச்சித் திட்டங்களின் உற்பத்தித் திறனை மதிப்பாய்வு மேற்கொள்ளாமை
- வெளிநாட்டுக் கடன் மற்றும் உதவி செயற்திட்டங்கள்
- யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழு
- பெறுகைகள்
- பாடப் புத்தகங்கள் அச்சிடல்
- சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்
- குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

கல்வி

அறிவை அறிப்படையாகக் கொண்ட சமூக பொருளாதாரத்தை நோக்கி இலங்கை மக்களை உயர்த்துவதற்காக நிலைபேறான கல்வி மூலோபாயத்தின் மூலம் சிறுவர் நட்புக் கல்வி புதிய உற்பத்திகளை அடிப்படையாகக் கொண்ட அறிவு மற்றும் சிறந்த உயர் கல்வி முறையொன்றுக்கு தேவையான இடவசதிகளை எதிர்கால சந்ததிக்கு திறந்து கொடுக்கும் நோக்கத்துடன் பின்வரும் கருமங்கள் மற்றும் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டிக் காணப்பட்டது.

- "சௌபாக்கியத்தின் தொலைநோக்கு" கொள்கை வெளியீட்டிற்கு இணங்க மற்றும் அரசினால் செயற்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ள ஏனைய தேசிய கொள்கைகள் மீது தங்கி "அறிவு நிறைந்த சமூகமொன்றினை" உருவாக்குவதற்கு உரிய இராஜாங்க அமைச்சுக்காக கொள்கை சார் வழிகாட்டல் மேற்கொள்ளல், குறிப்பிட்ட சட்டங்கள் சட்ட திட்டங்களுக்கு மற்றும் கட்டளைகளுக்கு இணங்க கல்வி விடயத்துக்குரிய கொள்கைகள் தயாரித்தல், தேசிய பாதீடு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் காணப்படும் செயற்திட்டங்களை செயற்படுத்துதல், அமைச்சின் கீழ் காணப்படும் திணைக்களங்கள் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் கருமங்கள் மற்றும் அதற்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்திட்டங்களை செயற்படுத்துதல், தொடர் நடவடிக்கை எடுத்தல் மற்றும் மதிப்பாய்வு.
- கல்வி மறுசீரமைப்புக்காக ஜனாதிபதி செயலணியினால் திட்டமிடப்படும் தேசிய கல்விக் கொள்கையை செயற்படுத்துவதற்கு தேவையான தாபனம் சார் கட்டமைப்பை நிறுவுதல்.
- முன்பள்ளி கல்வி முதல் உயர்கல்வியை பூர்த்தி செய்யும் வரையும் தெளிவான வழிகாட்டல் திட்டம் ஒன்று தயாரிப்பதற்காக கொள்கைசார் வழிகாட்டல் வழங்குதல்.
- அனைத்து பிள்ளைகளும் கல்விக்காக நுழையக் கூடிய உரிமையுடன் பண்புசார் கல்வி முறைமை ஒன்றினை நிறுவுவதற்கு தேவையான விரிவான மறுசீரமைப்பொன்றினை ஏற்படுத்துவதற்காக கொள்கைசார் சட்டகம் ஒன்று நிறுவுதல்.
- பாடசலை ஆசிரியர்களின் நிர்வாக சிக்கல்களை உடனடியாக தீர்ப்பதற்காக தற்போது காணப்படும் உரிய சுற்றறிக்கை ஏற்பாடுகள், விதிகள், பிரமாணங்களை மீளாய்வு செய்து நாளதுவரை ஆக்கல் மற்றும் தற்போது காணப்படும் நிறுவனம் சார் கட்டமைப்பினை வினைத் திறனுடன் செயற்படுத்துவதற்காக விஷேட மேற்பார்வை அலகு ஒன்று ஊடாக செயற்படுதல்.
- பாடசாலை தேவைப்பாடுகள் தொடர்பாக மீண்டும் கணிப்பீடு ஒன்று மேற்கொண்டு அதன் படி பாடசாலை முறைமையை மீள் திட்டமிடல்.
- ஆசிரியர்கள் தேவைப்பாடுகளின் படி நிலைப்படுத்துவதற்கு கொள்கைசார் தீர்வொன்றினை வழங்குதல்.

- பாடத்தின் வெளிச் செயற்பாடுளை பாடசாலையுள் பிரபலமாக்குவதற்காக விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சுடன் இணைந்து நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்துதல்.

- பல்கலைக் கழக அனுமதிக்காக எடுக்கும் நேரத்தை குறைப்பதற்காக நடைமுறை ஒன்று தயாரித்தல்.

- பல்கலை கழகத்தில் மற்றும் விடுதிகளின் வசதிகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கை எடுத்தல்.

- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் சந்தையை இலக்காகக் கொண்டு பட்டதாரிகளை உருவாக்குவதற்காக ஒட்டுமொத்த கல்வி மறுசீரமைப்பு கொள்கையுள் பாடவிதானங்களை திருத்தியமைத்தல்.

- பல்கலைக் கழகங்களுக்காக தகவல் தொழில்நுட்ப வசதிகள் வழங்குதல்.

- மஹபொல மற்றும் மாணவர் உதவிக்காக முறையான செய்முறை ஒன்றின் கீழ் தெரிவு செய்தல் மற்றும் அதன் வசதிகளை விசாலமாக்குதல்.

- சமுத்திர பல்கலைக் கழகம் மற்றும் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகத்தை விசாலமாக்குவதற்காக நடவடிக்கை எடுத்தல்.

- அனைத்து அரச பல்கலைக் கழகங்களையும் உலக தரப்படுத்தில் உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்வதற்காக நடவடிக்கை எடுத்தல்.

- பல்கலைக் கழக கல்வியில் ஆய்வுகள் மற்றும் புதிய கண்டுபிடிப்புக்களை ஊக்குவிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்துதல்.

- பகிடிவதை கலாச்சாரத்தை அனைத்து பல்கலை கழகங்களிலிருந்தும் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிலிருந்தும் அகற்றுவதற்காக நடவடிக்கை எடுத்தல்.

- நட்புக் கல்வி பல்கலைக் கழகங்களில் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுத்தல்.

2021 ஆண்டின் போது மேற்கூறிய பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக கல்வியமைச்சு மற்றும் 02 திணைக்களங்கள், 02 இராஜாங்க அமைச்சுக்களுக்கு கூட்டுத்தொகை ரூபா 81,163 மில்லியனிற்கான தேறிய ஏற்பாடுகள் பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதியளவில் அவற்றில் ரூபா 73,063 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் வரைபடம் 39 இல் காண்பிக்கப்படுகின்றன.



	கல்வி அமைச்சு	பரீட்சைகள் திணைக்களம்	கல்வி வெளியீட்டுத் திணைக்களம்	அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் பிக்குமார் கல்வி இராஜாங்க அமைச்சு	கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக் கல்வி மேம்பாட்டு இராஜ...	மொத்தம்
தேறிய நிதி ஏற்பாடு ரூபா மில்லியன	67227	5472	289	4931	3244	81163
செலவினம் ரூபா மில்லியன்	61663	3822	136	4949	2493	73063
சேமிப்பு ரூபா மில்லியன்	5564	1650	153	-18	751	8100

உருவப் படம் 39:- மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினம் ரூபா மில்லியன

மூலாதாரம் - 2021 வருடாந்த நிதிக்கூற்றுக்கள்

கல்வியமைச்சு, 02 இராஜாங்க அமைச்சுக்கள் 02 திணைக்களங்கள் மற்றும் 02 நியதிச் சட்ட நிறுவனங்களினால் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்ட கருமங்கள் மற்றும் பணிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட பொருண்மையான மற்றும் முக்கியமான கணக்காய்வு அதவானிப்புக்களை பொழிப்பாக கீழே காண்பிக்கப்படுகின்றது.

கல்வி அமைச்சு

- 1961 இன் 08 ஆம் இலக்க உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரிகள் (மேலதிக ஏற்பாடு) சட்டத்தின் 25 ஆவது பிரிவின் பிரகாரம் 5 இற்கும் 14 இடைப்பட்ட வயது எல்லையுள் காணப்படும் பிள்ளைகளுக்காக கல்வி வழங்குவதற்கு தனியார் பாடசாலைகள் ஆரம்பிக்கக் கூடாது என இருந்த போதிலும், கல்வி அமைச்சின் தலையீடின்றி வியாபார நிறுவனங்கள் என தனியார் பாடசாலைக்கு மேலதிகமாக 391 சர்வதேச பாடசாலைகள் மற்றம் மதப் பாடசாலைகள் என 317 மத்ரஸா பாடசாலைகள் நடாத்தப்பட்டு வந்திருந்ததுடன், அவை கல்வி அமைச்சின் மேற்பார்வைக்கு ஆளாகியிருக்கவில்லை.

- கல்வியமைச்சின் பணிப்பொறுப்பின் படி உலக போட்டித் தன்மைக்கு தன்னம்பிக்கையுடன் மற்றும் வெற்றிகரத் தன்மை தொடர்பாக நம்பிக்கையுடன் நுழைவதற்கு இயலுமை ஏற்படுத்தக்கூடிய தேசிய கல்வி முறையொன்றினை வடிவமைக்கும் கருமத்திற்காக 1991 இன் 19 ஆம் இலக்க தேசிய கல்வி ஆணைக்குழு சட்டத்தின் ஏற்பாடுகளின் படி தேசிய கல்வி ஆணைகுழுவினால் 1992, 2003, 2016, 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் பரிந்துரைகள் சமர்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2021 ஆண்டு இறுதியளவிலும்

நிச்சயிக்கப்பட்ட மற்றும் நிரந்தர தேசிய கொள்கையொன்று தயாரித்திருக்கவில்லை.

- கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் கீழ் 2021 ஆண்டின் போது 229 நாட்கள் பாடசாலை நடாத்த தீர்மானித்திருந்த போதிலும் மேல் மாகாணத்தில் 102 நாட்களும் மற்றும் ஏனைய மாகாணங்களில் 143 நாட்களும் பாடசாலைகள் நடாத்தப்பட்டிருந்துடன், 2022 ஏப்ரல் 08 திகதி வரை பாடசாலை ஆண்டு நீடிக்கப்பட்டிருந்தது. பிள்ளைகளுக்கு ஏற்பட்டிருந்த கற்றுக் கொள்ளலில் ஏற்பட்ட நட்டத்தின் மதிப்பீடு செய்திருக்காததுடன், இழந்திருந்த பாடசாலை நாட்களின் பாடப் பகுதியை அணவல் மேவகை செய்வதற்காக தொலைக் கல்வி கற்பித்தல் செயல்முறைக்கு தொடர்புபட்ட போதிலும், அலைவரிசைச் சிக்கல்கள் மற்றும் தேவையான தொழில்நுட்ப வசதிகள் காணப்படாமை, மாணவர்களுக்கு நிகழ்வு நிலையில் அவற்றுடன் தொடர்புகொள்ள முடியாமை, பெற்றோரின் பலவீன பொருளாதார நிலைமை காரணமாக நிகழ்வு நிலையுடன் கல்விக்கு தொடர்புகொள்வதில் வசதியீனங்கள் ஏற்படல், அநேக ஆசிரியர்களுக்கு தொலைக் கல்வி தொடர்பாக குறைந்த அறிவு காணப்படல் ஆகிய சிக்கல்கள் காணப்பட்டமையால் இந்த முறையினால் வெற்றிகரமான பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்கு முடியாமல் இருந்தது. கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் மாணவர்களின் கற்றல் சந்தர்ப்பத்தை இழந்ததை மேவகை செய்வதற்காக 2021 மற்றும் 2022 ஆண்டுகளின் போது செயற்படுத்துவதற்காக தேசிய கல்வி நிறுவனத்தினால் 100 நாட்களுக்கான துரித வேலைத் திட்டமொன்று தயாரித்து செயற்படுத்துவதற்காக திட்டமிட்டிருந்த போதிலும் அந்த நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துவதற்காக கல்வி அமைச்சு இயலாமல் இருந்தது.

- தெரிவுப் பரிசோதனையின் படி நாட்டில் 26 பாடசாலைக்கு சொந்தமாக 49 ஏக்கர் 02 ரூட் 33 பர்சஸ் உம், 03 ஆசிரிய கல்லூரிகளுக்கு சொந்தமான 07 ஏக்கர் 01 ரூட் 25 பர்சஸ்களும், கல்விக் கல்லூரிகளுக்கு சொந்தமாக 91 ஏக்கர் 24 பர்சஸ் கல்வி அமைச்சின் அங்கீகாரம் இன்றி வெளித்தரப்பினர்களினால் அங்கீகாரமின்றி அனுபவித்து வந்த போதிலும் அது தொடர்பாக அமைச்சின் தொடர் நடவடிக்கை அலுவல்கள் பலவீன நிலமையில் காணப்பட்டது.

- பண்பும் ஞானமும் நிறைந்த மாணவப் பரம்பரை ஒன்றினை கட்டியெழுப்புவதற்கான மத்திய பூரணத்துவமுடைய பாடசாலை முறைமையொன்றினை மீள்வடிவமைப்பதற்காக "அண்மையில் பாடசாலை சிறந்த பாடசாலை" தேசிய நிகழ்ச்சித் திட்டம் 2020 திசெம்பர் 31 திகதி முடிவடைந்த போதிலும், ரூபா 7.3 மில்லியன் தொகை செலவிடப்பட்டு 03 மாகாணங்களில் 05 அதிபர் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள், 09 ஆசிரிய வாசஸ்தளங்கள் 2022 ஜுலை 05 திகதி வரையும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன், பௌதீக முன்னேற்றம் காணப்படாத போதிலும், ரூபா 6.52 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த அதிபர் உத்தியோகபூர்வ வாசஸ்தளம் ஒன்று மற்றும் ஆசிரியர் வாசஸ்தளம் ஒன்றும் காணப்பட்டது. இந்த செயற்திட்டம்

தொடர்பாக 07 மாகாணங்களினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி மீளாய்வாண்டு இறுதியளவில் வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், வேலையை பூர்த்தி செய்வதற்கு முன்னர் மதிப்பீட்டுப் பெறுமதியாகிய ரூபா 2,331 மில்லியனிற்கான 117 செயற்திட்டங்கள் கைவிடப்பட்டிருந்ததுடன், அந்த செயற்திட்டங்களுக்காக 2022 மார்ச் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,851 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் மேலும் ரூபா 1,756 மில்லியன் தொகை செலுத்த வேண்டியிருந்தது.

- இலங்கையின் ஒட்டுமொத்த ஆசிரியர் பதவியணியை பட்டதாரிகளாக மாற்றுதல், தேசிய கல்விக் கல்லூரிகளை பல்கலைக் கழக பீடங்களை நிலைமைக்கு உயர்த்துதல் ஆகிய தலைப்பில் அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்று கல்வி அமைச்சரினால் 2019 திசெம்பர் 02 திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக கொள்கைசார் அங்கீகாரம் 2019 திசெம்பர் 31 திகதிய அமப/19/3353/219/006 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் உட்படுத்தப்பட்டிருந்த திட்டத்தில் குறிப்பிட்டிருந்தவாறு இது தொடர்பாக விஷேடத்துவ குழு ஒன்று நியமனம் செய்து குறிப்பிட்ட திட்டத்தை செயற்படுத்துவதற்காக தேவையான நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கும் கட்டத்தில் காணப்பட்டது.

- ஆசிரியர் பயிலுனர்களுக்கு பயிற்சி வழங்குவதற்காக 19 கல்விக் கல்லூரிகள் நிறுவப்பட்டிருந்ததுடன், அதற்காக வருடாந்தம் ரூபா 2,200 மில்லியனை விட கூடிய தொகையொன்று திரண்ட நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களில் இருந்து கல்வியற் கல்லூரிகளுக்கு பயிலுனர்கள் வருடாந்தம் சேர்க்கப்பட வேண்டியிருந்தது. தேசிய கல்வியல் கல்லூரிகளுக்கு 2018 ஆண்டில் கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சையின் பெறுபேறுகள் மீது பயிலுனர்கள் சேர்க்கப்படல் 2021 ஆண்டிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன், 2019 மற்றும் 2020 ஆண்டுகளுக்கான கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சையின் பெறுபேறுகள் மீது பயிலுனர்கள் சேர்த்துக்கொள்ளல் 2022 மே 22 வரை மேற்கொண்டிருக்கவில்லை.

- 2008 பெப்ரவரி 06 திகதிய 05/2008 இலக்கம் கொண்ட 2018 ஜனவரி 24 திகதிய 05/2008(i) இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் படி அரச நிறுவனம் ஒன்றின் மூலம் சேவைகளை பெற்றுக்கொள்ளும் பொதுமக்களின் தேவைப்பாடுகளை விரைவாகவும், வினைதிறடனும், பண்புசார் விதமாகவும் தொடர்ச்சியாக நிலைவேற்றப்படும் என எழுத்துமூலம் கடப்பாடு ஒன்று ஏற்படும் வகையில் அனைத்து அரச நிறவனங்களும் பிரஜைகள் - வாடிக்கையாளர் சாசனம் ஒன்று நிறுவுதல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், பல்வேறு சேவைகள் வழங்கும் கல்வி அமைச்சினால் சுற்றறிக்கையின் பிரகாரம் பிரஜைகள் - வாடிக்கையாளர் சாசனம் ஒன்று தயாரித்தல் மற்றும் பேணிச் செல்லல் 2021 இறுதி வரை மேற்கொண்டிருக்கவில்லை.

- இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் ஒன்றிற்காக கல்வி அமைச்சின்

ஏற்பாடுகளில் அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் பிக்குக் கல்வி இராஜாங்க அமைச்சுக்கு ரூபா 3.73 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்ததுடன், இந்தத் தொகை குறிப்பிட்ட பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், இந்த பயிற்சி விடயத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக 2021 ஆண்டு இறுதி வரை முடியாமல் இருந்தது.

நிகழ்ச்சித் திட்டங்களின் உற்பத்தித் திறனை மதிப்பாய்வு மேற்கொள்ளாமை

2020 ஆண்டு ஏற்பட்டிருந்த கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை மீது பாடசாலைகள் மூடப்பட்டமையால் கல்வி அலுவல்களில் பாதிப்பு ஏற்பட்ட மாணவர்களுக்கு கல்வி அலுவல்களை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்காக "ஆசிரியர் இல்லம்" கல்வி நிகழ்ச்சித் திட்டம் ஒலிபரப்புவதற்காக 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது முறையே ரூபா 28.6 மில்லியன் மற்றும் ரூபா 198.3 மில்லியன் தொகை என கூட்டுத்தொகை ரூபா 226.9 மில்லியன் தொகை கல்வி மறுசீரமைப்பு, சிறந்த பல்கலைக் கழகங்கள் மற்றும் தொலைக் கல்வி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சினால் தேசிய தொலைக்காட்சிக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் இந்த நிகழ்ச்சித் திட்டங்களின் உற்பத்தித்திறன் தொடர்பாக மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

வெளிநாட்டுக் கடன் மற்றும் உதவி செயற்திட்டங்கள்

- ஹோமாகம வடக்கு பிடிபன தேசிய மட்டத்தின் குறிக்கோள் உள்ளடங்கிய/ மென்பொருள் மற்றும் கணினி உள்ளீடுகளை வடிவமைக்கும் நிலையமொன்று நிறுவுவதற்காக செயற்திட்ட சாத்தியக்கூறு அறிக்கையின் படி திட்டமிடப்பட்டிருந்த போதிலும், பின்னர் 2018 யூன் 13 திகதிய அமப/18/1142/835/005 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் படி குளியாப்பிட்டி நாரங்கலவத்தை காணி அதற்காக பரிந்துரைக்கப்பட்டிருந்தது. மீண்டும் 2020 ஜனவரி 09 திகதி அமப/19/3468/219/016 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் படி ஹோமாகம பிரதேச செயலகப் பிரிவில் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் தற்போது பயன்படுத்தப்படும் 08 ஏக்கர் காணியில் பயன்படுத்தப்படாத பகுதியை பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு செயற்திட்டத்தின் நிர்மாண வேலைக்குரிய திட்டமிடப்பட்ட காணிகள் அடிக்கடி மாற்றப்படுவதனால் செயற்திட்டத்திற்குரிய கடன் உடன்படிக்கை 2019 ஆண்டு கையொப்பமிடப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டம் செயற்திறனுடன் செயற்படுத்த முடியாதிருந்ததுடன், செயற்திட்டக் கால எல்லையும் மிகைத்திருந்தது.

- 2018 யூன் 13 திகதிய அமப/18/1142/835/005 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் படி தென் மாகாணத்திற்கான நில்வளா கல்வியியல் கல்லூரி வளவிலும், கிழக்கு மாகாணத்திற்காக அட்டாளச்சேனை கல்விக் கல்லூரி வளவிலும், 02 மாகாண தகவல் தொழில்நுட்ப கல்வி நிலையங்கள் நிர்மாணிப்பதற்காக அங்கீகாரம் கிடைத்திருந்தது. பின்னர் 2021 ஜுலை 26 திகதிய அமப/21/1324/308/113 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் படி தென் மாகாண தகவல் தொழில்நுட்ப நிலையம் தென் மாகாண சபைக்கு உரித்தான காலி பனாகமுவ அமரசிங்க

பாடசாலை வளவில் நிர்மாணிப்பதற்கும் 2021 செப்தம்பர் 28 திகதிய அமப/21/1655/308/113-1 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீரமானத்தின் படி கிழக்கு மாகாண தகவல் தொழில்நுட்ப நிலையம் நிர்மாணிப்பதற்காக திருகோணமலை மாவட்டத்தில் உள்ளக துறைமுகப் பாதையின் ஆரம்ப வரைபட இலக்கம் 528 இல் துண்டு இலக்கம் 1 காணியை பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன்படி, 2019 ஆண்டின் கடன் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருந்த போதிலும், அடிக்கடி நிலையத்தை ஸ்தாபிப்பதற்காக இடம் மாற்றப்பட்டதனால் செயற்திட்டத்தை தொழிற்படுத்துவதற்கு முடியாமல் இருந்தது. இலக்கம் SRI/31-2573 கொண்ட 2021 நவம்பர் 09 திகதிய கொரியா EXIM வங்கியினால் சமர்ப்பித்திருந்த கடிதத்தின் மூலம் இந்த செயற்திட்ட நிலையங்களை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த இடங்கள் மீண்டும் மீண்டும் மாற்றம் செய்யப்படமாட்டது என சான்றிதழ் ஒன்று கோரியிருந்தது. அந்த சான்றிதழ் சமர்ப்பித்திருக்காததுடன், 2019 – 2021 செயற்திட்ட காலப் பகுதியில் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு முடியாமல் இருந்தது.

- கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சா.த) மற்றும் கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர் தர) வகுப்புக்களில் தொழில்நுட்ப பாடம் கற்பிற்கும் பற்றாக்குறையை குறைத்தல், தொழில்நுட்ப பாடம் கற்கும் மாணவர்களுக்கு ஆசிரிய தொழில்நுட்ப உதவியாளர் என உயர் கல்வி பெறுவதற்கு சந்தர்ப்பமளித்தல், தொழில்நுட்ப பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு தனது தொழிலின் அபிவிருத்திக்காக தொழில்நுட்ப விடயத்திற்குரிய ஆசிரியர் பயிற்சி வழங்குதல் ஆகிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தொழில்நுட்ப பாடத்திற்கான தேசிய கல்வியல் கல்லூரியொன்று நிர்மாணிப்பதற்காக 2017 ஜனவரி 18 திகதிய அமப/16/2647/742/036-1 இலக்கம் கொண்ட அமைச்சரவை பத்திரத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2017 ஏப்ரல் 19 திகதிய அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்த 2017 இன் 93 ஆம் இலக்க கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தலின் மூலம் குறிப்பிட்ட நிர்மாண வேலைக்காக குளியாப்பிட்டி மேற்கு பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த நாரங்கொல்ல பகுதியின் காணியொன்றின் அனுபவிக்கும் உரிமையை கல்விச் செயலாளருக்கு உரித்தாக்கப்பட்டிருந்தது. கொரியா அரசாங்கத்தின் உதவியின் கீழ் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த இந்த செயற்திட்டத்திற்கு 2019 மற்றும் 2020 ஆண்டுகளில் அடிக்கல் நடல் உட்பட செலவுகளுக்காக "அண்மையில் பாடசாலை சிறந்த பாடசாலை" செயற்திட்டத்தின் மூலம் ரூபா 15.3 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் வேலைகள் தற்போது நிறுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் வேலைகள் தாமதம் அடைந்த காரணத்தினால் திருத்தப்பட்ட பணித்தாளின் படி கொரியா குடியரசுடன் இணைந்த சர்வதேச கொரியன் ஒத்துழைப்பு முகவராண்மை (KOICA) செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகளில் இருந்து அகன்று அதன் பொறுப்பு அமைச்சுக்கு சாட்டப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2022 மே 31 வரை இதன் நிர்மாண வேலைகள் ஆரம்பிப்பதற்காக அமைச்சுக்கு முடியாமல் இருந்தது.

யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழு

- 2005 ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 2008 செப்தம்பர் 24 திகதிய அமப/08/1742/316/086 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் படி இலங்கை யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழு நிறுவப்பட்டிருந்ததுடன், அதனொடு தொடர்புள்ள இடைநேர கருமங்களுக்காக ஏற்பாடு செய்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த சட்ட வரைவு 2008 ஆண்டின் போது சட்டவரைஞர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரையும் சட்டத்தின் அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

- ஆணைக்குழுவின் பதவியணி நியமனம் மற்றும் கொடுப்பனவு சட்டமொன்றின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் சட்டம் அங்கீகரிக்கப்பட்டிருக்காத போதிலும், 2006 ஒக்தோபர் 04 திகதிய அமப/08/1742/316/087 இலக்கம் கொண்ட அமைச்சரவை அங்கீகாரத்தின் மீது ஆணைக்குழுவின் பதவியணி நியமனம் மற்றும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.
  அவ்வாறாயினும் 2016 ஏப்ரல் 27 திகதிய DMS/0039/TEM இலக்கம் கொண்ட முகாமைத்துவ சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் பிரான்ஸில் அமைந்துள்ள யுனெஸ்கோ நிரந்தர பிரதிநிதி அலுவலகத்தின் பெண் கூட்டிணைப்பாளர் பதவியொன்று கல்வியமைச்சின் கீழ் அங்கீகரிக்க முடியாதென அறிவித்திருந்த போதிலும் பிரான்ஸில் பரிஸ் நகரில் அமைந்துள்ள நிரந்தர பிரதிநிதி அலுவலகத்திற்கு பெண் கூட்டிணைப்பாளர் ஒருவர் இணைக்கப்பட்டு அவரின் வேதனமாக 2017 ஆண்டு முதல் 2021 திசெம்பர் 31 திகதி வரை கூட்டுத்தொகை ரூபா 35.65 மில்லியனிற்கான ஏற்பாடொன்று கல்வியமைச்சினால் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

- யுனெஸ்கோ புலமைப் பரிசில் நிதியத்திற்கு சொந்தமான ரூபா 10.26 மில்லியன் தொகை ஒன்று 2015 ஆண்டில் வங்கி நடைமுறைக் கணக்கொன்றில் வைப்புச் செய்யப்பட்டு புலமைப் பரிசில் வழங்குதல் 2017 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. சுமார் இரண்டு வருடங்கள் கழியும் வரை நிதியம் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டதுடன் இந்த புலமை பரிசில் வழங்குதல் 2021 மே மாதம் முதல் நிறுத்தப்பட்டிருந்தது.

பெறுகைகள்

- வினாத்தாள்கள் சிறந்த நேர்த்தியான முறையில் பூர்த்தி செய்யப்பட்டு பெற்றுக்கொள்வதன் மூலம் பரீட்சாத்திகளின் நம்பகத் தன்மையை உயர்த்துவதற்கு மற்றும் இரகசிய தன்மையை உச்ச மட்டத்துடன் பாதுகாக்கும் நோக்கத்துடன் பரீட்சைத் திணைக்களத்தினால் 2018 ஆண்டின் போது ரூபா 546 மில்லியன் செலவிடப்பட்டு Wide web digital printing அச்சு இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. 2022 ஆண்டில் நடாத்தப்பட்ட 2021 ஆண்டிற்கான கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உ/த) பரீட்சைக்காக 4,898,000 வினாத்தாள் பிரதிகள் அச்சிடப்பட்டிருந்த போதிலும், இந்த அச்சு இயந்திரத்தின் மூலம் 509,000 பிரதிகள் மாத்திரம் அச்சிடப்பட்டிருந்தது. அது ஒட்டுமொத்த வினாப்பத்திரங்களில் 10 சதவீதம் ஆகும். 2022 ஆண்டில்

நடாத்தப்பட்ட 2021 ஆண்டிற்கான கல்விப் பொதுத் தாரதரப்பத்திர (சா/த) பரீட்சைக்காக 7,845,825 வினாப்பத்திர பிரதிகள் அச்சிடப்பட்டிருந்ததுடன், இந்த அச்சு இயந்திரத்தின் மூலம் 46,125 பிரதிகள் மாத்திரம் அச்சிடப்பட்டிருந்தது. அது ஒட்டுமொத்த வினாப்பத்திரங்களின் 0.58 சதவீதமான குறைந்த எண்ணிக்கையை கொண்டிருந்தது. மேலும், இந்த இயந்திரத்தற்காக ரூபா 8.4 மில்லியன் செலவிடப்பட்டு 2018 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த இயந்திரத்தின் Wrapping Solution பகுதி பயன்படுத்தப்படாமல் கொள்வனவு செய்த நாள் முதல் விளைவற்றுக் காணப்பட்டது.

- 2011 ஆண்டில் கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சைப் பெறுபேறு தொடர்பான சிக்கல்களை விசாரணை செய்வதற்காக நியமனம் செய்யப்பட்டிருந்த அறிஞர் குழுவின் முன்மொழிவின் படி பாடசாலை பரீட்சைகள் மற்றும் நிறுவன பரிட்சைகள் நடாத்துதல், மதிப்பாய்வு அலுவல்களுக்காக பாடசாலைகளை மூடுவதைக் குறைத்தல், விடைத்தாள் சேகரிக்கும் நிலையமொன்றென பயன்படுத்துவதற்கு மற்றும் விடைத்தாள் குழு செய்யும் கருமங்கள் பாதுகாப்புடன் மேற்கொள்வதற்கு பரீட்சை திணைக்களத்தினால் பயன்படுத்துவதற்காக 2017 ஆண்டின் போது நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 2019 பெப்ரவரி 02 திகதி பூர்த்தி செய்தவதற்கு திட்டமிடப்பட்டிருந்த ஆறு மாடி பல்கரும கட்டிடம், ரூபா 564 மில்லியன் ஒப்பந்தத் தொகையொன்றுக்காக அமப/13/1030/530/01/15 இலக்கம் கொண்ட மற்றும் 2014 மே 06 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி பொறியியல் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் 2022 ஜூலை 31 திகதி வரை வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. நிர்மாண வேலைகளுக்காக 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பொறியியல் கருமங்களுக்கான மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு ரூபா 58 மில்லியன் தொகையும் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 200 மில்லியன் தொகையுமாக மொத்தம் ரூபா 258 மில்லியன் தொகையொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

- தேசிய கல்வி நிறுவனத்திற்கு 100 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆசிரிய மாணவர்களுக்கு தங்குமிட வசதிகள் வழங்கும் குறிக்கோளுடன் ரூபா 198 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்தின் கீழ் மீபே தெற்காசிய ஆசிரிய அபிவிருத்தி நிலையத்தில் விடுதிக் கட்டிடம் ஒன்று நிர்மாணிப்பதற்காக 2015 பாதீட்டின் மூலம் திட்டமிடப்பட்டிருந்தது. அதன்படி, 2018 பெப்ரவரி 20 திகதி அந் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 2019 திசெம்பர் 05 திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 திகதி அளவில் ரூபா 151 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், 06 சந்தர்ப்பங்களில் கால நீடிப்பும் பெறப்பட்டிருந்தது. எனினும், 2021 ஜூலை 11 திகதி அளவிலும் நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்வதற்கு முடியாமல் இருந்தது. மேலும், இந்த நிர்மாண வேலை அலுவல்கள் நடாத்திச் செல்வதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகாரம் 2021 திசெம்பர் 31 திகதி வரை பெற்றிருக்கவில்லை.

பாடப் புத்தகங்கள் அச்சிடல்

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் நாட்டில் கல்வி பயிலும் மாணவர்களின்

வருடாந்த புத்தக தேவைப்பாட்டினை சரியான இனங் காணாமல் புத்தகங்கள் அச்சிடல் மற்றும் அதற்குத் தேவையான களஞ்சிய வசதிகள் போதியளவாக காணப்படாமையால் 2018 மற்றும் 2021 ஆண்டுகளின் போது முறையே ரூபா 84 மில்லியன் மற்றும் ரூபா 8.5 மில்லியன் பெறுமதியான புத்தகங்கள் அப்புறப்படுத்தப்பட்டிருந்ததுடன், மீண்டும் 2021 ஆண்டு இறுதியில் ரூபா 9.7 மில்லியன் பெறுமதியான புத்தகங்கள் அப்புறப்படுத்துவதற்காக இனங் காணப்பட்டிருந்தது.

சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

10,000 சதுர அடிகளைக் கொண்ட மாதாந்த வாடகை ரூபா 650,000 இற்கான வாடகை அடிப்படையில் நடாத்தப்பட்டு வந்த நுகேகொடையில் அமைந்துள்ள தேசிய கல்வி ஆணைக்குழு அலுவலக வளவு 2021 ஜுலை 01 திகதி முதல் மாதாந்த வாடகை ரூபா 1.42 மில்லியனிற்கான 4,748 சதுர அடிகளைக் கொண்ட பண்டாரநாயக சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. அதன் காரணமாக கட்டிட வாடகை, மின்சாரம், நீர், பாதுகாப்பு மற்றும் துப்புரவு சேவைகளுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 8.1 மில்லியனிற்கான சராசரி வருடாந்த செலவு ரூபா 17.1 மில்லியன் வரை அதிகரித்திருந்தமையால் ரூபா 9 மில்லியன் மேலதிக செலவொன்றை மேற்கொள்வதற்கு ஆணைக்குழுவிற்கு நேரிட்டிருந்தது.

குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

2021 பாதீட்டு முன்மொழிவின் கீழ் வலயம் சார் தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப கல்வி நிலையத்தின் “e தக்சிலாவ” கற்கும் முகாமைத்துவ முறைமையில் பயன்படுத்துவதற்காக கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக் கழகம் மற்றும் தொலைக் கல்வி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சினால் 09 மாகாணங்களில் அமைந்துள்ள மாகாண கல்வித் திணைக்களங்களின் கீழ் ஸ்டுடியோ நிர்மாணிக்கும் திட்டத்தின் படி உபகரணங்கள் கொள்வனவு செய்திருந்ததுடன், 05 மாகாணங்களில் ஸ்டுடியோக்கள் 2022 மே 31 திகதி வரை நிறுவப்பட்டிருக்காமையால் அந்த மாகாணங்களுக்கு வழங்கியிருந்த ரூபா 15.3 மில்லியனிற்கான உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டது.

உயர் கல்வி

கணக்காய்வு அவதானிப்புக்கள்.

- செயற்திட்டங்களை முடிவுறுத்துவதில் தாமதம்
- அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்
- பட்டபின் படிப்பு கற்கை நெறியை இரத்துச் செய்த உதவித் தொகை பெற்றவர்களுக்குச் செலுத்தப்பட்ட பணத்தை மீள அறவிடுதல்.
- பல்கலைக்கழகங்களில் மாணவர் வெற்றிடங்கள் நிரப்பபடாமை
- ஆராய்ச்சிக் கொடுப்பனவாளர்களின் ஆராய்ச்சி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமை.
- பல்கலைக்கழக நிதியங்களின் குறைப்பயன்பாடு
- குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்
- மதியுரை சேவைகள் வெளிவாரி தரப்பினருக்கு வழங்கப்படுதல்
- பிணைமுறிகள் மீறப்பட்டமை காரணமாக அறவிடப்பட வேண்டிய பணம் அறவிடப்படாமை
- மாணவர்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்த பணத்திற்கான நோக்கங்கள் நிறைவேற்றப்படாமை
- பொருளாதாரமற்ற கொடுக்கல் வாங்கல்

உயர் கல்வி

சக்தி வாய்ந்த பொருளாதாரமொன்றை கட்டியெழுப்புதல் மூலம் நடுத்தர வருமானம் பெறும் நாடாக மாறியுள்ள எமது நாடு, அபிவிருத்தியடைந்த நாடொன்றை நோக்கிய பயணத்தில் உயர் கல்வித் துறையில் சிறப்பான பங்காகக் கொண்டுள்ளது. நாட்டில் நடைமுறையிலுள்ள கல்வி முறைமையின் பிரகாரம் கல்விப் பொதுத் தராதர சான்றிதழ் (உயர் தரம்) பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் உயர் கல்வித் துறையில் பிரவேசிக்கும் பிள்ளைகளை புதிய தொழில்நுட்ப உலகிற்குப் பொருத்தமான புத்தி ஜீவிகளாக சமூகத்திற்கு விடுவிக்கும் பொறுப்பு இப்பிரிவிற்கு கையளிக்கப்பட்டுள்ளது. உயர் கல்விக்கு உள்ளூர் மற்றும் வெளிநாட்டுக் கல்வி வாய்ப்புக்களைத் திறத்தல், அவற்றின் தரத்தை அதிகரிப்பதன் மூலம் பட்டதாரிகளின் வேலைவாய்ப்புக்களை அதிகரித்தல், ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புக்களை அதிகரித்தல் போன்ற துறைகளுக்கு பங்களிப்புச் செய்தல் வரை உயர் கல்விப் பிரிவின் செயற்பாடுகள் விரிவு படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த உயர் கல்வி வாய்ப்புக்களை அடைவதற்கு உயர் கல்வி பிரிவு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் அதன் கீழ் நிறுவப்பட்டுள்ள அரச பல்கலைக்கழங்கள் மற்றும் 39 உயர் கல்வி நிறுவனங்களினால் கீழ் வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டியதாக உள்ளன.

- தேசிய கொள்கைகளுக்கு இணங்க பல்கலைக்கழக கல்வியைத் திட்டமிடல் மற்றும் ஒருங்கிணைத்தல்.

- பல்கலைக்கழக கல்வி மற்றும் அவற்றுக்காக பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள நிதியை உயர் கல்வி நிறுவனங்களுக்கிடையே பகிர்ந்தளித்தல், மற்றும் அவ்வாறான ஒவ்வொரு உயர் கல்வி நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற செலவுகளைக் கட்டுப்படுத்தல்.

- உயர் கல்வி நிறுவனங்களில் கல்வி நியமங்களைப் பேணுதல்.

- உயர் கல்வி நிறுவனங்களின் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தல்.

- ஒவ்வொரு உயர் கல்வி நிறுவனங்களுக்காக மாணவர்களைச் சேர்த்துக் கொள்தல், ஒழுங்குபடுத்தல், மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் மூலம் அல்லது அதன் கீழ் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள விதிக்கப்பட்ட அல்லது ஒதுக்கப்பட்டுள்ள அவ்வாறான அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் நிறைவேற்றுதல்.

மேற்படி பணிகள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக உயர் கல்விப் பிரிவு மற்றும் பல்கலைககழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு முறையே ரூபா 19,322 மில்லியன் மற்றும் ரூபா 62,395 மில்லியன் ஆன ஒதுக்கங்கள் 2021 ஆம் வருடத்தில் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அதில் ரூபா 17,579 மில்லியன் மற்றும் ரூபா 59,038 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரம் 40 ஆம் வரைபடத்தில் காட்டப்படுகின்றது.



	உயர் கல்விப் பிரிவு	பல்கலைககழக மானியங்கள் ஆணைக்குழு	மொத்தம்
நிதியேற்பாடு ரூபா மில்லியன்	19இ322	62இ395	81இ717
செலவினம் ரூபா மில்லியன்	17இ597	59இ038	76இ635
சேமிப்பு ரூபா மில்லியன்	1இ743	3இ357	5இ100

வரைபடம் 40 - பெறப்பட்ட ஒதுக்கங்களின் அளவு உள்ளபடியான செலவு
மூலாதாரம் - 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள்

மேற்படி ஒதுக்கங்களின் பயன்பாடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மாதிரிக் கணக்காய்வின்போது கண்டுபிடிக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்படுகின்றன.

செயற்திட்டங்களை முடிவுறுத்துவதில் தாமதம்

2021 ஏப்ரல் 05 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் தற்போது காணப்படுகின்ற தேசிய சுகாதார நியமங்களை மேம்படுத்துவதற்கான சேவைகளைப் பெற முடியுமான வைத்தியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கத்துடன் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் வைத்திய பீடத்தை நிறுவுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதிலும் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இனங்காணப்பட்ட தனியார் காணி கைப்பற்றபடாத காரணத்தினால் புதிய வைத்திய பீடத்திற்குத் தேவையான கட்டிடத் தொகுதி திட்டமிடல் மற்றும் நிர்மாணம் போன்ற நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக குவைத் நிதியத்துடன் ஒப்பந்தத்தை ஏற்படுத்தும் நடவடிக்கை நிறைவேற்றப்பட முடியாதிருந்ததுடன் மீளாய்வாண்டில் இதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 200 மில்லியன் உள்ளூர் ஒதுக்கங்களும் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

சவூதி அரசுடன் கைச்சாத்திடப்பட்டிருந்த ஒப்பந்தமொன்றின் அடிப்படையில் ரூபா 4,077 மில்லியன் ஆன செயற்திட்டப் பெறுமதிக்கு நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட வயம்ப பல்கலைக்கழகத்தின் நகர அபிவிருத்தி செயற்திட்டம் 2017 ஒக்டோபர் 24 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2020 திசெம்பர் 31 வரை முடிக்கப்பட வேண்டியிருந்த போதிலும்

செயற்திட்டக் காலம் இரண்டு சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டதன் பின்னர் 2024 மே 31 ஆந் திகதி பணிகள் முடிக்கப்பட வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 168.66 மில்லியன் செலவொன்று செலவிடப்பட்டு அடையப்பட்டிருந்த பௌதீக முன்னேற்றம் 29 சதவீதம் மட்டுமே ஆகும்.

றுகுணு பல்கலைக்கழகத்தின் ரூபா 1,180 மில்லியன் ஆன மதிப்பீட்டின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற 12 மாடிகளைக் கொண்ட வைத்திய பீட கட்டிடம் 2017 ஒக்டோபர் 30 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2019 நவம்பர் 23 வரை முடிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் ஒப்பந்த தரப்பினரின் தாமதத்தின் அடிப்படையில் 2019 திசெம்பர் 23 ஆந் திகதி ஒப்பந்த உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு முற்பணப்பிணை பணமாக்கப்படுவதற்கு வங்கிக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 155.3 மில்லியன் ஆன முற்பணத் தொகையை அறவிடுவதற்கு தவறியிருந்தது.

இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்தின் கொழும்பு சுற்றாடலில் ரூபா 252.3 மில்லியன் பெறுமதியான ஐந்து மாடிக் கட்டிடம் நிர்மாணிக்கும் ஒப்பந்தம் வருடத்திற்குள் முடிக்கப்படுவதற்கான நிபந்தனையின் அடிப்படையில் 2019 ஒக்டோபர் 02 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. 2019 நவம்பர் 18 ஆந் திகதி ரூபா 14.51 மில்லியன் ஆன பணிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முற்பணமொன்று ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 வரை நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலமொன்று தனிப்பட்ட ஒப்பந்தக்காரருக்கு அரசின் நிதி நிறுத்தி வைக்கப்படுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்ததுடன் அத்தொகை மீண்டும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 2017 ஆம் வருடத்தில் ரூபா 350,000 ஆன மாதாந்த வாடகைக்கு பெறப்பட்டிருந்த 3,337 சதுர அடியான வோட் மாவத்தையில் அமைந்துள்ள கட்டிடத்தின் குத்தகை ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு 7,000 சதுர அடியான கட்டிடமொன்று ரூபா 950,000 மாதாந்த வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்காக தேசிய வரவு செலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகம் 2020 நவம்பர் 09 இல் அங்கீகாரம் வழங்கியிருந்தார். எனினும், அந்த அங்கீகாரத்திற்கு முரணாக மாதாந்த வாடகை ரூபா 350,000 ஆன வாடகை ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படாமல் புதிய கட்டிடம் வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டில் ரூபா 4,200,000 மேலதிக தொகையொன்று கட்டிட வாடகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படாது பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மட்டும் ஒப்பந்த அடிப்படையில் 39 கல்விசார் அதிகாரிகள் மற்றும் 179 கல்விசாரா அதிகாரிகள் இணைக்கப்பட்டு 2021 ஆம் வருடத்தில் ரூபா 100.6 மில்லியன் தொகையொன்று கொடுப்பனவுகளாகச் செலுத்தப்பட்டிருந்தது.

பட்டபின் படிப்பு கற்கை நெறியை இரத்துச் செய்த உதவித் தொகை பெற்றவர்களுக்குச் செலுத்தப்பட்ட பணத்தை மீள அறவிடுதல்.

2009 ஆம் வருடத்திலிருந்து 2020 ஆம் வருடம் வரையான காலப்பகுதியில் பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டபின் படிப்பிற்காக 416 பயனாளிகளுக்கு ரூபா 725.6 மில்லியன் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதில் 143 பயனாளிகள் பட்டபின் படிப்பை இரத்துச் செய்திருந்தனர் பட்டபின் படிப்பு கற்கை நெறிகளை இரத்துச் செய்திருந்த 14 ஊழியர்களின் பதவி விலகல் காரணமாக அவர்களுக்கு ரூபா 24.04 மில்லியன் மானியங்கள் வழங்கப்பட்டு 05 வருடங்கள் தொடக்கம் 10 வருடங்கள் வரையான காலமொன்று கடந்துவிட்ட போதிலும் மீண்டும் அறவிடப்படுவதற்கு 2021 திசெம்பர் 31 வரை தவறியிருந்தது.

பல்கலைக்கழகங்களில் மாணவர் வெற்றிடங்கள் நிரப்பபடாமை

2016/2017 கல்வியாண்டிலிருந்து 2019/2020 கல்வியாண்டு வரையான காலப்பகுதியில் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் சேர்க்கப்பட்டதன் பின்னர் 192 தொடக்கம் 220 இற்கு இடையிலான வீச்சில் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவ் வெற்றிடங்களுக்காக மீண்டும் மாணவர்கள் சேர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால் 798 மாணவர்களுக்கு பல்கலைக்கழக பிரவேசம் இழக்கப்பட்டிருந்தது.

ஆராய்ச்சிக் கொடுப்பனவாளர்களின் ஆராய்ச்சி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமை.

றுகுணு பல்கலைக்கழகத்தின் கராப்பிட்டிய மருத்துவ பீடத்தில் 17 கல்விப் பிரிவுகளின் 358 கல்விசார் பதவியணி உறுப்பினர்களுக்கு மொத்தம் ரூபா 137.3 மில்லியன் ஆராய்ச்சிக் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்ததுடன் ஆராய்ச்சிக் கொடுப்பனவாளர்களால் ஆராய்ச்சி முகாமைத்துவக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய இடைக்கால ஆராய்ச்சி அறிக்கைகள் கடந்த 04 வருடங்கள் தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

பல்கலைக்கழக நிதியங்களின் குறைப்பயன்பாடு

மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான ரூபா 9.6 மில்லியன் ஆன 22 புலமைப்பரிசில் நிதியங்கள் 03 வருடம் முதல் 11 வருடம் வரையான காலமாக பயன்படுத்தப்படாதிருந்ததடன் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்ட ரூபா 3.4 மில்லியன் கூட்டுத்தொகையான 22 புலமைப் பரிசில் நிதியங்களை பயன்படுத்தி "விருதுகள் மற்றும் புலமைப்பரிசில்" எனும் பெயரில் புதிய கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டு ரூபா 10 மில்லியன் ஆன தொகை மீளாய்வாண்டினுள் பல்கலைக்கழக அபிவிருத்தி நிதியத்திலிருந்து அந்தக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்த போதிலும் அவற்றுள் புலமைப்பரிசில் வழங்குவதற்கான அளவீடுகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

ஸ்ரீயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் **2021** திசெம்பர் **31** இல் காணப்பட்ட 21 ஆராய்ச்சி

நிதியங்கள், 54 வெளியக ஆராய்ச்சி நிதியங்கள் மற்றும் 37 விசேட நிதியங்கள் உம் ஆக 112 நிதியங்களின் மொத்தம் ரூபா. 633 மில்லியன் மீளாய்வாண்டினுள் ஏற்புடைய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

தெஹிவளையில் உள்ள உயர் தொழில்நுட்பவியல் நிறுவகத்தில் நிர்மாணிக்கப்பட்ட தலைமைத்துவ தர அபிவிருத்தி நிலைய கட்டிடத்தில் முடிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 05 மாடிகளில் 03 மாடிகள் மாத்திரம் ரூபா 113.8 மில்லியன் கிரயம் செலவிடப்பட்டு 2017 பெப்ரவரி 21 இல் நிறுவகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் மிகுதி இரண்டு மாடிகளின் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்காததால் அக் கட்டிடம் 2021 திசெம்பர் 31 வரையில் விளைவற்றதாகக் காணப்பட்டது.

மதியுரை சேவைகள் வெளிவாரி தரப்பினருக்கு வழங்கப்படுதல்

மொறட்டுவை பல்கலைக்கழகத்தினால் வெளிவாரி தரப்பினருக்கு வழங்கப்படுகின்ற மதியுரை சேவைகளின் மூலம் ரூபா 292,6 மில்லியன் வருமானமொன்று மீளாய்வாண்டினுள் ஈட்டப்பட்டுள்ள போதிலும் பல்கலைக்கழக வளாகத்தினுள் மேற்கொள்ளப்படும் நிர்மாண செயற்திட்டங்களுக்காக மதியுரை சேவைகள் வெளிவாரி தரப்பினரினரிடம் பெற்றுக் கொண்டமைக்காக மீளாய்வாண்டினுள் ரூபா 7.4 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

பிணைமுறிகள் மீறப்பட்டமை காரணமாக அறவிடப்பட வேண்டிய பணம் அறவிடப்படாமை

மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் கல்வி விடுமுறை பெற்று வெளிநாடுகளுக்குச் சென்ற 36 பேராசிரியாகள் மீண்டும் கடமைக்குச் சமூகமளிக்காத காரணத்தினால் 2021 திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா 55.3 மில்லியன் ஆன பிணைமுறித்தொகையில் 25 வருடங்களுக்கும் மேற்பட்டிருந்த 09 பேராசிரியாகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா 5.8 மில்லியன் ஆகக் காணப்பட்டது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் கல்வி விடுமுறை பெற்று வெளிநாடுகளுக்குச் சென்ற கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணி உத்தியோகத்தர்கள் 41 பேர் மீண்டும் கடமைக்குச் சமூகமளிக்காத காரணத்தினால் 2021 திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டிய ரூபா 117.3 மில்லியன் ஆன பிணைமுறித்தொகை அறவிடுவதற்கு தவறியிருந்தது.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சேவையாற்றுகினற 1989 ஆம் வருடத்திலிருந்து 2021 ஆம் வருடம் வரை பிணை முறி ஒப்பந்தங்களை மீறிய 31 உத்தியோகத்தர்கள் மீண்டும் கடமைக்கு சமூகமளிக்காமையால் அறவிடப்பட வேண்டிய ரூபா 71.4 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்படுவதற்கு தவறியிருந்ததுடன் இதில் 1989 ஆம் வருடத்திலிருந்து 2015 ஆம் வருடம் வரையானன காலப்பகுதியில் பிணை முறி ஒப்பந்தத்தை மீறிய 11 அதிகாரிகளிடமிருந்து ஒப்பந்தம் மீறப்பட்ட திகதியிலிருந்து அறவிட வேண்டிய மொத்தம் ரூபா 19.9 மில்லியன் மற்றும் 09 அதிகாரிகளிடமிருந்து 2017 ஆம் வருடத்திலிருந்து அறவிட வேண்டிய மொத்தம்

ரூபா 9.8 மில்லியன் ஆன தொகையொன்று காணப்பட்டது.

மாணவர்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்த பணத்திற்கான நோக்கங்கள் நிறைவேற்றப்படாமை

2020 ஆம் ஆண்டில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வெளியக பட்டம் மற்றும் விரிவான கற்கைநெறி அலகின் கற்கை-நெறிகள், கருத்தரங்குகள் மற்றும் பரீட்சை நடாத்துவதற்காக மாணவர்களிடம் ரூபா.**115.2** மில்லியன் அறவிடப்பட்ட போதும், அந்தப் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

பொருளாதாரமற்ற கொடுக்கல் வாங்கல்

தெஹிவளை உயர் தொழில்நுட்பவியல் நிறுவகத்தில் மின்சாரச் செலவைக் குறைக்கும் நோக்கத்தில் ரூபா 19.8 மில்லியன் செலவிடப்பட்டு சூரிய சக்தி அமைப்பொன்று நிறுவப்பட்டு, 2019 யூன் 07 ஆந் திகதி பணிகள் முடிவடைந்திருந்த போதிலும், அமைப்பு செயற்படுத்துவதற்குத் தேவையான மொத்த மின்சார இணைப்பை பெற்றுக் கொள்வதற்கு நிறுவனம் தவறியிருந்தமையால் 2019 யூன் தொடக்கம் 2021 திசெம்பர் வரை நிறுவனத்தின் மின்சாரத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 3.4 மில்லியன் ஆன தொகை விளைவற்ற செலவொன்றாக காணப்பட்டது.

திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்கல்வி

கணக்காய்வு அவதானிப்புக்கள்.

- கற்கை நெறிகளுக்கான மாணவர்களின் பங்குபற்றல் குறைவடைந்தமை
- தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் அளவு மற்றும் தரத்தை மேம்படுத்தல்
- சுயதொழில் வாய்ப்பு முன்முயற்சித்திட்டத்தை திறமையாகச் செய்றபடுத்தாமை
- எதிர்பார்த்த வெளியீட்டு மட்டம் அடைந்து கொள்ளப்படாமை
- செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்
- பணம் விடுவிக்கப்பட்ட போதிலும் செயல்முன்னேற்றமொன்று பெறப்படாத செயற்திட்டங்கள்
- விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்
- சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை
- திறன் தரநிலைகள் நாளதுவரையாக்கப்படாமை
- பயிலுனர் ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையின் போதான முறைகேடுகள்
- சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்
- ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்
- நிதியத்தின் குறைப்பயன்பாடு

திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்கல்வி

தூரநோக்கமான திறமையான வேலைப்படையொன்றின் தரமான தொழிற்பயிற்சியை வழங்குவதன் மூலம் உலகளாவிய போக்குகளுக்கு இணக்கமான மனித வள அபிவிருத்திக்காக மையப்பகுதியொன்றை உருவாக்கும் பணிக்கூற்றுடன் அரசாங்கத்தின் தேசிய கொள்கை கட்டமைப்பு, "செழிப்பு மற்றும் சிறப்புமிக்க காட்சிகள்" இற்கு இணங்க 2021-2030 திறன்கள் அபிவிருத்தி தசாப்தத்தை அறிவிப்பதன் மூலம் டிஜிட்டல், எதிர்காலத்திற்கு ஏற்ற குடிமகனை உருவாக்குவதற்காக திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள 18 நிறுவனங்கள் மற்றும் திணைக்களமொன்றினால் பின்வரும் செயற்பாடுகள் ஆற்றப்பட வேண்டியிருந்தன.

- கல்வித் தகைமைகளை பொருட்படுத்தாமல் தொழில்நுட்ப மற்றும் உயர் தொழிற்கல்வியை வழங்குவதற்காக புதிய நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்துதல்.

- தற்போதுள்ள தொழிற்பயிற்சி நிறுவனங்களை முறையாக மதிப்பீடு செய்து பொருத்தமான நிறுவனங்களிற்கு முழுமையாக பௌதீக மற்றும் பாடவிதானங்களை நவீனமயப்படுத்தி "One TVET" எண்ணக்கருவின் கீழ் அந் நிறுவனங்களை வலையமைப்பு செய்து தொழில்நுட்ப பட்டப்படிப்பு வழங்கும் நிறுவனங்களுக்கு மாற்றுதல்.

- இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகத்தை விரிவுபடுத்துதல்

- தற்போதுள்ள தேசிய தொழில் தகைமைகள் (NVQ) மட்டத்தை மட்டம் 7 இலிருந்து 10 வரை அதிகரிக்கச் செய்தல்.

- தொழில் கல்வியை பட்டப்பின் பட்டப்படிப்பு மட்டம் வரை கல்வியை பெறுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குதல்

- தொழிற்கல்வி மற்றும் தொழில்சார் துறையை ஒன்றிணைத்து தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம் மற்றும் ஏனைய மொழி அறிவுகளை உள்ளடக்கி தொழிற்கல்வி பாடவிதானத்தை சீரமைத்தல்

- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்புச் சந்தையை இலக்காகக் கொண்ட தொழிற்கல்வியை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கையை எடுத்தல்.

- தகவல் தொழில்நுட்ப தொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல்.

- புரவர பல்கலைக்கழகத்தை நிறுவுதல்.

- இணையங்கள், புலமை, உயிரினத் தொழில்நுட்பம், ரோபோ தொழில்நுட்பம், Augmented Reality, Cloud Computing , நெனோ தொழில்நுட்பம் மற்றும் முப்பரிமாண அச்சு போன்ற நவீன

தொழில்நுட்ப பாவனையை உச்ச அளவுக்குக் கொண்டுவருவதன் மூலம் இலங்கையை ஒரு புத்தாக்க மையமாக நிறுவுதல்.

- ஆராய்ச்சியாளர்களுக்கு அவர்களது புத்தாக்கங்களை கண்டுபிடித்தல் மற்றும் ஆராய்ச்சிகளின் ஆக்கபூர்வமான உரிமைகளை உறுதிப்படுத்தும் உரிமப்பத்திரங்களை வழங்கும் செயன்முறையை ஒழுங்கமைத்தல்
- சர்வதேச ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் பணியாற்றுவதற்கு ஆராய்ச்சிகளுடன் சம்பந்தப்பட்ட உள்நாட்டு நிறுவனங்களுக்கு வசதிகளை வழங்குதல்
- ஆராய்ச்சிகளுக்கு பங்களிப்பு வழங்கும் தனியார் தொழில்முயற்சியாளர்களுக்கு வரிச் சலுகைகளை வழங்குதல்
- புத்தாக்கங்களைக் கொண்ட உற்பத்திகளுக்கு தேசியக் குறியீடுகளின் கீழ் உற்பத்தி செய்யும் பொருட்டு தேவையான உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களை அறிமுகப்படுத்துதல்
- புத்தாக்கங்கள் மற்றும் ஆராய்ச்சிப் பெறுபேறுகள், முதலீட்டாளர்கள் மற்றும் அவற்றை பயன்படுத்துபவர்களுக்கு சென்றடையும் வகையில் செயற்திறன்மிக்க பொறிமுறையொன்றை ஏற்படுத்துதல்

இந்த அமைச்சின் மேற்கூறப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக 2021 ஆம் ஆண்டின் போது ஒதக்கப்பட்டிருந்த ஒதுக்கங்கள் ரூபா 13,978.1 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் ரூபா 10,534.4 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் ரூபா 3,442.7 மில்லியன் அதாவது 23% பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரம் வரைபடம் 41 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.



	திறன்கள் அபிவிருத்தி, தொழிற் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சு	தொழிற் கல்வி மற்றும் பயிற்சியளித்தல திணைக்களம்	மொத்தம்
நிதியேற்பாடு ரூபா மில்லியன்	11048	2930	13978
செலவினம் ரூபா மில்லியன்	8448	2086	10534
சேமிப்பு ரூபா மில்லியன்	2599	844	3443

வரைபடம் 41 - வழங்கப்பட்ட ஒதுக்கங்களின் அளவு மற்றும் செலவினம்

மூலம் - 2021 வருடாந்த நிதிக்கூற்றுக்கள்

மேற்படி செயற்பாடுகளின் செயலாற்றல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன

கற்கை நெறிகளுக்கான மாணவர்களின் பங்குபற்றல் குறைவடைந்தமை

இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் கடந்த 05 வருட காலப்பகுதியில் முழு நேர கற்கைகளுக்கான கோரிக்கைகள் ஆண்டுதோறும் அதிகரித்திருந்த போதிலும், அதிகரித்து வரும் கோரிக்கைகளுடன் ஒப்பிடும் போது கற்கை நெறிகளுக்கான ஆட்சேர்ப்புக்களை அதிகரிப்பதற்கு முகாமைத்தவத்தினால் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாது 20 சதவீதம் அதாவது வருடாந்தம் 600 ஆன நிலையான மதிப்பில் மாணவர்கள் குறைந்த எண்ணிக்கையொன்று ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. அத்துடன் 3 பிரதேச நிலையங்களிலும் இணைக்கப்படுகின்ற மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு மற்றும் நடாத்தப்படுகின்ற கற்கைநெறிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் கவனம் செலுத்தப்படவில்லை. இதனால் உயர்தரத்தில் பல்கலைக்கழக அனுமதியை இழந்த மாணவர்களுக்கு வேலைக்கான தொழிற்பயிற்சிகளைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் இழக்கப்பட்டிருந்தது.

தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் அளவு மற்றும் தரத்தை மேம்படுத்தல்

- தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் தரத்தை மேம்படுத்துவதற்காக போதியளவு கல்விசார் பதவியணியை இணைத்துக்கொள்ளல் மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்கான விடயப்பரப்பு தொடர்பான போதியளவான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்பதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும் அனுபவம் வாய்ந்த ஆலோசகர்களின் பற்றாக்குறை மற்றும் போதிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் காணப்படாமை போன்ற குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- அமைச்சின் கீழ் காணப்படுகின்ற பயிற்சி நிலையங்களில் சில பயிற்சி கற்கைநெறிகளில் மாணவர்களின் பங்கேற்பு குறைவாக இருப்பதால், மாணவர்களுக்காகச் செலவிடப்படுகின்ற பொது விடயங்கள் மற்றும் விரிவுரைக் கிரயம் கணக்கிடப்பட்ட போது ஒரு மாணவருக்காக பெருமளவு கிரயமொன்று அரசினால் செலவிடப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

சுயதொழில் வாய்ப்பு முன்முயற்சித்திட்டத்தை திறமையாகச் செய்றபடுத்தாமை

- கட்டம் 02 இன் கீழ் சுயதொழில் முன்முயற்சித் திட்டத்தின் (SEPI) கீழ் 2020 ஆம் ஆண்டில் எவ்வித கடன் பத்திரமொன்றும் பதிவு செய்யப்படாத போது, மீளாய்வாண்டில் ரூபா 90 மில்லியன் மதிப்பிடப்பட்ட ஒதுக்கங்கள் வழங்கப்பட்டிருந்தன. முறையான கடன் தொகைத் திட்டமொன்று இல்லாமை மற்றும் இலக்கிடப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படாத காரணத்தினால் ஒதுக்கப்பட்ட தொகையில் ரூபா 80 மில்லியன் அதாவது 89 சதவீதம் வேறு செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. வருடத்தில் மூன்று கடன் பெற்றவர்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டு அவர்களுக்கு ரூபா 05

இலட்சம் வீதம் ரூபா 1.5 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது.

- கடன் ஒப்பந்தப் பிரகாரம் சுயதொழில் வணிகமொன்றை தொடங்குவதற்குத் தேவையான ஆரம்ப உபகரணங்கள் மற்றும் மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதற்கு கடன் வழங்கப்பட முடியுமாயினும் ஏறக்குறைய 38 சதவீதமானோர் வணிக விரிவாக்கத்திற்காக கடன் பெற்றிருந்த போதிலும் 14 சதவீதமான கடன் தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் அமைச்சின் தலையீடு மற்றும் பினதொடரல் நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்படாததால் கடன் முன்மொழிவுத் திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்படாமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

எதிர்பார்த்த வெளியீட்டு மட்டம் அடைந்து கொள்ளப்படாமை

- 2021 சனவரி 04 ஆந் திகதிய 2209/14 ஆம் இலக்க வர்த்தமானியின் சிறப்பு முன்னுரிமைகளின் கீழ் அடையாளம் காணப்பட்டிருந்த 05 நகர்ப்புற பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்கும் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா 100 மில்லியன் ஒதுக்கங்கள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், வருட இறுதியில் ரூபா 6.11 மில்லியன் செலவிடப்பட்டு 03 நகர்ப்புற பல்கலைக்கழகங்கள் மட்டுமே ஆரம்ப நிர்மாணம் மற்றும் காணிக் கையேற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

- தொழிற்கல்விக்கு செல்கின்ற மாணவர்களின் எண்ணிக்கைகளை இரட்டிப்பாக்குவதன் மூலம் இளைஞர் சமூகத்திற்கு தொழிற்பயிற்சி வாய்ப்புக்களை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் தொழிற்பயிற்சியில் ஈடுபடுகின்ற மாணவர்களுக்கு மீளாய்வாண்டில் பாதீட்டு முன்மொழிவின் கீழ் ரூபா 500 மில்லியன் ஒதுக்கங்களில் 55,000 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படுவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் வருட இறுதியில் 26,730 மாணவர்களுக்கு ரூபா 142.4 மில்லியன் மட்டுமே புலமைப்பரிசில்களாக வழங்கப்பட்டிருந்தது.

- மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 756 மில்லியனுக்கு துறைசார் திறன் அபிவிருத்தி நிதியத்தின் மூலம் இலங்கை யேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் மாணவர்களுக்கு 06 மாடித் தங்குமிடமொன்றை நிர்மாணிப்பதற்காக அத்திடிய பிரதேசத்தில் 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2020 ஒக்தோபர் 25 இல் முடிக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவவரை நிர்மாணத்திற்காக ரூபா 559.7 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் அதன் பௌதீக முன்னேற்றம் 75 சதவீதம் மட்டுமே ஆகும்.

செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

- 2017 யூன் 20 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் ரூபா 434 மில்லியன் கிரயமொன்று செலவிடப்பட்டு திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா பல்கலைக்கழக கல்லூரியொன்றை நிறுவுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டில் பயிற்றுவிப்பு சேவைகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் பதவியணி விடுதியொன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 8.9 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் கல்லூரி நிர்மாணிக்கப்படாத

காரணத்தால் நிர்மாணிக்கப்பட்டிருந்த விடுதி 2021 திசெம்பர் 31 வரை விளைவற்றுக் காணப்பட்டது.

- கிளிநொச்சி இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனத்தில் 400 மாணவர்களுக்காக ரூபா 300 மில்லியன் கிரயமொன்றின் கீழ் மாணவர் விடுதியொன்று நிர்மாணிப்பதற்கு 2017 ஆம் ஆண்டில் பெறப்பட்டிருந்த அங்கீகாரத்தின் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டில் மதியுரைச் சேவைக் கட்டணமாக ரூபா 6 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும் 2022 யூன் 30 வரை மாணவர் விடுதி நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாததால் செலவிடப்பட்ட தொகை விளைவற்ற செலவொன்றாக காணப்பட்டது.

- 2017 ஆம் ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரத்தின் படி 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு அவ்வருட இறுதியில் முடிக்கப்படும் நோக்கத்தில் ரூபா 80 மில்லியன் கிரயமான சமூக புத்தாக்கல் ஆய்வகத்தை (Social Innovation Lab) ஆரம்பிப்பதற்கான முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதற்காக அமைச்சின் செயலாளர் மற்றும் இலங்கை ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட (UNDP) பணிப்பாளரினால் உடன்படிக்கை செய்து கையெழுத்திருந்ததுடன் அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக 2017 தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை ரூபா 35 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், அச்செலவுகளுக்கான எவ்வித எழுத்துமூலச் சான்றுகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அதன் பிரகாரம் செலவிடப்பட்ட ரூபா 35 மில்லியன் விளைவற்ற செலவொன்றாக கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

- இலங்கை சாகர பல்கலைக்கழகத்தின் வகுப்பறைகள், விரிவுரை மண்டபம் மற்றும் ஆய்வுகூட வசதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தில் மட்டக்குளி பிரதான அலுவலகத்தில் ஐந்து மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2016 ஆம் ஆண்டில் பாதீட்டு முன்மொழிவின் கீழ் வழங்கப்பட்டிருந்த ரூபா 300 மில்லியன் ஆன மேலதிக ஒதுக்கங்களில் வருடத்தில் மதிப்பீடு தயாரித்தல் மற்றும் மண் பரிசோதனைக்காக ரூபா 6.5 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டு இறுதியில் குறிப்பிட்ட கட்டிட நிர்மாண நடவடிக்கைகள் காணப்படாத காரணத்தினால் 2018 ஆம் ஆண்டிலிருந்து வெளியார் தரப்பினரிடமிருந்து கட்டிடமொன்று வாடகைக்கு எடுக்கப்பட்டு 2021 திசெம்பர் 31 வரை ரூபா 96.4 மில்லியன் கட்டிட வாடகையாகவும் நீர், மின்சாரம், மற்றும் பிற செலவுகளுக்காக ரூபா 13.5 மில்லியனும் உட்பட மொத்தம் ரூபா 109.9 மில்லியன் செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

பணம் விடுவிக்கப்பட்ட போதிலும் செயல்முன்னேற்றமொன்று பெறப்படாத செயற்திட்டங்கள்

- 2016 பெப்ரவரி 11 ஆந் திகதிய அமப/16/0167/716/008 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்தில் தேசிய கல்வி நிலையமொன்று நிறுவுவதற்கு வழங்கப்பட்டிருந்த அங்கீகாரத்தின் அடிப்படையில் காணிப்பகுதியொன்று கையேற்கப்படுவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 280 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2021 ஆம் ஆண்டு இறுதி வரையில் அதன் உரிமை அமைச்சிற்கு கையேற்கப்படுவதற்கு தவறியிருந்தது. மேலும் மீளாய்வாண்டில்

நிலையத்தின் நிர்மாண நடவடிக்கைகள் 24 மாத காலத்திற்குள் முடிக்கப்படுவதற்காக ரூபா 2,819,711,538 மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

- விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் கண்டுபிடிப்புக்களின் மூலம் 2030 ஆம் ஆண்டில் அபிவிருத்தி அமைந்த நாடொன்றாக மாற்றும் நோக்குடன் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் துறைக்காக மீளாய்வாண்டில் அடையாளங் காணப்பட்ட 05 செயற்திட்டங்களுக்காக ரூபா 80 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 7.68 மில்லியன் மட்டுமே செலவிடப்பட்டிருந்ததுடன் அது ஒதுக்கப்பட்டிருந்த தொகையில் 9.6 சதவீதம் ஆகும்.

விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

- தொழில் பயிற்சி அதிகார சபையின் கீழ் இயங்குகின்ற ஒறுகொடவத்த கொரியன் டெக் நிறுவனத்திற்கு கொழும்பு தொழில் பயிற்சி நிலையம் மற்றும் கம்பஹா கைத்தொழில் கல்லூரியினை நிர்மாணித்தல் கொரியா கடன் செயற்திட்டத்திடம் 2019 ஆம் ஆண்டில் பெறப்பட்ட மொத்தம் ரூபா 15.7 மில்லியன் ஆன 157 உபகரணங்கள் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டதுடன் மொத்தம் ரூபா 1.8 மில்லியன் பெறுமதியான 07 உபகரணங்கள் செயழிலந்து காணப்பட்டன. அவ்வாறே இந்த நிறுவனத்திற்கு மருத்துவர் அல்லது தாதி பதவி அங்கீகரிக்கப்பட்டிராத போது ரூபா 3.5 மில்லியன் பெறுமதியுடைய மருத்துவர்களால் பயன்படுத்தப்படும் மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துப் பொருட்கள் ஆகியன வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த மருந்துப் பொருட்கள் பயன்படுத்தப்படாது காலாவதியடைந்திருந்தது.

- புதிய தொழிற்பயிற்சி நிலையத்தை நிர்மாணிக்கும் நோக்கில் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் காணிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு மொத்தம் ரூபா 43.3 மில்லியன் செலுத்தப்பட்டு பெறப்பட்டிருந்த 02 காணிகள் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படாமல் மீளாய்வாண்டின் இறுதி வரை விளைவற்றதாக காணப்பட்டது.

- அஹங்கமவில் காணப்பட்ட ஹோட்டல் பாடசாலை, முன் சாத்தியக்கூறு ஆய்வு இல்லாமல் சுற்றுலா விடுதியொன்றாக மாற்றுவதற்கு தொழிற்பயிற்சி அதிகாரசபையின் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் திறன் துறைகள் அபிவிருத்தி நிதியத்தின் கீழ் ரூபா 124.7 மில்லியன் செலவிடப்பட்டு 2016 மற்றும் 2018 ஆன காலப்பகுதியின் நவீனமயமாக்கல் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 37.6 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும் குறிப்பிட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாது மீளாய்வாண்டின் இறுதிவரை அச்சொத்துக்கள் குறைப்பயன்பாடுடையதாக காணப்பட்டன.

- பொத்துவில் மற்றும் காரைநகர் ஆகிய 02 ஹோட்டல் பாடசாலைகள், சமையல் கற்கைநெறிகளுக்காக மொத்தம் ரூபா 14.9 மில்லியன் பயிற்சி உபகரணங்கள்

கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாத காரணத்தினால் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2021 திசெம்பர் வரையில் அந்த உபகரணங்கள் விளைவற்றதாக காணப்பட்டன.

- பயிலுனர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்கும் நோக்கில் தேசிய பயிற்சி நிலையத்தில் 16 அறைகள், 02 ஹோட்டல் பாடசாலைகள், 02 இருமாடிக் கட்டிடங்களில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 12 அறைகள் கொண்ட தங்குமிடங்கள் ஆரம்பிப்பதற்காக விடுதிப்பொறுப்பாளர் பதவிகள் மற்றும் எனைய உதவிப்பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யப்படாமை மற்றும் தண்ணீர் வசதிகள் வழங்கப்படாமையாலும் அக்கட்டிடம் மற்றும் உபகரணங்கள் 2017 ஆம் ஆண்டிலிருந்து 2021 திசெம்பர் 31 வரை விளைவற்றுக் காணப்பட்டன.

- பயன்படுத்துவதற்கான அடிப்படைத் திட்டங்களைத் தயாரிக்காமல் மற்றும் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் நோக்கத்திற்கு முரணாக அம்பாறை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் மொத்தம் ரூபா 91 மில்லியன் செலவிடப்பட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக வழங்கும் நோக்குடன் நிர்மாணிக்கப்பட்டிருந்த 22 ஹோட்டல் அறைகள் மற்றும் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 6.1 மில்லியன் தளபாட உபகரணங்கள் 2017 ஆம் ஆண்டிலிருந்து 2021 திசெம்பர் 31 வரை விளைவற்றதாகக் காணப்பட்டன.

- கட்டுபெத்த கைத்தொழில் பொறியியல் பயிற்சி நிறுவனத்தின் பயிலுனர்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற மரத்தளபாடங்களை சந்தைப்படுத்தும் நோக்கத்தில் 2014 மற்றும் 2016 ஆன காலப்பகுதியில் ரூபா 18.8 மில்லியன் செலவிடப்பட்டு நிறுவன வளாகத்தில் காட்சியறை ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அக்கட்டிடம் இதுவரை பயன்படுத்தப்படாது விளைவற்றதாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

- ஒறுகொடவத்த மோட்டார் வாகன தொழில்நுட்ப பொறியியல் பயிற்சி நிறுவனத்தின் ரூபா 9.1 மில்லியன் செலவிடப்பட்டு 2019 திசெம்பர் மாதத்தில் நிர்மாணம் முடிக்கப்பட்டிருந்த மாணவர் விடுதி மற்றும் பணியாளர் விடுதியொன்றுக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த உபகரணங்கள் 2021 வருட இறுதி வரை எவ்வித பயன்பாடுகளும் இன்றி விளைவற்றதாகக் காணப்பட்டன.

- The Asia Foundation நிறுவனத்திடமிருந்து 2019 ஒக்தோபர் 29 இல் தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகாரசபைக்கு நன்கொடையாக பெறப்பட்ட ரூபா 1.1 மில்லியன் பெறுமதியான நூலகப் புத்தகங்கள் கணக்காய்வுத் திகதியான 2022 பெப்ரவரி 11 வரை நூலகத்திற்கு வழங்கப்படாது களஞ்சியத்தில் சேமிக்கப்பட்டிருந்தன.

- புதிய தொழில்நுட்பம் தொடர்பான ஆதர் சி கிளார்க் நிறுவனத்தினால் புவியியல் அவதானிப்பு தரவுகளைப் பெறுவதற்கு மற்றும் பரப்புவதற்கும் தேசிய நிலையமொன்று நிறுவுவதற்கான செயற்திட்டமொன்றுக்காக சீன முகவர் நிறுவனமொன்றுடன் 2013 ஆம் ஆண்டில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை ஏற்படுத்தியிருந்த போதிலும் 2022 வருடம் வரை ஆரம்பிப்பதற்கு முடியதிருந்தது.

அத்துடன் இச்சசெயற்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த தலகல பிரதேசத்தில் அமைந்துள்ள 12 ஏக்கர் நிலம் 2019 ஆம் ஆண்டிலிருந்து குறைப்பயன்பாடுடையதாகக் காணப்பட்டது.

- தொல்பொருள் திணைக்களத்திற்கு தொல்பொருள் ஆராய்ச்சி மற்றும் அகழ்வு நடவடிக்கைகளுக்காக புகைப்பட பிரதியொன்றைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் நவீன தொழில்நுட்பம் தொடர்பான ஆதர் சீ கிளார்க் நிறுவனத்தினால் ரூபா 10.7 மில்லியன் செலவிடப்பட்டு ஆளில்லா விமானம் ஒன்று 2016 ஆகஸ்ட் மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2022 மே 25 வரை குறிப்பிட்ட விமானம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் 2021 ஆம் ஆண்டில் கணனிகள் உட்பட உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 4,522,370 செலவிடப்பட்டிருந்தது. நிலையத்தின் தற்போது காணப்படும் அதிகாரிகளின் எண்ணிக்கை 143 ஆக இருந்ததுடன் நிறுவனத்திற்குச் சொந்தமான பயன்படுத்தக்கூடிய கணனிகள் (Destop, Laptop, Notebook, Tablet) 222 ஆக இருந்தமையால் கணனிகள் தேவைப்படும் அதிகாரிகளின் எண்ணிக்கையை விஞ்சியதாக 79 கணனி இயந்திரங்கள் வீணாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

- 2020 சனவரி 27 ஆந் திகதிய PED/2020 ஆம் இலக்க திறைசேரிச் செயலாளரின் சுற்றறிக்கைப் பிரகாரம் புதிய தலைவர் நியமிக்கப்படும்போது எவ்வித புதிய ஆட்சேர்ப்புக்களும் இடம்பெறக்கூடாது என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் அல்லாத ஆலோசகர் பதவிகள் இரண்டிற்காக ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு 2021 ஆம் ஆண்டில் படிகள் மற்றும் எரிபொருள் படிகளாக மொத்தம் ரூபா 1.7 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

- திறைசேரிச் செயலாளரின் 2017 ஒக்தோபர் 25 ஆந் திகதிய 05/2017 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் தற்போது வழங்கப்படுகின்ற சம்பளத்திற்கு மேலதிகமாக சுற்றறிக்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவிகள் தவிர்ந்த வேறு எவ்வித விசேட படியொன்றும் வழங்கப்படாத அதிகாரிகளுக்கு மட்டுமே 2017 ஒக்தோபர் 01 இலிருந்து தொழிற்படியொன்று செலுத்த முடியுமான போதிலும் அடிப்படை சம்பளத்தில் 1/3 படியொன்று பெற்றுக்கொள்ளும் மூன்றாம் மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் 9 அதிகாரிகளுக்கு மற்றும் தொழிற்பயிற்சி அதிகாரசபைகள் 8 அதிகாரிகளுக்காக முறையே 2018 சனவரி முதல் 2021 திசெம்பர் வரை மொத்தம் ரூபா 2.7 மில்லியன் மற்றும் 2017 ஒக்தோபர் முதல் 2021 திசெம்பர் வரை ரூபா 1.7 மில்லியன் தொழிற்படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

திறன் தரநிலைகள் நாளதுவரையாக்கப்படாமை

1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் மற்றும் தொழிற்கல்விச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு மற்றும் 17 ஆம் பிரிவின் மற்றும் இலங்கையில் தொழில்பயிற்சி தகுதிக் கட்டமைப்பிற்கான செயற்பாட்டுக் கையேட்டின் (Nation Vocational Publication Frame Work of Srilanka, Operational Manual - 2009) 3.1.7 ஆம் பிரிவின் பிரகாரம் 03 வருடங்களுக்கு ஒரு தடவை திறன் தர நிலைகள் நாளதுவரையாக்கப்பட வேண்டியதுடன் வேகமாக மாறிவருகின்ற தொழில்நுட்பத் துறைகளுக்கு அதைவிட குறைவான காலத்தில் நாளதுவரையாக்கப்படல் மேற்கொள்ளப்பட வேண்டிய 11 துறைகளுக்கான திறன் தரநிலைகள் மற்றும் கற்கைநெறிகள் 01 வருடம் முதல் 10 வருடங்கள் வரையான காலமாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

பயிலுனர் ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையின் போதான முறைகேடுகள்

- ஒறுகொடவத்த மோட்டார் வாகனப் பொறியியல் பயிற்சி நிறுவனத்தின் 2020 ஆம் ஆண்டிற்கான முழுநேரக் கற்கை நெறிகளுக்காக பயிலுனர் ஆட்சேர்க்கப்படுவதற்கான திறந்த போட்டி பரீட்சையின் போது பரீட்சை வினாத்தாள் தயாரித்தல், வினாத்தாள் மற்றும் விடைத்தாள் அச்சிடல், பரீட்சைகள் நடாத்துதல், விடைத்தாள்களை சரிபார்த்து மதிப்பெண்கள் வழங்குதல் மற்றும் பயிலுனர் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் வெளிப்படைத் தன்மையின்றி மோசடியான முறையில் மேற்கொள்ளப்பட்ட காரணத்தினால் தகுதிபெற்ற 30 பயிலுனர்கள் காணப்பட்ட நிலையில் தகுதியற்ற 20 பயிலுனர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இவ்விடயம் சுட்டிக் காட்டப்பட்டு 1 வருடமும் 09 மாதங்களும் கடந்துவிட்ட போதிலும் வெளிப்படைத் தன்மையின்றி முறைகேடுகளை மேற்கொண்ட அதிகாரிகள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதிவரை எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் வெளிநாட்டு உதவித்தொகை ஒப்பந்த விதிமுறகளை மீறிய 20 அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 17 மில்லியன் ஆன தொகை 2021 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

- மருந்துகள் பரிசோதனை ஆய்வுகூடச் சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு வெளிநாடுகளுக்குப் பெருமளவு கட்டணமொன்றைச் செலுத்துவதைத் தவிர்ப்பதற்கு ரூபா 99 மில்லியன் செலவிடப்பட்டு கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தில் மருந்துகள் ஆய்வுகூடமொன்று நிறுவப்பட்டிருந்த போதிலும் வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனை நடவடிக்கைகள் இந்த ஆய்வுகூடத்தின் மூலம் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதால் ஆய்வுகூடம் நிறுவப்பட்டதன் நோக்கம் நிறைவேற்றப்படாத காரணத்தினால் பரிசோதனைகளுக்கான அன்னியச் செலாவணி செலவிடப்பபடுவதை தவிர்ப்பதற்கு முடியாதிருந்தது.

- இலங்கை நனோ தொழில்நுட்ப நிறுவனத்தினால் நனோ உர அபிவிருத்தி தொழில்நுட்பத்தை கையளிப்பதற்காக 2012 மார்ச் 15 ஆந் திகதி இந்திய

கம்பனியொன்றுடன் ஒப்பந்தமொன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதில் தொழில்நுட்ப பரிமாற்றத்தின் மொத்தப் பெறுமதி 2,250,000 அமெரிக்க டொலராக இருந்ததுடன் அது நான்கு தவணைகளில் மீண்டும் அறவிடப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2013 யூன் 30 ஆந் திகதி 750,000 அமெரிக்க டொலர்கள் தொகைக்கு பட்டியல் வழங்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரை அது மீண்டும் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டின் இறுதியில் இறுதி தவணைப் பணமான 500,000 அமெரிக்க டொலருக்கான பட்டியல் வழங்கப்பட்டிருக்கவில்லை.

- இலங்கை நனோ தொழிநுட்ப நிறுவனத்தினால் மீளாய்வாண்டில் மற்றும் கடந்த வருடங்களில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கிரயமாக முறையே ரூபா 182.9 மற்றும் ரூபா 155.6 செலவிடப்பட்டிருந்த போதிலும் ஆராய்ச்சிகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டிருந்த தேசிய முக்கியத்துவம் வாய்ந்த புதிய கண்டுபிடிப்புக்களுக்கான சந்தையொன்றை உருவாக்குவதற்கு கம்பனி தவறியிருந்தது.

- சாகர பல்கலைக்கழகத்தினால் இலவசமாக நடாத்தப்பட்டு வருகின்ற பட்டப்படிப்பு, டிப்ளோமா மற்றும் சான்றிதழ் கற்கை நெறிகளுக்கான மாணவர்களைச் சேர்ப்பதற்கான மேம்படுத்தல் நடவடிக்கைகள் குறைந்த மட்டத்தில் காணப்படுவதால் 8 நிலையங்களில் 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்டிருந்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை முறையே 569, 787 மற்றும் 695 ஆகும். அதன் பிரகாரம் 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் மாணவர் அலகொன்றுக்கான கிரயம் முறையே ரூபா 0.7 மில்லியன், ரூபா 0.6 மில்லியன் மற்றும் ரூபா 0.7 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

- தேசிய ஆராய்ச்சி சபையின் இலக்குகளை அடிப்படையாகக் கொண்ட பல துறைசார் ஆராய்ச்சிகள் 05 வருடங்களில் முடிக்கப்பட வேண்டிய போதிலும் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த இலங்கையின் பாம்புக் கடிகளுக்கான பல்வகை விஷ எதிர்ப்பு மருந்தை மேம்படுத்துவதற்கான ஆராய்ச்சி 07 வருடங்கள் கடந்து விட்ட போதிலும் 2021 திசெம்பர் 31 வரை முடிப்பதற்குத் தவறியிருந்தது.

- பால் உற்பத்தியில் இலங்கையை தன்னிறைவடையச் செய்வதற்கான ஆராய்ச்சி ரூபா 41.7 மில்லியன் செலவிடப்பட்டு 2020 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்ட போதிலும் ஆராய்ச்சி மூலம் அடையாளம் காணப்பட்ட தொழில்நுட்பம் நடைமுறையில் பயன்படுத்தப்படுவது தொடர்பான செயல்முன்னேற்றத்தை மேற்பார்வை செய்தல் மற்றும் பின்தொடரல் தேசிய ஆராய்ச்சி சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதுவரை இலங்கை பால் உற்பத்தியில் தன்னிறைவு அடையும் இலக்கை அடைந்து கொள்வதற்கான நோக்கம் நிறைவேற்றப்படவில்லை.

- இலங்கையில் பல்வேறு தட்பவெப்ப நிலைகளுக்கு ஏற்ற பயிர் வகைகள் மற்றும் சாகுபடி நுட்பங்களை மேம்படுத்துவதன் மூலம் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இவ்வாராய்ச்சி வயல் பயிர்கள் ஆராய்ச்சி

மற்றும் அபிவிருத்தி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் ஆராய்ச்சியின் போது மேம்படுத்தப்பட்ட நெல், சோளம், பயறு மற்றும் பச்சை மிளகாய் ரகங்கள் தொடர்பான முடிவுகளை சமூகமயமாக்கல் மற்றும் அவற்றின் செயல்முன்னேற்றம் தேசிய ஆராய்ச்சி சபைக்கு பெறப்படுதல், மதிப்பீடு செய்தல் மற்றும் பின்தொடரல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

தொழில் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் ஆசிரியக் கட்டிடத்தை திருத்துவதற்கான ஒப்பந்தம் ரூபா 14.5 மில்லியனுக்கு 2016 செப்தெம்பர் 10 ஆந் திகதி தனிப்பட்ட ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டு 2019 செப்தெம்பர் 12 ஆந் திகதி ரூபா 2.9 மில்லியன் ஆன மூலதனத் தொகையொன்று வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தம் 2019 நவம்பர் 22 வரையில் முடிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரை உரிய பணிகள் ஆரம்பிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாததுடன் அரசின் நிதி 2 வருடத்திற்கு மேற்பட்ட காலமாக வெளித்தரப்பினரின் கைகளில் இருந்தது. மேலும் இந்த ஒப்பந்தத்திற்காக பெறப்பட்டிருந்த செயலாற்றுப் பிணையின் செல்லுபடியாகும் காலம் 2021 யூன் 19 ஆந் திகதி காலாவதியாவதுடன் அது நீடிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

நிதியத்தின் குறைப்பயன்பாடு

தேசிய ஆராய்ச்சி சபையினால் 05 வருடங்களுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு செலவிடப்படும் இலக்கின் அடிப்படையில் பல்துறை ஆராய்ச்சிகளுக்காக மதிப்பிடப்பட்ட செலவுகள் மேற்கொள்ளப்படுகின்ற காலப்பகுதியை இனங்காணுதல் மற்றும் அதன் பிரகாரம் கட்டுநிதியின் தேவைப்பாடு திட்டம் தயாரிக்கப்பட்டு ஒதுக்கங்கள் பெறப்பட்டு செயற்தினாகப் பயன்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததுடன் 2021 திசெம்பர் 31 வரை 03 வருடங்கள் முதல் 07 வருடங்கள் வரையான காலவீச்சில் (05 ஆராய்ச்சிகளுக்கான) மொத்தம் ரூபா 64.30 மில்லியன் பயன்படுத்தப்படாது நடைமுறை கணக்கில் காணப்பட்டது.

புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்

- செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்
- முகாமைத்துவ பலவீனங்கள்
- சட்டங்கள், விதிகள் மற்றும் பிரணமாணங்களுடன் இணங்காமை
- முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்
- இழப்புகள் மற்றும் சேதங்கள்
- திட்டமிடல்
- கொள்வனவுகள்
- சொத்து முகாமைத்துவம்
- பிரதான செயற்பாடுகளுக்கு முரணான செயற்பாடுகள்
- செயலாற்றல்
- ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துதல்
- பணிகளைச் செய்யத் தவறுதல்

புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள்

புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படுகின்ற இராஜாங்க அமைச்சு, 08 திணைக்களங்கள் மற்றும் 11 நியதிச் சபைகள் / நிறுவனங்களினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியதாகக் காணப்பட்டன.

- கஷ்டப் பிரதேசங்களில் அமைந்துள்ள கோவில்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ‘‘சசுன் உதாவ’’ தேசிய வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தல்.

- தேசிய பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்காகத் தேவையான சட்டங்கள் மற்றும் விதிமுறைகளைத் திருத்துதல்.

- மத்திய கலாசார நிதியம் தொடர்பாக ஒரு முழுமையான ஆய்வை நடாத்தலும் அதன் முழுமையான மறுசீரமைப்பிற்கான கொள்கை அடிப்படையை உருவாக்குதலும்.

- ஜனாதிபதி செயலாற்றல் செயலணியுடன் இணைந்து தொல்பொருள் பாரம்பரிய முகாமைத்துவத்திற்கான தேவையான கொள்கைகள் மற்றும் சட்டப் பின்னணியை தயாரித்தல்.

- அனைத்து மதங்களையும் சேர்ந்த டிஜிட்டல் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களின் கலைக் களஞ்சியமொன்றை உருவாக்குதல்.

- தேசிய பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்காக தற்போதுள்ள நிறுவனங்களின் உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கான செயற்திட்டங்களை செயற்படுத்துதல்.

- அச்சிடப்பட்ட படைப்புக்கள், நாடகம், சினிமா, கலை மற்றும் சிற்பம், இசை மற்றும் நடனத் தொழிற்துறைகளை ஊக்குவிப்பதற்கான வசதிகளை வழங்குதல்.

- உள்ளூர் அதிகாரப் பின்னங்களைச் செலுத்துவதற்கான சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மரபுகளுக்கு ஏற்ப ஒரு முறையான பொறி முறையினை அறிமுகம் செய்தல்.
- ஒரு முழுமையான ‘‘நாடக அரங்கு’’ ஒன்றை நிறுவுதல் மற்றும் கலைஞர்களின் தொழில் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான ஒரு வேலைத்திட்டத்தை நிறுவுவதற்கு நிறுவனக் கட்டமைப்பை உருவாக்குதல்.

- கலைப் படைப்புக்கள் மற்றும் கண்காட்சிகளுக்காக சிறப்பு வசதிகளை வழங்குதல்.

- சுற்றுலா அமைச்சுடன் ஒருங்கிணைந்து பாரம்பரிய மற்றும் நவீன நடனக் கலைஞர்களின் நிகழ்ச்சிகளை வழங்குதல் மற்றும் கலை சிற்பிகள் தமது படைப்புக்களை சுற்றுலா விடுதிகள் மற்றும் சுற்றுலாப் பாதுகாப்பான இடங்களில் விற்பதற்காக இடங்களை வழங்குதல்.

- கிழக்கு மாகாணத்தில் தொல்பொருளியல் மரபுரிமைகளை முகாமைத்துவம் செய்வதற்கான சனாதிபதி செயலாற்றுகைப் படையுடன் இணைந்து செயற்படுதல்.

2021 ஆம் வருடத்தில் மேற்குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக அமைச்சு மற்றும் அதன் கீழான இராஜாங்க அமைச்சு மற்றும் 08 திணைக்கங்களங்களுக்கு மொத்தம் ரூபா 9,263 மில்லியன் நிதி ஒதுக்கீடு பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையில் அவற்றில் ரூபா 7,014 மில்லியன் மட்டுமே

பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 2,249 மில்லியன் நிதி ஒதுக்கீடு பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் உரு 42 இல் காட்டப்பட்டுள்ளது.



	புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு	தேசிய மரபுரிமை, கலை நிகழ்ச்சிகள் மற்றும் கிராமப்புற கலைகள் மேம்பாட்டிற்கான இராஜாங்க அமைச்சு	பௌத்த அலுவல்கள் திணைக்களம்	முஸ்லிம் சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம்	கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களம்	இந்து சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் திணைக்களம்	கலாச்சார அலுவல்கள் திணைக்களம்	தேசிய நூதனசாலைகள் திணைக்களம்	தேசிய சுவடிகள் கூடங்கள் திணைக்களம்	தொல்பொருளியல் திணைக்களம்மாங்க அமைச்சு	மொத்தம்
ஒதுக்கங்கள் - ரூ.மி	2238	604	1566	196	279	318	1656	482	409	1515	9263
செலவு - ரூ.மி	1690	350	1466	155	202	270	1115	375	270	1121	7014
சேமிப்பு - ரூ.மி	548	254	100	41	77	48	541	107	139	394	2249

உரு 42 - மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவுகள்
மூலாதாரம் - 2021 வருடாந்த நிதிக்கூற்றுக்கள்

அமைச்சு மற்றும் அதன் கீழான திணைக்கங்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களிற்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்த மேற்குறிப்பிட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுதலுடன் தொடர்புடைய தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

- ICTAD பதிவு உள்ளதா என்பதை உறுதிப்படுத்திய பின்னர், ஒப்பந்தக்காரரிடம் தேவையான வளங்கள் மற்றும் பணியாளர்கள் உள்ளதா என்பதைக் கருத்தில் கொள்ளாமல் ரூபா 14.66 மில்லியன், ரூபா 19.99 மில்லியன் மற்றும் ரூபா 11.08 மில்லியன் தொகைகள் முறையே மாவத்தகம, பமுனகொடுவ மற்றும் பொல்கஹவெல ஆகிய கலாசார

நிலையங்களின் நிர்மாணப்பணிகள், மட்டுப்படுத்திய கேள்விகோரல் மேற்கொள்ளப்பட்டு கலாசார பாதுகாப்பு மற்றும் நிர்மாண தனியார் கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், முறையே 2016 திசெம்பர் 25, 2016 திசெம்பர் 23 மற்றும் 2017 சனவரி 03 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த குறித்த நிர்மாணங்கள் 2021 திசெம்பர் வரையிலும் பூரணப்படுத்தப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

- ஹம்பாந்தோட்டை அருங்காட்சியக அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான ரூபா 22.51 மில்லியன் மதிப்பீட்டிலான செயற்திட்டத்திற்கு 2015 நவம்பர் 30 அன்று உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டது. 2016 ஏப்ரல் 30 ஆம் திகதி நிறைவடையவிருந்த இச்செயற்திட்டத்திற்காக மொத்தம் ரூபா 18.09 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன், காணப்படுகின்ற குறைபாடுகளை சரிசெய்யும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் கட்டிடம் கையகப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அந்தக் குறைபாடுகள் 2021 திசெம்பர் 31 வரை பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- ரூபா 98.55 மில்லியன் மதிப்பீட்டில் 2021 ஆகஸ்ட் 04 அன்று தொடங்கப்பட்ட தேசிய அருங்காட்சியகத்திலுள்ள நூலகத்தில் தீ பாதுகாப்பு அமைப்பை நிறுவும் செயற்திட்டம் 2022 சனவரி 31 இல் நிறைவடைந்திருக்க வேண்டும். 2022 மார்ச் மாதமளவில் வேலை முடிவடைந்திருக்க வேண்டிய காலம் நிறைவடைந்து 02 மாதங்கள் கடந்திருந்த போதிலும், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்தம் ரூபா 23.43 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த இச்செயற்திட்டப்பணியின் பௌதீக செயலாற்றல் 35 சதவீதமாக இருந்தது.

முகாமைத்துவ பலவீனங்கள்

- வெசாக் பண்டிகையை நடத்த திட்டமிடப்பட்டிருந்த யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள விகாரைகளின் புனரமைப்புக்காக ஒதுக்கப்பட்டிருந்த பணத்திலிருந்து ரூபா 4.5 மில்லியன் செலவிடப்பட்டு புனரமைக்கப்பட்டிருந்த நாகதீப விகாரை வாசஸ்தளம் மற்றும் ரூபா 2.77 மில்லியன் செலவிடப்பட்டு கட்டப்பட்டிருந்த வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பக்தர்களுக்கான கழிப்பறை முறைமையில் தொடர்ந்து நீர் கசிவு காணப்பட்டது.

  மேலும், நடத்த திட்டமிடப்பட்டிருந்த அரச வெசாக் விழா கோவிட் நோய்க்கு எதிரான வழிகாட்டுதல்களின் படி இரத்து செய்யப்பட்டிருந்த போதிலும், வெசாக் விழாவிற்காக தற்காலிக பந்தல் மற்றும் மேடையை நிர்மாணிப்பதற்குத் தேவையான புடவை மறைப்புகளிற்காக (canopy) கடற்படைக்கு செலுத்திய மொத்தம் ரூபா 1.49 மில்லியன் தொகையினை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- கலாச்சார அமைச்சினதும் அதன் கீழுள்ள நிறுவனங்களினதும் கட்டுமானங்கள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை வினைத்திறனாக மேற்கொள்வதில் ஏற்படும் சிரமங்கள் மற்றும் சிக்கல்களைத் தவிர்ப்பதற்காக அமைச்சகத்திற்கு முழுமையான பங்குமூலதன உரிமையுடன் கலாச்சார பாதுகாப்பு மற்றும் நிர்மாண (பிரைவேட்) கம்பனி 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2008 நவம்பர் 17 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2009 முதல் 2010 வரையிலான காலப்பகுதியில் கலாசார அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்கள் சார்பாக

கையேற்கப்பட்ட நிர்மாணங்கள் சுமார் 5 சதவீத இலாப எல்லையை தக்கவைத்து உப ஒப்பந்தக்காரர்களிற்கு ஒப்படைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டிருந்தமையால் அந்த சிரமங்களும் பிரச்சனைகளும் தொடர்ந்தும் காணப்பட்டன.

மேலும், முழுமையாக அமைச்சுக்கு சொந்தமான இந்த கம்பனியின் 2018/2019, 2019/2020 மற்றும் 2020/2021 நிதியாண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படாததுடன் இப்போது முற்றிலும் செயலற்ற நிலையில் உள்ள இந்தக் கம்பனியை கலைப்பதற்கு பிரதமரின் செயலாளரிடம் 2021 யூலை 05 ஆந் திகதி கோரப்பட்ட போதிலும், இந்த அறிக்கையின் தேதி வரை கலைப்பு செயல்முறை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- 2020 சனவரி 09 ஆந் தேதியிட்ட SA/AMP/Deposit/Transfer ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின்படி, நெலும் பொகுண திரையரங்கத்தை ஒரு தனித் திட்டமாகக் கருதி, அதன் பராமரிப்புக்குத் தேவையான நிதியை வரவு செலவுத் திட்டத்தினூடாக பெற்றுக் கொள்ளவும் ஈட்டிய வருவாயை பொருத்தமான வருமானத் தலைப்புக்கு செலவு வைக்கவும் பொது நிதிக் கொள்கைத் திணைக்களத்திடம் கேட்டறிவதற்கும் கணக்காய்வுத் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், 6000-0-0-020-009-0 ஆம் இலக்க வைப்புக் கணக்கின் ஊடாக கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.
- நாட்டில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட 2021 மே மற்றும் யூன் மாதங்களில் நெலும் பொகுண திரையரங்கின் மின்சார நுகர்வுச் செலவு முறையே ரூபா 1.45 மில்லியன் மற்றும் ரூபா 1.26 மில்லியன் ஆகவும், செயற்பாடுகள் எதுவும் இடம்பெறாதிருந்த 2021 செப்தெம்பர் மாதத்தில் அது ரூபா 1.52 மில்லியன் ஆகவும் பெருமளவில் காணப்பட்டது. மேலும், நிலையத்தின் மின்கட்டண பட்டியலிடும் முறையான பொது நோக்கம் - 03 மின் கட்டண முறையின் கீழ், kva-209152249 என்ற மின்மானி வாசிப்பு வகையின் படி அலகொன்றுக்கு அறவிடப்படுகின்ற கட்டண வீதம் மிக அதிகமாக காணப்பட்ட போதிலும், இந்த முறையை மாற்றியமைத்து மின்சார கட்டணத்தை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரணமாணங்களுடன் இணங்காமை

- இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் கொள்வனவு வழிகாட்டுதல்களின் 8.12.4, 5.4.6 மற்றும் 5.4.8 ஆகிய வழிகாட்டுதல்களுக்கு முரணாக மஹிந்த ராஜபக்ஷ தேசிய டெலி சினிமா பூங்காவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை உருவாக்கும் பணி முடிவடைதற்கு முன்னரும் அந்தப் பணி முடிவடைந்தமைக்கான எந்தவொரு உத்தரவாதமும் இல்லாமலும் 2021 திசெம்பர் 15 ஆந் திகதி ரூபா 2 மில்லியன் ஒப்பந்தத் தொகை முழுவதுமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் தேதியான 2022 மார்ச் 31 வரையிலும் பொதுமக்களுக்கு நுழைவதற்கு ஏற்ற விதத்தில் இணையதளம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. பணம் செலுத்தும் போது பிடிகாசு கழிக்கப்படாமல் இருந்ததுடன், வேலை முடிவடைந்து 1 வருடம் வரையிலான ஒப்பந்தத்தின்

பராமரிப்பு காலத்தை ஈடுகட்டுவதற்கு பெறப்பட வேண்டிய செயல்ாற்றல் பிணைமுறி வேலை தொடங்கிய நாளிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே பெறப்பட்டிருந்தது.

- முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் பராமரிக்கப்படும் ஹஜ் நிதியமானது, 2006 திசெம்பர் 22 ஆந் தேதியிட்ட PF/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தியின் படி பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் சட்டப்பூர்வமாக நிறுவப்பட்டிருக்காததுடன் நிதியத்தை மூடுவதற்கு அல்லது சட்டப்பூர்வமான நிலையை ஏற்படுத்திக் கொள்வதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கவில்லை.

முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

- நெலும் பொக்குண திரையரங்கின் பராமரிப்பு தொடர்பான சீன தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையின்படி, பராமரிப்புப் பணிகளுக்குத் தேவையான உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் உதிரிப்பாகங்களை வரி செலுத்தாமல் இறக்குமதி செய்வதற்கு சீன நிறுவனத்திற்கு அனுமதி வங்கப்பட்டிருந்ததுடன். 2021 சனவரி முதல் யூலை வரையிலான காலகட்டத்தில் சீன நிறுவனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்காக அமைச்சு 09 சந்தர்ப்பங்களில் ரூபா 14.37 மில்லியன் தொகையினை சுங்கத் திணைக்களத்திற்கு வரியாகச் செலுத்தியிருந்தது. இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் உரிமை இலங்கைக்கு மாற்றப்பட்டிருந்ததுடன், பராமரிப்புக்காக இறக்குமதி செய்யப்பட்டு களஞ்சியத்தில் வைக்கப்பட்டுள்ள 19 வகையான மூலதனப் பொருட்களில் 74 பொருட்களை திரையரங்கிற்கு கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- தேசிய அருங்காட்சியகத் திணைக்களத்தினால் 2011 ஆகஸ்ட் 10 முதல் 2021 யூலை 31 வரையிலான 10 ஆண்டுகளுக்கு ஒரு கட்டிடம் கைவினைப்பொருள் கைத்தொழில் சபைக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. திணைக்களத்தின் அனுமதியின்றி சபை அதில் நவீனமயமாக்கல் பணிகளை மேற்கொண்டிருந்ததுடன், திணைக்களத்தின் ஒத்திசைவின்றி 2013 ஆம் ஆண்டில் குத்தகைக் காலத்தை 35 வருடங்களாக நீடிக்க கைவினைப்பொருள் கைத்தொழில் சபை அமைச்சரவை தீர்மானத்தைப் பெற்றிருந்தது. இந்தக் கட்டிடத்திற்கான வீதவரி மதிப்பீட்டுக் கட்டணம் மற்றும் தண்ணீர்க் கட்டணம் போன்றவற்றை திணைக்களம் செலுத்தியிருந்ததுடன், 2021 யூலை 31 இல் உள்ளவாறு திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய குத்தகை வாடகையின் மொத்த நிலுவை ரூபா 91.92 மில்லியன் ஆகும். மேலும், 2021 ஆகஸ்ட் முதல் செலுத்த வேண்டிய மாதாந்த வாடகை புதிய குத்தகை ஒப்பந்தத்தின்படி செய்யப்பட வேண்டிய போதிலும், இரு தரப்பினரின் இணக்கப்பாட்டுடன் கையெழுத்திடப்பட வேண்டிய புதிய குத்தகை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு அதற்கமைய வாடகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காது கைவினைப்பொருள் கைத்தொழில் சபை இந்த கட்டிடத்தை அனுமதியின்றி பயன்படுத்தி வருகின்றது.

இழப்புகள் மற்றும் சேதங்கள்

- நெலும் பொகுண திரையரங்கிற்கு பயணப்பொதிகளை பரிசோதிக்கும் இயந்திரத்தை கொள்வனவு செய்வது தொடர்பில், ஒரு நிறுவனம் 02 விலைமனுக்களை சமர்ப்பித்திருந்ததுடன், ரூபா 2,999,000 முதலாவது விலைமனுவாகவும் ரூபா 5,400,000 இரண்டாவது விலைமனுவாகவும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை விலைமனுக்களை திறக்கும் சபையால் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு ரூபா 5,400,000 விலையை முதலாவது விலைமனுவாகவும் ரூபா 2,999,000 இரண்டாவது விலைமனுவாகவும் பதிவு செய்து விலை மனுக்களை மதிப்பீடு செய்கையில் இரண்டாவது விலைமனுவை நிராகரித்திருந்தது. இதன்போது மற்றுமொரு நிறுவனம் வழங்கிய ரூபா 4,800,000 விலையை மிகக்குறைந்த விலையாக ஏற்று அந்த நிறுவனத்திடமிருந்து இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கு பரிந்துரைத்திருந்தமையால் அமைச்சுக்கு ரூபா 1.8 மில்லியன் நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது.

- மலையகப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான தேசிய நியதிச்சட்ட சபையின் அலுவலக வளாகத்துக்காக கண்டி மாநகரசபைக்குள் அமைந்துள்ள 6039 சதுர அடி விஸ்தீரணமுடைய கட்டிடம் ரூபா 1 மில்லியன் மாதாந்த வாடகைக்கு கையகப்படுத்தப்பட்டிருந்ததுடன், அந்த வாடகை ஒப்பந்தக் காலம் 2020 ஒக்தோபர் 30 இல் முடிவடைந்திருந்த போதிலும், அக்காலத்தில் வேறோர் இடத்தை தெரிவு செய்வதற்கு தேவையான பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் 2021 சனவரி 31 வரை 3 மாதங்களுக்கு வாடகைக் காலம் நீடிக்கப்பட்டிருந்தது. அலுவலக வளாகத்திற்கு தேவையான தரைப்பரப்பு 3400 சதுர அடியாக இருந்த போதிலும், முன்னைய ஒப்பந்தத்தை 03 மாதங்களுக்கு நீடித்ததன் காரணமாக 6039 சதுர அடிக்கு ஒப்பந்தம் செய்ய நேர்ந்ததுடன் அதன் காரணமாக மேலதிகமாகச் செலுத்த வேண்டியேற்பட்டிருந்த ரூபா 18 மில்லியன் சிக்கனமற்ற செலவு அமைச்சுக்கு ஏற்பட்ட நட்டமாகும்.

திட்டமிடல்

- மலையகப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான நியதிச்சட்ட சபை தொடர்பான 2017 ஆகஸ்ட் 15 தேதியிட்ட MSEW/CM/13/2017 ஆம் இலக்க அமைச்சரவை அனுமதியின் படி, மலையகப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பது தொடர்பான 4 திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த 04 வேலைத்திட்டங்களின் அடிப்படையில் செயற்பாடுகள் திட்டமிடப்படாதிருந்ததுடன், சபையின் திருத்தப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கியிருந்த ரூபா 9.02 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருந்த 5 திட்டங்கள் இந்த வருடத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- கலைஞர் காப்பீட்டுத் திட்டம் ஒரு நிறுவனத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய போதிலும், நாடகக் கலைஞர்களுக்கான பிரேக்ஷா காப்புறுதி திட்டத்திற்காக டவர்ஹால் தியேட்டர் அறக்கட்டளை மன்றத்துக்கு ரூபா 15 மில்லியன் தொகையும் அனைத்துக் கலைஞர்களுக்குமான திடீர் விபத்துக்கள்

மற்றும் மருத்துவ காப்புறுதித் திட்டத்திற்காக தேசிய மரபுரிமைகள், பாரம்பரிய கலைகள் மற்றும் கிராமியக் கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சுக்கு ரூபா 10 மில்லியன் தொகையும் திறைசேரியின் ஊடாக வழங்கப்பட்டிருந்தது.

- கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கியிருந்த கலைஞர்களுக்கான அடையாள அட்டைகளை வழங்குவதற்காக ரூபா 100,000 நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்ததுடன், ரூ. 2 மில்லியன் வழங்கப்பட்டிருந்ததுடன், கலைஞர்களுக்கான இலத்திரனியல் அடையாள அட்டைகளை வழங்குவதற்காக தேசிய மரபுரிமைகள், பாரம்பரிய கலைகள் மற்றும் கிராமியக் கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சுக்கு ரூபா 2 மில்லியன் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது. ஆகையால் இந்த 02 நிறுவனங்களும் அந்தப் பணிகளை முன்னெடுத்து அதற்கான செலவினங்களைச் செய்திருந்தன.

- தேசிய இலக்கிய விழா, பெரஹெர உதவிகள் மற்றும் பொசன் ஹேவிசி பூஜை மற்றும் பாதிக்கப்பட்ட கலைஞர்களுக்கான உதவி ஆகிய பணிகளுக்காக முறையே ரூபா 4 மில்லியன், ரூபா 4 மில்லியன் மற்றும் ரூபா 32 மில்லியன் கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், இதனையொத்த பணிகளான தேசிய இலக்கிய கலை விழா, பெரஹெர மற்றும் பிற கலாச்சார நிகழ்வுகளுக்கு பங்களிப்பு செய்தல் மற்றும் கைவினைஞர்களுக்கு வாழ்வாதாரம் வழங்குதல் போன்ற பணிகளுக்காகவும் புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுக்கு முறையே ரூபா 20 மில்லியன், ரூபா 10 மில்லியன் மற்றும் ரூபா 5 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், இந்த 02 நிறுவனங்களும் அந்தப் பணிகளை மேற்கொண்டு அதற்கான செலவினங்களைச் செய்திருந்தன.

கொள்வனவுகள்

- எழுத்துப்பூர்வ உடன்படிக்கை செய்து கொள்ளாமலும் கொள்வனவு அட்டவணை தயாரிக்கப்படாமலும் பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் மகாநாயக்க கரிகாராம புனரமைப்புப் பணிகள் ரூபா 16.38 மில்லியன் செலவில் கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், 2021 ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்ட புனரமைப்புப் பணிகள், இந்த அறிக்கையின் தேதி வரையிலும் முடிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், சம்பந்தப்பட்ட கட்டடம் அமைந்துள்ள நிலத்தின் உரிமையை திணைக்களத்திற்கு பொறுப்பேற்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- அரசாங்க கொள்வனவு வழிகாட்டுதல்களின் 3.2 ஆம் வழிகாட்டுதலுக்கு முரணாக 2021 இல் பௌத்த விவகார திணைக்களத்தினால் அறநெறிப் பாடப் புத்தகங்கள் மற்றும் அறநெறிப் பாடசாலை விண்ணப்பத்திரங்களை அச்சிடுவதற்காக அரசாங்க அச்சகத் திணைக்களத்திற்கு ரூபா 202.73 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

- ஜோன் டி சில்வா ஞாபகார்த்த அரங்கை நவீனப்படுத்துவதற்காக 2011 செப்டெம்பர் மாதம் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்திற்கு முரணாக, 2013 நவம்பரில் திரையரங்கம் இடித்து

அகற்றப்பட்டிருந்ததுடன், அதற்காக 3.64 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும், 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம், திரையரங்கின் நவீனமயமாக்கலுக்கான அமைச்சரவைப் பத்திரம் மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

கட்டிடம் நிர்மாணித்து முடிக்கப்பட்டு முறையாக ஒப்படைக்கப்படாத நிலையில், ரூபா 38.66 மில்லியன் இறுதிக் கொடுப்பனவும் செய்யப்பட்டிருந்ததுடன், வேலை முடிந்ததற்கான சான்றிதழ் இல்லாமல் ரூபா 19.33 மில்லியன் பிடிகாசிலிருந்து 50 சதவீதத்தொகை அதாவது ரூபா 9.66 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன், ஒப்பந்ததாரரால் 03 வருட கால தாமதத்துடன் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால், தாமதக் கட்டணமாக அறவிடப்பட்டிருந்த ரூபா 38.66 மில்லியன் தொகையும் முறையான ஒப்புதல் மற்றும் நியாயமான காரணங்களை உறுதிப்படுத்தாமல் ஒப்பந்ததாரருக்கு திருப்பிச் செலுத்தப்பட்டிருந்தது. அதுமட்டுமின்றி, வேலைகளை பூரணப்படுத்த 03 ஆண்டுகள் கால தாமதம் செய்யப்பட்டமையால் பட்டியல்களில் ஏற்பட்டுள்ள விலை வீத மாற்றங்களுக்காக, ரூபா 9.26 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் அது கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு ஏற்பட்ட நட்டமாகும்.

- தேசிய கலைக்கூடத்தின் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பிற்காக 04 சந்தர்ப்பங்களில் ரூபா 69 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், கலைக்கூட கட்டிடத்தின் தளம், சுவர்கள் மற்றும் மேற்கூரை ஆகியவற்றை செப்பனிடுவதற்காக இலங்கை கடற்படையால் ரூபா 11.78 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இப்பணிகள் வெளிப்புற தனியார் தரப்பைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், இதற்காக கொள்வனவு அதிகாரத்தரப்பின் ஒப்புதல் பெறப்பட்டிருக்கவில்லை. அதற்கான மதிப்பீட்டைக் காட்டிலும் ரூபா 7.87 மில்லியன் அதிகமாக ரூபா 19.65 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன், ஆலோசனை சேவைகள் நிறுவனம் வேலைகளை சரியாக கண்காணித்து அவற்றை மதிப்பீடு செய்திருக்கவில்லை.

மேலும் 2 ஆம் கட்ட நிர்மாணப் பணிகளுக்காக 2021 திசெம்பர் 31 வரை ரூபா 108.12 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், 2021 ஜூலை 22 அன்று அமைச்சரவையின் தீர்மானத்தின் மூலம் ரூபா 92.49 மில்லியன் மட்டுமே அங்கீகரிக்கப்பட்டிருந்தமையால் ஒப்புதல் இல்லாமல் ரூபா 15.63 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

- தேசிய ஆவணக் காப்பகத் திணைக்களத்தின் தலைமை அலுவலகக் கட்டிடத்தை புனரமைப்பதற்கான ஒப்பந்தம் மொத்தமாக ரூபா 992 மில்லியன் மதிப்பீட்டில் வரையறுக்கப்பட்ட மத்திய பொறியியல் சேவைகள் (தனியார்) கம்பனிக்கும், ஆலோசனைப் பணிகள் மத்திய பொறியியல் மதியுரைப் பணியகத்துக்கும் வழங்கப்பட்டிருந்தது. அதன் ஒப்புக் கொள்ளப்பட்ட உடன்படிக்கைக் காலம் 2019 சனவரி 07 முதல் 2020 யூலை 07 வரை ஆகும். அந்த காலம் மீண்டும் 2021 மே 18 வரை நீட்டிக்கப்பட்டிருந்தது. மீண்டும் அந்தக் காலத்தை 2024 ஜூலை 30 வரை நீட்டிக்க ஒரு அமைச்சரவை விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டு அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2022 ஏப்ரல் வரை அதற்கு ஒப்புதல் பெறப்பட்டிருக்காததுடன், கட்டிட மற்றும் ஏனைய மறுசீரமைப்பு பணிகள் 2022 மே இறுதிவரை முடிக்கப்பட்டிருக்கவில்லை.

சொத்து முகாமைத்துவம்

- தேசிய ஆவணக் காப்பகத் திணைக்களத்திற்குச் சொந்தமாக புத்தகங்கள், ஆவணங்கள், பழங்கால ஒப்பந்தங்கள், கையெழுத்துப் பிரதிகள், ஓலைச்சுவடிகள் மற்றும் தேசிய மதிப்புமிக்க இரகசிய ஆவணங்கள் போன்ற 700 வகை ஆவணங்களைக் கொண்ட ஏராளமான பாரம்பரியச் சொத்துக்கள் காணப்படுகின்றன. இந்த விலை மதிப்பற்ற சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்காததுடன் அந்த சொத்துக்கள் தொடர்பில் கணக்கெடுப்பை மேற்கொண்டு அந்த மெய்மையாய்வு அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- பல்வேறு தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகளின் போது கண்டுபிடிக்கப்பட்ட நகரக்கூடிய தொல்பொருட்களான ஏராளமான பழங்கால நாணயங்கள், தொல்பொருளியல் திணைக்களத்தின் கல்வெட்டுப் பிரிவு, நாணயவியல் பிரிவு மற்றும் ஆய்வகப் பிரிவுகளிலும் பிராந்திய அலுவலகங்களிலும் முறையான ஆவணப்படுத்தல்கள் இன்றி நீண்ட காலமாக வைக்கப்பட்டுள்ளன. 2020 இன் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின்படி, இந்த நாணயங்களை ஆவணப்படுத்தும் பணி தொடங்கப்பட்டிருந்த போதிலும், 2022 ஏப்ரல் இறுதிவரையிலும் இப்பணிகள் முடிக்கப்பட்டிருக்கவில்லை.

பிரதான செயற்பாடுகளுக்கு முரணான செயற்பாடுகள்

- மஹாவன்ச தொடர்பான விழிப்புணர்வு மற்றும் அறிமுக நிகழ்ச்சி, வலிசிங்க ஹரிச்சந்திர மையத்தின் மதில் கட்டுமானம் மற்றும் மிஹிந்தலாவின் வடக்கு மற்றும் தெற்கு மிதுரு இல்லத்தில் குளிரூட்டிகளை நிறுவுதல் மற்றும் தரைத் தயார்படுத்தல் ஆகிய பணிகளுக்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் முறையே ரூபா 2,000,000, ரூபா 800,000 மற்றும் ரூபா 300,000 நிதி ஒதுக்கீடு கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், வருடத்தின் போது உரிய பணிகள் மேற்கொள்ளப்படாது மேற்படி ஏற்பாட்டிலிருந்து அதற்கு முரணான பணிகளுக்காக முறையே ரூபா 1,285,867, ரூபா 669,405 மற்றும் ரூபா 97,189 செலவிடப்பட்டிருந்தது.

- நிதி உதவி தேவைப்படும் ஆதரவற்ற கலைஞர்களுக்கு உதவிகளை வழங்குவதற்காக 206-2-3-4-1508 செலவின விடயத்தின் கீழ் கலாச்சார அலுவல்கள் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தி கலாபூஷண விருது வென்ற 170 நபர்களுக்கு ஒருவருக்கு ரூபா 25,000 வீதம் ரூபா 4.25 மில்லியன் பரிசாக வழங்கப்பட்டிருந்தது.

செயலாற்றல்

தேசிய ஆவணக் காப்பகத் திணைக்களத்தின் காப்பக நடவடிக்கைகள் தொடர்பான 61 தொழில்சார் உத்தியோகத்தர்களின் பணியிடங்கள் வெற்றிடமாக காணப்படுகின்றமையால் நிறுவனத்தில் தொழில்சார் அதிகாரிகளின் கடுமையான பற்றாக்குறையால் ஆவணங்கள்

முகாமைத்துவம் மற்றும் அந்த ஆவணங்களை நிர்வகிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துதல்

2012 முதல் 2022 வரையிலான காலப்பகுதியில் ரூபா 323.8 மில்லியன் மொத்தக் கிரய மதிப்பீட்டுடன் அமெரிக்க நிதியுதவியின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்ற ராஜகலதன்ன தொல்பொருள் பாதுகாப்புத் செயற்திட்டத்திற்கான 2021 ஆம் ஆண்டுக்குரிய திருத்திய மதிப்பீட்டின் படியான தேறிய நிதி ஒதுக்கீடு ரூபா 31.07 மில்லியன் ஆன போதிலும், 2021 ஆம் ஆண்டில் செயற்திட்டத்தின் பல்வேறு நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக, 02 அகழ்வு வேலைத் தளங்கள் மற்றும் 05 பாதுகாப்பு வேலைத் தளங்கள் ஆண்டில் நிறைவடைந்திருந்தன. அதன்படி, திருத்திய நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 17.9 மில்லியன் செலவிடப்பட்டு 58 சதவீத நிதி முன்னேற்றமும் 77 சதவீத பௌதீக முன்னேற்றமும் எட்டப்பட்டிருந்தது. இச்செயற்த்திட்டம் 2022-ம் ஆண்டு பூரணப்படுத்தப்பட வேண்டிய போதிலும், தற்போது ஏற்பட்டுள்ள நிதி மற்றும் பல்வேறு தடைகள் காரணமாக அந்த தேதிக்குள் பணிகளை முடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பணிகளைச் செய்யத் தவறுதல்

- களனி விகாரையிலுள்ள ஓவியங்களை பாதுகாப்பதற்காக அரச கூட்டுத்தாபனம் ஒன்றிடமிருந்து தொல்பொருளியல் திணைக்களத்திற்கு நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 1.49 மில்லியன் தொகை 2020 திசெம்பர் 11 ஆந் திகதி அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டில் வரிசை அமைச்சுச் செயலாளரின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின்படி, அந்தப் பணத்தை மீளப்பெற்று குறித்த குறிக்கோள்கள் மற்றும் பணிகளை நிறைவேற்ற அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

- தொல்பொருளியல் திணைக்களத்தின் தொல்பொருட்கள் பாதுகாப்புப் பிரிவினால் முன்வைக்கப்பட்ட தகவல்களின்படி, 2021 ஆம் ஆண்டில் தொல்பொருட்கள் சட்டத்தை மீறியமைக்காக 232 வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அந்த வழக்குகளில் தொல்பொருட்கள் திருடப்பட்டதாக 03 வழக்குகளும், பழங்கால பொருட்களை அழித்தமை தொடர்பாக 14 வழக்குகளும், அனுமதியற்ற அகழ்வு தொடர்பாக 199 வழக்குகளும், அனுமதியின்றி கையகப்படுத்தியமை தொடர்பாக 02 வழக்குகளும், ஏனைய விடயங்கள் தொடர்பில் 14 வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் 122 வழக்குகள் தீர்க்கப்பட்டு, மொத்தம் ரூபா 38.86 மில்லியன் அபராதம் வசூலிக்கப்பட்டது. ஆனால் 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் முறையே 273, 121 மற்றும் 383 தொல்பொருள் திருட்டுகள் மற்றும் பழங்கால பொருட்களை அழித்த வழக்குகள் பதிவாகியிருந்ததுடன் அதன்படி இந்த நிகழ்வுகள் காலப்போக்கில் அதிகரித்துச் செல்கின்றன.

- 1998ஆம் ஆண்டு அத்தனகல்ல ஓயாவில் கண்டெடுக்கப்பட்ட 1270 வருடங்கள் பழமையான 59 அடி 11 அங்குல நீளமான பழமையான படகொன்று தொல்பொருள் திணைக்களத்தினால் எடுத்துவரப்பட்டு

கொழும்பு தேசிய அருங்காட்சியகத்திலுள்ள நீர் தாங்கியில் வைக்கப்பட்டது. இந்தப் படகைப் பாதுகாக்கும் பொறுப்பு தொல்பொருள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், பொலிஎதிலின் மற்றும் கிளைகோல் எனப்படும் இரசாயனப் பொருட்களும் ரூபா 04 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இருப்பினும், 2001 ஆம் ஆண்டு வரை, அந்த இரசாயனங்களைப் பயன்படுத்தி குறித்த படகு பாதுகாக்கப்படாதிருந்ததுடன், அந்த இரசாயனங்கள் வேறு இரண்டு பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் படகை பாதுகாக்கும் பணிகள் சரியான முறையில் செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் படகின் மரப் பகுதிகள் மோசமாக சேதமடைந்து படகு முற்றிலும் அழிவுறும் நிலையில் காணப்பட்டது.

தொழில் பிரிவு

கணக்காய்வு அவதானிப்புக்கள்

- வைப்பு மீதிகள்
- முகாமைத்துவ பலவீனம்
- பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுதல்
- கடமைகள் நிறைவேற்றப்பட்டிருக்காமை
- பெறுகைகள
- சிரம வாசனா நிதியம்
- தேசிய நியமங்களைத் தோற்றுவித்தல்
- அங்கத்தவர்களின் தனித்தனி கணக்குகளுக்கு செலவு வைக்கப்படாத பணம்
- மெஹவர பியச கட்டிடத்தின் உள்ளக ஆக்கங்களைத் தயாரித்தல்
- முதலீட்டு நலன்கள் குறைவடைதல்
- ஊழியர் சேமலாப நிதியத்தினால் அங்கத்தவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்குதல்

தொழில் பிரிவு

தொழில் சட்டத்தை சட்டமாக்குதல் நியமம் சம்பந்தமாக சர்வதேசத்துடன் தொடர்புகளை பேணி தொழில் சமூகத்தினைப் பாதுகாத்தல், நலன்புரிகளை மேற்கொள்ளல், கைத்தொழில் சமாதானத்தையும் சகோதரத்துவத்தையும் மேம்படுத்துதல் என்பன தொழில் அமைச்சின் விடயப்பரப்பிற்குரியவைகளாகும். 2020 ஒக்தோபர் 06 ஆந் திகதிய 2196/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க சௌபாக்கியத்தின் தூரநோக்கு கொள்கைப் பிரகடனத்திற்கு இணங்க மற்றும் அரசாங்கத்தின் மூலம் அமுல்ப்படுத்தப்படுகின்ற தேசிய கொள்கைகளின் அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்ட தனியார் பிரிவின் ஊழியர்களது தொழில்சார் பாதுகாப்பினை ஏற்படுத்துதல், நிபுணத்துவமுள்ள தொழில்சார் பாதுகாப்பினை வெளிநாட்டு தொழில் சந்தைக்கு உருவாக்கும் வகையில் இராஜாங்க அமைச்சுக்கு கொள்கை ரீதியான வழிகாட்டல்களை மேற்கொள்வதற்கு மற்றும் நிர்ணயிக்கப்பட்ட சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களுக்கு இணங்க தொழில்சார் விடயம் தொடர்பான கொள்கைகளை உருவாக்குதல், தேசிய பாதீடு, அரசாங்க முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் உள்ள செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துதல் முன்னுரிமை செயற்பாடாவதுடன் அமைச்சிற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட நிறுவனத்தின் விடயங்கள், செயற்பாடுகள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட கொள்கை நிகழ்ச்சித்திட்டங்கள், மற்றும் செயற்திட்டங்களை தயாரித்தல், அமுல்ப்படுத்துதல், பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் மற்றும் மதிப்பீட்டின் மூலம் அமைச்சின் தூரநோக்காகிய "திருப்தியான வினைத்திறனுள்ள இலங்கை வேலைப்படை" என்பதனை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2021 ஆம் ஆண்டின் போது மேலே குறிப்பிட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக தொழில் அமைச்சு மற்றும் தொழில் திணைக்களத்திற்கு மொத்தமாக ரூபா 5,628 மில்லியன் நிதி ஏற்பாடு பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அதில் ரூபா 3,665.2 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 1,962.8 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரம் வரைபடம் 43 இல் தரப்படுகின்றது.



வரைபடம் 43 வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டின் அளவும் உள்ளபடியான செலவும்

மூலம்:- 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்

இலங்கைக்குரிய வேலைப்படையின் பிரதான பண்புகளில் சில கீழே தரப்படுகின்றன.

விபரம்	ஆண்கள்	பெண்கள்	மொத்தம்
வேலைப்படை (மில்லியன்)	5,621	2,932	8,553
தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் குடித்தொகை (மில்லியன்)	5,414	2,699	8,113
வேலைப்படை பங்குபற்றுதல் சதவீதம் (சதவீதம்)	71	31.8	49.9
தொழில்வாய்ப் பற்ற குடித்தொகை (மில்லியன்)	207	233	440

வரைபடம் 26 - .மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவுகள்

மூலம் :- குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம

.

அமைச்சு அதன்கீழுள்ள நிறுவனங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களால் மேற்கூறிய செயற்பாடுகளையும் கடமைகளையும் நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கி கீழே தரப்படுகின்றன.

வைப்பு மீதிகள்

- 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 10 மில்லியன் இழப்பீட்டுப் பணம் தொழில் அமைச்சின் 6000-0-0-17-0-26 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. இதில் உள்ளடக்கப்பட்ட இழப்பீடுகள் கிடைத்து 2 ஆண்டுகளை மிகைத்த பெறுமதி ரூபா 0.53 மில்லியன் ஆனதுடன் பணம் வைப்புச் செய்யப்பட்ட 1 ஆண்டிற்கும் 2 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட பெறுமதி

ரூபா 1.37 மில்லியனாகும். வைப்புச் செய்து 6 மாதங்களுக்கும் ஒரு ஆண்டிற்கும் இடைப்பட்ட பெறுமதி ரூபா 2.97 மில்லியனாகும்.

- பல்வேறு காரணங்களின் அடிப்படையில் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுப் பணத்தில் ரூபா 2.02 மில்லியனுக்காக இழப்பீட்டு ஆணையாளரின் பெயரில் தேசிய சேமிப்பு வங்கியில் கணக்கு ஆரம்பிக்கப்பட்டது. இப்பணம் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டு 22 மாதங்களிலிருந்து 48 மாதங்கள் வரையான காலம் கடந்திருந்தும் நீதிமன்ற நடவடிக்கைகள் முடியாமையின் காரணமாக உரிமையாளர்களுக்கு விடுவிக்க முடியாதிருந்தது.

முகாமைத்துவ பலவீனம்

- 1934 இன் 19 ஆம் இலக்க தொழிலாளர் இழப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் XII ஆம் பகுதியின் 57 (1) ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு ஊழியருக்கு சேவையில் ஈடுபட்டிருக்கும் போது விபத்து ஏற்பட்டு 14 நாட்களுக்குள் சேவை வழங்குனரினால் தொழில் ஆணையாளருக்கு ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் இதற்காக எந்த நடைமுறையும் தயாரிக்கப்பட்டிருக்காமையால் தொழில் இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்திற்கு அறிக்கையிடப்பட்டிருந்த விபத்துக்கள் 5 மாதங்களிலிருந்து 12 ஆண்டுகள் வரை தாமதித்து கிடைத்திருந்தது என்பது ஆவணங்களின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

- சிறந்த தொழில் சூழலுக்கான தேசிய கொள்கையை அமுல்ப்படுத்துவதற்காக (முறையான செயற்பணி) வருடாந்த மதிப்பீட்டின் மூலம் வழங்கப்பட்ட ரூபா 45 மில்லியன் தொகையான நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தி ஏனைய 03 மூலதனச் செலவு விடயங்களுக்காக ரூபா 11.86 மில்லியனும் 2021 ஆம் ஆண்டில் நிதி ஏற்பாடு வழங்கப்படாதிருந்த செயற்பாடுகளுக்காக ரூபா 3.03 மில்லியனுமாக ரூபா 14.89 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது.

- மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட 690 வினைத்திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு 2021 ஆம் ஆண்டின் போது சம்பளமாக ரூபா 383.4 மில்லியன் செலுத்தப்பட்டது. வினைத்திறன் கருதுகோளினை அமுல்ப்படுத்துதல் அந்த உத்தியோகத்தர்களின் பிரதான செயற்பாடாக இருந்த போதிலும் அக்கருதுகோளினை அமுல்ப்படுத்துதல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் சில உத்தியோகத்தர்களுக்கு வினைத்திறன் கருதுகோள் தொடர்பாக முறையான புரிந்துணர்வு இருக்கவில்லை. தலைமை அலுவலகத்தால் அந்த உத்தியோகத்தர்களின் கடமைகள் முறைப்படியாக ஒழுங்குபடுத்துதல் செய்யப்பட்டிருக்காமையால் அந்த உத்தியோகத்தர்களின் கடமைகள் சம்பந்தமான வினைத்திறன் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது.

- 1980 யூலை வேலை நிறுத்தக்காரர்களுக்கு படிகள் செலுத்துவதற்காக தேசிய பாதீட்டுத் திணைக்களத்தால் விண்ணப்பங்களைச் சிபாரிசு செய்யும் போது தொழில் அமைச்சினால் ஒரே நலன்பெறுனரின் இரண்டு விண்ணப்பங்கள் சிபாரிசு செய்யப்பட்டமையின் காரணமாக

ரூபா ஒரு மில்லியன் மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது என்பது கடந்த கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டியதன் பின்னர் உரிய தரவு முறைமை சரி செய்யப்பட்டது என கணக்காய்விற்குத் தெரியப்படுத்தியிருந்தும் 2022 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுக்கு இணங்க தரவு முறைமை நாளதுவரையாக்கப்பட்டிருந்தும் 2022 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொடுப்பனவு செய்யப்பட்ட நலன்பெறுர்கள் தொடர்பாக பாதீட்டு திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் தரவு முறைமை நாளது வரையாக்கப்படாததன் அடிப்படையில் அந்த நபருக்கு மீண்டும் விண்ணப்பங்கள் சிபாரிசு செய்யப்படும் ஆபத்து இன்னும் காணப்படுகின்றது. பதவிநிலை உத்தியோகத்தரினால் விண்ணப்பப் பத்திரத்தின் சரியான தன்மை பரீட்சிக்கப்பட்டிருந்தும் தரவு முறைமையை நாளதுவரையாக்குதல் மேற்பார்வை செய்யப்படவில்லை.

- ரூபா 26.8 மில்லியன் செலவு செய்து அம்பாறை சுற்றுலா விடுதி நிர்மாணிக்கப்பட்ட காணி 2022 மே மாதம் வரை தொழில் அமைச்சிற்கு பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் 2021 ஆம் ஆண்டின் போதும் ரூபா 5 மில்லியன் செலவு செய்து அக்காணியில் சாரதிகளுக்கு தங்குமிடம் வழங்குவதற்கு ஒரு இடத்தினை (Drivers Lodge) நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

- இலங்கை மத்திய வங்கியின் தொழில் ஆணையாளர் கணக்கில் காணப்பட்ட மீதியை தீர்த்துவைப்பதற்காக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 10 மில்லியனுக்கு மேற்பட்ட பெறுமதி செலவு வைக்கப்பட்ட நிறுவனங்களின் கணக்குகள் சரிசெய்யப்பட்டு தனித்தனி கணக்குகளுக்கு கணக்கீடு செய்வதற்காக ஒரு விசேட செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் இச்செயற்திட்டத்தினால் 23 நிறுவனங்களுக்குரிய ரூபா 920.12 மில்லியன் நிதி தீர்த்து வைக்கப்பட வேண்டி இருந்தது. 2021 செப்தெம்பர் 07 ஆந் திகதியில் உள்ளவாறு இந்த நிறுவனங்களுக்கு மத்தியில் 09 வலயங்களுக்குரிய 10 நிறுவனங்கள் தீர்த்துவைக்கவேண்டியிருந்த ரூபா 262.8 மில்லியனில் ரூபா 44.05 மில்லியன் மாத்திரம் தீர்த்துவைக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க தீர்த்துவைக்கும் சதவீதம் 52 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டதுடன் தீர்த்துவைக்காத பெறுமதி ரூபா 218.76 மில்லியனாக இருந்தது.

- செயற்பாட்டு இல்ல கட்டிடத்தில் ஸ்தாபிக்கப்பட்ட அலுவலகங்களிடமிருந்து ஸ்தாபிக்கப்பட்ட திகதியிலிருந்து 2021 திசெம்பர் 31 வரை ரூபா 171.46 மில்லியனான வாடகைப் பணம் தொழில் திணைக்களத்திற்கு நிலுவையாகக் காணப்பட்டது. 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தாது காணப்பட்ட இடவசதிகளின் அளவு 102,725 சதுர அடியாக இருந்ததுடன் அதில் 39,180 சதுர அடியின் மாதாந்த மதிப்பீட்டு வாடகை ரூபா 6.98 மில்லியனாகும். (4, 5, 28, 31 ஆகிய மாடிகளைத் தவிர்த்து) அதற்கிணங்க 2021 ஆம் ஆண்டிற்காக ரூபா 83.77 மில்லியன் வாடகை வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுதல்

- 2021 நவம்பர் 30 ஆந் திகதி வரை தொழில் இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்ட விபத்துக்களுக்கு மத்தியில் 140 பாரிய விபத்துக்கள் மற்றும் 424 பாரியதல்லாத விபத்துக்களுக்காக இழப்பீட்டினை அறவீடு செய்யும் நடைமுறை முடிவடைந்திருக்காததுடன் விபத்துக்கள் அறிவிக்கப்பட்டு 5 ஆண்டுகள் மிகைத்திருந்த 14 பாரிய விபத்துக்கள் மற்றும் பாரியதல்லாத 29 விபத்துக்களும் இவற்றுள் உள்ளடங்கியிருந்தன.

- தொழில் இழப்பீட்டு நீதி மன்றத்தின் தீர்ப்பிற்கு எதிராக மேன்முறையீடு செய்த 13 கோவைகள் தொடர்பாக சேவை கொள்வோரினால் இழப்பீட்டு அலுவலகத்தில் வைப்புச் செய்த ரூபா 4.95 மில்லியனுக்காக சேமிப்புக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 3.73 மில்லியன் தொகையான 10 சேமிப்பு வைப்புக்கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு 1 ஆண்டிற்கும் 4 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்தது.

- தொழிலில் ஈடுபட்டிருக்கும் போது இடம்பெறுகின்ற பாரிய விபத்தக்களின் காரணமாக மரணமடைந்த ஊழியர்களின் இளம் பிள்ளைகளுக்கான தகமையுள்ள இழப்பீட்டுப் பணத்தை அவர்களின் வயது முழுமையாடையும் வரை தேசிய சேமிப்பு வங்கியில் இழப்பீட்டு ஆணையாளரின் பெயரில் உள்ள நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டு வயது முழுமையடைந்ததன் பின்னர் அவர்களுக்கு விடுவித்தல் இடம்பெற வேண்டிய போதிலும் 2021 திசெம்பர் 20 ஆந் திகதி வரை காணப்பட்ட அவ்வாறு வயது பூரணமடைந்து விடுவிக்கப்படாத நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 6.1 மில்லியனாகும்.

- தீங்கு விளைவித்தலுக்கு உள்ளாகிய நபர்களுக்கு கிடைக்க வேண்டுமென இழப்பீட்டு நீதிமன்றத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் வழக்கு தீர்ப்பின் பிரகாரம் வேலை கொள்வோர் இழப்பீட்டுப் பணத்தை செலுத்தாமையின் காரணமாக 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் 46 வழக்குகள் ஆணைரீதியாகக் காணப்பட்டதுடன் அதன் மூலம் கிடைக்க வேண்டிய இழப்பீட்டு பணம் ரூபா 13.4 மில்லியனாகும். இதற்குள் ஆணை வழங்கப்பட்டு 10 ஆண்டுகளை மிகைத்த 10 வழக்குகள் தொடர்பாக ரூபா 1.87 மில்லியனும் 5 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட 21 வழக்குகள் தொடர்பாக ரூபா 6.92 மில்லியனும் 1 ஆண்டிற்கும் 4 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட 15 வழக்குகள் தொடர்பாக ரூபா 4.63 மில்லியனும் உள்ளடங்குகின்றன. இந்த வகையில் இழப்பீட்டு நீதிமன்றத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டிருந்தும் இழப்பீடு பெறுபவருக்கு இப்பணம் கிடைக்காமையின் அடிப்படையில் இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்தின் குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

கடமைகள் நிறைவேற்றப்பட்டிருக்காமை

- பிரதிபலன்கள் முறையாகக் கிடைக்காமை சம்பந்தமாக ஊழியர்களால் தொழில் ஆணையாளர் நாயகத்திற்கு செய்யப்பட்ட முறைப்பாடுகளில் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை விசேட புலனாய்வுப் பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்ட 2015 மற்றும் 2020 ஆம் ஆண்டுகள் தொடர்பாக தீர்த்துவைக்கப்படாத முறைப்பாடுகளின்

எண்ணிக்கை 96 ஆக இருந்ததுடன் அவை மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கையில் 31 சதவீதமாகும்.

- 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட தனியார் ஊழியர் சேமலாப நிதியத்தை பேணிவருகின்ற நிறுவனங்களின் எண்ணிக்கையானது கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 117 ஆகும். அத்திகதியில் உள்ளவாறு 30 நிறுவனங்களின் நிதியங்களிலுள்ள முழு மீதிகளின் மொத்தம் ரூபா 106,794 மில்லியனாகும். அந்த நிதியங்களை முறையாக ஒழுங்குபடுத்துவதற்கு தவறியமையால் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கையை சரியாக இனங்காணாமை, பங்களிப்பு பணத்தை செலுத்தாத சந்தர்ப்பங்கள் வெளிப்படுத்தப்பட்டமை, மிகைக் கட்டணங்கள் அமுல்ப்படுத்தப்பட்டமை, அந்த நிறுவனங்களின் உத்தியோகத்தர்களால் மோசடியாக பணம் பெற்றுக்கொள்ளப்பட்டமை, வேலை கொள்ளும் நிறுவனங்களின் யாப்புக்கள் சமர்ப்பிக்கப்படாமை, முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்காக நடவடிக்கை எடுக்காமை, மற்றும் நிதியத்தின் அங்கத்தவர்களது எண்ணிக்கை, செயற்திறனாக நடைமுறைப்படுத்தப்படாத நிறுவனங்கள்.∴ நிதியங்கள், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியங்களின் மீதி, நிலுவையான பங்களிப்பு பணத்தை இனங்கண்டு கொள்ளாமை, நிறுவனங்களை பரீட்சித்தமை தொடர்பாக முறையான தகவல்கள் சமர்ப்பிக்காமை, தனியார் ஊழியர் சேமலாப நிதிய பிரிவில் போதியளவு உத்தியோகத்தர்கள் இல்லாமை, அதிகாரச் சட்டத்தின் பிரிவுகள் நாளது வரையாக்கப்படாமை ஆகிய காரணங்களால் பல்வேறு சிக்கல்கள் உருவாகி இப்பிரிவின் நடவடிக்கைகள் செயற்பாடற்றுக் காணப்பட்டன.

- முறையான ஒழுங்குபடுத்துதல்கள் இல்லாததன் காரணமாக தென்னை பயிர்ச் செய்கை சபையின் அங்கீகரித்த ஊழியர் சேமலாப நிதியத்தின் ரூபா 73.8 மில்லியன் தொகையை அதன் உத்தியோகத்தர்கள் மோசடி செய்திருந்ததுடன் வரையறுத்த ஐக்கிய செய்திப் பத்திரிகை கம்பனி நிர்ணயிக்கப்பட்ட திகதியில் பங்களிப்பு பணத்தை செலுத்தாமையின் காரணமாக 2019, 2020, 2021 ஆகிய மூன்று ஆண்டுகளுக்காக ரூபா 107 மில்லியன் மிகைக் கட்டணத்தை செலுத்த வேண்டியிருந்தது.

பெறுகைகள்

- கட்டிட திணைக்களத்தினால் நிறைவேற்றுவதற்காக 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 397.4 மில்லியன் பெறுமதியான 13 ஒப்பந்தங்கள் தொழில் திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்தும் வழங்கிய நிர்மாணச்செயற்பாடுகளுக்கு மத்தியில் ரூபா 143.7 மில்லியன் பெறுமதியான 08 செயற்பாடுகள் தொழில் திணைக்களத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான அங்கீகரித்த பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

- “மெஹவர பியச” கட்டிடத்தை நிர்மாணித்த தனியார் நிர்மாணக் கம்பனியுடன் 2013 ஒக்தோபர் 03 ஆந் திகதி மேற்கொண்ட உடன்படிக்கைகளுக்கு இணங்க 36 மாதங்களில் நிர்மாண நடவடிக்கையை பூரணப்படுத்துவதற்கு இணங்கிக்

கொண்டிருந்த போதிலும் 2019 ஏப்ரல் 30 வரை தாமத கட்டணத்தை செலுத்துவதற்கு உட்பட்டு காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

- 2020 கணக்காய்வு அறிக்கையில் காட்டப்பட்டுள்ளவாறு 13 உள்ளக கொடுப்பனவு சான்றிதழ் (ஜீஊ) களுக்காக தாமதக் கட்டணமாக ரூபா 21.8 மில்லியன் உரிய தனியார் நிர்மாண கம்பனிக்கு 2020 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தும் ஒப்பந்தம் தாமதமடைந்தமை சம்பந்தமாக அந்த நிறுவனத்திடமிருந்து தாமதக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

சிரம வாசனா நிதியம்

பதுளை மாவட்டத்தில் தோட்ட ஊழியர்களுக்கு (Estate Labour Workers) சுகாதாரமான 200 மலசல கூடங்களை சரம வாசனா நிதியத்தால் நிர்மாணிப்பதற்காக திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்தில் உள்ள நிதியத்தின் நிதிகளிலிருந்து ரூபா 10 மில்லியன் பணம் 2021 பெப்ரவரி மாதத்தின் போது வழங்கப்பட்டிருந்தது. அதிலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 5.95 மில்லியன் பதுளை மாவட்ட செயலகத்தினூடாக நலன்பெறுனர்களுக்குச் செலுத்துதல் மற்றும் செயற்திட்டத்தின் ஏனைய செலவுகளாக ரூபா 0.23 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. 1988 இன் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதிய அதிகாரச் சட்டம் மற்றும் 2019 இன் 15 ஆம் இலக்க திருத்திய அதிகாரச் சட்டத்தின் குறிக்கோள்களின் பிரகாரம் சேவையில் ஈடுபட்டுள்ளோரின் மற்றும் அவர்களில் தங்கியுள்ளோர்களின் நலன்புரிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய போதிலும் அக்குறிக்கோள்களுக்கு முரணாக குறைந்த வருமானம் பெறும் 140 நபர்களுக்கு இந்த மலசலகூட செயற்திட்டத்தின் பிரதிபலன்கள் வழங்கப்பட்டதுடன் அது மொத்த பிரதிபலன்களின் எண்ணிக்கையில் 70 சதவீதமாகும்.

தேசிய நியமங்களைத் தோற்றுவித்தல்

2009 இன் 38 ஆம் இலக்க தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவனங்கள் அதிகாரச் சட்டத்தின் 3(1) (கா) உப பிரிவின் பிரகாரம் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறை தொடர்பான தேசிய நியமங்களை உருவாக்குவதற்கு தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையும் அந்த நியமம் உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

அங்கத்தவர்களின் தனித்தனி கணக்குகளுக்கு செலவு வைக்கப்படாத பணம்

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் சேமலாப நிதியத்தின் அங்கத்துவ நிதியத்தினுள் தொழில் ஆணையாளரின் பெயரில் காணப்பட்ட கணக்கில் சேவை கொள்வோருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு திணைக்களத்தினால் அறவிடப்பட்டிருந்த ரூபா 11,456 மில்லியன் பணம் மற்றும் அவ்வாறு வழக்கு தொடுத்து அறவீடு செய்யப்பட்டு தீர்த்துவைக்கப்படும் வரை பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்ட ரூபா 301 மில்லியன் பணத்தை ஒவ்வொரு அங்கத்தவரின் கணக்கிற்கும் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் சேவை கொள்வோரின் பெயரில் தனித்தனியாக பேணப்படுகின்ற "நடைமுறை

ஆண்டின் பங்களிப்பு பணம் இலக்கம் 01" கணக்கின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 70,832 மில்லியன் மீதியை உரிய அங்கத்தவர்களை இனங்கண்டு தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிறுத்திவைக்கப்பட்ட பிரதிபலன்கள் மற்றும் உரிமை கோரப்படாத பிரதிபலன்களாக ரூபா 956 மில்லியனும் குறைந்த∴ மிகையான பங்களிப்பு பணமாக ரூபா 2,117 மில்லியனும் குறைந்த∴ மிகையான பிரதிபலன் கொடுப்பனவாக ரூபா 353 மில்லியனும் அங்கத்துவ நிதியத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தும் அந்த மீதியை இனங்கண்டு தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த அங்கத்துவ கணக்குகளுக்கு செலவு வைக்கப்படாது காணப்பட்ட கணக்குகளை விரைவாகத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு 2013, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுவின் மூலமும் பணிப்புரை வழங்கப்பட்டிருந்தது.

மெஹவர பியச கட்டிடத்தின் உள்ளக ஆக்கங்களைத் தயாரித்தல்

மெஹவர பியசவில் அமைந்துள்ள ஊழியர் சேமலாப நிதியத்தின் அலுவலக வளவில் உள்ளக ஆக்கங்களை தயாரிக்கும் செயற்பாட்டிற்காக அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையை முறையாகப் பின்பற்றாது கட்டிட திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப் பட்ட ரூபா 135.3 மில்லியன் முழுக் கிரய மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு அந்த முழுப்பணமும் 2020 திசெம்பர் 31 இல் செலுத்தப்பட்டிருந்தும் 2022 ஏப்ரல் 30 வரை உள்ளக ஆக்கங்களைத் தயாரிக்கும் நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

முதலீட்டு நலன்கள் குறைவடைதல்

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் சேமலாப நிதியத்தினால் பட்டியல்ப்படுத்தப்பட்ட 11 கம்பனிகளில் மேற்கொண்ட ரூபா 7,386 மில்லியன் சாதாரண பங்குகளின் முதலீட்டிற்காக 2019, 2020 மற்றும் 2021 ஆகிய 3 ஆண்டுகளிலும் பட்டியல்ப்படுத்தப்பட்ட 08 கம்பனிகளில் மேற்கொண்ட ரூபா 9,486 மில்லியன் சாதாரண பங்குகளின் முதலீட்டிற்காக 2021 ஆம் ஆண்டின் போதும் பங்கிலாப வருமானங்கள் கிடைத்திருக்கவில்லை. 2010 ஆம் ஆண்டின் போது ஒரு விமானக் கம்பனியில் மேற்கொண்ட ரூபா 500 மில்லியன் முதலீட்டிற்காக உரிய முதலீடு செய்த சந்தர்ப்பத்திலிருந்து எதுவித வருமானமும் நிதியத்திற்கு கிடைத்திருக்கவில்லை.

மேலும் பட்டியல்ப்படுத்தப்படாத கம்பனிகளின் பங்கு முதலீடுகளிலிருந்து ரூபா 5000 மில்லியன் அதாவது 53 சதவீதம் 2013 ஆம் ஆண்டின் போது கென்வில் ஹோல்டிங்ஸ் ஹோட்டல் கட்டிடத் தொகுதியினை நிர்மாணிப்பதற்காக முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த ஹோட்டல் கட்டிட தொகுதியை நிர்மாணிப்பதற்கு தொடர்புபட்ட கிரேன்ஹயிட் கொழும்பு செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் 2020 யூலை மாதத்தின் போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் திட்டமிட்டவாறு 2021 திசெம்பர் 27 வரை ஹோட்டல் கட்டிட தொகுதியின் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனவே மேற்கூறப்பட்ட முதலீடு மேற்கொள்ளப்பட்டு 8 ஆண்டுகள் காலம் கடந்திருந்தும் அம்முதலீட்டிலிருந்து எந்த பிரதிபலனும் நிதியத்திற்கு கிடைத்திருக்கவில்லை. அவ்வாறே ஊழியர் சேமலாப நிதியத்தினால் 2021 ஆம் ஆண்டின் போது இடம்பெற்ற சாதாரண பங்கு விற்பனைகளிலிருந்து 05 கம்பனிகள் மேற்கொண்ட சராசரி கிரயம் ரூபா

93.39 மில்லியன் தொகையான பங்கு விற்பனைகளிலிருந்து ரூபா 53.76 மில்லியன் தொகையான மூலதன நட்டம் பெறப்பட்டிருந்தது.

ஊழியர் சேமலாப நிதியத்தினால் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பங்குச் சந்தையில் மேற்கொண்ட ரூபா 84,067 மில்லியன் தொகையான ஒட்டுமொத்த முதலீட்டில் ரூபா 9,681 மில்லியன் அல்லது 12 சதவீதம் ஹோட்டல் துறையிலுள்ள 11 கம்பனிகளில் முதலீடு செய்யப்பட்டது. அந்த முதலீட்டில் 2021 திசெம்ர் 31 இல் உள்ளவாறு சந்தைப் பெறுமதி ரூபா 2,660 மில்லியனால் குறைவடைந்திருந்தடன் அந்த முதலீட்டிற்காக 2021 ஆம் ஆண்டின் போது எதுவித பிரதிபலனும் கிடைத்திருக்கவில்லை. 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது இந்த முதலீட்டின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட பிரதிபலன்கள் முறையே ரூபா 103.18 மில்லியன் மற்றும் ரூபா 47.40 மில்லியன் அல்லது 2.47 சதவீதம் மற்றும் 0.98 சதவீதமாகும். மேலும் 7 கம்பனிகளில் மேற்கொண்ட ரூபா 3,174.54 மில்லியன் முதலீட்டிற்காக 2020 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது எதுவித பிரதிபலன்களும் கிடைத்திருக்கவில்லை.

ஊழியர் சேமலாப நிதியத்தினால் அங்கத்தவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்குதல்

நிதியத்தின் அங்கத்தவர்களுக்கு புதிய அடையாள அட்டைகளை வழங்குதல் மற்றும் மீண்டும் பதிவு செய்யும் கணனி நடவடிக்கைகளுக்காக 15,000 அட்டைகள் ரூபா 12.61 மில்லியனுக்கு 2008 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் இந்த அட்டைகள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளாது விளைவற்றுக்காணப்பட்டன. மேலும் இச்செயற்திட்டத்திற்காக ரூபா 17.67 மில்லியன் செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்ட 35 இயந்திரங்களில் 2 இயந்திரங்கள் கைதவிர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் மிகுதி 33 இயந்திரங்கள் சம்பந்தமாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

சுகாதாரப் பிரிவு

கணக்காய்வு அவதானிப்புக்கள்

- சுகாதார அமைச்சு
- மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சு.
- தேசிய ஔடதக் கட்டுப்பாட்டு அதிகாரசபை
- ஜெயவர்த்தனபுர பொது வைத்தியசாலை
- தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியம்
- சுதேச வைத்திய அபிவிருத்தி, கிராமீய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி மற்றும் சமூகச் சுகாதார இராஜாங்க அமைச்சு
- ஆயர்வேத திணைக்களம்

சுகாதாரப் பிரிவு

நாட்டின் பொருளாதார, சமூக, உளவியல் மற்றும் ஆன்மீக அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதுடன் தேகாரோக்கியமான சமூகமொன்றை உருவாக்குவதை நோக்கமாக கொண்டு, சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழ் செயற்படும் இராஜாங்க அமைச்சுகள் 3, திணைக்களம் 01, 13 நியதிச்சட்ட சபைகள்/நிறுவனங்கள் ஆகியவற்றால் பின்வரும் பணிகள் மற்றும் செயற்பாடுகள் நிறைவேற்றப் பட்டிருக்க வேண்டும்.

- சுகாதாரம் மற்றும் போசனை தொடர்பான விடயங்களை பாராளுமன்றம், நியதிச்சட்ட சபைகள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் கீழ் காணப்படும் விடயப் பொறுப்புகள் தொடர்பில் மேற்பார்வை மற்றும் மீளாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- பொதுச் சுகாதார சேவையுடன் தொடர்புடைய கொள்கை மற்றும் நியமங்களை தயாரித்தல்.
- பொதுச் சுகாதாரத்தையும் போசனையும் மேம்படச் செய்வதற்கு நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரிக்க செயற்படுத்துதல்.
- சர்வதேச தனிமைப்படுத்துதல், தூய்மைப்படுத்தலுடன் தொடர்புடைய சட்டதிட்டங்களை செயற்படுத்துதல்.
- தனியார் மருத்தவமனைகள், மருத்துவ நிலையங்களின் தரநிலை, நியமங்கள் மற்றும் விலைகள் தொடர்பான ஒழுங்குபடுத்தல் மற்றும் கண்காணிப்பு செய்தல்.
- இலாபம் உழைக்காத சனசமூக மருத்துவ சேவை நிறுவனங்களின் தொழிற்பாடுகளை ஒழுங்குபடுத்தல் மற்றும் கண்காணிப்பு.
- நோய்ப்பரவல், தொற்றுநோய் மற்றும் தொற்றல்லா நோய் நிலைமைகளைக் கட்டுப்படுத்தல், தடுத்தல் மற்றும் சிகிச்சைகளுக்கான செயற்பாடுகளை ஆரம்பித்தல்.
- பாடசாலைச் சுகாதார நிகழ்சித் திட்டத்துக்குரிய வைத்திய மற்றும் வாய்ச் சுகாதார சேவைகளைச் செயற்படுத்துதல்.
- பெருந்தோட்டத் துறை சார்ந்த சுகாதார சேவைகள் தொடர்பான நடவடிக்கைகள், பொதுவான தூய்மைப்பணிகள், திரீபோஷா பகிர்ந்தளித்தல் பணிகளை செயற்படுத்துதல்.
- அமைச்சின் கீழ் காணப்படும் சகல வைத்தியசாலைகள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்களை நிர்வாகித்தல்.
- பயிற்றுவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சகல திணைக்களங்கள் மற்றும் அச் சேவைகளை நிர்வகிக்க ஏற்பாடு செய்தல் மற்றும் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களை ஒன்றிணைத்தல்.
- தேசிய இரத்த பரிமாற்றல் சேவைகள் தொடர்பான நடவடிக்கைகள், ஔடத உற்பத்தி, இறக்குமதி மற்றும் விநியோகம் தொடர்பான நடவடிக்கைகள், இலங்கை மருத்துவ சேவையுடன் தொடர்புடைய நிர்வாகம் மற்றும் ஊழியர் முகாமைத்துவம்.
- மருத்தவ மற்றும் துணை மருத்துவ சேவைகளின் தரம் மற்றும் திறன் அபிவிருத்திக்குத் தேவையான பயிற்சி வழங்கி வாய்ப்புக்களை உருவாக்குதல்.
- சுகாதாரப் பிரிவுக்குரிய ஆய்வுகளை விரிவாக்குவதற்கான புதிய பொறி முறைகளை அறிமுகப்படுத்தல் மற்றும்

தேசி சுகாதார காப்புறுதி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான நடவடிக்கைகள்.

கொள்ளை நோய், தொற்றுநோய், மற்றும் தொற்றாத நோய் பரவுதலை கட்டுப்படுத்தல், தடுத்தல் மற்றும் 2021 ஆம் அண்டு மேற்குறித்த நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கு சுகாதார அமைச்சுக்கு மற்றும் அதன் கீழ் செயற்படும் 03 இராஜாங்க அமைச்சுகளுக்கும் திணைக்களத்திற்கும், மொத்தமாக ரூ.மில்லியன் 344,750 நிகர நிதி ஒதுக்கல் பாராளுமன்றத்தால் பெற்றுக் கொடுக்கப் பட்டிருந்ததுடன் மதிப்பீட்டாண்டு முடிவில் அதில் ரூ.மில்லியன் 313,766 மாத்திரம் பயன்படுத்தப் பட்டிருந்தது. இதன்படி வருட இறுதியில் ரூ.மில்லியன் 30,979 நிதி ஒதுக்கல் மிகுதியாகவிருந்தது. விபரம் உருவப்படம் 44 இல் காட்டப்பட்டுள்ளது.



விபரம்	நிகர ஒதுக்கல் ரூ.மில்லியன்	செலவு ரூ.மில்லியன்	மிகுதி ரூ.மில்லியன்
சுகாதார அமைச்சு	176,861	154,776	22,085
ஆரம்ப சுகாதார சேவை, பரவும் நோய்கள் மற்றும் கொவிட் நோய் கட்டுப்பாடு விடயங்கள் இராஜாங்க அமைச்சு	12,724	12,264	460
மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சு	151,980	144,081	7,899
உள்நாட்டு வைத்திய அபிவிருத்தி கிராமிய மற்றும் ஆயர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி பொதுச் சுகாதார இராஜாங்க அமைச்சு	417	393	24
ஆயர்வேத திணைக்களம்	2,769	2,251	518
மொத்தம்	417	393	1,002

உருவப்படம் 44 - பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த நிதி ஒதுக்கீட்டு அளவு மற்றும் செலவின்

மேற்குறித்த கருமங்கள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றியமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மாதிரிக் கணக்காய்வின்போது வெளிப்படுத்தப்பட்ட மிக முக்கிய அளவைக்குரிய கணக்காய்வு அவதானிப்புகள் தொகுக்கப்பட்டு பின்வருமாறு காட்டப்படுகிறது.

சுகாதார அமைச்சு

- அமைச்சுடன் இணைக்கப்பட்டிருந்த மற்றும் அமைச்சின் உள் அன்றைய தினம் வரை சேவையில் பணியாற்றிக் கொண்டிருந்த நிலையான பதவி நாமங்கள் குறிக்கப்பட்ட நிறைவேற்றதிகார வகுப்பைச் சார்ந்த 78 உத்தியோகத்தர்களுக்கான விசேட கொடுப்பனவை செலுத்துவதக்கு 2016 ஜுலை மாதம் 12 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அவ் அங்கீகாரத்தை அடிப்படையாக வைத்து அமைச்சுக்கு வெளியே வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார சேவை நிறுவனங்களில் பணியாற்றும் நிறைவேற்ற திகாரிகளுக்கு இக் கொடுப்பனவை செலுத்த முடியாது எனினும் அதற்கு எதிராக செயற்பட்டு 2022 பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி வரை கணக்காய்வுக்கு உற்படுத்தப்படவென தகவல்கள் வழங்கப்பட்டிருந்த நிறுவனங்கள் மற்றும் 40 வைத்தியசாலைகளில் பணியாற்றும் நிறைவேற்றதிகாரிகளுக்கு 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை 04 வருடங்களில் ரூ.மில்லியன் 20.41 விசேட கொடுப்பனவாக செலுத்தப் பட்டிருந்தது. அமைச்சினால் பல்வகைச் சேவைக் குழுக்கள் வெவ்வேறாக ஆராயப்பட்டு கொடுப்பனவுகள் செலுத்தப்பட திர்மாணிக்கப்பட்டிருந்ததன் காரணமாக கொடுப்பனவுகள் கொடுக்கப்பட வேண்டிய மற்றும் கொடுக்கப்படத் தேவையற்ற குழுமம் சரியாக இணங்காணப்படாமல் கொடுப்பனவுகள் செலுத்தப் படுவதாகவும், அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு தற்போது செலுத்தப்பட்டுவரும் சகல கொடுப்பனவுகள் தொடர்பாகவும் கடுமையான மீளாய்வு செய்யப்பட்டு கொடுப்பனவுகள் செலுத்தப் படவேண்டிய புதிய செயல்முறை ஒன்று 2017 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் செயற்படுத்தப்பட வேண்டும் எனவும், தேசிய சம்பளம் மற்றும் பணியாளர் ஆணைக்குழு 2016 ஜீன் மாதம் 04 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறிவுறுத்தியிருந்த போதிலும் 2022 ஏப்ரல் மாதம் 15 திகதி வரை அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக ஒரு மணித்தியாலத்துக்கு செலுத்தப்படும் இவ் விசேட கொடுப்பணவு புதிய சம்பளத் திட்டத்துக்கு அமைய திருத்தியமைப்பதற்கும், ஒரு மாதத்துக்கு செலுத்த முடியுமான ஆகக் கூடுதலான தொகையான ரூ. 10,000 என்ற கட்டுப்பாட்டு எல்லையை நீக்கி ஒரு மாதத்துக்கு 80 மணித்தியாலங்கள் வரை மேலதிக நேர வேலையில் ஈடுபட முடியுமான காலத்தை அதிகரிப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அந்த அங்கீகாரத்தை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செலுத்தப் படும்போது ஏற்கனவே காணப்பட்ட கொடுப்பனவுடன் ஒப்பிடும்போது அதிக கொடுப்பனவொன்று செலுத்தப் படவேண்டிய நிலை உருவாகி யுள்ளதுடன், எவரேனும் ஒரு உத்தியோகத்தர் அவரது வழமையான பணி தவிர்த்து மேலதிகமாக அவரை அப்

பணியில் உச்ச அளவில் ஈடு படுத்தினாலும் அவ் உத்தியோகத்தருக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட கொடுப்பனவுடன் ஒப்பிடுகின்றபோது நூற்றுக்கு 456 வீதம் முதல் நூற்றுக்கு 942 வீதம் வரையான மேலதிகமான பெறுமானமுடைய தொகையை பெறுவதற்கு முடியுமான இயலுமை பெறப்பட்டிருந்தது. மேலும் அமைச்சுக்கு வெளியே அமைந்துள்ள வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்களில் பணியாற்றும் நிறைவேற்று அதிகாரிகளுக்கும் இவ் அதிகரித்த கொடுப்பனவு செலுத்தப் பட்டிருந்ததுடன் 2022 பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி வரை கணக்காய்வுக்காக தகவல்களைச் சமர்ப்பித்திருந்த வைத்தியசாலைகள் மற்றும் 15 நிறுவனங்களில் பணியாற்றும் நிறைவேற்று அதிகாரிகளுக்கு 2021 ஆம் ஆண்டில் செலுத்தப் பட்டிருந்த விசேட கொடுப்பனவின் கூட்டு மொத்தத் தொகை ரூ. மில்லியன் 6.27 ஆக விருந்தது.

- வைத்திய நிர்வாக பட்டப் பின்படிப்பு தகைமையுடைய மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படாமல், ஏதேனும் பட்டப் பின்படிப்பு தகைமையுடைய எல்லா மருத்துவ உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் பல் மருத்து உத்தியோகத்தர்களுக்கும் பிரதி நிர்வாகப் பதவி நிலைகளுக்கு உள்வாங்கப் படுவதற்கு சமமான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டிருந்ததால் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப் பட்டிருந்த தகவல்களுக்கு அமைய 2021 ஏப்ரல் மாதம் 15 திகதி வரை நோய்த்தடுப்பு மற்றும் நோய் பராமரிப்புச் சேவை தொடர்பான நிபுணத்துவம் பெற்றிருந்த 79 மருத்துவ உத்தியோகத்தர்கள் அமைச்சின் நிர்வாக பதவிகளுக்கு நியமனம் செய்யப் பட்டிருந்தனர். ஆகையால் அம் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு நோய்த் தடுப்பு மற்றும் நோய் பராமரிப்பு சேவை தொடர்பான நிபுணத்துவத்தை பெற்றுக் கொள்வதற்கு அரசு செலவு செய்த பணம் வீணடிக்கப்பட்ட செலவாக மாறியுள்ளதுடன், நிபுணத்துவத்தைப் பெற்றுக் கொண்ட குறித்த பிரிவுகளில் சிகிச்சை மற்றும் நிவாரண சேவைகளை நடாத்திச் செல்வது தொடர்பாக நிபுணத்தவ மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான பற்றாக்குறை நிலவுவதாக தெரியவந்துள்ளது. சிரேஷ்ட மருத்துவ நிர்வாக பதவிக்கு நியமிக்கப்படத் தகுதிவாய்ந்தவர் யாரெனில் பிரதி மருத்துவ நிர்வாகப் பதவி வகுப்பில் 03 வருடங்களை பூர்த்தி செய்த மருத்துவ நிர்வாக மற்றும் சனசமூக மருத்துவ நிபுணத்துவம் பெற்ற உத்தியோகத்தர்கள் மட்டுமே இப் பதவிக்கு தகுதியுடையோராவர் என்பதுடன் வேறுவகையான பட்டப் பின்படிப்பு நிபுணத்துவத்தை உடைய பிரதி மருத்தவ நிர்வாக சேவைக்கு உள் வாங்கப் பட்டுள்ள மருத்துவ உத்தியோகத்தர்கள் ஓய்வூதிய காலம் வரும்வரை அப் பதவியிலேயே பணியாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ள காரணத்தால் மருத்துவ நிர்வாகம் தொடர்பாக நிபுணத்துவத் தைப் பெற்றுக் கொண்டு பிரதி மருத்துவ நிர்வாக வகுப்புத் தரத்துக்கு உள்வாங்கப் படுவதற்கு எதிர்பார்த்துக் காத்திருக்கும் உத்தியோகத்தர்களுக்கு அப் பதவியை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் கிடைக்காமல் போயுள்ளதுடன், 2021 நவம்பர் மாதம் 25 ஆம் திகதி வரை மருத்துவ நிர்வாக நிபுணத்துவம் பெற்ற 110 உத்தியோகத்தர்கள் நியமனங்களை எதிர்பார்த்திருப்பதுடன், அவ் உத்தியோகத்தர்கள் மருத்துவ நிர்வாக சேவைக்கு உள் வாங்கப்

பட்டிருக்கவில்லை என்பதும் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. அதன்படி மருத்துவ நிர்வாகம் தொடர்பாக நிபுணத்துவம் பெற்றுள்ள இவ் 110 உத்தியோகத்தர்களும் இது வரை நோய் தடுப்பு மற்றும் நோய்ப் பராமரிப்பு சேவைகளுடன் தொடர்புடைய பதவிகளில் ஈடுபடுத்தப் பட்டுள்ளார்களா அவ்வாரல்லாவிடின் எவ்வித பதவிக்கும் நியமிக்கப்படாமல் வேதனங்களும், கொடுப்பனவுகள் கொடுக்கப் படுகின்றனவா என வெளிப்படத்தப் படவில்லை. நாடு முழுவதும் நடாத்தப்பட்ட சமூக மருத்துவ விஞ்ஞானம் தொடர்பான 250 பதவிகளில் 160 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டது எனினும் சமூக மருத்துவ விஞ்ஞானம் தொடர்பான நிபுணத்துவம் பெற்ற 80 உத்தியோகத்தர்கள் மருத்துவ நிர்வாக பதவிகளுக்கு நியமிக்கப் பட்டிருந்தனர்.

- கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப் பட்டிருந்த தகவல்களுக்கு அமைய, 15 பதவிகளுக்கு நியமிக்கப் பட்டிருந்த **281** உத்தியோகத்தர்கள் முப்படை மருத்துவ மனைகள், சிறைச்சாலை மற்றும் பொலிஸ் மருத்துவமனை, ஸ்ரீமத் ஜெனரால் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழக வைத்தியசாலை, ஔடத உற்பத்தி விநியோகம் மற்றும் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சு, தொழிலாளர் அமைச்சு, உள்நாட்டு வர்த்தகம் உணவுப் பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சு, தேசிய ஔடதங்கள் தரப் பாதுகாப்பு பரிசோதனைக் கூடம் மற்றும் தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபை போன்ற அமைச்சுக்கு வெளியே அமைந்திருக்கும் வேறு 11 நிறுவனங்களின் பணிகளில் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர். அவ் உத்தியோகத்தர்கள் பூரணமாக அல்லது இரண்டாம் நிலை அடிப்படையில் அல்லது அந்த நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டு அந்த நிறுவனங்களில் சம்பளம் கொடுக்கப்படும் முறையொன்று செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை என்பதுடன், அவர்கள் அந்த நிறுவனச் செயற்பாட்டில் சேவையாற்று கின்றார்களா என்பது பற்றி உறுதிப் படுத்திக் கொள்ளாமல் அமைச்சினால் சம்பளங்களும், கொடுப்பனவுகளும் செலுத்தப் பட்டிருந்தன. அதன் காரணமாக அமைச்சுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கான வெற்றிடங்கள் உருவாகியுள்ளன எனினும் அப் பதவி வெற்றிடங்கள் நிறப்பப் படுவதற்கு முடியாமல் போயுள்ளன. 110 உத்தியோகத்தர்கள் 04 வருடத்தை விட அதிகமான காலம் அந் நிறுவனங்களில் பணிகளில் ஈடுபடுத்தப் பட்டிருந்ததுடன் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப் பட்டிருந்த தகவல்களுக்கு அமைய 2020 ஜனவரி மாதம் தொடக்கம் 2021 ஒக்டோபர் மாதம் வரையான 21 மாத காலத்தினுள் அவர்களின் பேரில் அமைச்சினால் செலுத்தப் பட்டிருந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் ரூ.மில்லியன் 615.24 தொகை திருப்பிச் செலுத்துதல் செய்யப்பட்டிருக்க வில்லை. 12 உத்தியோகத்தர்களுக்கு அமைச்சினால் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் செலுத்தப் பட்டிருந்ததுடன், அவ் உத்தியோகத்தரின் நிர்வாக நடவடிக்கைகள் அமைச்சினால் மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் முழுநேர பணிக்காக இணைக்கப் பட்டிருந்த இரண்டு மருத்துவர்களுக்கு அமைச்சினால் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் செலுத்தப் பட்டிருந்தன.

- கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப் பட்டிருந்த தகவல்களுக்கு அமைவாக, 2020 ஆம்

ஆண்டினுள் அமைச்சினால் செயற்படுத்தப் பட்டிருந்த 62 நிர்மாணப் பணிச் செயற்திட்டங்களில் மதிப்பீட்டுச் செலவு ரூ. மில்லியன் 31,650.38 பெறுமதிவாய்ந்த 30 செயற்திட்டங்களின் ஒப்பந்ததாரர் மற்றும் ஆலோசகர்/பொறியாளர் **(Contractor and Consultant/Engineer)** ஆகிய இரண்டு பதவிகளையும் ஒரே நிறுவனத்திடம் ஒப்படைக்கப் பட்டிருந்ததாகவும், அதன் காரணமாக செயற்திட்டமொன்றை மிக செயற் திறன் வாய்ந்ததாகவும் ஆக்க வளமுடையதாகவும் செயற்படுத்திக் கொள்ளுமுகமாகவும், செயற் திட்டத்தை செயற்படுத்தும் போது நியாயத் தன்மை, சுயாதீனத் தன்மை மற்றும் வெளிப்படைத் தன்மையைப் பாதுகாப்பதிலும் செல்வாக்குச் செலுத்தும் எனவும் தெரியவந்தள்ளது. 1991 ஆம் ஆண்டு சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் அவர்கள் பொறியாளர் செற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகத்துடன் கைச்சாத்திட்டு செய்துகொண்ட ஒப்பந்தத்தின் படி 2021 ஆம் ஆண்டு வரை ஆலோசனை நடவடிக்கைகள் போட்டியான விலை மனுக்கோரல் இன்றி குறித்த பணியகத்துக்கு கொடுக்கப் பட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டில் செயற்படுத்தப் பட்டிருந்த 62 செயற்திட்டங்களில் 52 செயற்திட்டங்கள் ஆலோசனை சேவை வழங்கும் பொறுப்பும் அதே பணியகத்துக்கு வழங்கப் பட்டிருந்தது. அதன்படியும் போட்டித் தன்மை ஊடாக பெறப்பட முடியுமாகவிருந்த பொருளாதார ரீதியான இலாபங்கள் இழக்கப் பட்டிருந்தன. அமைச்சினுள் மேலதிகச் செயளாலர் (பொறியாளர் சேவை) சிவில், இயந்திரங்கள் மற்றும் மின்னியல் பெறியாளர்கள், திட்டமிடல் வல்லுநர்கள் மற்றும் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் உட்பட நிர்மாணப் பணிகளுடன் தொடர்புடைய 43 உத்தியோகத்தர்கள் அடங்களான பொறியியல் பிரிவொன்று காணப்படுகின்ற அதேவேளை, நிர்மாணச் செயற்திட்டங்களுக்கும் அதேபோல் வைத்திய சாலை மூலம் வருடாந்தம் செயற்படுத்தப்படும் நவீனமயமாக்கல் மற்றும் பராமரிப்பு வேலைகளுக்கு திட்டமிடல் மற்றும் மதிப்பீடு தயாரித்தல் மற்றும் வேலைக் கண்காணிப்பு வேலைகளுக்கான கட்டனம் செலுத்தல் அடிப்படையில் பொறியியல் பணிகள் தொடர்பில் மத்திய ஆலோசனை பணியகம் போன்ற வெளிவாரியான நிறுவனங்களிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தன.

- 2017 ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதிய 03/2017 ஆம் இலக்கமுடைய பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம், சகல அரச நிறுவனங்களிலும் விரல் அடையாளத்தைப் பதிவு செய்யும் இயந்திரத்தை பாவிப்பதன் மூலம் உத்தியோகத்தர்கள் பணிக்கு சமூகமளித்தல் பணி முடிந்தபின் வெளிச் செல்லல் என்பவற்றை உறுதிப்படுத்தல் தொடர்பாக பதிவுகளைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன் 2017 மே மாதம் 12 ஆம் திகதிய DMS/0016 ஆம் இலக்கமுடைய திறைசேரிச் செயலாளரினால் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு எழுதப் பட்டிருந்த கடிதத்தின் பிரகாரம், சுகாதாரப் பணிக்குழுவின் வருகை மற்றும் வெளியேரலை உறுதிப்படுத்த முடியுமான விதத்தில் விரல் அடையாளத்தை பதிவுசெய்யும் இயந்திரத்தை 2017 ஜுலை மாதம் 01 ஆம் திகதி முதல் செயற்படுத்தாது விடின் தற்போதைய

சம்பளத்துக்கு அமைய மேலதிக நேர வேலைக்கான கொடுப்பனவை நிறுத்தி வைத்திருக்க வேண்டும். திறைசேரி செயலாளர் அனுப்பியிருந்த கடிதத்தில் கூறப்பட்டிருந்த விடயங்களுக்கு மாற்றமாக செயற்பட்டு விரல் அடையாளம் பதிவு செய்யும் இயந்திரம் பாவிப்பதைத் தவிர்த்து தற்போதைய சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டாண்டின் சம்பளத் தொகையாக ரூ. மில்லியன் 41,895 உம், மேலதிக நேர மற்றும் விடுமுறைக் காலச் சம்பளமாக ரூ. மில்லியன் 32,415 என்ற வகையிலும் கூட்டு மொத்தமாக ரூ.மில்லியன் 74,310 கொடுக்கப் பட்டிருந்தது. அதேபோல் மேலதிக நேர மற்றும் விடுமுறைக் காலச் சம்பளம் என்ற வகையில் செலவு செய்யப் பட்டிருந்த மொத்தத் தொகை சம்பளச் செலவில் நூற்றுக்கு 77 வீதம் என்ற அளவில் காணப்படுகிறது.

- 2021 ஆம் ஆண்டினுள் பயிற்சி பெறும் மருத்துவர் ஒருவருக்கு மாதாந்த பயிற்சிக் கொடுப்பனவாக ரூ.48,950 மற்றும் வாழ்க்கைச் செலவுப் படியாக ரூ.7,800 மட்டுமே செலுத்தப்பட முடியும் என்பதுடன், அமைச்சினால் மாகானசபை வைத்திய சாலைகளுக்கு பயிற்சிக்காக சேர்க்கப்பட்ட பயிற்சி பெறும் மருத்துவர்களுக்கு மாகானசபையால் கொடுக்கப்படும் அக் கொடுப்பனவு, அமைச்சினால் அம் மாகான சபைக்கு திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். அவ்வாரெனினும் 20 மாகான சபைகளில் 14 மாதிரி வைத்தியசாலைகளில் பயிற்சிபெறும் மருத்துவர்களுக்கு மாதாந்த பயிற்சிக் கொடுப்பனவு மற்றும் வாழ்க்கைச் செலவுப் படி மட்டுமல்லாது மேலதிகமாக ரூ.750 மாதாந்தக் கொடுப்பனவொன்றும் செலுத்தப் பட்டிருந்தது. மேலும் 2019 ஏப்ரல் 22 ஆம் திகதியிடப்பட்ட 09/**2019** ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்ட ரூ. 2,500 க்கான மாதாந்தக் கொடுப்பனவு பயிற்சி பெறும் மருத்துவர்களுக்கு செலுத்த முடியாத போதிலும், 11 மாகாண சபை வைத்தியசாலைகளில் பயிற்சி பெறும் மருத்துவர்களுக்கு குறித்த கொடுப்பனவும் செலுத்தப் பட்டிருந்தது. அதன்படி பயிற்சி பெறும் மருத்துவர்களுக்கு சட்டரீதியாக உரித்துடையதல்லாத கொடுப்பனவு ரூ. மில்லியன் 8.47 தொகை 2021 ஆம் வருட காலத்தினுள் மட்டும் குறித்த மாகானசபையால் செலுத்தப் பட்டிருந்ததுடன் குறித்த தொகையை அமைச்சு மாகாண சபைக்கு திருப்பிச் செலுத்தியிருந்தது.

- ஹொரண ஆதார வைத்தியசாலையின் ஆறு மாடி சத்திர சிகிச்சைக்கூட கட்டிட நிர்மாணப் பணிகளுக்காக இலங்கை அரச பொறியாளர் கூட்டுத்தாபனம் 2015 செப்தெம்பர் மாதம் 16 ஆம் திகதி கொடுத்திருந்த ரூ. மில்லியன் 1,333.04 ஆரம்ப மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் நிலையான தொழிநுட்ப மதிப்பீட்டுச் சபையின் அங்கீகாரத்தின் கீழ் வடிவமைத்து நிர்மாணிக்கும் அடிப்படையில் ரூ. மில்லியன் 1,333.04 வரியுடன் கூடிய ஒப்பந்தப் பெறுமதிக்கு 24 மாதத்தினுள் பணிகளை நிறைவுறச் செய்யும் நிபந்தனையின் கீழ் 2017 நவம்பர் மாதம் 27 ஆம் திகதி இலங்கை அரச பொறியாளர் கூட்டுத்தாபனத்துக்கு அவ் ஒப்பந்தம் வழங்கப் பட்டிருந்தது. ஒப்பந்தம் வழங்கள் கடிதத்தின்படி **14** நாட்களுக்குள் பணிகள் ஆரம்பிக்கப் பட்டிருக்க வேண்டும் எனினும், நிர்மாண பூமில் காணப்பட்ட பிரச்சினைகள் காரணமாக பணிகளை ஆரம்பிக்க முடியாது என நன்கு அறிந்த நிலையில் அதை கவனத்தில் எடுக்காமல் 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி பணிகளை ஆரம்பிப்பதற்கான

முன்பணமாக வரி உள்ளடங்களான ரூ. மில்லியன் 221.14 தொகை ஒப்பந்ததாரருக்கு செலுத்தப் பட்டிருந்ததுடன், அரச நிதி ஒதுக்கல் வழிகாட்டற் கோவையின் 8:9:1 ஆம் வழிகாட்டலின் படி முறையான ஒப்பந்தக் கைச்சாத்திடல் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. பணித்துவக்க முன்பணம் செலுத்தப்பட்ட திகதியிலிருந்து 06 மாதங்களுக்கு பின் பணிகள் ஆரம்பிக்கப் பட்டிருந்தன. இவ் ஒப்பந்தத்தின் பேரில் 2019 ஆம் ஆண்டில் ரூ. மில்லியன் 19,065 தொகை ஏற்பாடு செய்யப் பட்டதன் பின் 2022 ஆம் ஆண்டு வரை நிதி ஏற்பாடு செய்யப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. நிர்மாணப் பணிகளில் சந்தோசப் படக்கூடிய வளர்ச்சிப் பொக்குகள் காணப்படாத காரணத்தால் பணித் துவக்க முன் பணத்தில் இருந்து ரூ. மில்லியன் 4.82 இற்கான பணிகள் மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் 2022 ஜனவரி மாதம் 25 ஆம் திகதி வரையிலும் பணிகள் முடிவுறுத்தப் பட்டிருக்கவில்லை. 2016 ஜுன் மாதம் 15 ஆம் திகதி இலங்கை அரச பொறியாளர் கூட்டுத்தாபனம் ரூ.மில்லியன் 2,465.99 திருத்தப்பட்ட செலவு மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப் பட்டிருந்ததுடன் குறித்த மேலதிக மதிப்பீட்டுடன் தொடர்புடைய தகவல்களை இலங்கை அரச பொறியாளர் கூட்டுத்தாபனம் வழங்கியிருக்காததன் காரணமாக அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டின் மீது மேற்கொள்ளத்தக்க விடயங்களை நிறைவடையச் செய்வதற்கு 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.

- 2021 ஜனவரி மாதம் தொடக்கம் 2022 ஜனவரி மாதம் வரையான ஒரு வருட காலத்தில் களுத்துறை போதனா வைத்தியசாலை நோயாளர்களுக்கும் கணிஷ்ட ஊழியர்களுக்கும் சமைக்கப்பட்ட உணவு வழங்குவதற்கு தேவையான சமையலுக்கான பொருட்களை வழங்குநர்கள் இருவர் வழங்கியிருந்தனர். 2020/2021 மற்றும் 2021/2022 ஆகிய வருடங்களுக்கான உணவு பழங்கள் மற்றும் வேறு சாமான்கள் முறையே 111 மற்றும் 148 க்கான மாதந்த தெவைப்பாடுகள் கண்டறியப் பட்டிருந்தது எனினும் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப் பட்டிருந்த 2021 ஆம் வருடத்தின் முதல் 4 மாதங்களில் வழங்கப்பட்ட சமைக்கப்படாத பொருட்கள் தொடர்பாக கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கு அமைய, கொள்வனவுக் கட்டளையிடப்பட்ட அளவு மாதாந்த தேவையின் நூற்றுக்கு 75 வீதத்தை விட அதிகமான உருப்படிகள் மிகக் குறைந்த அளவிலும், 04 மாதத்தினுள் கொள்வனவுக் கட்டளையிடப்படாத உருப்படிகளின் எண்ணிக்கை மொத்த உருப்படிகளின் நூற்றுக்கு 45 வீதம் அளவு எனவும், அவ்வாறு கொள்வனவுக் கட்டளையிடப்படாத உருப்படிகளுக்காக 04 மாதங்களுக்கும் ஒப்பந்தப் பெறுமதி ரூ. 1,978,640 எனவும் தெளிவாகியுள்ளது. அதேபோல் முதல் 04 மாதங்களில் உண்மையாகவே விநியோகிக்கப்பட்ட சமைக்கப்படாத உணவுப் பொருட்களின் பெறுமதியானது மதிப்பீடு செய்யப்பட்ட மாதாந்த தேவைப் பெறுமதியின் நூற்றுக்கு 47 வீதம் அளவில் காணப்படுகிறது. அதன்படி எந்தவொரு தர்க்கரீதியான முறையொன்றையும் பின்பற்றாமல் மாதாந்த உருப்படிகளுக்கான தேவை மதிப்பீடு செய்யப் பட்டுள்ளது எனவும், அதனூடாக பெறுகை செயற்பாடு சிக்கல் நிலைக்குத் தள்ளப்பட்டு போட்டித் தன்மை மட்டுப்படுத்தப் பட்டுள்ளது எனவும், இந் நிலைமை பற்றி புரிந்து வைத்துள்ள சில ஒப்பந்ததாரர்கள் வைத்தியசாலையால்

கொள்வனவுக் கட்டளையிடப்படாத மற்றும் குறைந்த அளவில் கட்டளையிடப்படும் பொருட்களுக்கு குறைந்த விலையும், அதிகமாக கட்டளையிடப்படும் பொருட்களுக்கு அதிக விலையும், சமர்ப்பித்து வழங்கள் ஒப்பந்தத்தை பெற்றுக் கொள்வதாகவும், ஒப்பந்ததாரரால் ஒப்பீட்டளவில் குறைந்த அலகுவிலை குறிப்பிடப்பட்ட பொருட்கள் கொள்வனவிலிருந்து வைதியசாலை அதிகாரிகள் தவிர்ந்து நடந்துள்ளனர் எனவும், தேவையற்ற உருப்படிகளை நீக்கிவிட்டு பகுப்பாய்வு மதிப்பீடொன்றை தயாரிப்பதன் மூலம் இப் பெறுகையை பிரதேச பெறுகைக் குழுவிடம் ஒப்படைத்து தாமதங்களைத் தவிர்த்துக்கொள் முடியும் எனவும் தெரியவந்துள்ளது. ஊழியர்களின் உணவு வீணடிக்கப் படுதலலை குறைத்துக் கொள்வதற்கு ஏதேனும் அளவு உணவை நீக்கிவிடும் முறையொன்று கடைப்பிடிக்கப் பட்டிருக்கவில்லை என்பதால் கணக்காய்வு செய்யப்பட்ட 2022 ஜனவரி மாதம் 10 ஆம் திகதி முதல் 2022 ஜனவரி மாதம் 21 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் சமைக்கப்பட்ட உணவு பெரும் அளவில் மீதியாக இருந்துள்ளதுள்ளதாகவும், சில தினங்களில் சமைக்கப்பட்ட சோறு 34 கிலோவை விட அதிகமான அளவில் மீதியாக இருந்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. 2022 ஜனவரி மாதம் 10 கணக்காய்வு ஆரம்பிக்கப்பட்ட தினம் காலை, பகள் மற்றும் இரவு ஊழியர்களுக்கான உணவுக் கட்டளை விடுக்கப்பட்டவர் தொகை முறையே 300 ஆகவும், 280ஆகவும், மற்றும் 85ஆகவும் இருந்ததெனினும் **2022** ஜனவரி 20 ஆம் திகதியன்றளவில் அவ் ஊழியர் தொகை முறையே 110 ஆகவும், 225 ஆகவும் மற்றும் 65 ஆகவும் குறைப்பதற்கு முடிந்துள்ளது. அதன்படி வைத்தியசாலை அதிகாரிகள் ஊழியரகளுக்கான உணவு பெற்றுக் கொடுக்கும் இச் செயற்பாட்டை ஒரு முறையான கண்காணிப்புக்கு உட்படுத்தியிருந்தால் ஊழியர் உணவுக்காக வருடாந்தம் செலவழிக்கப்படும் செலவை நூற்றுக்கு 40 வீதம் குறைத்தக் கொள்வதற்கு முடியுமாக இருந்தமை தெரியவந்துள்ளது.

- தேசிய வரவு செலவுத் திணைக்களம் அங்கீகாரம் வழங்கியிருந்த ரூ. மில்லியன் 40 விட எல்லை தாண்டி ஒரு அலகுக்கு ரூ.மில்லியன் 10.6 வீதம் ரூ.மில்லியன் 53 செலவு செய்து குளிரூட்டப்பட்ட 54 ஆசனங்களைக் கொண்ட 05 சொகுசு பஸ் வண்டிகள் 05 தாதிப் பயிற்சிக் கல்லூரிகளுக்கு 2018 ஏப்ரல் மாதம் கொள்வனவு செய்யப் பட்டிருந்தன. சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்படாமல் கொள்வனவு செய்யப்பட்ட இவ் பஸ் வண்டிகள் தாதிப் பயிற்சிக் கல்லூரிகள் அமைந்திருக்கும் பிரதேச விதிகளில் பயணிக்க மடியாத காரணத்தாலும், சில தாதிப் பயிற்சிக் கல்லூரி வளாகத்தினுள் உட்செல்ல முடியாத காரணத்தாலும், பல்வேறு தொழிநுட்ப கோலாறுகள் காரணமாகவும் குறை பாவனையில் தரித்து நிறுத்தப் பட்டுள்ளது. 2018 ஏப்ரல் மாதம் முதல் 2021 டிசெம்பர் 31 ஆம் திகதிவரையான கடந்த 44 மாதங்களாக 05 பஸ் வண்டிகளும் பிரயாணம் செய்திரந்த மொத்த தூரம் 94,260 கிலோ மீட்டர் மாத்திரம் என்பதுடன் பஸ் வண்டியொன்று ஒரு மாத காலத்தில் பிரயணம் செய்திருந்த பொதுவான தூரம் 428 கிலோ மீட்டர் மாத்திரமேயாகும். அதேபோல் எரிபொருள் ஒரு லீட்டருக்கு 1.2 கிலோ மீட்டர் தொடக்கம் 3 கிலோ மீட்டர் வரையான தூர அளவு பயணித்துள்ளதை தினப் பதிவுக் குறிப்பு

அட்டவனையில் இருந்த தரவுகள் மூலம் தெரிய வந்துள்ளது.

- 2021 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட கிரயத்தின் மீதான வரி (திருத்தச்) சட்டத்தின் 8(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் செயலாளரின் வேண்டுகோலுக்கு பதில் அளக்கும் விதத்தில் 2020 மே மாதம் 20ஆம் திகதி முதல் அமுலாகும் விதத்தில் கொவிட் 19 நோய்ப் பரவலுக்கு மத்தியில் சுகாதர சேவை வழங்குவதற்கு தேவைப்பட்ட மருத்துவ, அறுவைச் சிகிச்சைம மற்றும் பற்சிகிச்சை உபகரணங்கள், உதிரிப் பாகங்கள், தொழிநுட்ப உதிரிப் பாகங்கள், உதிரிப் பாகங்கள் மற்றும் அவற்றின் பாகங்கள் உள்ளடங்கிய இயந்திராதிகள் பொருத்துதல்கள், மரத்துவ மனை அல்லது மருத்துவ தளபாடங்கள் மற்றும் ஔடதங்கள், இரசாயனப் பொருட்கள் மற்றும் அது போன்ற பொருட்டகள் பெறுமதி சேர்க்கப்பட்ட கிரயம் மீது வரி விடுவிப்பு செய்யப் பட்டிருந்தது எனினும், அது பற்றி அமைச்சின் கிழ் காணப்படும் நிறுவனங்கள், வைத்தியசாலைகள் மற்றும் செயற்திட்டங்களுக்கு அறிவிக்கப் பட்டிருக்கவில்லை என்பதுடன் அது தொடர்பாக மீளாய்வொன்று செய்யப் பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக 2020 மற்றும் 2021 ஆகிய வருடங்களில் உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி உதவிகளின் கீழ் செயற் படுத்தப் பட்டிருந்த 04 செயற்திட்டங்கள் மூலம் கொவிட் 19 நோய்ப் பரவலை கட்டுப் படுத்துவதற்கு கொள்வனவு செய்யப் பட்டிருந்த மருத்துவ வழங்களின் பேரில் ரூ.மில்லியன் 130.57 பெறுமதி சேர்க்கப்பட்ட வரி 74 விநியோகத்தர்களுக்கு வழங்கப் பட்டிருந்தன. அதற்கு மேலதிகமாக, அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் 2020 ஜுன் மாதம் தொடக்கம் 2021 ஆகஸ்ட் மாதம் வரையான காலப் பகுதியில் ரூ.மில்லியன் 159.10 பெறுமதி சேர்க்கப்பட்ட வரியை மூன்று வழங்குநர்களுக்கு செலுத்தி யிருந்ததாக **FIB/05/2021** ஆம் இலக்கமுடைய 2022 பெப்ரவரி 02 திகதியுடைய உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது உறுதிப் படுத்தப் பட்டுள்ளது.

- அமைச்சு மற்றும் அதன்கீழ் காணப்படும் வைத்திய சாலைகள் மற்றும் ஏனைய 60 சுகாதார நிறுவனங்களுக்குறிய காணிகள் மற்றும் கட்டிடங்களின் பயன்பாடு தொடர்பில் கணக்காய்வு செய்வதற்கு கேட்கப் பட்டிருந்த தகவல்கள், அமைச்சு உள்ளடங்களாக ஏனைய வைத்திய சாலைகள் மற்றும் 25 நிறுவனங்கள் அவ் அறிக்கைத் திகதி வரையிலும் சமர்ப்பித்திருக்கவில்லை.

  வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய 35 சுகாதார நிறுவனங்கள் சமர்ப்பித்திருந்த தகவல்களின் படி 02 வைத்தியசாலைகளுக்குச் சொந்தமான காணிகளுக்கு முறையான உறுதிகள் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை என்பதுடன் 03 வைத்திய சாலைகளுக்குரிய காணிகள் சம்மந்தமாக அரச அங்கீகாரம் பெற்ற நில அளவையாளர் திட்ட வரைபடத்தை தயார் செய்திரக்கவில்லை. அதேபோல் 19 வைத்தியசாலைகள் கொண்டுள்ள காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கேடுகளில் பதியப் பட்டிருக்கவில்லை. கண்டி தேசிய வைத்தியசாலைக்குறிய காணிகளில் 169 குடும்பங்கள் அளவிலும், இரத்தினபுரி போதநா வைத்தியசாலைக் காணிகளில் 36

குடும்பங்களும், முள்ளேரியா கிழக்கு கொழும்பு ஆதார வைத்திசாலைக்குறிய காணிகளில் 40 குடும்பங்களும், காலி கராப்பிடிய போதநா வைத்திய சாலைக்கு உரிய 0.1764 ஹெக்டேயர் 04 காணித் துண்டுகளில் 04 குடும்பங்களும், நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்குறிய 0.4401 ஹெக்டேயரின் 07 பிரிவுகளில் 12 நபர்களும், கம்பளை ஆதார வைத்திசாலைக்குச் சொந்தமான மதிப்பீடு செய்யப்படாத 05 பேர்ச் காணித்துண்டில் ஒரு நபரம் அத்துமீறி குடியிருந்து வருகின்றனர். எனினும் அத்துமீறி குடியிருப்பவர்களை வெளியேற்றி காணித் துண்டுகளை மீளப் பெற்றுக் கொள்ள பொறுப்பான தரப்பினர் முறையான மற்றும் போதுமான நடவடிக்கைகள் எடுக்கவில்லை. கேகாலை பொது வைத்தியசாலைக்குறிய 225 சதுர அடி நிர்வாகக் கட்டிடம் 2007 ஆம் ஆண்டு முதல் ரூ.8,500 மாதாந்த வாடகைக்கு இலங்கை வங்கிக்கும், பெறுமதி மதப்பீடு செய்யப்படாத எனினும் அன்னலவாக ரூ.மில்லியன் 20.00 அளவு பெறுமதி வாய்ந்த நாதெனிய வத்த என்ற காணியிலிருந்து **40** பேர்ச் அளவுடைய காணித் துண்டை 50 வருடத்துக்கும் அதிகமான காலமாக இலங்கை மின்சார சபைக்கும் காலி கராப்பிட்டிய போதநா வைத்தியசாலைக்குச் சொந்தமான காணியிலிருந்து 20 பேர்ச் அளவு காணியை 1996 ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி முதல் கராப்பிட்டிய மக்கள் வங்கிக்கு பெற்றுக் கொடுக்கப் பட்டிருந்தது எனினும், அதற்குறிய எழுத்து மூலமான ஒப்பந்தம் அல்லது ஒப்படைக்கப்பட்டதற்கான கடிதம் அவ் வைத்தியசாலையில் காணப்படவில்லை. கண்டி தேசிய வைத்தியசாலைக்குச் சொந்தமான காணியில் பொலிஸ் திணைக்களத்தினால் அமைக்கப்பட்ட ஹன்தான சிசில கட்டிடம், ஹெந்தல குஷ்டரோக வைத்தியசாலைக்குறிய காணியின் அளவு மற்றும் பெறுமதி உறுதிப்படுத்தப் படாத காணிகளில் லயன்ஸ் கிலப், ஹேகிஸ்த கிரிஸ்துராஜ வித்தியாலயம், ரனவிரு சம்பத் கேந்ரய, இந்துக் கோயில், கங்காதிலக்க விஹாரை, கடற்படை பொலிஸ் பிரிவு போன்ற நிறுவனங்கள் நிறுவப் பட்டிருக்கிறது எனினும் குறித்த காணிகளை நெறிப்படுத்திக் கொள்வதற்கு அல்லது அறுதியிட்டுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.

- காசல் வீதியில் மகளிர் வைத்தியசாலை 2018 ஆகஸ்ட் மாதம் தொடக்கம் 2019 ஜனவரி மாதம் வரையான காலப் பகுதிக்காக வைத்தியசாலையின் தூய்மைப் படுத்தல் சேவையை பெற்றுக் கொண்டதன் பேரில் பணம் செலுத்தும்போது தூய்மைப் படுத்தல் சேவை வழங்கும் ஊழியர்களின் மாதாந்த வருகை பதிவுப் புத்தகம் மற்றும் சம்பள அறிக்கை பரிசோதிக்கப் படாமல் பணம் செலுத்தப் பட்டிருந்ததன் காரணமாக ரூ. மில்லியன் 3.85 உம், 2018 ஜுலை மாதம் 16 ஆம் திகதியுடைய 2080/22 ஆம் இலக்க விசேட வர்த்தமானியின் பிரகாரம் தூய்மைப் படுத்தல் சேவை தொழிற்சாலை சேவையில் ஈடுபட்டு வந்தவர்களுக்கு அரசாங்கம் அதிகரித்திருந்த கோடுப்பனவு செலுத்தல் சம்பந்தமாக அமைச்சின் பெறுகைக் குழு 2018 டிசெம்பர் 17 ஆம் திகதியிடப்பட்டு வழங்கியிருந்த 04 நிபந்தனைகளுக்கு எதிராக சம்பள மீதி வழங்கியதன் காரணமாக ரூ.மில்லியன் 3.35 என்ன வகையிலும் மொத்தமாக ரூ.மில்லியன் 7.20 வழங்குநருக்கு மேலதிகமாக செலுத்தியுள்ளனர்.

மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சு.

- 2021 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை மருத்துவ விநியோக முகாமைத்துவ தகவல் தொகுதியினுள் 21,678 மருத்துவ விநியோக உருப்படிகள் தரவேற்றம் செய்யப் பட்டிருந்தன. வேண்டுகோல் விடுக்கப்பட்ட அளவுத் தொகை மாற்றமடைந்தமை, அவசர கொள்வனவுக் கட்டளை விடுக்கப்பட்டமை, உள்ளடக்கத்தின் உறையிடல் மாற்றமடைந்தமை, வில்லைகளுக்குப் பதிலாக காப்ஸ்யூல் விநியோகம் செய்யப்பட்டமை, சபையின் அனுமதியின்றி சில உருப்படிகள் மூலப்பொருளாக பாவிக்கப் பட்டமை, மற்றும் விநியோகஸ்தரின் விவரக்குறிப்பு மாற்றமடைந்தமை போன்ற பல்வேறு தேவைப்பாடுகளின் பேரில் மருந்துகளின் வேதியியல் சூத்திரம் மதிப்பீட்டுச் சபையின் அனுமதி பெறப்படாத நிலையில் 8,258 மருத்துவ விநியோக உருப்படிகள் கணினித் தொகுதிக்குள் உற்புகுத்தப் பட்டிருந்தன. அதன்படி கணினித் தொகுதிக்கு உற்படுத்தப்பட்டிருந்த மொத்த மருத்துவ விநியோக உருப்படிகளின் எண்ணிக்கைகளில் நூற்றுக்கு 38 வீதமானவை வேதியியல் சூத்திர மதிப்பீட்டு சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப் படாத உருப்படிகளாக இருந்தது. அதேபோல் மருத்துவ விநியோகப் பிரிவு 2021 ஆம் ஆண்டுக்கான வேதியியல் சூத்திர மதிப்பீட்டுச் சபையின் அங்கீகாரம் பெறப்படாமல் 104 உருப்படிகளை ரூ.மில்லியன் 67,520 செலவில் மருத்துவ விநியோகப் பிரிவு கொள்வனவு செய்திருந்தது.
- 2022 ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதியளவில் இருப்புத் தொகை பூச்சியமான முக்கியமான (Vital) மருந்தப் பொருலொன்றான இதய நோய்க்கு பயன்படுத்தப்படும் **Streptokianse** ஊசி மருந்தின் 2022 ஆம் ஆண்டுக்கான கொள்னவுக் கட்டளை 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திடம் விடுக்கப் பட்டிருந்தபோதிலும் வழங்குநர்களால் விலைமனு சமர்ப்பிக்கப் படாத காரணத்தால் இரண்டு முறை டெண்டர் இரத்து செய்யப்பட்டு மீண்டும் விலைமனு கோரப் பட்டிருந்தது. 2022 மார்ச் மாதமளவிலும் டெண்டர் மதிப்பீடு மட்டத்தில் காணப்பட்டது ஆகையால் சரக்கிருப்பு மட்டம் நலிவுற்றுக் காணப்பட்டது.

- **Streptokianse** தடுப்பூசி பாவிக்கும்போது ஏற்பட்டிருந்த பக்கவிளைவு காரணமாக அத் தடுப்பூசிக்குப் பதிலாக **Tenecteplase 40mg** தடுப்பூசி கொள்வனவு செய்யப் பட்டிருந்தது. **Tenecteplase 40mg** தடுப்பூசியை பெறுவதற்கு முன்னைய வருடத்தில் பிறப்பிக்கப்பட்ட கொள்வனவுக் கட்டளையின் மூலம் கிடைக்கவிருக்கும் தொகை போதுமான அளவாக காணப்படுவதால் 2022 ஆம் ஆண்டுக்காக சமர்ப்பிக்ப்பட்ட கொள்வனவுக் கட்டளையை இரத்து செய்வதற்கு 2021 செப்தெம்பர் மாதம் 14 ஆம் திகதி மருத்துவ வழங்கள் பிரிவு தீர்மாணித்திருந்தது. எனினும் 2022 ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதியளவில் மருத்துவ வழங்கள் பிரிவினுள் 02 மாதத்துக்கும் குறைவான காலத்திற்கு இருப்பு காணப்பட்டதால் இருப்பு தட்டுப்பாடு உருவாகி இருந்தது.
- கொள்வனவுக் கட்டளை பிறப்பிக்கப் பட்டு 24 மாதங்களையும் விட அதிகமான காலத்தின் பின் கடன் சான்று பிரப்பிக்கப் பட்டிருந்ததாலும் பல்வேறு காரணங்களால் கொள்வனவுக் கட்டளை திருத்தப் பட்டிருந்த காரணத்தாலும் மயக்க மூட்டல் நடவடிக்கைகளுக்கு பயன்படத்தப்படும் **Suxamethonium chloride** ஊசி மருந்து

2022 ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதியளவில் மருத்தவ விநியோக பிரிவில் 02 கிழமையை விட குறைந்த காலத்துக்கு போதுமான அளவே இருப்புத் தொகை காணப் பட்டதுடன் வைத்திசாலையின் உள்ளே 02 மாதங்களை விட குறைவான காலத்துக்குப் போதுமான கையிருப்பே காணப்பட்டது.

- கொள்வனவுக் கட்டளை பிறப்பிக்கப் பட்டு 27 மாதங்களை விட அதிகமான காலம் கடந்ததன் பின் கடன் சான்று பிறப்பிக்கப் பட்டுள்ளமை, பல்வேறு காரணங்களால் கொள்வனவுக் கட்டளை நிராகரிக்கப் பட்டிருந்தமை மற்றும் 2022 ஆம் ஆண்டுக்கான எவ்வித கொள்வனவுக் கட்டளையும் மருத்துவ வழங்கள் பிரிவு சமர்ப்பித்திருக்க வில்லை போன்ற காரணத்தால் அத்தியவசிய மருந்தேன்றான ஒவ்வாமைக்கு எதிராக பாவிக்கப்படும் **Cetirizine HCL** திரவ மருந்தான 2022 ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி கையிருப்பு முற்றாக தீர்ந்து இருந்ததுடன் வைத்திய சாலைகளில் 05 வாரங்களுக்கு மாத்திரம் போதுமானதாக இருப்பு காணப்பட்டது. 2022 ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதியளவில் காஸல் வீதி மகளிர் மருத்துவமனை, குருணாகல் போதனா வைத்தியசாலை மற்றும் பதுளை பொது வைத்தியசாலை போன்ற வைத்திய சாலைகளில் இருப்பு மட்டம் பூச்சியமாக இருந்தது.
- 2021 ஆம் ஆண்டுக்கான கொள்வனவுக் கட்டளைகளின் பெறுகை நடவடிக்கைகள் செயற்படுத்தப் படும்போது சரியான தீர்மாணம் எடுக்கப் படாமை மற்றும் முறையாக திட்டமிடப் படாத காரணத்தால் அமைச்சரவை நிலையான பெறுகைக் குழு மட்டத்திலிருந்து அமைச்சின் பெறுகை சபை மட்டம் வரை இடம் பெயர்தல், கொள்வனவுத் தொகையை அடிக்கடி மாற்றியமைத்தல், அமைச்சின் விடயத் தலைப்பை மாற்றுதல் போன்ற காரணங்களால் சுகாதார அமைச்சின் பெறுகைச் செயற்குழுவிலிந்து இராஜாங்க அமைச்சின் பெறுகைக் குழுவுக்கு மாற்றப்படுதல், மீண்டும் ஒப்பந்தப் பெறுமதி அதிகரிப்பின் காரணமாக மீண்டும் இராஜாங்க அமைச்சின் பெறுகைக் குழு மட்டத்திலிருந்து அமைச்சரவையின் நிலையான பெறுகைக் குழுவுக்கு இடம் மாற்றுதல் போன்ற காரணமாக ஔடதத் தொகையை தருவித்துக் கொள்வதற்கு ஏறக்குறைய 02 வருட காலம் கடத்தப் பட்டிருத்தல், 2022 ஆண்டுக்காக 2021 பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி பிறப்பிக்கப் பட்டிருந்த கொள்வனவுக் கட்டளையும் மதிப்பிடல் மட்டத்தில் வைத்திருப்பதன் காரணமாக அத்தியவசியமான உயிர் காக்கும் ஔடதமான **Meropenem1g** தடுப்பூசி 2022 ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதியன்றளவில் மருத்துவ விநியோக பிரிவிலும், வைத்திய சாலைகளிலும் ஒரு மாதத்தைவிட குறைந்த காலத்தக்குப் போதுமான கையிருப்பு மாத்திரமே காணப்படுவதாக தெரிய வந்துள்ளது. இத்தாமதம் காரணமாக ஒன்று ரூ.481 க்கு கொள்வனவு செய்ய முடியுமாகவிருந்த இம் மருந்து 2021 ஆம் ஆண்டில் அரச வைத்திசாலைகளால் ஒன்று ரூ.1,956 க்கும் ரூ.4,697 இடையிலான பல்வேறு விலைகளின் கீழ் ரூ.மில்லியன் 49.52 செலவு செய்யப்பட்டு உள்நாட்டுச் சந்தையில் கொள்வனவு செய்யப் பட்டிருந்தது.

தேசிய ஔடதக் கட்டுப்பாட்டு அதிகாரசபை

- 2015 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபைச் சட்டத்தின் 142 ஆம் பிரிவுக்கு அமைய 2019 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதிய 2145/1 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஸ்தாபிக்கப் பட்டிருந்த ஔடதங்களை பதிவு செய்தல்

மற்றும் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொடுக்கும் கட்டளை 4 ஆம் இலக்கத்தில் காட்டப் பட்டுள்ளவாறு, ஔடதங்களை பதிவு செய்வதற்கு விண்ணப்பிக்கப் படும் சகல விண்ணப்பங்களும் ஆவணப் படுத்தப்படுவதற்கு ஒரு பொதுவான பதிவேடு பயன்படுத்தப் பட்டிருக்க வில்லை. அதன் காரணமாக ஔடதங்களை பதிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் பெறப்பட்ட திகதி, விண்ணப்ப பத்திரத்தின் இலக்கம், உற்பத்தியாளரின் பெயர், உற்பத்தி செய்யப்பட்ட நாடு, அங்கீகாரம் பெற்ற இறக்குமதியாளர், மருந்தின் பெயர், அம் மருந்து மருந்துப் பொருட்களின் கூட்டுச் சேர்வையாயின் அதன் செயற்பாட்டு கூறுகளின் மருத்துவப் பெயர்கள், மருந்தின் வியாபாரப் பெயர். மருந்தை பயண்படுத்தும் அளவு முறை, மருந்தின் தாக்க விளைவு, விண்ணப்பத்தின் வகை (புதிதாக விண்ணப்பித்தல், புதுப்பித்தல் என்ற விபரம்) மருந்தின் வகை போன்ற விபரங்கள் மட்டுமின்றி அந்தந்த விண்ணப்பத்துக்கும் பெற்றுக் கொண்ட பணம் தொடர்பான விபரங்கள், அந்தந்த விண்ணப்பத்தையும் ஔடத கட்டுப்பாட்டுப் பிரிவுக்கு மதிப்பாய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்ட திகதி, அந்தந்தப் பிரிவால் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரங்களின் எண்ணிக்கை மற்றும் அங்கிகாரம் வழங்கப்பட்ட விண்ணப்பப் பத்திரங்களின் எண்ணிக்கை, அந்தந்தப் பிரிவுகளில் மேலும் செயற்படுத்தப் பட்டுவரும் விண்ணப்பப் பத்திரங்களின் எண்ணிக்கை, அந்தந்தப் பிரிவுகளில் பதிவு செய்வதற்கான செயற்பாடுகளுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட காலம். ஆகிய தகவல்கள் போன்ற விபரங்கள் கணக்காய்வு தொடர்பில் பெற்றுக் கொள்ள முடியாமல் போனது. அதன்படி ஔடதங்களை பதிவு செய்தல் மற்றும் அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொடுக்கும் செயல்முறை தெளிவான முறையில் மேற்கொள்ளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

- அதிகாரசபையின் தகவல் தொகுதியை தானியங்கல் செய்யவைக்கும் ஒப்பந்தத்தை, மொத்த ஒப்பந்தப் பெறுமதி ரூ.மில்லியன் 29 செலவில் 5 வருட காலத்துக்கு ஒரு தனியார் நிறுவனத்துக்கு 2018 மே மாதம் 03 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. இவ் ஆவணம் மற்றும் செயற்பாட்டு முகாமைத்துவத் தொகுதி சேவையொன்றாக செயற்பட வைத்தல் **Operational Expenditure Financing** மாதிரியின் படி பெற்றுக் கொண்டு செயற்படுத்தவதற்கு ஒப்பந்தம் செய்துகொள்ளப் பட்டிருந்ததுடன் 2019 ஜுன் மாதம் தொடக்கம் 2021 மே மாதம் வரையான கால வரையறைக்குள் ஒப்பந்தக் கம்பனிக்கு ரூ.12,253,328 செலுத்தப் பட்டிருந்தது. எனினும் குறித்த தனியார் நிறுவனத்தின் கவனயீனம் காரணமாக அல்லது வேண்டுமென்றே இந்த தகவல் தொகுதிக்கு உற்படுத்தப்பட்ட சில தகவல்கள் அழிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக குற்றப் பரிசோதனைத் திணைக்களம் மேற் கொண்டுவரும் புலனாய்வு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படும் வரை மற்றும் 2022 ஜுலை மாதம் 27 ஆம் திகதியன்று வரை செயற்பாடுகள் முடக்க நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. அதே போல் இத் தொகுதி செயற்படுத்தப்படும் போது தேவையான மதியுறைகள், முகாமைத்துவம் மற்றும் தொழிநுட்ப ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்கு இலங்கை தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிறுவனத்துடன் **2018** ஜுன் மாதம் 25 ஆம் திகதி ஒரு வருட காலத்துக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்து இட்டிருந்தனர் எனினும் 05 வருட ஒப்பந்த காலத்துக்கு சமமாக அவ் உடன்படிக்கையை நீடிப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப் பட்டிருக்கவில்லை. மேலும் ஒப்பந்த

உடன்படிக்கை பிரகாரம், தரவுகளின் இரகசியத் தன்மை பற்றி கவனம் செலுத்த, கடவுச் சொல்லை மாற்றியமைக்க அல்லது தகவல்களை முறைகேடாக பாவிப்பதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வில்லை என்பதுடன் கணினித் தொகுதியை தானியங்கள் செய்யப் பட்டதன் பின் manual மற்றும் automation தொகுதிகள் இரண்டும் சமாந்திரமாக இயக்கப்பட்டு அதிகார சபையின் உள்ளக வேலையோட்டம் (workflow) தொடர்பாக கணக்காய்வு சோதனை (Audit trial) நிகழ்த்தப் பட்டிருக்க வில்லை. அதேபோல் கடிதக் கோப்புகளின் முகாமைத்துவம், திருத்துதல், மற்றும் ஆவணப் பிரதிகளை பாதுகாப்பாக 05 வருடங்களுக்கு குறித்த தரவுகளுடன் சேர்த்து பாதுகாத்து வைக்கும் வசதி, நாளாந்தம் வாராந்தம் மற்றும் மாதாந்தம் தன்னியக்கப் பிரதிகளை பெற்றுக் கொள்ளல் மற்றும் தொழில் முறைசார் பொறுப்புக் கூறல் காப்புறுதியை பெற்றுக் கொள்ளல் தொடர்பான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்ளல் போன்ற விடயங்கள் மீது முகாமைத்துவம் கவனம் செலுத்தி இருக்கவில்லை என்பதுடன் குறித்த தரவுகள் மற்றும் இணைப்புத் தகவல்களின் பாதுகாப்பான பிரதிகள் பெற்றுக் கொள்ளப்படாமல் கம்பனிக்கு பணம் செலுத்தப் பட்டிருந்தன. ஒப்பந்த நிபந்தனைகளின் படி, ரூ.7,558,128 கிரயமுடைய இத் தொகுதிகுள்ளடக்கப்பட்ட ஆதனம் மூலதனமாக்கப்பட வேண்டும் எனினும், அதற்குப் பதிலாக அத் தொகை இலாபத்துக்கு எதிராக வெட்டிவிடப் பட்டிருந்தது. இச் சம்பவம் தொடர்பில் பரிசோதிப்பதற்கும் அழிக்கப்பட்ட தரவுகளை மீண்டும் மீட்டெடுப்பதற்கும் என நியமிக்கப் பட்ட நிபுனத்துவக் குழுவின் அறிக்கையின் படி, தொகுதியிலிருந்து அழிக்கப்பட்டிருந்த தரவுகளை மீண்டும் ஸ்தாபிக்க முடியாது என்பதாக 2022 ஜுலை மாதம் 15 ஆம் திகதிய அறிக்கை மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2022 ஜுலை 27 அம் திகதி வரையிலும் இக் கணினித் தொகுதியை மீண்டும் பயன்பாட்டுக்கு எடுப்பதா இல்லையா என்பது தொடர்பாக தீர்மாணிக்கப் பட்டிருக்கவில்லை. இத் தொகுதியின் பணிகள் நிறுத்தப் பட்டதன் பின் தற்காலிக ஏற்பாடாக கூகல் செயலியொன்றைப் பயன்படுத்தி (Google Form) ஒளடதங்கள், உபகரணங்கள் போன்றவற்றை பதிவு செய்யும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன எனினும் அதில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக இச் செயற்பாடு குறைபாடுகளுடன் நடாத்தப்பட்டு வருவது அவதானிக்கப் பட்டது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

- ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்திய சாலையின் பணிக்குழுவை நியமித்துக் கொள்வதற்கான அட்சேர்ப்பு செயல்முறையில் காணப்படும் சம்பள முறன்பாடுகளை நீக்கி சம்பள அளவுத் திட்டத்தை மீண்டும் இற்றைப்படுத்துதல், மனிதவள பிரச்சினைகளைத் தீர்த்தல், பதவி உயர்வு வழங்கள் செயல் முறையை ஒழுங்கமைத்தல் மற்றும் நிறுவன ஒழுங்கமைத்தல் படிமுறையை முறையாக தாயாரிக்கும் நோக்கில் ஆட்சேர்ப்பு செயல்முறையை தயாரிப்பதற்கு தகுதிவாய்ந்த நிபுனத்துவ அறிவுடைய மற்றும் அனுபவமுள்ள நபரொருவரின் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு அது தொடர்பாக ஆலோசகர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்தார். பணி ஒப்படைப்பு பெறுமதி ரூ.மில்லியன் 3.04 ஆக இருந்ததுடன் 2020 ஒக்டோபர் மாதம் 20 திகதி ஒப்பந்தத்தின் நிபந்தனைப் பிரகாரம்

ஒப்பந்தப் பெறுமதியில் நூற்றுக்கு 25 வீதமான அதாவது ரூ.மில்லியன் 0.76 முன் பணமாக செலுத்தப்பட்டிருந்தது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஆலோசகர்களை தேர்ந்தெடுத்தல் மற்றும் வேலைக்கு அமர்த்துல் தொடர்பான வழிகாட்டற் கோவையின் **3.4, 3.5, 4.2, 4.4** மற்றும் **6.4.4** வழிகாட்டலுக்குப் புறம்பாக பணிப்பாளர் குழுவின் தீர்மாணத்திற்கு அமைய இவ் ஆலோசகர் தெர்ந்தெடுக்கப் பட்டிருந்தார். ஒப்பந்தத்தின் படி கொள்முதல் வழங்கப்பட்ட திகதி முதல் 04 மாத காலத்தினுள் குறித்த கருமம் முடிக்கப்பட்டிருக்க வேண்டும் எனினும், இவ் அறிக்கையின் திகதி வரை ஒரு வருடத்துக்கும் அதிகமான காலம் கடந்திரந்த போதிலும் ஆட்சேர்ப்பு செயல்முறையை தயாரிக்கும் பணிகளை முடிவுறுத்திக் கொள்வதற்கு இயலாமல் போயுள்ளது.

- ஆய்வுகூட பணிக் குழுவினால் இரவு நேரத்தில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகூடப் பரிசோதனைகளுக்கு துண்டு வீத அடிப்படையில் கொடுப்பனவுகள் வழங்கப்படும் போது சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்தின் 2006 மே மாதம் 10 ஆம் திகதிய பொதுச் சுற்றறிக்கை கடிதத்துக்கு அமைவாக அல்லாதவாறு இரவு காலங்களில் பணியில் ஈடுபடும் மருத்துவர்கள் ஆய்வுகூட தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் விண்ணப்பிக்கும் சகல ஆய்வுகளுக்கும் துண்டுவீத அடிப்படையில் பணம் செலுத்தப் பட்டிருந்தன. அதன்படி சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்குப் புறம்பாக 2021 ஜனவரி மாதம் முதல் 2021 டிசம்பர் மாதம் வரையான காலத்தில் பல்வேறுபட்ட ஆய்வுகூடப் பரிசோதனைகள் 154,687 க்காக ரூ.மில்லியன் 3.48 க்கான கொடுப்பனவுகள் மேலதிகமாக செலுத்தப் பட்டிருந்தன.

தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியம்

- இலங்கை தேசிய கண் வங்கியை நிறுவுவதற்கு சிங்கப்பூர் **Asia Cornea Foundation** நிறுவனத்துடன் 2010 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படியும் இலக்கை தேசிய கண் வங்கி நம்பிக்கைப் பொறுப்பில் ஸ்தாபிக்கப் படுவதற்கு 2013 ஆகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி கிடைக்கப் பெற்றிருந்த அமைச்சரவை அங்கீகாரத்துக்கு அமை, இலக்கை தேசிய கண் வங்கிச் சட்மொன்றின் ஊடாக வேறுபட்ட நிறுவன நோக்குடன் அமைக்கப்படும் அலகாக நிறுவப் படுவதற்கும் அதன் வனிக நடவடிக்கைகளை அறிக்கையிடுவதற்கு வேறாக நிதியறிக்கை தயாரிக்கப் படுவதற்கும் 2022 ஏப்ரல் 08 ஆம் திகதி வரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.
- அரச வைத்தியசாலைகளுக்கு அதியவசியமான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும், வைத்தியசாலையை பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான நிதி திறட்டும் நோக்கில், சுகாதார அபிவிருத்தி லொத்தர் முறை 1998 செப்தெம்பர் மாதம் அறிமுகப் படுத்தப்பட்டிருந்ததுடன், ஒவ்வொறு சீட்டிழுப்பு தவனைக்கும் முன்பாக குறித்த தவனையின் நிதியிலிருந்து செய்யப்படும் பணிகள் கண்டறியப்பட்டு அறிவிக்கப்பட்டு அப்பணி நிறைவேற்றப்பட வேண்டும் எனினும், அவ்வாறு செயலாற்றி இருக்கவில்லை. அதேபோல் 2020 மற்றும் 2021 ஆகிய வருடங்களுக்கு திறைசேரியிலிருந்து பணம் விடுவிக்கப் படுவதற்கு நிதியத்தால் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கும் கருமங்கள் அடங்கலான செயற்

திட்டமொன்றைச் சமர்ப்பிக்குமாறு 2020 மார்ச் 06 ஆம் திகதி திறைசேரியின் மேலதிக செயற்பாட்டுப் பணிப்பாளர் நாயகம் வேண்டுகோல் விடுத்திருந்த போதிலும் இவ் அறிக்கையின் திகதிவரை அவ்வாரான செயற் திட்டமொன்று தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. லொத்தர் இலாபத்தில் நிறைவேற்றப்படவேண்டிய பணிகள் சம்மந்தமாக முறையான செயற்திட்டமொன்று நிதியத்திடம் காணப்படாத காரணத்தால் 2021 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை திறைசேரியிடமிருந்து கிடைக்கப் பெறவேண்டிய ரூ.மில்லியன் 113.55 இனை விடுவித்துக் கொள்ள முடியாமல் போயுள்ளது. 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான கால வரையறையில் ரூ.மில்லியன் 428.49 லொத்தர் இலாபமாக கிடைக்கப் பெற்றிருந்ததுடன் அதிலிருந்து வைத்தியசாலை உபகரணங்கள் கொள்வனவு மற்றும் வைத்தியசாலை பழுதுபார்த்தல் போன்ற நோக்கத்தைக் கொண்ட கருமங்களுக்கு முறையே ரூ.மில்லியன் 20.58 மற்றும் ரூ.மில்லியன் 156.75 என் மொத்தமாக ரூ.மில்லியன் 177.33 மட்டும் செலவிடப் பட்டிருந்தது. லொத்தல் இலாபத்தின் செலவீடுகள் நூற்றுக்கு 41 வீதம் எனும் கீழ் மட்டத்தில் காணப்படுகிறது.

- நிதியத்தினால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியுமான வகையில் வருடாந்த செயற்பாட்டு திட்டம் மற்றும் இலங்கையின் சுகாதார சேவையை முன்நேற்றுவதற்கு நிதியத்திடம் காணப்படம் பொது நிதியத்தை பயன்படுத்தும் முறை பற்றிய பணித் திட்மிடல் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. அவ்வாரெனினும் பொது நிதியத்துக்கு 2021 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரை கிடைக்கப் பெற்றிருந்த மொத்தத் தொகை ரூ.மில்லியன் **599.75** ஆகவிருந்ததுடன் மதிப்பீட்டாண்டில் பொது நிதியில் இருந்து செலவு செய்யப்பட்ட தொகை ரூ.மில்லியன் 33.46 மட்டுமே. இதன்படி நிதியத்தின் பணச் செலவுகள் நூற்றுக்கு 6 என்ற கிழ் மட்டத்தில் காணப்படுகிறது.

சுதேச வைத்திய அபிவிருத்தி, கிராமீய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி மற்றும் சமூகச் சுகாதார இராஜாங்க அமைச்சு

- இலங்கை முழுவதும் 565 ஆரன்யாக்களைச் சேர்ந்த பிக்குமார்களுக்கு சுவதரணி செயற்பாட்டு வைத்திய சேவை வழங்குவதற்கு ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டமொன்றில் வைத்திய உதவியாளராக நியமிக்க எதிர்பார்கப்பட்டுள்ள பாரம்பரிய வைத்தியர்களுக்கு கொடுப்பதற்கென ரூ.மில்லியன் 2.9 செலவிடப்பட்டு ஔடதங்களை கொண்டு செல்லும் பயனப்பைகள் 1,000 கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. ஆரண்ய எண்ணிக்கைக்கு சமமாக நியமிக்கப்பட முடியுமான உச்ச அளவு உதவி வைத்தியர்கள் 565 என்பதால் மேலதிகமாக 435 பயணப்பைகளை கொளவனவு செய்ய ரூ.மில்லியன் 1.26 செலவு செய்யப் பட்டிருந்தது என்பதுடன் அது வீண் செலவென தெரியவந்துள்ளது. மேலும் 2022 ஏப்ரல் மாதம் 08 ஆம் திகதி வரை கம்பஹ மாவட்டத்தில் 13 பிரதேச செயலக பிரிவுகளில் 105 பாரம்பரிய வைத்தியர்களுக்கு மாத்திரம் பயணப் பைகள் பகிர்ந்தளிக்கப் பட்டிருந்ததாகவும், அத்தினம் 895 பயணப் பைகள் மிகுதமாக இருந்துள்ளதுடன், களணி ரஜமஹா விகாரையில் நடைபெற்ற பகிர்ந்தளிப்பு

விழாவுக்கு ரூ.223,300 செலவு செய்யப் பட்டிருந்ததாகவும், 1,000 பயணப் பைகள் கொள்வனவு செய்தல் மற்றும் அவை பகிர்ந்தளிக்கப் பட்டமை தொடர்பாக தரவுகள் மற்றும் தகவல்கள் இருப்புப் புத்தகங்களில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை எனவும் தெரிய வந்துள்ளது.

- பொதுமக்களிடம் சுகாதாரப் பாதுகாப்பான உள்நாட்டு உணவுப் பொருட்களின் நுகர்வை பிரபல்யப் படுத்தல் மற்றும் தொற்றல்லாத நோய்களிலிருந்து பொதுமக்களைப் பாதுகாக்கும் நோக்கில் போசனையுள்ள உள்நாட்டுணவை விற்பனை செய்வதற்கு நாடு முழுவதும் போஷனை மாளிகை விற்பனை நிலையங்களை நிறுவுவதற்கான செயற்திட்டத்துக்கு 2020 மற்றும் 2021 ஆகிய வருடங்களில் முறையே ரூ.மில்லியன் 1.8 மற்றும் ரூ.மில்லியன் 5 நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அதன்படி இவ் இரண்டு வருடங்களில் முறையே ரூ.மில்லியன் 1.68 மற்றும் ரூ.மில்லியன் 4.85 என்ற வகையில் மொத்தமாக ரூ.மில்லியன் **6.53** செலவிடப்பட்டிருந்தது என்பதுடன் அதில் ரூ.மில்லியன் 5 வது நூற்றுக்கு 77 வீதம் கம்பஹ மாவட்டத்துக்காக செலவிடப்பட்டிருந்தது. மேலும், 2021 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று வரை போசனை மாளிகை 35 நிர்மாணிக்கப் பட்டிருந்ததுடன் அவை செயற்படும் நிலையில் இருக்கின்றதா ஆதேபோல் நோக்கம் நிறைவேறுமா என் எவ்வித பின்னூட்டமும் அமைச்சினால் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

ஆயர்வேத திணைக்களம்

- 1961 ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க ஆயுர்வேதச் சட்டத்தின் 10 ஆம் பிரிவுக்கமைய ஆயர்வேத சிகிச்சை நிலையமொன்று, ஆயர்வேத ஔடத உற்பத்தி நிலையமொன்று, ஆயுர்வேத ஔடத கட்டிடம் அல்லது ஆயுர்வேத ஔடதக் கலஞ்சியமொன்றை நடாத்திச் செல்லல் போன்றவை ஆயுர்வேத ஆணையாளர் பதிவு செய்ய வேண்டும் என்பதுடன் பஞ்சகர்ம மற்றும் மஸாஜ் (உருவுதல்) நிலையங்களை பதிவு செய்தல் தொடர்பான ஏற்பாடுகள் சட்டத்தில் உள்ளடக்கப் பட்டிருக்காமையால் பஞ்சகர்ம வைத்திய முறை பயன்பாட்டை கட்டுப்படுத்த முடியாமல் போயுள்ளது.
- ஆயர்வேத சமூக நல சுகாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 2001 ஆம் ஆண்டிலிருந்து 2005 ஆம் ஆண்டுவரை முன்னணி செயற்திட்மாக அனுராதபுர மாவட்டத்தினுல் செயறபடுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் வெற்றியின் அடிப்படையில் செயற்திட்டம் மதிப்பீடு செய்யப்பட்டு அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டதன் பின் 2005 ஆம் ஆண்டு தொடக்கம் ஏனைய மாவட்ங்களுக்கு சேவையை விரிவுபடுத்தி செயற் திட்டத்தை செயற்படுத்தியிருக்க வேண்டும். எனினும் அவ்வாறு பணியாற்றாது 2005 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை ரூ.மில்லியன் 897.2 செலவு செய்யப்பட்டு 16 வருடங்கள் அனுராதபுர மாவட்டத்தில் மாத்திரம் இச் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது. ஏனைய மாவட்டங்களுக்கு சேவை விரிவாக்கம் செய்வது சம்பந்தமாக 2005 ஆம் ஆண்டில் அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை சமர்ப்பிக்கப் பட்டிருந்தபோதிலும் முற்போக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

- ஊள்நாட்டு ஔடதங்களால் கொவிட் 19 நோய்ப் பரவலை தடுப்பதற்கு ஒன்று ரூ.1,000 செலவில் சுவதரணி ஔடத அலங்காரப் பெட்டிகள் 60 இலச்சம் பகிர்ந்தளிக்கும் செயற்திட்டத்துக்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியிருந்தது. ஆரம்பத்தில் மேல் மாகாணத்தில் ஔடத அலங்காரப் பெட்டிகள் 250,000 வழங்குவதற்கு மீள் நிறப்பு நிதி ஏற்பாடுகளில் ரூ.மில்லியன் 250 ஒதுக்கி அதில் ரூ.மில்லியன் 142.56 செலவு செய்யப்பட்டிருந்தது. ஔடத அலங்காரப் பெட்டிகள் தயாரிக்கப்படும் சகல கருமங்களும் ஒரு வழங்குனருக்கு பெற்றுக் கொடுப்பதற்கு இயலுமான வகையில் விலை மனுக்கல் கோறுவதில் ஏற்படும் கால தாமதம், உற்பத்திகளின் தன்மை விரயங்கள் மற்றும் செலவுகளை குறைத்துக் கொள்வது போன்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தாது ஔடதங்கள் மற்றும் பாயாசம் உற்பத்திக்கு 07 வழங்குனர்களும், பொதிகள் அச்சிடலுக்கு ஒரு வழங்குனரும், கார்போட் பெட்டி மற்றும் துண்டுப் பிரசுரம் அச்சிடுவதற்கு ஒரு வழங்குனரும், ஔடதங்கள் மற்றும் பாயாச விநியோகத்துக்கு 07 வழங்குனர்கள் என்ற வகையில் வழங்குனர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். மேலும் விலைமனு மதிப்பீட்டின்போது காணப்பட்ட பல்வேறு குறைபாடுகள் பின்பு நிவர்த்தி செய்யப்படும் என்ற நிபந்தனையின் கிழ் வழங்குனர்கள் தெரிவுசெய்யப்படுதல், தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரைகளை கவனத்தில் எடுக்காது நடவடிக்கை எடுத்தல், சகல பெறுகைகளும் குறித்த தினத்தில் முடிவுறுத்தப் படாமை, பெறுகைக் குழுவின் அங்கீகாரம் இன்றி ஒப்பந்த காலத்தை நீடித்தல். துமதக் கட்டனத்தை அறவிடாமல் விட்டுவிடல், விலை நிர்ணயக் குழு நிர்ணயித்த விலையை விட அதிகமாக பணம் செலுத்துதல் போன்ற குறைப்டுகள் இப் பெறுகை நடவடிக்கையின்போது நிகழ்ந்துள்ளது கண்டுபிடிக்கப் பட்டது. ஔடத அலங்காரப் பெட்டிகள் சுகாதார முறையில் கலஞ்சியப் படுத்தப்படாமை, முறையற்ற விநியோகம், ஔடதங்கள் நிறப்பப்படுவதற்கு முன் பொதிகளின் காலாவதி திகதி அச்சிடப் பட்டுள்ளதன் காரணமாக சில ஔடதங்கள் காலாவதியாகிவிட்டதாக நினைத்து அப்புறப்படுத்தல், காலாவதியாவதற்கு முன் ஔடதத்ததை பயன்படுத்த போதுமான காலம் பயனாளிக்கு கிடைக்காமை, இலக்குக் குழு பயனாளிகளுக்கு ஔடதங்கள் கிடைக்கப் பெறுதல் மற்றும் பாவனை முறைபற்றி கண்காணிப்பு மற்றும் பின்னூட்டல் செய்யப்படாமை, மேல் மாகாணத்தில் விநியோகிக்கப்பட திட்டமிடப்பட்ட ஔடத அலங்காரப் பெட்டிகள் **250,000** இல் **183,776** அலகுகள் கம்பஹா மாவட்டத்தில் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தமை, 60 நாட்களுக்குள் இலங்கை முழுவதிலும் ஔடத அலங்காரப் பெட்டிகள் விநியோகிப்பதற்கு அவசர பெறுகை முறை பின்பற்றப்படுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்திருந்த போதிலும் 2021 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரை 122 நாட்கள் கழிந்திருந்த நிலையிலும் செயற்திட்டத்தின் நூற்றுக்கு 05 வீதமாவது முடிவுறுத்தப் படாமை, போன்ற குறைபாடுகள் இந்த பெறுகை செயற்பாட்டில் காணப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

விளையாட்டு அலுவல்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்

- இலங்கை விளையாட்டு வீரர்கள் பெற்றுக்கொண்ட சர்வதேச சாதனைகள்
- நிதியப் பயன்பாடு
- விளையாட்டுக் கொள்கையொன்றினை தாபித்தல்
- தேசிய விளையாட்டுச் சங்கங்களினால் 2021 ஆம் வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படாமை.
- முடிக்கப்படாது கைவிடப்பட்டிருந்த செயற்திட்டங்கள்
- செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதங்கள்
- தொழில் சந்தை தகவல் முறைமையொன்றினை தாபித்தல்
- தொழில் வழிகாட்டி மற்றும் வேலை வாய்ப்பு மேம்படுத்தல்.
- சொத்து முகாமைத்துவம்
- வருடாந்த செயல் நடவடிக்கைத்திட்டம்

விளையாட்டு அலுவல்கள்

தேசிய பொருளாதாரத்தில் தீவிரமான பங்களிப்பொன்றை வழங்கும் இளைஞர் சமூகமொன்றை உருவாக்குதல் மற்றும் ஒழுக்கமான விளையாட்டு வீரர் சமூகமொன்றை உருவாக்குவதன் மூலம் ஐக்கிய மற்றும் வளமான நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு பங்களிப்பதே இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சின் நோக்கமாக இருந்தது. அந்த பெறுபேறுகளை அடைவதற்காக இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சு மற்றும் அதன் கீழ் வருகின்ற கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு, விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம், மனித வலு மற்றும் வேலை வாய்ப்புத் திணைக்களம் உட்பட 10 சட்டரீதியான நிறுவனங்கள், விளையாட்டு நிதியமொன்று மற்றும் 66 விளையாட்டுச் சங்கங்கள் மூலம் பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன.

- "சௌபாக்கியத்தின் நோக்கு" கொள்கைக் கூற்றுக்கு இணங்க மற்றும் அரசினால் செயற்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற ஏனைய தேசிய கொள்கைகளின் அடிப்படையில் பெருமை மிக்க மற்றும் ஆற்றல் மிக்க இளைஞர் தலைமுறையொன்றை உருவாக்குவதற்கு சம்பந்தப்பட்ட இராஜாங்க அமைச்சிற்கு கொள்கை வழிகாட்டல்களை வழங்குதல்.
- பரிந்துரைக்கப்பட்ட சட்டங்கள் மற்றும் கட்டளைகளின் பிரகாரம் இளைஞர் மற்றும் விளையாட்டு விடயப்பரப்பிற்கான கொள்கைகளை உருவாக்குதல்.
- தேசிய வரவு செலவுத்திட்டம் , அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் கீழான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு மற்றும் இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சின் கீழ் இணைக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான கொள்கைகள், வேலைத்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை தொகுத்தல், செயற்படுத்தல், பின்தொடர்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

2021 ஆம் வருடத்தில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சிற்கு , அதன் கீழ் காணப்படுகின்ற இராஜாங்க அமைச்சிற்கு மற்றும் 02 திணைக்களங்களுக்கு மொத்தம் ரூபா 16,085 மில்லியன் தேறிய ஒதுக்கங்கள் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அவற்றில் ரூபா 7,661 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் வருட இறுதியில் ரூபா 8,424 மில்லியன் ஆன ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் 45 ஆம் வரைபடத்தில் காட்டப்படுகின்றது.



	இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சு	கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு	விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்	மனித வலு மற்றும் வேலை வாய்ப்புத் திணைக்களம்	மொத்தம்
நிதியேற்பாடு ரூபா மில்லியன்	10138	3369	2080	498	16085
செலவினம் ரூபா மில்லியன்	4667	1016	1520	458	7661
சேமிப்பு ரூபா மில்லியன்	5471	2353	560	40	8424

வரைபடம் 45 - தேறிய ஒதுக்கங்கள் மற்றும் பயன்பாடு
மூலாதாரம் - 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள்

மேற்குறிப்பிடப்பட்ட பணிகள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றுதல் தொடர்பான மாதிரிக் கணக்காய்வின்போது கண்டுபிடிக்கப்பட்ட முக்கியமான மற்றும் பொரண்மையான கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்படுகின்றன.

இலங்கை விளையாட்டு வீரர்கள் பெற்றுக்கொண்ட சர்வதேச சாதனைகள்

மீளாய்வாண்டில் இலங்கை விளையாட்டு வீரர்கள் 11 சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றி ஈட்டி எறிதல் நிகழ்வில் உலக சாதனையொன்றை நிலைநாட்டியிருந்ததுடன் ஏனைய சாதனைகளாக 08 தங்கம், 04 வெள்ளி மற்றும் 13 வெண்கலம் என 25 பதக்கங்களைப் பெற்றுக் கொண்டனர்.

நிதியப் பயன்பாடு

- இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய மூலதன ஒதுக்கங்கள் ரூபா 10,137.7 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அவற்றில் ரூபா 4,666.6 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேறிய மூலதன ஒதுக்கங்களில் ரூபா 5,471.1 மில்லியன் அதாவது 54 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

- கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய ஒதுக்கங்கள் ரூபா 3,369.8 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின்

இறுதியில் அவற்றில் ரூபா 1,016.3 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேறிய ஒதுக்கங்களில் ரூபா 2,353.4 மில்லியன் அதாவது 70 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

விளையாட்டுக் கொள்கையொன்றினை தாபித்தல்

அபிமானமுள்ள துலாம்பரமான ஆளுமை நிறைந்த ஜீவனுள்ள இளைஞர் பிரஜையொன்றினை மற்றும் ஜீவனுள்ள சுகதேகியான ஒழுக்கமுள்ள சமுதாயமொன்றினை கட்டியெழுப்புவதற்காக சுறுசுறுப்பான சந்ததியொன்றினை உருவாக்குவதற்காக "சௌபாக்கியத்தின் நோக்கு" எனும் கொள்கைப் பிரகடனத்திற்கு அமைவாக மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்கு பொருந்தும் வகையில் இலக்கம் 2187/27 கொண்ட மற்றும் 2020 ஆகஸ்ட் 09 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் மூலம் இளைஞர் பிரஜைகளினை மையமாகக் கொள்ளப்பட்ட இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சு தாபிக்கப்பட்டது. அதன்படி இவ் அமைச்சிற்கு உரித்தான சட்டங்கள் மற்றும் அதிகாரங்களுக்கு அமைய இளைஞர் மற்றும் விளையாட்டு விடயங்கள் தொடர்பாக கொள்கை வகுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் நாளதுவரையாக்கப்பட்ட தேசிய விளையாட்டு கொள்கையொன்று 2022 மே 19 வரையில் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

தேசிய விளையாட்டுச் சங்கங்களினால் 2021 ஆம் வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படாமை.

2016 ஒக்டோபர் 27 ஆந் திகதிய 1990/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டிருந்த விளையாட்டு அமைச்சரால் செய்யப்பட்ட III ஆம் பகுதி 7(xiii) பிரிவின் பிரகாரம் அனைத்து தேசிய விளையாட்டுச் சங்கங்களினால் சான்றுபடுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 2 மாதங்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 9 தேசிய விளையாட்டுச் சங்கங்களின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2022 ஆகஸ்ட் மாதம் வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இலங்கை மேசைப்பந்து சங்கத்தினால் 2019 தொடக்கம் 2021 வரையில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படாத போதிலும் சங்கத்திற்கு சர்வதேச போட்டிகள் மற்றும் உயர் திறமைகள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2021 ஆம் வருடத்தில் ரூபா 5.4 மில்லியன் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்தது.

முடிக்கப்படாது கைவிடப்பட்டிருந்த செயற்திட்டங்கள்

இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சினால் ரூபா 1,622 மில்லியன் வருடாந்த மதிப்பீட்டு ஒதுக்கங்கள் ஒதுக்கப்பட்டு ரூபா 37 மில்லியன் செலவிடப்பட்டிருந்த 5 திட்டங்கள் மற்றும் விளையாட்டு அபிவிருத்தி

திணைக்களத்தினால் ரூபா 1155 மில்லியன் ஒதுக்கங்கள் ஒதுக்கப்பட்டு ரூபா 324 மில்லியன் செலவிடப்பட்டிருந்த 13 திட்டங்கள் முடிக்கப்படாது கைவிடப்பட்டிருந்த காரணத்தால் இதுவரை செலவிடப்பட்டிருந்த ரூபா 361 ஆன மில்லியன் தொகை விளைவற்ற செலவொன்றாகக் காணப்பட்டது.

செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதங்கள்

- இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சின் ரூபா 1,049 மில்லியன் வருடாந்த மதிப்பீட்டு ஒதுக்கங்கள் ஒதுக்கப்பட்டு அதில் ரூபா 143 மில்லியன் செலவிடப்பட்டிருந்த 11 திட்டங்களினை நிறைவேற்றுவதில் தாமதங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

- கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைசசு விளையாட்டுப் பாடசாலை அபிவிருத்தி செய்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சர்வதேச வெற்றியைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய விளையாட்டு வீரர்களை உருவாக்குவதற்காக குழந்தைப் பருவத்திலிருந்தே திறமையுள்ள பிள்ளைகளை இனங்கண்டு அவர்களுக்கு முறையான போசாக்கு மற்றும் பயிற்சியுடன் கவனித்துக் கொள்வதற்கு அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய 16 பாடசாலைகள் முன்னுரிமை அடிப்படையில் கல்வி அமைச்சினதும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டிருந்தன. அதற்காக ரூபா 211 மில்லியன் மதிப்பீட்டு ஒதுக்கங்கள் ஒதுக்கப்படடிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டில் 11 பாடசாலைகளின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 159 மில்லியன் செலவுகள் ஏற்பட்டிருந்ததுடன் 03 பாடசாலைகளுக்கான பணிகள் மாத்திரமே நிறைவடைந்திருந்தது.

- இலங்கை சர்வதேச கிரிக்கெட் மைதானங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யும் நோக்கத்தில் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் தம்புள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானத்தின் நீச்சல் குளம் அமைப்பதற்கான செயற்திட்டத்திற்காக 2018 தொடக்கம் 2021 வருடம் வரையில் மொத்தம் ரூபா 58.3 மில்லியன் ஆன தொகை செலவிடப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்திற்காக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட 2019 திசெம்பர் 18 ஆந் திகதியிலிருந்து 06 மாதங்களுக்குள் நிர்மாண வேலைகள் முடிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2021 ஆம் வருடத்தின் இறுதி வரை செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் முடிக்கப்படவில்லை.

- இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் மத்தியப் பொறியியல் உசாத்துணைப் பணியகத்திற்கு நிர்மாண நடவடிக்கைகள் வழங்கப்பட்டிருந்த 2014 மற்றும் 2015 ஆம் வருடங்களில் ஆரம்பிக்கப்பட்டிருந்த ரூபா 47.4

மில்லியன் பெறுமதியான நான்கு செயற்திட்டங்கள் உள்ளூராட்சி நிறுவனங்களில் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து தேவையான அங்கீகாரம் பெறப்படாத காரணத்தினால் நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன. எனினும் நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்டிருந்த இச் செயற்திட்டங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கங்கள் செய்யப்படாதிருந்ததுடன் நடைமுறை வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

தொழில் சந்தை தகவல் முறைமையொன்றினை தாபித்தல்

மனிதவலு மற்றும் வேலை வாய்ப்புத் திணைக்களத்தின் தொழில் சந்தை கோரிக்கைகளை இலக்காகக் கொண்டு வேலை செய்யக்கூடிய மனித வளங்கள் அபிவிருத்திக்காக தொழில் சந்தை தகவல் முறைமையொன்றினை தாபிப்பதற்காக ரூபா 20 மில்லியன் மதிப்பீட்டு ஒதுக்கங்கள் ஒதுக்கப்பட்டு அதில் ரூபா 1.9 மில்லியன் அதாவது 9 சதவீதம் மட்டுமே செலவிடப்பட்டிருந்தது.அதன் பிரகாரம் தொழில் சந்தை தகவல் முறைமையொன்றினை தாபித்தல் 2021 திசெம்பர் 31 வரையில் முடிக்கப்படாததால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது.

தொழில் வழிகாட்டி மற்றும் வேலை வாய்ப்பு மேம்படுத்தல்.

மனிதவலு மற்றும் வேலை வாய்ப்புத் திணைக்களத்தின் தொழில் வழிகாட்டிக்கு மற்றும் வேலைவாய்ப்பு மேம்படுத்தலுக்கான உத்தேச செயற்திட்டங்கள் 09 இற்காக 2021 ஆம் வருடத்திற்காக திருத்தப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 159 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தன. இச்செயற்திட்டம் நடைமுறைப்படுத்துவதற்காக மீளாய்வாண்டில் ரூபா 104.6 மில்லியன் செலவிடப்பட்டதுடன் அதன் மூலம் வேலை வாய்ப்பிற்காக 77,124 விண்ணப்பதாரர்கள் பதிவு செய்யப்பட்டதோடு வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கு தனியார் துறையில் 7,759 வேலை வாய்ப்புக்கள் மட்டுமே வழங்கப்பட்டிருந்தன. 2021 இல் நாட்டில் நிலவிய கொவிட் தொற்று நோய் சூழ்நிலையில் நாடு காலத்திற்கு காலம் முடக்கப்பட்டமையால் கடந்த வருடத்தில் குறிப்பிட்ட இலக்கை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்ததாக பணிப்பாளர் நாயகம் சுட்டிக்காட்டியிருந்தார்.

சொத்து முகாமைத்துவம்

நிதிப்பிரமாணம் 751 இன் பிரகாரம் சகல சொத்துக்களும் பதியப்பட வேண்டுவதாக காட்டப்பட்டிருந்த போதிலும் அமைச்சுக்குச் சொந்தமான 2014 வருடம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 12.1 மில்லியன் ஆன 630 KVA Sound Proof ஜெனரேட்டர் சொத்துக்களுக்கான பதிவேட்டில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

வருடாந்த செயல் நடவடிக்கைத்திட்டம்

2016 இன் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டு சங்கக் கட்டளை 7 (xii) பந்தயின் பிரகாரம் தேசிய விளையாட்டுச் சங்கங்களினால் எதிர்வரும் வருடத்திற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன் செயல் நடவடிக்கைத் திட்டம் நடப்பாண்டின் முடிவின் போது மூன்று மாதங்களுக்கு முன்னர் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியள்ள போதிலும், 2021 ஆம் வருடத்திற்கான தேசிய விளையாட்டு சங்கங்களின் செயல் நடவடிக்கைத் திட்டம் 65 விளையாட்டுச் சங்கங்களில் 19 விளையாட்டுச் சங்கங்களால் மட்டுமே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

வெளிநாட்டு அலுவல்கள

கணக்காய்வு அவதானிப்புக்கள்

- கட்டு நிதிக் கணக்கின் மீதி தீர்க்கப்படாமை.
- காலாவதியான வைப்பு
- விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டுடைய சொத்துக்கள்

வெளிநாட்டு அலுவல்கள்

இலங்கை அரசின் வெளிநாட்டுக் கொள்கைகளுக்கு இணங்க தேசிய அபிலாஷைகளை சர்வதேச அளவில் ஊக்குவித்தல், நிரூபித்தல் மற்றும் பாதுகாத்தல், தேசிய அபிலாஷைகளுக்கு இணங்க சர்வதேச உறவுகளை நிர்வகித்தல் குறித்து அரசிற்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் சௌபாக்கிய நோக்குக் கொள்கைக் கூற்றுக்கு இணங்க அரசாங்கத்தினால் செயற்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற ஏனைய தேசிய கொள்கைகளின் அடிப்படையில் நட்பு மற்றும் அணிசேரா வெளிநாட்டுக் கொள்கைகளை உருவாக்குவதற்காக சம்பந்தப்பட்ட இராஜாங்க அமைச்சிற்கு கொள்கை வழிகாட்டுதலை வழங்குதல் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட சட்டங்கள் மற்றும் கட்டளைகளின் பிரகாரம் வெளிநாட்டு விடயப்பரப்பிற்கான கொள்கைகளை உருவாக்குதல், தேசிய வரவு செலவுத்திட்டம் , அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் கீழான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மதிப்பீடு மற்றும் பின்தொடரல் என்பன வெளிநாட்டு அமைச்சின் பிரதான செயற்பாடுகளாகும்.

வெளிநாட்டு அமைச்சு மற்றும் அதன் கீழான இராஜாங்க அமைச்சொன்று , சட்டரீதியான நிறுவனமொன்று , 36 தூதரகங்கள், 13 உயர் ஸ்தானிகர் அலுவலகங்கள், 13 கொன்சியூலர் ஜெனரல் அலுவலகங்கள், ஐக்கிய நாடுகள் சபையின் 02 நிரந்தர தூதரகங்கள், 01 பிரதி உயர்ஸ்தானிகர் அலுவலகம் மற்றும் இலங்கை முகவர் அலுவலகம் ஒன்றினூடாக மேற்குறிப்பிடப்பட்ட பணிகள் மற்றும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டியதாக உள்ளன.

ஆப்கானிஸ்தான் காபூல் இலங்கை தூதரகம் 2021 ஆம் வருடத்தில் மூடப்பட்டது.

வெளிநாட்டு அமைச்சிற்கு மற்றும் அதன் கீழான இராஜாங்க அமைச்சிற்கு மேற்குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 2021 ஆம் வருடத்தில் மொத்தம் ரூபா 12,849 மில்லியன் ஒதுக்கங்கள் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அவற்றில் ரூபா 11,452 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரம் வரைபடத்தில் 46 காட்டப்படுகின்றது.



	வெளிநாட்டு அமைச்சு	பிராந்திய ஒத்துழைப்பிற்கான இராஜாங்க அமைச்சு	மொத்தம்
நிதியேற்பாடு ரூபா மில்லியன்	12689	160	12849
செலவினம் ரூபா மில்லியன்	11376	76	11452
சேமிப்பு ரூபா மில்லியன்	1313	84	1397

வரைபடம் 46 - வழங்கப்பட்ட ஒதுக்கங்களின் அளவு மற்றும் உள்ளபடியான செலவு

மூலாதாரம் - 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள்

மேற்குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளும் போதுஅமைச்சு கண்டுபிடிக்கப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்படுகின்றன.

கட்டு நிதிக் கணக்கின் மீதி தீர்க்கப்படாமை.

மீளாய்வாண்டின் இறுதி வரையில் வெளிநாட்டு அமைச்சின் இரு கட்டுநிதிக் கணக்குகளில் முறையே ரூபா 89.92 மில்லியன் மற்றும் ரூபா 365.24 மில்லியனான மொத்தம் ரூபா 455.16 மில்லியன் ஆன மீதியொன்று காணப்பட்டது.

தீர்க்கப்படாத ரூபா 89.92 மில்லியன் ஆன கட்டு நிதி மீதியில் ரூபா 60.05 மில்லியன் ஆன மீதி வெளிநாட்டு தூதரகச் சேவையின் வெளிநாடு சென்ற ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த வீடுகளுக்காக வைக்கப்படுகின்ற பாதுகாப்பு வைப்புக்கள் 248 இன் ஒட்டு மொத்தமாகக் காணப்பட்டது. அவ்வீடுகள் பிணை / பாதுகாப்பு வைப்புக்கள் 248 இல் ரூபா 0.48 மில்லியன் ஆன பிணை வைப்புக்கள் வரவு ரூபா 59.57 மில்லியன் ஆன மிகுதி வீட்டுப் பிணை வைப்புக்கள் 247 உம் இதுவரையில் வெளிநாட்டு தூதரக ஊழியர்களினால் பயன்படுத்தப்படாத வீடுகளுக்காக வைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு வைப்புக்களாகும். அவ்வைப்பு பெறுமதியில் ரூபா 12.44 மில்லியன் 20 வருடங்களுக்கு மேற்பட்டதாக இருந்ததுடன் ரூபா 43.29 மில்லியன் ஆனது 10 வருடங்கள் தொடக்கம் 20 வருடங்கள் வரையான கால வீச்சிலும் ரூபா 3.84 மில்லியன் ஆன மிகுதி 07 வருடங்களுக்கு மேற்பட்டதாக காணப்பட்டது. அவ் வைப்புக்களை அறவிடுவது தொடர்பாக 2009 செப்டெம்பர் 01 ஆந் திகதிய 250 ஆம் இலக்க அமைச்சின் வெளிநாட்டுத் தூதரகப் பிரிவின் பணிப்பாளர் நாயகத்தின் உள்ளகச் சுற்றறிக்கையின் மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம்

நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மிகுதி தீர்க்கப்படாத ரூபா 29.87 மில்லியன் ஆன 127 செயல் நிமித்த உப கட்டுநிதிகள் காணப்பட்டதுடன் அதில் ரூபா 0.70 மில்லியன் 20 வருடங்கள் வரையான கால வீச்சிலும் 12.84 மில்லியன் 10 வருடங்கள் தொடக்கம் 20 வருடங்கள் வரையான கால வீச்சிலும் மற்றும் மிகுதி ரூபா 16.33 மில்லியன் 07 வருடங்கள் மேற்பட்டிருந்தும் நி.பி 371 இன் பிரகாரம் செயல் நிமித்த உப கட்டுநிதி அப் பணி முடிவடைந்தவுடன் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் தீர்க்கப்படாத செயல் நிமித்த உப கட்டு நிதி 127 இல் 72 கட்டுநிதிகளுக்கான மொத்தம் ரூபா 23.29 மில்லியன் எந்த விடயத்திற்காக வழங்கப்பட்டதென்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

ஏனைய கட்டு நிதிக் கணக்கில் ரூபா 365.24 மில்லியன் ஆன மீதியொன்று காணப்பட்டதுடன் அதில் வெளிநாட்டு தூதரகச் சேவைக்காக வெளிநாடுகளுக்குச் சென்ற ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற வீடுகளுக்காக வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வைப்பு ரூபா 344.21 மில்லியன் காணப்பட்டது. அப்பாதுகாப்பு வைப்புக்களில் ரூபா 19.54 மில்லியன் ஆனது தூதரக ஊழியர்கள் வசிக்காத வீடுகளுக்காக வைக்கப்பட்டிருந்த 46 வைப்புக்களுக்கு உரியதாகக் காணப்பட்டது. அப்பெறுமதியில் ரூபா 3.02 மில்லியன் 10 வருடங்களுக்கும் மேற்பட்ட வைப்புப் பெறுமதியாக இருந்ததுடன் ரூபா 16.52 மில்லியன் 04 வருடங்கள் தொடக்கம் 10 வருடங்கள் வரையான காலப் பகுதியொன்று எடுக்கப்பட்டிருந்த வைப்புக்களாகும். கட்டு நிதி மீதியில் மிகுதி ரூபா 21.03 மில்லியன் ஆனது செயல் நிமித்த உப கட்டுநிதிகள் ஆக இருந்ததுடன் அதில் 2018 ஆம் வருடத்திற்கு முன்னைய காலத்திற்கான ரூபா 3.93 மில்லியன் உம், 2019 ஆம் வருடத்திற்கான ரூபா 2.43 மில்லியன் மற்றும் 2020 ஆம் வருடத்திற்கான ரூபா 4.27 மில்லியன் உம் ஆகும். அந்த செயல் நிமித்த உப கட்டு நிதி தொடர்பாக நி.பி 371 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

காலாவதியான வைப்பு

வைப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக உரிமை கோரப்படாத வைப்புக்கள் அரச வருமானத்திற்கு எடுக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சினால் ரூபா 32.60 மில்லியன் ஆன வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு அரச வருமானத்திற்குச் செலவு வைப்பிற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டுடைய சொத்துக்கள்

- மலேசியாவின் கோலாலம்பூர் வெளிநாட்டுத் தூதரகத்தினல் 2007 ஆம் ஆண்டில் ரிங்கிட் 3,661,000 இற்கு காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலம் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தால் அலுவலகக் கட்டிட வாடகையாக 2021 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 19.36 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

- 1972 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த சுவீடனிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் உத்தியோகபூர்வ மனைக் கட்டிடம் 2012 ஆம் ஆண்டிலிருந்து பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் அக்கட்டிடம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு பயன்படுத்தப்படாத காரணத்தால் உத்தியோகபூர்வ மனை வாடகையாக

2021 ஆம் ஆண்டில் ரூபா 17.88 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

- 1976 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கென்யாவின் இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்குச் சொந்தமான அலுவலகக் கட்டிடம் மற்றும் உத்தியோகபூர்வ மனை முறையே 2021 ஆம் ஆண்டில் மற்றும் 2014 ஆம் ஆண்டிலிருந்து பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்தன. அக்கட்டிடங்கள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு பயன்படுத்தப்படாத காரணத்தால் அலுவலக வாடகை மற்றும் உத்தியோகபூர்வ மனை வாடகையாக 2021 ஆம் ஆண்டில் ரூபா 12.48 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

- அவுஸ்ரேலியாவின் கான்பராவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்குச் சொந்தமான அலுவலகக் கட்டிடம் மற்றும் உத்தியோகபூர்வ மனை முறையே 2012 ஆம் ஆண்டில் மற்றும் 2007 ஆம் ஆண்டிலிருந்து பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்தன. அக்கட்டிடங்களை புனர்நிர்மாணம் செய்து பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறை

கணக்காய்வு அவதானிப்புக்கள்

- வெளிநாட்டு தொழிலுக்காக செல்வதில் முன்னேற்றம் சுட்டிக்காட்டப்படுதல்
- கொரியாவில் தொழிலுக்காக இலங்கை வேலையாட்களை அனுப்பிவைப்பது தொடர்பான உடன்படிக்கை நாளதுவரையாக்கப்படாமை
- புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தொடர்பான தகவல்களை இணையவழி (Online) முறைமைக்கு பெற்றுக்கொள்ளும் நிகழ்ச்சித்திட்டம் அமுல்ப்படுத்தப்படாமை
- சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்
- கண்காணிப்பு ஊழியர்களாக வெளிநாடு செல்லும் வேலையாட்களுக்கு முறையான பயிற்சிகள் கிடைக்காமை
- இஸ்ரவேலுக்கு கண்காணிப்பு ஊழியர்களை அனுப்பும் நடைமுறை முறைமைப்படுத்தாமை
- வெளிநாட்டு தூதுவராயலயங்களில் அமைந்துள்ள தொழிலாளர் நலன்புரி பிரிவிற்காக முறையற்ற ஆட்சேர்ப்புக்கள
- அங்கீகரித்த எல்லையை மிகைத்து இடர்கடன் செலுத்துதல்
- ஆராய்ச்சிப் பிரிவினை ஆரம்பிக்கும் குறிக்கோள் நிறைவேற்றப்படாமை
- அபுதாபி மற்றும் இஸ்ரவேல் அலுவலகங்களில் இடம்பெற்றுள்ள நிதி ஒழுங்கீனங்கள்
- நிதி ஒழுங்கீனங்கள் தொடர்பான சம்பவங்களுக்குரிய தொடக்க புலனாய்வு அறிக்கை தொடர்பாக நடவடிக்கை எடுக்காமை
- அதிகாரமுள்ள கொடுக்கல் வாங்கல்கள்
- இலங்கை வெளிநாட்டு தொழில் முகவர் தனியார் கம்பனியின் செயலாற்றல்
- கம்பனிக்காக நிரந்தர அடிப்படையில் ஒரு பொது முகாமையாளர் நியமிக்கப்படாமை

வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறை

வெளிநாட்டு வேலை வாய்ப்பினை மேம்படுத்துதல் மற்றும் சந்தைகளை பல்வகைப்படுத்துதல் இராஜாங்க அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள 02 நியதிச்சட்ட நிறுவனங்களின் மூலம் இத்துறையின் மேம்பாட்டிற்காக பின்வரும் செயற்பாடுகளையும் கடமைகளையும் நிறைவேற்ற வேண்டியதாக இருந்தது.

- பயிற்சியற்ற வேலைப்படைக்கு பதிலாக வெளிநாட்டுத் தொழில் வாயப்பிற்காக பயிற்சி பெற்ற வேலையாட்களை சந்தை வாய்ப்புக்களுக்குப் போல வெளிநாட்டு சந்தை பல்வகைப்படுத்தலுக்கு நுழையவைத்தல்

- வெளிநாடு சென்ற வேலையாட்கள் மற்றும் வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையர்களுக்கு தாம் உழைக்கும் வெளிநாட்டு நாணயத்தை வினைத்திறனாக இலங்கையில் சேமித்தல் மற்றும் முதலீடு செய்வதற்கு விசேட வசதிகளை வழங்குவதற்காக இலங்கையின் வங்கி முறைமையை ஊக்குவித்தல்.

- வெளிநாட்டு வேலை வாய்ப்பினை பூர்த்தி செய்து நாட்டிற்கு வருகை தரும் நபர்களுக்கு வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கு விசேட செயற்திட்ட வேலைத்திட்டங்களை அந்த வியாபார துறைக்கு சம்பந்தப்படும் அமைச்சுடன் அமுல்ப்படுத்துதல்.

- மத்திய கிழக்கு மற்றும் ஏனைய நாடுகளில் சேவையாற்றுகின்ற வீட்டு பணிப்பெண்களின் பாதுகாப்பு மற்றும் நலன்புரிகளை உறுதிப்படுத்துவதற்காக வேலைத் திட்டங்களை அமுல்ப்படுத்தல்.
- வெளிநாடுகளில் பல்வேறு விபத்துக்களுக்கு உள்ளாகியவர்களுக்கு தகமையுள்ள இழப்பீடுகளைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறைகளை வலுப்படுத்துவதற்காக தேவையான சட்டரீதியான மீளமைப்புக்களை அறிமுகப்படுத்துதல்.
- தனிப்பட்ட வெளிநாட்டு தொழில் முகவர்களை முறையான ஒரு நடைமுறையின் கீழ் ஒழுங்குபடுத்துதல்.

2021 ஆம் ஆண்டில் மேற்கூறிய செயற்பாடுகளுக்காக அமைச்சிற்கு மொத்தமாக ரூபா 701 மில்லியன் வருடாந்த பாதீட்டு நிதி ஏற்பாட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அதில் ரூபா 650 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரம் வரைபடம் 47 இல் தரப்படுகின்றது.



வரைபடம 47 -- நிதி ஏற்பாடும் உள்ளபடியான செலவுகளும்

மூலம் :- 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்

இத்துறையானது இலங்கையின் தேசிய வருமானத்திற்கு விசேட பங்களிப்பினை வழங்குவதுடன் இலங்கை மத்திய வங்கியின் புள்ளி விபரங்களின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் ரூபா 1,087,188 மில்லியன் அதன் மூலம் உழைக்கப்பட்டிருந்தது. அது செலவு செய்யக்கூடிய தேசிய வருமானத்தில் 6.23 சதவீதமாகவும் வெளிநாட்டு நாணய உழைப்புக்களில் 97 சதவீதமுமாகும்.

வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களை மேம்படுத்துதல் மற்றும் சந்தைகளை பல்வகைப்படுத்துதல் இராஜாங்க அமைச்சின் மேற்பார்வை மற்றும் செயற்படுத்தலின் கீழ் வெளிநாட்டு தொழில்துறை சம்பந்தமாக மேலே காட்டப்பட்டுள்ள அரசாங்கத்தின் கடமைகளை நிறைவேற்றும் முன்னணி நிறுவனம் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் ஆவதுடன் பின்வரும் நிறுவகரீதியான கட்டமைப்பின் மூலம் அதன் சேவைகள் விரிவுபடுத்தப்பட்டிருந்தன.

- 16 வெளிநாட்டு தூதுவராலயங்களில் தொழிலாளர் நலன்புரி பிரிவினை ஸ்தாபித்தல்.
- வெளிநாட்டு தொழிலுக்காக சென்று பல்வேறு சிக்கல்களுக்கு முகங்கொடுக்கின்ற புலம்பெயர்ந்தவர்களை தற்காலிகமாக தங்கவைப்பதற்காக 12 தற்காலிக இல்லங்களை இந்த நலன்புரி பிரிவின் கீழ் பராமரித்தல்.

- புலம் பெயர்ந்த தொழிலாளர்களை பழக்கப்படுத்துதல் மற்றும் பயிற்றுவித்தல் நடவடிக்கைகளுக்காக நாடுமுழுவதும் 17 பயிற்சி நிலையங்களைப் பேணுதல்.
- வெளிநாட்டு தொழில் வாய்ப்பு பணியகத்தின் 09 பிராந்திய அலுவலகங்களை ஸ்தாபித்தல்.

2021 ஆம் ஆண்டின் போது பணியகத்தினால் தமது சேவைகளின் மூலம் மொத்தமாக ரூபா 3,054 மில்லியன் வருமானம் உழைக்கப்பட்டிருந்ததுடன் மொத்த செலவு ரூபா 2,421 மில்லியனாக இருந்தது. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பணியகத்தின் மொத்த முதலீட்டுப் பெறுமதி ரூபா 10,586 மில்லியனாக இருந்தது.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் தகவலின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் பணியகத்தில் பதிவு செய்து தொழிலுக்காக வெளிநாடு சென்றவர்களின் எண்ணிக்கை 122,264 ஆக இருந்தது. இதில் 73,717 எண்ணிக்கையானது (60%) வீட்டு

வேலையாட்கள், அரைவாசி பயிற்சி பெற்ற மற்றும் பயிற்சி பெறாத வேலையாட்களாக இருந்தனர். தொழில்சார் தரத்திலுள்ள வேலைக்காக மற்றும் பயிற்சி பெற்ற தொழிலுக்காக வெளிநாடு சென்றவர்களின் எண்ணிக்கை முறையே 8,373 மற்றும் 40,174 ஆக இருந்தது.



வரைபடம் 48- தொழில் வகைப்படுத்தலின் பிரகாரம் வெளிநாடு செல்லுதல் -2021

மூலம்:- இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம்

வெளிநாட்டு தொழிலுக்காக செல்வதில் முன்னேற்றம் சுட்டிக்காட்டப்படுதல்

உலகளாவிய தொற்றுநோய் நிலைமையை பிரதானமாகக் கொண்ட பல்வேறு காரணங்களின் அடிப்படையில் கடந்த ஆண்டுகளில் தொழிலுக்காக வெளிநாடு சென்ற அளவு படிப்படியாகக் குறைவடைந்திருந்ததுடன் 2021 ஆம் ஆண்டின் போது மீண்டும் அதில் முன்னேற்றம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.



வரைபடம்.49 பணியகத்தில் பதிவு செய்து தொழிலுக்காக வெளிநாடு செல்லல் - 2017 இலிருந்து 2021 வரை

மூலம்:- இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை-2021

இராஜாங்க அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நியதிச்சட்ட நிறுவனங்களினால் மேலே குறிப்பிட்ட செயற்பாடுகள் மற்றும் கடமைகள் தொடர்பாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கி கீழே தரப்படுகின்றன.

கொரியாவில் தொழிலுக்காக இலங்கை வேலையாட்களை அனுப்பிவைப்பது தொடர்பான உடன்படிக்கை நாளதுவரையாக்கப்படாமை

கொரியாவில் தொழிலுக்காக இலங்கை வேலையாட்களை அனுப்பிவைப்பது தொடர்பாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சிற்கும் கொரிய அரசாங்கத்திற்குமிடையே 2017 நவம்பர் 29

ஆந் திகதி 02 ஆண்டுகள் காலத்திற்காக கையொப்பமிடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் நியாயமான காரணமின்றி அந்த உடன்படிக்கையை மீண்டும் நாளதுவரையாக்குவதற்காக உடன்படிக்கையை செல்லுபடியற்றதாக்க 06 மாத காலம் கடந்திருந்த போதிலும் உடன்படிக்கையை கைவிடுவதற்கு அல்லது முடிவுறுத்துதவற்கான இயலுமை காணப்பட்டது. இதன் கீழ் அந்த நாட்டிற்கு வேலையாட்களை அனுப்பும் செயற்பாடு பணியகத்தினால் மாத்திரம் செய்யப்பட வேண்டியதுடன் கடந்த 05 ஆண்டுகளில் மொத்தமாக 20,144 நபர்கள் தொழிலுக்காக அனுப்பிவைக்கப்பட்டிருந்தனர். எனினும் 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட உடன்படிக்கையை நாளதுவரையாக்குதல் 2022 யூலை வரையும் பூர்த்தியடைந்திருக்கவில்லை.

புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தொடர்பான தகவல்களை இணையவழி (Online) முறைமைக்கு பெற்றுக்கொள்ளும் நிகழ்ச்சித்திட்டம் அமுல்ப்படுத்தப்படாமை

புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் குடும்ப வாழ்க்கை வரலாற்று குறிப்பு தொடர்பான தகவல்களின் கணனிமயப்படுத்தப்பட்ட தரவு முறைமையை பேணுவதற்கும் நாளது வரையாக்கப்பட்ட தகவல்களை இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திற்கு இணைய வழிப்படுத்திய (Online) கணனி முறைமையின் மூலம் அனுப்புவதனை குறிக்கோளாகக் கொண்டு அமைச்சினால் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் 277 கணனிகள் ரூபா 35.5 மில்லியன் செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்டு பிரதேச செயலகங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. எனினும் எதிர்பார்த்தவாறு தரவு முறைமையை பராமரித்து தேவையான தகவல்களை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு அனுப்பிவைப்பதற்கு கணக்காய்வுத் திகதியான 2022 ஏப்ரல் 05 ஆந் திகதி வரை முடியாதிருந்தது.

சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சு அலுவலகத்திற்காக கட்டிடத்தினை வாடகைக்குப் பெறுதல் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருவதுடன் தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 2016 சனவரியிலிருந்து 2019 ஒக்தோபர் வரை இரண்டு சந்தர்ப்பங்களின் போது அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட க்ட்டிடத்திற்காக மொத்தமாக ரூபா 95.63 மில்லியன் வாடகையும் அக்கட்டிடத்தினை அறைகளாகப் பிரித்தல் மற்றும் சாமான்களை எடுத்துச் செல்வதற்காக மொத்தமாக ரூபா 15.42 மில்லியனும் செலவ செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே 2019 ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் நாரஹேன்பிடியில் அமைந்துள்ள மெஹவெர பியச கட்டிடத்தில் அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டு அதில் அறைகளாகப் பிரிப்பதற்காக ரூபா 34.61 மில்லியன் மதிப்பீட்டின் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 2 மில்லியன் தொடக்க கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

கண்காணிப்பு ஊழியர்களாக வெளிநாடு செல்லும் வேலையாட்களுக்கு முறையான பயிற்சிகள் கிடைக்காமை

இஸ்ரவேலுக்கு இலங்கை வேலையாட்களை அனுப்பும் குறிக்கோளில் பணியகத்தினால் நடாத்தப்படுகின்ற கண்காணிப்பு ஊழியர் தேசிய தொழில்சார் தகமை (NVQ 3) பயிற்சி நெறிகளுக்காக சிபாரிசு செய்யப்பட்ட

திறனுக்காக அங்கீகரிக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கு 03 மாதங்களுக்குள் பூர்த்திசெய்யப்பட வேண்டிய 12 பாட அலகுகள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் பணியகம் அப்பயிற்சி கற்கைநெறியை 02 மாதங்களில் பூர்த்தி செய்வதற்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. சர்வதேச திறன் மட்டத்திற்காக தேவையான செயன்முறைப் பயிற்சி 260 மணித்தியாளங்களை உள்ளடக்காத வகையில் கற்கை நெறியின் காலம் 45 நாட்கள் மற்றும் 30 நாட்களாக இரண்டு சந்தர்ப்பங்களில் அங்கீகாரமின்றி குறைக்கப்பட்டு இணைய வழி முறைமையில் நடாத்தப்பட்டிருந்தது. இந்த பயிற்சியை பூர்த்திசெய்து ஒரு ஆண்டின் பின்னர் வீசாவிற்கு விண்ணப்பிக்கும் போது அத்தகமைகளை நாளதுவரையாக்குதல் அத்தியவசியமானது என இஸ்ரவேல் தூதுவராலயத்தினால் தெரியப்படுத்தப்பட்டிருந்ததனால் அந்த தொழிலாளர்களிடமிருந்து அவ்வாறே ரூபா 8,100 அறவிடப்பட்டு 07 நாட்களுக்குள் அந்த பாடத்திட்டத்தை மீண்டும் கற்கபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. தொழில் தேவைப்பாட்டிற்கு இணங்க ஆங்கில மொழியில் இக்கற்கை நெறியை நடாத்த வேண்டியிருந்த போதிலும் பயிற்சிக்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட நபர்களுக்கு குறுங்கால ஆங்கில கற்கைநெறியை கட்டணம் அறவிட்டு நடாத்துவதற்கும் பணியகம் நடவடிக்கை எடுத்திருந்தது. பயிற்சியை பூர்த்தி செய்த 5,918 நபர்களில் 862 நபர்கள் மாத்திரம் உரிய தொழிலுக்காக வெளிநாடு சென்றிருந்தார்கள். எவ்வாறாயினும் பணியகத்தினால் இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் ரூபா 84.91 மில்லியன் பணம் உழைக்கப்பட்டிருந்தது.

இஸ்ரவேலுக்கு கண்காணிப்பு ஊழியர்களை அனுப்பும் நடைமுறை முறைமைப்படுத்தாமை

இஸ்ரவேல் அரசாங்கத்துடன் இலங்கை அரசாங்கம் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கையில் செயல்முறைப் பயிற்சியுடன் 11 மாத தாதிப் பயிற்சி கற்கை நெறி சான்றிதழ் அல்லது பணியகத்தினால் அமுல்ப்படுத்தப்படுகின்ற NVQ 03 மட்டத்தின் கண்காணிப்பு ஊழியர் பயிற்சி சான்றிதழினைப் பெற்றிருத்தல் மாத்திரம் இத்தொழிலுக்கு சேர்த்துக்கொள்ளும் தகமையாக காட்டப்பட்டிருந்தமையின் காரணமாக மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கற்கைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தினைப் பெற்ற செயன்முறைப் பயிற்சியுடனான தேசிய தொழில்சார் தகமைகளின் 04 ஆம் மட்ட மற்றும் 03 ஆம் மட்ட சான்றிதழை வைத்திருக்கும் அரசாங்க மற்றும் அரசசார்பற்ற 19 பயிற்சி நிலையங்களில் முறைப்படியாக பயிற்சியை பூர்த்திசெய்த மாணவர்களுக்கு இத்தொழிலுக்காக விண்ணப்பிப்பதற்கு முடியாதிருந்தது.

வெளிநாட்டு தூதுவராயலயங்களில் அமைந்துள்ள தொழிலாளர் நலன்புரி பிரிவிற்காக முறையற்ற ஆட்சேர்ப்புக்கள்

2020 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை இல்லாது பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு வெளிநாட்டு தூதுவராலயங்களில் அமைந்துள்ள தொழிலாளர் நலன்புரி பிரிவிற்காக பணியகத்தினால் தயாரிக்கப்பட்ட வரையறைகளை அடிப்படையாகக் கொண்டு சொந்த நாட்டு பாகத்தின் அடிப்படையில் 31

நபர்களும் உள்நாட்டு அடிப்படையில் 67 நபர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். சொந்த நாட்டு அடிப்படையிலும் உள்நாட்டு அடிப்படையிலும் தெரிவுசெய்வதற்குரிய நேர்முகப் பரீட்சையில் ஒப்பீட்டு ரீதியாக அதிக பள்ளிகளைப் பெற்றுக்கொண்ட நபர் இருக்கும் போது முறைப்படியாக குறைந்த புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட 09 நபர்கள் மற்றும் 16 நபர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். இந்த தொழிலாளர் நலன்புரி பிரிவுகளின் ஆலோசகர் மற்றும் மூன்றாம் செயலாளர் ஆகிய பிரிவுகளுக்காகவும் பணியகத்தினால் மீளாய்வாண்டில் இரண்டு வெளி நபர்கள் சேர்த்தக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த ஆட்சேர்ப்பு தொடர்பாக விண்ணப்பங்களைக் கோருவதற்கு பின்பற்றப்பட்ட நடைமுறை தொடர்பான தகவல்கள் அறிவிக்கப்படவில்லை. அவ்வாறே உரிய பதவிக்கான ஆகக் குறைந்த வயதினைப் பூர்த்திசெய்திருக்காத உரிய துறையில் அல்து அச்சேவை தொடர்பான அனுபவம் இல்லாத ஒரு உத்தியோகத்தர் சிங்கப்பூரில் ஆலோசகராக சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தார்.

அங்கீகரித்த எல்லையை மிகைத்து இடர்கடன் செலுத்துதல்

2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 02 ஆம் பந்திக்கு முரணாக பணியகத்தின் உத்தியோகத்தர்களுக்கு இடர்கடன் செலுத்தியமையின் காரணமாக மீளாய்வாண்டின் போது 275 உத்தியோகத்தர்களுக்கு மொத்தமாக ரூபா 80.79 மில்லியன் மிகையாக இடர் கடனாகச் செலுத்தப்பட்டிருந்தது.

ஆராய்ச்சிப் பிரிவினை ஆரம்பிக்கும் குறிக்கோள் நிறைவேற்றப்படாமை

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரச் சட்டத்தின் 15(அ) (ஒ) (ஓ) பிரிவின் பிரகாரம் இலங்கையர்களுக்காக இலங்கைக்கு வெளியே வேலையில் ஈடுபடும் சந்தர்ப்பத்தை உருவாக்குதலும் அபிவிருத்தி செய்தலும் வேலை வாய்ப்பு சந்தர்ப்பம் தொடர்பாக ஆராய்ச்சி மற்றும் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், வேலை வாய்ப்பிற்காக இலங்கையிலிருந்து வெளியேறுதல், மற்றும் திரும்பி வருவதனை மீளாய்வு செய்தல் என்பவற்றிற்காக தகவல் வங்கியை உருவாக்கி பேணுவதனை குறிக்கோளாகக் கொண்டு ஆராய்ச்சிப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் 13 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தும் தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் 09 ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றில் 04 ஆராச்சிகளின் வேலைகள் முடிவடைந்திருந்தன. எனினும் மேற்கூறிய குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் அந்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் தகவல் வங்கியையும் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

அபுதாபி மற்றும் இஸ்ரவேல் அலுவலகங்களில் இடம்பெற்றுள்ள நிதி ஒழுங்கீனங்கள்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அபுதாபி மற்றும் இஸ்ரவேல் தூதுவராலயங்களில் அமைந்துள்ள தொழிலாளர் நலன்புரி பிரிவுகளில் முறையே 2014 ஆம் ஆண்டில் ரூபா 1.15 மில்லியனும் 2019 ஆம் ஆண்டில் ரூபா 1.83 மில்லியனுமான

நிதி ஒழுங்கீனங்கள் இடம்பெற்றிருந்தன என நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதில் இஸ்ரவேல் தூதுவராலயத்தின் நிதி ஒழுங்கீனம் தொடர்பாக ரூபா 91 மில்லியன் மற்றும் அபுதாபி தூதுவராலயத்தில் இடம்பெற்ற ரூபா 1.15 மில்லியன் நிதி ஒழுங்கீனங்களுக்கு 08 ஆண்டுகள் காலம் கடந்திருந்தும் மீள அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது.

நிதி ஒழுங்கீனங்கள் தொடர்பான சம்பவங்களுக்குரிய தொடக்க புலனாய்வு அறிக்கை தொடர்பாக நடவடிக்கை எடுக்காமை

2015 இலிருந்து 2019 வரையான காலப்பகுதியில் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் இடம்பெற்றுள்ளது என குறிப்பிடப்பட்ட 07 ஒழுங்கீன சம்பவங்கள் தொடர்பாக தொடக்க புலனாய்வினை மேற்கொள்வதற்காக அமைச்சு செயலாளரினால் மூன்று புலனாய்வு உத்தியொகத்தர்கள் நியமிக்கப்பட்டு உரிய அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் அந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஒழுக்காற்று விசாரணைகளை நடாத்துவதற்கு அல்லது ஏனைய நடைமுறைகளுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

அதிகாரமுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியக அதிகாரச் சட்டத்தின் 45 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கைக்கு வெளியே தொழில் வாய்ப்பில் ஈடுபட்டுள்ள இலங்கையர்களின் நலன்களை குறிக்கோளாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட தொழிலாளர் நலன்புரி நிதியத்தின் வெளிநாட்டு வங்கி நடைமுறைக் கணக்குகளில் காணப்பட்ட மீதிகளின் பெறுமதி ரூபா 223 மில்லியனாக இருந்தது. அதிகாரச் சட்டத்தின் 17 (2) மற்றும் 45 (2) ஆம் பிரிவுகளிலுள்ள ஒழுங்குவிதிகளுக்கு முரணாக பணியகத்தின் நிதியத்திற்கு சேகரிக்கப்பட வேண்டிய மொத்தமாக ரூபா 544 மில்லியன் வருமானம் தொழிலாளர் நலன்புரி நிதியத்தினால் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் பணியக நிதியத்திலிருந்து செலுத்த வேண்டிய வெளிநாட்டு தூதுவராலயங்களில் சேவைக்காக இணைத்துக்கொள்ளப்பட்ட 56 உத்தியோகத்தர்களுக்கான சம்பளங்கள் படிகள் மற்றும் ஏனைய வசதிகளுக்காக மொத்தமாக ரூபா 428.56 மில்லியன் தொழிலாளர் நலன்புரி நிதியத்திலிருந்து செலவு செய்யப்பட்டது.

இலங்கை வெளிநாட்டு தொழில் முகவர் தனியார் கம்பனியின் செயலாற்றல்

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் முழுமையான உரிமைத்துவத்தின் அடிப்படையில் செயற்படுகின்ற வெளிநாட்டு தொழில்முகவர் கம்பனியின் மூலம் அரசாங்கத்தின் பாதுகாப்பின் கீழ் ஒப்பீட்டளவில் குறைந்த செலவில் இலங்கை வேலையாட்களை தொழிலுக்காக அனுப்பிவைக்கும் இயலுமை இருந்தும் மீளாய்வாண்டில் 90 வேலையாட்கள் மாத்திரம் வெளிநாடு சென்றிருந்ததுடன் அது ஆண்டிற்காக பணியகத்தில் பதிவு செய்து தொழிலுக்காக வெளிநாடு சென்ற மொத்த வேலையாட்களின் எண்ணிக்கையில் 0.07 சதவீத அளவாக இருந்தது. வெளிநாட்டு தொழில் ஆலோசகராக செயற்படுதல், தெரியப்படுத்துதல், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், தொழில் வேண்டுதல்களை திருப்தி செய்தல் என்பவைகளை உள்ளடக்கிய ஏனைய பிரதான

செயற்பாடுகளில் எதுவும் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

கம்பனியினால் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் அதன் செயல்முன்னேற்றத்தின் பிரகாரம் ரூபா 2.1 மில்லியன் செலவு செய்து புதிய தொழில் சந்தைக்குள் நுழைதல், வெளிநாட்டுகளில் உள்ள இலங்கை தூதுவராலயங்களின் மூலம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் சந்தைப்படுத்தல் பிரிவின் மூலம் வெளிநாடுகளினூடாக தொழில் வாய்ப்புக்களை தேடிக்கண்டுபிடிப்பதன் மூலம் மற்றும் இணையதளங்கள், மின்அஞ்சல் வழிகளை உள்ளடக்கிய 05 முறைமைகளின் மூலம் 84 புதிய தொழில் கட்டளைகளைப் பெற்றுக்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் ஆண்டின் போது கம்பனிக்கு அந்த முறைமைகளின் மூலம் 15 தொழில் கட்டளைகள் மாத்திரம் கிடைத்திருந்தன. அவ்வாறே வெளிநாட்டு தொழில் சந்தைகளை மேம்படுத்துவதற்காக உள்நாட்டில் அமுல்ப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களும் எதிர்பார்த்தவாறு அமுல்ப்படுத்தப்படவில்லை.

கம்பனிக்காக நிரந்தர அடிப்படையில் ஒரு பொது முகாமையாளர் நியமிக்கப்படாமை

கம்பனிக்காக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் முறைப்படியாக ஒரு பொது முகாமையாளரை சேர்த்துக் கொள்வதற்கு தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் கம்பனியில் தொடக்கத்திலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையான 25 ஆண்டுகள் காலத்தில் 16 பொது முகாமையாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர. அவர்களில் ஒரு ஆண்டு காலத்திற்காக மாத்திரம் நிரந்தர அடிப்படையில் வரிசை அமைசினால் இரண்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். 2000 ஆம் ஆண்டின் பின்னர் 11 சந்தர்ப்பங்களின் போது இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் 09 உத்தியோகத்தர்கள் பதில் கடமை அடிப்படையில் முறையான நடைமுறைகளின்றி அதன் பொது முகாமையாளராக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் கம்பனியின் நிதி மற்றும் நிருவாகப் பிரிவுகளின் உயர் பதவிக்காகவும் பணியகத்தின் உத்தியோகத்தர்கள் பதில் கடமை அடிப்படையில் தொடர்ச்சியாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

விமான சேவைகள் பிரிவு

கணக்காய்வு அவதானிப்புக்கள்

- வருமானம் சேகரித்தல்
- பாதீட்டு ஒதுக்கங்கள் பயன்படுத்தப்பட்டமை
- சிவில் விமான சேவைகள் அதிகாரசபையினால் திறைசேரியின் அங்கீகாரமின்றி கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டமை
- யப்பான் கடன் உதவியின் கீழ் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை விரிவுபடுத்தும் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படல்
- கடன் குறைப்பயன்பாடு காரணமாக கடப்பாடுகள் கட்டணம் (Commitment Fee) செலுத்தப்பட்டமை
- சிவில் விமான சேவைகள் அதிகாரச்சட்டத்திற்கு இணங்காமை
- விமான நிலையக் காணிகள் மற்றும் கட்டிடங்களின் உரிமை
- மத்தள, இரத்மலானை, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு சர்வதேச விமான நிலையங்களின் செயலாற்றல்
- லங்கன் விமான சேவைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் தன்மை
- அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் திறைசேரியினால் காலத்திற்கு காலம் மேலதிக நிதியம் வழங்கப்பட்டமை
- அரச வங்கிகளில் குறுங்கால கடன் வசதிகள் பெறப்பட்டமை
- சர்வதேச பிணைமுறிகளை வழங்குதல்
- செலுத்த வேண்டிய கணக்கு
- A-350-900 விமானங்கள் 04 இற்காக செலுத்தப்பட்டிருந்த முற்கொடுப்பனவுகள் (Pre-delivery payments) தீர்க்கப்பட்டமை
- 12 புதிய விமானங்கள் மற்றும் 09 விமானங்கள் மறுசீரமைப்பு செயற்பாட:டுக் குத்தகை பெறப்படுவதற்கான முன்மொழிவுகளுக்கான அழைப்பு

விமான சேவைகள் பிரிவு

அதிகளவான அந்நியச் செலாவணியை நோக்கமாகக் கொண்ட சுற்றாடல் மற்றும் உள்நாட்டு காலாச்சார சுற்றுலாத்தொழில் போன்ற தூரநோக்கின் அடிப்படையில் செயற்படுகின்ற விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு மற்றும் அதன் கீழ் வருகின்ற 3 சட்டரீதியான நிறுவனங்கள் மூலமும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் மற்றும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டியதாக உள்ளன.

- பரிந்துரைக்கப்பட்ட சட்டங்கள் மற்றும் கட்டளைகளின் பிரகாரம் இளைஞர் மற்றும் விளையாட்டு விடயப்பரப்பிற்கான கொள்கைகளை உருவாக்குதல்.

- தேசிய வரவு செலவுத்திட்டம் , அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் கீழான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

- இருக்கின்ற சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் கைத்தொழில் நகரங்களை உச்சகட்ட வினைத்திறமையோடு பயன்படுத்துவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதலும் தாமதமின்றி நவீனமயப்படுத்தலும்

- கட்டுநாயக்க விமான நிலையத்தின் இரண்டாவது ஓடுபாதை மற்றும் பயணிகள் முடிவிடத்தை அபிவிருத்தி செய்தல்.

- கட்டுநாயக்க விமான நிலையத்தின் உள்ளக விமானப் பயணிகள் முடிவிடத்தை அபிவிருத்தி செய்தல்

- நுவரெலியா விமான நிலையம் உட்பட உள்ளக விமான நிலையங்களை அபிவிருத்தி செய்தல்

- மத்தள விமான நிலையத்தில் வர்த்த நடவடிக்கைகளை ஆரம்பித்தலும் வசதிகளை மேம்படுத்தலும்

- ஸ்ரீலங்கன் விமான சேவையை உயர்மட்ட சர்வதேச தளவளவு வரை உயர்த்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல்.

- விமானப் பொதிகளை ஏற்றுமதி செய்வதை விரிவாக்குதல்

2021 ஆம் வருடத்தில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சிற்கு ரூபா 2,086 மில்லியன் ஒதுக்கங்கள் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அவற்றில் ரூபா 969 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது.



வரைபடம் 50 - மதிப்பீடு மற்றும் உள்ளபடியான செலவு

மூலாதாரம் - 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள்

விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படுகின்ற 03 சட்டரீதியான நிறுவனங்களினால் மேற்குறிப்பிடப்பட்ட பணிகள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றுதல் தொடர்பான மாதிரிக் கணக்காய்வின்போது கண்டுபிடிக்கப்பட்ட முக்கியமான மற்றும் பொருண்மையான கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்படுகின்றன.

வருமானம் சேகரித்தல்

விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் பிரதான வருமானமான சிவில் விமான சேவைகள் அதிகாரசபையின் மூலம் சேகரிக்கப்படுகின்ற விமான நிலைய வரி (Embarkation Levy) இன் கீழ் 2021 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக ஆரம்ப மதிப்பீடு ரூபா 19,000 மில்லியன் ஆக இருந்ததுடன் கொவிட் தொற்றுநோய் காரணமாக அம்மதிப்பீடு ரூபா 4,000 மில்லியன் வரையில் குறைக்கப்பட்டு திருத்தப்பட்டிருந்தது. எனினும் வருடத்தில் ரூபா 3,350 மில்லியன் அதாவது திருத்திய மதிப்பீட்டில் 84 சதவீதம் மட்டுமே சேகரிக்கப்பட்டிருந்தது.



வரைபடம் 51 - மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் ஈட்டப்பட்ட வருமானம்

பாதீட்டு ஒதுக்கங்கள் பயன்படுத்தப்பட்டமை

2021 ஆம் ஆண்டில் விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் மீண்டெழும் செலவுகளுக்கான பாதீட்டு ஒதுக்கங்கள் ரூபா 169.84 மில்லியன் ஆக இருந்ததுடன் அதில் ரூபா 103.01 மில்லியன் பயன்படுத்தப்பட்டு ரூபா 66.83 மில்லியன் அதாவது பாதீட்டு ஒதுக்கங்களில் 39 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

மூலதனச் செலவுகளுக்காக ரூபா 1916.12 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததடன் அதில் ரூபா 866.02 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டு ரூபா 1,050.1 மில்லியன் அதாவது 55 சதவீதமொன்று சேமிக்கப்பட்டிருந்தது. மேலும் இவ்வருடத்திற்கான ஒதுக்கங்கள் அல்லாத செலவொன்றான மட்டக்களப்பு விமான நிலையத்தின் ஓட்டப்பாதை நிர்மாணித்தலுக்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்த வேண்டிய தொகையொன்றான ரூபா 53.6 மில்லியன் பொதுத்திறைசேரியின் அறிவுறுத்தலின் பிரகாரம் மூலதன செலவுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அத்துடன் இக்கொடுப்பனவு தொடர்பான ஏற்பாடுகள் வழங்கல் கடிதத்திற்கு மேலதிகமாக ஆதார ஆவணங்கள் அல்லது எழுத்துமூல சான்றுகள் எவையும் அமைச்சினால் பெறப்பட்டிருக்கவில்லை.

வரைபடம் - மீண்டெழும் செலவுகள்



வரைபடம் **52** - மூலதன செலவீனம்



வரைபடம் **53** - மீண்டுவரும் செலவீனம்

சிவில் விமான சேவைகள் அதிகாரசபையினால் திறைசேரியின் அங்கீகாரமின்றி கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டமை

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2018 யூலை 18 ஆந் திகதிய சுற்றறிக்கை இலக்கம்: 03/2018 இன் பிரகாரம் பொது திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி கொடுப்பனவுகள் செலுத்தப்பட முடியாத போதிலும், பணிப்பாளர் சபையில் எடுக்கப்பட்டிருந்த தீர்மானத்தின் பிரகாரம் அதிகாரசபையின் மேல்மட்ட முகாமைத்துவ அதிகாரிகள் 27 பேருக்கு 2018 மே மாதம் தொடக்கம் நடைமுறைப்படுத்தும் வகையில் மாதாந்தம் ரூபா 50,000 முகாமைத்துவக் கொடுப்பனவொன்று செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 13,061,742 உம் உட்பட, 2018 ஆம் ஆண்டிலிருந்து 2021 வரை ரூபா 50,128,553 ஆன மொத்தக் கொடுப்பனவொன்று அதிகார சபையினால் செலுத்தப்பட்டிருந்தது.

யப்பான் கடன் உதவியின் கீழ் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை விரிவுபடுத்தும் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படல்

2009 ஆம் ஆண்டின் பின்னர் நாட்டில் நிலவிய சாதகமான காலநிலை காரணமாக அதிகரித்துள்ள விமானப் பயணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய விரிவாக்கல் செயற்திட்டத்தை நடைமுஜறப்படுத்துவதற்கு விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி திட்டமிடப்பட்டிருந்தது. அச்செயற்திட்டத்தின் கீழ் "புதிய விமான பயணிகள் முடிவிடக் கட்டிடம் மற்றும் அதனுடன் தொடர்பான நிர்மாணம்" என்பது தொகுப்பு A எனவும் மற்றும் "புதிய விமான வழிசெலுத்தல் மற்றும் திண்மக்கழிவு முகாமைத்துவ முறைமை" என்பது தொகுதி B எனவும் இரு பகுதிகளின் கீழ் இனங்காணப்பட்டிருந்தது. இச்செயற்திட்டம் 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 3 வருடத்திற்குள் அதாவது 2015 ஆம் ஆண்டில் முடிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டும் திட்டம் மாற்றப்பட்டமை உட்பட பல்வேறு காரணங்களின் அடிப்படையில் ஒப்பந்தம் வழங்கப்படுதல் தாமதமாகி இருந்தது. அதன் பிரகாரம் முதலில் "பீ" தொகுப்பிற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் அது 2017 ஏப்ரல் 25 இல் ஆரம்பிக்கப்பட்டு 2020 ஆகஸ்ட் 06 ஆந் திகதி முடிக்கப்பட்டிருந்தது.

மேற்படி செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 92 சதவீதத்தை பிரதிநிதித்துப்படுத்தும் பிரதான நிர்மாணம் உட்பட "ஏ" தொகுதிக்காக 2020 மார்ச் 12 ஆந் திகதி ஒப்பந்தக்காரருடன் யப்பான் யென் 41,554 மில்லியன் மற்றும் ரூபா 35,136 மில்லியன் ஆன பெறுமதிக்கு விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி ஒப்பந்தத்தை ஏற்படுத்தியிருந்தது. அதன் நிர்மாண நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது நாட்டில் நிலவிய நிதிச் சிக்கல் காரணமாக நிதி அமைச்சினால் 2022 ஏப்ரல் 12 ஆந் திகதி எடுக்கப்பட்டிருந்த கொள்கைத் தீர்மானத்தின் அடிப்படையில் கடன் தவணைக் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டன. அதன் காரணமாக கடன் வழங்குனரால் நிதி மீளளிக்கப்படாததன் காரணமாக ஒப்பந்தக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாமையால் 2022 யூலை 25 இலிருந்து ஒப்பந்தக்காரரினால் நிர்மாணம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

கடன் குறைப்பயன்பாடு காரணமாக கடப்பாடுகள் கட்டணம் (Commitment Fee) செலுத்தப்பட்டமை

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய விரிவுபடுத்தல் செயற்திட்டத்தின் "ஏ" தொகுதியின் கீழ் புதிய விமான பயணிகள் முடிவிடக் கட்டிடம் மற்றும் அதனுடன் தொடர்பான நிர்மாணம் செயற்படத்தப்படுவதற்காக விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியால் யப்பான சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்திடமிருந்து (JICA) மொத்தம் யப்பான் யென் 74,397 மில்லியன் ஆன வெளிநாட:டுக் கடன் தொகையொன்று பெற்றுக் கொள்வதற்காக முறையே 2012 மார்ச் 28 மற்றும் 2016 மார்ச் 24 ஆந் திகதி 02 ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இச்செயற்திட்டம் நடைமுறைப்படுத்தல் தாமதமானதன் காரணமாக 2022 ஏப்ரல் 20 வரையில் JICA நிறுவனத்திற்கு, வெளிநாட்டுக் கடன் குறைவாகப் பயன்படுத்தப்பட்டமை காரணமாக கடப்பாடுகள் கட்டணமாக ரூபா 359.5 மில்லியன் ஆன கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

சிவில் விமான சேவைகள் அதிகாரச்சட்டத்திற்கு இணங்காமை

2010 இன் 14 ஆம் இலக்க சிவில் விமான சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியால் விமான வலயங்கள் நிறுவுதல் அல்லது அபிவிருத்திக்காக பிரதான திட்டமொன்று தயாரிக்கப்பட்டு இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் அவ்வாறான திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

விமான நிலையக் காணிகள் மற்றும் கட்டிடங்களின் உரிமை

2022 இன் 34 ஆம் இலக்க சிவில் விமான சேவைகள் அதிகாரசபை சட்டத்தின் கீழ் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அமைச்சரால் கட்டுநாயக்க விமான நிலையம், இரத்மலானை விமான நிலையம், சிவில் விமான சேவைகள் பயிற்சி நிலையத்தின் காணி, கட்டிடம் மற்றும் கட்டமைப்புக்கள், இரத்மலானை, அத்திடியா, வானூர்தி தொடர்பாடல் ஒலிபரப்பு நிலையம், கம்பஹா மற்றும் பமுனுகம வானொலி ஊடுருவல் உதவி, பேதுருதாலகல ரேடார் நிலையம், நுவரெலியா விடுமுறை விடுதி மற்றும் 0.125 ஹெக்டயர் அனுராதபுர காணி, இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தன. எனினும் 2005 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் 2006 ஏப்ரல் 28 ஆந் திகதிய PE/COMC/33/02 ஆம் இலக்க திறைசேரிப் பிரதிச் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியால் பயன்படுத்தப்படுகின்ற அரசிற்கு சொந்தமான காணி, கட்டிடம் மற்றும் இதர அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டியுள்ளன. அத்துடன் அத்தினத்தில் விமான நிலைய அபிவிருத்திக்காக பொதுத்திறைசேரியின் நிதிக் கூற்றுக்களில் காணப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கையேற்கப்பட்டு தேறிய சொத்துக்களுக்காக இலங்கை அரசிற்கு பங்குகள் வழங்கப்பட வேண்டியிருந்தது. எனவே விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியால் பயன்படுத்தப்படுகின்ற காணி மற்றும் கட்டிடங்களின் உரிமை தொடர்பான சிக்கல் நிலைமையொன்று காணப்பட்டது. மேற்கூறியவாறு பங்குகள் வழங்கப்படுதலானது 2021 திசெம்பர் 31 வரையில் மேற்கொள்ளப்படாததுடன் மீளாய்வாண்டில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் கட்டிடம் மட்டுமே மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், மொத்த மதிப்பீடும் இதுவரையில் முடிக்கப்பட்டிருக்கவில்லை.

மத்தள, இரத்மலானை, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு சர்வதேச விமான நிலையங்களின் செயலாற்றல்

- மத்தள விமான நிலையத்தில் எதிர்பார்க்கப்பட்ட வருடாந்த பயணிகளின் அளவு ஏறக்குறைய ஒரு மில்லியன் ஆக இருந்ததுடன், கடந்த ஐந்து வருடங்களுக்குள் விமான நிலையத்தை பயன்படுத்திய மொத்தப் பயணிகளின் எண்ணிக்கை 91,747 ஆக மாத்திரமே காணப்பட்டதுடன் ஐந்து வருடத்திற்குள் எண்ணிக்கை 2,396 மட்டுமே ஆகும். 2021 ஆம் ஆண்டிற்காக மத்தள விமான

நிலையத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் தேறிய நட்டம் ரூபா 4,440 மில்லியனாக இருந்ததுடன் 2017 ஆம் ஆண்டிலிருந்து 2021 வருடம் வரை திரண்ட தேறிய நட்டம் ரூபா 20,590 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் இவ்விமான நிலைய நிர்மாணத்திற்காக செலவிடப்பட்ட ஐ.அ.டொலர் 247.7 மில்லியனுக்குச் சமமான ரூபா 36,564 மில்லியன் ஆன மூலதனச் செலவுகள் ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேலும் மேற்படி நிர்மாணத்திற்காக பெறப்பட்ட ஐ.அ.டொலர் 190 மில்லியன் கடனுக்காக கடன் வட்டியாக பொதுத்திறைசேரியினால் 2010 தொடக்கம் 2015 மார்ச் வரையில் ரூபா 1,708 மில்லியனும் கம்பனியினால் 2015 ஏப்ரல் தொடக்கம் 2022 மார்ச் வரையில் ரூபா 3,532 மில்லியனும் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 இல் மேற்படி கடன் தொகையின் மீதி ஐ.அ.டொலர் 109 மில்லியனாக இருந்தது.

- இரத்மலானை கொழும்பு சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலும் தொடர்ந்து நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் 2017 தொடக்கம் 2021 வரை திரண்ட நட்டம் ரூபா 1,693.66 மில்லியன் மற்றும் மீளாய்வாண்டின் நட்டம் ரூபா 461.08 மில்லியனாக இருந்தது. அறிக்கையின் பிரகாரம் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் விமானங்களின் இயக்கங்கள் வருடத்திற்கு 13 ஆக மட்டுமே இருந்ததுடன் பயணிகளின் இயக்கங்கள் முறையே 60 மற்றும் 28 ஆக மட்டுமே காணப்பட்டது.

- யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம் 2019 ஒக்தோபர் 17 ஆந் திகதி பயணிகளுக்காக திறக்கப்பட்டது. அது ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 2021 திசெம்பர் 31 வரை அறிக்கையிடப்பட்டிருந்த விமானங்களின் இயக்கங்களின் எண்ணிக்கை 142, பயணிகளின் இயக்கங்கள் 4,441 ஆக இருந்ததுடன் கடந்த 03 வருடங்களுக்கும் செயற்பாட்டு நடவடிக்கைகளினால் தொடர்ந்தும் நட்டம் ஏற்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் நிர்வாகச் செலவுகள் ரூபா 40.74 மில்லியன் ஆக இருந்த போதிலும் எவ்வித வரமானமொன்றும் சம்பாதிக்கப்படவில்லை.

- மட்டக்களப்பு சர்வதேச விமான நிலையம் 2018 மார்ச் 25 ஆந் திகதி சிவில் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக மீண்டும் திறக்கப்பட்டது. கடந்த நான்கு வருடத்தில் எவ்வித வருமானமொன்றும் உழைக்கப்படாததுடன் நிர்வாகச் செலவுகளாக ரூபா 74.64 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. சிவில் விமான சேவைகள் அதிகாரசபையினால் 2016 ஆம் ஆண்டில் புதிய பயணிகள் முடிவிடக் கட்டிடமொன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 38.4 மில்லியன் மற்றும் ஓட்டப்பாதை நிர்மாணிப்பதற்காக ரூபா 482.78 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் அதற்காக விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சினால் ஓட்டப்பாதை நிர்மாணத்திற்கான இறுதிக் கொடுப்பனவாக ரூபா 53.61 மில்லியன் வருடத்திற்குள் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தப்பட்டிருந்தது.

ஸ்ரீலங்கன் விமான சேவைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் தன்மை

2021 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்காக ஸ்ரீலங்கன் விமான சேவைகள் கம்பனியின் நட்டம் ரூபா 45,231.46 மில்லியன் ஆக இருந்ததுடன் திரண்ட நட்டம் ரூபா 371,733.52 ஆகும். அத்திகதியில் கம்பனியின்

நடைமுறைச் சொத்துக்களை விஞ்சியதாக நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 221,308.99 மில்லியனும் மொத்தச் சொத்துக்களை விஞ்சியதாக மொத்தப் பொறுப்புக்கள் ரூபா 289,265.27 உம் ஆகும். அதன் பிரகாரம் ஸ்ரீலங்கன் விமான சேவைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருப்பதாகத் தோன்றினாலும் 2022 பெப்ரவரி 07 ஆந் திகதிய அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் இலங்கை அரசின் உதவி ஸ்ரீலங்கன் விமான சேவைகள் கம்பனிக்கு வழங்கப்படுமென உறுதிப்படுத்தப்பட்ட திறைசேரிச் செயலாளரின் 2022 பெப்ரவரி 24 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் நீண்டகாலம் இயங்கும் அனுமானத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் திறைசேரியினால் காலத்திற்கு காலம் மேலதிக நிதியம் வழங்கப்பட்டமை

2011 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை திறைசேரியால் கம்பனிக்கு ரூபா 46.470 மில்லியன் (ஐ.அ.டொலர் 373 மில்லியன்) காலத்திற்கு காலம் செயற்பாட்டு மூலதனத் தேவைக்காக அதாவது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கான கொடுப்பனவிற்காக வழங்கப்பட்டிருந்தது. பின்னர் 2020 ஆம் ஆண்டில் திறைசேரியால் ஐ.அ.டொலர் 500 மில்லியன் ஆன மேலதிக மூலதனப் பாவனைக்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததுடன் அதில் 2021 ஏப்ரல் வரை ஐ.அ.டொலர் 240 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறான சாதகமற்ற நிதி நிலைமையில் காணப்பட்ட போது, 2021 நவம்பர் 15 ஆந் திகதி நடாத்தப்பட்ட அமைச்சரவை கூட்டத்தில் ஸ்ரீலங்கன் விமானக் கம்பனியின் பெறுகை நடவடிக்கைகள் எவ்வித கட்டுப்பாடுகளுமின்றி மற்றும் எவ்வித அரச மேற்பார்வையும் இன்றி கம்பனியின் பணிப்பாளர் சபைக்கு கையளிக்கப்படுவதற்கு அமைச்சரவை தீர்மானித்திருந்தது.

அரச வங்கிகளில் குறுங்கால கடன் வசதிகள் பெறப்பட்டமை

2016/2017 ஆம் ஆண்டில் பொதுத்திறைசேரி பிணை அடிப்படையில் ஸ்ரீலங்கன் விமான சேவைகள் கம்பனியால் குறுங்கால நிதித் தேவைக்காக ஐ.அ.டொலர் 200 மில்லியன் (அண்ணளவாக ரூபா 31,115 மில்லியன்) மற்றும் 2017/18 ஆம் ஆண்டில் ரூபா 29,439 மில்லியனான கடன் வசதிகள் 02 அரச வங்கிகளின் மூலம் பெறப்பட்டிருந்தது. மேலும் 2020/21 ஆம் ஆண்டில் அந்த 02 அரச வங்கிகளிடமிருந்தும் ஐ.அ.டொலர் 75 மில்லியன் ஆன கடன் தொகையும் பெறப்பட்டிருந்தது. 2021 மார்ச் 31 வரையில் ஒட்டுமொத்தமாக ரூபா 71,621 மில்லியன் கடன் தொகையொன்று மேற்படி 02 அரச வங்கிகளுக்கு தீர்க்கப்பட வேண்டியிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் அக்கடன் தொகை எதுவும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

சர்வதேச பிணைமுறிகளை வழங்குதல்

ஸ்ரீலங்கன் விமான சேவைகள் கம்பனியால் ஐ.அ.டொலர் 175 மில்லியன் பெறுமதியான 5.3 சதவீதமான வருடாந்த வட்டி விகிதமொன்றின் கீழ் சர்வதேச பிணை முறிகள் வழங்கப்படுதலானது 2014 ஆம் ஆண்டில் திறைசேரி பிணை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அப்பிணைகளை வழங்குவதற்காக மீண்டும் 2019 யூன் மாதத்தில் சர்வதேச பிணைமுறிகள் வழங்குப்படுதலானது 7 சதவீதமான வருடாந்த வட்டி விகிதத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2021/22 - 2024/25 பணிப்பளார் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த திட்டத்தின் பிரகாரம் மேற்படி பிணைமுறிகள் வழங்கப்படுவதற்காக 2024 ஆம் ஆண்டில் மீண்டும் வழங்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

செலுத்த வேண்டிய கணக்கு

2021 மே 31 ஆந் திகதி வரையில் ஸ்ரீலங்கன் விமான சேவைகள் கம்பனி இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ஐ.அ.டொலர் 311.9 மில்லியன் செலுத்தப்பட வேண்டிக் காணப்பட்டதுடன் 2021 மார்ச் 31 இல் செலுத்தப்பட வேண்டிய பிற்போடப்பட்ட விமானங்கள் செயற்பாட்டு குத்தகை வாடகை ஐ.அ.டொலர் 59 மில்லியன் ஆக இருந்தது.

A-350-900 விமானங்கள் 04 இற்காக செலுத்தப்பட்டிருந்த முற்கொடுப்பனவுகள் (Pre-delivery payments) தீர்க்கப்பட்டமை

2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் பெறுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த A350-900 விமானங்கள் 04 இற்காக 2021 மார்ச் 31 வரையில் பெறுவதற்கு முன்னர் கொடுப்பனவுகளாக (Pre-delivery Payments) ரூபா 2,528.12 மில்லியன் (ஐ.அ.டொலர் 19.21 மில்லியன்) செலுத்தப்பட்டிருந்தது.

ஐக்கிய இராச்சியத்தின் உயர் நீதிமன்றத்தின் மூலம், தீவிர மோசடி அலுவலகம் மற்றும் SAS எயார்பஸ் கம்பனிகளுக்கிடையே ஏற்படுத்தப்பட்டிருந்த ஒப்பந்தம் அங்கீகரிக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்த தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருந்ததன் பிரகாரம் எயார்பஸ் கம்பனியின் ஊழியர்களினால் ஸ்ரீலங்கன் விமான சேவைகள் கம்பனியின் முன்னாள் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் மனைவிக்குச் சொந்தமான கம்பனியொன்றுக்கு ஸ்ரீலங்கன் விமான சேவைகள் கம்பனிக்கு A330-300 ஆன 06 விமானங்கள் மற்றும் A350-300 ஆன 04 விமானங்கள் கொள்வனவு அடிப்படையிலும் **A 350-900** 04 விமானங்கள் அடிப்படையிலும் வாடகை அடிப்படையில் பெறுதல் போன்ற கொடுக்கல் வாங்கல்கலை மேற்கொள்வதற்காக ஐ.அ.டொலர் 16.84 மில்லியன் வரை கொடுப்பனவு செய்வதற்கு இணங்கியிருந்தது. சட்ட அறிவுறுத்தலின் அடிப்படையில் ஸ்ரீலங்கன் விமான சேவைக் கம்பனியினால் எஸ் ஏ எஸ் எயார்பஸ் கம்பனி இந்த A350-900 ஆன விமானங்களை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தம் முடிவடைந்து முழுமையான கொடுப்பனவு நட்டஈட்டொன்றுடன் அறவிடுதல் தொடர்பாக 2020 செப்தெம்பர் 29 ஆந் திகதி கடிதமொனறின் (Letter before Action) மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

2021 திசெம்பர் 03 ஆந் திகதி எயார்பஸ் கம்பனியுடன் ஆரம்ப கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டிருந்தமை எயார்பஸ் கம்பனியால் அனுப்பப்பட்டிருந்த 2021 திசெம்பர் 07 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் வெளிக்காட்டப்பட்டிருந்தது. இது தொடர்பான தற்போதைய நிலைமை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

12 புதிய விமானங்கள் மற்றும் 09 விமானங்கள் மறுசீரமைப்பு செயற்பாட:டுக் குத்தகை பெறப்படுவதற்கான முன்மொழிவுகளுக்கான அழைப்பு

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் ஸ்ரீலங்கன் விமான சேவைகள் கம்பனியின் பாதகமான நிதி நிலைமையைக் கருத்திற் கொள்ளாது 12 புதிய விமானங்கள் மற்றும் 09 விமானங்களை மறுசீரமைப்பதற்காக செயற்பாட்டுக் குத்தகையைப் பெறுவதற்காக 2022 ஏப்ரல் 10 ஆந் திகதி முன்மொழிவுகள் கோரப்பட்டிருந்ததுடன் அவ்வாறு 12 புதிய விமானங்களைப் பெறுவதற்கான சாத்தியக்கூறு மற்றும் அவசியம் பற்றிய நியாயமான உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

சுற்றுலா அலுவல்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்

- சுற்றுலாப் பயணிகளின் வருகையும் அந்நியச் செலவாணி உழைப்பும்
- சுற்றுலா அமைச்சு மற்றும் அதன்கீழ் உள்ள அமைச்சின் அலுவலகத்தினை தனியார் கட்டிடங்களில் பேணிச் செல்லல்
- விபத்துக்கு உள்ளாகி பழுதுபார்ப்பதற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த ஜீப் வண்டியொன்றை அமைச்சுக்கு சுவீகரித்தல்
- விபத்துக்குள்ளாகியிருந்த வாகனமொன்றை பெறுகை நடைமுறையொன்றை பின்பற்றாது பழுதுபார்த்தல்
- வெளிநாட்டு தூதரங்களுக்கு வெளிநாட்டு நாணய அலகின் முற்பணங்களை வழங்குதல்
- வெளிநாட்டு மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பங்குபற்றுதல்
- பெறுகை நடைமுறையிலிருந்து விலகி மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தினை நடாத்துவதற்காக முகவர் நிறுவனமொன்றை தெரிவு செய்தல்
- விளம்பர நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்
- குத்தகைக்கு வழங்கிய காணிகளின் மேம்படுத்தல் பணிகளை ஆரம்பிக்காமை
- வாடிவீடுகளை குத்தகைக்கு வழங்குதல்
- தங்குமிடம் மற்றும் சுற்றுலா வசதிகளை வழங்கும் இடங்களை அதிகாரசபையில் பதிவு செய்தல்

சுற்றுலா அலுவல்கள

சுற்றுலா அமைச்சு, தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களம், இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை சுற்றலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம் மற்றும் இலங்கை சம்மேளனப் பணியகத்தினால் இலங்கையின் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக பின்வரும் பணிப்பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டியதாக இருந்தது.

- பரந்த அளவிலான மக்களின் பங்களிப்புடனான சுற்றாடல மற்றும் உள்நாட்டு கலாச்சார உரித்துடனான சுற்றுலாக் கைத்தொழிலொன்றாக அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்.
- சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு தொடர்பில் விசேட வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்.
- வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுக்கும் இடங்களை இனங்காணல்.
- சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுப்பதற்கான வர்த்தக செயலமர்வுகள், விழாக்கள், கண்காட்சிகள் மற்றும் மாநாடுகளை நடாத்துவதற்கு வசதி ஏற்படுத்திக்கொடுத்தல்.
- சுற்றுலாத்து துறையினை அபிவிருத்தி செய்வதற்காக தனியார் துறைக்கு முதலீட்டு மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல்.
- பிரதான சுற்றுலா நகர்களை இணைக்கும் வீதிகளின் சந்திகளில் சுற்றுலா சேவை நிலையங்களை உருவாக்குதல்.
- பிரதேச அலுவலகங்களை தாபிப்பதன் மூலம், சுற்றுலா வசதிகளை அங்கீகரிக்கும் நடைமுறையை ஒங்குபடுத்தல்.
- பிரதான சுற்றுலா நகர்களில் சுற்றுலா பயிற்சி பாடசாலைகளை தாபித்தல் மற்றும் கவர்ச்சியான திறன்கள் அபிவிருத்தி பாடநெறிகளை அறிமுகப்படுத்தல்.
- வீடு சார்ந்த மற்றும் சமூக அடிப்படை சுற்றுலாத் கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல்.
- அனைத்து சுற்றுலா பயண வழிகாட்டிகள் மற்றும் சாரதிகளை பதிவு செய்தல், பயிற்றுவித்தல் மற்றும் ஆளடையாளத்தினை சான்றுபடுத்துவதற்காக நடவடிக்கை எடுத்தல்.
- சுற்றுலாக் கைத்தொழிலுடன் தொடர்புடைய முயற்சியாளர்களை உருவாக்குவதற்காக விசேட நிகழ்ச்சித்திட்டமொன்றை அறிமுகப்படுத்தல்.

- தகவல் தொழில்நுட்பத்தினூடாக சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல்.
- One Stop எண்ணக்கருவின் அடிப்படையில் ஒரு தொடர்புபடுத்தல் நிலையத்தினூடாக மேற்கொள்ளும் நடைமுறையொன்றினை நடைமுறைப்படுத்தல்.
- உயர் தரத்திலான சுற்றுலா ஹோட்டல்களை தாபிப்பதற்கான மற்றும் தற்போதுள்ள ஹோட்டல் அறைகளின் எண்ணிக்கையை இரு மடங்காக்குதல்.
- தேசிய உரித்துக்கள் மற்றும் தொல்பொருளியல் இடங்கள் தொடர்பில் சரியான தகவல்களை சுற்றுலாப் பயணிகளிடையே பிரபல்யப்படுத்துவதற்காக சுற்றுலா முகவராண்மைகளுக்காக சரியான அறிவு மற்றும் தகவல்களை வழங்குவதங்கான நடைமுறையொன்றினை ஏற்படுத்தல்.

மேற்குறித்த பணிப்பொறுப்பினை நிறைவேற்றுவதற்காக சுற்றுலா அமைச்சு மற்றும் தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்திற்கு ரூபா **1,857** மில்லியனான நிதியேற்பாடு பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் அவற்றுள் ரூபா **1,042** மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், கடந்த ரூபா **815** மில்லியனான நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் உரு 54 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.



உரு 54 – வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாடு மற்றும் உள்ளபடியான செலவினம்

மூலம் - வருடாந்த நிதிக்கூற்றுக்கள் 2021

மேற்குறிப்பிடப்பட்ட பணிப்பொறுப்பினை நிறைவேற்றுதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் வருகையும் அந்நியச் செலவாணி உழைப்பும்

கடந்த வருடத்தின் போது 507,704 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்திருந்ததுடன், மீளாய்வாண்டின் போது அந்த அளவானது 61.7 சதவீதத்தினால் குறைவடைந்து, 194,495 பேர் வருகை தந்திருந்தனர். கொவிற் தொற்றுநோய் நிலமை காரணமாக அவ்வப்போது மூடப்பட்டிருந்தமை இந்த நிலமைக்கு காரணமாக அமைந்திருந்தது. சுற்றுலா அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள ஏனைய நிறுவனங்களின் பணிகள் மற்றும் பணிப்பொறுப்புகளிலும் வரையறையொன்று சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஏற்பட்ட வீழ்ச்சியால் ஏற்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டின் சுற்றுலாப் பயணிகளின் வருகையை கடநத் இரு வருடங்களுடன் ஒப்பிட்டு உரு 55 இல் காண்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே, 2018 ஆம் ஆண்டின் போது சுற்றுலாக் கைத்தொழிலில் ரூபா 711,961 மில்லியனான வருமானம் ஈட்டப்பட்டிருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டின் போது அது ரூபா 646,362 மில்லியன் வரை குறைவடைந்திருந்ததுடன், 2020 ஆம் ஆண்டின் போது அந்த வருமானம் 80.78 சதவீதத்தினால் அல்லது ரூபா 522,173 மில்லியனால் வீழ்ச்சியடைந்து ரூபா 124,189 மில்லியனாக காணப்பட்டது. 2021 ஆம் ஆண்டின் போது அந்த வருமானம் மேலும் குறைவடைந்து ரூபா 100,620 மில்லியனாக காணப்பட்டது. அந்நிய செலாவணிக்கமைய கருத்திற்கொள்ளும் போது 2018 ஆம் ஆண்டின் போது ஐ.அ.டொலர் 4,380.6 மில்லியனுக்கு ஒப்பாக 2019 ஆம் ஆண்டின் போது ஐ.அ.டொலர் 3,606.9 மில்லியன் வரையிலும் குறைவடைந்திருந்தது. 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டின் போது அந்த வருமானம் முறையே ஐ.அ.டொலர் 682.5 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 506.9 மில்லியன் வரை குறைவடைந்தது. அதன் பிரகாரம், 2019 ஆம் ஆண்டுக்கு ஒப்பாக 2020 ஆம் ஆண்டின் போது ஐ.அ.டொலர் 2,924.4 மில்லியன் அல்லது 81.08 சதவீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன், 2020 ஆம் ஆண்டுக்கு ஒப்பாக 2021 ஆம் ஆண்டின் போது அது மேலும் ஐ.அ.டொலர் 175.6 மில்லியனால் குறைவடைந்திருந்தது. சுற்றுலாக் கைத்தொழிலிருந்து கிடைத்த வருமானம் 2015 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலும் கிரமமாக அதிகரித்து, 2019 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் வேகமாக வீழ்ச்சியடைந்திருந்தது. அந்த நிலைமை உரு 56 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.



உரு.... – வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாடு மற்றும் உள்ளபடியான செலவினம்

மூலம் • வருடாந்த நிதிக்கூற்றுக்கள் 2021



உரு.... – சுற்றுலாத் துறையிலிருந்து கிடைத்த வருமானம் (ரூபா மில்.)

மூலம் • இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

2013 ஆம் ஆண்டின் போது கிரமமாக அதிகரித்து, 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 1,482 மில்லியனான சுற்றுலா அபிவிருத்தி வரி வருமானம் அதிகரித்திருந்ததுடன், 2018ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலும் குறைவடைந்த சுற்றுலா அபிவிருத்தி வரி வருமானம் துரிதமாக வீழ்ச்சியடைந்திருந்தது. 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 809.7 மில்லியன் வரை கடந்த வருடத்திற்கு ஒப்பாக 51 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. அவ்வாறே, 2013 ஆம் ஆண்டு முதல் கிரமமாக அதிகரித்து 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 2,824.9 மில்லியன் வரை அதிகரித்து 2019 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான ஏற்றுமதி வரி ரூபா 483.9 மில்லியன் வரை துரிதமாக வீழ்ச்சியடைந்திருந்தது. விபரங்கள் உரு 57 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.



உரு 57 - சுற்றுலா அபிவிருத்தி வரி வருமானம் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கான குடியகல்வு வரி

மூலம் - இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

சுற்றுலா அமைச்சு மற்றும் அதன்கீழ் உள்ள அமைச்சின் அலுவலகத்தினை தனியார் கட்டிடங்களில் பேணிச் செல்லல்

சனாதிபதி செயலாளரின் சீஏ1/17/1 மற்றும் 2010 மே 14 ஆந் திகதிய "அரச செலவின முகாமைத்துவ சுற்றறிக்கை" அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்களினதும் அலுவலகங்களை இயலுமான அளவில் அரசின் அல்லது அரச கூட்டுத்தாபனங்களுக்குரிய கட்டிடங்களில் நடாத்திச் செல்ல வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் சுற்றுலா அமைச்சின் யோர்க் வீதியில் அசட் ஆர் கேட் எனும் பெயருடைய தனியார் கட்டிடத்தில் நடாத்திச் செல்லப்பட்டிருந்ததுடன் அமைச்சின் அலுவலகத்தினை மேற்படி கட்டிடத்திலேனும் நிறுவாமல் உலக வர்த்தக மையத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட அலுவலகமொன்றில் வாடகைக்கு நடாத்திச் செல்லப்பட்டிருந்ததுடன் அதற்காக செலவிடப்பட்ட வாடகை செலவினம் ரூபா 43.4 மில்லியன் ஆகும்.

விபத்துக்கு உள்ளாகி பழுதுபார்ப்பதற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த ஜீப் வண்டியொன்றை அமைச்சுக்கு சுவீகரித்தல்

அபிவிருத்தி மூலோபாயம் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சிற்கு உரியதாகவுள்ள 2019 நவம்பர் 24 ஆந் திகதி அவசர விபத்துக்குள்ளாகியிருந்த ஜீப் வண்டியொன்று பழுதுபார்த்தல்களுக்காக ரூபா 20.8 மில்லியன் கிரயத்திற்கு கம்பனியொன்றுக்கு அனுப்பப்பட்டுள்ள போது 2021 யூலை 22 ஆந் திகதி சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளரின் பெயருக்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் காப்புறுதி நிறுவனத்தின் பிரகாரம் இந்த வண்டியின் சந்தைப் பெறுமதியான ரூபா 15.5 மில்லியன் தொகைக்கு அகற்றுவதற்கு அல்லது பழுதுபார்த்தலை நிறைவு செய்வதற்கு

ரூபா 9.3 மில்லியனான தொகை மாத்திரம் செலுத்த முடியும் என அமைச்சிற்கு தெரிவித்திருந்தமையால் நிலுவை பழுதுபார்த்தல் செலவினத்தின் பெறுமதியான ரூபா 11.5 மில்லியன் பொறுப்பொன்று அமைச்சிற்கு ஏற்றுக்கொள்ள நேர்ந்திருந்தது.

விபத்துக்குள்ளாகியிருந்த வாகனமொன்றை பெறுகை நடைமுறையொன்றை பின்பற்றாது பழுதுபார்த்தல்

விபத்துக்குள்ளாகியிருந்த வாகனமொன்றை பழுதுபார்த்தல் பணிகள் முகவர் நிறுவனமொன்றினால் மேற்கொள்ளுமாறு 2021 ஒக்தோபர் 26 ஆந் திகதி சுற்றுலா அமைச்சின் செயலாளரால் அறிவுரை வழங்கப்பட்டுள்ள போது பெறுகை நடைமுறையை பின்பற்றாது மற்றுமொரு தனியார் கராஜில் இந்த வாகனத்தின் பழுதுபார்த்தலை ஒப்படைத்து அதற்காக ரூபா 1.5 மில்லியனான கிரயம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அது முகவர் நிறுவனத்தின் மதிப்பீட்டினை விட ரூபா 0.2 மில்லியன் அதிக விலை ஆகும்.

வெளிநாட்டு தூதரங்களுக்கு வெளிநாட்டு நாணய அலகின் முற்பணங்களை வழங்குதல்

இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்தினால் 24 நாடுகளில் வெளிநாட்டுத் தூதரங்களுக்கு அனுப்பப்பட்ட வெளிநாட்டு நாணய அலகிலான முற்பணங்களில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான மீதியான ரூபா 44 மில்லியனுக்கு உரிய மீதி சான்றுப்படுத்தல்கள் அந்த தூதரகங்களிலிருந்து நேரடியாக அனுப்பப்படாது வெளிநாட்டு அமைச்சினால் அனுப்பப்பட்டிருந்ததுடன் சான்றுப்படுத்தப்பட்ட மீதி ரூபா 7.5 மில்லியனாக காணப்பட்டமையால் கணக்குகளுக்கிடையே ரூபா 36.6 மில்லியனான வேறுபாடொன்று நிலவியது.

வெளிநாட்டு மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பங்குபற்றுதல்

CSA/2/3/4 ஆம் இலக்க மற்றும் 2006 பெப்ரவரி 21 ஆந் திகதிய சனாதிபதியின் சுற்றறிக்கைக்கு இணங்க அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் ஒரே தடவையில் வெளிநாட்டு பயணங்களில் ஈடுபடக்கூடாதென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2021 ஒக்தோபர் 05 முதல் 08 வரையிலும் இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்தினால் பிரான்சில் நடாத்தப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்காக அவ்இருவரும் ஒரே தடவையில் பங்குபற்றியிருந்ததுடன் அதற்காக தங்குமிடம், கூட்டிணைந்த படிகள் ம்றும் விமானப் பயணச்சீட்டுக்கள் உள்ளடங்கலான செலவினத்திற்காக ரூபா 2.5 மில்லியன் செலவினம் பணியகத்தின் பணத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. மேலும் அந்த சுற்றறிக்கையின் பிரகாரம் வெளிநாட்டு பயணங்களை குறைத்துக் கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ள போது பிரான்ஸ், ரஷ்யா மற்றும் உக்ரைன் ஆகிய இடங்களில் இடம்பெற்ற மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் மதியுரைக் குழுவின் இணைப்பாளர், அமைச்சரின் ஊடக பிரிவின் தலைவர், சிவில் விமான சேவைகள் அதிகார

சபையின் பிரதி தலைவர் மற்றும் பாராளுன்றத்தின் அமைச்சர் ஒருவரும் பங்குபற்றியிருந்ததுடன் அவர்களின் தங்குமிட, கூட்டிணைந்த படிகள் மற்றும் விமானப் பயணச்சீட்டுக்களுக்காக ரூபா 7.9 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. சுற்றறிக்கையின் பிரகாரம் பயணத்திற்கு எடுக்கப்படும் காலம் உள்ளடங்கலாக பங்குபற்றும் காலம் அத்தியாவசியமாக குறைத்துக் கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ள போது 2021 செப்தெம்பர் 06 முதல் 10 வரையும் ரஷ்யா மற்றும் உக்ரைனில் இடம்பெற்ற மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் மதியுரைக் குழுவின் இணைப்பாளர் மற்றும் அமைச்சரின் ஊடக அலகின் தலைவர் மற்றும் சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் பிரதி தலைவர் பயணத்திற்கு 07 தினங்களுக்கு முன்னர் பங்குபற்றியமையால் அவர்களுக்கான தங்குமிடம் மற்றும் கூட்டிணைந்த படிகளுக்காக மேலதிகமாக ரூபா 2.4 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

2021 ஒக்தோபர் 05 முதல் 08 வரையிலும் பிரான்சில் இடம்பெற்ற மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தில் இணைந்ததாக 2021 ஒக்தோபர் 06 ஆந் திகதி மேம்படுத்தல் மாலையொன்று (Promotional Evening) நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டு பின்னர் அது இரத்துச் செய்யப்பட்டுள்ள போது அமைச்சரின் அறிவுரைக்கமைய அந்த மாலை அத்திகதியில் நடாத்தப்படாது 2021 நவம்பர் 09 ஆந் திகதி மீண்டும் நடாத்தப்பட்டிருந்தது. அதற்காக அமைச்சர், சுற்றுலா மதியுரைக் குழுவின் இணைப்பாளர் மற்றும் மேம்படுத்தல் பணியகத்தின் உத்தியோகத்தர் ஒருவர் பங்குபற்றி ரூபா 3 மில்லியனான செலவினம் மேற்கொண்டிருந்ததுடன் சுற்றுலா மேம்படுத்தல் மாலை எனும் மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்ததாக நடாத்தியிருப்பின் இந்த செலவினத்தை தவிர்க்க கூடியதாக இருந்திருக்கும்.

பெறுகை நடைமுறையிலிருந்து விலகி மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தினை நடாத்துவதற்காக முகவர் நிறுவனமொன்றை தெரிவு செய்தல்

2021 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய 08/01/2021 ஆம் இலக்க பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் 2021 செப்தெம்பர் 06 ஆந் திகதி முதல் 10 ஆந் திகதி வரையும் ரஷ்யா மற்றும் உக்ரைனில் நடாத்தப்பட்ட மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துவதற்காக இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்தினால் முகவர் ஒன்றினை தெரிவு செய்தல் பெறுகை நடைமுறையிலிருந்து விலகி மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான விலகலுக்கு காரணங்கள் திட்வட்டமாக அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்காக முகவர் நிறுவனத்திற்கு செலுத்திய தொகை ரூபா 11 மில்லியன் ஆகும்.

விளம்பர நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்

சீனாவின் விளம்பர நிகழ்ச்சித் திட்டத்திற்காக அந்நாட்டின் நிறுவனம் ஒன்றுடன் இலங்கை சுற்றுலா மேம்படுத்தல்

பணியகம் கைச்சாத்திட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி ரூபா 25 மில்லியன் (ஐக்கிய அமெரிக்க டொலர் 137,600) ஆன முற்பணத் தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக நிகழ்ச்சித் திட்டம் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தது. மேலும் மத்திய கிழக்கு நாடுகளில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த "Riyath Travel Fair 2020" எனும் பெயருடைய மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்திற்காக தனியார் நிறுவனமொன்றுக்கு 2019 ஆம் ஆண்டில் ரூபா 8.1 மில்லியன் பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் அந்நிகழ்ச்சித் திட்டம் பிற்போடப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் இந்நிகழ்ச்சித் திட்டம் மீள ஆரம்பிப்பதற்கு அல்லது பணத்தை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

குத்தகைக்கு வழங்கிய காணிகளின் மேம்படுத்தல் பணிகளை ஆரம்பிக்காமை

2014 ஆம் ஆண்டில் 5 கம்பனிகளுக்கு 35 ஏக்கர்களும் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் மேலும் 2 கம்பனிகளுக்கு 16.8 ஏக்கர்களுமாக யால பலட்டுபான அபிவிருத்தி மேம்படுத்தல் வலயத்தில் காணிகள் இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் அதிகார சபையினால் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் இரண்டு கம்பனிகள் மாத்திரம் மீளாய்வாண்டின் இறுதியளவில் செயற்பாடுகளை ஆரம்பித்திருந்தது. சுற்றுலா மேம்படுத்தல் செயற்திட்டங்களுக்காக குச்சவெளியில் 2011 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் கையேற்கப்பட்ட சுமார் 510.086 ஏக்கர்கள் பரப்பளவான காணியில் சுமார் 49 ஏக்கர்கள் 3 கம்பனிகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த மூன்று கம்பனிகளில் ஒரு கம்பனி மாத்திரம் செயற்பாட்டு பணிகளில் ஈடுபட்டிருந்தது. சுற்றுலா பணிகளுக்காக விடுவிக்கப்பட்ட மானியங்களாக கற்பிட்டியின் 12 தீவுகளில் சுமார் 2055.87 ஏக்கர் பரப்பளவான காணியில் 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் அதிகார சபைக்கு கிடைத்திருந்த போதிலும் அந்த 12 தீவுகளில் 05 தீவுகளுக்குரிய காணிகள் 206.58 ஏக்கர்கள் மாத்திரம் 2010, 2011 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் 03 கம்பனிகளுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும அவற்றுள் எந்தவொரு கம்பனியும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் பணிகளை ஆரம்பித்திருக்கவில்லை. குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த கம்பனிகளின் 2 கம்பனிகள் முறையே 43 மில்லியன் மற்றும் 9 மில்லியன் எனுமாறு 3 முதல் 5 வருடங்கள் வரையிலுமான குத்தகை வாடகை நிலுவையாக காணப்பட்டன.

வாடிவீடுகளை குத்தகைக்கு வழங்குதல்

இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் அதிகாரசபைக்குச் சொந்தமான 37 வாடிவீடுகளின் 9 வாடிவீடுகள் முதல் பதின்மூன்று வருடங்கள் வரையான காலம் குத்தகைக்கு வழங்கப்பட்டிராத

காரணத்தினால் அந்த சொத்துக்கள் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டன.

தங்குமிடம் மற்றும் சுற்றுலா வசதிகளை வழங்கும் இடங்களை அதிகாரசபையில் பதிவு செய்தல்

2020 ஆம் ஆண்டின் போது தங்குமிடங்கள் மற்றும் சுற்றுலா வசதிகளை வழங்கும் இடங்களாக இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் அதிகாரசபையினால் பதிவு செய்திருந்த இடங்களின் எண்ணிக்கை 5378 ஆக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் அந்த எண்ணிக்கை 5872 எண்ணிக்கை ஆகும். அதற்காக புதிதாக பதிவு செய்யப்பட்ட இடங்களின் எண்ணிக்கை 494 ஆகும். எவ்வாறான போதிலும் மீளாய்வாண்டில் பதிவு செய்த புதிய இடங்களின் எண்ணிக்கை 783 மாத்திரம் ஆனமையால் அதற்கு முன்னர் பதிவு செய்த 5378 இடங்களில் 4595 இடங்களின் பதிவுகள் புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

வியாபாரப் பிரிவு

கணக்காய்வு அவதானிப்புக்கள்

- வியாபார வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் பிரதான குறிக்கோள்கள் நிறைவேற்றப்படாமை
- அரிசி ஒதுக்கத்தினைப் பேணுதல்
- கூட்டுறவு மொத்த வியாபார கூட்டுத்தாபனத்தின் களஞ்சியத்தினை புனரமைத்தல்
- சிறிய மற்றும் மத்திய அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு விரைவாக கடன் நிவாரணத்தை வழங்கும் செயற்திட்டம்
- அத்தியாவசியமான உணவுப் பொருட்களை உள்ளடக்கி உள்நாட்டு உற்பத்திகளை பகிர்ந்தளிக்கும் குறக்கோளில் சிறிய விற்பனைக் கடை வலையமைப்பினை ஸ்தாபித்தல்
- பொதுப்பாவனை செயற்பாடுகள் தொடர்பான அதிகார சபையின் செயலாற்றல்
- ஆக்க உரிமை அனுமதிப்பத்திரத்தினை பதிவு செய்தல்
- லங்கா சதொச கம்பனியின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்பு
- பெறுகை நடைமுறைகளை மீறி உபகரணங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல்
- லங்கா சதொச கம்பனிக்கு கிடைக்க வேண்டிய கணக்குகள்
- குடிபான வியாபார நிலைய அரசிறை
- சீனி மீது வரி விதித்தல்
- வியாபாரத்தின் போது பயன்படுத்துகின்ற அளவை செய்யும் உபகரணங்கள் மற்றும் அளவை நியமங்களை மெய்மையாய்வு செய்தல்

வியாபாரப் பிரிவு

வியாபாரம், வணிகம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள கூட்டுறவு சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் பொதுப்பாவனை இராஜாங்க அமைச்சினாலும் **05** திணைக்களங்கள் மற்றும் **09** நியதிச் சட்ட சபைகள்/ நிறுவனங்களினாலும் பின்வரும் செயற்பாடுகள் மற்றும் கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- தேசிய வியாபார கொள்கைக்குள் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் பாவனையாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் சந்தை அசைவுகளை கட்டுப்படுத்துவதற்கான ஒரு கருவியாக சுங்கவரிக் கொள்கையை ஈடுபடுத்துதல் மற்றும் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்காக உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு வரிச் சலுகைகளை வழங்குவதன் மூலம் ஏற்றுமதிகளை ஊக்குவித்தல்

- சந்தையில் பொருட்களின் விலைகள் வழமைக்கு மாற்றமாக அதிகரித்துள்ள சந்தர்ப்பங்களில் காய்கறிகள், பழங்களை உள்டக்கி அத்தியாவசிய பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்துவதன் மூலம் வாழ்க்கைச் செலவினைக் குறைந்த மட்டத்தில் பேணுதல்.

- திறந்த போட்டிச் சந்தை சூழலில் லங்கா சதொச கம்பனி, வரையறுத்த இலங்கை அரசாங்க வணிக (நானாவித) கூட்டுத்தாபனம், கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனம் ஆகிய அரசாங்க நிறுவனங்களினூடாக பாவனையாளர்களுக்கு சலுகை நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கு தேவையான வழிகாட்டல்களை மேற்கொள்ளல்.

- வியாபார சமூகத்தினைப் போல பாவனையாளர்களினதும் பயன்பாட்டினை முன்னிட்டு அளவை அலகு நியமங்கள் உரிய முறைப்படி அமுல்ப்படுத்துவதனை உறுதிப்படுத்துதல்

- உணவு பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக நாட்டிற்குள் அத்தியவசியமான உணவுப் பொருள் பாதுகாப்பு இருப்பினை (Buffer Stock) பேணுவதற்கும் தேவையான சட்ட அதிகாரங்களைப் போல உட்கட்டமைப்பு வசதிகளையும் அபிவிருத்தி செய்தல்.

- அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்கு உரிய தரவு முறைமையைப் பேணுதல், அத்தரவு முறைமையை நாளதுவரையாக்குதல், மற்றும் அத்தரவுகளை வெளியக தகவல் வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்புபடுத்தும் பொறிமுறையினைத் தயாரித்தல்.

- தேசிய ரீதியாக ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக சட்டரீதியான உதவி ஆலோசனை பங்களிப்புக்களை வழங்குதல்.

- தேசிய உற்பத்திகள் மற்றும் ஏற்றுமதிப் பொருட்களின் உரிய தரத்தினை பாதுகாப்பதற்கு உரிய ஒழுங்குவிதிகளை உருவாக்கி வழிகாட்டுதல்.

- கல்வியின் போது உயர்கல்விக்காக பிள்ளைகளை ஊக்குவிப்பதற்காக உரிய நலன்புரி நடைமுறை பேணுவதற்கு பங்களிப்புச் செய்தல்.

- தேசிய புலமைச் சொத்து ஆதனங்களைப் பாதுகாப்பதற்காக பேணிக்காத்தல் நடைமுறையை அமுல்ப்படுத்துவதற்காக வழிகாட்டல்.

- தேசிய மற்றும் சர்வதேச நியமங்களுக்கு இணங்க செயற்படுகின்ற இணக்கப்பாட்டு மதிப்பீட்டு ஒப்புதல் அளித்தல் சேவைகளை சான்றுபடுத்துவதற்கான வழிகாட்டல்

- இலங்கையின் பொருளாதார மற்றும் வணிக விருப்புக்களை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துவதற்கு சர்வதேச சந்தை வாய்ப்புக்களுக்காக ஏற்றுமதியாளர்களை ஊக்குவிப்பதற்கு தேவையான நிறுவக ரீதியான பின்னணியினை தயார்படுத்தல் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களை ஊக்குவித்தல்

- உரிய இருதரப்பு வலயரீதியாக மற்றும் பல்தரப்பு ரீதியாக நாடுகளுடன் உடன்படிக்கைகளை மேற்கொள்ளும் போது வழிகாட்டலும் ஒருங்கிணைப்புச் செய்தலும்.

- இலங்கையின் ஏற்றுமதிக்காக முன்னுரிமைகளின் பொதுப்படையாகிய முறைமை (GSP), பரஸ்பரம் அற்ற வியாபார உடன்படிக்கை (NMTR), கட்டுப்பாடற்ற வியாபார உடன்படிக்கை (FTA), வலய ரீதியான வியாபார உடன்படிக்கை (RTA) என்பவற்றிற்காக உரிய சட்டரீதியான ஒருங்கிணைப்பிற்குத் தேவையான வழிகாட்டல்கள்.

மேற்கூறிய கடமைகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் 2021 ஆம் ஆண்டிற்காக ரூபா 8,020 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 7,159 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 861 மில்லியன் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் வரைபடம் 58 இல் தரப்படுகின்றது.



	வர்த்தக அமைச்சு	கூட்டுறவு சேவைகள், விற்பனை அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க...	உணவு ஆணையாளர் திணைக்களம்	கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்	வாணிபத் திணைக்களம்	அளவுக் கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களம்	இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம்	கூட்டுறவு சேவைகள் ஆணைக்குழு	மொத்தம்
நிதியேற்பாடு ரூபா. மில்லியன்	6,069	770	571	193	160	177	56	24	8,020
செலவீனம். ரூபா.மில்லியன்	5,403	711	540	131	150	160	45	19	7,159
சேமிப்பு ரூபா.மில்லியன்	666	59	31	62	10	17	11	5	861

வரைபடம் 58 வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டின் அளவும் செலவுகளும்
மூலம் :- 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்

மேலே குறிப்பிட்ட கடமைகளை நிறைவேற்றுவது சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட அவதானிப்புக்கள் பொழிப்பாக்கி கீழே தரப்படுகின்றன..

வியாபார வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் பிரதான குறிக்கோள்கள் நிறைவேற்றப்படாமை

அமைச்சின் குறிக்கோளுக்கு மத்தியில் தேசிய வியாபாரக் கொள்கைகளினூடாக தேசிய உற்பத்தியாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் சந்தை நடைமுறைகளைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு கருவியாக சுங்கத்தீர்வை கொள்கைகளினை ஈடுபடுத்துதல் மற்றும் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்காக தேசிய உற்பத்தியாளர்களுக்கு வரி நிவாரணங்களை வழங்குவதனூடாக ஏற்றுமதியாளர்களை ஊக்குவித்தல் மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் தொடர்பான தரவு முறைமைகளை நாளதுவரையாக்குதலும் அத்தரவுகளை வெளித்தகவல்களை வழங்குகின்ற நிறுவனங்களுடன் தொடர்புபடுத்தும் ஒரு பொறிமுறையினை தயாரித்தல் ஆகிய பிரதான குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

அரிசி ஒதுக்கத்தினைப் பேணுதல்

2008 ஏப்ரல் 27 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நாடு முழுவதும் காணப்படுகின்ற உணவுத் திணைக்களத்தின் களஞ்சியங்களில் 100,000 மெரிக் தொன் பாதுகாப்பு அரிசி ஒதுக்கத்தைப் பேணும் பிரதான செயற்பாடாக இனங்காணப்பட்டிருந்தும் கடந்த ஆண்டில் திணைக்களத்தினால் அரிசி ஒதுக்கம் பேணப்பட்டிருக்கவில்லை. 2021 ஆம் ஆண்டின்

போது தெற்காசிய வலய நாடுகளின் ஒத்துழைப்பு அமைப்பின் தேவைப்பாட்டின் அடிப்படையில் இலங்கையில் 8,000 மெட்ரிக் தொன் அரிசி ஒதுக்கத்தினைப் பேணுவதற்காக ரூபா 200 மில்லியன் நிதி ஏற்பாடு திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2021 ஒக்தோபர் மாதம் வரை பாதுகாப்பு அரிசி ஒதுக்கத்தினைப் பேணுவதற்காக இந்த நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டததன் காரணமாக இந்த நிதி ஏற்பாடு அரசாங்க வணிக (நானாவித) கூட்டுத் தாபனத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

கூட்டுறவு மொத்த வியாபார கூட்டுத்தாபனத்தின் களஞ்சியத்தினை புனரமைத்தல்

கூட்டுறவு மொத்த வியாபார கூட்டுத்தாபனத்தின் 13 களஞ்சியங்களை புனரமைப்பதற்கான ஒப்பந்தங்களை வழங்குதல் 2019 ஆம் ஆண்டில் இடம்பெற்றதுடன் ஒப்பந்த காலம் 30 நாட்களிலிருந்து 180 நாட்கள் வரையான காலப்பகுதி எடுத்திருந்தது. கூட்டுத்தாபனத்தினால் களஞ்சியத்தை புனரமைப்பதற்காக ரூபா 82.5 மில்லியன் செலவு செய்யப்பட்டதுடன் வியாபார வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சினால் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 62.4 மில்லியன் செலவு மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயனும் 2022 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை 06 களஞ்சியங்களின் புனரமைப்பு நடவடிக்கை முடிவடைந்திருந்ததுடன் ஏனைய 07 களஞ்சியங்களின் புனரமைப்பு நடவடிக்கைகளின் செயல் முன்னேற்றம் 05 சதவீதத்திலிருந்து 95 சதவீதம் வரையாக இருந்தது.

சிறிய மற்றும் மத்திய அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு விரைவாக கடன் நிவாரணத்தை வழங்கும் செயற்திட்டம்

2020 மே மாதம் 07 ஆந் திகதிய அமப/20/0722/218/010 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் சிறிய மற்றும் மத்திய அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு நடைமுறை மூலதனத்தினை வழங்கி அவர்கள் மீண்டும் அரிசி ஆலைகளை செயற்படச் செய்து விற்பனை செய்வதற்காக சதோச நிறுவனத்திற்கு அல்லது பாதுகாப்பு இருப்பாக பேணுவதற்காக உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கு அரிசியை வழங்குவதற்கு தேவையான வசதிகளை வழங்கும் குறிக்கோளில் 2020 ஆம் ஆண்டில் சிறிய மற்றும் மத்திய அளவிலான அரிசி ஆலை உரிமையாளருக்கு விரைவாக கடன் நிவாரணத்தை வழங்கும் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டது. அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அரிசி ஆலை உரிமையாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு முன்னுரிமை வழங்குதல் 2020 சனவரி மாதத்தில் அமுல்ப்படுத்தப்பட்ட சிறிய மற்றும் மத்திய அளவிலான வியாபாரிகளுக்கு வழங்கிய நிவாரணம் பொதியினூடாக கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்ளாத ஆலை உரிமையாளராக இருத்தல் மற்றும் வங்கிக்கு கடன் தவணைப் பணத்தை செலுத்த தவறியவர் அல்லாதவராக இருத்தல் ஆகிய வரையறைகளுக்கு உட்பட்டு இச்செயற்திட்டத்தனை அமுல்ப்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இச்செயற்த்திட்டத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 266.7 மில்லியனும் 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 109 மில்லியனுமான கடன் வசதிகள் வழங்கப்பட்டிருந்தன. இக்கடனை வழங்கும் போது ஒவ்வொரு அரிசி ஆலை உரிமையாளர்களிடமிருந்தும் அறவிட வேண்டிய கடன் சம்பந்தமாக கவனம்

செலுத்தப்பட்டிருக்காததுடன் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கங்களின் அனைத்து அங்கத்தவர்களும் பெற்றுக்கொண்ட வங்கிக் கடன்களில் செலுத்தப்படாத மொத்த கடன்களின் அளவு மற்றும் செலுத்த வேண்டிய மாதாந்த தவணைப் பணத்தை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு சங்கத்திற்குமாக செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்படவேண்டிய கடனின் அளவு தீர்மானிக்கப்பட்டிருந்தது. கடன் வழங்கப்பட வேண்டிய தரப்பினர்கள் சம்பந்தமாக காணப்பட்ட சிக்கல்களின் காரணமாக பக்கசார்பிற்கு உள்ளாகிய தரப்பினர்களால் நீதி மன்ற நடைமுறைகளில் ஈடுபட்ட சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. அதற்கிணங்க மேற்கூறிய அமைச்சரவை தீர்மானத்தில் குறிப்பிட்ட வரையறைகளுக்கு மாற்றமாக கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்நிலைமையைத் தவிர்த்துக் கொள்வதற்காக வியாபார வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

அத்தியாவசியமான உணவுப் பொருட்களை உள்ளடக்கி உள்நாட்டு உற்பத்திகளை பகிர்ந்தளிக்கும் குறக்கோளில் சிறிய விற்பனைக் கடை வலையமைப்பினை ஸ்தாபித்தல்

வரையறுத்த இலங்கை அரசாங்க வணிக (நானாவித) கூட்டுத்தாபனத்தினால் அத்தியவசிய உணவுப் பொருட்கள் உள்ளடங்கலாக தேசிய உற்பத்திகளை பகிர்ந்தளிக்கும் குறிக்கோளில் சிறிய விற்பனைக் கடை வலையமைப்பினை நாடு முழுவதும் ஸ்தாபிப்பதற்காக "Q Shop" கருதுகோளானது 2020 ஆம் ஆண்டின் போது அறிமுகப்படுத்தப்பட்டது. 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் 20 Q Shop விற்பனைக் கடைகளை ஸ்தாபிப்பதற்குத் திட்டமிடப்பட்டது. அமைச்சினால் 2021 ஆம் ஆண்டில் இதற்காக ரூபா 34.3 மில்லியன் பணம் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2022 மார்ச் 28 ஆந் திகதிவரை 08 விற்பனைக் கடைகள் மாத்திரம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் ஒரு விற்பனைக் கடைக்கான மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 2.5 மில்லியனாக இருந்த போதிலும் அப்பணத்தை மிகைத்து 5 விற்பனைக் கடைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக மேற்கொள்ளப்பட்ட மேலதிகக் கிரயம் ரூபா 10.87 மில்லியனாக இருந்தது. அவ்வாறே இந்த விற்பனைக் கடைகளின் கொள்கலன் பெட்டிகளை புதுப்பித்து நர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் அரசாங்க வணிக (நானாவித) கூட்டுத்தாபனத்தினால் 20 கொள்கலன் பெட்டிகளுக்காக முதலீடு செய்யப்பட்ட பணத்திற்காக வியாபார வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சினால் 2021 சனவரி 26 ஆந் திகதி ரூபா 7.2 மில்லியன் விடுவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 08 விற்பனைக் கடைகள் மாத்திரம் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் அந்த கொள்கலன் பெட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டதனை உறுதிப்படுத்துவதற்கு அல்லது அப்பணம் செலவு செய்யப்பட்ட முறைமை சம்பந்தமாக வியாபார வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சினால் பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

பொதுப்பாவனை செயற்பாடுகள் தொடர்பான அதிகார சபையின் செயலாற்றல்

- 2003 இன் 09 ஆம் இலக்க பொதுப்பவனை அதிகார சபை அதிகாரச் சட்டத்தினை திருத்தம் செய்யும் நடவடிக்கை 2004 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டளவில் 17 ஆண்டுகள் கடந்திருந்தும் அதிகாரச் சட்டத்தினை திருத்தம் செய்யும் நடவடிக்கை முடிவடைந்திருக்கவில்லை.

- 2003 இன் 09 ஆம் இலக்க பொதுப்பவனை செயற்பாடுகள் தொடர்பான அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் உபபிரிவின் கீழ் 2021 ஆம் ஆண்டின் போது மாவட்ட அலுவலகத்தைத் தவிர்த்து அதிகார சபையின் பொதுப்பவனை முறைப்பாட்டுப் பிரிவிற்கு கிடைத்த 1557 முறைப்பாடுகளுக்கு மத்தியில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 318 முறைப்பாடுகள் சம்பந்தமான விசாரணை நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

- 2015 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையான காலத்தில் சட்டப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட 1,647 முறைப்பாடுகளில் 767 முறைப்பாடுகளுக்கு 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தீர்வுகள் வழங்கப்படாதிருந்ததுடன் 194 முறைப்பாடுகள் நீக்கப்பட்டிருந்தன. 291 முறைப்பாடுகள் சம்பந்தமாக புலனாய்வு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படாதிருந்ததுடன் 168 முறைப்பாடுகளுக்கு பணிப்புரைகள் வழங்கப்பட்டிருந்தும் அவற்றில் 14 முறைப்பாடுகள் தொடர்பான பணிப்புரைகள் கையொப்பமிடப்பிட்டிருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டில் அதிகார சபையினால் 9494 சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அது முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 15923 சுற்றிவளைப்புக்களுடன் ஒப்பிடுகையில் 40 சதவீதம் வீழ்ச்சியடைந்திருந்தது. அவற்றில் மீளாய்வாண்டில் 6980 சுற்றிவளைப்புக்களுக்கு மாத்திரம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

- பாவனையாளர்களுக்கு உடனடி முறைப்பாடுகளைச் சமர்ப்பிப்பதற்காக 1977 தொலைபேசி சேவையானது 2013 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டில் 8056 பொதுமக்கள் முறைப்பாடுகள் அதற்கு கிடைத்திருந்தன. மீளாய்வாண்டின் இறுதியளவில் 2646 முறைப்பாடுகளுக்காக எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்காததுடன் 816 முறைப்பாடுகள் தொடர்பாக மாத்திரம் சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. உடனடி தொலைபேசி சேவைக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளில் 07 மாவட்டங்களின் முறைப்பாடுகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும் செயல்முன்னேற்றம் 15 சதவீதத்திற்கும் 53 சதவீதத்திற்கும் இடைப்பட்டதாகும்.

- 2021 ஆகஸ்ட் 12 ஆந் திகதிய 2240/30 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் ஆய்வுகூட பரிசோதனைகளுக்காக விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தும் அந்த விலைக்கட்டுப்பாடு பாவனையாளர்கள் மத்தியில் சென்றது என்பதற்காக மீளாய்வு செய்வதற்காக 02 மாவட்டங்களில் 03 சுற்றி வளைப்புக்கள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

- பாவனையாளர் செயற்பாடுகள் தொடர்பான அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 8(ஏ) பிரிவின் பிரகாரம் சந்தை நிலைமை மற்றும் பாவனையாளர் செயற்பாடுகளுக்குரிய ஆய்வுகளைப் பொறுப்பேற்றல், அறிக்கைகளை வெளிப்படுத்துதல், பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குதல், அதிகாரசபையின் ஒரு கடமையாக காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க அதிகாரசபையினால் 2021 ஆம் ஆண்டின் போது சேதனப் பசளை விவசாயம் மற்றும் சேதனப் பசளை உற்பத்தி சம்பந்தமான

நிகழ்கால நிலைமை தொடர்பாக மற்றும் சந்தையில் விற்கப்படுகின்ற பல்வேறு கைகழுவும் திரவ வகைகளில் உள்ளடங்கியுள்ள மதுபானத்தின் சதவீதம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட 2 சந்தை ஆய்வுகள் சம்பந்தமாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக பாவனையாளர்களுக்குத் தெரியப்படுத்துதல் மற்றும் பாதுகாத்தலுக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- பாவனையாளர் செயற்பாடுகள் தொடர்பான அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 61(3) (ஆ) பிரிவின் பிரகாரம் ஏதாவது ஒரு பொருள் நியம தரத்திற்கு மற்றும் விபரக் குறிப்பிற்கு இணக்கமற்றது என மற்றும் அந்த இணக்கப்பாட்டினால் உரிய பொருள் சில பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத அல்லது பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற நிலைக்கு மாறியுள்ளது என வெளிப்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான வகையில் அப்பொருளை அல்லது பொருள் இருப்பினை தடை செய்வதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். தெரிவுப் பரிசோதனைக்கு இணங்க வெளிப்படுத்தப்பட்ட நியமதரமற்ற டின் மீன்களை விற்பனை செய்த கடை உரிமையாளருக்கு எதிராக மாத்திரம் வழங்கு தாக்கல் செய்யப்பட்டிருந்த போதிலும் அப்பொருளை உற்பத்தி செய்த 05 கம்பனிகயுளுக்கு எதிராகவும் வழக்கு தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ஆக்க உரிமை அனுமதிப்பத்திரத்தினை பதிவு செய்தல்

2021 ஆம் ஆண்டின் போது பதிவு செய்யப்பட்ட ஆக்க உரிமை அனுமதிப்பத்திரங்களின் எணிக்கை 181 ஆக இருந்ததுடன் அதில் 30 அனுமதிப்பத்திரங்கள் 2008 ஆம் ஆண்லிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களாகும். அதிகாரச் சட்டத்தின் 83(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆக்க உரிமை அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் காலம் விண்ணப்பப் படிவம் பெற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து 20 ஆண்டுகளாக இருந்ததனால் விண்ணப்பப் படிவங்களை பதிவு செயள்வதற்காக 06 ஆண்டுகளுக்கும் 13 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் எடுத்திருந்ததனால் செல்லுபடியாகும் காலத்தில் அதிக காலப்பகுதியானது பதிவு செய்யும் நடைமுறைக்காக கழிக்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. இதற்கிணங்க ஆக்க உரிமை அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரரின் எதிர்பார்ப்பாகிய பாதுகாப்புத் தன்தை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

லங்கா சதொச கம்பனியின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்பு

லங்கா சதொசச கம்பனியின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் பதவியானது தற்பொழுது ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஒரு பதவியாக உள்ளடதுடன் அதனை நிரந்தர அடிப்படையில் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. உரிய பதவிக்காக ஆட்சேர்ப்பு நடைமுறை பின்பற்றப்படாதிருந்ததுடன் சம்பளமும் படிகளும் பல சந்தர்ப்பங்களில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் அமைச்சரவையின் தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அப்பதவியின் கடமைகள் மற்றும் வேலை விபத்தின் பிரகாரம் நிரந்தரமான ஒரு சம்பளத்தை அங்கீகரித்துக் கொள்வதற்கு கம்பனி ந்வடிக்கைஎடுத்திருக்கவில்லை. 2017 மே 16

ஆந் திகதிய DMS/1741 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்திற்கு முரணாக கம்பனியின் பணிப்பாளர் சபை பல்வேறு சம்பளங்களையும் படிகளையும் அங்கீகரித்ததுடன் அதற்றிகிணங்க முறையான அங்கீகாரமின்றி 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது செலுத்தப்பட்ட சம்பளங்களும் படிகளும் ரூபா 6.5 மில்லியனாகும்.

பெறுகை நடைமுறைகளை மீறி உபகரணங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல்

2019 சிங்கள மற்றும் இந்து புதுவருட விழாவினை இலக்காகக் கொண்டு லங்கா சதொச விற்பனைக் கடைகளின் இருப்புக்களை அதிகரித்தல் மற்றும் விற்பனையை அதிகரிப்பதற்காக எந்தரமுல்ல இருப்புக் களஞ்சியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக 2 மாதங்களுக்கு மாத்திரம் Pallet Jack Cart ஒன்று ரூபா 7,500 வீதம் 6 அலகுகள் பெறுகை நடைமுறைகளின்றி 2019 ஆம் ஆண்டின் போது வாடகைக்குப் பெற்றுகொள்ளப்பட்டிருந்தன. இந்த உபகரணத்தின் நிலவும் விலை ரூபா 55,000 என்பதனால் கொள்வனவு செய்தல் பொருளாதார ரீதியாக சிக்கனத்தன்மை அற்றது எனக் குறிப்பிட்டு வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தும் உரிய கம்கபனி உடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்படவில்லை. எவ்வாறாயினும் 2022 யூன் 25 ஆந் திகதி வரை 3 களஞ்சியங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக அங்கீகாரமின்றி 59 உபகரணங்கள் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் செலவு செய்யப்பட்ட பணம் ரூபா 9.2 மில்லியனாகும். பொருளாதார ரீதியான சிக்கனத் தன்மையை கவனத்தில் எடுத்து நடவடிக்கை எடுக்காமையால் வாடகைப் பணத்திலிருந்து 165 அளவான உபகரணங்களை கொள்வனவு செய்யும் வாய்ப்பு கம்பனியால் இழக்கப்பட்டிருந்தது.

லங்கா சதொச கம்பனிக்கு கிடைக்க வேண்டிய கணக்குகள்

- இலங்கை சதொச கம்பனியின் கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளும் வழிகாட்டியின் பிரகாரம் கட்டிடம் இல்லாத வெற்றுக் காணிக்காக எதிர்காலத்தில் விற்பனை நிலையத்தை ஆரம்பிக்கும் எண்ணத்தில் முற்பணங்கள் செலுத்தாதிருக்க வேண்டிய போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் மேற்கொள்ளப்பட்ட 29 உடன்படிக்கைகளின் பிரகாரம் கட்டிடங்களை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளுக்காக 1½ ஆண்டு முற்பணமாக ரூபா 34.2 மில்லியன் தொகை மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்றுக்கொள்ளாது செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களில் பயன்பாட்டிற்கு பொருத்தமான வகையில் நிர்மாணங்களை மேற்கொண்டு கம்பனிக்கு ஒப்படைக்கப்படாத 29 கட்டிட உரிமையாளர்களில் 18 நபர்களுக்கு எதிராக ரூபா 27.43 மில்லியனை அறவீடு செய்வதற்காக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2022 யூன் 15 ஆந் திகதி வரை அப்பணத்தில் எத்தொகையும் அவிடப்பட்டிருக்கவில்லை.
- அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் பாவனையாளர்களுக்கு நிவாரணம் வழங்கும் குறிக்கோளில் செமன், பருப்பு ஆகிய இரண்டு பொருட்களுக்காக 2020 மார்ச் 18 ஆந் திகதியிலிருந்து 2020 எப்ரல் 29 ஆந் திகதி வரையான காலத்தில் விலை குறைந்ததனால் கிரயத்தின் அடிப்படையில் கணிக்கப்பட்ட நட்டம் ரூபா 705.62 மில்லியனான பணம் நிதி

அமைச்சினால் கம்பனிக்கு தீர்த்துவைக்கப்பட்டிருந்தது. கம்பனியால் கணிக்கப்பட்ட கொள்வனவு விலைக்கும் கொள்வனவு கிரயத்திற்கும் இடையிலான செலவு ரூபா 71.99 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 42 மில்லியனை தீர்த்துவைப்பதற்கு 21/0563/313/016 ஆம் இலக்க 2021 ஏப்ரல் 20 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானம் அங்கீகரித்திருந்தது. கம்பனியால் நிதி அமைச்சிடமிருந்து இப்பணத்தை மீள் நிரம்பல் செய்துகொள்ளுமாறு வேண்டிக் கொள்ளப்பட்டிருந்தும் அது 2022 யூன் 27 ஆந் திகதி வரை கிடைத்திருக்கவில்லை. அதற்கிணங்க மொத்த பணமாகிய ரூபா 71.99 மில்லியன் கம்பனிக்கு ஏற்பட்ட நட்டமாகும்.

குடிபான வியாபார நிலைய அரசிறை

கூட்டுறவு மொத்த வியாபார கூட்டுத்தாபனத்தின் குடிபான வியாபார நிலையத்தின் செய்றபாட்டு நடவடிக்கைகள் லங்கா சதொச லிமிட்டட்டினால் மேற்கொள்ளப்படுவதுடன் அதற்காக வருடாந்தம் கூட்டுறவு மொத்த வியாபார கூட்டுத்தாபனத்திற்கு அரசிறை செலவும் குடிபான வியாபார நிலைய அனுமதிப்பத்திரத்தினை புதுப்பிப்பதற்கான செலவும் இரு தரப்பினர்களுக்குமிடையே உடன்படிக்கையின்றிகம்பனியால் செலுத்தப்பட்டிருந்தது. இந்த அனுமதிப்பத்திரத்தினை பெறுப்பேற்பதற்காக 2016 ஆம் ஆண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் 2022 யூன் 25 ஆந் திகதி வரையும் பொறுப்பேற்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறு பொறுப்பேற்க்கப்படாமையால் அரசிறையாக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 16.22 மில்லியன் மேலதிக செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

சீனி மீது வரி விதித்தல்

2197/12 ஆம் இலக்க 2020 ஒக்தோபர் 13 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் மூலம் 2020 ஒக்தோபர் 14 ஆந் திகதியிலிருந்து சீனி மீது விதிக்கப்பட்ட அதுவரை காணப்பட்ட வரியானது 25 சதவீதம் வரை குறைக்கப்பட்டதுடன் 2201/8 ஆம் இலக்க 2020 நவம்பர் 10 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் மூலம் சீனி மீதான கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. வரியினைக் குறைத்தல் மற்றும் கட்டுப்பாட்டு வலிலையினை நிர்ணயித்ததன் அடிப்படையில் லங்கா சதொச கம்பனி கொள்வனவு செய்யவேண்டிய விலை ரூபா 80 ஆக இருந்ததுடன் விற்பனை விலை ரூபா 85 ஆகும். 2020 ஒக்தோபர் 14 ஆந் திகதி கம்பனியிடம் காணப்பட்ட சீனி இருப்பு 919,409 கிலோகிராம் ஆக இருந்ததுடன் அதன் அடிப்படையில் கணிக்கப்பட்ட ரூபா 37.16 மில்லியன் தொகையான நட்டம் நிதி அமைசினால் லங்கா சதொச கம்பனிக்கு தீர்த்துவைக்கப்பட்டது. வரியினை 25 சதம் வரை குறைத்திருந்ததும் லங்கா சதொச கம்பனியால் ரூபா 80 இனை விட அதிக விலைக்கு கொள்வனவு செய்திருந்ததனால் கட்டுப்பாட்டு விலையை நீக்கிய திகதியான 2021 பெப்ரவரி 08 ஆந் திகதி வரை கம்பனிக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 42.81 மில்லியனாகும்.

வியாபாரத்தின் போது பயன்படுத்துகின்ற அளவை செய்யும் உபகரணங்கள் மற்றும் அளவை நியமங்களை மெய்மையாய்வு செய்தல்

வியாபாரத்தின் போது பயன்படுத்துகின்ற அனைத்து அளவை செய்யும் உபகரணங்களும் வருடாந்தம் மெய்மைய்யாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அனைத்து உபகரணங்களும் மெய்மைய்யாய்வு

செய்யப்பட்டது என்பதனை உறுதிப்படுத்தும் முறையான நடைமுறை அளவீட்டு அலகு நியமம் மற்றும் சேவை திணைக்களத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்காததுடன் 12 மாவட்டங்களில் பயன்படுத்துகின்ற அளவீட்டு நியமத்தை மீண்டும் மெய்மையாய்வு செய்வதற்காக திட்டமிடப்பட்டிருந்தும் எந்தவொரு மாவட்டம் சம்பந்தமாகவும் அச்செய்ற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

பெண்கள் மற்றும் சிறுவர் அலுவல்கள் அபிவிருத்தி

கணக்காய்வு அவதானிப்புக்கள்

- நிதியேற்பாடு எஞ்சுதல்
- சுரக்ஷா மாணவர் காப்புறுதி நிகழ்ச்சித் திட்டத்தை உயரிய முறையில் செயற்படுத்தாமை
- பாடசாலை சீருடைத் துணிகள் உரிய திகதியில் வழங்கப்படாமை
- தொழில்நுட்ப அறிவினை வழங்காது பெண் முயற்சியாளர்களுக்காக டிஜிட்டல் விற்பனை தளமொன்றை வழங்குதல்
- அச்சுறுத்தலுக்கு உள்ளான பெண்களை பொருளாதார மற்றும் சமூக ரீதியில் ஊக்குவிக்கும் செயற்திட்டம்
- விளைவற்ற செலவினம்
- சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான சட்டங்களை உருவாக்காமை
- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு பொருத்தமான பொறிமுறையொன்றை தயாரிக்காமை
- முறைப்பாடுகளுக்கான தீர்வினை வழங்குவதில் தாமதம்
- நிதியங்கள் பயன்படுத்தப்படாமை
- முன்பராய அபிவிருத்தி செயற்திட்டம்

பெண்கள் மற்றும் சிறுவர் அலுவல்கள் அபிவிருத்தி

மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் செயற்படுகின்ற ஒரு திணைக்களம் மற்றும் நியதிச்சட்ட சபைகள்/ நிறுவனங்களினால் பின்வரும் கடமைகளும் செயற்பாடுகளும் ஆற்றப்பட வேண்டியுள்ளன.

- பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத் துவதற்கான நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை அமுல்ப்படுத்துதல்
- கட்டுப்பாடற்ற நுண்நிதி திட்டங்களால் பாதிக்கப்பட்ட கிராமப்புற பெண்களுக்கு நிவாரணம் வழங்குதல்
- வழமையான பாதிப்புக்களுக்கு உட்பட்ட நபர்களுக்கு, குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவர்களிற்கு பாதுகாப்பளித்து துன்பங்களை குறைப்பதற்கான நிரந்தர பொறிமுறைகளை அமுல்ப்படுத்துதல்.
- அனைத்து சிறுவர்களுக்கிடையேயும் ஊட்டச்சத்து குறைபாட்டை தீர்ப்பதற்கு விசேட சிறுவர் ஊட்டச்சத்து நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்துதல்
- சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான சர்வதேச மாநாட்டின் பிரகாரம் அனைத்து தொடர்புடைய நிறுவனங்களின் ஒருங்கி ணைப்புடன் சிறுவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- ஒவ்வொரு மாவட்ட நீதிமன்றத்திலும் சிறுவர்கள் தொடர்பான அனைத்து நீதிமன்ற வழக்குகளும் தேக்கமடைவதை தீர்ப்பதற்கு அர்ப்பணிக்கப்பட்ட பிரிவொன்றை நிறுவுதல்
- சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் உள்ள அனைத்து சிறுவர்களுக்கும் வளர்ப்பு குடும்ப முறைமை ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை ஸ்தாபித்தல்.
- "சிறுவர் நட்பு பாடசாலை" எண்ணக்கருவை விரிவுபடுத்துதல்.
- அரச மேற்பார்வையின் கீழ் தேசிய முன்பள்ளிக் கொள்கை அடிப்படையிலான முன்பள்ளி கல்வியை விரிவுபடுத்துதல்.
- கிராமப்புற பாடசாலைகளை மாணவர் களுக்கான கவர்ச்சிகரமான பாடசாலை களாக மாற்றுதல்.
- அனைத்துப் பாடசாலைகளிலும் வகுப்பறைகள் மற்றும் சுகாதார உபகரணங்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் ஓய்வறைகள், சுகாதார வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான விசேட நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை அமுல்ப்படுத்துதல்.
- பாடசாலை பாடப்புத்தகங்கள், பாடத் திட்டங்கள், ஆசிரியர்களின் வழிகாட்டி களை டிஜிட்டல் முறையில் அறிமுகப்ப டுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

குறித்த செயற்பாட்டை நிறைவேற்றும் பொருட்டு பாராளுமன்றத்தால் 2021 ஆம் ஆண்டில் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க

அமைச்சு மற்றும் ஒரு திணைக்களத்திற்கு ரூபா 30,818 மில்லியன் கூட்டுமொத்த நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந் நிதியேற்பாட்டில் ரூபா 23,649 மில்லியன் தொகை மாத்திரமே மீளாய்வாண்டின் இறுதி வரை பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் உரு 59 இல் காண்பிக்கப்பட்டுள்ளன.



உரு 59- வழங்கிய நியேற்பாடு மற்றும் உள்ளபடியான செலவினம் மூலம் - 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள

நிதியேற்பாடு எஞ்சுதல்

- 43 செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தினால் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளபடியாக ரூபா 5,768.1 மில்லியன் எஞ்சியிருந்ததுடன் அது 24 சதவீதம் முதல் 100 சதவீதமான வீச்சில் காணப்பட்டது.

- நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் 3 செலவின விடயங்களுக்காக மாற்றப்பட்ட நிதியேற்பாடுகளில் 64 சதவீதம் முதல் 100 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் சேமிப்புக்கள் நிலவின.

சுரக்ஷா மாணவர் காப்புறுதி நிகழ்ச்சித் திட்டத்தை உயரிய முறையில் செயற்படுத்தாமை

இந்த காப்புறுதிக்காக 2021 ஆம் ஆண்டினுள் ரூபா 3,700 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றுள் ரூபா 3,331 மில்லியன் காப்பபுறுதி நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. காப்புறுதி நிறுவனங்களை தெரிவு செய்யும் போது 2006 பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் போட்டி அடிப்படையிலான பெறுகை நடைமுறை பின்பற்றப்படாது 2018 ஒக்தோபர் 01 ஆந் திகதி முதல் 2022 திசெம்பர் 01

வரையிலான காலத்திற்காக 5 சந்தர்ப்பங்களில் ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்தன. அக்காலப்பகுதியினுள் மாணவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 33,974 விண்ணப்பங்களுக்கு பதில் கிடைக்காமை மற்றும் சுரக்ஷா முறைப்பாட்டு பெட்டிக்கு கிடைத்திருந்த 2,422 முறைப்பாடுகளை விசாரித்து தீர்வொன்றினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு இது தொடர்பான அறிவு மிகவும் குறைந்த மட்டத்தில் நிலவிய காரணத்தினால் நலன்களை விண்ணப்பிக்கும் எண்ணிக்கை 0.84 சதவீதம் எனும் மிகவும் குறைந்த சதவீதமாக காணப்பட்டது.

பாடசாலை சீருடைத் துணிகள் உரிய திகதியில் வழங்கப்படாமை

2021 ஆம் ஆண்டிற்கான பாடசாலை சீருடைத் துணிகளை விநியோகிக்கும் ஒப்பந்தத்தில் விலைக்கேள்வி ஆவணங்களின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டிற்குரிய அனைத்து சீருடைகளும் 2020 நவம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் பாடசாலைகளுக்கு வழங்கப்பட வேண்டிய போதிலும் 2020 திசெம்பர் 23 ஆந் திகதி வரையிலும் வலயக் கல்வி அலுவலகத்தினால் பகிர்ந்தளித்து நிறைவு செய்யப்பட்ட பாடசாலை சீருடைகளின் அளவு மொத்த பாடசாலை சீருடைகளின் தேவைப்பாட்டின் 20 சதவீதம் எனும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

மேலும் பாடசாலைகள் மற்றும் வலய மட்டத்தில் மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பில் நாளதுவரையாக்கப்பட்ட சரியான தரவுக் கட்டமைப்பொன்று இல்லாதீருந்த காரணத்தினால் அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.3 இன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் மதிப்பீடுகளை தயாரிக்காததன் காரணத்தினால் இரு சந்தர்ப்பங்களில் பாடசாலை துணிகளை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமையால் உரிய காலப்பகுதியினுள் பாடசாலை மாணவர்களுக்கு சீருடைகளை வழங்க முடியாதிருந்தது.

தொழில்நுட்ப அறிவினை வழங்காது பெண் முயற்சியாளர்களுக்காக டிஜிட்டல் விற்பனை தளமொன்றை வழங்குதல்

அமைச்சினால் ரூபா 3.5 மில்லியன் செலவிடப்பட்டு 13 பெண் முயற்சியாளர் தொகுதியின் கீழ் பதிவு செய்வதற்காக டிஜிட்டல் விற்பனைத் தளமொன்றை (Digital Maketting Platform) 2020 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டிருந்த போதலும், கிராமிய பெண் முயற்சியாளர்களுக்கு அது தொடர்பில் போதிய அறிவின்மை மற்றும் தொழில்நுட்ப அறிவின்மை காரணமாக 2022 மே மாதம் அளவில் 4 தொகுதிகளின் கீழ் 8 முயற்சியாளர்கள் மாத்திரம் பதிவு செய்திருந்தனர்.

அச்சுறுத்தலுக்கு உள்ளான பெண்களை பொருளாதார மற்றும் சமூக ரீதியில் ஊக்குவிக்கும் செயற்திட்டம்

அச்சுறுத்தலுக்குள்ளான பெண்களை பொருளாதார மற்றும் சமூக ரீதியில் ஊக்குவிக்கும் நோக்கில் அம்பாறை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள திரியவனிதா புடவைகள் மற்றும் பாதணிகள் செயற்திட்டம் மற்றும் திரியவனிதா கைத்தறி இயந்திர உற்பத்தி விசேட செயற்திட்டம் ஆகியவற்றிற்காக அமைச்சினால் 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 6.9 மில்லியன் செலவிடப்பட்டு இயந்திர உபகரணங்கள் மற்றும் கட்டிட பழுதுபார்த்தல் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த

மாவட்டத்தினுள் 20,000 எண்ணிக்கையான ஊனமுற்ற மற்றும் கணவரை இழந்த பெண்கள் மாத்திரம் உள்ள போது மொத்த நலனாளிகளின் எண்ணிக்கை 20 எனும் மிகவும் குறைந்த மட்டத்தில் நிலவியது.

விளைவற்ற செலவினம்

திரிபோசா கம்பனியினால் போசாக்குமிக்க பிஸ்கட் வகையொன்றினை உற்பத்தி செய்வதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் யப்பான் கம்பனியொன்றின் உற்பத்தி இயந்திரம் 2020 யூன் மாதத்தில் ரூபா 209.3 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அந்த இயந்திரம் இலங்கைக்கு அஇறக்குமதி செய்வதற்கு முன்னர் பயிற்சி நடவடிக்கைகளுக்காக 4 உத்தியோகத்தர்கள் யப்பானுக்கு சுற்றுலா மேற்கொள்வதற்காக ரூபா 5.3 மில்லியன் மற்றும் இயந்திரத்தினை நிறுவுவதற்கான கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காக ரூபா 19 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும் கணக்காய்வுத் திகதியான 2022 ஏப்ரல் மாதம் வரையிலும் ரூபா 228.3 மில்லியனான இயந்திரம் மற்றும் கட்டிடம் விளைவற்றுக் காணப்பட்டதுடன் பயிற்சி நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 5.3 மில்லியன் செலவினம் விளைவற்றதாகியிருந்தது.

சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான சட்டங்களை உருவாக்காமை

திணைக்களம் ஆரம்பிக்கப்பட்ட 1956 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலும் 65 வருடங்கள் கடந்திருந்த போதிலும் சிறுவர்களின் உரிமைகளை பாதுகாக்கும் வரையிலான உலகளாவிய நியதிச்சட்டத்திற்கு இணங்க தேசிய கொள்கையொன்றினை தயாரிப்பதற்கோ மற்று அதற்குரிய சட்டங்களை உருவாக்குவதற்கு 2022 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மாற்று பேணுகை கொள்கையொன்றுக்காக 2019 மார்ச் 06 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் அந்த கொள்கை 2022 மார்ச் 25 கணக்காய்வுத் திகதி வரையிலும் பொருண்மையான விதத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

பல்வேறு பொருளாதார மற்றும் சூழல் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தொடர்ச்சியாக பாடசாலைக் கல்வியை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்காத பிள்ளைகளை மீண்டும் பாடசாலைகளுக்கு அனுப்பும் தேவைப்பாட்டினை இனங்கண்டு குறித்த நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்த போதிலும் அந்த நிகழ்ச்சித் திட்டம் போதுமானதாக இல்லாத காரணத்தினால் 2021 ஆம் ஆண்டில் 2718 மாணவர்கள் பாடசாலை கல்வியை கைவிட்டிருந்தனர்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு பொருத்தமான பொறிமுறையொன்றை தயாரிக்காமை

அதிகாரசபையின் 1929 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு பொருத்தமான பொறிமுறையொன்றினை தயாரிப்பதற்கும் உரிய நடைமுறைகளை மேம்படுத்துவதற்கும் பரிந்துரைகளை பெற்றுக் கொடுப்பதற்கு மதியுரையாளர் ஒருவருக்கு ரூபா 0.9 மில்லியன் செலுத்தி 2017 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட அறிக்கைக்காக 4 வருட காலம் கடந்திருந்த போதிலும் அதில் உள்ளடக்கப்பட்ட பரிந்துரைகள் மற்றும் நடைமுறைகளை

பின்பற்றுதல் தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிராததுடன் கணனி கட்டமைப்பை தயாரிப்பதற்காக தனியார் நிறுவனம் ஒன்றுக்கு ரூபா 1.2 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும் தரக் கட்டமைப்பை செயற்படுத்த முடியாதிருந்தது.

முறைப்பாடுகளுக்கான தீர்வினை வழங்குவதில் தாமதம்

2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் செயல் நடவடிக்கைத் திட்டத்தினுள் அதிகார சபையின் பிரதான பணிப்பொறுப்பான முறைப்பாடுகளை தீர்க்கும் பணிப்பொறுப்பு உள்ளடக்கப்பட்டிராததுடன் 2011 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலும் அதிகாரசபைக்கு அறிக்கையிடப்பட்டிருந்த 100592 முறைப்பாடுகள் தீர்க்கப்படாது முன்கொர்டுவரப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 47136 ஆகும்.

நிதியங்கள் பயன்படுத்தப்படாமை

சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுக்கும் பணிகளுக்காக மற்றும் அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு உள்ளானவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காகவும் அவர்களின் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் எடுக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைகளும் எடுப்பதற்குரிய ஏற்பாடுகளை உருவாக்குவதற்கு 2010 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியம் 2018 ஆம் ஆண்டு முதல் உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிராததுடன் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 2.8 மில்லியனான மீதியொன்று நிலவியது. மேலும் 1 முதல் 11 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்படும் ரூபா 1.9 மில்லியனான 3 நிதியங்கள் குறித்த நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

வரையிலும் 3386 நிலையங்களுக்காக அந்த உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிராததுடன்

முன்பராய அபிவிருத்தி செயற்திட்டம்

சிறுவர் முன்பராய அபிவிருத்தி செயற்திட்டம் மூலம் முன்பராய அபிவிருத்தி மத்திய நிலையங்கள் 6000 இற்காக ஆசிரியர் கற்பித்தல், கற்றல் உபகரணத் தொகுதிகள் மற்றும் செயற்பாடுகளுக்கான பொருட் தொகுதிகளை விநியோகிப்பதற்காக ரூபா 221.5 மில்லியனான நிதியேற்பாடு 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டின் இறுதியிலும் 3386 நிலையங்களுக்கான உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்படாததுடன் அதன் எதிர்பார்த்த பௌதீக முன்னேற்றம் 56 சதவீதமாகும்.

வெகுசன ஊடக பிரிவு

கணக்காய்வு அவதானிப்புக்கள்

- பெறுகை அலுவல்கள்
- செயல்நடவடிக்கை திட்டத்தின் படி செயற்படாமை
- வருமானத்தை இழத்தல்
- தேசிய அபிவிருத்தி ஊடக நிலையம் ஒன்று நிறுவுதல்
- மனிதவள முகாமைத்துவ பலவீனங்கள்
- அறவிட வேண்டிய பணத்தை அறவீடு செய்யாமை
- செயற்பாட்டு விளைவுகள்
- 2020 ஒலிம்பிக் விளையாட்டு விழாவிற்காக ஊடக அணவல்
- நிதிக் கட்டுப்பாடு
- சொத்துக்கள் குறை பயன்பாடு
- உள்ளக விசாரணைகள்
- தீர்க்கப்படாத மீதிகள்
- இருப்பு முகாமைத்துவம்
- செலுத்த வேண்டிய பணம் செலுத்தப்படாமை
- நிறுவனத்தை பதிவு செய்யாமை
- போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுப்பனவுகள
- பொதுமக்கள் பிரதிநிதித்துவம்
- சட்ட அலுவல்கள்
- வெளியீடுகளின் பிரதிகள் இலவசமாக வழங்குதல்
- சொத்துக்கள் கட்டுப்பாடு
- செயற்பாட்டு பலவீனங்கள்

வெகுசன ஊடக பிரிவு

பேச்சு மற்றும் கருத்து சுதந்திரம் உள்ளடங்களான சரியான தகவல்களை அறிந்துகொள்ளும் மக்களின் உரிமையை சான்றுபடுத்தும் தகவல்கள், அறிவு, பேத பேத கருத்தியல்கள் நடுநிலையான தொடர்பாடலுக்கு பொருத்தமான வெகுசன ஊடகக் கலாச்சாரமொன்றை உருவாக்குவதைப் போலவே ஊடகவியலாளர்களின் தொழில்சார் திறமை அபிவிருத்திற்காக நடவடிக்கை எடுத்தல் போன்ற விடயப்பரப்புகளை உள்ளடக்கிய வெகுசன ஊடக அமைச்சு மற்றும் அதன் கீழான 03 திணைக்களங்கள் 08 கம்பனிகள் / நியதிச் சட்ட சபைகளினால் பின்வரும் பணிகள் மற்றும் பணிப்பொறுப்புக்கள் மற்றும் அதிவிஷேட முக்கியத்துவம் செலுத்த செலுத்த வேண்டியிருந்தது.

- வெகுசன ஊடகவியலாளர்கள் மற்றும் வெகுசன ஊடக நிறுவனங்களுக்காக சமூக கலாச்சார பெறுமதி மற்றும் சமூக விழுமியங்கள் தொடர்பாக சட்டகத்தினை மிகைத்து போகாத வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு வெளிப்படைத் தன்மையுடனான வெகுசன ஊடக கலாச்சாரம் ஒன்றினை அறிமுகப்படுத்துவதற்காக தேசிய மற்றும் சர்வதேச சட்டங்கள் பிரமாணங்களுக்கு நேரொத்தவாறு ஊடக நியமங்களை நிறுவுதல்.

- தபால் சேவை பொது மக்களின் மைய தேவைப்பாடுகளை இலக்காக கொண்ட சேவை ஒன்றாக ஆக்குவதற்கு விரிவுபடுத்தி டிஜிடல் தபாலை சேர்ந்த சேவைகளுக்காக தேவையான செய்முறைகள் அறிமுகப்படுத்தல் மற்றும் செயற்படுத்தல்.

- இலங்கை பத்திரிகை சபையை மீள் கட்டமைத்தல்.

- சமூக ஊடகம் உட்பட புதிய ஊடகங்களை பயன்படுத்தல் மற்றும் நடாத்துதல் தொடர்பான தொழில்சார் அறிவு மற்றும் அனுபவத்தை வழங்குவதற்காக சமூக கல்வி செய்முறை ஒன்றை அறிமுகப்படுத்துதல்.

- சர்வதேச நியமங்களுக்கு இணங்க வெகுசன ஊடக உயர்கல்வி தொழில்சார் திறமைகளை மேம்படுத்தல் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தல்.

மேற்கூறிய கருமங்களை நிறைவேற்று வதற்காக அமைச்சு மற்றும் மூன்று திணைக்களங்களுக்கு கூட்டுத்தொகை ரூபா 21,704 மில்லியனுக்கான ஏற்பாடுகள் பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அவற்றில் ரூபா 19,374 மில்லின் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் வரைபட 60 இல் காண்பிக்கப்படுகிறது.



உரு 60 - மதிப்பீடுசெய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினம்
மூலம் - 2021 இன் வருடாந்த நிதிக்கூற்றுக்கள்

மேற்கூறிய பணிப் பொறுப்புக்கள் மற்றும் அதிவிஷேட முக்கியத்துவ நிறைவேற்றுவது தொடர்பாக வெகுசன ஊடக அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படும் திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட அவதானிப்புக்கள் பொழிப்பாக கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

பெறுகை அலுவல்கள்

- 2021 பெப்ரவரி 18 திகதியளவில் இனங்கண்டிருந்தவாறு அரச தகவல் திணைக்களத்தின் கணினி தேவைப்பாட்டுக்காக 42 கணனிகள் கொள்வனவு செய்வதற்காக 2021 மே 31 திகதி 3 கணினிகள் மற்றும் 2021 ஆகஸ்ட் 25 திகதி 39 கணனிகள் ஆக இரண்டு சந்தர்ப்பங்களில் கூறுவிலைகள் அழைக்கப்பட்டிருந்தது. அனைத்துக் கணினிகளையும் ஒரே தடவையில் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் விலைகள் அதிகரித்தமையால் 11 கணினிகளுக்காக ரூபா 4.19 மில்லியன் தொகை மிகையாக செலுத்துவதற்கு நேரிட்டிருந்தத.

- மதிப்பீட்டு பெறுமதி ரூபா 179.48 மில்லியன் தொகைக்காக அமைச்சு வளவை நவீன மயப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் ஒப்பந்த வேலை 12 உப பகுதிகளின் கீழ் 04 சந்தர்ப்பங்களில் கூறுவிலைகள் அழைக்கப்பட்டு 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 113.40 மில்லின் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், இந்த பெறுகையின் தேவைப்பாடு தெளிவாக மற்றும் முறையான பிரகாரம் இனங்கண்டிருக்கவில்லை.

அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 7.8.4 (ஆ) பிரகாரம் போதியளவின்றிய விலைகூறல் பாதுகாப்புமுறி கூற்று படிவத்தில் பாரிய விளகல்கள் காணப்பட்ட போதிலும் உரிய படிவத்தின் விலைகூறல் பாதுகாப்புமுறி சமர்ப்பிக்காமையை சிறிய விளகல் என கணித்து குறைந்த விலை சமர்ப்பித்திருந்த நிறுவனம் உட்பட சமர்ப்பிக்கப்பட்டிருந்த கூறுவிலைகளை தொழிநுட்ப மதிப்பாய்வு ஒன்று மேற்கொண்டு பரிந்துரை சமர்ப்பிக்கும் படி 2021 ஜுலை 19 திகதிய அமைச்சுச் செயலாளரினால் உரிய உசாத்துணை நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் உசாத்துணை நிறுவனத்தினால் குறைந்த விலை சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிறுவனத்தை இரத்துச் செய்து இரண்டாவது குறைந்த விலை சமர்ப்பித்திருந்த நிறுவனத்தை பரிந்துரைத்திருந்தது. அவ்வாறாயினும் அமைச்சின் தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழு, உசாத்துணை நிறுவனத்தின் பரிந்துரையை கவனத்தில் எடுக்காமல் உரிய படிவத்தில் விலைகூறல் பாதுகாப்புமுறி சமர்ப்பித்திருக்காத குறைந்த விலை சமர்ப்பித்திருந்த நிறுவனத்தை பரிந்துரைத்து தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழு அறிக்கை ஒன்று தயாரித்து பெறுகைக் குழுவிதும் அங்கீகாரத்துடன் ஏற்புக் கடிதம் 2021 ஜுலை 22 திகதி வழங்கி வெகுசன ஊடக அமைச்சு வளவின் புனர்நிர்மாண மற்றும் அபிவிருத்தி வேலை ஒப்பந்த வேலை வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1 இன் பிரகாரம் இந்த ஒப்பந்த வேலை தொடர்பாக குறிப்பிட்ட நிறுவனத்துடன் 2022 மார்ச் 29 திகதி வரை முறையான உடன்படிக்கை ஒன்றிற்கு அணுகியிருக்கவில்லை.

அதே போல், அமைச்சின் மின் தூக்கி இயந்திரம் பொருத்துதல் தொடர்பான சிவில் பொறியியல் கருமம் மற்றும் மின் தூக்கி வழங்குதல் பொருத்துதல், செயற்படுத்துதல், பராமரித்தலுக்கு உரிய பெறுகை கருமங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த இரண்டு விலைகூறல்களுக்கு பதில் கிடைக்காமையால் புதிதாக விலைகூறல் அழைப்பதற்கு உசாத்துணை நிறுவனத்தினால் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், அமைச்சின் கட்டிட புனர்நிர்மாண மற்றும் அபிவிருத்தி வேலைகளுடன் தொடர்புடைய ஒப்பந்த வேலைகாரருக்கு கூறுவிலைகள் அழைக்கப்படாமல் மின் தூக்கி பொருத்தும் ஒப்பந்த வேலை வழங்கப்பட்டிருந்தது.

- 2006 இன் அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் படி கடைபிடிக்கப்பட வேண்டியிருந்த மொத்த கிரய மதிப்பீடு தயாரித்தல், பெறுகை முறையினை தீர்மானித்தல், விலைகூறல்களை அழைத்தல், விலைகூறல் ஆவணங்கள் வழங்குதல், கூறுவிலைகளை திறத்தல், தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழு அறிக்கைகள், பெறுகைக் குழு அறிக்கைகள், பெறுகை வழங்கள் உட்பட பெறுகை செய்முறையின் நடவடிக்கை ஏதும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 6 மற்றும் 10 ஆவது ஒலிப்பதிவுக்கூடங்களில் காணப்பட்ட 03 பியானோக்களை திருத்தும் போது கடைபிடிக்கப்பட்டு இருக்காததுடன் 2020 ஆண்டிற்காக பணிப்பாளர் (பொறியியல்) இனால் தயாரிக்கப்பட்டிருந்த பெறுகைத் திட்டத்திலும் இந்த கருமம் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.
  கூட்டுத்தாபன கட்டுப்பாட்டாளர் (இசை) இனால் 2021 ஆகஸ்ட் 09 திகதி உள்ளகக்

கணக்காய்வுப் பிரிவிற்கு வழங்கியிருந்த கூற்றின் படி பியானோ திருத்த வேலையின் வழமையான நடைமுறையாவது திருத்த வேலைக்கான விண்ணப்பம் இசைக்குழுவின் தலைவரினால் கட்டுப்பாட்டாளர் (இசை) யின் பரிந்துரை மீது பணிப்பாளர் (இசை) இன் அங்கீகாரத்துக்காக சமர்ப்பித்தல் எனினும் அதற்கு முரணாக இந்த திருத்த வேலைகளுக்காக இசைக் குழுத் தலைவரின் கோரிக்கை கட்டுப்பாட்டாளர் (இசை) இன் பரிந்துரையின்றி நேரடியாக பணிப்பாளர் (இசை) மூலம் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

ஒலிப்பதிவுக் கூட இலக்கம் 06 இல் காணப்பட்ட பியானோவை திருத்துவதற்காக ரூபா 0.46 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் பியானோக்களில் அடையாள இலக்கம் ஒன்று காணப்படவில்லை எனவும் திருத்த வேலைக்கு முன்னர் மற்றும் பியானோக்களின் உள்ளக மாற்றங்கள் தொடர்பாக ஏதும் சொல்ல முடியாது எனவும் 2021 ஆகஸ்ட் 09 திகதி இசைக்குழு தலைவரினால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்கு கூற்றொன்று வழங்கியிருந்த போதிலும் அவரினால் உரிய முறையில் திருத்த வேலை மேற்கொள்ளப்பட்டது என கொடுப்பனவு உறுதிச் சீட்டுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தொடர்புடைய ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஒலிப்பதிவுக் கூட இலக்கம் 10 இல் 02 பியானோக்கள் திருத்த வேலைக்காக வெளியே எடுத்து செல்லப்பட்டு 2021 மே 21 திகதி கூட்டுத்தாபன வளாகத்திற்கு எடுத்து வருவதாக இசைக்குழுத் தலைவரினால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 ஆகஸ்ட் 16 திகதி வரை கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டாளர் (இசை) இனால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்த எழுத்துமூல கூற்றின் படி பியானோக்களின் பழமைத்துவ பெறுமதி மற்றும் நம்பிக்கைத் தன்மையை பாதுகாத்துக் கொள்வதற்காக பியானோ திருத்த வேலையின் போது அந்த அலுவல்கள் கூட்டுத்தாபன வளவிலே மேற்கொள்ளல், இதற்கு முன்னர் கடைபிடிக்கப்பட்ட நடைமுறை எனினும் இந்த 03 பியானோக்கள் தலைவரின் நேரடி தலையீட்டின் மீது நிறுவனத்திற்கு வெளியே எடுத்து சென்று திருத்த வேலைகள் மேற்கொண்டிருந்தது. அதன்படி பழமைத் தன்மை மற்றும் பாரிய பெறுமதியை கொண்டிருந்த இந்த பியானோவின் திருத்த வேலை உரிய நடைமுறையின் படி அவற்றின் பாதுகாப்பு உறுதிப்படுத்தும் விதத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த பியானோ பொருட் பதிவேட்டில் பதிவு செய்யும் போது இனங்காண்பதற்கு விஷேட இலக்கம் மற்றும் அடையாளம் போடப்பட்டிருக்காத காரணத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு வெளியே எடுத்துச் செல்லப்பட்ட 03 பியானோக்கள் சரியாக திருப்பிப் பெறப்பட்டனவா என உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் ஏதும் கூட்டுத்தாபனத்தில் காணப்படவில்லை.

- அரச நிறுவனங்களின் வேலைகள் வழங்கள்கள் சேவைக்காக அரச பெறுகை வழிகாட்டல் கோவை கடைபிடிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் சுவாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பினால் 2021 திசெம்பர் 31 திகதி "ஆசிய நட்சத்திர கம்பளம்" இசை நிகழ்ச்சித் திட்டத்தின் போட்டி நிகழ்ச்சி முகாமைத்துவ அலுவல்களுக்காக பெறுகை செயற்பாடுகளுக்கு புறம்பாக

மதிப்பீட்டு பெறுமதி ரூபா 11 மில்லியன் தொகைக்காக ஒரு வழங்குனரை தெரிவு செய்திருந்ததுடன் அதன் மூலம் பெறுகை குறிக்கோள் நிறைவேறும் படி குறைந்த கிரயத்தில் உச்ச பொருளாதார நலன்கள் பெறக் கூடிய, தகைமையுடைய அக்கறையுடைய தரப்பினருக்கு பெறுகையில் பங்குபற்றுவதற்காக நியாயமான மற்றும் உச்சமட்ட சந்தர்ப்பம் வழங்கக் கூடியவாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் உளமை தொடர்பாக தகவல்கள் ஏதும் இணையதள பரிசோதனையில் வெளிப்படுத்தப்படவில்லை.

- 2021 ஆண்டில் பதுளை பிராந்தி கணக்கு அலுவலகம் மற்றும் பிரதி தபால் அதிபர் அலுவலகத்தின் ரூபா 4.92 மில்லியனுக்கான 06 பெறுகை செயற்பாடுகள், அனைத்து பெறுகை மற்றும் பரிசோதனை அலுவல்கள் பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் தபால் திணைக்களத்தினால் குறிப்பிட்ட கருமம் உரிய முறையில் நிறைவேற்றப்பட்டிருந்தத என உறுதிப்படுத்தியிருக்காததுடன், கொடுப்பனவின் மூலம் குறிப்பிட்ட தொகையொன்று தடுத்து வைத்திருக்கவில்லை. அதே போல் அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.10 (ஆ) இன் பிரகாரம் ரூபா 6.92 மில்லியனுக்கான 07 பெறுகை செயற்பாடுகளுக்காக செயலாற்றுகை பிணை முறி பெற்றிருக்கவில்லை.

- பெறுமதி கூட்டிய வரியுடன் ரூபா 47.52 மில்லியனில் 50 தபால் முத்திரையிடல் இயந்திரங்கள் கொள்வனவு செய்யும் போது அரச பெறுகை வழிகாட்டலின் 2.14 இற்கு முரணாக தபால் திணைக்களத்தினால் விலை ஒப்பீட்டு முறை கடைபிடிக்கப்பட்டிருந்தது. அதே போல் தபால் அலுவலகங்களில் பயன்படுத்துவதற்காக ரூபா 1.69 மில்லியன் பெறுமதியான 45 டொட் மெட்ரிக்ஸ் ப்ரின்டர்ஸ் கொள்வனவு செய்யும் போது 2006 இன் பெறுகை வழிகாட்டல் கோவையின் இலக்கம் 2.11.1(இ), 2.12, 5.3.1(ஈ), 7.4.1 மற்றும் 8.8.1(அ) இன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

- பத்திரிகை சபை சட்டத்தின் 30 ஆவது பிரிவின் பிரகாரம் பதிவு செய்யப்படாமல் சந்தைக்கு விநியோகிக்கும் பத்திரிகைகள் தொடர்பாக தேவையான விதிகள் மற்றும் கட்டளைகள் ஆக்குதல் இலங்கை பத்திரிகை சபையின் பணிப்பொறுப்பொன்றாக காணப்பட்டது. மீளாய்வாண்டு இறுதியளவிலும் குறிப்பிட்ட விதிகள் மற்றும் கட்டளைகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

செயல்நடவடிக்கை திட்டத்தின் படி செயற்படாமை

வெகுசன ஊடக அமைச்சின் 2021 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தப்பட்டுள்ள செய்தி ஒலிபரப்பு இணையதளங்களை பதிவு செய்தல் மற்றும் பதிவுகளை புதுப்பிப்பதற்காக நிகழ்வு நிலை முறைமை ஒன்று தயாரித்தல், தொலைக்காட்சி மற்றும் வானொலி ஒலிபரப்பு அனுமதிப்பத்திரம் வழங்கும் பொறிமுறை ஒன்றினை நெறிப்படுத்துதல் மற்றும் இலங்கை தொலைக்காட்சி சட்டத்தை திருத்துதல் ஆகிய செயற்பாடுகள் 2021 ஆண்டு இறுதியிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

வருமானத்தை இழத்தல்

வெகுசன ஊடக அமைச்சினால் பிராந்திய தொலைக்காட்சி, வானொலி, (Satellite TV), Internet Protocol Television (IPTV), Cable TV மற்றும் Mobile TV ஆகிய முறையில் ஒலிபரப்புச் செய்யும் நிறுவனங்களில் இருந்து வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரங்களுக்காக குறிப்பிட்ட காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணம் அனுமதிப் பத்திரதாரர்களுக்கு அறிவிக்கப்படும் என நிபந்தனை ஒன்று அனுமதிப் பத்திரங்களில் உட்படுத்தப்பட்டிருந்த போதிலும் அமைச்சினால் அனுமதிப் பத்திரம் வழங்கும் போது 49 நிறுவனங்களில் இருந்து அனுமதிப் பத்திரக் கட்டணம் அறவீடு செய்வதற்காக கணக்காய்வுத் திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதே போல் தொலைக்காட்சி மற்றும் வானொலி ஒலிபரப்பு அனுமதிப் பத்திரம் வழங்கும் போது இது வரை வழங்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரத்துக்காக அனுமதிப்பத்திரக் கட்டணம் ஏதும் அறவிட்டிருக்காததுடன் வருடாந்தம் அல்லது காலரீதியாக அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்கும் முறையான நடைமுறை ஒன்று அமைச்சினால் அறிமுகப்படுத்தி இருக்கவில்லை. அதன்படி அனுமதிப் பத்திரக் கட்டணம் மற்றும் அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்கும் கட்டணம் என பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த பாரிய வருமானம் ஒன்றினை அரசு இழந்துள்ளது.

தேசிய அபிவிருத்தி ஊடக நிலையம் ஒன்று நிறுவுதல்

பொது மக்களின் கருத்துக்கள் மற்றும் பங்களிப்பின் மூலம் அரச கட்டமைப்பில் மூலோபாய தகவல்கள் ஓடிச் செல்லக் கூடியவாறு அமப/**16/1675/702/059** இலக்க மற்றும் **2016** ஆகஸ்ட் **31** திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி தேசிய ஊடக நிலையம் ஒன்று நிறுவப்பட்டிருந்ததுடன் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் நிறைவேற்றப்படாமையால் **2019** திசெம்பர் **05** திகதிய அமப/**19/3332/203/002** இலக்கங் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அந்த நிலையம் மூடப்பட்டது. அரசின் பத்து வகையான அரச கொள்கைகள் மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்களின் முன்னேற்றத்தை சரியாக பொது மக்களுக்கு தொடர்பாடல் செய்யும் குறிக்கோளுடன் மேற்கூறிய தேசிய மத்திய நிலையம் 2021 ஜனவரி 04 திகதி நடைபெற்ற அமைச்சரவை தீர்மானத்தின் படி புதிதாக தேசிய அபிவிருத்திக்கு ஊடக நிலையம் ஒன்று பெயரிடப்பட்டு நிறுவப்பட்டிருந்தது. முன்னர் காணப்பட்ட தேசிய ஊடக நிலையத்தை மூடும் போது பாதுகாப்பு அமைச்சுக்கு உரித்தாக்கப்பட்ட தற்போது பயன்படுத்தப்படாமல் காணப்படும் அசையா மற்றும் அசையும் ஆதனங்களை இந்த புதிய அலகுக்கு உரித்தாக்குவதற்காக நடவடிக்கை எடுக்காமல் அலுவலக உபகரணங்கள் கொள்வனவுக்காக ரூபா 3.511 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதே போல் அங்கு கடமையாற்றிய ஊழியர்களில் கணிசமான எண்ணிக்கையினர் அரச செய்தித் திணைக்களத்தில் இணைக்கப்பட்டிருந்தமையால் அந்த பதவியணி மூலம் மேவகை செய்ய முடியாத பதவிகளுக்காக மாத்திரம் புதிதாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் 2021 பெப்ரவரி 17 திகதி முதல் 2022 ஏப்ரல் 08 திகதி வரை இடையிடையே 44 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இந்த பதவியணியினரின் தினவரவுப் பதிவு உரிய முறையில் பேணப்பட்டு வந்திருக்காததுடன், நிலையத்தின் பணிப்பாளரின் எழுத்துமூல பரிந்துரையின் படி அந்த காலப்பகுதியில் கடமையாற்றிய உத்தியோகத்தர்களுக்கு ரூபா 18.638 மில்லியன் தொகை கொடுப்பனவு

அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்தது. அந்தக் கொடுப்பனவு உறுதிச் சீட்டுகளிலும் உத்தியோகத்தர்கள் கையொப்பமிடப்பட்டிருக்காததுடன் அந்த பணம் உத்தியோகத்தருக்கு அனுப்பப்பட்டதா என உறுதிப்படுத்தப்படவில்லை.

மனிதவள முகாமைத்துவ பலவீனங்கள்

- சுவாதீன தொலைக்காட்சி வலையமைப்பு தொடர்ந்தும் நட்டமடையும் நிலைமையில் மற்றும் தொழிற்படு மூலதன சிக்கல்களுக்கு முகங்கொடுத்துள்ள நிலைமையில் பதவியணி முகாமைத்துவம் தொடர்பாக கூடிய கவனம் செலுத்த வேண்டியிருந்த போதிலும் ஊடக வலையமைப்பு நிதியாண்டில் ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள் இருவரும் நாளாந்த அடிப்படையில் ஊழியர்கள் 16 பேரும் சேர்க்கப்பட்டிருந்ததுடன், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பதவிகள் 67 மிகைப் பதவியணியும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உட்படுத்தப்பட்டிருக்காத பதவிகளில் உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட முறையில் என்ற அடிப்படையில் 113 ஊழியர்களும் சேர்க்கப்பட்டிருந்தனர்.

- மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு தபால் திணைக்களத்தில் 2,164 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், சிரேஷ்ட மட்ட வெற்றிடங்கள் 62 உம் அதில் அடங்குகின்றது. அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக மீளாண்வாண்டின் போதும் முடியாமல் இருந்தது.

- எசோசியேடட் நியூஸ் பேபர் கம்பனிக்காக 2017 ஜுன் 06 திகதி தயாரிக்கப்பட்டிருந்த பதவியணிக்காக 2022 மே 23 திகதி வரை பணிப்பாளர் சபையின் அங்கீரத்தை பெற்றிருக்காததுடன், அந்த பதவியணியின் படி பொது மற்றும் ஆசிரியர்கள் திணைக்களத்திற்காக பதவியணி எண்ணிக்கை முறையே 658 மற்றும் 327 தொகை காணப்பட்டது. அவ்வாறாயினும் பொது மற்றும் பத்திரிகை ஆசிரியர் திணைக்களத்தின் உள்ளவாறான பதவியணி முறையே 875 மற்றும் 423 தொகையாக காணப்பட்டமையால் மிகைப் பதவியணி 313 ஆகும். மேலும் 2021 ஆண்டு இறுதியளவில் 407 ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்ததுடன் பதியணியின் கிரயம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் வருமானத்தில் சதவீதமாக முறையே 52 சதவீதம் 62 சதவீதமாக காணப்பட்டது.

அறவிட வேண்டிய பணத்தை அறவீடு செய்யாமை

- 2009 இற்கும் 2015 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சேவையில் இருந்து ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களிடம் இருந்து கூட்டுத்தாபனத்துக்கு பெற வேண்டிய ரூபா 2.758 மில்லியன் தொகையினை அறவீடு செய்வதற்காக கணக்காய்வுத் திகதியாகிய 2022 ஆகஸ்ட் 16 திகதி அளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டு மீண்டும் கூட்டுத்தாபனத்தின் சேவைக்கு சேர்க்கப்பட்ட பெண் உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 1.90 மில்லியன் தொகை மற்றும் 2021 ஆண்டில் ஓய்வுபெற்ற பெண் உத்தியோகத்தர் ஒருவரிடம் இருந்து அறவிடப்பட வேண்டியிருந் ரூபா 0.119 மில்லியன் தொகையும் இந்த கிடைக்கப்பட வேண்டிய பணத்தில் உட்படுத்தப்பட்டிருந்தது.

- 2021 ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் வாடிக்கையாளர் கடன்பட்டோர் மீதி ரூபா 377.27 மில்லியன் தொகை காணப்பட்டதுடன் மொத்த கடன்பட்டோர் மீதியில் ரூபா 38.96 மில்லியன் தொகை எனப்படும் 10 சதவீதத்துக்காக மாத்திரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதற்காக மீளாய்வாண்டு இறுதியளவில் சட்ட வரைஞர் கட்டணமாக ரூபா 1.50 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. காலவிதிப்பு உரிமை சட்டத்தின் படி 06 வருடங்களை மிகைக்க முன்னர் கடன்பட்டோர் மீதிகளை அறவீடு செய்வதற்காக சட்டநடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டளவில் 05 வருடங்களை மிகைத்துள்ள கடன்பட்டோர் மீதி ரூபா 100.13 மில்லியன் தொகையில் ரூபா 12.08 மில்லியன் தொகைக்கு மாத்திரம் சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டு இருந்தது. அதே போல் மொத்த கடன்பட்டோர் மீதியில் ரூபா 152.17 மில்லியன் தொகை எனப்படும் 40 சதவீதமாகிய 05 மில்லியனை விட கூடிய பெறுமதியுடைய 08 அரச நிறுவனங்கள் உட்பட 15 கடன்பட்டோர்கள் அடங்கியிருந்தனர். அதில் அடங்கியிருந்த இலங்கை சேமிப்பு வங்கியுடன் அணுகிய முறையான உடன்படிக்கை ஒன்று காணப்படாமையால் வங்கியில் இருந்து கிடைக்க வேண்டியிருந்த ரூபா 10 மில்லியன் தொகையினை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும் அறவீடு செய்தல் நிச்சயமற்ற நிலைமையில் காணப்பட்டது.

- மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு வரையறுக்கப்பட்ட சுவாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பில் ஒரு வருடத்தை மிகைத்த கடன்பட்டோர் மீதி ரூபா 371.58 தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் 2.53 மில்லியன் தொகைக்காக மாத்திரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதே போல் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 127.24 மில்லியன் தொகைக்கான வாடிக்கையாளர் முற்பண மீதியுள் அடங்கியுள்ள 10 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 41.47 மில்லியன் தொகையினை தீர்த்துக் கொள்வதற்காக மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

- தபால் திணைக்களத்தில் 2021 ஆண்டிறுதியில் உள்ளவாறு ஒரு வருடத்தை விட மிகையான காலம் முதல் காணப்படும் நிலுவை வருமான மீதி ரூபா 101.39 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன் அந்த மீதியை மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்ய முடியாமல் இருந்தது.

- அரச நிதிப் பணிப்பாளரின் 2021 செப்தெம்பர் 21 திகதிய PED/RED/WO/2021/30 இலக்கங் கொண்ட கடிதத்தின் பிரகாரம் 2009 ஆண்டின் மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்குரிய ரூபா 81.02 மில்லியன் தொகைக்கான நிலுவை வருமான மீதியை தொடர் நடவடிக்கை எடுத்து அறவீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் அதில் பணம் ஏதும் அரச அச்சு திணைக்களத்தினால் 2021 ஆண்டின் போது அறவீடு செய்திருக்கவில்லை. அதே போல் 2010 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரையான காலப் பகுதிக்கு உரிய ரூபா 183.40 மில்லியன் தொகை நிலுவை வருமான மீதியில் 14 சதவீதமாகிய ரூபா 25.18 மில்லியன் தொகை மாத்திரம்

மீளாய்வாண்டில் அறவீடு செய்யப்பட்டிருந்தது.

செயற்பாட்டு விளைவுகள்

- இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் மீளாய்வாண்டு மற்றும் கடந்த 05 ஆண்டுகளின் நிதி விளைவுகள் தொடர்பாக கவனம் செலுத்திய போது 2017 ஆண்டில் காணப்பட்ட நட்டம் 2018 ஆண்டில் ரூபா 188.8 மில்லியனுக்கான இலாபம் ஒன்றாக மாற்றப்பட்ட போதிலும் 2019 ஆண்டளவில் அது ரூபா 501.16 மில்லியன் தொகைக்கான நட்டம் ஒன்றுவரை அதிகரித்திருந்தது. சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2021 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் வரியின் பின்னரான நட்டம் ரூபா 227.34 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் வரியின் பின்னரான நட்டம் ரூபா 234.3 மில்லியன் தொகையாக காணப்பட்டமையால் செயற்பாட்டு விளைவுகளில் ரூபா 6.96 மில்லியன் தொகையினால் நட்டம் குறைவடைதல் ஒன்று அவதானிக்கப்பட்ட போதிலும் மீளாய்வாண்டிற்கான ஊழியர் சம்பளம் செலுத்துவதற்காக அரசினால் வழங்கப்பட்டிருந்த மீண்டுவரும் மானியம் ரூபா 362 மில்லியனில் ரூபா 164 மில்லியன் தொகை இந்த நட்டம் குறைவடைவதற்கு காரணமாக இருந்தது. அதே போல் கூட்டுத்தாபனத்தின் தொழிற்படு மூலதன நிலைமை 2020 ஆண்டில் ரூபா 69.31 மில்லியனாக காணப்பட்டதுன் 2021 ஆண்டில் அது 254.31 மில்லியனுக்கான மறை தொழிற்படு மூலதன நிலைமை வரை வீழ்ச்சியடைந்திருந்தது. 2020 ஆண்டின் போது ரூபா 124.71 மில்லியன் தொகையாக காணப்பட்ட வங்கி மீதி மீளாய்வாண்டு இறுதியளவில் ரூபா 53.57 மில்லியனிற்கான வங்கி மேலதிக பற்று மீதியொன்றினை காட்டுதல் மற்றும் ஏனைய நிதிப் பொறுப்புக்கள் ரூபா 146.72 மில்லியன் தொகையினால் உயர்வடைதல் மறை தொழிற்படு மூலதன நிலைமை ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகியிருந்தது. 2020 ஆண்டின் போது 4.9 தொகையாக காணப்பட்ட கடன் மூலதன விகிதாசாரம் 2021 ஆண்டில் 4.3 தொகை குறைதேர்வு நிலைமையை அடைந்திருந்தது. இவ்வாறு கூட்டுத்தாபனம் தொடர்ச்சியாக நட்டமடைதல் தொழிற்படு மூலதனத்திற்கு மற்றும் உரிமைக்கு பாதகமான முறையில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்ததுடன், திறைசேரியின் அல்லது அரசின் வேறு ஏதும் நிதி உதவிகள் இன்றி கூட்டுத்தாபனத்தை நடாத்திச் செல்லல் நிச்சயமற்ற தன்மை ஒன்று காணப்பட்டது.

- 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 7(1) பந்தியின் படி வருமானக் கணக்கில் முடிவு மிகையில் இருந்து அந்தக் கணக்கின் முடிவு பற்றாக்குறை 5 வருட காலவறையுள் அல்லது நிதியமைச்சரினால் நிச்சயிக்கப்படும் ஏதேனும் காலப்பகுதியுள் தீர்ப்பதற்கு போதியளவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை நடாத்திச் செல்லுதல் அந்த கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையின் கடமையாக இருக்க வேண்டிய போதிலும் கடந்த மூன்று வருட காலப்பகுதியுள் நிதிக் கூற்றுக்களை பகுப்பாய்வு செய்த போது இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் அந்த எதிர்பார்த்த நிலைமையை நெருங்கியிருக்கவில்லை. அதே போல், கூட்டுத்தாபனத்தின் அண்மித்த ஐந்து வருடங்களின் தேறிய நிதி விளைவுகளின் கூட்டுத்தொகை ரூபா 1,345.54 மில்லியனிற்கான தேறிய நட்டம் ஒன்று காணப்பட்டது.

- வரையறுக்கப்பட்ட சுவாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் உரிமை மூலதனம் 2015 ஆண்டில் ரூபா 3,198.5 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், 2021 ஆண்டு வரை தொடர்ச்சியாக குறைவடைந்திருந்தது. 2016 ஆண்டில் கம்பனியின் நட்டம் ரூபா 107.2 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டில் சுவாதீன தொலைக்காட்சி சேவையின் நட்டம் ரூபா 238.13 மில்லியன் தொகையும் ஐடீஎன் எப்எம் இன் நட்டம் ரூபா 41.33 மில்லியன் தொகையும் வசந்தம் எப்எம் இன் நட்டம் ரூபா 10.46 மில்லியன் தொகையும் மற்றும் வசந்தம் தொலைக்காட்சிக்கு ரூபா 46.34 மில்லியன் மானியம் கிடைத்த பின்னரும் நட்டம் ரூபா 26.06 மில்லியன் தொகையும் ஆக காணப்பட்டது. அதன்படி மீளாய்வாண்டின் கம்பனியின் மொத்த நட்டம் ரூபா 315.97 மில்லியன் தொகையாக காணப்பட்டது.

2020 ஒலிம்பிக் விளையாட்டு விழாவிற்காக ஊடக அணவல்

2020 ஒலிம்பிக் விலையாட்டு விழாவின் உத்தியோகபூர்வ ஊடக ஒலிபரப்பின் ஊடக அணவலுக்காக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர் நான்கு பேர் அடங்கிய குழு ஒன்று 2021 ஜுன் 19 முதல் 2021 ஆகஸ்ட் 10 திகதி 22 நாட்கள் ஜப்பானுக்கு போயிருந்தார்கள். இந்த உத்தியோகத்தர்களின் தங்குமிட வசதி, போக்குவரத்து, உணவு மற்றும் இணைய வசதிகளுக்காக ரூபா 11.21 மில்லியன் தொகை தேசிய ஒலிம்பிக் குழுவுக்கு வானொலிக் காலம் வழங்குதல் எதிர் வர்த்தக உடன்படிக்கை ஒன்றின் கீழ் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்டிருந்தது. அதே போல் ஸ்ரீலங்கா எயார் வேய்ஸ் கம்பனியுடன் உத்தியோகத்தர் நால்வரின் வான் போக்குவரத்து டிக்கட்டுக்காக ரூபா 1.04 மில்லியன் தொகை பெறுமதியான வானொலி நேரம் வழங்குதல் எதிர் வர்த்தக உடன்படிக்கைக்கு கூட்டுத்தாபனம் அணுகியிருந்தது. இந்த உத்தியோகத்தர்களுக்கு ஊடக அணவலுக்காக அனுசரணை நிறுவனம் ஒன்றிலிருந்தும் கொடுப்பனவு ஒன்று வழங்கப்பட்டிருந்தமையால் கூட்டுத்தாபனம் ஒன்றினால் செலுத்தப்பட்டிருந்த ரூபா 714,560 இற்கான இடைநேர் படியினை அறவீடு செய்வதற்காக பணிப்பாளர் சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் கூட்டுத்தாபனம் தொடர்ச்சியாக நட்டம் அடையும் நிலைமையில் காணப்படும் போது இலாபம் உழைக்கக் கூடிய சந்தர்ப்பம் ஒன்றினை சரியாக முகாமைத்துவம் செய்வதற்கு இயலாமை காரணத்தினால் ஒலிம்பிக் விழாவின் ஊடக அணவலின் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு 57.20 மில்லியன் இற்கான நட்டம் ஒன்றினை பெற்றிருந்தது.

நிதிக் கட்டுப்பாடு

- சுவாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் தொழிற்படு மூலதனம் 2020 ஆண்டு ரூபா 620.76 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், 2021 ஆண்டில் அது ரூபா 399.83 மில்லியன் தொகை வரை குறைவடைந்திருந்தது. அதன் படி தொழிற்படு மூலதன முகாமைத்துவத்தில் காணப்பட்ட பலவீனத்தின் காரணமாக அன்றாட நிதித் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதில் கடினம் ஒன்றினை முகங்கொடுத்திருந்தது. நடைமுறையில் தொழிற்படு மூலதனத்தை முகாமைத்துவம் செய்யும் போது காலாண்டு அடிப்படையில் பணம் பெறுவனவு மற்றும் கொடுப்பனவுகளை

எதிர்வுகூறி மீளாய்வாண்டிற்காக பண பாதீடு ஒன்று தயாரித்து காசுப்பாய்ச்சல் திட்டமிடப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான பாதீட்டு கட்டுப்பாட்டு முறைமை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- 2021 ஆண்டில் சுவாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பினால் கொள்வனவு செய்திருந்த உள்நாட்டு 08 தொலைக்காட்சி நாடகங்கள் மூலம் ரூபா 18.35 மில்லியனுக்கான நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்ததுடன், அவற்றில் பூர்வாங்க காட்சி சபையினால் ஒலிபரப்புவதற்கு தகுதியற்றவை என பரிந்துரைக்கப்பட்டிருந்த "சத் வர்சா" தொலைக்காட்சி நாடகம் அதன் தயாரிப்பாளரின் மேன்முறையீட்டின் மீது நியமனம் செய்யப்பட்ட கணிப்பீட்டு சபையினால் வழங்கியிருந்த அங்கீகாரத்தின் மீது பூர்வாங்க காட்சிகள் நடாத்தி தொலைக்காட்சி நாடகத்தை ஒலிப்பரப்பி இருந்ததுடன் அதன் மூலம் ஊடக வலையமைப்புக்கு ரூபா 5.11 மில்லியன் நட்டம் ஒன்று மேற்கொள்வதற்கு நேரிட்டிருந்தது.

- 2021 ஆண்டின் வானொலி நேர விற்பனை வருமானத்தில் ரூபா 10.13 மில்லியன் பெறுமதியான சுயாதீன ரூபவாஹினி ஊடய வலையமைப்பின் ஊழியர்களுக்கு வழங்கியிருந்த நன்கொடை வவுசர் எண்ணிக்கை ஒன்று உட்பட்டிருந்தமையால் எதிர் வர்த்தக கொடுக்கல் வாங்கள் மூலம் ஒலிபரப்பு காலத்தின் வருமானம் ஒன்று கிடைத்த போதிலும் அதற்கு ஒப்பாக காசுப் பாய்ச்சல் ஒன்று ஊடக வலையமைப்பில் உட்பாய்ச்சல் ஏற்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக ஊடக வலையமைப்பின் விற்பனை வருமானம் ரூபா 257.57 மில்லியன் தொகையினால் அதிகரித்திருந்த போதிலும் தேறிய தொழிற்படு மூலதனம் ரூபா 220.93 மில்லியனினால் குறைவடைந்திருந்தது. அதன் படி விற்பனை வருமானத்திற்கு தேறிய தொழிற்படு மூலதன விகிதாசாரம் முன்னைய ஆண்டின் போது 1.85 ஆகக் காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் போது அது 3.52 வரை அதிகரித்திருந்தது.

சொத்துக்கள் குறை பயன்பாடு

- சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பினால் 2015 ஆண்டில் கொள்வனவு செய்திருந்த ரூபா 1.59 மில்லியன் பெறுமதியான Hot Swappable Power Distribution Rack இயந்திரம் கொள்வனவு செய்திருந்த நாள் முதலும் 2010 ஆண்டில் கொள்வனவு செய்திருந்த ரூபா 1.22 மில்லியன் பெறுமதியான 2010 Aros Flexus FT- 30, 30KVA UPS Systems சுமார் 03 வருட காலம் முதல் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

- வீடமைப்புத் திட்டம் ஒன்றிற்காக எசோசியேட்டர் நியூஸ் பேபர் கம்பனியினால் கொள்வனவு செய்து 2021 ஆண்டில் ரூபா 733 மில்லியன் தொகைக்கு மீள் பெறுமதி மதிப்பீடு செய்திருந்த ஹோகந்தர பகுதியில் அமைந்துள்ள 8 ஏக்கர் விசாலமான காணி ஒன்று 1985 ஆண்டு முதல் குறிப்பிட்ட கருமத்திற்காக பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

உள்ளக விசாரணைகள்

தபால் திணைக்களத்தில் மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு காணப்பட்ட ஆரம்ப விசாரணைகள் எண்ணிக்கை 2,156 தொகையாக காணப்பட்டதுடன்

மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த விசாரணைகள் 407 உம் உட்பட மொத்த விசாரணைகள் 2,563 இல் இறுதி மற்றும் அகற்றப்பட்ட எண்ணிக்கை 584 ஆகக் காணப்பட்டமையால் மீதியான விசாரணைகளின் எண்ணிக்கை 1,979 தொகையாக இருந்தது. மேலும் விசாரணை அலுவல்களின் நாளதுவரை ஆக்கப்பட்ட தரவுகள் திணைக்களத்தின் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரின் பொறுப்பில் காணப்படவில்லை.

தீர்க்கப்படாத மீதிகள்

16 மாவட்ட கணக்கு அலுவலகங்களின் 2,366 ஊழியர்கள் 08 வருடங்களை விட பழமையான தீர்க்கப்படாத தபால் அலுவலக பிணை வைப்பு மீதி ரூபா 4.71 மில்லியன் தொகை காணப்பட்டது. 07 வருடங்களை விட மிகையான காலம் முதல் திணைக்களத்தினால் செயற்படாத கணக்குகளை நாளது வரை ஆக்கியிருக்காததுடன், 1,828 உத்தியோகத்தர்களின் வட்டி இன்றிய ரூபா 2.1 மில்லியனுக்கான பிணைப் பணம் மற்றும் 30 உத்தியோகத்தர்களின் விபரங்கள் காணப்படாத ரூபா 0.67 மில்லியனுக்கான பிணைப் பண மீதிகளும் காணப்பட்டது.

இருப்பு முகாமைத்துவம்

2021 ஆண்டின் பண்டக் கணிப்பீடு அறிக்கையின் படி ரூபா 1.97 மில்லியன் தொகை பெறுமதியான 9 முத்திரை விடயங்களுக்கான மிகை ஒன்றும் ரூபா 0.18 மில்லியன் தொகை பெறுமதியான 10 முத்திரை விடயங்களுக்கான பற்றாக் குறை ஒன்றும் காணப்பட்டது. அதே போல் நாரஹேன்பிட முத்திரைப் பிரிவில் ரூபா 2.18 மில்லியன் தொகை பெறுமதியான முத்திரை இருப்பொன்றின் பற்றாக்குறை ஒன்றும் காணப்பட்டது.

செலுத்த வேண்டிய பணம் செலுத்தப்படாமை

- 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 2 (1) (அ) இன் பிரகாரம் ஏதேனும் வரி ஆண்டிற்காக வரி அறவிடக் கூடிய வருமானம் ஒன்றினை பெறும் நபர் ஒருவரினால் ஒவ்வொரு வரி மதிப்பீட்டு ஆண்டிற்குமாக வருமான வரி செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் 1982 பெப்ரவரி 01 திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த ஸெலஸினே தொலைக்காட்சி நிறுவனத்தினால் வருமான வரி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

- 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தின் பிரிவு 27 (2ஏ) இற்கு முரணாக 2019, 2020 மற்றும் 2021 ஆண்டுகளுக்காக கூட்டுத்தொகை ரூபா 108.2 மில்லியன் தொகை ஊழியர் சேமலாப நிதிய தாமதக் கட்டணத்திற்காக விதிக்கப்பட்ட மிகை விதிப்பு 2021 ஆண்டு இறுதி வரை வரையறுக்கப்பட்ட எசோசியேட்டர் நியூஸ் பேப்பர் கம்பனியினால் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

நிறுவனத்தை பதிவு செய்யாமை

1982 பெப்ரவரி 01 திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த செலஸினே தொலைக்காட்சி நிறுவனம் 2019 ஆண்டு வரை 06 சந்தர்ப்பங்களில் அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பல்வேறு அமைச்சுக்களின் கீழ் சாட்டப்பட்டிருந்ததுடன் அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அனைத்து அமைச்சுக்கள் மற்றும் அவற்றின் கீழ் காணப்படும் நிறுவனங்களின் அனைத்து வர்த்தக விளம்பரங்கள் மற்றும் விளம்பர நிகழ்ச்சித் திட்டங்கள் ஸெலசினே தொலைக்காட்சி

நிறுவனத்தின் மூலம் நிறைவேற்றிக் கொள்ளல் கட்டாயப்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், நிறுவனத்தை சட்டரீதியான அலகு ஒன்றாக பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுப்பனவுகள்

- 2020 ஒக்தோபர் 13 திகதிய 20/பலவின (064) இலக்கங் கொண்ட அமைச்சரவைத் தீர்மானம் 16.46 (i) (இ) இற்கு முரணாக பல்கலைக் கழகத்தின் விரிவுரையாளர் ஒருவரான இலங்கை பத்திரிகை சபையின் தலைவரின் ஏழு வருட விடுமுறை 2021 ஜனவரி 20 திகதி முடிவடைந்திருந்த போதிலும் அந்த நாள் முதல் 2021 ஜுன் வரையான காலப் பகுதிக்குரிய தலைவரின் சம்பளம் என ரூபா 0.4 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

- 2015 ஜுன் 17 திகதிய பீஈடீ 03/2015 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை பந்தி 2.2 இன் படி கல்வி மற்றும் திரண் மட்டத்தை தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தி நிதி அமைச்சரின் இணக்கம் மற்றும் வரிசை அமைச்சுச் செயலாளரின் பரிந்துரையுடன் சமமான தொழில் முயற்சிகளில் செலுத்தப்படும் பெறுமதியையும் கவனத்தில் எடுத்து தலைவருக்கு மற்றும் பணிப்பாளர் சபைக்கு செலுத்த வேண்டிய படி பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக 2021 ஆண்டின் போது அசோசியேடட் நிவுஸ் பேபர் கம்பனியின் தலைவருக்கு மற்றும் பணிப்பாளர் சபைக்கு ரூபா 24 மில்லியனுக்கான படி செலுத்தப்பட்டிருந்தது.

- 2020 நவம்பர் 26 திகதி வெகுசன ஊடக அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் படி 2020 திசெம்பர் 07 திகதி சுதந்திரமான ஆலோசகர் ஒருவர் அசோசியேடட் நிவுஸ்பேபர் கம்பனிக்கு சேர்க்கப்பட்டிருந்து. பின்னர் அந்த ஆலோசகர் 2020 திசெம்பர் 08 திகதி வெகுசன கூடக அமைச்சரின் பதவியணிக்கும் 2021 ஆகஸ்ட் 17 திகதி சுகாதார அமைச்சரின் பதவியணிக்கும் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்ததுடன், கம்பனிக்கு சேவைகள் ஏதும் பெற்றுக்கொள்ளாமல் ஆலோசகர் சம்பளம் என ரூபா 1.8 மில்லியன் தொகையொன்று கம்பனியினால் செலுத்தப்பட்டிருந்தது.

- தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் ஆ/8/3/706/969/21 மற்றும் 2008 திசெம்பர் 02 திகதிய கடிதத்தின் படி தற்போது ஊழியர் ஒருவர் பெறும் சம்பளத்தின் 65 சதவீதம் என்ற வகையில் படி ஒன்று 2018 ஆண்டு வரை செலுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்தது.
  அவ்வாறாயினும், ஊழியர்களின் மாதாந்த சம்பளத்தின் 65 சதவீதத்தை மிகைத்து 104 சதவீதம் முதல் 555 சதவீதம் வரை 19 பல்வேறு வகையான படிகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றது என அரச அச்சகத் திணைக்களத்தின் இரண்டு பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது. மீளாய்வாண்டின் போது அந்த இரண்டு பிரிவுகளுக்கும் செலுத்தப்பட்ட அவ்வாறான படிகளின் எண்ணிக்கை ரூபா 30.3 மில்லியன் தொகையாக காணப்பட்டது.

- 2018 ஜுலை 02 திகதிய தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம்

ESJ/T/ALLOW/03/0120 கொண்ட கடிதத்தின் மூலம் தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் பரிந்துரையையும் கவனத்தில் எடுத்து அச்சகத் திணைக்களத்தின் பதவியணிக்காக இறுதியாக படிகள் அங்கீகரிக்கப்பட்ட கடிதத்தின் நிபந்தனைகளின் கீழ் 2018 திசெம்பர் 31 திகதி வரை மாத்திரம் படி செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்து. அவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது அவ்வாறான அங்கீகாரமொன்றின்றி துண்டுகள் அடிப்படையில் படி என ரூபா 557.4 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

- 1981 திசெம்பர் 16 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி அரச அச்சகத் திணைக்களத்தின் அவசர அச்சு வேலைகள் விரைவாக மேற்கொள்வதற்கு மேலதிக நேர கொடுப்பனவிற்கு பதிலாக வேலைப் பகுதிகளின் படி கொடுப்பனவு செய்யும் முறையை ஒன்றிற்கு அங்கீகாரம் கிடைத்திருந்தது. அமைச்சரவைத் தீர்மானத்திற்கு 40 வருடங்கள் கடந்திருந்த போதிலும் துண்டு அடிப்படையில் கொடுப்பனவு செய்ய வேண்டிய வேலைப் பகுதி மற்றும் கொடுப்பனவிற்காக செலுத்த வேண்டிய விகிதத்தை சரியாக இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் ஒரே வேலைக்காக மேலதிக நேர கொடுப்பனவு மற்றும் துண்டு அடிப்படையில் கொடுப்பனவு என இரண்டு வகையிலும் செலுத்தப்பட்டிருந்தது.

- இலங்கை அச்சு நிறுவனத்திற்கு தலைவர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருக்காத போதிலும், ஆளுகைச் சபையின் பெண் அங்கத்தவர் ஒருவராகிய அரச அச்சகாதிபதிக்கு நிறுவனத்தின் தலைவர் என கடமையாற்றுவதற்காக தலைவர் படி என மீளாயவாண்டின் போது ரூபா 0.6 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

பொதுமக்கள் பிரதிநிதித்துவம்

பத்திரிகைச் சபைச் சட்டத்தின் 09 ஆம் பிரிவின் பிரகாரம் 2021 ஆண்டின் போது செய்தித்தாள்களுக்கு எதிராக பொதுமக்களினால் மற்றும் பல்வேறு நிறுவனங்களினால் கிடைத்திருந்த 33 முறைப்பாடுகள் மற்றும் 2020 ஆண்டில் தீர்க்கப்பட்டிருக்காமல் முன்கொண்டு வந்திருந்த 69 முறைப்பாடுகளும் உட்பட மொத்த முறைப்பாடுகள் எண்ணிக்கை 102 ஆக காணப்பட்டதுடன், அவற்றில் 37 முறைப்பாடுகள் மீளாய்வாண்டு இறுதியளவிலும் விசாரணை மட்டத்தில் காணப்பட்டது.

சட்ட அலுவல்கள்

- 1981 ஒக்தோபர் 14 திகதிய அதிவிஷேட வர்த்தமானி இலக்கம் 162/5 இன் கீழ் "ஊடகவியலாளர்களுக்கான ஒழுக்கவியல் கோவை" வெளியிடப்பட்டிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 திகதி அளவில் வரையறுக்கப்பட்ட எசோசியேடட் நிவுஸ் பேபர் கம்பனிக்கு எதிராக 15 அவமதிப்பு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன், அவற்றில் ஒரு அவமதிப்பு வழக்கிற்காக கம்பனிக்கு எதிராக 2007 நவம்பர் 18 திகதி வார இறுதி பத்திரிகையொன்றான "சிலுமின" இல் வெளியிடப்பட்ட கட்டுரை தொடர்பாக முறைப்பாட்டாளர் கம்பனியில் இருந்து ரூபா 500 மில்லியன் தொகை கோரியிருந்தார். இந்த வழக்கு 2010 ஆண்டு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் அழைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் எதிராளிகள் மற்றும் கம்பனி சார்ப்பில் முன்வந்திருந்த கம்பனியின் சட்டவரைஞர் குறிப்பிட்ட நீதிமன்ற அறைக்கு

சமூகமளித்திருக்கவில்லை. அதன் காரணமாக முறைப்பாட்டிற்கு சார்பாக வழக்குத் தீர்ப்புக் கொடுப்பதற்கு நீதிமன்றம் தீர்மானித்திருந்தது. கம்பனியினால் அந்த தீர்ப்புக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மற்றும் சிவல் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்ட போதும் அந்த மேன்முறையீடு இரண்டும் மறுதளிக்கப்பட்டிருந்தது.

பின்னர், 2019 ஆகஸ்ட் 30 திகதி பணிப்பாளர் சபையினால் அவர்களின் தீர்மான இலக்கம் எப் 104.19 மூலம் உயர் நீதிமன்றத்திற்கு மேல்முறையீடொன்று சமர்ப்பிப்பதற்கும் மற்றும் இந்த வழக்கிற்காக கம்பனி சார்பில் சிரேஷ்ட ஜனதிபதி சட்டவரைஞர் ஒருவரை மற்றும் அவரின் உதவியாளர்களை தெரிவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன்படி, அவர்களின் சட்டக் கட்டணமாக ரூபா 18.23 மில்லியன் தொகை 2019 ஒக்தோபர் 09 திகதி செலுத்தப்பட்டிருந்ததுடன், இந்த வழக்கிற்காக பிழையான நீதிமன்ற அறையில் தோன்றிய சட்டவரைஞரினாலேயே சட்டவரைஞர்களை தெரிவு செய்தல் மேற்கொள்ளப்பட்டு பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும், அந்த சட்டவரைஞர் 2020 ஏப்ரல் 08 திகதி ஓய்வு பெற்றிருந்ததுடன், 2020 மே 15 திகதி ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேர்க்கப்பட்டிருந்தது. இதுவரை அந்த உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை ஏதும் எடுத்திருக்காததுடன், இந்த அவமதிப்பு வழக்கும் முடிவடைந்திருக்கவில்லை.

- இலங்கை அச்சக நிறுவனத்தினால் நிறுவன ஊழியர் ஒருவரின் சேவையை முடிவுறுத்தல் எவ்வித நியாயமான மற்றும் நேர்மையான காரணங்கள் காணப்படவில்லை என தொழில் நியாய மன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டமையால் அந்த ஊழியர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 0.522 மில்லியன் தொகையொன்று செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது.

வெளியீடுகளின் பிரதிகள் இலவசமாக வழங்குதல்

வரையறுக்கப்பட்ட லங்கா எசோசியேட் நிவுஸ் பேபர் கம்பனியின் பழக்கமொன்றாக கம்பனியின் முகாமைத்துவ அங்கத்தவர்கள், சில நிறைவேற்று ஊழியர்கள், ஜனாதிபதி, பிரதமர், வெகுசன ஊடக அமைச்சர் அமைச்சுச் செயலாளர், முன்னைய முகாமைத்துவ அங்கத்தவர்கள், 20 வருடங்களை விட கூடியகால சேவையையுடைய ஊழியர்கள் மற்றும் 25 வருடகால சேவையை பூர்த்தி செய்து ஓய்வு பெற்ற ஊழியர்களுக்காக வெளியீடுகளின் பிரதிகள் தொடர்ச்சியாக இலவசமாக வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, 2021 ஆண்டின் போது பிரதான ஏழு செய்தித் தாள்களின் 1,154,607 பிரதிகள் மற்றும் 14 வாராந்த சஞ்சிகைகளின் 87,898 பிரதிகளும் இலவசமாக வழங்கப்பட்டிருந்தது. இலவசமாக வழங்கப்பட்டிருந்த அச்சுப் பிரதிகளின் கூடிய எண்ணிக்கையான பிரதிகள் தினமின பத்திரகை வழங்கப்பட்டிருந்ததுடன், அது மொத்த அச்சிடப்பட்ட பிரதிகளின் எண்ணிக்கையில் 22 சதவீதத்தை பிரதிநிதிப்படுத்தியது. இந்த இலவசப் பிரதிகளுக்காக 2021 ஆண்டின் போது ரூபா 84.38 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

சொத்துக்கள் கட்டுப்பாடு

1964 இன் 28 ஆம் இலக்க காணிகளை தனதாக்கல் சட்டத்தின் அத்தியாயம் 460 பிரிவு 44 இன் கீழ் கதிர்காமம் பிரதேச

செயலாளரினால் அச்சகத் திணைக்களத்திற்கு 2003 ஜனவரி 31 திகதி உரித்தாக்கப்பட்டிருந்த 0.105 ஹெக்டயர் காணி அரச அச்சக கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் வழங்கும் சங்கத்திற்கு குத்தகை காலம் முடிவடைந்த பின்னரும் பயன்படுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்தது. 2003 ஆண்டு உரித்தாக்கப்பட்டிருந்த இந்த காணியை பெறுமதி மதிப்பீடு செய்து அதன் பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் உட்படுத்துவதற்கு 2021 ஆண்டிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

செயற்பாட்டு பலவீனங்கள்

இலங்கை மன்றத்தினால் உயர் தேசிய டிப்லோமா, டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பாடநெறிகள் மற்றும் பல்வேறு 130 செயலமர்வுகள் 2021 ஆண்டின் போது நடாத்தப்பட்டிருந்தது. நிறுவனத்தின் 11 நிரந்தர விரிவுரையாளர்கள் காணப்படுவதுடன், அவர்களுக்கு வருடாந்த சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் என ரூபா 15.6 மில்லியன் தொகை மற்றும் வெளி விரிவுரையாளர்களுக்காக ரூபா 17.1 மில்லியன் தொகை சம்பளம் என செலுத்தப்பட்டிருந்தது. தெரிவுப் பரிசோதனையின் போது பாடநெறிகள் மற்றம் 94 செயலமர்வுகளில் 67 செயலமர்வுகளுக்காக முழுமையாக வெளி விரிவுரையாளர்கள் மாத்திரம் சேவைக்கு அழைக்கப்பட்டிருந்ததுடன், 27 பாடநெறிகளில் வெளி விரிவுரையாளர்களின் வள பங்களிப்பு 75 சதவீதத்தை மிகைத்திருந்தது. பாடநெறியை ஒருங்கிணைப்பதற்காக நிறுவனத்தின் பாடநெறி கூட்டிணைப்பு அலகொன்று காணப்பட்ட போதிலும் மன்றத்தின் நிரந்தர விரிவுரையாளர்கள் இந்த பாடநெறிகளில் கூட்டிணைப்பு அலுவல்களை மேற்கொண்டிருந்தது.

சுற்றாடல் பிரிவு

கணக்காய்வு அவதானிப்புக்கள்

- வருமானம் பெறுவனவுகள்
- நிதியற்ற சொத்துக்கள்
- பொறுப்புக்களும் கடப்பாடுகளும்
- தேசிய சுற்றாடல் செயல்நடவடிக்கைத் திட்டம்
- செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் நிறைவேற்றப்படாமை
- தேசிய சுற்றாடல் அதிகாரச் சபை
- குறிக்கோள்களுக்கு முரணான செலவுகள்
- சொத்துக்களின் குறைந்த பயன்பாடு
- செயற்திட்ட மானியங்களின் குறைந்த பயன்பாடு
- போகல கிரபயிட் கம்பனி
- கஹடகஹ கிரபைட் கம்பனி
- அனுமதிப்பத்திரம் வழங்குதலும் நீடித்தலும்
- கரஸ்னாகல காரீய சுரங்கத்தின் அகழ்தல்கள்
- தேசிய கனியப் பொருள் கொள்கையின் கீழ் கனிய பொருளுக்காக பெறுமதியினைச் சேர்த்தல்
- அரசிறை வருமானம்
- அகழ்தல்களின் பின்னர் காணியை புனரமைத்தல்
- வெளிநாட்டு உரிமையுள்ள கம்பனிகளுக்கு இலங்கை முதலீட்டுச் சபையில் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளல்
- மனம்பிட்டி மணல் செயற்திட்டம்
- கந்தளை மணல் செயற்திட்டம்
- %துார் மணல் செயற்திட்டம்
- கொடிகம்பொக்க பளிங்குகல் செயற்திட்டம்

சுற்றாடல் பிரிவு

நிலையான அபிவிருத்தி அடைந்த இலங்கை என்ற தூர நோக்கு மற்றும் நிலையான இயற்கை வளங்களை முகாமைத்துவம் செய்வதன் மூலம் சுற்றாடல் முகாமைத்துவத்திற்காக தலைமைத்துவத்தை வழங்குதல் சுற்றாடல் அமைச்சின் செயற்பணியாகும். அச்செயற்பணியை நிறைவேற்றுவதற்காக சுற்றாடல் அமைச்சும் அதன் கீழுள்ள 04 நியதிச்சட்ட சபைகள்.∴ நிறுவனங்களான மத்திய சுற்றாடல் அதிகார சபை, புவிச்சத்திரவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகம், GSMB தொழில்நுட்ப சேவை கம்பனி, இலங்கை வானி லை நிதிய தனியார் கம்பனி ஆகிய நிறுவனங்களினால் பின்வரும் செயற்பாடுகளும் கடமைகளும் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது.

- நிலையான அபிவிருத்தி கொள்கையை தயாரித்து பயன்படுத்தும் வகையில் தரப்பினர்களின் பங்குபற்றலுடன் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் துறையில் உள்ள சிக்கல்களை இனங்காணலும் மீளாய்வு செய்தலும்.

- சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாப்பது சம்பந்தமான கொள்கைகளைத் தயாரிப்பதற்கு உரிய தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்துதல் மற்றும் அமுல்ப்படுத்துவதனை உறுதிப்படுத்துதல்.

- சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள்களுக்கு இணக்கமான கொள்கைகளை அமுல்ப்படுத்துவதற்கு முடியுமான வகையில் தந்திரோபாயங்களையும் செயல்நடவடிக்கைத் திட்டங்களையும் தயாரித்தல், மற்றும் முன்னோடி செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துதல்.

- சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள்களுக்குரிய கொள்கைகளை மறுசீரமைத்தல் மற்றும் நிலையான சுற்றாடல் கருது கோள்களைப் போல பிரதான சுற்றாடல் நடைமுறைகள் தொடர்பாக தேசிய மட்டத்தில் மக்களுக்கு தெரியப்படுத்துதல்.

- இலங்கையினால் கையொப்பமிடப்பட்ட பல்தரப்பு சுற்றாடல் இணக்கப்பாட்டிற்கு இணங்க இலங்கையினால் நிறைவேற்றப்பட வேண்டிய சர்வதேச கடப்பாடுகளை நிறைவேற்றுவதனை உறுதிப்படுத்துதல்.

- சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் துறை தொடர்பான தொடர் நடவடிக்கை எடுக்கும் நடைமுறைகளை தயாரித்தல் மற்றும் பின்தொடர் நடவடிக்கையின் மூலம் கிடைக்கின்ற தகவல்களின் அடிப்படையில் சுற்றாடல் முகாமைத்துவத்திற்காக பொருத்தமான வழிகாட்டிகளை ஈடுபடுத்துதல்.

- கொள்கைகளை அமுல்ப்படுத்தும் போது சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற தாக்கங்கள் தொடர்பாக ஆராய்ச்சிகளை நடாத்துதல், அத்தகவல்களை பகுப்பாய்வு செய்தல், மற்றும் அத்தகவல்களை பொதுமக்கள் உள்ளடங்கலாக உரிய பிரிவுகளுக்கு அனுப்பிவைத்தல்.

- சிறந்த சுற்றாடல் முகாமைத்துவத்திற்காக அரசாங்க, அரச சார்பற்ற பிரிவுகளின்

மற்றும் பொது மக்களின் அர்ப்பணிப்புக்காக பொருத்தமான சுற்றாடலினை உருவாக்குதல்.

2021 ஆம் ஆண்டின் போது மேலே குறிப்பிட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக சுற்றாடல் அமைச்சிற்கு மொத்தமாக ரூபா 2,319 மில்லியன் தேறிய நிதி ஏற்பாடு பாராளுமன்றத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அதில் ரூபா 1,793 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதற்கிணங்க ஆண்டின் இறுதியில் ரூபா 526 மில்லியன் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் வரைபடம் 61 இல் தரப்படுகின்றது.



வரைபடம் 61 மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவு

மூலம் :- 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள்

மேலே குறிப்பிட்ட செயற்பாடுகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுவது சம்பந்தமான தெரிவுக் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முக்கியமான மற்றும் பொருண்மையான அவதானிப்புக்கள் பொழிப்பாக்கி கீழே தரப்படுகின்றன.

வருமானம் பெறுவனவுகள்

ஹயிட்ரோக்லோராப்லோரா காபன் குளிர்பதனமூட்டும் பொருளை இறக்குமதி செய்வது தொடர்பான கோட்டா அனுமதிப்பத்திரத்தினை வழங்கும் போது இறக்குமதி செய்யப்படுகின்ற ஒரு கிலோகிராம் குளிர்பதனமூட்டும் பொருளுக்கு ரூபா பத்து ஆக அமைச்சு 2021 ஆம் ஆண்டின் போது அறவீடு செய்யப்பட்டிருந்த அரசாங்க கட்டணமாகிய ரூபா 1.56 மில்லியன் வருமானம் நி.பி 83 இன் பிரகாரம் வருடாந்த வருமான மதிப்பீட்டிற்குள் இனங்காணப்படாது வெளிநாட்டு மானியத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களில் ஒரு வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

நிதியற்ற சொத்துக்கள்

அமைச்சின் நிதியற்ற சொத்துக்களில் காணிகள் மற்றும் காணிகளை மேம்படுத்துதல்களின் கீழ் மத்திய மலைநாட்டின் கண்டி, பதுளை, நுவரெலியா மாவட்டங்களில் தரிசான விவசாயக் காணிகளை புனரமைக்கும் செயற்திட்டத்தில் மீளாய்வாண்டிற்காக ரூபா 1.17 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. இது தனியார் காணிகளை புனரமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்டவை என்பதனால் அமைச்சின் காணிகள் மற்றும் காணிகளை மேம்படுத்துதல்களின் கீழ் காட்டப்படுவதன் மூலம் அமைச்சின் சொத்துக்களின் பெறுமதி பிழையாக வெளிப்படுத்தப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

பொறுப்புக்களும் கடப்பாடுகளும்

அமைச்சின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் தனிப்பட்டவர்கள், சங்கங்கள் மற்றும் அமைப்புக்களுக்காக ரூபா 15.45 மில்லியன் கடப்பாடுகளும் பொறுப்புக்களும் மற்றும் ஆறுகளை பாதுகாப்போம் தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் ரூபா 18.19 மில்லியன் கடப்பாடுகளும் பொறுப்புக்களும் மேற்கொள்ளப்பட்டிருந்தன என கணக்குகளின் பிரகாரம் அவதானிக்கப்பட்டிருந்த போதிலும் அப்பொறுப்புக்களை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

தேசிய சுற்றாடல் செயல்நடவடிக்கைத் திட்டம்

2021-2030 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய சுற்றாடல் செயல் நடவடிக்கைத் திட்டமானது மீளாய்வாண்டின் இறுதிவரை வரைபு நிலையில் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது.

செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் நிறைவேற்றப்படாமை

மீளாய்வாண்டின் இறுதிவரை சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 36.46 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தும் செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

தேசிய சுற்றாடல் அதிகாரச் சபை

1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டமானது 2021 ஆம் ஆண்டின் இறுதிவரை திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

குறிக்கோள்களுக்கு முரணான செலவுகள்

ஆறுகளைப் பாதுகாப்போம் நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள்களுக்கு முரணாக ரூபா 2.03 மில்லியன் செலவு செய்து நுடநஉவசஉை ஊயசவ வாகனத்தை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தமை, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இல்லாது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் நியமிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்ட முகாமையாளருக்கு 2021 ஏப்ரல் மாதத்திலிருந்து சம்பளங்கள் மற்றும் எரிபொருள் படியாக ஒரு மாதத்திற்கு ரூபா 170,000 வீதம் செலுத்துதல் என்ற குறைபாடு அவதானிக்கப்பட்டது.

சொத்துக்களின் குறைந்த பயன்பாடு

சுற்றாடல் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது தகவல்களைச் சேகரித்தலினைக் குறிக்கோளாகக் கொண்டு ரூபா 1.39 மில்லியன் செலவு செய்து 2020 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ட்ரோன இயந்திரமானது எதுவித செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தாமை, சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 6.27 மில்லியன் செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்ட சுற்றாடல் முன்னோடி தொப்பிகள் உரிய நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டின் இறுதி வரை ஈடுபடுத்தப்பட்டிருக்காமை, கால நிலை மாற்றங்களை தவிர்க்கும் கூட்டுமுயற்சி செயற்திட்டத்திற்காக கொள்வனவு செயள்யப்பட்ட ரூபா 12.45 மில்லியன் பெறுமதியான 55 கணணிகள் செயற்திட்ட குறிக்கோளுக்காக பயன்படுத்தப்படாமை, ஆறுகளைப் பாதுகாப்போம் தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 1.08 மில்லியன் செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்ட 60

புல்வெட்டும் இயந்திரங்களில் 55 இயந்திரங்கள் கணக்காய்வுத் திகதி வரை உரிய குறிக்கோள்களுக்காக பயன்படுத்தப்படாமை ஆகிய குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

செயற்திட்ட மானியங்களின் குறைந்த பயன்பாடு

காநிலை மாற்றங்களை தவிர்க்கும் கூட்டுமுயற்சி செயற்திட்டத்திற்காக 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்காக உலக வங்கி மானியமளித்த ரூபா 117.7 மில்லியன் பணத்தில் ரூபா 9.20 மில்லியன் பணம் செயற்திட்ட குறிக்கோள்களுக்காக ஈடுபடுத்தப்படாது மீண்டும் உலக வங்கிக்கு திருப்பி அனுப்பப்பட்டது.

போகல கிரபயிட் கம்பனி

2020 ஆம் ஆண்டின் போது திறைசேரி செயலாளருக்கும் ஒரு ஜேர்மன் கம்பனிக்குமிடையே மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் போகல கிரபைட் கம்பனியானது அரசாங்கத்திற்குச் சொந்தமான 50.01 சதவீதமான பங்கக்குளை மேற்கூறிய ஜேர்மன் கம்பனிக்கு ஒப்படைத்திருந்ததுடன் இந்த உடன்படிக்கையின் பிரகாரம் கொள்வனவு செய்த கம்பனி இலங்கையில் காரீயத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல் மற்றும் சந்தைப்படுத்துதல் தொடர்பான பிரேரணையை அரசாங்க தொழில் முயற்சிகளை மறுசீரமைத்தல் ஆணைக்குழுவிற்கு ஒப்படைப்பதற்கும் இணங்கியிருந்தது. எனினும் கம்பனியால் காரீயகத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழிலை அபிவிருத்தி செய்தலை இலங்கையில் மேற்கொள்ளாதிருந்ததுடன் கம்பனியால் அகழ்ந்து எடுக்கப்பட்ட காரீயகத்திற்கு பெறுமதி சேர்க்கப்படாது மூலப்பொருளாக மீண்டும் ஏற்றுமதி செய்து வந்தது.

கஹடகஹ கிரபைட் கம்பனி

கஹடகஹ கிரபைட் கம்பனி அகழ்தல் மேற்கொண்ட கஹடகஹ சுரங்கத்தில் பணியகத்தினால் வருடாந்தம் மற்றும் விசேட சந்தர்ப்பங்களில் மேற்கொண்ட வெளிக்கள பரிசோதனைகளின் போது அதில் காணப்பட்ட குறைபாடுகள் தொடர்பான பரிசோதனை அறிக்கைகளின் மூலம் தொடர்ச்சியாக தெரியப்படுத்தி அகழ்தல் அனுமதிப்பத்திரத்தினை வருடாந்தம் நீடித்திருந்ததுடன் உரிய கம்பனியின் மூலம் அக்குறைபாட்டினை சரிசெய்து கொள்வதற்கு அறிக்கைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.

அனுமதிப்பத்திரம் வழங்குதலும் நீடித்தலும்

- மீளாய்வாண்டில் பணியகத்தின் அகழ்தல் பொறியியலாளர்கள் மற்றும் புவி விஞ்ஞானிகளை உள்ளடக்கிய ஒரு தொழில்நுட்ப குழு மேற்கொண்ட வெளிக்கள பரிசோதனைகளின் மற்றும் குழுக் கூட்டங்களின் பின்னர் சகுரா கிரபைட் கம்பனிக்கான அகழ்தல் அனுமதிப்பத்திரம் ஒரு ஆண்டினால் மாத்திரம் நீடிப்புச் செய்வதற்கு அக்குழுவின் பணிப்பாளரினால் (சுற்றாடல் தாக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் பிராந்தியம்) சிபார்சு செய்யப்பட்டிருந்தும் உரிய அனுமதிப்பத்திரமானது 2021 இலிருந்து 2031 வரையான 10 ஆண்டுகளுக்கு நீடிப்புச் செய்வதற்கு பணியகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் இதற்காக பணியகத்தை தோற்றுவிக்கும் அதிகாரச் சட்டத்தின் மூலம் அல்லது ஏனைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் இதற்காக விசேட அதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

- மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை பிரதேச செயலகப் பிரிவில் கனிய மணலை அகழ்வதற்காக 2014 திசெம்பர் 09 ஆந் திகதியிலிருந்து 2024 திசெம்பர் 08 ஆந் திகதி வரை 10 ஆண்டுகளுக்கு 02 அகழ்தல் அனுமதிப்பத்திரங்கள் எல்கெம் ஹெவி மெடில்ஸ் (தனியார்) கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த அனுமதிப்பத்திரத்தினைப் பெற்று அகழ்தல் செய்யப்படாமையின் காரணமாக 2017 ஆம் ஆண்டின் போது இந்த 02 அனுமதிப்பத்திரங்களும் இரத்துச் செய்யப்பட்டு 2018 ஆம் ஆண்டின் போது சுற்றாடல் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அந்த அனுமதிப் பத்திரம் மீண்டும் செயற்படுத்தப்பட்டது. 2022 யூன் 15 கணக்காய்வுத் திகதி வரை எதுவித அகழ்தலும் இடம்பெற்றிருக்காததுடன் மீளாய்வாண்டில் புதிதாக பதிவு செய்த ஒரு கம்பனிக்கு இந்த 02 அனுமதிப்பத்திரங்களையும் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.
- 2017 மார்ச் 29 ஆந் திகதிய அமைப/17/530/704/009 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மஹவெலி அதிகார சபையினால் முகாமைத்துவம் செய்கின்ற ஆறுகள், மற்றும் ஆற்றுப்படுக்கைகளில் காணப்படுகின்ற கனியப் பொருட்களை அகற்றும் போது அப்பிரதேசங்களில் விரிவான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டினைச் செய்யாது மட்டுப்பாடின்றி அக்கனியப் பொருட்களை அகற்றுவதனால் சுற்றாடலுக்கு ஏற்படும் பாதகமான தாக்கங்களை குறைக்கும் முக்கியத்துவத்தையும் கவனத்தில் கொண்டு பணியகத்தினால் புளுஆடீ தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) கம்பனிக்கு மாத்திரம் அகழ்தல் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டது. பணியகத்தினால் மீளாய்வாண்டில் அக்கம்பனிக்கு மேலதிகமாக 82 தனியார் அனுமதிப்பத்திரதாரர்களுக்கு மஹவெலி அதிகார சபைக்குரிய மாதுரு ஓயாவில் மணல் அகழ்வதற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

கரஸ்னாகல காரீய சுரங்கத்தின் அகழ்தல்கள்

கரஸ்னாகல காரீய சுரங்கத்தின் அழ்தல் நடவடிக்கையானது சர்கோன் டிவலப்மன்ட் தனியார் கம்பனியால் மேற்கொள்ளப்பட்துடன் அதன் முழுமையான உரிமையானது வெளிநாட்டு தரப்பினர்களிடம் காணப்பட்டதனால் இலங்கையில் காரீயத்தை ஆய்வு செய்தல், தோண்டுதல் மற்றும் உள்நாட்டு சந்தைகளிலும் வெளிநாட்டு சந்தைகளிலும் விற்பனை செய்வதற்காக அக்கம்பனி 2012 ஆம் ஆண்டின் போது இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கை செய்து கொண்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் உரிய வேலைகள் நிறைவேற்றப்பட்டிருக்காததனால் அந்த உடன்படிக்கையின் செல்லுபடியாகும் காலம் 2018 ஆம் ஆண்டு வரை நீடிக்கப்பட்டிருந்ததுடன் அந்த உடன்படிக்கைகளின் செல்லுபடியாகும் தன்மை தொடர்பாக மேலும் பரீட்சிக்கப்படாது இந்த சுரங்கங்களுக்காக 2019 ஆகஸ்ட் 26 ஆந் திகதியிலிருந்து 2022 பெப்ரவரி 28 ஆந் திகதி வரை 02 சந்தர்ப்பங்களின் போது அகழ்தல் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. 2019-2021 காலத்தில் இந்த காரீய சுரங்கத்தில் அகழ்தல்கள் போதியளவில் இடம்பெற்றிருக்காததுடன் 2020 ஆம் ஆண்டின் போது 01 தொன் காரீயம் மாத்திரம் வெளிநாட்டிற்கு மூலப் பொருளாக ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தது.

தேசிய கனியப் பொருள் கொள்கையின் கீழ் கனிய பொருளுக்காக பெறுமதியினைச் சேர்த்தல்

- 1991 ஆம் ஆண்டில் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட தற்பொழுது பாவனையில் காணப்படுகின்ற கனியப்பொருள் கொள்கையின் பிரகாரம் காணப்படுகின்ற கனியப் பொருளை அடிப்படையாகக் கொண்டு கைத்தொழிலுக்காக பெறுமதி சேர்த்தல் செய்யப்பட வேண்டிய போதிலும் போகல கிரபைட், கஹடகஹ கிரபைட் கரஸ்னாகல மற்றும் சகுரா கிரபைட் ஆகிய 4 கம்பனிகளால் 2019 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பெறுமதி சேர்க்கப்படாது 1 கிலோகிராம் காரீயம் ரூபா 282 இற்கும் ரூபா 415 இற்கும் இடையான விலையில் 7,632,000 கிலோ கிராம்கள் ரூபா 2,708 மில்லியன் பெறுமதிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தது

- மன்னார் மாவட்டத்தில் கனிய மணல், அகழ்தல் மற்றும் பெறுமதி சேர்ப்பதற்காக முதலீட்டுச் சபைக்கும் வீ.வீ.எம் இலங்கை காரீயம் (தனியார்) கம்பனிக்குமிடையே 2012 ஆம் ஆண்டின் போது முதலீட்டு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அச்செயற்திட்டம் மேற்கொள்ளப்படாமையால் உரிய உடன்படிக்கையானது 2020 பெப்ரவரி 25 ஆந் திகதி இலங்கை முதலீட்டுச் சபையின் மூலம் இரத்துச்செய்யப்பட்டிருந்தது. இந்த உடன்படிக்கை பரீட்சிக்கப்படாது பணியகத்தினால் திருகோணமலை மூதூர் பிரதேசத்தில் கனிய மணலை அகழ்வதற்காக 2017 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையும் 2018 யூலை 12 ஆந் திகதியிலிருந்து 2028 யூலை 11 ஆந் திகதி வரை 10 ஆண்டுகளுக்கும் அதிகாரப் பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் இறுதி வரை எதுவித அகழ்தலும் இடம்பெற்றிருக்காததுடன் மீளாய்வாண்டில் புதிதாக பதிவு செய்யப்பட்ட ஒரு கம்பனிக்கு இந்த அதிகாப் பத்திரத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

- 2017 மே 22 ஆந் திகதி அமைச்சரவை மேற்கொண்ட தெரியப்படுத்தலின் பிரகாரம் கனிய வளங்கள் தொடர்பான தேசிய கொள்கை தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு 2022 யூன் 30 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

அரசிறை வருமானம்

1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனியப் பொருள் அதிகார சட்டத்தின் 26 (1) மற்றும் 44 (ஆ) பிரிவு களின் பிரகாரம் அரசாங்கத்திற்காக பணியகம் அறவிட்ட அரசிறையை திறைசேரிக்கு அனுப்பிவைக்க வேண்டிய போதிலும் 2016 இலிருந்து 2021 வரையான காலத்தில் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்படாது பணியகத்தில் நிறுத்திவைக்கப்பட்ட அரசிறையின் பெறுமதி ரூபா 3,147 மில்லியனாகும்.

அகழ்தல்களின் பின்னர் காணியை புனரமைத்தல்

1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனியப் பொருள் அதிகாரச் சட்டத்தின் 52(2) ஆம் பிரிவு மற்றும் 1997 சனவரி 10 ஆந் திகதிய 958 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் திருத்தப்பட்ட 21 (அ) ஆம் சுரங்கங்கள் மற்றும் அகழ்தல்கள் கட்டளையின் பிரகாரம் அகழ்தல்களின் பின்னர் 2

மாதங்கங்களிலிருந்து 09 ஆண்டுகள் வரையான காலத்திற்குள் காணிகளை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய போதிலும் அகழ்தல் அனுமதிப்பத்திரம் பெற்ற 1943 நபர்களினுடாக அச்செயற்பாட்டினை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மேற்கூறிய அனுமதிப்பத்திரக்காரர்களிடமிருந்து ரூபா 439 மில்லியன் பெறுமதியான வங்கிப் பிணை பணமாக்கப்பட்டிருந்தும் அப்பணத்தை நிலத்தை புனரமைப்புச் செய்யும் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தாது செலுத்த வேண்டிய மீதியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

வெளிநாட்டு உரிமையுள்ள கம்பனிகளுக்கு இலங்கை முதலீட்டுச் சபையில் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளல்

2002 ஏப்ரல் 19 ஆந் திகதிய 1232/14 ஆம் இலக்க மற்றும் 2017 நவம்பர் 17 ஆந் திகதிய 2045/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிகளில் குறிப்பிட்ட வெளிநாட்டு நாணய பணிப்புரையின் பிரகாரம் இலங்கையில் சுரங்கங்களை அகழ்தல் மேற்கொள்கின்ற ஒரு கம்பனியின் மொத்த பங்குரிமையில் வெளிநாட்டு உரிமை 40 சதவீதம் வரை இருக்க வேண்டியதுடன் இந்த எல்லையை மிகைத்து வெளிநாட்டு உரிமை காணப்படுமாகவிருந்தால் இலங்கை முதலீட்டுச் சபையின் விசேட அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். எனினும் இலங்கையில் காரீயம் அகழ்தல் மேற்கொள்ளப்படுகின்ற போகல கிரபைட் கம்பனியின் முழுப்பங்கு உரிமையில் 86.55 சதவீதம் 02 வெளிநாட்டு கம்பனிகளுக்கு உரியதாக இருந்ததுடன் இக்கம்பனிகள் இலங்கை முதலீட்டுச் சபையில் அவ்வாறு அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளவோ அல்லது அச்சபையுடன் முதலீட்டு உடன்படிக்கை மேற்கொண்டிருக்கவோ இல்லை. இது தொடர்பாக கருத்தில் கொள்ளாது இக்கம்பனிக்கு காரீயம் அகழ்வதற்காக பணியகத்தினால் 02 அகழ்தல் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

மனம்பிட்டி மணல் செயற்திட்டம்

1 கியூப்பிற்கு ரூபா 4,830 ஆகக் காணப்பட்ட மணல் விலையை ரூபா 6,450 வரை ரூபா 1,620 ஆல் அதிகரித்து அதில் ரூபா 1,000 இனை மணலை அள்ளி எடுக்கின்ற வேலையாட்களுக்குச் செலுத்துவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் அப்பணத்தில் ரூபா 600 இற்கும் ரூபா 800 இற்கும் இடைப்பட்ட பணம் மணல் குவியல் சொந்தக்காரர்களுக்கு செலுத்தப்பட்டு வந்தது. அவ்வாறே பொலன்னறுவை மாவட்டத்திற்கு வெளியேயுள்ள மாவட்டங்களில் காணப்படுகின்ற அதிக மணல் விலையைக கட்டுப்படுத்துவதற்காக பாவனையாளர் சேவை அதிகார சபையுடன் இணைந்து கட்டுப்பாட்டு விலையினை விதிப்பது தொடர்பாக கம்பனி கவனம் செலுத்தியிருக்கவில்லை.

இம்மணல் செயற்திட்டத்திற்காக 211 அகழ்தல் அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் கீழ் 211 மணல் குவியல்கள் செயற்படுத்தப்பட வேண்டிய போதிலும் 144 மணல் குவியல்கள் மாத்திரம் செயற்படும் நிலையில் காணப்பட்டன. 61 மணல் குவியல்களுக்காக மணல் குவியலாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தும் அவை செயற்படாதிருந்ததுடன் 06 மணல் குவியல்களுக்காக மணல் குவியளாலர்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

இச்செயற்திட்டத்திற்காக 2009 ஆம் ஆண்டில் ரூபா 8.88 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட லோடர் இயந்திரம் தொழில்நுட்ப கோளாறு காரணமாக 2012 ஆம் ஆண்டில் பாவனையிலிருந்து அகற்றப்பட்டது. 2019 ஆம்

ஆண்டின் போது அது மீண்டும் ரூபா 966,595 செலவு செய்து திருத்தம் செய்யப்பட்டிருந்தும் அதனை நல்ல நிலைக்கு கொண்டுவருவதற்கு முடியாதிருந்தது. இந்த இயந்திரம் செயற்திட்ட காணியில் பாதுகாப்பின்றி நிறுத்திவைக்கப்பட்டிருந்ததனால் அதன் பாகங்கள் துருப்பிடித்திருந்ததுடன் ரூபா 2.4 மில்லியன் பெறுமதியான மின்பிறப்பாக்கி இயந்திரம் எதுவித மறைப்பும் இன்றி மழை நீர் மற்றும் சூரிய வெப்பத்திற்கு உட்பட்டு உடைந்த நிலையில் காணப்பட்டது.

கந்தளை மணல் செயற்திட்டம்

இச்செயற்திட்டத்தின் கீழ் அகழ்ந்தெடுக்கப்பட்டு மணல் களஞ்சியத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட 46,306 கியூப் மணலில் 41,773 கியூப் மணல் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் மிகுதி மணல் விற்கப்படாது 10 மாதங்கள் அளவான காலம் இருந்ததனால் சிறிய அளவில் சேற்று மண் கலந்திருந்ததுடன் மிகுதி 4,533 கியூப் மணலை விற்பனை செய்வதற்காக கேள்வி கோரப்பட்டிருந்தது. இந்த இடத்தில் 1000 கியூப் மணலுக்கு குறைந்த அளவானவை மாத்திரம் காணப்படுகின்றது என கேள்விதாரரினால் தெரியப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதில் இருந்த 875 கியூப் அளவான மணல் கேள்விதாரருக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க 3,658 கியூப் மணல் பற்றாக்குறை காணப்பட்டதுடன் அந்த மணல் இருப்பின் கிரயம் ரூபா 12.1 மில்லியனாகும். மேலும் மணலை கொள்வனவு செய்த கொள்வனவாளர் சிறிய அளவில் சேற்று மண் கலந்திருந்த மணலை செயற்திட்ட நிலத்திலேயே இயந்திரத்தினைப் பயன்படுத்தி துப்பரவு செய்து 01 கியூப் ரூபா 10,000 வீதம் விற்பனை செய்தார் என்பது பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க வெளித்தரப்பினர் ரூபா 5 மில்லியனுக்கு மேற்பட்ட இலாபத்தினை உழைத்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

மூதூர் மணல் செயற்திட்டம்

மூதூர் மணல் செயற்திட்டம் இடம்பெற்ற இடத்தில் காணப்பட்ட மணல் நிர்மாண நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற கொங்கிரீட்களுக்கு பொருத்தமற்றது என்பதனால் இந்த இடத்தில் மணல் அகழ்ந்தெடுக்கப்பட்டு உரிய நிர்மாணங்களுக்காக பெற்றுக்கொள்வதற்கு பாதுகாப்பு படை தலைமை அலுவலகம் நிர்மாணிக்கும் செயற்திட்டத்தினால் நிராகரிக்கப்பட்டிருந்தது. கம்பனியால் 24 அகழ்தல் அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு இந்த இடத்தில் மணல் அகழ்ந்தெடுக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 2020 ஆகஸ்ட் 18 ஆந் திகதியிலிருந்து 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலத்தில் 1,397 கியூப் மணல் அகழ்ந்தெடுக்கப்பட்டிருந்ததுடன் உரிய காலத்தில் ரூபா 1.9 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது.

கொடிகம்பொக்க பளிங்குகல் செயற்திட்டம்

2017 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்ட வெல்லவாய கொடிகம்பொக்க பளிங்கு கல் செயற்திட்டம் மீளாய்வாண்டின் போதும் ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் அகழ்ந்தெடுக்கப்பட்ட பளிங்கு கற்களை களஞ்சியப்படுத்துவதற்கு ஒரு காணியை குத்தகைக்குப் பெற்றுக்கொள்ளல், அகழ்ந்தெடுக்கப்பட்ட பளிங்கு கற்களை நிறைபார்ப்பதற்காக ஒரு பாலம் தராசினை கொள்வனவு செய்தல் மற்றும் அதன் பாதுகாப்பிற்காக ஊழியர்களை ஈடுபடுத்துதல் உள்ளடங்கலாக வருமான மற்றும் மூலதனச் செலவுகளாக ரூபா 21.71 மில்லியன் பணம் 2017- 2021 காலப்பகுதியில் செலவு செய்யப்பட்டிருந்தது.

வன சீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு

கணக்காய்வு அவதானிப்புக்கள்

- யானை மனிதர் பிரச்சினை
- யானை மனிதர் பிரச்சினையை குறைப்பதற்காக யானை வேலிக்கு பதிலாக யானை அகழிகள் தோண்டுதல்
- முத்துராஜவெல புனித பூமி
- கருங்கற்களை உடைத்து அகற்றும் போது அறவிடப்பட்ட கட்டணம்
- சதுப்பு நில தாவர வனத்தை ஸ்தாபித்தல்
- நாற்று மேடைகளில் நாற்றுக்களை பகிர்ந்தளித்தல்
- பாதுகாக்கப்பட்ட வனத்தை சட்டத்திற்கு முரணான வகையில் கைப்பற்றுதல்
- அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தின் மனைப் பொருள் உற்பத்திச் சாலை
- மரக் களஞ்சியத்தினைப் பேணுதல்
- ரொப்கில் வேலைத்தளத்தின் மரங்களைப் பிடுங்குதல்
- தேசிய மிருகக் காட்சிசாலை திணைக்களம்
- கிராமிய விற்பனை நிலையங்களை நிர்மாணித்தல்
- பறவைகள் கொள்வனவு செய்தல்
- தேசிய இயந்திர உபகரண நிறுவனத்தினால் மேற்கொண்ட நிர்மாணங்கள்
- கோணபல பண்ணையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் மிருகங்களைப் பாதுகாக்கும் நிலையம்

வன சீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு

நிகழ்கால மற்றும் எதிர்கால பரம்பரைகளை முன்னிட்டு வன சீவராசிகள் பரம்பரைச் சொத்துக்களை பேணிப்பாதுகாப்பதனை துாரநோக்காகக் கொண்டு பங்குபற்றல் முகாமைத்துவத்தின் மூலம் வன சீவராசிகள் பரம்பரைச் சொத்துக்களை பாதுகாப்பதனை உறுதிப்படுத்துதல் என்ற செயற்பணியை நிறைவேற்றுவதற்காக வன சீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சும் வன சீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலி, மற்றும் அகழிகளை நிர்மாணித்தல் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் மீள் காடாக்கம், வனவள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு, இரண்டு திணைக்களங்கள் ஒரு நியதிச்சட்ட நிறுவனம் என்பவற்றினால் பின்வரும் கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டி இருந்தன.

- வன வளத்தைப் பாதுகாத்தல்
- வன சீவராசிகளைப் பாதுகாக்கும் பிரதேசத்தில் சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்தும் போது உரிய சுற்றாடல் முறைமையினை பாதுகாப்பதனை வலியுறுத்துவதற்காக தேவையான நடவடிக்கை எடுத்தல்
- கொல்லப்படும் அச்சுறுத்தலுக்கு முகங் கொடுக்கின்ற உயிரின வகைகளின் சர்வதேச வியாபாரம் தொடர்பான சம்பிரதாயம் மற்றும் உரிய செயற்பாடுகள்

வனசீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சிற்கு, அதன் கீழுள்ள வனசீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலி மற்றும் அகழிகளை நிர்மாணித்தல் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் மீள் காடாக்கம், வனவள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சிற்கு, மற்றும் 03 திணைக்களங்களுக்கு மேலே குறிப்பிட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 2021 ஆம் ஆண்டின் போது மொத்தமாக ரூபா 11,205.65 மில்லியன் நிதி ஏற்பாடு பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை அதில் ரூபா 8,105.44 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரம்

வரைபடம் 62 இல் தரப்படுகின்றது.



	வன சீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு	இராஜாங்க அமைச்சு	வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம்	தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம்	வன பாதுகாப்பு திணைக்களம்	மொத்தம்
நிதியேற்பாடு ரூபா. மில்லியன்	1இ787.50	128.55	4இ527.80	1இ286.80	3இ475	11இ205.65
செலவீனம் ரூபா. மில்லியன்	1இ691.43	83.78	2இ731.09	820.14	2இ779	8இ105.44
சேமிப்பு ரூபா. மில்லியன்	96.07	44.77	1இ796.71	466.66	696	3இ100.21

வரைபடம் 62 - வழங்கப்பட்டுள்ள தேறிய நிதி ஏற்பாட்டின் அளவும் உள்ளபடியான செலவுகளும்
மூலம் - 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்று

மேற்கூறிய செயற்பாடுகளையும் கடமைகளையும் நிறைவேற்றுவது சம்பந்தமான தெரிவுக் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முக்கியமான மற்றும் பொருண்மையான கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கி கீழே தரப்படுகின்றன.

யானை மனிதர் பிரச்சினை

காட்டு மிருகங்கள், தாவரங்கள் மற்றும் அவற்றின் வதிவிடங்கள் வணிக ரீதியாகவும் மற்றும் ஏனைய முறையற்ற வகையிலும் பயன்படுத்தப்படுவதன் காரணமாக இலங்கையில் யானையின் குடித்தொகைக்கும் அவற்றின் உயிர் வாழ்வுக்கும் தடையாக அமைந்திருந்தது.

அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மற்றும் சட்டவிரோதமாக இடம்பெறுகின்ற காடழிப்புக்களினால் நிலத்தைப் பயன்படுத்தும் போக்கு மாற்றம் அடைதல், பயன்படுத்தக்கூடிய சுகபோக வதிவிடங்கள் நிரம்பியிருத்தல் மற்றும் குறைவடைந்திருத்தல், யானைகளின் உணவு தட்டுப்பாட்டினால் யானைகள் கிராமத்திற்குள் வருதல், அபிவிருத்தி நடவடிக்கைகளால் யானை பாதைகள் தடைப்பட்டிருந்தமை ஆகிய காரணங்களால் யானை மனிதப் பிரச்சினை மீளாய்வாண்டின் இறுதியளவில் தீவிரமாக அதிகரித்திருந்தது. யானை மனிதர் பிரச்சினை தீவிரமடைந்ததன் காரணமாக கடந்த **05** ஆண்டுகள் காலத்தில் யானைகளின் இருப்பு மனிதர்களின் இறப்பு, உடல் ரீதியான பாதிப்பு, ஆதனங்களுக்கான பாதிப்பு என்பன அதிகரிக்கின்றமை தொடர்பான விபரம் அட்டவணை 27 இல் தரப்படுகின்றது.

	2021	2020	2019	2018	2017
காட்டு யானை மரணம்	375	327	407	319	256
மனிதர்கள் மரணம்	142*	113	122	96	87
உடல் பாதிப்பு	58*	75	145	58	77
ஆதனங்களின் பாதிப்பு	1,326*	850*	2,148*	1,423*	1,425

அட்டவணை 27- கடந்த **05** ஆண்டுகள் காலத்தில் யானை மரணம், மனிதர்கள் மரணம், உடல் பாதிப்புக்கள், ஆதன பாதிப்புக்கள் என்பன அதிகரிக்கின்றமை தொடர்பான விபரம்

* மாவட்ட செயலகங்களின் மூலம் இழப்பீடு செலுத்தப்பட்டதனால் திணைக்களத்திடம் முழுமையான தகவல்கள் இல்லை.

யானை மனிதர் பிரச்சினையை குறைப்பதற்காக யானை வேலிக்கு பதிலாக யானை அகழிகள் தோண்டுதல்

அகழிகல் தோண்டுவதற்காக தொடர்பில்லாத கட்டிட நிர்மாண விலைகிதங்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு தயாரித்ததன் காரணமாக நீர்ப்பாசன விலையுடன் ஒப்பிடும் போது ஒரு கியூபிக் மீற்றருக்கான மதிப்பீடு ரூபா 312 ஆல் அதிகரித்திருந்ததுடன் பொறியியல் மதிப்பீடு ரூபா 49.53 மில்லியனால் அதிகரித்ததன் காரணமாக 91,278.09 கியூபிக் மீற்றர்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட கிரயத்தினை விட ரூபா 28.48 மில்லியன் மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.

யானை அகழிகளின் பௌதீக பரீட்சிப்பின் போது 3000 கன மீற்றர் மண் குவிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க மண்ணை அகற்றுவதற்காக 1.5 மில்லியன் அளவில் செலவு செய்ய வேண்டியிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. மேலும் மண் முறண்பாடுகளை கவனத்தில் கொள்ளாது மண்ணை வெட்டியதன் காரணமாக மண்ணை அகற்றுவதற்கு ஒரு ஆண்டிற்கு ரூபா 25.66 மில்லியனை செலவு செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே யானை அகழியை வெட்டும் செயற்திட்டம் 2021 யூன் 03 ஆந் திகதி முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதன் பௌதீக செயல் முன்னேற்றம் 50 சதவீதமாகும்.

முத்துராஜவெல புனித பூமி

முத்துராஜவெல சுற்றாடல் முறைமையில் 1285 ஹெக்டேயர் காணி பகுதியானது 1996 இன் 947/13 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் புனித பூமியாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை அந்த புனித பூமியின் எல்லைகளை அடையாளமிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

கருங்கற்களை உடைத்து அகற்றும் போது அறவிடப்பட்ட கட்டணம்

வன பாதுகாப்பு திணைக்களம் 2009 மே 06 ஆந் திகதிய 1600/18 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டு வரை திணைக்களத்தின் முகாமைத்துவத்தின் கீழ் காணப்பட்ட காணிகளில் அமைந்துள்ள கருங்கற்களை உடைத்து அகற்றும் போது ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அறவிடப்பட்ட கட்டணம் 2020 நவம்பர் 13 ஆந் திகதிய 14/2020 ஆம் இலக்க ஒருங்கிணைந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் 50 சதவீத அளவில் குறைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க திணைக்களத்தின் வருமானம்

அதிக அளவில் வீழ்ச்சியடைந்ததனால் அது அரசாங்க வருமானமும் குறைவடைவதற்கு காரணமாக இருந்தது.

சதுப்பு நில தாவர வனத்தை ஸ்தாபித்தல்

சதுப்பு நில தாவர வனத்தை ஸ்தாபிக்கும் செயற்திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்ட வன உத்தியோகத்தர் அலுவலகம் 110 ஹெக்டேயர்களில் சதுப்பு நில தாவரத்தை மீண்டும் பயிரிடல் மற்றும் சதுப்பு நில தாவர வனத்தை பாதுகாத்தல் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் போது விடத்தல் தீவு சதுப்பு நில தாவர வனத்தில் 70,000 நாற்றுக்கள் வளர்க்கப்பட்டிருந்தும் அவற்றில் எந்த நாற்றும் உயிரான நிலையில் இருக்கவில்லை. அதற்கிணங்க புதிதாக நாற்றுக்களை வளர்த்தல் வெற்றியளித்திருக்காததனால் அதற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 13.02 மில்லியன் பணம் விளைவற்றதாக இருந்தது.

நாற்று மேடைகளில் நாற்றுக்களை பகிர்ந்தளித்தல

2019 ஆம் ஆண்டில் ESCAMP செயற்திட்ட நிதி ஏற்பாட்டின் மூலம் வளர்க்கப்பட்ட மடு மற்றும் செட்டியார் நாற்று மேடைகளிலுள்ள 62,046 நாற்றுக்களை 2021 திசெம்பர் வரை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததனால் நாற்றுக்களை பராமரிப்பதற்காக இன்னும் ரூபா 2.53 பில்லியன் தொகையான விளைவற்ற செலவினை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

பாதுகாக்கப்பட்ட வனத்தை சட்டத்திற்கு முரணான வகையில் கைப்பற்றுதல்

வன குற்றங்களை இனங்காண்பதற்கும் அவை இடம் பெறுவதனைத் தவிர்ப்பதற்கும் மற்றும் குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்காமையால் 2019 ஆம் ஆண்டிலிருந்து 2021 திசெம்பர் வரை மன்னார் மாவட்ட வன அலுவலகத்தின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற பாதுகாக்கப்பட்ட வனத்தின் 137.03 ஹெக்டயர்கள் வெளித் தரப்பினர்களால் சட்டத்திற்கு முரணான வகையில் கைப்பற்றப்பட்டிருந்தது.

அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தின் மனைப் பொருள் உற்பத்திச் சாலை

அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தின் மூன்று மனைப் பொருள் உற்பத்திச்சாலைக்கு 2021 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டளைகளின் எண்ணிக்கை 395 ஆக இருந்ததுடன் அவற்றில் 99 கட்டளைகள் அல்லது 25 சதவீதத்திற்குச் சமனானவை ஆண்டின் போது பூர்த்திசெய்யப்பட்டிருக்காததுடன் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி நடைமுறைகளை செயற்திறனாக்குவதற்காக திட்டங்களைத் தயாரிப்பதற்கு மற்றும் அதிகாரச் சட்டத்தின் மூலம் சட்டரீதியான ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதான செயற்பாடுகளுக்காக கவனம் செலுத்தப்படாது வெளித்தரப்பினர்களால் உற்பத்தி செய்யப்பட்ட அழகுசாதன பொருட்களை கொள்வனவு செய்து விற்பனை செய்வதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருந்தது.

அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தின் வருடாந்த சராசரி விற்பனையை கவனத்திற்கு எடுக்காது உற்பத்தி ஆண்டிற்குள் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 22.88 மில்லியன் பெறுமதியான மனைப்பொருள் இருப்பு அம்பாறை உற்பத்திச்சாலையில் தேவையற்றவகையில் குவித்துவைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2018 ஆம் ஆண்டிற்கு முன்னரிலிருந்து காணப்பட்டு வரும் மெருகூட்டல் பிரிவில் விற்பனை செய்யப்படாது காணப்பட்ட மனைப்பொருள் இருப்பின் பெறுமதி ரூபா 36.37 மில்லியனாக இருந்ததுடன் வேலை பூர்த்தி செய்யப்படாத

ஒன்பது பொருட்கள் தொடர்பான மனைப் பொருள் இருப்பின் பெறுமதி ரூபா 109.59 மில்லியனாகும்.

மரக் களஞ்சியத்தினைப் பேணுதல

அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்திடம் 52 களஞ்சியங்கள் காணப்பட்டதுடன் அவற்றில் முறையான முகாமைத்துவம் இல்லாததன் காரணமாக மரக்குற்றிகளும் அரிந்த மர இருப்பும் நீண்ட காலமாக உக்கிப் போய் காணப்பட்டன என்பது அவதானிக்கப்பட்டதுடன் அவற்றில் அம்பாறை மரக்களஞ்சியத்தில் மாத்திரம் 2015 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் அரசாங்க காடுகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 14,527 மரக்குற்றிகளும் 2014 ஆம் ஆண்டிலிருந்து அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட 3040 மரக்குற்றிகளும் 2010 ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான காலத்தில் ஒன்று சேர்க்கப்பட்ட அம்பாறை மரக் குற்றிகள் 616 டெசி மீற்றர்களும் 2017 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் அரிந்த மரங்கள் 124,928.75 கன டெசி மீற்றர்களும் பாதுகாப்பின்றி குவித்து வைக்கப்பட்டிருந்தன.

ரொப்கில் வேலைத்தளத்தின் மரங்களைப் பிடுங்குதல்

2018 ஆம் ஆண்டில் ரொப்கில் வேலைத்தளத்தின் யுகலிப்டஸ் வகையான 2172 மரங்களை முழுமையாக பிடுங்கும் போது இடம்பெற்றிருந்த ஒழுங்கீனங்கள் சம்பந்தமாக புலனாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தும் அதனுடன் தொடர்புபட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொள்வதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

தேசிய மிருகக் காட்சிசாலை திணைக்களம்

புதிய மிருகக் காட்சி சாலை கொள்கையின் கீழ் கவர்ச்சிப்படுத்தல் நுட்ப முறைமை மற்றும் சிறப்பியல்பினைப் பயன்படுத்தி ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டங்களுக்கு இணங்க உச்ச அளவு பாதுகாப்பின் கீழ் இருப்பிடங்களை வழங்கி பல்வேறு வகையினைக் கொண்ட சுகதேகியான மிருகக் கூட்டத்தினை காட்சிப்படுத்தல் என்ற செயற்பணியை நிறைவேற்றுவதற்காக தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றினை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் 2021 ஆம் ஆண்டிற்காக ரூபா 1,286.8 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அவற்றில் ரூபா 820.14 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க காலப்பகுதியில் பாராளுமன்றம் வழங்கியிருந்த நிதி ஏற்பாட்டில் 36 சதவீதம் அல்லது ரூபா 466.66 மில்லியன் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களத்தின் கீழ் தெஹிவளை மிருகக்காட்சிசாலை, பின்னவல யானைகள் சரணாலயம், பின்னவல மிருகக்காட்சிசாலை, ரிதிகம சபாரி பூங்கா கோனபல மிருகக்காட்சி சாலை பண்ணை என்பன நிர்வகிக்கப்படுகின்றன.

2021 ஆம் ஆண்டின் போது மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கி கீழே தரப்படுகின்றன.

கிராமிய விற்பனை நிலையங்களை நிர்மாணித்தல்

ரிதியகம சபாரி பூங்காவில் ரூபா 7.2 மில்லியன் செலவில் நிர்ணயிக்கப்பட்ட 12 கிராமிய விற்பனை நிலையங்களின் வேலைகள் 2018 மார்ச் 22 ஆந் திகதி முடிவுறுத்தப்பட்டிருந்த

போதிலும் 2022 ஏப்ரல் மாதம் வரை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

பறவைகள் கொள்வனவு செய்தல்

2020 ஆம் ஆண்டின் போது ரூபா 66 மில்லியன் செலவில் 136 வெளிநாட்டுப் பறவைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இப்பறவைகளைக் காட்சிப்படுத்துவதற்காக நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட ஹம்பாந்தோட்டை சபாரி பூங்காவில் பறவை வனத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கையை மீளாய்வாண்டின் இறுதியளவிலும் பூர்த்திசெய்யாமையின் காரணமாக 57 பறவைகள் காட்சிப்படுத்தப்படாது பூங்காவில் தனியான கூடுகளில் வைக்கப்பட்டிருந்தன.

தேசிய இயந்திர உபகரண நிறுவனத்தினால் மேற்கொண்ட நிர்மாணங்கள்

தேசிய மிருகக் காட்சி சாலைகள் திணைக்களத்தினால் தேசிய இயந்திர உபகரண நீறுவனத்துடன் மேற்கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் அந்த நிறுவனம் நடவடிக்கை எடுக்காததன் காரணமாக செயற்திட்டங்கள் தொடர்பான ஒப்பந்தங்களை முடிவுறுத்துவதற்கு (வுநசஅயெவந) பெறுகைக் குழு தீர்மானித்திருந்ததுடன் அச்செயற்திட்டங்களை மீண்டும் புதிய ஒப்பந்தக்காரருக்கு வழங்காது இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. அந்த நிர்மாணங்களுக்காக 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 69.56 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் சில செயற்திட்டங்களுக்காக தேசிய இயந்திர உபகரண நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த Mobilization advance பணத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட பணத்தை செம்மையாக்கியதன் பின்னர் ரூபா 14.36 மில்லியன் பணம் அறவிடப்பட வேண்டியிருந்தது.

கோணபல பண்ணையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் மிருகங்களைப் பாதுகாக்கும் நிலையம்

2019 ஆம் ஆண்டின் போது முடிவுறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ரூபா 20.08 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயமான கோணபல பண்ணையில் நிர்மாணிக்கப்பட்ட மிருகங்களை பாதுகாக்கும் நிலையத்தின் நிர்மாண நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையும் முடிவடையாதிருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 14.31 மில்லியன் உரிய ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு துறை

கணக்காய்வு அவதானிப்புக்கள்

- நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
- நகர அபிவிருத்தி, கழிவுகளை அகற்றுதல் மற்றும் சமூக சுகாதார அலுவல்கள் அமைச்சு
- விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நகர அபிவிருத்தி திட்டம்
- கொழும்பு திடக்கழிவு முகாமைத் திட்டம்
    - அருவக்காலு குப்பை கொள்கலன் நிர்மாண திட்டத்தின் ஏ, பி மற்றும் சி தொகுப்புகளை செயல்படுத்துதல்.
    - தேவையான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை வாங்குதல் (தொகுப்பு டி)
- நகர திட்டமிடல் திட்டம்
- இலகு ரயில் போக்குவரத்து திட்டம்
- மூலோபாய நகர அபிவிருத்தி திட்டம்
- கொழும்பு பெருநகர அபிவிருத்தி திட்டம்
- நகர அபிவிருத்தி அதிகார சபை
- வோட்டர் எட்ஜ் நிறுவனம்
- இலங்கை நில அபிவிருத்தி கூட்டுத்தாபனம்
- நகர குடியேற்ற அபிவிருத்தி அதிகாரசபை
- இலங்கை நில மீட்பு மற்றும் அபிவிருத்தி நிறுவனம்
- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை
    - மாதிரி கிராம திட்டம்
    - விரும்பிய இலக்கை எட்டாத / செயல்படுத்தப்படாத வீட்டுத் திட்டங்கள்
    - கூட்டு அபிவிருத்தி திட்டங்கள்
- கொண்டமேனியம் முகாமை அதிகார சபை
- தேசிய பௌதீக திட்டமிடல் துறை

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு துறை

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள அரச அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் சட்டப்பூர்வ சபைகள்/நிறுவனங்களினால் பின்வரும் செயல்பாடுகள் மற்றும் பணிகளைச் செய்ய வேண்டியிருந்தது.

- நகர அபிவிருத்தியை மையமாகக் கொண்ட பல்திறன் வேலைகள், வணிகங்கள் மற்றும் வருமான வழிகளை விரிவுபடுத்துதல்
- கட்டுமானத் துறையில் உள்ளூர் கட்டுமானர்களுக்கு முன்னுரிமை அளித்தல்
- கட்டுமானப் பொருட்கள் தொழில் வளர்ச்சிக்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்
- தொழிலாளர் பற்றாக்குறைக்கு முடிந்தவரை தொழில்நுட்ப தீர்வுகளை நாட தேவையான ஊக்குவிப்புகளை வழங்குதல்
- திறமையான தொழிலாளர்களை உருவாக்க கட்டுமானத் துறையில் திறன்களை வளர்ப்பதற்கு சந்தை தேவைக்கேற்ப தொழிற்கல்வியை ஒருங்கிணைத்தல்
- கட்டுமானத்திற்கான தேவையான ஆலோசனைகளை எளிதாகப் பெறுவதற்கு உள்ளூர் தொழில்முறை பொறியாளர்கள் மற்றும் உயர் தொழில்நுட்ப வல்லுநர்களின் பங்களிப்புடன் கட்டுமானத் துறையில் உள்ளூர்
- அடையாளத்தை சர்வதேச அளவில் ஒரு வகையாக மாற்றுவதற்குத் தேவையான கட்டுமானத் திட்டங்களைத் தயாரிப்பது தொடர்பாக, கட்டிடக் கலைஞர்கள் நிறுவனம், பொறியியல் நிறுவனம், பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற நிறுவனங்களுடன் எளிதாகப் பணியாற்றுவதற்கு ஒருங்கிணைப்பு இயந்திரங்களின் அறிமுகம் செய்தல்.
- துணை ஒப்பந்ததாரர்களைப் பாதுகாக்க சட்டம் இயற்றியதுடன், உள்ளூர் சிறிய மற்றும் நடுத்தர துணை ஒப்பந்தக்காரர்களைப் பாதுகாத்தல்.
- குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு குடிசைகள் மற்றும் முழு வசதியுடன் கூடிய வீட்டு வளாகங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் நகர தொழிலாளர்களின் சமூக ரீதியாக வலுப்படுத்தல்.
- கொழும்பு மற்றும் நகர்ப்புறங்களில் நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கு நவீன வசதிகளுடன் கூடிய வீட்டுத் தொகுதிகளுக்கு நீண்டகால கடன் வசதிகளை வழங்குவதை ஒருங்கிணைத்தல்.
- வெள்ளக் கட்டுப்பாடு, நகர வாகன நிறுத்துமிடம், வணிக வளாகங்கள், உடல் ஆரோக்கியம், பொழுதுபோக்கு வசதிகளை வழங்குதல்.
- பழைய அடுக்குமாடி குடியிருப்புகளை புதிய அடுக்குமாடி குடியிருப்புக்களாக மாற்றுதல்.
- நகர வீடமைப்பு திட்டங்களின் மூலம் நகர்ப்புற குடிசைவாசிகளுக்கு நவீன வீடுகள் மற்றும் சமூக வசதிகளை வழங்குதல்.
- நடுத்தர மக்களின் வீட்டுப் பிரச்சனைகளைத் தீர்க்க புதிய வீடமைப்பு திட்டம் மற்றும் கடன் வசதிகளை வழங்குதல்.
- வாடகை அடிப்படையில் தற்காலிக தங்குமிடத்தை விரும்புவோருக்கு நியாயமான வாடகை அடிப்படையில்

அடுக்குமாடி குடியிருப்பு திட்டத்தை அறிமுகப்படுத்துதல்.

- வீட்டு கட்டுமான நிறுவனங்களுக்கு மானிய விலையில் நிலம் வழங்குவதன் மூலம் புதிய வீடமைப்பு திட்டங்களுக்கு முதலீட்டாளர்களை ஊக்குவித்தல்.
- நகர வன தோட்டங்கள், நகர மற்றும் பகுதி நகர பூங்காக்கள், நீர் பூங்காக்கள் மற்றும் சாலையோர பசுமை பாதைகள் அறிமுகம்.
- நகர கழிவுகள் மற்றும் கழிவுநீரை நிர்வகிப்பதற்கான திறமையான பொறிமுறையை அறிமுகப்படுத்துதல் மற்றும் நீர் மறுசுழற்சிக்கான அமைப்பை நிறுவுதல்.
- புல உள்ளூராட்சி அமைப்புகளை ஒருங்கிணைத்து, கழிவுகளை முறையற்ற வகையில் அகற்றுவதைத் தடுக்கும் வகையில், கழிவுகளை அகற்றும் வளாகங்கள் மற்றும் சுகாதாரக் கழிவுப் பாத்திரங்களை நிறுவுதல்.
- மருத்துவமனை மற்றும் தொழிற்சாலை கழிவுகள், தொழில்நுட்ப மற்றும் மின்னணு கழிவுகளை அகற்றுவதற்கு இடமளிக்கும் சட்ட கட்டமைப்பை உருவாக்குதல்.
- கழிவுகளை பொறுப்பற்ற முறையில் அகற்றுவதைத் தடுக்க நடவடிக்கை எடுத்தல்.
- நகர அபிவிருத்தி திட்டங்களுக்கு ஏற்ப அனைத்து நகர கட்டுமானங்களையும் ஒழுங்குபடுத்துவதற்கான திட்டத்தைத் தயாரிக்கவும்.
- அனைத்து நகர கட்டுமானங்களிலும், வாகன நிறுத்துமிடங்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான அணுகல் வசதிகள் திட்டத்தின் அடிப்படை பகுதியாக கருதப்பட வேண்டும்.
- கடல் அரிப்பை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- பிளாஸ்டிக் கழிவுகளை கொட்டுவதால் கடற்கரையோரங்கள் மற்றும் கடலுக்கு அடியில் ஏற்படும் பாதிப்புகளை தடுக்க கடல் சுத்திகரிப்பு திட்டங்களை செயல்படுத்துதல்.
- வெள்ளம் இல்லாத வாழ்விடங்களை உருவாக்குதல் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு தாழ்வான இடங்களை அபிவிருத்தி செய்யும் திட்டங்களை செயல்படுத்துதல்
- இடம்பெயர்ந்தவர்களுக்கான கிராமப்புற வீட்டுத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்
- கட்டுமானத் தொழிலுக்குத் தேவையான அனுமதிகளைப் பெறுவதில் தேவையற்ற தாமதத்தைத் தவிர்க்க, அனைத்து அனுமதிகளையும் ஒரே இடத்தில் அல்லது ஆன்லைனில் பெறுவதற்கான வசதிகளை உருவாக்குதல்.
- கட்டுமானத் தொழிலுக்கான மூலப்பொருட்களை வாங்குவதற்கு தற்போதுள்ள உரிமம் வழங்கும் முறையை எளிமைப்படுத்துதல்.
- சமூகத் தலைமை மற்றும் சமூகப் பங்கேற்பு முக்கியத்துவம் வாய்ந்த ”மக்களின் முக்கிய சபைகள் மற்றும் மக்களின் முக்கிய மையங்களை” நிறுவுதல்
- எஸ்டேட் சமூகத்துடன் இணைந்து வீட்டுவசதி மற்றும் அடிப்படை உள்கட்டமைப்பு அபிவிருத்திக்கான திட்டங்களை செயல்படுத்துதல்.
- தோட்ட உரிமையாளர்களின் பங்கேற்புடன் தோட்டம் தொடர்பான குறைந்த அடுக்குமாடி வீட்டுத் திட்டங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் இந்த வீட்டுத் திட்டத்தில் முழு வசதிகளுடன் கூடிய சுகாதார நிலையங்கள், முன்பள்ளிகள் மற்றும் சமூக மண்டபங்கள் போன்ற வசதிகளை ஏற்படுத்துதல்.

- தோட்ட சமூகத்தின் பிள்ளைகளுக்கு ஆரம்பக் கல்வி மற்றும் சுகாதார வசதிகளை உறுதி செய்வதற்கான விசேட வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.

2021 ஆம் ஆண்டில், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள அரச அமைச்சு மற்றும் திணைக்களம் ஆகியவற்றிற்கு பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்ட ரூபா.40,138.01 மில்லியன் ஏற்பாடுகளில் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா.28,296.95 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. விபரங்கள் வரைபடம் 63 இல் காட்டப்பட்டுள்ளது



வரைபடம் 63 - ஒதுக்கப்பட்ட ஏற்பாட்டுத் தொகை மற்றும் உண்மையான செலவு

ஆதாரம் - 2021 ஆண்டு நிதி அறிக்கைகள்

மேலே உள்ள செயல்பாடுகள் மற்றும் பணிகளின் செயல்திறன் குறித்து நடாத்தப்பட்ட மாதிரி கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட அளவு மற்றும் குறிப்பிடத்தக்க கணக்காய்வு அவதானிப்புகள் கீழே சுருக்கக் காட்டப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

- நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, உள்கட்டமைப்பு அபிவிருத்தி இதர மூலதனச் செலவு விடயம் (123-2-7-2506) மூலம் அபிவிருத்தித் திட்டங்களுக்காக ரூபா.15,718.38 மில்லியனைச் செலவிட்டுள்ளது. எவ்வாறாயினும், சொத்துக்களை இனங்கண்டு மூலதனமாக்குவதற்கு எவ்வித கணக்கியல் முறையும் அறிமுகப்படுத்தப்படாததன் காரணமாக, செலவினங்களின் மூலம் எழும் சொத்துக்கள், கட்டுபாட்டாளர் நாயகத்தின் சொத்துக் கணக்குகளில்

சேர்க்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

நகர அபிவிருத்தி, கழிவுகளை அகற்றுதல் மற்றும் சமூக சுகாதார அலுவல்கள் அமைச்சு

நகர அபிவிருத்தி, கழிவுகளை அகற்றுதல் மற்றும் சமூக சுகாதார அலுவல்கள் அமைசினால் உள்கட்டமைப்பு அபிவிருத்தி இதர மூலதனச் செலவு விடயம் (411-2-3-2506) மூலம் அபிவிருத்தித் திட்டங்களுக்காக ரூபா.8,280.18 மில்லியன் செலவிட்டுள்ளது, ஆனால் செலவினங்களிலிருந்து எழும் சொத்துக்களை அடையாளம் காண எந்த விதமான கணக்கியல் முறையும் அறிமுகப்படுத்தப்படாததால், அந்த கட்டுபாட்டாளர் நாயகத்தின் சொத்துக் கணக்குகளில் சேர்க்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நகர அபிவிருத்தி திட்டம்

மாலபே, ஹோமாகம, கடுவெல மற்றும் அதுருகிரியவில் அமைந்துள்ள பிரதேசத்தை 05 வலயங்களாகப் பிரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன், விஞ்ஞான தொழில்நுட்ப நகர அபிவிருத்தித் திட்டத்தின் ஒரு அங்கமான உட்கட்டமைப்பு அபிவிருத்தியின் கீழ் 04 வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- கொள்முதல் வழிகாட்டுதல் கையேட்டின் 2.3.1 (ஆ) இன் படி, கொள்முதல் நிலையற்ற தன்மையினால் நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகளையும் முடித்து, திட்டத்தை சுமூகமாக செயல்படுத்த தேவையான நடவடிக்கைகளை முடித்ததை உறுதி செய்த பின்னரே ஒப்பந்தம் வழங்கப்பட வேண்டும், ஆனால் அணுகல் வீதியுடன் இணைக்கப்பட்டுள்ள இரண்டு காணிகளின் கையகப்படுத்தல் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாமல், ஹோமாகம ஹைய்லெவலிருந்து தியகம வீதி கட்டுவன வரையிலான புதிய அணுகு வீதி நிர்மாண ஒப்பந்தம் 2019 மார்ச் 11 ஆம் திகதி வேலைகள் ஆரம்பித்து 547 நாட்களில் முடிக்க திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2021 டிசம்பர் 31, வரை 05 நீட்டிப்புகள் வழங்கப்பட்ட நிலையிலும் 50 மீட்டர் தூரத்திற்கு அபிவிருத்திப் பணியை முடித்து ஹைய்லெவல் சாலையுடன் இணைக்காமல் ஒப்பந்தத்தை நிறுத்த முடிவு செய்யப்பட்டது. நிலம் கையகப்படுத்துதல் செலவு உட்பட 31 டிசம்பர் 2021 வரை இந்த அபிவிருத்திப் பணிகளுக்குச் செய்யப்பட்ட மொத்தச் செலவு ரூபா. 712.49 மில்லியன்.
- கொள்முதல் வழிகாட்டுதல் கையேட்டின் 2.3.1 இன் படி, கொள்முதல் நிலையற்ற தன்மையினால் பிடிபன தலகல 1 ஆம் கட்ட வீதி 2018 ஒக்டோபர் 26 ஆம் திகதி ரூபா. 562.87 மில்லியனுக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தமானது உரிமை கோரும் தரப்பினருக்கு இழப்பீட்டுத் தொகையை முறையாக மதிப்பிடாதமையினால் உள்ளூர்வாசிகளின் எதிர்ப்பு காரணமாக 2021 நவம்பர் 16 அன்று இரு தரப்பினரின் உடன்பாடுடன் இது நிறுத்தப்பட்டது. இருப்பினும், ஒப்பந்தம் வழங்கப்பட்டு 3½ ஆண்டுகள் கடந்துவிட்டன ஆனால் பணியைத் தொடங்குவதற்கு முன்பணமாக ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்ட ரூபா.114.08 மில்லியன் மற்றும் இடைக்காலத் தொகையான ரூபா.11.68 மில்லியன் என்பன பயனற்ற முதலீடாக மாறிவிட்டது.

கொழும்பு திடக்கழிவு முகாமைத் திட்டம்

தேசிய திடக்கழிவு மறுசுழற்சி திட்டத்தின் சுற்றுச்சூழல் விஞ்ஞானிகள் மற்றும் நகராட்சிகள் மற்றும் முகாமைத்துவம் குறித்த தேசிய கொள்கை மற்றும் அதை செயல்படுத்துவதற்கான முக்கிய முறைகள் கழிவு மறுசுழற்சி, உர உற்பத்தி மற்றும் உயிர்வாயு அலகுகளை நிறுவுதல் மற்றும் கடைசி தற்காலிக தீர்வு கழிவு கிடங்கு கட்டுவதுதான் என்பது சுட்டிக்காட்டப்பட்டது.

மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிவு ஏற்பட்டுள்ள நிலையில் கடைசி தற்காலிக தீர்வாக குப்பை கொள்கலன் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் 2017-2019 காலப்பகுதியில் இத்திட்டம் விரைந்து முடிப்பதுடன். இலங்கையில் நிலவும் கழிவு பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக "கொழும்பின் புறநகர்ப் பகுதிகளில் உருவாகும் மாநகரசபையின் திண்மக் கழிவுகளை புத்தளம் அருவாக்கலு பகுதிக்கு இடமாற்றம் செய்தல் மற்றும் அகற்றுதல்" என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு 2017 மே 16 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. இந்தத் திட்டமானது 2 பகுதிகளின் கீழ் 4 முக்கிய (பேக்கேஜ்கள்) அடிப்படையில் USD 120 மில்லியன் அதாவது ரூபா.19,127 மில்லியன் மதிப்பீட்டில் சர்வதேச கேள்விகளை அழைக்க 2017 நவம்பர் 30 அன்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அ. களனி குப்பைகளை ஏற்றும் நிலையம் மற்றும் அருவக்காலு குப்பை இறக்கும் நிலையம் ஆகியவற்றை நிர்மாணித்தல்.

ஆ. சுகாதார நிலப்பரப்பு கட்டுமானம்.

இ. களனியில் இருந்து அருவக்காலு வரை புதிய ரயில் பாதைகளை அமைத்தல்.

ஈ. தேவையான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை வாங்குதல்.

இந்த முழு திட்டத்திற்கான மதிப்பிடப்பட்ட செலவு USD 120 மில்லியன் மற்றும் அதன் உள்ளூர் மதிப்பு ரூபா.19,127 மில்லியன் ஆகும். 2021 டிசம்பர் 31 க்குள் இந்தத் திட்டத்திற்கு ரூபா.18,345.02 மில்லியன் செலவிடப்பட்டதுடன் திட்ட காலம் 2022 ஜூலை 31 வரை நீட்டிக்கப்பட்டது. அதன் பிரகாரம், அன்றைய தினம் வரை இத்திட்டத்திற்காக ரூபா 18,601.49 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதோடு ரூபா.4,494.61 மில்லியன் பெறுமதியான பற்றுச்சீட்டுகள் செலுத்த வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

அருவக்காலு குப்பை கொள்கலன் நிர்மாண திட்டத்தின் ஏ, பி மற்றும் சி தொகுப்புகளை செயல்படுத்துதல்.

மேற்கூறிய கட்டுமானத்திற்காக அமெரிக்க டாலர் 100.96 மில்லியன் மதிப்புள்ள சைனா ஹார்பர் இன்ஜினியரிங் கம்பெனிக்கு 2018 ஜனவரி 1 இல் தொடங்கி 2019 ஜூன் 30 க்குள் முடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டது. திட்டத்தின் முன்மொழியப்பட்ட ஏ,பி மற்றும் சி தொகுப்புகள் அரசாங்க கொள்முதல் வழிகாட்டுதல்கள் மற்றும் உலக வங்கியின் கொள்முதல் வழிகாட்டுதல்களின்படி வெளிப்படையாக செய்யப்படவில்லை என்பதை உலக வங்கி மீளாய்வுக் குழு அவதானித்திருந்தது. ஆனால் இந்த திட்டத்தை தாமதமின்றி விரைவாக முடிக்க வேண்டும் என்பதற்கான காரணத்தை ஒப்பந்ததாரர் மறுமதிப்பீடு செய்யாத காரணத்தால் உலக வங்கி ஒப்புக்கொண்ட 700,000 அமெரிக்க டாலர் பெறுமதியான உலக வங்கி உதவியானது கிடைக்கப்பெறவில்லை. இவ்வாறாக உலக வங்கியின் ஆதரவை இழந்து கொடுக்கப்பட்ட ஒப்பந்தம் 02 வருடங்கள் தாமதமான போதிலும் திட்ட காலம் தொடர்ச்சியாக நீடிக்கப்பட்டு வருகின்றதுடன் 02 வருடங்கள் நிறைவடைந்துள்ள போதிலும் உரிய

திட்டத்தினால் 2021 டிசம்பர் 31 க்குள் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்கப்பெறவில்லை. இருப்பினும், இந்த திட்டத்தின் ஒப்பந்ததாரர் 2022 ஜுன் 15 முதல் கட்டுமானப் பணிகளை நிறுத்திவிட்டார்.

தேவையான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை வாங்குதல் (தொகுப்பு டி)

2019 டிசம்பர் 31 இல் ரூபா.8.27 மில்லியன் செலவில் 04 புகையிரத இன்ஜின்கள் பெட்டிகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இன்ஜின்களின் இயந்திர கூறுகள் தொடர்பான உத்தரவாதக் காலம் 2022 ஆகஸ்ட் 28 அன்று முடிவடைந்துள்ளது. ஆனால் அவை இறக்குமதி செய்யப்பட்டு 02 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் அவை எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாமல் புகையிரத திணைக்களத்தின் முற்றத்தில் நிறுத்தப்பட்டுள்ளன. ஒரு இன்ஜினின் உதிரி பாகங்கள் முகவர் நிறுவனமான M/S Donfang Electricals International Corporation ஆல் அகற்றப்பட்டு மற்றொரு இன்ஜினில் பொருத்தப்பட்டிருப்பது பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

- 34 கன்டெய்னர் வெகன்கள் வாங்குவதற்கு கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் நிபந்தனையின்படி, உற்பத்தியாளரால் சமர்ப்பித்த தொழில்நுட்ப திட்டங்களில் ஏற்பட்ட குறைபாடுகள் காரணமாக புகையிரத திணைக்களத்தினால் கன்டெய்னர் வெகன்களை கொண்டு வருவதற்கான ஒப்பந்தம் நிறுத்தப்பட்டது. அதன்படி 2021 டிசம்பர் 31 அன்று அதன் வருடாந்த முன்னேற்றம் 0% ஆகும். எவ்வாறாயினும், நடவடிக்கையின் படி, புகையிரத திணைக்களத்தில் சிறிய பழுதுபார்ப்புகளின் பின்னர் பயன்படுத்தக்கூடிய 17 இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு தேவையான நிதியை ஒதுக்கீடு செய்ய அமைச்சரவை குறிப்பொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது.

- 2020 ஆண்டு இறுதிக்குள் 94 கொள்கலன் பெட்டிகள் வர வேண்டியிருந்தாலும் அவை வழங்கப்பட்ட பிறகு பெட்டிகளை வைக்க பொருத்தமான இடம் பதிவு செய்யப்படாததால் அந்த வழங்கல் 2021 டிசம்பர் 31 வரை விநியோகம் செய்யப்படவில்லை ஆனால் அவை 2022 ஜுலை 31க்குள் இறக்குமதி செய்யப்பட்டதை திட்டத்தினால் தெரிவிக்கப்பட்டது.

நகர திட்டமிடல் திட்டம்

- குருநாகல், தம்புள்ளை, திருகோணமலை மற்றும் இரத்தினபுரி நகரங்களில் முன்னணி நகர திட்டங்களை அடையாளம் காணும் வகையில் 2019 மார்ச் 6 ஆம் திகதி இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த செலவு ரூபா.1,297.14 மில்லியன் பெறுமதியான அமெரிக்க டாலர் 6.42 மில்லியன், இதில் ரூபா. 1,064.79 மில்லியன் பெறுமதியான அமெரிக்க டாலர் 5.27 மில்லியனைக் கடனாக வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி ஒப்புக்கொண்டது. இந்த திட்டம் 2021 மார்ச் 31 க்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்பட்டது.
- ஆனால் கடன் வழங்கும் நிறுவனத்தால் ஒதுக்கப்பட்ட ரூபா.1,064.79 மில்லினுக்கு சமமான மொத்த நிதியான 5.27 மில்லியன் அமெரிக்க டாலர்களில் இருந்து, திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 2 ஆண்டுகள் மற்றும் 09 மாதங்களுக்குப் பிறகு அதாவது 31 டிசம்பர் 2021 இல் மொத்த ஒதுக்கீட்டில் 38 சதவிகிதம் திட்ட நடவடிக்கைகளுக்கு ரூபா.405.68 க்கு

சமமான் 2.07 மில்லியன் அமெரிக்க டாலர்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்டன.

- 2020 ஆகஸ்ட் 18 திகதியிடப்பட்ட வெளிநாட்டு வளத் துறையின் இயக்குநர் ஜெனரலின் கடித இலக்க ER/AB/US/01(vol-i) இன் படி திட்டச் செயல்பாடுகளை இடைநிறுத்த எடுக்கப்பட்ட முடிவின்படி, அத் திகதி வரை மேற்கொள்ளப்பட்டு வந்த 3 பிரிவுகளில் ஒப்பந்தம் செய்யப்பட்ட ஆலோசகர்களின் சேவைகள் 2020 அக்டோபர் முதல் நிறுத்தப்பட்டன. 2021 ஆம் ஆண்டு இறுதிக்குள் ரூபா. 413.36 மில்லியன் 3 ஆலோசனை நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்டது ஆனால் 2 ஆலோசனை நிறுவனங்களால் 11 ஆலோசனை அறிக்கைகளை வழங்குவதில் தாமதமானது 01 மற்றும் 08 மாதங்களுக்கு இடையில் இருந்ததுடன் தாமதக் கட்டணம் வசூலிக்கப்படவில்லை மற்றும் தாமதக் கட்டணத்தை வசூலிப்பது தொடர்பான ஏற்பாடு ஆலோசனை சேவை ஒப்பந்தத்தில் சேர்க்கப்படவில்லை. சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனை அறிக்கைகளின்படி 2022 ஜுன் க்குள் கூட எதிர்கால திட்ட நடவடிக்கைகள் செயல்படுத்தப்படவில்லை.

இலகு ரயில் போக்குவரத்து திட்டம்

- கொழும்பின் பிரதான வீதிகளில் நிலவும் கடும் போக்குவரத்து நெரிசலுக்கு நீண்டகாலத் தீர்வாக வினைத்திறனான பொதுப் போக்குவரத்தின் அவசியத்தை கருத்தில் கொண்டு அதிவேக போக்குவரத்து அமைப்பாக கோபுரங்களின் மேல் இயங்கும் இலகுரக ரயில் போக்குவரத்து அமைப்பு வலையமைப்பு நிறுவப்பட்டது. மேற்கு மண்டல இலகு ரயில் போக்குவரத்துத் திட்டமாக ஜப்பான் சர்வதேச ஏஜென்சியின் (JICA) உதவி முன்மொழியப்பட்ட திட்டம் தொடர்பாக ஒரு சாத்தியக்கூறு ஆய்வு நடத்தப்பட்டு இலகுரக ரயில் பாதைகள் அமைப்பது சாத்தியமானது மற்றும் மத்திய சுற்றுச்சூழலின் ஒப்புதலும் கண்டறியப்பட்டதுடன் அதிகாரமும் பெறப்பட்டது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூபா.59,100 மில்லியன் ஆகும். இதில் ரூபா.43,037 மில்லியன் 0.1 வீத வட்டிக்கு வழங்கப்பட்டு எஞ்சிய தொகை ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகமையின் (JICA) கீழ் 0.01 வீத வட்டி வீதத்தில் 12 வருட சலுகைக் காலத்திற்கு வழங்கப்பட்டு திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 2019 மார்ச் 25 அன்று தொடக்கம் 2024 டிசம்பர் 31 இல் முடிக்க திட்டமிடப்பட்டது. ஜப்பான் மற்றும் இலங்கை அரசாங்கங்கள் 2019 மார்ச் 11 அன்று ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

- எவ்வாறாயினும், ஜனாதிபதியின் அறிவுறுத்தலின்படி 2020 செப்டம்பர் 21 அன்று போக்குவரத்து அமைச்சின் செயலாளர் இந்த திட்டம் விலை உயர்ந்தது மற்றும் லாபகரமானது அல்ல எனவே திட்டத்தை மூட வேண்டும் எனவும் கொழும்பில் நகர போக்குவரத்து உட்கட்டமைப்புகளை வழங்க பொருத்தமான திட்டம் ஒன்றை முன்மொழிய வேண்டும் என்றும் போக்குவரத்து அமைச்சின் செயலாளருக்கு அறிவித்தார். அதன்படி திட்டத்தை ஒருதலைப்பட்சமாக முடிக்க போக்குவரத்து அமைச்சின் செயலாளர் 2020 செப்டம்பர் 24 திகதியிட்ட அமைச்சரவைப் குறிப்பு இலக்கம். MT/46/2020 ஐ சமர்ப்பித்தாலும் அந்த முடிவின் அடிப்படையிலான காரணங்கள் முன்வைக்கப்படவில்லை. அதன்படி 2020 அக்டோபர் 06 திகதியிட்ட அமைச்சரவை

முடிவு இலக்கம். 20/1450/312/002 மூலம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் திட்டத்தை இடைநிறுத்தி திட்ட அலுவலகத்தை மூடினார்.

- இது ஜப்பான் சர்வதேச ஏஜென்சியின் (JICA) உதவியுடன் நிறுவப்பட்டது மற்றும் முன்மொழியப்பட்ட திட்டமானது 2019 டிசம்பர் 31 முதல் 2021 வரை JICA நிதியிலிருந்து ரூபா.4,886.75 மில்லியன் திறைசேறி ஒதுக்கீட்டில் இருந்தும் ரூபா. 917.2 மில்லியன் JICA நிதியிலிருந்தும் மொத்தமாக ரூபா 5,803.95 மில்லியனும் செலவிட்டுள்ளது. எனவே இத்திட்டத்தை பாதியில் நிறுத்துவதற்கு மேற்படி அமைச்சரவை தீர்மானித்ததன் காரணமாக அதுவரை செலவழிக்கப்பட்ட ரூபா.5803.95 மில்லியன் பயனற்ற செலவீனமாக மாறியுள்ளது. மேலும் கடன் உடன்படிக்கையின்படி 2019 மே 23 அன்று செலுத்தப்பட்ட ரூபா.102.73 மில்லியன் முன்செலுத்துகைக் கட்டணமானது (front end fee) பயனற்ற செலவாகும். அத்துடன் இதன் செயற்பாடுகளுக்கு தேவையான மின்சார வசதிகளை பெற்றுக் கொள்வதற்காக மின்சார சபைக்கு செலுத்தப்பட்ட வேலைகளை ஆரம்பிக்க முன்பணமாக வசூலிக்கப்பட வேண்டிய ரூபா.44 மில்லியன் வை மீளப் பெற்றுக்கொடுக்க திட்டம் நடவடிக்கை எடுக்கவில்லை. திட்டம் மற்றும் அந்தத் தொகை நிதிநிலை அறிக்கைகளில் நடப்புச் சொத்தின் கீழ் திரட்டல் முன்பணமாக காட்டப்படாது திட்டச் செலவாகக் காட்டப்பட்டுள்ளது.

- மேலும் இத் திட்டம் நிறுத்தப்பட்ட நிலையில் நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கையின் கீழ் நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின் 10.1 வது பிரிவின்படி திட்டத்தின் டிப்போ கட்டுமானத்திற்கு தேவையான சுமார் 21 ஹெக்டேர் நிலத்தை கையகப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்ட நிலம் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

- இந்த திட்டம் இடைநிறுத்தப்பட்டதால் திட்டத்தின் ஆலோசனை நிறுவனத்தினால் கோரப்பட்ட USD 31.36 மில்லியன் இழப்புத் தொகையைப் பற்றி விவாதிக்க 11 பேர் கொண்ட குழு ஒன்று 2021 பெப்ரவாரி 23 திகதியிட்ட அமைச்சரவை குறிப்பு இலக்கம். AMA/21/0221/306/015 இன் படி 2021 ஜுன் 16 அன்று நியமிக்கப்பட்டது. சுமார் ஒரு வருடம் கழித்து இந்தக் குழு 2022 மே மாதம் அறிக்கை சமர்ப்பித்தது. கணக்காய்வு திகதியின்படி கணக்காய்வுக்கு வழங்கப்பட்ட தகவல்களின்படி, இந்தக் குழுவிற்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்காக மாத்திரம் ரூபா.4.8 மில்லியன் செலவிடப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் குழுவிற்கு செலவினங்கள் எதுவும் செலுத்தப்பட்டதா என்பதை கணக்காய்வு உறுதிப்படுத்தவில்லை. அறிக்கையின் 3.3ஆம் பந்தி மற்றும் பரிந்துரை இலக்கம் 4 இன் படி வகை 3 கோரிக்கை தொடர்பாக ஆலோசகர் நிறுவனத்துடன் உடன்பாட்டை எட்டுவதில் தோல்வி காணப்பட்டது. குழுவின் பரிந்துரைகளுக்கு ஒப்புதல் கோரி 2022 ஜுன் 28 அன்று அமைச்சரவைப் குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

மூலோபாய நகர அபிவிருத்தி திட்டம்

- தேர்ந்தெடுக்கப்பட்ட நகர சேவைகள் மற்றும் பொது நகர இடங்களை அபிவிருத்தி செய்வதற்காக இலங்கையில் பங்கேற்பு நகரங்கள் தொடங்கப்பட்டன. இதன்படி இத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி

செய்யப்படும் பங்கேற்பு நகர வலயங்களாக கண்டி, காலி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நகரங்கள் தெரிவு செய்யப்பட்டன. திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூபா.34,912.48 மில்லியன் இதில் ரூபா.27,507 மில்லியனுக்கு சமமான 202 மில்லியன் அமெரிக்க டாலர்களை சர்வதேச அபிவிருத்தி சங்கம் வழங்க ஒப்புக்கொண்டது. திட்டம் 2014 மே 05 இல் அதன் பணியைத் தொடங்கி 2019 இன் இறுதிக்குள் முடிக்கப்பட வேண்டி இருப்பினும் திட்டக் காலம் 2021 டிசம்பர் 31 வரை மேலும் 02 ஆண்டுகள் நீட்டிக்கப்பட்டாலும், கடன் வழங்கும் நிறுவனத்தால் ஒதுக்கப்பட்ட 202 மில்லியன் அமெரிக்க டாலர்களில் மொத்த ஒதுக்கீட்டில் 52.5 சதவீதமான 106 மில்லியன் அமெரிக்க டாலர்கள் திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 7½ ஆண்டுகளுக்குப் பிறகும் 2021 டிசம்பர் 31 க்குள் பயன்படுத்தப்படவில்லை. 2021 ஆம் ஆண்டின் இறுதியில் விரும்பிய இலக்குகளை அடைய முடியாது இந்தத் திட்டம் தோல்வியடைந்ததை முன்னிட்டு உலக வங்கி USD 202 மில்லியன் வழங்க ஒப்புக்கொண்ட கடன் தொகையில் முறையே கண்டி பல்நோக்கு போக்குவரத்து டமினல் (KMTT) நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட USD 65 மில்லியன் மற்றும் 2021 டிசம்பர் 31 முதல் எதிர்பார்க்கப்படும் சேமிப்பு (Expected Saving) (மொத்தம் 27 மில்லியன் அமெரிக்க டாலர்களின் கூட்டுத்தொகை 92 மில்லியன் திரும்பப் பெறப்பட்டது.

- காலி நகர திட்ட ஆலோசனை நிறுவனம் வழங்கிய ஆலோசனை அறிக்கையின்படி, காலி நகரத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்துவதே இத் திட்டத்தின் முதன்மையான நோக்கங்களில் ஒன்றாகும் ஆனால் தேங்கும் பகுதிகளுக்கு சொந்தமான நிலங்களை கையகப்படுத்துவது 2021 டிசம்பர் 31 க்குள் இடைநிறுத்தப்பட்டதுடன் சதுப்பு நில முகாமை திட்டம் எதுவும் தயாரிக்கப்படவில்லை.

- யாழ்ப்பாண நகரில் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படும் ரூபா.3,380.70 மில்லியன் (19.66 அமெரிக்க டாலர்) மதிப்புள்ள 09 துணைத் திட்டங்கள் 2021 டிசம்பர் 31 நிலவரப்படி இடைநிறுத்தப்பட்டுள்ளன, மேலும் அந்தத் துணைத் திட்டங்களிலிருந்து எதிர்பார்த்த பலன்கள் அடையப்படவில்லை.

கொழும்பு பெருநகர அபிவிருத்தி திட்டம்

கொழும்பு நீர்நிலைப் பகுதியில் வெள்ளப்பெருக்கைக் குறைத்தல், கொழும்பு மாநகரப் பகுதியில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் ஆற்றலைப் பலப்படுத்துதல், கொழும்பு நகரை அழகுபடுத்துதல் (99%) ஆகிய நோக்கங்களுடன் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2021 ஆம் ஆண்டிற்கான பின்வரும் விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா.10,954 மில்லியன் தொகையில் ரூபா. 10,861 மில்லியன் (99%) செலவிடப்பட்டதுடன், இதுவரை பூர்த்தி செய்யப்படாத திட்டங்கள் தொடர்பில் பெறப்பட்ட முன்னேற்ற அட்டவணை 28 இன் பிரகாரம் காட்டப்பட்டுள்ளது.

	முன்னேற்றம் %	
வேலை விபரம்	உண்மையான	பணம்
நோரிஸ் கால்வாயை மேம்படுத்துதல்	85	68
முத்துராஜவெல மற்றும் டோரிங்டன் நீர்	97	78

போக்குவரத்து சுரங்கப்பாதைகளின் வடிவமைப்பு மற்றும் கட்டுமானம்		
அம்பத்தலே நீரேற்று நிலையத்தை மேம்படுத்துதல்	100	81
கோட்டே கொடுபெம்ம ஈரநில பூங்காவின் அபிவிருத்தி	100	69
மாதிவெல கிழக்கு பிரிவின் அபிவிருத்தி கட்டம் III	100	79
கொலன்னாவ கால்வாய் திசை திருப்பும் திட்டம் கட்டம் 4	100	86
செயின்ட் செபாஸ்டியன் தெற்கு மின் உற்பத்தி நிலையத்தின் வடிவமைப்பு மற்றும் நிறுவல்	100	87

அட்டவணை 28 : நிலுவையில் உள்ள திட்டங்கள் தொடர்பாக அடையப்பட்ட முன்னேற்றம்

நகர அபிவிருத்தி அதிகார சபை

நகர அபிவிருத்தி அதிகாரசபையானது 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசட்டத்தின் மூலம் பொருளாதார, சமூக, சுற்றாடல் மற்றும் பௌதீக ஒருங்கிணைக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கும், செயற்படுத்துவதற்கும் மற்றும் ஊக்குவிப்பதற்கும் உருவாக்கப்பட்டது. இந்த அதிகாரசபையானது வாட்டர்ஸ் எட்ஜ் கம்பனி, அர்பன் இன்வெஸ்ட்மென்ட் அன்ட் டெவலப்மென்ட் கம்பனி, பேலியகொட வேர்ஹவுஸ் கம்பனி மற்றும் ரெஸ்ட் ஹவுஸ் கம்பனி என 04 நிர்வகிக்கப்படும் நிறுவனங்களைக் கொண்டுள்ளது மற்றும் வாட்டர்ஸ் எட்ஜ் கம்பனியின் நிர்வகிக்கப்பட்ட நிறுவனமாக வாட்டர்ஸ் எட்ஜ் ரிக்ரியேஷன் நிறுவனம் நிறுவப்பட்டது. மேலும் Ocean View Development Company, Colombo Land Development Company, Onali Holding Company மற்றும் Lanka Electricity Private Company என 04 தொடர்புடைய நிறுவனங்கள் நிறுவப்பட்டன.

- 2010 பெப்ரவரி 03 திகதியிட்ட ஜனாதிபதி அலுவலக சுற்றறிக்கை இலக்கம் SP/RD/02/10 இன் பத்தி 3.4 இன் படி, நகர வளர்ச்சிக்காக அதிகாரசபையினால் வழங்கப்பட்ட ஒரு பெரிய அளவிலான நிலம் ஒதுக்கப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்படவில்லை, ஆனால் பிற நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டது அல்லது பல ஆண்டுகளுக்குப் பிறகு ஏமாற்றம் செய்யப்பட்டது. ஒரு சில உதாரணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.
- 2016 டிசம்பர் 21 திகதியிட்ட அமைச்சரவையின் தீர்மானத்தின்படி காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு சொந்தமான உத்தேச ஹொரண கைத்தொழில் பேட்டையை அமைப்பதற்காக மில்லவ தோட்டத்தின் 812.63 ஏக்கர் (320 ஹெக்டேயர்) நிலத்தை கையகப்படுத்துவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அங்கீகாரம் வழங்கியதுடன் 2017 ஜுன் 14 அன்று அசாதாரண வர்த்தமானி மூலம் உடமை வழங்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஹொரணை மில்லவ வத்த, ஹொரண கைத்தொழில் பூங்கா, மேற்படி திட்டத்தின் சுற்றாடல் தாக்கம் தொடர்பில் எவ்வித சாத்தியக்கூறு ஆய்வுகளையும் மேற்கொள்ளாமலும் மாற்றுக் காணிகளை ஆராயாமலும் அபிவிருத்திக்காக கையகப்படுத்தப்பட்டதுடன் நகர அபிவிருத்தி அதிகாரசபை காணி

சுவீகரிப்புக்காக மாத்திரம் ரூபா. 1,360 மில்லியன் செலுத்தியுள்ளது. தற்போது அந்த நிலம் கையகப்படுத்தப்பட்ட நோக்கத்தைத் தவிர அரசின் பல்வேறு நோக்கங்களுக்காக (சிறையை இடமாற்றம் செய்வது போன்றவை) பயன்படுத்தப்பட்டு வருகிறது.

- காலி நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 6.782 ஹெக்டேர் பரப்பளவில் பலரால் ஆக்கிரமிக்கப்பட்டு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தடெல்ல காணி அலோசியஸ் தேசிய பாடசாலை மைதானம், சர்வதேச கிரிக்கெட் மைதானம் மற்றும் விளையாட்டுக்களுக்கான நிர்மாணத்திற்காக 2006 மே 30 ஆம் திகதி கையகப்படுத்தப்பட்டது. வளாக நிலத்தின் ஒரு சிறிய பகுதி துப்புரவு செய்யப்பட்டு விளையாட்டு மைதானம் 2020 செப்டம்பர் 26 கட்டப்பட்டது, மேலும் நிலம் கையகப்படுத்தும் செயல்முறையை முடிக்க 2021 டிசம்பர் 31 ரூபா.281.57 மில்லியன் இழப்பீடு மற்றும் வட்டியாக செலுத்தப்பட்டது. இழப்பீடு மற்றும் வட்டி செலுத்துதலுக்காக 2016 டிசம்பர் 07 அன்று ரூபா. 400 மில்லியன் திறைசேரியிலிருந்து செலுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

- கோட்டை டி.ஆர்.விஜேவர்தன மாவத்தையை அண்டியுள்ள அதிகாரசபைக்கு சொந்தமான ஏக்கர் 2 ரூட் 2 பேர்ச்சஸ் 21.4 காணியானது பலமாடி வர்த்தக கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக தனியார் நிறுவனமொன்றுக்கு அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு முன்னர் பொது விலைக் கோரல் அழைக்கப்படாமல் உரிமை வழங்கப்பட்டதுடன் பின்னர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் 30 ஆண்டுகளுக்கு நிலத்திற்கு ரூபா.1,300 மில்லியன் நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டது. ஆனால், எந்த வளர்ச்சிப் பணியும் செய்யாமல் அந்த நிலத்தில் வாகன நிறுத்துமிடம் ஏற்படுத்தப்பட்டு ஒப்பந்தப்படி கிடைத்த வருமானத்தில் அதிகாரிக்கு உரிய வருமானம் வழங்கப்படாமல் ஒப்பந்தம் செய்யப்பட்ட

ரூபா.1,300 மில்லியனில் 2013 பெப்ரவரி 28 வரை ரூபா. 557 மில்லியன் தொகை மட்டுமே அதிகாரசபைக்கு செலுத்தப்பட்டிருந்த நிலையில், அசல் நிறுவனத்தின் உரிமையாளர் வேறொரு நிறுவனத்தின் பெயரில் மீண்டும் ஒப்பந்தம் செய்து கொள்வதோடு, அன்றைய அரசாங்க மதிப்பீட்டாளரின் பெறுமதியான ரூபா. 3,352 மில்லியன் ஐ செலுத்த ஒப்புக்கொண்டார். இருந்த போதிலும் அதிகாரசபையின் பணிப்பாளர் சபையின் முறையான அனுமதியின்றி அரசாங்கத்தின் மதிப்பிடப்பட்ட பெறுமதியை விட ரூபா.330 மில்லியன் குறைவாக குத்தகைக்கு வழங்குவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டதன் காரணமாக இந்த காணியை அகற்றும் போது ரூபா.330 மில்லியன் நட்ட வருமான இழப்பும் ஏற்பட்டுள்ளது. நீண்ட நாட்களாகியும் இதுவரை எந்த வளர்ச்சி பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

- இராஜகிரிய ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தையில் அமைந்துள்ள 03 காணிகள் நிதி மற்றும் நிர்வாக நிறுவனங்களை உள்ளடக்கிய நகர அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 2013 ஒக்டோபர் 9 ஆம் திகதி நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டது. எவ்வாறாயினும், சுவீகரிக்கப்பட்ட 02 ஏக்கர், 02 ரூட் 01 பேர்ச் காணிகள் எவ்வித அபிவிருத்திப் பணிகளும் இன்றி 2015 பெப்ரவரி 2 மற்றும் 2016 நவம்பர் 18 ஆம் திகதிகளில் அசல் உரிமையாளர்களிடம் மீள ஒப்படைக்கப்பட்டதுடன், 01 ரூட் 12 பேர்ச்சஸ் எந்த வளர்ச்சி பணிக்கும் பயன்படுத்தப்படவில்லை.

- 2013 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை 13,580 வீடுகள் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக ரூபா.48,090 மில்லியன் செலவில் நகர புத்துயிர் திட்டத்தின் 21 துணைத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ளன ஆனால் 2003 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க பொது வசதிகள் சபைச் (திருத்தம்) சட்டத்தின் பிரிவு 3(2) (ஆ) இன் படி 12,875 வீடுகளுக்கான தேவைகளை பூர்த்தி செய்யத் தவறியதாலும், குடியிருப்பு முகாமை அதிகாரச் சான்றிதழ்களைப் பெறாமலும், இடமாற்றம் செய்ய முடியாத காரணத்தாலும் அந்த வீடுகளின் உரிமை, பராமரிப்புப் பணிகள் வீட்டின் பயனாளிகளுக்குச் சொந்தமாகாததால் ரூபா.813.15 மில்லியன் பாரிய செலவு செய்ய வேண்டியிருந்தது

- 2010 அக்டோபரில் கொழும்பில் உள்ள குடிசைவாசிகளுக்கு 68,000 நிரந்தர வீடுகளை நிர்மாணிக்கும் தேசிய திட்டத்திற்கு நிதியளிப்பதற்காக 5 ஆண்டுகளில் வெளியிடப்படும் ரூபா.10 பில்லியன் பெறுமதியான கடனீட்டுப் பத்திரங்களை அதிகார சபை வழங்கியிருந்தது. இது நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் திட்டமாகும். 2015 ஆம் ஆண்டு அந்தக் கடனீட்டுப் பத்திரங்களை விடுவிப்பதற்காக இலங்கை வங்கியிடமிருந்து ரூபா 11 பில்லியன் கடன் வசதி பெறப்பட்டது. 2017 ஆம் ஆண்டில் கடனை செலுத்துவதற்காக திறைசேரியிடமிருந்து ரூபா 8.5 பில்லியன் பெறப்பட்டது. எவ்வாறாயினும், கடன் பத்திரங்கள் வழங்கப்பட்டு 5 வருடங்கள் கடந்துள்ள போதிலும், கொழும்பு நகருக்குள் 142 ஏக்கர் காணி அபிவிருத்தி மற்றும் வியாபாரத் திட்டம் தயாரித்தல் என்பன மேற்கொள்ளப்படாததோடு, உத்தேச 68,000 வீடுகளில் 12,657 வீட்டுத் தொகுதிகள் நிர்மாணிக்கப்பட்டு அவற்றில் 8,407 மட்டுமே 2019 டிசம்பர் 31 அன்று மக்களிக் பாவனைக்கு ஒப்படைக்கப்பட்டது.

தற்போது ரூபா 25 பில்லியன் கடன் பத்திரங்களை வெளியிடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

- 608 நடுத்தர வருமான வீடுகள் கொண்ட ஓவல் வியூ வீடமைப்புத் திட்டத்திற்காக ரூபா.4,756.32 மில்லியன் வீட்டு உரிமையாளர்களால் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்தப்பட்டுள்ளதுடன் அங்கொட லேக் கிரெஸ்ட் வீடமைப்புத் திட்டத்திற்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ரூபா 816.3 மில்லியன் வீட்டு உரிமையாளர்களால் செலுத்தப்பட்டுள்ளது. ஆனால் குடியிருப்பாளர்களுக்கான சட்ட உரிமைகள் 2021 செப்டம்பர் வரை வழங்கப்படவில்லை. இந்தத் திட்டத்துக்கு இதுவரை தன்னாட்சி அதிகாரச் சான்றிதழ் பெறப்படவில்லை.

- 2017 ஆம் ஆண்டு குப்பை மேடு சரிந்ததையடுத்து மீதொட்டமுல்ல புத்துயிர் திட்டத்தின் கீழ் நகர பூங்கா அமைக்கவும் குப்பை மேட்டை 30 மீட்டர் முதல் 12 மீட்டர் வரை சமன்படுத்துதல் (trial compaction), போர்வை அடுக்கி , கிரீன்ஹவுஸ் வாயு வெளியேற்ற அலகுகளை நிலைநிறுத்துதல் ஆகியவற்றுக்கான ரூபா.269.5 மில்லியன் பெருமதியான தனியார் நிறுவனத்திற்கு 2020 ஜுன் 09 அன்று வழங்கப்பட்டது. இந்த திட்டத்திற்காக அதிகாரசபையினால் ரூபா 432.95 மில்லியன் செலுத்தப்பட்டு, 2020 நவம்பர் 25 ஆம் திகதி ஒப்படைப்பு சான்றிதழ் வழங்கப்பட்டிருந்த போதிலும், திட்டமிட்டபடி பூங்கா கட்டப்படவில்லை. மேலும், நிலைப்படுத்தப்பட்ட கழிவுகள் உள்ள இடம் தற்போது முறையான முகாமை மற்றும் கண்காணிப்பு இல்லாமல் உள்ளது மேலும் இந்த இடத்தில் இருந்து வெளியேறும் கழிவு நீர் கால்வாய்கள் மற்றும் நிலத்தடி நீருடன் சேறுவதைத் தடுக்கவும் எரிவாயு சேகரிப்பு அமைப்பு மற்றும் தொடர்ச்சியான வாயு வெளியேற்ற மையம் மூலம் எரிவாயு சேகரிப்பு அமைப்பும் நிறுவப்பட்டுள்ளது. 2021 டிசம்பர் 23 பௌதீக பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.

வோட்டர் எட்ஜ் நிறுவனம்

- வாட்டர்ஸ் எட்ஜ் நிறுவனத்தால் மூன்றாம் தரப்பினருடன் ஒப்பந்தம் செய்யப்பட்ட இரண்டு அபிவிருத்தித் திட்டங்கள், அதாவது பாரம்பரிய நடன மண்டபம் நிர்மாணித்தல் 2018 ஆம் ஆண்டில் நிறைவடைந்தன ஆனால் நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை மற்றும் சிறுவர் பூங்கா நிர்மாணப் பணிகள் 2018 ஆம் ஆண்டில் முடிக்கப்பட விருந்தபோதிலும் 2020 வரை முடிக்கப்படவில்லை எனவே அந்த திட்டங்களின் மூலம் நிறுவனத்தின் ஆண்டு வருமானம் ரூபா. 43.2 மில்லியன் நட்டமடைந்தது.

- 18 வருட காலத்திற்கு நிறுவன வளாகத்திற்குள் ஒரு பொழுதுபோக்கு பூங்காவை நிர்மாணித்தல், நிதியளித்தல், இயக்குதல், பராமரிப்பு மற்றும் நிர்வகித்தல் ஆகியவற்றிற்காக நிறுவனம் 2018 ஆம் ஆண்டில் நிறுவனம் உள்நாட்டில் இணைக்கப்பட்ட ஒரு வெளிநாட்டு தனியார் நிறுவனத்துடன் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது இது வருடத்திற்கு 20000 அமெரிக்க டொலர்களுக்கு சமமான இலங்கை ரூபாயை செலுத்துவதன் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்ட நாளில் நிலவும் மாற்று விகிதங்களில் இது மத்திய விலையான ரூபா.153.74 ஆக கணக்கிடப்பட்டதுடன் இரு தரப்பினருக்கும் இடையே ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஆனால், 2021ஆம் ஆண்டு இறுதிக்குள் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் நிறுவனம் 9956 அமெரிக்க டாலர்களை மட்டுமே அந்த நிறுவனத்துக்கு செலுத்தியதால் அது தொடர்பான பொழுதுபோக்கு பூங்கா கட்டுமானப் பணிகள் பாதியில் நிறுத்தப்பட்டன.

- அக்லான்ட் ஹவுஸ் கட்டிடத்தின் புனரமைப்புப் பணிகளுக்கான ஆரம்ப செலவீனமாக நிறுவனம் ரூபா.11.46 மில்லியன் ஏற்றுக்கொண்டது அதன் சட்ட உரிமையை நிறுவனம் பெறவில்லை பின்னர் திட்டம் நிறுத்தப்பட்டது. செய்யப்பட்ட செலவு லாபமற்ற செலவாக மாறியது.

- 2018 ஆம் ஆண்டில் ரூபா 14.8 மில்லியன் பெறுமதியான 16,000 ஆர்க்கிட் செடிகள் வெளிநாட்டிலிருந்தும் மற்றுமொரு தொகை உள்நாட்டிலிருந்தும் வர்த்தக நோக்கங்களைக் கருத்தில் கொண்டு கொள்வனவு செய்யப்பட்டன. இந்த திட்டத்திற்காக ரூபா. 68 மில்லியன் செலவழிக்கப்பட்டது, ஆனால் தற்போது கூட முறையான பராமரிப்பு செய்யப்படவில்லை மற்றும் வணிக நோக்கத்தை தவிர, தற்போது வருமானம் ஈட்டப்படவில்லை என்பதை அவதானிக்க முடிந்தது.

இலங்கை நில அபிவிருத்தி கூட்டுத்தாபனம்

1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபன சட்டத்தின் பிரிவு 2(ஆ) 1 க்கு இணங்க தீவு முழுவதிலும் மாகாண மட்டத்தில் குறைந்த சதுப்பு நிலங்கள் தரிசு அல்லது சேற்று நிலங்களை இனங்கண்டு அவற்றை வர்த்தமானி அறிவித்தல் மூலம் விளம்பரப்படுத்துவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு அங்கீகரிக்கப்படாத நில மீட்பு நடவடிக்கைகளைக்

கட்டுப்படுத்தவும் மேற்பார்வையிடவும் அதிகாரம் வழங்கப்பட்டாலும், 2020 ஆம் ஆண்டின் இறுதியில் கூட்டுத்தாபன வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மாகாணங்களின் எண்ணிக்கை 06 ஆக மட்டுப்படுத்தப்பட்டது. வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நிலப்பகுதிகளில் அங்கீகரிக்கப்படாத சீரமைப்பு மற்றும் சட்டவிரோத குடியேற்றங்களை தடுக்க கூட்டுத்தாபனம் தவறிவிட்டது. மேலும், மேற்படி சட்டத்தின் பிரிவு 8 (அ) இன் படி மீட்பு மற்றும் மேம்பாட்டிற்காக கையகப்படுத்தப்பட்ட நிலம், முத்துராஜவெல மற்றும் தோம் அல ஆகிய பகுதிகளில் கட்டிடம், தொழில், வணிக மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்காக கூட்டுத்தாபனதால் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். 1995ல் அபிவிருத்தி நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனதால் கையகப்படுத்தப்பட்டது. 800 ஏக்கர் நிலத்தில் இருந்து 2020 இறுதி வரை 24 ஆண்டுகள் கடந்திருந்தாலும், மேம்படுத்தப்பட்ட நிலத்தின் அளவு 400 ஏக்கர், அதாவது 50 சதவீததிற்கும் குறைவு.

- 1996 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை 05 பிரதேச செயலகப் பிரிவுகளுடன் தொடர்புடைய 9 நீர் தேங்கும் பகுதிகளில் 400 ஹெக்டேயர் நிலப்பரப்பில் 1,104 அங்கீகரிக்கப்படாத நிர்மாணங்கள் மற்றும் குப்பைக் கிடங்குகள் அடையாளம் காணப்பட்ட போதிலும், 2020 டிசம்பர் 31 ஆம் திகதி வரை அடையாளம் காணப்பட்ட அங்கீகாரமற்ற கட்டுமானங்களை அகற்றுவதற்கு கூட்டுத்தாபனம் தவறிவிட்டது.

- 1981 முதல் 2005 வரை கூட்டுத்தாபனதால் கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் தொடர்பான இழப்பீடு வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதால், அந்த நிலங்களுக்கு 2020 டிசம்பர் 31-ஆம் திகதி வழங்க வேண்டிய இழப்பீடு ரூபா. 47.11 மில்லியன் மற்றும் அது தொடர்பாக செலுத்த வேண்டிய வட்டி ரூபா.109.29 மில்லியன். அதன்படி, 2020 ஆம் ஆண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய வட்டி ரூபா. 1.84 மில்லியனாக அதிகரித்துள்ளது. மேலும் நிலம் கையகப்படுத்த 14 முதல் 39 ஆண்டுகள் வரை கால அவகாசம் உள்ளதால் இந்த நிலங்களில் அனுமதியின்றி குடியிருப்போர் குடியேறுவது அதிகரித்துள்ளது.

- 2010 ஜுலை மாதம் 14 ஆம் திகதி கூட்டுத்தாபனத்தினால் வெளியிடப்பட்ட இலக்க 1662/17 வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், மேல் மாகாணத்தில் அமைந்துள்ள கால்வாய்களில் உள்ள முன்பதிவு காணிகளை (Reservation) பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். என்றாலும் 2010 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு இறுதி வரை ஒதுக்கப்பட்ட நிலங்களில் வசிக்கும் அங்கீகரிக்கப்படாத ஆக்கிரமிப்பாளர்கள் அடையாளம் காணப்பட வேண்டும் அல்லது அகற்றப்பட வேண்டும், அதற்கான எந்த சாதகமான நடவடிக்கைகளை கூட்டுத்தாபனம் எடுக்கவில்லை.

- வெள்ளக் கட்டுப்பாட்டுக்கு முக்கியமாக பங்களிக்கிறதும் மற்றும் அதிக பல்லுயிர் பெருக்கத்தைக் கொண்டுள்ளதுமான முத்துராஜவெல சரணாலயத்திற்கு அன்மித்த ஜாஎல, தலத்துர "சுஹதா" மாவத்தையில் அமைந்துள்ள சுமார் 6 ஹெக்டேயர் தாழ்வான பகுதியை மீட்பதற்கு எதிராக 2006 ஆம் ஆண்டின் கூட்டுத்தாபனச் சட்டம் இலக்கம் 35 இன் பிரிவு 2 க்கு இணங்க 2020 டிசம்பர் 31 வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

- கூட்டுத்தாபனத்தினால் அமுல்படுத்தப்பட்ட வெரஸ் கங்கை மழைநீர் வடிகால் மற்றும் சுற்றாடல் மேம்பாட்டுத் திட்டத்தின் காணி சுவீகரிப்புச் செயற்பாடுகள்

ஆரம்பிக்கப்பட்டு 07 வருடங்களுக்கு மேலாகியும் அதற்கான ரூபா 2,387.6 மில்லியன் செலவிடப்பட்ட போதிலும் பணிகள் நிறைவு பெறவில்லை. அதன் பௌதீக முன்னேற்றம் பற்றிய தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மதிப்பீட்டின் போது ரூபா.1.42 மில்லியன் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட்டது.

- மெதமுலன டி.ஏ. ராஜபக்ஷ ஞாபகார்த்த நிலையத்தை நிர்மாணிப்பதற்காக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்ட பெறுமதிக்கும் கூட்டுத்தாபனத்தின் கணக்கில் காட்டப்பட்டுள்ள பெறுமதிக்கும் இடையில் வித்தியாசமான ரூபா 47.37 மில்லியன் மேலும் அறவிடப்பட வேண்டியுள்ளமையால் இத்தொகையை திட்டத்திற்குச் செய்யாத செலவு எனக் கூறப்பட்டதால் கூடுதல் செலவினங்களை சரிபார்த்து பொறுப்பாளர்களிடம் இருந்து வசூலிக்காமலும் திறைசேரி அனுமதி பெறாமலும் எப்.ஆர்.113 இன் படி புத்தகங்களில் இருந்து பதிவழிக்க கூட்டுத்தாபனத்தினால் ஏற்பாடு செய்தது.

- 1,500,000 கன மீட்டர் கடல் மணலை அகழ்வு செய்ய 2018 ஆம் ஆண்டு வெளிநாட்டு நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு பணி நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் 2020 பெப்ரவரி 20 ஆம் திகதி முறையான அனுமதியின்றி கடலோரப் பாதுகாப்புத் திட்டத்திற்காக இயந்திரம் வெளியேற்றப்பட்டது. அப்போது, 465,154 கன மீட்டர் மணல் மட்டுமே அகழப்பட்டிருந்த நிலையில் ஒப்பந்த காலம் முடிவதற்குள் கூட்டுத்தாபனத்தினால் 2020 ஏப்ரல் 10 ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டதால் ஒப்பந்த காலம் முடிவதற்குள் சம்பந்தப்பட்ட நிறுவனம் கோரிய ரூபா.2.96 பில்லியன் செலுத்துவது நிறுவனத்தின் பொறுப்பானது.

- இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையால் 2018 ஒக்டோபர் 4 ஆம் திகதியன்று தீர்மானத்திற்கமைய நில மீட்பு மற்றும் அபிவிருத்தி நிறுவனத்துக்கு 2019 மே 07 திகதிக்குள் ரூபா.200 மில்லியன் கடன் தொகை வழங்கப்பட்டதுடன் அத்தகைய அதிக மூலதன முதலீட்டுத் திட்டத்தைத் தொடங்குவதற்கு முன், திட்ட மதிப்பீடு அல்லது சாத்தியக்கூறு ஆய்வு எதுவும் செய்யப்படவில்லை.
- நிறுவனத்தினால் ரூபா. 382.50 மில்லியன் செலவில் நீண்ட கால வணிக முயற்சியாகத் தொடங்கப்பட்ட இந்தத் திட்டம் தோல்வியடைந்த திட்டமாகத் தீர்மானிக்கப்பட்டு 2 ஆண்டுகளுக்குப் பிறகு, 2020 ஆம் ஆண்டின் இறுதியில், நீண்ட கால குத்தகை அடிப்படையில் அந்த நிலத்தை தனியாருக்கு கூட்டுத்தாபனம் வழங்கியது. இதனால் நிறுவனத்தினால் செலவு செய்த ரூபா 382.50 மில்லியன் வீன் செலவாகிவிட்டது.

நகர குடியேற்ற அபிவிருத்தி அதிகாரசபை

- 2008 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க நகர குடியேற்ற அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின்படி, நகர குடியேற்ற அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கையை உருவாக்குவதற்கும் கொள்கையை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்வதற்கும் இந்த அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்டது. ஆனால் அதிகாரசபை நிறுவப்பட்டு 13 ஆண்டுகள் கடந்துவிட்டன இந்த தேசியக் கொள்கையை உருவாக்கி நடைமுறைப்படுத்த அதிகாரசபை தவறிவிட்டது. மேலும், சட்டத்தின் 10 வது

பிரிவின்படி, 2017 ஏப்ரல்க்குள் தலைவர் உட்பட 14 உறுப்பினர்களுக்கு மிகையாகாமல் ஒரு ஆலோசனைக் குழுவை அதிகாரசபை நியமித்தது, ஆனால் 2021 ஆம் ஆண்டின் இறுதிக்குள், அதிகாரசபையின் நோக்கங்கள் தொடர்பான பணிகள் முன்மொழிவுகள், திட்டங்கள், திட்டங்கள் மற்றும் செயல் திட்டங்கள் அடையாளம் காணப்படவில்லை.

- 2008 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க நகர குடியேற்ற அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் துணைப்பிரிவு 16 (1) (உ) இன் விதிகளின்படி, குறைந்த விலை வீட்டுத் திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காக சொத்து மேம்பாட்டாளர்களிடமிருந்து சேவைக் கட்டணமாக நகர அபிவிருத்தி அதிகாரசபையால் சேகரிக்கப்பட்ட அனைத்துப் பணங்களும் நகர குடியேற்ற அபிவிருத்தி அதிகாரசபை நிதியில் வரவு வைக்கப்பட வேண்டும் எனினும், 2010 டிசம்பர் 14 திகதியிட்ட அமைச்சரவையின் இலக்கம் 10/2951/504/012 தீர்மானத்தின்படி, நகர அபிவிருத்தி அதிகாரசபை இந்த சேவைக் கட்டணங்களை அறவிடுவதை நிறுத்தியதால் நகர குடியேற்ற அபிவிருத்தி அதிகாரசபை அந்த வருமானத்தை இழந்திருந்தது. சேவைக் கட்டணம் நிறுத்தப்பட்ட நேரத்தில், நகர அபிவிருத்தி அதிகாரசபை சேவைக் கட்டணத் தொகையான ரூபா. 207.33 மில்லியனை 2021 ஆம் ஆண்டின் இறுதிக்குள் நகர்ப்புற குடியேற்ற மேம்பாட்டு அதிகாரசபையிடமிருந்து பெறத் தவறிவிட்டது.

இலங்கை நில மீட்பு மற்றும் அபிவிருத்தி நிறுவனம்

- 2021 ஆம் ஆண்டில், கெரவல பிட்டிய கடல் மணல் சலவைத் திட்டத்தின் மூலம் ரூபா.46.8 மில்லியன் வருமானம் எதிர்பார்க்கப்பட்டது. அதன்படி, கடல் மணலை சுத்தம் செய்து மாநகராட்சிக்கு வழங்கும் திட்டத்தில், 2021 இல் 36,000 கியூப் மணல் வழங்க திட்டமிடப்பட்டபோதிலும் உண்மையில் 24,729 கனசதுரங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. மேலும் இந்த திட்டத்தின் மூலம் 2021 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் உண்மையான வருமானம் ரூபா. 32.10 மில்லியன் மட்டுமே எதிர்பார்த்த வருவாயில் 68 சதவீதமாக இருந்தது. அத்துடன் இத்திட்டத்திற்குத் தேவையான பேக்ஹோ மற்றும் டிப்பர்கள் வாடகை அடிப்படையில் பெறப்பட்டதுடன் அதற்காக மொத்த வருமானத்தில் 15 வீதமான ரூபா 4.48 மில்லியன் செலவிடப்பட்டது.

- நிறுவனத்தின் தாய் நிறுவனமான இலங்கை நில அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையின் 2018 ஒக்டோபர் 04 அன்று எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி ரூபா. 200 மில்லியன் நிறுவனத்திற்கு கடன் வழங்கியதுடன் நிறுவனம் கடன் தொகை உட்பட ரூபா. 382.50 மில்லியன் செலவில் நீண்டகால வணிக முயற்சியாக தொடங்கப்பட்ட மேற்கண்ட திட்டம் தோல்வியடைந்த திட்டமாக முடிவு செய்யப்பட்டு, 2 ஆண்டுகள் கழித்து 2020-ம் ஆண்டு இறுதிக்குள் உரிய நிலத்தை வழங்க அதிகாரசபை ஏற்பாடு செய்தது. அதன்படி, நீண்ட கால குத்தகை அடிப்படையில் இத் திட்டத்திற்காக ஒரு தனியார் நிறுவனத்துக்கு செலுத்தப்பட்ட ரூபா.

382.50 மில்லியன் செலவினம் வீன் செலவாகிவிட்டது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை

மாதிரி கிராம திட்டம்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையானது 2017 ஆம் ஆண்டு மாதிரி கிராமத் திட்டத்தை ஆரம்பித்து அதே வருடத்தில் 12,500 வீட்டுத் தொகுதிகளை உள்ளடக்கிய 500 திட்டங்களை நிர்மாணிக்க திட்டமிட்டிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டின் இறுதியில் 368 கிராமங்கள் மட்டுமே கட்டி முடிக்கப்பட்ட போதிலும் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 10,159. அதற்காக செலவிடப்பட்ட தொகை ரூபா 4,798 மில்லியன். 2021 ஆம் ஆண்டு இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூபா.176.4 மில்லியனாக இருந்தாலும், 07 மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா.84.3 மில்லியனில் ரூபா.47 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. மேலும், 44 மாதிரி கிராமங்களில் 957 வீடுகள் கட்டும் பணிகள் தொடங்கப்பட்டு பாதியில் நிறுத்தப்பட்டன.

விரும்பிய இலக்கை எட்டாத / செயல்படுத்தப்படாத வீட்டுத் திட்டங்கள்

- 2021 ஆம் ஆண்டில், மிகிந்து வீட்டுத் திட்டத்திற்காக ரூபா.750 மில்லியன் செலவில் 2,000 வீட்டுப் பிரிவுகளின் பணியைத் தொடங்கவும், 500 வீட்டு அலகுகளின் பணிகளை முடிக்கவும் திட்டமிடப்பட்டது, ஆனால் 1,242 வீட்டு அலகுகளின் பணிகள் தொடங்கப்படவில்லை மற்றும் 299 வீட்டு வசதிகள் கட்டி முடிக்கப்படவில்லை. மேலும் விரு சுமித்துரு வீடுகள், பஸ்து தாக்குதலினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான வீடுகள், புகலிட வீடுகள் ஆகிய திட்டங்களின் கீழ் 1,245 வீட்டுத் தொகுதிகளை பூர்த்தி செய்வதற்கு ரூபா 587.86 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது ஆனால் கட்டுமான பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

- 2021 ஆம் ஆண்டு பழைய வீட்டுத் தொகுதிகளின் திருத்தம் மற்றும் வீடமைப்பு இழப்பீடுகளுக்காக ரூபா.110 மில்லியன் ஒதுக்கப்பட்ட போதிலும் அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் 2016 முதல் 2019 வரை நடைமுறைப்படுத்தப்பட்ட 13 வீட்டுக் கடன் மற்றும் உதவித் திட்டங்கள் தொடர்பாக வீடுகளை நிர்மாணிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட 150,770 வீட்டு அலகுகளில் முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 55,225 மற்றும் இத் திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்ட 4,987 வீட்டு அலகுகளின் கட்டுமானப் பணிகள் நிறுத்தப்பட்டன.

கூட்டு அபிவிருத்தி திட்டங்கள்

2004 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில், முறையே தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின், நாவல பறங்கிய கும்புரா எனும் பகுதியில் 05 ஏக்கர் 10 பேர்ச்சஸ் மற்றும் கொழும்பு 10 டார்லி வீதியில் அமைந்துள்ள 01 ஏக்கர் 26.5 பேர்ச்சஸ் காணியில் வீடுகள் மற்றும் வணிக வளாகங்களின் 02 கூட்டு அபிவிருத்தித் திட்டங்களை நிர்மாணிப்பதற்கு தனியார் துறை நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டிருந்தது. 2022 செப்டம்பர் வரை இத்திட்டப் பணிகள் முழுமையடையவில்லை. மேலும் நிறுவனங்கள் நிலத்தை வங்கிகளில் அடமானம் வைத்து பணம் சம்பாதித்ததால், நிலத்தின் உரிமையை மீட்டெடுக்க அதிகார சபை சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

கொண்டமேனியம் முகாமை அதிகார சபை

- சட்டத்தின் பிரிவு 09 (அ)(1) இன் படி, குடியிருப்பு சொத்துக்களில் அங்கீகரிக்கப்படாத கட்டுமானம் தொடர்பாக பெறப்பட்ட புகார்கள் குறித்து விசாரணை நடத்தி உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும், ஆனால் 2013 முதல் 2021 வரை பெறப்பட்ட 16 புகார்கள் குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

- பொது வசதிகள் தொடர்பாக கொண்டமேனியம் சொத்தின் ஒரு பகுதியை வாங்குபவர் எழுதிய எழுத்துப்பூர்வ புகாரை சட்டத்தின் பிரிவு 9 (ஆ) இன் படி நடவடிக்கை எடுக்கலாம், ஆனாலும் பெறப்பட்ட 75 புகார்கள் தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

- 2003 இன் 5 (இ) பொது வசதிகள் சபையின் (திருத்தம்) சட்டம் இல. 24 இன் படி, கொண்டமேனியம் சொத்துக்களுக்காக நிறுவப்பட்ட நிர்வாகக் கூட்டுத்தாபனத்தின் முகாமை மற்றும் கட்டுப்பாடு அதிகார சபையால் செய்யப்பட வேண்டும், ஆனால் 2020 டிசம்பர் 31, நிலவரப்படி 1,079 நிர்வாகம் கழகங்கள் அதிகாரசபையின் கீழ் நிறுவப்பட்டு 2021 டிசம்பர் 31, அன்று அது 951 ஆகக் குறைக்கப்பட்டது. அந்த 951 பேரில் 557 செயலிழந்து விட்டதாகவும், அதற்கேற்ப அதிகாரசபை முறையான விதிமுறைகளை வகுக்கவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.

- கொண்டமேனியம் சொத்துச் சட்டத்தின் கீழ் 1982 ஆம் ஆண்டின் 45 ஆம் இல. கொண்டமேனியம் (திருத்தம்) சட்டத்தின் முதன்மைச் சட்டத்தின் அட்டவணையின் 3(2) இன் கீழ், நிர்வாக நிறுவனங்களின் வருடாந்திர பொதுக் கூட்டங்கள் மற்றும் பிரிவு 8(4) (அ) இன் படி நடத்தப்படும். நிறுவனத்தின் வருடாந்திர கணக்காய்வு செய்யும் கணக்குகளின் நகலை அதிகாரசபையிடம் சமர்ப்பிக்க வேண்டும். ஆனால் 101 நிர்வாகக் கழகங்களின் ஆண்டுப் பொதுக் கூட்டம் 15 முதல் 37 மாதங்கள் ஆகியும் கூட நடத்தப்படவில்லை. மேலும், கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டு கணக்கு அறிக்கைகளை சமர்ப்பிப்பது தொடர்பான விசாரணை மற்றும் கண்காணிப்பை அதிகாரசபை நடத்தவில்லை.

தேசிய பௌதீக திட்டமிடல் துறை

- 2000 ஆம் ஆண்டின் 49 ஆம் எண் நகர மற்றும் கிராம திட்டமிடல் (திருத்தம்) சட்டத்தின் பிரிவு 07 இன் படி, தேசிய இயற்பியல் வடிவமைப்பு கொள்கைகள் மற்றும் தேசிய இயற்பியல் திட்டம் ஆகியவற்றை 2022 ஜனவரி 31, க்குள் தயாரித்து முடிக்க வேண்டும், மேலும் 2021 ஆம் ஆண்டில் பௌதீகத் திட்டத்திற்காக் ரூபா.1,240,938 செலவிடப்பட்டுள்ளது. ஆனால் 2022 மார்ச் 31 வரை இந்த நடவடிக்கைகள முடிக்கப்படவில்லை.

- லோலுகஸ்வெவ நகர திட்டமிடல் திட்டத்திற்கு 2016 முதல் 2021 வரை மொத்தமாக ரூபா.634.7 மில்லியன் ஒதுக்கப்பட்டது. அநுராதபுரம் பூஜை தளத்தில் குடியிருப்புகளை விரிவுபடுத்துதல் மற்றும் அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களை அகற்றுதல் மற்றும் 2021 ஆம் ஆண்டுக்குள் ரூபா 13.41 மில்லியன் அதாவது 2.1 சதவீதம். 05 வருடங்களில்

ஒதுக்கப்பட்டதுடன் சாத்தியக்கூறு ஆய்வு, திட்ட அலுவலகம் கட்டுதல் மற்றும் நிலம் வரையறுத்தல் மட்டுமே மேற்கொள்ளப்பட்டது. பூஜா தளத்தில் வசிப்பவர்களை லொலுகஸ்வெவ நகருக்கு இடம் மாற்றுவது தொடர்பான சமூகப் பிரச்சனைகள் தொடர்பில் கவனம் செலுத்தாமையால் இத்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கங்களை அடைய முடியவில்லை.

- கிழக்கு, ஊவா மற்றும் வடக்கு மாகாணங்களுக்கான 03 பிராந்திய பௌதீகத் திட்டங்களை தயாரிப்பதற்கு 2021 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், இந்தத் திட்டங்கள் தயாரிக்கப்படவில்லை. கூடுதலாக, பிராந்திய நிறுவனங்களால் தயாரித்து வழங்கப்பட்ட 20 திட்டங்களில் 13 (சிறிய நகரங்கள் அல்லது சேவை மையங்கள்) ஆண்டு இறுதி வரை தயாரிக்கப்படவில்லை.

மாகாண சபைகள் தொடர்பான அறிமுகம்

மாகாண சபைகள் தொடர்பான அறிமுகம்

1987 ஆம் ஆண்டின் போது பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட 13 ஆவது அரசியலமைப்பின் திருத்தத்தினால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட 154 அ (1) உறுப்புரையின் மூலம் மாகாண சபைகள் தோற்றுவிக்கப்பட்டன. மாகாண சபைகளின் எண்ணிக்கை 09 ஆகும். அதாவது மேல், வடமேல், ஊவா, சப்ரகமுவ, மத்தி, கிழக்கு, தெற்கு, வடமத்தி, வடக்கு என்பனவாகும்.

ஒரு மாகாண சபை ஆளுநரின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படுவதுடன் பிரதம செயலாளர் நிருவாக உத்தியோகத்தராகச் செயற்படுவார். சட்டவாக்க சபையின் பிரதானியாக பிரதம அமைச்சர் செயற்படுவதுடன் பிரதம அமைச்சர் உள்ளடங்கலாக 05 அமைச்சர்களை மாகாண சபை உள்ளடக்கியிருக்கும்.

மாகாண சபைகளில் பின்பற்றவேண்டிய நடைமுறைகள், மாகாண சபைகள் அரசாங்க சேவைக்குரிய விடயங்கள் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட அல்லது அவற்றிற்கு துணையான விடயங்கள் தொடர்பான ஒழுங்குவிதிகளை வழங்குவதற்காக 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள 09 மாகாண சபைகளின் உத்தியோகபூர்வமான காலம் முடிவடைந்துள்ளதனால் அரசியலமைப்பின் 154 (உ) உறுப்புரையிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் அச்சபைகள் கலைக்கப்பட்டுள்ளதாகக் கருதப்பட்டுள்ளது. அதற்கிணங்க "சபை" இல்லாமை உருவாகிய திகதியிலிருந்து 1989 இன் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (துணையான ஒழுங்குவிதிகள்) அதிகாரச் சட்டத்தின் 2(1) (அ) பிரிவிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் ஒவ்வொரு மாகாண சபையின் ஆளுநரினால் மாகாண சபைகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மாகாண சபையிலும் காணப்பட்ட கடைசியாக "மாகாண சபை" ஆரம்பிக்கப்பட்ட மற்றும் முடிவடைந்த திகதிகள் கீழே தரப்படுகின்றன.

மாகாண சபை	கடைசி மாகாண சபை ஆரம்பித்த திகதி	கடைசி மாகாண சபை முடிவடைந்த திகதி
மேல்	2014-04-22	2019-04-21
வடமேல்	2013-10-11	2018-10-10
ஊவா	2014-10-09	2019-10-08
சப்ரகமுவ	2012-09-27	2017-09-26
மத்தி	2013-10-09	2018-10-08
கிழக்கு	2012-10-01	2017-09-30
தெற்கு	2014-04-11	2019-04-10
வடமத்தி	2012-10-02	2017-10-01
வடக்கு	2013-10-25	2018-10-23

ஒவ்வொரு மாகாண சபையினாலும் சபை நிதியத்தின் நிதி நிலைமையை வெளிப்படுத்தும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையின் பிரகாரம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்

சட்டத்தின் 23 (1) ஆம் பிரிவின் பிரகாரம் அக்கணக்குகளின் கணக்காய்வு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் செய்யப்படுதல் வேண்டும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது மாகாண சபைகளினால் அட்டுறு அடிப்படை, காசு அடிப்படை அல்லது மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படை ஆகிய ஒன்றுக்கொன்று மாற்றமான அடிப்படைகள் பயன்படுத்தப்பட்டிருந்தன எனவும் அவதானிக்கப்பட்டது. மேலும் சில மாகாண சபைகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்கவும் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்திருந்தன. அதற்கிணங்க நிதிக்கூற்றுக்களை ஒப்பீட்டு ரீதியாக பயன்படுத்தும் இயலுமை இருக்கவில்லை.

மாகாண சபையின் வருமானம் பிரதானமாக அரசாங்க மானியம், வரி வருமானம், வரியற்ற வருமானம் போன்ற பல்வேறு மூலகங்களை உள்ளடக்கியிருந்தன. 2021 ஆம் ஆண்டில் 09 மாகாண சபைகளின் மொத்த வருமானம் ரூபா 383,222 மில்லியனாக இருந்ததுடன் அது 2020 ஆம் ஆண்டில் 09 மாகாண சபைகளின் மொத்த வருமானமாகிய ரூபா 346,561 மில்லியனை விட 11 சதவீத அதிகரிப்பாகும். அவ்வாறே 2021 ஆம் ஆண்டிற்கான 09 மாகாண சபைகளின் மொத்த செலவுகள் ரூபா 361,937 மில்லியனாக இருந்ததுடன் அது 2020 ஆம் ஆண்டிற்கான 09 மாகாண சபைகளின் மொத்த செலவாகிய ரூபா 335,001 மில்லியனை விட 8 சதவீத அதிகரிப்பாகும்.

2021 ஆம் ஆண்டின் போது 09 மாகாண சபைகளுக்காக திறைசேரியிடமிருந்து ரூபா 310,852 மில்லியன் கிடைத்திருந்ததுடன் அது 2020 ஆம் ஆண்டில் கிடைத்த ரூபா 284,395 மில்லியனைவிட 9 சதவீத அதிகரிப்பாகும். அவ்வாறே மாகாண சபைகளின் செலவுகளில் 85 சதவீதத்திற்காக திறைசேரி மானியங்களிலிருந்தே பங்களிப்புக்கள் கிடைத்திருந்தன.

2020 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண சபையிடம் காணப்பட்ட ரூபா 247,355 மில்லியன் மொத்த தொகையான நடைமுறையற்ற சொத்துக்கள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 316,256 மில்லியனாகக் காணப்பட்டது என்பதனை நிதிக்கூற்றுக்கள் வெளிப்படுத்தியுள்ளன.

.

மேல் மாகாண சபை

கணக்காய்வு அவதானிப்பு

- குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்
- முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்
- சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்
- மனிதவள முகாமைத்துவம்

மேல் மாகாண சபை

மேல் மாகாண சபையினால் 2021 ஆண்டிற்காக ரூபா 54,478 மில்லியன் தொகை அரச மானியத்தின் மூலமும், உள்ளக வழிகளின் மூலம் ரூபா 8,377 மில்லியன் தொகையும், அரச வருமான மாற்றத்தின் மூலம் ரூபா 6,720 மில்லியன் தொகையும், மற்றும் முத்திரை மற்றும் நீதிமன்றத் தண்டப்பணப் பெறுவனவு ரூபா 18,200 மில்லியன் தொகையுமாக மொத்தம் ரூபா 87,775 மில்லியனிற்கான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மீண்டுவரும் செலவுகளுக்காக ரூபா 79,497 மில்லியன் தொகையும், மூலதனச் செலவுகளுக்காக ரூபா 79,497 மில்லியன் தொகையும், மூலதனச் செலவுகளுக்காக ரூபா 8,278 மில்லியன் தொகையுமாக மொத்தம் ரூபா 87,775 மில்லியன் தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2021 ஆண்டின் போது அரசாங்க மானியத்தின் மூலம் ரூபா 48,965 தொகையும், உள்ளக வழிகளின் மூலம் ரூபா 33,287 மில்லியன் தொகையுமாக மொத்தம் ரூபா 82,252 மில்லியனிற்கான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. மீண்டுவரும் செலவுகள் ரூபா 66,424 மில்லியன் தொகை மற்றும் மூலதனச் செலவுகள் ரூபா 4,178 மில்லியன் தொகையாக ரூபா 70,602 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பான விபரங்கள் வரைபடம் 63 இல் காண்பிக்கப்படுகின்றது.



	2017	2018	2019	2020	2021
மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா மில்லியன்	69இ135	76இ984	81இ281	82இ058	87இ775
உள்ளபடியான வருமானம் ரூபா மில்லியன்	62இ584	68இ132	66இ530	71இ471	82இ252
மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா மில்லியன்	69இ135	76இ984	81இ281	82இ058	87இ775
உள்ளபடியான செலவினம் ரூபா மில்லியன்	62இ181	69இ454	68இ971	70இ300	70இ602

வரைபடம் 63 - மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகள்

மூலம் - மேல் மாகாண சபை நிதிக் கூற்றுக்கள்

மேல் மாகாண சபை தொடர்பாக 2021 ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக கீழே காண்பிக்கப்படுகின்றது.

குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

- மேல் மாகாண விவசாய, காணி, நீர்ப்பாசன, மீன்பிடி, கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார மற்றும் கமநல அபிவிருத்தி அமைச்சின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் மீன்கள் மற்றும் இறால்களின் பெறுமதிகளை அதிகரித்து உற்பத்தியினை சந்தைக்கு அறிமுகப்படுத்தும் செயற்திட்டத்திற்குரிய டின் மீன் உற்பத்தி செய்வதற்கு தேவையான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது ரூபா 19.42 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

  இந்த செயற்திட்டத்திற்குரிய உற்பத்தி அலுவல்கள் ஆரம்பிப்பதற்காக குறிப்பிட்ட வல்பிட பயிற்சி நிலைய வளவில் நிர்மாணிக்கப்பட்டு வந்த கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் 2022 ஜுன் 30 திகதியளவிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும் அந்தக் கட்டிடத்தில் பொருத்துவதற்காக தேவையான இயந்திர உபகரணங்கள் 2020 திசெம்பர் மாதத்தில் கொள்வனவு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அந்த கொள்வனவு செய்திருந்த இயந்திர உபகரணங்கள் அந்த பயிற்சி நிலையத்தின் முற்றவெளியில் 2022 ஜனவரி மாதம் வரை பாதுகாப்பற்ற முறையில் காணப்பட்டது. மேலும், இந்த இயந்திர உபகரணங்களில் உத்தரவாத காலமும் கடந்து சென்றிருந்ததுடன், நீண்ட காலம் பாதுகாப்பற்ற இடமொன்றில் பயன்படுத்தாமல் காணப்பட்டமையால் அந்த இயந்திரங்கள் துருப்பிடித்திருந்ததுடன், அவற்றின் செயற்பாடுகள் தொடர்பாக சிக்கல் தன்மையொன்று மற்றும் ஆபத்து நிலைமை ஒன்று ஏற்படுவதற்கு வாய்ப்பிருந்தது.

- மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மற்றும் அரசாங்கத்துடன் தொடர்புடைய நிறுவனங்களின் மூலம் 1990 ஆணடு முதல் அதிகார சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த பல்வேறு இடங்களில் அமைந்துள்ள ஆரம்ப சாட்டுதல் பெறுமதியொன்று காணப்படாத 1,698.3 பர்சஸிற்கான 17 காணிப் பகுதிகள் அதிகார சபையினால் ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நெறிப்படுத்துவதற்கு அல்லது அதிகார சபைக்கு பயனில்லாத காணிகளை உரித்தாக்கிய நிறுவனங்களுக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், அவற்றில் அங்கீகாரம் இன்றி வதிவோர் பயன்படுத்தியிருந்த 1,173.1 பர்சஸ் இற்கான 12 காணிப் பகுதிகள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதி வரை தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

- உள்ளூராட்சி ஆணையாளர் செயற்திட்ட அதிகாரியாகிய **N207183144502** இலக்கம் கொண்ட ஹொரன மாவக்ஒய வசதி நிலையம் மற்றும் தேசிய உணவகம் நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக 2021 திசெம்பர் 31 திகதி அளவில் ரூபா 2.13 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும், 2022 ஜுன் 30 திகதி அளவில் தேசிய உணவகம் வியாபார அலுவல்கள் மேற்கொண்டிருக்காமையால்

செயற்திட்டத்தின் குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்

2018 ஜூலை 18 மற்றும் 03/2018 இலக்கம் கொண்ட முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் பிரகாரம் தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் பரிந்துரை மற்றும் திறைசேரியின் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் பூர்வாங்க அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் தனது நிறுவனங்களில் பதவியணியினருக்கு செலுத்தப்படும் சம்பளங்கள் மற்றும் படிகள் தீர்மானிக்கக் கூடாது எனினும், அந்த அறிவுரைகளுக்கு இணங்கி செயற்பட முடியாத சந்தர்ப்பங்களில் அது தொடர்பான பொறுப்புக்கள் பிரதான செயலாளர் மேற்கொள்ள வேண்டும் என அறிவித்திருந்த போதிலும் அதற்கு முரணான 2004 ஆகஸ்ட் 01 திகதி முதல் மேல் மாகாண சபை செயலகத்தின் அலுவலர்களுக்கு சம்பளத்திற்கு மேலதிகமாக 1/3 இற்கான படியொன்று செலுத்தப்பட்டிருந்தது. 2020 முதல் 2021 ஆண்டு ஜூலை வரை செலுத்தியிருந்த படியின் பெறுமதி ரூபா 5.11 மில்லியன் தொகையாகும். மேலும், 2019 மார்ச் 29 ஆம் திகதிய PS/PCMD/SD/01/08 இலக்கம் கொண்ட அனைத்து ஆளுனர்களையும் விழித்திருந்த ஜனாதிபதி செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் அமைச்சரவையின் கட்டளையின் படி, மாகாண அரச சேவை உத்தியோகத்தர்களுக்காக சம்பளத்திற்கு மேலதிகமாக செலுத்தப்படும் படியை தீர்மானிக்கும் போது தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் மற்றும் நிதி ஆணைக்குழுவின் பரிந்துரையை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவித்திருந்த போதிலும், தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் பரிந்துரையை பெற்றுக்கொள்ளாமல் மேற்கூறிய படி செலுத்தப்பட்டிருந்தது.

சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

- பொறியியல் பணியகத்தினால் ஆவண முகாமைத்துவ முறைமையொன்று தயாரித்தல் மற்றும் செய்முறை சுயமாக இயங்கும் முறைமையொன்று நிறுவுவதற்காக 2018 திசெம்பர் 28 திகதி ரூபா 7.5 மில்லியன் தொகை மற்றும் 2021 திசெம்பர் 31 திகதி ரூபா 6.42 மில்லியன் தொகையாக மொத்தம் ரூபா 13.92 மில்லியன் தொகை மேல் மாகாண தகவல் தொழில்நுட்ப வள அபிவிருத்தி நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. 2019 ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த இந்த ஆவண முகாமைத்துவ முறைமை நிறுவுதல் 2022 ஜூன் 30 திகதி அளவிலும் பூர்த்தி செய்திருக்காததுடன் ஆவண முகாமைத்துவ முறைமையின் மூலம் எதிர்ப்பார்த்த குறிக்கோளுக்காக ஈடுபடுத்துவதில் பௌதீக முன்னேற்றம் ஒன்றினை பணியகம் பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

- வர்த்தகப் பெயர் பதிவு செய்யும் திணைக்களத்தினால் ரூபா 8.63 மில்லியன் செலவிடப்பட்டு வியாபார பதிவுசெய்தல் சான்றிதழ் வழங்குவதற்காக மென்பொருள் ஒன்று 2020 ஜூன் 16 திகதி கொள்வனவு செய்திருந்தது. எனினும், பிரதேச செயலகங்களுக்கு மென்பொருள் தகவல்களை உட்படுத்துவதற்கு பிரவேசிக்கும் வசதிகள் வழங்கியிருக்காமையால் மற்றும் மேல் மாகாணத்தில் தற்போது பதிவு செய்திருந்த வியாபார நிறுவனங்கள் தொடர்பான தகவல்கள் உட்படுத்தியிருக்காமையால் 2022 ஜூன் 30 திகதி வரை மென்பொருளை

கொள்வனவு செய்த குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

மனிதவள முகாமைத்துவம்

மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பல்வேறு செயற்திட்டங்கள் மற்றும் கருமங்களுக்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணி 346 ஆகும். இந்த பதவியணிக்கு மேலதிகமாக துள்ளியமான அடிப்படையில் ஊழியர்கள் 396 பேரும், ஒப்பந்த அடிப்படையில் 160 பேருமாக அதிகார சபையின் அலுவல்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை மிகைத்து 556 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், மனிதவள திட்டம் தயாரித்து அதன்படி, பதவியணியை அங்கீகரித்துக்கொள்வதற்காக 2022 ஜுன் 30 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

மத்திய மாகாண சபை

கணக்காய்வு அவதானிப்பு

- நிதிப்பெறுபேறு
- மாகாண அபிவிருத்தி
- கூடுதலாக செலுத்தப்பட்ட படிகள்
- கடன் மீதிகளை தீர்ப்பனவு செய்யாமை
- தவறான கொடுப்பனவுகள்
- நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்
- சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்
- விளைவற்ற / குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்
- பெறுகைகள்
- உள்ளகக் கணக்காய்வு
- தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வு பந்திகள்

மத்திய மாகாண சபை

மத்திய மாகாண சபையால் 2021 ஆம் ஆண்டிற்காக ரூபா 42,070 மில்லியன் அரசாங்க மானியத்தின் மூலமும், உள்ளக மார்க்கங்களில் ரூபா 5,951 மில்லியனுமாக ரூபா 48,021 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டின் மீண்டெழும் செலவினமாக ரூபா 43,175 மில்லியனும் மூலதனச் செலவினமாக ரூபா 6,885 மில்லியனுமாக மொத்தம் ரூபா 50,060 மில்லியனைப் பயன்படுத்துவதற்கு மதிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டின் போது அரசாங்க மானியத்தின் மூலம் ரூபா 40,906 மில்லியனும் உள்ளக மார்க்கங்கள் மூலம் ரூபா 4,905 மில்லியனுமாக ரூபா 45,811 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டின் போது மீண்டெழும் செலவினமாக ரூபா 41,676 மில்லியனும் மூலதனச் செலவினமாக ரூபா 3,527 மில்லியனுமாக ரூபா 45,203 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான விபரங்கள் உரு 64 இல் காட்டப்பட்டுள்ளது.



உரு 64 – மதிப்பீடு செய்யப்பட்டிருந்த மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினம் மூலம் - மத்திய மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள்

மத்திய மாகாண சபைக்குரிய 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

நிதிப்பெறுபேறு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிறைவடைந்த ஆண்டுக்கான மாகாண சபையின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 40,297 மில்லியனாக காணப்பட்டதுடன் அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் வருமானம் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 38,096 மில்லியன் ஆனமையால் நிதிப்பெறுபேறுகளில் ரூபா 2,201 மில்லியன் வீழ்ச்சியொன்று நிலவியது.

2021 ஆம் ஆண்டுக்காக மத்திய மாகாண சபையில் ரூபா 45,811 மில்லியனான மொத்த வருமானத்தில் ரூபா 40,906 மில்லியனான அரச மானியங்களாக காணப்பட்டதுடன் ரூபா 45,203 மில்லியனான மொத்த செலவினத்தில் மூலதன செலவினம் ரூபா 3,526 மில்லியன் ஆகும்.

மாகாண அபிவிருத்தி

- மத்திய மாகாண அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 2,962 மில்லியன் மதிப்பீட்டு பெறுமதியுடைய 1783 பணி முன்மொழிவுகளில் ரூபா 16.31 மில்லியனான புதிய 08 பணி முன்மொழிவுகள் ஆரம்பிக்கப்பட்டிராததுடன் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 166.37 மில்லியனான 29 புதிய பணி முன்மொழிவுகளின் செயல்முன்னேற்றம் 50 சதவீதத்தினை விட குறைவாக நிலவியது. மதிப்பீட்டு பெறுமதி ரூபா 273.26 மில்லியனான முழுமையாக பணிகள் நிறைவு செய்யப்படாத "50 சதவீதத்திற்கு அதிகமாக பூர்த்தி செய்யப்பட்ட" எனுமாறு குறிப்பிடப்பட்டுள்ள பணி முன்மொழிவுகளின் எண்ணிக்கை 54 ஆகும்.
- மாகாண விவசாய திணைக்களம் 2021 ஆம் ஆண்டின் போது மாகாண குறித்துரைக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் செயற்படுத்தப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களுக்குரியதாக பகிர்ந்தளிக்கப்பட்ட உபகரணங்கள் மற்றும் பொருட்களுக்காக நலனாளிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 2.88 மில்லியன் 2022 மே 26 ஆந் திகதி வரையிலும் நலனாளிகளிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

கூடுதலாக செலுத்தப்பட்ட படிகள்

- 2006 திசெம்பர் 05 ஆந் திகதிய NSCC/3/01 Allowances ஆம் இலக்க தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் தலைவரின் கடிதத்தின் பிரகாரம் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் தலைவரினதும் அங்கத்தவர்களினதும் மாதாந்த படிகள் முறையே ரூபா 15,000 மற்றும் ரூபா 10,000 ஆக வேண்டும். மாகாண பிரதம செயலாளருக்கு முகவரியிடப்பட்ட திறைசேரி, நிதி மற்றும் வெகுசன ஊடாக அமைச்சின் செயலாளரின் 2018 யூலை 18 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் (i)ஆ மற்றும் (ii)

பந்திகளுக்கு இணங்க தேசிய சம்பளம் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் பொதுத்திறைசேரியின் முன்அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாது ஆளுனரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டிற்காக மாத்திரம் தலைவருக்கும் அங்கத்தவர்களுக்கும் ரூபா 1.28 மில்லியனான மாதாந்த படிகள் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தன.

- சபையின் செயலாளரின் அலுவலகத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டிருந்த இரு வாகனங்கில் ஒரு வாகனம் 2018 மார்ச் 21 ஆந் திகதி தொழில்நுட்ப கோளாறுக்கு உள்ளாகி 2018 யூன் 04 ஆந் திகதி முதல் பொருத்தமானதொரு வாகனத்தை பெற்றுத்தரும் வரையிலும் ரூபா 95,000 ஆன மாதாந்த படி ஆளுனரின் அங்கீகாரத்துடன் செலுத்தப்பட்டிருந்தது. 2018 யூன் 05 ஆந் திகதி பிரதம செயலாளரினால் வாகனமொன்று தலைவருக்கு இணைப்புச் செய்யப்பட இயலும் என குறிப்பிடப்பட்டிருந்ததுடன் 2020 சனவரி 24 ஆந் திகதி வரையிலும் ஆளுனரின் செயலாளரினால் ஜீப் வண்டி பழுதுபார்க்கப்பட்டு தலைவருக்கு வழங்குமாறு சபையின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2020 யூன் 01 ஆந் திகதி பிரதம செயலாளரினால் ஜீப் வண்டி பழுதுபார்க்கப்படும் வரையிலும் கெப் வண்டியொன்று தலைவருக்கு வழங்குமாறு ஆளுனரின் செயலாளருக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அதற்கு மாற்று சந்தர்ப்பங்கள் எவை தொடர்பிலும் கருத்திற்கொள்ளாது 2018 ஆகஸ்ட் மாதம் முதல் 2021 நவம்பர் மாதம் வரையிலும் மாதமொன்றிற்கு ரூபா 95,000 படி ரூபா 3.8 மில்லியனான தொகை வாகன படிகளாக தலைவருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

கடன் மீதிகளை தீர்ப்பனவு செய்யாமை

- 2004 ஒக்தோபர 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் 03 மாதங்களுக்கு பின்னர் காண்பிக்கப்படாதவாறு தீர்ப்பனவு செய்யப்பட வேண்டியதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் மத்திய மாகாண சபையினுள்ளும் அதற்கு புறம்பாக ஏனைய அமைச்சு / திணைக்களங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற 422 உத்தியோகத்தர்களின் ரூபா 21.12 மில்லியன் கூட்டுத்தொகையான கடன் மீதி 03 மாதங்கள் முதல் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

- 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்

திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் இடமாற்றம் பெற்று வருகை தந்துள்ள உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் 02 மாதங்களுக்கு பின்னர் காண்பிக்கப்படாதவாறு தீர்ப்பனவு செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் மத்திய மாகாண சபையினுள்ளும் அதற்கு புறம்பாக ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களிலிருந்து இடமாற்றம் பெற்று வருகை தந்துள்ள 345 உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளின் கூட்டுத்தொகையான ரூபா 20.33 மில்லியன் 03 மாதம் முதல் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

தவறான கொடுப்பனவுகள்

- ஹங்குராங்கொத்த வலயக் கல்வி அலுவலகத்தில் சம்பளம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தரால் அவரது 06 தனிப்பட்ட வங்கி கணக்குகளுக்கு ரூபா 8.14 மில்லியன், அவரின் மனைவியின் 02 வங்கி கணக்குகளுக்கு ரூபா 1.88 மில்லியன் கணக்கு பிரிவின் அலுவலக உதவியாளரின் வங்கிக் கணக்கிற்கு ரூபா 0.79 மில்லியன் மற்றும் இனங்காணப்படாத 21 வங்கி கணக்குகளுக்கு ரூபா 2.53 மில்லியன் என ரூபா 13.34 மில்லியன் கூட்டுத்தொகையான பணம் தொடர்ச்சியாக 10 வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்தினுள் ஆதனக் கடன் கழிப்பனவுகள் மற்றும் சம்பள மீதிகளை பயன்படுத்தி ஹங்குராக்கெத்த வலயத்தின் கல்விப் பணிப்பாளரின் மக்கள் வங்கியின் மாகாண சபை நடைமுறைக் கணக்கின் ஊடாக முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த பணத்தில் 2022 செப்தெம்பர் 07 ஆந் திகதி வரையிலும் ரூபா 2.8 மில்லியன் தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது.
- 2016 முதல் 2021 வரையான காலப்பகுதியினுள் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் சம்பளப்பிரிவில் கடமைகளில் ஈடுபட்டுள்ள இரு உத்தியோகத்தர்களால் சம்பளம் செலுத்தும் போது அவர்களினதும் மற்றும் அவர்களுடன் தொடர்புடையவர்களின் 14 தனிப்பட்ட வங்கிக் கணக்குகளுக்கு ரூபா 51.96 மில்லியன் மற்றும் வங்கிக் கணக்கு இலக்கங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படாத ரூபா 1.07 மில்லியன் எளுமாறு ரூபா 53.03 மில்லியன் தவறுதலாக அனுப்பப்பட்டிருந்தது. சம்பளத் தொகுதிகளுக்குரிய ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் கணினி மென்பொருட்களை பின்னூட்டல் (Backup) முறையாகவும் முழுமையாகவும் சமர்ப்பிக்கப்படாமை மற்றும் கடவுச்சொல்லை நினைவில் வைத்திருக்காமை, தொழில்நுட்ப கோளாறு நிலவியமை ஆகிய காரணங்களினால் 02 கணனிகளின்

பின்னூட்டல்கள் (Backup) உள்நுழைய முடியாத காரணத்தினால் அந்தக் காலப்பகுதிக்குரியதாக மோசடி செய்யப்பட்டுள்ள மொத்த தொகையை திட்டவட்டமாக இனங்காணுவது சிக்கலுக்குரியதாக இருந்தது.

நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்

- மாகாண கல்வித் திணைக்களத்தில் தொடர்ந்தும் அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு அல்லது கைவிடுவதற்குள்ள நட்டங்கள் தொடர்பிலான கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதித் திகதியளவில் 5 முதல் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட மற்றும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட 90 சம்பவங்களின் கூட்டுத்தொகை ரூபா 7.71 மில்லியன் ஆகும்.

- மருந்துப் பொருட்களின் தேவைப்பாட்டினை இனங்கண்டு கட்டளையிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் மருந்துகளின் மிகையை தேவைப்பாடுடைய மருத்துவமனைகளை பகிர்ந்தளிப்பதற்கு அல்லது மருத்துவ வழங்கல் பிரிவிற்கு அழைத்து அனுப்பி வைப்பதற்கேனும் நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான கண்டி மருத்துவ வழங்கல் பிரிவின் கண்டி காச மருத்துமனையினதும் மாத்தளை பிரதான மருத்துவமனையினதும் ரூபா 15.41 மில்லியனான மருத்துவ இருப்புக்கள் காலாவதியாகியிருந்ததுடன் அவற்றுள் சில மருத்துப் பொருட்கள் காலாவதியாகி 03 வவருடங்கள் முதல் 14 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்தது. அவ்வாறே மேற்படி நிறுவனங்களில் காலாவதியாவதற்கு அண்மிய ரூபா 10.43 மில்லியனான மருந்துப் பொருட்கள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

- மத்திய மாகாணத்தின் சுகாதார திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட 65 வாகன விபத்துக்களுக்குரியதாக ரூபா 32.53 மில்லியனான அழிவு நட்டம் தொடர்பில் விபத்து இடம்பெற்று 01 முதல் 15 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

மத்திய மாகாண சபையின் ஆளுனரினதும் தலைவரனிதும் தனிப்பட்ட பதவியணியின் வருகை மற்றும் வெளிச்செல்கை தொடர்பில் 2009 யூன் 17 ஆந் திகதிய அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 09/2009(i) இன் பிரகாரம் கைவிரல் அடையாளம் இயந்திரம் மூலம் உறுதிப்படுத்தல்களை பேணுவதற்கோ 2021 ஒக்தோபர் 01 ஆந் திகதிய அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 02/2021(v)

இன் 07 ஆம் பந்தியின் பிரகாரம் வருகை மற்றும் வெளிச்செல்லல் பதிவேடொன்றினை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்காது மீளாய்வாண்டில் தனிப்பட்ட பதவியணியின் 22 ஊழியர்களுக்கு ரூபா 9.25 மில்லியன் சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

விளைவற்ற / குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

- மாகாண கல்வித் திணைக்களத்திற்குரிய மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபையினால் பயன்படுத்தப்படும் மெஸ்டா பென்ஸ் வண்டியை பழுதுபார்ப்பதற்காக ரூபா 1.01 மில்லியனான கிரயம் மேற்கொள்வதற்கு நேர்ந்தமையின் அடிப்படையில் அகற்றப்பட்ட வாகனமாக கருதி செயற்பட்டிருந்ததுடன் அதனை கைதவிர்க்காது 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் அலுவலக வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

- விசேட தேவைப்பாடுடைய நபர்களை இனங்கண்டு அதற்குரிய தீர்மானிக்கப்பட்ட உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும் அந்த நலனாளிகளுக்கு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் அவ்வாறில்லாது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 14.61 மில்லியன் கிரயமான உபகரணங்கள் 2022 மார்ச் 04 கணக்காய்வுத் திகதி வரையிலும் 63 நாட்கள் முதல் 04 வருடங்கள் 08 மாத காலப்பகுதி மத்திய மாகாண சமூக நலன்புரி நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை அலுவல்கள் தொடர்பான திணைக்களத்தின் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

- மப/கொத்/ரத்தனசார கல்லூரியின் வளாகத்தினுள் ரூபா 6.99 மில்லியனான செலவில் 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பணிகள் நிறைவு செய்யப்பட்ட வலயக் கல்வி அலுவலகத்தின் கட்டிடம் கணக்காய்வுத் திகதியான 2021 யூலை 29 ஆந் திகதி வரையிலும் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது.

- 2020 ஆகஸ்ட் மாதம் 20 ஆந் திகதி வெலிசறையில் அமைந்துள்ள தேசிய காசநோய் ஆராய்ச்சி கூடத்தின் (NTRL) கிடைத்திருந்த இரசாயன கூடத்தில் பயன்படுத்தப்படும் இரத்த மாதிரிகள் மற்றும் உபகரணங்களின் பரிசோதனையின் பின்னர் நுண்ணுயிர் நீக்கம் செய்யப்பட்டு வெளிவாரி சூழலுக்கு விடுவிப்பதற்கான ரூபா 1.1 மில்லியனான Auto Clave (50ml) இயந்திரத்தினை செயற்படுத்துவதற்காக உரிய அறிவு இல்லாதிருந்தமையால் பயன்படுத்தப்படாது ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கண்டி காசநோய் மருத்துவமனையில் விளைவற்றுக் காணப்பட்டது.

பெறுகைகள்

- 2021 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களின் கீழ் கொள்வனவு செய்தல் தொடர்பில் வழங்குனருடன் கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் வழங்குனரால் உபகரணங்களை வழங்கும் போது ஏற்பட்டிருந்த தாமதம் காரணமாக அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 1.27 மில்லியனான தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கு விவசாய திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

- அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரியதாக மத்திய மாகாண ஆளுனர் அலுவலகத்தினால் பிரதான பெறுகைகள் திட்டமொன்றோ அல்லது வருடாந்த விரிவான பெறுகைகள் திட்டமொன்றோ தயாரிக்கப்படாது ரூபா 3.77 மில்லியனான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

உள்ளகக் கணக்காய்வு

மத்திய மாகாண சபையின் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட வேண்டிய 2551 நிறுவனங்களில் 554 நிறுவனங்களில் உள்ளக கணக்காய்வினை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது 360 நிறுவனங்களே என்பதுடன் அவற்றில் கணக்காய்விற்கு உள்ளடக்கப்பட்டிருந்தது 194 நிறுவனங்கள் மாத்திரமே ஆகும்.

தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வு பந்திகள்

- 2018 நவம்பர் 19 ஆந் திகதி விபத்துக்குள்ளான தென்தெனிய ஆதார மருத்துவமனைக்கு இணைப்புச் செய்யப்பட்ட பிணியாளர் காவு வண்டியின் விபத்து தொடர்பில் பொலிஸ் அறிக்கை மற்றும் மோட்டார் வாகன பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் வாகனத்தின் இயந்திரக் கோளாறு இன்றி சாரதி அதிவேகத்தின் காரணமாகவே வண்டி கட்டுப்பாட்டை இழந்தமையால் இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள போது அந்த அறிக்கைகளை கருத்தில் கொள்ளாது அரசிற்கு ஏற்பட்ட நட்டமான ரூபா 7.41 மில்லியனான தொகை நிதிப்பிரமாணம் 104(4) விசாரணை அறிக்கையின் மூலம் புத்தகத்திலிருந்து பதிவழிப்பதற்கு அமைச்சின் செயலாளரால் பரிந்துரைக்கப்பட்டு பிரதம செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் 2020 ஆகஸ்ட் 13 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட நட்டத்தினை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு இருந்தது.

- கண்டி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் மூலம் சுவர்களுக்கு வெள்ளையடிப்பதற்கு தவறுதலாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 3.11 மில்லியன் அதற்குரிய 14 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்காக மத்திய மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரினால் 2018 யூன் 08 ஆந் திகதி மத்திய

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அப்பரிந்துரையை துரிதமாக நடைமுறைப்படுத்துமாறு பிரதம செயலாளரினால் 2019 மே 09 ஆந் திகதி மத்திய மாகாண சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் 2022 யூலை 12 ஆந் திகதி வரையிலும் அவற்றுள் 13 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 2.98 மில்லியனான தொகையை அறவிட்டிருக்கவில்லை.

- யுனிசெப் நிறுவனத்தினால் 2006 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் மத்திய மாகாண சமூக நலன்புரி நன்னடத்தை சிறுவர் பாதுகாப்பு சேவை அலுவல்கள் தொடர்பான திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 0.9 மில்லியனான 9 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் பெறுமதி வெளிப்படுத்தப்படாத 06 மோட்டார் சைக்கிள்கள் 14 நன்னடத்தை உத்தியோகத்தர்களுக்கும் தலைமை அலுவலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவருக்கும் அக்காலப்பகுதியினுள் களப் பரிசோதனையில் ஈடுபடுத்துவதற்கு வழங்கப்பட்டிருந்தது. அவ் உத்தியோகத்தர்களில் ஒருவர் தவிர, ஏனைய 14 பேரினால் 2014 ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் மூலம் கள உத்தியோகத்தர்களுக்காக வழங்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்கள், அவர்களால் பெற்றுக் கொள்ளப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் திணைக்களத்திற்கு மீள ஒப்படைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

தென் மாகாண சபை

கணக்காய்வு அவதானிப்பு

- கடனை அறவீடு செய்வதில் குறைபாடுகள்
- சொத்துக்கள் முகாமைத்துவம்
- பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்
- கட்டணங்களை அறவீடு செய்வதில் குறைபாடுகள்
- இடம்பெற்றுள்ள நட்டங்கள்
- சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை
- ஒப்பந்த நிர்வாகம்
- உடன்படிக்கைகளை மீறுதல்கள்

தென் மாகாண சபை

தென் மாகாண சபையினால் 2021 ஆம் ஆண்டிற்காக ரூபா 40,614 மில்லியன் அரசாங்க மானியத்தின் மூலமும் உள்ளக வழிகளின் மூலம் ரூபா 5,143 மில்லியனும் ஆக ரூபா 45,757 மொத்த தொகையான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அந்த வருமானத்தில் ரூபா 42,064 மில்லியன் மீண்டுவரும் செலவுகளாகவும் ரூபா 6,370 மில்லியன் மூலதனச் செலவுகளாகவும் ரூபா 48,434 மொத்த தொகையை பயன்படுத்துவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2021 ஆம் ஆண்டின் போது அரசாங்க மானியத்தின் மூலம் 39,506 மில்லியனும் உள்ளக வழிகளின் மூலம் ரூபா 6,258 மில்லியனுமாக ரூபா 45,764 மில்லியன் மொத்த தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டின் போது மீண்டுவரும் செலவுகள் ரூபா 40,985 மில்லியன் மற்றும் மூலதனச் செலவுகள் ரூபா 4,220 மில்லியன் ஆக ரூபா 45.205 மில்லியன் மொத்த தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதற்கிணங்க செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 559 மில்லியனாக இருந்தது.



	2017	2018	2019	2020	2021
செயற்பாட்டு வருமானம்	35585	33911	37107	39286	45757
வருமானம்	34970	36061	36492	40599	45764
செயற்பாட்டு செலவுகள்	38296	33711	40561	43964	48434
மொத்த செலவுகள்	35548	35475	37772	42254	45205

வரைபடம் 65 தென் மாகாண சபையின் மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களும் செலவுகளும்.
மூலம் :- தென் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் 2017-2021

தென் மாகாண சபை தொடர்பாக 2021 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கி கீழே தரப்படுகின்றன.

கடனை அறவீடு செய்வதில் குறைபாடுகள்

தென் மாகாண அபிவிருத்தி அதிகார சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவனத்தினால் அறவிடப்பட வேண்டிய ரூபா 3.61 மில்லியன் தொகையான செயற்பாடற்ற கடன் மீதியானது 2001 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வருவதுடன் அந்த பணத்தை அறவீடு செய்யும் செயல் முன்னேற்றம் திருப்தியான மட்டத்தில் காணப்படவில்லை. நிறுவனத்தின் நடைமுறையற்ற பெறவேண்டியவைகளுள் உள்ளடக்கப்பட்ட ரூபா 1.65 மில்லியன் தொகையான உள்நாட்டு விதை உற்பத்தி கடன் மீதியும் ரூபா 0.55 மில்லியன் தொகையான உள்நாட்டு விதைக் கடன் மீதியும் 2002 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வருவதுடன் மீண்டும் அறவீடு செய்வதற்காக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

சொத்துக்கள் முகாமைத்துவம்

தென் மாகாண அபிவிருத்தி அதிகார சபைக்கு உரிமை இல்லாத அம்பலன்கொட பிரதேச செய்லகத்தின் 52 ஏக்கர் 02 ருட் 01 பேர்ச்சஸ் அளவான ஹுங்கம- தெற்கு படஅத சமோதான பண்ணைச் செயற்திட்ட காணி தென் மாகாண அபிவிருத்தி அதிகார சபையினால் 2009 ஆம் ஆண்டிலிருந்து அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ரூபா 40 மில்லியன் செலவு செய்து அபிவிருத்தி செய்யப்பட்டிருந்ததுடன் அக்காணியில் 30 ஏக்கர்கள் ஒரு ஆண்டிற்கு ரூபா 0.28 மில்லியன் பணத்திற்கு 25 ஆண்டுகள் காலத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் மிகுதியான 22 ஏக்கர் 02 ரூட் 01 பேச்சஸ் அளவான காணி ஏனைய செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்தப்படாதிருந்ததுடன் அக்காணியை இதுவரை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

ருகுணு சுற்றுலா பணியகத்தின் சொத்துக்களில் உள்ள ரூபா 103 மில்லியன் தொகையான 03 சொத்துக்கள் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டிலிருந்து 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பயனபடுத்தப்படாதும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டும் காணப்பட்டன. அவ்வாறே பணியகத்தின் அம்பலாங்கொடை கொடஹேன தகவல் நிலையத்திற்காக 2021 திசெம்ர் 31 ஆந் திகதி வரை ரூபா 3.7 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அத்தகவல் நிலையத்தின் செயற்பாடுகளை 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

கட்டணங்களை அறவீடு செய்வதில் குறைபாடுகள்

- அக்குரஸ்ஸ பிரதேச செயலகத்தினால் L/2940 ஆம் இலக்க நீண்டகால குத்தகையின் கீழ் 1965 ஆம் ஆண்டிலிருந்து 1995 சனவரி 11ஆந்

திகதி வரை அக்குரஸ்ஸ பல்நோக்கு சங்கத்திற்கு அரசாங்க காணி வழங்கப்பட்டிருந்ததுடன் 1995 ஆம் ஆண்டின் பின்னர் கணக்காய்வுத் திகதியான 2022 மார்ச் 09 ஆந் திகதி வரை அதாவது 26 ஆண்டுகள் வரையான நீண்ட கால குத்தகை உடன்படிக்கை இல்லாதும் குத்தகை கொடுப்பனவுகள் செய்யப்படாதும் இன்னும் அதிகாரமின்றி காணியை பயன்படுத்தி வருவதாகவும் 1995 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரை அறவிட வேண்டிய நீண்டகால குத்தகையின் மொத்த தொகை ரூபா 5.23 மில்லியன் மற்றும் 2010 ஆம் ஆண்டுலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையான புதிய மதிப்பீடு அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு குத்தகை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அரசாங்க காணிகள் தொடர்பான செயற்பாட்டுக் கோவையின் 228 ஆம் அத்தியாயத்தின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் பாதுகாக்கப்பட்ட காணிகளில் எவராவது குடியிருப்பது தவிர்க்கப்பட வேண்டிய போதிலும் கூட்டுறவுச் சங்கத்தினால் நில்வள கங்கை பாதுகாப்பு பிரதேசத்தில் முதலாவது மாடியின் கொங்கிரீட் தளம் (Slab) போடுவது வரையான வேலை முடிவுறுத்தப்பட்ட ஒரு கட்டிடம் அனுமதியின்றி நிர்மாணிக்கப்படுவது சம்பந்தமாக 1979 இன் 07 ஆம் இலக்க அரசுடமையை மீளப்பெற்றுக்கொள்ளல் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு பிரதேச செயலகத்தினால் நடவசடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- தென்மாகாண இறைவரித் திணைக்களத்தின் காலி மாவட்டத்திற்குள் 2021 ஆம் ஆண்டிற்கான முத்திரைக் கட்டணத்தை அறவீடு செய்வது தொடர்பான மேன்முறையீடுகள் சம்பந்தமாக 1990 இன் 07 ஆம் இலக்க முத்திரைக் கட்டளைச் சட்டத்தின் 03 ஆம் பகுதியின் XXIV ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் ஒரு மாகாண மதிப்பீட்டாளரினால் செய்டயப்பட்ட மதிப்பீடுகள் தொடர்பாக திருப்தியின்மைக்கு உள்ளாகியுள்ள ஒரு நபர் அனுப்பிய மேன்முறையீடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது ரூபா 19.87 மில்லியன் முத்திரைக் கட்டணமும் ரூபா 8.26 மில்லியன் தண்டப் பணமும் செலுத்த வேண்டிய 325 நபர்களால் முத்திரைக் கட்டணம் தொடர்பாக மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் ரூபா 8.88 மில்லியன் வரையான முத்திரைக் கட்டணமும் ரூபா 1.2 மில்லியன் வரையான முத்திரைக் கட்டணத்திற்காகவும் விதிக்கப்பட்ட தண்டப்பணம் குறைக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க தென் மாகாணத்தினால் அறவிட வேண்டிய முத்திரைக் கட்டணம் மற்றும் அதற்காக விதிக்கப்பட்ட தண்டப்பணமானது மேன்முறையீடு செய்ததன் பின்னர் முறையே 53 சதவீதத்தாலும் 85 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்தன.

இடம்பெற்றுள்ள நட்டங்கள்

2015 ஆம் ஆண்டின் போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் தென்மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு எஸ்போல்ட் தயாரிக்கும் இயந்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் இந்த இயந்திரத்தின் மூலம் 2015 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டின் யூலை மாதம் 09 ஆந் திகதி வரை எஸ்போல்ட் தயாரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் தயாரிப்பு நடவடிக்கையை நிறுத்துவதற்கு இயந்திரத்தின் தொழில்நுட்ப கோளாறுகள் அல்லது ஏனைய காரணங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அதன் பின்னர் இந்த இயந்திரம் மதிப்பீட்டுச் சபையின் மூலம் ரூபா 10.4 மில்லியனுக்கு மதிப்பீடு செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 21.1 மில்லியனுக்கு ஏலத்தில் விற்கப்பட்டிருந்தது. எஸ்போல்ட் தயாரிப்பிற்காக பயன்படுத்தும் குறிக்கோளில் இயந்திரத்திற்குள் உள்ளடக்கப்பட்ட 28,599 லீற்றர் தார் மற்றும் 4,028 லீற்றர் டீசல் அந்த இயந்திரத்தின் தாங்கயில் காணப்பட்டிருந்தும் மதிப்பீடு செய்யும் போது இது சம்பந்தமாக கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. அவ்வாறே தாங்கியினுள் இருந்த தாரின் பெறுமதி அண்ணளவாக ரூபா 2.86 மில்லியனாக இருந்ததுடன் டீசலின் பெறுமதி அண்ணளவாக ரூபா 0.4 மில்லியனாக இருந்தது. இவ்வாறு தார் மற்றும் டீசல் இருப்புக்களுடன் இயந்திரத்தை கொள்வனவு செய்தவரிடம் ஒப்படைத்ததன் காரணமாக அதிகார சபைக்கு ஏற்பட்டிருந்த ஒட்டு மொத்த நட்டம் அண்ணளவாக ரூபா 3.26 மில்லியனாக இருந்தது.

சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

தென் மாகாண கடற்றொழில் அமைச்சினால் அமுல்ப்படுத்தப்பட்ட இலத்திரனியல் கழிவுப் பொருள் அகற்றும் செயற்திட்டத்திற்காக 2021 ஆம் ஆண்டிற்காக ரூபா 3.56 மில்லியன் பணம் செலுத்தப்பட்டிருந்தும் அக் கழிவுப் பொருட்கள் சேகரித்த முறைமை மற்றும் உரிய நிறுவனங்களுக்கு ஒப்படைத்தல் தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

ஒப்பந்த நிர்வாகம்

மாத்தறை மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் செயற்படுகின்ற ரம்யா மொஹொடி இருதய சிகிச்சையினை தெயடகிருல நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கட்டம் I மற்றும் கட்டம் II க்காக ரூபா 90.53 மில்லியன் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இரண்டு தனியார் ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா 70.13 மில்லியன் உடன்படிக்கை செய்த தொகைக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு கணக்காய்வு திகதியான 2021 ஒக்தோபர் 07 ஆந் திகதி வரை ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா 39.28 மில்லியன் பணம் செலுத்தப்பட்டிருந்தும் கட்டிடத்தின் நிர்மாணம் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்ததன் காரணமாக இருதய சிகிச்சையினை வாடகை அடிப்படையில் செயற்படுத்த வேண்டி இருந்ததுடன் கணக்காய்வு திகதி வரையும் ரூபா 3.82

மில்லியன் வாடகைப் பணம் குத்தகைக்கு வழங்கியவருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

உடன்படிக்கைகளை மீறுதல்கள்

தென்மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நியதிச் சட்டத்தின் பிரகாரம் அதிகார சபையினால் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட அல்லது ஏற்படுத்திக் கொள்வதற்கு உத்தோசிக்கப்பட்ட வேறு வகையில் ஏதாவது தொடர்புகள் உள்ள அதிகார சபையின் சில அங்கத்தவர்களால் அவர்களின் தொடர்புகளின் தன்மை அதிகார சபையின் கூட்டத்தின் போது வெளிப்படுத்தப்பட வேண்டி இருந்ததுடன் அந்த வெளிப்படுத்தலினை அதிகார சபையின் கூட்ட குறிப்புக்களில் அறிக்கையிடப்படுதல் வேண்டும். மேலும் அதிகார சபையினால் அந்த உடன்படிக்கையினை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளும் போது அல்லது அது தொடர்பாக நிர்மாணம் மேற்கொள்ளும் போது அந்த அங்கத்தவர் பங்குபற்றாதிருத்தல் வேண்டும். அவ்வாறே பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.4.3 ஆம் பிரிவின் பிரகாரம் பெறுகை நடைமுறைகளின் போது தொடர்புகள் பற்றி இணக்கப்பாடு இல்லாதிருந்தது என்பதற்கு உத்தியோகத்தர்களால் வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்ததுடன் அவ்வாறான சந்தேகம் ஏற்படும் சந்தர்ப்பம் ஏற்படுமாகவிருந்தால் உரிய உத்தியோகத்தர்களால் அவரின;/ அவளின் தொடர்பினை வெளிப்படுத்தி பெறுகை நடைமுறைகளிலிருந்து நீங்கிக்கொள்ளுதல் வேண்டும். எவ்வாறாயினும் அந்த நியதிச் சட்டத்திற்கு அல்லது பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு மாற்றமாக அதகார சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு (வீதிகள் மற்றும் பாலங்கள்) குடும்ப உறவு தொடர்புகள் உள்ள 02 ஒப்பந்த நிறுவனங்களுக்கு 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 26.47 மில்லியன் மொத்தத் தொகையான 06 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த ஒப்பந்தங்களை வழங்குவது தொடர்பான பெறுகைச் சபையின் அங்கத்தவராகவும் அதே போல அந்த உடன்படிக்கை சம்பந்தமான தீர்மானங்களை மேற்கொள்ளும் போது பிரதிப் பொது முகாமையாளர் (வீதிகள் மற்றும் பாலங்கள்) சம்பந்தப்பட்டிருந்தார்.

வட மாகாண சபை

கணக்காய்வு அவதானிப்பு

- உடன்படிக்கையின்றி ஒப்பந்தங்களை வழங்குதல்
- போதியளவு அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்
- ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்
- செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துதல்
- பயன்படுத்தப்படாத / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

வட மாகாண சபை

வட மாகாண சபையினால் 2021 ஆம் ஆண்டிற்காக ரூபா 32,556 மில்லியன் அரசாங்க மானியத்தின் மூலமும் உள்ளக வழிகளிலிருந்து ரூபா 1,735 மில்லியனும் ஆக ரூபா 34,291 மில்லியன் மொத்த தொகையான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மீண்டுவரும் செலவுகளுக்காக ரூபா 28,534 தொகையும் மூலதன செலவுகளுக்காக ரூபா 5,861 மில்லியனுமாக ரூபா 34,395 மில்லியன் மொத்த தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டின் போது அரசாங்க மானியங்களிலிருந்து ரூபா 30,071 மில்லியன் தொகையும் உள்ளக வழிகளிலிருந்து ரூபா 1,415 மில்லியன் தொகையுமாக ரூபா 31,486 மில்லியன் மொத்த தொகையான வருமானம் ரூபா சேகரிக்கப்பட்டிருந்தது. மீண்டுவரும் செலவுகள் ரூபா 27,583 மில்லியன் மற்றும் மூலதனச் செலவுகள் ரூபா 3,866 மில்லியனாக ரூபா 31,389 மொத்த தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானமும் செலவுகளும் தொடர்பான விபரம் வரைபடம் 66 மூலம் காட்டப்படுகின்றது.



	2017	2018	2019	2020	2021
மதிப்பிடப்பட்ட வருமானம்	27இ331	26இ669	25இ200	29இ222	34இ291
உள்ளபடியான வருமானம்	26இ713	26இ744	21இ558	28இ878	31இ486
மதிப்பிடப்பட்ட செலவினம்	27இ351	28இ289	24இ445	29இ242	34இ395
உள்ளபடியான செலவினம்	24இ044	25இ572	21இ599	28இ710	31இ389

வரைபடம் 66 வடமாகாண சபையின் மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானமும் செலவுகளும்.

மூலம்:- வடமாகாண சபையின் நிதிக்கூற்றக்கள் 2017 - 2021

வட மாகாண சபை தொடர்பாக 2021 ஆம் ஆண்டின் போது மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கி கீழே தரப்படுகின்றன.

உடன்படிக்கையின்றி ஒப்பந்தங்களை வழங்குதல்

வடமாகாண நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு மற்றும் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்ட ஒரு பெறுகையின் பெறுமதி ரூபா 500,000 இற்கு மேற்பட்ட ரூபா 44.92 மில்லியன் மொத்த தொகையான 10 பெறுகைகளுக்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை.

போதியளவு அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மருத்துவ உத்தியோகத்தர் சேவையின் முதலாவது தரத்தினைச் சார்ந்த பிரதி மருத்துவ நிருவாக வகுப்பின் கீழ் கொண்டு வரப்பட்ட மருத்துவ அதிகாரி பதவியினை வகிக்கும் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு 22/99 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கைக்கு முரணாக ஒதுக்கீடு செய்யப்பட்ட வாகனங்களுக்காக வழங்கப்படுகின்ற மாதாந்த பிரமாணச் செலவுப் படிக்காக 2015 நவம்பர் மாதத்திலிருந்து 2020 யூலை மாதம் வரை ரூபா 3.6 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

வட மாகாணத்தில் 2018 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையான காலத்தில் காணப்பட்ட 18 செயற்திட்டங்களை அமுல்ப்படுத்தும் போது உருவாகிய சிக்கல்களை நியாயத் தீர்ப்பு மற்றும் சமாதானத்திற்காக (Adjudication and Arbitration) சமர்ப்பிப்பதற்காக ரூபா 7.35 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தும் அப்பிரச்சினை இதுவரை தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துதல்

- மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் 08 நிர்மாணச் செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டில் ரூபா 18.26 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தும் அச்செயற்திட்டங்கள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டிருந்தன.

- வட மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் புழுதியாறு குளத்திலிருந்து மேட்டு நிலத்திற்கு இயந்திரங்களால் நீரைப் பாய்ச்சுவதற்காகத் தயாரித்த நீர்த்திட்டத்திற்காக ரூபா 32 மில்லியன் செலவு செய்து 2015 ஆம் ஆண்டின் போது வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தும் இன்றுவரை அச்செயற்திட்டங்கள் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டன.

பயன்படுத்தப்படாத / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

- வடமாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்குச் சொந்தமான ரூபா 20.37 மில்லியன் பெறுமதியான உடைந்து காணப்பட்ட 13 இயந்திரங்கள் 05 ஆண்டுகள் காலமாக திருத்தம் செய்யப்படாது வைத்திருக்கப்பட்டதுடன் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளக்கூடிய ரூபா 9.23 மில்லியன் பெறுமதியான 04 இயந்திரங்கள் 01 ஆண்டிலிருந்து 04 ஆண்டுகள் வரையான காலமாக பயன்படுத்தப்படாது காணப்பட்டன.

- வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் நிருவாகத்திற்குரிய பருத்தித்துறை தள வைத்தியசாலையில் 2016 ஒக்தோபர் மாதத்தின் போது ஸ்தாபிக்கப்பட்ட தகனம் செய்யும் இயந்திரம் (Incinerator) செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டது. அதன் மூலம் ஏற்பட்ட சுற்றாடல் மாசடைதலுக்கு எதிராக உருவாகிய பொதுமக்கள் எதிர்ப்பின் காரணமாக அதனை திருத்தம் செய்வதற்கு முடியாதிருந்தது. பின்னர் இயந்திரம் ஸ்தாபிக்கப்பட்ட கட்டிடத்தில் 2020 ஆம் ஆண்டின் போது ஒரு மரம் உடைந்து விழுந்ததனால் பாதிப்பிற்கு உள்ளாகியதனால் 02 ஆண்டுகளாக ரூபா 8 மில்லியனான அந்த இயந்திரம் பாதுகாப்பின்றி துருப்பிடித்துக் காணப்பட்டது. போதிய கவனமும் பாதுகாப்பும் இல்லாமை, உத்தரவாத காலத்தின் பின்னர் முறையாகப் பயன்படுத்தப்படாமை, உரிய சாத்திய வள ஆய்வின்றி நகரமயமாக்கப்பட்ட பிரதேசத்தில் அந்த இயந்திரம் ஸ்தாபிக்கப்பட்டமை என்பன இவ்வாறான நிலைமை உருவாகுவதற்கு காரணமாக இருந்தது.

கிழக்கு மாகாண சபை

கணக்காய்வு அவதானிப்பு

- வருமானங்களைச் சேகரித்தல்
- வருடாந்த நிதி ஏற்பாட்டினை பயன்படுத்துதல்
- மாகாண சபை நியதிச் சட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட நிறுவனங்களின் செயலாற்றல்
- அதிபர் / ஆசிரியர் சேவையின் வெற்றிடங்கள்

கிழக்கு மாகாண சபை

கிழக்கு மாகாண சபையினால் 2021 ஆம் ஆண்டிற்காக ரூபா 34,146 மில்லியன் அரசாங்க மானியத்தின் மூலமும் உள்ளக வழிகளின் மூலம் ரூபா 2,480 மில்லியனும் ஆக ரூபா 36,626 மில்லியன் மொத்த தொகையான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அந்த வருமானத்தில் ரூபா 30,643 மில்லியன் மீண்டுவரும் செலவுகளாகவும் ரூபா 5,983 மிலிலியன் மூலதனச் செலவுகளுக்காகவும் ரூபா 36,626 மில்லியன் மொத்த தொகையை பயன்படுத்துவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2021 ஆம் ஆண்டின் போது அரசாங்க மானியத்தின் மூலம் 31,680 மில்லியனும் உள்ளக வழிகளின் மூலம் ரூபா 2,303 மில்லியனுமாக ரூபா 33,983 மில்லியன் மொத்த தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டின் போது மீண்டுவரும் செலவுகள் ரூபா 30,424 மில்லியன் மற்றும் மூலதனச் செலவுகள் ரூபா 3,508 மில்லியன் ஆக ரூபா 33,932 மில்லியன் மொத்த தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போதும் முன்னைய 4 ஆண்டுகளின் போதும் சபையினால் சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் பயன்படுத்துதல் தொடர்பான விபரம் வரைபடம் 67 இல் தரப்படுகின்றது.



	2017	2018	2019	2020	2021
மதிப்பிடப்பட்ட வருமானம்	25629	29022	26442	33838	36626
உள்ளபடியான வருமானம்	22281	24320	25533	31225	33983
மதிப்பிடப்பட்ட செலவினம்	26295	28355	30371	33838	36626
உள்ளபடியான செலவினம்	23209	27143	28008	31282	33932

வரைபடம் 67 மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானமும் செலவுகளும்.

மூலம்:- கிழக்கு மாகாண சபையின் நிதிக்கூற்றக்கள் 2017- 2021

கிழக்கு மாகாண சபை தொடர்பாக 2021 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட பொருண்மையான மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிபாக்கி கீழே தரப்படுகின்றன.

வருமானங்களைச் சேகரித்தல்

வருமானத்தை சேகரித்தல் மாகாண சபை நிதியத்தின் பிரதான பணியாக இருந்த போதிலும் பல்வேறு வகையான மாகாண வருமான வழிகள் இனங்காணப்பட்டு துணை நியதிச்சட்டங்களை விதிப்பதற்கு 05 ஆண்டுகளாக கிழக்கு மாகாண சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதற்கிணங்க மாகாண சபையின் செயற்பாடுகளுக்காக பிரதான நிதியை வழங்குவதாவது பொதுத் திறைசேரியின் ஒரே தடவை மானியத்தின் (Block Grant) மூலமாக இருந்ததுடன் அது 2017 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையான காலத்தில் ரூபா 18,668 மில்லியனிலிருந்து ரூபா 28,163 மில்லியன் வரையாக அதாவது 50 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் மாகாண சபையின் வருமானத்தை சேகரித்தல் ரூபா 3,613 மில்லியனிலிருந்து ரூபா 2,303 மில்லியன் வரை அதாவது 36 சதவீதத்தால் குறிப்பிடத்தக்க அளவில் வீழ்ச்சியடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட நானாவித வருமானம் ரூபா 426 மில்லியனை அறவீடு செய்வதற்கும் முடியாதிருந்தது. அவ்வாறே மீண்டுவரும் செலவுகள் ரூபா 22,052 மில்லியனிலிருந்து ரூபா 30,424 மில்லியன் வரை 38 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

வருடாந்த நிதி ஏற்பாட்டினை பயன்படுத்துதல்

- மதிப்பீடுகள் இல்லாது கிழக்கு மாகாணத்தில் பல்வேறு பிரிவுகளின் செயற்பாடகளில் மூலதனச் செலவுகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 5,983 மில்லியன் பாதீட்டு நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் ரூபா 3,517 மில்லியன் மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம், பெறுகைத் திட்டம் என்பவற்றை காலத்திற்குப் பொருத்தமாக மீளாய்வு செய்வதற்கு சபை தவறியதன் காரணமாக மீளாய்வாண்டில் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரூபா 2,466 மில்லியன் தொகையான விவசாயத்தை மேம்படுத்துதல், வாழ்வாதார அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆகிய மாகாண அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படாது கைவிடப்பட்டன.

- "நிலைபேறான விவசாய கலாச்சாரம்" நிகழ்சிசத்திட்டத்தின் சேதனப் பசளை விவசாயத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 1,000 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் அவற்றில் ரூபா 228.74 மில்லியன் அதாவது மொத்த நிதி ஏற்பாட்டு பெறுமதியில் 23 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 459.08 மில்லியன் பயன்படுத்துவதற்கு எடுத்துக்கொள்ளப்படாது வைப்பாக வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

  அவ்வாறே மிகுதி நிதி ஏற்பாட்டுப் பெறுமதியான ரூபா 312.18 மில்லியன் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது கிழக்கு மாகாண சபையின் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இதன் காரணமாக

மீளாய்வாண்டின் இறுதிவரை சேதனப் பசளையை தயாரிக்கும் நடவடிக்கையானது குறைந்த செயலாற்றல் மட்டத்தில் காணப்பட்டது. மேலும் 2022 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதமளவில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 14.81 மில்லியன் பெறுமதியான 32 உழவு இயந்திரங்களை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 08 மாதங்களாக விளைவற்றுக் காணப்பட்டன.

மாகாண சபை நியதிச் சட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட நிறுவனங்களின் செயலாற்றல்

சுற்றுலா பணியகம், வீடமைப்பு அதிகார சபை ஆகிய 02 நியதிச்சட்ட நிறுவனங்கள் மாகாண சபையின் நியதிச் சட்டத்தின் பிரகாரம் தாபிக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையான காலத்தில் ஒரு சுய நிதியத்தினை ஆரம்பிக்காது நிறுவனங்களின் பல்வேறு நடவடிக்கைகளுக்காக மாகாண சபை நிதியத்திலிருந்து ரூபா 159 மில்லியன் தொகையை கட்டுநிதியாக பெற்றுக்கொண்டிருந்ததுடன் சுற்றுலா மற்றும் வீடமைப்பு பிரிவின் தேசிய முகவர் நிறுவனத்துடன் ஒருங்கிணைப்புச் செய்து நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக இந்த நியதிச் சட்ட நிறுவனங்களின் செயலாற்றல் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது. அவ்வாறே 03 ஆண்டுகளாக பதவியணியினர் எண்ணிக்கையை அங்கீகரித்துக் கொள்ளாதும் ஆட்சேர்ப்புத் திட்டமின்றியும் பணிப்பாளர் சபையினால் ஒப்பந்த / அமைய அடிப்படையில் நியமிக்கப்பட்ட 59 பதவியணியினர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 44 மில்லியன் சம்பளமும் படிகளுமாக செலுத்தப்பட்டிருந்தது.

அதிபர் / ஆசிரியர் சேவையின் வெற்றிடங்கள்

மீளாய்வாண்டின் இறுதியளவில் கிழக்கு மாகாணத்தின் 15 வலயக் கல்வி அலுவலகங்கள் தொடர்பாக 566 அதிபர்கள் மற்றும் 1509 ஆசிரியர்கள் வெற்றிடமாகக் காணப்பட்டிருந்தும் அம்பாறை மாவட்டத்தில் 02 வலயக் கல்வி அலுவலகங்களின் கீழ் 20 அதிபர்களும் கிழக்கு மாகாணத்தின் 06 வலயக் கல்வி அலுவலகங்களில் 664 ஆசிரியர்களும் மிகையாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

வடமத்திய மாகாணம்

கணக்காய்வு அவதானிப்பு

- வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை
- வடமத்திய மாகாண அபிவிருத்தி வடிவமைப்பு மற்றும் இயந்திர உபகரண முகவராண்மை
- சாசனங்களின் கீழ் நிறுவப்பட்டிருந்த நிதியங்கள் மற்றும் நிறுவனங்களில் விளைவற்றுக் காணப்படும் பணம்
- மாகாண அபிவிருத்தி திட்டம்
- போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்
- முகாமைத்துவ திறமையின்மை
- செயற்பாட்டுத் திறமையின்மை
- மாகாண மருத்துவ வழங்கல் பிரிவின் களஞ்சியத் தொடர் கட்டிடத்தின் திருத்த வேலை
- சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்கள் அலுவலகம் நிர்மாணித்தல்
- பாடசாலையொன்றில் வகுப்பறை கட்டிடமொன்று நிர்மாணித்தல்
- நிதியங்களின் குறை பயன்பாடு
- பராமரிப்பு மற்றும் திருத்த வேலை மேற்கொள்ளாமை
- சொத்துக்களின் மூலம் பெறவேண்டிய வருமானம்
- விளைவற்ற / குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்
- குறிக்கோள்களுக்கு புறம்பான செயற்பாடுகள்
- எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை (output) அடையப் பெறாமை
- எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

வடமத்திய மாகாணம்

வடமத்திய சபையினால் 2021 ஆண்டிற்காக ரூபா 25,637 மில்லியன் தொகை அரச மாணியத்தின் மூலமும், உள்ளக வழிகளின் மூலம் ரூபா 2,651 மில்லியன் தொகையுமாக மொத்தம் ரூபா 28,288 மில்லியனிற்கான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இந்த வருமானத்தில் மீண்டுவரும் செலவுகளுக்காக ரூபா 22,721 மில்லியன் தொகையும், மூலதனச் செலவுகளுக்காக ரூபா 5,515 மில்லியன் தொகையுமாக மொத்தம் ரூபா 28,236 மில்லியன் தொகை பயன்படுத்துவதற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, 2021 ஆண்டின் போது அரசாங்க மானியத்தின் மூலம் ரூபா 22,865.8 மில்லியன் தொகையும், உள்ளக வழிகளின் மூலம் ரூபா 2,404.3 மில்லியன் தொகையுமாக மொத்தம் ரூபா 25,270.1 மில்லியனிற்கான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. 2021 ஆண்டின் போது மீண்டுவரும் செலவுகள் ரூபா 24,980.5 மில்லியன் தொகை மற்றும் மூலதனச் செலவுகள் ரூபா 43.9 மில்லியன் தொகையாக மொத்தம் ரூபா 25,024.4 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளில் மாகாண சபையினால் சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் பயன்படுத்தல் தொடர்பான விபரங்கள் வரைபடம் 68 இல் காண்பிக்கப்படுகின்றது.



வரைபடம் 68 - மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான செலவுகள்

மூலம் - வடமத்திய மாகாண சபையின் 2017 – 2020 வருடாந்த நிதிக் கூற்று

வடமத்திய மாகாண சபை தொடர்பாக 2021 ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைமயின் போது கண்டறியப்பட்ட முக்கிய அவதானிப்புக்கள் மற்றும் பொருண்மையான கணக்காய்வு அதவானிப்புக்கள் பொழிப்பாக கீழே காட்டப்பட்டுள்ளது.

வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை

- வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சேவைக்காக சேர்க்கப்பட்டிருந்த இரண்டு உத்தியோகத்தர்களினால் சேர்க்கப்பட்ட

சந்தர்ப்பத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கல்விச் சான்றுதழ் போலியானவை என உறுதிப்படுத்தியிருந்த போதிலும், அந்த உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் மற்றும் படியாக ரூபா 8.5 மில்லியன் தொகை ஒன்று செலுத்தப்பட்டிருந்தது. அதேபோல் சேர்க்ப்பட்ட நாள் முதல் 2021 திசெம்பர் 31 திககி வரை அந்த உத்தியோகத்தர்கள் இருவருக்கும் செலுத்தியிருந்த மொத்தச் சம்பளம் படிகளின் கூட்டுத்தொகை ரூபா 12.1 மில்லியன் ஆகும்.

- வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையில் முகாமைத்துவ உதவியாளர் பதவியொன்றுக்காக 2004 ஆகஸ்ட் 01 திகதி முதல் சேர்க்கப்பட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவர் அந்த நாள் முதல் செயற்படுமுகமாக 2021 திசெம்பர் 31 திகதி வரையான காலப் பகுதியல் பல்வேறு அமைச்சுக்களுக்கு இணைக்கப்பட்டிருந்ததுடன், சம்பளங்கள் மற்றும் படிகள் என அதிகாரசபையினால் செலுத்தப்பட்டிருந்த ரூபா 8.2 மில்லயின் தொகை அந்த உத்தியோகத்தர் இணைக்கப்பட்டு சேவையாற்றிய அமைச்சுக்களில் இருந்து மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. அதேபோல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஊழியர்களுக்காக செலுத்தப்படும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக் கொடுப்பனவு என ரூபா 1 மில்லியன் தொகையும், அதிகார சபைக்கு வெளியே கடமையாற்றிய காலப் பகுதிக்காகவும் அந்த உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்டிருந்தது.
- 2019 ஆண்டின் போது முடிவடைந்திருந்த பிபிதெமு பொலன்னறுவை செயற்திட்டத்திற்காக அதிகாரசபையினால் 2019 ஆண்டின் போது வழங்கப்பட்ட ஆலோசனைசார் சேவைக்காக பெற வேண்டியிருந்த ரூபா 35.9 மில்லியனிற்கான தொகையொன்று மீளாய்வாண்டு இறுதி வரை அறவீடு செய்து கொள்வதற்கு அதிகார சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

வடமத்திய மாகாண அபிவிருத்தி வடிவமைப்பு மற்றும் இயந்திர உபகரண முகவராண்மை

- 2015 ஆண்டு முதல் 2021 திசெம்பர் 31 திகதி வரையான காலப் பகுதி தொடர்பாக அரச நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட அச்சக இலாபம் ரூபா 7.2 மில்லியன் இயந்திர வாடகை வருமானம் ரூபா 5.8 மில்லியன் தொகை, பாதுகாப்புப் பிரிவின் வருமானம் ரூபா 6.3 மில்லியன் தொகை, வாகனத் திருத்த வேலைப் பிரிவின் வருமானம் ரூபா 10.3 மில்லியன் தொகை, வாகனம் சேவை செய்தல் வருமானம் ரூபா 3.7 மில்லியன், தயர் சேவை நிலையத்தின் வருமானம் ரூபா 1.8 மில்லியன் தொகை அறவிடப்படாமல் காணப்பட்டதுடன், அவற்றில் முறையே 87 சதவீதமாகிய ரூபா 6.2 மில்லியன் தொகையும், 21 சதவீதமாகிய ரூபா 1.2 மில்லியன் தொகையும், 56 சதவீதமாகிய ரூபா 3.5 மில்லியன் தொகையும், 15 சதவீதமாகிய ரூபா 1.5 மில்லியன் தொகையும், 17 சதவீதமாகிய 0.6 மில்லியன் தொகையும், 37 சதவீதமாகிய 0.7 மில்லியன் தொகையும் அறவிடப்படாமல் காணப்பட்ட காலம் 02 வருடங்கள் முதல் 06 வருடங்கள் வரையான வீச்சில் காணப்பட்டது.

- 13 ஆண்டுகளுக்கு மிகையான காலம் முதல் செலுத்த வேண்டியிருந்த ரூபா 16 மில்லியன் பெறுமதி கூட்டிய வரி மற்றும் 09 மில்லியன் பண்டங்கள் மற்றும் சேவைகள் மீது வரி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

சாசனங்களின் கீழ் நிறுவப்பட்டிருந்த நிதியங்கள் மற்றும் நிறுவனங்களில் விளைவற்றுக் காணப்படும் பணம்

வடமத்திய மாகாண சபையினால் பேணிச் செல்லப்படுகின்ற வடமத்திய மாகாண எதிர்பாரா செலவு நிதியம், வடமத்திய மாகாண கிராம அபிவிருத்தி நிதியம், வடமத்திய மாகாண முதலமைச்சர் நிதியம், வடமத்திய கல்வி அபிவிருத்தி நிதியம், வடமத்திய மாகாண நூலகச் சேவை சபையின் மீளாய்வாணடின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 56.8 மில்லியன் தொகையொன்று அந்த நிறுவனங்களின் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக பயன்படுத்தப்படாமல் வங்கிக் கணக்குகளில் விளைவற்று தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

மாகாண அபிவிருத்தி திட்டம்

மீளாய்வாண்டில் மாகாண சபையினால் புதிய வேலைத் திட்டங்கள் மற்றும் தொடர் வேலைத் திட்டங்கள் என 2440 திட்டங்களை செயற்படுத்துவதற்காக ரூபா 4,313.32 மில்லியனிற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளில் ரூபா 2,431.05 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டு 1999 திட்டங்களின் வேலைகள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அந்த வேலைத்திட்டங்களில் 124 இற்கான அலுவல்கள் மீளாய்வாண்டு இறுதியிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன், அதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 129.63 மில்லியனிற்கான ஏற்பாடுகள் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது. 107 வேலைத் திட்டங்களை பூர்த்தி செய்வதற்காக ரூபா 603.78 மில்லியனிற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த வேலைத்திட்டதங்கள் 50 சதவீதத்தை விட குறைவாக செயற்படுத்தப்பட்டிருந்தது. வேலைத் திட்டங்களின் முன்னேற்றம் அட்டவணை 29 இல் காண்பிக்கப்படுகின்றது.

விபரம்	புதிய வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை	தொடர் வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை	மொத்த வேலைத் திடடங்களின் எண்ணிக்கை	மொத்த வேலைத்திட்டங்களின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா மில்லியன்
முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட	1,973	26	1,999	2,431.05
50% விட கூடுதலாக பூர்த்தி செய்யப்ப்ட்ட	**207**	**03**	**210**	**1,148.86**
50% விட குறைவாக பூர்த்தி செய்யப்பட்ட	107	-	107	603.78
ஆரம்பிக்கப்படாத	124	-	124	129.63
கூட்டுத்தொகை	**2,411**	**29**	**2,440**	**4,313.32**

அட்டவணை 29 - வேலைத்திட்டங்களின் முன்னேற்றம்
மூலம் - வடமத்திய மாகாண சபையின் செயலாற்றுகை அறிக்கை

போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

- வடமத்திய மாகாண வருமான திணைக்களத்திற்காக III/II தர வருமான பெறுமதி மதிப்பீட்டாளர் / சிரேஷ்ட வருமான பெறுமதி மதிப்பீட்டாளர் பதவிகளில் 11 பதவிகள் முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 2016 ஜனவரி 01 திகதி முதல் செயற்படும் வடமத்திய மாகாண வருமானச் சேவை உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடவடிக்கை முறை வருமான பெறுமதி மதிப்பீட்டாளர்/ சிரேஷ்ட பெறுமதி மதிப்பீட்டாளர் பதவிகள் தரம் II/I என காட்டப்பட்டிருந்தது. அவ்வாறு செய்வதன் மூலம் 04 சிரேஷ்ட பெறுமதி மதிப்பீட்டாளர்கள் I தரத்திற்கு பதவியுயர்வு வழங்கப்பட்டிருந்ததுடன், மூன்று உத்தியோகத்தர்கள் தொடர்பாக 2015 ஏப்ரல் 07 திகதி வரையும் ஒரு உத்தியோகத்தருக்கு 2015 செப்தம்பர் 17 திகதி வரையும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடவடிக்கை முறை செயற்டுத்தப்படும் தினத்திலும் முன்னருள்ள நாட்களுக்காக அந்த நியமனம் முன் திகதியிடல் செய்யப்பட்டிருந்தது.

- மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் 04 மாகாண அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் தொடர்பாக வடமத்திய மாகாண திறைசேரிக்கு தீர்த்திருக்காத ரூபா 27.9 மில்லியனிற்கான கட்டுநிதி மீதிகள் 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் காணப்பட்டு வந்தது. அந்த மீதிகளில் 95 சதவீதம் 10 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் காணப்பட்டு வரும் ரூபா 26.4 மில்லியனிற்கான மீதியொன்று முதலமைச்சினால் தீர்க்கப்படவேண்டியிருந்தது.

முகாமைத்துவ திறமையின்மை

- மீளாய்வாண்டில் வடமத்திய மாகாண சபை நிதிக் கூற்றுக்களில் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வைப்பு கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 543.4 மில்லியன் காணப்பட்டதுடன், அவற்றில் 02 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 43.4 மில்லியன் தொகையாகும்.

- தூர சேவை பஸ் தரிப்பு நிலையம் ஒன்று நிர்மாணிக்கும் குறிக்கோளுடன் பகமூன மஹவெளி விளையாட்டுத்திடல் முற்பகுதியிலுள்ள காணியில் அமைந்துள்ள கருங்கல் ஒன்றை உடைத்து அகற்றுவதற்காக சபை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளல், சாத்தியக்கூறு ஆய்வறிக்கை மேற்கொள்ளல், மதிப்பீடு தயாரித்தல், சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளல் மற்றும் முறையான நிதி நடவடிக்கை முறைகளை கடைபிடித்தல் ஆகிய செயற்பாடுகளை கடைபிடிக்கப்படாமல் 2015 – 2018 காலப் பகுதியில் எலஹர பிரதேச சபையினால் ரூபா 15.7 மில்லியன் தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக வடமத்திய மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தினால் நடவடிக்கைகள் ஏதும் எடுத்திருக்கவில்லை.

- தாபனக் கோவையின் VIII அத்தியாயத்தின் 9.6 பந்தியின் பிரகாரம் அரசாங்க விடுமுறை நாளொன்றில் கடமைக்காக பிரயாணம் செய்யும் போது விடுமுறை நாள் சம்பளம் வழங்கப்படும்

கருமத்திற்காக வேலை செய்ததென கணிக்கக்கூடாததுடன், அந்தப் பிரயாணம் உண்மையாகவே கடமை நிறைவேற்றுவதற்காக செய்யப்பட்டதெனின், அதற்காக பதில் விடுமுறை ஒன்று மாத்திரம் பெற்றுக்கொள்ளக்கூடியாக இருந்த போதிலும், வாகனப் போக்குவரத்து, விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார, கூட்டுறவு, வாணிபம், உணவு மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு மற்றும் மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தினால் வெளிக்கள கடமைகளுக்காக அலுவலகத்திலிருந்து வெளியே சென்றிருந்தற்காக 23 சந்தர்ப்பங்களுக்காக ரூபா 368,267 இற்கான விடுமுறை நாள் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

- அரசாங்க நிதியத்தை பயன்படுத்தி அபிவிருத்தி செய்யப்பட்டு தற்போது நடாத்தப்பட்டு வருகின்ற 27 ஏக்கர்களைக் கொண்ட காலதிவுல்வெவ மூலிகைத் தோட்டம், 03 ஏக்கர்களைக் கொண்ட நதுன் செவன, கெலிஹிரியாவ மூலிகைத் தோட்டம் மற்றும் 02 ரூட் 12 பர்சஸ்களுக்கான பலுகஸ்வெவ மூலிகைத் தோட்டம் ஆகியவற்றின் உரிமையை மாகாண ஆயுர்வேத திணைக்களத்திற்கு உரித்தாக்குவதற்கு மீளாய்வாண்டிலும் முடியாமல் இருந்தது.

- வடமத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் விடய இலக்கம் 61211 (அலுவலக பதவியணி) கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வடமத்திய மாகாண சபையில் அமைச்சுக்கள்/ திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 39 உத்தியோகத்தர்களுக்கு ஏனைய மாகாண சபைகளின் மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ள 04 உத்தியோகத்தர்களுக்கும், சேவையில் ஈடுபட்டிருந்து பின்னர் இறந்துள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கும், ஓய்வுபெற்றிருந்த 05 உத்தியோகத்தருக்கும், சேவையை விட்டுச்சென்றிருந்த உத்தியோகத்தர் இருவருக்கும், சேவையை இடைநிறுத்தப்பட்டிருந்த உத்தியோகத்தர்கள் இருவர் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 6.98 மில்லியனிற்கான கடன்மீதிகள் 03 மாதங்கள் மற்றும் 07 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் அறவீடுகள் நிலுவையாக காணப்பட்டது. அதேபோல் வடமத்திய மாகாண சபையின் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களில் இருந்து இடமாற்றம் பெற்று வந்துள்ள 08 உத்தியோகத்தர்கள் தொடர்பாக ரூபா 1.05 மில்லியனிற்கான கடன்மீதியொன்யை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் 03 மாதங்கள் மற்றும் 07 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம கடந்திருந்தது.

- வடமத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் விடய இலக்கம் 61201 (பாடசாலை பதவியணி) கொண்ட அரசாங்க உத்தியோகத்தருக்கான முற்பணக் கணக்கின் 2021 திசெம்பர் 31 திகதியிலுள்ளவாறு வடமத்திய மாகாண சபையின் அமைச்சுக்கள்/ திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 91 உத்தியோகத்தர்களுக்கும், ஏனைய மாகாண சபைகளின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்கள் 505 பேரிற்கும் மத்திய அரசின் அமைச்சுக்கள்,

திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த 295 பேரிற்கு கடமையிலிருக்கும் போது இறந்துள்ள 21 உத்தியோகத்தர்களுக்கு, ஓய்வுபெற்றுள்ள 146 உத்தியோகத்தர்களுக்கும், வேலை இடைநிறுத்தப்பட்டுள்ள 20 உத்தியோகத்தர்களுக்கும், சேவையை விட்டுச்சென்றுள்ள 19 உத்தியோகத்தர்களுக்கும், மற்றும் தகவல்கள் கண்டறிய முடியாத 93 உத்தியோகத்தர்கள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 75.5 மில்லியனிற்கான கடன் தொகையொன்று 03 மாதங்கள் மற்றும் 31 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் அறவீடுகள் நிலுவையாக காணப்பட்டது. அதேபோல், ஏனைய மாகாண சபைகளின் அமைச்சுக்கள்/ திணைக்களங்களிலிருந்து இடமாற்றம் பெற்று வந்துள்ள 13 உத்தியோகத்தர்களுக்கு மற்றும் மத்திய அமைச்சின் அமைச்சுக்கள் திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளிலிருந்து இடமாற்றம் பெற்று வந்துள்ள 295 உத்தியோகத்தர்கள் தொடர்பாக ரூபா 26.5 மில்லியன் கடன் மீதியொன்றினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் 03 மாதங்கள் 24 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்தது.

செயற்பாட்டுத் திறமையின்மை

- அநுராதபுர பிரதேச மருந்துப் பொருட்கள் வழங்கல் பிரிவில் பௌதீக இருப்பு மீதியின் மருந்து வகை விநியோக முகாமைத்துவ தரவு முறைமையின் (MSMIS) மீதிகளுடன் இணக்கம் செய்யும் முறைமை இருப்பு மெய்மையாய்தல் (System Verification) 2018 திசெம்பர் 31 திகதியின் பின்னர் மேற்கொண்டிருக்காததுடன், வடமத்திய மாகாணத்தின் 22 பிராந்தி வைத்தியசாலைகளில் மருந்து வகைகள் வழங்கல் முகாமைத்துவ தரவு முறைமை (MSMIS) நிறுவுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

- 2016 முதல் 2020 வரையான 05 வருட காலப் பகுதியில் க.பொ.த (சா.த) பெறுபேறுகளில் மாகாண அடிப்படையில் 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் 05 ஆவது இடத்திலிருந்த வடமத்திய மாகாணம் 2020 ஆண்டில் 07 ஆவது இடம் வரை பின்னடைவு ஏற்பட்டிருந்தது. அக் காலப் பகுதியில் க.பொ.த (உ.த) பரீட்சை பெறுபேறுகளின் 2018 மற்றும் 2019 ஆண்டுகளின் போது 07 ஆவது இடத்தில் காணப்பட்ட வடமத்திய மாகாணம் 2020 ஆண்டில் 08 வது இடம் வரை பின்னடைவு ஏற்பட்டிருந்ததுடன் க.பொ.த (உ.த) பரீட்சையில் பெறுபேறுகளை கவனத்தில் எடுத்த போது 2019 ஆண்டில் 02 சதவீதத்திற்கான தேசிய மட்டத்தில் தேர்ச்சி பெற்ற சதவீதம் மற்றும் வடமத்திய மாகாணத்தின் சித்தியடைந்த சதவீத்திற்குமிடையே இடைவெளி 2020 ஆண்டின் போது 03 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. அவ்வாறாயினும் மாகாணத்தின் பரீட்சை பெறுபேறுகளை உயர்த்துவதற்காக பாடசாலை மட்டத்தில் கவரக்கூடிய வேலைத்திட்டம் ஏதும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- வடமத்திய மாகாண பாடசாலைகளின் ஆசிரிய மற்றும் அதிபர் வெற்றிடங்கள் காணப்பட்ட போதும், 58 ஆசிரியர்கள் 01 மாதம் முதல் 27 வருடங்கள் வரையான காலம் ஏனைய நிறுவனங்களுக்கு

விடுவிக்கப்பட்டிருந்தடன், விடுவிக்கப்பட்டிருந்த நாள் முதல் 2021 திசெம்பர் 31 திகதி வரையான காலப் பகுதிக்காக அவர்களுக்கு செலுத்தியிருந்த ரூபா 147.35 மில்லியன் சம்பளங்கள் மற்றும் படிகளை மீளளிப்பு செய்து கொண்டிருக்கவில்லை. அதேபோல், ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த ஆசிரியர்களுக்கு சம்பளம் செலுத்தும் போது அவர்களின் சேவைக்கு சமூகமளித்தல் மற்றும் விடுமுறை தொடர்பான விபரங்கள் கட்டாயமாக பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என, 2021 ஜூன் 30 திகதி வடமத்திய மாகாண கல்விப் பணிப்பாளரினால் கடிதம் ஒன்றின் மூலம் ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், 55 ஆசிரியர்களுக்கான தினவரவு மற்றும் விடுமுறை விபரங்கள் மற்றும் விடுவித்திருந்த நிறுவனத்தினால் செலுத்தியிருந்த படிகள் தொடர்பாக அறிக்கைகள் பெற்றிருக்கவில்லை.

மாகாண மருத்துவ வழங்கல் பிரிவின் களஞ்சியத் தொடர் கட்டிடத்தின் திருத்த வேலை

சுகாதார மற்றும் தேசிய மருத்துவ அமைச்சின் ஏற்பாடுகளின் மீது 2020 ஆண்டின் போது அநுராதபுரம் மாகாண மருத்துவ வழங்கல் பிரிவின் களஞ்சிய தொடர் கட்டிடங்களை திருத்த வேலை மேற்கொள்வதற்காக ரூபா 4 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், இந்த திருத்த வேலைக்குரிய பொறியியல் மதிப்பீடு ரூபா 4.2 மில்லியன் தொகையாக காணப்பட்டது. ரூபா 3.4 மில்லியனிற்கான குறைந்த விலைகூறல் மீது உடன்படிக்கை செய்திருந்த போதிலும், உடன்படிக்கைத் தொகை 18 சதவீதத்தினால் அதாவது ரூபா 0.6 மில்லியன் தொகையினை மிகைத்து ரூபா 4 மில்லியன் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் மீதியான விலைகூறல்தாரர்கள் சமர்ப்பித்திருந்த விலைகூறல் பெறுமதி ஒப்பந்தக்காரருக்கு செலுத்தியிருந்த தொகையை விட ரூபா 9,029 தொகை மற்றும் ரூபா 478,219 இற்கு இடைப்பட்ட தொகையினால் குறைவாக காணப்பட்டது.

சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்கள் அலுவலகம் நிர்மாணித்தல்

நாச்சாதீவு சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் நிர்மாணிப்பதற்காக பொறியியல் மதிப்பீடு ரூபா 37.33 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒரேயொரு விலைகூறல் ரூபா 43.04 மில்லியன் தொகையாக இருந்தது. அந்த விலைகூறல் பொறியியல் மதிப்பீட்டை 5.71 மில்லியன் தொகையினால் மிகைத்திருந்த போதிலும், பொறியியல் மதிப்பீட்டிற்கு குறிப்பிட்ட கருமங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக ஒப்பந்தக்காரரை இணங்கச் செய்தல் அல்லது மீண்டும் விலைகூறல் அழைத்தல் மேற்கொள்ளாமல் விலைகூறல்தாரரின் பெறுமதிக்கு 2021 ஒக்தோபர் 28 திகதி வடமத்திய மாகாண சுகாதார சேவைத் திணைக்களம் உடன்படிக்கை மேற்கொண்டு ரூபா 12.7 மில்லியன் தொகை முற்பணமும் செலுத்தியிருந்தது. நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த காணியின் உரிமை தொடர்பாக சட்டரீதி மற்றும் நிருவாகம் சார்பாக போதியளவு கவனம் செலுத்தாமல் இருந்தமையால் பின்னர் ஏற்பட்ட சிக்கலொன்றை அடிப்படையாகக் கொண்டு நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன், உள்ளூராட்சி நிறுவனம் ஒன்றினால் அங்கு நிரந்தர நிர்மாண வேலையொன்று மேற்கொண்டிருந்தது. அவ்வாறாயினும் செலுத்தியிருந்த ரூபா 12.7 மில்லியனிற்கான முற்பணத் தொகையை அறவீடு செய்திருக்கவில்லை.

பாடசாலையொன்றில் வகுப்பறை கட்டிடமொன்று நிர்மாணித்தல்

ஹொரொவ்பதான துடுவெவ வித்தியாலத்தில் 80'X20' அளவான வகுப்பறைக் கட்டிடமொன்று ரூபா 2.4 மில்லியனிற்கான தனிப்பட்ட செல்வ நன்கொடையொன்றின் மூலம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது போதிலும், அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

- இந்தக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 2019 ஒக்தோபர் 23 திகதி முதலமைச்சின் செயலாளரினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன், அதன் நிர்மாண வேலைகள் 2018 ஒக்தோபர் 18 திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிர்மாண வேலை முதலமைச்சுச் செயலாளரின் பரிந்துரைகளுக்கு முரணாக தொழில்நுட்ப ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளாமல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- நிர்மாண வேலைகளுக்காக பண்டங்கள் கொள்வனவு செய்தவற்கு நியமனம் செய்யப்பட்டிருந்த அதிபர் உட்பட 12 அங்கத்தவர்கள் அடங்கிய குழுவினால் பிரதான அமைச்சுச் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டுத் தொகையை விட ரூபா 120,700 தொகை பெறுமதியான 18.4 கியுப் மணல் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

- 3 அடி 6 அங்குலம் கொண்ட பின் முற்றமுடனான அமானோ சீட்களை பயன்படுத்தி கூரையை உள்ளடக்குவதற்காக 02 அடி 06 அங்குலம் இடைவெளியுடன் 19 அடி நீள 56 இரும்பு பேலினை 12 வரிசைகளில் இடுவதற்கு மதிப்பீட்டின் 06 ஆம் இலக்க வேலை விடயத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக 3 அடி 9 அங்குலம் இடைவெளியுடன் 8 வரிசை பேலின் இடப்பட்டிருந்தது. அதேபோல் அதன் மீது அஸ்பெஸ்ரோஸ் தகடினால் மூடப்பட்டிருந்ததுடன், பாடசாலை கட்டிடத்தின் கூரை வலிமையாகக் காணப்படாமையால் மாணவர்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக காணப்பட்டதுடன், கூரைக்கு பயன்படுத்தப்படாத 19 அடி நீளமான 19 இரும்புப் பேலின் மீண்டும் ரூபா 73,682 தொகைக்கு விற்பனை செய்து அந்தப் பணத்திலிருந்து ரூபா 30,500 தொகை 2020 பெப்ரவரி 14 பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன், ரூபா 43,182 தொகை முறைகேடாக பயன்படுத்தப்பட்டிருந்தன.

- அங்கீகரிக்கப்பட மதிப்பீட்டின் 17 ஆவது இலக்க வேலை விடயத்தின் கீழ் கட்டிடத்தின் கூரையில் 90 அடி நீளத்திற்கு மூடுவதற்காக ZN/Al Colour bond ridge capping பயன்படுத்துவதற்கு ரூபா 12,000 தொகை செலவிடப்பட்டு 100 அடி நீளம் மற்றும் 2 அடி அகலமான தகர ரோல்லொன்று கொள்வனவு செய்திருந்த போதிலும், அந்த தகரரோல் கட்டிடத்தின் கூரைக்கு பயன்படுத்தாமல் அதனை கொள்வனவு செய்த நிறுவனத்திற்கே விற்பனை செய்து பணத்தை பெற்று முறைகேடாக பயன்படுத்தியிருந்தனர்.

- கல்வியமைச்சுச் செயலாளரின் 2015 ஜனவரி 29 திகதிய இலக்கம் 05/2015 கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் பாடசாலைகளில் முறைகேடாக பணம் அறவீடு செய்தல் தடைசெய்யப்பட்டிருந்த போதிலும் இந்த புதிய கட்டிடத்தை

நிர்மாணிப்தபற்காக பாடசாலையில் கல்வி கற்கும் பிள்ளைகளின் குடும்பங்களிலிருந்து ரூபா 400 வீதம் கூட்டுத்தொகை ரூபா 60,000 தொகையொன்று சேகரிக்கப்பட்டிருந்ததெனவும், அதற்காக பற்றுச் சீட்டு வழங்கியிருக்கவில்லை எனவும், அந்தப் பணம் காணாமல் போயிருநததெனவும், 2020 ஓகஸ்ட் 17 திகதி நடைபெற்ற பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

நிதியங்களின் குறை பயன்பாடு

- 2021 ஆண்டின் போது அமைச்சுக்கள் / திணைக்களங்கள், வெளிநாட்டுச் செயற்திட்டங்கள், தேசிய பாதீட்டுத் திணைக்களம் ஆகிய மூலங்களினால் வடமத்திய மாகாண சபைக்கு ரூபா 1,595 மில்லியனிற்கான கட்டுநிதி ஒன்று கிடைத்திருந்த போதும், 07 மூலங்கள் ஊடாக கிடைத்திருந்த ரூபா 422.1 மில்லியன் தொகைக்கான கட்டுநிதி மீதியாக இருந்த தொகை கிடைத்திருந்த மொத்தக் கட்டுநிதியில் 6 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

- 2021 ஆண்டின் போது தட்பவெட்பத்திற்கு பழக்கும் செயற்திட்டம், சிறு அளவிலான விவசாய தொழில்முயற்சிகள் பங்குகொள்ளல் நிகழ்ச்சித் திட்டம் (SAPP), சௌபாக்கிய விவசாய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், நீர்ப்பாசன சௌபாக்கிய திட்டம் ஆகிய 04 செயற்திட்டங்களுக்குரிய மதிப்பிடப்பட்ட கட்டுநிதி ரூபா 1,525.6 மில்லியன் தொகையாக இருந்த போதிலும், செயற்படுத்துவதில் காணப்பட்ட பலவீன முன்னேற்றம் காரணமாக ஆண்டின் போது கிடைத்திருந்த மொத்தக் கட்டுநிதி ரூபா 278.1 மில்லியன் தொகையாக இருந்தது. அது மதிப்பீடு செய்யப்பட்ட கட்டுநிதியின் 18 சதவீதமாகும்.

பராமரிப்பு மற்றும் திருத்த வேலை மேற்கொள்ளாமை

வடமத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் 592 பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் மற்றும் அதிபர் வீடுகள் 1,510 இல் 831,004 சதுரஅடிகளைக் கொண்டு 981 வீடுகள் திருத்த வேலை மேற்கொள்ளப்பட வேண்டிய நிலைமையிலும் 206,719 சதுரஅடிகளைக் கொண்ட 225 வீடுகள் பயன்படுத்துவதற்கு பொருத்தமில்லாத நிலைமையில் காணப்பட்ட போதிலும், தேவையினை இனங்கண்டு அந்த ஆசிரியர் மற்றும் அதிபர் வீடுகளை திருத்த வேலை மேற்கொண்டு ஆசிரியர் மற்றும அதிபர்களுக்கு வழங்குவதற்கு அல்லது தேவையற்ற வீடுகளை உடைத்து அப்புறப்படுத்துவதற்கும் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

சொத்துக்களின் மூலம் பெறவேண்டிய வருமானம்

கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் விஸ்கம் பியஸ கட்டிடத்தில் நடாத்தப்பட்டு வரும் 42 காட்சியறை கடையறைகளில் 2016 ஆண்டு முதல் 2021 திசெம்பர் 31 திகதி வரையான காலப் பகுதிக்குரிய அறவிடப்பட வேண்டிய 1.7 மில்லியனிற்கான வாடகை வருமானம் நிலுவையாக காணப்பட்டதுடன், அந்தக் கடை வாடகையை அறவீடு செய்வதற்கு போதியளவு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

விளைவற்ற / குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

2016 ஒக்தோபர் மாதத்தில் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருந்த வடமத்திய மாகாணத்தின் 03 பாடசாலைகளுக்குரிய 05

கட்டிடங்களின் நிர்மாண வேலை 2017 ஏப்ரல் 04 திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டிக் காணப்பட்ட போதிலும், 2022 ஜுலை 31 திகதி அளவிலும் அந்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அந்தக் கட்டிடங்களின் நிர்மாண வேலைக்காக செலுத்தியிருந்த ரூபா 27.2 மில்லியன் தொகை 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் விளைவற்று காணப்பட்டது.

குறிக்கோள்களுக்கு புறம்பான செயற்பாடுகள்

மாகாணத்தில் சேதன உணவு உற்பத்தியை அதிகரித்து தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கல் மற்றும் நச்சு இரசாயன பொருட்கள் இன்றிய உணவுகளை நுகர்வோருக்கு வழங்கி நோயற்ற, சுகாதாரமான பரம்பரை ஒன்றினை உருவாக்கலை குறிக்கோளாக கொண்டு உயர்ந்த பண்புடனான சேதனப் பசளை உற்பத்திக்காக இரண்டு (02) சில்லு டிரக்டர்களில் பொருத்தக்கூடிய 21 இயந்திரங்கள் ரூபா 682,500 வீதமும், நான்கு (04) சில்லு டிரக்டர் வண்டிகளில் பொருத்தக்கூடிய 90 இயந்திரங்கள் ரூபா 710,000 வீதமும் கொள்வனவு செய்வதற்கு ரூபா 77.6 மில்லியன் தொகை மாகாண விவசாய அமைச்சினால் செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் 06 இயந்தரங்கள் சேதனப் பசளை உற்பத்திக்கு பயன்படுத்தப்படாமல் இருந்ததுடன், ஒரு இயந்திரம் தமது விவசாய தேவைகளுக்கு சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்காக மாத்திரம் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அதேபோல், உரத்தின் நியமத்தை பரிசோதனை செய்வதற்காக குறிப்பிட்ட செய்முறையொன்று தயாரித்திருக்காமையால் 02 இயந்திரங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் சேதனப் பசளையை சந்தைப்படுத்த முடியாமல் இருந்ததென 11 இயந்திரங்களில் தெரிவுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டதுடன், உற்பத்தி செய்யப்படும் சேதனப் பசளைக்காக நிரந்தர விலையொன்று காணப்படாமை, அவற்றை கொள்வனவு செய்வதற்கு மற்றும் விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கான செய்முறையொன்று அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருக்காமையால் அந்த உரம் குறிப்பிட்ட நலன் பெறுவோரினால் களஞ்சியப்படுத்தப்பட்டு காணப்பட்டது.

எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை (output) அடையப் பெறாமை

- 2021 ஆண்டில் மேற்பார்வை செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த கெகிராவ மற்றும் கெபிடிகொல்லாவ கல்வி வலையங்களில் 140 பாடசாலைகளில் 27 பாடசாலைகளில் மாத்திரம் மேற்பார்வை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதன் முன்னேற்றம் 19 சதவீத மட்டத்தில் காணப்பட்டது.

- 2021 ஆண்டின் போது தமுத்தேகம, கெகிராவ மற்றும் கெபிடிகொல்லாவ வலையங்களில் மீளாய்விற்கு ஆளாக்கியிருந்த 41 பாடசாலைகளில் 38 பாடசாலைகள் தரம் சார் சுட்டிகளின் பெறுமதி 70 சதவீதத்தை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

மாற்று வலுச்சக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2016 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரையான காலப் பகுதியில் வடமத்திய மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட பொது இடங்கள் மற்றும் சுற்றுலா கவர்ச்சியுடைய இடங்களில் கூட்டுப் பெறுமதி ரூபா 41.8 மில்லியனிற்கான 646 சூரிய வீதி விளக்குகள் வடமத்திய மாகாண முதலமைச்சினால் பொருத்தப்பட்டிருந்தது. முதலமைச்சினால் இந்த 646 சூரிய வீதி விளக்குகள் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு

ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளூராட்சி நிறுவனங்களினால் அவற்றை உரிய முறையில் பராமரிக்கப்படுகின்றதென, உரிய நியமங்களுடன் செயற்படுத்தப்படுகின்றதென, அவற்றின் பௌதீக உளமை மற்றும் பாதுகாப்பு தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதன் காரணமாக வீதி விளக்குகள் பொருத்தப்பட்டிருக்காமை, பொருத்தப்பட்ட பின்னர் கழற்றப்பட்டு அகற்றப்படல், செயற்படாதிருத்தல், கள்வர்களால் கழற்றப்படல், வனவிலங்குகளினால் சேதமடைதல் மற்றும் வாகன விபத்துக்கள் மூலம் சேதமடைதல் ஆகிய காரணங்களினால் 128 சூரிய வீதி விளக்குகள் பயன்பாட்டில் காணப்படாததுடன், அதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 9.2 மில்லியனிற்கான செலவு விளைவற்ற செலவொன்றாக மாறி இருந்தது.

வடமேல் மாகாண சபை

கணக்காய்வு அவதனரிப்பு

- நிலுவை வருமானம்
- செயற்பாட்டு செயற்திறனின்மைகள்
- எதிர்பார்த்த வெளியீடுகள் (Out Put) பெற்றுக்கொள்ளப்படாமை
- ஒப்பந்த நிருவாகத்திலுள்ள குறைபாடுகள்
- முகாமைத்துவ செயற்திறனின்மை
- சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

வடமேல் மாகாண சபை

வடமேல் மாகாண சபையினால் 2021 ஆம் ஆண்டிற்காக ரூபா 38,726 மில்லியன் அரசாங்க மானியத்தின் மூலமும் உள்ளக வழிகளின் மூலம் ரூபா 6,370 மில்லியனுமாக ரூபா 45,096 மில்லியன் மொத்த தொகையான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டின் போது மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவுகளாக முறையே ரூபா 40,424 மில்லியன் மற்றும் ரூபா 4,672 மில்லியனாக ரூபா 45,096 மொத்த தொகையான செலவுகள் மதிப்பீடு செசய்யப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் போது அரசாங்க மானியத்தின் மூலம் ரூபா 35.385 மில்லியனும் உள்ளகவழிகளின் மூலம் ரூபா 6,791 மில்லியனுமாக ரூபா 42,176 மில்லியன் மொத்த தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. மீண்டுவரும் செலவுகள் ரூபா 36,945 மில்லியன் மற்றும் மூலதன செலவுகள் ரூபா 1,859 மில்லியன் ஆக ரூபா 38,804 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க மாகாணத்தின் ஒட்டுமொத்த வருமானத்தில் 4 சதவீதம் அளவானவை மூலதனச் செலவுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டததன் காரணமாக மாகாண சபையின் அபிவிருத்திக்காக நிதி ஏற்பாட்டினைச் செலவு செய்தல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளில் மாகாண சபையினால் சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் பயன்படுத்தல் தொடர்பான விபரங்கள் வரைபடம் 69 இல் காண்பிக்கப்படுகின்றது.



	2017	2018	2019	2020	2021
மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	30இ918	40இ227	38இ999	38இ278	45இ096
உள்ளபடியான வருமானம்	36இ863	32இ669	34இ791	38இ675	42இ176
ளுநசனைள3	41இ889	40இ227	38இ999	38இ277	45இ096
மதிப்பீடு செய்யப்பட்ட செலவுகள்	35இ456	32இ944	35இ818	36இ474	38இ804

வரைபடம் 69 வடமேல் மாகாண சபையின் மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களும் செலவுகளும்.

மூலம் :- வடமேல் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் 2017-2021

வடமேல் மாகாண சபையினால் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்ட கடமைகள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பிரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கி கீழே தரப்படுகின்றன.

நிலுவை வருமானம்

பிரதம செயலாளர் அலுவலகம், மாகாண வருமானத் திணைக்களம், காணி ஆணையாளர் திணைக்களம் என்பவற்றால் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 07 வருமானக் குறியீடுகளுக்காக அறவிட வேண்டிய ரூபா 266.7 மில்லியன் வருமானம் நிலுவையாகக் காணப்பட்டது. அதில் ரூபா 143.5 மில்லியன் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டு வருகின்றது.

செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

வடமேல் மாகாண சபையின் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் 2017 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையான காலத்தில் குருனாகல் மாவட்டத்தில் ரூபா12.9 மில்லியன் தொகையும் புத்தளம் மாவட்டத்தில் ரூபா 7.4 மில்லியன் தொகையுமாக ரூபா 20.3 மில்லியன் மொத்த தொகையான தரம் அற்ற மருந்துகள் காணப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டுவரை குருனாகல் மாவட்டத்தில் ரூபா 29.3 மில்லியன் தொகையும் புத்தளம் மாவட்டத்தில் ரூபா 4.6 மில்லியன் தொகையுமாக ரூபா 33.9 மில்லியன் மொத்த தொகையான மருந்துகள் காலாவதியாகியிருந்தன.

எதிர்பார்த்த வெளியீடுகள் (Out Put) பெற்றுக்கொள்ளப்படாமை

இலங்கையின் கல்வி முறைமையினை மறுசீரமைப்புச் செய்தல், பல்வகைப்படுத்தல், வலுப்படுத்தல், மேம்படுத்தல் ஆகிய குறிக்கோளில் அமுல்ப்படுத்தப்பட்ட பொது கல்வியை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்திற்காக உலக வங்கியின் நிதி வழங்கலின் அடிப்படையில் வடமேல் மாகாண சபையிக்கு 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்காக முறையே ரூபா 45 மில்லியன் மற்றும் ரூபா 230 மில்லியன் நிதி ஏற்பாடு கிடைத்திருந்தது.

- சாதாரண கல்வியை நவீனமயப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டின் மூலம் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் உலக வங்கி நிதி ஏற்பாட்டின் மூலம் 2020 ஆம் ஆண்டிலிருந்தே கட்டுநிதி கிடைத்திருந்தது. எனினும் 2019 ஆம் ஆண்டில் மேற்கூறிய செயற்திட்டத்திற்காக கட்டுநிதி வழங்குதல் இடம்பெறாதிருந்தும் பொது கல்வியை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்திற்காக (GEMP) வருடாந்த கணக்கு பொழிப்புக்களின் மூலம் 2019 ஆம் ஆண்டின் போது 210-86-04-2001 (WB) ஆம் இலக்க செலவு விடயமான கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களுக்காக ரூபா 0.5 மில்லியனும், 210-86-04-2401 (றுடீ) ஆம் இலக்க செலவு விடயமான பதவியணியினர் பயிற்சிக்காக ரூபா 12.7 மில்லியனும், 210-86-04-2509 (WB) ஆம் இலக்க செலவு விடயமான ஏனையவற்றிற்காக ரூபா 0.4 மில்லியனுமாக ரூபா 13.6 மில்லியன் மொத்த பெறுமதியான செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதற்கிணங்க

நிர்ணயிக்கப்பட்ட அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக வழங்கப்படுகின்ற கட்டுநிதியை அதற்கு நேரொத்த செலவுகளை மேற்கொள்வதற்காக மாத்திரம் பயன்படுத்த வேண்டிய போதிலும் உலக வங்கியின் உதவியின் கீழ் நிதிகள் வழங்கப்படாதிருந்தும் ஏனைய மூலகங்களுக்குரிய செலவுகளை மேற்கொள்வதற்காக வழங்கிய கட்டு நிதியை அதனுடன் தொடர்பு அற்ற செயற்பாடுகளுக்காக செலவு செய்யப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

- 2019 ஆம் ஆண்டின் போது 210-86-4-2401 ஆம் இலக்க செலவு விடயத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்த ரூபா 12.6 மில்லியன் தொகையான பதவியணியினர் பயிற்சி செலவானது 2019 ஆம் ஆண்டின் போது சேர்த்துக்கொள்ளப்பட்ட புதிய ஆசிரியர்களுக்கான இராணுவ பயிற்சி நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட சேவை தொடக்க பயிற்சி நடவடிக்கைகளுக்காக ஏனைய தரப்பினர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் என அவதானிக்கப்பட்டது. கல்வியினை நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்திற்காக 2020 ஆம் ஆண்டிலிருந்தே கட்டுநிதி கிடைத்திருந்தது. அதற்கிணங்க 2019 ஆம் ஆண்டில் சேர்த்துக்கொள்ளப்பட்ட புதிய ஆசிரியர்களுக்கான பயிற்சியானது இந்த செயற்திட்டத்திற்கான பயிற்சியுடன் சம்பந்தப்பட்ட திட்டங்களில் காணப்பட்டது என்பதற்கான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. 2019 ஆம் ஆண்டின் போது ஆளுநரின் கட்டளையின் படி ஏனைய குறிக்கோளினை அடைந்து கொள்வதற்காக புதிய ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் மேற்கொண்டு பின்னர் அதனை 2020 ஆம் ஆண்டிற்கான திட்டத்தில் உள்ளடக்குவதன் மூலம் இச்செலவானது பொது கல்வியை நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்திற்காக திட்டமிடப்படாத ஒரு செலவு என்பது வெளிப்படையானதுடன் பின்னர் அச்செலவினை மேற்கொள்வதற்கு ஏனைய நடைமுறைகள் இல்லாததனால் மேற்கூறிய செயற்திட்டத்தின் செலவுக் குறிகாட்டிக்கு தொடர்புபடுத்தி செயற்திட்டத்தின் செலவாக பதிவழிக்கப்பட்டிருந்தது.
- கல்வியினை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோளானது ஆரம்ப மற்றும் இரண்டாம் தர கல்வி மட்டத்திலுள்ள மாணவர்களுக்கிடையே ஆங்கில மொழி, கணிதம் மற்றும் டிஜிடல் கற்றலினை மேம்படுத்தலாக இருந்ததுடன் அதனை சிறப்பாக விளங்கிக் கொள்ளாததன் அடிப்படையில் மாகாண கல்வி நிறுவனங்களின் கட்டிடம் மற்றும் நிர்மாணங்களுக்காக 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 26.2 மில்லியனும் 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 49.7 மில்லியனும் செலவு செய்யப்பட்டிருந்தது. அது மேற்கூறிய ஆண்டுகளின் மொத்த செலவில் முறையே 83 சதவீதம் மற்றும் 43 சதவீதமாகும்.
- வடமேல் மாகாண கூட்டுறவு அமைச்சின் கீழ் உருவாக்கப்பட்ட மீன்பிடி கிராமங்களின் 135 வீடுகளுக்கும் 10 மீன் பிடி துறைமுகங்களுக்கும் 2018 திசெம்பர் 21 ஆந் திகதி ரூபா 12.2 மில்லியன் பணம் செலவு செய்து சூரிய சக்தி மின்கலன் தொகுதிகள் வழங்கப்பட்டிருந்தும் 2022 சனவரி 20 ஆந் திகதி அவை சம்பந்தமாக மேற்கொண்ட கணக்காய்வு பரிசோதனையின் போது அந்த சூரிய சக்தி மின்கலன் முறைமையானது முழுமையாக செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டதுடன் முழுச் செயற்திட்டமும் வெற்றியளித்திருக்கவில்லை.

- ஒப்பந்தக்காரருக்கு பிடித்துவைத்தல் பணத்தை மீளச் செலுத்தும் போது வடமேல் மாகாண பொறியியல் திணைக்களத்தின் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைகளுக்கு இணங்க தயாரிக்கடப்படவேண்டிய தொழில்நுட்ப உத்தியோகத்தர் அறிக்கை இல்லாது 100 நலன் பெறுனர் வீடுகளுக்கும் 10 மீன்பிடி துறைமுகங்களுக்கும் மற்றும் கல்பிட்டி பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்களின் பின்தொடர் நடவடிக்கை அறிக்கையின் படி 35 வீடுகளுக்காகவும் மொத்தமாக 135 வீடுகளுக்கும் 10 துறைமுகங்களுக்குமாக முழுமையாக தோல்வியடைந்த செயற்திட்டத்திற்காக ரூபா 1.2 மில்லியன் பணம் நிறுத்திவைத்தல் பணமாக ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.
- சூரிய சக்தி மின்கலன் முறைமைக்குரிய துணைக் கருவிகளின் உத்தரவாத காலம் 01 ஆண்டாகக் குறிப்பிட்டு வழங்கிய நிறுவனத்தினால் உத்தரவாதச் சான்றிதழானது வீட்டு உரிமையாளருக்கும் அதன் இணைபிரதியானது வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தியும் வர்த்தகமும், காணி, மின்சக்தி, வலு, விளையாட்டுத்துறை, மற்றும் இளைஞர் விவகார அமைச்சிற்கும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பொருள் விபரக் குறிப்பின் பிரகாரம் உத்தரவாத காலம் முறையே பெற்றரிக்கு 02 ஆண்டுகளும், Solar Panel இற்கு 10 ஆண்டுகளிலிருந்து 20 ஆண்டுகள் வரையும், டுநுனு டுயஅி இற்கு ஆகக் குறைந்தது. 02 ஆண்டுகளுமாக அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த உத்தரவாத கால எல்லைக்குள் செயற்படாதிருந்த எந்த துணைக்கருவியினையும் மீண்டும் மாற்றி வழங்குவதற்கு வழங்கல் செய்த நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அது சம்பந்தமாக முறையாக தலையீடு செய்வதற்கு அமைச்சு தவறியிருந்தது.

ஒப்பந்த நிருவாகத்திலுள்ள குறைபாடுகள்

வடமேல் கலா மன்றத்தினை மீண்டும் அபிவிருத்தி செய்யும் போது ஆலோசனை சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஒரு ஆலோசனை நிறுவனத்துடன் 2016 ஆகஸ்ட் 24 ஆந் திகதி பிரதம அமைச்சு உடன்படிக்கை செய்திருந்தது. அந்த நிறுவனத்தினால் உடன்படிக்கை செயற்பாடுகளின் பிரகாரம் திட்டங்களைத் தயாரித்தல், ஒப்பந்த ஆவணங்களைத் தயாரித்தல், ஒப்பந்தங்களை வழங்குதல் என்பன 2016 நவம்பர் 27 ஆந் திகதியளவில் மேற்கொண்டு நிர்மாணத்தை முடிவுறுத்துதல் 2017 நவம்பர் 27 ஆந் திகதியளவில் இடம்பெற வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆண்டின் செப்தெம்பர் வரை திட்ட வரைபினை வழங்குதல் தாமதமடைந்ததன் அடிப்படையில் நிர்மாணங்களை முடிவுறுத்துவதற்கு 2019 யூலை 23 ஆந் திகதி வரையான காலம் எடுத்திருந்ததன் அடிப்படையில் விலை அதிகரிப்பாக ரூபா 3.6 மில்லியனும் தாமதக் கட்டணத்தை அறவீடு செய்யமுடியாமை நட்டம் ரூபா 4.9 மில்லியனும் ஆக அரசாங்கத்தினால் மேற்கொள்ள வேண்டி இருந்த மொத்த நட்டம் ரூபா 8.5 மில்லியனாகும்.

மேலும் ஆலோசனை நிறுவனத்தினால் தயாரித்த BOQ களில் குறிப்பிட்ட வேலை விடயங்களில் ரூபா 38.7 மில்லியன் தொகையான வேலை விடயங்கள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டு ரூபா 100.6 மில்லியன் மேலதிக வேலைகளாக ரூபா 139.4 மில்லியன் மொத்த தொகை செலவு செய்யப்பட்டு அச்செயற்திட்டம் கட்டம் I ஆக பெயரிடப்பட்டு

முடிவுறுத்தப்பட்டிருந்தும் செயற்திட்டம் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

முகாமைத்துவ செயற்திறனின்மை

பிரதம அமைச்சின் கீழ் வடமேல் மாகாண கல்வி அபிவிருத்தி நிதியத்தினை உருவாக்குவதற்காக பயிற்சிப் புத்தகங்களைப் பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு சலுகை விலையில் பயிற்சி புத்தகங்களை பகிர்ந்தளிக்கும் செயற்திட்டம் சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- விற்பனை செய்வதற்காக ரூபா 33.3 மில்லியன் பெறுமதியான பயிற்சிப் புத்தகங்கள் கல்வி அலுவலகம், பாடசாலைகள் மற்றும் பல்வேறு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அப்புத்தகங்களின் விற்பனைக்காக கிடைத்த பணம் ரூபா 18.7 மில்லியன் மாத்திரமாகும். அதற்கிணங்க ரூபா 14.6 மில்லியன் அதாவது பகிர்ந்தளிக்கப்பட்ட புத்தகங்களின் பெறுமதியில் 44 சதவீதமான பணம் நிலுவையாகக் காணப்பட்டது.

- புத்தகங்களை விற்பனை செய்ததன் மூலம் உழைக்கப்பட்ட இலாபம் கல்வி அபிவிருத்தி நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டு அதன் மூலம் கல்விக்காக பொருளாதார சிக்கல் உள்ள பிள்ளைகளுக்கு நிவாரணம் வழங்குதல் உரிய செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்தும் குறிக்கோளாக இருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டின் போது பிள்ளைகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டிருக்காததனால் எதிர்பார்த்த குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு செயற்திட்டம் தவறியிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

- மாகாண முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக இணைய தளத்தை அடிப்படையாகக் கொண்ட தகவல் முகாமைத்துவ முறைமையை உருவாக்கும் செயற்திட்டத்திற்காக 2017 ஒக்தொபர் 23 ஆந் திகதி மாகாண திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் பிரிவிற்குக் கிடைத்த ரூபா 5.6 மில்லியன் நிதி ஏற்பாட்டு பணத்திலிருந்து செயற்திட்டத்தின் வேலைகளை 2019 மார்ச் 31 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்ய வேண்டிய போதிலும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாது 2020 ஆம் ஆண்டில் காணப்பட்ட பூர்த்தியாக்கல் நிலைமையே காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. 2020 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 3.8 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தும் 2021 ஆம் ஆண்டின் போது செயற்திட்டத்திற்காக செலவு செய்யப்பட்டிருக்காததுடன் 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் செயற்திட்டத்தின் வேலைகள் முடிவடைந்திருக்காது ரூபா 1.8 மில்லியனான வேலைகள் மிகுதியாகக் காணப்பட்டது.

- வடமேல் மாகாண சபை நிதியிலிருந்து ரூபா 25 மில்லியன் செலவு செய்து பூர்த்தி செய்யப்பட்ட பம்பல கல்வி அபிவிருத்தி நிலையத்தின் நிர்மாணங்கள் 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் விரிவுரை மண்டப நடவடிக்கையை முடிவுறுத்தி வென்னப்புவை பிராந்திய பொறியியல் அலுவலகத்தின் மேற்பார்வையில் 2019 ஆம் ஆண்டின் போது ஒப்பந்த கம்பனியால் சிலாபம் வலயக் கல்வி அலுவலகத்திற்கு

ஒப்படைக்கப்பட்டிருந்தது. கல்வி அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்காக 200 ஆசனங்களைக் கொண்டிருக்க வேண்டிருந்தும் கட்டிடம் ஒப்படைக்கப்பட்ட 2019 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து 2021 ஆம் ஆண்டின் இறுதி வரை 03 ஆண்டுகள் அளவான காலப்பகுதியில் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவது தொடர்பான தகவல்கள் பதிவேட்டின் பிரகாரம் ஏனைய பொறுப்பாளர்களின் கையொப்பத்துடன் 90 நபர்களின் பங்குபற்றுதலுடன் 2021 மார்ச் மாதத்தின் போது ஒரு நிகழ்ச்சித்திட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

வடமேல் மாகாணத்தில் அனாதரவான மற்றும் கைவிடப்பட்ட பிள்ளைகளை உடல் உள ரீதியாவும் நன்னடத்தை ரீதியாகவும் அபிவிருத்தி செய்தல், நலன்புரி மற்றும் பேணிக்காத்தல் ஆகிய குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்கும் போதும் அமுல்ப்படுத்தும் போதும் நிலைபேறான அபிவிருத்தி இலக்கிற்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தது. இதில் SDG 04 இன் கீழ் முழுமையான, நியாயமான, தரமான கல்வியை உறுதிப்படுத்தல் மற்றும் அனைவருக்கும் ஆயுட்காலம் முழுவதும் கற்கும் சந்தர்ப்பத்தினை வழங்குவதன் கீழ் பகல் கண்காணிப்பு நிலையங்களுக்கு விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 3.9 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நிதிப்பிரமாணம் 137(5) இன் பிரகாரம் கொடுப்பனவுகளை அங்கீகரிக்கும் போது பொருட்கள் பரீட்சிக்கப்பட்டு பொறுப்பேற்கப்பட்டிருந்தன எனவும் 138(8) இன் பிரகாரம் வவுச்சர்கள் சரியாகவும் அனைத்து விபரங்கள் முழுமையாகவும் உள்ளது எனவும் கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்புக் கூற வேண்டிய போதிலும் பொருட்கள் உரிய முறையில் கிடைத்துள்ளது எனவும் வவுச்சரின் முகப்பில் பொருள் இருப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது என பிழையாகக் காட்டப்பட்டிருந்தும் ரூபா 3.9 மில்லியன் பணம் 372 மற்றும் 373 ஆம் இலக்க வவுச்சர்களின் மூலம் செலுத்தப்பட்டிருந்தது. மாகாண நிதி விதி 164(ஆ) இன் பிரகாரம் அப்பொருட்கள் கிடைத்தது என்பது இருப்பேடுகளுக்கு கொண்டுவரப்பட்டிருந்தும் உள்ளபடியாக பொருட்கள் 2022 மே 27 ஆந் திகதி வரையும் கிடைத்திருக்காததனால் மேற்கூறிய குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

சப்ரகமுவ மாகாண சபை

கணக்காய்வு அவதானிப்பு

- நிலுவை வருமானம்
- அமைச்சரவை தீர்மானங்களுக்கு முரணாக செயற்படல்
- நிதியத்தின் குறை பயன்பாடு
- குறிக்கோள்களுக்கு புறம்பான செயற்பாடுகள்
- எதிர்பார்த்த நலன்கள் பெற்றுக் கொள்ளாமை
- விளைவற்ற / குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

சப்ரகமுவ மாகாண சபை

சப்ரகமுவ மாகாண சபையினால் 2021 ஆண்டிற்காக ரூபா 36,991 மில்லியன் தொகை அரசாங்க மானியத்தின் மூலமும், உள்ளக வழிகள் மூலமும் ரூபா 3,200 மில்லியன் தொகையுமாக மொத்தம் ரூபா 40,191 மில்லியனிற்கான வருமானம் ஒன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2021 ஆண்டின் மீண்டுவரும் செலவுகளுக்காக ரூபா 33,408 மில்லியன் தொகையும், மூலதனச் செலவுகளுக்காக ரூபா 6,783 தொகையும் ஆக மொத்தம் ரூபா 40,191 தொகை பயன்படுத்துவதற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, 2021 ஆண்டின் அரச மானியங்கள் மூலம் ரூபா 33,191 மில்லியன் தொகையும், உள்ளக வழிகளின் மூலம் ரூபா 3,059 மில்லியன் தொகையும் ஆக மொத்தம் ரூபா 36,250 மில்லியன் தொகைக்கான வருமானம் உழைத்திருந்ததுடன், அதில் அடங்கியுள்ள 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய வருமானம் ரூபா 128 மில்லியன் தொகை ஆக காணப்பட்டது. 2021 ஆண்டின் போது மீண்டுவரும் செலவுகள் ரூபா 31,411 மில்லியன் தொகை மற்றும் மூலதனச் செலவு ரூபா 2,604 மில்லியன் தொகையுமாக ரூபா 34,015 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அதில் அடங்கியுள்ள 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அட்டுருச் செலவு ரூபா 742 மில்லியன் காணப்பட்டது.

மிளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பான விபரங்கள் வரைபடம் 70 இல் காண்பிக்கப்படுகின்றது.



	2017	2018	2019	2020	2021
மதிப்பிடப்பட்ட வருமானம்	25709	29636	32683	34083	40191
உள்ளபடியான வருமானம்	27821	27774	30622	31836	36250
மதிப்பிடப்பட்ட செலவினம்	25709	29636	32683	34083	40191
உள்ளபடியான செலவினம்	28931	26062	30071	32039	34015

வரைபடம் 70 – மீளாய்வாண்டின் போதும் கடந்த 4 ஆண்டுகளின் போதும் மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகள்

மூலம் - சபரகமுவ மாகாண சபை நிதிக் கூற்று – 2017 - 2021

சபரகமுவ மாகாண சபை தொடர்பாக 2021 ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கிய கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

நிலுவை வருமானம்

- காணி ஆணையாளரின் இலக்கம் 96/5 மற்றும் 1996 ஆகஸ்ட் 01 திகதி சுற்றறிக்கையின் 6.1 பந்தியின் பிரகாரம் வருடாந்த குத்தகை ஏதேனும் ஒரு ஆண்டில் ஜனவரி 01 திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், இரத்திரபுரி மாவட்டத்தின் 18 பிரதேச செயலகங்களினால் 2021 திசெம்பர் 30 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 39.92 மில்லியன் தொகைக்கான வருடாந்த குத்தகைத் தொகை மற்றும் ரூபா 8.67 மில்லியன் தண்டப்பணம் நாளதுவரையாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், அந்தச் சுற்றறிக்கையின் 7(i) பந்தியின் பிரகாரம் குத்தகை செலுத்துவதை புறக்கணிக்கும் சந்தர்ப்பங்களில் காணியின் உரிமையை திருப்பப் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் பிரதேச செயலகங்களினால் அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதேபோல், மேற்கூறிய சுற்றறிக்கையின் 6.11 பந்தியின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இரத்தினபுரி மாவட்டத்தின் 07 பிரதேச செயலகங்களுக்குரிய ரூபா 10.09 மில்லியன் தொகை மற்றும் கேகாலை மாவட்டத்தின் 06 பிரதேச செயலகங்களுக்குரிய கூட்டுத்தொகை ரூபா 5.74 மில்லியனிற்கான நிலுவைகள் நீண்ட கால குத்தகை தொகையினை நாளதுவரையாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

அமைச்சரவை தீர்மானங்களுக்கு முரணாக செயற்படல்

அமப/**21/1596/304/134** இலக்கம் கொண்ட மற்றும் 2021 செப்தம்பர் 07 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் கீழ் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்த, நிதியமைச்சரின் 2021 ஆகஸ்ட் 28 திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 02(vi) பந்தியின் படி மூலதன அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் பல்வேறு பண்டங்கள் மற்றும் உபகரணங்கள் பகிர்ந்தளித்தலை மீளாய்வு செய்து அவற்றை இடைநிறுத்துவதற்காக திட்டமிடப்பட்டிருந்தது. அவ்வாறிருக்கும் போது "அபிவிருத்தி உதவிகள்" செலவு விபரங்களின் கீழ் இரண்டாவது குறைநிரப்பு நிதிக் கூற்றின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அதன் மூலம் ரூபா 11.6 மில்லியன் தொகை செலவிடப்பட்டு தன்னார்வ நிறுவனங்களுக்கு பகிர்தளிப்பதற்காக பண்டங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

நிதியத்தின் குறை பயன்பாடு

சுத்தமான பசுப் பால் உற்பத்தி செய்தல் மற்றும் பால் பதப்படுத்தும் நிலையங்கள் ஏற்படுத்தல் மற்றும் நவீனமயப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் ரம்புக்கன, தெரனியகல மற்றும் பலாங்கொடை மிருவ வைத்தி பிரிவுகளில் செயற்படுத்துவதற்கு கால்நடை, பண்ணை ஊக்குவிப்பு மற்றும் பால், முட்டை சார்ந்த தொழில் இராஜாங்க அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த

கூட்டுத்தொகை ரூபா 1.32 மில்லியனிற்கான 22 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

குறிக்கோள்களுக்கு புறம்பான செயற்பாடுகள்

சபரகமுவ மாகாணத்தில் உள்ளூராட்சி நிறுவனங்களினால் உற்பத்தி செய்யப்படுகின்ற சேதனப் பசளை பயிர்ச்செய்கைக்கு பொருத்தமான நியமத்துடன் அபிவிருத்தி செய்வதற்கு தேவையான உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது முதலமைச்சினால் குறைநிரப்பு நிதிக் கூற்று ஒன்றின் மூலம் ரூபா 100 மில்லியன் தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 திகதி அந்த ஏற்பாடுகளில் இருந்து ரூபா 9.5 மில்லியன் செலவிடப்பட்டு சேதனப் பசளை உற்பத்திக்கு பொருத்தமில்லாத உக்காத குப்பை முகாமைத்துவத்திற்கு தேவையான 10 உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மேலும், 10 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அந்த இயந்திரங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், மூன்று அவத்தை மின்சாரத் தொடர்பு காணப்படாமையால் 2022 ஜூலை 10 திகதி வரை இந்த இயந்திரங்களை பயன்படுத்துவதற்கு முடியாமல் இருந்தது.

எதிர்பார்த்த நலன்கள் பெற்றுக் கொள்ளாமை

2017 முதல் 2020 ஆண்டு வரையான காலப் பகுதியில் முதலமைச்சினால் கூட்டுத்தொகை ரூபா 6.38 மில்லியன் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 05 சமூக நீர்த் திட்டங்கள் சரியாக தேவையினை இனங் கண்டு முறையான திட்டமிடலின் படி நிர்மானிக்கப்படாமையால் மீளாய்வாண்டு இறுதியளவில் குறிப்பிட்ட நலன் பெறுவோருக்கு எதிர்பார்த்த நலன்கள் கிடைத்திருக்கவில்லை.

விளைவற்ற / குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

மாகாண சுற்றுலாத்துறையை முன்னேற்றுவதற்காக பிரயாணம் செய்யும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகளுக்கு வசதிகளுடனான இடமொன்று ஏற்படுத்தும் குறிக்கோளுடன் இரத்தினபுரி கண்டி பிரதான பாதைக்கு அண்மையில் நாமல்தெனிய சுற்றுலா ஓய்வகமொன்று 2005 ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்தது. முறையான சாத்தியக்கூறு ஆய்வொன்றின்றி நிர்மாணிக்கப்பட்டிருந்த இந்தக் கட்டிடத்திற்காக மாகாண வீதி அமைச்சினால் 2004 ஆண்டு முதல் 2021 செப்தம்பர் வரையான காலப் பகுதியில் கூட்டுத்தொகை ரூபா 12.64 மில்லியனிற்கான செலவொன்று மேற்கொண்டிருந்த போதிலும், 2021 ஆண்டு இறுதி வரை 05 வருடங்கள் திறந்து காணப்பட்டதுடன், 12 வருடங்களாக இந்தக் கட்டிடம் எதுவித கருமத்திற்கும் பயன்படுத்தப்படாமல் மூடிவைக்கப்பட்டிருந்தது.

ஊவா மாகாண சபை

கணக்காய்வு அவதானிப்பு

- சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்
- முறையற்ற கொடுப்பனவுகள்
- இனங்காணப்பட்ட நட்டங்கள் / சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஊவா மாகாண சபை

ஊவா மாகாண சபையினால் 2021 ஆம் ஆண்டிற்காக ரூபா 30,683 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அவற்றுள் ரூபா 28,984 மில்லியன் அரச மானியங்களின் மூலமும், உள்ளக வழிகளில் ரூபா **1,699** மில்லியன் சேகரிப்பதற்கும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு சேகரிக்கப்படும் வருமானத்தில், மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபா **28,176** மில்லியன் தொகையும், மூலதன செலவினங்களுக்காக ரூபா **4,885** மில்லியனுமாக செலவினம் செய்ய மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அரசின் நன்கொடைகள் மூலம் ரூபா **28,806** மில்லியன் கிடைத்திருந்ததுடன், உள்ளக வழிகளினூடாக ரூபா **1,663** மில்லியனுமாக வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு சேகரிக்கப்பட்ட வருமானத்தில், மீண்டெழும் செலவினம் ரூபா **26,867** மில்லியன் மற்றும் மூலதன செலவினம் ரூபா **3,146** மில்லியனுமாக செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் மற்றும் கடந்த நான்கு வருடங்களின் போது மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான விபரங்கள் உரு 71 இல் ஒப்பிடப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளது.



உரு 71 – மதிப்பீடு செய்யப்பட்டிருந்த மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்கள் மூலம் - ஊவா மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள்

ஊவா மாகாண சபைக்கு உரிய 2021 ஆம் ஆண்டின் போது இடம்பெற்ற கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் பொழிப்பாக் கப்பட்டு கீழே காண்பிக்கப்படுகின்றது.

சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

- 2006 ஏப்ரல் 25 ஆந் திகதிய 6/2006 ஆம் இலக்க மற்றும் 2006 நவம்பர் 10 ஆந் திகதிய 6/2006(ii) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2006 சனவரி 01 ஆந் திகதி முதல் அரச சேவைக்கு புதிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளும் போது குறித்த உத்தியோகத்தர் நியமிக்கப்பட்ட பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் ஆரம்ப படிமுறையில் வைக்கப்பட வேண்டும். எனினும் 2006 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலும் ஊவா மாகாண சபையினால் ஆட்சேர்க்கப்பட்ட பாடசாலை, வாசிகசாலை ஊழியர்கள், பாடசாலை ஆய்வுகூட ஊழியர்கள் மற்றும் பாடசாலை வாயிற்காப்போர் ஆகிய 778 பதவிகளுக்காக ஐஐஐ தரத்தில் ஆரம்ப சம்பளத்தில் வைப்பதற்கு பதிலாக II தரத்தில் ஆட்சேர்க்கப்பட்டு அந்த தரத்தில் ஆரம்ப சம்பளத்தில் வைத்து 2006 ஆம் ஆண்டு நவம்பர் முதல் மீளாய்வாண்டின் செப்தெம்பர் மாதம் வரையிலும் அடிப்படை சம்பளமாக ரூபா 132.28 மில்லியன் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

- முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் 2018 ஒக்தோபர் 18 மற்றும் 2018 திசெம்பர் 14 ஆந் திகதிய கடிதங்களின் மூலம் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் பிரகாரம் ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தின் பாடசாலைகளுக்கு கல்விசாரா ஆரம்ப திறன்சாரா சேவைத் தொகுதியின் பதவிகளின் எண்ணிக்கை 2466 இனை விஞ்சலாகாத போதிலும் வலயக் கல்வி அலுவலகங்கள் 10 இனால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பதவியணி தகவல்களுக்கமைய 2020 ஆம் ஆண்டில் செப்தெம்பர் 30 ஆந் திகதியில் உள்ளபடியான பதவியணி 2596 ஆனமையால் 130 பதவியணியினர் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தின் பாடசாலைகளின் கல்விசாரா ஆரம்ப, திறன்சாரா பதவியணியின் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வு நடைமுறையின் 9.4 ஆம் பந்திக்கமைய பாடசாலை, வாசிகசாலை ஊழியர்கள், பாடசாலை ஆய்வுகூட ஊழியர்கள், பாடசாலை வாயிற்காப்போர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யும் போது தற்போது காணப்படும் வெற்றிடங்களின் அடிப்படையில் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள சராசரி தொழிலாளர்கள், பாடசாலை பூங்கா ஊழியர்கள், பாடசாலை விவசாய தொழிலாளர்கள் மற்றும் பாடசாலை சுத்திகரிப்பு தொழிலாளர்கள் ஆகிய ஊழியர்களிடையே தகைமை உடையவர்களிடையே 60 சதவீதமும் நேரடி ஆட்சேர்ப்பாக 40 சதவீதமுமாக கல்விசாரா திறன்சாரா பதவிணயிக்கு ஆட்சேர்க்க வேண்டும். எனினும் அந்த ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் 2006-2017 காலத்தினுள் மேலே குறிப்பிடப்படும் உள்ளக ஊழியர்களின் ஆட்சேர்க்கப்பட வேண்டிய ஊழியர்களின்

466 பேர் கல்விசாரா திறன்சாரா பதவியணிக்கு இணைத்துக் கொள்ளப்படாது அந்த அளவும் நேர் முறைமையின் அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

முறையற்ற கொடுப்பனவுகள்

- ஆறாவது ஊவா மாகாண சபையின் உத்தியோகபூர்வ பதவிக்காலம் நிறைவடைந்த பின்னர் மாகாண சபையின் தலைவர் பதவி பெயரளவு பதவியாக உள்ள போது மற்றும் மாகாண சபைக்குச் சொந்தமான வாகனங்கள் உள்ள போது தலைவருக்கு பொருத்தமான வாகனமொன்றினை வழங்கி செலவினத்தை குறைப்பதற்கு பதிலாக மாதாந்தம் போக்குவரத்து படியினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தமையால் 2019 ஒக்தோபர் 08 ஆந் திகதி முதல் இந்த அறிக்கை வெளியிடப்படும் திகதி வரையிலுமான மொத்த காலப்பகுதியினுள் ரூபா 16.3 மில்லியன் போக்குவரத்து படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் தலைவர் அக்காலப்பகுதியினுள் சபைக்கு வருகை தந்தமையோ அல்லது அவரால் கடமைகள் நிறைவேற்றப்பட்டமையோ அவதானிக்கப்படவில்லை.

- "அரச செலவின முகாமைத்துவம்" எனும் தலைப்பில் PS/CSA/11-18 ஆம் இலக்க மற்றும் 2018 ஒக்தோபர் 12 ஆந் திகதிய சனாதிபதி செயலக சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தியின் மூலம் ஆளுனருக்கு மாதாந்தம் உச்ச எரிபொருள் படி வழங்கப்பட்டுள்ள போது அச்சுற்றறிக்கைக்கு முழுமையாக முரணாக 2020 செப்தெம்பர் மாதம் முதல் 2022 பெப்ரவரி மாதம் இறுதி வரையிலும் மேலதிக எரிபொருளாக 7895.25 லீற்றர் பெற்றோலுக்காக ரூபா 1.04 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த விதத்திலேயே ஆளுனரின் இணைப்புச் செயலாளருக்கும் அச்சுற்றறிக்கைக்கு முரணாக மாதாந்தம் செலுத்தப்படும் எரிபொருள் படிகளுக்கு மேலதிகமாக மேலதிக எரிபொருள் 3,924 லீற்றர்களுக்காக ரூபா 0.5 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த எரிபொருளுக்குரிய பற்றுச்சீட்டுக்கள் மேலதிக எரிபொருள் கொள்வனவாக எந்த வகையிலும் கருத்தில் கொள்ள முடியாத போதிலும் அவ்வாறான பற்றுச்சீட்டுக்களுக்காக மேலதிக எரிபொருள் பெற்றுக்கொள்ளலாக குறிப்பிட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஆளுனர் மற்றும் அவரின் இணைப்புச் செயலாளருக்கு எரிபொருள் படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்ட தொகையிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய எரிபொருள் அளவில் அவர்களுக்கு தனியாக வழங்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ வாகனங்களின் சராசரி எரிபொருள் நுகர்வின் பிரகாரம் ஒரு லீற்றரில் பயணம் செய்யக்கூடிய தூரத்தினை கணிப்பிடும் போது பயணச் செய்யக்கூடிய உச்ச அளவு பயணத்தில் ஈடுபடுத்தப்படாது முறையற்ற விதத்தில் உரிய முறையில் ஆராயாது மேலதிக எரிபொருளை கொள்வனவு செய்தலாக குறிப்பிட்டு முன்வைக்கப்பட்டிருந்த பற்றுச்சீட்டுக்களுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- 03/2018 யூலை 18 ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் மூலம் திறைசேரியின் முன்அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது மாகாண சபையினால் தமது பதவியணிக்கு செலுத்தப்படும் படிகளை தீர்மானித்தல் தவிர்க்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக பிரதான செயலாளர் (கொள்கைத் திட்டமிடல்) அலுவலகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த யுனிசெவ் செயற்திட்டங்களின் செயல்முன்னேற்ற கூட்டங்களுக்கு பங்குபற்றுவதற்கு உத்தியோகத்தர்களுக்கு பொதுவான கடமைத் திகதிகளில் கடமைக் காலத்தினுள் இரண்டு மணித்தியாலங்களுக்கு குறைவான காலத்திற்காக கூட்டங்களுக்கு ரூபா 0.2 மில்லியன் படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

- 03/2018 ஆம் இலக்க மற்றும் 2018 யூலை 18 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் மூலம் பொதுதிறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன்அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாது தமது நிறுவனங்களின் பதவியணிக்கு செலுத்தப்படும் பணிகளை தீர்மானிப்பதிலிருந்து தவிர்க்க வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ள போது ஊவா மாகாண சபையின் செயலகத்தின் அலுவலக பதவிணயினின் 30 உத்தியோகத்தர்களுக்கு 2017 ஆகஸ்ட் மாதம் முதல் இவ்வறிக்கை வெளியிடப்படும் திகதி வரையிலும் அவர்களின் அடிப்படைச் சம்பளத்தில் 25 சதவீதமான ரூபா 13.2 மில்லியன் கூட்டுத்தொகையான விசேட பணிகள் செலுத்தப்பட்டிருந்தன. இந்த தொகையில் ரூபா 7.6 மில்லியன் மாகாண சபையின் உத்தியோகபூர்வ காலம் நிறைவடைந்த பின்னர் அதாவது 2019 ஒக்தோபர் 08 ஆந் திகதி முதல் 2022 யூன் 30 ஆந் திகதி வரையில் அந்த பதவியணிக்கு மேற்கொள்ளக்கூடிய கடமைகளுக்கு பொருத்தமற்ற காலப்பகுதியில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் நாட்டில் நிலவிய கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையில் இந்த அலுவலகத்தின் உத்தியோகத்தர்களில் சிலருக்கு மாதமொன்றிற்கு 4 நாட்கள் எனும் குறைந்த எண்ணிக்கையிலான நாட்களே சேவைக்கு வருகை தந்துள்ள போது அடிப்படைச் சம்பளத்தின் 25 சதவீதமான விசேடமான படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

- 2018 பெப்ரவர 20 ஆந் திகதி பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2018 இன் 03(1) பந்திக்கமைய அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தர் ஒருவரின் சேவை முறிவுடன் அல்லது இல்லாது அவரை மீள சேவையில் ஈடுபடுத்தும் போது அவரது அரச சேவையின் இறுதியாக பெற்ற சம்பளத்திற்கு சமனான மாதாந்த படியொன்று செலுத்த முடியும் என 04 ஆம் பந்தியின் பிரகாரம் “இறுதியாக பெற்ற சம்பளம்” என உத்தியோகத்தர் ஓய்வுபெற்றுச் சென்ற சந்தர்ப்பத்தில் பெற்ற சம்பளமே என்பதும் அதற்கு இறுதிச் சம்பள படியேற்றத் திகதியிலிருந்து ஓய்வுபெற்றுச் செல்லும் திகதி வரையிலும் சம்பள ஏற்றமொன்று ஈட்டப்பட்டிருப்பின் அப்பகுதி உள்ளடக்கப்படமாட்டாது என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறே சுற்றறிக்கையின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் ஓய்வுபெற்ற சந்தர்ப்பத்தில்

பெற்ற சம்பளம் பின்னைய சந்தர்ப்பங்களில் திருத்தப்படும் சசந்தர்ப்பம் அல்லாதவிடத்து சுற்றறிக்கையின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட எந்தவொரு உத்தியோகத்தரினதும் ஓய்வூதியத்தினை திருத்தியமைக்கும் இயலுமை இல்லை. எவ்வாறான போதிலும் ஊவா மாகாண சபையில் ஓய்வுபெற்றுச் சென்று மீளவும் சேவையில் தாபிக்கப்பட்ட 14 உத்தியோகத்தர்களுக்கு சுற்றறிக்கைகளுக்கு இணங்காத வகையில் ரூபா 3.7 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

- 6 ஆவது ஊவா மாகாண சபையின் அனைத்து மாகாண சபை அமைச்சர்களினதும் தனிப்பட்ட பதவியணியின் 187 உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் சேவையினை நிறைவு செய்தமைக்காக செலுத்தப்படும் இறுதிக் கொடுப்பனவாக குறிப்பிட்டு அவ் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மாதாந்த படியின் 12 சதவீதமான வகையிலும் அவர்கள் சேவையாற்றிய மாதங்கள் பிரகாரம் ரூபா 8.9 பில்லியனான மிகையூதிய படிகளாக செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்தக் கொடுப்பனவுகள் 1983 இன் 12 ஆம் இலக்க மிகையூதிய கொடுப்பனவு அதிகாரச்சட்டத்தின் 5 ஆம் பிரிவிற்கு இணங்காத வகையில் முறையற்ற கொடுப்பனவாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- 21/1596/304/134 ஆம் இலக்க மற்றும் 2021 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச செலவினங்களின் மீளாய்வு தொடர்பிலான அமைச்சரவை குறிப்பில் காண்பிக்கப்படும் 2.1 ஆம் பிரிவின் மூலம் உரிய அங்கீகாரங்களின் கீழ் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அரசிற்கு கொடுப்பதற்கு நேர்ந்துள்ள நிதி செயற்பாட்டினை கருத்தில் கொண்டு தற்போது ஆரம்பிக்கப்படாத நிகழ்ச்சித்திட்டங்கள், கொள்வனவுகள், நிர்மாணங்கள், கட்டிட புதுப்பித்தல்கள் மற்றும் மேம்படுத்தல்கள் போன்றன தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அவ்வாறே உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை எனில் அப்பணிகளுக்காக உடன்படிக்கை கைச்சாத்திடுவதை நிறுத்துமாறும் அறிவிக்கப்பட்டுள்ள போது அது தொடர்பில் கருத்தில் கொள்ளாது ஊவா மாகாண சபையின் 26 நிறுவனங்களினால் காலரீதியான தேவைப்பாடற்ற ரூபா 248.3 மில்லியன் பெறுமதியான உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் ரூபா 867 மில்லியன் பெறுமதியான நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இனங்காணப்பட்ட நட்டங்கள் / சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

6 ஆவது ஊவா மாகாண சபையின் உத்தியோகபூர்வ காலம் நிறைவடைந்த பின்னர் பெயரளவு பதவியொன்றுக்கு நியமிக்கப்பட்ட மாகாண சபையின் தலைவரின் தனிப்பட்ட பதவியணியின் 11 உத்தியோகத்தர்களுக்காக 2019 ஒக்தோபர் 08 ஆந் திகதி முதல் இந்த அறிக்கை வெளியிடப்படும் திகதி வரையிலும் எந்தவித சேவையினையும் பெற்றுக்கொள்ளாது சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 18.20 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் ஆகக் குறைந்தது அவர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லல் பதிவுகளுக்கான பதிவேடொன்றேனும் பேணப்பட்டிருக்கவில்லை.